ஶ்ரீ:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிய

சில்லரை ரஹஸ்யங்கள்

(இரண்டாம் பாகம்)

ஸ்வாமி தேசிகன் 752வது திருநக்ஷத்ர வெளியீடு

பரிசோதகர் :

ஸ்ரீ உ.வே. வித்வான் ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கீபுரம் நவநீதம்

ஸ்ரீ ராமதேசிகாசார்யர் ஸ்வாமி

இரண்டாம் பதிப்பு பரிசோதகர் :

பாலவேதாந்த பாஸ்கர, ஸ்ரீதேசிக ஸேவா நிரத:

பையம்பாடி சேட்டலூர் **ஸ்ரீ. ராகவாசார்யன்**

SRIMAD ANDAVAN
SRI POUNDARIKAPURAM SWAMY ASRAMAM
Srirangam

2020

Scanned with CamScanner

முதற் பதிப்பு :

இரண்டாம் பதிப்பு : 2001

மூன்றாம் பதிப்பு : 2020

Copy right: பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்
43-A/10, ஆச்ரமம் சாலை, ஸ்ரீரங்கம்-620 006.

வெளியீடு :

ஒளி அச்சுகோர்வை மற்றும் அச்சிட்டோர்
வர்சடைல் ப்ரிண்ட்ஸ் & பாக்ஸ்
நெ.6/3, ஹோம் ரோடு,
தாம்பரம் சானிடோரியம்
சென்னை-600 047.
போன் : 044-22231862, 9444812655

திருக்குடந்தை தேசிகன் சிஷ்யபரம்பரையால்
திருக்குடந்தையில் ஆராதிக்கப்பட்டுவந்துள்ள
ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன்

Scanned with CamScanner

ஶ்ரீ:



श्रीमते निगमान्त महादेशिकाय नमः ।

श्रीमते रामानुजाय नमः ।

ஸ்ரீ ரங்கம் ஸ்ரீமதாண்டவன் (வழுத்தூர்) வேதாந்த
லக்ஷ்மண முனிவரின் நேர் ஸந்யஸ்த குருபரம்பரையாம்
மணிஹாரத்தின் நாயக ரத்னமான ஸ்ரீமத்
பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரமத்தில் எழுந்தருளி
இருக்கும் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ கோபாலதேசிக
மஹாதேசிகன் அருளிய

ஸ்ரீ முகம்

श्रीमत्पौण्डरीकपुरं श्रीमदाण्डवन् आश्रमः

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:

श्रीनिवासं परं ब्रह्म तन्नान्मश्च गुरूत्तमान् ।
नारायणं रंगनाथी प्रणमयेदं विलिख्यते ॥

माहयास्यपुपासेऽहं मन्मानसविलासकम् ।
अभीष्टदान-कोशाक्षमालापद्मकरैर्युतम् ॥

நம் ஸ்வாமி தேசிகன் அருளிய நூல்களினால் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு மெருகு ஏறிற்று. அவற்றுள் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயங்களின் ஸாரார்த்தங்களை விளக்கும் நூல்கள் மிகப்போற்றத் தக்கவை. அவை படிப்படியாக சிறிது சிறிதாக ரஹஸ்யமந்த்ரார்த்தங்களைப் புகட்டி ஸ்ரீய: பதியான ஸ்ரீ மந்நாராயணனை நன்கு அனுபவிக்க உதவுகிறது. திருமந்த்

ரார்த்தங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் குருமுகமாக அறிந்து உய்யும்படி செய்வதையே பரம புருஷார்த்தமாகக் கருதிய நம் ஆச்ரமத்துப் பூர்வாசார்யர்கள் அந்நூல்களைப் பதிப்பித்து வெளியிடு வதையே நம் தலையாய கடமையாகக் கொண்டனர். இந்த ஸம்ப்ரதாயப் பணியை சிரம் மேற்கொண்டவர் ஸ்ரீஸ்மரணீய ரான நவநீதம் மஹாவித்வான் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமிகள். இவர் 20 ஆண்டுகட்கு முன் அச்சேற்றிய சில்லரை ரஹஸ்யங்கள் இரண்டாம் பாகம் இப்பொழுது நன்கு அலங்கரிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் வெளிவருகிறது. இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் தில்லைஸ்தானம் Dr. S. பார்த்தஸாரதி. இவருடைய தந்நலம் கருதாத இராப்பகல் பாராத உழைப்பின் பயனே இந்நூலாகும். உதவியவர் ஸம்ப்ரதாயப் பணியையே தன் ஸ்வரூபமாகக் கொண்ட திருவள்ளூர் ஈச்சம்பாடி வித்வான் ரங்கநாதாசாரியார் ஸ்வாமி. அச்சுப்பிழை திருத்துவது முதலியவற்றில் பேருதவி புரிந்தவர்கள்: பெஸண்ட் நகர் R. கண்ணன் ஐயங்கார், S. ரங்கஸ்வாமி ஐயங்கார், K. ரங்காச்சாரியார், திருவான்மியூர் S. ராஜகோபால ஐயங்கார், ஐஐடி K. சாரங்கபாணி ஐயங்கார், மயிலாப்பூர் Dr. P.V. வேங்கடநரசிம்மன், தி.நகர் Dr. A. ராகவன், V. விஜயராகவ ஐயங்கார். இவர்களும் மற்றும் உதவியவர் களும் தீர்க்காயுஷ்மான்களாய், நோயற்ற திடமேனியராக ஸர்வாபீஷ்ட ஸித்திகளைப் பெற்று வாழ்வாங்கு வாழ ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகள் அருளும்படி நம் பூர்வாசார்ய ஸந்ததியைப் பிரார்த்தித்து நாராயண ஸ்மரணம் பண்ணுகிறோம்.

நாராயண நாராயண
ஸ்ரீமதாண்டவன்
ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஆச்ரமம்

ஸ்ரீரங்கம்
விக்ரம மாசி ஸ்ரீமத் புஷ்யம்
06-03-2001

நெடுந்தெரு அல்லுண்டு அரசணிபாலை திரு கோபாலாச்சார் ஸ்வாமி நினைவாக வெளியிடப்பட்டது.
(பறவாகோட்டை ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகனின் பரிபூர்ண அனுக்ரஹத்தை பெற்றவர்)

Scanned with CamScanner

Srimathe Srinivasa Gopala Mahadesikaya Nama : Srimathe Raghuveera Mahadesikaya Nama :
Srimathe Gopala Desika Mahadesikaya Nama : Srimathe Srinivasa Mahadesikaya Nama :
Sri Ranga Divya Thambathibyam Nama

SRIMAD ANDAVAN POUNDARIKAPURAM SWAMY ASRAMAM

Phone : 0431-2436100 Cell : 94862 02391
Email : poundarikapuramandavan@gmail.com

Srirangam - 620 006.

Date 27.01.2020

ஸ்ரீமத் பறவாக்கோட்டை சின்னாண்டவன்
ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகனின்

ஸ்ரீமுகம்

சீரென்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரென்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

என்கின்ற ரீதியில் ''சில்லரை ரஹஸ்ம்'' க்ரந்தம் ஸ்வாமி தேசிகன் அருளிய ஸம்பரதாயத்தின் கை விளக்காகும். இந்நூல் பரமஹம்ஸேத்தியதி ஸ்ரீமத் பறவாக்கோட்டை பெரியாண்டவனால் பதிப்பிக்க பெற்றது. இந்நூலின் இரண்டாம் பாகம் தற்பொது மூன்றாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது. முந்தயபதிப்பின் பிழைதிருத்தத்தை அந்தந்த இடங்களில் சேர்த்து சரிசெய்து இக்கரந்தம் துரிதமாக வெளியிட அயராது பாடுப்பட்டவர் ஸ்ரீ உ.வே. பையம்படி சேட்லூர் ராகவாச்சார் ஸ்வாமி. இதை சீரிய முறையில் பதிப்பித்துக் கொடுத்த வெர்ஸ்டைல் பிரிண்டர்ஸ் ஸ்ரீ முரளி ஸ்வாமியின் முயற்ச்சி பாராட்டுக்குரியது. மேலும் இந்த க்ரந்தம் வெளிவரநிதி உதவி செய்த திருமதி உஷாராமாநுஜம் USA தன் தந்தையார் நெடுந்தெரு ஆத்ரேய கோபாலாச்சார் ஸ்வாமி நினைவாக வெளியீடு செய்கிறார். இம்மூவருக்கும் ஆயுர் ஆரோக்கயத்தோடு ஸர்வாபீஷ்டங்களோடு வாழ்வாங்கு வாழ ஸ்ரீரங்கதிவ்ய தம்பதிகளின் திருவடி வாரங்களிலும் பூர்வாச்சாரியார்களை ப்ரார்த்தித்து மங்களாசாசனம் பண்ணுகின்றோம்.

நாராயணா நாராயணா நாராயணா.

SRIMAD ANDAVAN
FOUNDARIKAPURAM SWAMY ASHRAMAM

Scanned with CamScanner

ஸ்ரீ:

பொருளடக்கம்

		பக்கம்	
	ஆசார்ய ஸ்ரீமுகம்	iii	
	பரிசோதகரின் விண்ணப்பம் : முதற்பதிப்பு	xx	
	முன்னுரை : இரண்டாம் பதிப்பு	xxii	
	தனியன்கள்		I
I	ஸாரஸாரம்		
	திருமந்த்ராதிகாரம்	4	123
1	முன்னுரை	4	123
2	திருமந்திரத்தை முதலிலும், த்வயத்தை அதன் பின்னரும் சரம சுலோகத்தைக் கடைசியிலும் அனுஸந்திப்பதன் காரணம்	4	124
3	திருமந்திரத்தின் தனிப் பெருமைக்குக் காரணங்கள்	5	125
4	திருமந்திரம் எட்டெழுத்து மூன்று பதங்கள் கொண்டது - விளக்கம்	8	126
5	ப்ரணவத்தின் பொருள் விளக்கம்	10	127
5.1	ப்ரணவத்தின் பெருமை	10	127
5.2	ப்ரணவம் மூன்று எழுத்துக்களும் மூன்று சொற்களும்	10	127
5.3	அகாரத்தின் பொருள் விளக்கம்	12	127
5.3.1	அகாரம் - விஷ்ணுவையே கூறுதல்	12	127
5.3.2	அகாரம் எம்பெருமானுடைய மூன்று முக்கியப் பெருமைகளை உணர்த்தல்	12	127
5.3.3	அகாரம் எம்பெருமானின் காரணத்வம், ரக்ஷகத்வம் சேஷித்வம் இவற்றைக் கூறும் வகை	12	128
5.3.4	ப்ரணவத்தில் மகாரம் பின்னிட்டதன் காரணம்	14	130
5.3.5	ரக்ஷிக்கும் தன்மை - சேஷியாம் தன்மை - இவற்றின் பயன்	14	131
5.3.6	ரக்ஷிக்கும் தன்மை நம்புதற்கும் இனிமைக்கும் இடம்	14	131
5.3.7	அகாரத்தால் தேறும் அம்சங்கள்	16	132
5.4	உகாரத்தின் பொருள்	16	132

5.5	எம்பெருமானுக்கு ஜீவன் அடியனாந் தன்மையை அநுஸந்திக்க வேண்டிய இடங்கள்	16	133
5.6	மகாரத்தின் பொருள் விளக்கம்	18	133
5.6.1	மகாரம் ஜீவனைக் கூறல்	18	133
5.6.2	மகாரத்தால் ஜீவனுக்கு தேறும் தன்மைகள்	18	134
5.6.3	மகாரம் ஜீவ வகுப்பையும் தனிப்பட்ட ஜீவனையும் கூறுதல்	18	134
5.7	ஜீவனுடைய குணங்கள் சரீரம் இவைகளும் பகவானுக்கே அடிமைப்பட்டன	18	135
5.8	உகாரத்துக்கு மற்றொரு பொருள் - பிராட்டி	20	135
5.9	ப்ரணவத்தின் பொருளுக்கு சான்றுகள்: இராமாயணமும் ஆளவந்தார் அருளிய சுலோகமும்	20	136
6	நம: என்ற நடுச்சொல்லின் பொருள் விளக்கம்	22	136
6.1	'நம:' சொல்லால் அஹங்கார - மமகாரங்கள் ஒழிதல்	24	139
6.2	'நம:' என்ற சொல் ஜீவனுக்கு சுதந்திரம் இன்மையைக் கூறல்	24	140
6.2.1	ஜீவனுக்குச் செயலாற்றும் தன்மை பற்றிய விஷயங்கள்	24	140
6.2.2	பாகவத கைங்கர்யம் பற்றிய விஷயங்கள்	26	141
6.2.3	பாகவதர்கள் யார்?	28	143
6.3	நம: சப்தம் ப்ரபத்தியைக் கூறுதலும் அதற்குச் சான்றுகளும்	28	144
6.3.1	ஸம்பந்த உணர்ச்சியே ப்ரபத்தி என்பதன் உட்கருத்து	28	145
7	நாராயண சப்தம் - பொருள் விளக்கம்	30	146
7.1	நாராயண சப்தத்திற்குத் தத்புருஷ - பஹுவ்ரீஹி ஸமாஸங்கள் வாயிலாகப் பொருள்கள்	30	147
7.2	நாராயண சப்தம் - தத்புருஷ ஸமாஸப் பொருள்	32	147
7.2.1	'நர' என்னும் சொல் பகவானைக் கூறுதல்	32	148
7.2.2	நார சப்தத்தில் அடங்கிய பொருள்கள்	32	150
7.2.3	'அயநம்' சப்தத்தின் பொருள்கள்	34	151
7.3	நாராயண சப்தம் : பஹுவ்ரீஹிஸமாஸப் பொருள்	34	152
7.4	உபநிடதங்கள் கூறும் விசேஷ அம்சங்கள்	36	153
7.5	திருமந்திரம் மும்முறை எம்பெருமானையும் மும்முறை ஜீவனையும் கூறுவதன் பயன்	36	155
8	'நாராயணாய' சப்த வேற்றுமை உருபின் பொருள்கள்	36	155
8.1	எம்பெருமானே முக்கிய பலன் : ஜீவனும் பலன் வகுப்பில் சேர்தல்	38	156

Scanned with CamScanner

8.2 முக்தி பெற்றவனுக்கு எம்பெருமானோடு முழு ஒற்றுமையும் அதன் வரையறையும் 38 157
8.3 ஜீவனது செயலின் பயன் ஜீவன் ஈச்வரன் இருவருக்கும் உண்டு - ஆயினும் ஈச்வரன் பயனே முக்கியம் 40 158
8.4 முக்தர்கள் பல்லாண்டு பாடுதல் : கேள்வி - விடை 40 159
8.5 நித்யஸூரிகளும் எம்பெருமானைப் பற்றிக் கவலைப்படல் - விளக்கம் 40 160
8.6 அர்ச்சைக்கும் விபவத்துக்கும் காப்பிடல் - பொருத்தம் 42 160
8.7 திருமந்திரம் அர்த்த பஞ்சகத்தையும் காட்டல் 42 161
8.8 திருமந்திரத்தின் வாக்கியம் கூறும் மூவகைப் பொருள் 42 162
8.9 திருமந்திரப் பொருளை அறிவதால் ஏற்படும் நன்மைகள் 44 163

த்வயாதிகாரம்

9 த்வயம் வேதம் ஓதிய மந்திரம் 46 166
10 ப்ரபத்தி மந்த்ரங்களுள் த்வயத்தை ஆசார்யர்கள் ஆதரித்த காரணம் 46 166
11 த்வயம் அமைந்த வகை 48 166
12 ப்ரபத்தி எல்லோருக்கும் உரிய பொதுத் தர்மம் 48 167
13 த்வயத்தின் மூலம் ப்ரபத்தி செய்பவர் கிடைத்தற்கு அரியர் என்பதன் பொருள் 48 167
14 த்வயம்: பெயர்க்காரணம் 48 167
15 த்வயத்தின் இருபகுதிகளின் வரிசை பற்றிய விளக்கம் 50 168
16 த்வயத்தின் முற்பகுதியின் பொருள் விளக்கம் 50 169
16.1 ஸ்ரீ சப்தத்தின் ஆறு பொருள்கள் 52 169
16.2 மதுப் விகுதியின் பொருள் 56 171
16.3 பெருமாள் பிராட்டி ஸ்வரூபம் தனி, கணமும் பிரியாமை 58 171
16.4 பெருமாள் பிராட்டி இருவரும் உபாயம் - இருவரும் பலன் 58 172
16.5 முற்பகுதி நாராயண சப்தத்தின் பொருள் 58 174
16.5.1 குணங்கள் ஒவ்வொன்றுக்கும் விளக்கம் 60 175
16.6 ஸ்ரீமந் - நராயண சரணௌ - இருவகைப் பொருள் 64 177
16.7 சரணௌ பொருள் விளக்கம் 66 178
16.8 சரணம் பொருள் விளக்கம் 68 179
16.8.1 சரணம் என்ற சொல் உபாயம் என்ற பொருளைக் கூறல் 68 179

16.8.2 பக்தியின் ஸ்தாநத்தில் எம்பெருமான் இருந்து பலன் தருவதைச் சரண சப்தம் கூறல் 68 180
16.8.3 திருவடிகள் உபாயமாகும் வகை 68 180
16.8.4 உபாயம் இரண்டு வகை 68 181
16.9 ப்ரபத்தி பற்றி சில விளக்கங்கள் 68 181
16.9.1 ப்ரபத்தி ஸித்தோபாயமாகாமை 68 181
16.9.2 ஸம்பந்த அறிவே ப்ரபத்தி - கண்டநம் 69 181
16.9.3 எம்பெருமானே ஸித்தோபாயம் 69 182
16.9.4 ப்ரபத்திக்குப் பலன் தருமவன் எம்பெருமானே 70 182
16.9.5 சேதநன் - ஈச்வரன் - ஆசார்யன் - இவர்கள் கடமை 70 182
16.10 'ப்ரபத்யே' பொருள் விளக்கம் 70 183
16.10.1 ப்ரபத்திக்கு மஹாவிச்வாஸம் முக்கிய அங்கம் பரந்யாஸமே அங்கி 72 184
16.10.2 ப்ரபத்திக்கு அங்கங்கள் அவசியமா? - விடை 74 184
16.10.3 ப்ரபத்யே தன்மை விகுதி கூறும் பொருள் 74 185
16.10.4 ப்ரபத்தியில் ஸாத்துவிகத் தியாகத்தின் அவசியம் 76 186
16.10.5 'ப்ரபத்யே' - நிகழ்கால வினைமுற்றின் விளக்கம் 76 186
16.10.6 ப்ரபத்திக்குப் பின் செய்யும் நற்காரியங்கள் அதற்கு அங்கமல்ல 78 187
16.11 ப்ரபந்தனுக்கு முக்காலத்திலும் உள்ள கடமைகளும் அவற்றில் சிறு குறை இருப்பினும் பலன் பெறுதலும் 78 187
16.12 ப்ரபத்தி எல்லாப் பலனையும் அளித்தல் 80 189
17 த்வயத்தின் பிற்பகுதியின் பொருள் விளக்கம் 82 189
17.1 த்வயத்தின் பிற்பகுதியின் திரண்ட பொருள் 82 189
17.2 ஸ்ரீமத் சொல் காட்டும் பொருள் 82 189
17.3 பிற்பகுதியிலும் ஸ்ரீமத் சொல்லின் அவசியம் 82 189
17.4 மறுமுறை நாராயண சப்தத்தின் அவசியம் 84 190
17.4.1 முக்தனுக்கு ஸகல வஸ்துக்களும் அநுகூலமாதல் 84 190
17.4.2 முக்தன் அனுபவிக்கும் பரமாநந்தம் 84 191
17.4.3 நாராயண சப்தம் பரமபதநாதன் திருமேனியையும் கூறல் 84 191
17.4.4 முக்தர் பரமபதத்தில் வாழும் இடம் 84 191
17.5 'ஆய' விகுதி கூறும் பொருள் 84 192

Scanned with CamScanner

17.6 'நம:' சொல்லின் பொருள் விளக்கம்	86	192
18 த்வயத்தில் வரிசையாய்ப் பதங்களின் பொருள்	86	193
19 மூன்று வாக்கியங்களும் விளக்கும் முழுப்பொருள்	86	194
20 த்வய நிஷ்டன் - விளக்கம்	88	194
சரமச்லோகாதிகாரம்		
21 சரம ச்லோக அவதாரம் பற்றிய முன்னுரை	89	196
22 பக்தி - ப்ரபத்தி : தகுதியில் வரையறை	92	196
22.1 அருச்சுனன் தெய்விகச் செல்வமுடையனே	92	197
22.2 பக்தி - ப்ரபத்தி: தகுதியில் வரையறை	92	198
23 தகுதியில் பிறர் வாதம் - அதன் கண்டநம்	92	198
24 சிற்றறிவினன் பக்தியோகத்துக்கு உரியன் என்ற வாதம் - கண்டநம்	92	199
24.1 ப்ரபத்தி செய்ய உரியன் யார்? - விளக்கம்	92	200
25 சரம சுலோக முற்பகுதியின் பொருள் விளக்கம்	93	200
25.1 'ஸர்வதர்மாந்' பொருள் விளக்கம்	93	200
25.2 'பரித்யஜ்ய' பொருள் விளக்கம்	94	200
25.2.1 'தர்மங்களை அடியோடு கைவிடுதல்' 'ஸாத்த்விக த்யாகத்துடன் தர்மங்களைச் செய்தல் அங்கம்' ஆகியவற்றின் பொருத்தமின்மை	94	201
25.2.2 வேறு அங்கங்களை ப்ரபத்தி வேண்டாமை - விளக்கம்	94	202
25.2.3 விதித்த கடமைகளை விடமுடியாமை	96	203
25.2.4 சரணமடைதலையே விதிக்கும் கொள்கை- பொருத்தம்	96	204
25.2.5 மற்ற உபாயங்களின் பலனையும் அவனே தருதல் - த்ருஷ்டாந்தம்	96	204
25.2.6 தர்மங்களை விடுதலென்பதற்கு மற்றும் இரு பொருள்கள்	96	205
25.3 'மாம்' பொருள் விளக்கம்	96	205
25.3.1 ஸ்வரூபத்தை மட்டும் அநுஸந்திப்பது போதாது	96	205
25.3.2 'மாம்' 'அஹம்' சொற்கள் காட்டும் முக்கியப் பொருள்கள்	97	206
25.3.3 'மாம்' சொல்லால் காட்டப்படும் அவன் குணங்கள்	97	206
25.4 'ஏகம்' சொல்லுக்குப் பல பொருள்கள்	98	207

25.4.1 'என்னை ஒருவனையே' சம்பந்தமாக எழும் சங்கைகளும் சமாதானமும்	98	209
25.5 'சரணம் வ்ரஜ' பொருள் விளக்கம்	100	211
25.5.1 ப்ரபத்தியின் உருவத்தைப் பற்றி பிறர் கொள்கைகளை ஸமரஸமாக்கும் வழி	100	212
25.5.2 ப்ரபத்தி பற்றி மேலும் சில கொள்கைகள் - அவற்றின் கண்டநம்	102	214
25.5.3 ப்ரபத்தி பற்றி எழும் சங்கைகளுக்குப் பரிஹாரம்	102	215
26 சரம சுலோகத்தின் பிற்பகுதியின் பொருள் விளக்கம்	107	223
26.1 கடமையில் தவறாத கண்ணன் - அதற்குச் சரிதைச் சான்று	107	223
26.2 அஹம் சப்தத்தின் பொருள் விளக்கம்	108	224
26.2.1 நேராக மோக்ஷம் தர வல்லவன் எம்பெருமான் ஒருவனே	108	224
26.2.2 அவன் ஸங்கல்பத்தால் வரும் செயலை யாரும் தடை செய்ய முடியாது	108	225
26.3 'த்வா' சப்தத்தின் பொருள் விளக்கம்	110	225
26.4 உபநிடதம் கூறும் பல தர்மங்களிலும் ப்ரபத்தியே சிறந்தது	110	226
26.5 'ஸர்வபாபேப்ய:' பொருள் விளக்கம்	110	226
26.5.1 மூவகை ஸுகம் - அவற்றின் சாதனம்	111	227
26.5.2 கைவல்யமே மோக்ஷம் என்ற வாத கண்டநம்	112	228
26.5.3 பின்னும் சில பாபங்களும் விடுவிப்பனவற்றில் அடங்குதல்	112	229
26.5.4 ப்ரபந்நனிடம் பாபங்கள் ஒட்டுவதில்லை- உண்மைக் கருத்து	112	229
26.5.5 ப்ரபத்திக்குப் பின் சீர்குலைந்தவனது கதி	112	230
26.5.6 ப்ரபந்நனுக்கு நேரும் பாபம் - அதன் பரிஹாரம்	112	231
26.5.7 புத்திபூர்வ பாபங்களும் தாமே கழியும் என்ற வாதம் - ஸமாதாநம்	114	231
26.5.8 ப்ரபந்நன் இச்சரீர முடிவில் மோக்ஷம் பெறுதல்	114	232
26.6 'மோக்ஷயிஷ்யாமி' பொருள் விளக்கம்	114	233
26.6.1 பாபங்களினின்று விடுவிக்கும் முறை	116	234
26.7 'மாசுச:' பொருள் விளக்கம்	116	237

Scanned with CamScanner

26.7.1 ப்ரபத்திக்கு முன்பு சோகம், பின்பு சோகியாமை - அவசியம் 117 238
26.8 சரமலோகத்தின் திரண்ட பொருள் 118 239
26.9 ப்ரபத்தி விஷயத்தில் கீதாபாஷ்யம் - கத்யம் - இவற்றில் முரண்பாடு இன்மை 118 240
26.10 அருச்சுனன் கேள்விக்கு மேலும் உபதேசம் - கருணையின் விளைவு 118 241
26.11 ரஹஸ்யங்கள் மூன்றிலும் தெளிவு அவசியம் 118 241

II அபயப்ரதானஸாரம்

அதிகாரம் 1: ப்ரபந்த அவதாரம் 243 246
1 ஸ்ரீமத் ராமாயணம் : அவதாரம், வேதார்த்தங்களின் விளக்கமாதல், குசலவர்களுக்கு வால்மீகி உபதேசித்தல் 244 346

அதிகாரம் 2: பரதத்துவ நிர்ணயம்
2 ஸ்ரீமத் ராமயணம் நிர்ணயிக்கும் இரண்டு அம்சங்கள் 248 348
3 சிவன் பிரமன் இவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர் இராமபிரான் 248 348
4 இராமபிரானே பரப்ரஹ்மம் எனப் பிரமனே கூறுதல் 250 349

அதிகாரம் 3 :சரணாகதி தாத்பர்யப்ரபஞ்சம்
5 இராமாயணம் முழுதும் சரணாகதியையே விளக்குதல் 252 350
5.1 பாலகாண்டத்தில் சரணாகதி 252 350
5.1.1 தேவர்களின் சரணாகதி 252 350
5.1.2 த்ரிசங்கு சுநச்சேபன் வ்ருத்தாந்தங்கள் காட்டுவது 254 351
5.2 அயோத்யாகாண்டத்தில் சரணாகதி 254 351
5.2.1 லக்ஷ்மணன் சரணாகதி 254 351
5.2.2 பரதன் சரணாகதியில் ஆக்ஷேபம் - ஸமாதாநம் 254 352
5.3 ஆரண்ய காண்டத்தில் சரணாகதி 256 353
5.3.1 முனிவர் சரணாகதி 256 353
5.3.2 காக சரணாகதி 256 354
5.3.3 அபராதிகளைப் பெருமாள் தண்டிப்பதும் அவர்களின் நன்மைக்கே: உதாரணங்கள் 259 355
5.4 கிஷ்கிந்தாகாண்டத்தில் சரணாகதி 260 357
5.4.1 சுக்கிரீவன் சரணாகதி 260 357
5.4.2 இராமன் ஸமுத்ரராஜனிடம் செய்த சரணாகதி ஏன் வீணாயிற்று? - விளக்கம் 262 360
5.5 இராவணனுக்கு உபதேசத்தால் வெளியாகும் இராமன் பண்புகள் 262 361

5.6 உலக நன்மையில் பெருமாளும் பிராட்டியும் ஒரே கருத்தினர் 263 361
5.7 ஸுந்தரகாண்டத்தில் சரணாகதி 263 361
5.7.1 அரக்கியருக்கு த்ரிஜடையின் உபதேசம் 264 362
5.7.2 அரக்கியருக்கும் பிராட்டியின் அபயப்ரதாநம் 264 362
5.7.3 அரக்கியரிடம் அனுமான் சீற்றத்தைப் பிராட்டி தணித்துக் காத்தல் 266 363
5.7.4 பெருமாள் பொறுமையிலும் பிராட்டியின் பொறுமை விஞ்சியது - ஸ்ரீபட்டர் விளக்கம் 266 363
5.8 உத்தரகாண்டத்தில் சரணாகதி 266 364
5.8.1 புறங்காட்டி ஓடுபவரைத் துரத்திக் கொல்வது நீதியா? மால்யவானுக்கு ராமனது விடை 266 364
5.8.2 இராமன் வாலியைக் கொன்றது நீதியா? - இராமன் விடை 268 365
5.8.3 நாட்டில் உள்ள தாவரங்களுக்கும் இராமன் நற்கதி அளித்தல் 268 366
5.8.4 ஸ்ரீமத் ராமாயணம் சரணாகதி வேதமாதல் - விளக்கம் 268 366

அதிகாரம் 4: ப்ரகரணதாத்பர்ய நிர்ணயம்
6 ப்ரபத்தியே சிறந்த தர்மம் 269 367
7 ப்ரபந்நர்களுக்கு வரும் தடைகளைப் பெருமாள் நீக்குதல் 270 367
8 விபீஷணன் சரணாகதியில் ஐந்து அங்கங்களும் நிறைந்திருத்தல் 270 368
9 'இராமனைச் சரணமடைந்தேன்' என்பதிலேயே அங்கியும் குறிப்பால் கூறப்படல் 272 370
10 விபீஷணன் தன் வரவை அறிவிக்கக் கேட்டல் மட்டும் ப்ரபத்தியாகி விடுமா? - விடை 272 371
11 விபீஷணன் செய்தது பரிபூர்ண சரணாகதியே 274 371
11.1 விபீஷணன் விரும்பிய பலன் இராம கைங்கர்யமே 274 372
11.2 பெருமாளும் அனுமானும் விபீஷணன் விரும்பியது இம்மைச் செல்வமே என்று கூறியதன் கருத்து 274 372
11.3 இராம கைங்கர்யத்தையே விரும்பிய விபீஷணனுக்கு இராமன் இலங்கை ஆட்சியை ஏன் அளித்தான்? - விடை 276 373
11.4 விபீஷணன் அரசாட்சியை ஏற்றது இராம கைங்கர்யத்திலேயே சேர்தல் 277 374
11.5 பெருமாள் விபீஷணனுக்கு ஆணையிட்டு

Scanned with CamScanner

அரசளித்தல் 278 375

12 ப்ரபத்தி மோக்ஷமளவாக எல்லாப் பயனையும் தருதல் 278 375

அதிகாரம் 5: சரண்யசில ப்ரகாசம்

13 பரத்வமும் ஸௌலப்யமும் சேர்ந்தால்தான் பயன் உண்டு 278 376

14 பரருபத்தைக் காட்டிலும் அவதார நிலையிலேயே பெருமாள் பெருமை மிக வெளியாதல் - விளக்கம் 280 377

14.1 அகம்பநன் புகழ்ந்த இராமன் பெருமைகள் 280 377

14.2 இராவணனும் போற்றும் இராமபிரானின் பெருமைகள் 281 378

14.3 வானரர்கள் புகழ்ந்த இராமபிரானின் பெருமைகள் 282 379

15 விபீஷணனைக் கைக்கொள்ள வானரர்களின் ஆக்ஷேபம் - அனுமான் மட்டும் இசைதல் 284 381

16 இராமன் தனது உறுதியான கொள்கையைச் சுருங்கக் கூறல் 284 383

17 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்' சுலோக விவரணம் 286 383

அதிகாரம் 6: சரண்ய வைபவப்ரகாசம்

18 சுக்கிரீவனுடைய ஆக்ஷேபத்திற்கு இராமன் விடை 388

19 இராமபிரான் தன் சக்தியை விளக்கிச் சுக்ரீவனது அச்சத்தைத் தீர்த்தல் 290 390

19.1 காப்பதற்குப் பயன்படும் மூன்று குணங்களும் தன்னிடம் இருப்பதைக் கூறி சுக்ரீவன் முதலியோரின் அச்சம் தீர்த்தல் 292 391

அதிகாரம் 7: பரமதர்ம நிர்ணயம்

20 சரணாகதனைக் காத்தல் மிகச் சிறந்த தருமம் என்பதை வ்ருத்தாந்தங்கள் மூலம் விளக்குதல் 293 392

20.1 மிகப் பெரிய தர்மத்தை அனுஷ்டித்த புறாவின் சரிதை - விளக்கம் 294 392

20.1.1 புறாவின் சரிதை மிகப் புனிதமானது 294 392

20.1.2 ஆண் புறாவுக்கு அதன் பேடை செய்த அற்புத உபதேசம் 294 393

20.1.3 நேரிடையாகத் தன்னைச் சரணம் புகாவிடினும் அபராதியான வேடனை ஆண் புறா காத்தல் 295 394

20.1.4 தன் உடலையும் வேடனுக்கு உணவாக அளித்து மகர்ஷிகளும் செய்தற்கரிய விருந்தோம்பலைப் புறா செய்தல் 296 395

20.2 இராமபிரான் தான் சரணாகத ரக்ஷணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை விளக்குதல் 297 396

20.2.1 மிகப் பெரிய தர்மத்தைச் செய்தது சாதாரணப் புறாவே - விளக்கம் 298 397

20.2.2 ஒரு வானரம் எதிரியைக் காத்த வரலாற்றைக் கூறி சுக்ரீவனது கலக்கத்தைப் போக்குதல் 299 398

20.2.3 இராமன் தன் பெருமைகளைக் கூறித் தன் கடமையை விளக்குதல் 300 399

20.3 கண்டு முனிவரின் சுலோகங்களைக் கூறி சரணாகத ரக்ஷண விஷயமாக பெரியோர்களின் அநுஷ்டானத்தை விளக்குதல் 301 400

20.3.1 கண்டு முனிவரின் பெருமைகளும் அவரது உபதேசத்தின் சிறப்பும் 301 401

20.3.2 கண்டுவின் முதல் சுலோகம் சரணாகதியின் சிறு பகுதியை அநுஷ்டித்தவனையும் எத்தகையனாயினும் காத்தே தீர வேண்டியமையைக் காரணத்துடன் விளக்குதல் 303 402

20.3.3 கண்டுவின் இரண்டாம் சுலோகம் சரணாகதனை உயிரைக் கொடுத்தும் காக்க வேண்டும் என்பதைக் காட்டுதல் 305 404

20.3.4 கண்டுவின் மூன்றாவது சுலோகம் சரணம் அடைந்தவனைக் கை விட்டவனுக்கு இம்மையில் ஏற்படும் தீமைகளைக் கூறல் - இதற்கும் பூர்வர்களின் வாக்குகள் வாயிலாக விளக்கம் 307 406

20.3.5 கண்டுவின் நான்காவது சுலோகம் 312 411

20.3.6 கண்டுவின் நான்காவது சுலோகத்தின் பிற்பகுதியின் கருத்து 313 411

20.3.7 கண்டு முனிவர் கூறியதை அனுஷ்டிப்பதில் தமக்குள்ள சீரிய விருப்பத்தை இராமன் அறிவித்தல் 313 412

20.3.8 இந்த அதிகாரத்தின் திரண்ட பொருள் 316 413

அதிகாரம் 8: சரண்யவ்ரத விசேஷ ப்ரகாசம்

21 எல்லோருக்கும் அபயம் அளிக்க இராமன் ஸங்கல்பத்தைக் கூறும் ராமசரம சுலோகத்திற்கு விளக்கம் 316 414

22 'விபீஷணோ வா சுக்ரீவ' என்ற சுலோகத்தின் கருத்து 320 415

22.1 பரிவாரத்துடன் விபீஷணனுக்கு அபயம் அளிக்க இராமன் துடிப்பு 320 416

22.2 விபீஷணனைப் பரீக்ஷித்த பின் ஏற்கச் சுக்கிரீவன் கருத்து இராமன் மறுத்தல் 321 416

Scanned with CamScanner

அதிகாரம் 9: சரண்ய சரணாகத ஸங்கமலாபம்

23	இராமாயணத்தில் அபயப்ரதாநப்ரகாண விஷயச் கருக்கம்	322	417
23.1	ஸுக்ரீவன் மனம் தெளிந்து விபீஷணனுடன் சேர விழைந்து இராமனின் குணங்களைக் கூறிப் போற்றுதல்	323	418
23.2	சுக்கிரீவன் விபீஷணனைப் பற்றிய தெளிவின் உறுதியை விளக்குதல்	326	421
23.3	விபீஷணனையும் தங்களுக்குச் சமமாய்க் கொண்டு அவனுக்கு விசேஷ அநுக்ரஹம் செய்யுமாறு சுக்கிரீவன் இராமனை வேண்டல்	326	422
23.4	விபீஷணனுக்கு உள்ள பெருஞ் சிறப்புக்கள்: சுக்கிரீவன் விளக்கம்	328	423
23.5	விபீஷணனைப் பெருமானிடம் சேர்ப்பதில் ஸுக்ரீவனது ஜக்கம்	328	424
23.6	விபீஷணனோடு சேர்ந்ததில் அவனிலும் தனக்கே பெரிய பாக்யம் - இராமன் கருத்து	330	426

அதிகாரம் 10: ப்ராப்தி ப்ரகாரப்ரபஞ்சம்

24	விபீஷணன் பெருமாளை அடைந்த முறை	331	427
24.1	விபீஷணன் நால்வருடன் இராமன் திருவடிகளையே நிலையான புகலாகக் கருதி அவற்றில் வீழ்தல்	331	427
24.2	விபீஷணன் இராமனை அணுகி முக்கரணங்களையும் பயன்படுத்திய வகை	335	431
24.3	விபீஷண சரணாகதியில் த்வயார்த்தம் - விளக்கம்	337	432
24.3.1	'அநுஜோ ராவணஸ்ய' என்ற சுலோகம் த்வயத்தின் பூர்வகண்ட விவரணமாதல் - விளக்கம்	337	432
24.3.2	விபீஷணன் கூறியது மறுமுறை - சரணாகதி அன்று - நன்றியைத் தெரிவித்தல் மட்டுமே	338	433
24.3.3	'பரித்யக்தாமயாலங்கா' என்ற சுலோகம் த்வயத்தின் உத்தரகண்ட விளக்கமாதல்	338	434

III ரஹஸ்ய சிகாமணி

1	வேதங்களின் உண்மைப் பொருளை அறிய ஸாத்துவிக புராணங்களே கைக் கொள்ள உரியன	438	472
2	ஸ்ரீ வராஹ புராணத்தின் ஒப்பற்ற சிறப்பு	438	473
2.1	ஸ்ரீ வராஹ புராணத்தை உபதேசித்தவரின் சிறப்பு	438	473
2.1.1	வராஹப்பிரானுக்கு மற்ற அவதாரங்களிலும் சிறப்பு	440	474
2.2	ஸ்ரீவராஹ புராணத்தைக் கேட்டவர் சிறப்பு	444	477

3	மோக்ஷம் பெற நேர் உபாயமும் பரம்பரை உபாயங்களும்	445	478
4	வராஹ சரம சுலோகம் கூறும் ப்ரபத்தி	446	478
5	வராஹ சரம சுலோகங்கள் : அவதாரக்ரமம்	446	479
6	வராஹசரம சுலோகங்களின் கருத்து	447	480
6.1	முதல் சுலோகத்தின் கருத்து	447	481
6.2	இரண்டாம் சுலோகத்தின் கருத்து	448	481
7	ஸ்ரீவராஹ சரம சுலோகம் 1 : வியாக்யானம்	448	481
7.1	'ஸ்திதே மநஸி' யின் விளக்கம்	448	481
7.2	'ஸுஸ்வஸ்தே' யின் விளக்கம்	448	482
7.3	'தாது ஸாம்யே' யின் விளக்கம்	450	483
7.4	'யோ நர:' என்பதின் விளக்கம்	450	483
7.4.1	ப்ரபத்திக்கு மானிடரை மட்டும் குறிப்பிட்டு உரியராகக் கூறியதன் காரணம் - விளக்கம்	451	484
7.5	'ஸ்மர்த்தா' என்பதின் விளக்கம்	452	485
7.5.1	ப்ரபத்தி ஒரே முறை செய்ய உரியது	452	485
7.5.2	ப்ரபத்திக்கு அங்கமல்லவாயினும் உரிய கர்மங்களைச் செய்தேயாக வேண்டியமை	454	486
7.6	'விச்வரூபம் மாம் அஜம்' என்பதின் விளக்கம்	454	486
7.7	வராஹப்பிரான் தன் பெருமையைக் கூறல்	454	487
7.7.1	'விச்வரூபம்' என்பதின் விளக்கம்	454	487
7.7.2	'மாம்' என்பதின் விளக்கம்	454	487
7.7.3	'அஜம்' என்பதின் விளக்கம்	456	488
8	வராஹ சரம சுலோகம் 2: வியாக்யானம்	458	489
8.1	இரண்டாவது சுலோகம் - எம்பெருமான் செயலைக் கூறுதல்	458	489
8.2	'தத:' என்பதின் விளக்கம்	458	489
8.3	'தம்' மத்பக்தம் இவற்றின் விளக்கம்	458	490
8.4	'மரியமாணம்' என்பதன் விளக்கம்	460	490
8.4.1	'து' என்பதன் விளக்கம்	460	
8.5	'காஷ்டபாஷாண ஸந்நிபம்' என்பதன் விளக்கம்	461	491
8.5.1	அசேதநம் போல் மரண காலத்தில் கிடப்பது ப்ரபந்நனுக்கு இழுக்கன்றோ ? - விடை	461	491
8.5.2	மரணப்படுக்கையில் கட்டை - கல் இரண்டு உவமைகளைக் கூறியதன் கருத்து	462	492
8.5.3	மரணகாலத்தில் நல்ல நினைவு இல்லையாயினும் ப்ரபந்நன் மோக்ஷம் பெறுவது உறுதி	464	492

Scanned with CamScanner

அதிகாரம் 9: சரண்ய சரணாகத ஸங்கமலாபம்

23 இராமாயணத்தில் அபயப்ரதாநப்ரகாண விஷயச் சுருக்கம் 322 417
23.1 ஸுக்ரீவன் மனம் தெளிந்து விபீஷணனுடன் சேர விழைந்து இராமனின் குணங்களைக் கூறிப் போற்றுதல் 323 418
23.2 சுக்கிரீவன் விபீஷணனைப் பற்றிய தெளிவின் உறுதியை விளக்குதல் 326 421
23.3 விபீஷணனையும் தங்களுக்குச் சமமாய்க் கொண்டு அவனுக்கு விசேஷ அநுக்ரஹம் செய்யுமாறு சுக்கிரீவன் இராமனை வேண்டல் 326 422
23.4 விபீஷணனுக்கு உள்ள பெருஞ் சிறப்புக்கள்: சுக்கிரீவன் விளக்கம் 328 423
23.5 விபீஷணனைப் பெருமானிடம் சேர்ப்பதில் ஸுக்ரீவனது ஊக்கம் 328 424
23.6 விபீஷணனோடு சேர்ந்ததில் அவனிலும் தனக்கே பெரிய பாக்கியம் - இராமன் கருத்து 330 426

அதிகாரம் 10: ப்ராப்தி ப்ரகாரப்ரபஞ்சம்

24 விபீஷணன் பெருமாளை அடைந்த முறை 331 427
24.1 விபீஷணன் நால்வருடன் இராமன் திருவடிகளையே நிலையான புகலாகக் கருதி அவற்றில் வீழ்தல் 331 427
24.2 விபீஷணன் இராமனை அணுகி முக்கரணங்களையும் பயன்படுத்திய வகை 335 431
24.3 விபீஷண சரணாகதியில் த்வயார்த்தம் - விளக்கம் 337 432
24.3.1 'அநுஜோ ராவணஸ்ய' என்ற சுலோகம் த்வயத்தின் பூர்வகண்ட விவரணமாதல்- விளக்கம் 337 432
24.3.2 விபீஷணன் கூறியது மறுமுறை-சரணாகதி அன்று - நன்றியைத் தெரிவித்தல் மட்டுமே 338 433
24.3.3 'பரித்யக்தாமயாலங்கா' என்ற சுலோகம் த்வயத்தின் உத்தரகண்ட விளக்கமாதல் 338 434

III ரஹஸ்ய சிகாமணி

1 வேதங்களின் உண்மைப் பொருளை அறிய ஸாத்துவிக புராணங்களே கைக் கொள்ள உரியன 438 472
2 ஸ்ரீ வராஹ புராணத்தின் ஒப்பற்ற சிறப்பு 438 473
2.1 ஸ்ரீ வராஹ புராணத்தை உபதேசித்தவரின் சிறப்பு 438 473
2.1.1 வராஹப்பிரானுக்கு மற்ற அவதாரங்களிலும் சிறப்பு 440 474
2.2 ஸ்ரீவராஹ புராணத்தைக் கேட்டவர் சிறப்பு 444 477

3 மோக்ஷம் பெற நேர் உபாயமும் பரம்பரை உபாயங்களும் 445 478
4 வராஹ சரம சுலோகம் கூறும் ப்ரபத்தி 446 478
5 வராஹ சரம சுலோகங்கள் : அவதாரக்ரமம் 446 479
6 வராஹசரம சுலோகங்களின் கருத்து 447 480
6.1 முதல் சுலோகத்தின் கருத்து 447 481
6.2 இரண்டாம் சுலோகத்தின் கருத்து 448 481
7 ஸ்ரீவராஹ சரம சுலோகம் 1 : வியாக்யானம் 448 481
7.1 'ஸ்திதே மநஸி'யின் விளக்கம் 448 481
7.2 'ஸுஸ்வஸ்தே' யின் விளக்கம் 448 482
7.3 'தாது ஸாம்யே' யின் விளக்கம் 450 483
7.4 'யோ நர:' என்பதின் விளக்கம் 450 483
7.4.1 ப்ரபத்திக்கு மானிடரை மட்டும் குறிப்பிட்டு உரியராகக் கூறியதன் காரணம்- விளக்கம் 451 484
7.5 'ஸ்மர்த்தா ' என்பதின் விளக்கம் 452 485
7.5.1 ப்ரபத்தி ஒரே முறை செய்ய உரியது 452 485
7.5.2 ப்ரபத்திக்கு அங்கமல்லவாயினும் உரிய கர்மங்களைச் செய்தேயாக வேண்டியமை 454 486
7.6 'விச்வரூபம் மாம் அஜம்' என்பதின் விளக்கம் 454 486
7.7 வராஹப்பிரான் தன் பெருமையைக் கூறல் 454 487
7.7.1 'விச்வரூபம்' என்பதின் விளக்கம் 454 487
7.7.2 'மாம்' என்பதின் விளக்கம் 454 487
7.7.3 'அஜம்' என்பதின் விளக்கம் 456 488
8 வராஹ சரம சுலோகம் 2: வியாக்யானம் 458 489
8.1 இரண்டாவது சுலோகம் - எம்பெருமான் செயலைக் கூறுதல் 458 489
8.2 'தத:' என்பதின் விளக்கம் 458 489
8.3 'தம்' மத்பக்தம் இவற்றின் விளக்கம் 458 490
8.4 'மரியமாணம்' என்பதன் விளக்கம் 460 490
8.4.1 'து' என்பதன் விளக்கம் 460
8.5 'காஷ்டபாஷாண ஸந்நிபம்' என்பதன் விளக்கம் 461 491
8.5.1 அசேதநம் போல் மரண காலத்தில் கிடப்பது ப்ரபந்நனுக்கு இழுக்கன்றோ ? - விடை 461 491
8.5.2 மரணப்படுக்கையில் கட்டை - கல் இரண்டு உவமைகளைக் கூறியதன் கருத்து 462 492
8.5.3 மரணகாலத்தில் நல்ல நினைவு இல்லையாயினும் ப்ரபந்நன் மோக்ஷம் பெறுவது உறுதி 464 492

Scanned with CamScanner

8.5.4 கத்யத்துக்கும் இச்சரம சுலோகத்துக்கும் முரண்பாடு - பரிஹாரம் 464 493

8.6 'அஹம் ஸ்மராமி' என்பதின் விளக்கம் 494 494

8.6.1 'அஹம்' என்பதின் விளக்கம் 466 494

8.6.2 மோக்ஷம் தரும்வரை எம்பெருமான் நினைவு இருத்தல் 466 495

8.7 'நயாமி பரமாம் கதிம்' - விளக்கம் 466 495

8.7.1 ப்ரபந்நனுக்கு நேரிடையாகவே மோக்ஷம் தருதல் 467 496

8.7.2 எம்பெருமான் செயல் அடியார்களின் பயனுக்கேயாதல் 468 497

IV அஞ்ஜலி வைபவம்

1 முன்னுரை 501 516

2 வதங்க்ரிமுத்திச்ய சுலோகத்தின் வியாக்யானம் 502 517

2.1 த்வதங்க்ரிமுத்திசய - பிற தெய்வங்களின் நிலையை விளக்குதல் 502 517

2.2 'கதாபி' - அஞ்சலி செய்தற்குக் கால வரையறையின்மையைக் கூறல் 502 517

2.3 'கேனசித்' - அஞ்சலி பொதுத் தருமம் என்பதையும் செய்தலில் எளிமையையும் கூறல் 503 518

2.4 'யதாததா வாபி' - அஞ்சலியின் எளிமையைக் கூறல் 504 518

2.5 'ஸ்க்ருத் க்ருத:' - ஒரு முறை அஞ்சலி செய்தல் போதும் என்பதைக் கூறல் 504 519

2.6 'அஞ்சலி:' - அஞ்சலி மற்ற தருமங்களிலும் சிறந்தது என்பதைக் கூறல் 504 519

2.7 'ததா ஏவ' - விளக்கம் 504 519

2.8 'முஷ்ணாதி' - அஞ்சலி கர்மங்களை ஒழித்தலைக் கூறல் 504 519

2.9 'அசேஷத:' - அஞ்சலி எல்லா விரோதிகளையும் போக்கவல்லது 506 520

2.10 'சுபாநி புஷ்ணாதி' - அஞ்ஜலி விளைவிக்கும் நலங்களைக் கூறல் 506 520

2.11 'ந ஜாது ஹீயதே - அஞ்சலி எந்நாளும் அழியாத பயனை தருவதைக் கூறல் 506 521

2.12 அஞ்சலி பற்றி மேலும் சில விளக்கங்கள் 508 521

2.12.1 மோக்ஷம் தருவது அஞ்ஜலியா? ப்ரபத்தியா? 508 521

2.12.2 சேதநன் சின்னம் அஞ்ஜலி - பெருமாள் சின்னம் அபயஹஸ்தம் 508 522

2.12.3 அஞ்சலி ப்ரபத்தி இவை இரண்டும் எம்பெருமானை உகப்பிக்கின்றன 508 522

3 பக்தியோ ப்ரபத்தியோ எம்பெருமான் சீற்றத்தைத் தணித்தல் 510 523

3.1 ப்ரபத்தியின் தனிச் சிறப்பு 510 523

3.2 ப்ரபந்நனிடம் எம்பெருமானுக்கு விசேஷ கருணை 510 523

4 அஞ்ஜலி நேராகவும் படிப்படியாகவும் மோக்ஷம் தருதல் 510 524

5 அஞ்ஜலி விஷயத்தில் பிறர் வாதம் - ஸமாதானம் 511 525

6 அஞ்ஜலி எல்லாப் பயனையும் தரும் வகை 512 525

7 'த்வதங்க்ரி முத்திச்ய சுலோகத்தின் கருத்து 512 525

8 ப்ரபந்நனுக்கு வேண்டிய தன்மைகளை உணர்தற்குரிய அடையாளங்கள் 513 526

பிற்சேர்க்கை : - A இரண்டாம் பாகத்தில் குறிப்பிட்ட வரலாறுகள்

1 தரிசங்கு வ்ருத்தாந்தம் 528

2 சுநச்சேபன் வருத்தாந்தம் 528

3 புறா சரணமடைந்வனைக் காத்தல் 529

4 வாநரம் சரணமடைந்தவனைக் காத்தல் 530

5 ரகு சரணமடைந்தவனைக் காத்தல் 531

6 தேவஸ்த்ரீகள் சரணமடைந்தவனைக் காத்தல் 531

7 நாடீஜங்கன் அந்தணனைக் காத்தல் 531

8 ப்ருஹஸ்பதி சரணமடைந்தவனைக் காத்தல் 533

9 சிபி சக்கரவர்த்தி புறாவைக் காத்தல் 533

10 கண்ணன் சரணமடைந்த துரௌபதியைக் காத்தல் 534

11 எம்பெருமான் ஸுமுகனைக் காத்தல் 534

12 எம்பெருமான் கஜேந்திரனைக் காத்தல் 535

13 சரணமடைந்த க்ஷத்ரபந்துவை முனிவர் காத்தல் 535

14 வஸிஷ்டர் தேவர்களையும் இந்திரனையும் காத்தல் 536

15 கண்ணன் முசுகுந்தனைக் காத்தல் 536

16 ரகுமஹாராஜன் அரக்கனிடமிருந்து அந்தணனைக் காத்தல் 537

17 திருநாராயணாஸ்த்ர வரலாறு 538

Scanned with CamScanner

ஸ்ரீ:
ஸ்ரீமதே க்ருஷ்ணார்ய மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பரிசோதகரின் விண்ணப்பம்: முதற் பதிப்பு

ஸர்வேச்வரனுடைய திருவுளப்பாங்கும் அவன் செயல்களும் முதலில் நம் சிந்தைக்கு எட்டாதன. அவற்றின் விளைவு நம் கண்ணுக்குத் தெரிந்த பின் அவற்றை உணருகின்றோம். சில ஆண்டுகட்கு முன் சிறிய ஞானத்தனான அடியேனைக் கருவியாக்கி ஸ்ரீ தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தையும் சில ஆண்டுகட்கு முன் சில்லரை ரஹஸ்யங்களின் முதற்பாகத்தையும் பல விசேஷ அம்சங்களுடன் வெளிவரச் செய்து பல ஆஸ்திகர்கள் அதனைக் கண்டு மகிழுமாறு செய்தான் எம்பெருமான். அதன் விளைவு என்ன? மற்ற ரஹஸ்யங்களையும் அதே முறையில் விரிவான தமிழ் விளக்கத்துடன் வெளியிடுமாறு அடியேனுக்குப் பல பாகவதர்களின் நியமநம். அதனை மறுக்கமுடியுமா? இப்பொழுது சில்லரை ரஹஸ்யங்களின் இரண்டாவது பாகம் ஆஸ்திகர்களின் கண்முன் காட்சியளிக்கின்றது.

இப்பொழுதும் இனியும் வரும் ரஹஸ்யங்கள் **அம்ருதாஸ்வாதினி** ரஹஸ்யங்களென வழங்கும். இந்த இரண்டாம் பாகத்தில் நான்கு ரஹஸ்யங்களே இடம் பெறுகின்றன. அவையாவன:

1. ஸாரஸாரம்: இதில் திருமந்திரம் - த்வயம் - சரம ச்லோகம் ஆகிய மூன்று ரஹஸ்யங்களுக்கும் பொருள் விளக்கம் விரிவாகக் கொடுக்கப்படுகின்றது. மூன்று அதிகாரங்கள் கொண்டது. இந்த ரஹஸ்யம் சற்றே கடினமாய்த் தோன்றும்.

2. அபயப்ரதாநஸாரம்: இது சரணாகதி வேதமெனப் புகழ்பெற்ற ஸ்ரீமத் ராமாயணத்தின் உயிர்நிலைப்பகுதி. பத்து அதிகாரங்கள் கொண்டது. இதில் விபீஷண சரணாகதியை முதன்மையாக வைத்துப் பல சரணாகதிகள் விரிவாய் விளக்கப் படுகின்றன. ஸ்ரீமத் ராமாயணத்தில் சரணாகதியின் தொடர்புள்ள சில முக்கிய சுலோகங்களுக்கு ஸ்ரீ தேசிகன் தம்மாலேயே உரையிட்டருளப் பெற்றது.

3. ரஹஸ்ய சிகாமணி: இது ஓர் அற்புதப் படைப்பு. பிராட்டி நாம் நல்வாழ்வு பெறுதற்காகக் கேட்ட கேள்விக்கு விடையாக ஸ்ரீ வராஹப்பிரான் திருவாக்கினின்று அவதரித்த இரண்டு சரம சுலோகங்களுக்குப் பொருள் விளக்கம்.

4. அஞ்ஜலி வைபவம்: இது ஆளவந்தார் ஸ்ரீ ஸ்தோத்ர ரத்தத்தில் அஞ்ஜலியின் பெருமையை விளக்கி அருளிச்செய்த ஒரு சுலோகத்துக்கு விளக்கவுரை.

இந்த நான்கு ரஹஸ்யங்களுக்கும் அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டிய அளவுக்குக் குறிப்புக்கள் முதலியவற்றுடன் எளிய தமிழில் விளக்கமான விவரணமும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தைப் பரிபூர்ணமாக அனுபவிப்பதால் சில்லரை ரஹஸ்யங்களில் பல விஷயங்களுக்கு நல்ல தெளிவு ஏற்படுவது உண்மையே. முதலில் சில்லரை ரஹஸ்யங்களை நன்றாய் ஸேவித்துப் பின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தை ஸேவித்து மிகத் தெளிவான உணர்வு பெறுமவர்களுக்கோ படிப்படியாய் உயரமான இடத்துக்கு ஏறும் உணர்ச்சி ஏற்படுவதுண்டு. ஆனால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரமெனும் பெரிய கிரந்தத்தில் தோற்றுவிக்காத பல ரஹஸ்ய அம்சங்களைச் சில்லரை ரஹஸ்யங்களில் தேசிகன் அமைத்தருளியுள்ளதை நன்றாகக் காணலாம். சில்லரை ரஹஸ்யங்களையும் அவசியம் அநுபவித்தேயாக வேண்டுமென்பதற்காகச் செய்த யுக்தியோ?

இந்த அம்ருதாஸ்வாதினி ரஹஸ்யங்களுக்கு உரையிடுவதில் தவிர்க்க முடியாத ஸங்கடம் ஏற்பட்டது. இந்த ரஹஸ்யங்களுக்கு உரை எழுதுவதற்கு இதுவரை எவரும் கைவைத்ததில்லை. அல்பஜ்ஞனான அடியேன் துணிந்து முதன் முதலாக உரையிடும்போது நடுவில் பல ஸந்தேஹங்கள். ஜ்ஞாதாக்களான பல மஹான்களிடம் விண்ணப்பித்துத் தெளிவு பெற்ற பின் உத்ஸாஹம் எழுந்தது. அடியேன் ஒவ்வொரு விஷயத்தையும் மிகக் கவனித்து ஆராய்ந்து நிர்ணயித்தே உரை எழுதினாலும் அதைப் பெரியோர்கள் கடாக்ஷித்தால் அன்றி அடியேனுக்குப் பூர்ண திருப்தி ஏற்படுவதில்லை. இந்த ரஹஸ்யங்களுக்கு அடியேன் எழுதிய ரஹஸ்யார்த்த விவரண மாத்ருகையை அடியேனுக்கு ஸதீர்த்யரும் சரீர - ஆத்ம பந்துவும் பால்யம் முதல் பரம ஸௌஹ்ருத்துமாய்ப் பல்லாண்டுகளாக ஸ்ரீரங்க வாஸம் செய்து கொண்டு ஸமீபத்தில் சதாபிஷேக மஹோத்ஸவம் கண்டருளிய மதுராந்தகம் ஸ்ரீ உப. வித்வான் திருமலை ஈச்சம்பாடி வீரராகவாசாரியார் ஸ்வாமியைக் கடாக்ஷிக்கும்படி பிரார்த்தித்தேன். அந்த ஸ்வாமியும் உவந்து கடாக்ஷித்துச் சில இடங்களில் செய்த பரிஷ்காரங்கள் அடியேனுக்கு உபகாரகமாயிருந்தன. அந்த ஸ்வாமிக்கு அடியேனுடைய ப்ரணாமங்களை ஸமர்ப்பிப்பதே அடியேன் செய்யும் கைம்மாறாகும்.

இங்ஙனம்
அடியார்க்கடியன்
வ.ந. ஸ்ரீராமதேசிகதாஸன்.

ஒப்பிலியப்பன் ஸந்நிதி
28-7-1980

Scanned with CamScanner

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

சில்லரை ரஹஸ்யங்கள் (பாகம்-2)

முன்னுரை

(இரண்டாம் பதிப்பு)

இரண்டாம் பதிப்பு வெளியிட காரணம்

ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி - ஜ்ஞாந வைராக்யானுஷ்டான பரிபூர்ண பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய (மன்னார் கோவில்) ஸ்ரீமதாண்டவன் ரங்கநாத மஹா தேசிகன் நியமனப்படி சில்லரை ரஹஸ்யங்கள் இரண்டாம் பாகத்தின் முதற்பதிப்பு, ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமியால் பரிசோதிக்கப்பட்டு ஸ்ரீ.உ.வே. V. R. ராம ஸ்வாமி அய்யங்கார் அவர்களால் 1980ஆம் ஆண்டு மிக நேர்த்தியாக வெளியிடப்பட்டது. கடந்த பல வருடங்களாக இந்நூலுக்குத் தேவை அதிகரித்தது. எனவே பல வித்துவான்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இதன் இரண்டாம் பதிப்பை வெளியிட சில ஆண்டுகளாகவே ப்ரக்ருதம் பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகன் திருவுள்ளம் பற்றியாயிற்று. ஆயினும் இதுவரை அச்சிடப்படாத சில்லரை ரஹஸ்யங்களின் மூன்றாம் பாகத்தையும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் மூன்றாம் பதிப்பையும் முதலில் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் சில்லரை ரஹஸ்யங்கள் இரண்டாம் பாகத்தின் இரண்டாவது பதிப்பு வெளியிட முடியாமலிருந்தது. ப்ரக்ருதம் (பறவாக்கோட்டை) **ஸ்ரீமதாண்டவனின் சதாபிஷேக மஹோத்ஸவம் 30.3.2001 இல்** சிஷ்ய கோடிகளாலும் அபிமானிகளாலும் கொண்டாடப்பட இருக்கிறது. அச்சமயம் இந்நூலை வெளியிட்டால் அது மிக மிகப் பொருத்தமாக இருக்கும் என ஸ்ரீமதாண்டவனின் சிஷ்யர்கள் வற்புறுத்தவே ஸ்ரீமதாண்டவனும் பரம க்ருபையால் இணங்கலாயிற்று. இது நமது மிகச் சிறந்த பாக்யமாகும்.

இரண்டாம் பதிப்பின் விசேஷ அம்சங்கள்

இந்நூலை பயன்படுத்துவோரின் ஸௌகர்யத்தைக் கருதி இப்பதிப்பில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முக்கியமாக மேற்கோள்கள் அந்த அந்த இடங்களிலேயே பொருளுடன் தரப்பட்டுள்ளன. இடத்திற்கு ஏற்ற தலைப்புகள் குறியீட்டு

எண்களுடன் மூலத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளன. அந்தந்த க்ரந்தங்களின் ரஹஸ்யார்த்த விவரணம் அந்தந்த ரஹஸ்யங்களின் இறுதி யிலேயே தரப்பட்டுள்ளது.

குறியீடுகளின் விளக்கம்

வாசகர்களின் சௌகர்யத்துக்காக ஒவ்வொரு க்ரந்தமும் விஷயங்களுக்கு ஏற்ப பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவைகளுக்கு ஏற்ற தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அத் தலைப்புகள் வரிசையா க எண்களால் (1,2, 3,...) குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே பெரும் பாலும் ஒவ்வொரு பகுதியும் பல சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஏற்ற தலைப்புகள் கொடுக்கப்பட்டு, அவை ஒரு புள்ளியால் பிரிக்கப்பட்ட இரு எண்களால் குறிக்கப்பட்டுள்ளன (உ-ம்: 5.3 என்பது ஐந்தாம் பகுதியின் மூன்றாவது உட் பகுதியைக் காட்டும்). தேவைக்கு ஏற்ப சில சிறு பகுதிகள் மேலும் சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவை குறியீட்டு எண்ணுடன் கூடிய ஏற்ற தலைப் புகளால் குறிக்கப்பட்டுள்ளன. (உ-ம்: 5.6.3 என்பது ஐந்தாவது பகுதியில் ஆறாவது உட் பிரிவில் வரும் மூன்றாம் உட்பிரிவைக் காட்டும்).

ஒரே மேற்கோள் பாசுரம்/சுலோகம் பல இடங்களில் வந்தால் அது ஒரிடத்தில் கொடுக்கப்பட்டு - மற்ற இடங்களில் கொடுக்கப்படவில்லை; ஆயினும் விடப்பட்ட அந்த இடங்களில் அது வந்த பக்க எண் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டு உள்ளது. (உ-ம்: 273^5 என்பது 273ம் பக்கத்தில் ஐந்தாவது கீழ் குறிப் பில் வரும் ப்ரமாணத்தைக் குறிக்கும்) இப் புத்தகத்தில் வரும் மேற்கோள் விருத்தாந்தங்கள் பிற்சேர்க்கை-A. யில் வரிசை எண்களுடன் தரப்பட்டுள்ளன. மூல க்ரதந்தத்தில் அவை எடுத்துக் காட்டப்படும் இடங்களில் (A-வரிசை எண்) என்ற முறையில் குறிக் கப்படுகின்றன. ஒரு கீழ்க் குறிப்பு ஒரே பக்கத்திலேயே அடங்காமல் அடுத்தப் பக்கத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டிருந்தால் அந்த குறிப்பின் முடிவில் சதுரக்குறி (□) இடப்பட்டுள்ளது.

நன்றி நவிலல்

தமது திருமேனி சிரமத்தைச் சிறிதும் பாராது அல்லும் பகலும் கண்ணும் கருத்துமாக, இந்நூல் வெளியிட மூலகாரணமாக இருந்து வெளியீடு விஷயமான பற்பல நிர்வாகப் பணிகளை ஆற்றியும் ஆலோசனை வழங்கியும் ஊக்குவித்தும் வந்த ப்ரக்ருதம் (பறவாக்கோட்டை) ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகன் ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ தேசிக பக்தர்களான நாம்

Scanned with CamScanner

ஸஹஸ்ரச: ப்ரணம்ய க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

இந்நூலுக்கு இடத்திற்கு ஏற்றதலைப்புகள் ஸ்வாமி தேசிகன் அருளிய சுலோகங்களுக்குப் பதவுரை இவற்றை ஸ்ரீ திருவள்ளூர் ஈச்சம்பாடி வித்துவான் ஸ்ரீ உ.வே. ரங்கநாதாச்சார்யர் ஸ்வாமி எழுதி உபகரித்தார். மேலும் தினந்தோறும் அச்சுக்கூடத்திற்கே வந்து பிரதிகளில் இருந்த அச்சுப்பிழைகளை திருத்திக் கொடுத்து பேருதவி செய்தார். இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதில் இவர் அடியேனுக்கு உறுதுணையாக இருந்து பல்வகையிலும் தக்க தருணத்தில் தக்கவாறு உதவி புரிந்ததாலேயே இந்நூலை குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடிந்தது. தன் சொந்த காரியங்களையும் விட்டு உடல் சிரமத்தையும் பாராது இவர் ஆற்றிய தொண்டு ஸ்வாமி தேசிகனிடம் இவருக்கு உள்ள பக்திக்கு எடுத்துக் காட்டாக அமைந்தது என்றால் மிகையாகாது. இந்த ஸ்வாமி திருவடிகளை வணங்கி உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இந்நூலில் உள்ள எல்லா படங்களுக்கும் தேவையான பாஸிடிவ்களை கொடுத்து உதவியதுடன் அடியேனுக்கு பக்க பலமாக இருந்து அச்சீடு ஸம்பந்தமாக பல அறிவுரைகளைக் கூறி இந்நூலை அச்சிடுவதில் பெரிதும் உதவி புரிந்தவர் N.S. பார்த்தசாரதி அய்யங்கார் (Hindu). அவருக்கு வணக்கத்துடன் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இந்நூல் மூலக்ரந்தம், அருஞ்சொற்பொருள், கீழ்குறிப்பில் மற்றவை என்று மூன்றாகப் பிரித்து கணினிபொறியில் முதலில் ஏற்றப்பட்டது. இது முடிந்தது மார்ச்1ம் தேதி. மார்ச் 28க்குள் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு பக்கம் கட்டப்பட்டு மேற்கோளுக்கு தக்க வரிசை எண்களும் (1,2,3...), அருஞ்சொற்களுக்கு தக்க வரிசைப் படுத்தப்பட்ட ஆங்கில எழுத்துக்களும் (a,b,c,...) கொடுக்கப்பட வேண்டும். அச்சுப் பிரதி மூல புத்தகத்தோடு ஒப்பிட்டு பார்த்து பரிசோதிக்கப் பட வேண்டும். இவற்றை ஓரிருவராக ஒரு மாதத்திற்குள் செய்து முடிப்பது என்பது இயலாது. எனவே, எனது மூத்த நண்பர்கள் பலரை உதவி கேட்டு அணுகினேன். R. கண்ணன் ஐயங்கார், பெசண்ட் நகர், K. சாரங்கபாணி ஐயங்கார், ஐ.ஐ.டி, சென்னை, S.ரங்கஸ்வாமி ஐயங்கார், பெசண்ட் நகர், K. ரங்காசாரியார், பெசண்ட் நகர், S. ராஜகோபால ஐயங்கார், திருவான்மியூர், Dr. P.V.வேங்கட நரசிம்மன், மயிலாப்பூர், Dr. A. ராகவன், தி.நகர், V. விஜயராகவய்யங்கார், தி. நகர் முதலியோர் முக்கியமாக

குறிப்பிடத் தக்கவர்களாகும். இவர்கள் உடனடியாக முழு மனதோடு அடியேனது வேண்டுகோளை ஏற்று, தங்கள் சொந்த வேலைகளையும் விட்டு விட்டு, தினந்தோறும் அச்சுக் கூடத்துக்கே வந்து பல வகையிலும் பக்கதுணையாக இருந்து பணியாற்றினர். இவர்கள் உழைப்பின்றி இந்நூலை குறித்த காலத்தில் வெளியிட்டிருக்க இயலவே இயலாது. இப் பெரியோர்களின் திருவடிகளில் சிரம் தாழ்த்தி வணங்கி அடியேனது நன்றியை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சம்ஸ்கிருதம், தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஸம்பிரதாய நூல்களை வெளியிட்டுப் பணிபுரிந்து வருபவர் இளங்கோ அச்சுக்கூட உரிமையாளர் திரு. M.S. மணியவன் அவர்கள். இந்நூலை பலரும் பாராட்டும் வண்ணம் அச்சிட்டு நல்ல முறையில் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட தருணத்தில் புத்தக வடிவில் ஆக்கிக் கொடுத்துள்ளார். அவருக்கு எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்ளுகிறேன்.

மேலும், அங்கு பணிபுரியும் செல்வி துர்காதேவி சிறந்த முறையில் இந்நூலை கணிப் பொறியில் ஏற்றுவது முதலியவற்றில் மிகச் சிரத்தையோடு ஈடுபட்டு உதவினார். அவருக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. M.S.மணியவன் அவர்களுக்கு, உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கி இரவு பகலாக ஓய்வின்றி உழைத்து இந்நூலின் பக்கங்களை சரி செய்து, பேஜ் மேக்கப் செய்து கொடுத்த 'செங்கமலம் செல்லப்பா எண்டர்பிரைஸ்' ஸாருக்கு எனது மனம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகளின் திருவருளும்-ஸ்வாமி தேசிகனின் திருவருளும் - பௌண்டரீகபுரம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்தில் எழுந்தருளியிருக்கும் ப்ரக்ருதம் பரமஹம்ஸேத்யாதி பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீமத் கோபாலதேசிக மஹாதேசிகனின் அநுக்ரஹமும் கிட்டி, யாவரும் இன்புற்றிருக்க ப்ரார்த்திக்கிறேன்.

''ஸ்ரீ தேசிக ஸதனம்''
24,28 வது குறுக்குத் தெரு,
பெஸண்ட் நகர், சென்னை - 600 090

தாஸன்
S. பார்த்தஸாரதி

Scanned with CamScanner

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

சில்லரை ரஹஸ்யங்கள்

(இரண்டாம் பாகம்)

தனியன்கள்

ஸ்ரீ குமார நயினாராசார்யர் அருளியது

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे संनिधत्तां सदा हृदि ।।[1]

ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமி அருளியது

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ।।[2]

ஸ்ரீ பிள்ளை உலகாசிரியர் அருளியது

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு[3]

---

1. श्रीमान् - எல்லாத் திருக்கல்யாண குணங்களும் நிரம்பியவரும்; कवितार्किककेसरी - கவிஞர்கள், தர்க்கம் பயின்று மதிநுட்பம் உடையவர்கள் ஆகிய இவர்களுள் சிறந்தவரும்; वेदान्ताचार्यवर्यः-வேதாந்த ஆசிரியர்களுள் சிறந்தவருமான; वेङ्कटनाथार्यः - திருவேங்கடநாதனென்னும் ஸ்ரீ தேசிகன்; मे - என்னுடைய; हृदि - இதயத்தில்; எம்பொழுதும்; संनिधत्तां - எழுந்தருளியிருக்கட்டும்.

Scanned with CamScanner

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

सारसारः

ஸாரஸாரம்

(அவசியம் அறிய வேண்டிய ஸாரமான அம்சங்களுக்குள்ளும் மிகவும் ஸாரமான விஷயங்களை விளக்கும் நூல்)

தனியங்கள்

प्रणतिं वेङ्कटेशस्य पदयोर्विदधीमहि ।
यदुक्तयो यतीन्द्रोक्तिरहस्यानां रसायनम् ॥[a]

★ ★ ★

மூலங்கிளை என ஒன்றிரண்டான மொழி இரண்டும்,
மேலொன்றிலை என நின்ற அவ்வித்தகன் தன்னுரையும்,
காலம் கழிவதன் முன்னம் கருத்துறக் கண்டிடவே,
ஞாலம் புகழும் நம் தேசிகர்தாம் நமை வைத்தனரே (1)

---

a यदुक्तयः - எந்த ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகள் ; यतीन्द्रोक्ति-रहस्यानां - ஸ்ரீபாஷ்யகாரரின் ஸ்ரீஸூக்திகளின் உட்கருத்துக்களை; रसायनं - தெளிவாகக் காட்டுவனவோ; वेङ्कटेशस्य - வேங்கடேசன் என்ற திருநாமமுடைய அந்த ஸ்வாமி தேசிகனின்; पदयोः - திருவடிகளில்; प्रणतिं - வணக்கத்தை; विदधीमहि - செய்கிறோம்.

1. **ஞாலம் புகழும்** - உலகத்தால் புகழப்படுகின்ற; **நம் தேசிகர்** - நம்முடைய ஆசார்யர்கள்; **மூலம் கிளை என** - வேரும் கிளையும் என்று சொல்லும்படி; **ஒன்று இரண்டு ஆன** - (முறையே) ஒரு வாக்யமாயும் இரண்டு பகுதியாயும் உள்ள; **மொழி இரண்டும்** - (திருமந்திரம், த்வயம் என்னும்) மந்த்ரங்கள் இரண்டையும்; **மேல் ஒன்று இலை என நின்ற** -(இதற்கு) உயர்ந்தது ஒன்றும் இல்லை என்னும்படி நின்ற; **அவ் வித்தகன் தன் உரையும்** - அதிசயச் செய்கையையுடைய அந்தக் கண்ணனுடைய வாக்ய (மான சரமச்லோக)த்தையும்; **காலம் கழிவதன் முன்னம்** - (நம்முடைய) வாழ்நாள் கழிவதற்கு முன்பு; **கருத்து உறக் கண்டிடவே** - உள்ளத்தில் பதிந்து அநுபவிக்கும்படி; **ந(ம்)மை வைத்தனர்** - நம்மை நிறுத்தினார்கள். (தாம் - அசை).

ஸ்ரீ ரங்க திவ்யதம்பதிகள் (பங்குனி உத்திரம்)

Scanned with CamScanner

2. **रामानुज-दया-पात्रं** - எம்பெருமானாருடையவும், அப்புள்ளார் என்னும் ஆத்ரேய ராமாநுஜாசார்யருடையவும் கருணைக்கு இலக்கானவரும்; **ज्ञान-वैराग्य-भूषणं** - ஞானம், வைராக்யம் இவைகளை அணியாகக் கொண்டவரும்; **श्रीमद्वेङ्कटनाथार्यं** - ஸ்ரீமத் வேங்கடநாதன் என்ற திருநாமத்துடன் கூடியவருமான **वेदान्तदेशिकं** - ஸ்ரீ வேதாந்த தேசிகனை; **वन्दे** - வணங்குகிறேன்.

3. **தாரணியில் வாழ்வார்க்கு** - பூமண்டலத்தில் வசிப்பவருக்கு ; **வான் ஏறப்போமளவும் வாழ்வு** - பரமபதம் ஏறிச் செல்லுமளவாயுள்ள வாழ்க்கைக்கு; ***சீர் ஒன்று தூப்புல் திருவேங்கடமுடையான்*** - திருக்கல்யாண குணங்கள் பொருந்தியவரும் தூப்புலில் திருவேங்கடமுடையானுடைய (திருமணியின்) திருவவதாரமாயுள்ளவருமான ஸ்ரீ தேசிகன்; **பார் ஒன்றச் சொன்ன** - உலகத்தோர் ஈடுபடும்படி அருளிச்செய்த ; **பழமொழியுள்** - ப்ராசீன ஸ்ரீஸூக்திகளுக்குள் ; **ஓரொன்றுதானே அமையாதோ?** - ஏதாவது ஒரு பாகமே போதாதோ? (போதும்).

Scanned with CamScanner

திருமந்த்ராதிகாரம்

1 முன்னுரை

'கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன், ஒருவர்க்கு உரியேனோ?'[1] என்கிறபடியே ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹ शेष-भूतனாய்[a] இருந்து வைத்து அநாதிகர்ம ப்ரவாஹத்தாலே அடிமை செய்யப் பெறாதே நின்ற க்ஷேத்ரஜ்ஞன்[b] அவஸர-ப்ரதீக்ஷயான[c] பகவத்க்ருபையாலே புரிந்து[d] सदाचार्य-मुखத்தாலே பெற்ற ரஹஸ்யத்ரயமாகிற[e] ஸம்ஸார-भेषஜத்தை[f] உபஜீவிக்கும்படி[g] சொல்லுகிறோம்.

2. திருமந்திரத்தை முதலிலும், த்வயத்தை அதன் பின்னரும், சரம சுலோகத்தை கடைசியிலும் அநுஸந்திப்பதன் காரணம்

ஸ்வரூபம் தெளிந்தவனுக்கல்லது ஸ்வரூபஅநுரூபமான[h] பரம் - புருஷார்த்தத்தில்[i] अभिरुचियும்[j] तत्–उपाय–परिग्रह மும்[k] கூடாமை யாலே ஸ்வரூப-वैशद्य–हेतुவான[1] திருமந்திரம் முற்பட்ட वअनुसंघेयம்[m].

இதில் பதங்களிலே சேஷியுமாய் சரண்யமுமாய்[n] प्राप्यமுமாய்த்[o] தோற்றின பரதத்வத்தைப்[p] पत्नी–विग्रह– விசேஷங்களாலே விசிஷ்டமாக[q] வெளியிடுகையாலும், मध्यम–पदத்தில்[r] शब्द–अर्थ–स्वभावங்களாலே[s] संक्षिप्तமாய்த்[t] தோற்றின உபாய-விசேஷத்தை[u] அநுஷ்ட்டாநமுகத்தாலே[v] காட்டுகையாலும், மந்த்ரமாய் அஷட்கர்ணமாக[w] உபதேசிக்க வேண்டிய சேர்த்தியாலும், திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து என்கிற க்ரமத்தாலும் அநந்தரம்[x] த்வயம் अनुसंघेयம்.

இவை இரண்டிலும் தோற்றின. உபாயத்தின் अधिकारि-விசேஷைத்தையும் இது துஷ்கர-அங்க-நிரபேக்ஷமுமாய்[y] ஸ்வதந்த்ரமுமான நிலையையும் விரோதி நிவ்ருத்தி அம்சத்தையும்[z] வெளியிட்டு அகிஞ்சநனை[A] भரஸமர்ப்பணத்திலே மூட்டித்தளும்பாதபடி[B] தேற்றுகையாலும் சரம ச்லோகம் பின்பு अनुसंघेयம்.

3. திருமந்திரத்தின் தனிப் பெருமைக்குக் காரணங்கள்

(i) இவற்றில் ஸ்ரீமத் அஷ்டாக்ஷரமாகிற மஹா மந்த்ரம் பல உபநிஷத்துக்களிலும் उपवृंहणங்களிலும்[C] ப்ரஸித்தமாய், (ii) "त्रयो वेदाः षडङ्गानि"[2] इत्यादिகளிற்படியே श्रुति–स्मृतिகள் எல்லாவற்றிலும் உள்ள ஸாரதம அர்த்தங்களைப் பொதிந்து கொண்டிருப்பதாய்,

---

a- வேறு ஒருவனுக்கும் அன்றி எம்பெருமானுக்கே அடியனாய்; b- ஜீவாத்மா; c- உரிய ஸமயத்தை எதிர் பார்த்த; d- நல்வழிக்குத் திரும்பி; e- திருமந்திரம்-த்வயம் சரமசுலோகம் என்னும் மூன்று ரஹஸ்யம்; f- ஸம்ஸார பந்தத்தைத் தீர்க்கும் மருந்தை; g- பயன்படுத்தி நல்வாழ்வு பெறும் வழி; h- தன்ஸ்வரூபத்துக்கு ஏற்ற; i- சிறந்த பயனான மோக்ஷத்தில்; j- ஆசையும்; k- அதற்கு உரிய உபாயத்தைச் செய்தலும்; l- ஸ்வரூபத்தைத் தெளிவாய் அறியக் காரணமான; m- அநுஸந்திக்க உரியது; n- ரக்ஷகனாய்; o- அடையப்படும் பலனாய்; p- மேம்பட்ட தத்துவத்தை - எம்பெருமானை; q- கூடியதாக; r- நடுப்பதம் நம: என்பது; s- வெளிப்படைச் சொற்களாலும் கருத்து வகையாலும்; t- சுருக்கமாய்; u- சிறந்த உபாயமான ப்ரபத்தியை; v- செயல்படுத்தும் வாயிலாக; w- மூன்றாமவர்க்குக் கேட்காதவாறு; x- திருமந்திரத்துக்குப் பின்பு; y- செய்வதற்குக் கடினமான அங்கங்களை எதிர்பாராததாய்; z- விரோதியான கர்மங்கள் கழியும் அம்சத்தையும்; A- பக்தி யோகம் முதலிய கைம் முதலற்றவனை; B- வருந்தாதபடி; C- வேதத்தின் கருத்தைத் தெளிவிக்கும் நூல்களிலும்.

1. *விடையேழன்றடர்த்து வெகுண்டு விலங்கலுற,*
படையாலாழிதட்ட பரமன்பரஞ்சோதி,
மடையார் நீலம் மல்கும் வயல் சூழ்கண்ணபுரமொன்று,
உடையானுக்கு, அடியேன் ஒருவர்க்கு உரியேனே,

பெரியதிரு.(8-9-3): கண்ணபுரநாதனாகிய எம்பெருமானுக்கே அடியனான நான் வேறொருவனுக்கு அடியனாவேனோ?

2. त्रयो वेदाः षडङ्गानि छन्दांसि विविधाः स्वराः ।
सर्वमष्टाक्षरान्तस्थं यच्चान्यदपि वाङ्मयम् ॥

அஷ். ப்ரஹ்ம. (1-9): மூன்று வேதங்களும் அவற்றின் ஆறு அங்கங்களும் சந்தஸ்ஸுக்களும் பல ஸ்வரங்களும் மற்றும் உள்ள புனித மந்த்ரங்களும் ஆகிய அனைத்தும் திருமந்த்ரத்துக்குள் அடங்கியுள்ளன.

Scanned with CamScanner

(iii) "यत्राष्टाक्षरसंसिद्धः"[1] இத்யாதிகளிற்படியே ஸர்வ அநிஷ்ட - நிவர்த்தநக்ஷமமாய்[a], (iv) "ऐहलौकिकमैश्वर्यं"[2] इत्यादि களிற்படியே ஸர்வ - புருஷார்த்தங்களுக்கும்[b] साधन-மாய் (v) "सकृदष्टाक्षरं जप्त्वा"[3] இத்யாதிகளிற்படியே जप-अर्थज्ञानादि-मुखத்தாலே[c] கர்ம யோகாதிகளெல்லாவற்றுக்கும் உபகாரகமாய், (vi) "न स्वरः प्रणवोऽङ्गानि"[4] "वैदिकं तान्त्रिकं चैव"[5] इत्यादि களிற்படியே தந்தம் अधिकार-अनुगुणமாக[d] ஸர்வவர்ணங்களுக்கும்[e] உபஜீவ்யமாய்[f], (vii) "चेतनाचेतनं सर्वं"[6] इत्यादि களிற்படியே சேஷசேஷிஸர்வதத்த்வ कण्ठोक्तिமத்தாய்[g], (viii) "'किं तत्र बहुभिर्मन्त्रैः"[7], "एकोऽष्टाक्षर एवायमलमात्मविशुद्धये"[8] என்கிறபடியே ஸர்வமந்த்ர - நைரபேக்ஷ்ய கரமாய்[h], (ix) "सर्वत्राष्टाक्षरो मन्त्रः मूर्तिमन्त्रो यथा भवेत्"[9] என்கிற படியே ஸர்வ भगवந் மூர்த்திகளுக்கும் साधारणமாய்[i],

a- எல்லாத் தீங்குகளையும் ஒழிக்க வல்லனவாய்; b-எல்லாப் பயன்களுக்கும்; c- ஜபம் செய்தல், அர்த்தத்தை அறிதல் வாயிலாக; d- தகுதிக்கு ஏற்றவாறு; e- எல்லாச் சாதியாருக்கும்; f- கைக்கொள்ள உரியதாய்; g - வெளிப்படையாய்க் கூறுவதாய்; h- வேறு மந்த்ரத்தை எதிர் பார்க்காதவாறு செய்வதாய்; i- பொதுவாய்.

1. यत्राष्टाक्षरसंसिद्धो महाभागो महीयते ।
न तत्र संचरिष्यन्ति व्याधिदुर्भिक्षतस्कराः ॥

அஷ். ப்ரஹ்ம. (1-19.): திருமந்திரத்தின் உண்மைப் பொருளை அறிந்து அதன் நிஷ்டையையும் உடைய மஹாநுபாவரை ஆதரிக்கும் இடத்தில் நோய்பஞ்சம் - திருடர் - இவர்கள் நடமாடமாட்டார்கள். (நோய் - ஆசை முதலியன. பஞ்சம் - ஞானச் செல்வ மின்மை . திருடர் - அஹங்காரம் முதலியன)

2. ऐहलौकिकमैश्वर्यं स्वर्गाद्यं पारलौकिकम् ।
कैवल्यं भगवन्तं च मन्त्रोऽयं साधयिष्यति ॥

வ்ருத்தஹாரீதஸ் (6-50) : இந்த மந்த்ரம் இம்மையில் ஐச்வர்யத்தையும் மறுமையில் ஸ்வர்க்கத்தையும், தன் ஆத்மாவை அநுபவித்தலாகிய கைவல்யத்தையும், பரிபூர்ண பகவதநுபவமாகிய மோக்ஷத்தையும் அடையும்படி செய்கிறது.

3. ऋचो यजूंषि सामानि तथैवाथर्वणानि च ।
सकृदष्टाक्षरं जप्त्वा स तस्य फलमश्नुते ॥

அஷ். ப்ரஹ்ம. (1-10): ஒரு முறை அஷ்டாக்ஷரத்தை ஜபித்தாலும் நான்கு வேதங்களை ஓதியதன் பலனைப் பெறுகின்றான்.

4. न स्वर : प्रणवोऽङ्गानि नाप्यन्यविधयस्तथा।
स्त्रीणां तु शूद्रजातीनां मन्त्रमात्रोक्तिरिष्यते ॥

அஷ் - ப்ரஹ்ம - (1-103) : ஸ்த்ரீகளுக்கும் சூத்ரர்களுக்கும் மந்த்ர ஜபத்தில் ஸ்வரம் - ப்ரணவம் - அங்க ந்யாஸம் - வேறு விதிகள் - எவையும் கிடையாது. மந்த்ரத்தை மட்டும் சொல்வதுவே அவர்களுக்கு ஜபமாக விதிக்கப்பட்டுள்ளது.

5. वैदिकं तान्त्रिकं चैव तथा वैदिकतान्त्रिकम् ।
त्रिविधं कर्म संप्रोक्तं पञ्चरात्रामृतार्णवे ।
वैदिकं ब्राह्मणानां तु राज्ञां वैदिकतान्त्रिकम् ॥
तान्त्रिकं वैश्यशूद्राणां सर्वेषां तान्त्रिकं तु वा ॥

ஸநத்கு. ஸம். (4-68, 69) : பாஞ்சராத்ரத்தில் கர்மம் வைதிகம் - தாந்திரிகம் - வைதிக தாந்த்ரிகம் என்று மூன்று வகையாகக் கூறியுள்ளது. அந்தணர்களுக்கு வைதிகம்; அரசர்களுக்கு வைதிகதாந்த்ரிகம்; வைச்யர்களுக்கும் சூத்ரர்களுக்கும் தாந்த்ரிகம்; எல்லோருக்கும் தாந்த்ரிகமாகவும் இருக்கலாம்.

6. चेतनाचेतनं सर्वं विष्णोर्यद्व्यतिरिच्यते ।
नारं तदयनं चेदं यस्य नारायणस्तु सः ॥

(?): விஷ்ணுவைக் காட்டிலும் வேறான சேதநாசேதநங்கள் எல்லாம் நாரம். அவற்றை இருப்பிடமாகக் கொண்டவன் நாராயணன்.

7. किं तत्र बहुभिर्मन्त्रैः किं तत्र बहुभिर्व्रतैः।
नमो नारायणायेति मन्त्रः सर्वार्थसाधकः ॥

அஷ். ப்ரஹ்ம. (1-40) : வேண்டிய பலனைப் பெறுதற்குப் பல மந்த்ரங்களும் பல விரதங்களும் எதற்காக? 'நமோ நாராயணாய' என்னும் மந்த்ரம் ஒன்றே எல்லாப் பயன்களையும் அளிக்கவல்லது.

8. एकोऽष्टाक्षर एवायमलमात्मविशुद्धये।
क्षुद्रमन्त्रजपस्त्वन्यः केवलं कालयापनम् ॥

அஷ்-ப்ரஹ்ம. (1-17) : ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதற்கு அஷ்டாக்ஷரம் ஒன்றே போதுமானது. மற்ற அற்ப மந்த்ரங்களை ஜபிப்பது வீண் பொழுது போக்கு.

9. **(?):** எம்பெருமானுடைய எல்லா மூர்த்திகளுக்கும் பொது மந்த்ரம் அஷ்டாக்ஷரம்.

Scanned with CamScanner

(x) "न मन्त्रोऽष्टाक्षरात् परः"[1], "मन्त्राणां परमो मन्त्रः"[2] இத்யாதிகளிற் படியே ஸர்வ வ்யாபக - மந்த்ரங்களிலும்[a] प्रधानமாயிருக்கையாலே ஸர்வ ஆசார்யர்களும் இத்தையே ஆதரிப்பார்கள். (xi) ஆழ்வார்களும் ''நின் திருவெட்டெழுத்தும் கற்று''[3], ''எட்டெழுத்தும் ஓதுவார்கள்''[4], ''எட்டெழுத்தும் வாரமாக ஓதுவார்கள்''[5] என்று இம்மூல மந்த்ரத்தையே பரம - புருஷார்த்த - மூலமாக[b] அருளிச் செய்தார்கள். (xii) அநுகூல ப்ரதிகூல साधारणமான ஜந்மம் போலன்றிக்கே ''பிறந்தபின் மறந்திலேன்''[6] என்கிற ச்ரேஷ்ஜந்மம்[c] ஆசார்யன் உபதேசித்த திருமந்த்ரமடியாக வருகிறது.

4. திருமந்திரம் எட்டெழுத்து மூன்று பதங்கள் கொண்டது

இதில் पदங்களை ஓர் அக்ஷரமென்றும், இரண்டு அக்ஷரம் என்றும், ஐந்து அக்ஷரங்களென்றும் ச்ருதிகள் வகுத்தன. இது ''நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய''[7] என்றும், ''நல் வகையால் நமோ நாராயணா''[8] என்றும் சொல்லுகிற படியே 'ப்ரணவ-ரஹிதமான-போதும்[d] அஷ்டாக்ஷரமாம்படி

a- வ்யாபக மந்த்ரங்கள் மூன்று : திருமந்திரம் - விஷ்ணுஷடக்ஷரம் - த்வாதசாக்ஷரம். அவற்றுள் திருமந்திரம் மிக முக்கியமானது ; b- சிறந்த பயனான மோக்ஷத்துக்குச் சாதனமாக; c- சிறந்த பிறவி; d-ப்ரணவத்தைத் தள்ளிப் பார்க்கும் போதும்.

1 यथा सर्वेषु देवेषु नास्ति नारायणात् परः।
तथा सर्वेषु मन्त्रेषु न मन्त्रोऽष्टाक्षरात् परः ।।

அஷ் . ப்ரஹ்ம. *(1-41)* : எப்படி எல்லாத் தேவர்களுக்குள்ளும் நாராயணனைக் காட்டிலும் உயர்ந்தவன் இல்லையோ அப்படியே எல்லா மந்த்ரங்களுக்குள்ளும் அஷ்டாக்ஷரத்தினும் சிறந்த மந்திரம் இல்லை.

2 मन्त्राणां परमो मन्त्रो गुह्यानां गुह्यमुत्तमम् ।
पवित्राणां पवित्रं च मूलमन्त्रः सनातनः ।।

அஷ். ப்ரஹ்ம. *(1-11)*: திருமந்த்ரம் அநாதியானது. மந்த்ரங்களுள் மிகச் சிறந்தது, ரஹஸ்யங்களுள் மிக ரஹஸ்யமானது. தூயவற்றுள் மிகத் தூய்மையானது.

3 மற்றுமோர் தெய்வமுளதென்று இருப்பாரோடு
உற்றிலேன், உற்றதும் உன்னடியார்க்கடிமை,
மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும்
கற்று நான் கண்ணபுரத்துறையம்மானே!

பெரிய திரு . (8-10-3) : எம்பெருமானே! எட்டெழுத்தான உன் திரு மந்திரத்தைக் கற்று உன் அடியார்களுக்கு அடிமை செய்யப்பெற்றேன்.

4 எட்டுமெட்டு மெட்டுமாய் ஓரேழு மேழு மேழுமாய்,
எட்டு மூன்று மொன்றுமாகி நின்ற ஆதிதேவனை,
எட்டினாய பேதமோடு இறைஞ்சி நின்று அவன் பெயர்,
எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர்வானமாவே

திருச்சந்த (77) : எட்டெழுத்தான மந்த்ரத்தை ஆசார்யனால் உபதேசிக்கப் பெற்று ஜபிப்பவர்கள் வைகுந்தத்தையும் ஆளவல்லராவார்.

5 சோர்விலாத காதலால் தொடக்கறா மனத்தராய்,
நீரராவணைக்கிடந்த நின்மலன் நலங்கழல்
ஆர்வமோடு இறைஞ்சி நின்று அவன் பெயரெட்டெழுத்தும்,
வாரமாக ஓதுவார்கள் வல்லர்வானமாளவே.

திருச்சந்த (78) : எட்டெழுத்து மந்த்ரதை எப்பொழுதும் விரும்பி முறையோடு ஜபிப்பவர்கள் வைகுந்தத்தை ஆளப் பெறுவார்கள்.

6 நின்றது எந்தை ஊரகத்து இருந்தது எந்தைபாடகத்து,
அன்று வெஃகணைக்கிடந்த என்னிலாத முன்னெலாம்,
அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்,
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே

திருச்சந்த . (64) : என் ஸ்வரூபத்தைப் பற்றிய ஞானம் பெற்றுப் புதிய பிறவியை அடைந்தபின் எம்பெருமானை மறக்கமாட்டேன்.

7 ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து,
கூடுமனமுடையீர்கள் வரம்பொழிவந்து ஒல்லை கூடுமினோ,
நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாயவென்று,
பாடுமனமுடைப்பத்தருள்ளீர் வந்து பல்லாண்டுகூறுமினே.

பெரியாழ்.திரு . *(1-1-4)*: தேசத்தில் உள்ள அறிவற்றவர்களும் நகரத்தில் உள்ள நல்ல அறிஞர்களும் நன்றாய் அறியும்படி நமோ நாராயணாய என்ற திருநாமத்தைப் பாடும் ஆசையுள்ளவர்கள் வாருங்கள்.

8 அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும் உனக்குப் பழவடியேன்,
நல்வகையால் நமோ நாராயணாவென்று நாமம் பல பரவி,
பல்வகையாலும் பவித்திரனே! உன்னைப்பல்லாண்டு கூறுவனே.

பெரியாழ். திரு. *(1-1-11)* : ஒரு ப்ரயோஜநத்தையும் விரும்பாமல் 'நமோ நாராயணாய' என்ற திருநாமத்தைப் பன்முறை சொல்லி உனக்குப் பல்லாண்டு பாடுவோம்.

Scanned with CamScanner

“तत्रोत्तरायणस्यादि:”[1] என்கிற நாரதீய வசநத்தாலே ஸித்தம். இது “नमो नारायणेत्युक्त्वा श्वपाकः पुनरागमत”[2] ''நாமம் சொல்லில் நமோ நாராயணமே''[3], இத்யாதிகளிற் படியே ப்ரணவ चतुर्थिகளை யொழிந்தால் ஸர்வ अधिकारமாம்.

5 ப்ரணவத்தின் பொருள் விளக்கம்

5.1 ப்ரணவத்தின் பெருமை

இதில் प्रथमपदத்தை ''மூலமாகிய ஒற்றையெழுத்தை''[4] என்று பெரியாழ்வார் அருளிச் செய்தார்.'' “आद्यं तु त्र्यक्षरंब्रह्म”[5] ''மூன்றெழுத்ததனை''[6] இத்யாதிகளின் படியே अनन्तशारवங்களான[a] வேதங்களுக்கும் இம்மந்த்ரம் தனக்கும் மூலமாகிய இதை அறிந்தவனை वेदवित्[b] என்னும்படி ஸர்வஸார- ஸங்க்ரஹமாய்[c] இருக்கும்.

5.2 ப்ரணவம் மூன்று எழுத்துக்களும் மூன்று சொற்களும் கொண்டது

ஏக पदமான இதில் அக்ஷரत्रयம்-निर्वचन-बलத்தாலே[d] தனித்தனியே पदமாய் மூன்றும் கூட ஒரு வாக்கியமாகிறது. இந்ந்யாயம் நமஸ்ஸிலும் வரும்.

---

a - அளவற்ற கிளைகளையுடையனவான ; b- வேதார்த்தங்களை உணர்ந்தவன்; c- எல்லா ஸாரங்களுக்கும் சுருக்கமாக இருக்கும்; d- வேத நிகண்டு வாயிலாகக் கூறும் வலிமையாலே.

1. तत्रोत्तरायणस्यादि: बिन्दुमान् विष्णुरन्ततः ।
   बीजमष्टाक्षरस्य स्यात् तेनाष्टाक्षरता भवेत् ।।

அஷ். ப்ரஹ்ம. *(1-55)*: திருவஷ்டாக்ஷரத்தில் உள்ள நார-அயந என்ற பதங்களில் மேல் பதமான 'அயக' என்ற பதத்தின் முதல் எழுத்தான 'அ' என்பது விஷ்ணுவைச் சொல்லுகிறது. அத்துடன் அநுஸ்வாரத்தைச் சேர்த்தால் அம் என்று ஆகும். இது அஷ்டாக்ஷரத்துக்கு பீஜம். (அம் பீஜம்). இப்படிச் சேர்ப்பதால் மந்த்ரம் எட்டெழுத்துக்கள் உள்ளதாகிறது.

2. ततः प्रभाते विमले विनिवृत्ते च जागरे ।
   नमो नारायणेत्युक्त्वा श्वपाक : पुनरागमत् ।।

வராஹபு. *(139-53)* : பிறகு நன்றாய்ப் பொழுது விடிந்தவுடன் விழித்துக் கொண்டு எம்பெருமானைப் பாடும் விரதம் முடிந்தவுடன் 'நமோ நாராயணா என்று சொல்லிக் கொண்டு நாய் மாம்ஸம் தின்னும் ஜாதியில் பிறந்த நம்பாடுவான் திரும்பி வந்தான்.

3 கிடந்த நம்பிகுடந்தைமேவிக் கேழலாய் உலகை
இடந்தநம்பி, எங்கள் நம்பி எறிஞரரணழிய,
கடந்த நம்பிகடியாரிலங்கை உலகைஈரடியால்,
நடந்த நம்பி நாமம் சொல்லில் நமோ நாராயணமே.

பெரிய திரு *(6-10-1)*: எம் பெருமான் திருநாமத்தைச் சொல்லவேண்டில் நமோ நாராயணா என்று சொல்லவேண்டும்.

4 மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினை உள்ளெழ வாங்கி
காலும் கையும் விதிர் விதிர்த்தேறிக் கண்ணுறக்கமதாவ்தன் முன்னம்
மூலமாகிய ஒற்றையெழுத்தை மூன்று மாத்திரைஉள்ளெழவாங்கி,
வேலைவண்ணனை மேவுதிராகில் விண்ணகத்தினில் மேவலுமாமே.

பெரியாழ் திரு.*(4-5-4.)*: எல்லா வேதங்களுக்கும் மூலமானப்ரணவத்தை மூன்று மாத்திரைக்குக் குறையாமல் உச்சரித்து எம்பெருமானை வழிபட்டால் ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்து அநுபவிக்கலாம்.

5 आत्मा स तु मकारोऽयं पञ्चविंश: प्रकीर्तितः ।
आद्यं तु त्र्यक्षरं ब्रह्म त्रयी यत्र प्रतिष्ठिताः।
स गुह्योऽन्यस्त्रिवृद्वेदो यस्तं वेद स वेदवित् ।।

மநுஸ்ம் *(11-265)* : மூன்று எழுத்தான ப்ரணவம் ஸகல வேதங்களுக்கும் மூலமாயுள்ளது. இதில் மூன்று வேதங்களின் ஸாரமும் அடங்கியுள்ளது. இது மற்ற வேதத்திற் காட்டிலும் விலக்ஷணமானது. ஸ்த்ரீகளும் சூத்ரர்களும் அறியாதபடி இதைக் காக்கவேண்டும். இதை அறிந்தவன் மூன்று வேதங்களையும் அறிந்தவனாகின்றான்.

6 மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கி, மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்கு இரக்கம் நன்குடைய எம்புருடோத்தமனிருக்கை,
மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி மூன்றினில் மூன்றுருவானான்,
கான் தடம்பொழில் சூழ்கங்கையின் கரைமேல் கண்ட மென்னும் கடிநகரே

பெரியாழ்.திரு.*(4-7-10)*: அகார உகார மகார வடிவமான ப்ரணவத்தை வேத நிருக்தத்தின்படி பிரித்துப் பார்க்கும்போது மூன்று எழுத்தும் மூன்று பதமாகிப் பொருள்தர வல்லதாகும். இத்தகைய ப்ரணவத்தை அநுஸந்திப்பவர்களிடம் எம்பெருமான் கருணை புரிவான்.

Scanned with CamScanner

5. 3 அகாரத்தின் பொருள்

5.3.1 அகாரம் விஷ்ணுவையே கூறுதல்

இவற்றில் ப்ரதம-அக்ஷரம் ரூடியாலே[a] விஷ்ணு வாசகம்[b] என்னுமிடம் ஶ்ருதி-ஸ்ம்ருதி-நிகண்டுக்களாலும்[c] ப்ரயோகங்களாலும் ஸித்தம். இது ஶப்த-அர்த்த-ஸ்வபாவங்களாலே[d] ஸர்வஸங்க்ராஹகம்[e].

5.3.2 அகாரம் எம்பெருமானுடைய மூன்று முக்கியப் பெருமைகளை உணர்த்தல்

வேதாந்தங்களின்படியே இங்கு முற்படப் பரதத்த்வ லக்ஷணமான[f] காரணத்வம் அறியவேண்டும். ''காரணமே ஶரண்யம்'' என்று ஶ்ருதி-ஸித்தமாகையாலே சரண்யதைக்கு[g] மிகவும் உபயுக்தமான[h] ரக்ஷகத்வமும் அறியவேண்டும். ஆச்ரிதருடைய[i] பேறு தன் பேறாக ரக்ஷிக்குமென்று அறிகைக்காக ஶேஷித்வமும் அறியவேண்டும். ஆகையாலே ஶ்ரிய: பதியினுடைய ஸர்வ காரணத்வமும் ஸர்வ ரக்ஷகத்வமும் ஸர்வ ஶேஷித்வமுமாகிற ப்ரதான- அர்த்தங்கள்[j] இங்கே ப்ரதான - ப்ரதிபாத்யங்கள். இவற்றாலே ''ஒன்றுந் தேவும்''[1] இத்யாதிகளின்படியே த்ரிமூர்த்தி[k] ஸாம்யாதிகளும் கழியும்.

5.3.3 அகாரம் எம்பெருமானின் காரணத்வம் ரஷகத்வம் இவற்றைக் கூறும் வகை

(i) ஸர்வ - வாச்ய மூலமான[l] ஸர்வேச்வரன் ஸர்வ வாசக மூலமான[m] இவ்வக்ஷரத்துக்கு வாச்யன்[n] என்று समस्तशब्दमूलत्वात्[2] இத்யாதி புராண வசனத்திலும் வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் ப்ரதிபாதித்தபடியே[o] இது ஸர்வ காரணபூதனைக் காட்டுகிறது.

(ii) "अव रक्षणे"[p] என்கிற தாதுவிலே[q] வ்யுத்பந்நமாய்[r] ரக்ஷகனாகவும் சொல்லுகிறது. இந்த ரக்ஷணம் ஸங்கோசமில்லாமையாலே[s] ஸர்வ விஷயம். இது ரக்ஷணீயருடைய ஸ்வரூபாதிகளிலும் நித்ய - முக்தர் பக்கலிலும் நிருபாதிகம்[t]. மோக்ஷப்ரதானாதிகளில் வைஷம்ய-நைர்க்ருண்ய-ஸர்வமுக்தி-ப்ரஸங்காதிகள்[u] வாராமைக்காக ஸ்வதந்த்ர-ஸ்வாமிசோதிதங்களான[v] வ்யாஜங்களை[w] முன்னிட்டிருக்கும். ரக்ஷகத்வம் விரோதியைப்

பற்ற விரோதித்வம் புருஷார்த்தத்தைப் பற்ற. இவை மூன்றும் பதத்ரயத்தில் அடைவே[x] கண்டு கொள்வது.

(iii) இவ்வக்ஷரத்திலே தாதர்த்ய-சதுர்த்தி[y] ஏறி லோபித்துக்[z] கிடக்கிறது என்னுமிடம் ப்ரணவத்தைக்கொண்டு ஆத்ம ஸமர்ப்பணத்தை[A] விதிக்கிற ஶ்ருத்யாதிகளில்[3] ஔசித்யத்தாலே[B] ஸித்தம்.

---

a - இடுகுறிப் பெயர்; b - கூறுவது; c - பிரயோக வழக்கு; d - சொல் பொருள் இவற்றின் தன்மைகள் e - எல்லாவற்றையும் சேர்த்துக்கொள்ள வல்லது; f - மேம்பட்ட தத்துவத்துக்கு இலக்கணமான; g - அடைக்கலமாவதற்கு, h - பயன்படுவதான; i - அடியார்களின்; j - முக்கியமாய்க் கூறப்படுவன; k - மும்மூர்த்திகளும் ஸமர் என்பது முதலியன; l - எல்லாப் பொருள்கட்கும் காரணமான m - எல்லாச் சொற்களுக்கும் முதன்மையான, n - பொருளாவான்; o - விளக்கிக் கூறியபடியே; p - அவ் என்னும் வினைப்பகுதி காத்தலைக் கூறும்; q - வினைப்பகுதியிலே; r - தேறிய சொல்; s - வரையறுத்தல், சுருக்குதல்; t - இயற்கையில் உள்ளது; u - பக்ஷபாதம் கருணையற்ற தன்மை, எல்லோருக்கும் மோக்ஷம் கொடுக்கும்படி வருதல்; v - விதிக்கப்பட்ட; w - பக்தி ப்ரபத்தி ஆகிய செயல்கள்; x - வரிசையாக; y - அவனுக்கு அடிமையைக் காட்டும் நான்காம் வேற்றுமை உருபு : z - மறைந்து ; A - ஆத்மாவை ஸமர்ப்பித்தல் ப்ரபத்தி; B - பொருத்தத்தாலே.

1 ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா
அன்று, நான் முகன் தன்னொடு தேவருலகோடு உயிர்படைத்தான்,
குன்றம் போல்மணிமாட நீடு திருக்குருகூரதனுள்,
நின்ற ஆதிப்பிரான்நிற்க மற்றைத் தெய்வம் நாடுதிரே

திருவாய். (4-10) : எம்பெருமானே பரதேவதை எனவிளக்கும் பதிகம்.

2 अष्टाक्षर- शरीराङ्ग- प्रणवाद्यक्षरेण तु ।
अकारेणाखिलाधारः परमात्माऽभिधीभते ॥
समस्तशब्दमूलत्वात् अकारस्य स्वभावतः।
समस्तवाच्यमूलत्वात् ब्रह्मणोऽपि स्वभावतः ॥
वाच्य-वाचक- संबन्धः तयोरर्थात् प्रतीयते ॥

வாமநபு. : எல்லாச் சொற்களுக்கும் முதன்மையானது அகாரம். எல்லாப் பொருட்களுக்கும் முதற் காரணம் எம்பெருமான். ஆதலின் அகாரம் அவனைச் சொல்லும். இப்படி பொருள் பார்க்கும்போது அகாரம் அவனைச் சொல்வதும் அவன் அதனால் சொல்லப்படுவதும் தேறுகின்றது.

3 ओमित्यात्मानं युंजीत ।

தைத்திரீ. (நாராயணோபநிஷத் - 57-79) : ப்ரணவத்தால் ஆத்மாவை (பகவானிடம்) ஸமர்ப்பிக்க வேண்டும்.

Scanned with CamScanner

तादर्थ्यமாவது சேஷத்வம். அதாவது ஓர் உபகாரத்தை प्रधान மாகப் பற்றவன்றிக்கே पर-उपकार-अर्हமாகை[a].

5.3.4 ப்ரணவத்தில் மகாரம் பின்விட்டதன் காரணம்

'त्वं मे'[1] என்று ஸ்வாமி தொடர 'अहं मे' என்று திமிரப் பண்ணும் அஹங்காரத்தாலே அஸத்- கல்பனானவனை[b] शेषत्वஜ்ஞாநம் உஜ்ஜீவிப்பிக்கிறது. ஆகையாலே, அதன் प्राधान्यம் தோற்ற ஸம்பந்தத்தினுடைய विधिनिषेधத்துக்குப்[c] பொதுவான धर्मिनिर्देश த்துக்கு[d] முன்னே இச் शेषत्वம் प्रकाशितமாயிற்று. இதற்குப் प्रतिसंबन्धियान[e] ரக்ஷகனுடைய शेषित्वம் फलितம். काल-अवच्छेद மில்லாமையாலே[f] இதற்கு अयोग-व्यवच्छेदம்[g] सिद्धம். இதனாலே शरीर-शरीरि भावமும்[h] फलिக்கும்.

5.3.5 ரக்ஷிக்கும் தன்மை சேஷியாம் தன்மை இவற்றின் பயன்

இங்கு ப்ரக்ருதிப்ரத்யயங்களாலே[i] தோற்றின ரக்ஷகத்வ சேஷித்வங்களுக்கு अज्ञान-दुःखबहुलैயான லீலாவிபூதியிலும்[j] प्रकाशादि-बहुलैயான நித்ய विभूतियिலும்[k] प्राचुर्येण[l] उपयोगம்.

5.3.6 ரஷிக்கும் தன்மை நம்புதற்கும் இனிமைக்கும் இடம்

कारणभूतன் ரக்ஷகன்'' என்கையாலே பிதாவினுடைய ரக்ஷகத்வம் போலே இது विश्वसनीयतमமாம்''. शेषि रक्षकன் என்கையாலேப்ரியனான பதிவைத்யனாமாபோலே हृद्यतम முமாம்[n].

a- பிறருக்குப் பயன்படத் தகுதி: b- இருந்தும் இல்லாதவன் போன்றவன்; c- விதிப்பதற்கும் மறுப்பதற்கும்; d - ஜீவனைக் குறிப்பதற்கு; e- எதிர்த் தலையில் உள்ள சேஷி; f- காலத்தின் வரையறை இல்லாமையால், g- இருந்தே தீர வேண்டுவது ; h- உடலும் உயிருமாயுள்ளதன்மை ; i- பகுதி விகுதிகள் j- ஸம்ஸார மண்டலத்திலும் : k- ஸ்ரீவைகுண்டத்திலும், l- மிகுதியாக, m- மிகவும் நம்புதற்கு உரியது, n - மனத்துக்கு மிக இனியது.

1 त्वं मेऽहं मे என்னும் ச்லோகம் (திருமஞ்ஜந காலத்தில் ஸ்ரீரங்கநாதன் ஈரமான மஞ்சள் வஸ்த்ரத்தையும், ஒற்றைத் திருத்துழாய் மாலையையும் சாத்திக்கொண்டு அபயஹஸ்தத்துடன் எழுந்தருளியிருப்பதையும், திருமுன்பே நெய் விளக்கு ஜ்வலிப்பதையும் ஸேவித்த) பட்டரின்

கற்பனை. இந்த ச்லோகம் எம்பெருமானுக்கும் ஜீவனுக்கும் ஏற்பட்ட விவாதம் போன்ற முறையில் அருளப்பட்டுள்ளது.

> त्वं मेऽहं मे कुतस्तत् तदपि कुत इदं वेदमूलप्रमाणात्
> एतच्चानादिसिद्धादनुभवविभवात्सोऽपि साक्रोश एव।
> क्वाक्रोशः कस्य गीतादिषु मम विदितः कोऽत्र साक्षी सुधीस्स्यात्
> हन्त त्वत्पक्षपाती से इति नृकलहे मृग्यमध्यस्थवत्त्वम् ॥

எம்பெருமான் : त्वं मे - நீ எனக்குச் சேஷன்; (உரியவன்)

ஜீவன் : अहं मे - நான் எனக்கே சேஷன்; (உரியவன்)

எம் : कुत: तत् - நீ சொன்னது எந்தக் காரணத்தால்?

ஜீ : तदपि कुत:- தேவரீர் சொன்னதும் எந்தக் காரணத்தால்?

எம் : इदं वेदमूलप्रमाणात्- நான் சொன்னது வேதத்தை மூலமாகக் கொண்ட ப்ரமாணத்தால்;

ஜீ : एतच्च अनादिसिद्धात् अनुभवविभवात्:- நான் சொன்னது அநாதியாய் ஏற்பட்ட அநுபவத்தின் பெருமையால்;

எம் : सोऽपि साक्रोश एव உன் அனுபவம் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறதே;

ஜீ : क्व आक्रोशः कस्य- எங்கே எவரால் ஆக்ஷேபிக்கபட்டது?

எம் : गीतादिषु मम विदितः கீதை முதலிய நூல்களில் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியும்;

ஜீ : क: अत्र साक्षी- இவ்விஷயத்தில் யார் ஸாக்ஷி?

எம் : सुधी: स्यात्- மஹாஜ்ஞாநிகளான வ்யாஸர், பராசரர் முதலிய பெரியோர்;

ஜீ : हन्त त्वत्पक्षपाती स:- அந்தோ ! அவர்கள் உன்னிடம் பக்ஷபாதமுள்ளவர்கள்;

इति இவ்வாறு, नृकलहे ஜீவனுடன் கலஹமுண்டான போது, मृग्य-मध्यस्थवत् त्वम् । எங்கு தேடியும் நடுவர் கிடைக்காததால் நீர் பிரமாணம் (ஸத்யம் செய்ய முயல்கின்றவர் போல் ஸேவை ஸாதிக்கிறீர்.

Scanned with CamScanner

5.3.7 அகாரத்தால் தேறும் அம்சங்கள்

இக் காரணத்வாதிகளுக்கு உபயுக்தங்களாய் ப்ரமாண सिद्ध ங்களான सर्वज्ञत्व-सर्वशक्तित्वादिகளும் "लक्ष्म्या सह हृषीकेशः"[1] "अस्या मम च शेषं हि"[2] இத்யாதிகளிற்படியே द्वयத்தில் போலே ஸர்வ ரக்ஷண दीक्षितனான[a] ஸர்வ சேஷியினுடைய सहधर्म-चारिणी[b] ஸம்பந்தமும் இங்கே अनुसंधेयம்.

5.4 உகாரத்தின் பொருள்

मध्यमःஅக்ஷரம்[c] श्रुतिகளில்[3] ப்ரயோக - விசேஷ[d] प्रसिद्धिயாலே अवधारणार्थமாய்[e], கீழ்ச் சொன்ன तादर्थ्यத்தை[f] अन्ययोग-व्यवच्छेदத்தாலே[g] நியமிக்கிறது[h]. அகார वाच्यனான श्रियःபதிக்கே निरुपाधिकशेषம் என்றதாயிற்று. இத்தால் ஜீவர்களைப்பற்ற निरुपाधिकशेषत्वம்[i] கழிகையாலே देवतान्तर-परित्यागமும் फलिக்கும். இது तदीय पर्यन्त மென்னுமிடம்[j] "மற்றுமோர் தெய்வம் உள தென்று இருப்பாரோடு உற்றிலேன்"[4] என்று காட்டப்பட்டது.

5.5 எம்பெருமானுக்கே ஜீவன் அடியனாந்தன்மையை அநுஸந்திக்க வேண்டிய இடங்கள்

இப்படிப்பட்ட अनन्यार्ह-शेषत्वம்[k] "दासभूतः शरणागतोऽस्मि, तवास्मि दास इति वक्तारं मां तारय"[5] என்கிறபடியே पद-त्रयத்தில் தோற்றுகிற स्वरूप-प्रतिपत्तिயிலும்[l] उपाय-परिग्रहத்திலும்[m] पुरुषार्थ-प्रार्थनैயிலும் अनुसंधेयம் என்னுமிடத்தை "குலதொல்லடியேன்"[6], "புகலொன்றில்லா அடியேன்"[7], "ஆறாவன்பிலடியேன்"[8] என்று ஆழ்வார் அருளிச் செய்தார்.

---

a - எல்லோரையும் காக்க விரதங்கொண்ட; b - பிராட்டியின் ; c - நடு எழுத்து உகாரம்; d- அதிகமாய்ப் பயன்படுத்தும் வழக்கு ; e- அவனுக்கே என்ற பொருளுடையதாய்; f- அவனுக்கு அடிமையாந் தன்மையை; g-பிறருடைய தொடர்பை அறுத்தல்; h-வரையறுக்கிறது; i- இயற்கையில் அடிமை; j - அவனுக்கு அடியார்கள் வரை என்பது; k- பிறருக்கு உரிமையில்லாதபடி உனக்கே அடியனாந்தன்மை; l- ஸ்வரூபத்தைப் பற்றிய அறிவு; m- ப்ரபத்தியைக் கைக்கொள்ளல்.

1. लक्ष्म्या सह हृषीकेशो देव्या कारुण्यरूपया ।
   रक्षक: सर्वसिद्धान्ते वेदान्तेषु च गीयते ।।

லக்ஷ்மீதந். (28-14) : எம்பெருமான் கருணை வடிவான பிராட்டியுடன் சேர்ந்து ரக்ஷகனாக எல்லாப் பாஞ்சராத்ர ஸித்தாந்தங்களிலும் வேதாந்தத்திலும் கூறப்படுகிறான்.

2. अस्या मम च शेषं हि विभूतिरुभयात्मिका।
   इति श्रुतिशिरःसिद्धं मच्छाखेष्वपि मानद।।

விஷ்வக்ஸேநஸம்: இந்த லீலாவிபூதியும் நித்ய விபூதியுமாகிய ப்ரபஞ்சம் எனக்கும் பிராட்டிக்கும் ஆளுகைக்குட்பட்ட சேஷமாயிருப்பது. *(எம்பெருமான் பேச்சு)*

3. तदेवाग्निस्तद्वायुः तत्सूर्यः तदु चन्द्रमाः ।
   तदेदु शुक्रममृतं तत्ब्रह्म तदापः स प्रजापतिः ।।

அந்த ப்ரஹ்மமே அக்நியாகவும் அது வாயுவாகவும், அது சூரியனாகவும், அதுவே சந்திரனாகவும்... உள்ளது 'उ' என்பதும் அவधारணத்தைப் பொருளாகக் கொண்டது என்று தெரியலாம். तत्+उ=तदु ।

4 **பெரியதிரு. (8-10-3.):** எம்பெருமானே! உன்னையன்றி வழிபட வேறு உரிய தெய்வம் இருப்பதாக எண்ணுபவர்களுடன் நான் சேரேன். நான் விரும்பி ஏற்றுக்கொண்டது உன் அடியார்களுக்கு அடியனா யிருப்பதே. *(பாசுரம்: 8)*

5 दैवीं गुणमयीं मायां 'दासभूतः शरणागतोऽस्मि तवास्मि दासः' इति वक्तारं मां तारय ।

சரணாகத் (13) : 'உனக்கு அடியனான நான் உன் திருவடிகளில் சரணமடைந்து விட்டேன். இனி உனக்குக் கைங்கர்யம் செய்வேன்.' என்று சொல்லுகிற அடியேனை இந்த ப்ரக்ருதியில் அகப்படாது கடக்கும்படி செய்தருள்.

6 உலகமுண்ட பெருவாயா உலப்பில் கீர்த்தியம்மானே,
நிலவும் சுடர்சூழொளி மூர்த்தி நெடியா அடியேனாருயிரே!,
திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானே,
குலதொல்லடியேன்உன்பாதம் கூடுமாறு கூறாயே.

திருவாய் (6-10-1) : வம்ச பரம்பரையாக அநாதியாக உனக்கு அடியனான நான் உன் திருவடிகளை வந்தடையும் வழியை நீ கூற வேண்டும்.

7 அகலகில்லேன் இறையுமென்று அவர் மேல்மங்கையுறைமார்பா
நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய்! என்னையாள்வானே,
நிகரிலமரர்முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே,
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

திருவாய். (6-10-10): வேறு கதியற்ற அடியேன் உன் திருவடிக்கீழ் நிலையாயிருந்து கைங்கர்யம் செய்யும்படி புகுந்துவிட்டேன்.

8 கூறாய் நீராய் நிலனாகிக் கொடு வல்லசுரர் குலமெல்லாம்,
சீறா எறியும் திருநேமிவலவா! தெய்வக் கோமானே,
சேறார்சுனைத் தாமரை செந்தீமலரும் திருவேங்கடத்தானே,
ஆறாவன் பிலடியேன் உன்னடி சேர்வண்ணம் அருளாயே.

திருவாய் (6-10-2) : உள்ளடங்காத அன்பையுடைய அடியேன் உன் திருவடிகளைச் சேரும்படி நீ அருள் புரிய வேண்டும்.

Scanned with CamScanner

5.6 மகாரத்தின் பொருள்

5.6.1 மகாரம் ஜீவனைக் கூறல்

तृतीय-अक्षरம்[a] கீழ்ச் சொன்ன சேஷத்வத்தினுடைய आश्र யத்தைக்[b] காட்டுகிறது. இத்தை "मन ज्ञाने"[c], "मनु अवोधने"[d] என்கிற धातुக்களிலே[e] निष्पन्नமான[f] पदமென்றும் छान्दसप्रक्रि யையாலே[g] अस्मच्छब्दத்திலே லுப்த - சேஷமாய்[h] நிற்கிறது என்றும் யோஜிப் பார்கள்[i]. இது ஜீவ वाचकமென்னுமிடம் ஆத்ம - ஸமர்ப்பண विधि வாக்யத்தாலே ஸமர்ப்பணீயனான[j] ஆத்மாவுக்கு ப்ரகாசகமாகப் परिशेष-सिद्धமாகையாலும்[k] ककारம் முதலாய் मकारம் இறுதியான வர்ணங்களைப் पञ्चविंशति[l] தத்த்வங்களுக்கு वाचकங்களாகத்[m] तत्त्वसागरसंहितादिகளிலே சொல்லுகையாலும் "मकारं जीवभूतं तु"[n] आत्मा स तु मकारोऽयं पञ्चविंशः प्रकीर्तितः[1] என்று விசேஷிக்கையாலும்[o] सिद्धம்.

5.6.2 மகாரத்தால் ஜீவனுக்குத் தேறும் தன்மைகள்

இப்படிகளால் இது ஜ்ஞாந ஸ்வரூபனாய் ஜ்ஞாந गुणகனாய் இரண்டு आकारத்தாலும்[p] அநுகூல स्वभावனாய் स्वयंप्रकाशனாய்[q] प्रत्यक्காய்[r] देहादि விலக்ஷணனாய்[s] गुणत्रय रहितனாய்[t] அணுவாய் निरुपाधिकसर्वशेषियிற்[u] காட்டில் அத்யந்த - भिन्नனுமான[v] ஜீவனைச் சொல்லுகிறது.

5.6.3 மகாரம் ஜீவ வகுப்பையும் தனிப்பட்ட ஜீவனையும் கூறல்

இவ்வக்ஷரம் जात्येक-वचनமாய்[w] त्रिविध-आत्माக்களையும்[x] சொல்லுகிறதாகவுமாம்.

"अकारार्थायैव स्वमहमथ मह्यं न"[2] என்கிறபடியே விசேஷித்துத்[z] தன்னையே காட்டுகிறதாகவுமாம்.

5.7 ஜீவனுடைய குணங்கள் சரீரம் இவைகளும் பகவானுக்கே அடிமைப்பட்டன

இப்படி "दासभूताः स्वतः सर्वे"[3] "आत्मदास्यं हरेः स्वाम्यं"[4], स्वत्वमात्मनि

a- மூன்றாம் எழுத்து, மகாரம் ; b- இருப்பிடமான ஜீவனை ; c- மந வினைப்பகுதி அறிவைக் காட்டும்; d- மநு வினைப்பகுதி அறிவுடைமையைக் காட்டும்; e- வினைப்பகுதிகள்; f- தேறிய; g- வேதத்தின் இலக்கண முறை; h- மறைந்தது போக மீதி; i- பொருள்

கூட்டுவர்; j- ஸமர்ப்பிக்கப்படுமவன்; k- எஞ்சியவன் ஜீவன் தான் என்ற முறையில் தேறியது; l- இருபத்தைந்து; m- சொல்லுவன; n- ஜீவனைச் சொல்லும் மகாரத்தைக் கொண்டு ந்யாஸம் செய்ய வேண்டும்; o-குறிப்பிட்டுச் சொல்லுகையாலும்; p- இருவகைப் பொருள்களாலும்; q- அறிவின் துணையின்றித் தானே ப்ரகாசிப்பவன்; r- தான் பிரகாசிப்பதால் வரும் பயனைத் தானே பெறுமவன்; s- சரீரம் இந்த்ரியம் இவற்றினும் வேறுபட்டவன்; t- ஸத்துவம் ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணமுமற்றவன்; u- இயற்கையாக எல்லோருக்கும் தலைவன்; v- மிகவும் வேறுபட்டவன்; w- அந்த வகுப்பினர் எல்லாரையும் கூறும் ஒருமைச் சொல் ; x- பத்தர் முக்தர் நித்யர் என்ற மூன்று ஆத்மாக்களையும்; y- குறிப்பிட்டு.

1. आत्मा स तु मकारोऽयं पञ्चविंशः प्रकीर्तितः ।
   आद्यं तु त्र्यक्षरं ब्रह्म त्रयी यत्र प्रतिष्ठितः ।।

பாத்மோத். (4-27) : மகாரத்தால் சொல்லப்படும் ஜீவன் இருபத்தைந் தாவது தத்துவமாகக் கூறப்படுகிறான்.

2 अकारार्थायैव स्वमहमथ मह्यं न निवहाः
  नराणां नित्यानामयनमिति नारायणपदम्।
  यमाहास्मै कालं सकलमपि सर्वत्र सकला-
  स्ववस्थास्वाविःस्युर्मम सहजकैङ्कर्यविधयः।।

அஷ்டச்லோகி(3): அகாரத்துக்குப் பொருளாகிய எம்பெருமானுக்கே அடியன் நான். எனக்கு நான் அடியனல்லன். நாராயணன் என்னும் சொல் நித்யரான ஜீவர்களுடைய கூட்டத்தை எவனுக்கு இருப்பிட மென்று சொல்லுகின்றதோ, அந்த நாராயணன் பொருட்டு எனக்கு ஸ்வபாவமாய் ஏற்பட்ட கைங்கர்யங்களின் வகைகள் எப்பொழுதும் எங்கும் எந்த நிலையிலும் உண்டாக வேண்டும்.

3 दासभूताः स्वतः सर्वे ह्यात्मानः परमात्मनः ।
  अतोऽहमपि ते दास इति मत्वा नमाम्यहम् ।।

ஈச்வரஸம். மந்த்ரராஜ. (12): எல்லா ஆத்மாக்களும் பரமாத்மாவுக்கு இயற்கையிலே தாஸர்கள். ஆதலின் அவர்களுள் ஒருவனான 'நானும் உனக்குத் தாஸன்' என்ற கருத்துடன் உன்னை வணங்குகின்றேன். (சிவன் கூறுவது)

4 स्वोज्जीवनेच्छा यदि ते स्वसत्तायां स्पृहा यदि ।
  आत्मदास्यं हरेः स्वाम्यं स्वभावं च सदा स्मर ।।

(?) : நீ நல்வாழ்வு பெறவும் ஞானம் பெறவும் விரும்பினால் நீ எம்பெருமானுக்கு அடியனென்பதையும் அவன் உனக்கு ஸ்வாமி என்பதையும் இதுவே ஜீவ-பர ஸ்வபாவங்கள் என்பதையும் எப்பொழுதும் நினைத்துக்கொண்டிரு.

Scanned with CamScanner

संजातं"[1] "दासोऽहं वासुदेवस्य"[2], दासत्वात् दासुदेवस्य"[3] इत्यादिகளிற்படியே தன்னை श्रियः பதிக்கு अनन्यार्हशेषभूत னென்றறியவே[a] தன்னுடைய गुण-विग्रहादिகளிலும் இச்शेषत्वம் कैमुतिकந்யாயத்தாலே[b] सिद्धिக்கிறது. இது உபலக்ஷணமாகவுமாம்[c]. இங்கு "अकारार्थो विष्णुः"[4] என்கிற ஶ்லோகத்தைப் படிப்பது.

5.8 உகாரத்திற்கு மற்றொரு பொருள் - பிராட்டி

कंठश्रुतिயில்[5] சொன்ன योजनान्तरத்தில்[d] मध्यम-अक्षरம்[e] லக்ஷ்மீ वाचकமாய் பூர்வ - அக்ஷரத்தோடு[f] ஸமஸ்தமாகிறது[g] அப்போது अवधारणம்[h] अर्थसिद्धம்[i]. ஒரு शब्दத்துக்கு व्युत्पत्तिभेदத்தாலே[j] अर्थभेदம் சொல்லுகை श्रुत्यादिகளிலே प्रसिद्धம்.

5.9 ப்ரணவத்தின் பொருளுக்கு சான்றுகள் : இராமாயணமும் ஆளவந்தார் சுலோகமும்

"अग्रतः प्रययौ रामः"[6] என்கிற ஶ்லோகத்திலே பூர்வர்கள் வார்த்தையை இங்கே अनुसंधिப்பது. "मम नाथ"[7] என்கிற ஶ்லோகத்திலும் இதில் अक्षरार्थ-वाक्यार्थங்கள்[k] நிற்கிற நிலையைக் கண்டு கொள்வது.

---

a-வேறொருவனுக்கு அன்றி எம்பெருமானுக்கே அடியன் என்று அறியவே; b- இதைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ: என்ற நீதி; c-கூறாத மற்றவற்றையும் சேர்த்துக்கொள்ளல்; d- வேறுவகையில் பொருள் கூறியதில்; e- நடு எழுத்து 'உ'; f- 'அ' என்னும் முந்திய எழுத்து; g-கூடிப் பொருள்படுகிறது; h- அவனுக்கே என்னும் வரையறை; i-கருத்து வகையில் கிடைத்தது; j - வெவ்வேறு வகையில் பிரித்துப் பொருள் கூறல்; k- எழுத்துக்களின் பொருள் - வாக்யத்தின் பொருள்.

1 स्वत्वमात्मनि संजातं स्वामित्वं ब्रह्मणि स्थितम् ।
उभयोरेव संबन्धो न परोऽभिमतो मम ।।

இதி. ஸமு. (31 - 56) : ஜீவாத்மா பரமாத்மாவுக்கு உடைமை. பரமாத்மா ஜீவனுக்கு ஸ்வாமி. இருவருக்கும் உள்ள இந்த ஸம்பந்தம் தான் எனக்கு இஷ்டமானது. வேறு இல்லை.

2 दासोऽहं वासुदेवस्य देवदेवस्य शार्ङ्गिणः।
शङ्खचक्रगदापाणेः त्रैलोक्यस्यैकचक्षुषः।।

இதி ஸமு.(81-56) : தேவாதி தேவனாய் சார்ங்கமுடையவனாய் திருவாழி திருச்சங்கு கதை இவற்றைத் தரித்தவனாய் மூவுலகுக்கும் கண் போன்ற வாஸுதேவனுக்கு அடியேன் தாஸன்.

3(?) : அடியேன் வாஸுதேவனுக்கு அடியனாதலின்.

4 अकारार्थो विष्णुर्जगदुदयरक्षाप्रलयकृत्
मकारार्थो जीवस्तदुपकरणं वैष्णवमिदम् ।
उकारोऽनन्यार्हं नियमयति संबन्धमनयोः
त्रयीसारस्त्यात्मा प्रणव इममर्थं समदिशत् ।।

அஷ்டச்லோகி (1): உலகைப் படைத்துக் காத்து அழிப்பவனாகிய விஷ்ணு அகாரத்தின் அர்த்தம். மகாரத்துக்குப் பொருள் ஜீவன்; அவன் விஷ்ணுவுக்கு அடியன். உகாரம் இருவருக்கும் உள்ள ஸம்பந்தம் வேறொருவருக்கும் உரியதன்று என வரையறுக்கின்றது. மூன்று வேதஸாரமாய் மூன்று அக்ஷரமாயுள்ள ப்ரணவம் இந்த அர்த்தத்தைச் சொல்லிற்று.

5 अकारेणोच्यते विष्णुः सर्वलोकेश्वरो हरिः।
उद्धृता विष्णुना लक्ष्मीः उकारेणोच्यते तथा ।
मकारस्तु तयोर्दासः इति प्रणव लक्षणम् ।।

கடச்ருதி : அகாரத்தினால் ஸர்வலோகேச்வரனான விஷ்ணு சொல்லப்படுகிறான். திருப்பாற்கடலினின்று உத்தாரம் செய்யப்பட்ட (அல்லது, மேலே மார்பில் தரிக்கப்பட்ட) பிராட்டி உகாரத்தினால் சொல்லப் படுகிறாள். இவ்விருவருக்கும் தாஸனான ஜீவன் மகாரத்தினால் சொல்லப்படுகிறான்.

6 अग्रत : प्रययौ राम : सीता मध्ये सुमध्यमा ।
पृष्ठतस्तु धनुष्पाणि : लक्ष्मणोऽनुजगाम ह।।

ராமா. (3-11-1): வனத்தில் முதலில் இராமபிரானும் நடுவில் சீதைப்பிராட்டியும் செல்ல, பின் வில்லேந்திய லக்ஷ்மணனும் தொடர்ந்து சென்றான்.

7 मम नाथ यदस्ति योऽस्म्यहं सकलं तद्धि तवैव माधव ।
नियतस्वमिति प्रबुद्धधीरथवा किं नु समर्पयामि ते ।।

ஸ்தோத்ரர. (53): நாதனே! மாதவனே! நான் என்றும் என்னுடையவை என்றும் சொல்லப்படுகின்ற ஸகல வஸ்துக்களும் உனக்கு ஒருவனுக்கே எப்பொழுதும் அடிமையானவை என்று உன் அநுக்ரஹத்தால் சாஸ்த்ரங்களைக் கொண்டு விவேகம் பெற்ற பிறகும் நான் உனக்கு இதற்கு முன் சேஷமல்லாததான எதை உனக்கு ஸமர்ப்பிக்கப் போகிறேன்?

Scanned with CamScanner

காரணமும் காவலனுமாகி என்றும் -
கமலையுடன் பிரியாத நாதனான
நாரணனுக் கடியேன் நான் அடிமை பூண்ட
நல்லடியார்க் கல்லால் மற்றொருவர்க்கல்லேன்
ஆரணங்கள் கொண்டு அகமும் புறமும் கண்டால்
அறிவாகி அறிவதுமாய் அறுநான்கன்றிச்
சீரணிந்த சுடர்போலத் திகழ்ந்து நின்றேன்
சிலை விசயன் தேரனைய சிறுவேதத்தே (2)

6 நம: என்ற நடுச் சொல்லின் பொருள் விளக்கம்

வாக்கியங்களுக்கு அவधारणத்திலே[a] தாத்பர்யம் கொள்ளுகை उचितமாகையாலேப்ரணவத்தில் अवधारणத்தோடே துவக்கிमध्यमपदம்[b] உதிக்கிறது. "नम इत्येव वादिनः"[1] 'नम इत्येव यो ब्रूयात्"[2] என்று விசேஷித்து ஆதரேணீயமான இப்பதத்துக்கு 'स्थूल'ம்[c] 'सूक्ष्म'ம்[d] परம்[e] என்று अर्थभेदங்கள்[f] भगवत्-शास्त्रங்களிலே[g] சொல்லப்பட்டன. இவற்றில் सूक्ष्मயோஜனை विरोधिज्ञानத்துக்கும்[h] अनिष्ट-निवृत्तिप्रार्थனைக்கும் परतन्त्र-स्वरूपनिष्कर्षக்கும்[j] भागवत-शेषत्व। प्रतिपत्तिக்கும்[k] उपाय-विशेष-सिद्धिக்கும்[l] उपयुक्तமாகையாலே[m] இத்தை விசேஷித்து[n] ஆசார்யர்கள் அநுஸந்திப்பார்கள்.

இந் நமஸ், 'ந' என்றும் ம: என்றும் இரண்டு பதமாய் ஒரு வாக்கியமாகிறது. கீழும் மேலுமுள்ள விரோधिகள் परिहरणीयங்கள்[o] என்று தோற்றுகைக்காக निषेध्यத்துக்கு[p] முன்னே निषेधवाचियான[q] शब्दம் கிடக்கிறது. 'मः' என்கிற இது கீழ்ச்சொன்ன ப்ரகாரங்களாலே ஜீவ वाचियான अक्षरத்திலே षष्ठी-एकवचनமாய்[r] 'எனக்கு' என்கிறது. இவ் அபிமாநம்[s] இத்தை முதலாகக் கொண்டு வரும் விரோधि-वर्गங்கள் எல்லாத்துக்கும் உபலக்ஷணம்[t] विरोधि-निवृत्ति-प्रार्थனைக்காக[u] இவ்விரோधिज्ञानமும் अत्यन्त-उपयुक्तம்[v]. இங்கே த்ருதீய -அக்ஷரத்தை[w] அநுஷங்கித்து[x]

a - குறிப்பிட்ட ஒன்றையே கூறுதல் ; b - நம: என்ற நடுப்பதம்; c- வியாகரணத்தைத் தழுவித் தெளிவாய்த் தேறும் பொருள் ; d- எழுத்தில் ஒற்றுமையைக் கொண்டு நிருக்தம் கூறும் பொருள்; e -ரஹஸ்ய சாஸ்த்ரங்களின் எழுத்துக்களுக்கு உள்ள நிகண்டுவின்படி தேறும் பொருள்; f-பல்வகைப் பொருள்கள், g-ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரங்களிலே;

h - விரோதிகளை அறிவதற்கும்; i - தீங்குகள் கழிவதை வேண்டுகை; j - எம்பெருமானுக்கு வசப்பட்ட தன் ஸ்வரூபத்தைப் பற்றிய நிச்சயம்; k- பாகவதர்களுக்கும் தான் அடியனென்ற அறிவு; l- சிறந்த உபாயமான ப்ரபத்தி ஸித்தித்தல்; m- பயன்படுவது; n- குறிப்பிட்டு ; o - விலக்க உரியன; p - மறுக்கப்பட உரிய; q- மறுப்பைக் கூறும்; r- ஆறாம் வேற்றுமை ஒருமை; s - கெட்ட எண்ணம்; t- கூறாததையும் சேர்த்துக் கொள்ளுதல்; u - விரோதி கழிவதை வேண்டுகை; v-மிகப் பயன்படுவது; w- மூன்றாம் எழுத்து 'ம்'; x- மறுபடி சேர்த்துக் கொள்ளுதல்.

(2) சிலை விசயன் தேர் அனைய - (சிறந்த) வில்லையுடைய அர்ஜுநனுடைய தேரைப்போன்ற; **சிறு வேதத்து** - சிறிய வேதமாகிய ப்ரணவத்தில்; **காரணமும்** - எல்லாவற்றுக்கும் மூலகாரணனும்; **காவலனும் ஆகி** - ஸர்வரக்ஷகனுமாகி இருந்து; **என்றும் கமலையுடன் பிரியாத நாதனான** - எப்பொழுதும் பிராட்டியை விட்டுப் பிரியாத ஸ்வாமியான ; **நாரணனுக்கு நான் அடியேன்** - எம்பெருமானுக்கு நான் தாஸன்; **அடிமை பூண்ட நல் அடியார்க்கு அல்லால்** - (பகவானுக்கு) அடிமை பெற்ற சிறந்த பாகவதரையும் தவிர; **மற்று ஒருவர்க்கு அல்லேன்** - வேறு ஒருவருக்கும் தாஸன் அல்லன்; **ஆரணங்கள் கொண்டு** - வேதங்களின் உதவியைக் கொண்டு ; **அகமும் புறமும் கண்டால்** - (ஜீவாத்மாவாகிய என் ஸ்வரூபத்தை) உள்ளும் புறமும் ஆராய்ந்து பார்த்தால்; **அறிவாகி** - ஜ்ஞாநமே வடிவாய்; **அறிவதுமாய்** - தர்மபூதஜ்ஞாநத்தாலே மற்றைப் பொருளை அறிபவனுமாய்; **அறுநான்கு அன்றி** - இருபத்து நான்கு தத்துவங்களாகிய அசேதநத்தில் வேறுபட்டு; **சீர் அணிந்த சுடர் போல** - சிறப்புப் பொருந்திய தேஜஸ் போல; **திகழ்ந்து நின்றேன்** - ப்ரகாசித்து நிற்கின்றேன்.

அர்ஜுநனுடைய தேரில், தலைவனான க்ருஷ்ணன் முன்பும் அடியனான அர்ஜுநன் பின்பும் வீற்றிருந்தது போல, ப்ரணவத்தில் தலைவனான பகவானைக் கூறும் அகாரம் முன்பும், அடியனான ஜீவனைக் கூறும் மகாரம் பின்பும் இருப்பதால் ப்ரணவத்திற்கு அர்ஜுநன் தேரை ஒப்பிடுவது முன்னோர்களின் வழக்கு.

1 सहिताश्चाभ्यधावन्त ततस्ते मानवा द्रुतम् ।
बद्धाञ्जलिपुटा हृष्टा नम इत्येव वादिनः ॥

பார. (சாந்தி - 344-45) : சுவேத த்வீபத்தில் ஆயிரம் சூர்யர்கள் உதித்தாற் போன்று எம்பெருமான் காட்சியளித்த போது அங்குச் சென்றவர்கள் கைகளைக் கூப்பிக்கொண்டு 'வணக்கம்' என்று சொல்லிக் கொண்டே அவனைக் காண்பதற்குக் கூட்டமாய் விரைவில் ஓடுகிறார்கள்.

2 (?): எவன் நம: என்று சொல்லுகிறானோ அவனுக்கு வரும் நலங்களுக்கு அளவில்லை.

Scanned with CamScanner

அந்வயிப்பது. 'अहं मे'[a] என்று அனாதியாக भ्रमित्தவன்[b] இப்போது 'आत्माऽपि चायं न मम'[1] என்கிறான். இத்தை 'अथ मह्यं न'[2] என்றார்கள். संबन्ध-सामान्य-षष्ठी[c] இங்கு तादर्थ्यத்தை[d] விவக்ஷிக்கிறதென்று தாத்பர்யம். தன்னைப்பற்றத் தனக்கு निषेध्यமான[e] तादर्थ्यம் आकार-भेदத்தாலே[f] வருகையால் आत्माश्रय-दोषமில்லை[g]. தான் தனக்குப் பண்ணிக் கொள்ளும் अतिशयமும்[h] परार्थமென்று[i] அநுஸந்திக்கைக்காக இங்கு 'தான் தனக்குச் சேஷனல்லன்' என்கிறது.

6.1 நம: என்ற சொல்லால் அஹங்கார மமகாரங்கள் ஒழிதல்

தான் தனக்கு உரியனல்லனானால் தனக்கு வேறொன்றையும் பற்ற निरुपाधिक-शेषित्वமில்லையாம்[j]. இது தன்னையே இங்குச் சொல்லுகிறதாகவுமாம். அப்போது किंचित् என்று ஒரு பதத்தை अध्याहरித்து[k] 'न मम किंचित्'[l] என்று ஒரு வாக்கியமுமாம். இது தன்னாலே தன்னையும் தன்னுடைமையையும் சேரத் தன்னோடு துவக்கறுக்கிறானாகவுமாம். இத்தால் 'யானே என்தனதே என்றிருந்தேன்'[3] என்கிற ஸம்ஸார மூலங்கள் छेदिக்கப்படுகின்றனர்.

6.2 நம: என்ற சொல் ஜீவனுக்கு சுதந்திரம் இன்மையைக் கூறல்

கீழ் सामान्येन[n] அந்ய சேஷித்வம் கழிந்திருக்க गोबलीवर्द-न्यायத்தாலே[o] இங்கு விசேஷிக்கிறது[p]. स्थिरीकरणार्थமாகவுமாம்[q]. இவ்வர்த்தங்களைக் கீழே सिद्धமாக்கி 'என்னான் செய்கேன்'[4] இத்யாதிகளிற் படியே स्व-स्वातन्त्र्य-निवृत्तिயை[r] இங்கே அநுஸந்திக்கவுமாம்.

6.2.1 ஜீவனுக்குச் செயலாற்றும் தன்மை பற்றிய விஷயங்கள்

लोक-दृष्ट-दासादिகளின்படி[s] யன்றிக்கே ஜீவர்களுடைய कर्तृत्वம் स्वार्थமாக ஸ்வதந்த்ர ஸ்வாமி கொடுத்ததாய் அவனிட்ட வழக்காயிருக்கையாலே கீழ்ச் சொன்னपरशेषत्वத்தோடே[t] கூடப் पर-आयत्त-कर्तृत्वமும்[u] இங்கே अनुसंधेय மாயிற்று. कारणत्वம் तत्त्वत्रय-साधारणம்[v]. कर्तृत्वம்[w] जीव-ईश्वर-साधारणம்[x] இதில் पर-अधीन-कर्तृत्वம்[y] त्रिविध-चेतन-साधारणம்[z] स्वाधीन-कर्तृत्वं[A] ஈச்வரனுக்கே असाधारणம்[B]. இப்படியிருக்க अनादि கர்மவசத்தாலும் प्रवृत्ति-शास्त्रங்களில்[C] आपात-

a - நான் எனக்கே அடியன் (சுலோகம்: 15); b-தவறாக நினைத்தவன்; c- பொதுவாய்த் தொடர்பை மட்டும் காட்டும் ஆறாம் வேற்றுமை;

d -அவனுக்கே அடியன் என்ற பொருள்; e-மறுக்கப்பட உரிய; f-வெவ்வேறு வகையில்; g-தன்னாலேயே தான் ஸித்திப்பது என்ற குற்றம் இல்லை ; h- சிறப்பும்; i- எம்பெருமானுக்காகவே ஏற்பட்டது; j- இயற்கையான சேஷித் தன்மை இல்லை; k- வருவித்து; l- எனக்கு எதுவும் சேஷமன்று; m- ஒழிக்கப்படுகின்றன; n- பொதுவாக ; o- 'பசு வகுப்பைக் கொண்டுவா. எருதைக் கொண்டு வா' என்று கூறினால் பொதுவான பசு வகுப்பிலேயே எருது அடங்கிய போதிலும் பிரித்துச் சொல்லியதால் பசுவகுப்பு என்பது எருது தவிர மற்றவற்றைக் கூறுவதாக கொள்வது; p- குறிப்பிட்டுக் கூறுகிறது; q- உறுதிப் படுத்துதற்தாக; r- தனக்குச் சுதந்திரம் கழிதலை; s- உலகில் காணப்படும் பணியாளர்களின் படி; t- எம்பெருமானுக்குச் சேஷனாயிருத்தல்; u- எம்பெருமான் அளித்த செயல் புரியும் தன்மை ; v- சேதம் அசேதநம் ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்களுக்கும் பொது; w- செயல்புரியும் தன்மை; x-ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் பொது; y- எம்பெருமானுக்கு அடங்கிச் செயல் புரிதல்; z- பத்தர் முக்தர் நித்யர் என்ற மூவகைச் சேதநருக்கும் பொது; A- சுதந்திரனாய்ச் செயல் புரிதல்; B-பிறருக்கு இன்றி ஒருவனுக்கே உரியது; C-இம்மைப் பயனைப் பற்றிய சாஸ்த்ரங்கள்.

1 आत्माऽपि चायं न मम सर्वाऽपि पृथिवी मम ।
यथा मम तथाऽन्येषामिति पश्यन् न मुह्यति॥

பார. (சாந்தி25-19) : என் ஆத்மாவும் எனக்குச் சேஷனல்லன். சேஷமல்லாததைச் சேஷமென்று எண்ணுவதானால் பூமி முழுவதும் என்னுடையது என்று கூட எண்ணலாம். இப்படியே மற்றவர்க்கும் சேஷமன்று. இப்படி அறிபவன் புத்திமயங்கமாட்டான்.

2 *அஷ்டச்லோகி(3)* : நான் எனக்குச் சேஷனல்லன். (சுலோகம் :19[2])

3 யானே என்னை அறியகிலாதே,
யானே என் தனதே என்றிருந்தேன்
யானே நீ என்னுடைமையும் நீயே
வானே யேத்தும் எம் வானவரேறே!

திருவாய். (2-9-9) : 'நானே சேஷி, இந்த வஸ்துக்கள் என்னுடையனவே என்று விபரீதமாக எண்ணியிருந்தேன்.

4 என் நான் செய்கேன்? யாரேகளைகண்? என்னையென் செய்கின்றாய்?
உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்,
கன்னார்மதிள் சூழ்குடந்தைக்கிடந்தாய் அடியேனருவாணாள்,
சென்னாள் எந்நாள்? அந்நாள் உனதாள் பிடித்தே செலக்காணே.

திருவாய். (5-8 - 3): அப்பனே! உன் அருளின்றி நான் என்ன செய்ய முடியும்? எனக்கு உன்னையன்றிக் கதி வேறு யார்?

Scanned with CamScanner

प्रतीतियாலும்[a] பிறந்த निरपेक्ष-कर्तृत्व-अभिमानத்தை[b] விடுகையே இங்கு निवृत्ति-शास्त्र-निष्ठै[c].

6.2.2 பாகவத கைங்கர்யம் பற்றிய விஷயங்கள்

இப்படி तदेक-शेषभूतமாகவும்[d] तदेक-नियाम्यமாகவும்[e] पदद्वयத்தாலே[f] ஸ்வரூபம் சிக்ஷிதமானால்

'यथेष्टविनियोगार्हं शेषशब्देन कथ्यते ।
ईश्वरेण जगत् सर्वं यथेष्टं विनियुज्यते ॥'[1]

என்று अभियुक्तர்[g] சொன்னபடியே ஸ்வதந்த்ர ஸ்வாமி விநியோகத்தாலே भागवत-शेषत्वம்[h] ப்ராப்தமாகிறது. ईश्वरன் ஸ்வாதந்தர்யத்தாலே இஷ்டவிநியோகத்துக்கு[i] शक्तன். ஸ்வாமித்வத்தாலே प्राप्तன்[j].

'ज्ञानी त्वात्मैव मे मतम्'[2] என்ற இவனுக்கு स्व-अतिशयத்தைக் காட்டிலும்[k] स्व-आश्रित-अतिशयம்[l] अभिमतமாகையாலே[m] तत्-शेषत्वம் तदीय-शेषत्व-पर्यन्तமாயிற்று. மேல் चतुर्थिயில் प्रार्थनीयமான[n] கைங்கர்யமும் तदीयपर्यन्तம்[o] ஒருவன்தானே வேறொருவருக்கு அதிசயத்தை[p] விளைவிக்கிற வேஷத்தாலே சேஷனாய் அவராலே வரும் அதிசயத்துக்கு आश्रयனான[q] வேஷத்தாலே சேஷியுமாகை विरुद्धமல்லாமையாலே

'प्रभवो भगवद्भक्ता मादृशां सततं द्विज'[3] 'உன்னடியார்க்கு ஆட்படுத்தாய்'[4], 'அடியார்க்கு என்னையாட்படுத்த விமலன்'[5] என்கிற அநுஸந்தாநம் सर्वभागवतருக்கும் ஸமாநம். இப் प्रतिपत्ति[r] ஒத்திருந்தாலும் प्रवृत्ति[s] சிஷ்ய ஆசார்யாதிகளுக்குப் போலே स्वतन्त्र-आज्ञैயாலே[t] व्यवस्थितै யாயிருக்கும்[u].

---

a - மேலெழுந்தவாரியான அறிவு; b - பிறரை எதிர்பாராது செயல் புரிபவனாக விபரீத எண்ணம்; c- மறுமைப்பயனைக் கூறும் சாஸ்த்ரங்களில் கூறிய உச்சநிலை; d- எம்பெருமான் ஒருவனுக்கே சேஷம்; e- அவன் ஒருவனாலேயே நியமிக்கப்படுவது; f - ப்ரணவம் நம: என்ற இரண்டு சொல் ; g - கற்ற பெரியோர் ; h - பாகவதர்களுக்கும் அடியனாயிருத்தல்; i- இஷ்டப்படி நியமிப்பதற்கு; j - உரிமையுடையன்; k- தனக்கு வரும் சிறப்பைவிட; l- தன் அடியார்க்கு வரும் சிறப்பு; m - மனத்துக்கு உகந்தது; n- பிரார்த்திப்பதற்கு உரிய; o- அவன் அடியார்

வரையில் செல்லுமது; p - சிறப்பு ; q- இருப்பிடமான ; r - உள்ளத்தில் மதிப்பு ; s- நடந்து கொள்ளும் முறை; t- ஸ்வதந்த்ரனான எம்பெருமான் கட்டளையாகிய சாஸ்த்ரத்தாலே; u - வரையறுக்கப்பட்டது.

1 (?): தன் இஷ்டப்படி பயன் படுத்துவதற்கு உரிய பொருள் சேஷம் எனப்படுகிறது. உலகம் முழுதும் எம்பெருமானால் இஷ்டப்படி உபயோகிக்கப்படுகிறது. ஆதலால் உலகம் முழுதும் அவனுக்குச் சேஷம்.

2. प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ।
उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम् ॥

கீதை (7-18) : இழந்த ஐசுவர்யத்தைப் பெற விரும்புமவன், புதிய ஐசுவர்யத்தை விரும்புமவன், கைவல்யத்தை விரும்புமவன் மோக்ஷத்தை விரும்புமவன் என்ற நால்வகையினரும் என் பக்தர்கள். அவர்களுள் என்னையே பெரும் பயனாகக் கருதும் ஞானி எனக்கே ஆத்மாவாக ஆவான். இது என்னுடைய ஸித்தாந்தம்.

3 नारदोऽहमनुप्राप्तस्त्वद्दर्शनकुतूहलात्।
प्रभवो भगवद्भक्ता मादृशां सततं द्विज ॥

இதி. ஸமு. (31 - 54) : நாரதனாகிய நான் உன்னைப் பார்க்க ஆவலால் இங்கு வந்தேன். அந்தண! பாகவதர்கள் என்னைப் போன்றவர்களுக்கு எப்பொழுதும் ஸ்வாமிகள்.

4 கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தனவிவையோ?
கதிரவன்கனை கடல் முளைத்தனனிவனோ?,
துடியிடையார்சுரிகுழல் பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர் சூழ்புனலரங்கா
தொடையொத்ததுளவமும் கூடையும் பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை, அளியனென்றருளி உன்னடியார்க்கு
ஆட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே.

திருப்பள்ளி (10) : தொண்டரடிப்பொடியென்னும் அடியனை உன் அடியார்க்குக் கைங்கர்யம் செய்யும்படி நியமித்தாய்.

5 அமலனாதிபிரான் அடியார்க்கு என்னையாட்படுத்த
விமலன், விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்,
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள் மதிளரங்கத்தம்மான், திருக்
கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றதே.

அமலனாதி. (1) : இந்த்ரியங்களுக்கு அடிமைப்பட்டு நானே ஈச்வரன் என்று விபரீத ஞானமுடையனாயிருந்த என்னை அவனையன்றி வேறு பயனை நாடாத பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்யும்படி அடிமை யாக்கியவனாய் எந்நாளும் குற்றமற்றவனாயுள்ள எம்பெருமான்.

Scanned with CamScanner

6.2.3 பாகவதர்கள் யார்?

இங்கு அடியார் என்கிறது भगवत्-शेषत्व-ज्ञान வான்களான प्रतिबुद्धரையும்[a] நித்யரையும் முக்தரையும். 'நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன்னடியார்க்கடிமை'[1] என்கையாலே இதுவே[b] திருமந்திரத்துக்கு உயிர் நிலை.

6.3 நம: சப்தம் ப்ரபத்தியைக் கூறுதலும் அதற்குச் சான்றுகளும்

இப்படி ஸ்வதந்த்ர ஸ்வாமி இட்ட வழக்கான தனக்கு அவன் நடத்தின நல் வழியாலே அவனைப் प्रसन्नனாக்கிப்[c] पुरुषार्थம்[d] பெற வேண்டுகையாலே यथाधिकारம்[e] द्वयத்திலும் चरम श्लोकத்திலும் சொன்ன வசீகரணம்[f] இங்கே अर्थसिद्धம்[g].

(i) 'शरणं प्रति देवानां प्राप्तकालममन्यत'[2] என்கிற இடத்திலே தமயந்தி நமஸ்ஸை प्रयोगित्தாளென்கையாலும்,

(ii) 'गच्छध्वमेनं शरणं शरण्यं पुरुषर्षभाः'[3] என்று உபதேசிக்க 'नमश्चक्रुः जनार्दनं'[4] என்று பாண்டவர்கள் நமஸ்ஸைப் பண்ணினார்களென்கையாலும்,

(iii) मन्त्रराजपदस्तोत्रத்திலே நமஸ் आत्म-निवेदन-परம்[h] என்கையாலும்,

(iv) साध्य-उपाय-विशेष-पर மான[i] योजना-विशेषத்தாலும்[j],

(v) अभियुक्तரும்[k] 'नम:शब्दः प्रदानार्थः स्वाहाशब्द इवेष्यते'[5] என்கையாலும் இந்த नमः शब्दம் தானே தன் துவக்கற साङ्गभरन्यासத்தைக்[l] காட்டுகிறதாகவுமாம்.

6.3.1 ஸம்பந்த உணர்ச்சியே ப்ரபத்தி என்பதன் உட்கருத்து

'दास इति प्रपन्न इति च'[6] என்கிற அடைவே ப்ரணவத்திலே संबन्धज्ञानமும் நமஸ்ஸிலே उपायமுமாகச் சொன்னவர்கள் தாமே

---

a - நல்லறிவு பெற்றவர்; b- அடியார்க்கு அடிமையாய் இருத்தலே; c- திருவுள்ளம் மகிழ்ந்தவன்; d- பலன்; e- தன் தகுதிக்குத் தக்கபடி; f - வசப்படுத்தும் உபாயம் ப்ரபத்தி ; g- கருத்து வகையால் தேறியது; h-ஆத்மாவை ஸமர்ப்பித்தலைக் கூறும்; i- செய்யவேண்டிய உபாயமான

ப்ரபத்தியைக் குறிக்கின்ற; j - பொருள்படுத்தும் முறை; k- பெரியோர்களும்; l- அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை.

1 *பெரிய திரு.(8-10-3):* உன்னைக் குறிக்கும் அஷ்டாக்ஷரத்தையும் கற்றுணர்ந்து நான் ஏற்றுக் கொண்ட கொள்கை உன் அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்தல் (பாசுரம் 8).

2 सा विनिश्चित्य वहुधा विचार्य च पुनः पुनः ।
शरणं प्रति देवानां प्राप्तकालममन्यत ॥

பார. (ஆரண் -48-16) : தமயந்தி பல்வகையில் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்து தேவர்களைச் சரணமடைய வேண்டிய காலம் வந்துவிட்டதாக நினைத்தாள்.

3 सर्वेषामेव लोकानां पिता माता च माधवः ।
गच्छध्वमेनं शरणं शरण्यं पुरुषर्षभाः ॥

பார. (ஆரண் - 161 - 55) : லக்ஷ்மிபதியான எம்பெருமான் எல்லாவுலகங்களுக்கும் தகப்பனாகவும் தாயாகவும் உள்ளவன். பாண்டவர்களே! ரக்ஷகனான அவனை உபாயமாக எண்ணிச் சரணமடையுங்கள். (மார்க்கண்டேயரின் உபதேசம்.)

4 एवमुक्तास्त्रयः पार्था यमौ च भरतर्षभ।
द्रौपद्या सहिताः सर्वे नमश्चक्रुर्जनार्दनम् ॥

பார. (ஆர-161-56) : இவ்வாறு கூறப்பட்ட குந்தி புத்திரர்கள் மூவரும் நகுல ஸஹதேவர்களும் த்ரௌபதியுடன் சேர்ந்து எல்லாரும் கண்ணனைச் சரணமடைந்தார்கள்.

5 *(?) : நம:* என்ற சொல்லும் ஸ்வாஹா என்ற சொல்லைப் போல் ஸமர்ப்பித்தல் என்னும் பொருளுடையதாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது

6 यस्यास्ते महिमानमात्मन इव त्वद्वल्लभोऽपि प्रभुः
नालं मातुमियत्तया निरवधिं नित्यानुकूलं स्वतः।
तां त्वां दास इति प्रपन्न इति च स्तोष्याम्यहं निर्भयः
लोकैकेश्वरि लोकनाथदयिते दान्ते दयां ते विदन् ॥

சது: ச்லோகி. (2): பிராட்டியே உன் பெருமையை உன் நாயகனான எம்பெருமானும் அளவிட முடியாது. உனக்கு அடியன் என்ற உணர்ச்சியுடன் உன்னைச் சரணமடைந்து விட்ட செயலைக் கொண்டு அச்சமின்றி உன்னைத் துதிக்க முற்படுகிறேன்.

Scanned with CamScanner

संबन्ध-ज्ञानமே उपायம் என்கிற இது இதன் प्राधान्य-விவக்ஷையாலேயாமத்தனை[a] இதுக்கு प्राधान्यம் आत्म-अभिमान-अनुगुण-पुरुषार्थ-व्यवस्थैயாலே[b] ऐश्वर्यादिகளை அருவருப்பித்து स्वरूप-अनुरूपமான[c] परमपुरुषार्थத்திலே[d] रुचिயையும்[e] त्वरैயையும்[f] விளைப்பித்துத் திருநாரணன் தாள் காலம் பெறச்சிந்தித்து உய்யும்படி பண்ணுகை.

யானெனதென்ப தொன்றில்லை என் செய்வதவனையல்லால்
ஆனதறிந்திடும் தன்னடியார்க்கு என்னையாட்படுத்தி
தானெனை நல்கி நடத்துகின்றான் தன்னருள் வழியே
நானுனை வீடு செய்வேனென்ற நம்திருநாரணனே (3)

7 நாராயண சப்தம் - பொருள் விளக்கம்

இப்படி நமஸ்ஸில் தோற்றின वशीकरणத்துக்கு[g] இலக்காய் ரக்ஷகனாய் நிற்கிற சேஷியின் படியை नेतृत्वादि-मुखத்தாலும்[h], வசீகர்த்தாவாய்[i] ரக்ஷணீயனாய் நிற்கிற शेषभूतன்படியை नियाम्यत्वादि-मुखத்தாலும்[j] வெளியிடுகிறது நாராயணா शब्दம்.

நரன் பக்கலிலே பிறந்தவை நாரங்களென்றும் இவன் नेताவாய்[k] गतिயுமாய் இருக்கிறானென்றும் இவற்றை வாஸஸ்த்தாநமாக உடையவனென்றும் சொல்லுகையாலே प्रथम அக்ஷரத்தில் தோற்றின कारणत्व-रक्षकत्व-शेषित्वங்களும் இங்கே विशदமாகின்றன[l]. இஸ் संग्रह[m] விவரணங்களிலே[n] சேஷசேஷிகளுடைய நிரூபணம்[o] 'रामानुजं लक्ष्मणपूर्वजं च'[1] என்கிற க்ரமத்திலே நிற்கிறது.

7.1 நாராயண சப்தத்திற்குத் தத்புருஷ - பஹுவ்ரீஹி ஸமாஸங்கள் வாயிலாகப் பொருள்கள்

இந்நாராயண शब्दம் தத்புருஷனாயும்[p] बहुव्रीहिயாயும்[q] இரண்டு படி ஸமஸ்தமாய்[r] இருக்கும். இதன் அர்த்தத்தை ஆழ்வார் 'நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்''[2] என்றும், ''எண் பெருக்கு அந்நலத்து ஒண் பொருள் ஈறில வண் புகழ் நாரணன்''[3] என்றும் அருளிச் செய்தார். ''நான் உன்னையன்றியிலேன்''[4] इत्यादिகளையும் இங்கே अनुसंधिப்பது.

a- முக்கியமென்ற உட்கருத்தைத் கொண்டு; b- தன்னை யாராக நினைக்கின்றானோ அதற்கு ஏற்ற பலன் என்ற வரையறை; c- தன் ஸ்வரூபத்துக்கு ஏற்ற; d- சிறந்த பலன், மோக்ஷம்; e- ஆசையையும்; f- விரைதலையும்; g - வசப்படுத்தும் ப்ரபத்திக்கு; h- நடத்திச் செல்லும் தன்மை; i- வசப்படுத்துமவன்; j- நியமிக்கப்படும் தன்மை ; k- நடத்திச் செல்லுமவன்; l- தெளிவு பெறுகின்றன; m - சுருக்கம் ; n- விளக்கம்; o- விளக்கிக் கூறுதல்; p- வேற்றுமைப் புணர்ச்சி; q- அல்வழிப் புணர்ச்சி; r- புணர்ந்த தொடர்.

(3) நான் உ(ன்)னை வீடு செய்வேன் என்ற - நான் உனக்கு ஸம்ஸார பந்தத்தை நீக்கி முக்தி கொடுப்பேன் என்று உறுதி கூறிய; **நம் திருநாரணன்** - நம்முடைய ஸ்ரீமந்நாராயணன்; **தான் எனை நல்கி** - **தானும்** என்னிடம் அன்பு வைத்து; **ஆனது அறிந்திடும்** - தகுந்த நல்ல விஷயத்தை அறிந்தவர்களான ; **தன் அடியார்க்கு** - பாகவதர்களுக்கும்; **என்னை ஆட்படுத்தி** - என்னைத் தாஸனாகச் செய்து ; **தன் அருள் வழியே** தன்னுடைய கருணை செல்லும் வழியில்; **நடத்துகின்றான்** - (என்னை) நல்வழிப்படுத்துகின்றான். (உபாயத்தில் மூட்டி அநுஷ்டிக்கச் செய்கின்றான்.) **யான் எனது என்பது** - நான் என்றும் என்னுடையது என்றும் கூறுவதற்குத் தகுந்த பொருள்; **ஒன்று இல்லை** - ஒன்றும் இல்லை. அவனை அல்லால் - அவ்வெம்பெருமானையன்றி; **செய்வது என்?** - செய்யத்தக்கது என்ன இருக்கிறது?

1 नूनं स कालो मृगरूपधारी मामल्पभाग्यां लुलुभे तदानीम् ।
यत्रार्यपुत्रं विससर्ज मूढा रामानुजं लक्ष्मणपूर्वजं च ॥

ராமா.(5-28-10): இராமபிரானுக்குத் தம்பியான லஷ்மணனையும் லஷ்மணனுக்கு அண்ணனான இராமபிரானையும் அறியாமையால் பிரிந்து நிற்கின்றேன். (பிராட்டி புலம்பல்)

2 நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் வேதமயன்,
காரணம்கிரிசை கருமமிவை முதல்வன் எந்தை,
சிரணங்கமரர்பிறர் பலரும் தொழுதேத்த நின்று,
வாரணத்தை மருப்பொசித்த பிரான் என் மாதவனே.

திருவாய். (2-7 - 2): நாராயணன் ஏழுலோகம் முழுவதுக்கும் நாதன், வேதஸ்வரூபன். (இது 'நாராணாம் அயநம்' என்ற தத்புருஷ ஸமாஸப் பொருள்.)

3 எண் பெருக்கு அந்நலத்து, ஒண்பொருள்ஈறில,
வண்புகழ்நாரணன், திண் கழல்சேரே.

திருவாய். (1-2-10): கணக்கற்றவர்களும் ப்ரஸித்தமான ஞானம் ஆனந்தம் என்ற குணங்களையுடையவர்களும் ஸ்வயம் ப்ரகாசருமாயுள்ள ஜீவர்களையும் அசேதநங்களையும் சேஷமாகவுடையனான நாராயணனுடைய வலிமையான திருவடிகளைப் பற்றுக. (இது 'நாரா : அயநம் யஸ்ய' என்ற பஹுவ்ரீஹி ஸமாஸப்பொருள்). *4: பக்கம் 32*

Scanned with CamScanner

7.2 நாராயண சப்தம்: தத்புருஷஸமாஸப் பொருள்

7.2.1 நர என்னும் சொல் பகவானைக் கூறுதல்

'आपो वै नरसूनवः'[1] 'नरात् जातानि तत्त्वानि'[2] , 'नरसंबन्धिनो नाराः नरः स पुरुषोत्तमः'[3] 'जह्नुः नारायणो नरः'[4] इत्यादिகளிற்படியே நரசப்தம்தானும் நாராயணன் தன்னையே சொல்லுகிறது. இது 'नयत्यखिलविज्ञानं । नाशयत्यखिलं तमः। न रिष्यति च सर्वत्र'[5] என்று व्याख्यातமாயிற்று[a]. 'नृ नये'[b] என்கிற धातुவிலே[c] अच् ப்ரத்யயமாய் 'நர:' என்று पदமாம். 'रीङ् क्षये'[d] என்கிற धातुவிலே 'ड' ப்ரத்யயமாய் 'र:' என்று पदமாய் नगनैकादि[e]-शब्दங்களிற்போலே नஞ்ஞோடே ஸமஸ்தமாய்[f] நர: என்கிறதாகவுமாம். 'नेता'[g] என்றால் 'तेषां सततयुक्तानां'[6] इत्यादिகளிற்படியே ज्ञान-प्रदानादिகளைப் பண்ணுமென்கிறது. க்ஷயிஷ்ணுவல்லன்[h] என்றால் ஸ்வரூப - விகாரத்தையாதல்[i] स्वभाव- விகாரத்தையாதல்[j] உடைத்தான वस्त्वन्तरங்களிலே[k] வேறுபட்டவன் என்றதாம். सङ्कल्प-प्रीत्यादि-स्वभाव விகாரங்கள் श्रुतिसिद्धங்களாய் गुणरूपங்களுமாகையாலே विकार-निषेधம்[l] அந்ய - விஷயம்[m]. ப்ரபஞ்ச - ரூப - பரிணாமம் बालனாவன் யுவாவான்[n] கணக்கிலே ஸ்வரூபத்தில் தட்டாது.

7.2.2 நாரசப்தத்தில் அடங்கிய பொருள்கள்

(i) நரஸூநுக்களான[o] அப்புக்கள்[p] நாடுங்கள். நரன் பக்கலிலே பிறந்த தத்த்வங்கள் நாரங்கள்' என்றாற் போலே சொன்னது वस्त्वन्तरங்களையும்[q] உபலக்ஷிக்கிறது[r].

---

4 இன்றாக நாளையேயாக, இனிச் சிறிதும்,
நின்றாக நின்னருள் என்பாலதே,-நன்றாக
நான் உன்னையன்றியிலேன் கண்டாய், நாரணனே!
நீயென்னை யன்றியிலை.

நான்முகன் திரு. (7): நாராயணனே! ஆதாரமான உன்னைவிட்டு நான் இருக்க முடியாது. உன்னைக் காட்டுவதற்குப் பயன்படும் என்னை விட்டு நீ இருக்கவில்லை. நாம் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் இருக்க முடியாது. □

a - பொருள் விளக்கப்பட்டதாயிற்று; b - ந்ரு எனும் பகுதி நடத்துதலைக் கூறும்; c - வினைப் பகுதி; d - ரீங் என்னும் பகுதி அழிதலைக் கூறும்; e- அசையாத மலை , ஒன்றல்லாத பல; f - சொற்களைக் கூட்டிய தொடர்; g

---

- நடத்திச் செல்பவன்; h - அழியுமவனல்லன்; i - ஸ்வரூபத்தில் மாறுபாடு; j- ஸ்வபாவத்தில் மாறுபாடு; k - மற்ற வஸ்துக்களினும்; l- மாறுபாடு இல்லையென்றது; m- வேறு விஷயத்தைப் பற்றியது. (சுருக்கம் மலர்ச்சி முதலியன இல்லையென்பதைக் கூறுவது.); n- வாலிபன்; o- நரனிட மிருந்து தோன்றியவை; p- ஜலம் ; q- மற்ற வஸ்துக்களையும்; r- கூட்டிக் கொள்கிறது.

1. आपो नारा इति प्रोक्ता आपो वै नरसूनवः ।
   ता यदस्यायनं पूर्वं तेन नारायण. स्मृत. ॥

மநுஸ்ம் (1-10) : ஜலம் நாரம் என்று சொல்லப்படுகின்றது. அது நரனிடமிருந்து உண்டானது. நரன் என்பவன் அழிவற்ற எம்பெருமான். ஜலம் முன்பு அவனுக்கு இருப்பிடமாயிருந்தது. ஆதலால் அவன் நாராயணன் என்று சொல்லப்படுகின்றான்.

2. नराज्जातानि तत्त्वानि नाराणीति ततो विदुः ।
   तान्येव चायनं तस्य तेन नारायणः स्मृतः ॥

பார. (ஆநு-178-7): பூமி முதலிய தத்துவங்கள் நரனிடமிருந்து உண்டானவையாதலின் அவற்றை நாரங்களென்று உணர்ந்தனர். அவனுக்கு அவையே இருப்பிடமாதலின் அவன் நாராயணனென்று வழங்கப்படுகிறான்.

3. அஹிர். ஸம். (52-50) : நரனைச் சேர்ந்தவை நாரங்கள். நான் அந்தப் புருஷோத்தமன்.

4. सुप्रसादः प्रसन्नात्मा विश्वसृग्विश्वभुग्विभुः ।
   सत्कर्ता सत्कृतः साधुर्जह्नुर्नारायणो नरः ॥

ஸஹஸ்ரநாம. பார (ஆநு-232-41): ஜஹ்நு:- பக்தரல்லாதவருக்குத் தம் பெருமையை மறைப்பவன். நர:- சேதநாசேதநங்களான தம் ஆளுகைக்கு உரியன அழியாமலிருக்கப் பெற்றவன் நாராயணன்.

5. அஹிர்-ஸம். (52 - 50) : எம்பெருமான் தன் அடியார்களுக்கு எல்லா ஜ்ஞாநத்தையும் கொடுப்பவன். அவர்களின் அஜ்ஞானம் முழுதும் ஒழிப்பவன். அவன் எங்கு இருந்தாலும் மாறுபாட்டை அடைவதில்லை.

6. तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
   ददामि वुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥

கீதை (10-10): என்னுடன் எப்பொழுதும் கூடி அனுபவிக்க ஆசைப் பட்டுப் பக்தி செய்பவர்களுக்குப் பக்குவ நிலைக்கு வந்த விசேஷமான ஜ்ஞானத்தைக் கொடுப்பேன். அதன்பின் என்னை அடைந்து வாழ்வார்கள்.

Scanned with CamScanner

(ii) 'नरसंबन्धि नारं' என்கிற வ்யுத்பத்தியில்[a] स्वरूप-निरूपकधर्मங்கள்[b] முதலாக ஸர்வமும் शाब्दம்[c].

(iii) 'नारो नराणां संघात:'[1] 'नारास्त्विति सर्वपुंसां समूहः'[2] इत्यादिகளும் उपलक्षण-परங்கள்[d] இவ்விடத்தில் नर शब्द ஜீவவாசியாய் இவன் க்ஷயிஷ்ணுவல்லனென்கிறது[e]. இத்தால் முன்பு देहादिविलक्षणனாக[f] शोधितனான[g] இவனுக்கு - शरीर-उत्पत्यादिகளும்[h] ज्ञानसंकोचादिகளுமே[i] உள்ளன. स्वरूपத்தில் - नामान्तर-भजनार्ह-अवस्थैகள்[j] இல்லை என்றதாயிற்று.

(iv) नराणां संघात:[k] என்கிறவிடத்தில் 'नर' த்தாலே சேதந - அசேதநங்கள் இரண்டையும் சொல்லவுமாம். அப்போது விகாரியான[l] அசேதநத்திலே स्वरूप-नित्यதையும்[m] விகார-அம்சத்தில்[n] प्रवाह-नित्यதையும்[o] சொல்லிற்றாம். இவ்விடத்தில் समूहार्थத்திலே 'அண்' ப்ரத்யயமாய் அந்த ஸமூஹங்கள்தாம் பலவாகையாலே 'निवहा नराणां नित्यानामयनमिति नारायणपदम्'[3] என்றார்கள்.

7.2.3 'அயநம்' சப்தத்தின் பொருள்கள்

நாரங்களுக்கு அயநம் என்னும்போது அயந शब्दத்துக்கு 'गतिरालम्बनं तस्य'[4] என்று व्याख्यानம் பண்ணுகையாலே இதில் கரண - வ்யுத்பத்தியாலே[p] उपायत्वமும் கர்மணி - வ்யுத்பத்தியாலே[q] उपेयत्वமும்[r] अधिकरण-வ்யுத்பத்தியாலே[s] आधारத்வமும்[t] सिद्धिக்கிறது. இவ் उपायत्व-उपेयत्वங்கள் சேதனனைக் குறித்தவையாய் आधारत्वம் ப்ரமாண - அநுஸாரத்தாலே சேதந - அசேதங்கள் இரண்டையும் பற்றாகின்றது.

7.3 நாராயண சப்தம் : பஹுவ்ரீஹிஸமாஸப் பொருள்

'நாரங்களை அயநமாகவுடையவன்' என்றபோது 'அயநशब्दம் வாஸ - ஸ்த்தாநத்தையாதல்[u] व्याप्यத்தையாதல்[v] சொல்லுகையாலே निरतिशय-सूक्ष्मதையாலே[w] ஸர்வத்திலும் உள்ளும் புறம்பும் ஒழிவற நிறைந்து நிற்கிற நிலை தோற்றும். இவ்விடத்தில் அவன் இல்லாத प्रदेशம் இல்லை என்கையிலே தாத்பர்யம்.

(i) இது நியமநத்தோடே[x] கூடின வ்யாப்தியாகையாலே[y] ஆகாशத்திலும் ராஜாவிலும் காட்டில் வ்யாவ்ருத்தி[z] தோற்றுகையாலே सर्वशरीरकत्वமும்[A] ஃபலிக்கும்.

(ii) இங்கே அவன் ஒருவனுக்கே सर्व-आधारत्वादिகள் தோற்றுகையாலும் விகாரியான[B] அசித்துக்கும் நிர்விகாரமான[C] ஜீவனுக்கும் பிரிவு தோற்றுகையாலும் தத்த்வ - த்ரய - விவேகமும் பிறக்கிறது.

---

a - பிரித்துப் பொருள் கொள்ளுதல்; b- ஸ்வரூபத்தைக் காட்டுவதற்கு அவசியமான தர்மங்கள்; c-சொல்லாலேயே கிடைப்பது; d- மற்றவற்றையும் கூட்டிக்கொள்வன; e - அழிபவனல்லன் என்கிறது; f - சரீரம் முதலியவற்றினும் வேறுபட்ட; g -ஆராய்ந்து நிச்சயிக்கப்பட்ட ; h - சரீரம் பெறுதல்; i - ; ஞானச் சுருக்கம் j- பெயரை மாற்றி அழைப்பதற்கு உரிய நிலை; k - ஜீவர்களின் கூட்டம்; l- மாறுபடும் தன்மையுள்ள; m - உருவம் அழிவற்ற தன்மை; n - மாறுபாடு என்ற நிலையில்; o - ஆற்று வெள்ளம் போல் எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருத்தல். p - ஜீவனாலே அடையப்படுகின்றான் என்று பிரித்தல்; q- இவன் அடையப் படுகின்றான் என்று பிரித்தல் ; r- பலனாயிருக்கும் தன்மை; s- இவனிடத்தில் அடைந்துள்ளது என்று பிரித்தல்; t- தாங்கி நிற்றல்; u - இருப்பிடம் ; v - சூழப்படுமது; w - இதற்குமேல் ஸூக்ஷ்மமானது இல்லை என்னும் படியுள்ள தன்மை ; x - நியமித்தல்; y - பரவி நிற்றல்; z - வேற்றுமை; A - எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டுள்ளமை; B- மாறுபடும் தன்மையுடையது; C- மாறுபாடு அற்ற.

1. नारो नराणां संघात: तस्याहमयनं-गतिः।
   तेनास्मि मुनिभिर्नित्यं नारायण इतीरितः ॥

பாத்மோத்தரம்(?): நாரம் என்பது நரர்கள் என்று சொல்லப்பட்ட ஜீவர்களின் கூட்டம்.

2. नारस्त्विति सर्वपुंसां समूह: परिकीर्तितः ।
   गतिरालम्बनं तस्य तेन नारायणः स्मृतः ॥

பாத்மோத்தரம் (?) : நாரம் என்று எல்லா ஜீவர்களுடைய கூட்டம் சொல்லப்படுகிறது.

3. **அஷ்டசுலோகி(3):** நித்யர்களான ஜீவர்களுடைய கூட்டம் நாராயணனுக்கு இருப்பிடம் (சுலோகம்: 19[2]).

4. **பாத்மோத்தரம்(?) :** ஜீவர்களின் கூட்டத்துக்கு அடைய வேண்டிய பலனாயும் அடைவதற்கு உபாயமாகவும் உள்ளவன் எம்பெருமான். (சுலோகம் 35[2]).

Scanned with CamScanner

7.4 உபநிடதங்கள் கூறும் விசேஷ அம்சங்கள்

(i) 'கறந்த பாலுள் நெய்யே போல்'[1] என்கிற विवेक-क्रमத்தைச்[a] சொல்லுகிற ब्रह्मबिन्दु வாக்யத்தையும்[2] இங்கே अनुसंधिப்பது.

(ii) श्वेताश्वतरादिகளில் சொன்னபடியே जीव-ईश्वरர்களுடைய चेतनत्वமும், स्वाभाविकமான भेदமும், ஜீவர்களுடைய अन्योन्यभेदமும்[b], ஸர்வருக்கும் ईश्वरன் ஒருவனே सकल-अभिमत-हेतुவானபடியும்[c], उपाय-भूतன் தானே प्राप्यனான படியும்[d]', இதுக்குச் சேர்ந்த उभयलिङ्गत्वமும்[e], उभयविभूति-योगமும்[f], सर्व-विधबन्धुत्वமும் இத்திருநாமத்திலே संक्षिप्तங்கள்[g].

'நர' शब्दத்திலே शोधक-वाक्य-अर्थமும்[h], 'நார' शब्दத்திலே कारण वाक्य-अर्थமும், 'अयन' शब्दத்திலே उपासन-वाक्य-अर्थமும் संगृहीतம்[i].

7.5 திருமந்திரம் மும்முறை எம்பெருமானையும் மும்முறை ஜீவனையும் கூறுவதன் பயன்

ईश्वरனுக்கு प्रथम-अक्षरத்திலே रक्षकत्वादिகளும் 'நர' शब्दத்திலே नित्यत्वादिகளும் 'அயந' शब्दத்தில் आधारत्वादिகளும் தோற்றுகையாலே இவை மூன்றுக்கும் प्रयोजन-भेदம் உண்டு. இப்படி तृतीय-अक्षरादिகளிலே ஜீவனுக்கு चेतनत्व-नित्यत्व-व्याप्यत्वादिகள் தோற்றுகையாலே இவையும் ஸப்ரயோஜநங்கள்.

யாதாமிவையனைத்தும் படைத்து ஏந்தும் இறைவனுமாய்,
கோதாங் குணங்களுடன் குறும்காத குணத்தனுமாய்,
மாதா பிதா என மன் உறவாய்க் கதியென்ன நின்றான்,
போதார்திருவுடன் பொன்னருள்பூத்த நம் புண்ணியனே (4)

8 நாராயணசப்த நான்காம் வேற்றுமை உருபின் பொருள்கள்

இந்நாராயண शब्दத்தில் चतुर्थिயும்[j] स्वरूप-पर-योजனையில்[k] तादर्थ्यத்தையே[l] காட்டுகிறது. ஸமர்ப்பண -परமானால் 'संप्रदान-प्रदर्शिनी'[3] என்று अहिर्बुध्यன் வ்யாக்யாநம் பண்ணினான். फल-परமானால் நித்யமான तादर्थ्यம் प्रार्थनीयமல்லாமையாலும்[m], இது தன்னை प्रथम அக்ஷரத்தில் चतुर्थी சொல்லுகையாலும் तादर्थ्यத்தை முன்னிட்டுத் तदनुगुणமாக प्रार्थनीयமான यथाऽभिमत[n] கைங்கர்யத்தை

---

a - பிரித்துப் பார்க்கும் முறை; b - ஒருவருக்கு ஒருவர் வேறுபாடு; c - விரும்பும் எல்லாப் பலன்களுக்கும் காரணம்; d - பலனாயுள்ளமை; e - இழிவான குணங்கள் அற்றமையும் எல்லாக் கல்யாண குணங்களுடைமையும்; f - லீலாவிபூதி நித்யவிபூதி இரண்டையும் உடைமை; g - சுருக்கிக் கூறப்பட்டன; h - எம்பெருமான் உலகுக்குக் காரணமாயிருப்பதில் குற்றம் நேருமோ என்ற சங்கையைப் போக்கும் வாக்கியத்தின் பொருள்; i - சுருக்கிக் கூறப்பட்டது; j - நான்காம் வேற்றுமை யுருபு 'ஆய'; k - ஸ்வரூபத்தைப் பற்றிப் பொருள் கொண்டு விளக்கும் முறை; l - அவனுக்கு அடியனென்பதையே; m - பிரார்த்தித்துப் பெற வேண்டியது இல்லாமையாலும்; n - தன் இஷ்டப்படி செய்யும்.

1 பிறந்த மாயா பாரதம் பொருதமாயா நீ இன்னே,
சிறந்த கால் தீ நீர் வான் மண் பிறவுமாயபெருமானே!,
கறந்த பாலுள் நெய்யேபோல் இவற்றுளெங்கும் கண்டுகொள்,
இறந்து நின்ற பெருமாயா! உன்னை எங்கே காண்கேனே?

திருவாய்.(8-5-10): கறந்து வைத்த பாலினுள் நெய் கண்ணுக்குப் புலப்படாதிருப்பது போல் ஸகல வஸ்துக்களிலும் இருந்தும் காணமுடியாதவனான உன்னை எந்த இடத்தில் காண்பேன்?

2 घृतमिव पयसि निगूढं भूते भूते चे वसति विज्ञानम्।
सततं मन्थयितव्यं मनसा मन्थानभूतेन ॥

ப்ரஹ்மபிந்து உப. (20) : பாலுள் மறைந்து நிற்கும் நெய் போல் ஞான வடிவனான எம்பெருமான் எல்லா ஜீவர்களுள்ளும் மறைந்துள்ளான். மத்தினால் கடைந்து வெண்ணெய் (நெய்) எடுப்பது போல் மனத்தால் இடைவிடாது தியானித்து அவனைக் காணவேண்டும்.

(4) போது ஆர் திருவுடன் - புஷ்பத்தில் வஸிக்கும் பிராட்டியுடன்; **பொன் அருள் பூத்த** - சிறந்த கருணை மிகுந்தவனும்; **நம் புண்ணியன்** - நம் புண்யமே வடிவெடுத்தாற் போன்றவனுமான எம்பெருமான்; **யாதாம் இவை அனைத்தும்** - எவ்வகைப்பட்ட பொருளுமான இந்தச் சேதநாசேதநங்கள் எல்லாவற்றையும்; **படைத்து ஏந்தும் இறைவனுமாய்** - ஸ்ருஷ்டித்துக் காப்பாற்றும் ஸ்வாமியாக இருந்து ; **கோது ஆம் குணங்களுடன்** - குற்றம் எனப்படும் இழிகுணங்களுடன்; **குறுகாத குணத்தனுமாய்** - சேராத குணமுடையனுமாக இருந்து; **மாதா பிதா என** - தாயும் தந்தையும் என்னலாம்படி; **மன் உறவாய்** - திடமான பந்துவுமாக இருந்து; **கதி என்ன நின்றான்**- (அவனே) கதி என்னும்படி நிற்கின்றான்.

3 नीचीभावेन संद्योत्यमात्मनो यत्समर्पणम् ।
विष्ण्वादिषु चतुर्थी तत्संप्रदानप्रदर्शिनी ॥

அஹிர். ஸம். (52 - 36) : நான்காம் வேற்றுமை, கொடுக்கும் வஸ்துவை வாங்கிக் கொள்பவனைக் காட்டும்.

இங்கே காட்டுகிறது. இங்கு प्रधान-प्राप्यன்[a] பரமாத்மா. नित्य-संबद्धனுக்கு[b] இப்போது प्राप्तिயாவது[c] परिपूर्ण-अनुभवம். இதன் பரிவாஹமாய்க்[d] கொண்டு கைங்கர்யம் प्राप्यமாயிற்று[e].

8.1 எம்பெருமானே முக்கிய பலன், ஜீவனும் பலன் வகுப்பில் சேர்தல்

प्राप्तவும்[f] 'अविभागेन दृष्टत्वात्'[1] என்கிற ஸூத்ரத்தின்படியே परम-प्राप्यவிசேஷணமாய்க்[g] கொண்டு प्राप्यனாகிறான். இங்கு केवल-आत्म-प्राप्तिயிற்[h] சொன்ன च्यवन-धर्मत्वம்[i] வாராது. 'மன்னுறில்'[2] इत्यादिகளை இங்கே अनुसंधिப்பது.

8.2 முக்தி பெற்றவனுக்கு எம்பெருமானோடு முழு ஒற்றுமையும் அதில் வரையறையும்

முக்தனுக்குச் சொன்ன பரம ஸாம்யம் भोग மாத்ரத்திலே என்று सूत्रादि-सिद्धம். ப்ராமாணிகனுக்கு இதுவே सायुज्य-शब्द-अर्थம்[j].

'தன்மை பெறுத்தித் தன் தாளிணைக்கீழ்க் கொள்ளுமப்பன்' என்று ஆழ்வார் அருளிச் செய்தார். இப்படி முக்தனுக்குப் பரமாத்ம லக்ஷணங்களுள் ஒன்றும் வாராமையாலே शेषत्वादिகள் நிலை நிற்கையாலே கைங்கர்யம் உபபந்நம்[k]. இதன் प्रार्थனைக்கு இங்கே उचितமான क्रियापदம்[l] अध्याहार्यம்[m] 'आविः स्युर्मम सहज-कैङ्कर्यविधयः'[4] என்றார்களிறே. 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'[5] என்றதாயிற்று.

கீழில் पदங்களிலே निरुपाधिक-नित्य-शेषனாகத்[n] தன்னைத் தெளிந்தவனாகையாலே, ஸ்வாமியான நீ என்னைப் பரிசுத்தனாக்கி அடிமை கொள்ள வேண்டும் என்கிறதுவும் சேஷிப்ரயோஜநத்தை அபேக்ஷித்தபடி.

---

a - முக்கியமான பயன்; b- எப்பொழுதும் சேர்ந்திருப்பவன்; c- அடைதல்; d- போக்குவீடு; e- பலன்; f- அடைபவனான ஜீவன்; g- முக்கியமான பயனான எம்பெருமானுக்கு விசேஷணம் ; h- ஆத்மாவை மட்டும் அநுபவிப்பதாகிய கைவல்யம்; i- ஸம்ஸாரத்துக்குத் திரும்பும் தன்மை;

j- எம்பெருமானுக்கும் முக்தனுக்கும் அனுபவிக்கப்படும் பொருள் ஒன்றாயிருப்பது ஸாயுஜ்ய என்ற சொல்லின் பொருள்; k- பொருத்த மாகும்; l- வினைமுற்று 'ஸ்யாம்' என்றோ 'பவேயம்' என்றோ; m- வருவித்துக் கொள்க; n- இயற்கையில் எப்பொழுதும் அடியனாக.

1 **ப்ரஹ்மஸூ (4-4-4):** முக்தி பெற்றவன் அஜ்ஞாநம் நீங்கித் தன் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்து கொண்டவனாதலின் பரப்ரஹ் மத்தோடு ஒன்றி நின்றே அனுபவிக்கிறான். பரப்ரஹ்மத்தை விட்டுப் பிரித்துத் தன்னை அனுபவிப்பதில்லை.

2 அற்றது பற்றெனில், உற்றது வீடுயிர்,
செற்றதுமன்னுறில், அற்றிறைபற்றே.

திருவாய்.(1-2-5): எம்பெருமானுக்குச் சேஷமாயிருப்பதையே ரஸமாகக் கொண்ட உன் ஸ்வரூபத்தை அறிந்து நிலை நிற்க விரும்பினாயாகில் முதலில் எம்பெருமானைப் பற்றிக் கொண்டு, மற்ற விஷயங்களை விட்டுவிடு.

3 சன்மசன்மாந்தரம் காத்து அடியார்களைக் கொண்டுபோய்,
தன்மைபெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க்கொள்ளுமப்பனை,
தொன்மை பிதற்றவல்லாரைப் பிதற்றுமவர் கண்டீர்,
நன்மை பெறுத்து எம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பரே.

திருவாய்.(3-7-7): சரணமடைந்த அடியார்களை ஸ்ரீ வைகுண்டத்துக்கு அழைத்துப்போய் அவர்களுக்கு இயற்கையாயுள்ள ஸ்வபாவத்தை வெளிப்படுத்தித் தன் திருவடிக் கீழ் வைத்துக் கொள்ளும் எம்பெருமான்.

4. **அஷ்டசுலோகி (3):** அந்த நாராயணன் பொருட்டு எனக்கு ஸ்வபாவமாய் ஏற்பட்ட கைங்கர்யங்களின் வகைகள் எல்லாக் காலத்திலும் எல்லாவிடத்திலும் எல்லா நிலைமைகளிலும் கிடைக்க வேண்டும் (சுலோகம் : 19[2]).

5. ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்,
தெழிலுகுரலருவித் திருவேங்கடத்து,
எழில் கொள்சோதி எந்தைதந்தை தந்தைக்கே.

திருவாய். (3-3-1): என் நெஞ்சமே! பாகவதர்களே திருவேங்கட முடையான் திருவடிகளில் ஸர்வதேசங்களிலும் ஸர்வகாலங்களிலும் ஸர்வ அவஸ்த்தைகளிலும் குறைவின்றி ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்து அவனை நாம் அனுபவிக்க வேண்டும். வாருங்கள்.

Scanned with CamScanner

8.3 ஜீவனது செயலின் பயன் ஜீவன் ஈச்வரன் இருவருக்கும் உண்டு, ஆயினும் ஈச்வரன் பயனே முக்கியம்

'प्रहर्षयिष्यामि',[1] 'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'[2] என்கிறபடியே சேதநனாகையாலே ஸ்வ - ப்ரயோஜநத்தில் துவக்கற சேஷி - ப்ரயோஜநத்தில் बुद्धि-पूर्व-प्रवृत्ति[a] கூடாது.

'தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே'[3] என்கிறபடியே प्रधानமான சேஷி - ப்ரயோஜநத்தை ஒழிய ஸ்வப்ரயோஜநத்தை அபேக்ஷிக்கவும் கூடாது. ஆகையால் गुणवत् ஸ்வாமியினுடைய ப்ரவ்ருத்தி போலே निपुण-दासனுடைய[b] ப்ரவ்ருத்தியும் இருவர் ப்ரயோஜநத்தையும் விடாதே நிற்கும். ஸ்வாமி உகப்புக்கு शेषமாகத் தனக்கு வரும் ப்ரயோஜநம் पति-संनिधियில்[c] பதிவ்ரதா - அலங்காரம் போலே மிகவும் உசிதம். இது இங்கு இவனுக்கு உத்தர-க்ருத்யத்தில் கைங்கர்ய ரஸத்திலும் துல்யம்.

8.4 முக்தர்கள் பல்லாண்டு பாடுதல்: கேள்வி-விடை .

मुक्तனுக்கு அநிஷ்ட-ப்ரஸங்கமும்[d] भ्रान्ति-प्रसङ्गமும்[e] இன்றிக்கே ईश्वरனும் நித்ய - நிரநிஷ்டனாய்[f] அவாப்த-ஸமஸ்த -காமனாயிருக்க[g], 'சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே'[4] என்ன வேண்டிற்று என்னென்னில் இது अनिष्ट-निवृत्यादिகளை[h] ப்ரயோஜநமாகக் கொண்டால் அஜ்ஞாநத்தைக் காரணமாகக் கொண்டாதல் வருமதன்று. இவனுக்கு श्रुतिகளிற்சொன்ன[5] सामगानादिகளைப் போலே இது ஒரு स्वच्छन्द-प्रवृत्ति-विशेषம்[i].

8.5 நித்யஸூரிகளும் எம்பெருமானைப் பற்றி கவலைப்படல்: விளக்கம்

अस्थान-रक्षा-व्यसनिகள் என்று नित्यसूरिகளைச் சொன்னதுவும் अस्थान-भयशङ्कैயுடையார்க்குள்ள[k] பரிவுடையவர்கள் என்றபடி. இங்கு உள்ளார்க்கு अस्थानभयशङ्कै உண்டாமது பக்தி-விசேஷமடியாக வருகையாலே गुणமாம்.

---

a- அறிந்து செயல் புரிதல்; b- சாதுரியமுள்ள அடிமை; c- கணவன் அருகில்; d- தீங்கு வருவதற்கு இடம்; e- விபரீத ஞானத்துக்கு இடம்; f- எப்பொழுதும் தீங்கற்றவனாய்; g- நினைத்தால் பெற முடியாதது

எதுவும் அற்றவனாய்; h - நீங்கு கழிதல்; i- தன் இஷ்டப்படி செய்யும் விசேஷச் செயல்; j- அன்பின் மிகுதியால் ஆபத்து வருவதற்கு இடமில்லாத விஷயத்திலும் ஆபத்தை நினைந்து அதைப் போக்க மங்களாசாஸநம் செய்வதில் ஈடுபட்டவர்கள்; k- ஆபத்து வருமோவென்று தகாத இடத்தில் கவலை கொண்டவர்க்கு உள்ள.

1. भवन्तमेवानुचरन् निरन्तरं प्रशान्तनि:शेषमनोरथान्तर: ।
कदाहमैकान्तिकनित्यकिङ्कर: प्रहर्षयिष्यामि सनाथजीवित: ॥

ஸ்தோத்ர. (46): எம்பெருமானே! எப்பொழுதும் உனக்கே கைங்கர்யம் புரிபவனாகி, உன்னையே நாதனாகக் கொண்ட வாழ்க்கையுடையனாயிருந்து எப்பொழுது உன்னை மகிழச் செய்வேனோ?

2 செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!,
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.

பெருமாள் திரு. (4-9): திருவேங்கடமுடையானே! நின் திருக்கோயிலின் உட்புறவாசலில் பாகவதர்களும் தேவர்களும் அப்ஸரஸ்ஸுக்களும் இடைவிடாது ஸஞ்சரிக்கும் ஒரு வாசற்படியாக இருந்து உன் திருப்பவழவாயை ஸேவிக்கப் பெறுவேன்.

3 எனக்கேயாட்செய் எக்காலத்தும் என்று, என்
மனக்கே வந்து இடைவீடின்றி மன்னி,
தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே
எனக்கேகண்ணனை யான் கொள் சிறப்பே

திருவாய்.(2-9-4): தன் மகிழ்ச்சிக்காகவே எம்பெருமான் என்னை அடிமை கொள்ளலாகிய இதுவே யான் வேண்டும் பயன்.

4 பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை, சார்ங்கமென்னும்
வில்லாண்டான் தன்னைவில்லிபுத்தூர் விட்டு சித்தன்விரும்பிய சொல்,
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோ நாராயணாயவென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே.

பெரியாழ்திரு. (1-1-12): அடியார்கள் எம்பெருமானை எப்பொழுதும் சூழ்ந்து நின்று மங்களாசாஸநம் செய்து போற்றுவர்.

5 'एव' என்பதற்கு அவधारணம் பொருளாவது போல், 'उ' என்பதையும் அதே பொருளில் இந்த வாக்யத்தில் படிக்கப்பட்டு இருப்பதால் एतत्-सामगायन् आस्ते...... மேல்வரும் हा ३ हा (वु हा ३) முதலிய ஸாமகானம் பண்ணிக் கொண்டிருக்கிறான். (वु हो ३): *(ஸ்தோபாக்ஷரங்கள்)*. ஸாமவேதத்தை கூட்டிச் சொல்லும் முறை.

Scanned with CamScanner

8.6 அர்ச்சைக்கும் விபவத்துக்கும் காப்பிடல் பொருத்தம்

அர்ச்சாவதாராதிகளில் ப்ராணிகளுடைய கர்ம - அநுரூபமாக प्रादुर्भावமும்[a] उपेக்ஷையும்[b] நடத்தியதாகையாலே 'स्रियो वृद्धास्तरुण्यश्च'[1] களிற்படியே மங்களாசாஸநமும் सफलம். அப்போது நிபுணராய் இருப்பார். 'रक्षतु त्वां'[2], इत्यादिகளிற்படியே அவன் தன்னையே கொண்டு மங்களாசாஸநம் பண்ணுவார்கள். இப்படி எங்கும் கண்டுகொள்வது.

இரு விலங்கு கழித்து இடராம் உடலம் தன்னில்
இலங்கு நடு நாடியினால் எம்மை வாங்கி,
ஒரு விலங்கு நெறியல்லா வழியால் மன்னும்
உயர் வானிலேற்றி உயிர் நிலையுந்தந்து,
பெருவிலங்கா மருள் தன்னால் தன்னடிக்கீழ்ப்
பிரியாத வமரருடன் பூணப் பிணைத்து, தன்னார்
உருவிலங்கு மிசைவிக்கும் உம்பர் போகம்
உகந்து தரும் திருமாலை உகந்தோம் நாமே (5)

8.7 திருமந்திரம் அர்த்த பஞ்சகத்தையும் காட்டல்

இப்படி प्रथम-अक्षरादिகளிலே प्राप्यமான[c] ब्रह्म-स्वरूपமும், तृतीय-अक्षरादिகளிலே प्राप्ताவின்[d] ஸ்வரூபமும், मध्यम-पदத்திலே விரோधिயும் உபாயமும், चतुर्थिயிலே फलமும் यथासंभवம்[e] பதங்களிலே संबन्धமும் प्रकाशितமாயிற்று.

8.8 திருமந்திரத்தின் வாக்கியம் கூறும் பொருள்கள்

இதில் வாக்ய - யோஜனை[f] இருக்கும்படி (i) 'अकारवाच्यனான நாராயணனுக்கே நான் अनन्यार्ह-शेष-भूतன், எனக்கு உரியேனல்லேன்' என்று சிலர் திருமந்திரம் முழுக்க स्वरूप-परமென்பார்கள்.

(ii) ப்ரணவம் ஸ்வரூப பரமாய் நமஸ்ஸிலே அநிஷ்ட நிவ்ருத்தி -प्रार्थனையாய் மேல் इष्टप्राप्ति-प्रार्थனை[i] என்றும் சொல்லுவார்கள்.

(iii) இரண்டு पदமும் स्वरूप-परமாய் மேல் पुरुषार्थ-प्रार्थना-पर மென்கிற[j] யோஜனை 'अकारार्थायैव' (19[2]) என்கிற ச்லோகத்திலே சொல்லப்பட்டது.

a- சக்தியை வெளிக் காட்டுதல்; b - சக்தியைக் காட்டா திருத்தல்; c- அடையப்படுகின்ற; d- அடைபவனான ஜீவன்; e- பொருத்தத்துக்குத் தக்கபடி; f - வாக்யத்திற்குப் பொருள் கொள்ளுதல்; g - வேறொருவருக்கன்றி அவனுக்கே அடியேன்; h- நீங்கு நீங்க வேண்டுமென்று வேண்டுகோள் ; i- நன்மையைப் பெற வேண்டுகோள்; j - பலனைப் பிரார்த்திப்பதைக் கூறுவது என்கிற

1. स्रियो वृद्धास्तरुण्यश्च सायं प्रातः समाहिताः ।
सर्वान् देवान् नमस्यन्ति रामस्यार्थे मनस्विनः ।।

ராமா. (2-2-52): இராமனது நலத்துக்காகக் கிழவிகளும் யுவதிகளும் காலையிலும் மாலையிலும் தூய்மையோடு எல்லாத் தெய்வங்களையும் வணங்குகின்றனர்.

2. रक्षतु त्वामशेषाणां भूतानां प्रभवो हरिः ।
यस्य नाभिसमुद्भूतपङ्कजादभवच्चगत् ।।

விஷ்ணுபு. (5 - 5 - 14) : கண்ணா! தன் நாபிக்கமலத்தினின்று உலகைத் தோற்றுவித்தவனாய் எல்லாப் பூதங்களுக்கும் காரணமாயுள்ள விஷ்ணு உன்னைக் காத்தருள வேண்டும். (நந்தகோபர் பிரார்த்தித்தல்)

(5) **இரு விலங்கு கழித்து** - (புண்ய பாபகர்மங்களாகிய) இரண்டு விலங்குகளையும் ஒழித்து ; **இடர் ஆம் உடலம் தன்னில்** - (முக்திக்குத்) தடையாயுள்ள இந்தச் சரீரத்தில்; **இலங்கும் நடு நாடியினால்** -ப்ரகாசிக்கின்ற நடு நாடியாகிய ப்ரஹ்ம நாடியினால்; **எம்மை வாங்கி** - ஜீவாத்மாவாகிய எம்மை (இச்சரீரத்தினின்று பிரித்து) எடுத்து ; **ஒரு விலங்கு நெறி அல்லா வழியால்** - (தூமாதிமார்க்கத்தைப் போல்) ஸம்ஸாரத்திலேயே மறுபடி பிணைக்கும் வழியாக இல்லாத அர்ச்சிராதிமார்க்கத்தால்; **மன்னும் உயர் வானில் ஏற்றி** - சாசுவதமான உயர்ந்த பரமபதத்தில் ஏற்றிவைத்து; **உயிர் நிலையும் தந்து** ஜீவனுக்குக் (கர்மஸம்பந்தத்தால் இது வரை மறைந்திருந்த) குணங்களையும் கொடுத்து ; **பெருவிலங்கு ஆம் அருள் தன்னால்** - (பக்தர்களை விடாமல் கட்டிப் பிடித்துக் காப்பதால்) பெரிய விலங்கு போன்ற க்ருபையினால்; **தன் அடிக்கிழ்ப் பிரியாத அமரருடன் பிணைத்து** - தன் திருவடிக்கீழ் (க்ஷணமும்) பிரியாதிருந்து கைங்கர்யம் செய்யும் நித்யஸூரிகளுடன் ஒன்று கூட்டி ; **அங்கு** - பரமபதத்தில், **தன் ஆர் உருவில்** - தன்னுடைய பரிபூர்ணமான ஸ்வரூபத்தில் ; **மிசைவிக்கும் உம்பர் போகம்** - ஊட்டும் நித்யஸூரிகளின் அநுபவத்தை; **உகந்து தரும் திருமாலை** - (நம்மிடம்) மகிழ்ந்து கொடுக்கும் எம்பெருமானை (ப்பற்றி); **நாம் உகந்தோம்** - நாம் (அறிந்து) மகிழ்ந்தோம்.

Scanned with CamScanner

(iv) மற்றும் பல யோஜனைகளும் உண்டு. सर्व-ब्रह्मविद्या-निष्ठருக்கும்[a] உபஜீவ்யமான[b] शारीरक-शास्त्रத்தில்[c] நிரூபித்த கட்டளையிலே पद-त्रयமும் தத்த்வ - ஹித-புருஷார்த்தங்களை அடைவே காட்டுகிறது என்னும் யோஜனைக்கு अपेक्षित-अर्थ-पौष्कल्यம்[d] உண்டு. द्वयத்திலும் இதுவே அடைவு.

8.9 திருமந்திரப் பொருளை அறிவதால் ஏற்படும் நன்மைகள்

(i) இப்पदत्रयம் தெளிந்தவன் अनन्यार्ह-शेष-भूतனாய்[e] அநந்ய - உபாயனாய்[f] அநந்ய - ப்ரயோஜனாய்[g] नित्यादि களில் சொல்லுகிற பரமை காந்தியாம். இப்पदங்களிலே ஸோபாந க்ரமத்தாலே[h] ஜீவனுக்கு सत्ता-अनुबन्धिகளான[i] आधेयत्व-विधेयत्व शेषत्वங்கள்[j] सिद्धिக்கையாலே 'யானே நீ'[1] इत्यादिகளில் सामानाधिकरण्यம்[k] शरीरात्म-भाव-निबन्धनமென்று[l] सिद्धित्தது. இத்தாலே कुदृष्टि-मतங்களும்[m] கழிந்தன.

(ii) இதில் प्रथम-पदத்தில் तृतीय-अक्षरத்தாலே देहादिகளிலும் तदनुबन्धिகளிலும்[n] வரும் அஹங்கார-மமகாரங்களையும், प्रथम अक्षरத்தில் चतुर्थिயாலே தான் தனக்குரியனாகிவரும் அஹங்கார - மமகாரங்களையும், मध्यम-अक्षरத்தில் अवधारणத்தாலே[o] நான் வேறொருவனுக்கு निरुपाधिकशेषனென்றும்[p] எனக்கு வேறொரு निरुपाधिक சேஷியுண்டென்றும் வரும் அஹங்கார- மமகாரங்களையும், मध्यम-पदத்தில் நிஷேத - விசேஷங்களாலே[q] ஸ்வரக்ஷண - வ்யாபாராதிகளைப்பற்ற நிரபேக்ஷ - ஸ்வதந்த்ரனென்றும்[r] निरुपाधिक[s]சேஷியென்றும் வரும் அஹங்கார - மமகாரங்களையும், இந் निषेध-सामर्थ्यம்[t] தன்னாலே நாராயணशब्दத்தில் चतुर्थिயின் கருத்தான கைங்கர்ய - அநுभवத்தில் फलान्तर-अनुभव-ந்யாயத்தாலே[u] வரும் स्वाधीन-कर्तृत्वभोक्तृत्व[v]-स्वार्थ-कर्तृत्व-भोक्तृत्व[w]-भ्रमரூபங்களான அஹங்கார மமகாரங்களையும் शाब्दமாகவும்[x] आर्थமாகவும்[y] அடியறுத்து நிற்கிறான்.

(iii) இம் मन्त्रनिष्ठன்[z] ரக்ஷகாந்தர-அந்வேஷணம்[A], देवतान्तरादि-ஸ்பர்சம்[B], केवल-देहार्थ-வ்யாபாரம்[C], क्षेत्रादि-सङ्गம்[D], निरपेक्ष-कर्तृत्व-अभिमानம்[E], भागवत-अपराधம், आत्मनाशादिभयம்[F], ப்ரயோஜநாந்தர-ருசி[G] முதலான अनर्थ-हेतुக்களில்[H] ஆழங்காற்படான்[I]. बहुश्रुतனேயாகிலும்[J] இத்தெளிவு இல்லாதவன் विकलன்[K] अल्पश्रुतனேயாகிலும்[L] सदाचार्य-प्रसादத்தாலே இந்தத் தெளிவு பிறந்தவன் ஸம்பூர்ணன். இவனை 'प्रज्ञाप्रासादमारुह्य'[2] என்று प्रशंसिக்கிறது[M].

---

a - ப்ரஹ்மவித்யையைச் செய்கிற எல்லாருக்கும்; b - அவசியம் கைக்கொள்ள வேண்டிய; c - ப்ரஹ்மஸூத்ர பாஷ்யம்; d- அவசியம் வேண்டிய அர்த்தங்கள் நிறைந்திருத்தல்; e - வேறொருவருக்குமன்றி அவனுக்கே அடியன்; f - வேறு உபாயத்தைக் கொள்ளாதவன்; g - வேறு பயனை நாடாதவன்; h - படி வரிசையில்; i - ஸ்வரூபத்தோடு ஒட்டியவை; j- தாங்கப்படுதல் நியமிக்கப்படுதல், அடியனாயிருத்தல்; k- யான் நீ என்று ஒரே வேற்றுமையில் சேர்த்துச் சொல்வது; l - யான் சரீரமாய் நீ ஆத்மா வாயிருப்பதைப் பற்றி வந்தது; m - விபரீத ஞானமுடைய பிற மதங்கள்; n - சரீரத்தைச் சேர்ந்த வஸ்துக்கள்; o - அவனுக்கே என்ற வரையறை; p - இயற்கையில் அடிமை ; q - குறிப்பிட்டு இல்லையென்ற மறுப்புக்கள்; r - பிறனை எதிர்பாராத சுதந்திரன்; s - இயற்கையில் சேஷி; t - இந்த மறுப்பின் வலிமையாலே; u - மற்ற பலன்களை நுகரும் போது வரும் எண்ணத்தின் படி ; v - சுதந்திரமாய்ச் செயல் புரியும் தன்மை, சுதந்திரமாய் அநுபவிக்கும் தன்மை ; w - தனக்காகவே செயல் புரிதல், தன் பயனுக்காகவே அநுபவித்தல்; x - சொல்லால் வெளிப்படையாகவும்; y - கருத்து வகையிலும்; z - இம்மந்திரத்தை உறுதியாகப் பற்றியவன்; A - வேறொரு காப்பவனை நாடுதல் ; B - வேறு தேவதையைப் பற்றுதல் ; C - சரீரத்திற்காகவே செயல் புரிதல் ; D - வீடு நிலம் முதலியவற்றில் பற்று; E - பிறரை எதிர்பாராமல் தானே செய்வதான தீய எண்ணம் ; F - ஆத்மாவுக்கு அழிவு வருமோ என்று அச்சம் ; G - வேறு பயனில் ஆசை; H - தீங்கு விளைவிப்பனவற்றில்; I - அடி வைக்க மாட்டான்; J - மிகக் கற்றவன்; K - குறையுடையவன்; L - அற்ப அறிவுடையன்; M - புகழ்கின்றது.

1. ***திருவாய் (2-9-9):*** *யான் உனக்குச் சரீரமாய் நீ ஆத்மாவாயிருப்பதால் யான் நீயே. என்னுடையவை என்று சொல்லப்படுபவையும் உனக்கே உரியன. (பாசுரம் : 25)*

2 प्रज्ञाप्रासादमारुह्य ह्यशोच्यः शोचतो जनान् ।
भूमिष्ठानिव शैलस्थो ह्यज्ञान् प्राज्ञः प्रपश्यति ।।

பார. (சாந்தி-150-1): *திருமந்திரத்தின் அர்த்தஜ்ஞாநமாகிய மேன்மாடியில் ஏறிப் பிறரால் இரக்கப்படத்தகாத நிலையில் உள்ள இந்த விசேஷ ஜ்ஞாநமுள்ள அதிகாரி, இத்தகைய ஜ்ஞாநமற்று வருந்தும் மனிதர்களை ஒரு மலையின் மீது நிற்பவன் தரையில் நிற்பவர்களை மிகச்சிறிய உருவில் காண்பது போல் மிக அற்பர்களாகப் பார்க்கிறான்.*

Scanned with CamScanner

உறவை இசைந்து இறையில்லா ஒருவற்கு என்றும்
ஒண் சுடராய் ஓரெழுத்தில் ஓங்கி நின்றோம்,
துறவறமும் தூமதியும் துயரம் தீர்வும்
தூயவர்கட்கு ஆன்மையும் இரண்டில் உற்றோம்,
அறமுயலும் அனைத்துறவாய் அனைத்தும் ஏந்தும்
அம்புயத்தாள் கணவனை நாம் அணுகப்பெற்றோம்,
பிறவியறுத்து அடி சூடி அடிமையெல்லாம்
பிரியாத அமரருடன் பெற்றோம் நாமே (6)

திருமந்த்ராதிகாரம் முற்றும்.

த்வாயாதிகாரம்

கருமமென ஞானமென அதனால் கண்ட
உயிர் கவரும் காதலெனக் கானிலோங்கும்,
அருமறையால் தருநிலையில் இந்நாளெல்லாம்
அடியேனை அலையாத வண்ணம் எண்ணி,
தருமமுடையார் உரைக்க யானறிந்து
தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டி,
திருமகளோடு ஒருகாலும் பிரியா நாதன்
திண் கழலே சேதுஎனச் சேர்கின்றேனே (7)

9 த்வயம் வேதம் ஓதிய மந்திரம்

கठश्रुत्यादिகளில்[1] திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்திலே த்வயத்தில் पूर्व-उत्तर-स्वण्डங்களைப்[a] பிரியவோதிச் சேர ஒருக்கால் உச்சரிக்க विधित्तது.

10 ப்ரபத்தி மந்திரங்களுள் த்வயத்தை ஆசார்யர்கள் ஆதரித்த காரணம்

श्वेताश्वतरादिகளிலே சொல்லுகிறப்ரபத்தி - மந்த்ரங்களிற் காட்டில் இது शरण्य-शरणागति-तत्फलங்களை विशदமாகக்[b] காட்டுகையாலே இத்தை ஆசார்யர்கள் ஆதரித்தார்கள்.

a - முற்பகுதி பிற்பகுதிகள்; b - தெளிவாக.

***(6)* ஓர் எழுத்தில்** - ஓர் எழுத்தாகிய ப்ரணவத்தில்; **இறை இல்லா ஒருவற்கு** - (தனக்கு ஒரு) நாயகன் இல்லாத எம்பெருமானோடு; **என்றும் உறவை இசைந்து** - எப்போதும் (நமக்கு உள்ள சேஷத்வம் என்னும்) ஸம்பந்தத்தை ஏற்றுக் கொண்டு; **ஒண் சுடராய்** - அழகிய ப்ரகாசஸ்வரூபமாய்; **ஓங்கி நின்றோம்** - உயர்ந்து நின்றோம்; **இரண்டில்** - இரண்டு அக்ஷரமாயுள்ள நம : சப்தத்தில்; **துறவறமும்** - (அஹங்காரமமகாரங்களை) விடுகையாகிய முக்கிய தர்மமும்; **தூமதியும்** - பரிசுத்தமான ஜ்ஞாநமாகிய சரணாகதியும்; **துயரம் தீர்வும்** - (தன்னை ஸ்வதந்த்ரனாய் நினைத்தலாகிய) துன்பம் நீங்குதலும்; **தூயவர்கட்கு ஆனமையும்** - பரிசுத்தரான பாகவதர்க்கு அடியனானமையும்; (ஆகிய அர்த்தங்களை). **உற்றோம்** - அடைந்தோம். (மேல் நாராயண சப்தத்தில்) **அறம் முயலும்** (சரணமடைந்தவனைக் காப்பதாகிய) தர்மத்திலேயே யத்நமுள்ளவனும்; **அனைத்து உறவாய் அனைத்தும் ஏந்தும்** - ஸகலவித பந்துவுமாய் ஸகல வஸ்துக்களையும் ரக்ஷிப்பவனுமான; **அம்புயத்தாள் கணவனை** - தாமரையில் வஸிக்கும் பிராட்டியின் கணவனான எம்பெருமானை; **நாம் அணுகப் பெற்றோம்** - நாம் நெருங்கி அனுபவிக்கும் பாக்யத்தைப் பெற்றோம். (மேல் நான்காம் வேற்றுமையில்) **பிறவி அறுத்து** - மறு பிறவி ஒழியப்பெற்று; **அடி சூடி** - திருவடிகளை (நம் முடியில்) சூடி; அடிமை எல்லாம் - கைங்கர்யங்கள் முழுவதையும்; **பிரியாத அமரருடன்** (பகவானை க்ஷணமும்) பிரியாத நித்யஸூரிகளுடன் (சேர்ந்து) ; **நாம் பெற்றோம்** - நாம் செய்யப் பெற்றோம்.

***(7)* கருமம் என ஞானம் என** - கர்மயோகமும் ஜ்ஞாந யோகமும்; **அதனால் கண்ட**- அவை இரண்டாலும் ஸாக்ஷாத்கரித்த; **உயிர்** - ஜீவாத்மாவை; கவரும் - வசப்படுத்தித் தன்னிடத்தில் ஈடுபடச் செய்கின்ற; **காதல் என** - பக்தி யோகமென்னும் உபாயமுமாகிய; **கானில் ஓங்கும்** - (அநுஷ்டிக்க அரியவாயிருப்பதால்) காடு போன்ற இவற்றில் உயர்ந்து நிற்பதாயும்; **அருமறையால் தரும் நிலையில்** அருமையான வேதத்தால் உபதேசிக்கப்படுவதுமான நிஷ்டையில்; இந்நாள் எல்லாம் - இந்த நாள் முழுவதும், **அடியேனை அலையாத வண்ணம் எண்ணி** - தாஸனாகிய யான் அநுஷ்டிக்க முயன்று துன்புறாதபடி திருவுள்ளங்கொண்டு, **தருமமுடையார் உரைக்க** - தர்மத்தை அறிந்த ஆசார்யர்கள் (அடியேனுக்கு சரணாகதியை) உபதேசிக்க; **யான் அறிந்து** - அடியேன் (அதை) அறிந்து கொண்டு; **தனக்கு என்னா அடிமைக்கு ஆம்** - எனக்கு என்னாது (மமகாரம் இல்லாமல்) செய்யும் கைங்கர்யத்திற்குத் தக்க; **வாழ்ச்சி வேண்டி** - வாழ்க்கையை விரும்பித் திருமகளோடு **ஒருகாலும் பிரியா நாதன்** - பிராட்டியை விட்டு எப்பொழுதும் பிரியாத எம்பெருமானுடைய ; **திண்கழலே சேது என** -- வலிய திருவடிகளே (ஸம்ஸாரத்தைக் கடக்கும்) அணை என்று உறுதி கொண்டு **சேர்கின்றேன்** - (அவற்றை உபாயமாக) அடைகின்றேன்.

1 **கடச்ருதி :** श्रीमन्नारायण – चरणौ शरणं प्रपद्ये।
इदं पूर्णमदः पूर्णम् । श्रीमते नारायणाय नमः ।।

Scanned with CamScanner

11 த்வயம் அமைந்த வகை

ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதையிலும் வ்யாபக - மந்த்ரங்களோடு[a] சேர்ந்த शरणागति- மந்திரங்களை உபதேசிக்கிற இடத்திலே திருவஷ்டாக்ஷரத்தோடே சேர இம்மந்திரத்தையும் वर्ण-उद्धारம்[b] பண்ணி உபதேசித்தது. இப்படியால் இது श्रुत्यभिमतமான[c] தாந்த்ரிக - மந்த்ரம்[d].

12 ப்ரபத்தி எல்லோருக்கும் உரிய பொதுத் தர்மம்

இதில் சொல்லுகிற प्रपदनம்[e] श्रौतமேயாகிலும்[f] ஸத்யவசநாதிகள் போலே सर्वाधिकारம்[g] இது 'सर्वलोकशरण्याय'(272[3]). 'सर्वयोग्यमनायासं'[1] 'शरणंतवां प्रपन्ना ये'[2] 'त्रयाणां क्षन्त्रियादीनां प्रपन्नानां च तत्त्वतः'[3] 'कुयोनिष्वपि संजातो यः सकृच्छरणं गतः'[4] 'குலங்களாயஈரிரண்டில்'[5] इत्यादिவிலும் प्रसिद्धம்.

13 த்வயத்தின் மூலம் ப்ரபத்தி செய்பவர் கிடைத்தற்கு அரியர் என்பதன் பொருள்

किं नु तस्य च मन्त्रस्य कर्मणः कमलासन ।
न लभ्यतेऽधिकारी वा श्रोतुकामोऽपि वा नरः ।।[6]

என்றது विश्वास-महத்தையும்[h] विलम्ब-अक्षमதையும்[i] உடையனான अधिकारिயினுடைய दौर्लभ्यத்தையே[j] காட்டுகிறது.

14 த்வயம் - பெயர்க் காரணம்

இம்மந்த்ரம் स्वाधिकारத்தையும் ஸ்வஸ்வரூபத்தையும் தெளிந்தவனுக்கு स्व-अधिकार-அநுரூபமான[k] உபாயமென்ன, ஸ்வரூப-

a - அஷ்டாக்ஷரம் - ஷடக்ஷரம் த்வாதசாக்ஷரம் என்னும் மூன்றும் வ்யாபக மந்த்ரங்கள் . b- ஒவ்வோர் எழுத்தாக எடுத்துப் பொருள் கூறுதல்; c- வேதத்துக்கு உகந்த; d - ஸம்ஹிதையில் வெளியாகும் மந்த்ரம் ; e- ப்ரபத்தி; f- வேதத்தில் விதிக்கப்பட்டது; g- எல்லோரும் செய்ய உரியது; h- மிகுதியான நம்பிக்கை ; i- தாமதத்தைப் பொறுக்காமையும்; j- கிடைப்பதற்கு அருமை; k- தன் தகுதிக்கு ஏற்ற.

1 सर्वयोग्यमनायासमप्रमादमनूपमम् ।
प्रपन्नार्तिहरं विष्णुं शरणं गन्तुमर्हसि ।।

(?): ப்ரபந்நர்களின் துக்கத்தைப் போக்குமவனான எம்பெருமானிடம் எல்லோரும் செய்ய உரியதாய் சிரமத்தைக் கொடுக்காததாய் தவறுதல் நேர இடமில்லாததாய் ஒப்பற்றதான சரணாகதியைச் செய்ய நீ உரியனாயுள்ளாய். (இங்கு முற்பாதியின் நான்கு சொற்களும் விஷ்ணுவைக் குறிப்பதாயினும் ப்ரபத்திக்கே பொருந்துவன.)

2 शरणं त्वां प्रपन्ना ये ध्यानयोगविवर्जिताः ।
तेऽपि मृत्युमतिक्रम्य यान्ति तद्वैष्णवं पदम् ।।

ப்ராஹ்மபு. (53) : பக்தி யோகம் செய்யச் சக்தியற்றவர்களாய் உன்னைச் சரணமடைந்தவர்கள் ஸம்ஸாரத்தை தாண்டி உன் ஸ்தாநமாகிய பரமபதத்தை அடைகிறார்கள்.

3 त्रयाणां क्षत्रियादीनां प्रपन्नानां च तत्त्वतः।
अमन्त्रमधिकारस्तु चतुर्व्यूहक्रियाक्रमे।।

ஸாத்வதஸம்.(2-9): விதிப்படி ப்ரபத்தி செய்த க்ஷத்திரியர் முதலான மூன்று வருணத்தார்களுக்கும் (நான்கு வ்யூஹங்களை மந்த்ரமில்லாமல் ஆராதிப்பதில் அதிகாரம் இருக்கிறது.)

4 कुयोनिष्वपि संजातो यः सकृत् शरणं गतः ।
तं मातापितृहन्तारमपि पाति भवार्तिहा ।।

ஸநத்குமாரஸம்.(?): தாழ்ந்த ஜாதியில் பிறந்தாலும் எம்பெருமானிடம் ஒருமுறை ப்ரபத்தி செய்துவிட்டால் அவன் தாய் தகப்பன்மாரைக் கொன்றவனாயினும் ஸம்ஸார துக்கத்தைப் போக்கும் ஸ்வபாவமுள்ள எம்பெருமான் அவனைக் காப்பாற்றுகிறான்.

5 குலங்களாயஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்,
நலங்களாயநற்கலைகள் நாலிலும் நவின்றிலேன்,
புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனித!, நின்
இலங்குபாதமன்றிமற்றொர் பற்றிலேன்எம்மீசனே!

திருச்சந்தவி. (90) : தர்மத்தைச் செய்வதற்குத் தகுந்த நான்கு ஜாதியுள் ஒன்றிலும் நான் பிறந்தவனாக இல்லை.

6 ***பௌஷ்கரஸம்(?):*** ப்ரஹ்மாவே! ஆனால் இம் மந்த்ரத்துக்கும் இதைச் சொல்லிச் செய்யும் ப்ரபத்திக்கும் அதிகாரியோ இதைக் கேட்பவனான மனிதனோ கிடைக்கவே மாட்டான்.

Scanned with CamScanner

அநுரூபமான[a] पुरुषार्थமென்ன[b] देश-कालादि-परिच्छेदरहितமான[c] இவ் अर्थद्वयத்தைக்[d] காட்டுகையாலே द्वयம் என்று பேர்பெற்றது.

15 த்வயத்தின் இரு பகுதிகளின் வரிசை பற்றிய விளக்கம்

'தாயே தந்தை'[1], 'ஏழையேதலன்'[2] முதலானவையும் गद्यமும் द्वयத்தின் விவரணம்.

'திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினோ'[3] என்றும், 'முகில் வண்ணனடியையடைந்து அருள் சூடியுய்ந் தவன்'[4] என்றும் இதில் पदक्रमத்தில்[e] उर्थ-अनुसन्धानம். இதில் अर्थ-क्रमத்திலே[f] उत्तर-खण्ड-अनुसन्धानம் முற்பட வேண்டி னாலும் உபாய फलங்களினுடைய உத்பத்தி - க்ரமத்தை[g] அநுஸரித்துக் கொண்டு अध्ययन-क्रमம் नियतமாகிறது[h].

16 த்வயத்தின் முற்பகுதியின் பொருள் விளக்கம்

'स भ्रातुश्चरणौ गाढं (254[2]) इत्यादियாலும், 'அகலகில்லேன்'[5] என்கிற பாட்டாலும் पूर्व-खण्डம்[i] व्याख्यातமாயிற்று[j].

---

a - ஸ்வரூபத்துக்கு ஏற்ற; b - பலன்; c- தேசத்துக்கோ காலத்துக்கோ வரையறையில்லாத; d- உபாயமும் பலனுமாகிய இரண்டு விஷயத்தையும்; e- பதங்கள் இருக்கும் வரிசையில்; f- அர்த்தம் கூறும் வரிசை; g- உபாயம் செய்து பின் பலன் பெறுதல் என்ற வரிசையில்; h- வரையறையுடன் அமைந்தது; i - முற்பகுதி; j - பொருள் விளக்கலாயிற்று.

1 தாயே தந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றும்,
நோயே பட்டொழிந்தேன் நுன்னைக்காண்பதோராசையினால்,
வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா,
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே.

பெரிய திரு. (1-9)ம் பதிகம்: இப் பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும் திருமலையின் போக்யதையை விளக்கித் தன்னை ஆட்கொள்ள வேண்டுகிறார் ஆழ்வார். இப்பதிகத்தில் கூறப்பட்டவைகளாவன : ஔபாதிக பந்துக்களையே கதியாக நினைத்துக் கெட்டது, விசித்ர நரகங்களில் விழுந்து அழிந்தது, வேறு ஸ்த்ரீகளின் வலையில் அகப்பட்டது, பல கொலைகளையும் செய்து பொருளில் பற்றுற்றிருந்தது, எத்தனையோ பிறவி எடுத்தும் எள்ளத்தனை நல்லறமும் செய்யாமை, கீழ்க்கூறிய பாபங்கள் தவிர மற்ற பாபங்களையும் செய்து இளைத்தொழிந்தது, ஹேய தேஹ ப்ரம வாதை, பிறவி முதல்

ஸர்வாவஸ்தையிலும் விபரீதமாயிருந்தமை, அநாதியாய் காம்ய ப்ரவ்ருத்தியே செய்த தமக்கு இப்போதே தெளிவு பெற்றமை, உபாயாந்தரம் செய்ய முடியாமை - என்பன.

2 ஏழையேதலன் கீழ்மகனென்னாது
இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து,
மாழைமான்மட நோக்கி உன் தோழி
உம்பி எம்பியென் றொழிந்திலை, உகந்து
தோழன் நீ எனக்கு இங்கொழியென்ற
சொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட,
ஆழி வண்ண நின்னடியிணையடைந்தேன்.
அணிபொழில் திருவரங்கத்தம்மானே

பெரிய திரு.(5-8)ம் பதிகம்: இப் பதிகத்தில் வேடனான குகனுக்கு அருளியது, வானரமான ஸுக்ரீவனுக்கு அருளியது, யானைக்கு அருள் புரிந்தது, ஸுமுகன் என்ற பாம்பை ரக்ஷித்தது, கோவிந்தஸ்வாமி என்ற அந்தணனொருவனுக்கு அற்ப பலன்களையும் மோக்ஷத்தையும் அருளியது, மார்க்கண்டேயனைக் காத்தது, காணாமற்போன புதல்வனை சாந்திபனி முனிவருக்கு மீட்டுத் தந்தது, வைதிகனுக்கு மக்களையெல்லாம் மீண்டும் பெறுவித்தது, தொண்டைமான் சக்ரவர்த்திக்குத் திடமான அருள் தந்தது என்பனவற்றை எடுத்துரைத்து அநிஷ்ட நிவ்ருத்தி - இஷ்டப்ராப்திகளைத் திருவரங்கனிடம் வேண்டினார்.

3 ஒரு நாயகமாய் ஓடவுலகுடனாண்டவர்,
கருநாய் கவர்ந்தகாலர் சிதைகிய பானையர்,
பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்,
திருநாரணன்தாள் காலம் பெறச்சிந்தித்துய்ம்மினோ

திருவாய். (4-1-1): அடியார்களே! பிராட்டியுடன் கூடிய நாராயணன் திருவடிகளே உயர்ந்த பயனென்று தேர்ந்து விரைவில் அவன் திருவடிகளைப் பற்றி உய்வீர்களாக.

4 முகில் வண்ணனடியையடைந்து அருள்சூடி
உய்ந்தவன் மொய் புனல் பொருநல்,
துகில்வண்ணத்தூநீர்ச் சேர்ப்பன் வண் பொழில்சூழ்
வண் குருகூர்ச்சடகோபன்,
முகில்வண்ணனடி மேல் சொன்ன சொன்மாலை
ஆயிரத்து இப்பத்தும் வல்லார்,
முகில் வண்ண வானத்து இமையவர் சூழ
இருப்பர்பேரின்ப வெள்ளத்தே.

திருவாய்.(7-2-11): மேகம் போன்ற நிறமுடைய எம்பெருமான் திருவடிகளை அடைந்து அவன் திருவருளைப் பெற்று உஜ்ஜீவித்தவனான சடகோபன் (5 பக்கம் 52).

Scanned with CamScanner

16.1 ஸ்ரீ சப்தத்தின் ஆறு பொருள்கள்

இதில் 'श्री' शब्दம்

'शृणाति निखिलान् दोषान् श्रीणाति च गुणैर्जगत् ।।
श्रीयते चाखिलैर्नित्यं श्रयते च परं पदम् ।।'[1]
'श्रयन्तीं श्रीयमाणां च शृणतीं शृण्वतीमपि'[2]

इत्यादिवசனங்களாலே பலव्युत्पत्तिகளை[a] உடைத்தாயிருக்கும்.

இவ் வ்யுத்பத்திகளெல்லாவற்றிலுமுள்ள वैभवத்தைக்[b] கணிசித்து 'श्रीरित्येव च नाम ते भगवति ब्रूमः कथं त्वां वयम्'[3] என்றும், 'भगवतीं श्रियं'[4] என்றும், 'श्रीरसि यतः'[5] என்றும், அருளிச் செய்தார்கள்.

(i) 'श्रृणाति निखिलान् दोषान्'[6] என்கிறது 'வேரி மாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்'[7] என்கிறபடியே அஜ்ஞாநாதிகளையெல்லாம் கழிக்கும் என்றபடி.

---

5 திருவாய் (6-10-10): பெரிய பிராட்டி 'க்ஷணகாலமும் விட்டுப் பிரியவல்லேனல்லேன்' என்று நித்யமாய் வாழுமிடமாகிய திருமார்பையுடைய திருவேங்கடத்தானே! வேறு உபாயமும் பலனும் அற்ற அடியேன் அவளையே புருஷகாரமாகக் (பரிந்து பேசுபவள்) கொண்டு அவளுடன் கூடிய உன் திருவடிகளைச் சரணடைந்தேன். எல்லாத் தடைகளும் நீங்கப்பெற்று இப்பொழுதே உன் திருவடிகளில் எப்பொழுதும் ஸர்வ கைங்கர்யங்களும் செய்யப் பெறும்படி அருள்புரிய வேண்டும். (பாசுரம் :17[7]) □

a - பொருள்படுத்தும் முறை; b - பெருமை.

1 ***அஹிர்பு. ஸம்.(51-61):*** பெரிய பிராட்டி எல்லாத் தோஷங்களையும் போக்குகிறாள்; நல்ல குணங்களை உண்டாக்குகிறாள்; எல்லோராலும் எப்பொழுதும் அடையப்படுகிறாள்; தான் எம்பெருமானை அடைகிறாள்.

2 अनाकारामनौपम्यां लक्षयन्त सदा जगत् ।
श्रयन्तीं श्रीयमाणां च शृणत शृण्वतीमपि ।।

அஹிர்பு. ஸம். (21-8): பிராட்டி தான் எம்பெருமானை அடைபவள்; பிறரால் அடையப்படுவள்; தோஷங்களை ஒழிப்பவள்; மக்களின் தீனக்குரலைக் கேட்பவள்.

3 कान्तस्ते पुरुषोत्तमः फणिपतिः शय्याऽऽसनं वाहनं
वेदात्मा विहगेश्वरो यवनिका माया जगन्मोहिनी।
ब्रह्मेशादिसुरव्रजः सदयितस्त्वद्दास दासीगणः
श्रीरित्येव च नाम ते भगवति ब्रूमः कथं त्वां वयम् ।।

சது: ச்லோகி (1): பெரிய பிராட்டியே! பெருமையைக் காட்டுவதற்கு எங்கும் சேர்க்கப்படுகிற ஸ்ரீ என்ற சொல்லே உனக்குத் திரு நாமமாயுள்ளது. மிக்க பெருமையையுடைய உன்னை யாம் எவ்வாறு புகழவல்லோம்?

4 भगवन्नारा....भगवतीं श्रियं देवीं नित्यानपायिनीं निरवद्यां देवदेवदिव्य-
महिषींमखिलजगन्मातरंअस्मन्मातरं अशरण्यशरण्यां
अनन्यशरणः शरणमहं प्रपद्ये।

சரணா. கத்யம் (1): ஜ்ஞாநம் - சக்தி - பலம் - ஐச்வர்யம் - வீர்யம் - தேஜஸ் ஆகிய குணங்கள் நிறைந்தவளாய், இழிகுணங்களற்றவளாய், நாயகனுடன் சேர்ந்து திருவிளையாடல் புரிபவளாய், அவன் சேர்த்தியால் மிகப் பிரகாசிப்பவளாயுமுள்ள பிராட்டியைச் சரணமடைகின்றேன்.

5 तव स्पर्शादीशं स्पृशति कमले मङ्गळपदं
तवेदं नोपाधेरुपनिपतितं श्रीरसि यतः।
प्रसूनं पुष्यन्तीमपि परिमळर्द्धिं जिगदिषुः
न चैवत्वादेवं स्वदत इति कश्चित् कवयते ।।

ஸ்ரீகுணர. (29) : எம்பெருமானை மங்களசப்தத்தால் கூறுவது உன் ஸம்பந்தத்தாலேயன்றோ. நீ ஸ்ரீயாயிருப்பதால் மங்களமாயிருப்பது உனக்கு இயற்கையாய் அமைந்தது.

6 ***அஹிர்பு-ஸம் (51-61):*** எல்லாத் தோஷங்களையும் போக்குகின்றாள்.

7 மாரிமாறாத்தண்ணம்மலை வேங்கடத்தண்ணலை,
வாரிமாறாதபைம் பூம்பொழில்சூழ் குருகூர்நகர்,
காரிமாறன் சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால்,
வேரிமாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே.

திருவாய். (4-5-11) : மணம் நீங்காத தாமரைப் பூவில் வாழும் பிராட்டி ஜீவர்களின் கர்மங்களைத் தீர்ப்பவள்.

Scanned with CamScanner

(ii) श्रीणाति च गुणैर्जगत्[1] என்றது 'நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு[2] इत्यादिகளிற்படியே தன் குணங்களாலே कैंकर्य-पर्यन्त[a] ज्ञानादि-गुण-प्रदानத்தைப்[b] பண்ணிக் கொண்டு ஜகத்தைப் परिपक्कமாக்கும் என்றபடி. 'श्रीणाति पाके श्रीणीते'[3] என்று निघण्टु சொல்லிற்று. अस्तु ते'[4] इत्यादिகளை இங்கே अनुसंधिப்பது.

'श्रीयते'[c] 'श्रयते'[d] 'शृणोति'[e] 'श्रावयति'[f] என்கிற வ்யுத்பத்திகளிலும் अपेक्षित-पदार्थங்கள் निरुक्त-वचनங்களாலும்[g] औचित्यத்தாலும்[h] விசேஷித்து அறியவேண்டும். எங்ஙனே யென்னில்-

(iii) सापराधர்களான[i] ஸம்ஸாரிகள் திறத்தில் दण्डधरனான[j] ஈச்வரனுடைய ஸஹஜகாருண்யமும்[k] ஒழிக்கவொழியாத உறவும் உஜ்ஜீவகமாம்படி அவனுடைய சீற்றத்தை ஆற்றுகைக்காக அத்தலையில் महिषीत्व-प्रयुक्त-वाल्लभ्य-अतिशयத்தாலும்[l] இத்தலையில் मातृत्व-प्रयुक्त[m]-वात्सल्य-अतिशयத்தாலும்[n] மறுக்க வொண்ணாத புருஷகாரமாய்[o] சரண்ய - விசேஷணமுமாய் நின்று ஸர்வராலும் ஸ்வோஜ்ஜீவநத்துக்காக[p] ஆச்ரயிக்கப் படும். (iv) இவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காக ஈச்வரனை ஆச்ரயித்திருக்கும். (v)-(vi) आश्रयण-उन्मुखருடைய[q] आर्त-नादத்தைக்[r] கேட்டு, ஸர்வேச்வரனைக் கேட்பித்து அவர்களுடைய ஆர்த்தியைச்[s] சமிப்பிக்கும். இக் க்ரமத்திலே ரக்ஷிக்கையும் स्वतन्त्र-व्यवस्था-ஸித்தம்[t] மற்றும் ஸேவ்யத்வாதிகளிலே வரும் उचित-अर्थம்[u] கண்டு கொள்வது. இப்படி கண்டவன் திருவில்லாத் தேவரைத் தேறான்.

'वाचः परं'[5], 'यामालम्ब्य'[6], 'सर्वकामप्रदां[7], लक्ष्म्या सह'(16[1]), 'ईषत्

---

a - கைங்கர்யம் வரை உள்ள; b - ஞானம் முதலிய குணங்களை அளித்தல்; c- அடையப்படுகிறாள்; d- அடைகின்றாள்; e- கேட்கிறாள்; f- கேட்பிக்கின்றாள்; g - நிருக்தம் : நிகண்டு; h- பொருத்தம்; i- குற்றம் செய்தவர்கள்: j- தண்டிக்க முற்படுபவன்; k- இயற்கைக் கருணை; l- மனைவியென்ற உரிமையால் ஏற்பட்ட சலுகை மிகுதி; m - தாயாகையால் ஏற்பட்ட; n- குற்றம் காணாத அன்பு மிகுதி; o- பரிந்து பேசுமவளாய்; p- தாங்கள் நல்வாழ்வு பெறுதற்காக; q- வந்து அடைவதற்கு முற்பட்டவர்; r- அவலக் குரலை; s- கஷ்டத்தை; t- ஸ்வதந்த்ரனான எம்பெருமான் செய்து கொண்ட கட்டுப் பாட்டினால் வந்தது; u- தகுந்த பொருள்; v- பிராட்டியில்லாத தேவர்களை.

---

1 ***அஹிர். ஸம். (51- 61) :*** உலகோர்க்கு நல்ல குணங்களை உண்டாக்கு கின்றாள்.

2 பண்டைநாளாலே நின் திருவருளும்
பங்கயத்தாள் திருவருளும்,
கொண்டு நின்கோயில்சீய்த்துப்பல்படிகால்
குடிகுடிவழிவந்தாட்செய்யும்,
தொண்டரோர்க்கருளிச்சோதி வாய் திறந்துன்
தாமரைக் கண்களால் நோக்காய்,
தெண்டிரைப் பொருநல் தண்பணை சூழ்ந்த
திருப்புளிங்குடிக்கிடந்தானே

திருவாய். (9-2-1) : எம்பெருமானே முதலில் பிராட்டியின் திருவருளைப் பெற்று, பின் உன் திருவருளையும் பெற்று உன் திருக்கோயிலை மெழுகுதல் முதலிய கைங்கர்யங்களைச் செய்து கொண்டு குடும்பத்தோடு அடிமைப்பட்டுள்ள எங்களை உன் சோதிவாய்திறந்து உன் திருக்கண்களால் நோக்கியருள வேண்டும்.

3 ***நிகண்டு:*** *ச்ரீணாதி - ச்ரீணீதே* எனும் சொற்கள் பக்குவமாக்குமவள் என்ற பொருளைத் தரும்.

4 अस्तु ते । तयैव सर्वं संपत्स्यते ।।

சரணா. கத். (3): என்னிடத்தில் பொறுப்பை ஸமர்ப்பித்துச் சரணமடைந்த உன் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டுவிட்டதால் எம்பெருமானிடமும் உன் சரணாகதி நடக்கட்டும். அதனாலேயே நீ விரும்பும் நித்ய கைங்கர்யம் முதலிய அனைத்தும் உனக்குக் கிடைக்கும்.

5 ***சௌநகஸம்.(?):*** சொற்களின் தாத்பர்யமாய் நிற்கும் எம்பெருமானை அடைய வேண்டுமென்று பிரார்த்திப்பவன் நியமங்களுடன் அவசியமாய்ப் பிராட்டியிடமும் ப்ரபத்தி செய்ய வேண்டும்.

6 यामालम्ब्य सुखेनेमं दुस्तरं हि गुणोदधिम् ।
निस्तरन्त्यचिरेणैव व्यक्तं ध्यानपरायणाः ।।

ஸாத் ஸம்.(12-84): என் திருமேனியை எப்பொழுதும் தியானிப்பவர்கள் என் பிராட்டியை ஆச்ரயித்தே கடக்க முடியாத இந்த ஸம்ஸாரத்தை எளிதில் விரைவில் கடந்து மோக்ஷத்தை அடைகின்றனர். (எம்பெருமான் திருவாக்கு)

7 सर्वकामप्रदां रम्यां संसारार्णवतारणीम्।
क्षिप्रप्रसादिनीं लक्ष्मीं शरण्यामनुचिन्तयेत् ।।

(?): நீ விரும்பிய அனைத்தையும் அளிப்பவளாய், அழகிய குணமுடையவளாய், ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்து கரையேற்றுபவளாய், விரைவில் அருள் புரிபவளாயுள்ள பிராட்டியையும் சரணமடைய உரியவளாய் அநுஸந்திக்க வேண்டும்.

Scanned with CamScanner

त्वत्'[1], 'स्वस्ति श्रीर्दिशतात्'[2], 'पितेव त्वत्प्रेयान्'[3], 'ऐश्वर्यमक्षरगति'[4] इत्यादि-प्रमाणसंप्रदाय-ग्रन्थங்களை இங்கே परामर्शப்பது[a]

16.2 மதுப் விகுதியின் பொருள்

'तुल्यशीलवयोवृत्तां'[5] इत्यादिகளிற்படியே सर्व-प्रकारத்தாலும்[b] தனக்கேற்கும் கோலமலர்ப்பாவையோடு[c] उपाय-दशैயிலும் उपेय-दशैயிலும் நாராயணன் பிரிவற்றபடியை पूर्व-उत्तर-खण्डங்களில் मतुप्[d] காட்டுகிறது. இது अनेकार्थமேயாகிலும் ஸம்ஸாரிகளுக்கு நினைத்தபோதே नि:शङ्कமாக[e] श्रिय:पतिயினுடைய திருவடிகளைப் பற்றலாம்படியான उपयोग-अतिशयத்தாலே[f] இங்கே नित्य-योगத்தைச்[g] சொல்லுகிறது. 'श्रीवत्सवक्षा नित्यश्री:'[6]

a- ஊன்றிப் பார்க்க வேண்டும்; b- எல்லா வகையாலும்; c- அழகிய தாமரையில் அமர்ந்த பெரிய பிராட்டி ; d- மதுப் என்னும் விகுதி; e-ஐயமின்றி; f- மிகப் பயன்படுத்தலாலே;g- எப்பொழுதும் சேர்ந்திருத்தல்.

1 ईषत्त्वत्करुणानिरीक्षणसुधासंधुक्षणाद्रक्ष्यते
नष्टं प्राक् तदलाभतस्त्रिभुवनं संप्रत्यनन्तोदयम्।
श्रेयो न ह्यरविन्दलोचनमन:कान्ताप्रसादादृते
संसृत्यक्षरवैष्णवाध्वसु नृणां संभाव्यते कर्हिचित् ।।

சது:ச்லோகி(3): பிராட்டியே! நீ கருணையினால் கடாக்ஷிக்கின்றாய். அந்த நோக்கு உலகைப் பிழைப்பிக்கும் அமுதமாகும். அதன் ஒரு திவலை எழுந்தாலே உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளையும் ஒரு கஷ்டமுமின்றிக் காக்க முடியும். உன் கடாக்ஷம் விழுவதற்கு முன் உலகம் சீர்கேட்டை அடைந்திருந்தது. இப்பொழுது முன்பு இருந்த நல்ல நிலையைக் காட்டிலும் உலகம் மிக்க பெருமையுடன் விளங்குகின்றது. ஐச்வர்யம் -கைவல்யம் - மோக்ஷம் ஆகியவற்றின் விஷயத்தில் பிராட்டியான உன் அருள் இல்லாமல் ஒரு நன்மையும் எவ்வகையாலும் ஜீவர்களுக்கு வருவதில்லை.

2 स्वस्ति श्रीर्दिशतादशेषजगतां सर्गोपसर्गस्थिती:
स्वर्गं दुर्गतिमापवर्गिकपदं सर्वं च कुर्वन् हरि:।
यस्या वीक्ष्य मुखं तदिङ्गितपराधीनो विधत्तेऽखिलं
क्रीडेयं खलु नान्यताऽस्य रसदा स्यादैकरस्यात् तया ।।

ஸ்ரீஸ்தவம்(1) : எம்பெருமான் எல்லா உலகையும் படைத்துக் காத்து அழிக்கின்றான். அவரவர் கருமத்துக்குத் தக்கவாறு ஸ்வர்க்கம் - நரகம் - மோக்ஷம் முதலியவற்றை அளிக்கின்றான். இத்துணைச் செயல்களையும்

அவன் பிராட்டியின் திருமுகத்தைப் பார்த்து அவள் குறிப்பை உணர்ந்து அதற்குக் கட்டுப்பட்டே செய்கின்றான். இல்லையேல் அவளோடு ஒரு மித்து நிற்கும் அவனுக்கு இந்தச் செயல்கள் மகிழ்ச்சியை விளைவிக்க மாட்டா. அத்தகைய பிராட்டி உலகுக்கு நன்மையை அளிக்கட்டும்.

3 पितेव त्वत्प्रेयान् जननि परिपूर्णागसि जने
हितस्रोतोवृत्त्या भवति च कदाचित् कलुषधी:।
किमेतन्निर्दोष : क इह जगतीति त्वमुचितै:
उपायैर्विस्मार्य स्वजनयसि माता तदसि न: ।।

ஸ்ரீகுணரத்ந.(52) : தாயே! மிக்க பாபம் செய்த மனிதனிடத்தில் உன் அன்புக்கு உரிய எம்பெருமான் உலகத்தில் தந்தையைப் போல் அவனுக்கு நன்மை செய்வதற்காக ஒரு ஸமயத்தில் சிறிது மனங் கலங்குகின்றான். அப்பொழுது நீ உன் நாயகனிடம் 'என்ன இது! இவ்வுலகில் குற்றம் செய்யாதவன் எவன்?' என்று கூறித் தக்க யுக்திகளாலே அம் மனிதனுடைய குற்றங்களை மறக்கச் செய்து பகவான் அவனைத் தன்னுடையவனாக ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறாய். அதனால் நீ எங்களுக்குத் தாயாகின்றாய்.

4 ऐश्वर्यमक्षरगतिं परमं पदं वा कस्मैचिदञ्जलिभरं वहते वितीर्य।
अस्मै न किञ्चिदुचितं कृतमित्यथाम्ब त्वं लज्जसे कथय कोऽयमुदारभाव:।।

ஸ்ரீகுணரத்ந.(58) : தாயே! உன்னைக் குறித்துக் கை கூப்புதல் என்னும் சுமையைத் தாங்குபவனுக்கு ஐச்வர்யத்தையும் கைவல்யத்தையும் பரமபதத்தையும் கொடுத்தும் இவன் செயலுக்குத் தகுந்ததொன்றும் நான் செய்யவில்லையே என்று நீ வெட்கப்படுகின்றாய். இப்படி ஒரு கொடைத்திறனா! கூறு.

5 तुल्यशीलवयोवृत्तां तुल्याभिजनलक्षणाम्।
राघवोऽर्हति वैदेहीं तं चेयमसितेक्षणा।।

ராமா. (5-16 - 5) : இராமபிரான் தன்னை ஒத்த சீலம் - வயது - ஒழுக்கம் - தலப் பெருமை - அழகு எல்லாம் பொருந்திய சீதையை மணந்து கொள்ள ஏற்றவன். கண்ணழகில் சிறந்த பிராட்டி இராமனை மணக்கவும் பொருந்தியவளே.

6 तमस: परमो धाता शङ्खचक्रगदाधर:।
श्रीवत्सवक्षा नित्यश्री: अजय्य: शाश्वतो ध्रुव: ।।

ராமா. (6-114-15) : இராமபிரான் ஸ்ரீவத்ஸம் என்ற மறுவைத் திருமார்பில் உடையவன். நிலையான பெருமையுடையவன். பிறரால் வெற்றி கொள்ள முடியாதவன். நித்யமானவன். மனவுறுதியுடையவன். (இராவணனைக் கொன்ற இராமனை மந்தோதரி துதித்தல்)

Scanned with CamScanner

'विष्णोः श्रीरनपायिनी'[1] 'नित्यानपायनीं निरवद्यां'[2], आकारिणस्तु विज्ञानं'[3] इत्यादिகளை இங்கே அனுஸந்திப்பது.

16.3 பெருமாள் பிராட்டி-ஸ்வரூபம் தனி, க்ஷணமும் பிரியாமை

पतिயினுடைய[a] पत्नी-विशिष्टत्वமும்[b] ஸர்வஸ்வாமிநியினுடைய पति-पारार्थ्यமும்[c] நித்யமாய் நிற்கையாலே இங்கு परमतங்களுக்கு அவகாசமில்லை. இவளுக்குப் पति பக்கல் अन्तर्भावம்[d] சொல்லு மிடம் विशिष्ट-अन्तर्भावத்தையும்[e] बहिर्भावம்[f] சொல்லுமிடம் स्वरूप-भेदத்தையும்[g] விவக்ஷிக்கிறது[h]. அல்லது स्वरूप-ऐक्य மான[i] अन्तर्भावமும் ஸ்வரூபத்தை விட்டு நிற்கும் बहिर्भावமும் प्रमाण-संमत மன்று[j].

16.4 பெருமாள் பிராட்டி இருவரும் உபாயம்-இருவரும் பயன்

உத்தர-खण्डத்தில் போலன்றிக்கே पूर्व-खण्डத்தில் पत्नी-संबन्धம் உபலக்ஷணமென்றும்[k] गुणविग्रह-संबन्धம் விசேஷணமென்றும்[l] பிரித்துச் சொல்வார்க்கு இதில் ஸ்வாரஸ்யமும் ப்ரமாண - ஸம்ப்ரதாயங்களும் अनुगुण மல்ல[m]. விசேஷணங்களாலே प्राप्य-ऐक्य-विरोधம்[n] வாராதது போலே प्रापक-ऐक्य-विरोधமும்[o] வாராது. சேதந அசேதந-ரூப - விசேஷணங்களுக்கு वस्तु-अनुरूप மாக விசேஷம் प्रमाण-नियतம்[p].

16.5 முற்பகுதி நாராயண சப்தத்தின் பொருள்

இப்படி सपत्नीकனாய்க் கொண்டு ஸர்வ - ரக்ஷண -दी க்ஷிதனாய்[q] 'शान्तानन्त'[4], 'स्ववैश्वरूप्येण'[5] इत्यादि களிற்படியே ஸ்வரூபத்தாலும் गुणத்தாலும் प्रणयத்தாலும்[r] सुश्लिष्टனான[s] சரண்யனுக்குத்

a - நாயகன்; b - மனைவியோடு கூடியிருத்தல்; c - நாயகனுக்கு அடியளாந் தன்மை; d - ஒன்றியிருத்தல்; e - பிராட்டியுடன் கூடியவன் என்ற முறையில் அவனுக்குள் அடங்கியிருத்தல்; f - பிரித்துச் சொல்லுதல்; g - உண்மையில் எம்பெருமான் பிராட்டி இருவரும் வெவ்வேறு ஆத்மாவென்பதையும்; h - கருத்தாகக் கூறுகின்றது; i - இரண்டும் ஒரே ஆத்மாவாயிருத்தல்; j - சாஸ்த்ரங்களுக்குச் ஸம்மதமன்று; k - எப்பொழுதாவது இருப்பவள்; l - பிரியாது இருப்பவள்; m - ஏற்றனவல்ல; n - பலன் ஒன்றே என்ற கொள்கைக்கு முரண்பாடு; o - உபாயம் ஒன்றே என்ற கொள்கைக்கும் முரண்பாடு; p - சாஸ்த்ரங்களால் வரையறுக்கப்பட்டது;

q - எல்லோரையும் காக்கும் விரதம் கொண்டவன்; r - அன்பு ; s - மிகவும் ஒன்றி நிற்பவன்.

1 नित्यैवैषा जगन्माता विष्णोः श्रीरनपायिनी।
यथा सर्वगतो विष्णुः तथैवेयं द्विजोत्तम ।।

விஷ்ணுபு. (1-8-17): எம்பெருமானைப் பிரியாதவள். எம்பெருமான் எல்லாவற்றிலும் நிறைந்து நிற்பது போல் இவளும் அவ்வாறே நிற்பவன்.

2 சரணாகதி கத்.(1): எப்பொழுதும் எம்பெருமானைப் பிரியாதவளும் உலகில் உள்ள பெண்களைப் போல் கணவனோடு முகம் கோணுதல் - கருத்து வேற்றுமை - ஆலோசியாது செயல் புரிதல் - கொடுந்தன்மை - தண்டிப்பதில் ஆசை - முதலிய குற்றங்களற்றவளுமான பிராட்டியைச் சரணமடைகின்றேன். (சூர்ணிகை பக்கம்: 53[1])

3 आकारिणस्तु विज्ञानमाकारज्ञानपूर्वकम्।
तेनाकारं श्रियं ज्ञात्वा ज्ञातव्यो भगवान् हरिः ।।

அருளாளப் பெருமாளெம்பெருமானார்: ஒரு வஸ்துவுக்கு உள்ள விசேஷணத்தை அறிந்த பின்பே அதையுடைய வஸ்துவை அறிய வேண்டும். ஆதலின் ப்ரதாந விசேஷணமாகிய பிராட்டியை அறிந்த பின்பே பகவானை அறியவேண்டும்.

4 शान्तानन्तमहाविभूति परमं यद्ब्रह्मरूपं हरेः
मूर्तं ब्रह्म ततोऽपि तत्प्रियतरं रूपं यदत्यद्भुतम्।
यान्यन्यानि यथासुखं विहरतो रूपाणि सर्वाणि तानि
आहुः स्वैरनुरूपरूपविभवैर्गाढोपगूढानि ते ।।

சது: ச்லோகி (4): தாயே! எம்பெருமானுடைய ஸ்வரூபம் திருமேனி முதலிய அனைத்தும் உன் ஸ்வரூபம் திருமேனி முதலியவற்றுடன் எப்பொழுதும் பிரியாது இறுக இணைந்துள்ளன.

5 स्ववैश्वरूप्येण सदाऽनुभूतयाऽप्यपूर्ववद्विस्मयमादधानया।
गुणेन रूपेण विलासचेष्टितैः सदा तवैवोचितया तव श्रिया ।।

ஸ்தோத்ரர. (38) : எம்பெருமானே! உலகம் முழுதும் உனக்குச் சரீரமாயுள்ளது. நீ பிராட்டியின் ஸ்வரூபம் திருமேனி முதலியவற்றை அவளோடு ஒன்றி நின்று எப்பொழுதும் கண்கூடாக அநுபவித்துக் கொண்டிருக்கிறாய். இதற்குமுன் காணாது புதிதாய்க் காண்பது போல் ஆச்சரியத்தையும் மிக்க மகிழ்ச்சியையும் அவள் உனக்கு அளித்துக் கொண்டிருக்கிறாள். அவள் குணம் - திருமேனி - அவள் புரியும் லீலைகள் - அவள் செய்யும் செயல் எல்லாம் உனக்கே ஏற்றவை. உன்னை விட்டுக் கணமும் பிரியாத அவளுடன் திருவனந்தாழ்வான் மீது அமர்ந்துள்ளாய்.

Scanned with CamScanner

''தன்னடியார் திறத்தகத்து''[1] इत्यादिகளில் अभिप्रेतங்களாய்[a] शरण्यत्व–புருஷகாரமும்[b] தன்னேற்றம்[c] என்னலாம்படியான शरण्यत्व–உபयुक्तங்களான[d] आकारान्तरங்களைச்[e] சொல்லுகிறது இங்குற்ற நாராயண शब्दம். அவையாவன शरीर–आत्म–भाव–नियामकங்களான[f] शेष–शेषित्वादि–संबन्धங்களும்[g], आश्रयणीयதைக்கும்[h] फल–प्रदानத்துக்கும்[i] உபயுத்தமான[j] गुणवर्गமும், ஸஹகாரி - நிரபேக்ஷமாக[k] ஸர்வத்தையும் நினைத்தபோதே தலைக்கட்டவல்ல ஸங்கல்பரூப - வ்யாபாரமும். 'स्वमुद्दिश्य श्रीमान्'[2] என்கிறபடியே ஆச்ரித ஸம்ரக்ஷணம்தானும்[l] தன் பேறாக ரக்ஷிக்கிற ப்ரயோஜந விசேஷமும்.

16.5.1 குணங்கள் ஒவ்வொன்றுக்கும் விளக்கம்

இங்கு गुणवर्गமென்கிறது- - कारुण्य–सौलभ्य–सौशील्य–वात्सल्य–कृतज्ञतादि, களும் सर्वज्ञत्व–सर्वशक्तित्व–सत्यसंकल्पत्व–परिपूर्णत्व–परमोदारत्वादिகளும்.

காருண்யம்[m] - ஒரு வ்யாஜத்தை முன்னிட்டு நம்முடைய दु:खங்களைப் கழிக்கைக்குத் தானே நினைத்திருக்கையாலே 'எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும்'[3] என்று நம்புகைக்கு உறுப்பாம்.

सौलभ्यம்- 'சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்'[4] என்று

---

a - கருத்துக் கொள்ளப்பட்டனவாய்; b பரிந்து பேசுமவள்; c- தேவைக்கு மேல் மிகுதி; d- ரக்ஷிப்பதற்கு வேண்டியனவான; e- மற்றும் உள்ள அம்சங்கள்; f- சேதநாசேதநங்கள் சரீரமாய் ஈச்வரன் ஆத்மாவாயிருத்தற்கு இருந்தே தீர வேண்டியன; g- இவை சேஷமாய் அவன் சேஷியாயிருத்தல்; h- சேதநர் வந்து ஆச்ரயிப்பதற்கும்; i- பலன் கொடுத்தற்கும்; j - பயன் படக்கூடிய; k- துணையாக எதையும் எதிர்பாராதவாறு; l- அடியார்களைக் காத்தல்; m- தன் பயனைக் கருதாது பிறர் துன்பம் துடைக்க விருப்பம்.

1 தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகுரைக்கு மேல்
என்னடியார் அது செய்யார் செய்தாரேல்
நன்று செய்தாரென்பர் போலும்,
மன்னுடையவிபீடணற்காமதிளிலங்கைத்
திசைநோக்கிமலர்க்கண்வைத்த

என்னுடைய திருவரங்கற்கன்றியும்
மற்றொருவர்க்கு ஆளாவரே?

பெரியாழ். திரு (4-9-2) : (சேதநரிடம் எம்பெருமானது உள்ளன்பைச் சோதிப்பதற்காகப்) பிராட்டி அவனடியார்கள் மீது ஏதோ குற்றம் சொல்லுகிறாள். எம்பெருமான் அப்பொழுது என் அடியார் இக்குற்றம் செய்திருக்கமாட்டார். செய்தாலும் நல்லதையே செய்தார்கள்' என்று கூடச் சொல்லுவான் போலும்.

2 उपादत्ते सत्तास्थितिनियमनाद्यैश्चिदचितौ
स्वमुद्दिश्य श्रीमानिति वदति वागौपनिषदी ।
उपायोपेयत्वे तदिह तव तत्त्वं न तु गुणौ
अतस्त्वां श्रीरङ्गेशय शरणमव्याजमभजम् ॥

ஸ்ரீரங்கராஜஸ்த (2-87) : ஒரு வஸ்துவை ஒரு வஸ்துவாகப் படைத்தல் - அதை நீடித்திருக்கச் செய்தல் - அதை நியமித்தல் ஆகிய இச்செயல் முதலியவற்றால் பிராட்டியுடன் கூடிய எம்பெருமான் சேதந - அசேதங்களைத் தன் ப்ரயோஜநத்துக்காகவே ஸ்வீகரிக்கின்றான்' என்று உபநிஷத்துக் கூறுகின்றது. ஆதலால் திருவரங்கனே! நீ இந்த ஜீவன் விஷயத்தில் உபாயமாவும் பலனாகவும் இருத்தல் உனக்கு இயற்கையாய் அமைந்தது, வந்தேறியன்று. ஆதலால் என் பயனை நினையாமல் உன்னைச் சரணமடைந்தேன்.

3 அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான்?யானார்?,
எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்றுவாய்க்கும் கண்டீர்
கைம்மாதுன் பொழித்தாய் என்று! கைதலைபூசலிட்டே,
மெய்ம்மாலா யொழிந்தேன் எம்பிரானும் என் மேலானே.

திருவாய் (5-1-7): கையும் திருவாழியுமான அழகை நித்யஸூரிகளுக்கும் முக்தருக்கும் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் ஸர்வேச்வரன் எங்கே? மிக நீசனான நான் எங்கே? எத்தகைய மஹா பாபிக்கும் அவன் கிருபையாகிய பாக்கியம் வரும் போது பலனைத் தந்தே தீரும். கஜேந்த்ரனைக் காத்த பெருமையைச் சொல்லித் தலைமேல் கைகூப்பிக் கபடமாய் வாயால் அவனைக் கூப்பிட்டு வைத்தேன். பின் உண்மையான ஈடுபாடும் எனக்கு வந்துவிட்டது. அவனும் ஆவலோடு என்மேல் வந்து விழுந்து என் உள்ளேயும் புகுந்தருளினான்.

4 நாணும் நிறையும் கவர்ந்து என்னை நல்நெஞ்சம் கூவிக்கொண்டு
சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான் தன்னை,
ஆணை என்? தோழீ! உலகுதோறு அலர் தூற்றி, ஆம்
கோணைகள் செய்து குதிரியாய்மடலூர்துமே.

திருவாய் (5-3-9): மிகவும் மேலேயுள்ள எட்டாத பரமபதத்திலிருக்கும் நித்யஸூரி நாயகன்.

Scanned with CamScanner

அகலாதபடி 'ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்.... நாராயணனே நமக்கே பறை தருவான்'[1] என்று आबाल-गोपालம்[a] அணியனாய்[b] அபேக்ஷிதம் தந்தருளுமென்கைக்கு உறுப்பாம்.

ஸௌசீல்யம்[c]- 'அம்மானாழிப்பிரான் அவன் எவ்விடத் தான்யானார்' (61[3]) என்று அகலாமைக்கு உறுப்பாம்.

வாத்ஸல்யம்[d]- 'நீசனேன் நிறைவொன்றுமிலேன்'[2] என்று स्वदोषத்தைக் கண்டு அவன் अनादरிக்கிறான் என்று வெருவாமைக்கு உறுப்பாம்.

कृतज्ञत्वம்[e]-'மாதவனென்றதே கொண்டு'[3], 'திருமாலிருஞ் சோலை மலையென்றேன்'[4] என்கிறபடியே தன் பக்கலிலே அரியவாயிருப்பதொரு வ்யாஜத்தைக் கண்டாலும் இனி நம்மைக் கைவிடான் என்கிற தேற்றத்துக்கு உறுப்பாம்.

मार्दव[f] आर्जवादिகளுக்கும்[g] இப்படியே उपयोगம் கண்டு கொள்வது.

सर्वज्ञत्वம்[h] - 'எல்லாம் அறிவீர்'[5] என்கிறபடியே ஆச்ரி தருடைய इष्टप्राप्ति[i]-अनिष्टनिवृत्ति[j] उपायங்களையும் विरोधिகளையும் அறிகைக்கு உறுப்பாம்.

---

a குழந்தை முதல் பெரிய இடையர்கள் வரை; b அருகில் இருப்பவன்; c- மிக மேம்பட்டவன் மிகத் தாழ்ந்தவர்களுடன் இடையீடின்றிக் கலந்து பழகுதல்; d- குற்றத்தைப் புறக்கணித்து ஒருவனை ஏற்றுக் கொள்ளும்படியான அன்பு; e- ஆச்ரிதன் செய்த குற்றங்களையெல்லாம் மறந்து அவன் செய்த சிறு செயலைத் தனக்குப் பரமோபகாரமாகக் கருதி அதை மறவாதிருத்தல். f-மென்மை; g-நேர்மை; h-அனைத்தையும் அறிதல்; i- விரும்பியதைப் பெறுதல்; j- தீங்குகள் கழிதல்.

1 மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்,
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்,
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதையிளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்,
நாராயணனே நமக்கே பறை தருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோரெம்பாவாய்.

திருப்பாவை *(1):* அழகு நிறைந்த கண்களையுடைய யசோதை வயிற்றில் பிறந்த சிங்கக்குட்டியாகிய நாராயணன் நமக்கு நோன்புக்கருவிகளை (கைங்கர்யத்தை) அளிப்பான்.

2 ஈசன்வானவர்க் கென்பன் என்றால், அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு,
நீசனேன் நிறைவொன்றுமிலேன், என்கண்
பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே.

திருவாய் *(3-3-4):* மிகவும் அற்பனாய நற்குணங்களற்ற என்னிடம் கூடப்பாசம் வைத்த ஸர்வேசுவரனுக்கு நித்யஸூரிகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருப்பவனென்று போற்றுதலால் ஓர் ஏற்றம் உண்டோ ?

3 மாதவனென்றதே கொண்டு என்னையினியிப்பால்பட்டது,
யாதவங்களும் சேர் கொடேனென்று என்னுள் புகுந்திருந்து,
தீதவம்கெடுக்கும் அமுதம் செந்தாமரைக்கண்குன்றம்,
கோதவமிலென் கன்னற்கட்டி எம்மான் என் கோவிந்தனே.

திருவாய் *(2-7-3)* : அன்பும் அறிவும் இன்றித் தற்செயலாய் மாதவன் என்று சொல்லிவைத்தேன். இதையே பெரிதாகக் கொண்டு இதற்குப் பிறகு உள்ள காலமெல்லாம் எந்தக் குற்றத்தையும் என்னிடம் சேரவிடாதவாறு ஸங்கல்பித்து என்னுள் புகுந்து நிலையாய் நின்றான்.

4 திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்ன,
திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்,
குருமாமணியுந்து புனல் பொன்னித் தென்பால்,
திருமால் சென்று சேர்விடம் தென் திருப்பேரே.

திருவாய் *(10-8-1):* எம்பெருமான் திருநாமத்தைச் சொல்லவில்லை. அவன் இருக்கும் ஊரைத் திருமாலிருஞ்சோலைமலை என்று நல்லெண்ண மின்றியே சொல்லிவைத்தேன். எம்பெருமான் பிராட்டியுடன் ஓடிவந்து என் உள்ளம் நிறையப் புகுந்து கொண்டான்.

5 சொல்லாதொழியகில்லேன் அறிந்த சொல்லில், நும்மடியார்
எல்லாரோடும் ஒக்க எண்ணியிருத்தீரடியேனை,
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் நமக்கு இவ்வுலகத்தில்,
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் இந்தளூரீரே!

பெரிய திரு *(4-9-6):* இந்தளூர்ப் பெருமானே நான் அறிந்த விஷயத்தைக் கூறுகின்றேன். இதைச் சொல்லாது விடமுடியவில்லை. உமக்கு அடியார்கள் பலர். அவர்களைப் போலவே என்னையும் நினைத் திருக்கின்றீர். உமக்கு நல்லவர்களையும் தெரியும். தீயவர்களையும் தெரியும். இவ்வுலகில் உள்ள அனைத்தையும் அறிவீர். என் தன்மை ஒன்றையே உம்மால் அறிய முடியவில்லை.

Scanned with CamScanner

सर्वशक्तित्वம்[a]-'கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை'[1] என்கிறபடியே ஆச்ரிதர் मनोरथங்களை[b] घटिப்பிக்கைக்கு[c] உறுப்பாம்.

सत्यसंकल्पत्वம்[d]- 'சன்ம சன்மாந்தரங்காத்து'[2] इत्यादिகளிற்படியே मोक्षयिष्यामि[3] என்று முடிவு செய்கைக்கு உறுப்பாம்.

परिपूर्णत्वம்[e] - 'செல்வநாரணனென்ற சொல் கேட்டலும்'[4] इत्यादिகளிற்படியே भावதாரதம்யம்[f] பார்க்குமளவேயாய் நாம் செய்யும் किञ्चित्காரத்தில்[g] गौरव–लाघवங்களைப்[h] பாராமைக்கு உறுப்பாம்.

परमोदारत्वம்[i] - அல்பமான ஆத்ம - ஆத்மீயங்களை - चोर–आनीत–நூபுர ந்யாயத்தாலே[k] ஸமர்ப்பித்தவர்களுக்குத்தான் எனக்கே தன்னைத் தந்த கற்பகம்'[5] என்கிறபடியே அநந்தமான[l] ஆத்ம - ஆத்மீயங்களை[m] வழங்குகைக்கு உறுப்பாம்.

स्थैर्य–धैर्यங்களுக்கும்[n] இப்படி உபயோகம் கண்டுகொள்வது.

இந்நாராயண शब्दத்தில் व्युत्पत्त्यादिகள் மூலமந்த்ரத்திலே சொன்னோம்.

16.6 ஸ்ரீமந்நாராயண சரணௌ - இரு வகைப் பொருள்

'श्रीमन्नारायण स्वामिन्'[6] इत्यादि மந்த்ரங்களையும், 'कमलनयन

---

a- எதையும் செய்ய வல்லமை; b- உள்ளத்தில் எழும் ஆசைகள்; c- நிறைவேற்றல்; d தான் ஸங்கல்பித்ததைத் தானே நிறுத்த முடியாமல் நடத்தல்; e- தான் விரும்பிப் பெற முடியாதது ஒன்றும் இல்லாமை; f-மனப்பாங்கின் வேற்றுமை; g- சிறு தொண்டில்; h- பெருமை சிறுமைகள்; i- உபாயத்தின் சிறுமையையும் பலனின் பெருமையையும் பெறுமவனது தாழ்வையும் பாராது சேதநனுக்கு எல்லாச் செல்வத்தையும் அளித்தும் தான் செய்தது போதாது என்று நினைக்கும் கொடைக் குணம்; j - தன்னையும் தன்னைச் சேர்ந்தவைகளையும்; k- களவு கொண்ட சிலம்பைக் கள்வன் திரும்பிக் கொடுக்கும் முறை; l- எல்லையற்ற; m - தன்னையும் தன் உடைமைகளையும்; n- தன்னைப் பற்றுமவர்களைக் காப்பதில் உறுதியுடைமை, மனம் சலியாமைகளுக்கும்.

1 கூட்டுதிநின் குரைகழல்கள் இமையோரும் தொழாவகை செய்து
ஆட்டுதிநீயரவணையாய்! அடியேனுமஃதறிவன்,
வேட்கையெல்லாம் விடுத்து என்னை உன் திருவடியே சுமந்துழல,
கூட்டரியதிருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே.

திருவாய்(4-9-9): எம்பெருமானே! பிரமன் முதலிய தேவர்களும் உன் திருவடிகளைத் தொழாதபடி செய்து அவர்களுக்குக் காட்டாமல் உழலச் செய்வாய். அடியார்கள் அவற்றை அநுபவிக்கும் படி செய்கின்றாய். இதை அடியேன் நன்றாய் அறிவேன். மற்ற ஆசைகளையெல்லாம் எனக்கு ஒழித்து உன் திருவடிகளையே என் முடிமேல் தாங்கி வாழும்படி பெறுதற்கு அரிய உன் திருவடிகளை அநுபவிக்கத் தந்தாய். இதைக் கண்டுகொண்டேன்.

2 *திருவாய் (3-7-7):* பிறவிதோறும் எம்பெருமான் தானும் வந்து பிறந்து அடியார்களைக் காத்து, பின் அவர்களை ஸ்ரீவைகுண்டத்துக்கு அழைத்துப் போய் ஞானமலர்ச்சியைக் கொடுத்துத் தன் திருவடிக்கீழ் சேர்த்துக் கைங்கர்யம் செய்யுமாறு அருள்பவன் (பாசுரம் 39[3]).

3 *கீதை (18-66):* உனக்கு உள்ள அளவற்ற விரோதி வர்க்கத்தையெல்லாம் வேரறுத்து மோக்ஷத்தைத் தந்து எனக்குச் சமமான போகத்தையும் பரிபூர்ண கைங்கர்யத்தையும் உனக்குச் சாச்வதமாய்க் கொடுப்பேன்.

4 செல்வன் நாரணனென்ற சொல் கேட்டலும்,
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே,
அல்லுநன்பகலும் இடைவீடின்றி
நல்கி, என்னை விடான் நம்பி நம்பியே.

திருவாய் (1-10-8): ஸ்ரீமந் நாராயணன் என்ற சொல் என் காதில் விழுந்தால் உடனே கண்களினின்று ஆநந்தக்கண்ணீர் பெருகுகின்றது. நானும் அவனைத்தேடி நிற்கின்றேன். இதுவே நான் செய்வது. எம்பெருமானோ எப்பொழுதும் இடையீடின்றி என்னிடம் அன்பு கொண்டு என்னை விடாமல் பற்றிக் கொண்டான். என்ன ஆச்சரியம்!

5 பற்பநாபன் உயர்வற உயரும் பெருந்திறலோன்,
ஏற்பரன் என்னையாக்கிக் கொண்டு எனக்கேதன்னைத்தந்த
கற்பகம் என்னமுதம் கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன், விசும் போர்பிரான்எந்தைதாமோதரனே.

திருவாய் (2-7-11): அளவற்ற அழகையும் குணங்களையும் உடைய எம்பெருமான் தன்னையன்றி மற்றவற்றில் என்னை ஆசையற்றவனாக்கித் தன்னையே எனக்கு அநுபவிக்கும்படி கொடுத்த கற்பகத்தருவாய் நின்று என்னிடம் அளவற்ற பற்றுக் கொண்டுள்ளான்.

6 श्रीमन् नारायण स्वामिन् अनन्यशरणस्तव।
चरणौ शरणं यातः तवैवास्म्यहमच्युत ।।

த்வயமந்த்: பிராட்டியுடன் கூடிய நாராயணனே நான் உன்னையன்றி வேறு கதியற்றவன். உன் திருவடிகளைச் சரணடைந்தேன். உனக்கே ஆட்பட்டுள்ளேன். என்னைக் கைவிடக் கூடாது.

Scanned with CamScanner

वासुदेव'[1] 'அலர்மேல் மங்கையுறைமார்பா'[2] इत्यादि-प्रयोगங்களையும், गद्यங்களையும் பார்த்து 'श्रीमत्' शब्दத்தையும் நாராயண - शब्दத்தையும் संबुद्धि[a]- अन्तமாக்கி शरण्यனை अभिमुखीகரித்துத்[b] 'तव' என்று ஒரு पदத்தை अध्याहरித்து[c] அந்வயித்து நிர்வஹிப்பர்கள்.[d] चरण-शब्दம் அறுதியாக ஒரு ஸமஸ்த पदமென்றும்[e] நிர்வஹிப்பர்கள்.

16.7 'சரணௌ' பொருள் விளக்கம்

दिव्य-ஆத்மஸ்வரூபம்[f] शुभமேயாகிலும்[g] ஆலம்பிக்க[h] அரிதாகையாலே - शुभ-आश्रयமாய்[i] நின்ற दिव्य - மங்கள - विग्रहத்தில் शेषभूतனைச் சேஷி சேர்த்துக்கொள்ளும் துறையைக் காட்டுகிறது चरण சப்தம். 'त्वत्पादकमलादन्यत्'[3] 'உன் சரணல்லால் சரணில்லை'[4], 'நின்னிலங்கு பாதமன்றி மற்றொரர் பற்றிலேன்'[5], 'நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்'[6] इत्यादिகளிற்படியே அவधारணம்[j] இங்கே விவக்ஷிதம்.[k] औचित्य[l]-कृपोत्तम्भकत्वा[m]-भोग्यत्व-अतिशयங்களாலே. देव-दानवர்களுக்குப்[n] பொதுவாய் நின்ற துயரறு சுடரடிகளைத் துவக்கி 'அமலன் ஆதிபிரான்'[7] படியே திருமேனியை முழுக்க அநுஸந்திக்கிறான். இவ் विग्रह-विशिष्टனான நாராயணன் பர-வ்யூஹாதி ஸர்வ अवस्थैயிலும் ஸ்ரீமானாய் இருக்குமாப்போலே शुभ-आश्रयமுமாயிருக்கும். இவற்றில் அர்ச்சாவதார பர்யந்தமாக உத்தரோத்தரம்[o] सौलभ्यம் அधिகம்.

---

a- விளி வேற்றுமை; b- முன்னிலையாக்கி; c- வருவித்துக் கொண்டு; d- பொருள் பொருத்துவர்கள்; e- சொற்கள் கூட்டிய தொடர்; f- பகவானது ஆத்ம ஸ்வரூபம்; g- பாபங்களைப் போக்கவல்லது; h- மனத்தில் தியானிக்க; i- பாபத்தைப் போக்கித் தியானிக்க உரிய; j- திருவடிகளே என்னும் வரையறை; k- கருத்தாய் நின்றது; l- பொருத்தம்; m- கருணையை வளர்த்தல்; n- தேவர்களுக்கும் அசுரர்கட்கும்; o - முந்தியதிலும் பிந்தியதில்.

1 कमलनयन वासुदेव विष्णो धरणिधराच्युत शङ्खचक्रपाणे ।
भव शरणमितीरयन्ति ये वै त्यज भट दूरतरेण तानपापान् ॥

விஷ்ணுபு. (3-7-33) : 'தாமரைக்கண்ணா! வாஸுதேவனே! நீ எனக்கு அடைக்கலமாக ஆகவேண்டும்' என்று எவர்கள் கூறுகின்றார்களோ

அவர்கள் பாபமற்றவர்களாதலின் அவர்களிடம் செல்லாது தூரத்தில் விலகிப்போ. (யமன் தன் தூதனுக்குக் கூறுவது.)

2 **திருவாய் (6-10-10):** பெரிய பிராட்டி 'க்ஷணகாலமும் விட்டுப்பிரிய வல்லேனல்லேன்' என்று நித்யமாய் வாழுமிடமாகிய திருமார்பையுடைய திருவேங்கடத்தானே! வேறு உபாயமும் பலனும் அற்ற அடியேன் உன் திருவடிக் கீழ் புகுந்து அமர்ந்தேன். (பாசுரம் : 17')

3 त्वत्पादकमलादन्यत् न मे जन्मान्तरेष्वपि ।
निमित्तं कुशलस्यास्ति येन गच्छामि सद्गतिम् ॥

ஜிதந்தே (1-10) : எம்பெருமானே! உன் திருவடித் தாமரையன்றி எனக்கு க்ஷேமத்தைத் தரவல்ல வேறொன்று எந்த ஜந்மத்திலும் கிடையாது.

4 தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை,
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள் தன்
அருள்நினைந்தேயழும் குழவியதுவே போன்றிருந்தேனே.

பெருமாள் திரு (5 - 1) : எம்பெருமானே தாய் குழந்தையைக் கோபத்தால் தள்ளிவிட்டாலும் அவள் அருளை நினைத்தே அழுவது போல், நீ எனக்கு வரும் துன்பத்தைத் தடுக்காவிடிலும் உன் திருவடியன்றி எனக்குப் புகல் வேறு இல்லை .

5 **திருச்சந்த (90) :** எம்பெருமானே! நல்லது செய்தற்கு ஏற்ற நான்கு குலத்திலும் அடியேன் பிறக்கவில்லை. நான்கு வேதங்களையும் ஓதவில்லை. இந்திரியங்கள் ஐந்தையும் வென்றவனல்லேன். உலக விஷயங்களில் ஈடுபட்டுள்ளேன். உன் பிரகாசமான திருவடியன்றி வேறு கதியில்லை. (பாசுரம் : 49[5]).

6 நாகணைமிசைநம்பிரான்சரணே சரண் நமக்கென்று, நாள்தொறும்
ஏகசிந்தையனாய்க் குருகூர்ச்சடகோபன்மாறன்,
ஆகநூற்றந்தாதி ஆயிரத்துள் இவையும் ஓர் பத்தும் வல்லார்,
மாகவைகுந்தத்து மகிழ்வெய்துவர்வைகலுமே.

திருவாய் (5-10-1): சரணமடைந்தவரை எம்பெருமான் புறக்கணித்தாலும் அவ்வாறு செய்யாமல் ஏற்றுக் கொள்ளச் செய்யும் தன்மையன் திருவனந்தாழ்வான். அவன் மேலே கண் வளர்ந்து அடியார்க்கு உதவிபுரியும் எம்பெருமான் திருவடிகளே நமக்குச் சரணமென்று எப்போதும் எண்ணுபவர் நம்மாழ்வார்.

7. இந்தப் ப்ரபந்தத்தில் திருப்பாணாழ்வார் அனுபவித்தபடியே. (பாசுரம் :27)

Scanned with CamScanner

16.8 'சரணம்' பொருள் விளக்கம்

16.8.1 சரணம் என்ற சொல் உபாயம் என்ற பொருளைக் கூறல்

रक्षकत्व-मात्रத்தைச் சொன்னால் மற்ற அரிய अधिकारिக்கும் பொதுவாகையாலும், गृहத்தைச் சொன்னால் இங்கு அந்வயம் இல்லாமையினாலும், प्राप्यத்தை விவக்ஷித்தால் உபாயம் சொல்லிற்றாகாமையாலும், உத்தர खण्डத்தோட புநருக்தி[a] வருகையாலும் இங்கே शरणம் என்கிற शब्दம் उपाय- अर्थ- वाचकமாக[b] நிஷ்கர்ஷிக்கப்பட்டது[c].

16.8.2 பக்தியின் ஸ்தாநத்தில் எம்பெருமான் இருந்து பலன் தருவதை சரண சப்தம் கூறல்

प्रपद्ये என்கிற அளவாலும் அமைந்திருக்க उपायान्तर-स्थान-निवेशம்[d] தோற்றுகைக்காகவே இங்கு शरण-शब्दம் கிடக்கிறது. भक्ति -स्थानத்திலே ப்ரபத்தியை विधिயா நிற்க उपायान्तर-स्थानத்திலே[e] ஈச்வரன் நிற்கிறானென்றது अकिञ्चनன்[f] திறத்தில் कृपा-अतिशयமுடைய ஈச்வரன் भक्ति அநுஷ்டித்தால் அதற்குத் தரக்கடவ फलத்தை அல்ப - வ்யாஜத்தாலே[g] தரும் என்றபடி. இப்படிப்பட்ட उपायत्वம் இவ் विद्यैக்கும்[h] விசேஷித்து - वेद्य-आकारம்[i].

16.8.3 திருவடிகள் உபாயமாகும் வகை

இத்திருவடிகளுக்கு उपायत्वமாவது - 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே (17[7]) என்ன, சரண்யன் उल्लसित காருண்யனாய்[j] भर-ஸ்வீகாரம் பண்ணி 'அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின்' (122[1]) என்று அருள் கொடுக்கும்படி பண்ணுகை.

16.8.4 உபாயம் இரண்டு வகை

उपाय-शब्दம் வ்யவஹித साधनத்திலும்[k] அவ்யவஹித साधनத்திலும்[l] वर्तिக்குமென்னுமிடம் श्रुति-स्मृति-लोक-सिद्धம். सिद्ध-साध्य-उपायங்கள் இரண்டுக்கும் இவ்விரண்டு आकारம்[m] साध्य-भेदத்தாலே[n] प्रतिनियतம்[o].

16.9 ப்ரபத்தி பற்றி சில விளக்கங்கள்

16.9.1 ப்ரபத்தி ஸித்தோபாயமாகாமை

சரண்ய - வசீகரணமாய்ப் புருஷனுக்கு साध्यமாக विधिத்த ப்ரபத்திதன்னையே सिद्धोपायமென்ன வொண்ணாது.

16.9.2 ஸம்பந்த அறிவே ப்ரபத்தி - கண்டநம்

श्रवणादिகளாலே[p] பிறந்து நிற்கிற संबन्ध-ஜ்ஞாநமாத்ரத்தை साध्योपायமென்றால் இது विधेय[q]மல்லாமையாலும் अविधेय-ஜ்ஞாநத்தாலே[r] மோக்ஷம் சொல்லும் सिद्धान्तத்திற்குத் துல்யமாகையாலும் साङ्ग-प्रपत्तिயை विशदமாக[s] विधिக்கிற ப்ரகரணங்களுக்கும் विरुद्धமாகையாலும் இது கூடாது.

16.9.3 எம்பெருமானே ஸித்தோபாயம்

ஆகையால் 'अमृतं साधनं साध्यं'[2] 'रामो विग्रहवान् धर्म:'[3] 'कृष्णं धर्म

---

a - கூறியது கூறல்; b- உபாயம் என்ற பொருளைக் கூறுவதாக; c- நிச்சயிக்கப்பட்டது; d- பக்தியோகத்தின் ஸ்தாநத்தில் நிறுத்தல்; e- பக்தி யோகத்தின் ஸ்தாநத்தில்; f- கைம்முதலற்றவன்; g- ப்ரபத்தி என்னும் சிறு செயல்; h- ப்ரபத்தி வித்யைக்கு; i- அவசியம் அறிய வேண்டிய அம்சம்; j- கருணை பொங்கியவனாய்; k- நேரிடையாயன்றி வரிசையான உபாயம்; l- நேர் உபாயம்; m- நேர் உபாயமாதல், வரிசையாய் உபாயமாதல்; n- பலனில் வேறுபாட்டால்; o- அததற்கே ஏற்பட்டது. p- பிறரிடம் கேட்டல் முதலியன; q- விதிப்பதற்கு ஏற்றது ; r- விதிக்க வேண்டாத ஞானத்தாலே; s- தெளிவாக.

1. ***திருவாய் (6-10-11) :*** 'என் கைங்கர்யத்திலேயே சுவை கொண்ட அடியார்களே! உங்களுக்குப் போக்யமான என் திருவடிக்கீழ் அமர்ந்து அதிலேயே உள்ளத்தை ஊன்றவிட்டு வாழுங்கள்' என்று கூறிக் கூறி அருள்புரிவதில் ஒப்பற்ற திருவேங்கடமுடையான்.

2. अमृतं साधनं साध्यं तं पश्यन्ति मनीषिण:।
यज्ञाख्यं परमात्मानं विष्णुं ध्यायन् न सीदति।।

பாஞ்சரா : *அறிஞர்கள் யாகவடிவனான எம்பெருமானை என்றும் அழியாத உபாயமாகவும் பலனாகவும் கருதுகின்றனர். அவனைத் தியானித்தால் எல்லாத் துன்பமும் நீங்கும்.*

3. रामो विग्रहवान् धर्म : साधु : सत्यपराक्रम:।
राजा सर्वस्य लोकस्य देवानां मघवानिव ।।

ராமா (3-37-13): இராமன் தர்மமே உருவெடுத்தவன். பரமஸாத்துவிகன். வீணாகாத வீர்யமுடையன். தேவர்களுக்கு இந்திரனைப் போல் மூவுலகையும் ஆளவல்ல அரசன் (மாரீசன் இராவணனுக்கு உபதேசிப்பது).

Scanned with CamScanner

सनातनम्'[1], 'तदेकोपायता-याच्ञा'[2], 'त्वमेवोपायभूतो मे'[3] इत्यादिகளிற் படியே रक्षण-उपयुक्त-सर्व-आकार-विशिष्टனாய்க்[b] கொண்டு पूर्व-सिद्धனாய்[c] அவஸர -प्रतीक्षனாய்[d] வ்யாஜமாத்ர -प्रसादनीयனாய்[e] நிற்கிற श्रिय:पतिயே सिद्धोपायம். இது भक्ति-प्रपत्तिகளைப் போல ஒன்றால் साध्यமன்று.

16.9.4 ப்ரபத்திக்கு பலன் தருமவன் எம்பெருமானே

अङ्ग-ப்ரபத்தி பண்ணினவனுக்குப்போலே வேறொரு சுமை எடுக்காதே अकिञ्चनனுக்கு[f] उपायान्तर-स्थानத்திலே[g] நிற்கிறது. तत्प्रसादमात्रமே[h] साध्यம்.

16.9.5 சேதநன் - ஈச்வரன் - ஆசார்யன் - இவர்கள் கடமை

ஆகையால் அடைக்கலம் அடைந்தேன் என்கிற साङ्ग-பரந்யாஸம் अधिकारि-कृत्यம்[i]. समर्पित-भर-ஸ்வீகாரம்[j] सिद्धोपायமான ईश्वर-कृत्यம். 'तव भरोहमकारिषि धार्मिकै:'[4] என்கிறபடியே நிபுணனுக்கு[k] भर-समर्पणமும் आचार्य-कृत्यம். அப்போது இவ்விரண்டு[l] விஷயத்திலும் ஸ்வரூப -அநுரூபமான கைங்கர்யம் स्व-कृत्यம்[m].

16.10 'ப்ரபத்யே' பொருள் விளக்கம்

இப்படி सिद्धोपाय விஷயமான शरண -शब्दத்தோடே அந்விதமான[n] प्रपद्ये என்கிற पदம் साङ्ग-भरसमर्पणத்தைக் காட்டுகிறது. ஆநுகூல்ய ஸங்கல்பம் ப்ராதிகூல்ய வர்ஜநமும் प्रथम-पदத்தாலே सूचितமாய்[o] இங்கு अर्थसिद्धமுமாகிறது[p]. இதில் गत्यर्थமான[q] धातु[r] बुद्ध्यर्थ மாகையாலும் बुद्धि शब्दம் अध्यवसायத்தைச்[s] சொல்லுகையாலும் இதன் மஹத்தையை 'प्र' என்கிற उपसर्गம்[t] காட்டுகையாலும் மஹாவிச்வாஸம் சொல்லியதாயிற்று. 'कर्तव्यं सकृदेव'[5] என்கிற ச்லோகத்தை இங்கே अनुसंधिப்பது.

---

a- காப்பதற்குப் பயன்படுகின்ற; b- எல்லா அம்சங்களுடனும் கூடியவன்; c- முன்பே இருக்கும் உபாயமாய் (ஸித்தோபாயம்); d- ஸமயத்தை எதிர்பார்ப்பவன்; e- சிறு செயலாலேயே மகிழ்ச்சி கொள்பவன்; f- கைம் முதலற்றவன்; g- பக்தியோகத்தின் ஸ்தாநத்தில்; h- அவனுடைய திருவருள் மட்டுமே; i- சேதநன் செயல்; j- ஸமர்ப்பித்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளல்; k- ஆசார்யன் மூலமாகவே நடத்திக்கொள்ளும்

சாதுரியம் உடையவன்; l- எம்பெருமான் ஆசார்யன் ஆகிய இரண்டும்; m- தன் கடமை; n - தொடர்பு கொண்ட; o-குறிப்பால் உணர்த்தப்பட்டது; p - கருத்து வகையிலும் ஏற்பட்டது; q- அடைதல் என்ற பொருள் கொண்ட ; r- வினைப்பகுதி; s- உறுதியான எண்ணம் ; t- உரிச்சொல்.

1 ये च वेदविदो विप्राः ये चाध्यात्मविदो जनाः।
ते वदन्ति महात्मानं कृष्णं धर्म सनातनम् ॥

பார (ஆர-71-23): வேதத்தின் முற்பகுதியை அறிந்தவர்களும் பரமாத்ம விஷயமான மேல் பாகத்தை அறிந்தவர்களுமான அந்தணர்களும் மஹாத்மாவான கிருஷ்ணனை எப்போதும் உள்ள உபாயமாக (ஸித்தோபாயமாகக்) கருதுகிறார்கள்.

2. अनन्यसाध्ये स्वाभीष्टे महाविश्वासपूर्वकम्।
तदेकोपायतायाच्ञा प्रपत्तिः शरणागतिः॥

பரமமுனி : தனக்கு வேண்டிய பலன் வேறு ஒருவனாலே கொடுக்க முடியாத போது மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக் கொண்டு - ஸமர்த்தனான ஒருவனை 'நீயே உபாயமாக இருக்கவேண்டும்' என்று பிரார்த்திப்பதே சரணாகதி=ப்ரபத்தி.

3. त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थनामतिः।
शरणागतिरित्युक्ता सा देवेऽस्मिन् प्रयुज्यताम् ॥

அஹிர் - ஸம் (37-31) : 'தேவரீரே எனக்கு உபாயமாக இரும்' என்று ப்ரார்த்திப்பதான எண்ணம் சரணாகதியென்று கூறப்படுகிறது. அதை இந்த எம்பெருமானிடம் செய்ய வேண்டும்.

4 तव भरोऽहमकारिषि धार्मिकै : शरणमित्यपि वाचमुदैरिरम् ।
इति ससाक्षिकयन्निदमद्य मां कुरु भरं तव रङ्गधुरंधर ॥

ஸ்ரீரங்கராஜஸ் (2-102): திருவரங்கனே! தார்மிகர்களான ஆசார்யர்களால் நான் உன் பொறுப்பாக ஸமர்ப்பிக்கப்பட்டேன். 'நீ எனக்கு உபாயம்' என்ற சொல்லையும் சொன்னேன். இந்த இரண்டு செயல்களையும் கவனித்துக் கொண்டு என்னைக் காப்பதை உன் பொறுப்பாக ஏற்றுக்கொள் (அதாவது . என்னைக் காக்கும் பொறுப்பை உன்னிடம் ஆசார்யர்கள் ஸமர்ப்பித்து விட்டனர்).

5 कर्तव्यं सकृदेव हन्त कलुषं सर्वं ततो नश्यति
ब्रह्मेशादिसुदुर्लभं पदमपि प्राप्यं मया द्रागिति ।
विश्वासप्रतिबन्धिचिन्तनमिदं पर्यस्यति न्यस्यतां
रङ्गाधीश रमापतित्वसुभगं नारायणत्वं तव ॥

ந்யாஸதிலகம் (19): திருவரங்கப் பெருமானே! உன் திருவடிகளில் ப்ரபத்தியைச் செய்ய முற்படுமவர்க்கு ஐந்து ஐயப்பாடுகள் எழக்கூடும். அவையாவன (1) அளவற்ற பாபங்களைச் செய்துள்ள சேதநன் ஒரு முறை

Scanned with CamScanner

16.10.1 ப்ரபத்திக்கு மஹாவிச்வாஸம் முக்கிய அங்கம், பரந்யாஸமே அங்கி

प्रपत्ति-லக்ஷண வாக்யத்தின்படியே विश्वास-पूर्वक-प्रार्थனையும் இங்கே ஆகிறது. 'प्रपत्तिर्विश्वासः'[1] என்று தொடங்கி 'विश्वासपूर्वकं प्रार्थनमिति यावत्'[2] என்றும், 'विश्वासपूर्वकं भगवन्तं नित्यकिङ्करतां प्रार्थये'[3] என்றும் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்தார். 'विश्वासो द्वयार्थः'[4] என்றதற்கும் இதுவே தாத்பர்யம். 'உபாயமாகப் பற்றுகின்றேன்'

ப்ரபத்தி செய்வதால் உன்னை அணுக முடியுமா? (2) கர்மத்துக்குத் தகுந்த பயனையே அளிப்பவனான நீ சேதநன் செய்த ப்ரபத்திக்குப் பிரமன் சிவன் முதலியவர்களும் பெறமுடியாத மோக்ஷமாகிய பெரிய பயனை அளிப்பது எவ்வாறு கூடும்? (3) பிறரால் ஆக வேண்டுவது யாதுமில்லாத நீ, செய்வதற்கு எளிதான சிறிய உபாயமாகிய ப்ரபத்திக்குப் பெரிய பலனைத்தருவது எவ்வாறு பொருந்தும்? (4) அற்ப தேவதைகள் தாம் விரைவில் பலனை அளிப்பது உண்டு. நீ விளம்பித்துத் தானே பலன் கொடுப்பவன்! இவ்வாறிருக்க ப்ரபத்தி செய்யும் சேதநனுக்கு அவன் விரும்பும்போது மோக்ஷத்தைத் தருவதாகச் சொல்வது பொருந்துமா? (5) நீ ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவன். நீ ப்ரபத்தி செய்யும் சேதநர்களுக்குச் சிறியர் - பெரியார் முதலிய வேற்றுமை பாராது எல்லோருக்கும் ஒரே வகையான பலனைக் கொடுப்பாயோ? என்பனவாம். இந்த ஐந்து ஸந்தேஹங்களும் வந்து விட்டால் ப்ரபத்திக்கு முக்கியமான அங்கமாகிய மஹாவிசுவாஸம் தடைபட்டுவிடும்.

இந்த ஐயங்களை ஒழிப்பதற்கு ஏற்ற வழியுளது. அதாவது பெரிய பிராட்டிக்கு நாயகன் நீ என்பதை நினைவு கொண்டு ஸ்ரீமத் என்பதன் பொருளையும் நாராயணன் என்னும் உன் திருநாமத்தின் பொருளையும் ஆசார்யர்களிடம் கேட்டுணர்ந்தால் இந்த ஐயங்கள் பறந்து போம். இந்த இரண்டு சொற்களால் புருஷகாரம் - ஸம்பந்தம் - குணம் - வ்யாபாரம் - ப்ரயோஜநம் ஆகிய ஐந்தின் சிறப்புக்கள் நன்கு வெளியாகின்றன.

இந்த ஐந்தையும் ஆராய்ந்தால் ஸந்தேஹங்கள் நீங்கிப்போம். நீங்கும் வகை வருமாறு - (1) பெரிய பிராட்டி பாபங்களைச் செய்த சேதநனுக்காகப் பரிந்து பேசி அவன் செய்த ப்ரபத்தியால், பாபங்களைப் பொறுக்குமாறு செய்து விடுகின்றாள். அவள் கூறுவதை அவன் மறுக்க முடியாது. ஆதலால் சேதநன், தான் எல்லாப் பாபங்களும் ஒழியப்பெற்று அச்சமின்றி உன்னை அணுகலாம். (2) கர்மத்துக்கு ஏற்ற பலனையே நீ அளிப்பவனென்பது உண்மையே. ஆயினும் உனக்கும் சேதநனுக்கும் ஒழிக்க வொண்ணாத உறவு உண்டு. நீ ஸ்வாமியாய்ச் சேதநன் உனக்கு அடிமையாயிருத்தலே அந்த உறவு. ஆதலின் புத்திரனுக்குத் தந்தையின்

செல்வத்தில் பங்கு உள்ளது போல் சேதநன் உன்னிடமிருந்து பலனைப் பெற உரிமையுண்டு. ஆதலின் நீ பலன் கொடுத்தேயாக வேண்டும். (3) பிறரால் உனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லையாயினும் உன்னிடம் இயற்கையில் உள்ள கருணை முதலிய குணங்கள் உன்னைத் தூண்டிச் சேதநன் செய்த சிறிய ப்ரபத்தியை மிகப் பெரிதாக மதித்துப் பெரிய பலனைத் தருமாறு செய்கின்றது. (4) நீ மற்ற செயல்களுக்கு விரைவில் பலன் தராதவனாயினும் மோக்ஷத்தை விரும்பி ப்ரபத்தியைச் செய்பவனுக்கு மட்டும் அவன் கேட்ட காலத்தில் வேறொன்றையும் எதிர்பாராத உன் ஸங்கல்பமாத்திரத்தைக் கொண்டு மோக்ஷத்தை அளித்து விடுகின்றாய். (5) ஒத்தாரும் மிக்காரும் இல்லாத உன்னுடைய சுதந்திரத்தில் எவரும் குறுக்கிட முடியாது. ப்ரபத்தி செய்த சேதநனுக்குப் பயனை அளித்துவிட்டு நீ , தானே பயன் பெற்றதாகக் கருதுகின்றாய். ஆதலின் சேததனுக்குத் தரம் பாராமல் ஒரே வகைப் பயனை அளிக்கின்றாய். இப்படி 'ஸ்ரீமத்' 'நாராயண' என்ற இரு சொற்களினின்று பெறும் இந்த ஐந்து அம்சங்களையும் அறிந்தால் மஹா விசுவாஸம் உறுதியாய் நிற்கும்.

1.2 प्रपत्तिर्विश्वासः, सकृत् प्रार्थनामात्रेण अपेक्षितं दास्यतीति
विश्वासपूर्वकं प्रार्थनमिति यावत् ॥

ஸ்ரீபாஷ்யகாரர்வாக்யம் : *ப்ரபத்தியென்பது நம்பிக்கை. அதாவது ஒரு தடவை பிரார்த்திப்பதாலேயே வேண்டிய பலனைத் தருவானென்ற நம்பிக்கையுடன் பிரார்த்திப்பது*

3 एवमवस्थितस्यापि, अर्थित्वमात्रेण परमकारुणिको भगवान् स्वानुभवप्रीत्यो-
पनीतैकान्तिकात्यन्तिक-नित्यकैङ्कर्यैकरतिरूप-नित्यदास्यं दास्यतीति
विश्वासपूर्वकं भगवन्तं नित्यकिङ्करतां प्रार्थये ॥

ஸ்ரீரங்கத் (3) : *கருணைமிகுத்த எம்பெருமான் அவனையே பற்றியதாய் இடைவிடாததாய் காலமுள்ளவரை சாச்வதமாய் நடப்பதாயுள்ள கைங்கர்யத்தைக் கொடுப்பானென்ற மிகுந்த நம்பிக்கையுடன் நித்யமான அந்தக் கைங்கர்யத்தைக் கொடுத்தருளும்படி பிரார்த்தித்துச் சரணமடைகிறேன்.*

4 नारायणं सलक्ष्मीकं प्राप्तुं तच्चरणद्वयम् ।
उपाय इति विश्वासो द्वयार्थः शरणागतिः ॥

(?): *பிராட்டியுடன் கூடிய நாராயணனை அடைவதற்கு அவனுடைய திருவடிகளே உபாயம் என்கிற நம்பிக்கையே த்வயத்தில் சொல்லப்பட்ட சரணாகதி.*

Scanned with CamScanner

என்கையாலே 'आत्मात्मीयभरन्यासः'[1], 'सकृदेव प्रपन्नस्य कृत्यं नैवास्ति किञ्चन'[2] इत्यादिகளிற்படியே அவ்விஷயத்தில் कर्तव्य-शेष-निवृत्ति-हेतुவான[a] भरन्यासமும் இங்கே ஆகிறது. 'न्यास: पञ्चाङ्गसंयुतः'[3], 'अनेनैव तु मन्त्रेण'[4] इत्यादिகளாலே भरन्यासமே அங்கி என்னுமிடம் सिद्धம்.

16.10.2 ப்ரபத்திக்கு அங்கங்கள் அவசியமா? - விடை

(i) 'प्रपत्तिं तां प्रयुञ्जीत स्वाङ्गैः पञ्चभिरावृतां'[5] என்று அங்கமான ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளை संभावित-स्वभावம்[b] என்பார்க்கு உத்தரகாலத்தில் ஆநுகூல்யாதிகளுடைய அநியமத்திலே[c] தாத்பர்யம். ஆகையாலே மேல் अपाय-संप्लवத்திலும்[d] अधिकार-विरुद्ध-उपाय-परिग्रहத்திலும்[e] पुनः प्रपदनம் विधिக்கிறது.

(ii) கபோத - நாளீஜங்க - வானராதி வ்ருத்தாந்தங்களைப் (A-3,7,4) பார்த்தால் சரணாகதனுக்குத் தற்காலத்திலும் ஆநுகூல்யாதி நியமமின்றிக்கேயிருக்க ரக்ஷிக்கக் கண்டோமே என்னில், லோகத்தில் காருணிகர்[f] धर्म-अभिसन्धि[g] விசேஷத்தாலே அப்படிக்கு ரக்ஷிக்கிறார். ஈச்வரன் ரக்ஷிக்கும்போது தன்னுடைய நியோகத்தை[h] यथावत्[i] அநுஷ்டிப்பித்து ரக்ஷிக்கும்.

16.10.3 ப்ரபத்யே - தன்மை விகுதி கூறும் பொருள்

இங்கு உத்தமன்[j] 'अहमस्म्यपराधानामालयोऽकिञ्चनोऽगतिः'[6] 'अकिञ्चनोऽनन्यगतिः'[7] इत्यादिகளிற் சொன்ன अधिकार-விசேஷத்தோடும் கார்ப்பண்ய

a- செய்ய வேண்டிய மீதிச் செயல் எதுவும் இல்லாமைக்குக் காரணம்; b- ஸம்பவித்தால் ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையது; c- வேண்டுமென்ற அவசியமில்லாமை; d- பாபம் நேரும் போதும்; e- தன் தகுதிக்குப் பொருந்தாத உபாயத்தைச் செய்தல்; f - கருணை மிகுத்தவர்; g - தர்மம் செய்வதில் ஊற்றம்; h- கட்டளை; i- முறைப்படி; j- தன்மையுருபு.

1 सर्वज्ञोऽपि हि विश्वेशः सदा कारुणिकोऽपि सन् ।
संसारतन्त्रवाहित्वात् रक्षापेक्षां प्रतीक्षते ॥
आत्मात्मीयभरन्यासो ह्यात्मनिक्षेप उच्यते ॥

லக்ஷ்மீதந்(17-79): ஆத்மா, அதைச் சேர்ந்தவை ஆகிய இவற்றைக் காக்கும் பொறுப்பை எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பது தான் ஆத்ம ஸமர்ப்பணமென்னப்படுகிறது.

2 शरणं भव देवेश नाथ लक्ष्मीपते मम ।
सकृदेव प्रपन्नस्य कृत्यं नैवास्ति किंचन ॥

லக்ஷ்மீதந் (28-14) : ஒருமுறை ப்ரபத்தி செய்தவன் பின்னும் அதே பலனுக்காகச் செய்யவேண்டியது எதுவும் இல்லை.

3 निक्षेपापपर्यायो न्यासः पञ्चाङ्गसंयुतः।
संन्यासस्त्याग इत्युक्तः शरणागतिरित्यपि॥

லஷ்மீ தந்(17-75): ஆத்ம ஸமர்ப்பணம் எனப்படும் பரந்யாஸம் ஐந்து அங்கங்களுடன் கூடியது. அது ந்யாஸம் த்யாகம் - சரணாகதி என்றெல்லாம் வழங்கப்படும்.

4 अनेनैव तु मन्त्रेण स्वात्मानं मयि निक्षिपेत् ।
मयि निक्षिप्तकर्तव्य : कृतकृत्यो भविष्यति ॥

ஸாத்யகித (?) : இந்த மந்திரத்தைக் கொண்டே ஒருவன் ஆத்மாவை என்னிடம் ஸமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்தவன் செய்யவேண்டிய செயலைச் செய்து முடித்தவனாவான்.

5 आचम्य प्रयतो भूत्वा स्मृत्वाऽस्त्रं ज्वलनाकृति ।
तत् प्रविश्य विनिष्क्रान्तः पूतो भूत्वाऽस्त्रतेजसः ॥
प्रपत्तिं तां प्रयुञ्जीत स्वाङ्गै : पञ्चभिरावृताम् ।

லஷ்மீதந் (28-11): ஆசமனம் செய்து தூயனாய் ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியைச் செய்யவேண்டும்.

6 अहमस्म्यपराधानामालयोऽकिञ्चनोऽगतिः।
त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थनामतिः ।
शरणागतिरित्युक्ता सा देवेऽस्मिन् प्रयुज्यताम् ।

அஹிர்புத்(37-31): அடியேன் அபராதங்களுக்கு உறைவிடமாகவும் என்னைக் காத்துக்கொள்ள வேறு உபாயமற்றவனாகவும் உன்னையன்றி வேறு பயனற்றவனாகவும் உள்ளேன்.

7 न धर्मनिष्ठोऽस्मि न चात्मवेदी न भक्तिमान् त्वच्चरणारविन्दे।
अकिञ्चनोऽनन्यगतिः शरण्य त्वत्पादमूलं शरणं प्रपद्ये ॥

ஸ்தோத்ரர.(22): ரக்ஷகனான எம்பெருமானே! அடியேன் கர்மயோகத்தையும் அதன் அங்கங்களையும் செய்ய முடியாதவன். ஞானயோகத்தைச் செய்யப் பூர்ணமான ஞானமின்மையால் அதைச் செய்யவும் இயலாதவன். அவ்விரண்டும் இல்லாமையால் உன் திருவடித் தாமரையைக் குறித்துச் செய்யும் பக்தியோகமும் இல்லாதவன். இப்படி வேறொரு கைம்முதலற்றவனாய் உன்னையன்றி வேறு உபாயமும் பலனும் இல்லாத அடியேன் உன் திருவடிகளையே சரணமாகப் பற்றுகின்றேன்.

Scanned with CamScanner

'ननु प्रपन्नः सकृदेव नाथ'[1], 'सकृत् प्रार्थनामात्रेण' (73[l]) इत्यादिகளாலும் காகாஸுராதி வ்ருத்தாந்தங்களாலும் ஸித்தம்.

16.10.6 ப்ரபத்திக்குப் பின் செய்யும் நற்காரியங்கள் அதற்கு அங்கமல்ல

இப்படி க்ஷணக்ருத்யமான ந்யாஸ யாகத்துக்கு நைரபேக்ஷ்யம்[a]தோற்றுகைக்காகக் केवलம் भगवत्-संकल्प-साध्यமான மரணத்தை अवभृथம்[b] என்கிறது. இதற்கு இவன் மேலிருந்து செய்யும் अनुकूल-वृत्यादिகளில் ஒன்றும் இதற்கு அங்கமன்று என்கையிலே தாத்பர்யம்.

16.11 ப்ரபந்நனுக்கு முக்காலத்திலும் உள்ள கடமைகளும் அவற்றில் சிறு குறையிருப்பினும் பலன் பெறுதலும்

இப்பூர்வ खण्डத்தில் ப்ரகாசித்த பரந்யாஸத்தை அநுஷ்ட்டிக்குமவனுக்குத் तत्त्व-ज्ञानादि-संपादनம்[c] पूर्व-कृत्यம் आनुकूल्यसंकल्पादितत्काल-कृत्यம்[d]. ஸ்வயம்ப்ரயோஜநமான निरपराध[e] கைங்கர்யம் உத்தர-कृत्यம்[f] पूर्व-कृत्य-विकलன் अधिकारिயல்லன். तत्काल-कृत्य-विकलன் कृतकृत्य[g]னல்லன். उत्तर-कृत्य-विकलன் कृतार्थ[h]னல்லன். இப்படி विकलரானவர்களும்[j] 'कथंचिदुपकारेण कृतेनैकेन तुष्यति' என்கிறபடியே कृतज्ञனான[k] சரண்யனுடைய க்ருபையாலே क्रमेण[l] பூர்ணராவார்கள். 'सकृज्जप्तेन मन्त्रेण'[3] என்று ஸாத்யகி தந்த்ரத்தில் சொன்னது இங்கும் துல்யமிறே.

'भव शरणमितीरयन्ति ये वै' (66[l]) 'येन केनापि प्रकारेण द्वयवक्ता त्वं'[4], 'एतदुच्चारणमात्रावलम्बनेन'[5], 'प्रपत्तिवाचैव'[6] इत्यादिகளிலும் இதன் प्रभावம் கண்டு கொள்வது. 'सकृदुच्चरितं येन हरिरित्यक्षरद्वयं[7] என்கிறபடியே

---

a- வேறொன்றையும் எதிர்பாராமை; b- வேள்வியின் முடிவில் செய்யும் ஒரு சடங்கு, ஸ்நாநம் ; c- ப்ரபத்திக்கு முன் செய்ய வேண்டிய கடமை; d- ப்ரபத்தி காலத்தில் உள்ள கடமை; e- குற்றம் கலவாத; f- ப்ரபத்திக்குப் பின் செய்ய வேண்டிய கடமை; g- இல்லாதவன்; h- கடமையைச் செய்து முடித்தவன்; i- பயன் பெற்றவன்; j- குறையுடையவர்களும்; k- நன்றியறிவுடையவன்; l- காலப் போக்கில்.

1 ननु प्रपन्न : सकृदेव नाथ तवाऽहमस्मीति च याचमानः ।
तवाऽनुकम्प्य : स्मरत : प्रतिज्ञां मदेकवजं किमिदं व्रतं ते ॥

ஸ்தோத்ரர. (64) : ஸ்வாமி உன்னை ஒரு முறை சரணமடைந்து ப்ரபத்தி செய்து விட்டேன். அதற்குப் பலனாக உனக்கு அடியேன் என்ற

நினைவோடு உன் கைங்கர்யத்தையும் பிரார்த்திக்கின்றேன். முன் இராமாயணத்தில் நீ செய்த பிரதிஜ்ஞையை நினைத்துக் கொண்டு நீ அருள் புரிவதற்கு ஏற்றவனாயுள்ளேன். அப்பொழுது என்னைத் தவிர மற்றவர்க்கே அபயம் தருவதாக விரதம் கொண்டாயா? அப்படி இல்லையே!

2 'न स्मरत्यपकाराणां शतमप्यात्मवत्तया ।
कथंचिदुपकारेण कृतेनैकेन तुष्यति ॥

ராமா-அயோ(2-1-11): இராமபிரான் மிகப் பெருந்தன்மையுடையவனாதலின் ஒருவன் நூற்றுக்கணக்கான குற்றங்களைச் செய்தாலும் அவற்றை நினைப்பதேயில்லை. ஏதாவது ஒரு வகையில் ஒருவன் ஓர் உதவி செய்தாலும் அதனால் மகிழ்கிறான்.

3 ஸாத்யகிதந்த்ரம் (?) : ஒருமுறை த்வயத்தை உச்சரித்து ப்ரபத்தி செய்தவன் கடமையை முடித்தவனாய்ப் பேரின்பமடைவான்.

4 சரணா.கத் (18) : நீ எத்தனை இழிவானவனாயினும் ஏதோ ஒரு வகையில் த்வயத்தைச் சொல்லி ப்ரபத்தி செய்தவனாதலின் எல்லாத் தடைகளும் நீங்கி என் பரிபூர்ண கைங்கர்யத்தைச் செய்பவனாவாய்.

5 एवंभूत-तत्त्वयाथात्म्यावबोध-तदिच्छारहितस्यापि एतदुच्चारणमात्रावलम्बनेन
उच्यमानार्थ-परमार्थनिष्ठं मे मनः त्वमेव अद्यैव कारय।

ஸ்ரீரங்க கத்(6) : இத்தகைய பெரும்பயனான மோக்ஷத்திலோ ஜீவாத்ம பரமாத்மாக்களின் விஷயத்திலோ நல்ல அறிவும் அதைப் பெற ஆசையும் இல்லாதவனாயினும் இந்த த்வயத்தை உச்சரித்ததை மட்டும் கொண்டு அடியேனுடைய மனத்தை உபாயம் - பலன் இவற்றைப் பற்றிய தெளிவான உறதியுடையதாக நீயே செய்தருள வேண்டும்.

6 यथाऽसि यावानसि योऽसि यद्गुणः करीश यादृग्विभवो यदिङ्गितः।
तथाविधं त्वाऽहमभक्तदुर्ग्रहं प्रपत्तिवाचैव निरीक्षितुं वृणे॥

ஸ்ரீ வரதராஜஸ்த(92) : பேரருளாளனே! உன் திவ்ய ஸ்வரூபம் - எங்கும் பரந்து நிற்கும் தன்மை - திருக்கல்யாண குணங்கள் - விசேஷப் பெருமை - ஈச்வரத் தன்மை - செயல்கள் எல்லாவற்றோடும் கூடி விளங்கும் உன்னை உன் அடியார்களன்றி மற்றவர்களால் அறிய முடியாது. இத்தகைய உன்னை ப்ரபத்தியைச் சொல்லும் த்வயத்தினாலேயே ஸாக்ஷாத்கரிக்க விரும்புகின்றேன்.

7 सकृदुच्चरितं येन हरिरित्यक्षरद्वयम् ।
बद्धः परिकरस्तेन मोक्षाय गमनं प्रति ॥

இதி. ஸமு. (31-172) : ஹரி : என்ற இரண்டெழுத்துக்கள் எவனால் ஒரு முறை சொல்லப்பட்டனவோ, அவனால் மோக்ஷத்திற்குச் செல்வதற்கு ஸாதநங்கள் ஸித்தம் பண்ணப்பட்டன.

Scanned with CamScanner

லகு வான இரண்டு அக்ஷரங்களை உச்சரிக்க இட்ட படை கற்படையானால் குருதரமான இவ்வாக்யத்வயத்தை உச்சரித்தவனுக்கு இது கேட்க வேண்டுமோ! தமஸ்ஸாலும் ரஜஸ்ஸாலும் வரும் கலக்கம் அறுகையாலே 'पारमार्थिकी... यथावस्थिता'[1] என்னும்படியான பரிபூர்ண - ப்ரபத்தி பண்ணினவனுக்குத் தான் கோரின ஃபலம் தான் கோரின காலத்திலே ஸித்திக்கும்.

16.12 ப்ரபத்தி எல்லாப் பலனையும் அளித்தல்

இது ஸகல ஃபலஸாதனம் என்னுமிடம் 'तावदार्तिस्तथा वाञ्छा तावन्मोहस्तथाऽसुखं[2], यद्येन कामकामेन'[3] इत्यादिகளிலும் काक–विभीषण–कपोत सुमुख–द्रौपदी–गजेन्द्र–क्षत्रबन्धु–मुचुकुन्दादि–वृत्तान्तங்களிலும் காணலாம் (A-3,11,10,12,13,15).

வினைவிடுத்து வியன்குணத்தாலெம்மையாக்கி
வெருவுரை கேட்டு அவை கேட்க விளம்பி நாளும்
தனையனைத்தும் அடைந்திடத் தானடைந்து நின்ற
தன் திருமாதுடனிறையும் தனியாநாதன்
நினைவழிக்கும் வினைவழிக்கு விலக்காய் நிற்கும்
நிகரில்லா நெடுங்குணங்கள் நிலைபெறத் தன்
கனைகழற்கீழ் அடைக்கலமாக் காட்சி தந்து
காரணனாம் தன் காவல் கவர்கின்றானே (8)

---

1. पारमार्थिकी भगवच्चरणारविन्दशरणागतिर्यथावस्थिता अविरता (अस्तु मे ।।)

சரணா. கத்(2) : பிராட்டியே! எம்பெருமானுடைய திருவடித் தாமரையில் உண்மையான சரணாகதி நேரிய நிலையில் நடைபெற்று அதனால் அவனுடைய அநுக்ரஹம் மோக்ஷம் பெறும் வகையில் தொடர்ந்து நிற்கும் படி நீ செய்தருள வேண்டும்.

2. तावदार्तिस्तथा वाञ्छ तावन्मोहस्तथाऽसुखम् ।
यावन्नयाति शरणं त्वामशेषाधनाशनम्।।

வி. பு. (1 - 9 - 73) : எம்பெருமானே! ஸகல பாபங்களையும் ஒழிக்க வல்ல உன்னைச் சரணமடையாத வரையில் தான் இழந்த செல்வத்தை மறுபடி பெற வேண்டுமென்ற கவலையும் புதிய செல்வத்தைப் பெற ஆசையும் சரீரத்தின் தொடர்பற்ற ஆத்மாநுபவமில்லாமையும் ஸம்ஸார துக்கமும்

இருக்கும். (உன்னிடம் ப்ரபத்தி செய்வதால் ஐச்வர்யம் கைவல்யம் - மோக்ஷம் எல்லாப் பலனையும் பெறமுடியும்)

3 यद्येन कामकामेन न साध्यं साधनान्तरैः ।
मुमुक्षुणा यत् सांख्येन योगेन न च भक्तितः ।।
प्राप्यते परमं धाम यतो नावर्तते यतिः ।
तेन तेनाप्यते तत्तत् न्यासेनैव महामुने।।
परमात्मा च तेनैव साध्यते पुरुषोत्तमः।।

அஹிர்பு.ஸம்.(37-25, 26, 27): மஹர்ஷியே பலனில் ஆசையுடைய எவனெவனால் எந்தெந்தப் பலன்கள் வேறு ஸாதநங்களாலே அடைய முடியாதனவோ, முமுக்ஷுவாலே எந்த மோக்ஷமெனும் பலன் கர்மயோகம் - ஞான யோகம் - பக்தி யோகம் இவற்றால் எளிதில் அடைய முடியாததோ, அவனாலே ப்ரபத்தியைச் செய்து அந்த அந்தப் பலன்கள் அடையப்படுகின்றன. புருஷோத்தமனான எம்பெருமானும் அந்த ப்ரபத்தியாலேயே அடையப்படுகின்றான். எங்கே போய்த் திரும்பி வருவதில்லையோ அந்த உயர்ந்த இடமே முமுக்ஷு ஆசைப்படும் பரமபதமாகும்.

(8) **வினை விடுத்து** - (தன்னை அடைந்தவர்களின்) கர்மங்களைப் போக்கி : **வியன் குணத்தால் எம்மை ஆக்கி** - அதிசயிக்கதக்க (தன் சிறந்த கருணை முதலிய) குணத்தால் எம்மைப் பக்குவப்படுத்தி ; **வெருவுரை கேட்டு** - (பாவிகளான எங்களை எம்பெருமான் ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என்று தாஸர்கள்) அச்சத்துடன் புலம்பும் குரலைக் கேட்டு : **அவை கேட்க விளம்பி** - அந்தப் புலம்பல்களை எம்பெருமான் கேட்க விண்ணப்பித்து : **நாளும் தன்னை அனைத்தும் அடைந்திட** - எப்பொழுதும் தன்னை எல்லாம் சரணமடைய; **தான் அடைந்து நின்ற** - (அவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காகத்) தான் எம்பெருமானை அடைந்து நின்றவளான; **தன் திருமாதுடன்** - தனக்கே உரியளான பிராட்டியுடன்; **இறையும் தனியா நாதன்** - க்ஷணமும் பிரியாதிருக்கும் எம்பெருமான்; **நினைவு அழிக்கும் வினை வழிக்கு** - நல்ல அறிவைப் போக்குகிற பாபமார்க்கத்திற்கு ; **விலக்காய் நிற்கும்** - தடையாய் நிற்பவையும்; **நிகர் இல்லா** - ஒப்பற்றவையுமான; **நெடுங் குணங்கள் நிலை பெற** - அளவற்ற (தன்னுடைய) குணங்கள் நிலைபெற்று நிற்பதற்காகத் **தன் கனைகழல் கீழ்** - ஒலிக்கும் வீரக்கழலையணிந்த தன் திருவடிகளின் கீழ் ; **அடைக்கலமாக் காட்சி தந்து** - நம்மை ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாகக் கொண்டு ஸேவையைக் கொடுத்து ; **காரணனாம் தன் காவல்** - ஸர்வகாரணனான தன்னுடைய ரக்ஷண ஸ்வபாவத்தை; **கவர்கின்றான்** - (நிலைநாட்டிக்) கொள்ள விரும்புகின்றான்.

Scanned with CamScanner

17 த்வயத்தின் பிற்பகுதியின் பொருள் விளக்கம்

17.1 த்வயத்தின் பிற்பகுதியின் திரண்ட பொருள்

இப்படி ஸர்வபுருஷார்த்தங்களையும் ஸாதிக்கவற்றான உபாயம் இங்கு எதற்காக? என்ன, 'கண்டு கேட்டு'[1] என்கிற பாட்டின்படியே க்ஷுத்ர-ப்ரயோஜநங்களோடு[a] துவக்கற்ற புருஷார்த்த விசேஷத்தைக் காட்டுகிறது உத்தரகண்டம்.[b]

17.2 'ஸ்ரீமத்' சொல் காட்டும் பொருள்

இதில் 'श्रीमत्'शब्दம் 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப'[1] 'கோலத் திருமாமகளோடுன்னை'[2] என்கிற படியே நிரதிசய भोग्यமான[c] शेषितத்த்வம் 'भवांस्तु सह वैदेह्या'[3] (254[3]) 'तया सहासीनमनन्तभोगिनि'[4] इत्यादिகளில் சொன்ன சேர்த்தியிலே கைங்கர்ய -प्रतिसंबन्धि[d]யாய்க் கொண்டு நித்ய-யுக்தமாய்[e] நிற்கிற நிலையைக் காட்டுகிறது.

17.3 பிற்பகுதியிலும் 'ஸ்ரீமத்' சொல்லின் அவசியம்

श्रुत्यादिகளிலே ஸர்வ - விசிஷ்டன்[f] ப்ராப்யனாகச்[g] சொல்லியிருக்க 'नानयोर्विद्यते परं'[5], 'अस्या मम च शेषं हि विभूतिरुभयात्मिका' (17[2]) 'उभयाधिष्टानं चैकं शेषित्वं'[6] इत्यादिகளாலே சொன்ன வாசி

---

a - அற்பப் பயன்களோடு; b - பிற்பகுதி; c- எல்லையற்ற இனிமையுடைய; d- ஏற்றுக் கொள்பவன்; e- எப்பொழுதும் கூடியதாய்; f - ஸ்வரூபம் - திருமேனி - குணம் - பரிவாரம் முதலிய எல்லாவற்றுடன் கூடியவன் ; g- அனுபவிக்கப்படும் பயன்.

1. கண்டுகேட்டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி
கண்டவின்பம் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம்
ஒன்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக்
கண்டசதிர்கண்டொழிந்தேன் அடைந்தேனுன் திருவடியே.

திருவாய். (4 - 9 - 10) : கண் உருவத்தைப் பார்க்கின்றது. செவி ஓசையைக் கேட்கின்றது. ஸ்பரிச இந்திரியம் ஒன்றைத் தொடுகின்றது. மூக்கு மணத்தை முகர்கின்றது. நாக்கு சுவையைச் சுவைக்கின்றது. இப்படி ஐந்து இந்த்ரியங்களும் இவற்றைப் பெற்றும் போதாமல் மேலும் தேடி அலைகின்றன. இந்த இந்த்ரியங்களாலே அறிய முடியாத பெரிய இன்பம் ஆத்மாவை அனுபவிப்பதாகிய கைவல்யம். இது அளவற்றது. ஆனால்

மோக்ஷத்தைக் காட்டிலும் மிகவும் அற்பமானது. எம்பெருமானே! நீயும் பிராட்டியும் இருக்கும் சேர்த்தியில் நித்ய முக்தர்கள் உங்களை அனுபவிக்கும் முறையை உணர்ந்து ஐச்வர்யத்தையும் கைவல்யத்தையும் விட்டொழித்து உன் திருவடிகளையே அடைந்தேன்.

2 ஞாலத்தூடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும்,
சாலப்பலநாள் உகந்தோறு உயிர்கள் காப்பானே,
கோலத்திருமாமகளோடு உன்னைக் கூடாதே,
சாலப்பலநாள் அடியேன் இன்னும் தளர்வேனோ.

திருவாய். (6-9-3): பல்வேறு அவதாரங்களைப் பண்ணியுகந்தோறும் ஆத்மாக்களை ரக்ஷிக்கும் எம்பெருமானே! நீ பிராட்டியோடு இருக்கும் இருப்பையும் உன் அழகையும் உன் லீலைகளையும் நான் ஒருவனும் எப்பொழுதும் அனுபவிக்கப் பெறாமல் இன்னும் தளர்ந்தே நிற்கக் கடவேனோ!

3 'भवांस्तु सह वैदेह्या गिरिसानुषु रंस्यते ।
अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते ।।'

ராமா-அயோ.(2-31-27): தேவரீர் ஸீதையுடன் மலைத்தாழ்வரைகளில் விளையாடப்போகிறீர். தேவரீர் விழித்திருந்த போதும் உறங்கும்போதும் எல்லாக் கைங்கர்யங்களையும் அடியேன் செய்யப் போகிறேன். (லக்ஷ்மணன் பேச்சு)

4 तया सहासीनमनन्तभोगिनि प्रकृष्टविज्ञानबलैकधामनि।
फणामणिव्रातमयूखमण्डलप्रकाशमानोदरदिव्यधामनि ।।

ஸ்தோத்ர. (39): திருவனந்தாழ்வானாகிய திருப்பள்ளியில் பெரிய பிராட்டியுடன் அமர்ந்திருக்கும் எம்பெருமானாகிய உன்னையே எப்பொழுதும் ஸேவித்துக் கொண்டு எப்பொழுதும் கைங்கர்யம் செய்து கொண்டு உன்னை மகிழ்விக்கும் காலம் எது?

5 देवतिर्यङ्मनुष्येषु पुन्नामा भगवान् हरिः।
स्त्रीनाम्नी लक्ष्मीर्मैत्रेय नानयोर्विद्यते परम् ।।

வி.பு. (1-8-35) : மைத்ரேய! தேவர் - மானிடர் - விலங்குகள் இவற்றில் ஆண்பாலான பிராணிகள் எம்பெருமானுக்கும் பெண்பாலானவை பிராட்டிக்கும் அடங்கியனவாகும். இவ்விருவருடைய ஆளுகைக்கு உட்படாத வஸ்துவே இல்லை.

6 **ஷடர்த்த ஸங்க்ஷேபம்(?) :** சேஷியாந்தன்மை என்ற ஒன்று பெருமாள் பிராட்டி இருவரிடமும் சேர்ந்தே நிற்பது.

Scanned with CamScanner

தோற்றுகைக்காகவிறே இங்கே விசேஷித்து எடுக்கிறது. श्रीशब्द நிருக்திகளில்[a] प्राप्यதைக்கு உறுப்பானவற்றை இங்கே अनुसंधिப்பது.

17.4 மறுமுறை நாராயண சப்தத்தின் அவசியம்

ஸர்வ - சேஷியான தத்த்வம் प्रधान-प्राप्यமானாலும்[b] प्राप्ताவின்[c] ஸ்வரூபம் முதலான ஸர்வ விசேஷணங்களும் प्राप्यकोटि - घटितங்களாய்[d] நிற்கிற நிலையைக் காட்டுகிறது இங்குற்ற நாராயணशब्दம்

17.4.1 முக்தனுக்கு ஸகல வஸ்துக்களும் அநுகூலமாதல்

देश-काल-पुरुष-भेदத்தாலே பண்டு बहुविधமான ஆநுகூல்ய - ப்ராதிகூல்யாதிகளை அடைந்தவை सर्व-उपाधिகளும்[e] கழிந்தவனுக்கு ஸ்வாமி - विभूतियान[f] आकारத்தாலே अत्यन्त-அநுகூலங்களாய் இருக்கும்.

17.4.2 முக்தன் அநுபவிக்கும் பரமாநந்தம்

अनन्तात्माக்களுக்கும் வரும் ஐச்வர்ய - ஆத்மாநுभव ரஸத்தை எல்லாம் சேரப்பார்த்தாலும் பரிபூர்ண -ब्रह्म- அநுभव - ரூபமான திருப்பாற்கடலில் ஒரு திவலைக்கும் பற்றாது.

17.4.3 நாராயண சப்தம் பரமபதநாதன் திருமேனியையும் கூறல்

கைங்கர்ய விசேஷங்களுக்கு இலக்காகப் पर्यङ्क-विद्याதிகளில்[g] சொன்ன திவ்ய - மங்கள - விக்ரஹமும் இங்கே விசேஷித்து அநுஸந்धेயம்.

17.4.4 முக்தர் பரமபதத்தில் வாழும் இடம்

'தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ் கொள்ளும் அப்பன்' *(39[3])* என்றும், 'தன் தாளிணைக் கீழ்ச் சேர்த்து'[1] என்றும், 'मदीयमूर्धानमलङ्करिष्यति'[2] என்றும் சொல்லுகிறபடியே திருவடிகளுக்கும் आधार-पद्मத்துக்கும்[h] நடுவிறே முக்தருக்கு स्वतः प्राप्तமான[i] இருப்பிடம்.

17.5 'ஆய' விகுதி கூறும் பொருள்

இப்படி ஸர்வ-சேஷித்வ-ஸர்வ-ப்ரகார-நிரதிசய-भोग्यत्वங்களை प्रधानமாகப் பிரகாசிப்பிக்கிற பதங்களில் चतुर्थी तादर्थ्य மாத்ரத்தைச்

சொன்னால் கீழ்ச் சொல்லுகிற உபாயத்தோடு சேர்த்தியில்லாமையாலே நித்ய सिद्धமான இத் तादर्थ्यத்துக்கு அநுரூபமாய் साध्यமாய் निरुपाधिक-அநுभव - பரீவாஹமாய்[k] वैपरीत्यादि-ரஹிதமாய்[l] सर्वदेशादि-योग्यமான यथा-अभिमत-सर्वविध[m] கைங்கர்யத்தையும் காட்டுகிறது. இதன் प्रार्थனைக்கு இங்கே ஒரு क्रियापदம்[n] अध्याहार्यம்[o], 'कुरुष्व मामनुचरं'[3] 'வானுயரின்பம்

---

a- எழுத்துக்களைப் பிரித்துப் பொருள் கூறும் நிகண்டு; b- அடையப்படும் முக்கியப் பலன்; c- அடைபவனான ஜீவன்; d- பயன் வகுப்பில் சேர்ந்தன; e- சரீரம் கர்மம் முதலிய அனைத்தும்; f- ஆளுகைக்கு உட்பட்டது; g- பக்தி யோகங்களுள் பர்யங்க வித்யை என்பதும் ஒன்று. இதை வெளியிடும் கௌஷீதகி உபநிஷத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் பரமபதநாதன் எழுந்தருளியுள்ள நிலையெல்லாம் விளக்கப்பட்டுள்ளது. ; h- திருவடிக் கீழ் உள்ள தாமரை; i- தனக்கென்று ஏற்பட்ட; j- அவனுக்கு அடிமை என்பதை மட்டும்; k- இயற்கையான அநுபவத்துக்குப் போக்குவீடாய்; l- விபரீத உணர்ச்சிகளற்றதாய்; m- தான் விரும்பிய எல்லாவகை; n- வினைமுற்று; o- வருவித்துக் கொள்ள வேண்டும்.

1. வார்த்தையறிபவர் மாயவற்காளன்றியாவரோ?,
போர்த்தபிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பிவை
பேர்த்து, பெருந்துன்பம் வேரற நீக்கித் தன் தாளிணை கீழ்ச்
சேர்த்து, அவன் செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்றே.

திருவாய். (7-5-10): அடியார்களுக்கு, ஸ்வரூபத்தை மறைக்கும் பிறப்பு - நோய் - முதுமை - மரணம் முதலிய ஸம்ஸாரத்தைப் போக்கி ஆத்மாநுபவமென்னும் பெரிய அநர்த்தத்திலும் புகவிடாமல் தன் திருவடிக் கீழ் சேர்த்து அவன் செய்யும் ரக்ஷணத்தை அறியும் சேதநர் அற்புதனான இராமபிரானன்றி வேறு ஒருவருக்கு அடியராவரோ?.

2 कदा पुनः शङ्खरथाङ्गकल्पकध्वजारविन्दाङ्कुशवज्रलाञ्छनम्।
त्रिविक्रम त्वच्चरणाम्बुजद्वयं मदीयमूर्धानमलंकरिष्यति ॥

ஸ்தோத்ர. (31) : த்ரிவிக்ரமனாய் உலகம் முழுதும் திருவடியை வைத்த எம் பெருமானே! சங்கம் - சக்ரம் - கற்பக மரம் - கொடி - தாமரை - மாவெட்டி - வஜ்ரம் ஆகிய சின்னங்களால் அழகு பெற்ற உன் இரண்டு திருவடித் தாமரைகளும் எப்பொழுது என் முடியின் மீது அமர்ந்து அழகு செய்யப்போகின்றன?

3 कुरुष्व मामनुचरं वैधर्म्यं नेह विद्यते।
कृतार्थोऽहं भविष्यामि तव चार्थः प्रकल्पते॥

ராமா. (2-31-24) : அண்ணா அடியேனைப் பணிபுரிவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் தகுதிக் குறைவு எதுவும் இல்லை. அவ்வாறு

Scanned with CamScanner

மன்னி வீற்றிருந்தாய், அருளு நின் தாள்களை எனக்கே',[1] 'நின் தாளிணைக் கீழ் வாழ்ச்சி யான் சேரும் வகை அருளாய்'[2] 'नित्यकिंकरो भवानि'[3] इत्यादिகளை இங்கே अनुसंधिப்பது.

17.6 'நம:' சொல்லின் பொருள் விளக்கம்

இப்படி प्रार्थநீயமான[a] பரம - புருஷார்த்தம்[b] अविद्याकर्मादि யான அநிஷ்ட - வர்கத்தினுடைய[c] अत्यन्त - निवृत्ति - पूर्वक மாகையாலே[d] அல்லாத[e] புருஷார்த்த - அநுभव-दशैயில்[f] வரும் स्वाधीन-स्वार्थ-कर्तृत्व-भोक्तृत्व-भ्रमरूपமான[g] களையற்று 'தனக்கேயாக எனைக் கொள்ளும் (35-2) इत्यादिகளிற்படியே நிற்கும் நிலையை இங்குற்ற 'நமஸ்' காட்டுகிறது. இதுவும் திருமந்திரத்தில் ஸூக்ஷ்ம யோஜனையில் போலே இரண்டு எழுத்தும் இரண்டு पदமாய். अध्याहरित्த[h] क्रिया-पदத்தோடே[i] அந்வயித்து ஒரு வாக்யமாகிறது.

18 த்வயத்தில் வரிசையாய்ப் பதங்களின் பொருள்

இப்படி सहधर्म-चारिणी-संबन्धமும், இதனுடைய நித்யதையும், ரக்ஷண-उपयुक्त-गुणादिகளும், शुभ-आश्रय-विग्रहமும், இவற்றாலே விசிஷ்டனுடைய உபாய -भावமும், இவனுடைய வசீகரணமும்[j], இது सकृत् कर्तव्यமானபடியும்[k], இதன் अधिकारी-விசேஷமும், ஸர்வசேஷி सपत्नीकனாய்க் கொண்டு கைங்கர்ய प्रतिसंबन्धियானபடியும்[l], ஸர்வ-விசிஷ்டனுடைய நிரதிசய भोग्यतैயும், அவன் திறத்தில் ஸ்வ ரூப - அநுரூபமான स्वच्छन्द- கைங்கர்யமும்[m]. இது அஹங்காராதி ரூபமான களையற்று நிற்கிற நிலையும், இப்படி परिशुद्धமான கைங்கர்யத்தினுடைய प्रार्थனையும் அடைவே ப்ரகாசிக்கின்றன.

19 மூன்று வாக்கியங்களும் விளக்கும் முழுப்பொருள்

இதன் अवान्तर-வாக்யங்கள்[n] மூன்றையும் சேர்த்தால் அநந்யார்ஹ - சேஷ -भूतனாய்[o] அகிஞ்சநனான நான்

a - ஆசைப்பட உரிய ; b - பெரும்பயன், மோக்ஷம்; c- எதிரி வகுப்பு; d- அடியோடு கழிவதை முன்னிட்டு; e- மற்ற; f - பலன்களை அனுபவிக்கும் நிலையில்; g - தானே சுதந்திரமாய்த் தன் பயனுக்காகவே

செய்தல், தானே சுதந்திரமாய் அநுபவிப்பது, தன் பயனுக்காகவே அநுபவிப்பது என்ற விபரீத எண்ணங்கள் ; h- வருவித்துக் கொண்ட; i- வினை முற்றுச் சொல். j- வசப்படுத்தும் உபாயம், ப்ரபத்தி; k ஒரே முறை செய்ய வேண்டியது; l- ஏற்றுக்கொள்பவன்; m- விரும்பியவாறு செய்யும் கைங்கர்யம் ; n- உள் அடங்கிய வாக்கியங்கள் ; o- மற்றொருவர்க்கன்றி எம்பெருமானுக்கே சேஷனாய்; p- கைம்முதலற்றவன்.

செய்யின் யானும் கைங்கர்யமாகிய பயனைப் பெறுவேன் தேவரும் அடைந்தவனைக் காத்தலாகிய பயனைப் பெறலாம். (லக்ஷ்மணன் வேண்டுகோள்)

1. யானும் நீதானேயாவதோமெய்யே யருநரகவையும் நீயானால்,
வானுயரின்பமெய்திலென்? மற்றை நரகமேயெய்திலென்? எனிலும்,
யானும் நீதானாய்த் தெளிதொறும் நன்றும் அஞ்சுவன் நரகம்
நானடைதல்,
வானுயரின்பம்மன்னிவீற்றிருந்தாய் அருளுநின் தாள்களை எனக்கே.

திருவாய். (8-1-9) : பரமபதத்தில் எல்லையற்ற ஆநந்தத்துடன் வாழும் எம்பெருமானே! அடியேனும் இந்த ஸம்ஸார மண்டலமும் எல்லாம் உனக்குச் சரீரமே. ஆதலின் ஸ்ரீவைகுண்டத்தில் அடியேன் இருப்பதும் ஸம்ஸாரத்தில் இருப்பதும் ஒன்றுதான். ஆயினும் இங்கு உன் அனுபவத்துக்கு ஸம்ஸார மண்டலம் தடை செய்து கொண்டேயிருப்பதால் அஞ்சுகின்றேன். ஆதலின் அடியேனை அங்கே அழைத்து உன் திருவடிகளைத் தந்தருள வேண்டும்.

2 சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி, என்றும்
ஏழ்ச்சிக்கேடின்றி எங்கணும் நிறைந்த எந்தாய்,
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து நின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சி, யான் சேரும் வகை அருளாய்வந்தே.

திருவாய். (3-2-4): என் அப்பனே! நீ எல்லோரையும் வசப்படுத்த வல்ல ஞானவடிவனாய் வளர்ச்சி குறைதலின்றி எங்கும் வியாபித்திருக்கின்றாய். அதனால் அடியேனுக்குப் பயன் எதுவும் இல்லை அடியேனுக்கு உலக விஷயங்களில் ஈடுபாட்டை ஒழித்து உன் திருவடிக் கீழேயே வாழும் உபாயத்தை அடியேனுக்காவே ஒரு புதிய அவதாரமாவது செய்து வந்து அறிவித்தருள வேண்டும்.

2 परभक्ति-परज्ञान-परमभक्तिकृत-परिपूर्णानवरत-नित्यविशदतम-अनन्यप्रयोजन
अनवधिकातिशयप्रिय-भगवदनुभवोऽहं, तथाविध-भगवदनुभवजनित अनवधि-
कातिशयप्रीतिकारित-अशेषावस्थोचित-अशेषतैकरतिरूपनित्यकिङ्करो भवानि ॥

சரணாகதி கத். (17) : பகவானை அநுபவித்ததால் உண்டான எல்லையற்ற மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாக எப்பொழுதும் எல்லாக் கைங்கர்யங்களிலும் ஆசையுடையவனாய் அத்தகைய கைங்கர்யங்களை அடியேன் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

Scanned with CamScanner

ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளில் सर्व-विध-दोष-रहितமாய் ஸ்வ-அபிமதமான[a] ஸர்வவித - கைங்கர்ய வர்த்தையும் பெறு கைக்கு ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளையே உபாயமாகக் கொண்டு यथोक्त- மான[b] ஆத்ம - ரக்ஷா भर-ஸமர்ப்பணம்[c] பண்ணுகிறேன் என்று ஒரு வாக்யார்த்தமாகிறது.

20 த்வய நிஷ்டன் - விளக்கம்

இவ் அர்த்த - அநுஸந்தாநம் உபாய தசையில் सकृत्தாய்[d] कृत-कृत्यता-ஹேதுவாயிருக்கும்[e] ஸ்வயம் ப்ரயோஜநமான உத்தர - க்ருத்யத்தில்[f] सदाவாய்[g] कृतार्थता-ஹேதுவாயிருக்கும்[h]. இதில் பூர்வखண்டத்தில்[i] அநந்ய - உபாயத்வமும்[j] உத்தரख ண்டத்தில்[k] அநந்ய - ப்ரயோஜநத்வமும்[l] இரண்டு இடத்திலும் அநந்யார்ஹ: சேஷத்வமும் ஸித்திக்கிறது. இப்படி இங்குமங்கும் திருமாலன்றி இன்மை கண்டவன் द्वयनिष्ठன்[m].

என்னதுயான் செய்கின்றேன், என்னாதாருக்(கு)
இன்னடிமை தந்தளிப்பான் இமையோர் வாழும்,
பொன்னுலகில் திருவுடனே அமர்ந்த நாதன்
புனலாரும் பொழிலரங்கம் திகழ மன்னி,
தன்னகலம் அகலாத தகவால் ஓங்கும்
தகவுடனே தன் கருமம் தானே எண்ணி
அன்னை என அடைக்கலம் கொண்டு அஞ்சல் தந்து, என்
அழலார நிழலார அளிக்கின்றானே (9)

த்வயாதிகாரம் முற்றும்

★ ★ ★ ★

சரமச்லோகாதிகாரம்

ஒண்தொடியாள் திருமகளும் தானுமாகி
ஒரு நினைவால் ஈன்ற உயிர் எல்லாம் உய்ய,
வண் துவரை நகர் வாழ வசுதேவற்காய்
மன்னவற்குத் தேர்ப்பாகனாகி நின்ற,
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன
தனித்தருமம் தானெமக்காய்த் தன்னை என்றும்,
கண்டு களித்து அடிசூட விலக்காய் நின்ற
கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே (10)

a - தன் மனத்துக்கு உகந்ததான ; b - சாஸ்த்ரமுறைப்படியுள்ள; c- தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தல் ; d - ஒரு முறையே செய்ய உரியதாய்; e- கடமையைச் செய்து முடித்தமைக்குக் காரணம்; f - ப்ரபத்திக்குப் பின் செய்யும் செயலில் ; g - எப்போதும் உள்ளதாய்; h - பயன் பெற்ற தன்மைக்குக் காரணம். i - முற்பகுதியில்; j - வேறு உபாயத்தைக் கொள்ளாமை; டு - பிற்பகுதியில்; k- வேறு பயனை நாடாமை ; l - த்வயத்தில் கூறிய நிலையையுடையன்.

(9): ***என்னது, யான் செய்கின்றேன் என்னாதாருக்கு*** - ''இப்பொருள் என்னுடையது'', ''இதை யான் செய்கின்றேன்'' என்னும் மமகார - அஹங்காரங்களில்லாதவர்களுக்கு; **இன் அடிமை தந்து அளிப்பான்** - இனிய கைங்கர்யத்தைக் கொடுத்துக் காப்பதற்காக; **இமையோர் வாழும் பொன் உலகில்** - நித்யஸூரிகள் வஸிக்கும் (பரமபதமாகிய) சிறந்த லோகத்தில்; **திருவுடனே அமர்ந்த நாதன்** - பிராட்டியுடன் எழுந்தருளியுள்ள எம்பெருமான்; **புனல் ஆரும் பொழில் அரங்கம் திகழ மன்னி** - நீர்வளம் நிறைந்த சோலை சூழ்ந்த திருவரங்கஸ்தலம் விளங்கும்படி நிலைபெற்றிருந்து; **தன் அகலம் அகலாத** - தன்னுடைய திருமார்பை விட்டுப் பிரியாத; **தகவால் ஓங்கும்** - கருணை வடிவமான பிராட்டியின் ஸம்பந்தத்தால் வ்ருத்தியடைகின்ற; **தகவுடனே** - கருணையுடன், **தன் கருமம் தானே எண்ணி** - (என்னைக் காப்பதாகிய) தன் கடமையைத் தான் நினைத்து; **அன்னை என அடைக்கலம் கொண்டு** - பெற்ற தாய் என்னும்படி (என்னைக்) காக்கவேண்டிய வஸ்துவாகக் கொண்டு; **அஞ்சல் தந்து** - அபயப்ரதாநம் செய்து; **என் அழல் ஆற**- என் (ஸம்ஸார) தாபமெல்லாம் தீரும்படி ; **நிழல் ஆர**-தன் திருவடி நிழலை நிறையத் தந்து **அளிக்கின்றான்** - ரக்ஷிக்கின்றான்.

(10) ***வண் துவரைநகர் வாழ*** - அழகிய த்வாரகா நகரத்திலுள்ளவர் உஜ்ஜீவிப்பதற்கு; **வசுதேவற்கு ஆய்** - வசுதேவனுக்குக் குமாரனாய் அவதரித்து ; **மன்னவர்குத் தேர்ப் பாகனாகி நின்ற** - அர்ஜுநனுக்குத் தேர் ஓட்டும் பாகனாகி நின்றவனும்; **தண் துளவ மலர் மார்பன்** - குளிர்ந்த திருத்துழாயுடன் பூவைத் திருமார்பில் அணிந்தவனுமான கண்ணபிரான்; **ஒண் தொடியாள் திருமகளும்** - அழகிய கைவளைகளையுடைய பிராட்டியும்; **தானும் ஆகி** - தானும் ஒன்றுகூடி; **ஒரு நினைவால் ஈன்ற** - ஒரேவிதமான ஸங்கல்பத்தால் படைத்த; **உயிர் எல்லாம் உய்ய** - ஜீவாத்மாக்களெல்லாம் உஜ்ஜீவிப்பதற்காகத் **தானே சொன்ன** - தானே (சரம சுலோகத்தில்) வெளியிட்ட ; **தனித்தருமம்** - நிகரற்ற உபாயமாக; **எமக்குத் தான் ஆய்** - எமக்குத் தானேயாகி நின்று (யாம் பரந்யாஸம் செய்ய அவன் தானே உபாயமாய் நின்று); **தன்னை என்றும் கண்டு களித்து அடி சூட**-தன்னை(பரமபதத்தில்) எப்பொழுதும் ஸேவித்து மகிழ்ந்து திருவடிகளை (நம் முடியில்) தரித்துக் கைங்கர்யம் செய்வதற்கு; **விலக்காய் நின்ற** - தடையாயிருந்த; **கண்புதையல் விளையாட்டை** - (ப்ரக்ருதியைக் கொண்டு தத்துவ ஜ்ஞாநத்தை ஒழிப்பதாகிய) கண்பொத்தும் விளையாட்டை ; **கழிக்கின்றான்** - நீக்குகின்றான்.

Scanned with CamScanner

21 சரம சுலோக அவதாரம் பற்றிய முன்னுரை

'एष नारायणः श्रीमान् क्षीरार्णवनिकेतनः ।
नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मधुरां पुरीम् ॥'[1]

इत्यादि களிற்படியே श्रियःபதியான ஸர்வேச்வரன் साधु-பரித்ராணாதிகளுக்காக[a] வந்து அவதரித்தருளி ஸர்வ ஸுலபனாய் சரணாகதரான பாண்டவர்களுக்கு இன்னார் தூதனென நின்று அர்ஜுநனை ரதியாக்கி[b], தான் ஸாரதியாய்[c] அவனுக்கு विधेयனாய்[d] நின்றவளவிலே தன்னை நிமித்தமாகக் கொண்டு தன் ப்ரதிபக்ஷங்களை[e] ஸர்வேச்வரன் நிரஸிக்க[f] நிற்கிற நிலையைக் கண்ட அர்ஜுநன் बन्धु-विनाश-निश्चयத்தாலும்[g] अस्थान-स्नेहादिகளாலும்[h] கலங்கி धर्म-बुभुत्सै யாலே[i] சரணாகதனாய் 'यच्छ्रेयः स्यात् निश्चितं ब्रूहि तन्मे'[2] என்று விண்ணப்பம் செய்ய, இவனுடைய சோக - நிவ்ருத்திக்காக[j] देहादि-விலக்ஷணமாய்[k] परशेषतैकरसமான[l] நித்ய ஆத்ம - ஸ்வரூபத்தை அருளிச்செய்து ஸ்வரூபம் தெளிந்தவனுக்கு தர்மங்களில் प्रधानமான நிவ்ருத்தி- தர்மங்களையும்[m] உபதேசிக்கத் தொடங்கி, பரம - புருஷார்த்திற்குப்[n] परंपरया[o] காரணங்களான கர்மயோக- ஜ்ஞாநயோகங்களையும் ஸாக்ஷாத்[p] உபாயமான भक्तियोगத்தையும் सपरिकरமாக[q] உபதேசித்து, 'मन्मना भव'[3] என்கிற ச்லோகத்தாலே நிகமித்து[r] நின்றவளவிலே, முன்பு 'दैवी संपत् विमोक्षाय निबन्धायासुरी मता'[4] என்று दैव-ஆஸுரविभागம்[s] சொன்னவளவிலே தானே அர்ஜுநனுடைய शोकத்தைக் கண்டு, 'मा शुचः संपदं दैवमभिजातोऽसि पाण्डव'[5] என்று தேற்றினாற்போலே இப்போதும் பரமபுருஷார்த்தத்தைக்[t] கடுகப் பெறுகையில் த்வரையுண்டே யாகிலும்[u] सपरिकरமாய்[v] दुष्करமாய்[w] அநேக -अन्तराय - ஸம்பாவனை[x] யுடைத்தாய் ஸாவதாநர்க்கும்[y] चिरकाल-साध्यமான[z] भक्तियोगம் அல்பஜ்ஞாநசக்தியாய் அல்ப காலவர்த்தியான தனக்குக் கடுகத் தலைக்கட்டாது என்று அறிகையாலும் सुकर-उपायान्तरத்தை[A] அறியாமையாலும் நிரதிசய - சோக - ஆவிஷ்டனான[B] அர்ஜுநனை வ்யாஜமாகக் கொண்டு

---

a- நல்லோரைக் காத்தல்; b- தேர்த்தலைவன்; c- தேர்ப் பாகனாய்; d- சொல்லியது செய்யும் பணியாளன்; e- எதிரிகளை; f- அழிக்க;

g- உறவினரின் அழிவில் நிச்சயம் ; h- தகாத இடத்தில் அன்பு; i- தர்மத்தை அறிய விருப்பம் ; j - துயரம் நீங்குதல்; k- சரீரம் இந்த்ரியம் இவற்றில் வேறுபட்டதாய்; l- எம்பெருமானுக்கு அடிமையிலேயே சுவைகண்ட ; m- மறுமைப் பயன்களைத் தரும் தர்மங்கள்; n- பெரும்பயன், மோக்ஷம் ; o- வரிசையாக; p - நேராக; q- அங்கங்களுடன் ; r - முடிவு சொல்லி ; s- தைவச் செல்வம் அசுரச் செல்வம் இவற்றின் பாகுபாடு ; t- பெரும் பயன், மோக்ஷம்; u - துடிப்பு; v- அங்கத்துடன் கூடியது; w- செய்தற்குக் கடினம்; x- பல தடைகள் வருதற்கு இடம்; y- மிக்க கவனமுடையர் : z - வெகு காலம் செய்ய உரியது; A- செய்ய எளிதான வேறு உபாயம்; B- எல்லையற்ற துக்கம் நிறைந்த.

1 **ஹரிவம் (விஷ்ணுபர்-54-59):** திருப்பாற்கடலில் உறைபவனாய் **ஸ்ரீய:** பதியான இந்த நாராயணன் திருவநந்தாழ்வானகிய திருப்பள்ளியை விட்டன்றோ இம்மதுராபுரியில் கண்ணனாய் வந்து அவதரித்துள்ளான்.

2 कार्पण्यदोषोपहतस्वभावः पृच्छामि त्वा धर्मसंमूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥

கீதை (2-7) : எனக்கு எது நன்மையானதென்று உன்னால் நிச்சயிக்கப் பட்டதோ, அதை உனக்குச் சிஷ்யனாய் உன்னைச் சரணமடைந்த எனக்குக் கூறிக்கட்டளையிட வேண்டும். *(கண்ணனுக்கு அருச்சுனன் வேண்டுகோள்)*

3 मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु।
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे ॥

__கீதை (18-65).__ அர்ஜுந! என்னிடம் நீ எல்லையற்ற அன்புடையனாதலின் என்னைப்பற்றி இடைவிடாத பக்தியோகத்தைச் செய். எனக்குப் பரிபூர்ண கைங்கர்யம் செய்வதில் ஈடுபட்டிரு. நீயும் உன்னைச் சேர்ந்தவையும் பகவானான என்னுடையனவே என்று அநுஸந்தித்துக் கொண்டே என்னை வணங்கு. இவ்வாறு செய்யும் நீ என்னையே அடைவாய். இது ஸத்யமென்று உனக்கு ப்ரதிஜ்ஞை செய்கிறேன். நீ என் அன்புக்கு உரியனல்லனோ!

__4 கீதை (16.5) :__ அர்ஜுநனே! என் கட்டளைப்படி நடத்தலாகிய தைவஸம்பத்துக் காலக்ரமத்தில் ஸம்ஸார பந்தம் நீங்கி என்னை அடையும்படி செய்யும். என் கட்டளையை மீறி நடத்தலாகிய அஸுரஸம்பத்து அதோகதியை அடையச் செய்யும்.

__5 கீதை (16-5):__ உன்னைப்பற்றித் தான் அஸுர ஸம்பத்தையுடையனோ? என்று நினைத்து மறுபடி ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்க வேண்டி வருமோ? என்று அஞ்சி வருந்தாதே. நீ தைவஸம்பத்தை அடைந்தவனாகின்றாய். தைவ ஸம்பத்து நிறைந்தவராய்த் தார்மிகர்களுள் தலைசிறந்தவரான பாண்டுவின் புத்திரனல்லனோ நீ!

Scanned with CamScanner

ரிதோபநிஷத்-ஆசார்யன் தன் பரம க்ருபையாலே ஸாங்கமாக ஸுகரமாய்[a] ஸக்ருத் கர்தவ்யமாய்[b] ஸர்வ- अधिकारமாய் ஸகல - फल - ஸாधநமாய் ஆஶுகாரியாய்[c] प्रतिबन्ध- அநர்ஹமாய்[d] ப்ரஹ்மாஸ்த்ர துல்யமான ரஹஸ்ய உபாயத்தைச் சரம ச்லோகத்தாலே ஸகல - லோக ரக்ஷார்த்தமாக அருளிச் செய்து இவனை वीतशोक[e]னாக்குகிறான்.

22 பக்தி - ப்ரபத்தி : தகுதியில் வரையறை

'भक्त्या परमया वाऽपि'[1] 'शरणं त्वां प्रपन्ना ये' *(49[2])* इत्यादिகளிலே ப்ரபத்தியும் भक्ति போலே प्राप्ति-विरोधिகளைக்[f] கழிக்கவற்று என்னுமிடம் सिद्धம். இவ்விகல்பம்[g] ஸகிஞ்சநன்[h] அகிஞ்சன்[i] என்றாதல் விளம்பக்ஷமன்[j] விளம்பாக்ஷமன்[k] என்றாதல் अधिकारि- விசேஷத்தைப்பற்றி இருக்கிறது.

23 தகுதியில் பிறர் வாதம் - அதன் கண்டநம்

(i) விச்வாஸாதி தாரதம்யத்தாலே अधिकारि-भेदம் சொல்லு வார்க்கு இது व्यवस्थित[l]விஷயமாம்.

(ii) ஆனபின்பு சிலர் துல்ய - விகல்பம்[m] என்றதற்கும் உபாய ஸ்வரூபம் லघுவேயாகிலும் ஃபலத்தில் குறையில்லை என்கையிலே தாத்பர்யம்.

24 சிற்றறிவினன் பக்தியோகத்துக்கு உரியன் என்ற வாத கண்டனம்

'नरस्य बुद्धिदौर्बल्यात् उपायान्तरमिष्यते'[2] என்கிற இடத்தில் दुर्बल-बुद्धिயானவனை[n] பக்தியோகத்திற்கு अधिकारि என்கிறபடியன்று. அகிஞ்சநனாயிருக்கச் செய்தே ஸ்வதந்த்ர - ப்ரபத்தியில்[o] விச்வாஸ - மாந்த்யத்தாலே[p] बालன் சந்திரனைப் பிடிக்கக் கை நீட்டுமா போலே தனக்கு எட்டாத நிலத்திலே ஏற ஆசைப் படுமவனை उपालम्भित्तபடி[q]. இங்ஙனல்லாதபோது அநேக சாஸ்த்ரங்களுக்கும் कृत्स्नவித்துக்களாய்[r] ஸ்வதந்த்ர ப்ரபத்திக்கும் உபதேஷ்டாக்களாய் பக்தியோக निष्ठராய்ப் போருகிற பரம योगिகளுடைய நிலைக்கும் विरुद्धமாம்.

24.1 ப்ரபத்தி செய்ய உரியன் யார்? - விளக்கம்

ஆகையால் மஹாவிச்வாஸமுடையனானவன் आकिञ्चन्यादि-युक्तனாய்க்[s] கொண்டு ப்ரபத்திக்கு அதிகாரி ஆகிறான்.

இவனுக்குத் திருமந்திரத்திலும் த்வயத்திலும் பிரகாசித்த உபாய - விசேஷம் இங்கே விधிக்கப்படுகிறது. இதில் 'மாம்' 'ஏகம்' 'சரணம்' 'அஹம்' 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற பதங்களிலே प्रधानமான सिद्धोपायமும்[t] प्रकाशितமாயிற்று.

25 சரம சுலோக முற்பகுதியின் பொருள் விளக்கம்

25.1 'ஸர்வ தர்மாந்' பொருள் விளக்கம்

सर्वधर्मान्-धर्मமாவது शास्त्र-सिद्धமான[u] अभिमत-साधநம்[v]. अधिकारि-विशेषத்திலே மோக்ஷத்திற்கு साधनान्तरத்தை[w] विधिக்கிற இடத்தில் त्याग விஷயமாகச் சொல்லுகிற धर्मம் கீழ்ச்சொன்ன भक्तिயோகம். அதில் सद्विद्यादि-विभागத்தாலே[x] बहुवचनம்[y]. ஸர்வ-शब्दம் அவை

---

a- எளிதில் செய்ய ஏற்றது; b - ஒரே முறை செய்ய வேண்டியது; c- விரைவில் பலன் தருவது; d- தடை வருதற்கு இடமற்றது; e - துக்கம் நீங்கியவன்; f- மோக்ஷத்துக்குத் தடைகள்; g- பக்தியையாவது ப்ரபத்தியையாவது உபாயமாகக் கூறியது ; h- பக்தியோகம் செய்பவன்; i- பக்தி யோகம் செய்ய இயலாதவன்; j- காலத் தாழ்வைப் பொறுப்பவன்; k- காலத்தாழ்வைப் பொறுக்காதவன்; l- தகுதியின் வரையறையைப் பற்றியே இரண்டினுள் ஒன்றைச் செய்தல்; m- இரண்டில் எதாவது ஒன்றைச் செய்தல்; n- புத்திக் குறைவுடையவன்; o- மோக்ஷத்துக்கு நேர்ச் சாதகமான ப்ரபத்தியில்; p - நம்பிக்கைக் குறைவு ; q- பழித்துக் கூறியபடி; r - ஸர்வஜ்ஞர்; s- கைம் முதலற்ற தன்மை முதலியவற்றுடன் கூடியவன் ; t- முன்பே உள்ள உபாயம், பகவான்; u- சாஸ்த்ரம் நிச்சயித்த; v- இஷ்டத்துக்குச் சாதகம்; w- வேறு உபாயம், பக்தி யோகம்; x- ஸத்வித்யை-தஹரவித்யை முதலிய பிரிவு; y- பன்மைச் சொல்.

1 भक्त्या परमया वाऽपि प्रपत्त्या वा महामते ।
प्राप्योऽहं नान्यथा प्राप्यो मम कैङ्कर्यलिप्सुभिः ॥

அஹிர்பு. ஸம்(?) : மோக்ஷத்தில் எனக்குச் சாச்வத கைங்கர்யம் செய்ய விரும்புமவர்கள் பக்தியோகத்தை அல்லது ப்ரபத்தியைச் செய்தால் தான் என்னை அடைய முடியும். வேறு எந்த வழியாலும் என்னிடம் மோக்ஷத்தைப் பெற முடியாது. (எம்பெருமான் வாக்கியம்).

2 उपायापायमुक्तस्य वर्तमानस्य मध्यतः।
नरस्य बुद्धिदौर्बल्यादुपायान्तरमिष्यते ॥

லக்ஷ்மீதந். (28-17): ஒரு மனிதன் தன் அதிகாரத்தை அறியாமையால் பக்தியாகிய வேறு உபாயத்தைச் செய்ய முற்படுகிறான்.

Scanned with CamScanner

எல்லாவற்றையும் என்கிறது. பரிகரங்களையும்[a] கூடக் காட்டுகிறதாகவுமாம்.

25.2 'பரித்யஜ்ய' பொருள் விளக்கம்

परित्यज्य என்கிற இது அகிஞ்சநனான[b] தன் நிலையைத் தெளிகையாலும் ஃபலத்தில் தீவ்ர-ஸங்கத்தாலும்[c] अतिशयित-शोकனான[d] இவனுடைய अधिकारம் தோன்றत्यागத்தை अनुवदिக்கிறது[e]. இங்கு 'परि' என்கிற उपसगம்[f] ஸர்வகாலத்திலும் ஸர்வ-ப்ரகாரத்திலும் योग्यதை இல்லை என்று பிறந்த नैराश्य-अतिशத்தைக்[g] காட்டுகிறது. 'त्रीन्लोकान् संपरिक्रम्य'[1], 'अनित्यमसुखं लोकमिमं प्राप्य'[2] इत्यादिகளிற்போலே परित्यज्यஎன்கிறது अङ्ग-विधियाக[h] வேண்டுவதில்லை

25.2.1 'தர்மங்களை அடியோடு கைவிடுதல்' 'ஸாத்விக த்யாகத்துடன் தர்மங்களைச் செய்தல் அங்கம்' ஆகியவற்றின் பொருத்தமின்மை

सर्व-धर्म-स्वरूप-त्याग-विधिபக்ஷம் श्रुति-स्मृति-सदाचार-विरुद्धம். उत्तर-कृत्य-पर[i] மன்றிக்கே உபாயத்தை विधिக்கிற இவ்வாக்யத்திலே धर्मங்களில் बुद्धि-विशेष-त्यागத்தை विधिக்கிறது என்னும் பக்ஷத்தில் सात्त्विक-त्याग-विशिष्டங்களான[k] ஸர்வ-धर्मங்களும் ப்ரபத்திக்கு அங்கங்கள் என்று ஃபலிக்கும்.

25.2.2 வேறு அங்கங்களை ப்ரபத்தி வேண்டாமை - விளக்கம்

ஆனபின்பு ப்ரபத்திக்கு அங்கமாக அடைத்த ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளொழிய வேறு ஒரு धर्मத்தாலும் இதற்கு அபேக்ஷை இல்லாமையிலும் ब्रह्मास्त्र-न्यायத்தாலே வேறொன்றைப் பொறாத சுணையுடைமையிலும்[l] இத்त्याग-विधिக்குத் தாத்பர்யமாகலாம். தனக்கு அடைத்த[m] धर्मங்களில் தனக்கு शक्यமானவற்றையும்[n] ப்ரபத்திக்காக அநுஷ்டிக்கையைத் தவிர்ந்து என்றாயிற்று.

ஸநத்குமார ஸம்ஹிதையில் कर्म-योगादिகளை भक्तिக்கு அபேக்ஷிதங்கள்[o] என்று சொல்லி

प्रपत्ते: क्वचिदप्येवं परापेक्षा न विद्यते ।
सा हि सर्वत्र सर्वेषां सर्वकामफलप्रदा।।
सकृदुच्चरिता येन तस्य संसारनाशनी।
राक्षसानामविस्रम्भात् आञ्जनेयस्य बन्धने।।
यथा विगळिता सद्यस्त्वमोघाऽप्यस्त्रबन्धना ।
तथा पुंसामविस्रम्भात् प्रपत्तिः प्रच्युता भवेत्।
तस्माद्विस्रम्भयुक्तानां मुक्तिं दास्यति साऽचिरात् ।।'

என்று சொல்லப்பட்டது.

---

a- அங்கங்கள் ; b- கைம்முதலற்ற; c- பெறுவதில் துடிப்பு மிகுதி; d- சோகம் மிகுத்த; e- முன் கூறியதை மறுபடி பேசுகின்றது; f- உரிச்சொல்; g- அடியோடு ஆசையற்றமை; h- ப்ரபத்திக்கு அங்கம் விதிப்பதாக; i- ப்ரபத்திக்குப் பிறகு உள்ள கடமையைச் சொல்வது; j - உபாயம் என்ற எண்ணத்தை விடுதல்; k- எம்பெருமான் தானே தனக்குச் சேஷனான அடியேனைக் கொண்டு அவனுக்குச் சேஷமான கருவிகளையும் கொண்டு தன் உகப்புக்காக இக்காரியத்தைத் தானே நடத்திக் கொள்கின்றான் என்று எண்ணுவதே ஸாத்துவிக த்யாகம். இத்துடன் கூடியவை; l- சுணை = மிடுக்கு; m - விதித்த; n - செய்ய முடிந்தவை; o- அவசியம் வேண்டியன .

1 स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः ।
त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः ।।

ராமா. (5- 38-33) : காகம் தந்தையாலும் மற்ற தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் கைவிடப்பட்டு மூன்று லோகங்களையும் சுற்றி அலைந்துவிட்டு இராமபிரானையே சரணமடைந்தது.

2 किं पुनर्ब्राह्मणा: पुण्या भक्ता राजर्षयस्तथा।
अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम् ।।

கீதை(9-33) : நிலையற்றதாய் துக்கமயமாயுள்ள இந்த உலகில் இருந்துள்ள அரசனான நீ என்னிடம் பக்திசெய்.

3 *ஸநத்குமார(?) :* பக்தியோகம் பற்பல அங்கங்களை எதிர்பார்ப்பது போல் ப்ரபத்தி (குறிப்பிட்ட ஐந்து அங்கங்களைத் தவிர) வேறொன்றையும் எதிர்பார்ப்பதில்லை. அது எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் எல்லாப் பலன்களையும் அளிக்கவல்லது. ப்ரபத்தி வாக்யத்தை ஒரு முறை உச்சரித்து ப்ரபத்தி செய்தாலும் ஸம்ஸாரத்தைப் போக்க வல்லது. அனுமான் ப்ரஹ்மாஸ்திரத்தால் கட்டுப்பட்டிருந்த போது அரக்கர்களுக்கு அதில் நம்பிக்கைக் குறைவால் (வேறு கயிற்றையும் கட்டியவுடன்) வீணாகாத அந்த ப்ரஹ்மாஸ்த்ரமம் நழுவிவிட்டதன்றோ! அவ்வாறே மனிதர்களுக்கும் ப்ரபத்தியில் நம்பிக்கை குறைந்தால் அது பயனற்றதாகி விடுகின்றது. ஆதலின் ப்ரபத்தி நம்பிக்கையுடையருக்கே விரைவில் மோக்ஷத்தைத் தரும்.

Scanned with CamScanner

25.2.3 விதித்த கடமைகளை விட முடியாமை

विशिष्ट-विधि[a] என்றவர்களுக்கும் இந் நைரபேக்ஷ்ய - विशिष्ट-विधियिலே[b] தாத்பர்யம். இப்படியானால் ஸ்வதந்த்ரஶாஸநத்தாலே[c] தத்காலத்திலும் தனக்கடைத்த நிலைகுலைய வேண்டாம். இந்த யோஜனையில்[d] 'सर्व-धर्मान्' என்கிற शब्दம் தந்தம் ஜாத்யாதிகளில் அடைப்புண்ட धर्मங்களெல்லாவற்றையும் சொல்லுகிறது. இப்படி இங்கே நைரபேக்ஷ்யம்[e] விவக்ஷிதமானால்[f] 'मा शुचः' என்கிற இதன் सामर्थ्यத்தாலே[g] अधिकारि-विशेषம் सिद्धिக்கும்.

25.2.4 சரணமடைதலையே விதிக்கும் கொள்கை-பொருத்தம்

त्याग-अनुवादபக்ஷத்தில்[h] 'एक'த்திலே நைரபேக்ஷ்யம் விவக்ஷிதமாம்.

25.2.5 மற்ற உபாயங்களின் பலனையும் அவனே தருதல் -த்ருஷ்டாந்தம்

பல ஔஷधங்களையும் விட்டு सर्व-व्याधि-शमनமான இந்த सिद्धौषधம்[i] ஒன்றையுமே ஸேவி என்னும் கட்டளையிலே யோஜனையானால் அவ்வோ फल-साधनங்களுடைய बहुत्वத்தையும்[j] அவற்றினுடைய कार्त्स्न्यத்தையும்[k] 'सर्वधर्मान्' என்கிற शब्दம் காட்டுகிறது. இப்படியானால் இங்குமொரு மோக்ஷ-साधन-விசேஷ-உபதேசத்திலே தாத்பர்யம்.

25.2.6 தர்மங்களை விடுதல் என்பதற்கு மற்றும் இரு பொருள்கள்

அशக்தனாய் शोகியாநிற்கச் செய்தே दुராசையாலே[l] துஷ்கரங்களைத்[m] துவக்கி நிற்குமவனைக் குறித்து वषवषராசையை விடாய் என்றாதல் अशक्यத்தில்[n] ப்ரவ்ருத்தியை விடாய் என்றாதல் சொல்லுகிறதாகவுமாம். லஜ்ஜாபுரஸ்ஸர-त्यागம்[o] சொன்னவர்களுக்கும் இதுவே தாத்பர்யம்.

25.3 'மாம்' - பொருள் விளக்கம்

25.3.1 ஸ்வரூபத்தை மட்டும் அநுஸந்திப்பது போதாது

இப்படி अशक्यங்களிலும் அநபேக்ஷிதங்களிலும்[p] கைவாங்கி[q] நின்றவனுக்கும் கைம்முதலாய் ஸநாதந-

धर्मமான[r] தன்னை 'மாம் ஏகம்' என்கிறான். भरस्वीकर्तावக்[s] காட்டுகிற இப் पदங்களில் धर्मि - ஸ்வரூப - மாத்ரத்தை[t] விவக்ஷிக்கை[u] உசிதமன்றாகையாலே ஸ்வரூப - நிருபக धर्मங்களோடே[v] கூட "அகலகில்லேன்"[1] इत्यादिகளிற்படியே आश्रयणीयதைக்கு[w] உறுப்பான सहधर्मचारिणी-संबन्धादि-விசேஷணங்களும் இங்கே अनुसंधेयங்கள்.

25.3.2 'மாம்', 'அஹம்' சொற்கள் காட்டும் முக்கியப் பொருள்கள்

सर्व-गुण-आश्रय- விஷயங்களான[x] 'மாம்', 'அஹம்' என்கிற पदங்களுக்கு அடைவே ஸௌலभ्यத்திலும் ஸ்வாதந்தர்யத்திலும் प्राधान्येन[y] நோக்கு. இவை ஒன்றை ஒன்று விட்டால் அநுபஜீவ்யங்களாம்[z].

25.3.3 'மாம்' சொல்லால் காட்டப்படும் அவன் குணங்கள்

இதில் 'மாம்' என்கிற पदத்தாலே விசேஷித்து ஸர்வலோக ஹிதார்த்தமாக அவதீர்ணனாய், ஸர்வஸுலभனாய், 'என்றோ நம்மை இவர்கள் அபேக்ஷிப்பது?' என்று ரக்ஷணத்தில்

---

a- மற்றொன்றுடன் சேர்ந்த ப்ரபத்தியின் விதி; b- மற்றொன்றை எதிர்பாராமையுடன் கூடிய ப்ரபத்தியை விதிப்பதில்; c- ஸ்வதந்த்ரனான எம்பெருமான் கட்டளையாலே; d- பொருள் கொள்ளும் முறை; e- வேறு ஒன்றை எதிர்பாராமை; f- கருத்தாகக் கொள்ளப்படுவது; g - பொருள் தரும் சக்தி; h- ஸகல தர்மங்களையும் விட்டு நிற்பவன் என்று பொருள் கொள்ளும் கொள்கையில்; i- ஸித்தர்களின் மருந்து; j - வெகுவாயுள்ளமை ; k- அனைத்தையும்; l- கெட்ட பேராசை; m- செய்ய முடியாதவை; n- இயலாத செயல்; o- செய்ய முடியாமையில் வெட்கத்தை முன்னிட்டு விடுதல்; p- வேண்டாதவை; q- ஓய்ந்து; r- ஸித்தோபாயம்; s- பொறுப்பை ஏற்றுக் கொள்பவன்; t- எம்பெருமானுடைய ஸ்வரூபம் ; u - கூறுவதாகக் கொள்ளல்; v- ஸ்வரூபத்தைக் காட்டுதற்கு அவசியம் வேண்டிய; w- அடியார்களால் உபாயமாக அடையப்படுகை x- எல்லாக் குணங்களுக்கும் உறைவிடமான எம்பெருமானைக் குறிக்கின்ற; y - முக்கியமாக; z- பயன்படாதன.

1 திருவாய் (6-10-10) : பெரிய பிராட்டி 'க்ஷணகாலமும் விட்டுப் பிரிய வல்லேனல்லேன்' என்று நித்யமாய் வாழுமிடமாகிய திருமார்பையுடைய திருவேங்கடத்தானே! *(பாசுரம் : 17).*

அவஸர-ப்ரதீக்ஷனாய்[a], தன் வைभவம்[b] கண்டு வெருவாத படி[c] தன்னைத் தாழவிட்டு உபாய தசையிலும் भोग्यனாம்படியான மாधुर्यத்தை[d] உடையனாய், ஆச்ரித - விச்லேஷ - அஸஹிஷ்ணு தையாலே[e] सुप्रश्लेषனாய்[f], अवधीरित-स्व-परதாரதம்யமான[g] ஆர்ஜவத்தாலே[h] "நெறி எல்லாம் எடுத்துரைத்த"[1] என்னும் படி தத்த்வ - ஹிதோपदेशங்களிலே தத்பரனாய்[i], தன்னை ஆश्रயிக்கை பரிபூர்ணனான தனக்கு ஸர்வஸ்வ-दानமாகக்[j] கொண்டு அவர்களை उदारராக்கி[k] सविभूतिकவான்[l] தன்னை வழங்க ஒருப்பட்டு நிற்கிற வள்ளல் மணிவண்ணனான தன் நிலையைக் காட்டுகிறான்.

25.3.3.1தண்டிப்பதற்கும் அருள் புரிவதற்கும் ஏற்ற அவன் குணங்கள்

शरண்யगुணங்களில் ஸர்வஸ்வாமித்வ - ஸர்வஜ்ஞத்வ - ஸர்வ சக்தித்வாதிகள் நிग्रஹ - அநுग्रஹ - ஸாधारணங்கள்[m]. காருண்யமும் तदनुबन्धिகளான[n] வாத்ஸல்யாதிகளும் அநுக்ரஹத்துக்கு ஏகாந்தங்கள்[o]. ஆகையால் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் காருண்ய - ஏகாந்திகளாய்ப்[p] போந்தார்கள்.

25.4 'ஏகம்' சொல்லுக்குப் பல பொருள்கள்

एक-शब्दம் *(i)* 'मामेकमेव शरणं'[2], 'उपायं वृणु लक्ष्मीशं तमुपेयं विचिन्तय'[3] इत्यादिகளிலும் द्वयத்திலும் சொல்லுகிறபடியே प्राप्य-प्रापकங்கள்[q] ஒன்றேயாய் நிற்கிற நிலையைக் காட்டுகிறது.

(ii) प्रपत्तव्यனோடு[r] ஒக்கக் கர்த்தாவான தனக்கும் க்ரியைக்கும் ஸந்நிधாநம்[s] உண்டாகையால் ரக்ஷணீயனான தன்னையும் தன் க்ரியையையும் ரக்ஷகனைப் போலே प्रधान ஹேதுவாக நினையாமைக்காகத் தன் பக்கலில் நிரபேக்ஷ - கர்த்ருத்வ - அभिமாநத்தையும்[t] தன் க்ரியையில் प्रधान-उपायत्व-बुद्धिயையும்[u] இங்கே கழிக்கிறது என்னவுமாம்.

25.4.1 'என்னை ஒருவனையே' சம்பந்தமாக எழும் சங்கைகளும் ஸமாதானமும்

(i) 'உன்னால் வரும் நன்மையையும் விடு' என்றவர்களுக்கும் இதுவே தாத்பர்யம். இது விடுகை தன்னிலும் ஒக்கும்.

(ii) 'एक' शब्दம் उपाय-द्वित्वத்தைக்[v] கழிக்கிறதாகையாலே ப்ரபத்திக்கு உபாயத்வம் இல்லை என்றவர்களுக்கும் இது पराधीनமுமாய்[w] पर-प्रसादन-मात्रமுமாயிருக்கும்[x].

---

a- உரிய ஸமயத்தை எதிர்பார்ப்பவன்; b-பெருமை; c- அஞ்சாதபடி; d- இனிமை; e- அடியார்களின் பிரிவைப் பொறுக்கமாட்டாமை; f- எளிதில் இறுக அணைத்துக் கொள்ள ஏற்றவன்; g- தனக்கும் பிறருக்கும் உள்ள வேற்றுமையைப் புறக்கணிக்க வல்ல; h- நேர்மை; i- ஈடு பட்டவன்; j- எல்லாச் செல்வத்தையும் அளித்தல்; k- கொடையில் சிறந்தவர்; l- லீலா விபூதி - நித்யவிபூதி இரண்டுடனும் கூடியவன்; m- தண்டிப்பதற்கும் அருள் புரிவதற்கும் பொதுவானவை; n- அதன் தொடர்புடையன; o-அதற்காகவே உள்ளன; p- கருணை ஒன்றிலேயே ஈடுபட்டவர்; q- பலனும் உபாயமும்; r- ப்ரபத்திக்கு இலக்கான பகவான்; s- நெருக்கம்; t- பகவானை எதிர்பாராது செய்யும் தன்மை இருப்பதான விபரீத எண்ணம்; u- முக்கியமான உபாயம் என்ற எண்ணம்; v- உபாயம் இரண்டு என்பது; w- எம்பெருமானால் வருவது; x- பகவானை உகப்பிக்குமளவுக்கு மட்டும்.

1 அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய,
நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி,
குறியமாணுருவாகிக் கொடுங்கோளால் நிலங்கொண்ட,
கிறியம்மான் கவராத கிளரொளியால் குறைவிலமே

திருவாய். (4-8-6) : *எம்பெருமான் தன்னைப் பற்றி அறிவதற்கு ஆசைகூட இல்லாமல் உலக விஷயங்களிலே மண்டிக்கிடக்கும் சேதநர்கள் அனைவரும் அறியும்படி மோக்ஷத்துக்கு உபாயங்கள் அனைத்தையும் அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு உபதேசிப்பவனாய்ப் பரிபூர்ண ஜ்ஞாநத்தையுடைய ஒப்பற்ற மூர்த்தியாவான்.*

2. मामेकमेव शरणमात्मानं सर्वदेहिनाम् ।
याहि सर्वात्मभावेन यास्यसि ह्यकुतोभयम् ॥

பாகவ. (11-12-15) : *எல்லா உயிர்களுக்கும் அந்தர்யாமியான என்னை ஒருவனையே எல்லாவகையாலும் சரணமாகப்பற்று. அங்ஙனம் செய்தால் எவரிடமும் பயமற்ற இருப்பைத் தரும் மோக்ஷத்தை அடைவாய். (உத்தவருக்குக் கண்ணன் உபதேசம்)*

3. आत्मात्मीयं भरं सर्वं निक्षिप्य श्रीपतेः पदे।
उपायं वृणु लक्ष्मीशं तमुपायं विचिन्तय ॥

ல.ந.(57-45): *பிராட்டியையும் எம்பெருமானையுமே மோக்ஷத்துக்கு உபாயமாகக் கொள். அவர்களையே அநுபவிக்கப்படும் பயனாகவும் நினைத்துக்கொள்.*

Scanned with CamScanner

அவ்ய வஹிதமான[a] प्रधान காரணம் இவ் வ்யாஜ -உபशान्त-காலுஷ்யனான[b] ஸத்ய ஸங்கல்பன் என்கையிலே தாத்பர்யம். ஸர்வ धर्मங்களாலும் வரும் ஸர்வ பாப நிவ்ருத்தியையும் இப் ப்ரபத்தி - வசீக்ருதனான நானொருவனுமே பண்ணுவேன் என்கையிலே தாத்பர்யமாகவுமாம். இது 'यद्येन कामकामेन' (81[3]) इत्यादिகளுக்கும் பொருந்தும். 'सुदुष्करेण'[1] என்கிற श्लोகத்தை இங்கே படிப்பது.

(iii) एकशब्दம் सिद्ध-उपाय-द्वित्वத்தைக்[c] கழிக்கிறது என்ற போதும் உபயுக்த - விशेஷணங்களைக்[d] கழிக்கவொண்ணாது. இவற்றால் उपेय-द्वित्वம்[e] வாராதாப் போலே उपाय-द्वित्वமும்[f] வாராது. धर्मि - மாத்ரமே[g] உபாயம் என்றால் ஸர்வ விரோधமும் வரும். भरந்யாஸம்பண்ணின விஷயத்தில் शரண்யனுடைய நைரபேக்ஷ்யத்தை[h] ஏக-शब्दம் காட்டுகிறதாகவுமாம். அப் போதும் पूर्वकृत-भरந்யாஸத்தாலும்[i] விशेஷணங்களைக் கழிக்க வொண்ணாத प्रमाण-सिद्ध-स्वगुणादिகளாலும்[j] நைர பேக்ஷ்யம்[k] சொல்லவொண்ணாது. மற்றும் உசிதமான அர்த்தங்களைக் கண்டு கொள்வது.

25.5 'சரணம் வ்ரஜ' - பொருள் விளக்கம்

இப்படி सिद्ध உபாயமான தன்னைக் காட்டி 'शरणं व्रज' என்று தனக்கு வசீகரணமான साध्य- உபாயத்தை[l] விधிக்கிறான். गत्यर्थமான[m] 'வ்ரஜ' என்கிற धातु[n] बुद्ध्यर्थ மாய் अध्य வஸாய -मुखத் தாலே[o] ஸக்ருத்-கர்த்தவ்ய-ஸாங்க-भरந்யாஸத்தைக்[p] காட்டு கிறது. शரண शब्दத்திற்கும் க்ரியா - பदத்திற்கும்[q] விவக்ஷிதங் களை[r] द्वயத்திலே சொன்ன ப்ரகாரத்தில் இங்கும் அநுஸந் धிப்பது. அங்கு ஸ்வாநுष्ठாநம் சொல்லுகிறதாகையாலே உத்தமன்[s] ஆயிற்று. இங்கு अभिमुखனைக்[t] குறித்து விधிக்கிற தாகையாலே मध्यमனாகிறது[u]. இது விधி என்னுமிடம் ஸ்வாரஸ்யாदிகளாலும் இத்தைப் ப்ரபஞ்சிக்கிற[v] சாஸ்த்ரங் களாலும் सिद्धம்.

25.5.1 ப்ரபத்தியின் உருவத்தைப் பற்றிப் பிறர் கொள்கைகள் ஸமரஸமாக்கும் வழி

இப்படி विधेयமான[w] प्रपदनத்தைச்[x] சிலர் अधिकारि- விशेஷணம்[y] 'संबन्ध-ज्ञान-मात्रம்[z] सिद्ध-उपाय-प्रतिपत्ति-मात्रம்[A] 'அநிவாரண -मात्रம்'[B] 'अनुमति मात्रம்,[C] 'अचित्-व्यावृत्ति-मात्रம்[D] 'चैतन्य-कृत्यம்'[E] 'चित्त-समाधानம்'[F] என்றாற்போலே சொல்லுமதுவும் இவ் விधிக்கும் இத்தை விஸ்தரிக்கிற शாஸ்த்ரங்களுக்கும் இவற்றுக்குச் சேர்ந்த உபபத்திகளுக்கும்[G] भाष्य-गद्यादिகளுக்கும் நிபுண-ஸம்ப்ரதாயங்களுக்கும்[H] அநுगுணமாக வேண்டுகையாலே, 'நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்'[2] என்று

---

a - இடையீடு இல்லாத, நேரான; b- ப்ரபத்தியால் திருவுள்ளக் கலக்கம் நீங்கிய; c- செயலுக்கு அகப்படாது முன்பே உள்ள ஸித்தோபாயம் இரண்டு என்பது; d- அவசியமாய்ப் பயன்படும் விசேஷணங்கள்; e- பலன் இரண்டு என்பது; f- உபாயம் இரண்டு என்பதும்; g- அவன் ஸ்வரூபம் மட்டுமே; h- வேறொன்றை எதிர்பாராமை; i- முன்பு செய்த ப்ரபத்தி ;j- சாஸ்த்ரங்களால் ஏற்பட்டதன் குணங்கள் முதலியன; k- வேறு - ஒன்றையும் எதிர்பாராமை; l- செயலுக்கு அகப்பட்ட ப்ரபத்தி; m- அடை தல் என்ற பொருள் கொண்ட; n - வினைப்பகுதி; o- மன உறுதியைக்கூறும் வாயிலாக; p - ஒரு முறை செய்யவேண்டிய, அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தி ; q - வ்ரஜ என்னும் வினைமுற்று; r- சொல்ல வேண்டிய கருத்துக்கள்; s- தன்மை நிலை; t- எதிரில் இருப்பவன்; u- முன்னிலை; v- விரித் துரைக்கின்ற; w- செய்தேயாக வேண்டிய; x- ப்ரபத்தி; y- அதிகாரியிடம் உள்ள ஒன்று; z- பகவானோடு உள்ள ஸம்பந்தத்தை அறிதல் மட்டும் ; A- பகவான் ஸித்தோபாயம் என்ற எண்ணம் மட்டும்; B- செய்வதைத் தடுக்காமை; C- அநுமதித்தல் மட்டும்; D- அசேதனத்தினும் வேறுபட்டமை மட்டும்; E- அறிவின் செயல்; F- மனத்தின் அமைதி ; G- பொருத்தங்கள்; H- அறிவில் தேர்ந்தவர்களின்.

1 सुदुष्करेण शोचेद्यो येन येनेष्टहेतुना ।
स स तस्याहमेवेति चरमश्लोकसंग्रहः ॥

ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகை (18- 66) : எந்த எந்த உபாயம் தன்னால் செய்ய முடியாமையைக் கருதி எவன் வருந்துகின்றானோ, அவனுக்கு அந்த அந்த உபாயத்தின் ஸ்தானத்தில் நானே நின்று அவ்வுபாயத்தைத் தலைக்கட்டி வைப்பேன் என்பதுவே சரம சுலோகத்தின் சுருக்கமான கருத்து.

2 மானேய்கண்மடவார் மயக்கில்பட்டு, மாநிலத்து
நானே நானாவிதநரகம் புகும் பாவம் செய்தேன்,
தேனேய்பூம்பொழில்சூழ் திருவேங்கடமாமலை, என்
ஆனாய்! வந்தடைந்தேனடியேனை ஆட்கொண்டருளே

பெரிய திரு. *(1 - 9 - 2):* மான் போன்ற கண்களையுடைய பெண்களின் அழகில் மயங்கிப் பலவகையான நரகம் புகும் பாவங்களைச் செய்தேன்.

Scanned with CamScanner

நிற்கிற நம்மை ஈச்வரன் ரக்ஷிக்கிறவிடத்தில், 'வந்து அடைந்தேன்' (101²) என்று நாம் பண்ணுகிற அல்பமான வசீகரண-யத்நம்[a] 'அதுவுமவனதின்னருளே' (76¹) 'இசை வித்து என்னை[1]' इत्यादिகளிற்படியே அவன் தானே காட்டி ப்ரவர்த்திப்பித்ததொரு வ்யாஜ - मात्रமன்றோ[b] என்று सिद्ध-உபாய-ப்ராधாந்ய-அநுஸந்தாநத்தில்[c] அவர்களுக்குத் தாத்பர்யம்.

தன் ரக்ஷணத்திற்காகத் தான் ப்ரவர்த்திக்கும்போதும் தான் நினைத்தபடி நடத்த प्राप्ति[d] இல்லை. தானே வ்யாபரிக்கைக்குச்[e] சக்தியுமில்லை. पर-अभिमत- உபாயத்திலே[f] पर-प्रेरितனாய்க்[g] கொண்டு ப்ரவர்த்திக்கிறேன் என்று இவ்வளவே அநுஸந்धேயம்.

25.5.2 ப்ரபத்தி பற்றி மேலும் சில கொள்கைகள்-அவற்றின் கண்டநம்

ஸ்வப்ரயோஜநார்த்தமாக ஸ்வயத்நம் ஒன்றும் ஆகாதென்னில், ஸ்வவசநத்திற்கும் ஸ்வ - யத்நத்திற்கும் स्व-यत्न-निवृत्ति தனக்கும்[h] प्रपत्यादि-विधिக்கும் தனக்கு ப்ரீதி-ப்ரயோஜநமாகக் கொண்டுதான் பண்ணும் கைங்கர்யத்திற்கும் தேஹ ரக்ஷணாதி - வ்யாபாரத்திற்கும் விரோधம் வரும். ஆகையால் शक्यமாய் भரந்யாஸம் பண்ணின விஷயத்திலும் மோக்ஷ- விருத்தங்களான காம்யங்களிலும் अनापद्दशैயிலே[i] बुद्धि-பூர்வ - நிஷித்தங்களிலும்[j] वृथा-காலக்ஷேப-ஹேதுக்களிலும்[k] ஸ்வயத்நம் தவிருகையே உள்ளது.

(ii) भगவத் - ப்ரவ்ருத்தி - விரோधி - ஸ்வப்ரவ்ருத்தியை[l] விடுகையே ப்ரபத்தி என்றவர்களுக்கும் இவ்வளவே விவக்ஷிதம்[m].

25.5.3 ப்ரபத்தி பற்றி எழும் சங்கைகளுக்குப் பரிஹாரம்

(i) शक्य[n]விஷயத்திலும் भரந்யாஸம் லோகத்திலே கண்டோமாகிலும் இது 'न साध्यं साधनान्तरैः' (81³), 'अनन्यसाध्ये स्वाभीष्टे'[2] इत्यादिகளில் சொன்ன ப்ரபத்தி - சாஸ்த்ரார்த்தமன்று.

(ii) ஸர்வத்திலும் அகிஞ்சநனாய்[o] ஸர்வ भரந்யாஸம் பண்ணுகை மநஸ் ஒழிந்த ஸர்வ கரணங்களும் விधேயமல்லாத[p] காலம் பெறில்கூடும்.

(iii) விளம்பாக்ஷமனாய்[q] ப்ரபத்தி பண்ணுகிறவனும் கடுக अभिमतம்[r] பெறுகைக்குக் கைம்முதலில்லாதவனாகையாலே இங்கும் 'अनन्य-साध्ये' என்கிற अर्थம் கிடைக்கிறது.

(iv) ஸ்வதந்த்ர-ஸ்வாமி நிர்ஹேதுக -க்ருபையாலே ரக்ஷியாநிற்க, 'வ்ரஜ' என்று ஒன்றை விரிக்க வேண்டுமோ? என்னில், நிர்ஹேதுக- க்ருபை ஒரு வ்யாஜத்தை[s] முன்னிட்டே ரக்ஷிக்கும் என்னுமிடம் சாஸ்த்ர - सिद्धம்.

(v) 'गुण-संबन्धங்களே ஈச்வரன் ரக்ஷிக்கைக்குக் காரணம்' என்றவர்களுக்கு ப்ரபத்தி - ரூப - வ்யாஜம் ஸ்வரூப -

---

a- அவனை வசப்படுத்தும் முயற்சி (ப்ரபத்தி); b- சிறு செயல் மட்டும்; c- ஸித்தோபாயத்தின் முக்கியத் தன்மையை உணருவது; d- உரிமை; e- செயல் புரிவது; f- எம்பெருமான் உகக்கும் உபாயம்; g- எம்பெருமானாலே ஏவப்பட்டவன்; h- தன் முயற்சியொழிதல்; i- ஆபத்தில்லாத நிலை; j- அறிந்தே செய்யும் பாபங்கள்; k- வீண் பொழுது போக்கக் காரணமானவை; l- எம்பெருமானது முயற்சிக்குத் தடையான தன் முயற்சி; m- கருத்தாகக் கொண்டது; n - தனக்குச் செய்ய முடிந்த; o- கைம்முதலற்றவன்; p- மனிதன் மனப்படி நடக்கச் சக்தியற்ற; q- காலத் தாழ்வைப் பொறுக்காதவன்; r- விரும்பிய பலன்; s- ப்ரபத்தியாகிய சிறு செயல்.

இப்பொழுது திருவேங்கடமுடையானாகிய உன்னைச் சரணமடைந்தேன். என்னை ஆட்கொண்டருள வேண்டும். □

1 இசைவித்து என்னை உன் தாளிணைக்கீழ் இருந்தும் அம்மானே,
அசைவிலமரர் தலைவர் தலைவா! ஆதிப்பெருமூர்த்தி,
திசைவில்விசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை,
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய்! காண வாராயே.

திருவாய். (5-8-9): இவ்வாத்மா உனக்கே அடிமை என்று என்னை அங்கீகரிக்கச் செய்து உன் திருவடித் தாமரைகளை அடைவதையே எனக்கு ஸுகமாகவும் பிரிவதையே துக்கமாகவும் ஆக்கினவனே!

2 अनन्यसाध्ये स्वाभीष्टे महाविश्वासपूर्वकम् ।
तदेकोपायतायाच्ञा प्रपत्तिः शरणागतिः ॥

பரதமுனி : தனக்கு வேண்டிய பலன் வேறொருவனாலே முடித்துக் கொடுக்க முடியாத போது மஹா விச்வாஸத்தை முன்னிட்டுக் கொண்டு ஸமர்த்தனான ஒருவனை நீயே உபாயமாக இருக்க வேண்டுமென்று வேண்டுவதே சரணாகதி.

Scanned with CamScanner

உத்பத்தியிலும் फल-उत्पत्तियिलும் பர-ஸாபேக்ஷமாய் गुण-வபுவாய் अप्रधानமாய் நிற்கிற நிலையிலும் संबन्धங்களினுடைய प्राधान्यத்திலும் தாத்பர்யம். இங்ஙனல்லாதபோது यदृच्छा- सुकृतादिகளும்[a] முமுக்ஷுக்ஷய-श्रवण-ஸ்வரூப -शिक्षादिகளும் முமுக்ஷுக்களுக்கு[b] அபேக்ஷிதங்கள் என்று நடத்துகிற उपदेशादिகளுக்கும் विरुद्धமாம்.

(vi) ஆகையால் இப் பரம்பரை எல்லாவற்றுக்கும் ஸ்வதந்த்ர -शेஷியினுடைய ஸஹஜ-காருண்யமே[c] ஸாधारणமான[d] प्रधान-காரணம் என்று இவ்வளவே அநுஸந்धேயம். அல்லாதபோது अतिप्रसङ्गம்[e] வரும். ஸ்வாதந்த்ர்யமே நியாமகமென்னில்[f] வைஷம்யாதி-दोஷங்களும்[g] ஸர்வ-சாஸ்த்ர-व्याकुलதையும்[h] வந்து அद्वेஷ்ட -ईश्वरादिகளும் அழியும்படியாம்.

(vii) ஓர் எண்தானுமின்றியே வந்தியலுமாறு'[1] என்றதுவும் 'அப்போது ஒரு நினைவன்றிக்கே இருக்க வந்து' என்கிற தாமத்தனை. 'முன்பு இதற்கு ஒரு விசேஷ காரணம் இல்லை' என்றபடியன்று.

(viii) 'வெறிதே அருள் செய்வர்'[2] என்றதுவும் 'செய்வார் கட்கு' என்று விசேஷிக்கையாலே ரக்ஷணீயன் பக்கலிலே சாஸ்த்ர - वेद्यமாய்[i] இருப்பதொரு வ்யாஜம்[j] உண்டு என்று தோற்றி யிருக்கிறது. அஜ்ஞாதஸுக்ருதாதி- மாத்ரமே[k] வ்யாஜம் என்றால் இதுவும் शास्त्रம் கொண்டு அறியவேண்டுகை யால் இப்படி மற்றும் शास्त्रம் சொன்ன வ்யாஜ பரம்பரையை இசைய வேண்டும். அஜ்ஞாத ஸுக்ருதம் தானும் ஒருவனுக்கு ஒருகால் கர்ம விசேஷத்தாலே வருகை யாலே வைஷம்ய–नैर्घृण्य- பரிஹாரம்[l] சொல்லுகிற ஸூத்ராதிகளின் படியே அநாதி - கர்ம -ப்ரவாஹ- வைஷம்யத்தாலே நியதமாகவேண்டும்[m].

(ix) 'स्वतन्त्रः कर्ता'[3] என்று சொல்லாநிற்க, अत्यन्त- பர தந்த்ரனாக[n] शोधितனானவனைப்[o] பற்ற ஒன்றை விधिக்கும்படி என்னென்னில், இவ்வளவு

ஸ்வாதந் தர்யம் எடுத்துச் சுமக்கை பாரதந்தர்ய காஷ்டை[p], 'कर्ता शास्त्रार्थवत्त्वात्'[4] 'परात् तु तत् श्रुतेः'[5] என்று

---

a - தற்செயலாய் நேர்ந்த புண்ணியம் ; b- மோக்ஷத்தை விரும்புமவர்; c- இயற்கைக் கருணை; d - பொதுவான; e-வரையறை குலைதல்; f- வரை யறுத்துத் தருவது; g- பக்ஷபாதம் முதலிய தோஷங்களும்; h- வ்யாகுலம் = முறை கலங்குதல்; i - சாஸ்த்ரத்தைக் கொண்டு அறியவேண்டிய ; j - சிறு செயல் ; k- அறியாமல் நேர்ந்த புண்ணியம் முதலியன ; l- பக்ஷபாதம் - கருணையின்மை இக்குற்றங்கள் இல்லை யென்னுதல்; m- குறிப்பிட்ட காலத்திலேயே வருவது; n- பகவானுக்கு மிகவும் வசப்பட்ட; o- தெளிவாக்கப் பெற்றவன், p - பரதந்த்ரனாயிருப்பதன் உச்சநிலை.

1 கண்டாயேநெஞ்சே! கருமங்கள்வாய்க்கின்று, ஓர்
எண்டானும் இன்றியே வந்தியலுமாறு,
உண்டானை உலகேழும் ஓர்மூவடி
கொண்டானை, கண்டுகொண்டனை நீயுமே

திருவாய். (1-10-5): *என் நெஞ்சமே : நீயும் நானும் பிரளயத்தில் உலகை வயிற்றில் வைத்துக் காத்தவனும் திரிவிக்கரமனாய் உலகமளந்தவனு மான எம்பெருமானை இப்பொழுது காணப்பெற்றோமே! சிறந்த நலங்கள் நாம் சிந்திக்காமலேயிருக்க, தாமாகவே வந்து குவிவதைப் பார்த்தாயா!*

2 அறியேன் மற்றருள் என்னையாளும் பிரானார்,
வெறிதே அருள் செய்வர் செய்வார்கட்கு உகந்து,
சிறியேனுடைச்சிந்தையுள் மூவுலகும், தன்
நெறியாவயிற்றில் கொண்டு நின்றொழிந்தாரே.

திருவாய். (8-7-8): *எம்பெருமான் தன் செல்வங்களுடன் அற்பனான என் உள்ளத்துள் வேறு ஒரு காரணமுமின்றியே வந்து புகுந்து நிலையாய் நின்றான். தன்னை அண்டியவர்கள் பால் திருவுள்ளம் உகந்து வேறு காரணம் இன்றியே அருள் செய்வது அவனது இயற்கை : மற்றவர்களின் அருளை அருளாகவே மதிக்கமாட்டேன்.*

3 ***அஷ்டாத் 1-4- 54 :*** *ஒரு செயலைச் சுதந்திரமாகச் செய்பவன் கர்த்தா எனப்படுகிறான்.*

4 ***ப்ரஹ்மஸூ(2-3-33) :*** *செயல் புரியும் தன்மை (கர்த்ருத்வம்) ஜீவ னுக்குத் தான் உண்டு. ஏன்? சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட செயல்களைச் செய்து அவற்றால் வரும் பயனைப் பெறுமவன் அவன்தானே! மேலும் அவன் கர்த்தாவாக இருந்தால் தான் அவனைக் குறித்துச் சாஸ்த்ரங்கள். கர்மங்களைச் செய்யுமாறு விதிப்பது பொருத்தமுடையதாகும்.* P-98

5 ப்ரஹ்மஸூ (2-3-40) : *கீழே சொன்ன செயலாற்றும் தன்மை (கர்த்ருத்வம்) பரமாத்மாவால் வருவது. ஏன்? சுருதிகளெல்லாம் ஒரு முகமாய் ஜீவனது கர்த்ருத்வம் பரமாத்மாவால் அளிக்கப்பெற்றது என்று ஓதுகின்றனவே!*

Scanned with CamScanner

வேதாந்தத்தில் நிர்ணீதமான[a] இது முக்த-த சையிலும் துல்யம். ஜீவனுக்குகர்த்த்வம்[b] இல்லை என்னில், सांख्यादि-மதமாம். இது स्वाधीन மென்னில் நிரீச்வர-वादமாம். ईश्वर-अधीनமான ज्ञातृत्व-मात्रமே உள்ளதென்னில், புருஷார்த்த -ருசி தவிரும்[c]. ज्ञान-इच्छैகளையே கொள்ளில் ஸர்வ- உபாய - ப்ரவ்ருத்திகளும் இல்லையாம். ஆகையால் ஜ்ஞாநமும் இதன் अवस्था-விசேஷங்களான[d] சிகீர்ஷா-ப்ரயத்நாதிகளும்[e] ஜீவனுக்கும் உண்டு.

(x) 'இவனுடைய கர்த்த்வம் கைங்கர்யமாத்ரத்திலே, உபாயத்தில் இல்லை' என்னவொண்ணாது. கைங்கர்யம் தானும் पर-प्रीति என்று ஒரு ப்ரயோஜநத்திற்கு உபாயமாயிறே இருப்பது. ஆனபின்பு கர்த்த்வத்தில் बन्धु-ஹேதுவான[f] आकारமே[g] த்யாஜ்யம்[h] அதாவது - 'अधिष्ठानं तथा कर्ता'[1] इत्यादिகளுக்கு விபரீதமாக अनुसंधिக்கையும் ப்ரயோஜநாந்தரத்தை இடுக்குகையும். ப்ரயோஜநாந்தர-பரனுக்கு भक्त्यादिகளும் बन्धकங்களிறே[i].

गुण-त्रयத்தோடு[j] துவக்கற்றுக் கேவல - பகவத்- இச்சையாலே[k] வருகையன்றிக்கே ஸம்ஸார -दशैயிலுள்ள कृर्तृत्वம் பூர்வ கர்ம-அநுரூபமானईश्वर-इच्छा-விசேஷத்தாலே ஸத்த்வ - ரஜஸ்தமஸ்ஸுக்களை उपाधियाகக்[l] கொண்டு வரும். இதில் ரஜஸ்தமஸ்ஸுக்களாலும் क्षुद्र-सुख-सङ्ग-हेतुவான[m] ஸத்த்வத்தாலும் வரும் कर्तृत्वம் बन्धकம்[n] भगवत्-प्राप्ति- ஸங்க ஹேதுவான ஸத்த்வமடியாக வரும் कर्तृत्व மோக்ஷ காரணம்.

कर्तृत्वம் पर-अधीनமேயாகிலும் க்ஷேத்ரஜ்ஞனுக்குக்[o] कर्म-फल-लेपம்[p] உண்டு என்னுமிடம் ஸர்வ ஸித்தாந்திகளுக்கும் இசைய வேண்டும். இவன் कर्ताவாம் போது கரணகளேबर - தேச - கால - கர்மாதிகள்[q] காரணம் என்று ஸர்வருக்கும் अभिमतமிறே[r]. இப்படியால் सपरिकर[s]-பரந்யாஸத்திலும் पर-अधीन-कर्तृत्वादिகளை अनुसंधिப்பது.

துய்ய மனத்தர் துறையணுகாத துணையிலியேன்
ஐயமறுத்துனது ஆணை கடத்தல் அகற்றினை நீ
கையமர் சக்கரக் காவல் காக்கும் திருவருளால்
வையமளந்த வடிக்கீழ் அடைக்கலம் வைத்தருளே (11)

26 சரம சுலோக பிற்பகுதியின் பொருள் விளக்கம்

26.1 கடமையில் தவறாத கண்ணன்-அதற்குச் சரிதைச் சான்று

இப்படி ஓர் அதிகாரி விசேஷத்திற்குக் कृत्यமாகத்[t] தன் பரம க்ருபையாலே நியமித்துவைத்த உபாய விசேஷத்தை உபதேசித்து, 'अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि'[2] என்கிற வாக்யத்தாலே

---

a - நிச்சயிக்கப்பட்ட ; b- செயல் புரியும் தன்மை ; c- பலனில் ஆசை; d- விசேஷ மாறுபாடுகள்; e- செய்வதில் ஆசை முயற்சி முதலியன; f - ஸம் ஸார பந்தத்தைத் தரவல்ல; g- அம்சமே; h- விடுவதற்கு உரியது; i- ஸம் ஸார பந்தத்தைத் தருவன ; j - ஸத்துவம் - ரஜஸ் - தமஸ் என்ற மூன்று குணங்கள் ; k- எம்பெருமான் ஸங்கல்பத்தால் மட்டும் வருகை; l- காரணம் ; m- அற்ப சுகங்களில் பற்றைத் தரவல்ல; n - ஸம்ஸார பந்தத்தைத் தருவது; o - ஜீவன்; p- கர்மத்தின் பலன் ஒட்டுதல் ; q- கரணம் - இந்திரியம், களேபரம் = சரீரம்; r- இஷ்டமானது ; s- அங்கங்களுடன் கூடிய; t- கடமை

1 अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम् ।
विविधा च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम् ।।

கீதை (18-14): *ஸகல கர்மங்களிலும் பின்வரும் ஐந்தும் காரணங்களாகும். அவையாவன - பூதங்களின் சேர்க்கையாகிய சரீரம், ஜீவாத்மா, மனமும், வெவ்வேறு செயலைச் செய்யவல்லவாக்கு - கை முதலிய ஐந்து கர்மேந்த்ரியங்களும், சரீரத்தையும் இந்திரியங்களையும் தரிப்பதாய் ப்ராணன் அபாநன் முதலிய ஐவகைப் பிரிவு பெற்றதான வாயுவின் வெவ்வேறு செயல்கள், இவற்றுள் முக்கிய காரணமாய் ஸர்வாந்தர்யாமியாய் ஐந்தாமவனான பரமாத்மா.*

(11) : கை அமர் சக்கரக் காவல்! *- திருக்கையில் அமர்ந்துள்ள சக்கரத்தால் (அடியார்களைக் காத்தலில் வல்லவனே ;* ***துய்ய மனத்தர் துறை அணுகாத*** *மாத பரிசுத்தமான மனத்தையுடைய உயர்ந்த அதிகாரிகளால் அநுஷ்டிக்கப்படுகிற (பக்தி யோகம் முதலிய) உபாயத்தில் நெருங்குவதற்குக்கூட முடியாதவனும்;* ***துணையிலியேன்*** *- வேறு கதியற்றவனுமான எனக்கு;* ***ஐயம் அறுத்து*** *- (பலன் பெறுவதில் உள்ள) ஸந்தேஹங்களைப்போக்கி;* ***உனது ஆணை கடத்தல்*** *- உன்னுடைய கட்டளையை மீறி நடப்பதாகிய அபராதத்தை ;* ***நீ அகற்றினை*** *- நீ போக்கிவிட்டாய். (இனி நீ செய்ய வேண்டியது யாதெனில்) காக்கும் திரு அருளால் - (உலகமுழுதும்) காக்கவல்ல உன் சிறந்த கிருபையால்,* ***வையம் அளந்த அடிக் கீழ்*** *- (முன் த்ரிவிக்ரமனாகி) உலகத்தை அளந்த திருவடிகளின் கீழே ;* ***அடைக்கலம் வைத்தருள்*** *- (என்னைக் காக்க வேண்டிய பொருளாக அருள வேண்டும்.*

2 सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।।

கீதை (18-66): *உனக்கு எதிரியாயுள்ள ஸகல பாபங்களினின்றும் உன்னை விடுவித்து மோக்ஷத்தை தருவேன்.*

Scanned with CamScanner

भर-स्वीकर्ता வானவன்[a] தன் कृत्यத்தை அருளிச்செய்கிறான். திருநாராயணாஸ்த்ர-வ்ருத்தாந்தத்தை (A-17) இங்கே अनुसंधिப்பது.

26.2 'அஹம்' சப்தத்தின் பொருள் விளக்கம்

இதில் அஹம் என்கிற பதத்தாலே 'எருத்துக் கொடியுடையானும்'[1], 'களைவாய் துன்பம்'[2], 'என்னான் செய்கேன்'[3] इत्यादिகளிற்படியே தாங்களே ஹித-அஹிதங்களை[b] அறிகைக்கு க்ஷமரன்றிக்கே[c] पराधीनராய் स्वरक्षणேऽपि அசக்தரான மற்றுமுள்ள रक्षक-आभासர்களிற்காட்டில்[e] व्यावृत्तனாய்[f] आश्रितருடைய[g] ஹித - அஹிதங்களைத் தானே காண்கைக்கு ஈடான सर्वज्ञत्वத்தையும் தான் भर-स्वीकारம் பண்ணினவர்களை நினைத்த போதே நித்யஸூரி பரிஷத்திலே வைக்கவல்ல स्वातन्त्र्यத்தையும் உடையவனாய் ஸர்வ-ஸ்வாமியாய் 'என்று நாம் இவர்களை அழுக்குக் கழற்றின ஆभரணத்தைப் போலே அங்கீகரிப்பது' என்ற அபிப்ராயத்தை உடையவனான தன்னைக் காட்டுகிறான்.

26.2.1 நேராக மோக்ஷம் தரவல்லவன் எம்பெருமான் ஒருவனே

வேறு யாரேனும் ஒருவனை मुक्तனாக்க நினைத்தாலும் தாங்கள் ஆசார்ய-स्थाநத்திலே நின்று ஸ்ரீய:பதியை முன்னிட்டன்றி மோக்ஷம் கொடுக்கமாட்டார்கள்.

26.2.2 அவன் ஸங்கல்பத்தால் வரும் செயலை யாரும் தடை செய்ய முடியாது

'ततो ह्यस्य बन्ध-विपर्ययौ'[4] என்று விலங்கிட்டு வைத்த ஸர்வशक्तியானவன் ஒருத்தனுக்கு ஒரு வ்யாஜத்தாலே விண்ணுலகம் தர விரைந்தால் ஸம்ஸார -न्यूनता-भीतரான[h] ஸர்வ தேவதைகளும் கூடினாலும் விலக்க மாட்டார்கள். இப்படி அநிஷ்ட நிவர்த்தநாதிகளுக்கு[i] வேண்டும் अतिशयित-आकारமெல்லாம் இங்கே அநுஸந்धेயம் என்று தோற்றுகைக்காக 'மோக்ஷயிஷ்யாமி' என்று உத்தமன் உண்டாயிருக்க மிகுதியான 'அஹம்' शப்தம் கிடக்கிறது.

---

a - பொறுப்பை ஏற்றுக் கொண்டவன்; b - நன்மை தீமைகள்; c - சக்தியுடையவர்; d - தன்னைக் காத்துக் கொள்ளக் கூட; e - போலியாய்க் காப்பவர் போலத் தோற்றுபவர்; f - மிக வேறுபட்டவன்; g - அண்டியவர்கள்; h - ஸம்ஸார லோகத்துக்குக் குறைவு வருவதில் அஞ்சியவர்கள்; i - கர்மங்களைப் போக்குதல்; j - விசேஷ அம்சங்கள் ; k - தன்மை வினைமுற்று.

1 எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனும், மற்றும்
ஒருத்தருமிப்பிறவி யென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை,
மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா மறுபிறவிதவிரத் திருத்தி,
உன் கோயில் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய்

பெரியாழ்வார் திரு (5-3-6) : சிவன் - பிரமன் - இந்திரன் மற்ற தேவதைகள் ஆகிய இவர்களில் எவரும் இந்த ஸம்ஸாரமென்னும் நோயைத் தீர்க்கும் மருந்தை அறிந்தவரல்லர். அந்த நோய்க்கு வைத்தியனாய் நிற்கும் எம்பெருமானே! எனக்கு மறுபிறவி வாராதபடி என் ஸம்ஸார நோயைத் தீர்த்து அடியேனைத் திருத்தி உன் கோயில் வாசலிலேயே வாழும்படி செய்தருள வேண்டும்.

2 களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்,
வளைவாய்நேமிப்படையாய்! குடந்தைக்கிடந்த மாமாயா!,
தளராவுடலம் எனதாவி சரிந்து போம் போது
இளையாது உனதாள் ஒருங்கப்பிடித்துப் போத இசை நீயே.

திருவாய். (5-8-8) : ஆராவமுதனே! என் துன்பங்களைப் போக்குவாயோ? போக்காமல்தான் இருப்பாயோ! உன் திருவுள்ளப்படி செய். எனக்கு வேறு கதி இல்லை . ஆனால் என் சரீரம் தளர்ந்து என் உயிருக்கே ஆபத்து வருவதற்கு முன்பே உன் திருவடிகளையே பிடித்துக்கொண்டு போகும்படி நீ திருவுள்ளம் கொள்ளவேண்டும்.

3 **திருவாய். (5-8-3) :** ஆராவமுதனே! நான் எந்த உபாயத்தைச் செய்யப்போகிறேன்? உன்னையன்றி எனக்கு வேறு யார் ரக்ஷகர்? இப்படி வேறு கதியற்ற என்னிடம் என்ன செயலை எதிர்பார்க்கின்றாய்? என் சரணாகதியாலே உகந்த உன் கிருபையாலே உன் திருவடிகளைப் பெறுவேனேயன்றி வேறொர் உபாயத்தால் பெறுவதாயின் அதனையும் விரும்பமாட்டேன். ஆதலால் என் ஆத்மா உள்ளவரை உன் திருவடிகளைப் பிரியாது அநுபவித்துக் கொண்டே இருக்கும்படி அருள்புரிய வேண்டும். (பாசுரம் :25[k])

4 पराभिध्यानात् तु तिरोहितं ततो ह्यस्य बन्ध-विपर्ययौ।

ப்ரஹ்மஸூ (3-2-4) : ஸம்ஸார லோகத்தில் ஜீவனுக்கு இயற்கையில் உள்ள ஸ்வரூபம் பரம புருஷனுடைய ஸங்கல்பத்தால் மறைந்துள்ளது. அவன் ஸங்கல்பத்தாலேயன்றோ ஜீவனுக்கு ஸம்ஸார பந்தமும் மோக்ஷமும் வருகின்றது!

Scanned with CamScanner

26.3 'த்வா' சப்தத்தின் பொருள் விளக்கம்

'त्वा' என்கிறது उपायान्तरங்களினுடைய[a] दुष्करत्वादिகளைக்[b] கண்டு அவற்றில் துவக்கற்று निरतिशय-शोक-आविष्टனாகையாலே[c] निरुपाधिक-சேஷியாய்[d] நிரபேக்ஷ - ஸ்வதந்த்ரனாய்[e] ஸர்வ - ரக்ஷண -दीक्षितனான[f] என் பக்கல் न्यस्त-भरனாய்க்[g] கோரின फलத்தைப் பற்றக் कर्तव्यान्तरத்தில்[h] प्राप्तियற்றுச்[i] चातक-वृत्तियான[j] உன்னை என்றபடி.

26.4 உபநிடதம் கூறும் பல தர்மங்களிலும் ப்ரபத்தியே சிறந்தது

'ஸத்யம்' என்றும் 'தபஸ்' என்றும் 'दமம்' என்றும் 'शமம்' என்றும் 'दாநம்' என்றும் 'தர்மம்' என்றும் 'ப்ரஜநநம்' என்றும், 'அக்னிகள்' என்றும் 'அக்நிஹோத்ரம்' என்றும் 'யஜ்ஞம்' என்றும் மாநஸம் என்றும் சில தர்மங்களை உदாஹரித்து, இத் தபஸ்ஸுக்களெல்லாம் அவரங்கள்[k]. ந்யாஸ -शப்தத்தாலே சொல்லப்பட்ட ஆத்ம - நிக்ஷேபமே[l] இவை எல்லாவற்றிலும் அதிகம்' என்று பூர்வ - அநுவாகம்[m] சொல்லுகையாலும், இந்த யாகத்தினுடைய[n] நைரபேக்ஷ்யத்தை[o] உத்தர - அநுவாகம்[p] प्रपञ्चिக்கையாலும்[q] மற்றுள்ள अधिकारिகளெல்லாம் இவ் अधिकारिயினுடைய कोटितமையான[r] கலைக்கும் பற்றார்கள்' என்றும் இவன் स्वध्वरன்[s] अनुष्ठित-क्रतु-शतன்[t] कृतकृत्यன்[u] என்றும் भगवत्-சாஸ்த்ரம்[v] उपबृंஹித்தது[w].

26.5 'ஸர்வபாபேப்ய:' பொருள் விளக்கம்

மேல் இவனுக்குக் கழிக்கவேண்டும் अनन्त-विरोधि-वर्गத்தைக்[x] காட்டுகிறது सर्वपापेभ्यः என்கிற சப்தம். பாபமாவது - சாஸ்த்ர -वेद्यமான[y] அநிஷ்ட-ஸாधநம்[z]. बहुवचनத்தாலே[A] பாபம் अनादि-काल-संचितமாய்[B] बहुப்ரகார-ப்ரவாஹமாய்[C] நிற்கிற நிலை தோற்றுகிறது. இங்கு ஸர்வ -शப்தம் பாபங்களுக்கு காரணமுமாய் கார்யமுமாய்ப் போருகிற अविद्यै யையும்[D] விபரீத-வாஸநா - ருசிகளையும்[E] ஸ்த்தூல - ஸூக்ஷ்ம ப்ரக்ருதி - ஸம்பந்தத்தையும்[F] பாபராசியிலே சேர்க்கிறது. नरकादि-

ஹேதுக்கள் போலே 'एते वै निरयास्तात'[1] என்னும்படி நிற்கிற स्वर्गादिகளுக்கு साधनமானவையும் बन्धकங்களாகையாலே[G] முமுக்ஷுவுக்குப்[H] பாபங்கள்.

26.5.1 மூவகை ஸுகம் - அவற்றின் ஸாதநம்

அசேதந-மாத்ர-அநுभவம்[I], ஆத்ம-மாத்ர-அநுभவம்[J], ஈச்வர - அநுभவம்[K] என்று सुखம் மூன்றுபடியாய் இருக்கும். இவை 'அநுகூலம்' 'அநுகூலதரம்' 'அநுகூலதமம்' என்று சொல்லப்படும். இவற்றின் साधनகளும் 'ஹிதம்'[L] 'ஹிததரம்'[M] 'ஹிததமம்'[N]

---

a - மற்ற உபாயங்கள்; b - செய்ய முடியாமை; c- எல்லையற்ற சோகம் சூழ்ந்தவன்; d- இயற்கையான சேஷி; e- வேறொருவரை எதிர்பாராத சுதந்திரன்; f - எல்லோரையும் காக்க விரதங்கொண்டவன்; g- பொறுப்பை ஸமர்ப்பித்தவன்; h- பின்னும் செய்ய வேண்டிய வேறொன்று; i- தொடர் பற்று; j-மழையையே எதிர்நோக்கும் சாதகப் பறவை போல் மோக்ஷத்தை எதிர்பார்ப்பவனான; k- தாழ்ந்தவை ; l- ஆத்மாவை ஸமர்ப்பித்தலே; m- உபநிஷத்தில் முந்திய பகுதி ; n- ஆத்மாவை ஸமர்ப்பித்தல் என்னும் வேள்வி ; o - வேறொன்றை எதிர்பாராத தன்மை ; p-உபநிஷத்தின் பிந்திய பகுதி ; q - விரிவாய் விளக்குதல் ; r- கோடியில் ஒரு பாகம் ; s- சிறந்த வேள்வியுடையவன்; t- நூறு வேள்வி செய்தவன். u-கடமையைச் செய்தவன்; v- ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்ரம்; w- வேதத்தின் கருத்தை விளக்கியது; x- அளவற்ற தடைகளின் வகுப்பு ; y- சாஸ்திரத்தால் அறிய வேண்டிய; z- கேடு விளைவிப்பது; A- பன்மை ; B- வெகு காலமாகச் சேர்க்கப்பட்ட; C- பல்வகை வெள்ளம் ; D- அஜ்ஞாநம் ; E- கெட்ட பழக்கம், கெட்ட ஆசை; F- ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூலமான சரீரத்தின் தொடர்பு, ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்மமான அசேதத்தின் தொடர்பு ; G- ஸம்ஸார பந்தத்தைத் தருவன ; H- மோக்ஷத்தை விரும்புமவன்; I- அசேதத்தை மட்டும் அநுபவித்தல்; J- ஆத்மாவை மட்டும் அநுபவித்தல், கைவல்யம் ; K- பரமபதத்தில் பகவதநுபவம் ; L- நன்மை யானது; M- மிகவும் நன்மையானது ; N- மிக மிக நன்மையானது.

1 रुद्रादित्यवसूनां च तथाऽन्येषां दिवौकसाम्।
एते वै निरयास्तात स्थानस्य परमात्मनः ॥

பார (சாந்தி 196-6): *அப்பனே! பரமாத்மாவின் இடமான பரமபதத்தைப் பார்க்கும்போது தேவர்கள் வாழும் ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள் நரகமே என்று சொல்லலாம் படியுள்ளன.*

Scanned with CamScanner

என்று நிற்கும். இப்படி நின்றால் 'तवामृतस्यन्दिनि'[1] என்கிற படியே உத்தம புருஷார்த்தத்தை[a] அபேக்ஷிக்குமவனுக்கு मध्यम–अधम–पुरुषार्थ–साधनங்கள்[b] 'स एवं धर्म; सोऽधर्मस्तं तं प्रति नरं भवेत्'[2] என்கிற ந்யாயத்தாலே பாபங்களாகக் குறையில்லை.

26.5.2 கைவல்யமே மோக்ஷம் என்ற வாத கண்ட நம்

பரிபூர்ண-भगवத்-அநுபவத்தை இழக்கும்படி பண்ணும் கர்ம விசேஷத்தோடே கூட நிற்கிற ஆத்ம-மாத்ர-அநுभவ ரஸத்தை மோக்ஷம் என்றதுவும் அண்மையாலே[c] யாமத்தனை.

26.5.3 பின்னும் சில பாபங்களும் விடுவிப்பனவற்றில் அடங்குதல்

गत्यन्तर–अभावத்தாலேயாதல்[d] अनधिकारियாய்[e] வைத்து अधिकारि-भ्रान्तिயாலேயாதல்[f] அநுஷ்ட்டிக்குமவையும் ஸர்வசப்தத்தாலே संगृहीतங்கள்[g].

26.5.4 ப்ரபந்நனிடம் பாபங்கள் ஒட்டுவதில்லை-உண்மைக் கருத்து

ப்ரபந்நனுக்கும் उत्तर–अघ–अश्लेषம்[h] प्रामादिक– விஷயமல்லாத போது[i] உபாஸகனுக்கு[j] श्रुति–विरोधம்[3] வந்தாற்போலே ப்ரபந்நனுக்கும் 'मनीषी वैदिकाचारं मनसाऽपि न लङ्घयेत्'[4] 'अपायसंप्लवे सद्यः प्रायश्चितं समाचरेत्।[5]' इत्यादि–वचन–विरोध ம் வரும்.

26.5.5 ப்ரபத்திக்குப் பின் சீர்குலைந்தவனது கதி

अप्राप्त–विषय–राग–द्वेष[k]– निषिद्ध–प्रावण्यादिகளாலே[l] दूषितனாமாகில்[m] அநந்யனேயாகிலும்[n] अशुद्धेயான[o] பதிவ்ரதையைப் போலே பதிஸேவைக்கும்[p] गुरु–परिचर्यादिகளுக்கும்[q] அநர்ஹனாம்[r].

26.5.6 ப்ரபந்தனுக்கு நேரும் பாபம்-அதன் பரிஹாரம்

ஈச்வரன் सम–अधिक–दरिद्रனானாற்[s] போலவும் गुरु–भक्ति இல்லாதவன் ज्ञान–दरिद्रனானாற் போலவும் दोष–दरिद्रனான[t] நிபுண[u] - ப்ரபந்நனுக்கு बुद्धि–पूर्व–अपराधம்[v] வாராது. மற்றுள்ளார்க்கு[w] வந்தால் अधिकार– அநுரூபமாகப்[x] पुनः प्रपदनம் प्रायश्चित्तமாம். இது தப்பினபோது ஹிதைஷியான[y] ஈச்வரன் சிக்ஷைகளாலே பூரிக்கும்[z].

a- சிறந்த பெரும்பயனை; b- நடுத்தரமும் தாழ்வுமான பயனைத் தருமவை; c- நெருங்கியுள்ளமை; d- வேறு கதியில்லாமை; e- தகுதியற்றவன்; f- தகுதியுள்ளவனென்ற தவறான எண்ணம்; g - சேர்த்துக் கொள்ளப்பட்டன; h - ப்ரபத்திக்குப் பின் செய்த பாபங்கள் ஒட்டாமை; i - ப்ராமாதிக விஷயம் = அறியாமற் செய்தனவற்றைப் பற்றியது; j - பக்தி யோகம் செய்பவன்; k - தகாத விஷயங்களில் ஆசை - பகைமை; l - சாஸ்த்ரம் தடுத்தவற்றில் ஈடுபாடு; m - கெட்டுப்போனவன்; n - எம்பெருமானையன்றி வேறு தெய்வத்தை நாடாதவன்; o- ஆசாரத்தை இழந்த; p- பகவத் கைங்கர்யம்; q -ஆசார்யனுக்குப் பணிவிடை ; r - தகுதியற்றவன்; s- ஒத்தாரும் மிக்காருமற்றவன்; t- குற்றமற்ற; u- சதுரனான; v- அறிந்து செய்யும் பாபம்; w- சிற்றறிவுடைய ப்ரபந்நருக்கு; x- தகுதிக்கு ஏற்றவாறு; y- நன்மையே செய்ய விரும்புமவன்; z - ஒழுங்குபடுத்தி விடுவான்.

1 तवामृतस्यन्दिनि पादपङ्कजे निवेशितात्मा कथमन्यदिच्छति।
स्थितेऽरविन्दे मकरन्दनिर्भरे मधुव्रतो नेक्षुरकं हि वीक्षते ॥

ஸ்தோத்ர. (27) : எம்பெருமானே! மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல மிக இனிய உன் திருவடித்தாமரையில் செலுத்திய மனத்தினன் வேறொன்றை எவ்வாறு விரும்புவான்? தேன் நிறைந்த தாமரை இருக்கும் போது தேனாலேயே வாழ்க்கை நடத்தும் வண்டு நீர்முள்ளிப் பூவைக் கண்ணெடுத்தும் பாராதன்றோ!

2(?): ஒரு செயலே ஒருவனுக்குத் தர்மச் செயலாகவும் மற்றொருவனுக்கு அதர்மச் செயலாகவும் ஆவதுண்டு.

3. नाविरतो दुश्चरितात् नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥

கடோபநிஷத் (1-2-24) : பிறர் மனைவி - பிறர் பொருள் இவற்றை அபஹரிப்பவனும், காமக்குரோதங்களுடைய வேகத்தை அடக்காதவனும், பலவித செயல்களால் மனம் கலங்கி கவனமில்லாதவனும், மனதை வசப்படுத்தாதவனும் ஜ்ஞானத்தினால் (உபாஸனத்தினால்) ப்ரஹ்மத்தை அடையமாட்டான்.

4. प्रियाय मम विष्णोश्च देवदेवस्य शार्ङ्गिणः ।
मनीषी वैदिकाचारं मनसाऽपि न लङ्घयेत् ॥

லக்ஷ்மீத (17-96) : அறிவுடையவன் வேதத்தில் சொல்லப்பட்ட ஆசாரத்தை மீறுவதை மனத்தாலும் நினைக்கக்கூடாது.

5. अपायसंप्लवे सद्यः प्रायश्चितं समाचरेत् ।
प्रायश्चित्तरियं साऽत्र यत् पुनः शरणं व्रजेत् ॥

லக்ஷ்மீத (17-93) : ப்ரபத்திக்குப் பிறகு பாபம் செய்ய நேர்ந்தால் உடனே பிராயச்சித்தம் செய்ய வேண்டும். மறுபடி அதற்காக ப்ரபத்தி செய்வதுதான் பிராயச்சித்தமாகும்.

Scanned with CamScanner

26.5.7 புத்திபூர்வ பாபங்களும் தாமே கழியும் என்ற வாதம் - ஸமாதானம்

बुद्धि-पूर्व-उत्तर-अघத்தையும்[a] கூட இங்கே விவக்ஷித்தாலும் இதற்கு उचित-प्रायश्चित्तத்திலே மூட்டுகிறதும் लघु-प्रत्यवायங்களைக்[b] காட்டுகிறதும் 'மோக்ஷயிஷ்யாமி' என்று சொன்ன मोचन-प्रकारமாம்[c].

26.5.8 ப்ரபந்தன் இச்சரீர முடிவில் மோக்ஷம் பெறுதல்

अनन्त-फलத்தையும்[d] இழந்து अनन्त-दुःखத்தையும் அநுபவித்துக் கொண்டிருக்கை: दुःसहமாகையாலே[e] अतिशयितशोकனாய்[f] விளம்ப க்ஷமனன்றிக்கே[g] ப்ரபந்நனானவனுக்கு ப்ரபத்தி प्रारब्ध-கர்மத்திற்கும்[h] प्रायश्चित्तமாம். இது मा शुचः என்கிற வாக்யத்தின். सामर्थ्यத்தாலும்[i], प्रारब्धத்தையும் ஸங்க்ரஹிக்கவற்றான ஸர்வபாப-शब्द-ஸ்வாரஸ்யத்தாலும், 'साध्यभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी'[1] என்று விசேஷித்துச் சொல்லுகையாலும் सिद्धம். ஆகையால், ''சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்''[2] என்கிற படியே புனர் ஜன்மமின்றிக்கே ஒழிகிறது. 'மரணமானால்' என்கிற இடம் आर्तர்[k] दृप्तர்[l] இருவருக்கும் ஒக்கும். भोगத்தாலேயாதல் ப்ரபத்தி-வை भத்தாலேயாதல் प्रारब्ध - கர்ம - அவஸாநந்திலே[m] மோக்ஷமானமை எல்லாருக்கும் ஒக்கும்.

26.6 'மோக்ஷயிஷ்யாமி' - பொருள் விளக்கம்

இப்படி 'போய பிழையும்'[3] इत्यादिகளிற் சொன்ன விரோதிகளைக் காட்டி இவற்றைத் தான் கழிக்கும்படியை அருளிச் செய்கிறான்-

'मोक्षयिष्यामि' என்றது सापराधரை[n] ஸம்ஸரிப்பிக்கைக்குப் பண்ணிவைத்த अभिसंधिகளை[o] எல்லாம் விடக்கடவன் என்றபடி. 'एतत् व्रतं मम' (77[c]) என்று சொல்லப்பட்ட அவர்ஜநீய. ஸங்கல்பமும்[p] இங்கே விவக்ஷிதம். இப்போது உபதேச காலமாகையாலும் ஃபலம் உபாயம் அநுஷ்ட்டித்தால் வருமாகையாலும் प्रपत्ति-अनन्तर- க்ஷணம் முதலாக அதன்மேல் குறைவற உனக்கு வேண்டும் காலத்திலே உன்னை विरोधिகளினின்றும் விடுவிக்கக் கடவேன் என்றதாயிற்று.

a- ப்ரபத்திக்குப் பின் தெரிந்தே செய்ய நேரும் பாபங்கள்; b- சிறிய தண்டனைகள்; c- பாபங்களினின்று விடுவிக்கும் வகை; d- அளவற்ற பலன்; e- பொறுக்க முடியாதது; f- துக்கம் மிகுந்தவன்; g- காலத் தாழ்வைப் பொறுப்பவன்; h- பலன் தரத் தொடங்கிய; i- பொருள் தரும் சக்தி; j - சேர்த்துக் கொள்ளவல்ல; k- இப்பொழுதே மோக்ஷம் பெற விரும்புமவர்; l- சரீர முடிவில் மோக்ஷத்தை விரும்புமவர்; m- பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மங்களின் முடிவு; n குற்றம் செய்தவர்; o- ஸங்கல்பங்கள்; p- கைவிட முடியாத ஸங்கல்பமும்; q- பரபத்திக்கு அடுத்தக்ஷணம்.

1. उपायभक्ति : प्रारब्धव्यतिरिक्ताघनाशिनी ।
साध्यभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी ॥

(?) : பக்தியோகம் பயன் கொடுக்கத் தொடங்கிய (ப்ராரப்த) பாபங்களைத் தவிர மற்ற பாபங்களையே ஒழிக்கவல்லது. ப்ரபத்தியோ பலன் தரத்தொடங்கிய பாபங்களையும் போக்கவல்லது ஆதலின் பக்தியோகத்திலும் ப்ரபத்தி மிகச் சிறந்ததாகும்.

2 ***சரணமாகும் தன தாளடைந்தார்க்கெல்லாம்,***
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்,
அரணமைந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன், தனதன்பர்க்கு அன்பாகுமே.

திருவாய்.(9-10-5) : தன் திருவடிகளில் சரணாகதி செய்பவர்கள் அனைவருக்கும் எல்லா வகையிலும் ரக்ஷகனான எம்பெருமான் அவர்கள் சரீரம் கழிந்தவுடன் தன் பரமபதத்தைக் கொடுத்து அநுபவிக்கச் செய்வான். இப்படி தன்னிடம் அன்புகொண்டு அடியார்கள் விஷயத்தில் தான் அன்பு உருக்கொண்டவனாகவே உள்ளான்.

3. ***மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,***
தூய பெருநீர் யமுனைத்துறைவனை,
ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக்குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்,
தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்

திருப்பாவை(5) : நாம் எம்பெருமானிடம் பரிசுத்தராய் வந்து தூய மலர்களைச் சமர்ப்பித்து வணங்கி வாயினால் பாடி மனத்தால் சிந்தித்து இப்படி முக்கருவிகளாலும் ப்ரபத்தி செய்தால் ப்ரபத்திக்கு முன் செய்த பாபங்களும் பின் அறியாமல் செய்ய நேரும் பாபங்களும் தீயில் இட்ட பஞ்சுபோல் ஒழிந்துவிடும்.

Scanned with CamScanner

26.5.7 புத்திபூர்வ பாபங்களும் தாமே கழியும் என்ற வாதம் - ஸமாதானம்

बुद्धि-पूर्व-उत्तर-अघத்தையும்[a] கூட இங்கே விவக்ஷித்தாலும் இதற்கு उचित-प्रायश्चित्तத்திலே மூட்டுகிறதும் लघु-प्रत्यवायங்களைக்[b] காட்டுகிறதும் 'மோக்ஷயிஷ்யாமி' என்று சொன்ன मोचन-प्रकारமாம்[c].

26.5.8 ப்ரபந்தன் இச்சரீர முடிவில் மோக்ஷம் பெறுதல்

अनन्त-फलத்தையும்[d] இழந்து अनन्त-दुःखத்தையும் அநுபவித்துக் கொண்டிருக்கை: दुःसहமாகையாலே[e] अतिशयितशोकனாய்[f] விளம்ப க்ஷமனன்றிக்கே[g] ப்ரபந்நனானவனுக்கு ப்ரபத்தி प्रारब्ध-கர்மத்திற்கும்[h] प्रायश्चित्तமாம். இது मा शुचः என்கிற வாக்யத்தின். सामर्थ्यத்தாலும்[i], प्रारब्धத்தையும் ஸங்க்ரஹிக்கவற்றான[j] ஸர்வபாப-शब्द-ஸ்வாரஸ்யத்தாலும், 'साध्यभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी'[1] என்று விசேஷித்துச் சொல்லுகையாலும் सिद्धம். ஆகையால், ''சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்''[2] என்கிறபடியே புனர் ஜன்மமின்றிக்கே ஒழிகிறது. 'மரணமானால்' என்கிற இடம் आर्तர்[k] दृप्तர்[l] இருவருக்கும் ஒக்கும். भोगத்தாலேயாதல் ப்ரபத்தி-வை भத்தாலேயாதல் प्रारब्ध - கர்ம - அவஸாநந்திலே[m] மோக்ஷமானமை எல்லாருக்கும் ஒக்கும்.

26.6 'மோக்ஷயிஷ்யாமி' - பொருள் விளக்கம்

இப்படி 'போய பிழையும்'[3] इत्यादिகளிற் சொன்ன விரோதிகளைக் காட்டி இவற்றைத் தான் கழிக்கும்படியை அருளிச் செய்கிறான்-

'मोक्षयिष्यामि' என்றது सापराधரை[n] ஸம்ஸரிப்பிக்கைக்குப் பண்ணிவைத்த अभिसंधिகளை[o] எல்லாம் விடக்கடவன் என்றபடி. 'एतत् व्रतं मम' (77[?]) என்று சொல்லப்பட்ட அவர்ஜநீய. ஸங்கல்பமும்[p] இங்கே விவக்ஷிதம். இப்போது உபதேச காலமாகையாலும் ஃலம் உபாயம் அநுஷ்ட்டித்தால் வருமாகையாலும் प्रपत्ति-अनन्तर- க்ஷணம் முதலாக அதன்மேல் குறைவற உனக்கு வேண்டும் காலத்திலே உன்னை विरोधिகளினின்றும் விடுவிக்கக் கடவேன் என்றதாயிற்று.

a- ப்ரபத்திக்குப் பின் தெரிந்தே செய்ய நேரும் பாபங்கள்; b- சிறிய தண்டனைகள்; c- பாபங்களினின்று விடுவிக்கும் வகை; d- அளவற்ற பலன்; e- பொறுக்க முடியாதது; f- துக்கம் மிகுந்தவன்; g- காலத் தாழ்வைப் பொறுப்பவன்; h- பலன் தரத் தொடங்கிய; i- பொருள் தரும் சக்தி; j - சேர்த்துக் கொள்ளவல்ல; k- இப்பொழுதே மோக்ஷம் பெற விரும்புமவர்; l- சரீர முடிவில் மோக்ஷத்தை விரும்புமவர்; m- பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மங்களின் முடிவு; n- குற்றம் செய்தவர்; o- ஸங்கல்பங்கள்; p- கைவிட முடியாத ஸங்கல்பமும்; q- பரபத்திக்கு அடுத்தக்ஷணம்.

1. उपायभक्ति : प्रारब्धव्यतिरिक्ताघनाशिनी ।
साध्यभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी ॥

(?) : பக்தியோகம் பயன் கொடுக்கத் தொடங்கிய (ப்ராரப்த) பாபங்களைத் தவிர மற்ற பாபங்களையே ஒழிக்கவல்லது. ப்ரபத்தியோ பலன் தரத்தொடங்கிய பாபங்களையும் போக்கவல்லது ஆதலின் பக்தியோகத்திலும் ப்ரபத்தி மிகச் சிறந்ததாகும்.

2 சரணமாகும் தன தாளடைந்தார்க்கெல்லாம்,
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்,
அரணமைந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன், தனதன்பர்க்கு அன்பாகுமே.

திருவாய்.(9-10-5) : தன் திருவடிகளில் சரணாகதி செய்பவர்கள் அனைவருக்கும் எல்லா வகையிலும் ரக்ஷகனான எம்பெருமான் அவர்கள் சரீரம் கழிந்தவுடன் தன் பரமபதத்தைக் கொடுத்து அநுபவிக்கச் செய்வான். இப்படி தன்னிடம் அன்புகொண்டு அடியார்கள் விஷயத்தில் தான் அன்பு உருக்கொண்டவனாகவே உள்ளான்.

3. மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத்துறைவனை,
ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக்குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்,
தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்

திருப்பாவை(5) : நாம் எம்பெருமானிடம் பரிசுத்தராய் வந்து தூய மலர்களைச் சமர்ப்பித்து வணங்கி வாயினால் பாடி மனத்தால் சிந்தித்து இப்படி முக்கருவிகளாலும் ப்ரபத்தி செய்தால் ப்ரபத்திக்கு முன் செய்த பாபங்களும் பின் அறியாமல் செய்ய நேரும் பாபங்களும் தீயில் இட்ட பஞ்சுபோல் ஒழிந்துவிடும்.

Scanned with CamScanner

26.6.1 பாபங்களினின்று விடுவிக்கும் முறை

விடுவிக்கும் க்ரமம் : உபாய ஆரம்ப தசையில் பூர்வ-அघத்தில்[a] ப்ராரब्धமல்லாதவற்றையும்[b] ப்ராரब्धத்தில் இருக்க இசைந்த காலத்திற்கு மேலுள்ள அம்சத்தையும் उत्तर-அघத்திலே[C] प्रामादिक-अंशத்தையும்[d] இவனோடு துவக்கறுக்கக்கடவன் என்று ஸங்கல்பித்து बुद्धिपूर्व-उत्तर-अघத்திற்கும்[e] प्रायश्चित्तादिகளாலே செலவு செய்து अश्लेष-विनाश-விஷயங்களான[f] பாபங்களையெல்லாம் देह-वियोगகாலத்திலே[g] இவனோடு துவக்கறுத்து இவையெல்லாம் அநுகூலர் ப்ரதிகூலர் பக்கலிலே ஸங்க்ரமிக்கின்றன[h] என்னும் படியாய் அவர்களுடைய ஆநுகூல்ய-ப்ராதிகூல்யங்களுக்குப் फलமாக இவனுக்குக் கழிக்கிறதோடு துல்யமான फल-प्रदानத்திலே ஸங்கல்பத்தைப் பண்ணி उत्क्रान्ति-पाद த்திலும்[i] अर्चिरादि-पादத்திலும்[j] சொன்ன கட்டளையிலே ஸ்த்தூல-ஸூக்ஷ்ம-ப்ரக்ருதி- விश्லேஷத்தைப் பண்ணி[k] ஸர்வ -तिरोधान-நிவ்ருத்தியை[l] உண்டாக்கும்.

இப்படி प्रतिबन्धक-நிவ்ருத்தியைச்[m] சொல்லவே 'मामेवैष्यसि' (91[3])என்று கீழ்ச் சொன்ன स्वरूप-प्राप्त-अनुभवமும்[n] இங்கே फலிக்கிறது. இவ் ஈश्वர-அபிப்ராயத்தை श्लोक-द्वयத்திலும்[o] கண்டு கொள்வது. இத்தை அறிந்தவன் 'வீடு பெற்ற'[1] इत्यादिகளிற் படியே यथा-मनोरथம்[p] फल-सिद्धिயில் நிஸ்ஸம்சயனாயிருக்கும்.[q]

26.7 ''மா சுச:'' - பொருள் விளக்கம்

இப்படி ப்ரபந்நனுக்கு ஸர்வ - பாபங்களும் கழிகையாலே 'பாபத்திற்கு அஞ்சித் தபிக்க வேண்டா' என்கிற ஶ்ருதியின் படியாலும், दुष्कर-உபாயங்களில்[r] அலைய வேண்டாமையாலும், விலக்ஷண-உபாய-விशेषம் सिद्धिக்கையாலும், न्यस्त-भरனுக்கு[s] இவ்விஷயத்தில் கர்த்வ்ய - சேஷம்[t] இல்லாமையாலும், பின்பு விவேகிக்கு बुद्धि-पूर्व-अपराधம்[u] வாராமையாலும், வந்தவற்றுக்கும் उचित-प्रायश्चित्तादिக ளாலே கடுக உபசாந்தி[v] உண்டாகையாலும், உன்னை ரக்ஷியாதபோது शिष्ट-गर्हैயும்[w] அகீர்த்தியும் गुண - ஹாநியும் व्रत-भङ्गமும் எனக்கு வரும்படியாய் இருக்கையாலும், स्वीकृत-भर னான[x] நான் धनादि

ரக்ஷண - ந்யாயத்தாலே[y] स्वार्थமாக[z] ரக்ஷிக்க நிற்கையாலும் இனி உனக்கு ஹர்ஷ - ஸ்த்தாநமாயிருக்க[A] शोகிக்க ப்ராப்தி இல்லை என்கிறான்.

26.7.1 ப்ரபத்திக்கு முன்பு சோகம், பின்பு சோகியாமை அவசியம்

मा शुचः-भरन्यासபண்ணினானாக நினைத்த விஷயத்தில் சோகிக்கை अनादिகாலம் சோகியாதிருந்தோடு ஒக்கும். முன்பு சோகித்தா யில்லையாகில் अधिकारியாகாய். மேல் சோகித்தாயாகில் இவ்வுபாயத்தின் ப்ரभाவத்தையும் உன்னுடைய विश्वासादिகளையும் என்னுடைய குணாதிகளையும் அழித்தாயாமத்தனை. 'मा शुचः' என்கிற வாக்யத்தின் கருத்தை विशदமாக[B] गद्यத்தின் முடிவிலே கண்டு கொள்வது.

---

a- முன்பு செய்த பாபம்; b- பலன் கொடுக்கத் தொடங்கிய; c- ப்ரபதிக்குப் பின் செய்த பாபம் ; d- அறியாமல் நேர்ந்த பாபப் பகுதி; e-ப்ரபத்திக்குப் பின் அறிந்தே செய்யும் பாபம் ; f- ஒட்டாமை, கழிதல் இவற்றுக்கு இலக்கு; g- சரீரம் கழியும் மரணகாலம்; h- சேருகின்றன; i- ஸ்ரீ பாஷ்யத்தில் சரீரத்திலிருந்து ஜீவன் புறப்படுகிற முறையை விளக்கும் 14-வது பாதமாகிய பகுதி; j- அக்னி முதலிய தேவர்கள் ஸ்ரீ வைகுண்டத்திற்குச் செல்லும் ஜீவனை வழி நடத்தும் முறையைக் கூறும் 15வது பாதமாகிய பகுதி; k- ஸ்த்தூல சரீரம் ஸூக்ஷ்ம சரீரம் இரண்டினின்றும் பிரித்தல்; l- ப்ரக்ருதி மறைத்திருந்த அனைத்தும் ஒழிதல்; m- தடையாயிருந்த கர்மம் சரீரம் முதலியவை நீங்குதல்; n- தனக்கென்று உரிமையோடு வரவேண்டிய அநுபவம்; o - ஸ்ரீ வராக சரம சுலோகம்: பக்கம் 500; p- தான் ஆசைப் பட்டபடி; q- ஸந்தேஹமற்றவன்; r- செய்யக் கடினம்; s- பரந்யாஸம் செய்தவன்; t- பின்னும் செய்ய வேண்டிய மீதிச் செயல் ; u - தெரிந்தே செய்யும் பாபம்; v- நீங்குதல்; w- பெரியோர்களின் நிந்தைச் சொல்; x- பொறுப்பை ஏற்றுக்கொண்ட; y - செல்வம் முதலியவற்றைக் காக்கும் முறை; z - தன் பயனுக்காக; A- மகிழ்ச்சி கொள்ள இடம் ; B - தெளிவாக

1. *அவாவறச் சூழ் அரியை அயனை அரனை அலற்றி,*
   அவாவற்றுவீடு பெற்ற குருகூர்ச்சடகோபன் சொன்ன,
   அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும், முடிந்த
   அவாவிலந்தாதி இப்பத்து அறிந்தார் பிறந்தார்உயர்ந்தே.

திருவாய். (10-10-11) : *அப்பொழுதே முக்தி பெற்றுப் பரிபூர்ணமாய் அநுபவிக்க வேண்டுமென்ற ஆசை பொங்கி ஓயாது ஆழ்வார் அவனைக் கூப்பிட்டு வேண்டினார் மோக்ஷத்தைப் பெற்று ஆசை நிறைவேறப் பெற்றார்.*

Scanned with CamScanner

26.8 சரம ஶ்லோகத்தின் திரண்ட பொருள்

இச் ஶ்லோகத்தின் திரண்ட பொருள்: 'मोक्ष-उपायान्तरங்களில்[a] அந்வயமற்ற[b] நீ शरणागत-वत्सलत्वादि-गुण-विशिष्टனான[c] என் பக்கலிலே भरந்யாஸத்தைப் பண்ணு. सर्व-शक्तित्वादि-गुण-विशिष्टனான நான் न्यस्त-भरனான[d] உன்னை ஸமஸ்த प्रतिबन्धक-நிவ்ருத்தி - பூர்வக - மத்ப்ராப்தியாலே[e] कृतार्थனாக்குகிறேன்[f] இனி நீ शोகிக்க வேண்டா' என்கை.

26.9 ப்ரபத்தி விஷயத்தில் கீதாபாஷ்யம் கத்யம் இவற்றில் முரண்பாடு இன்மை

இதில் சொன்ன உபாயம் ஸர்வ - அநிஷ்டங்களையும்[g] கழிக்கவற்றாகையாலே உபாய - விரோதியைக்[h] கழிக்கும் படியை श्रीमत्-गीता-भाष्यத்திலும் प्राप्ति-विरोधियைக்[i] கழிக்கும் படியை गद्यத்திலும் उदाहरித்தருளினார். ஆகையால் இரண்டுக்கும் विरोधம் இல்லை.

26.10 அருச்சுனன் கேள்விக்கு மேலும் உபதேசம் - கருணையின் விளைவு

'शरणं त्वां प्रपन्ना ये'(49²), इत्यादि ஸாமாந்ய-வாக்யத்தாலும் 'गच्छध्वमेनं शरणं'[1] इत्यादि-विशेष-வாக்யத்தாலும் समर्थ-कारुणिक-पुरुष-विशेष-विषय-शरणागति[j] फल-अविनाभूதை[k] என்று அறுதியிட்ட அர்ஜுநன் 'शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्' (91²) என்று ज्ञान-लाभार्थமாகப் பற்றின உபாயந்தன்னையே 'मामेव ये प्रपद्यन्ते'[2] इत्यादिகளாலே साधनान्तरத்திற்கு[l] அங்கம் என்றும் இங்கே மோக்ஷத்திற்கும் இது தானே ஸ்வதந்த்ர-साधन-ம் என்றும் உபதேசித்து, 'यत् श्रेयः स्यात् निश्चितं ब्रूहि तन्मे (91²) என்று ஸாமாந்யமாக प्रवृत्तமான[m] प्रश्न-வாக்யத்தை சரண்யன் தன் பரம க்ருபையாலே இப்படி விசேஷித்து सर्व-अधिकार[n]-सकृत्-कर्तव्य[o]-परम-हित-उपदेश-पर्यन्तமாக்கித்[p] தலைக்கட்டியருளினான்.

26.11 ரஹஸ்யங்கள் மூன்றிலும் தெளிவு அவசியம்

இப்படி ரஹஸ்ய अर्थ-விசேஷங்களெல்லாம் தெளிந்தவன் பின்பு கற்குமதெல்லாம் கைங்கர்யம்; இது தெளியாதவன் கற்குமது தெளிகைக்கு உறுப்பாம். இவற்றோடு துவக்கற்ற विद्या शिल्पनैपुणம்[q].

அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம்
அம்புயத்தாளுடன் அந்நாள் அவதரித்த ,
குறையாதும் இல்லாத கோவிந்தா! நின்
குரைகழற்கீழ் அடைக்கலமாம் குறிப்புத்தந்தாய்,
வெறியாரும் மலர் மகளும் நீயும் விண்ணில்
விண்ணவர்கள் அடிசூட இருக்கும் மேன்மை,
குறையாத வினையகற்றி அடிமை கொள்ளக்
குறுக ஒரு நன்னாள் நீ குறித்திடாயே (12)

---

a- மோக்ஷத்துக்காக உள்ள வேறு உபாயங்கள்; b- தொடர்பற்ற; c- சரணமடைந்தவனிடம் அன்பு முதலிய குணங்களுடன் கூடியவன்; d- பரந்யாஸம் செய்தவன்; e- எல்லாத் தடைகளும் நீங்கி என்னை அடைதல்; f- பலன் பெற்றவன்; g- எல்லா விரோதிகள் ; h- பக்தியாகிய உபாயத்துக்குத் தடை; i- அவனை அடைதலுக்குத் தடை; j- சக்தியும் கருணையும் உள்ள மஹா புருஷனிடத்தில் செய்யும் சரணாகதி; k- பலனைத் தந்தே தீருவது; l- வேறு உபாயமாகிய பக்தியோகம் ; m- ஏற்பட்டது; n- எல்லாரும் செய்தற்கு உரிய ; o- ஒரு முறையே செய்யவேண்டிய; p- மிகச் சிறந்த உபாயத்தை உபதேசிக்குமளவுக்கு ஆக்கி; q- பயனற்ற கல்வி கற்ற சாதுரியம் மட்டுமே.

1. सर्वेषामेव लोकानां पिता माता च माधवः।
गच्छध्वमेनं शरणं शरण्यं पुरुषर्षभाः ॥

பார. (ஆரண்- 161 - 55) : லக்ஷ்மீபதியான எம்பெருமான் எல்லாவுலகங்கட்கும் தகப்பனாகவும் தாயாகவுமிருக்கிறான். புருஷ ச்ரேஷ்டர்களான பாண்டவர்களே! ரக்ஷகனான அவனை உபாயமாக எண்ணிச் சரணாகதி செய்யுங்கள்.

2. दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥

கீதை (7-14) : அர்ஜுந ஸத்துவம் ரஜஸ் - தமஸ் என்னும் முக்குணங்களாகிய என் மாயையைக் கடப்பது மிகக் கடினம். அதைக் கடப்பதற்கு ஸத்யஸங்கல்பனாய்ப் பரம காருணிகனாய் எல்லா வுலகுக்கும் அடைக்கலமாயுள்ள என்னிடமே ப்ரபத்தியைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்பவர்கள் அந்த மாயையைக் கடந்து என்னைக் குறித்துப் பக்தியோகம் செய்கின்றனர்.

(12) அறியாத இடைச்சியரும் -ஜ்ஞாநம் இல்லாத இடைப் பெண்களும்; ***அறியும் வண்ணம்*** - (தன்னை) அறிந்து அநுபவிக்கும்படி, ***அம்புயத்தாளுடன் அந்நாள் அவதரித்த*** - தாமரையில் வஸிப்பவளான

Scanned with CamScanner

தத்துவமும் சாதனமும் பயனும் காட்டும்
    தாரமுதல் இரு நான்கும் தன் கருத்தால்,
முத்திவழி நாம் முயலும் வகையே காண
    முகுந்தன் இசைத்து அருள் செய்த ஐந்நாலைந்தும்
பத்திதனில் படிவில்லார் பரம் சுமத்தப்
    பார்த்தன் தேர் முன்னே தாம் தாழ நின்ற,
உத்தமனார் உத்தம நல்லுரை நாலெட்டும்
    உணர்ந்தவர் தாம் உகந்து எம்மை உணர்வித்தாரே (13)

பரக்கும் புகழ்வரும் பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களாய்,
இரக்கின்றவர்க்கு இவை ஈந்தால் அறமுளதென்று இயம்பார்,
கரக்கும் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மை எண்ணி,
சுரக்கும் சுரவிகள் போல் சொரிகின்றனர் சொல்லமுதே (14)

विमृशत निरपायं वेङ्कटेशप्रणीतं
    सहृदयबहुमान्यं सारसारं तदेतत् ।
बुधभजनविभाते बोधमासेदुषीणां
    परिमळमिव दिव्यं भावनापद्मिनीनाम् ॥ (!)

பிராட்டியுடன் முன்பு (இவ்வுலகில் அவதரித்தவனும்; **குறையாதும் இல்லாத கோவிந்தா!** - குறைவு ஒன்றும் இல்லாமல் பரிபூர்ணனுமான எம்பெருமானே; **நின் குரைகழல் கீழ்** - உன்னுடைய (கழல்) ஒலிக்கின்ற திருவடிகளின் கீழ் ; **அடைக்கலம் ஆம் குறிப்புத் தந்தாய்** - காக்கப்பட வேண்டிய வஸ்துவாக ஆகும்படியான உள்ளக் கருத்தை (எனக்கு)க் கொடுத்தாய்: **வெறி ஆரும் மலர் மகளும் நீயும்** - வாஸனை நிறைந்த தாமரையில் உள்ள பிராட்டியும் நீயுமாக; **விண்ணவர்கள் அடி சூட** - நித்யஸூரிகளும் முக்தர்களும் உன் திருவடிகளைத் தம் முடியிற் சூடிக் கைங்கர்யம் செய்ய; **விண்ணில் இருக்கும் மேன்மை** - ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள நிலையில் நின்று; **குறையாத வினை அகற்றி** - எங்களிடம் குறையாது நிறைந்துள்ள கர்மங்களை ஒழித்து, **அடிமை கொள்ள** - (எங்கள்) கைங்கர்யத்தையும் நீ ஏற்பதற்கு, **குறுக ஒரு நல் நாள்** - விரைவில் கிட்டும்படி ஒரு நல்ல காலத்தை **நீ குறித்திடாய்** - நீ குறிப்பிட்டருள வேண்டும். □

(13) : தத்துவமும் சாதனமும் பயனும் காட்டும் - தத்துவத்தையும் உபாயத்தையும் பலனையும் வெளியிடுகின்ற; **தாரம் முதல் இரு நான்கும்** - ப்ரணவத்தை முதலாகக் கொண்ட எட்டு அக்ஷரங்கள் அமையப் பெற்ற திருமந்திரத்தையும் ; **முத்திவழி** - மோக்ஷத்தின் உபாயத்தில், **நாம் முயலும் வகையே காண** - நாம் அநுஷ்டிக்கும் ப்ரகாரத்தைக் காண்பதற்காக, **முகுந்தன் தன் கருத்தால்** - எம்பெருமான் தன் திருவுள்ளத்தால்; **இசைத்து அருள் செய்த** - (வேதத்தில் பிரிந்திருந்த இரு பாகங்களை) ஒன்றுகூட்டி (உலகுக்கு) அருள் புரிந்த, **ஐந்நாலைந்தும்** - இருபத்தைந்து அக்ஷரங்கள் அமைந்த த்வயத்தையும், **பத்திதனில் படிவு இல்லார்** - பக்தியோகத்தில் ஈடுபட முடியாதவர்கள், **பரம சுமத்த** - (தம்மைக்) காக்கும் பொறுப்பை (அவன் மீது) சுமத்த. **பார்த்தன் தேர் முன்னே** - அர்ஜுனனுடைய தேரின் முன்னே, **தாழ நின்ற** - (பாகனாகத்) தாழ்ந்து நின்றவனான; **உத்தமனார்** - ஸர்வேசுவரனுடைய, **உத்தம நல் உரை நாலெட்டும்** - உயர்ந்த நல்லுபதேசமாகிய முப்பத்திரண்டு அக்ஷரங்கள் பொருந்திய சரம சுலோகத்தையும் ; **உணர்ந்தவர் தாம்**- (அர்த்தத்துடன்) அறிந்த ஆசார்யர்கள்; **எம்மை உகந்து** - நம்மை விரும்பி, **உணர்வித்தார்** - உபதேசித்தனர்.

(14) கரக்கும் கருத்துடைத் தேசிகர் - (ரஹஸ்யார்த்தங்களை) ரஹஸ்மாய் வைத்துக் கொள்ளத் திருவுள்ளங்கொண்ட நம் ஆசார்யர்கள், **பத்தர்களாய் இரக்கின்றவர்க்கு** - பக்தியுள்ளவர்களாய் வந்து ப்ரார்த்திக்கும் அதிகாரிகளுக்கு, **இவை ஈந்தால்** - இந்த ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தால், **பரக்கும் புகழ் வரும்** - (நாட்டில்) பரவுகின்ற கீர்த்தி உண்டாகும்; **பைம்பொருள் வாய்த்திடும்** - மிகுந்த செல்வம் கிடைக்கும்; **அறம் உளது** - புண்யமும் உண்டாகும்; **என்று இயம்பார்** - என்று (நினைத்து) உபதேசிக்கமாட்டார்கள். **நம்மைக்கன்று என எண்ணி** - நம்மைக் கன்று போல் நினைத்து, **சுரக்கும் சுரவிகள் போல்** - (தம் கன்றுக்குப் பாலைப்) பெருக்கும் காமதேனுக்கள் போல், **சொல் அமுது** - உபதேசமாகிய அமுதத்தை, **சொரிகின்றனர்** - பொழிகின்றனர்.

(1) निरापाय – குற்றமற்றதாயும், सहृदय–बहुमान्यं – நல்ல உள்ளம் படைத்த அறிஞர்களாலே மிகவும் கொண்டாடத் தக்கதும், बुधभजनविभाते – அறிஞர்களை (ஆசார்யர்களை) வழிபடுவதாகிற காலைப் பொழுதில், बोधं-நல்லறிவை, आसेदुषीणां–பெற விரும்புகிறவர்களுக்கு, भावना पद्मिनीनां– சிந்தனைகளாகிற தாமரைகளினுடைய, दिव्यं – சிறந்த, परिमळमिव – வாஸனையைப் போன்றுள்ளதும், वेंङ्कटेशप्रणीतं – வேங்கடேசனால் இயற்றப்பட்டதுமான, तत् एतत् – அப்படிப்பட்ட , सारसार – ஸாரஸாரம் என்ற நூலை, विमृशत – ஆராய்ந்து அநுபவியுங்கள்.

Scanned with CamScanner

विधिविहितसपर्यां वीतदोषानुषङ्गां
उपचितधनधान्यामुत्सवैः स्त्यानहर्षाम् ।
स्वयमुपचिनु नित्यं रङ्गधामन् सुरक्षां
शमितविमतपक्षां शाश्वतीं रङ्गलक्ष्मीम् ॥ **(2)**

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु सारसारः संपूर्णः

(2) रङ्गधामन्! - திருவரங்கப் பெருமானே! विधि-विहित-सपर्यां - முறைப்படி செய்யப்பட்ட திருவாராதனத்தை உடையதும், वीत-दोष-अनुषङ्गां - குற்றமற்றதும், उपचित-धनधान्यां - தனதான்யங்களின் ஸம்ருத்தி உடையதும், उत्सवैः स्त्यान हर्षां - உத்ஸவங்களால் அடியார்களை மகிழ்விப்பதும், शमित-विमत-पक्षां - எதிரிகளை ஒழிப்பதும், सुरक्षां - நல்ல பாதுகாப்பு உடையதுமான, रङ्गलक्ष्मीं - திருவரங்கச் செல்வத்தை, नित्यं - நாள்தோறும், स्वयं - நீயே, उपचिनु - வளரும்படி செய்.

ஸாரஸாரம் முற்றும்

63ஆம் பக்கம் - கீழ்க் குறிப்பு:

1. அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின் என்றென்று
அருள் கொடுக்கும்
படிக்கேழில்லாப் பெருமானைப் பழனக் குருகூர்ச் சடகோபன்
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்திற்கு இவைபத்தும்
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே.

திருவாய் (6-10-11) : என் கைங்கர்யத்திலேயே சுவை கொண்ட அடியார்களே! உங்களுக்குப் போக்யமான என் திருவடிக் கீழமர்ந்து அதிலேயே உள்ளத்தை ஊன்ற விட்டு வாழுங்கள் என்று கூறிக் கூறி அருள் புரிவதில் ஒப்பற்ற திருவேங்கடமுடையான்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸாரஸாரம்: ரஹஸ்யார்த்த விவரணம்

(ஆசிரியர்: ஸ்ரீ உ. வே. வித்வான் ஒப்பிலியப்பன் ஸந்நிதி
வங்கிபுரம் நவநீதம் ஸ்ரீ ராம தேசிகாசார்யர் ஸ்வாமி)

திருமந்த்ராதிகாரம்

1. முன்னுரை

அவசியம் அறிய வேண்டிய ஸாரமான அம்சங்களுக்குள்ளும் மிகவும் ஸாரமான விஷயங்களை விளக்குவதால் இப்பெயர் வந்தது.

சேதநன், ஸர்வேச்வரனான எம்பெருமான் ஒருவனுக்கே அடியனாயிருக்க உரியன். வேறொருவனுக்கும் அடியனல்லன். இப்படி உள்ளவன் அதற்கு ஏற்றவாறு ஸ்ரீவைகுண்டம் சேர்ந்து கைங்கர்யம் செய்யப் பெறவில்லையே! காரணம் என்ன? அநாதியாக வந்த கர்ம வெள்ளத்திலே அகப்பட்டு ஸம்ஸார மண்டலத்தில் உழன்று கொண்டிருப்பதுவே எம்பெருமானுக்கு இவனிடம் கருணை உண்டு. ஆனால் அக்கருணை இவனை நல்வழிப்படுத்த உரிய ஸமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இப்பொழுது இவனுக்கு நல்ல காலம் வந்து விட்டது. சேதனன் நல்வழிக்குத் திரும்புகின்றான். சிறந்த ஓர் ஆசார்யனை அண்டுகின்றான். அவன் இவனுக்குத் திருமந்திரம் - துவயம் - சரமசுலோகம் ஆகிய மூன்று ரஹஸ்யங்களை உபதேசிக்கின்றான். அந்த ரஹஸ்யங்கள் ஸம்ஸாரமென்னும் நோயைத் தீர்க்கும் மருந்தாயுள்ளன. அந்த ரஹஸ்யங்களைச் சேதநன் துணைகொண்ட வழியைக் கூறுகின்றோம்.

Scanned with CamScanner

௨. திருமந்திரத்தை முதலிலும், த்வயத்தை அதன் பின்னரும், சரமசுலோகத்தைக் கடைசியிலும் அநுஸந்திப்பதன் காரணம்

முதலில் சேதநன் திருமந்திரத்தை அர்த்தத்துடன் உணர வேண்டும். ஏன்? ஜீவனான தன் ஸ்வரூபத்தைப் பற்றிய தெளிவான அறிவைத் திருமந்திரம் உண்டாக்கும். அந்தத் தெளிவு ஏற்படாவிட்டால் தன் ஸ்வரூபத்துக்கு ஏற்ற மோக்ஷமாகிய பெரும் பயனைப் பெற ஆசை ஏற்படாது. அவ்வாசை வராவிடில் அதற்கு ஏற்ற உபாயத்தைச் செய்ய வாய்ப்பு ஏற்படாது. ஆதலின் ஸ்வரூபத்தைப் பற்றிய தெளிவு பெற முதலில் திருமந்திரம் அநுஸந்திக்க வேண்டியதாகும்.

பிறகு த்வயத்தை அநுஸந்திக்க வேண்டும். இதற்குக் காரணங்கள் நான்கு. (i) திருமந்திரத்தின் முதற்பதமாகிய ப்ரணவத்தில் எம்பெருமான் சேஷி என்றும், இரண்டாவதாகிய நம: சப்தத்தால் அவன் சேதநன் ஸமர்ப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் உபாயம் என்றும், நாராயணாய என்னும் கடைசிப் பதத்தால் எம்பெருமான் அநுபவிக்கத் தகுந்த பயனென்றும் தேறுகின்றது. இத்தகைய பரம்பொருளைப் பிராட்டியோடும் சிறந்த திருமேனியோடும் கூடியவனாக விளக்கிக் காட்டுகிறது த்வயம். (ii) திருமந்திரத்தில் நடுப்பதமாகிய நம: எனும் சொல்லில் வெளிப்படையாயும் கருத்து முறையிலும் ப்ரபத்தி என்னும் சிறந்த உபாயம் தோற்ற அதைச்செயல் படுத்தும் முறையைக் காட்டுகிறது த்வயம். (iii) திருமந்திரம் ஒரு மந்த்ரமாதலின் மூன்றாம் மனிதர் இல்லாத இடத்தில் ஆசார்யனும் சிஷ்யனும் இருவருமே 'நின்று' உபதேசிக்கவும் கேட்கவுமே உரியதாயிருப்பது போல் த்வயமும் அந்த வரையறையைப் பெற்றுள்ளது. (iv) தன் ஸ்வருபத்தைப் பற்றிய அறிவு திருமந்திரத்திலே ஏற்படுவதால் அவ்வறிவைப் பெற்ற பின்பே சேதநன் உண்மையில் பிறப்பதாகச் சொல்வது பெரியோர்களின் வழக்கு. அதற்கு மேலே செய்யவேண்டிய உபாயத்தைச் செய்யும் முறையைச் சேதநன் த்வயத்தில் உணர்ந்து கொள்வதால் த்வயத்திலே வளருவதாகச் சொல்வது முறை. ஆதலால் திருமந்திரத்துக்குப் பின்பு தானே த்வயம்! பிறந்த பின்பு தானே வளருவது! ஆக இந்த நான்கு காரணங்களாலும் திருமந்திரத்துக்குப் பின்புத்வயத்தை அநுஸந்தித்தல் மிகப் பொருந்துகின்றது.

இப்படித் திருமந்திரத்திலும் த்வயத்திலும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தோற்றிய சரணாகதியைச் செய்யச் சிறப்புத் தகுதியுடையன் எவன் என்பதை அறிய வேண்டும். இதை அறிவிக்கின்றது சரம சுலோகம். மேலும் அந்தச் சரணாகதி செய்வதற்குக் கடினமான அங்கம் எதையும் எதிர்பார்க்கவில்லை என்பதையும், சரணாகதி தானே மோக்ஷத்தைத் தரவல்ல தனித்த உபாயமாய் நிற்பதையும், அந்தச் சரணாகதியால் இதுவரை தடையாயிருந்த கர்மங்கள் முதலியன ஒழியும் முறையையும் சரம சுலோகம் உணர்த்தி பக்தியோகம் முதலியன செய்ய முடியாமையால் கைம்முதலற்ற சேதநனை ப்ரபத்தியைச் செய்யும்படி செய்து அவன் மனம் ததும்பாதபடி அவனுக்குத் தேறுதல் சொல்லுகின்றது. ஆதலின் சரம சுலோகம் த்வயத்துக்குப் பின் அநுஸந்திக்க உரியதாகும்.

3. திருமந்திரத்தின் தனிப் பெருமைக்குக் காரணங்கள்

திருமந்திரம் -த்வயம் - சரமசுலோகம் என்னும் இந்த முன்று ரஹஸ்யங்களுள் ஸ்ரீமத் அஷ்டாக்ஷரம் என்று கொண்டாடப்படும் இந்தத் திருமந்திரம் மஹாமந்த்ரம் என்று போற்றப்படுகின்றது. இதன் சிறப்புக்கள் வருமாறு. (i) பல உபநிஷத்துக்களிலும் அவற்றின் கருத்தை விளக்கும் ஸ்ம்ருதிகள் புராணங்கள் முதலியவற்றிலும் மிக்க புகழ்பெற்று விளங்குகின்றது. (ii) உபநிஷத்துக்களிலும் ஸ்ம்ருதிகள் முதலிய எல்லாவற்றிலும் உள்ள மிகச் சிறந்த ஸாரமான அர்த்தங்களெல்லாம் இத்திருமந்திரத்தில் சுருக்கமாய்ப் பொதிந்துள்ளன. (iii) இது எல்லாத் தீங்குகளையும் போக்க வல்லது. (iv) இம்மையிலும் மறுமையிலும் உள்ள எல்லாப் பலன்களையும் அளிக்க வல்லது. (v) கர்மயோகம் ஞானயோகம் முதலியவற்றைச் செய்வதற்குக் கூடத் திரு மந்திரத்தை ஜபிப்பதும் அதன் அர்த்தத்தை அறிவதும் மிக்க உதவி புரிவன. (vi) திருமந்திரத்தை எல்லாச் சாதியாரும் தத்தம் தகுதிக்கு ஏற்றவாறு உருவத்தைச் சிறிது குறைத்தோ மாற்றியோ பயன்படுத்தலாம். ஆதலின் எல்லாச் சாதியாரும் தாங்கள் நல்வாழ்வு பெறக் கைக்கொள்ள உரியது. (vii) திருமந்திரம், சேதநம், அசேதநம் என்ற சேஷ தத்துவங்களையும் எம்பெருமானாகிய சேஷி தத்துவத்தையும் வெளிப்படையாய்ச் சொல்லக் கூடிய சொற்களையுடையது. (viii) திருமந்திரத்தைக் கைக் கொள்பவர் வேறு எந்த மந்திரத்தையும் எதிர்பார்க்க வேண்டிய

Scanned with CamScanner

அவசியமில்லாமல் செய்கின்றது இது. (ix) எம்பெருமானுடைய ஒவ்வொரு மூர்த்திக்கு ஒவ்வொரு மந்த்ரம் உரியதென்பது போலன்றித் திருமந்திரம் மட்டும் எம்பெருமானுடைய எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவாகும். (x) வ்யாபக மந்த்ரங்கள் மூன்று - திருமந்திரம், ஷடக்ஷரம், த்வாதசாக்ஷரம் என்பன. இந்த வ்யாபக மந்த்ரங்கள் மூன்றினுள் திருமந்திரமே மிக முக்கியமாய் விளங்குகின்றது. இத்துணைச் சிறப்புக்கள் இத்திருமந்திரத்துக்கு இருப்பதால் ஆசார்யர்கள் அனைவரும் இதையே மிக மிக ஆதரிப்பர். (xi) ஆழ்வார்களும் இத்திருமந்திரத்தையே உயர்ந்த பலனாகிய மோக்ஷத்துக்கு மூலகாரணமாக அருளிச்செய்துள்ளனர். (xii) ஒவ்வொரு மனிதனும் தாய் வயிற்றினின்று பிறக்கின்றான். பெற்றோர்கள் வாயிலாக வந்த இப்பிறவி நல்ல வழியில் சென்று தன்னைக் காத்துக் கொள்ளவும் பயன்படுகின்றது. தீய வழியில் சென்று நரகம் முதலிய கஷ்டங்களைப் பெறவும் உடலாகின்றது. இப்படி நன்மை தீமைகளுக்குப் பொதுவான இப்பிறவி போலன்றிச் சிறந்ததாய் மற்றொரு பிறவி உண்டு. அதுதான் தன் ஸ்வரூபத்தையும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும் அறிந்த பின் வரும் புதியதொரு பிறவி. இந்த உயர் பிறவி நன்மை செய்வதற்கே பயன்படும். இப்பிறவிக்குக் காரணமான ஞானம் ஆசார்யன் உபதேசித்த பின்பே வருகின்றது.

4. திருமந்திரம் எட்டெழுத்து மூன்று பதங்கள் கொண்டது - விளக்கம்

திருமந்திரத்தில் மூன்று பதங்கள் உள்ளன. முதற்பதம் ஓரெழுத்து உடையது. நடுப்பதம் இரண்டு அக்ஷரமுடையது. கடைசிப்பதம் ஐந்து எழுத்துக்கள் கொண்டது. இந்தக் கணக்கை உபநிடதமே ஓதுகின்றது. சில வகுப்பினருக்குப் பயன்படுதற்காக ப்ரணவத்தைத் தள்ளிப் பார்த்தாலும் அதன் ஸ்தாநத்தில் 'அம்' என்பதைச் சேர்ப்பதால் எட்டெழுத்தாகி விடுகிறதென்று நாரதபகவான் வாக்கினால் தெரிகின்றது. முதலில் உள்ள ப்ரணவத்தையும் கடைசியில் உள்ள 'ஆய' என்னும் விகுதியையும் விலக்கி விட்டால் எல்லாச்சாதியாரும் அநுஸந்திக்கத் திருமந்திரம் உரியதாகும் என்ற முறையையும் வராஹபுராணமும் ஆழ்வார் ஸூக்தியும் காட்டியுள்ளன.

5. ப்ரணவத்தின் பொருள் விளக்கம்

5.1 ப்ரணவத்தின் பெருமை

இத் திருமந்திரத்தில் முதற்பதமான ப்ரணவத்தை மட்டும் கொண்டு எம்பெருமானைச் சரணமடைந்தாலும் ஸ்ரீவைகுண்டத்தில் சாச்வதமாய் அவனை அநுபவிக்கப் பெறலாமென்று பெரியாழ்வார் வழி காட்டியருளினார். வேதங்களுக்கு எண்ணற்ற கிளைகள். அவை அனைத்துக்கும் முதலில் ஆணிவேராயுள்ளது இந்த ப்ரணவம். இந்தத் திருமந்திரத்துக்கும் முதலில் உள்ளது இது. ஸாரமான ஸகல அர்த்தங்களும் இந்த ப்ரணவத்தில் சுருக்கமாய் அடங்கியுள்ளன. இதை அர்த்தத்துடன் நன்கு அறிந்தவனை வேதங்களை உணர்ந்தவனாகக் கூறுவதுண்டு.

5.2 ப்ரணவம் மூன்று எழுத்துக்களும் மூன்று சொற்களும் கொண்டது

ப்ரணவம் ஒரே பதம். ஆனால் இதில் 'அ' 'உ' 'ம்' என்று மூன்று எழுத்துக்கள் உண்டு. அக்ஷர நிகண்டுவின்படி பார்த்தால் மூன்று எழுத்தும் பொருளுள்ள மூன்று தனிப் பதங்களாகின்றன. இம் மூன்று பதங்களையும் பொருள் கூறிக் கூட்டிப் பார்த்தால் ஒரு முழு வாக்யமாகின்றது. 'நம:' என்பதும் இவ்வாறே இரண்டு எழுத்துக்களாய் இரண்டு பதங்களாய் ஒரு வாக்யமாகும்.

5.3 அகாரத்தின் பொருள் விளக்கம்

5.3.1 அகாரம் - விஷ்ணுவையே கூறுதல்

ப்ரணவத்தில் மூன்று எழுத்துக்களில் முதலாவதான அகாரம் இடுகுறிப்பெயராய் நின்று விஷ்ணுவையே குறிக்கும். இவ்வுண்மையைச் சுருதியும் ஸ்ம்ருதிகளும் நிகண்டுவும் வலியுறுத்திக் கூறுகின்றன. மேலும் பல பெரியோர்கள் விஷ்ணுவைக் கூறுமிடத்து அகாரத்தை வழங்கியதாலும் அறியலாம். மேலும் இந்த அகாரம் வெளிப்படையாகவும் பிரித்துப் பொருள் பார்க்கும் முறையாலும் எல்லா அர்த்தங்களையும் சுருக்கிக் கூறுவதாயுள்ளது.

5.3.2 அகாரம் எம்பெருமானுடைய மூன்று முக்கியப் பெருமைகளை உணர்த்தல்

(i) வேதாந்தங்கள் எல்லாவற்றிலும் மேம்பட்ட தத்துவமான பரப்ரஹ்மத்துக்கு லக்ஷணம் கூறும் போது உலகுக்குக் காரணமாயிருத்தலை முக்கிய லக்ஷணமாகக் கூறுகின்றன. இதை முதலில்

Scanned with CamScanner

சேதநன் அவசியம் அறிந்தாகவேண்டும். (ii) காரணமாயுள்ளவனே சரணமடைதற்கு உரியன் என்று சுருதி ஓதுகின்றது. அப்படி அவன் சரணமாக அடையப்படுதலுக்கு மிகவும் பயன்படும் தன்மை அவன் ரக்ஷகனாயிருத்தல். அவனிடம் காக்கும் தன்மை இருப்பதை நினைத்துத்தானே சேதநன் அவனைச் சரணமடைகின்றான்! ஆதலின் எம்பெருமானிடம் உள்ள ரக்ஷகத் தன்மையையும் அறிய வேண்டும். (iii) மேலும் அவனிடம் உள்ள சேஷியாந்தன்மையையும் அறியவேண்டும். சேக்ஷித்வம் என்பது என்ன? சேஷனாயுள்ளவன் செய்யும் சிறப்பைப் பெறும் தன்மை. இதை அறிந்தால் எம்பெருமான் தனக்கு வரும் பயனாகவே நினைத்துச் சேதநனான தன்னைக் காத்தருள்வான் என்று தெளிவு ஏற்படும். ஆகவே இத்தெளிவு பெறுவதற்காகச் சேஷியாந்தன்மையையும் அறிந்தாக வேண்டும். இப்படி ச்ரிய: பதியான எம்பெருமான் எல்லாவற்றுக்கும் காரணம் என்பதும், எல்லோரையும் ரக்ஷிப்பவன் என்பதும், எல்லோருக்கும் சேஷி என்பதுமாகிய முக்கியமான மூன்று அம்சங்களும் இங்கு அகாரத்தால் முக்கியமாய்க் கூறப்படுகின்றன.

5.3.2.1 மும்மூர்த்தி வாதகண்டநம்

பிரமன் - விஷ்ணு - சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் ஸமர் என்றும், இந்த மும்மூர்த்திகளும் ஒருவரே என்றும், இம் மூவரினும் வேறு பட்ட ஒருவனே பரம்பொருள் என்றும் மற்றும் கூறும் விபரீத வாதங்களெல்லாம் அகாரத்தின் பொருளை உணர்ந்தவனிடம் அணுகமாட்டா. மேற்கூறிய மூன்று அம்சங்களும் எம்பெருமானையன்றி வேறு எவருக்கும் இல்லையே!

5.3.3 அகாரம் எம்பெருமானின் காரணத்வம், ரக்ஷகத்வம் சேஷித்வம் – இவற்றைக் கூறும் வகை

இந்த மூன்று அம்சங்களும் முதல் எழுத்தான அகாரத்தினின்று கிடைக்கும் வழியை ஆராய்வோம்.

(i) **காரணமாம் தன்மை:** சொல் - பொருள் என்று இரண்டு உண்டே! எல்லாச் சொற்களுக்கும் மூலமான எழுத்து அகாரம். அக்ஷர வரிசையிலே அகாரம் தானே முதல் எழுத்து: சொற்களுக்குப் பயன் பொருளை உணர்த்துவது. பொருள்கள் அனைத்துக்கும் மூல காரணம் எம்பெருமானே! எல்லாப் பொருளையும் படைப்பவன் அவன்தானே! ஆகவே சொற்கள் அனைத்துக்கும் மூலகாரணமான

அகாரம் எல்லாப் பொருள்களுக்கும் காரணமான எம்பெருமானைக் கூறுவது மிகப் பொருத்தமானதன்றோ! இவ்வம்சத்தை வாமந புராணமும் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிய வேதார்த்த ஸங்க்ரஹமும் கூறுகின்றன.

(ii) **ரக்ஷகனாம் தன்மை :** வட மொழியில் 'அவ்' என்று ஒரு வினைப் பகுதி உண்டு. அதற்குக் காத்தல் பொருள். அப்பகுதியினின்று தேறிய 'அ' எனும் சொல் காப்பவன் என்ற பொருளைக் காட்டும். இன்னாரைக் காப்பவன் என்று வரையறுத்துக் கூறாதபடியால் எல்லோரையும் காப்பவன் என்று தேறியது. இந்தக் காக்கும் தன்மை ஜீவனுடைய ஸ்வரூபம் அது நீடித்து நிற்றல் முதலிய விஷயத்தில் எம்பெருமானுக்கு இயற்கையாகவே உள்ளது. ஒரு காரணத்தை முன்னிட்டு வருவதன்று. அங்ஙனமே நித்ய சூரிகள் விஷயத்திலும் காரணத்தை முன்னிடாமல் இயற்கையாகவே எம்பெருமான் ரக்ஷிப்பவன். ஆனால் ஸம்ஸாரிகளான சேதநர் விஷயத்தில் மட்டும் மோக்ஷம் கொடுத்துக் காத்தல் முதலியவற்றில் சேதநர்கள் செய்யும் உபாயங்களை எதிர்பார்த்தே செய்வான். அந்த உபாயங்களும் ஸ்வதந்த்ரனாய் ஸ்வாமியான அவன் சாஸ்த்ரங்களைக் கொண்டு விதித்தவைதாமே: அவ்வாறன்றி ஓர் உபாயத்தையும் முன்னிடாமல் இயற்கை யிலேயே மோக்ஷம் கொடுப்பதாயின் அதைப் பெறுகின்ற சிலர் விஷயத்தில் பக்ஷபாதமும் அதைப் பெறாத பலர் விஷயத்தில் கருணையின்மையும் பகவானுக்கு உள்ளதாய்க் கூறவேண்டி வரும். மேலும் ஓர் உபாயமும் செய்யாமலே பலன் தருவதாயின் எல்லோருக்குமே மோக்ஷம் கொடுத்துவிடட்டுமே என்ற கேள்வி வரும். ஆதலின் ஓர் உபாயத்தை முன்னிட்டே ஸம்ஸாரிகளுக்கு மோக்ஷம் தருவானென்று அறிய வேண்டும். பொதுவாக ரக்ஷித்தல் என்பது விரோதிகளைக் கழித்துக் காத்தலையே குறிக்கும். எதற்கு விரோதி? பெரும் பயனான மோக்ஷத்துக்கு விரோதி. இப்படி காத்தலை முதற்பதமான ப்ரணவத்திலும், விரோதியைத் தீர்ப்பதை நம: என்பதிலும், பலனை 'நாராயணாய' என்பதிலும் வரிசையாகக் கண்டு கொள்ளலாம்.

(iii) **சேஷியாந் தன்மை:** ப்ரணவத்தை மந்திரமாகக் கொண்டே ஆத்மாவை எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்கலாமென்று சுருதியே விதிக்கின்றது. அப்பொழுது எம்பெருமானுக்கு இந்த ஆத்மாவை

Scanned with CamScanner

ஸமர்ப்பிக்கிறேன் என்ற அர்த்தம் ப்ரணவத்தில் அடங்கியிருந்தால் தானே அதைக் கொண்டு ஸமர்ப்பிப்பது பொருந்தும் ; ஆகவே ப்ரணவத்தில் முதல் எழுத்தான 'அ' என்பதன் மேல் 'ஆய' என்னும் நான்காம் வேற்றுமையுருபு ஏறியிருந்து மறைந்து விட்ட தாய்க் கூறுவதே பொருத்தமானது. அந்த வேற்றுமையுருபுக்கு அவன் பொருட்டாயிருத்தல் பொருள். அதுதான் சேஷனாந் தன்மை. அதாவது தனக்கு என்று ஒரு பயனை முக்கியமாகக் கொள்ளாமல் ஈச்வரனது பயனுக்காவே தான் இருத்தலே சேஷத்வமெனப்படும். சேதநனுக்கு வரும் பயனை அவனுக்கு உரிமையின்றி எம்பெருமான் தன் பயனாகக் கொள்வதே சேஷியாந்தன்மை எனப்படும். இத்தன்மை எம்பெருமானுக்கே உரியது.

5.3.4 ப்ரணவத்தில் மகாரம் பின்னிட்டதன் காரணம்

இங்கு மூன்றாவது அக்ஷரமான மகாரம் ஜீவனைச் சொல்லுகிறது. இங்கு ஒரு கேள்வி - முதலில் மகாரமும் பிறகு அகாரமும் அதன் மீது மறைந்த ஆய என்ற உருபும் இருக்க வேண்டியது தானே முறை! ஏனெனில் - மகாரத்தில் சொல்லப் படும் ஜீவனாகிய நான் 'எம்பெருமானுக்கே சேஷன்' என்று கூறுவது தானே பொருத்தமாயிருக்கும்! ஒரு ஸம்பந்தத்தை விதிப்பதற்கோ மறுப்பதற்கோ பொதுவான இடமாய் நிற்கும் வஸ்துவைச் சொல்லும் சொல்லன்றோ முதலில் இருக்க வேண்டும்! இங்கு முதலில் எம்பெருமானுக்கு அடிமை என்ற ஸம்பந்தத்தை ஆய என்ற மறைந்த உருபினால் சொல்லிப் பிறகு அந்த ஸம்பந்தத்துக்கு இடமான ஜீவனை மகாரத்தால் சொல்வது முறையா? என்று கேட்கலாம். இதற்கு விடை - எம்பெருமான் கருணையோடு ஜீவனுக்கு உண்மையை உணர்த்துவதற்காக ஜீவனைப் பார்த்து 'நீ எனக்கு அடியன்' என்று சொல்லிக் கொண்டே அவனைத் தொடருகின்றான். 'ஜீவனோ அவனுக்கு இடம் கொடாமல் நான் ஸ்வதந்த்ரன்' என்று சொல்லிவிட்டுத் திமிறிக் கொண்டு ஒடுகின்றான். இவ்வாறு செய்கிறது ஜீவனுடைய அஹங்காரம். தன் ஸ்வரூபத்தின் உண்மையை அறியாமல் தன்னைச் சுதந்திரனாகத் தவறாக எண்ணிக் கொண்டிருக்கும் இவன் இருந்தும் இல்லாதவன் போலத்தான் ஆவான். இவனுக்குத் 'தான்' எம்பெருமானுக்கு அடியன்' என்ற உண்மையறிவு வந்தால் கெட்டுப்போகாமல் உஜ்ஜீவித்து விடுவானே! இல்லாத இவனை உளனாக்குகிற அந்த ஜ்ஞாநம் மிகவும் முக்கியமாதலால் அதைத்

தெரிவிப்பதற்காகவே ப்ரணவத்தில் ஜீவனைக் கூறும் மகாரத்துக்கு முன்பே அகாரம் மறைந்த 'ஆய' என்னும் விகுதியுடன் நின்று அந்தச் சேஷனாந் தன்மையை உணர்த்துகின்றது.

5. 3. 4.1 பகவானுக்கு ஜீவன் சரீரம்; ஜீவனுக்கு எம்பெருமான் ஆத்மா

இப்படி ரக்ஷிக்கப்படவேண்டிய சேதநன் சேஷனானால் இவனை ரக்ஷிக்கும் எம்பெருமான் சேஷி என்று தானே தேறிவிடுகின்றதே! இந்த முறையில் அகாரம் சேஷியாந் தன்மையையும் காட்டுகின்றது. இத்தனை காலத்துக்கு ஜீவன் எம்பெருமானுக்கு சேஷன் என்ன காலவரையனை எதுவும் கூறாதபடியால் எப்பொழுதும் சேஷனென்றும் இத்தன்மையை விட்டு இருக்க முடியாதவனென்றும் தேறுகின்றது. இப்படி ஜீவன் எப்போதும் சேஷனாய் எம்பெருமான் எப்போதும் சேஷியாய் இருப்பதால் ஜீவன் சரீரமென்றும் எம்பெருமான் ஆத்மா என்றும் ஸித்திக்கின்றது.

5.3.5 ரஷிக்கும் தன்மை – சேஷியாம் தன்மை – இவற்றின் பயன்

இப்படி 'அ' என்னும் எழுத்தில் பகுதியால் எம்பெருமான் ரக்ஷகனென்றும், மறைந்துள்ள 'ஆய' என்னும் விகுதியால் அவனே சேஷி என்றும் கிடைத்தது. எம்பெருமானுடைய இந்த இரண்டு தன்மைகளும் சேதநர் விஷயத்தில் இரண்டு விபூதிகளிலும் மிகுதியாய்ப் பயன்படுகின்றன. இந்த ஸம்ஸார மண்டலமாகிய லீலாவிபூதியில் அஜ்ஞாநமும் துக்கமுமே மிகுத்து நிற்கும். ஸ்ரீ வைகுண்டமென்னும் நித்ய விபூதியிலோ ஜ்ஞாநமும் ஆனந்தமும் மிகுத்து நிற்கும். இந்த இரண்டு விபூதிகளிலும் உள்ள சேதநர்களுக்கு எம்பெருமான் ரக்ஷகனாகவும் சேஷியாகவும் நிற்கின்றான்.

5.3.6 ரஷிக்கும் தன்மை நம்புதற்கும் இனிமைக்கும் இடம்

எம்பெருமான் காரணமாயிருப்பதால் ரக்ஷிக்கின்றான் என்னும் போது அவன் ரக்ஷிப்பதை மிகவும் நம்பலாம். உலகில் தந்தை புதல்வனை ரக்ஷிப்பதை நம்பாதிருக்க முடியுமோ? தந்தைக்கு உரிமையும் கடமையும் உண்டே! அவ்வாறே காரணமாய் உலகுக்குத் தந்தையாய் நிற்கும் எம்பெருமான் நிச்சயமாய்க் காப்பானென்பதில் ஐயம் உண்டா? அவ்வாறே சேஷியான எம்பெருமான் சேதநனைக் காக்க முற்படுவது மிகவும்

போக்யமாகவன்றோ உள்ளது? உலகில் மனைவிக்குப் பிரியனான கணவனே அவளுக்கு வைத்யனாயும் அமைந்தால் மனத்துக்கு மிகவும் இன்பம் ஏற்படுமே!

5.3.7 அகாரத்தால் தேறும் அம்சங்கள்

இப்படி எம்பெருமான் காரணமாவதற்கும் ரக்ஷிப்பதற்கும் பயன்படக்கூடிய சில அம்சங்களை இங்கு அநுஸந்தித்துக் கொள்ள வேண்டும். ப்ரமாணங்களே அவற்றை எடுத்துக் காட்டுகின்றன. அவையாவன - ஸர்வஜ்ஞத்வம் (எல்லாவற்றையும் அறியும் தன்மை), ஸர்வசக்தித்வம் (எதையும் செய்யச் சக்தியுடைமை) முதலியன. பின்னும் பெரிய பிராட்டியின் ஸம்பந்தம். எல்லாரையும் காப்பதற்கே விரதம் பூண்டுள்ள எம்பெருமானுக்கு எப்பொழுதும் உடன் இருந்து அந்தத் தர்மத்தை நடத்திவைப்பவள் பிராட்டியல்லவோ! த்வயத்தில் பெரிய பிராட்டி வெளிப் படையாகவே ஸ்ரீ சப்தத்தால் கூறப்படுகின்றாள். அது போல இத் திருமந்திரத்திலும் அநுஸந்தித்துக் கொள்ளவேண்டும்.

5.4 உகாரத்தின் பொருள்

ப்ரணவத்தில் நடு எழுத்து உகாரம். இவ்வெழுத்துக்குப் பல இடங்களிலும் வரும் ப்ரயோகங்களைப் பார்த்தால் மற்றவற்றோடு தொடர்பை அறுத்து ஒன்றையே வலியுறுத்திக் கூறுதல் பொருளென்று தேறுகின்றது. இங்குக் கீழே மறைந்துள்ள ஆய விகுதியுடன் கூடி அகாரம் காட்டிய பொருளான எம்பெருமானுக்கு ஜீவன் சேஷனாயிருக்கும் தன்மையை இந்த உகாரம் ஜீவனுக்கு மற்றொருவருக்குச் சேஷமாந்தன்மையை மறுத்து வலியுறுத்து கின்றது. ஆகவே ஜீவன் அகாரத்தால் சொல்லப்படும் ச்ரிய: பதியான எம்பெருமானுக்கே ஒரு காரணத்தையும் முன்னிடாது இயற்கையாகச் சேஷன் என்று தீர்ந்தது. இதனால் எம்பெருமானை யன்றி மற்ற ஜீவர்களுக்கு ஜீவன் இயற்கையில் சேஷனாக மாட்டானென்றும் தேறியது. மற்ற ஜீவர்களுக்கு என்றதால் பிரமன் சிவன் முதலிய மற்ற தெய்வங்களின் தொடர்பைக் கொள்ள மாட்டானென்றும் பலித்து விடுகின்றது. அத்தெய்வங்களை நாடாதது மட்டுமன்றி அவற்றை வழிபடுமவர்களையும் சேதநன் நாடக்கூடாதென்பதையும் ப்ரமாணங்களைத் தழுவி ஆழ்வார்கள் காட்டியருளினர்.

5.5 எம்பெருமானுக்கே ஜீவன் அடியனாந் தன்மையை அநுஸந்திக்க வேண்டிய இடங்கள்

இப்படி சேதநன் வேறொருவனுக்கும் உரியனாயன்றி எம்பெருமானுக்கே அடியனாந்தன்மையை எப்பொழுதும் அநுஸந்தித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதாவது திரு மந்திரத்தின் அர்த்தத்தை அநுஸந்திக்கும் போது முதற்பதமாகிய ப்ரணவத்தில் ஜீவனது ஸ்வருபத்தைப் பற்றிய அறிவு வரும் போதும், நம: என்ற சொல்லின் பொருளானப்ரபத்தியைச் செய்யும் போதும், கடைசிப் பதத்தில் மோக்ஷமாகிய பலனைப் பிரார்த்திக்கும் போதும் ஜீவன் தான் வேறொருவனுக்குமன்றி எம்பெருமானுக்கே அடியன் என்ற உணர்ச்சி தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். இந்த மூன்று அம்சங்களையும் நம்மாழ்வார் தம் திருவேங்கடப் பதிகத்தில் காட்டியருளினார்.

5.6 மகாரத்தின் பொருள் விளக்கம்

5. 6.1 மகாரம் ஜீவனைக் கூறல்

மூன்றாவது அக்ஷரமாகிய 'ம்' என்பது கீழ்ச்சொல்லிய அடிமைத் தனத்துக்கு உறைவிடமாகிய ஜீவனைச் சொல்லு கின்றது. இந்த மகாரம் வடமொழியில் மந் என்ற வினைச் சொல்லிலிருந்து தேறுவதாகக் கூறுவர். இந்த மந் வினைப் பகுதிக்கு அறிவு என்றும் அறிவுடைமை என்றும் இரண்டு பொருள்கள் உண்டு. முதற்பொருளில் ஜீவன் அறிவு வடிவானவன் என்றும் இரண்டாவது பொருளில் அறிவுடையவன் என்றும் அர்த்தம் கிடைக்கும். ஆகவே 'மந் வினைப் பகுதியினின்றும்' என்பது தேறுகின்றது. மற்றொரு வழியாலும் 'ம்' என்பது தேறுவதாகக் கூறுவர். அதாவது - வேதநிகண்டுவின்படி நான் என்ற தன்மைப் பொருளைக் கூறும் அஸ்மத் என்ற சொல்லில் 'ம்' என்பதை நடுவெழுத்தாகக் கொண்டு முற்பகுதியான 'அஸ்' என்பதும் பிற்பகுதியான 'அத்' என்பதும் அழிந்த பின் எஞ்சிய 'ம்' என்பது ஜீவனைச் சொல்லும் சொல்லாகத் தேறியதாகவும் கூறுவதுண்டு. மற்றொரு வழியும் உண்டு. ப்ரபத்தியைப் பற்றி விளக்கும் இடத்தில் ப்ரணவத்தைக் கொண்டே ஆத்மாவை எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்கும்படி விதி உள்ளது. இந்த அம்சத்தை அதற்கு மந்த்ரமான ப்ரணவம் காட்ட வேண்டுமே? ஆத்மாவை ஸமர்ப்பிக்க இலக்கான எம்பெருமானோ அகாரத்தால் கூறப்படுகின்றான். உகாரம் அவன் ஒருவனுக்கே சேஷன் என்கிற

Scanned with CamScanner

வரையறையையோ பிராட்டியையோ கூறுகின்றது. ஸமர்ப்பிக்கப் படும் ஆத்மாவைக் கூறச் சொல் வேண்டுமே! 'ம்' என்ற மகாரம்தானே எஞ்சியுள்ளது இந்த மகாரமே ஜீவனைச் சொல்லும் சொல்லாக இருக்க வேண்டும். இதுவும் ஒரு வழி. பின்னும் ஒரு வழி உண்டு. தத்துவஸாகரஸம்ஹிதை முதலியவற்றில் 'க' என்பது தொடங்கி 'ம' என்பது வரையில் உள்ள இருபத்தைந்து எழுத்துக்களையும் இருபத்தைந்து தத்துவங்களைக் கூறுவனவாகக் கூறப்பட்டுள்ளது. இருபத்து நான்காவது எழுத்து வரையில் அசேதநமான இருபத்து நான்கு தத்துவங்களைச் சொல்லி இருபத்தைந்தாவது எழுத்தான 'ம்' என்பது இருபத்தைந்தாவது தத்துவமான ஜீவனைச் சொல்வதாக அந்த ஸம்ஹிதைகள் விளக்குகின்றன. மற்றும் ஒரு ஸம்ஹிதை வெளிப்படையாகவே மகாரம் ஜீவனைக் கூறுவதாகக் கூறுகின்றது. ஆகவே மகாரம் ஜீவனையே கூறும் சொல்லாகும்.

5. 6.2 மகாரத்தால் ஜீவனுக்குத் தேறும் தன்மைகள்

கீழ்க்கூறிய முறைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது மகாரமானது பின்வரும் தன்மையனான ஜீவனைச் சொல்வதாகும். அதாவது (i) ஜீவன் ஞானமே வடிவமாகவுள்ளவன் (ii) ஞானத்தைக் குணமாகவுமுடையன் (iii) இரண்டு முறைகளாலும் ஆநந்த ஸ்வரூபன் (iv) ஞானத்தின் உதவியின்றித் தானே 'நான்' என்று பிரகாசிப்பவன் (V) தான் பிரகாசிப்பதால் வரும் பலனைத் தானே பெறுமவன் (vi) சரீரம் இந்திரியங்கள் இவற்றிலும் வேறுபட்டவன் (vii) ஸத்துவம்: ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் ஸ்வரூபத்தில் இல்லாதவன் (viii) அணுவாயுள்ளவன் (ix) இயற்கையில் எல்லோருக்கும் சேஷியாயுள்ள எம்பெருமானைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டவன். இத்தகைய ஜீவனைக் கூறுகின்றது மகாரம்.

5.6.3 மகாரம் ஜீவ வகுப்பையும் தனிப்பட்ட ஜீவனையும் கூறுதல்

இந்த மகாரம் ஒருமையாயிருந்த போதிலும் ஜீவ வகுப்பு முழுதையும் கூறுவதாய்க் கொள்ள வேண்டும். ஆகவே ஸம்ஸாரிகள் - முக்தி பெற்றவர் - நித்ய ஸாரிகள் ஆகிய மூவகை ஜீவர்களையும் கூறுவதாகக் கொள்ளலாம். அல்லது ப்ரணவத்தை அநுஸந்திக்கிற அந்தந்தக் குறிப்பிட்ட ஜீவனை மட்டும் கூறுவதாகவும் கொள்ளலாம். இந்தப் பொருள் ஸ்ரீ பட்டர் ஸூக்திக்குப் பொருத்தமானது.

5. 7 ஜீவனுடைய குணங்கள் சரீரம் இவைகளும் பகவானுக்கே அடிமைப்பட்டன

இப்படி ப்ரணவத்தைக் கொண்டு சேதநன் தன்னை வேறொருவருக்குமன்றி சரிய: பதியான எம்பெருமானுக்கே அடியனென்று அறிகிறான். இப்படி தன் ஸ்வரூபமே அவனுக்கு அடிமையாயிருக்கும்போது தன் குணங்கள் சரீரம் முதலிய உடைமைகளும் எம்பெருமானுக்கே சேஷமென்பதைத் தனித்துக் கூறவும் வேண்டுமோ? மேலும் ஜீவனைச் சொல்லும் மகாரமே ஜீவனைப் போல் சேஷமாயுள்ள சரீரம் குணம் முதலிய அசேதனங்களையும் கூட்டிக் கொண்டு பொருளாக்குகின்றது என்றும் கூறலாம்.

5.8 உகாரத்துக்கு மற்றொரு பொருள் - பிராட்டி

ப்ரணவத்தில் நடு எழுத்தான உகாரத்துக்கு மற்றொருவருக் கன்றி அவனுக்கே என்ற வரையறையைப் பொருளாகக் கீழே கூறப்பட்டது. அந்த உகாரத்துக்கு வேறொரு பொருள் கூறுவது சிறக்கும். கடச்ருதி உகாரத்திற்கு மற்றொரு பொருளாகப் பிராட்டியைக் கூறுகின்றது. ஆகவே உகாரம் முந்திய அகாரத்தோடு சேர்ந்து பெருமானையும் பிராட்டியையும் கூட்டி இருவருக்கும் ஜீவன் அடியன் என்று பொருளைத் தருகின்றது.

5.8.1 பிராட்டி உகாரத்தின் பொருளாவதில் வரும் ஐயம் - விடை

இப்படி உகாரத்துக்குப் பிராட்டியைப் பொருளாக்கிவிட்டால் மற்றவர்களின் தொடர்பை அறுத்து அவ்விருவருக்கே அடியன் என்று பொருள் எவ்வாறு கிடைக்குமென்று கேட்கலாம். விடை - திவ்ய தம்பதிகள் இருவரையும் குறிப்பிட்டு அவர்களுக்கு ஜீவன் அடியனென்றாலே மற்றவர்களுக்கு அடியனல்லன் என்று, தானே புலப்பட்டுவிடும். பசுவை மட்டும் ஒட்டிவா' என்று கூறாமல் 'பசுவை ஒட்டி வா' என்று மட்டும் சொன்னாலும் பசுவைத்தான் ஒட்டி வருவானேயன்றிக் காளையையும் சேர்த்துக் கொண்டு வரமாட்டான். இப்படி இந்த உகாரம் ஒன்றுக்கே வரையறுத்தல். பிராட்டி என்ற இரு பொருள் கூறுவதில் இடர் ஏதுமில்லை.

Scanned with CamScanner

சுருதிகளிலும் இவ்வாறு ஒரே சொல்லுக்கு இடத்துக்கு ஏற்றவாறு பல பொருள் கூறுவதுண்டு.

5.9 ப்ரணவத்தின் பொருளுக்கு சான்றுகள்: இராமாயணமும் ஆளவந்தார் அருளிய சுலோகமும்

ப்ரணவத்தில் இந்த அர்த்தத்துக்குச் சான்றாக ஸ்ரீமத் ராமாயணத்தில் ஒரு சுலோகத்தை முன்னோர்கள் கூறுவதுண்டு. அந்தச் சுலோகம், முன்பு பெருமாளும் நடுவில் பிராட்டியும் பின் இளைய பெருமாளுமாக வனத்துக்கு எழுந்தருள்வதை விளக்குகின்றது. ப்ரணவத்திலும் அகாரம் பெருமாளையும், உகாரம் பிராட்டியையும், மகாரம் சேஷனான ஜீவனையும் தாமே சொல்லுகின்றன! ப்ரணவமும் அந்தச் சுலோகமும் எவ்வளவு அழகாய் ஒத்திருக்கின்றன. ஆளவந்தார் தாம் அருளிய சுலோகத்திலும் தம்முடைய ஸ்வரூபமும் தம்முடையன என்று சொல்லப்படும் பொருள்கள் அனைத்தும் எம்பெருமானுக்கே எப்பொழுதும் சேஷமானவை என்று அநுஸந்திக்கின்றார். இதனின்றும் ப்ரணவத்தின் எழுத்தின் பொருளையும், வாக்யத்தின் பொருளையும் கண்டுகொள்க.

6. நம: என்ற நடுச்சொல்லின் பொருள் விளக்கம்

சாஸ்த்ரங்களில் பொதுவாய் ஒரு நீதி உண்டு. எந்த வாக்யமும் அதில் சொல்லப்படும் கருத்தையே உறுதி செய்து அதற்கு முரண்பட்ட அம்சங்களை மறுக்கும் திறனுடையது என்பதுவே அந்த நீதி. ப்ரணவத்தில் ஜீவாத்மா ச்ரிய: பதிக்கே சேஷன் என்பதை உறுதி செய்து பொருள் சொல்லியாகிவிட்டது. அந்த உறுதியையே பின்பற்றி அதற்குச் சாதகமாய் நம: என்ற நடுச்சொல் தோன்றுகின்றது. இதன் கருத்து மிகவும் முக்கியமாயிருப்பது பற்றி எல்லோரும் இந்தச் சொல்லை விசேஷித்து ஆதரித்தனர்.

நம: என்ற சொல்லுக்கு மூவகைப் பொருள்: ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் இந்த நம: என்ற சொல்லுக்கு மூன்று வகையான அர்த்தங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன: (i) ஸ்தூலம் - வியாகரண சாஸ்திரத்தைத் தழுவி வரும் பொருள். இதில் எம்பெருமானைக் குறித்துச் சேதநன் தாழ்ந்து நின்று வணங்குகையும் அங்கங்களுடன் ப்ரபத்தி செய்தலும் பொருளாய்க் கிடைக்கும். (ii) ஸூக்ஷ்மம் - எழுத்துக்களின் ஒற்றுமையை

அடிப்படையாகக் கொண்டுள்ள நிருக்தத்தாலே தோன்றும் பொருள். இதில் தானும் தன்னுடையனவும் தனக்கு உரியனவல்ல என்ற பொருளும் தனக்கு ஸ்வாதந்த்ர்யம் இல்லையென்ற பொருளும் தேறும். (iii) பரம் - ரஹஸ்ய சாஸ்த்ரங்களில் கூறிய அக்ஷர நிகண்டுவின்படி வரும் பொருள். இதில் சேதநன் முக்கியமாகச் செய்ய வேண்டிய உபாயமான ப்ரபத்தியால் அடையப்படும் பலன் ஸித்தோபாயமான எம்பெருமான் என்ற பொருள் தேறும்.

இந்த மூன்று வகைப் பொருள்களில் இரண்டாவதான ஸூக்ஷ்மம் என்ற பொருளையே ஆசார்யர்கள் விசேஷமாய் அநுஸந்திப்பார்கள். இதற்குக் காரணம் வருமாறு: இந்த ஸூக்ஷ்ம பொருள் ஸ்வரூபத்துக்கு விரோதிகள் எவை என்று அறிந்து கொள்ளப் பயன்படுகின்றது. தீங்குகளை அறிந்து அவற்றை நீக்கும்படி பிரார்த்திக்க வழி செய்கின்றது. தன் ஸ்வரூபம் எம்பெருமானுக்கே மிக வசப்பட்டது என்ற நிச்சயத்தைத் தருகின்றது. பாகவதர்களுக்கும் தான் அடியன் என்ற உணர்வை உண்டாக்குகின்றது. சிறந்த உபாயமான ப்ரபத்திதேறுகின்றது. இத்துணைப் பயன்கள் வருவது பற்றி இந்த அர்த்த வகையை ஆசார்யர்கள், மிக விசேஷமாய் ஆதரித்தனர்.

இந்த 'நம:' என்ற சொல்லைப் பிரித்துப் பொருள் பார்ப்போம். இச்சொல்லில் ந, ம: என்ற இரண்டு சொற்கள் உள. இரண்டு பதத்தையும் சேர்த்து ஒரு வாக்கியமாக்கிப் பொருள் கூற வேண்டும். கீழ் ப்ரணவத்தால் தன் ஸ்வரூபத்தை உணர்ந்தவனுக்கு இங்கு நம: என்ற சொல் சில விரோதிகள் கழிக்கப்படுவதைக் கூறுகின்றது. இவனுக்கு முன்பு உள்ள விரோதிகள் 'நானே எனக்கு உரியன். இவை எல்லாம் என் உடைமைகள்' என்ற எண்ணம் முதலியன. பின் வரக்கூடிய விரோதிகள் நாராயணாய என்ற சொல்லால் கூறப்போகும் அநுபவங்களைப் பரமபதத்தில் பெறும் போது - 'நானே அநுபவிக்கின்றேன். எனக்காகவே அநுபவிக்கின்றேன்' முதலிய எண்ணங்கள். இவையெல்லாம் கழிய வேண்டியது மிகவும் அவசியமானதால் இதன் முக்கியத் தன்மையைக் கருதி விரோதியைச் சொல்லும் ம: என்ற சொல்லுக்கு முன்னமே அது கழிவதைச் சொல்லும் ந என்ற சொல் பொருந்திவிட்டது.

Scanned with CamScanner

இங்கு ந, ம: என்று பிரிக்கும்போது 'ம:' என்பது 'ம்'. என்பதன் ஆறாம் வேற்றுமையின் ஒருமைச் சொல்லாகும். 'ம்' என்பது ஜீவனைக் கூறுமென்றும் குறிப்பிட்ட சேதநன் அநுஸந்திக்கும் போது நான் என்ற பொருளைத் தருமென்றும் கீழே கூறப்பட்டது. 'ம்' என்ற சொல்லின் ஆறாம் வேற்றுமையில் 'ம:' என்று வரும்போது எனக்கு என்று பொருள் தேறும். 'நான்' என்ற அஹங்காரமும் 'எனக்கு' என்ற மமகாரமும் ஸ்வரூபத்துக்குப் பொருந்தாத விரோதிகள் தாமே! இங்ஙனமே வருகிற மற்றுமுள்ள விரோதிகளான எண்ணங்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்த எண்ணங்களாகிய விரோதிகளையெல்லாம் அவசியம் அறியவேண்டும். இந்த விரோதிகள் தொலைய வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டுமே! விரோதிகளை அறிந்தால் தானே அவற்றை ஒழிக்கும்படி பிரார்த்திக்க முடியும்! ஆதலின் விரோதிகளைப் பற்றிய அறிவு மிகமிகப் பயன்படுகின்றது.

இங்கு நம: என்பதற்குப் பொருள் கூறும்போது ஓம் ப்ரணவத்தில் உள்ள ம் என்ற மூன்றாம் எழுத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ம: என்பதன் ஆறாம் வேற்றுமைப் பகுதிக்குப் பொதுவாய் ஸம்பந்தம் என்று பொருள். இங்குச் சேஷனாந்தன்மை என்கிற குறிப்பிட்ட ஸம்பந்தத்தைக் கூறுவதாகக் கொள்ள வேண்டும். ஆகவே எனக்கு நான் சேஷனல்லேன் என்று பொருள் தேறும். முன் எம்பெருமான் ஜீவனைப் பார்த்து 'நீ எனக்கு அடியன்' என்று கூறியபோது 'நான் எனக்கே அடியன்' என்ற அநாதியான விபரீத எண்ணத்தால் திமிறிக்கொண்டு ஓடியவன் இப்பொழுது நான் எனக்கு அடியனல்லேன்' என்று கூறுவது விசேஷமன்றோ?

இங்கு ஓர் ஆக்ஷேபம்: தானே தனக்குச் சேஷன் என்று இதுவரை இருந்த எண்ணம் இந்த நம: என்ற சொல்லால் மறுக்கப்படுவதாய்க் கீழே கூறப்பட்டுள்ளதே! தானே தனக்குச் சேஷன் என்ற எண்ணம் எப்படி வரும்? அப்பொழுது தானே சேஷியாகவும் சேஷனாகவும் இருப்பதாகவன்றோ ஆகும்! இது பொருந்துமா? உலகில் ஒருவனே தனக்குத் தலைவனாகவும் அடியனாகவும் இருப்பதுண்டா? அப்படியாயின் தன்னிடம் உள்ள சேஷனாந்தன்மைக்கு எதிர்த்தட்டான சேஷியாந் தன்மைக்கும் இருப்பிடமாகத் தன்னையே கூற வேண்டி வருவதால்

வடமொழியில் கூறும் ஆத்மாச்ரயம் என்ற தோஷமாகவன்றோ முடியும்! என்று, இதற்கு ஸமாதாநம் - சேஷனென்பவன் சேஷிக்கு ஏதாவது சிறப்பைச் செய்தாக வேண்டும். அந்தச் சிறப்பைப் பெறுமவன் சேஷியாவான். ஒருவன் தானே தனக்கு ஒரு சிறப்பைச் செய்து கொள்ளலாம், அதனால் வரும் பெருமையையும் தானே அடையலாம். ஆகவே சிறப்பைச் செய்தல் பெறுதல் என்ற தனித்தனியான இரண்டு தன்மைகளும் வேறுபட்டிருப்பதால் ஆத்மாச்ரயம் என்ற தோஷத்துக்கு இடமில்லை. இப்படி தனக்குத் தானே சேஷன் என்ற எண்ணத்தை நம: என்ற சொல்லின் ந என்பது மறுப்பதாகக் கூறுவதற்கு இடர் ஏதுமில்லை .

இப்படி நான் எனக்குச் சேஷனல்லேன் என்று நம: என்ற சொல்லைக் கொண்டு அநுஸந்திப்பதால் வரும் பயன் என்ன? என்று கேட்கலாம். சேஷனாயிருப்பவன் சேஷிக்கு ஏதாவது சிறப்பைச் செய்ய வேண்டும் என்கிற நியதியின்படி ஜீவன்தானே தனக்கு ஏதாவது சிறப்பைச் செய்து கொள்வதாயிருந்தாலும் அந்தச் சிறப்பினால் வரும் பயனை ஜீவன் தன்னுடையதாகக் கருதாமல் எம்பெருமானுக்கே அப்பயன் உரியதென்று நினைக்க வேண்டும்; தான் தனக்குச் சேஷனல்லன் என்ற அநுஸந்தாநத்துக்கு இதுவே பயனென்று உணர்க.

6.1 'நம:' சொல்லால் அஹங்கார-மமகாரங்கள் ஒழிதல்

இப்படி ஜீவனுக்குத் தன் ஸ்வரூபமே தனக்கு உரியதன்று என்று ஏற்பட்டுவிட்டதால் வேறொன்றையும் பற்றி இயற்கையான சேஷியாக மாட்டானென்பதும் கருத்தாலேயே ஏற்பட்டு விடுகின்றது. இவ்வம்சம் இவ்வாறு கருத்தினால் கிடைப்பதன்றிச் சொல்லாலேயே கிடைப்பதற்கும் வழி உண்டு. அதாவது - கிஞ்சித் என்ற ஒரு சொல்லை வருவித்துக் கொண்டு ம:- ஜீவனான எனக்கு. கிஞ்சித் - எதுவும், ந-உடைமையாக இல்லை என்று பொருள் கூறவேண்டும். அப்பொழுது தானும் தனக்கு உரியனல்லன், தனக்கு உடைமையாகக் கூறப்படும் பொருளிலும் தனக்கு உரிமையில்லை என்று வெளிப்படையாகவே தேறிவிடுகின்றது. இதனால் நான் என்கிற அஹங்காரமும் என்னுடையது என்ற மமகாரமும் ஒழிக்கப்பட்டதாகும். இந்த எண்ணங்கள் தாமே ஸம்ஸார பந்தத்துக்கு மூலமானவை!

Scanned with CamScanner

6.2 'நம:' என்ற சொல் ஜீவனுக்கு சுதந்திரம் இன்மையைக் கூறல்

கீழே ப்ரணவத்தில் நடு எழுத்தான உகாரம் வேறொருவனுடைய ஸம்பந்தத்தை அறுப்பதாகக் கூறியபடியால் எம்பெருமானை அன்றி வேறொருவனுக்கும் ஜீவன் சேஷனல்லன் என்று ஏற்பட்டு விட்டது. ஆகவே வேறான தனக்கும் தான் சேஷனல்லன் என்பதும் தேறிவிட்டதே! ஆதலின் நம: என்னும் போது நான் எனக்குச் சேஷனல்லேன் என்று கூறுவது இரட்டிப்பாகிவிடும். அதனால் இங்கு கோபலீவர்தந்யாயத்தைக் கொண்டு விடை தரவேண்டும். அதாவது - 'மாடுகளைக் கொண்டு வா, காளையைக் கொண்டு வா' என்று கூறினால் மாடுகள் என்பதிலேயே காளை அடங்கியிருந்தாலும் தனித்துக் காளையைக் குறிப்பிட்டுச் சொல்லிய படியால் முதலில் சொல்லிய மாடுகள் என்பதில் காளை அடங்கவில்லை என்றே கருத்துக்கொண்டு சொல்லியதாய் இசைய வேண்டும். அவ்வாறே இங்கும் ந,ம: என்று பிரித்து 'நான் எனக்குச் சேஷனல்லேன்' என்று தன்னைக் குறிப்பிட்டுக் கூறுவதாகக் கொள்ளில் ப்ரணவத்தில் நடு எழுத்தான உகாரத்தால் மற்றவரோடு தொடர்பை அறுக்கும்போது தன்னைத் தவிர மற்றவர்களைக் குறிப்பிட்டதாகவும் இங்கு தன் தொடர்பையும் அறுத்துக் கொள்வதுமாகவே கொள்ள வேண்டும். மற்றொன்றும் கூறலாம் - ப்ரணவத்தில் நடு எழுத்தான உகாரத்தாலேயே தன் தொடர்பையும் அறுத்துக் கொண்டு விட்டதாய்க் கூறிவிட்டாலும் மறுபடி இங்கு நம: என்னும்போதும் தனக்குத் தான் சேஷனல்லன் என்ற பொருளைக் கூறுவது எவ்வகையிலும் தனக்குத் தன்பால் உரிமை இல்லை' என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே என்பதும் ஒரு வழி. மற்றும் ஒரு வழி உண்டு. ப்ரணவத்தின் உகாரத்தாலேயே தானும் தனக்குச் சேஷனல்லன் என்று தேறிவிட்டபடியால் மறுபடி அந்தப் பொருளையே இங்குச் சொல்லாமல் 'ஸ்வாதந்த்ர்யம்' என்ற சொல்லை வருவித்துக் கொண்டு ம:- எனக்கு, ஸ்வாதந்த்ர்யம்- சுதந்திரம், ந-இல்லை என்றும் பொருள் கூறித் தனக்கு இருப்பதாகத் தவறாகக் கருதிய சுதந்திரத்தை உண்மையில் இல்லையென்று அநுஸந்தித்ததாகவும் கூறுவது உண்டு.

6.2.1 ஜீவனுக்குச் செயலாற்றும் தன்மை பற்றிய விஷயங்கள்

இந்த ஜீவனுக்குச் செயல் புரியும் தன்மையாகிய கர்த்ருத்வம் உண்டு. ஆனால் கீழே எம்பெருமானுக்குச் சேஷன் என்று

தன்னைப் பற்றி அநுஸந்திப்பதுடன் தனக்கு உள்ள செயல் புரியும் தன்மையும் எம்பெருமான் அளித்ததே என்று சேர்த்து அநுஸந்திக்க வேண்டும். உலகில் ஒரு பிரபுவுக்குப் பணியாளன் உண்டு. அவன் செயல் புரிகின்றான். ஆனால் அந்தத் தன்மை யஜமான் கொடுத்தன்று. பணியாளன் தானாகவே தான் ஒரு செயலைச் செய்கின்றான். இங்கோ சேஷியான எம்பெருமானுக்கே முழுமையான சுதந்திரம் உண்டு. ஜீவனுக்குச் செயலாற்றும் தன்மையை எம்பெருமானே அளிக்கின்றான். அதனால் வரும் பயனும் எம்பெருமானுக்கே உரியது. ஜீவன் செயல் புரிவதும் எம்பெருமான் இட்ட வழக்காகவே இருக்கும். அந்தச் செயலே எம்பெருமானால் வந்ததன்றோ! ஆகவே எம்பெருமானுக்குச் சேஷன் என்ற கீழ்க்கூறிய உணர்ச்சியுடன் செயல் புரியும் தன்மையும் தனக்கு எம்பெருமானால் வந்ததென்று அநுஸந்திக்க வேண்டும்.

ஒன்றுக்குக் காரணமாகும் தன்மை சேதநர் - அசேதநம் - ஈச்வரன் ஆகிய மூன்று தத்துவங்களுக்கும் பொதுவானது . செயலாற்றும் தன்மையோ ஜீவர்களுக்கும் ஈச்வரனுக்கும் பொதுவாகும். எம்பெருமானால் வந்த செயலாற்றும் தன்மை பத்தர்-முக்தர்-நித்யர் என்ற மூவகைச் சேதநருக்கும் பொதுவாகும். சுதந்திரனாய்ச் செயலாற்றும் தன்மையோ எம்பெருமான் ஒருவனுக்கே உள்ளது. வேறு எவருக்கும் கிடையாது...

உண்மை இங்ஙனம் இருக்க, சில ஜீவர்களுக்குத் தாம் 'வேறொருவரை எதிர்பாராமலே சுதந்திரமாய்ச் செயல் புரியும் ஆற்றல் உடையர்' என்ற எண்ணம் வருகின்றது. இதற்குக் காரணம் அநாதியாக வருகின்ற கர்மம்தான். மேலும் இம்மைப் பயன்களையே சொல்லும் சாஸ்த்ரங்களில் அவர்கள் உட்புகுந்து அவற்றின் கருத்து வரையும் போகாமல் மேலெழுந்த வாரியாக மட்டும் பார்ப்பதால் தாமும் சுதந்திரமாய்ச் செயல் புரியவல்லர் என்ற தவறான எண்ணம் வருகின்றது. இந்த எண்ணத்தை ஒருவன் விட்டுவிட்டால் மறுமைப் பயன்களைப் போதிக்கும் சாஸ்த்ரங்கள் கூறும் அம்சங்களில் உறுதியான நிலையுடையவன் என்னலாம்.

6.2.2 பாகவத கைங்கர்யம் பற்றிய விஷயங்கள்

(i) எம்பெருமான் ஜீவர்களைப் பாகவதர்க்கும் அடிமையாக்குதல்: *இப்படி ப்ரணவத்தால் ஜீவன் எம்பெருமானுக்கே*

Scanned with CamScanner

சேஷனென்றும் நம: என்னும் சொல்லால் அவனாலேயே நியமிக்கப்படுபவனென்றும் ஏற்படுவதால் இந்த இரண்டு பதங்களாலும் ஜீவனுடைய ஸ்வரூபத்தின் உண்மை விளக்கப்பட்டதாகின்றது. சேஷியாயுள்ளவன் சேஷனாயுள்ளவனைத் தன் இஷ்டப்படி பயன்படுத்திக் கொள்வது முறை. இதைப் பெரியோர்களும் கூறியுள்ளனர். இம்முறையில் ஸ்வதந்த்ரனாய் ஸ்வாமியாயுள்ள எம்பெருமான் சேஷனான ஜீவனைத் தன் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளக் கருதும்போது தனக்கு அடியார்களான பாகவதர்களுக்கும் அடிமையாக்குகின்றான். அவனுக்கு உள்ள சுதந்திரத்தாலே சேஷனான ஜீவனை அவ்வாறே செய்யச் சக்தி உண்டு. அவன் சேஷியாதலால் அவ்வாறு செய்ய உரிமையும் உண்டு. கீதையில் கண்ணன் தன்னிடம் பக்தி மிகுத்த ஞானியைத் தனக்கு உயிராகவே பேசியுள்ளான். ஆதலின் தனக்கு வரும் பெருமையைக் காட்டிலும் தன் அடியார்களுக்கு வரும் பெருமையே அவனுக்கு மிகவும் இஷ்டமானது. ஆகவே எம்பெருமானுக்கு அடியனாயிருத்தல் என்பது அவனடியார்களுக்கும் அடியனாயிருத்தல் வரை போய்த் தான் நிறைவு பெறுகின்றது.

(ii) **பகவத் கைங்கர்யத்தின் எல்லைபாகவதகைங்கர்யம்:** மேலே நாராயண சப்தத்தின் மீது உள்ள நான்காம் வேற்றுமை உருபுக்குக் கைங்கர்யத்தைப் பிரார்த்திப்பது பொருளாகக் கூறப்படப்போகின்றது. பகவானுக்குச் செய்யும் அந்தக் கைங்கர்யமும் அவனடியார்களுக்குச் செய்யும் கைங்கர்யம் வரை போய்த்தான் பூர்த்தியாகின்றது. சேஷனாந் தன்மையால் வருவது தானே கைங்கர்யம்! தன்னை அடியனென்று நினைத்தால் எதாவது கைங்கர்யம் செய்தாக வேண்டுமென்று தோன்றுகின்றது. எம்பெருமானுக்கு அடியனாயிருத்தல் அவனடியார்களுக்கும் அடியனாவது வரை செல்வது போல் அதனால் வரும் பகவத் கைங்கர்யமும் அவனடியார்களுக்கும் கைங்கர்யம் செய்வது வரை சென்று தானே பூர்த்தியடையும்!

(iii) **ஒருவனே சேஷனாகவும் சேஷியாகவும் இருப்பதில் இடரின்மை:** இவ்வாறு சேதநன் பாகவதர்களுக்கும் சேஷனாவதானால் இவனும் ஒரு பாகவதனாகையால் மற்ற பாகவதர்களுக்கு

இவன் சேஷியாகவும் ஆவதால் ஒருவனுக்கே சேஷனாயிருத்தல் - சேஷியாயிருத்தல் என்ற இரண்டு தன்மைகளும் வருவது முரண்படுமே என்று கேட்கலாம். இதற்கு விடை - சேஷனாயுள்ளவன் சேஷிக்கு ஒரு சிறப்பைச் செய்ய வேண்டும். சேஷி என்பவன் சேஷன் செய்யும் சிறப்பைப் பெறுமவனாயிருக்க வேண்டும். ஒருவன் மற்றொரு பாகவதனுக்குச் சிறப்பைச் செய்யும் முறையில் சேஷனாகவும் மற்றவன் செய்யும் சிறப்பைப் பெறுமவன் என்ற முறையில் சேஷியாகவும் ஆவதில் இடர் ஏதும் இல்லையே! ஆதலின் ஒவ்வொரு பாகவதனும் மற்றொரு பாகவதனைத் தனக்குச் சேஷியாகவும் தன்னை அவனுக்குச் சேஷனாகவும் அநுஸந்திப்பது பொருத்தமே. அங்ஙனமே மற்றவனும் இவனைத் தனக்குச் சேஷியாகவும் தன்னை இவனுக்குச் சேஷனாகவும் அநுஸந்திப்பான். ஆதலின் ஒருவனுக்கே இவ்விரண்டு தன்மைகளும் வருவதில் இடர் ஏதுமில்லை.

(iv) **சேஷ சேஷி பாவத்திலும் வரையறை :** இப்படி சேஷன், சேஷி என்று உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சிகள் எல்லாப் பாகவதர்களுக்கும் ஒத்திருந்தாலும் வணங்குதல் தொண்டு புரிதல் முதலிய உடலின் செயல்களில் வரையறை உண்டு. இந்த வரையறை ஸ்வதந்த்ரனான, எம்பெருமானுடைய கட்டளையான சாஸ்த்ரத்தைத் தழுவி வந்ததாகும். உதாஹரணமாய் ஓர் ஆசார்யனிடம் ஒரு சிஷ்யன் ஆச்ரயிக்கின்றான். இருவரும் பாகவதர்களே. கீழே மற்றவர்களுக்குச் கூறியது போல் ஒருவருக்கொருவர் சேஷராகவும் சேஷியாகவும் உள்ள உணர்ச்சிகள் மட்டும் அவர்களிடமும் உண்டு. ஆனால் ஸேவித்தல், பணிவிடை புரிதல் முதலிய செயல்களுக்கு வரையறை உண்டு. ஆசார்யன் சிஷ்யனை வணங்குதலோ பணிவிடை செய்தலோ பொருந்துமா? இது சாஸ்திரத்தால் ஏற்பட்ட வரையறையாகும்.

6.2.3 பாகவதர்கள் யார்?

இங்கு பாகவதர் (அடியார்) என்ற சொல் எத்தகைய மனிதரைக் குறிக்கும் என்ற உண்மையை அறியவேண்டும். எம்பெருமானுக்கே தாம் அடியர் என்ற உணர்ச்சியுடன் அவனே

Scanned with CamScanner

பரம்பொருள் என்ற உறுதியுடையரே உண்மையான பாகவத ரென்று கொள்ளவேண்டும். ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்ட பத்தர்களும் இந்த உணர்ச்சியையும் உறுதியையும், உடையரானால் அவர்கள் பாகவதர்களாவர். இவ்வாறே நித்யஸூரிகளும் முக்தி பெற்றவரும் இவ்வகுப்பில் உள்ளவர். இத்தகைய பாகவதர் களுக்கு அடிமையாயிருத்தலே திரு மந்திரத்தின் உயிர் நிலையான பொருளாகும்.

6.3 நம: சப்தம் ப்ரபத்தியைக் கூறுதலும் அதற்குச் சான்றுகளும்

இப்படி ஸ்வதந்த்ரனாய் சேஷியான எம்பெருமான் நடத்துகிறபடி நடக்க வேண்டியவனான சேதநன் அவன் செய்விக்கின்ற சிறந்த உபாயத்தைச் செய்து அவன் திருவுள்ளத்தை உகப்பித்து அவனிடம் பலன் பெற வேண்டியவனாயுள்ளான். ஆதலால் இந்தச் சேதநன் எம்பெருமானை வசப்படுத்த வேண்டியது மிக அவசியம். அவனை வசப்படுத்த ஏற்ற உபாயம் சரணாகதி தான். இந்தச்சரணாகதி த்வயத்தில் சரணமடைகின்றேன் என்ற சொல்லாலும் சரமசுலோகத்தில் சரணமாக என்னை அடை என்ற சொல்லாலும் வெளிப்படையாக அவனவன் தகுதிக்கு ஏற்றவாறு சொல்லப்பட்டுள்ளது. இது இங்குத் திருமந்திரத்தில் 'நம:' என்ற சொல்லில் கருத்து வகையில் தேறுகின்றது.

இவ்வாறு கருத்து வகையாலேயன்றி நம: என்ற சொல்லே சரணாகதியை வெளிப்படையாய்க் கூறுவதாகவே கொள்ள முடியும். அதன் விளக்கம் வருமாறு: (i) தமயந்தி சரணமடையும் இடத்தில் நம: என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் நம: என்பதே ப்ரபத்தியைக் கூறுகின்றது. (ii) கண்ணனைச் சரண மடையும்படி மார்க்கண்டேயர் பாண்டவர்களுக்கு உபதேசித்த பின் பாண்டவர்கள் நம: என்பதைச் செய்தார்களென்பதாலும் சரணாகதியே நம: என்ற சொல்லுக்குப் பொருள் என்று தேறுகின்றது. (iii) மந்த்ரராஜ பதஸ்தோத்ரத்தில் நம: என்ற சொல் ஆத்மாவை ஸமர்ப்பித்தலாகிய சரணாகதியைச் சொல்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (iv) திருமந்திரத்தில் நம: என்ற சொல்லுக்குச் சில வகையாய்ப் பொருள் கூறும்போது இந்தச் சொல் நேரிடையாகவே நாம் செய்ய வேண்டிய உபாயமான சரணாகதியைச் சொல்வதாகவும் ஒரு பொருள் உண்டு. (v) பெரியோர்களும் 'ஸ்வாஹா' என்ற சப்தம் அக்நியில் ஹோமப்

பொருளை இடுதல் என்ற அர்த்தத்தைக் கூறுவது போல் நம: என்ற சொல்லும் ஆத்மாவை ஸமர்ப்பித்தல் என்ற ப்ரபத்தியைக் குறிப்பிடுவதாய்க் கூறியுள்ளனர். ஆக இம்முறைகளால் நம: என்ற சொல்லே தன்னோடு ஸம்பந்தத்தை அறுத்துப் பொறுப்பை எம்பெருமானிடம் ஸமர்ப்பித்தலாகிய, அங்கங்களுடன் கூடிய பரந்யாஸத்தைக் காட்டுவதாகுமெனத் தீர்ந்தது.

6.3.1 ஸம்பந்த உணர்ச்சியே ப்ரபத்தி என்பதன் உட்கருத்து

ஆளவந்தார் தாம் அருளிச் செய்தது. பிராட்டி விஷயமான சது:சுலோகியில் தாம் அவளுக்கு அடியரென்பதாலும் சரணம் அடைந்தவர் என்பதாலும் துணிந்து துதிக்க வந்ததாய் அருளிச் செய்துள்ளார். அடியர் என்பது ப்ரணவத்தால் ஏற்பட்ட ஸம்பந்த உணர்வையும் சரணமடைந்தவரென்பது நமஸ்ஸில் கூறிய உபாயத்தையும் வரிசையாய் கூறுவதாக ஏற்றுக் கொண்ட சிலரே பின் அடிமை என்ற ஸம்பந்தத்தை உணர்வதே ப்ரபத்தி என்று இரண்டையும் ஒன்றாக்கி கூறுவது முரண்பாடுபோல் தெரிகின்றது ஊன்றி நோக்கினால் முரண்பாடு இல்லையென்று உணரலாம். அடியர் என்ற ஸம்பந்த உணர்ச்சியே ப்ரபத்தி முதலிய உபாயத்தைச் செய்யத் தூண்டு கோலாயிருப்பதால் அவ்வறிவு - எல்லாவற்றிலும் மிக முக்கியமானது என்ற நோக்கத்துடன் அவ்வறிவையே உபாயமாகக் கூறி வைத்தார்கள். அவ்வறிவு எப்படி முக்கியம் என்பதை விளக்குவோம். தன்னை எம்பெருமானுக்கு அடியன் என்று உணர்ந்தால் தன் ஸ்வரூபத்துக்கு ஏற்ற பயன் எது என்று சிந்தித்துப் பார்க்கத் தோன்றும். அந்த அறிவு செல்வம் முதலிய இம்மைப் பயன் தனக்குப் பொருந்தாதவை என்று காட்டி அவற்றில் வெறுப்பு ஏற்படச் செய்கின்றது. தன் ஸ்வருபத்துக்கு ஏற்ற பெரும் பயன் மோக்ஷமே என்று காட்டி அதைப் பெறுவதில் ஆசையையும் விரைவில் பெற வேண்டுமென்ற ஆர்வத்தையும் உண்டாக்கு கின்றது. பின் அதற்கு ஏற்றப்ரபத்தியைச் செய்து ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளைச் சேர்ந்து நித்ய கைங்கர்யம் செய்து உஜ்ஜீவிக்கும்படி செய்கின்றது. இவ்வனைத்துக்கும் முதற்காரணம் எப்பெருமானோடு ஜீவனுக்கு உள்ள அடிமை என்னும் ஸம்பந்த , உணர்ச்சிதானே! இந்த முக்கியத் தன்மையைக் கருதியே சிலர் ஸம்பந்த உணர்ச்சியையே மோக்ஷத்துக்கு உபாயமாகக் கூறினர்.

Scanned with CamScanner

7. நாராயண சப்தம் - பொருள் விளக்கம்

இனி நாராயண சப்தம். நம: என்ற சொல் எம்பெருமானை வசப்படுத்தும் உபாயமான ப்ரபத்தியைக் கூறுவதாகக் கூறப்பட்டது. இந்த ப்ரபத்திக்கு இலக்கு யார்? எம்பெருமானே. அவன்தானே காப்பவனாயும் சேஷியாயுமுள்ளவன் அவனை எல்லோரையும் நல்வழியில் நடத்துமவன் முதலிய அர்த்தங்களைக் கொண்டு விளக்குகின்றது நாராயண சப்தம். அந்தச் சொல்லே எம்பெருமானை ப்ரபத்தியால் வசப்படுத்து பவனாய் அவனாலே காக்கப்படுமவனாய் அவனுக்குச் சேஷனாயுள்ள சேதநனையும் அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டவன் முதலிய முறையில் வெளியிடுகின்றது.

நார சப்தத்தின் பொருள்: நரன் என்ற சொல்லுக்கு அழிவற்றவன் என்ற பொருள் உண்டு. இங்கு அழிவற்ற எம்பெருமானைக் கூறும். 'ரீங்' என்ற வினைப்பகுதிக்கு அழிதல் என்று பொருளாதலால் அதனின்று 'ர' என்று உருவாக்கி எதிர் மறைச் சொல்லான 'ந' என்பதைச் சேர்த்து அழிவற்றவன் என்று பொருள் கொள்வதில் இடர் ஏதும் இல்லையே! 'ரு' என்னும் வினைப் பகுதியினின்று 'நர' என்று உருவாக்கினால் எல்லோரையும் நல்வழியில் நடத்துமவன் என்று தேறி எல்லோரையும் நல்வழியில் நடத்துமவனான எம்பெருமானைக் கூறும். நரனாகிய எம்பெரு மானிடமிருந்து தோன்றிய அனைத்தும் நாரங்கள். நாரங்களுக்கு அயநமாயுள்ளவன் எம்பெருமான்.

அயந சப்தத்தின் பொருள் : அய நம் என்பதற்கு உபாயம் என்று பொருள். அப்பொழுது நாரங்களாகிய ஜீவர்களுக்கு உபாயம் என்று தேறும். அயநம் என்ற சொல்லுக்கு இருப்பிடம் என்றும் பொருள் உண்டு. நாரங்களாவன-எம்பெருமானிட மிருந்து தோன்றிய சேதநர்களும் அசேதங்களும். அவற்றின் உட்புகுந்தும் கலந்தும் நியமிப்பவனாதலின் அவற்றை இருப்பிடமாக உடையவன் என்று பொருள் தேறுகின்றது.

நாராயணன் காரணம் - ரக்ஷகன் - சேஷி : கீழே ப்ரணவத்தால் எம்பெருமான் காரணமென்றும் ரக்ஷகனென்றும் சேஷியென்றும் தோன்றுமென்று கூறப்பட்டது. இங்கு நாராயண சப்தத்தின் பொருளில் எல்லாம் எம்பெருமானிடமிருந்து தோன்றியவை என்றதால் அவன் காரணம் என்பதும், நல்வழியில் நடத்துமவன்

என்றதால் ரஷித்தலும், உபாயமாகவும் அந்தர்யாமியாகவும் இருப்பவன் என்றதால் அவனே சேஷியென்றும் தேறுவதால் ப்ரணவத்தில் கூறிய பெருமைகளே நாராயண சப்தத்நில் விளக்கப்பட்டனவாகின்றன.

முடிவில் எம்பெருமானே முக்கியப் பொருளாதல்: ப்ரணவம் சுருக்கமாய்ப் பொருள் கூறுவது. நாராயண எனும் சொல் அதையே விரிவாய்க் கூறுவது. இந்த இரண்டு முறையிலும் ஒரு விசேஷம் உண்டு. ப்ரணவம் ஜீவன் எம்பெருமானுக்குச் சேஷன் என்ற பொருளைத் தந்து ஜீவனை முக்கியமாய்க் காட்டும். நாராயண சப்தமோ எம்பெருமான் ஜீவனுக்கு அயநமாயுள்ளவன் என்ற பொருளைத் தந்து எம்பெருமானை முக்கியமாகக் காட்டும். இப்படி மாற்றிச் சொல்லியது ஸ்ரீமத் ராமாயணம் கூறும் முறையைத் தழுவியதாகும். அதாவது இராமனுக்குத் தம்பியாகிய லஷ்மணனையும் லக்ஷ்மணனுக்குத் தமையனாகிய இராமனையும் என்று கூறும் சுலோகம் உண்டு. முந்தியதில் சேஷனாகிய லஷ்மணன் முக்கியனாவான். பிந்தியதில் சேஷியான இராமன் முக்கியனாகின்றான். எப்படி இருந்தால் என்ன? சொல்லில் சேஷன் ப்ரதாநனாய்த் தோன்றினாலும் கருத்தில் சேஷிதானே ப்ரதாநனாயிருப்பான்!

7.1 நாராயண சப்தத்திற்குத் தத்புருஷ - பஹுவ்ரீஹி ஸமாஸங்கள் வாயிலாகப் பொருள்கள்

நாராயண சப்தம் 'நார', 'அயநம்' என்ற இரண்டு பதங்கள் சேர்ந்த ஒரு சொல்லாகும். இதை (i) நாராணாம் + அயநம் (தத்புருஷ ஸமாஸம்) என்றும், (ii) நாரா: + அயநம், யஸ்ய (பஹுவ்ரீஹி ஸமாஸம்) என்றும் இருவகையாகப் பிரித்துப் பின் வருமாறு பொருள் கொள்ளலாம்.

7.2 நாராயண சப்தம் - தத்புருஷ ஸமாஸப் பொருள்

நாராயணன் என்னும் சொல் நார - அயநம் என்ற இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு சொல்லாகும். இரண்டு சொற்களை ஒரு சொல்லாகச் சேர்ப்பதுவே ஸமாஸமெனப்படும். இந்த நாராயண என்ற சொல்லை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

தத்புருஷ ஸமாஸம். இதைத் தமிழர் வேற்றுமைப் புணர்ச்சி என்பர். நாராணாம் + அயநம் - நாராயண . இதனால் நாரங்களுக்கு

Scanned with CamScanner

அயநமாயிருப்பவன் என்ற பொருள் கிடைக்கும். இதில் உள்ள பதங்களைப் பிரித்துப் பொருள் நோக்குவோம். இதில் முதற்சொல் நார என்பது. நர என்ற சொல்லின் வழியாகத்தான் அது உருவாகின்றது. நரன் என்ற சொல்லே எம்பெருமானைச் சொல்ல வல்லது. நர எனும் சொல் நல்வழியில் நடத்துதல் என்ற பொருள் கொண்ட ந்ரு என்னும் வினைப்பகுதியினின்று தேறுவதால் பிராணிகளுக்கு நல்லறிவைக் கொடுத்து நல்வழிப்படுத்தும் நாராயணனைக் கூறும். மேலும் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையும், ஸஹஸ்ர நாமமும் நரசப்தமே எம்பெருமானைக் கூறுவதாக வெளியிட்டுள்ளது.

'ர' என்பது சேதந-அசேதங்களைக் கூறல்: மற்றொரு முறையும் உண்டு. நர என்ற சொல்லில் உள்ள ந-ர என்ற இரண்டு எழுத்துக்களும் இரண்டு சொற்களாகும்.

'ர' எனும் சொல் மாறுதல் என்னும் பொருள் கொண்ட 'ரீங்' என்ற வினைப் பகுதியினின்று உருவாகிறது. ஆகவே ர எனும் சொல் மாறுபாடு அடையும் வஸ்துவைக் காட்டுகின்றது. அசேதநமான வஸ்து மற்றொன்றாக மாறும் தன்மையதாதலின் ர என்ற சொல் அசேதநத்தைக் கூறும். மண் குடமாக மாறவில்லையா? அவ்வாறே இந்தச் சொல் சேதநனான ஜீவனையும் கூறும். ஜீவனுக்கு ஸ்வரூபத்தில் மாறுபாடு கிடையாதாயினும் ஸ்வபாவத்தில் மாறுபாடு உண்டாதலின் ர என்ற சொல் ஜீவனையும் கூறுவதில் இடரில்லை . இந்த 'ர' என்பதற்கு முன் வேறுபட்ட என்ற பொருள் கொண்ட 'ந' எதிர்மறைச் சொல்லைக் கூட்டினால் நர என்று தேறும்.

7.2.1 'நர' என்னும் சொல் பகவானைக் கூறுதல்

இப்பொழுது இச்சொல்லுக்குப் பொருளைப் பார்க்கும்போது ஸ்வரூபத்தில் மாறுப்பாட்டை உடையதான அசேதநத்திலும் ஸ்வபாவத்தில் மாறுபாட்டை உடைய சேதநத்திலும் வேறுபட்ட இந்த இருவகை மாறுபாடும் அற்றவனான எம்பெருமானைக் கூறுவதென்பது விளங்கும். இந்த முறையில் பல சொற்கள் உருவாவதுண்டு. உதாஹரணமாய்-நடக்க வல்லது என்ற பொருளைக் கூறும் 'க' என்ற சொல்லுக்கு முன் எதிர் மறைச் சொல்லான 'ந' என்பதைச் சேர்த்து 'நக' என்று ஆக்கி ஜங்கமப் பொருளில் வேறுபட்ட மரம்-மலை முதலிய ஸ்தாவரப்

பொருளைக் கூறவில்லையா? ஒருவன் என்ற பொருள் கொண்ட 'ஏக' என்ற சொல்லுக்கு முன் 'ந' என்பதைச் சேர்த்து 'நைக' என்று ஆக்கி இரண்டு முதலிய பொருள்களைச் சொல்லவில்லையா? அவ்வாறே இங்கும் நர என்ற சொல் எவ்வகை மாறுபடும் அற்றவனான எம்பெருமானைக் கூறுவதென்று உணர்க.

எம்பெருமானுக்கு ஸ்வபாவம் மாறுதல் - கேள்வி - விடை: இங்கு ஒரு கேள்வி - எம்பெருமானுக்கு ஸ்வரூபத்திற்போல் ஸ்வபாவத்திலும் மாறுபாடு இல்லை என்று கீழ் கூறப்பட்டதே! அவனுக்கு ஸங்கல்பம் மகிழ்ச்சி எல்லாம் உண்டு என்று சுருதியும் கூறுகின்றதே! அவனுடைய ஸ்வபாவமான ஞானம்தானே ஸங்கல்பம் மகிழ்ச்சி முதலியனவாக மாறுபாட்டை அடைகின்றது. ஆகவே ஸ்வபாவத்தில் மாறுபாடுகள் இருப்பது தெரிகின்றதே! என்று. விடை-அந்த ஸங்கல்பம் மகிழ்ச்சி முதலியனவெல்லாம் அவனுடைய உயர்ந்த குணத்திலே சேர்வன. அவனுக்கு ஸ்வபாவத்திலும் மாறுபாடு இல்லையென்று கூறுவதன் உட்கருத்து வேறு. அதாவது அவனுடைய ஞானத்துக்குச் சுருக்கம் மலர்ச்சி முதலிய மாறுபாடுகள் கிடையா என்பதே முடிவு. அவனது ஞானம் ஸங்கல்பமாகவும் மகிழ்ச்சியாகவும் ஆவதெல்லாம் அடியார்களின் நலத்துக்காக ஏற்பட்டவையாதலின் அந்நிலைகள் போற்றுதற்கு உரியனவாகும்.

ஈச்வரனே ப்ரபஞ்சமாகப் பரிணமித்தல் : பின்னும் ஒரு கேள்வி: எம்பெருமானே ப்ரபஞ்சமாகப் பரிணமிக்கின்றான் என்று சொல்லப்படுகின்றதே! அது எவ்வாறு பொருந்தும்? அவனுக்குத் தான் மாறுபாடு கிடையாதே! என்று. ஸமாதாநம் - இந்த மாறுபாடு எம்பெருமானுடைய ஸ்வரூபத்தைப் பற்றியதன்று. ப்ரபஞ்சம் என்பது என்ன? சேதமும் அசேதமும் தானே! பிரளய காலத்தில் பெயரும் உருவமும் அறிய இயலாது சேதந - அசேதநங்கள் எம்பெருமானோடு ஒட்டிக் கிடந்து ஸூக்ஷ்ம மான நிலையில் இருப்பது காரணமான நிலை. அந்தக் காரண நிலையில் உள்ள சேதந அசேதநங்களெல்லாம் எம்பெருமானுக்குச் சரீரமாய் உள்ளவை தாமே! அவையே பெயரும் உருவமும் கொண்டனவாய் படைக்கப்படும்போது காரியப் பொருளான ப்ரபஞ்சமாகின்றன. அவையும் எம்பெருமானுக்குச் சரீரமானவையே. ஆகவே சேதந அசேதநங்களை ஸூக்ஷ்ம நிலையில் சரீரமாகக் கொண்டுள்ள எம்பெருமானே ஸ்தூல நிலையில் சேதந - அசேதங்களைச்

Scanned with CamScanner

சரீரமாகக் கொண்ட எம்பெருமானாக மாறுவதாகக் கூறுகின்றது சாஸ்த்ரம். இந்த மாறுதல் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தைப் பற்றியதன்று. சரீரமான சேதந - அசேதங்களைப் பற்றியதே யாகும். சிறுவன் வாலிபனாக மாறுகின்றான். அந்த ஜீவனது ஸ்வரூபத்தில் எந்த மாறுதலும் இல்லையே! சிறுவனது சரீரமே வாலிப சரீரமாக மாறுகின்றது. அங்ஙனமே இங்கும் கொள்ள வேண்டும்.

7.2.2 நார சப்தத்தில் அடங்கிய பொருள்கள்

(i) **ஸகல வஸ்துக்களும் எம்பெருமானிடமிருந்து தோன்றுவதைக் கூறுதல் :** நரன் என்ற சொல் எம்பெருமானைக் குறிக்கும். நரனிடமிருந்து தோன்றியவை ஜலங்கள் என்று மநுஸ்ம்ருதி கூறும். ஜலத்தை மட்டும் அவனிடமிருந்து பிறந்ததாகக் கூறிய போதிலும் பூமி - தேஜஸ் - வாயு - ஆகாசம் முதலிய மற்ற தத்துவங்களையும் குறிப்பினால் கூறுவதாகக் கொள்ள வேண்டும். பாரதம் நரனிடமிருந்து பிறந்த எல்லா வஸ்துக்களுமே நாரங்கள் என்று தெளிவாகவே கூறுகின்றது.

(ii) நாரம் என்ற சொல்லுக்கு நரனைச் சேர்ந்தவை என்றும் பொருள் கூறலாம். அப்பொழுது நரனான எம்பெருமானைச் சேர்ந்த எல்லாமே வெளிப்படையாய்க் கூறப்பட்டனவாகின்றன. அவையாவன - அவன் ஸ்வரூபத்தை உணரும் போதே அவசியம் அறிந்தேயாக வேண்டியனவான மாறுபடாத தன்மை - ஞான வடிவனாயுள்ளமை - ஆநந்த வடிவனாயுள்ளமை - அளவிட முடியாமை - குற்றமற்றமை ஆகியனவும் மற்றும் கருணை, அன்பு முதலிய குணங்களும் திருமேனியும் சேதம் - அசேதம் ஆகிய அனைத்தும் எல்லாம் அவனைச் சேர்ந்தவை தாமே!

(iii) நார சப்தம் ஜீவர்களின் குழுவைக் கூறுதல் : நார என்ற சொல்லே ஜீவர்களின் கூட்டத்தைச் சொல்வதாகவும் ப்ர மாணங்கள் கூறுகின்றன. அதாவது - கீழே கூறியபடி நர என்னும் சொல் அழிவற்ற ஜீவனைக் கூறுகின்றது. ஜீவன், சரீரம் இந்த்ரியம் முதலியவற்றினும் வேறுபட்டவனென்று முன்பே விளக்கப் பட்டது. இவனுக்கு ஸ்வபாவத்தில் சில மாறுதல்கள் உண்டு. அவையாவன - சரீரஸம்பந்தத்தைப் பெறுகை - ஞானம் சுருங்குதல் மலருதல் முதலியன. ஸ்வரூபத்தில் வேறு பெயரிட்டு அழைக்கும்படியான எந்த மாறுதலும் கிடையாது.

(iv) நார சப்தம் சேதந அசேதநங்களைக் கூறல்: நார சப்தம் ஜீவர்களுடைய கூட்டத்தைச் சொல்லும்போது அசேதநங் களையும் சேர்த்துக் கூறுவதாய்க் கொள்ள வேண்டும். நர சப்தம்தானே அழிவற்ற ஜீவனைச் சொல்வது போல் அசேதநத்தையும் கூறுவதாகக் கொள்ள வழி உண்டு. அசேதநம் மாறுபாட்டை அடைவதானாலும் அதன் ஸ்வரூபம் அடியோடு அழிவதில்லையாதலின் அசேதநத்தின் ஸ்வரூபம் நித்யமே. மாறுபடும் தன்மை இருப்பினும் வெவ்வேறாக வெள்ளம் மாறிக் கொண்டேயிருந்தாலும் ஒரே வகையாகவே ஓடிக் கொண்டே யிருப்பது போல் மாறுபாடும் நித்யமென்று சொல்லியதாகக் கொள்க. இப்பொழுது நரசப்தம் அழிவற்ற ஜீவனைச் சொல்வது போல் கீழ் கூறிய முறையில் அசேதநத்தையும் சொல்வதில் இடர் ஏதுமில்லையே! இப்படி நர சப்தம் ஸகல தத்துவங்களையும் சொல்லி அவற்றின் கூட்டத்தை நார சப்தம் கூறுமென்று தீர்ந்தது. இந்தச் சேதந - அசேதங்களின் கூட்டத்துக்கும் எண் இல்லை.

7.2.3 'அயநம்' சப்தத்தின் பொருள்கள்

தத்புருஷஸமாஸத்தில் (வேற்றுமைப் புணர்ச்சி) நாரங்களுக்கு அயநமாயிருப்பவன் என்று பொருள்கூறவேண்டும். இனி அயநம் என்ற சொல்லுக்குப் பொருளைப் பார்ப்போம்.

அயநம் என்ற சொல் 'இண்' என்ற வினைப்பகுதியினின்று தேறுகின்றது. (i) ஈயதே அநேந - இவனைக் கொண்டு மோக்ஷம் அடையப்படுகின்றது என்று பொருள் கொண்டு பார்க்கும்போது மோக்ஷம் பெறுவதற்கு உபாயமாகின்றான் எம்பெருமான் என்று தேறும். (ii) ஈயதே அஸௌ - இவன் அடையப்படுகின்றான் என்று வைத்துப் பார்த்தால் அடையப்படும் பலனாயுள்ளவன் எம்பெருமான் என்று தேறும். (iii) ஈயதே அஸ்மிந் - இவனிடத்தில் பிடிப்புக் கொள்ளுகிறது என்று கூறினால் எம்பெருமான் ஆதாரமாயுள்ளவன் என்று முடியும்.

எம்பெருமான் உபாயமும் பலனும் ஆதாரமுமாவதில் வரையறை: இந்த மூன்று பொருள்களிலும் எம்பெருமான்

Scanned with CamScanner

உபாயமாயிருப்பதும் பலனாயிருப்பதும் சேதநனைப் பற்றி மட்டும்தான் பொருந்தும். சேதநன் பலனைப் பெறுமவனாதலின் அதற்கு ஏற்ற உபாயமாயிருப்பவன் எம்பெருமான். அவ்வாறே சேததனால் அநுபவிக்கப்படும் பலனாகவும் உள்ளான். அசேதத்துக்கு உபாயத்தைச் செய்வதோ, பலனைப் பெறுவதோ இல்லை யாதலின் அத்தன்மைகள் பொருந்தா. ஆதலின் எம்பெருமான் அசேதநத்தைப் பற்றி உபாயமாயிருப்பதோ பலனாயிருப்பதோ கிடையாது. ஆனால் மூன்றாவதான தாங்கி நிற்றலோ சேதநம் அசேதநம் இரண்டையும் பற்றி அவனுக்குப் பொருந்துகின்றது. இது ப்ரமாணங்கள் கண்ட முடிவு.

7.3 நாராயண சப்தம்: பஹுவ்ரீஹி ஸமாஸப் பொருள்

இனி நாராயண சப்தத்துக்குப் பஹுவ்ரீஹிஸமாஸத்தைப் பார்ப்போம். இந்த ஸமாஸத்தைத் தமிழர் அன்மொழித் தொகை என்பர். நாரா: + அய நம் + யஸ்ய (ஸ:). என்று பிரித்து நாராயண. என்று கூட்ட வேண்டும். இதனால் நாரங்களை அயநமாக வுடையன் என்ற பொருள் கிடைக்கும். அயநம் என்ற சொல் வசிக்கும் இடம், புகுதற்கு இடம் என்ற பொருள்களைத் தரும். இதனால் எல்லாவற்றிலும் எவ்விதத் தடையுமின்றி உள்ளே புகுந்தும் கலந்தும் நிறைந்தும் நிற்பவன் என்று பொருள் தேறும். இதனால் சேதந-அசேதங்களில் அவன் இல்லாத இடம் இல்லையென்னும் படி நிற்பவன் என்ற கருத்துத் தேறும். இதைத்தான் அந்தர் வ்யாப்தியென்பர். கீழ் கூறிய தத்புருஷஸமாஸத்தின்படி, நாரங்களுக்கு இருப்பிடம் எம்பெருமான் என்று பொருள் வைத்துப்பார்த்தால் அவை இல்லாத இடத்திலும் எம்பெருமான் இருப்பவன் என்று முடியும். இதுவே பஹிர் வ்யாப்தி என்பர்.

(i) **வஸ்துக்களில் புகுந்து நியமித்து நடத்தல் எம்பெருமானுக்கே உள்ளது:** ஆகாசமும் எம்பெருமானைப் போலே எல்லா இடங்களிலும் புகுந்து நிற்கும் தன்மையுடையது தானே என்று நினைக்கக்கூடாது. எம்பெருமானது செயல் உள்ளே புகுவது மட்டுமன்று. ஸகலவஸ்துக்களிலும் அவன் புகுந்தும் கலந்தும் நிற்பதுடன் அவற்றை நியமித்து நடத்துகின்றான். ஆகாயத்துக்கு இத்தன்மை உண்டா? அரசன் பணியாளர்களையும் குடிமக்களையும் கட்டளையிட்டு நடத்துகின்றான். ஆனால் அவர்களுக்குள்

புகுந்தோ கலந்தோ நிற்பதுண்டா? ஆகவே ஆகாயத்தினும் அரசனினும் எம்பெருமான் மிக வேறுபட்டு அவர்கள் செய்யாத செயலைச் செய்கின்றான். இதனால் எம்பெருமான் ஸகல வஸ்துக்களையும் சரீரமாகக் கொண்டவன் என்று முடிவாகின்றது.

(ii) **மூன்று தத்துவங்களுக்கும் உள்ள வேறுபாடு :** சேதநம் அசேதநம் ஆகிய ஸகல வஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஒருவனே ஆதாரமாயிருப்பவன். அதாவது அவற்றைத் தாங்கி நிற்பவன் என்பது ஏற்பட்டது. அசேதநப் பொருள் வேறு ஒரு பொருளாக ஏதாவது மாறுபாட்டை அடைந்து கொண்டே இருக்கும். சேதநனோ ஸ்வரூபத்தில் மாறுபாடு இல்லாதவன். ஆகவே இந்த மூன்று தத்துவங்களுக்கும் வேறுபாடு நன்கு தெரிகின்றது. இந்த மூன்று அம்சங்களாலும் சேதம் - அசேதநம் - ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களைப் பற்றிய அறிவும் ஏற்பட்டதாகின்றது.

7.4 உபநிடதங்கள் கூறும் விசேஷ அம்சங்கள்

(i) உபநிடதங்களுள் ப்ரஹ்மபிந்து உபநிடதமும் ஒன்றாகும். அதில் ஒரு சுலோகம் சேதநத்திலும் அசேதநத்திலும் எம்பெருமான் அந்தர்யாமியாயிருப்பதை விளக்குகின்றது. அந்த விளக்கம் வருமாறு : பாலில் நெய் மறைந்திருக்கின்றது. பாலைத் தோய்த்துத் தயிரை மத்தினால் கடைந்து வெண்ணெய் எடுத்து நெய்யாக்குகின்றோம். அவ்வாறே ஞான வடிவான எம்பெருமான் ஒவ்வொரு வஸ்துவிலும் மறைந்துள்ளான். மத்தால் தயிரைக் கடைவது போல் எப்பொழுதும் மனத்தால் சிந்தித்துச் சிந்தித்து எம்பெருமானைக் காண முற்பட வேண்டும் - என்பது, இந்த உபநிடதக் கருத்தைத் தழுவியே நம்மாழ்வாரும் எம்பெருமான் எல்லா வஸ்துக்களிலும் எளிதில் காணமுடியாது மறைந்து நிற்பதைக் 'கறந்த பாலுள் நெய்யே போல்' என்ற உவமையின் வாயிலாகக் காட்டியருளினார்.

(ii) **சுவேதாச்வதரம் கூறும் விசேஷ அம்சங்கள்:** சுவேதாச்வதரம் என்ற உபநிடதம் எம்பெருமானுடைய பல பெருமைகளைப் புகழ்கின்றது. அவற்றையெல்லாம் நாராயண எனும் திருநாமம் சுருக்கமாய்க் காட்டுகின்றது. அந்த அம்சங்களாவன - *(1)* ஜீவர்களும் ஈச்வரனும் சேதநர்களாவர். *(2)* ஜீவர்களுடைய ஸ்வரூபமும் ஈச்வரனது ஸ்வருபமும் இயற்கை

Scanned with CamScanner

யாகவே வெவ்வேறாகும். (3) ஜீவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர். (4) எல்லாச் சேதநர்களுக்கும் அவரவர் விரும்பும் எல்லாப் பலன்களையும் அளிப்பவன் ஈச்வரன் ஒருவனே. (5) எம்பெருமான் ஒருவனே சேதநர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் உபாயமாகவும் அநுபவிக்கப்படும். பயனாகவும் ஆவான். (6) இந்தத் தன்மையுடன் தொடர்பாக இழிகுணங்கள் அற்றவனாகவும் திருக்கலியாண குணங்களுக்கு உறைவிடமாகவும் அவன் விளங்குகின்றான். (7) ஸம்ஸார மண்டலமாகிய லீலாவிபூதிக்கும் பரமபதமாகிய நித்யவிபூதிக்கும் நாதனாயுள்ளவன். (8) சேதநர்களுக்கு எல்லாவகை உறவினனாகவும் இருப்பவன் அவனே - என்பன.

நாராயண சப்தம் உபநிடதப் பொருள்களைச் சுருக்கிக் கூறல்

(1) எல்லாவற்றுக்கும் எம்பெருமான் காரணமாயிருப்பதால் காரியப் பொருளில் உள்ள தோஷங்கள் அவனிடமும் இருக்குமோ என்ற ஐயத்தைப் போக்கி அவன் எவ்வகைக் குற்றமற்றவன் என்பதை உறுதிப்படுத்தி விளக்கும் வாக்யங்கள் உபநிஷத்தில் உள்ளன. இவை சோதகவாக்யங்களெனப்படும். இங்கும் நர என்ற சொல் கீழே விளக்கியபடி அழிவு முதலிய இழிவான அம்சங்களற்றவன் என்று பொருள் தருவதால் அந்த உபநிஷத்தின் வாக்யங்களின் பொருள் சுருக்கிக் கூறப்பட்டதாகின்றது.

(2) உபநிஷத்தில் சில வாக்யங்கள் எம்பெருமான் உலகுக்குக் காரணம் என்பதை விளக்கும். இவை காரண வாக்யங்கள் எனப்படும். இங்கு நாரசப்தத்துக்கு நரனாகிய எம்பெருமானிடம் இருந்து தோன்றியவை என்று பொருள் கொள்ளும் போது அவன் அந்தப் பொருள்களுக்குக் காரணம் என்பது நன்றாய்ப் புலப்படுகின்றதே! ஆதலின் நார சப்தத்தால் காரண வாக்யங்களின் அர்த்தம் சுருக்கிக் கூறப்பட்டதாகின்றது.

(3) எம்பெருமான் மோக்ஷத்துக்கு உபாயமானவன் என்பதை விளக்கும் வாக்யங்கள் உபநிஷத்தில் உள்ளன. அவை உபாஸந வாக்யமெனப்படும். இங்கு அயநம் என்னும் சொல் உபாயமாய் உள்ளவன் என்று காட்டுகின்றது. ஆகவே உபாஸநவாக்யத்தின் பொருளும் இங்குச் சுருக்கிக் கூறப்பட்டதாகின்றது. இப்படி உபநிஷத்துக்குள் கூறிய

முறையைச் சுருக்கமாய் நாராயண சப்தம் தழுவுவதாய்த் தீர்ந்தது.

7.5 திருமந்திரம் மும்முறை எம்பெருமானையும் மும்முறை ஜீவனையும் கூறுவதன் பயன்

ப்ரணவத்தில் உள்ள அகாரம் நரன் என்ற சொல் அயநம் என்ற சொல் ஆகிய மூன்றாலும் மும்முறை எம்பெருமானையே கூறவேண்டிய அவசியம் என்ன? என்று கேட்கலாம். விடை அகாரம் எம்பெருமான் ரக்ஷிப்பவன் என்ற பெருமையையும், நரன் என்ற சொல் அவன் அழிவின்றி நித்யனாயுள்ளவன் என்ற விசேஷத்தையும், அயநம் என்ற சொல் எல்லாவற்றையும் அவன் தாங்கி நிற்பவன் என்ற சிறப்பையும் விளக்குவதால் மூன்று சொற்களாலும் அவனையே சொல்லியதற்குத் தனித்தனிப் பயன் உண்டு என்று உணர்க.

இவ்வாறே மகாரம் - நரன் என்ற சொல் - அயநம் என்றும் சொல் ஆகிய மூன்றாலும் ஜீவனையே கூறியதற்கும் வெவ்வேறு பயன் உண்டு. மகாரம் ஜீவன் ஞானவடிவன் - ஞானமுடையன் என்பதையும், நரன் எனும் சொல் அழிவற்றவன் என்பதையும், அயநம் என்பது எம்பெருமான் புகுந்து கலப்பதற்கு இடமாயுள்ளவன் என்பதையும் விளக்குவதால் தனித்தனிப் பயன் உண்டு என்பது தேறும்.

8. நாராயண சப்த நான்காம் வேற்றுமை உருபின் பொருள்கள்

திருமந்திரம் இரண்டு வாக்கியமாகில் மூன்று வகைப் பொருள்கள்: திருமந்திரத்தில் மூன்றாவது பதமாகிய நாராயணாய என்பதில் நாராயண என்ற சொல்லுக்குப் பின் 'ஆய' என்று நான்காம் வேற்றுமை உருபு உள்ளது. திருமந்திரத்தை ஒரே வாக்யமாகவும், இரண்டு வாக்கியமாகவும், மூன்று வாக்யமாகவும் கூட வைத்துப் பொருள் கூறுவதுண்டு. அதில் இரண்டு வாக்யமாக வைத்துப் பொருள் கூறும்போது ப்ரணவத்தையும் நாராயணாய என்பதையும் சேர்த்து ஒரு வாக்யமாகவும் நம: என்பதை ஒரு வாக்யமாகவும் வைத்து மூன்று வகைப் பொருள்கள் கூறுவதுண்டு. அவையாவன (1) ஜீவனது ஸ்வரூபத்தைச் சொல்வது (2) ஜீவன் தன் ஆத்மாவை எம்பெருமானிடம் ஸமர்ப்பித்தலைச் சொல்வது (3) கைங்கர்யம் செய்தலாகிய பயனைச் சொல்வது.

Scanned with CamScanner

மூன்று வகைப் பொருள் விளக்கம் : (i) முதல் வகைப் பொருளில் நாராயண சப்தத்தின் மேலுள்ள ஆய என்னும் விகுதிக்கு அடியனாயிருத்தல் பொருளாகும். இப்பொருளில் அகாரத்தால் கூறப்படும் நாராயணனுக்கே நான் அடியன். நான் எனக்கு அடியனல்லேன் என்று தேறுவதால் எம்பெருமானுக்கு அடியனான தன் ஸ்வரூபத்தைக் கூறியதாயிற்று. (ii) இரண்டாம் பொருளில் நாராயண சப்தத்தின் மேல் உள்ள 'ஆய' என்னும் விகுதி ஸமர்ப்பிக்கப்படும் ஆத்மாவை ஏற்றுக் கொள்பவனை உணர்த்தும். அகாரத்தால் சொல்லப்படும் நாராயணனுக்கே என் ஸ்வரூபம் ஸமர்ப்பிக்கப்பட்டது என்று பொருள் தேறும். இது ஆத்மாவை ஸமர்ப்பித்தலைக் கூறுவதாகும். (iii) மூன்றாம் பொருள் நாராயண சப்தத்தின் மேல் உள்ள 'ஆய' விகுதிக்கு அடியனாதல் என்ற பொருள் மட்டும் கொள்வது உசிதமன்று. அடியனாயிருத்தல் ஜீவனுக்கு நித்யமாய் உள்ளது. அதை அருளும்படி பிரார்த்திக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் ப்ரணவத்தின் முதல் எழுத்தான அகாரத்தின் மேல் ஏறி மறைந்துள்ள 'ஆய' என்பதே அவனுக்கு அடியன் ஜீவன் என்பதைக்காட்டிவிட்டது. ஆதலால் இந்த 'ஆய' என்பதற்கு அந்த அடியனாந்தன்மையை முன்னிட்டுக் கொண்டு அதன் பலனைக் கூறுவதாகக் கொள்வதே முறை. அடியனாந்தன்மைக்குப் பலன் எது? அவனுக்குக் கைங்கர்யம் செய்வதே. இதுவே அடிமைக்கு ஏற்றதாகும். ஆகவே பலனாக அவனுக்கு உகப்பான கைங்கர்யத்தைப் பிரார்த்திப்பதாய்ப் பொருள் தேறும்.

8.1 எம்பெருமானே முக்கிய பலன்: ஜீவனும் பலன் வகுப்பில் சேர்தல்

இங்குச் சேதநனால் அநுபவிக்கப்படும் முக்கிய பலனாயுள்ளவன் எம்பெருமான். ஒரு கேள்வி - எம்பெருமான் எங்கும் வியாபித்து நிற்பவன். அவனோடு ஜீவனும் எப்பொழுதும் ஸம்பந்தம் உடையவன்தானே! அவனைச் சேதநன் புதிதாய் அடைவது என்பது என்ன? விடை- எம்பெருமானைச் சேதநன் ஸ்ரீவைகுண்டத்தில் பரிபூர்ணமாய் அநுபவிப்பதே இங்கு அடைதல் எனப்படுகின்றது. ஜீவனுக்கு இந்த முழுமையான அநுபவம் இதுவரை இல்லையே! இனித்தானே வரவேண்டும்! ஆதலால் அவனை அடைதல் என்பது இவ்வகையில் பொருந்து

கின்றது. இப்படி இடைவிடாது பூர்ணமாய் அநுபவித்தால் அந்த அநுபவம் ஜீவனை எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யும்படி தூண்டுகின்றது. ஆகவே அவ்வநுபவத்துக்குப் போக்குவீடாய்க் கொண்டு கைங்கர்யமும் அவன் பெறவேண்டிய முக்கிய பலனாக ஆகின்றது. அதைப் பிரார்த்திக்க வேண்டியது அவசியம் தானே!

இங்ஙனமே ஜீவனாகிய தானும் அடையப்படும் பலன் வகுப்பில் சேருகிறான். எவ்வாறு? ஜீவன் எம்பெருமானை அநுபவிக்கும் போது தன்னைச் சரீரமாகக் கொண்டுள்ள நிலையில் வைத்துத்தான் அவனை அநுபவிக்கின்றான். அப்பொழுது முக்கிய பலனான எம்பெருமானுக்குச் சரீரமான தன்னையும் விசேஷணமாக அநுபவிக்க நேரவில்லையா? ஆதலின் தானும் பலன் வகுப்பில் சேருகின்றான். இப்படி ஜீவன் தன்னை அவனுக்குச் சரீரமாக மட்டும் வைத்து எம்பெருமானையே முக்கிய பலனாகக் கொண்டு அநுபவித்தால் இவன் ஸம்ஸார மண்டலத்திற்குத் திரும்புவதில்லை. ஆனால் எம்பெருமானை விட்டுத் தனித்த ஆத்மாவை மட்டும் அநுபவிப்பதாகிய கைவல்யத்தைப் பெற்றவனுக்குத்தான் மீண்டும் ஸம்ஸார மண்டலத்தில் பிறவிகள் உண்டு.

8.2 முக்தி பெற்றவனுக்கு எம்பெருமானோடு முழு ஒற்றுமையையும் அதன் வரையறையும்

மோக்ஷம் பெற்றவன் எம்பெருமானை மிகவும் ஒத்தவனாகி விடுகின்றான் என்று சுருதி ஓதுகின்றது. ஆனால் இந்த ஒற்றுமைக்கும் ஒரு வரையறை உண்டு. உலகைப் படைத்தல் முதலிய அம்சங்கள் எம்பெருமானுக்கே உரியவாதலின் அவற்றில் எல்லாம் முக்தனுக்கு ஒற்றுமை வருவதற்கு இடமேயில்லை. பின் எதில்? கல்யாண குணங்களுடன் கூடிய எம்பெருமானை அநுபவிப்பதில் எம்பெருமானுக்கும் முக்தனுக்கும் எத்தகைய வேற்றுமையும் இல்லையென்பதே உண்மை என்பது ப்ரஹ்ம ஸூத்ரம் வெளியிட்ட முடிவு.

சேதந - அசேதங்களைச் சரீரமாகக் கொண்ட எம்பெருமானை. அநுபவிப்பதென்பது எம்பெருமானுக்கும் உண்டு. முக்தனுக்கும் உண்டு. இதுவே ஸாயுஜ்யம் எனப்படுகின்றது. ஸாயுஜ்யம் என்பது என்ன? இருவருக்கும் அநுபவிக்கப்படும் வஸ்து ஒன்றாயிருப்பது. ப்ரமாணங்களைத் தழுவுமவன் இதையே ஸாயுஜ்யமென ஏற்பான்.

Scanned with CamScanner

இப்படிப் பகவானுக்கும் முக்தனுக்கும் மோக்ஷத்தில் சொல்லிய முழு ஒற்றுமையை அநுபவத்தில் மட்டும் என்று வரையறுத்துக் கூறியதால் எம்பெருமானுக்கே உரிய சின்னங்களாகிய உலகம் படைத்தல் மோக்ஷம் தருதல் முதலியவற்றுள் எதுவும் ஜீவனுக்கு இல்லையென்று தீர்ந்து அவனுக்கு அடியனாயிருத்தல் அவனுக்கு வசப்பட்டு நிற்றல் முதலியவையே மிகவும் பொருத்தமான செயலாகும்.

வினைமுற்று வருவித்தல் கைங்கர்யத்தைப் பிரார்த்தித்தல் : இங்கு நாராயணாய என்பதில் அவன் கைங்கரியத்தைத் தரும்படி பிரார்த்திப்பதாகப் பொருள் கூற வேண்டியிருப்பதால் அதற்கு ஏற்றவாறு ஒரு வினைமுற்று (க்ரியா பதம்) இங்கே வருவித்துக் கொள்ளவேண்டும். 'ஆகக் கடவேன்' என்ற பொருள் கொண்ட 'ஸ்யாம்' என்றோ 'பவேயம்' என்றோ ஒரு வினைமுற்றை வருவித்துக் கொண்டால் கைங்கர்யம் செய்பவனாக ஆவேன் என்று பொருள் பொருந்துகின்றது. கீழ் ப்ரணவத்தாலும் 'நம : என்ற சொல்லாலும் ஜீவனாகிய தன் ஸ்வரூபம் இயற்கையில் எப்பொழுதும் எம்பெருமானுக்கே அடிமையானது என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டான் சேதநன். அடியனான சேதநன் எம்பெருமானிடம் 'ஸ்வாமியான நீ அடியேனை என் பயனையே முக்கியமாக கருதாது உன் திருவுள்ளத்தின் உகப்பையே முக்கியமான பயனாக உள்ளத்துக் கொள்ளும்படி பரிசுத்தனாக்கி என் கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.' என்று பிரார்த்தித்ததாகின்றது. இதனால் தன் கைங்கர்யத்துக்கு முக்கிய பலன் சேஷியான எம்பெருமான் திருவுள்ளம் உகப்பதுவே என்ற கருத்தில் அவன் பயனையே பிரார்த்தித்ததாயிற்று.

8.3 ஜீவனது செயலின் பயன் ஜீவன் ஈச்வரன் இருவருக்கும் உண்டு. ஆயினும் ஈச்வரன் பயனே முக்கியம்

இங்கு முக்கியமான விஷயம் ஒன்று : மனிதன் அறிவுடையனாதலின் தன் பயனைக் கருதாமல் எவனும் ஒரு செயலைச் செய்ய முற்பட மாட்டான். ஆதலின் தன் பயனில் சிறிதும் பற்றின்றிச் சேஷியான எம்பெருமானுடைய பலனை மட்டும் கருதி ஒரு செயலை உணர்வுடன் ஒருவன் செய்ய முன் வருவது நடவாத விஷயம். சேஷியான எம்பெருமானது உகப்பை முக்கியமாகக்

கொள்ளாத தன் பயனையே முக்கியமாக விரும்பவும் கூடாது. ஆகவே நிபுணனான சேதநன் எம்பெருமானது உகப்பையே முக்கியமாய்க் கொண்டு கைங்கர்யம் செய்து அதனால் தானும் மகிழ்ச்சியைப் பெறுவதே கடமையாகும். உலகில் நற்குணமுள்ள யஜமானன் செய்யும் செயல் தனக்கும் தன் பணியாளனுக்கும் நலம் விளைவிப்பதாயிருக்கும். அவ்வாறே சாதுரியமுள்ள பணிமகன் செயலும் யஜமானனுக்கும் தனக்கும் நன்மை புரிவதாயிருக்கும். இருவர் செயலாலும் இருவருக்கும் பயன் இருக்கும். அவ்வாறே இங்கும் சேதநன் புரியும் நற்செயலும் எம்பெருமானுக்கு உகப்பையும் அதனால் தனக்கு மகிழ்ச்சியையும் தருவதாயிருக்கும்.

பதிவ்ரதையான ஒரு பெண் பல அணிகளையும் நல்லாடைகளையும் அணிந்து அழகு செய்து கொள்கின்றாள். அதற்கு அவள் கருதும் முக்கிய பலன் யாது? கணவனது மகிழ்ச்சியே. அதைக் கண்டு தானும் மகிழ்கின்றாள். அவ்வாறே சேஷியான எம்பெருமானுக்குச் சேஷனான சேதநன் கைங்கர்யம் செய்து அவனை முக்கியமாக உகப்பித்துத் தானும் அதனால் மகிழ்கின்றான். ப்ரபத்தி செய்தவன் ப்ரபத்திக்குப் பின் இவ்வுலகில் உள்ள நாள் செய்து கொண்டிருக்க வேண்டிய கடமையாகவும் தன் மகிழ்ச்சிக்காவும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யும் போதும் கீழ் கூறியவாறே அவன் திருவுள்ளம் உகப்பதைக் கண்டு தானும் மகிழ்வான்.

8.4 முக்தர்கள் பல்லாண்டு பாடுதல்: கேள்வி - விடை

இங்கு ஒரு கேள்வி : முக்தி பெற்றவனுக்கு எத்தகைய தீங்கு வருவதற்கும் இடமில்லையோ அவனுக்கு மதிமயக்கம் வருவதும் கிடையாதே! எம்பெருமானோ எந்நாளும் எத்தகைய தீங்கும் அற்றவன். அவன் நினைத்தால் பெற முடியாதது எதுவும் இல்லை. இப்படி இருக்க ஸ்ரீவைகுண்டத்தில் முக்தர்கள் எம்பெருமானைச் சூழ்ந்து கொண்டு பல்லாண்டு பாடி மங்களாசாஸநம் செய்வதாகத் தெரிகின்றதே! அது எதற்காக? என்று.

விடை - அவர்கள் செய்யும் மங்களாசாஸநம் தங்களுக்கோ எம்பெருமானுக்கோ தீங்கு ஒழிவதைப் பயனாகக் கொண்டதன்று. முக்தர்களின் அறியாமையாலோ எம்பெருமானுக்குப் புதிய நலன் வருவதைப் பயனாகக் கருதியோ செய்வதுமன்று. பின்,

Scanned with CamScanner

ஸ்ரீவைகுண்டத்தில் முக்தர்கள் தம் இஷ்டப்படி எதையும் செய்யலாமாதலின் அவர்கள் மனப்போக்கின்படி செய்யும் ஒரு செயலேயாகும். அவர்கள் ஸாமகாநம் செய்வதாய் உபநிடதம் கூறுகின்றதே! எதாவது பயனைக் குறித்தா செய்கின்றனர்! அன்று. உத்ஸாஹத்துடன் விரும்பிச் செய்யும் செயலாகவே ஆகும். அவ்வாறே இந்த மங்களாசாஸநமும்.

8. 5 நித்யஸூரிகளும் எம்பெருமானைப் பற்றிக் கவலைப்படல்

விளக்கம் - பின்னும் ஒரு கேள்வி : நித்ய ஸூரிகள் எந்நாளும் கர்மத்தின் தொடர்பற்றவர்களாயுள்ளனரே! அவர்கள் எம்பெருமானைக் காப்பதில் மிக்க ஊக்கமுடையராகப் பெரியோர்களாலும் கூறப்படுகின்றார்களே! அவர்கள் எம்பெருமானுக்குத் தீங்கைக் கருதுவதும் அதனின்று காக்கக் கவலை கொள்வதும் தகாத விஷயத்திலல்லவோ செய்வதாகத் தோன்றுகின்றது! என்று.

விடை : அதன் உட்கருத்து வேறு. உலகில் கூடச் சிறிதும் தீங்கு வருவதற்கு இடமில்லாதவர்கள் விஷயத்திலும் அவர்களிடம் கொண்டுள்ள அதன்பின் மிகுதியால் ஆபத்து வருமோ என்ற ஐயம் எழுவதுண்டு. வராத ஆபத்தை எதிர்நோக்கி அது நீங்கக் காப்பிடுதலும் உலகில் உண்டே! அவ்வாறே நாட்டு மானிடருக்குப் பிரியமானவர்களிடம் ஆபத்து வருமோ என்ற அச்சம் விளைவிக்கும் அன்பு எவ்வளவு உண்டோ, அத்தகைய பரிவு நித்யஸூரிகளுக்கு எம்பெருமானிடம் உண்டு என்ற கருத்தை மட்டும் கொண்டது பெரியோர்களின் ஸூக்தி என்று உணர்க. இவ்வுலகில் உள்ள ஸம்ஸாரிகளுக்குக் கூட எம்பெருமானுக்கு எதாவது தீங்கு வருமோ என்ற அச்சமும் கவலையும் ஏற்படுவதுண்டு. ஆனால் தகாத இந்த அச்சமும் இவர்களுக்கு அவனிடம் உள்ள பக்தியின் மிகுதியால் வருவதால் அந்நிலை விரும்பி வரவேற்கத் தக்கதேயாகும்.

8. 6 அர்ச்சைக்கும் விபவத்துக்கும் காப்பிடல் - பொருத்தம்

அர்ச்சை வடிவில் எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு நன்மையை விரும்பிப் பல பெரியோர்கள் மங்களத்தைப் பிரார்த்திப்பது உண்டே! அங்ஙனமே விபவாவதாரமாகிய இராமபிரான் கண்ணன் முதலியவர்க்கும் செய்வதுண்டு. இராமபிரானது நலத்தைக் கோரி நாட்டில் உள்ள முதிய

பெண்களும் பருவமங்கைகளும் காலையிலும் மாலையிலும் தூயராய் நின்று எல்லாத் தெய்வங்களையும் தொழுவதாக இராமாயணமும் கூறுகின்றதே! அர்ச்சைத் திருமேனிக்கும் இராமபிரானுக்கும் தீங்கு ஏது? எத்தகைய நலத்தை இவர்களுக்குப் புதிதாய் வேண்டிப் பெறவேண்டும்? என்று ஒரு கேள்வி.

விடை - அர்ச்சை வடிவு கொண்ட எம்பெருமானோ விபவவுருக் கொண்ட, இராமபிரானோ தங்கள் தெய்வீக சக்தியைக் காட்டிச் சேதநர்களுக்கு அபாரமான அருளைப் புரிவதும் உண்டு. சில ஸமயங்களில் தங்களது சக்தியை மறைத்துக் கொண்டு மக்களுக்கு எதுவும் செய்யாமல் புறக்கணித்து விடுவதும் உண்டு. இவ்வாறு தம் சக்தியை மறைத்துக் கொள்வதும் வெளிப் படுத்துவதும் வழிபடும் சேதநர்களின் கர்மத்தைப் பொறுத்ததாகும். அவ்வாறு சக்தியை மறைத்துக் கொள்ளும்போது உண்மையிலேயே அந்த மூர்த்திகளுக்கு ஏதோ குறைவோ கெடுதியோ வந்து விட்டதாய் நினைத்து அன்பினால் மங்களம் பாடத் தொடங்கிவிடுகின்றனர். அப்பொழுது அந்த வாழ்த்துக்கு உகந்து எம்பெருமான் அருள் - புரிந்து பலனை அளிப்பான். ஆதலின் அந்த மங்களா சாஸநத்துக்கும் பலன் உண்டு. இந்த மங்களாசாஸனத்திலேயே சாதுர்யமுடைய சிலர் வேறு தெய்வங்களை நாடாமல் எம்பெருமானிடமே நீயே உன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்' என்ற முறையில் பிரார்த்திப்பார்கள். இதுவே சிறந்த முறை. இப்படியே எம்பெருமானுக்கு மங்களத்தைப் பிரார்த்திக்கும் இடங்களில் எல்லாம் இந்தக் கருத்தினையே கொள்க.

8.7 திருமந்திரம் அர்த்த பஞ்சகத்தையும் காட்டல்

திருமந்திரத்தில் அர்த்த பஞ்சகமும் கூறப்பட்டதாகின்றது. விளக்கம் வருமாறு: (1) அகாரம் - நர எனும் சொல் - நாராயணபதம் ஆகியவை அடையப்படும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைக் கூறுகின்றன. (2) மகாரம் - நாரசப்தம் இவை அடைபவனான ஜீவனுடைய ஸ்வரூபத்தைக் காட்டுவன. (3-4) நம: என்ற நடுப்பதத்தால் எம்பெருமானை அடைய முடியாமல் தடையாயிருந்த விரோதியும் உபாயமாகிய சரணாகதியும் புலனாகின்றன. (5) நாராயண சப்தத்தின் மேலுள்ள நான்காம் வேற்றுமையுருபு அவன் கைங்கர்யமாகிய பலனை

Scanned with CamScanner

வெளிப்படுத்தும். இப்படி அர்த்தபஞ்சகம் வெளியாவதோடு அந்த அந்தப் பதங்களின் பொருளைச் சேர்த்துப் பார்க்கும்போது அவன் ஆத்மாவாய் ஸகல வஸ்துக்களும் அவனுக்குச் சரீரமாயிருக்கும் ஸம்பந்தமும் நன்கு புலப்படுகின்றது.

8.8 திருமந்திரத்தின் வாக்கியம் கூறும் மூவகைப் பொருள்

இத்திருமந்திரத்தை வாக்யமாகக் கொண்டு பொருள் பார்ப்போம்.

(i) திருமந்திரம் முழுதும் ஜீவனுடைய ஸ்வரூபத்தை விளக்குவதாய்ச் சிலர் பொருள் கூறுவர். அப்பொழுது அகாரத்தால் கூறப்படுமவனான நாராயணனுக்கே மகாரத்தால் கூறப்படும் ஜீவனாகிய நான் வேறொருவருக்கும் அல்லாதபடி சேஷனா யுள்ளேன். எனக்கு நான் உரியனல்லேன் என்று தேறும்.

(ii) **மற்றொரு பொருள் :** ப்ரணவம் எம்பெருமானுக்கே சேஷன் அடியேன் என்பதைக் காட்டும். நம: என்பது எனக்குத் தீங்கு கழிய வேண்டுமென்று பிரார்த்திப்பதைச் சொல்லும். நாராயணாய என்பது நாராயணனுக்கே கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று பலனைப் பிரார்த்திப்பதைக் கூறும் என்று சிலர் கூறுவர்.

(iii) **மற்றொரு பொருள்:** ப்ரணவம் எம்பெருமானுக்கு நான் அடியனென்றும் நம: என்பது எனக்கு நான் உரியனல்லேன் என்றும் கூறி இரண்டு பதங்களும் ஜீவனது ஸ்வரூபத்தை உணர்த்துவதாகும். நாராயணாய என்பது அவனுக்குக் கைங்கர்யம் செய்பவனாக ஆவேன் என்று பலனைப் பிரார்த்திப்பதில் நோக்குடையது என்று கூறுவதுண்டு. இந்த மூன்றாம் பொருள் ஸ்ரீபட்டராலும் விளக்கப்பட்டுள்ளது.

(iv) **திருமந்திரம் சாரீரக சாஸ்த்ரம் த்வயம் இவற்றைத் தழுவிய பொருள் :** மோக்ஷத்துக்கு ஸாதநமான பக்தியோகம் - ப்ரபத்தி இவற்றைத் தங்கள் தகுதிக்கு ஏற்றவாறு கைக்கொள்ளும் எல்லாரும் மதித்து ஆதரிக்க வேண்டியதாயுள்ளது சாரீரகம் என்னும் வேதாந்த சாஸ்த்ரம். அதன் முக்கிய ஸ்ரீ ஸூக்தியான ஸ்ரீ பாஷ்யத்தில் முதல் இரண்டு அத்யாயங்கள் தத்துவத்தைக் காட்டுவதாகவும், மூன்றாம் அத்யாயம் உபாயத்தை விளக்குவ தாயும், நான்காம் அத்யாயம் பலனைக் காட்டுவதாகவும்

கூறப்பட்டுள்ளது. அம்முறையைத் தழுவியே திருமந்திரத்தில் ப்ரணவம் தத்துவத்தின் ஸ்வரூபத்தையும், நம: என்பது உபாயத் தையும், நாராயணாய என்பது பலனையும் விளக்குவதாய்ப் பொருள் கொள்ளவேண்டும். இப்படி முடிவு கொண்டால் நாம் அவசியம் அறிய வேண்டிய எல்லாம் பூர்ணமாய் இப்பொருளில் அடங்கியதாய் அறியலாம். த்வயத்திலும் இங்ஙனமே முற்பாதி தத்துவத்தையும் உபாயத்தையும் பிற்பகுதி பலனையும் குறிப்பிடுவதாய்க் கொள்ளுதல் முறையாகும். பின்னும் பொருள் கொள்ளும் முறைகள் பல உண்டு. ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரத்தில் விரிவு காண்க.

8.9 திருமந்திரப் பொருளை அறிவதால் ஏற்படும் நன்மைகள்

(i) திருமந்திரத்தில் இந்த மூன்று பதங்களின் பொருளையும் உணர்ந்தவன் நித்யம் முதலிய கிரந்தங்களில் சொல்லிய முறையில் உள்ள பரமைகாந்தியாவான். பரமைகாந்தி என்பவன் எத்த கையன்? எம்பெருமானையன்றி மற்றொருவனுக்குச் சேஷனல்லா தானாய் அவனையன்றி வேறொருவனை உபாயமாகக் கொள்ளாத வனாய், அவனையன்றி வேறொரு பயனை நாடாதவனா யுள்ளவன்.

திருமந்திரத்தில் கடைசிப் பதமாகிய நாராயணசப்தத்தால் ஜீவன் எம்பெருமானால் தரிக்கப்படுமவன் என்பதும், நம: என்பதால் அவனுக்கு வசப்பட்டு நியமிக்கப்படுமவன் என்பதும். ப்ரணவத்தால் அவனுக்குச் சேஷனாயிருப்பவன் என்பதும் கீழிருந்து மேலே படிப்படியாகக் கூறப்படுவதாய்த் தேறுகின்றது. இந்தத் தன்மைகள் ஜீவனைப் பிரியாது நிற்பன. இந்த மூன்று தன்மைகளால் எம்பெருமான் ஆத்மாவாய் ஜீவன் சரீரமா யிருப்பவன் என்ற ஸம்பந்தம் புலனாகின்றது. ஆதலின் எம்பெருமானை நோக்கி 'யானும் நீயே, என் உடைமையும் நீயே' என்ற முறையில் எல்லா வஸ்துக்களையும் எம்பெருமானோடு ஒன்றாக்கிக் கூறியதற்குக் கருத்து அவை சரீரமாய் எம்பெருமான் ஆத்மாவாயிருப்பதே என்று கொள்ளவேண்டும். இந்தக் கருத்தைத் தெரிந்து கொண்டால் எல்லா வஸ்துக்களும் ப்ரஹ்மமேயாகும், வெவ்வேறல்ல' என்றெல்லாம் கூறும் மதங்கள் தலைகாட்டா.

(ii) **ப்ரணவத்தின் அறிவால் பல அஹங்கார மமகாரங்கள் கழிதல்:** இத்திருமந்திரத்தில் உள்ள மூன்று பதங்களின் பொருளை

Scanned with CamScanner

உணர்வதால் ஜீவனுக்கு உள்ள பலவகையான அஹங்காரம் மகாரங்கள் சில சொல்லால் வெளிப்படையாகவும் சில கருத்து வகையாலும் கழிகின்றன.

(a) ப்ரணவத்தின் மூன்றாவது எழுத்தான 'ம்' ஞானவடிவனாய் ஞானமுடையனான ஜீவனைக் கூறும். இதை அறிந்தால் சரீரத்தையே ஆத்மாவாக நினைத்தலாகிய அஹங்காரமும், சரீரத்தைச் சேர்ந்தவற்றில் என்னுடையவை என்ற மமகாரமும் கழியும். (b) அகாரத்தின் மேல் ஏறி மறைந்துள்ள 'ஆய' உருபுக்கு அடிமையாதல் பொருளாதலின் எம்பெருமானுக்கு அடியன் என்ற பொருளைக் கொண்டு 'நானே எனக்கு உரியன்' என்ற அஹங்காரத்தையும் 'இந்தக் குணம் முதலியன என்னுடையன' என்ற மமகாரத்தையும் ஒழித்துவிடலாம். (c) நடு எழுத்தான 'உ' என்பதற்கு அவனுக்கே என்று வரையறை பொருளாதலின் எம்பெருமானுக்கே அடியன் என்று தேறும் பொருளை உணர்ந்தால் தன்னை வேறொருவனுக்கு இயற்கையாக அடியன் என்று நினைக்கும் அஹங்காரத்தையும் தனக்கு வேறொருவன் இயற்கையில் சேஷி என்ற மமகாரத்தையும் ஒழிக்கப் பெறலாம். (d) நடுப் பதமாகிய நம ; என்பதை ந - ம என்று பிரித்து ம : - எனக்கு, ந-இல்லை யென்று பொருள்கூற வேண்டும். எது இல்லையென்று ஆராய்ந்தால் தன்னைக் காத்துக் கொள்ளும் விஷயத்தில் எம்பெருமானை எதிர்பாராத சுதந்திரத்தை இல்லை என்பதாகக் கொள்ளவேண்டும். இதனால் நான் பிறனை எதிர்பாராது சுதந்திரனாயிருப்பவன் என்ற அஹங்காரம் கழியும். அங்ஙனமே இயற்கையாய் வேறொன்றைப்பற்றி எனக்குச் சேஷியாந்தன்மை இல்லையென்றும் பொருள் தேறும். இதனால் யான் புரியும். செயலுக்கு நான் சேஷி என்ற மமகாரம் கழியும். (e) இந்த மறுப்புக்கே மற்றும் சில அம்சங்களை மறுக்கும் சக்தி உண்டு. அதாவது நாராயணசப்தத்தின் மேல் உள்ள 'ஆய' என்ற உருபுக்குக் கைங்கர்யம் பொருளாகும். உலகில் ஒருவன் ஒரு செயலைச் செய்யும்போதும் அதன் பலனை அனுபவிக்கும் போதும், 'நான் சுதந்திரனாகவே செய்கிறேன்' 'நான் சுதந்திரனாகவே அநுபவிக்கிறேன்' என்ற அஹங்காரமும் 'எனக்காகவே செய்கிறேன்' 'எனக்காகவே அநுபவிக்கிறேன்' என்ற மமகாரமும் வருவது உண்டே! அங்ஙனமே மோக்ஷத்தில் கைங்கர்யங்களைச் செய்யும் போதும் இத்தகைய அஹங்கார மமகாரங்கள் வருமோ

என்ற சங்கை எழலாம். இந்த நம: என்ற சொல்லின் பொருளை அறிபவன் அந்த அஹங்கார மமகாரங்களையும் வேரறுத்து நிற்கின்றான் என்று தேறும்.

(iii) **திருமந்திரத்தின் அறிவால் தீய தன்மைகள் ஒழிதல் :** இந்தத் திருமந்திரத்தின் பொருளை நன்கு உணர்ந்து இதில் ஊன்றியிருப்பவன் தீங்கு விளைவிக்கும் எந்த அம்சத்திலும் ஈடுபடமாட்டான். பின் எவ்வாறு இருப்பான்? (a) எம்பெருமானையன்றி வேறு ரக்ஷகனை நாடமாட்டான். (b) வேறு தேவதையின் தொடர்பே இவனுக்கு வராது (c) சரீரத்தைப் போஷிப்பதையே பயனாகக் கொண்டு செயல் புரிய மாட்டான். (d) நிலம், வீடு முதலியவற்றில் மிக்க பற்றுக் கொள்ளமாட்டான். (e) எம்பெருமானை எதிர்பாராமல் தானே சுதந்திரனாய்ச் செயல் புரிவதாய் எண்ணமாட்டான். (f) பாகவதர்களிடம் அபசாரப்பட மாட்டான். (g) ஆத்மா அழிந்து விடுமோ என்றெல்லாம் அச்சம் கொள்ள மாட்டான். (h) மோக்ஷத்தையன்றி வேறு பயனில் ஆசை கொள்ள மாட்டான். இவ்வாறே மற்றும் தீங்கு விளைவிக்கும் அம்சங்களில் அழுந்திக் கிடக்க மாட்டான்.

திருமந்திரத்தின் அறிவே ஒருவனை பரிபூர்ணனாக்கும்

ஒருவன் பல கிரந்தங்களைப் படித்தும், கேட்டும் மிக்க அறிவு பெற்றிருந்த போதிலும் திருமந்திரத்தின் பொருளை அறிந்து தெளிவான அறிவைப் பெறாவிடில் குறையுடையவனே யாவான். ஒருவன் சிறிதே கற்றாலும் சிறந்த ஆசார்யன் கடாக்ஷத்தாலே இந்தத் தெளிவைப் பெற்றுவிட்டால் குறைவற்றுப் பரிபூர்ணனாகி விடுகின்றான். இந்தத் தெளிவு பெற்றவன் அறிவென்னும் மாடத்தில் ஏறிக் கவலையற்றவனாய் மலையின் மீது இருப்பவர்கள் பூமியில் நிற்பவரை மிகச் சிறியராகக் காண்பது போல் ஸம்ஸாரத்தில் அகப்பட்டு வருந்தும் மக்களை மிக அற்பராகக் காண்பான் என்று கூறிப் புகழ்கின்றது மஹாபாரதம்.

திருமந்த்ராதிகாரம் முற்றும்

Scanned with CamScanner

த்வயாதிகாரம்

9. த்வயம் வேதம் ஓதிய மந்திரம்

சுருதி திருமந்திரத்தைப் பதம் பதமாகப் பிரித்தும் எழுத்துக்களைக் கணக்கிட்டும் அதன் அமைப்பைக் காட்டியது. அவ்வாறே த்வயத்தைக் கடச்சுருதி பேசத்தொடங்கி முற்பகுதியையும் பிற்பகுதியையும் தனித் தனியாகக் கூறிப் பின் அதைச் சேர்த்து ஒரு முறை உச்சரிக்கும்படி விதித்தது.

10. ப்ரபத்தி மந்த்ரங்களுள் த்வயத்தை ஆசார்யர்கள் ஆதரித்த காரணம்

சுவேதாச்வதரம் முதலிய உபநிடதங்கள் ப்ரபத்தியை விளக்கும் பல மந்த்ரங்களை ஓதியுள்ளன. ஆனால் அவற்றையெல்லாம் காட்டிலும் இந்த த்வயத்தையே ஆசார்யர்கள் மிக ஆதரித்தார்கள். அதற்குக் காரணம் - ரக்ஷகனான எம்பெருமானையும் அவனை அடைதற்கு உபாயமான சரணாகதியையும் அதனால் வரும் பலனாகிய மோக்ஷத்தில் கைங்கர்யத்தையும் மற்ற மந்த்ரங்களைக் காட்டிலும் த்வயமே தெளிவாய்க் காட்டுவதேயாகும்.

11. த்வயம் அமைந்த வகை

ஸ்ரீ பாஞ்சராத்ரசாஸ்த்ரத்தில் ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதை என்பது முக்கியமான ஒன்று. அதில் திருமந்திரம் - விஷ்ணு ஷடக்ஷரம் - த்வாதசாக்ஷரம் என்னும் மூன்று வியாபக மந்த்ரங்களும் உபதேசிக்கப்பட்டுள்ளன. அவற்றோடு சரணாகதிக்குப் பயன்படும் மற்றும் சில மந்திரங்களையும் அந்த ஸம்ஹிதை உபதேசித்துள்ளது. அந்நிலையில் முதலில் திருமந்திரத்தைச் சொல்லியபின் இந்த த்வயத்தையும் ஒவ்வோர் எழுத்தாக எடுத்து உபதேசித்தது. இப்படி சுருதியும் ஸம்ஹிதையும் சேர்ந்து அமைத்தது த்வயமாதலின் சுருதியை மூலமாகக் கொண்டு அதைத் தழுவிய முறையில் தோன்றிய தாந்த்ரிக மந்த்ரமாகும் இது.

12. ப்ரபத்தி எல்லோருக்கும் உரிய பொதுத் தர்மம்

இந்த த்வயத்தில் சொல்லுகிற ப்ரபத்தி, சுருதி ஒதிய உபாயமாதலின் எல்லாச் சாதியாருக்கும் ப்ரபத்தி செய்தற்கு உரிமை இல்லையே என்று நினைக்க வேண்டாம். உண்மை பேசுதல் முதலிய தர்மங்கள் வேதத்தில் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அது பொது விதியாய் நின்று எல்லாச் சாதியாரையும் கட்டுப்படுத்தவில்லையா? அவ்வாறே ப்ரபத்தியும் எல்லாரும் செய்ய உரிய பொது தர்மமாகும். இதிஹாஸங்களும் புராணங்களும் ஸ்ம்ருதிகளும் அருளிச் செயலும் ப்ரபத்தி எல்லாரும் செய்ய உரிய பொது தர்மமேயாகும் என்று வலியுறுத்திப் பேசுகின்றன.

13. த்வயத்தின் மூலம் ப்ரபத்தி செய்பவர் கிடைத்தற்கு அரியர் என்பதன் பொருள்

இப்படி ப்ரபத்தி எல்லாரும் செய்ய உரியதாயின் சில வசநங்கள் இந்த த்வயத்தில் கூறிய ப்ரபத்தியைச் செய்பவனோ அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்பவனோ கிடைக்கவில்லை என்று சொல்கின்றனவே! அதன் கருத்து என்ன? என்று கேட்கலாம். விடை - இந்த ப்ரபத்தியைச் செய்வதற்கு இரண்டு அம்சங்கள் மிக அவசியமானவை. முதலில் நம்பிக்கை மிகுதியாயிருக்க வேண்டும். இரண்டாவது மோக்ஷத்தைப் பெறுவதில் ஆர்வம் இருக்க வேண்டும். பிந்திய பிறவியிலோ எப்பொழுதோ மோக்ஷத்தைப் பற்றிச் சிந்திக்கலாம் என்ற எண்ணத்துடன் இருந்தால் பயனில்லை. இந்தச் சரீரத்தின் முடிவிலாவது நிச்சயமாய் மோக்ஷம் பெறவேண்டும் என்ற ஆவல் இருக்க வேண்டும். இப்படி நம்பிக்கையும் ஆர்வமும் உள்ள அதிகாரி கிடைப்பதற்கு அரியன் என்கிற கருத்தையே கொண்டன அவ்வசநங்கள்.

14. த்வயம்: பெயர்க் காரணம்

இந்த மந்திரத்துக்குத்வயம் என்ற பெயர் எதனால் வந்தது? த்வயம் என்றால் இரண்டு என்று பொருள். இதில் இரண்டு பகுதிகள் உள்ளன. இங்கு முற்பகுதி உபாயத்தையும் பிற்பகுதி

Scanned with CamScanner

பலனையும் காட்டுவதால் த்வயம் என்ற பெயர் வந்தது. இங்கு உபாயமென்பது ப்ரபத்தி. சேதநன் தனக்குப் பக்தியோகம் முதலிய கடின உபாயத்தைச் செய்ய முடியவில்லையாகையால் மோக்ஷத்தைப் பெறுதற்கு வேண்டிய கைம்முதல் ஏதும் இல்லாததை உணர்கின்றான். இந்தக் கைம்முதல் இல்லாமை ஆகிஞ்சந்யம் எனப்படும். இது ப்ரபத்தி செய்பவனுக்கு வேண்டிய தகுதியாகும். - தன் ஸ்வரூபம் எம்பெருமானுக்கே அடிமையானது என்று அறிந்து கொள்கின்றான். இப்படி தெளிவான அறிவு ஏற்பட்ட பின் தன் தகுதிக்கு ஏற்ற உபாயம் எது என்று சிந்திக்கின்றான். அது தான் செய்யும் ப்ரபத்தியே. அவ்வாறே அவன் ஸ்வரூபத்துக்கு ஏற்ற பலன் மோக்ஷத்தில் பெறும் பரிபூர்ண அநுபவமே என்று உணருகின்றான். இந்த உபாயம் பலன் இரண்டையும் இரு பகுதிகளால் காட்டுகின்றது த்வயம். இந்த இரண்டுக்கும் தேசம் காலம் முதலியவற்றில் வரையறை ஏதும் இல்லை . அதாவது உபாயமான ப்ரபத்தியை இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இந்தச் சாதியார்தாம் செய்யலாமென்ற வரையறை இல்லை. எங்கும் எப்பொழுதும் எவரும் செய்யலாம். பயனாகிய மோக்ஷத்தையும் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் இன்ன ஜாதியார்தாம் பெறலாமென்ற வரையறையும் கிடையாது. ஸம்ஸார மண்டலத்துக்கு மேல் எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் எவரும் அநுபவிக்க ஏற்றதாகும். இத்தகைய உபாயம் - பலன் இரண்டையும் இம்மந்த்ரம் வெளியிடுவதால் த்வயம் என்று பெயர் பெற்றது

15. த்வயத்தின் இருபகுதிகளின் வரிசை பற்றிய விளக்கம்

ஆழ்வார்கள் பாசுரங்களில் த்வயத்தின் அர்த்தத்தை விளக்கும் போது எம்பெருமான் திருவடிகளைச் சரணமடைந்து மோக்ஷத்தைப் பெறுவதாக அருளிச் செய்கின்றனர். இது த்வயத்தில் பதங்கள் அமைந்துள்ள வரிசையைத் தழுவியதாகும். த்வயத்தில் முற்பகுதி உபாயத்தையும் பிற்பகுதி பலனையும் தானே கூறுகின்றது. உண்மையில் செய்ய வேண்டிய செயல் முறையை நோக்கினால் பிற்பகுதியின் பொருளான பயனை முதலில் சொல்லி அந்தப் பயனைப் பெறுவதற்காக முற் பகுதியின் பொருளான ப்ரபத்தியைச் செய்வதாக மாற்றிக் கூறவேண்டும். ஆயினும் ப்ரபத்தி முதலில் செய்ய வேண்டியதாய்ப் பயனான மோக்ஷம் பின்பு வருவதாயிருப்பதைக் கருதி அந்த வரிசையையே வைத்து

த்வயம் அநுஸந்திக்க வேண்டியதாய் முடிந்தது. ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிய சரணாகதி கத்யத்தின் பொருளை ஆராய்ந்தால் அதுவும் த்வயத்தின் பொருளை விரித்துரைக்க வந்ததென்று உணர முடியும்.

16. த்வயத்தின் முற் பகுதியின் பொருள் விளக்கம்

16.1 ஸ்ரீசப்தத்தின் ஆறு பொருள்கள்

த்வயத்தில் முதலில் உள்ளது 'ஸ்ரீ' எனும் சொல். இது பெரிய பிராட்டியைக் கூறும். இது பல வகைகளில் தேறுவதாக ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதை கூறும். அவையாவன (i) ச்ருணாதி = ஒழிக்கின்றாள். (ii) ச்ரீணாதி = பக்குவ நிலையை உண்டாக்குகின்றாள். (iii) ச்ரீயதே = அடையப்படுகின்றாள். (iv) ச்ரயதே = அடைகின்றாள். (v) ச்ருணோதி = கேட்கின்றாள். (vi) ச்ராவயதி = கேட்பிக்கின்றாள். இந்த ஆறு பொருளையும் வைத்துக்கொண்டு கருத்தைப் பார்க்கும் போது நிருக்தம் முதலிய ப்ரமாணங்களையும் பொருத்தத்தையும் கொண்டு இதற்கு ஏற்ற பதங்களைச் சேர்த்துப் பொருளைச் சிறப்பாக அறிய வேண்டும். விளக்கம் வருமாறு:

(i) ***ஒழிக்கின்றாள்:*** பிராட்டி தன்னை அண்டியவர்களின் அஜ்ஞாநம் முதலிய தோஷங்களையெல்லாம் ஒழிக்கின்றாள்.

(ii) ***பக்குவ நிலையைச் செய்கின்றாள் :*** பிராட்டி தன் சிறந்த கல்யாண குணங்களைக் கொண்டு கைங்கர்யம் செய்யும் வரை கொண்டுவிடக்கூடிய ஞானம் முதலிய நற்குணங்களைக் கொடுத்து மக்களைப் பரிபக்குவ நிலைக்குக் கொண்டு வருகின்றாள்.

(iii) ***அடையப்படுகின்றாள் :*** ஸம்ஸாரிகளான மக்களோ பாபம் செய்பவர்கள். அவர்கள் விஷயத்தில் தண்டனை கொடுக்க முற்பட்டுள்ளான் ஈச்வரன். அவன் இயற்கையாய்க் கருணை உடையவனே. மக்களோடு அவனுக்கு ஸம்பந்தம் உண்டு. மக்கள் சேஷர்கள். அவன் சேஷி. மக்கள் அவனுக்குச் சரீரமாயுள்ளவர்கள். அவன் அவர்களுக்கு உயிராயுள்ளவன். இவ்வாறே பலவகை ஸம்பந்தம் உண்டே! இந்த ஸம்பந்தத்தை ஒழிக்க முடியாதுதான். ஆயினும் எம்பெருமானுக்கு உள்ள இந்தக் கருணையும் ஸம்பந்தமும் குற்றம் செய்த மக்கள் விஷயத்தில் பயன்பட்டு அவர்களை வாழ்விக்க முடியவில்லை . ஏன்? அவர்கள் மீது

எம்பெருமான்தான் சீற்றம் கொண்டுள்ளானே அவனுடைய சீற்றத்தை ஆற்ற வேண்டுமே! யாரால் முடியும்? பிராட்டியால்தான் முடியும். எம்பெருமான் விஷயத்தில் மனைவியென்ற முறையில் பிராட்டிக்கு அதிக சலுகை உண்டு. மக்கள் விஷயத்திலோ தாய் என்ற முறையில் பிராட்டிக்கு மிகுந்த அன்பும் உண்டு. ஆதலின் மக்களுக்காக எம்பெருமானிடம் இவள் பரிந்து பேசினால் அவனால் மறுக்க முடியாது. ஆகவே தங்களுக்காகப் பரிந்து பேசி அவனுக்குத் துணையாய் நின்று அவனது கருணையும் ஸம்பந்தமும் தங்களுக்குப் பயன்படுமாறு செய்து தங்களுக்கு நலமளிக்க வேண்டுமென்று எல்லோராலும் அடையப் படுகின்றாள்.

(iv) **அடைகின்றாள்:** இப்படி தன்னை ஆச்ரயித்த மக்களை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக எம்பெருமானைத் தான் அடைகின்றாள். அப்பொழுதுதானே அவனது சீற்றத்தை ஆற்றி அவர்களுக்கு அருள் புரியச் செய்ய முடியும்!

(v) **கேட்கின்றாள்:** சேதநர்கள் 'அபராதிகளான எங்களை உன் நாயகனான ஸர்வேச்வரன் திருவடிகளிலே காட்டிக் கொடுத்து ரக்ஷிக்க வேண்டும்' என்றிவை முதலிய அவலச்சொற்களை மனம் நொந்து சொல்லும்போது அவற்றைக் கேட்டுக் கொள்கின்றாள்.

(vi) **கேட்கச் செய்கின்றாள் (சொல்லுகின்றாள்):** சேதநர்கள் ஈனக்குரலோடு தன்னிடம் கூறியவற்றை ஸர்வேச்வரனிடம் விண்ணப்பம் செய்து அவர்களின் கஷ்டத்தைப் போக்குகின்றாள். இப்படிப் பரிந்து பேசும் பிராட்டியின் புருஷகாரச் செய்கை இல்லாமலே எம்பெருமான் ஏன் சேதநனை ரக்ஷிக்கக் கூடாது? என்று கேட்கலாம். இந்த வரையறை ஸ்வதந்த்ரனான எம்பெருமான் தானே ஏற்படுத்திக் கொண்டதால் இதைப்பற்றி ஆக்ஷேபிக்க இடமில்லை. தந்தையின் சீற்றத்திலும் தாயின் அன்பிலும் தாமே சிறுவர்கள் நலம் பெறுகின்றனர் உலகில்! 'ச்ரி' என்னும் வினைப்பகுதிக்கு ஸேவித்தல் என்றும் பொருள் உண்டு. இதைக் கொண்டால் முதற்பொருளில் எல்லோராலும் ஸேவிக்கப் படுமவள் என்றும் இரண்டாம் பொருளில் எம்பெருமானை ஸேவிப்பவள் என்றும் பொருள் தேறும்.

'ஸ்ரீ' என்ற பெயர்ச் சிறப்பு: இத்துணைப் பொருள்கள் கொண்ட ஸ்ரீ எனும் சொல் பிராட்டிக்குத் திருநாமமாயிருக்கும் பெருமையை நினைந்து ஆளவந்தார் பிராட்டியை நோக்கி, 'ஸ்ரீ என்ற திருநாமமன்றோ உனக்கு உள்ளது! உன் பெருமையை நாங்கள் எவ்வாறு பேசவல்லோம்?' என்று விண்ணப்பம் செய்கின்றார். பிராட்டியின் இப்பெருமைகளை அறிந்தவன் பிராட்டியைப் பெறாத மற்றைத் தெய்வங்களைத் தெய்வமாகவே மதிக்க மாட்டான். ப்ரமாணக்ரந்தங்களும் ஸம்ப்ரதாய நூல்களும் பிராட்டியே மோக்ஷம் உள்பட ஸகல பலன்களையும் கொடுக்க வல்லளென்று பேசுகின்றன.

16.2 மதுப் விகுதியின் பொருள்

த்வயத்தின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் ஸ்ரீமத் என்னும் சொல் உளது. ஸ்ரீ எனும் சொல்லுக்குப் பின் இருப்பது மதுப் என்னும் விகுதி. இந்த விகுதிக்கு மிகுதி - பழிப்பு - புகழ்ச்சி - நித்யமாய்ச் சேர்ந்திருத்தல் - சிறந்திருத்தல் - ஸம்பந்தம் - இருத்தல் என்ற பல பொருள்கள் உண்டு. இங்கு நமக்கு வேண்டிய பொருள் 'எப்பொழுதும் சேர்ந்திருத்தல்' என்பதே. ஏன்? ஸம்ஸாரத்தில் உழன்று பாபங்கள் செய்யும் மக்கள் தாங்கள் நினைத்தபோதே அச்சமின்றி எம்பெருமானுடைய திருவடிகளைப் பற்றப் பிராட்டி அவனுடன் எப்பொழுதும் சேர்ந்திருப்பதுதானே மிகப் பயன்படுகின்றது! ஆகவே உபாயத்தைக் காட்டும் முற்பகுதியில் உள்ள ஸ்ரீமத் எனும் சொல் அவன் உபாயமாகும்போது அவளும் பிரியாதிருந்து உபாயமாவதைக் கூறும். பிற்பகுதியில் உள்ள ஸ்ரீமத் எனும் சொல் அவன் பயனாகும் போது அவளும் பிரியாதிருந்து பலனாவதைக் கூறும். ஸ்வரூபம் - திருமேனி - குணம் முதலிய அனைத்திலும் தன்னை ஒத்திருப்பவளான பிராட்டியைப் பிரிய அவனும் துணியமாட்டானே நாயகனான எம்பெருமான் பிராட்டியோடு கூடியே இருப்பதும் எல்லோருக்கும் தலைவியாய் விளங்கும் பிராட்டி எம்பெருமானுக்கு மட்டும் அடியளாய் இருப்பதும் நித்யமாக உள்ள அம்சங்களாதலின் இதில் பிறமதத்தினர் பேசுவதற்கு இடமேயில்லை .

5.3 பெருமாள் பிராட்டி – ஸ்வரூபம் தனி, கணமும் பிரியாமை

இங்கு ஒரு கேள்வி: சில ப்ரமாணங்கள் பிராட்டியை எம்பெருமானுக்குள் அடங்கி ஒன்றியவளாகக் கூறுகின்றனவே!

Scanned with CamScanner

ஆகவே இருவர் ஸ்வரூபமும் ஒன்றே என்று ஏற்படுகின்றதே! மற்றும் சில ப்ரமாணங்கள் எம்பெருமானையும் பிராட்டியையும் தனித்தனியாகப் பிரித்தும் கூறுகின்றனவே! இதனால் இவ்விரு வரும் தனித்தனியாய் நிற்பவரென்றும் தெரிகின்றதே! ஆகவே இருவரும் ஒருவர் என்றோ வெவ்வேறானவர் என்றோ முடிவு கொள்ள முடியாது போலிருக்கிறதே! என்று.

இதற்கு ஸமாதாநம் - இரண்டுக்கும் முரண்படாதவாறு நிர்ணயிக்க முடியும். அவனுக்குள் அடங்கியவள் என்ற வழக்குக்குப் பிராட்டியுடன் கூடிய நாராயணன் ஒருவனாதலின் அவனைக் கூறும்போது அவளும் அடங்கியுள்ளாள் என்ற கருத்தேயன்றி இருவரின் ஸ்வரூபம் கூட ஒன்று என்பதன்று. இங்ஙனமே இருவரையும் பிரித்துக் கூறும் இடங்களில் இருவரும் எப்போதும் பிரியாது கூடியே இருப்பினும் இருவரது ஸ்வரூபமும் வெவ்வேறு தானே என்ற கருத்தேயன்றி இருவரும் பிரிந்து நிற்பதென்பது அன்று. இதுவே ப்ரமாணங்களைத் தழுவிய முடிவு.

16.4 பெருமாள் பிராட்டி இருவரும் உபாயம்

இருவரும் பலன்-இங்கு உபாயத்தை விளக்கும் முற்பகுதியில் உள்ள ஸ்ரீமத் என்னும் சொல் எம்பெருமான் சேதநர்களுக்கு உபாயமாகும் போது பிராட்டியும் அவனுக்கு விசேஷணமாய் நின்று அவனோடு சேர்ந்து உபாயமாகின்றாள் என்பதைக் கூறும். பலனை விளக்கும் பிற்பகுதியில் உள்ள ஸ்ரீமத் எனும் சொல் எம்பெருமான் அநுபவிக்கப்படும் பலனாய் நிற்கும்போது பிராட்டியும் அவனுக்கு விசேஷணமாய் நின்று பலனாகின்றாள் என்பதைக் கூறும். இதுவே நம் ஆசார்யர்கள் ப்ரமாணங்களைத் தழுவிக் கண்ட முடிவு.

பிராட்டி உபாயமாவதில் ஆக்ஷேபம் - ஸமாதானம்: இங்குப் பிற்பகுதியின் ஸ்ரீமத் சப்தத்தின்படி இருவரும் பலனாய் நிற்கின்றனரென்ற கருத்தில் ஒருவருக்கும் வழக்கில்லை. ஆனால் முற்பகுதியில் மட்டும் 'ஸ்ரீமத்' என்ற சொல் பிராட்டியும் எம்பெருமானுடன் சேர்ந்து உபாயமாய் நிற்கும் தன்மையைக் காட்ட வல்லதன்றென்றும் ஆதலின் பிராட்டி உபாயமாக மாட்டாளென்றும் சிலர் கூறுகின்றனர். அவர்கள் இக்கருத்தை முற்பகுதியில் எம்பெருமான் உபாயமாகும் போது பிராட்டி

உபலக்ஷணமாயிருப்பவள் என்றும் பிற்பகுதியில் எம்பெருமான் அநுபவிக்கப்படும் பலனாகும் போது பிராட்டி அவனுக்கு விசேஷணமாயிருக்கிறாள் என்றும் சொல்லி வெளியிடுகின்றனர். உபலக்ஷணம் என்றால் என்ன? முக்கிய வஸ்துவுடன் எப்பொழுதாவது சேர்ந்திருந்ததைக் கொண்டே அந்த வஸ்துவை மற்றவற்றினின்று வேறுபடுத்திக் காட்டும் வஸ்துவே உபலக்ஷணம் எனப்படும். விசேஷணம் என்றால் ஒரு முக்கிய வஸ்துவைவிட்டுக் கணமும் பிரிக்க முடியாததாய் அந்த வஸ்துவை மற்றவற்றினின்று பிரித்துக் காட்டும் வஸ்து. இப்பொழுது அவர்கள் முற்பகுதியில் 'ஸ்ரீமத்' என்ற சொல் பிராட்டி உபலக்ஷணம் என்று காட்டும் என்கிறார்கள். ஆகவே எம்பெருமான் சேதநர்களுக்கு உபாயமாகும்போது பிராட்டிக்கு ஸம்பந்தம் இல்லையென்றதாயிற்று. ஆனால் அவனுடைய குணங்களும் திருமேனியும் மட்டும் பிரியாதிருந்து அவனுக்கு விசேஷணமாய் நிற்பதாகச் சொல்லுகிறார்கள். இப்படி பிராட்டியை உபலக்ஷணமாக்கி குணங்கள் திருமேனி இவற்றை மட்டும் விசேஷணமாகச் சொல்வது பொருட்சுவைக்குப் பொருந்தாது. ப்ரமாணங்களும் ஸம்ப்ரதாயமும் செய்துள்ள நிர்ணயத்துக்கு முரண்பட்டதுமாகும். பிற்பகுதியில் அவன் பயனாகும்போது அவளும் அவனுக்கு விசேஷணமாய் நின்று பயனாகின்றாள் என்பதை மட்டும் அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இரண்டு பகுதிகளிலும் ஒரே வகையான ஸ்ரீமத் சப்தங்கள் இருக்கும் போது முந்தியதை உபலக்ஷணமாக்குவதும் பிந்தியதை விசேஷணமாக்குவதும் ஏற்றதன்று என்று காண்க. ஆதலின் அவன் உபாயமாகும் நிலையில் பிராட்டியும் உபாய மாகவும் அவன் பலனாகும் போது இவளும் பலனாகவும் ஆகின்றாளென்பதுவே நேர்மையான முடிவு.

பிராட்டி உபாயமாவதில் பின்னும் கேள்வி - விடை: இங்கு ஒரு கேள்வி - 'பிராட்டியையும் எம்பெருமானோடு சேர்ந்து உபாயமாகக் கொள்வதானால் எம்பெருமான் ஒருவனே உபாயமாகின்றான் என்ற நிர்ணயம் முரண்படுமே! இரண்டு உபாயங்களல்லவோ ஏற்படுகின்றன!' என்று.

ஸமாதானம் - உங்களையே திருப்பிக் கேட்கின்றேன். பிராட்டியும் எம்பெருமானோடு பலனாய் நிற்பதை மட்டும் நீங்களும் ஏற்றுக்கொள்கின்றீர்களே! 'எம்பெருமான் ஒருவனே

Scanned with CamScanner

பலன்' என்று ப்ரமாணங்களும் கூறுகின்றனவே இருவரும் பயனானால் முரண்பாடு வருகின்றதே!' என்று கேட்டால் நீங்கள் என்ன விடை தருகின்றீர்கள்? ஆகவே நீங்கள் இருவரும் உபேயம்' (பலன்) என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டது போல் நாங்களும் இருவரும் உபாயம்' என்று கொள்கின்றோம். ஆகவே முரண்பாடு எதுவும் இல்லையென்று உணர்க. அவன் உபாயமாய் நிற்கும் போதும் பிராட்டியைப் போலவே பின்னும் பல விசேஷணங்கள் அவனைப் பிரியாது இருக்கின்றன. சேதநம் - அசேதமாகிய தத்துவங்கள் அனைத்தும் அவனுக்கு விசேஷணமாய்த்தாமே நிற்கின்றன. அவையெல்லாம் தத்தம் தகுதிக்கு ஏற்றவாறு பயன்படுகின்றன என்று சாஸ்த்ரங்கள் இட்ட வரையறை. ஆகவே எம்பெருமான் பிராட்டி இருவரும் சேர்ந்தே உபாயமாகவும் பலனாகவும் ஆகின்றார்கள் என்பதில் இடர் ஏதுமில்லை.

16.5 முற்பகுதி நாராயண சப்தத்தின் பொருள்

இப்படிப் பிராட்டியுடன் கூட நின்றே எல்லோரையும் காப்பதாக விரதங் கொண்டவன் எம்பெருமான். அவனது ஸ்வரூபம் குணங்கள் அன்பு இவற்றிலெல்லாம் ஒன்றுபட்டு அவனுடன் மிகவும் ஒன்றியிருக்கின்றாள் பிராட்டி. எம்பெருமானுடைய ஸம்பந்தம் - குணங்கள் - ஸங்கல்பம் - பயன் இவற்றைப் பார்க்கும் போது சேதநர்களை ரக்ஷிப்பதற்கு இவ்வம்சங்களே போதுமானவை என்றும் பிராட்டி பரிந்து பேசுதல் கூட அதிகப்படியான செயல் என்றும் கூறும்படி இருக்கின்றது. இப்படி அவன் சேதநர்களை ரக்ஷிப்பதற்கு அவனுக்குப் பயன்படுமவை கீழ்க் கூறிய ஸம்பந்தம் - குணங்களின் தொகுதி - ஸங்கல்பம் - பயன் என்பன. இவற்றையெல்லாம் 'நாராயண' எனும் சொல் வெளிப்படுத்துகின்றது.

(i) **ஸம்பந்தம் :** அவன் சேஷியாய் சேதந - அசேதங்கள் அவனுக்குச் சேஷமாயிருப்பது இருவருக்கும் உள்ள ஸம்பந்தம். அவன் தரிப்பவனாய்ச் சேதநாசேதங்கள் அவனாலே தரிக்கப் படுமவையாய் இருப்பது மற்றொரு ஸம்பந்தம். அவன் ஸங்கல்பித்த சேதந அசேதங்கள் நியமிக்கப்படுவனவாய் இருப்பது மற்றொரு ஸம்பந்தம். இந்த மூன்று ஸம்பந்தங்கள்தாம் அவன் ஆத்மாவாய்ச் சேதந - அசேதங்கள் அவனுக்குச் சரீரமாய் இருப்பதைக் காட்டுவன.

(ii) **குணத்தொகுதி:** சேதநர்கள் வந்து அடைவதற்கும் அவர்களுக்குப் பயன் தருவதற்கும் பயன்படக்கூடிய திருக்குணங்களின் தொகுதி.

(iii) **ஸங்கல்பம் :** வேறு எந்தத் துணையையும் எதிர்பாராது அனைத்தையும் நினைத்த போதே தலைக்கட்டச் சக்தியுடையதான அவன் ஸங்கல்பமென்னும் செயல்.

(iv) **பயன்:** தன்னை அண்டியவர்களைத் தானே காத்தருள் வதைக் கூடத் தன் பேறாகத் தானே கருதி ரக்ஷித்தல்.

16.5.1 குணங்கள் ஒவ்வொன்றுக்கும் விளக்கம்

குணங்களின் தொகுதியாவன: கருணை, ஸௌலப்யம், ஸௌசீல்யம், வாத்ஸல்யம், க்ருதஜ்ஞத்வம், ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஸத்யஸங்கல்பத்வம், பரிபூர்ணத்வம், பரமோதாரத்வம் முதலியன.

கருணை: நம்மிடம் உள்ள குற்றங்களைப் பாராது நாம் செய்யும் பரந்யாஸம் என்ற ஒரு சிறு செயலைக் கொண்டே நம் துன்பங்களைக் கழித்து நம்மைக் காக்கத் திருவுள்ளம் கொள்ளல். எப்படியும் ஒரு நல்ல காலம் வந்து நம்மை நிச்சயமாய்க் காத்தருள்வான் என்று நமக்கு நம்பிக்கை ஏற்படுவதற்கு இந்த அவனது கருணை சாதனமாயிருக்கும்.

ஸௌலப்யம் : பரமபதநாதனாய் எல்லோரினும் மேம்பட்டு நிற்கும் ஸர்வேச்வரன் இங்கு வந்து அவதரித்துக் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எல்லோரும் அருகில் வந்து தம் ஊனக்கண்ணால் காணும்படி எளியனாயிருத்தல். இக்குணம் சேதநர்கள் தங்கள் தாழ்வை நினைத்து அகலாமல் எப்படியும் தாம் விரும்பிய பயனை அளித்தருள்வான் என்ற நம்பிக்கைக்குச் சாதனமாகும்.

ஸௌசீல்யம்: மிக்க மேன்மையுடையவன் மிகத் தாழ்ந்தவனிடம் கலந்து பழகும் தன்மை. இது தன் தாழ்வைக் கருதி அவனை அணுக அஞ்சி விலகிப் போகாமைக்குச் சாதனமாகும்.

வாத்ஸல்யம் : அடியார்களிடம் உள்ள குற்றங்களைப் பொருட்படுத்தாத அன்புடைமை. இது அடியார்கள் தங்களிடம்

Scanned with CamScanner

உள்ள தாழ்வையும் அவனிடம் உள்ள பெருமையையும் கண்டு அவன் தம்மைப் புறக்கணித்து விடுவானோ என்று அஞ்சி ஓடிவிடாமல் செய்யும்.

க்ருதஜ்ஞத்வம் : நன்றியுடைமை. இது அடியார்கள் 'எம்பெருமான் நாம் ஒரு மிகச்சிறு செயலைச் செய்தாலும் அதைப் பெரிய உதவி செய்துவிட்டதாய்த் திருவுள்ளம் கொண்டு இனி அவன் நம்மை எந்நாளும் கைவிட மாட்டான்' என்று மனம் தேறியிருக்கச் சாதனமாகும்.

இவ்வாறே மென்மை என்ற குணம் எம்பெருமானிடம் இருப்பதால் சீற்றம் கொள்ளமாட்டான் என்ற நம்பிக்கையும், நேர்மையென்ற குணம் இருப்பதால் முறை தவறி எதையும் செய்யமாட்டான் என்ற உறுதியும் உண்டாக இடமாகின்றது.

ஸர்வஜ்ஞத்வம் : எல்லாவற்றையும் ஏக காலத்தில் எப்பொழுதும் தானே கண்கூடாகக் காண்பது. இது அடியார்கள் விரும்பும் நன்மைகளைப் பெறுவிப்பதற்கும் தீமைகளைக் கழிப்பதற்கும் ஏற்ற உபாயத்தை அறிவதற்கும் அதற்குத் தடையான விரோதிகளை அறிவதற்கும் பயன்படும்.

ஸர்வசக்தித்வம்: எதையும் செய்யச் சக்தியுடைமை. இது அடியார்கள் விரும்பும் எந்தப் பயனையும் தருவதற்கும் ஸம்ஸாரிகளான சேதநர்களை எம்பெருமான் தான் நினைத்த போது பரமபதத்தில் நித்யஸூரிகளின் கோஷ்டியில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கும் பயன்படும்.

ஸத்யஸங்கல்பத்வம் : தடையற்ற ஸங்கல்பமுடைமை. அவன் ஒன்றை ஸங்கல்பித்துவிட்டால் அதைத் தானும் மாற்றமுடியாது. இத்தகைய ஸங்கல்பம்தான் 'ப்ரபத்தி செய்தவனை ஸம்ஸார பந்தத்தினின்று விடுவிப்பேன்' என்று அவனை உறுதி கூறும்படி செய்கின்றது

பரிபூர்ணத்வம் : அவன் நினைத்தால் பெறமுடியாத வஸ்து இல்லாமை. எம்பெருமான் சேதநனது மனநிலையைப் பார்ப்பானேயன்றி அவன் ஸமர்ப்பிக்கும் வஸ்துக்களில் உயர்வு தாழ்வு - மிகுதி குறைவு முதலிய தாரதம்யத்தைப் பார்க்க மாட்டான். இது தான் இந்தக் குணத்தின் விளைவு.

பரமோதாரத்வம்: பெருங்கொடையாளனாம் தன்மை. சிறியதான ஆத்ம ஸ்வரூபத்தையும் தன்னுடையனவான அற்ப வஸ்துக்களையும் அவனுக்கு ஸமர்ப்பித்தால் அளவிடமுடியாத தன் ஸ்வரூபத்தையும் அளவற்ற தன் வஸ்துக்களையும் அநுபவித்துக் கொள்ளுமாறு சேதநனுக்கு அளிக்கின்றான். இது மிகப் பெரிய கொடையன்றோ! சேதநன் தன் ஸ்வரூபத்தையும் தன் உடைமைகளையும் ஸமர்ப்பிப்பது என்பது என்ன? இவனுக்குத் தான் உண்மையில் ஒன்றிலும் உரிமையில்லையே! எல்லாம் எம்பெருமானுடைய உடைமைகள் தாமே! இவ்வுண்மையை அறியாது தன்னுடையனவாகத் தவறாக எண்ணியிருந்தான். அவற்றை இப்பொழுது உண்மையறிவு பெற்று அவன் உடைமைகளை அவனிடமே ஸமர்ப்பிக்கின்றான். உலகில் ஒருவனது சிலம்பை ஒருவன் திருடிவிட்டான். பின் நற்புத்தி வந்து திருடிய சிலம்பை உடையவனிடம் கொடுத்து விடுகிறான். அது போன்றதுதானே சேதநன் செய்கை! இதற்கே எம்பெருமான் மகிழ்ந்து அவனுக்கு வாரி வழங்குகின்றான்.

இன்னும் ஸ்திரத்வம் தைர்யம் முதலிய குணங்கள் மிகப் பயன்படுகின்றன. ஸ்திரத்வம் என்பது தன்னை அடைந்தவனைக் காப்பதில் உறுதியுடைமை. யார் வந்து தடுத்தாலும் உறுதி சிறிதும் குலைவதில்லை. தைர்யம் - எத்தகைய அருஞ்செயலையும் செய்ய வல்ல மனப்பாங்கு.

இந்த நாராயண சப்தத்தைப் பிரித்துப் பொருள்கொள்ளும் வகைகளைத் திருமந்திரத்தில் விளக்கிக் கூறியபடி கண்டு கொள்க.

16.6 ஸ்ரீமந் நாராயண சரணௌ - இருவகைப் பொருள்

த்வயத்தில் முற்பகுதியில் ஸ்ரீமந் நாராயண சரணௌ என்கிற தொடருக்கு இரு வகையாகப் பொருள் கூறுவதுண்டு. ஸ்ரீமந் - நாராயண என்று இரண்டையும் விளிவேற்றுமையாகக் கொண்டு தவ - (உன்னுடைய) என்ற சொல்லை வருவித்துக் கொண்டு எம்பெருமானையே நோக்கி 'பெரிய பிராட்டியைப் பிரியாதவனே! நாராயணனே! உன் திருவடிகளைச் சரணமடைகின்றேன்' என்றும் பொருள் சிலர் கூறுவதுண்டு. இதற்குச் சில மந்த்ரங்களும் சில வசநங்களும் சில கத்யங்களும் இடம் தருகின்றன. ஸ்ரீமந் நாராயண - சரணௌ என்று ஒரே தொடராகக் கொண்டு பெரிய பிராட்டியைப் பிரியாத நாராயணன் திருவடிகளைச் சரணமடைகின்றேன் என்றும் கூறுவதுண்டு.

Scanned with CamScanner

16.7 'சரணௌ' பொருள் விளக்கம்

எம்பெருமானுடைய ஆத்மஸ்வருபத்தைத் திவ்யாத்ம ஸ்வரூபம் என்றும் அவன் திருமேனியைத் திவ்ய மங்கள விக்ரஹமென்றும் வழங்குவது ஸம்ப்ரதாயம். திருமேனியைச் சுபாச்ரயமென்றும் வழங்குவதுண்டு. சுப:பாபத்தைப் போக்க வல்லது. ஆச்ரய - தியானிக்க ஏற்றதாயுள்ளது. இந்த இரண்டு தன்மைகளும் அவன் திருமேனிக்கே உண்டு. அவனுடைய ஆத்ம ஸ்வரூபம் பாபத்தைப் போக்கவல்லதாகையால் சுபமென்று வழங்குவதில் இடரில்லை. ஆனால் திருமேனியைப்போல் உள்ளத்தில் கொண்டு தியானிக்க முடியாதாகையால் ஆச்ரயமென வழங்கமுடியாது. நினைத்தாலோ கண்டாலோ பாபங்களைப் போக்கவல்லதாய் உள்ளத்தில் தியானிக்க எளிதாயிருக்கும் தன்மையுடையதான அவன் திருமேனி ஒன்றே சுபாச்ரயமென வழங்க உரியதாகும்.

த்வயத்தில் சரணௌ என்ற சொல் அத்தகைய சுபாச்ரயமான அவன் திருமேனியின் பகுதியாயுள்ள திருவடிகளைக் காட்டு கின்றது. சேஷியான எம்பெருமான் சேஷனான சேதநனைத் தன் திருவடிகளில் தானே சேர்த்துக் கொள்கின்றான். சேதநன் முக்கியமாய் ஈடுபடும் துறை திருவடிதானே. ப்ரமாணங்களும் அருளிச் செயலும் திருவடிகளே உபாயமென்றும் மற்றது உபாயமாக மாட்டாதென்றும் கூறுவதைத் தழுவி இங்கும் அவன் திருவடிகளையே உபாயமாய்ப் பற்றுவதாகக் கருத்துக் கொள்வதே பொருந்தும். மேலும் உலகில் தன்னைக் காத்துக்கொள்ள விரும்புமவன் காக்க வல்லவன் பாதத்தைப் பற்றுவதே உரிய செயலாகின்றது. ஒருவனுடைய கருணையைப் பெற வேண்டிய வன் அவன் பாதத்தைப் பற்றுவதும் உலக இயல்புதானே! அவ்வாறே சேதநன் எம்பெருமான் திருவடியைப் பற்றினால் அவன்பால் எம்பெருமானுக்குத் கருணை பொங்குகின்றது. மேலும் பக்தியுடையனுக்கு அவன் திருவடிகள் அநுபவிக்கப் பரமபோக்யமாயிருப்பன. அவை சிலர் மட்டுமன்றித் தேவர்களும் அசுரர்களும் பற்றும்படி பொதுவுடைமையாய் உள்ளன. ஸகல கஷ்டங்களையும் ஒழிக்கவல்ல அந்தத் திருவடிகள் தொடங்கி வரிசையாய்த் திருமேனி முழுதையும் த்வயத்தை அநுஸந்திப்பவன் அநுபவிப்பான்.

எம்பெருமானின் ஐவகைத் திருமேனியும் சுபாச்ரயம் - பிராட்டியைப் பிரியாதது: இந்தத் திருமேனியுடன் கூடிய எம்பெருமான் பரம் - வ்யூஹம் - விபவம் - அந்தர்யாமி - அர்ச்சை என்ற ஐவகைத் திருமேனிகளிலும் பிராட்டியைப் பிரியா திருப்பவன். அவ்வாறே ஐவகைத் திருமேனிகளும் சுபாச்ரய மாயும் இருப்பன. இவற்றுள் எந்தத் திருமேனியும் ஸேவிப்ப வர்களின் பாபத்தைப் போக்குவதாகவும் தியானத்திற்கு எளிதாயும் இருக்கும். இந்த ஐவகைத் திருமேனிகளுள் அணுகி அநுப விப்பதற்கு ஏற்ற எளிமை முந்தியதிலும் பிந்தியதற்கு அதிகம். அதாவது - பரவாஸுதேவத் திருமேனியைக் காட்டிலும் வாஸுதேவன் ஸங்கர்ஷணன் முதலிய வ்யூஹத் திருமேனியும், அதனினும் ராமகிருஷ்ணாதி விபவத் திருமேனியும், அதனினும் அந்தர்யாமித் திருமேனியும், அதனினும் அர்ச்சைத் திருமேனியும் அணுகி அநுபவிப்பதற்கு எளிமை மிகுந்ததாயிருக்கும். ஸௌலப்யத்தின் உச்சநிலையை அர்ச்சைத் திருமேனியில்தான் காணலாம்.

16.8 'சரணம்' பொருள் விளக்கம்

16.8.1 சரணம் என்ற சொல் உபாயம் என்ற பொருளைக் கூறல்

சரணம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. உபாயம்- காப்பவன் - வீடு என்றெல்லாம் பொருள் உண்டு. இங்குக் காப்பவன் என்ற பொருளை மட்டும் கொண்டால் பயன் இல்லை. எல்லோரையுமே எம்பெருமான் ஒவ்வொரு வகையில் காப்பவனாதலின் பொதுவான காத்தலைச் சொல்லுமேயன்றி ப்ரபத்தி செய்பவனைக் காக்கும் விசேஷ முறை சொல்லியதாகாது. வீடு என்ற பொருளைக் கொண்டால் இங்கு அதைச் சேர்த்துப் பொருள் கூறப் பொருத்தமில்லை. ஒருகால் சரணம் என்ற சொல் அடையப்படும் பலனைக் கூறுவதாகக் கொள்ளலாம். அதுவும் பொருந்தாது. ஏன்? உபாயத்தை விளக்க வந்த முற்பகுதியில் உபாயம் என்ற பொருள் கிடைக்காதது ஒரு குறை. மேலும் பிற்பகுதி பயனைக் கூறவே அமைந்துள்ளதாதலின் அங்கும் பயனைச் சொல்லி இங்கும் அதையே பொருளாகக் கூறுவது கூறியதையே கூறுதலாகிவிடும். ஆதலின் இங்கு உபாயம் என்ற பொருளைக் கொள்வதே பொருந்துவதாகி உபாயமாக அடைகின்றேன் என்ற கருத்துக் கூறுவதே சிறக்கும் என்று முன்னோர்களால் நிர்ணயிக்கப்பட்டது.

Scanned with CamScanner

இங்கு ஒரு கேள்வி. இங்கு ப்ரபத்யே என்ற சொல்லே போதுமே! அவன் திருவடிகளை அடைகின்றேன் என்பதே போதாதா? சாஸ்த்ரங்களில் கூறிய எந்தக் கர்மங்களாலும் ஆராதிக்கப்பட்ட ஸர்வேச்வரன் பலன் கொடுப்பதற்கு எல்லோருக்குமே உபாயமாய் நிற்பதால் இங்குக் குறிப்பிட்டுச் சரணம் என்ற சொல்லையும் வைத்து உபாயம் என்ற பொருளைக் கூற வேண்டுமோ? என்று. விடை - பக்தி யோகத்தைச் செய்யத் தகுதி அற்ற சேதநன் ப்ரபத்தியைச் செய்யும்போது எம்பெருமானையே பக்தி யோகத்தின் ஸ்தானத்தில் நிறுத்திப் பலன் கேட்கின்றான் என்ற அம்சத்தைக் காட்டுவதற்காக மிகுதியாகச் சரணம் என்ற சொல்லைப் பிரயோகித்தது என்று உணர்க.

16.8.2 பக்தியின்ஸ்தாநத்தில் எம்பெருமான் இருந்து பலன் தருவதைச் சரண சப்தம் கூறல்

பின்னும் ஒரு கேள்வி - பக்தி யோகம் செய்யத் தகுதியற்றவனுக்கு அதன் ஸ்தானத்தில் ப்ரபத்தியையன்றோ சாஸ்த்ரம் விதித்துள்ளது! அப்படி இருக்க பக்தியோகத்தின் ஸ்தானத்தில் எம்பெருமானை நிறுத்துவதாய்ச் சொல்வது எப்படிப் பொருந்தும்? என்று. விடை - பக்தியோகம் செய்ய முடியாத சேதநன் கைம்முதல் அற்றவன் ஆகின்றான். அவன் விஷயத்தில் எம்பெருமானுக்குக் கருணை மிகுதியாகப் பொங்குகின்றது. கடிவமான பக்தியோகத்தைச் செய்தால் வரும் பலனைச் சிறிய செயலாகிய ப்ரபத்தியைச் செய்தாலே கொடுத்து விடுகின்றான். எப்படியும் பலனைக் கொடுப்பவன் அவனேயாதலின் அவனைப் பக்தி யோகத்தின் ஸ்தாநத்தில் வைப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இப்படி பக்தி யோகத்தின் ஸ்தானத்தில் எம்பெருமான் இருந்து பலன் தருவதே இந்த ப்ரபத்தி வித்யைக்கு முக்கியமாய் அறியவேண்டிய தன்மையாகும்.

16.8.3 திருவடிகள் உபாயமாகும் வகை

அவன் திருவடிகள் உபாயமாகும் என்பதன் விளக்கம் என்ன? சேதநன் எம்பெருமானுடைய திருவடிகளைச் சரணமடைந்து தன்னைக் காக்கும் பொறுப்பையும் ஸமர்ப்பித்து நிற்கின்றான். ரக்ஷகனான எம்பெருமானுக்கு அவனிடம் கருணை பொங்கி வழிகின்றது. பின் அவனைக் காக்கும் பொறுப்பை ஏற்றுக்

கொண்டு தன் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் செய்து கொண்டு வாழுமாறு அருள் புரிகின்றான். இதைத்தான் திருவடிகளே உபாயமென்று சொல்வது.

16.8.4 உபாயம் இரண்டு வகை

உபாயமென்ற சொல் நேராகச் சாதனமான வஸ்துவையும் பரம்பரையாய்ச் சாதனமான வஸ்துவையும் கூறும். இவ்வம்சத்தைச் சுருதி-ஸ்ம்ருதி - உலகவழக்கு, எல்லாம் சொல்லுகின்றன. உபாயம் இரண்டு வகை - ஸித்த உபாயம், ஸாத்ய உபாயம். ஸித்தோபாயம் - மனிதனது செயலுக்கு அகப்படாது முன்பே இருப்பதான உபாயம். இது எம்பெருமான். ஸாத்ய உபாயம் - மனிதனால் செய்யப்பட வேண்டிய உபாயம். இது ப்ரபத்தி. ஸித்தோபாயமான எம்பெருமான் பயனைத் தரவல்ல நேர்ச்சாதனமாவான். ஸாத்ய உபாயமான ப்ரபத்தி சேதநனிடம் எம்பெருமானுக்கு உள்ள சீற்றத்தைத் தணித்து அவனுக்குப் பலன் தரும்படி செய்யும். ஆதலின் ப்ரபத்தி பரம்பரைச் சாதனமாகும். இந்த இருவகைச் சாதனங்களும் தரும் பலன் வெவ்வேறு. எம்பெருமான் தரும் பயன் மோக்ஷம். ப்ரபத்தி தரும் பலன் அவன் சீற்றத்தைத் தணித்துப் பலன் தரும்படி செய்தல். இந்த அம்சங்கள் மாறாமல் வரையறுக்கப்பட்டுள்ளன.

16.9 ப்ரபத்தி பற்றி சில விளக்கங்கள்

16.9.1 ப்ரபத்தி ஸித்தோபாயமாகாமை

இந்த ப்ரபத்தியைச் சிலர் ஸித்தோபாயம் என்பர். அது பொருந்தாது. ரக்ஷகனான எம்பெருமானை வசப்படுத்துவதற்குச் சாதனமாக இதைச் செய்யும்படி சாஸ்த்ரம் விதித்துள்ளது. சேதநனால் செய்யப்பட வேண்டிய ப்ரபத்தி எப்படி ஸித்தோபாயமாகும்? ஆதலின் அவர்கள் கூறுவது பொருந்தாது.

16.9.2 ஸம்பந்த அறிவே ப்ரபத்தி - கண்டநம்

சிலர் எம்பெருமானுக்கும் சேதநனுக்கும் உள்ள ஸம்பந்தத்தைச் சேதநன் அறிந்து கொள்வதே ஸாத்யோபாயம் என்கின்றனர். இதுவும் பொருந்தாது. பிறர் சொல்லிக் கேட்பதாலோ புத்தகங்களைப் படிப்பதாலோ எம்பெருமானுடன் சேதநனுக்கு உள்ள ஸம்பந்தம் தெரிந்து விடுகின்றது. இதைச்

Scanned with CamScanner

சாஸ்த்ரம் விதிக்க வேண்டிய அவசியம் இல்லையே! ஸாத்யோபாயத்தையோ செய்யும்படி விதித்துள்ளது. மேலும் சாஸ்த்ரம் விதிக்காவிடினும் இந்த ஸம்பந்தத்தின் அறிவே மோக்ஷத்துக்கு உபாயமென்று கூறுவதாயின் சாஸ்த்ரம் விதிக்க வேண்டாத ஜ்ஞாநத்தாலே மோக்ஷம் பெறலாமென்ற ஸித்தாந்தத்தைப் போன்றதாகவே ஆகிவிடும். சாஸ்த்ரங்களோ அங்கங்களோடு ப்ரபத்தியைச் செய்தேயாக வேண்டும் என்று விதித்துள்ளன. அவற்றுக் கெல்லாம் முரண்பட்டதுமாகும். ஆதலின் ஸம்பந்தத்தின் அறிவு மட்டும் உபாயமாகாது. ஆதலின் எம்பெருமானே ஸித்தோபாயம். பக்தியும் ப்ரபத்தியும் ஸாத்யோபாயங்கள்.

16.9.3 எம்பெருமானே ஸித்தோபாயம்

எம்பெருமான் சேதநனைக் காப்பதற்கு வேண்டிய ஸகல அம்சங்களும் பொருந்தியவன். மனிதன் செயலுக்கு அகப்பட்ட வேண்டாதபடி முன்பே உள்ளவன். சேதநனைக் காப்பதற்கு உரிய ஸமயத்தை எதிர்பார்ப்பவன். ப்ரபத்தியென்னும் சிறிய உபாயத்தைச் செய்தால் மட்டுமே சீற்றம் மாறி அருள் புரிய நிற்பவன். இத்தகைய ச்ரிய: பதியே ஸித்தோபாயமாவான். பக்தி ப்ரபத்திகள் போலன்றி, நம் செயலுக்கு இலக்காகாமல் முன்பே உள்ளவன் எம்பெருமான்.

16.9.4 ப்ரபத்திக்குப் பலன் தருமவன் எம்பெருமானே

பக்தியோகத்துக்கு அங்கமாக ஒரு ப்ரபத்தியைச் செய்தவன் பின் பக்தியோகமாகிய சுமையைச் சுமந்தாகவேண்டும். பக்தி யோகத்தைச் செய்ய முடியாததால் கைம்முதலற்று நிற்கும் சேதநன் ப்ரபத்தியைச் செய்தவுடன் அந்தப் பக்தி யோகத்தின் ஸ்தானத்தில் ஸித்தோபாயமாகிய எம்பெருமானே நின்று பலன் தருகின்றான். இவன் வேறொரு சுமை எதையும் சுமக்க வேண்டியதில்லை. ப்ரபத்தியால் சேதநனிடம் அவனது சீற்றம் தணிந்து அவன் அருள் வருவதே ப்ரபத்தியின் பலனாகும்.

16.9.5 சேதநன் - ஈச்வரன் - ஆசார்யன் - இவர்கள் கடமை

ப்ரபத்தி செய்யத் தகுதியுடையவன் அங்கங்களுடன் ப்ரபத்தியைச் செய்து பொறுப்பை எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பதே சேதநன் கடமை. சேதநன் ஸமர்ப்பித்த

பொறுப்பை ஏற்றுக் கொள்வது ஸித்தோபாயமான எம்பெருமானது கடமை. ப்ரபத்தியைச் செய்யும் பொறுப்பைத் தன்னிடம் வைத்துக் கொள்ளாமல் ஆசார்யனிடமே சேர்க்க விரும்பும் சாதுர்யமுடையவன் விஷயத்தில் அந்தப் பொறுப்பை ஏற்று எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பது ஆசார்யனது கடமை. அப்படி ஆசார்யன் வாயிலாக ப்ரபத்தி நடந்தால் எம்பெருமான் விஷயத்திலும் ஆசார்யன் விஷயத்திலும் தன் ஸ்வரூபத்துக்கு ஏற்ற கைங்கர்யத்தைச், செய்வதும் சேதநன் கடமையாகும்.

16.10 'ப்ரபத்யே' பொருள் விளக்கம்

ப்ரபத்யே: அடைகின்றேன். ஸித்தோபாயமான எம்பெருமான் திருவடிகளை உபாயமாகக் காட்டுகிறது சரண சப்தம் என்று கீழே சொன்னோம். சரணம் என்ற சொல்லோடு ப்ரபத்யே என்னும் பதத்தைச் சேர்த்துப் பொருள் கூறும்போது அங்கங்களுடன் கூடிய பரந்யாஸத்தைச் செய்கின்றேன் என்று பொருள் தேறும்.

த்வயத்தில் ப்ரபத்தி அங்கங்களின் குறிப்பு: முதலில் ஸ்ரீமந்நாராயண என்னும் சொல்லால் ப்ரபத்தியின் அங்கங்களான ஆநுகூல்ய ஸங்கல்பமும் (அவனுக்கு அநுகூலமாகவே நடப்பேன் என்ற உறுதி) ப்ராதிகூல்யவர்ஜநமும் (அவன் திருவுள்ளத்துக்கு மாறாய் நடப்பதில்லை என்ற உறுதி) குறிப்பால் உணர்த்தப்படுகின்றன. எப்படி? பிராட்டி தாய். எம்பெருமான் நமக்கு ஸ்வாமி. இருவர் விஷயத்திலும் அவர்கள் திருவுள்ளத்துக்கு அநுகூலமாகவே நடப்பதுவும் முரண்பட்டதைச் செய்யாது இருப்பதுவும் பொருத்தம்தானே! இங்கு ப்ரபத்யே என்று சரணமடைவதைக் கூறும்போது அதற்கு அவசியமான அவ் விரண்டு அங்கங்களும் கருத்து வகையில் கிடைக்கின்றன. இந்த ப்ரபத்யே என்ற சொல்லே மஹாவிச்வாஸம் (மிகுதியான நம்பிக்கை) என்ற அங்கத்தைக் காட்டுகின்றது. எப்படி? ப்ரபத்யே என்னுமதில் பத் என்பது வினைப்பகுதி. இதற்கு அறிவென்பது பொருள். இந்த அறிவாவது எம்பெருமான் நிச்சயமாய்க் காப்பான் என்ற நம்பிக்கையே, ப்ர என்ற உரிச்சொல் பெருமையைக் காட்டும். பெரிய நம்பிக்கை என்பதே மஹாவிசுவாஸமாக முடிகின்றது.

Scanned with CamScanner

16.10.1 ப்ரபத்திக்கு மஹாவிச்வாஸம் முக்கிய அங்கம், பரந்யாஸமே அங்கி

ப்ரபத்திக்கு லக்ஷணம் கூறும் வர்க்கத்தைப் பார்க்கும்போது சரணமாகப் பற்றுகின்றேன் என்ற தொடரால் மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக் கொண்டு உபாயமாக வேண்டுமென்று ப்ரார்த்தனையும் இங்குக் கூறியதாகின்றது. சில இடங்களில் மஹாவிசுவாஸமே ப்ரபத்தியென்றும் த்வயத்தின் பொருள் மஹாவிச்வாஸமே என்றும் சொல்லியிருப்பதன் கருத்து மஹா விச்வாஸம் மிக முக்கியமான அங்கம் என்பதை உணர்த்து வதேயாகும். உபாயமாகப் பற்றுகின்றேன் என்று சொல்லு மிடத்தில் இந்த ப்ரபத்திக்குப் பின் செய்ய வேண்டிய எஞ்சிய செயல் எதுவும் இல்லாதபடி எல்லாப் பொறுப்பையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பித்தலாகிய பரந்யாஸமும் இங்குக் கூறப்பட்டதாகின்றது. ப்ரமாணங்கள் பலவும் பரந்யாஸமே முக்கியமான அங்கியென்றும் மஹாவிச்வாஸம் முதலியன அங்கமென்றும் வலியுறுத்துகின்றன.

16.10.2 ப்ரபத்திக்கு அங்கங்கள் அவசியமா? - விடை

(i) இங்குச் சிலர் ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலிய அங்கங்கள் அவசியம் ப்ரபத்திக்கு இருந்தே தீரவேண்டிய அங்கங்களல்ல என்றும் அவை ப்ரபத்தி செய்பவனிடம் தாமாகவே ஸம்பவிக்கக் கூடிய அளவில் தாம் உள்ளனவென்றும் கூறுகின்றனர். அவர்களின் கருத்து - ப்ரபத்தி முடிந்த பிறகு அவ்வங்கங்கள் இருக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை என்பதே. இது நமக்கும் இஷ்டம்தானே! ப்ரபத்திக்குப் பின் இவை அங்கங்களாக இருந்து தீர வேண்டுமென்று வரையறை இல்லையே!

இப்படியாயின் ப்ரபத்திக்குப் பின் இஷ்டப்படி எதையும் செய்யலாமே! பாபத்தைக் கூடச் செய்யலாமே! என்று கேட்கலாம். விடை - ப்ரபத்திக்குப் பின் பாபம் செய்ய நேர்ந்தால் அதற்குப் பிராயச்சித்தமாக ஒரு ப்ரபத்தியைச் செய்தாக வேண்டுமென்று சாஸ்த்ரம் விதித்துள்ளதே ! ப்ரபந்நன் தன் தகுதிக்கு முரண்பட்ட உபாயத்தைச் செய்தாலுமே அதற்குப் பிராயச்சித்தமாக ஒரு ப்ரபத்தியை விதித்துள்ளது. ஆதலின் இஷ்டப்படி நடக்க முடியாது.

(ii) பின்னும் ஒரு கேள்வி : ப்ரபத்தி செய்யும் போது அநுகூலனாயிருக்க வேண்டுமென்றும், பிரதிகூலமான செயலைச் செய்யும் எண்ணம் இருக்கக் கூடாதென்றும், இவை ப்ரபத்திக்கு அங்கமென்றும் கூறியது உலக முறைக்குப் பொருந்தாது போல், தோன்றுகின்றதே! உலகத்தில் புறா வேடனையும், கொக்கு அந்தணனையும், வானரம் மரம் ஏறிய வேடனையும் அவர்கள் எதிரிகளாயிருந்த நிலையிலேயே காத்ததாய்த் தெரிகின்றதே! ஆகவே அநுகூலச் செயலும் விபரீதச் செயலை விடுவதும் நிர்ப்பந்தமாய்க் கொள்ள வேண்டியனவாகச் சொல்ல இடமில்லையே என்று.

விடை: உலகில் புறா கொக்கு வானரம் முதலியவை விவேகிகளாய் இயற்கையாகவே கருணை மிக்கனவாயிருந்ததால் தம்மிடம் வந்தவர் எப்படி இருப்பினும் அவர்களைக் காத்தல் தமக்கு விசேஷ புண்ணியத்தை விளைவிக்கும் என்ற எண்ணத்தால் அவ்வாறே எதிரிகளையும் காத்தன. எம்பெருமான் விஷயம் வேறு. அவன் கருணை மிக்கவனாயிருப்பினும் தன் கட்டளையாகிய சாஸ்திரத்தை மீறிக் காக்க மாட்டான். ஆதலின் சாஸ்த்ரத்தின்படி அங்கங்களுடன் கூட ப்ரபத்தியை வழுவாமல் அநுஷ்டிக்கச் செய்தே காப்பான். ஆதலால் அந்த அங்கங்கள் மிகவும் அவசியமானவையே.

16.10.3 'ப்ரபத்யே' தன்மை விகுதி கூறும் பொருள்

(i) ப்ரபத்யே என்னும் போது வினைச்சொல்லின் மேல் தன்மையொருமை விகுதி (உத்தம புருஷ ஏகவசம்) உள்ளது. இது சேதனான தன்னை ப்ரபத்தி செய்பவனாகக் காட்டுகின்றது. தகுதி யுடையவன்தானே ப்ரபத்தியைச் செய்ய முடியும்? ப்ரபத்திக்குத் தகுதியோ பக்தி யோகம் முதலிய கைம்முதல் இல்லாமை, வேறு தெய்வத்தையும், வேறு பயனையும் நாடாமை. ப்ரபத்தி செய்யத் துணிந்து வருமவனுக்கு இந்த இரண்டு தகுதிகளும் இருந்துதானே தீரவேண்டும்? ப்ரபத்தி செய்பவனைக் காட்டும் தன்மை விகுதியே இந்தத் தகுதியைக் குறிப்பிடுவதாகக் கொள்ள வேண்டும்.

(ii) தன்மை விகுதியே கார்ப்பண்யத்தையும் குறித்தல்: அவ்வாறே கார்ப்பண்யம் என்னும் அங்கத்தையும் இந்தத் தன்மை விகுதியே குறிப்பினால் காட்டுவதாகக் கொள்ள வேண்டும்.

Scanned with CamScanner

கார்ப்பண்யம் என்பது யாது? பக்தி யோகமாகிய கைம்முதல் தன்னிடம் இல்லையே என்று நினைத்துக்கொள்ளுதல் அல்லது அந்தக் கைம் முதலில்லாமையை நினைத்துச் செருக்கின்றி இருத்தல் அல்லது எம்பெருமானுக்குக் கருணை உண்டாகுமாறு ஸேவித்தல் துதித்தல் முதலியன. இத்தகைய கார்ப்பண்யம் ப்ரபத்தி செய்பவனிடம் இருந்துதானே தீரவேண்டும். ஆதலால் இதுவும் கருத்தால் குறிப்பிடப் பட்டதாகும். கீழ்க்கூறிய தகுதிகளோடும் கார்ப்பண்யம் என்ற அங்கத்தோடும் கூடிய ப்ரபத்தியைச் செய்கின்றான் சேதநன் .

16.10.4 ப்ரபத்தியில் ஸாத்துவிகத் தியாகத்தின் அவசியம்

சேதநன் ப்ரபத்தியைச் செய்யும்போது இந்த ப்ரபத்தியும் எம்பெருமானது திருவருளாலேயே செய்ய நேருவதாய் அநுஸந்திக்க வேண்டும். ஆசார்யனது அநுக்ரஹத்தால் தத்துவ ஜ்ஞாநம் பெற்றவனுக்குத் தான் செய்யும் கர்மங்களின் பலனில் பற்று இருக்காது. அக்கருமங்களைத் தான் சுதந்திரமாகச் செய்வதாகவும் நினைக்க மாட்டான். மோக்ஷத்துக்காகச் செய்யப்படும் தருமங்கள் நிவ்ருத்தி தர்மங்களெனப்படும். பக்தி யோகம் செய்பவன் அதன் அங்கங்களான கர்மயோகம் முதலிய நிவ்ருத்தி தர்மங்களைச் செய்யும்போது பலனில் பற்றின்றியும் தான் சுதந்திரனாகச் செய்வதாக நினையாமலும் இவ்வாறு பற்றையும் செயலையும் தியாகம் செய்தே செய்வான். அங்ஙனமே ப்ரபத்தி செய்பவனும் பலனிலும் செயலிலும் தனது உரிமையைத் தியாகம் செய்வான். ஆனால் ப்ரபத்தி செய்பவன் விஷயத்தில் ஒரு விசேஷ அம்சம் உண்டு. அதாவது - இவன் ப்ரபத்திக்குப் பின் செய்யும் நற்செயல்களை மோக்ஷத்துக்கு உபாயமாகவன்றி , செய்வதையே பயனாகக் கொண்டு செய்வான்.

16.10.5 'ப்ரபத்யே' - நிகழ்கால வினைமுற்றின் விளக்கம்

ப்ரபத்யே என்கிற வினைமுற்று அடைகின்றேன்' என்று நிகழ் காலத்தைக் குறிப்பதாயுள்ளது. த்வயம் ப்ரபத்தி செய்வதற்கு உரிய மந்த்ரமாதலின் அங்கங்களுடன் ப்ரபத்தி செய்யும் நிமிஷமாகிய நிகழ் காலத்தைக் காட்டுகின்றது. இப்படி நிகழ்காலத்தை மந்த்ரம் குறிப்பிட்டிருப்பதால் ப்ரபத்தியைச் சரீரம் உள்ள வரையில் செய்து கொண்டேயிருக்க வேண்டுமோ? என்று நினைக்கக் கூடாது. ப்ரபத்தியை ஒரு முறைதான் செய்ய வேண்டுமென்று சாஸ்த்ரம்

விதித்துள்ளது. ஒரு பயனுக்காக் கூறப்பட்ட எந்தக் கர்மமும் ஒரு முறை செய்வதாலேயே பூர்த்தியாகி விடுவதாக உலகத்தில் ஒரு பொது நீதி உண்டு. ஆனால் பன்முறை செய்யும்படி விதிக்கும் வசநம் இருந்தால் இந்தப் பொது நீதி செல்லாது போகும். பக்தியோகத்தில் மட்டும் ஒரு விசேஷ விதியைச் சாஸ்த்ரமே சில வசநங்களால் வெளியிட்டதால் ஒரு முறை என்ற பொது நீதி அங்குத் தலைகாட்டமுடியாது. அந்த விதி பக்தி யோகத்தைப் பூர்த்தியாகும் வரை செய்தாக வேண்டுமென்று வலியுறுத்தியது. ப்ரபத்தியிலோ ஒருமுறை செய்வதைக்கூறும் பொது நீதிக்குப் பல ப்ரமாணங்களின் துணையே உள்ளது. ஆதலால் ப்ரபத்திக்கு ஒருமுறை செய்தலே உள்ளது. காகம் முதலியவர்கள் சரணமடைந்து பயன் பெற்றதைப் பார்த்தாலும் ப்ரபத்தி ஒரே முறை செய்ய வேண்டுமென்று தேறுகின்றது.

16.10.6 ப்ரபத்திக்குப் பின் செய்யும் நற்காரியங்கள் அதற்கு அங்கமல்ல

உலகில் யாகம் செய்தால் அதன் முடிவில் அவப்ருதம் என்பது உண்டு. இந்த அவப்ருதஸ்நாநம் செய்தலோடு யாகம் பூர்த்தி அடைகின்றது. ப்ரபத்தியை உபநிடதம் ஒரு வேள்வியாகக் கூறி அவனுக்கு நேரும் மரணத்தை அவப்ருதமாகக் கூறியுள்ளது. இதனின்று யாகத்திற் போல் மரணம் வரை ப்ரபத்தியின் தொடர்ச்சி உண்டோ என்று சங்கை எழுகின்றது. ப்ரபத்தியோ ஒருமுறை செய்வதுடன் மட்டுமன்றி ஒரு க்ஷணத்திலேயே செய்து முடிக்க வேண்டியதாயுள்ளது. இது முரண்படுகின்றதே? என்று கேட்கலாம். ஸமாதாநம் - மரணம் என்பது சேதநன் கையில் இல்லை. எம்பெருமான் ஸங்கல்பத்தாலேயே வரக்கூடியது மரணம். இதை அவப்ருதமாகக் கூறியதன் உட்கருத்து வேறு. அதாவது - ஒரே க்ஷணத்தில் செய்து முடித்த ப்ரபத்தியென்னும் வேள்விக்குப்பின் சேதநன் இங்கு இருந்து செய்யும் கைங்கர்யங்கள் முதலிய நற்செயல்களெல்லாம் ப்ரபத்திக்கு அங்கமாகா, ப்ரபத்தி வேறு எதையும் எதிர்பாராதது என்பதைக் காட்டுவது அவப்ருதமென்ற சொல் என்று அறிக.

16.11 ப்ரபந்நனுக்கு முக்காலத்திலும் உள்ள கடமைகளும் அவற்றில் சிறு குறை இருப்பினும் பலன் பெறுதலும்

இப்படி த்வயத்தின் முற்பகுதி பரந்யாஸமென்னும் ப்ரபத்தியை விளக்குவதாகக் கூறினோம். இந்த ப்ரபத்தியைச்

Scanned with CamScanner

செய்தவனுக்கு ப்ரபத்திக்கு முன்பும் ப்ரபத்தியைச் செய்யும் காலத்திலும் ப்ரபத்தியைச் செய்து முடித்த பின்பும் இப்படி முக்காலத்திலும் செய்ய வேண்டிய இன்றியமையாத கடமைகள் சில உண்டு. அவையாவன -

(i) ப்ரபத்திக்கு முன்பு ஓர் ஆசார்யனை அடைந்து தத்துவங்களைப் பற்றிய அறிவு - எம்பெருமானிடம் பக்தி முதலியவற்றை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். இதை பெறாதவன் ப்ரபத்தியைச் செய்ய உரியனாக மாட்டான்.

(ii) ப்ரபத்தியைச் செய்யும்போது ஆநுகூல்ய ஸங்கல்பம் (எம்பெருமானை உகப்பிக்கும் அநுகூலச் செயல் புரிவதில் உறுதி) ப்ராதிகூல்ய வர்ஜநம் (பாபங்களைச் செய்யாமையில் உறுதி) முதலியன இருக்கவேண்டும். இவற்றைப் பெறாதவன் செய்ய வேண்டிய ப்ரபத்தியைச் செய்தவனாக மாட்டான்.

(iii) ப்ரபத்திக்குப் பின் இயன்றவரை பாபம் கலவாத நற்காரியங்களையும் நித்ய நைமித்திக கைங்கர்யங்களையும் பகவத் கைங்கர்யங்களையும் வேறு பயனை நாடாது செய்து வரவேண்டும். இவ்வாறு செய்யாதவன் இவ்வுலகில் நற்பயன் பெற்றவனாகமாட்டான்.

ஆனால் இவற்றில் குறையுடையவர்களின் கதி யாது? என்று கேட்கலாம். இவர்கள் செய்தவளவுக்கு இவர்கள்பால் மகிழ்ச்சி கொண்டு நன்றியறிவுடையவன் ரக்ஷகனான எம்பெருமான். அவன் தன் கருணையால் நாளடைவில் சேதநருடைய குறைகளை நீக்கி ப்ரபத்தியைப் பூர்ணமாக்கிப் பலன் பெறச் செய்வான். ஒருமுறைத்வயத்தை ஜபிப்பதற்கே முழுப்பலனைச் சாஸ்த்ரங்கள் கூறும்போது இங்கு ப்ரபத்தியில் சிறு குறை இருப்பினும் நாளடைவில் முழுமை பெறுவதற்கும் அம்முறை வருவது நியாயம்தானே! ஹரி என்ற இரண்டு சிறு எழுத்துக்களை உச்சரித்தவனை மோக்ஷம் செல்ல வழியைக் கண்டுவிட்டவனாகக் கூறுகின்றது ப்ரமாணம். ஹரி என்று கூறுவதே கல்லால் இட்ட அஸ்திவாரமென்றால் அதிலும் பெரிதாய் இரண்டு வாக்யமாய் நிற்கும் த்வயத்தை உச்சரித்து ப்ரபத்தி செய்தவனுக்குப் பலன் வருவது பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

16.12 ப்ரபத்தி எல்லாப் பலனையும் அளித்தல்

ஸத்துவ குணம் தலையெடுக்கப் பெற்றால் தமோகுணத்தாலும் ரஜோ குணத்தாலும் வரும் உள்ளக் கலக்கம் தீர்ந்துவிடும். பின் பரிபூர்ணமான ப்ரபத்தியைச் செய்தவனுக்கு அவன் விரும்பிய பலன் அவன் குறிப்பிடும் காலத்திலேயே கிடைக்கும். இந்த ப்ரபத்தி மோக்ஷம் வரை உள்ள ஸகல பலன்களையும் கொடுக்க வல்லதென்று ப்ரமாணங்கள் முறையிடுகின்றன. காகம் - விபீஷணன் - புறா - ஸுமுகன் - த்ரௌபதி - கஜேந்திரன் - க்ஷத்ரபந்து - முசுகுந்தன் முதலிய பலரும் பல்வேறு பலனை விரும்பிச் சரணமடைந்து தாங்கள் விரும்பிய பலனைப் பெற்ற வரலாறுகளாலும் ப்ரபத்தி ஸகல பலன்களுக்கும் ஸாதமாகும் என்று அறியக் கிடக்கின்றது.

17. த்வயத்தின் பிற்பகுதியின் பொருள் விளக்கம்

17.1 த்வயத்தின் பிற்பகுதியின் திரண்ட பொருள்

ப்ரபத்தியென்னும் உபாயம் எல்லாப் பலன்களையும் அளிக்க வல்லதெனக் கூறப்பட்டது. அந்த உபாயத்தை இங்கு த்வயத்தில் கூறியது எந்தப் பயனைக் குறித்து? என்று கேள்வி. விடை- இம்மையில் அழிந்து போகும் அற்ப பலன்களினும் முழுதும் வேறுபட்ட மோக்ஷமாகிய பெரும்பயனை அந்த ப்ரபத்திக்குப் பலனாகக் காட்டுகின்றது த்வயத்தின் பிற்பகுதி.

17.2 'ஸ்ரீமத்' சொல் காட்டும் பொருள்

இங்கும் ஸ்ரீமத் எனும் சொல் உள்ளது. அளவற்ற போக்யமாய் நிற்கும் சேஷிதத்துவமான நாராயணன் ஸ்ரீவைகுண்டத்தில் பெரிய பிராட்டியாரின் சேர்த்தியில் நின்று சேதநன் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்கின்றான். இப்படி பிராட்டி உபாய நிலையிற் போலே அவன் பலனாய் நிற்கும் நிலையிலும் எம்பெருமானைப் பிரியாது நித்யமாய்க் கூடியிருக்கும் நிலையைக் காட்டுகின்றது ஸ்ரீமத் எனும் சொல்.

17.3 பிற்பகுதியிலும் 'ஸ்ரீமத்' சொல்லின் அவசியம்

உபநிடதம் முதலிய ப்ரமாணங்கள் லீலாவிபூதியாகிய ப்ரபஞ்சம்-நித்ய விபூதியாகிய பரமபதம் இந்த இரண்டு விபூதிகளுடன் கூடிய எம்பெருமானே அநுபவிக்கப்படும் பயனென்று

Scanned with CamScanner

சொல்லியிருக்க, இங்கு பிராட்டியுடன் கூடியவன் என்று பிரித்துச் சொல்ல வேண்டுமா? என்று கேள்வி. விடை - பிராட்டியோடு கூடிய நாராயணன் பலன் என்று சொல்லும் போது பெருமாள் - பிராட்டி இருவரினும் மேம்பட்ட தத்துவம் இல்லையென்றும், லீலாவிபூதி - நித்ய விபூதி ஆகிய இருவிபூதிகளுக்கும் இருவருமே சேஷிகளென்றும், எல்லோருக்கும் சேஷியாயிருக்கும் தன்மை திவ்ய தம்பதிகளிடமே ஒன்றாயிருப்பதென்றும் இவ்வுண்மைகளை எல்லாம் தெளிவாய் உணர்த்துவதற்காகக் குறிப்பிட்டு இங்கும் ஸ்ரீமத் சப்தம் அமைந்துள்ளதென்று அறிக. இங்கு உள்ள ஸ்ரீ என்ற சொல்லுக்கும் கீழ் கூறிய முறையில் பல்வேறு பொருள்கள் இருப்பினும் அவள் இங்குப் பயனாயிருந்து அடையப்படுவளாயிருப்பதற்கு ஏற்ற அர்த்தங்களை முக்கியமாய்க் கொள்ள வேண்டும். எல்லோராலும் ஸேவிக்கப் படுமவள், கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்ளுமவள் ஆகிய பொருள்களைக் கொள்வதும் பொருந்தும்.

17.4 மறுமுறை நாராயண சப்தத்தின் அவசியம்

எல்லோருக்கும் சேஷியாய்ப் பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே அநுபவிக்கப்படும் முக்கிய பயன் ஆவான் என்பதை ஸ்ரீமத் என்னும் சொல்லே காட்டும்போது பின்னும் இங்கு நாராயண எனும் சொல் எதற்காக? என்றால் - அடைபவனான ஜீவனுடைய ஸ்வரூபம் - எம்பெருமானுடைய ஸம்பந்தம் அவனுடைய குணங்கள் - திருமேனி முதலிய அனைத்துடனும் பரிபூர்ணமாய் அநுபவிக்கப்படுமவன் எம்பெருமான் என்று காட்டுவதற்காகப் பின்னும் இங்கு நாராயண எனும் சொல் என்று கொள்க.

17.4.1 முக்தனுக்கு ஸகல வஸ்துக்களும் அநுகூலமாதல்

சேதநன் இங்கு ஸம்ஸாரமண்டலத்தில் இருக்கும்போது சில வஸ்துக்கள் இவனுக்கு அநுகூலமாகவும் சில வஸ்துக்கள் பிரதிகூலமாகவும் தோன்றும். ஒரு வஸ்துவே ஓர் இடத்தில் இருக்கும்போது அநுகூலமாகவும் அதுவே மற்றோர் இடத்தில் பிரதிகூலமாகவும் தோன்றும். அவ்வாறே ஒரு வஸ்து ஒரு காலத்தில் அநுகூலமாயும் மற்றொரு காலத்தில் பிரதிகூலமாயும் தோன்றுவதும் உண்டு. ஒரு வஸ்துவே ஒருவனுக்கு அநுகூலமாய் மற்றொருவனுக்குப் பிரதிகூலமாவதையும் காண்கின்றோம்.

இப்படியெல்லாம் இடத்தையும் காலத்தையும் மனிதனையும் பொறுத்துப் பல்வகை மாறுபாட்டுக்குக் காரணம் அந்தந்த மனிதனுடைய கர்மங்களே. முக்தி பெற்றவனுக்கு ஸகல கர்மங்களும் அவற்றால் வந்த சரீரம் இந்த்ரியம் முதலியனவுமெல்லாம் கழிந்து விடுகின்றன. அந்நிலையில் எந்த வஸ்துவைக் கண்டாலும் எம்பெருமானுக்கு உடைமையாய் அவனது நியமனத்திற்கு உட்பட்டதென்ற ஓர் எண்ணம் மட்டுமே வருமாதலின் எந்த வஸ்துவும் முக்தனுக்கு மிகவும் அநுகூலமாகவே தோன்றும்.

17.4.2 முக்தன் அநுபவிக்கும் பரமாநந்தம்

இப்படி பரமபதத்தில் முக்தன் அநுபவிக்கும் இன்பம் எத்தகையது? என்று பார்க்கலாம். இங்கு ப்ரபஞ்சத்தில் எண்ணற்ற ஆத்மாக்கள் உள்ளனர். இவர்கள் எல்லாம் ப்ரஹ்மாவின் ஐச்வர்யம் வரை உள்ள பெரிய போகங்களையும் அவற்றிலும் மேம்பட்ட ஆத்மாநுபவமாகிய கைவல்யத்தையும் அநுபவிப்பதால் வரும் இன்பத்தை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும் ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானைப் பரிபூர்ணமாய் அநுபவிப்பதால் வரும் இன்பமாகிய திருப்பாற்கடலின் ஒரு சிறு துளிக்கும் ஈடாகமாட்டாது.

17.4.3 நாராயண சப்தம் பரமபதநாதன் திருமேனியையும் கூறல்

ஸ்ரீவைகுண்டத்தில் திருமாமணி மண்டபத்தில் திவ்ய பர்யங்கத்தில் எழுந்தருளியுள்ளான் பரமபதநாதன். அவனுடைய திவ்யமங்கள் விக்ரஹத்துக்கு நித்யர்களும் முக்தர்களும் விசேஷமான கைங்கர்யங்களைச் செய்கின்றனர். இந்த அம்சத்தை உபநிடதமும் ஒதுகின்றது. அந்தக் கைங்கர்யங்களுக்கு இலக்கான அத்தகைய திருமேனியும் இந்த நாராயண சப்தத்தால் முக்கியமாய்க் கூறப்படுவதாய் அநுஸந்திக்க வேண்டும்.

17.4.4 முக்தர் பரமபதத்தில் வாழும் இடம்

முக்தி பெற்றவர்களுக்கென்று ஏற்பட்ட தனிப்பட்ட இடம் ஒன்று உண்டு. பரமபதநாதன் திருவடிகளை ஏந்தி நிற்கின்றது ஒரு தாமரை. திருவடிகளுக்கும் அந்தத் தாமரைக்கும் நடுவிடமே முக்தன் வாழுமிடம். இதைத்தான் ஆழ்வார் அவன் தன் திருவடிக் கீழ் சேர்த்துக் கொள்வதாகக் கூறுகின்றார்.

Scanned with CamScanner

17.5 'ஆய' விகுதி கூறும் பொருள்

இங்ஙனம் பிற்பகுதியில் ஸ்ரீமத் - நாராயண எனும் சொற்கள் எல்லோருக்கும் அவன் சேஷியாயிருப்பதையும் எல்லா வகையிலும் அநுபவிக்க எல்லையற்ற இனியனாய் இருப்பதையும் முக்கியமாய்க் காட்டின. அதற்குமேல் ஆய என்னும் நான்காம் வேற்றுமையுருபு உள்ளது. இதற்குப் பொருள் சேஷனாயிருத்தல் என்பது. இப்பொருளை மட்டும் இங்குக் கொள்வதானால் ஸ்ரீமே முற்பகுதியில் சரணாகதியைச் சொல்லியதோடு சேர்த்து இதற்குப் பொருள் கூறவேண்டுமே! பொருள் பொருந்தவில்லையே! மேலும் இந்தச் சேஷனாந்தன்மை சேதநனுக்கு எப்பொழுதும் இருப்பது தானே! இதைக் கூற வேண்டிய அவசியமும் இல்லையே! ஆதலின் இந்த வேற்றுமையுருபுக்கு இங்குப் பொருத்தமான பொருள் எதுவென்று பார்க்க வேண்டும். இதற்கு ஏற்பட்ட பொருளாகிய சேஷனாந்தன்மைக்குத் தொடர்புள்ள பொருள் அதற்குப் பயனாய் வரும் கைங்கர்யமே. கர்மங்கள் எல்லாம் தொலைந்து இந்தச் சேதநன் எம்பெருமானை மோக்ஷத்தில் இயற்கையாய் அநுபவிக்கும் போது அந்த ஆநந்தத்துக்குப் போக்குவீடாகக் கைங்கர்யங்களைச் செய்கின்றான். அஹங்கார மமகாரங்கள் முதலிய விபரீதங்கள் எதுவுமின்றித் தூய்மையான எல்லாவகைக் கைங்கர்யங்களையும் பரமபதத்தில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தன் இஷ்டப்படி செய்கின்றான். இத்தகைய கைங்கர்யத்தை ஆய என்னும் விகுதி காட்டுவதாகக் கூறுவது மிகப் பொருந்துகின்றது. அத்தகைய கைங்கர்யத்தைச் சேதநன் இங்கு இருந்தபடியே பிரார்த்திக்கின்றான். அதற்காக இங்கு 'பவேயம்' என்ற ஒரு வினைமுற்றை வருவித்துக் கொண்டு நாராயணனுக்குக் கைங்கர்யம் செய்பவனாக நான் ஆகவேண்டும் என்று பொருள் கொள்வதே மிகச் சிறக்கும்.

17.6 'நம:' சொல்லின் பொருள் விளக்கம்

மேலே நம: என்ற சொல் மிகச்சிறந்த பயனான மோக்ஷத்தைப் பிரார்த்திக்கின்றான் சேதநன். அந்தப் பயன் எப்போது வரும்? அஞ்ஞானம் கர்மம் முதலிய விரோதி வகுப்புக்களெல்லாம் அடியோடு ஒழிந்த பின்பன்றோ மோக்ஷம் பெறமுடியும்! இதுவரை இந்தச் சேதநன் இந்த ஸம்ஸார மண்டலத்தில் எத்தனையோ உலகியற் பலன்களைப் பெற்று அநுபவித்துள்ளான். அவற்றையெல்லாம் அநுபவிக்கும் போது தான் சுதந்திரமாகவே செயல் புரிவதாகவும், தன் பயனுக்காவே செய்வதாகவும், தான் சுதந்திரமாகவே அநுபவிப்பதாகவும், தன் மகிழ்ச்சிக்காகவே அநுபவிப்பதாகவும் இத்தகைய விபரீத எண்ணங்களுடனேயே அநுபவித்து வந்தான். இப்பொழுது மோக்ஷத்தில் அந்த விபரீத எண்ணங்களாகிய களைகளெல்லாம் நீங்கப்பெற்று எல்லா வற்றையும் எம்பெருமானே செய்விப்பதாயும், அவனே பலனை முக்கியமாய்ப் பெறுவதாகவும் அநுஸந்தாநம் செய்கின்றான். இந்த நிலையே இங்கு நம: என்ற சொல்லால் காட்டப்படுகின்றது. ஸ்ரீமே திருமந்திரத்தில் ஸூக்ஷ்ம யோஜனையில் சொல்லியபடி இங்கும் ந,ம: என்று இரண்டு எழுத்தாய்ப் பிரித்து இரண்டு பதமாய்க் கொண்டு பொருள் கூறவேண்டும். அப்பொழுது 'கிஞ்சித்' (எதுவும்) ந 'ஸ்யாத்' இருக்கவேண்டாம் என்ற சொற்களை வருவித்துக்கொள்ளவேண்டும். இதனால் எனக்கு எந்த அதிஷ்டமும் வரக்கூடாது என்று பொருள் தேறும். இதனால் அஹங்காரம் நீங்க வேண்டுமென்று பிரார்த்தித்ததுவுமாயிற்று. இதன் வாயிலாக எல்லா விரோதிகளும் நீங்க வேண்டுமென்று பிரார்த்தித்தாகவும் கொள்ளலாம்.

18 த்வயத்தில் வரிசையாய்ப் பதங்களின் பொருள்

பதம்	பொருள்
ஸ்ரீமத்	பிராட்டியோடு சேர்ந்திருத்தல்
மதுப் விகுதி	பிராட்டி நித்யமாய்ப் பிரியாதிருத்தல்
நாராயண	காப்பதற்கு வேண்டிய குணங்கள் முதலியன
சரணௌ	பாபத்தைப் போக்கித் தியானத்துக்கு உரிய திருமேனி சரணம் உபாயமாயிருத்தல்
ப்ரபத்யே	அவனை வசீகரிக்கும் ப்ரபத்தி. ப்ரபத்தியை ஒரு முறையே செய்தல்
தன்மை விகுதி	செய்பவனது தகுதி

Scanned with CamScanner

ஸ்ரீமத்	ஸர்வசேஷியான அவன் பிராட்டியுடன் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுதல்
நாராயண	எல்லாவற்றுடன் கூடி மிக இனியனாயுள்ளமை
ஆய	அவனுக்குத் தன் ஸ்வரூபத்துக்குத் தக்கவாறு இஷ்டப்படி கைங்கர்யம் புரிதல்
நம:	கைங்கர்யம் அஹங்காரம் முதலிய களையற்று நிற்றல்
ஸ்யாத்	தூய்மையான கைங்கர்யத்தைப் பிரார்த்தித்தல்

19 மூன்று வாக்கியங்களும் விளக்கும் முழுப்பொருள்

த்வயத்தில் முற்பகுதி ஒரு வாக்யமாகவும் பிற்பகுதி இரண்டு வாக்யங்களாகவும் அமைந்துள்ளன. இந்த மூன்று சிறு வாக்யங்களின் பொருளையும் சேர்த்து ஒரு பொருளாக்கிப் பார்த்தால் 'வேறு ஒருவனுக்குமன்றி எம்பெருமானுக்கே அடியனாய், பக்தி யோகம் முதலிய கைம்முதலற்ற நான் பிராட்டியைப் பிரியாத நாராயணன் திருவடிகளில் எவ்வகைக் குற்றமற்றதாய்த் தனக்கு இஷ்டமான எல்லா வகைக் கைங்கர்யங்களின் தொகுதியைப் பெறுவதற்குப் பிராட்டியைப் பிரியாத நாராயணன் திருவடிகளையே உபாயமாகக் கொண்டு முறைப்படி என்னைக்காக்கும் பொறுப்பை ஸமர்ப்பிக்கின்றேன்' என்று தேறும்.

20 த்வய நிஷ்டன் - விளக்கம்

இப்படித்வயத்தின் அர்த்தத்தைப்ரபத்தியைச் செய்யும் போது ஒரு முறை அநுஸந்திக்க வேண்டும். இதனால் சேதநன் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவனாவான். ப்ரபத்திக்குப் பின் வேறு பயனை நாடாது செய்யவேண்டிய கடமைகளுள் ஒன்றாய் இந்த அர்த்தத்தை எப்பொழுதும் அநுஸந்தித்துக் கொண்டே இருக்கலாம். இதற்கு இதுவே பயன். இப்படி இந்த அர்த்தத்தை

எப்பொழுதும் அநுஸந்திப்பவன் இங்கேயே பயன் பெற்றவனாவான்.

த்வயத்தில் முற்பகுதி அவன் திருவடிகளில் ப்ரபத்தியை விளக்குவதால் சேதநன் அத்திருவடிகளையன்றி வேறு உபாயத்தைக் கொள்ளாதவனென்று தேறும். பிற்பகுதி அவன் திருவடிகளில் கைங்கர்யமாகிய பயனைக் கூறுவதால் சேதநன் அக்கைங்கர்யத்தையன்றி வேறு பயனைக் கொள்ளாதவனென்று தேறுகின்றது. இரு பகுதிகளையும் சேர்த்துப் பார்க்கும்போது வேறொருவனுக்கும் அடியனாயன்றி எம்பெருமானுக்கே அடியனாயுள்ளமை தேறுகின்றது. இப்படி உபாய நிலையிலும் பயனான நிலையிலும் பிராட்டியும் பெருமாளுமாக இருப்பன்றி வேறு இல்லையென்று கண்டவன் த்வயத்தில் கூறிய நிஷ்டையைப் பெற்றவனாவான்.

த்வயாதிகாரம் முற்றும்

Scanned with CamScanner

சரமச்லோகாதிகாரம்

21 முன்னுரை

ச்ரிய: பதியான ஸர்வேச்வரன் ஸாதுக்களைக் காப்பதற்கும் பாபிகளை ஒழிப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் இந்நிலவுலகில் வந்து அவதரித்தருளி எல்லோரும் அணுக எளியவாய் நின்றான். தன்னைச் சரணமடைந்த பாண்டவர்க்காகத் தூது செல்வதைப் பெருமையாகக் கொண்டான். அவர்களில் ஒருவனான அர்ஜுனனைத் தேரில் தலைவனாய் வைத்துத் தான் பாகனாய் அமர்ந்து அவன் இடும் கட்டளையைச் செய்யப் பாரித்து நின்றான். அது போர்க்களம். அர்ஜுனன் பார்க்கின்றான். தன்னைப் பெயரளவிலே வைத்து ஸர்வேச்வரனான கண்ணன் தானே எதிரிகளை ஒழிக்கக் கங்கணம் கட்டி நிற்பதைக் கண்டு தனக்கு எதிரிகளாய் நிற்கும் பந்துக்களெல்லாம் மடிவது நிச்சயமென உணர்ந்தான். தகாத விஷயத்தில் அன்பினால் சோகமும் இரக்கமும் அவனுள்ளத்துப் பெருகிக் கலக்கின. இச் சூழ்நிலையில் எது தர்மமென்பது அவனுக்குப் புலப்படவில்லை. தர்மத்தை அறிய விரும்பி உடனே கண்ணனைச் சரணமடைந்து சிஷ்யனான தனக்கு நன்மையை உபதேசிக்குமாறு வேண்டினான்.

22. அருச்சுனனுக்குக் கண்ணனது பொது உபதேசம்

கண்ணன் அவனது துக்கத்தைப் போக்கத் திருவுள்ளம் கொண்டான். அதற்காக முதலில் சரீரத்திற்காட்டிலும் வேறுபட்டதாய் எம்பெருமானுக்கு அடியனாயிருத்தலிலேயே இன்பம் காண்பதாய் நித்யமாயுள்ள ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் பற்றி அவனுக்கு விளக்கியருளினான். இப்படி முதலில் ஆத்மாவைப் பற்றித் தெளிவு வந்த பின் செய்ய வேண்டியனவாயுள்ள பல தர்மங்களில் முக்கியமானவை மறுமைப் பயனுக்காகச் செய்ய வேண்டிய தர்மங்களேயாகும். அவற்றை உபதேசிக்கத் தொடங்கினான். எல்லாவற்றிலும் மேம்பட்ட பலனாகிய மோக்ஷத்துக்கு

நேரிடையாயன்றிப் பரம்பரையாய்க் காரணமான கர்ம யோகத்தையும் ஜ்ஞாந யோகத்தையும் உபதேசித்துப் பின் மோக்ஷத்துக்கு நேர்க்காரணமான பக்தி யோகத்தையும் அதன் அங்கங்களுடன் விரிவாய் உபதேசித்து அந்தப் பக்தியோகத்தையே செய்யும்படி சொல்லி முடித்து நின்றான்.

22.1 அருச்சுனன் தெய்விகச் செல்வமுடையனே

கண்ணன் அர்ஜுநனுக்கு முதலில் கீதையை உபதேசித்துக் கொண்டே வரும்போது மானிடருக்கு வரும் தெய்விகச் செல்வம் அசுரச் செல்வம் ஆகிய இரண்டின் அடையாளங்களையெல்லாம் விளக்கி முந்தியது மோக்ஷத்துக்குத் துணை செய்யுமென்றும் பிந்தியது அதோகதிக்குத் தள்ளுமென்றும் சொல்லி வருகையில் அருச்சுனன் தான் ஒருகால் அசுரச் செல்வமுடையனாகில் செய்வது என்? என்று கலங்கியதைக் கண்டு கண்ணன் அவனைத் தெய்வச் செல்வம் பெற்றவனாகக் கூறித் தேற்றியருளினான்.

பின்னும் அருச்சுனன் சோகம்: இப்பொழுது பின்னும் மிகப் பெரிய சோகம் ஒன்று சூழ்ந்து கொண்டது அருச்சுனனை. அதாவது கண்ணனிடம் முதலில் தெளிவு பெற்றபின் மிக மேம்பட்ட பயனாகிய மோக்ஷத்தை விரைவில் பெற மிக்க துடிப்பு வந்து விட்டது. ஆயினும் அதற்காகச் செய்யவேண்டிய பக்தி யோகமோ பல அங்கங்களையுடையது. செய்வதற்கு மிகக் கடினமானது. நடுவில் பல தடைகள் வருவதற்கு இடமாயுள்ளது. மிக்க கவனத்துடன் செய்பவரும் நீண்ட காலம் செய்ய வேண்டியதாய் உள்ளது. இத்தகையது பக்தி யோகம். தனக்கோ அறிவும் சக்தியும் மிகக் குறைவானவை. தன் வாழ்நாளோ குறுகியது. இங்ஙனம் இருக்க, விரைவில் தான் எப்படி பக்தி யோகத்தைத் தலைக்கட்ட முடியும்? இதை நினைந்து கவலை கொண்டான் அருச்சுனன். எளிதில் செய்வதற்கு ஏற்ற வேறு உபாயம் எதுவும் அவனது அறிவுக்கு எட்டவில்லை. அதனால் அவனது துக்கம் எல்லையற்று வளர்ந்தது.

சரம சுலோகம் அவதரித்தல் : அவனது துயரத்தைக் கண்ட கண்ணன் அவனையே வ்யாஜமாக (கருவியாக) வைத்துக் கொண்டு கீதையென்னும் உபநிடதத்தை உலகுக்கு உபதேசிக்கும் ஆசார்யனாய் நின்றான். தனக்கு உள்ள எல்லையற்ற கருணையாலே மிக எளியதான ஓர் உபாயத்தை வெளி யிட்டருளினான்.

Scanned with CamScanner

அதுதான் சரம சுலோகத்தால் வெளியிடுகின்ற பரம ரஹஸ்யமான சரணாகதி என்னும் உபாயம்.

சரணாகதியின் சிறப்பு: ஸகல லோகங்களையும் ரக்ஷிப்ப தற்காக இந்த உபாயத்தைக் காட்டியருளினான் கீதாசார்யன். இந்தச் சரணாகதியும் இதன் அங்கங்களும் செய்வதற்கு மிக எளியன. ஒரு முறை செய்வதே போதுமானது. எல்லாச் சாதியாருக்கும் இதைச் செய்யத் தகுதி உண்டு. எல்லாப் பலன்களையும் இது தரவல்லது. விரைவில் பலனைத் தரவல்லது. நடுவில் எதனாலும் தடை செய்ய முடியாது. இதைச் செய்த பின் அதே பலனுக்காக வேறோர் உபாயத்தைச் செய்யப் பொறுக்காதது. இந்த உபாயத்தை உபதே சித்து அருச்சுனனது துயரத்தைத் துடைக்கின்றான் கண்ணபிரான்.

22.2 பக்தி - ப்ரபத்தி: தகுதியில் வரையறை

இந்த ப்ரபத்தியும் பக்தியோகத்தைப் போலே மோக்ஷத்துக்குத் தடையாயுள்ள கர்மங்களையெல்லாம் கழித்து மோக்ஷம் தர வல்லது என்று சாஸ்த்ரங்கள் நிர்ணயித்துப் பேசுகின்றன. பக்தியோகத்தாலோ ப்ரபத்தியாலோதான் மோக்ஷத்தைப் பெறமுடியும் என்று ப்ரமாணம் கூறும். இவ்விரண்டினுள் ஒன்றாலேயே பலன் பெற முடியும் என்பதுவே விகல்பம். இரண்டு காரியங்களைக் கூறி இரண்டினுள் எதாவது ஒன்றைச் செய்யலாம் என்று சொல்வதை விகல்பம் என்பர் வட நூலார். மோக்ஷம் பெறுதற்குப் பக்தியையாவது ப்ரபத்தியையாவது செய்ய வேண்டுமென்றுதான் சாஸ்த்ரம் கூறியுள்ளது. இம்முறை தகுதியின் வேறுபாட்டைப் பற்றிய வரையறையைப் பற்றியதென்று கொள்ளவேண்டும். அதாவது பக்தி யோகத்தைச் செய்யத் தகுதியுடையவன் பக்தி யோகத்தையும் அந்தத் தகுதியற்றவன் ப்ரபத்தியையும் செய்யவேண்டுமென்ற வரையறையைக் கொள்ளவேண்டும். அல்லது மோக்ஷம் பெறக் காலத் தாழ்வைப் பொறுப்பவன் பக்தியோகத்தையும் விரைவில் மோக்ஷம் பெற விரும்புமவன் ப்ரபத்தியையும் செய்ய வேண்டுமென்ற வரையறையையாவது கொள்ளுதல் அவசியம்.

23. தகுதியில் பிறர் வாதம் - அதன் கண்டநம்

(i) சிலர் வேறுவகையில் விகற்பம் கூறுகின்றனர். அதாவது அதிக நம்பிக்கை உடையவன் ப்ரபத்தியையும் நம்பிக்கைத் குறைவுடையவன் பக்தியையும் செய்ய வேண்டுமென்கின்றனர். இவ்வாறு கூறினால் சாஸ்த்ரம் ஏற்றுக் கொள்ளாத ஒரு வரையறையைக் கற்பனை செய்ததாகி விடும். ஏனெனில், பக்தி யோகம் செய்ய முதல் மூன்று வருணத்தாருக்கே தகுதியுண் டென்பது சாஸ்த்ரத்தின் முடிவு. மூன்று வருணத்தாரும் அதிக நம்பிக்கை இருந்தால் ப்ரபத்தியையும் அது இல்லாவிட்டால் பக்தியையும் செய்ய வேண்டுமென்று தேறுவதால் மூவர்ணத்தார் தவிர மற்றவர்க்கு ப்ரபத்தி செய்யத் தகுதியில்லையென்று முடிந்து விடும். எல்லாரும் செய்தற்கு உரியது ப்ரபத்தி என்பதன்றோ நம்ஸித்தாந்தம்!

(ii) **தகுதியில் மற்றொரு வாதம் - அதன் உட்கருத்து :** சிலர் பெரிதான பக்தியையோ சிறியதான ப்ரபத்தியையோ எதை வேண்டுமானலும் செய்யலாமென்று சொல்கின்றனர். அவர்களின் கருத்தை ஊன்றி நோக்கினால் ப்ரபத்தி உருவத்தில் சிறியதாயினும் பெரியதான பக்தியால் வரும் பயனைத் தருவதில் குறையில்லை யென்பதைக் காட்டுவதேயாகுமென்பதையும் ஒரு வரையறையை மறுக்க வந்ததன்றென்பதையும் உணர்க.

24 சிற்றறிவினன் பக்தியோகத்துக்கு உரியன் என்ற வாதம்/ கண்டநம்

ஒரு வசநம் கூறுகின்றது - 'புத்திக் குறைவால் மனிதன் கடினமான பக்தியோகத்தைச் செய்கின்றான்' என்று. இது பொருந்துமா? விசேஷமான ஜ்ஞாநமுடையவனே பக்தி யோகத்தைச் செய்யமுடியுமென்றன்றோ ஸித்தாந்தம்! என்று கேட்கலாம். இதற்கு ஸமாதாநம் - அறிவுக் குறையுடையவன் பக்தியோகத்தைச் செய்யத் தகுதியுடையவன் என்ற கருத்தைக் கொண்டதன்று அந்த ப்ரமாணம். அதன் உண்மைக் கருத்து வேறு ஒருவன் பக்தி யோகம் செய்யத் தகுதியற்றவனாயுள்ளான். மோக்ஷத்துக்கு நேர்ச் சாதனமாக ப்ரபத்தி இருப்பதும் அவனுக்குத் தெரியும். ஆனால் அதில் பூர்ண நம்பிக்கை இல்லை. அதனால் ப்ரபத்தியில் முயற்சி கொள்ளவில்லை. மோக்ஷத்திலோ ஆசை இருக்கிறது. எதையாவது செய்யவேண்டுமே! பக்தி யோகத்தையே செய்ய முற்படுகின்றான். அவன் செயல் ஒரு சிறுவன் சந்திரனைப் பிடிக்க வானில் கையை நீட்டுவது போல் தனக்கு எட்டாத நிலத்திலே ஏற ஆசைப்படுவதாகவன்றோ ஆகிறது! அவனைக் குறித்துத் தன் தகுதி அறியாத மூடனெனப்பழிப்பதில் நோக்கமுடையது அந்த வசநம் என்று உணர்க.

Scanned with CamScanner

முந்திய வாதத்தில் உள்ள இடர்ப்பாடு: இக் கருத்தைக் கொள்ளாமல் அறிவுக் குறையுடையவன் பக்தி யோகத்தைச் செய்யத் தகுதியுடையவன் என்ற கருத்தைக் கொண்டால் அது பல சாஸ்த்ரங்களுக்கும் முரண்படும். மேலும் ஒப்பற்ற மஹா யோகிகளான வ்யாஸர் முதலிய மஹர்ஷிகள் பக்தியோகத்தைச் செய்வது தவறெனக் கூற வேண்டி வரும். அவர்களை அறிவில் குறைந்தவராகச் சொல்ல முடியுமா? அவர்கள் அறியாதது இல்லை என்னும்படி அவர்கள் ஸர்வஜ்ஞர்கள் அல்லரோ! மேலும் மோக்ஷத்துக்கு நேர்ச் சாதனமான ப்ரபத்தியை உலகுக்கு உபதேசித்தவர்களும் அவர்கள் தாமே!

24.1 ப்ரபத்தி செய்ய உரியன் யார்? விளக்கம்

பின் ப்ரபத்திக்குத் தகுதியுடையவன் எவன்? மஹாவிசுவாஸம் என்ற தகுதி இருக்க வேண்டும். பக்தியோகத்தைச் செய்ய முடியாதவனாய் இருக்க வேண்டும். வேறு தெய்வத்தையும் வேறு பயனையும் நாடாதவனாய் இருக்க வேண்டும். இத்தகையனே மோக்ஷத்துக்காக ப்ரபத்தியைச் செய்யத் தகுதியுடையவன். இவனைக் குறித்துத் திருமந்திரத்திலும் த்வயத்திலும் வெளியிட்ட ப்ரபத்தியென்னும் சிறந்த உபாயம் இந்தச் சரமசுலோகத்தில் விதிக்கப்படுகின்றது. இதில் 'என்னை' 'ஒருவனையே' 'உபாயமாக' 'நான்' 'விடுவிப்பேன்' என்ற சொற்களால் முக்கியமான ஸித்தோபாயமான எம்பெருமானும் வெளிப்படையாய்க் கூறப்படுகின்றான்.

25. சரம சுலோக முற்பகுதியின் பொருள் விளக்கம்

இச்சுலோகத்தின் பொருட் சுருக்கம்-'எல்லாத் தருமங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணமடைவாயாக. நான் உன்னை ஸகல பாபங்களினின்றும் விடுவிப்பேன். வருந்தாதிரு' என்பது. இனிப் பதம் பதமாய்ப் பிரித்துப் பொருள் விளக்கம் வருமாறு:

25.1 'ஸர்வதர்மாந்' - பொருள் விளக்கம்

ஸர்வதர்மாந் - எல்லாத் தர்மங்களையும். தர்மம் என்ற சொல் சாஸ்த்ரங்களைக் கொண்டே அறிய வேண்டியதாய்த் தான் விரும்பும் பலனுக்குச் சாதனமாயுள்ளதைக் கூறும். இங்குக் கைவிட்டிருப்பதாகச் சொல்லும் தர்மம் பக்தியோகம். பக்தி

யோகத்தைச் செய்ய இயலாத அதிகாரிக்கு மோக்ஷத்துக்குச் சாதனமாய் வேறோர் உபாயத்தை விதிக்கும் இந்த இடத்தில் கைவிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிற தர்மம் கீழே கூறிய பக்தி யோகமாக இருப்பதுதானே பொருந்தும் 'தர்மாந்' என்று பன்மையில் கூறியதால் ஸத்வித்யை - தஹர வித்யை முதலிய பல்வகைப் பக்தியோகத்தையும் கைவிட்டிருப்பதாய்க் கொள்ள வேண்டும். 'எல்லாம்' என்று பொருள் கொண்ட ஸர்வ எனும் சொல் அந்தப் பக்தியோக வகைகள் அனைத்தையும் ஒன்று கூடவிடாமல் கைவிட்டதாய்க் கூறுகின்றது ஸர்வ எனும் சொல். பக்தி யோகத்தின் அங்கங்களையும் கைவிட்டிருப்ப தாகவும் கூறலாம்.

25.2 'பரித்யஜ்ய' பொருள் விளக்கம்

பரித்யஜ்ய - நன்றாகக் கைவிட்ட நீ, வேறு உபாயத்தைச் செய்யத் தகுதியற்ற தன் நிலைமையைச் சேதநன் உணர்ந்து கொள்கிறான். பலனைப் பெறவோ ஆசை துடிக்கின்றது. துக்கம் மிகத் ததும்பி நிற்கின்றான். இப்படி நிற்பது தானே ப்ரபத்தியைச் செய்யத் தகுதி! இந்தத் தகுதி நன்றாய்ப் புலப்படும்படி பக்தி யோகத்தைச் செய்ய ஆசையை விட்டு என்பதைப் பரித்யஜ்ய என்பது காட்டுகின்றது. இங்குப் பரி என்பது ஓர் உரிச்சொல் (உபஸர்க்கம்). இது எல்லாக் காலத்திலும் எவ்வகையாலும் தனக்குத் தகுதியில்லை என்பதைப் புலப்படுத்துவதாய் பக்தி யோகத்தைச் செய்ய அடியோடு ஆசை. அற்றுப் போன நிலையைக் காட்டுகின்றது. இதிலிருந்து இந்த ஆசையை விடுவது ப்ரபத்திக்கு ஓர் அங்கமாக விதிக்கப்படு கின்றதோ என்று கருத வேண்டாம். உதாஹரணமாய் - 'காகன் மூன்று உலகங்களையும் சுற்றித் திரிந்து இராமனையே சரணம் அடைந்தான் என்னும்போது சுற்றித் திரிதலைச் சரணாகதிக்கு அங்கமாகக் கூறவில்லையே! அவ்வாறே இங்கும் பக்தி யோகங்களில் ஆசையை விட்டிருப்பதை அவனிடம் உள்ள நிலையைக் கூறுவதாக மட்டும் கொண்டு அதை அங்கமாகக் கொள்ள வேண்டியதில்லை' என்று உணர்க.

25.2.1 'தர்மங்களை அடியோடு கைவிடுதல்:' 2ஸாத்விக த்யாகத்துடன் தர்மங்களைச் செய்தல் அங்கம் ஆகியவற்றின் பொருத்தமின்மை

சிலர் 'எல்லாத் தர்மங்கள்' என்ற சொல்லுக்குப் பக்தி யோகத்தின் வகைகள் என்ற பொருளை விட்டுப் பொதுவாய் உள்ள

Scanned with CamScanner

ஸகல தர்மங்களையும் அடியோடு விட்டுத் தொலைத்தலை விதிப்பதாகப் பொருள்கொள்கின்றனர். எல்லாத் தர்மங்களையும் கை கழுவி விட்டுப் பின் ப்ரபத்தி என்ன வேண்டியிருக்கிறது? தத்தம் கடமைகளை விடக்கூடாதென்று முழங்கும் சுருதி - ஸ்ம்ருதிகள் - பெரியோர்களின் அநுஷ்டாநம் இவற்றுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும் இந்தப் பொருள்.

சிலர் எல்லாத் தருமங்களையும் விட்டு என்பதற்கு அந்தத் தர்மங்களைத் தான் ஸ்வதந்தரனாகச் செய்வதாகவோ, தனக்காகச் செய்வதாகவோ உள்ள எண்ணங்களை விட்டு என்று பொருள் கூறுகின்றனர். இதுவும் பொருந்தாது. ஏன்? இந்த வாக்யமோ ப்ரபத்திக்குப் பின் இங்கு இருக்கும் நாள் செய்யவேண்டிய காரியங்களை வெளியிட வந்ததன்று. உபாயமாகிய ப்ரபத்தியை விதிக்கவே வந்தது. இதில் உள்ள 'ப்ரித்யஜ்ய' சொல்லுக்குத் தர்மங்களைத் தான் ஸ்வதந்த்ரனாகவும் தன் பயனுக்காகச் செய்வதாகவும் உள்ள எண்ணத்தை விடுவதென்ற பொருள் கொண்டால் அதன் கருத்து எம்பெருமானே தன் பயனுக்காகவே செய்விப்பதாக எண்ண வேண்டுமென்பது தானே தேறும்! இது தானே ஸாத்துவிகத்யாகமென்பது! அப்பொழுது ஸாத்துவிக தியாகத்துடன் எல்லாத் தர்மங்களையும் அங்கமாகச் செய்ய வேண்டுமென்று பலிக்கும். அப்படியாயின் ப்ரபத்திக்கு ஆநுகூல்யஸங்கல்பம் முதலிய ஐந்து அங்கங்களையன்றி வேறு அங்கம் கிடையாதென்று ஸித்தாந்தத்தில் முடிவு கட்டியதற்கு முரண்படும்.

25.2.2 வேறு அங்கங்களை ப்ரபத்தி வேண்டாமை – விளக்கம்

ஆகவே எல்லாத் தர்மங்களையும் விட்டு என்பதற்கு ப்ரபத்தியானது தனக்கென்று அங்கங்களாக விதிக்கப்பட்ட ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலிய ஐந்து அங்கங்களைத் தவிர வேறு எந்தத் தர்மத்தையும் எதிர்பார்க்காது என்ற நிலையைக் கூறுவதாகக் கொள்வதுவே பொருந்தும்.

25.2.2.1 ப்ரபத்தியில் ப்ரஹ்மாஸ்த்ர ந்யாயம் – விளக்கம்

மற்றொரு பொருளும் கூறலாம் - க்ஷணத்திலேயே பரம ஸௌலபமாய்ச் செய்யக்கூடிய ப்ரபத்தியைச் செய்யும்போது ப்ரபத்தியில் ஸந்தேஹத்தாலோ அது போதாது என்ற எண்ணத்தாலோ வேறு ஒர் உபாயத்தைச் செய்வதை விட்டு என்று.

இப்பொருளில் ப்ரஹ்மாஸ்த்ரம் தன்னுடன் மற்றொருகயிற்றுக் கட்டைப் பொறுக்காதது போல் ப்ரபத்தியும் மற்றோர் உபாயத்தைப் பொறுக்காத மிடுக்கு உடையது என்பது தேறும். ஆகவே சேதநன் அவசியம் செய்யவேண்டிய கடமையாக விதித்த தர்மங்களில் தனக்குச் செய்ய இயன்ற தர்மங்களைக் கூட ப்ரபத்திக்காக வென்று செய்ய வேண்டியதில்லையென்று தீர்ந்தது.

25.2.2.2 ஸம்ஹிதையில் வேறு அங்கத்தை ப்ரபத்தி வேண்டாமை

ஸநத்குமாரஸம்ஹிதையில் கர்ம யோகம் முதலியவற்றைப் பக்திக்கு வேண்டிய அங்கங்களென்று கூறி ப்ரபத்தி வேறு ஒன்றையும் வேண்டாமலே எல்லோருக்கும் எங்கும் எல்லாப் பயன்களையும் அளிக்கவல்லது என்று கூறப்பட்டுள்ளது.

25.2.3 விதித்த கடமைகளை விடமுடியாமை

இச்சுலோகத்தில் முற்பாதி எல்லாத் தருமங்களையும் விடுதலோடு சேர்த்தே ப்ரபத்தியை விதிப்பதாகச் சொல்லுபவர்கள் உண்டு. அவர்களின் கருத்து வேறொன்றையும் எதிர்பாராமை யென்னும் தன்மையோடு சேர்ந்த ப்ரபத்தியை விதிப்பதாகக் கொள்வதே ஆகும். இப்படிப் பொருள் கூறுவதால் ஸ்வதந்த்ரனான எம்பெருமான் சாஸ்த்ரங்களின் வாயிலாகச் சேதநனுக்குச் செய்தே தீரவேண்டியனவாக விதித்த தர்மங்களை ப்ரபத்தி செய்யும் காலத்திலும் விடக்கூடாது என்று முடித்து அதன் நிலைகுலை யாமல் தப்பியது. இந்தப் பொருளில் எல்லாத் தருமங்களையும் என்ற சொல் தத்தம் ஜாதிக்கு ஏற்ப விதிக்கப்பட்ட எல்லாத் தர்மங்களையும் குறிக்கும். அவற்றை விட்டு என்றதால் அவற்றை ப்ரபத்தி அங்கமாக எதிர்பார்க்கவில்லையென்று மட்டும் தேறுமே அன்றி விதித்த கர்மங்களை விடுதலுக்கு இடமே இல்லை.

'ஸர்வதர்மா' 'மாசுச:' கூறும் அம்சம் : இப்படி 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்ற தொடர் ப்ரபத்தி வேறு தர்மங்களை எதிர்பாராத தன்மையைக் கூறுவதாகக் கொள்ளில், சேதநன் பக்தி யோகமாகிய கைம்முதலற்று நிற்றல் என்னும் தகுதி கூறப்பட்டதாகாதே! அதுதானே ப்ரபத்தி செய்வதற்கு உரிய தகுதி என்று கேட்கலாம். விடை - கடைசியில் 'மா சுச:' என்ற தொடர் நீ எதற்கும் வருந்த வேண்டாம் என்று கூறி முடித்திருப்பதால் தகுதியிருந்து ப்ரபத்தியை நீ செய்துவிட்டமையால் வருந்த வேண்டாம் என்று

Scanned with CamScanner

கூறும் சக்தியுடையதாக ஆகின்றது. இப்பொழுது குறிப்பிட்ட தகுதியுடையனாதல், கருத்து வகையில் கூறப்பட்டதாகி விடுகின்றது.

25.2.4 சரணமடைதலையே விதிக்கும் கொள்கை - பொருத்தம்

மற்றொரு வகையில் பொருள் கூறும் வகையை ஆராய்வோம். அதாவது - எல்லாத் தருமங்களையும் விடுவதென்பதை இங்கு விதிக்கவில்லை. எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு நிற்கின்ற நீ என்னையே சரணமடை என்று பொருள் கொள்வது உண்டு. அப்பொழுது சரணமடைதல் மட்டுமே விதிக்கப்படுகின்றது. எல்லாத் தருமங்களையும் விட்டிருத்தல் அவனிடம் முன்பே உள்ள நிலையை எடுத்துக் காட்டியவளவே தான் இங்கு. இப்பொருளில் இவனிடம் ப்ரபத்தி செய்தற்கு உள்ள தகுதியைக் கூறியதாக ஆகின்றது. ஆனால் இப்பொருளில் ப்ரபத்திக்கு உள்ள வேறொன்றையும் எதிர்பாராத தன்மை எந்தச் சொல்லால் கிடைக்குமென்று கேட்கலாம். விடை - மேலே 'மாம் ஏகம் என்னை ஒருவனையே சரணமடை என்று கூறும்போது ஏகம் என்ற சொல் ப்ரபத்தியைச் செய்தவன் விஷயத்தில் வேறு ஒன்றையும் எதிர்பாராமல் தான் ஒருவனே பலன் தரும்படி நிற்பதைக் கூறுவதால் அதனாலேயே ப்ரபத்தியின் மற்றொன்றை எதிர்பாராத தன்மை கூறப்பட்டதாகிவிடுகின்றது என்று அறிக.

25.2.5 மற்ற உபாயங்களின் பலனையும் அவனே தருதல் – த்ருஷ்டாந்தம்

மற்றொரு வகையிலும் பொருள் கூறலாம் - ஒரு ஸித்தன் தான் கண்ட ஓர் ஔஷதத்தை நோயாளியிடம் காட்டி 'நீ பல மருந்துகளை உட்கொள்ள வேண்டாம். இந்த மருந்து அவை போக்கும் எல்லா நோய்களையும் தீர்ப்பதுடன் அவை தனித்தனியே தரும் ஆரோக்யத்தையுமெல்லாம் இம்மருந்தே தரவல்லது. இம் மருந்தை ஒன்றையே உட்கொள்' என்று கூறுவது போல் சேதநனை நோக்கி, தனித்தனியாகச் சாஸ்த்ரம் விதித்த பல உபாயங்களில் நீ அலைய வேண்டாம். அவை தனித்தனியே தரும். எல்லாப் பலன்களையும் நீ செய்யும் ப்ரபத்திக்கு வசப்பட்ட நான் ஒருவனே தருவேன்' என்றும் பொருள் கூறலாம். அப்பொழுது எல்லாத் தருமங்களையும் விட்டு என்பதற்கு அந்த அந்தப் பலன்களுக்குச் சாதனமாய்ப் பல வகையான தர்மங்கள் அனைத்தையும் விட்டு

என்று பொருள் தேறும். இதனின்று இங்கு மற்ற பலன்களுக்காக அன்றி மோக்ஷத்துக்கு மட்டும் சாதனமான ப்ரபத்தியை உபதேசித்ததாக முடியும்.

25.2.6 தர்மங்களை விடுதலென்பதற்கு மற்றும் இரு பொருள்கள்

மற்றொரு பொருளும் கூறலாம். உனக்கு வேறு உபாயங்களைச் செய்யச் சக்தியில்லாததை நினைத்து நீயோ வருந்துகின்றாய். ஆனால் ஒரு தகாத ஆசை இருக்கின்றது. உனக்கு முடியாத உபாயங்களைச் செய்யத் தொடங்குகின்றாய். மெல்ல மெல்ல இவற்றைச் செய்து முடித்துவிடுகின்றேன் என்று துராசை இருக்கின்றது. அந்த ஆசையையும் விட்டு என்றும் பொருள் கூறலாம். மற்றொரு பொருளும் கூறலாம் - குள்ளன் கொம்புத் தேனைக் குறிவைத்து அதைப் பெற எழும்பி எழும்பித் துன்பப்படுகின்றான். அவ்வாறு நீயும் உன் சக்திக்கு எட்டாத பக்தி யோகம் முதலியவற்றைச் செய்ய முயன்று வீணாகக் கஷ்டப்படுகின்றாய். அந்த வீண் ப்ரயாஸத்தைக் கைவிட்டு என்றும் கூறலாம். சிலர் கடினமான பக்தி யோகத்தைச் செய்யத் தொடங்கி அதில் தோல்வி கண்டு வெட்கமடைந்து பின் அதைவிட்டு என்றும் கூறுவதுண்டு. இதுவும் கீழ்க்கூறிய அர்த்தங்களில் அடங்கிவிடுகின்றது.

25.3 'மாம்' பொருள் விளக்கம்

மாம் - என்னை . இப்படி சேதநன் தனக்குச் செய்ய முடியாத பக்தி யோகம் முதலியவற்றிலும், ப்ரபத்திக்கு வேண்டியன அல்லாத செயல்களிலும் முயற்சியைக் கைவிட்டு நிற்கின்றான். அவனுக்கு எம்பெருமான் தானே கைம் முதலாய் ஸித்தோபாயமாய் நிற்பதைக் கூறத் தன்னைக் காட்டி 'என்னைச் சரணமடை' என்கின்றான். இங்கு 'என்னை' என்ற சொல் ப்ரபத்தி செய்பவனது பொறுப்பை ஏற்றுக் கொள்கின்ற எம்பெருமானைக் குறிக்கின்றது.

25.3.1 ஸ்வரூபத்தை மட்டும் அநுஸந்திப்பது போதாது

ஆனால் மாம் - என்ற சொல் எம்பெருமானது ஸ்வரூபத்தை மட்டும் குறிப்பதாகக் கொள்வது உசிதமன்று. ஆதலின் அவன் ஸ்வரூபத்தைக் குறிக்கும் போதே அவசியம் அநுஸந்தித்தாக வேண்டிய ஸத்யத்வம் முதலிய ஐந்து தர்மங்களுடன் கூடியவனாகவும் அவனை அடைவதற்கு அவசியம் வேண்டியவளான பெரிய

Scanned with CamScanner

பிராட்டி - மற்றும் திருமேனி குணங்கள் முதலியவற்றுடன் கூடியவனாகவும் எம்பெருமானை மாம் என்ற இச்சொல்லில் அநுஸந்திக்க வேண்டும்.

25.3.2 'மாம்' 'அஹம்' சொற்கள் காட்டும் முக்கியப் பொருள்கள்

இந்த மாம் என்ற சொல்லும் அஹம் என்ற சொல்லும் எல்லாக் கல்யாண குணங்களுக்கும் உறைவிடமான எம்பெருமானைக் கூறுகின்றன. ஆயினும் மாம் என்ற சொல் சரணமடைதலைக் கூறும் முற்பாதியில் இருப்பதால் அடைதற்கு எளியனாய் இருத்தலாகிய ஸௌலப்யத்தை முக்கியமாய்க் காட்டுவதில் நோக்கமுடையதாகும். அஹம் எனும் சொல் பலனை விளக்கும் பிற்பாதியில் இருப்பதால் மோக்ஷம் கொடுப்பதற்குத் தடையற்ற சுதந்திரத் தன்மையுடையனாயிருப்பதை முக்கியமாய்க் காட்டுவதில் நோக்கமுடையதாகும்.

ஒருவன் எளியனாயல்லாமல் சுதந்திரனாக மட்டும் இருந்தாலும் சுதந்திரனாயன்றி எளியனாக மட்டும் இருந்தாலும் சேதநனுக்குப் பயன்படமுடியாது.

25.3.3 'மாம்' சொல்லால் காட்டப்படும் அவன் குணங்கள்

இங்கு 'மாம்-என்னை' என்று எம்பெருமான் தன்னைச் சுட்டிக் காட்டும் போது தன்னைப் பற்றிய பல அம்சங்களைச் சொல்லித் தன் நிலையைக் காட்டுவதாகக் கொள்ளவேண்டும். அப்படி அவன் தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் அம்சங்களாவன -

(i) எல்லாவுலகங்களுக்கும் நன்மை புரிய இவ்வுலகில் வந்து அவதரித்துள்ளேன்.

(ii) எல்லோரும் கூசாது வந்து அணுகும்படி மிக எளியனாய் உள்ளேன்.

(iii) என்றைக்கு உங்களைக் காக்குமாறு என்னிடம் நீங்கள் கேட்பீர்கள் என்று நினைத்துக்கொண்டு உங்களை ரக்ஷிக்க உரிய ஸமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

(iv) எனக்கு உள்ள மேம்பாட்டைக் கண்டு நீங்கள் அணுக அஞ்சாதபடி என்னைத் தாழ்ந்தவனாக்கிக் கொண்டு என்னை உபாயமாக வைத்து நீங்கள் சரணமடையும் நிலையிலும் இனியனாம்படி அத்தகைய போக்யனா யுள்ளேன்.

(v) என்னை அடைந்தவர்களின் பிரிவை நான் பொறுக்காதவனாதலின் எளிதில் அணுகுதற்கு ஏற்றவனா யுள்ளேன்.

(vi) எனக்கும் பிறருக்கும் உள்ள வேற்றுமையை உதறித் தள்ளும்படியான நேர்மையுடனிருப்பவனாதலின் நான் உலகுக்குத் தத்துவத்தையும் உபாயத்தையும் உபதேசிப்பதில் முனைந்து நிற்கின்றேன்.

(vi) பிறரால் ஆகவேண்டியது ஒன்றும் இன்றிப் பரிபூர்ணனாய் இருப்பவன் நான். ஆயினும் என்னை ஆச்ரயித்தவர்களை எனக்கு எல்லாச் செல்வங்களையும் அளிப்பவர்களாக நினைத்து அவர்களைப் பெரிய வள்ளலாக்குவேன். லீலா விபூதி, நித்ய விபூதி இரண்டுடனும் என்னையே அவர்களுக்கு அநுபவிக்கக் கொடுக்க முற்பட்டு நானும் ஒரு வள்ளலாய் விளங்குவேன்.

நீலமணி வண்ணனான எம்பெருமான் இந்த அம்சங்களுடன் தன் நிலையை 'மாம்' என்ற சொல்லால் காட்டுவதாக அநுஸந்திக்க வேண்டும்.

25.3.3.1 தண்டிப்பதற்கும் அருள் புரிவதற்கும் ஏற்ற அவன் குணங்கள்

ரக்ஷகனான எம்பெருமானுக்கு உள்ள குணங்கள் எண்ணற்றவை. அவற்றுள் எல்லோருக்கும் ஸ்வாமியாயிருத்தல். எல்லாவற்றையும் அறியும் தன்மை - எதையும் செய்யச் சக்தியுடைமை முதலிய குணங்கள் ஒருவனைத் தண்டிப்பதற்கும் அருள் புரிவதற்கும் வேண்டிய பொதுவான குணங்களாகும். கருணையும் அதைத் தொடர்ந்த அன்பு முதலியனவும் அருள் புரிவதற்கு மட்டும் பயன்படுவன. இதை நினைத்தே ஆழ்வார்களும் ஆசார்யர்களும் கருணையிலேயே ஈடுபட்டுப் புகழ்ந்தார்கள்.

25.4 'ஏகம்' சொல்லுக்குப் பல பொருள்கள்

(i) ஏகம் - ஒருவனையே. கீழே த்வயத்தில் முற்பகுதி எம்பெருமானே உபாயமாய் நிற்பதையும் பிற்பகுதி அவனே அநுபவிக்கப்படும் பலனாகவும் நிற்பதையும் கூறுவதாகக் கூறினோம். அவ்வாறே இங்கு ஏகம் என்ற சொல் அவனே உபாயமாகவும் பலனாகவும் நிற்பதைக் கூறுகின்றது.

Scanned with CamScanner

(ii) மேலும் ஏகம் என்ற சொல் ப்ரபத்தி செய்பவனான சேதநனுடைய முக்கியத் தன்மையைக் கழிக்கின்றது. அதாவது - சேதநன் தான் உஜ்ஜீவிப்பதற்கு வேண்டிய உபாயத்தைச் செய்கின்றான். ஆதலின் ரக்ஷகனாகிய எம்பெருமான் உபாயமாவது போல் உபாயத்தைச் செய்யும் நானும் முக்கியமான உபாயமாவேன் என்று ஈச்வரனோடு ஒரு கோவையில் தன்னையும் வைத்து எண்ணக் கூடும். அங்ஙனே செய்யாது தடுக்கின்றது ஏகம் எனும் சொல். விளக்கம் வருமாறு - சேதநன் செய்கையுடையன் என்பது உண்மையே. ஆனால் எம்பெருமான் துணையின்றி எந்தச் செயலையும் செய்ய வல்லனாக மாட்டான். அவனை எதிர்பாராது செயல் புரிபவனாகத் தன்னை நினைத்தல் தவறாகும். ஸர்வேச்வரன் கொடுத்த சரீரம் இந்திரியம் முதலியவற்றைக் கொண்டு அவன் காட்டிய உபாயத்தை அவனுடைய உதவியால் செய்து அவன் தரும் பலனுக்கு அண்ணாந்து நிற்கும் தன்னை ஸர்வேசுவரனோடு சேர்த்து உபாயமாகக் கருதுவது கூடாதென்று காட்டுகின்றது ஏகம் எனும் சொல்.

(iii) மேலும் ஏகம் எனும் சொல்- ப்ரபத்தி எம்பெருமானைப் போல் முக்கியமான உபாயமாகாது- என்பதனை விளக்குகின்றது. அதாவது - ப்ரபத்தி சேதநனுடைய செயலுக்கு அகப்பட்டதால் சேதனோடு நெருங்கிய தொடர்பு உடையதே யாகும். ப்ரபத்தியை ஏற்றுக்கொள்ளும் எம்பெருமானிடம் இந்த ப்ரபத்தியை அவசியம் செய்தேயாக வேண்டும். ஆனால் எம்பெருமானைப் போலே இதுவும் ஒரு முக்கியமான உபாயம் என்று நினைக்கக்கூடாது. ஏன்? அபராதங்களைச் செய்த சேதநன் மீது எம்பெருமானுக்கு உள்ள சீற்றத்தைத் தணிப்பதுடன் ப்ரபத்தியின் செயல் முடிந்து விடுகின்றது. இப்படி இந்த ப்ரபத்தி அவனுக்கு உள்ள சீற்றத்தைத் தணிக்கும் வியாஜமாக மட்டும் ஆகுமேயன்றி நேராகப் பலனை அளிக்கும் எம்பெருமானைப் போல முக்கியமான உபாயமாக மாட்டாது என்பதைக் காட்டுகின்றது ஏகம் எனும் சொல்.

(iv) மேலும் ஏகம் எனும் சொல் எம்பெருமான் தனித்து நிற்கும் நிலையைக் காட்டுகின்றது. அதாவது - சேதநன் விரும்பும் பலனுக்குச் சாதனமாகப் பல தர்மங்கள் சாஸ்த்ரங்களில் விதிக்கப் பட்டுள்ளன. அந்தத் தர்மங்களைச் செய்ய முடியாமல் சேதநன் வருந்தி நிற்கின்றான். அவனைப் பார்த்து 'நீ அவ்வுபாயங்களில் அலைய வேண்டாம். அவை எல்லாம் உன்னுடைய ஸகல

கர்மங்களையும் கழிக்குமே என்றுதானே எண்ணுகின்றாய் நீ செய்யும் ப்ரபத்திக்கு வசப்பட்டு நிற்கும் நான் ஒருவனே அவற்றின் ஸ்தாநத்தில் நின்று உன் ஸகல கர்மங்களையும் கழித்து மோக்ஷத்தைத் தருவேன்' என்று பொருளைக் காட்டுகின்றது 'ஏகம்' எனும் சொல்.

(v) மேலும் 'ஏகம்' எனும் சொல் எல்லாத் தருமங்களையும் செய்வதால் வரும் ஸகல பாபங்கள் கழிதலையும் அந்தந்த தர்மங்களை நீ செய்யாமலே நீ செய்த ப்ரபத்திக்கு வசப்பட்ட நான் ஒருவனே செய்து விடுவேன் என்பதையும் கூறும்.

(vi) மேலும் 'ஏகம்' எனும் சொல் தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தலாகிய பரந்யாஸத்தைச் செய்யும்போது அதற்கு வகுத்த அங்கங்களைத் தவிர வேறு எதையும் செய்ய வேண்டியதாக எம்பெருமான் எதிர்பாராத நிலையைக் காட்டுவதாகவும் கூறலாம். இதைக் கொண்டு முதலில் செய்து முடித்த பரந்யாஸத்தைக் கூட எதிர்பாராத தன்மையைக் கொள்ளக் கூடாது. அவ்வாறே பரந்யாஸம் செய்த சேதநனுக்குப் பலன் கொடுப்பதற்குத் தன்னிடம் உள்ள குணங்களைக்கூட எதிர்பார்க்க மாட்டான் என்று கொள்ளவும் கூடாது. அந்தக் குணங்கள் அவனை விட்டுப் பிரிக்க முடியாதனவென்று ப்ரமாணங்களால் முடிவு செய்யப் பட்டுள்ளதன்றோ! இவ்வாறே ப்ரமாணங்களைத் தழுவிய அர்த்தங்களைக் கொள்ளலாம்.

25.4.1 'என்னை ஒருவனையே' சம்பந்தமாக எழும் சங்கைகளும் சமாதானமும்

(i) 'உன்னால் வரும் நன்மையையும் விடு' என்றதன் கருத்து: 'சிலர். உன்னால் வரும் நன்மையையும் விடு' என்று சொல்லுகிறார்கள்! இதனின்று 'நீ செய்யும் நல்ல காரியமாகிய ப்ரபத்தியையும் செய்யாது விடு' என்றன்றோ பொருள் தேறுகின்றது! 'எம்பெருமான். தானே தன் கருணையால் உன்னைக் காத்துவிடுவான். ஆதலின் நீ ப்ரபத்தியைச் செய்ய வேண்டாம்' என்று தானே அதற்குக் கருத்துக் கொள்ளவேண்டும்! என்று கேள்வி எழலாம். அதன் உட்கருத்து வேறு. அதாவது நீ செய்யும் ப்ரபத்தியைச் சுதந்திரனாய் நீ செய்வதாகக் கொள்ளும் எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்பதுவே அதன் கருத்து. மேலும் எம்பெருமானே. முக்கிய உபாயமென்று கொள்ளாமல் ப்ரபத்தியையே

முக்கிய உபாயமாகக் கொள்ளும் எண்ணத்தையும் விட்டுவிட வேண்டுமென்பதும் அதன் கருத்தாகும். இப்படி இந்த எண்ணங்களை விடுகையில் கூடத் தன்னைச் சுதந்திரமுள்ளவனாக எண்ணாமல் எம்பெருமான் ஸங்கல்பத்தை முன்னிட்டு விடுவதாகக் கருத வேண்டும்.

(ii) **ப்ரபத்திக்கு உபாயத்வம் இல்லை - என்றதன் உட்கருத்து:** இன்னும் சிலர் 'என்னை ஒருவனையே சரணமடை' என்று சொல்லியிருப்பதால் அவனையன்றி இரண்டாவதான உபாயம் இல்லையென்று தேறுவதாகவும் அதனால் ப்ரபத்தி உபாயமாகாது என்றும் கூறுகின்றனர். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இது முரண்பாடாகத் தோன்றும். அவர்களின் உட்கருத்தைச் சிந்திப்போம் - ப்ரபத்தியென்பது எம்பெருமான் ஸங்கல்பித்து நடப்பதேயன்றிச் சுதந்திரனாய்ச் செய்வதன்று. மேலும் ப்ரபத்தி எம்பெருமானது சீற்றத்தைப் போக்கி மகிழ்ச்சியை உண்டாக்குவதுடன் நிற்கும். பலனுக்கு முக்கியமான நேர்க் காரணம் இந்த ப்ரபத்தியால் திருவுள்ளச் சீற்றம் நீங்கப்பெற்று ஸத்ய ஸங்கல்பனாய் நிற்கும் எம்பெருமானே. இந்தக் கருத்தைக் கொண்டே ப்ரபத்தியை உபாயமன்று என்று சொல்லி வைத்தார்களேயன்றி அவர்கள் ப்ரபத்தியையே செய்யவேண்டா மென்ற கருத்துக் கொண்டவர்களல்லர் என்று உணர்க.

(iii) **பிராட்டியும் உபாய வகுப்பில் சேர்ந்தவள் அன்று – என்றதன் கண்டநம்:** இன்னும் சிலர் 'என்னை ஒருவனையே' என்ற சொல் எம்பெருமான் ஒருவனே ஸித்தோபாயம். இரண் டாவது ஸித்தோபாயம் இல்லையென்பதைக் காட்டுகின்றது. ஆகவே பிராட்டி கூட ஸித்தோபாயமாக மாட்டாள் என்று தேறுகின்றது. பிராட்டியையும் எம்பெருமானோடு உபாயமாகக் கூறினால் ஸித்தோபாயம் ஒருவனே என்ற முடிவுக்கு முரண்படும், என்று கூறுகின்றனர். இது பொருந்தாது. ஏனெனில் - அவன் திருமேனி குணங்கள் முதலியன அவனை விட்டுப் பிரியாது விசேஷணமாய் நிற்கின்றன. அவன் புரியும் செயலுக்கு அவை இன்றியமையாதன. அவ்வாறே பிராட்டியும் எல்லா அம் சங்களிலும் எம்பெருமானுக்குச் சமமாகவே இருந்துகொண்டு மனைவியென்ற முறையில் மட்டும் அவனுக்கு அடங்கிய விசேஷணமாய் அவனைப் பிரியாதிருக்கின்றாள். பிராட்டியும் அவனைப் போலவே ஸித்தோபாயமாகின்றாள். பிரிக்க முடியாத

விசேஷணங்களான பிராட்டி, திருமேனி முதலியன உபாய வகுப்பில் சேருவதால் இரண்டு உபாயம் என்று ஆகிவிடாது. எம்பெருமான் அநுபவிக்கப்படும் பயனாக ஆகும் போது பிராட்டி, திருமேனி, குணங்கள் முதலியனவும் அந்தப் பயன் வகுப்பில் சேருவனவாக நீங்களும் இசைந்துள்ளீர்களே! அப்பொழுது மட்டும் 'ஒருவனே பயனாவான்' என்ற கொள்கைக்கு முரண்படுகின்றதே என்று கேட்டால் என்ன விடை கூறுவீர்கள்? ஆகவே அவனுக்குப் பயன்படுவனவாய் இன்றியமையாதனவான திருமேனி முதலியவை போல் பிராட்டியும் உபாய வகுப்பில் சேருவதால் 'ஒருவனே ஸித்தோபாயம்' என்ற கொள்கைக்கு முரண்பாடுவராது. அவ்வாறன்றி 'பிராட்டி அவன் திருமேனி குணங்கள் எல்லாம் உபாயமல்ல. அவன் ஸ்வரூபம் மட்டுமே உபாயம்' என்றால் எல்லா ப்ரமாணங்களுக்கும் விரோதம் வருமென்று உணர்க.

25.5 '*சரணம் வ்ரஜ*' பொருள் விளக்கம்

சரணம் வ்ரஜ - உபாயமாக அடைவாயாக. கீழே 'என்னை ஒருவனையே' என்ற சொற்களால் கண்ணன் ஸித்தோபாயமான தன்னைக் காட்டினான். இப்பொழுது 'சரணமடைவாயாக' என்ற சொற்களால் தன்னை வசப்படுத்தக் கூடியதாய், சேதநன் செய்ய வேண்டியதாயுள்ள ப்ரபத்தியைச் செய்யும்படி விதிக்கின்றான். 'செல்லுதல்' 'அடைதல்' என்ற பொருளுடைய வினைச் சொற்களுக்கெல்லாம் அறிதல் என்ற பொருள் உண்டு என்பது இலக்கண விதி. இங்கு 'வ்ரஜ' என்ற வினைச் சொல் அடைதல் . என்ற பொருள் உடையதாதலின் இதற்கும் கீழ் கூறிய விதியின் படி அறிவு என்ற பொருள் வரும். அறிவாவது இங்கு மன உறுதி. அதுதான் நம்பிக்கை என்ற பொருள் பெற்று மஹாவிசுவாஸத்தின் வடிவு கொண்டு அதன் வாயிலாக அதை அங்கமாகக் கொண்டுள்ளதாய், மற்ற அங்கங்களுடன் கூடியதாய், ஒரே முறை செய்ய வேண்டியதாயுள்ள பரந்யாஸத்தைக் காட்டுகின்றது. த்வயத்தில் முற்பகுதியில் சரணமாக அடைகின்றேன் என்னும் போது சரணம் என்ற சொல்லுக்கும் ப்ரபத்யே என்ற சொல்லுக்கும் குறிப்பிட்ட அர்த்தங்களை இங்குச் சரணம் வ்ரஜ என்கிற சொற்களுக்கும் கொள்ளவேண்டும். ஆனால் ஒரு வித்தியாஸம் உண்டு. த்வயத்தில் ப்ரபத்தியைச் செய்பவன் கொள்ளும் அநுஸந்தாநமாகையால் அடைகின்றேன் என்று தன்மைப் பொருளில் வினைச் சொல்

Scanned with CamScanner

வந்தது. இங்குச் சரம ச்லோகத்தில் . எதிரில் நிற்பவனைக் குறித்து அடைவாயாக என்று கட்டளை யிடுவதால் வினைச் சொல் முன்னிலையில் வந்தது. இதுவே வேறுபாடாகும்.

25.5.1 ப்ரபத்தியின் உருவத்தைப் பற்றி பிறர் கொள்கைகளை ஸமரஸமாக்கும் வழி

சிலர் வ்ரஜ என்பதை விதிக்கும் சொல்லாகக் கொள்ளாமல் சாஸ்த்ரங்களால் வரும் எம்பெருமானுடைய ஸம்பந்தத்தை அறிவதைக் கூறுவதாகவும், வேறு செய்ய வேண்டிய உபாயம் ஏதும் இல்லையென்றும் சொல்கின்றனர். இது பொருந்தாது. முன்னிலையில் வந்துள்ள இச் சொல்லை விதிக்கும் சொல்லாகக் கொள்வதே உசிதம். சுருதியும், ப்ரபத்தியை விரிவாய்க் கூறும் சாஸ்த்ரங்களும் ப்ரபத்தியை அவசியம் செய்யவேண்டியதாய் விதித்துள்ளன. அவற்றுக்கு முரண்படக் கூறுதல் நன்றன்று. ஆதலின் சரணம் வ்ரஜ என்னும் சொல்லை ப்ரபத்தியைச் செய்ய விதிக்கும் சொல்லாகவே கொள்ளவேண்டும்.

இப்படி சாஸ்த்ரங்களில் செய்யவேண்டியதாய் விதிக்கப் பட்டுள்ள ப்ரபத்தியின் உருவத்தைச் சிலர் வேறுபடுத்திக் கூறுகின்றனர். சிலர் ப்ரபத்தி யென்பது புதிதாய்ச் செய்ய வேண்டியதாயன்றி ஒருவனுக்கு முன்பே உள்ள நிலைதான் என்கின்றனர். அதாவது ஒரு பலனுக்காக ஒரு காரியத்தைக் செய்யுமவனுக்கு அந்தப் பலனில் ஆசையும் அச்செயல் புரிதற்கு உரிய அறிவு ஆற்றல் முதலிய தகுதியும் இருக்க வேண்டும் அல்லவோ! அவ்வாறே ப்ரபத்திக்கு முன் அவனிடம் உள்ள நிலைமையே ப்ரபத்தி ஆகின்றது என்கின்றனர். எம்பெருமானுக்குச் சேஷனாயிருத்தல் முதலிய தன் ஸம்பந்தத்தைச் சேதநன் உணர்கையே ப்ரபத்தி என்கின்றனர் சிலர். சிலர் எம்பெருமானை ஸித்தோபாயம் (நம் செயலுக்கு அகப்படாத முன்பே உள்ள உபாயம்) என்று சேதநன் உணர்ந்து கொள்வதே ப்ரபத்தி என்கின்றனர். பின்னும் சிலர் எம்பெருமான் ரக்ஷிக்க முற்படும் போது அவனை மறுக்காமலிருப்பதே ப்ரபத்தி என்கின்றனர். சிலர் அவன் ரக்ஷிக்கும் போது அவனை அநுமதித்திருப்பதே ப்ரபத்தி என்கின்றனர். சிலர் அசேதநப் பொருளைக் காட்டிலும் வேறு பட்டிருப்பதே ப்ரபத்தி என்கின்றனர். சிலர் அறிவினால் புரியும் செயலே ப்ரபத்தி என்கின்றனர். சிலர் கவலையற்று மன அமைதி யுடன் இருப்பதே ப்ரபத்தியென்கின்றனர். இவ்வாறெல்லாம்

தோன்றியபடி ப்ரபத்திக்கு உருவத்தைக் கற்பிக்கின்றனர். இந்த வாதங்களை அவ்வாறே ஏற்றால் இந்தச் சரமச் ச்லோகத்தில் சரண மடையும் செயலைப் புரியுமாறு விதித்திருப்பதற்கு மாறுபடும். இந்த ப்ரபத்தியை விரித்துரைக்கும் பல சாஸ்த்ரங்களுக்கும் முரண்படும். அவற்றைத் தழுவிக் கூறிய யுக்திகளுக்கும் விரோதம் வரும். ஸ்ரீ கீதாபாஷ்யம் கத்யம் இவற்றில் ப்ரபத்தியின் ஸ்வரூபத்தை விளக்கிக் கூறியிருக்கும் முறைக்கும் எதிராகும். அறிஞர்களான பல பெரியோர்கள் ப்ரபத்தியை அநுஷ்டித்து வந்த முறைக்கும் பொருந்தாது போம்.

அவர்களின் வாதங்களை அப்படியே கழித்துவிடாமல் இத்தனை ஆதாரங்களுக்கும் பொருந்துமாறு அவர்கள் கருத்தையும் அநுகூலமாக்கிச் சொல்வதற்கும் ஒரே வழி உண்டு. அதாவது ஸித்தோபாயமான எம்பெருமானே ப்ரதாநமான உபாயமாவான் என்ற கருத்தைக் கொண்டு அவனுக்கு அடுத்த உபாயமாகிய ப்ரபத்தியைப் பல உருக்கொடுத்துப் பேசினார்கள், என்று கருத வேண்டும். பின்னும் விளக்கம் - சேதநர்களாகிய நாமோ பற்பல பாபங்களைச் செய்து நரகம் புக வழியைத் தேடிக் கொண் டுள்ளோம். அவ்வாறு நரகம் வராமல் நம்மை எம்பெருமான் காக்க வேண்டுமென்று கருதி நாம் சிறு செயலான ப்ரபத்தியைச் செய்து அவனை வசப்படுத்திக் கொள்ள முயலு கின்றோம். அந்த ப்ரபத்தியும் நாம் சுதந்திரமாய்ச் செய்வதன்று. இதையும் அவனே காட்டிக்கொடுத்து நடத்தி வைக்கின்றான். ஆதலின் ப்ரபத்தியைக் காட்டிலும் அவனே மிகவும் முக்கியமான உபாயமாவான். இப்படி அவனைப் போல ப்ரபத்தி அவ்வளவு முக்கியமான உபாயமா காதென்ற கருத்தால் அதன் உருவைப் பல வகையாக்கிக் கூறிவைத்தார்கள். இப்படிக் கொண்டாலன்றி அவர்கள் கொள்கைகளை ஸமரஸமாக்க வேறு வழியில்லை.

ப்ரபத்தி காலத்தில் அநுஸந்திக்க வேண்டிய முறை: இந்த ப்ரபத்தியைச் செய்யும்போது நினைத்துக் கொள்ள வேண்டிய முறை. தன்னைக் காத்துக் கொள்வதற்காக இந்தச் செயலில் இறங்குகின்றேன். இதையும் நான் நினைத்தபடி நடத்த உரிமையில்லை. நானே சுதந்திரமாய்ச் செய்யச் சக்தியும் இல்லை. ஆதலின் எம்பெருமானுக்கு உகப்பான உபாயத்தைச் செய்ய அவனுடைய ஏவலால் தூண்டப்பட்டுச் செயல்புரிய இறங்குகின்றேன் என்று தான் அநுஸந்தித்துக் கொள்ள வேண்டும்.

Scanned with CamScanner

25.5.2 ப்ரபத்தி பற்றி மேலும் சில கொள்கைகள் - அவற்றின் கண்டநம்

(i) **தன் பயனுக்காகத் தான் செயல்புரியாமையே ப்ரபத்தி – அதன் கண்டநம்:** சேதநன் தன்னைக் காத்துக் கொள்வதாகிய பயனுக்காகத் தான் ஒரு செயலும் புரியாதிருப்பதே ப்ரபத்தி என்று சிலர் கூறுகின்றனர். இந்த வாதமும் நிலைக்க முடியாது. அதாவது சேதநன் ஒன்றைச் செய்தல் போல் செய்யாது கைவிடுதலும் ஒரு செயலின் வகுப்பிலேயே சேரும். இவன் எதற்காக அச்செயலைக் கைவிடுகின்றான்? தன்னைக் காத்துக் கொள்ளலாகிய பயனைக் கருதித் தானே! அப்பொழுது செயலை விடுதலும் தன்னைக் காப்பதற்குச் செய்யும் செயலாகிவிடவில்லையா? ஆகவே தன் பயனுக்காகச் செயல் புரிதலை விட வேண்டுமென்று கூறிக் கொண்டே தன் பயனுக்காகக் கைவிடுதலாகிய செயலைச் செய்கின்றான் என்று முடிகின்றது. இது தாங்கள் சொல்லும் வாதத்துக்கே முரண்படவில்லையா? தன் செயலைக் கைவிடுவது எதற்காக? தன் பயனுக்காகத் தானே! அப்பொழுது தன் செயலைக் கைவிடுதல் என்பதும் பொருந்தாது போய்விடும். இவன் தான் செயலை விடுதலாகிய செயலைச் செய்கின்றானே! மேலும் உரிய அங்கங்களுடன் ப்ரபத்தியைச் செய்யுமாறு விதிக்கும் ப்ரமாணங்களுக்கும் இந்த வாதம் முரண்படும். மேலும் தன் மகிழ்ச்சியையே பயனாகக் கொண்டு வேறுபயனை விரும்பாது சேதநன் செய்யும் கைங்கர்யங்களுக்கும் முரண்பாடு வரும் தம் பயனுக்காத்தாம் ஒரு செயலும் புரியக் கூடாதென்று தான் வாதம் புரிகின்றார்களே! மேலும் தன் சரீரத்தைக் காத்துக் கொள்வதற்காகப் பயிர் செய்தல் உணவு உட்கொள்ளல் முதலிய செயல் புரிவதும் தவறென்றாகி விடும்!

இப்படி தம் பயனுக்காக முயற்சி கூடாதென்று அவர்கள் கூறும் வாதத்துக்குப் பொருத்தமான உட்கருத்தைக் கூறி அந்த வாதத்தையும் பொருந்த வைக்கச் சில வழிகள் உண்டு. அவை யாவன - பக்தியோகம் செய்யச் சக்தியின்றிப் பரந்யாஸத்தைச் செய்துவிட்டால் அதன்பின் அதே பலனுக்காக வேறொன்றும் செய்ய வேண்டாம் என்பதையே அவர்களின் வாதத்தின் உட்கருத்தாகக் கூறலாம். மேலும் மோக்ஷத்தைப் பெறத் தடை செய்யும் சில காம்ய கர்மங்கள் உலகில் உண்டே! அவைதாம் ஸந்ததி - செல்வம் முதலிய மற்ற பலனுக்காகச் செய்யும் காம்ய

கர்மங்கள். அவற்றைச் செய்யக்கூடாதென்ற கருத்தைக் கொண்டதா யிருக்கலாம் அவர்கள் கூற்று. மேலும் பெரியதோர் ஆபத்து வந்தாலன்றிச் சாதாரண நிலையில் புத்திபூர்வமாய்ப் பாபங்கள் செய்யக் கூடாதென்ற கருத்தைக் கொண்டும் அவர்கள் அங்ஙனம் கூறியிருக்கலாம். அல்லது வீண்பொழுது போக்குச் செயல்களில் ஈடுபடக் கூடாதென்று எண்ணத்தாலும் அவ்வாறு கூறலாம். இப்படி எதாவது ஒரு வழியில் அவர்களின் வாதம் பிழைக்கலாமேயன்றி எவ்வகையிலும் ப்ரபத்தியைச் செய்ய வேண்டாததாக்க முடியாது.

(i) **பகவானது செயலுக்கு எதிரான தன் முயற்சியை விடுதலே ப்ரபத்தி அதன் மறுப்பு:** சிலர் எம்பெருமான் செயலுக்குத் தடையான தன் முயற்சியைக் கைவிடுவதே ப்ரபத்தி என்கின்றனர். இதிலும் குற்றமில்லை. எம்பெருமான் முயற்சிக்குத் தடையான செயல்களை ப்ரப்தி செய்பவன் செய்யலாமோ? கூடாது தானே! மேலே கூறிய வாதத்துக்குக் கூறிய விடையே. இதற்கும் பொருந்துமே! ப்ரபத்தி செய்தவன் மறுபடி பரந்யாஸம் செய்தலோ, மற்ற பலன்களுக்காகக் காம்ய கர்மங்களைச் செய்வதோ, ஆபத்து இல்லாதபோது அறிந்து பாபம் செய்தலோ, வீண்பொழுது போக்குவதோ நிகழ்ந்தால் இவனுக்கு நலம் புரியும் ஈசுவரனது முயற்சி இடம் பெறாதன்றோ ? ஆதலால் மோக்ஷத்தை விரும்பும் இவன் நிலைமைக்கு அந்நிலை பொருந்தாதென்ற கருத்தினால் அவற்றை விடுகையே ப்ரபத்தி என்று சொல்லி வைத்தார்கள்.

25.5.3 ப்ரபத்தி பற்றி எழும் சங்கைகளுக்குப் பரிஹாரம்

(i) **உலகில் தன் பொறுப்பைப் பிறரிடம் அளித்தலே ப்ரபத்தியாகாமை:** இங்கு ஒரு கேள்வி - பரந்யாஸம் என்பதே ப்ரபத்தி என்று சொல்லப்படுகின்றதே! பரந்யாஸம் என்பது தன்னால் இயலாத நிலையில் தன் பொறுப்பைப் பிறரிடம் சேர்ப்பது என்று தானே சாஸ்த்ரம் கூறுகின்றது! இது உலக முறைக்கு முரண்பட்டதாய்த் தோன்றுகின்றதே. உலகில் தனக்குச் சக்தி இருக்கும் போதும் ஒரு பொறுப்பை மற்றவனிடம் சேர்த்து விடுவதைப் பல இடங்களில் காண்கின்றோமே! ஒரு ப்ரபு தனக்குச் சக்தி இருந்தும் தன் பணியாளனிடம் எல்லாப் பொறுப்பையும் வைத்து விடுவதில்லையா? என்று. விடை- அது தன் பொறுப்பைப் பிறரிடம் தள்ளிவிடும் ஸாதாரணச் செயலாய் முடியுமேயன்றிச்

Scanned with CamScanner

சாஸ்த்ரங்களில் முறையோடும் அங்கங்களோடும் விதிக்கப்பட்ட ப்ரபத்தியாக ஆகாது. ஆதலின் அந்த உவமையை ப்ரபத்தியில் கொண்டு வருதல் பொருந்தாது.

(ii) **மனத்தால் மட்டும் செய்யும் ப்ரபத்தி - அதற்கு ஏற்ற சூழ்நிலை :** ஒரு கேள்வி - வாயினால் கர்ண மந்த்ரத்தைச் சொல்லி உடலால் வணங்கி மனத்தால் பொறுப்பை ஸமர்ப்பித்தல் ஆகிய முக்கருவிகளாலும் செய்வது பூர்ணப்ரபத்தியென வழங்கும். சில இடங்களில் வாயினாலும் உடலாலும் செய்யும் செயலன்றி மனத்தாலேயே ப்ரபத்தி செய்வதும் உலகில் உள்ளதாகத் தெரிகின்றதே! இப்படிச் செய்வதும் முறை தானா? என்று. **விடை-** இப்படி பரந்யாஸம் செய்வதற்கும் ஒரு சூழ்நிலை வருவதுண்டு. அதாவது சரீரமும் எல்லா இந்திரியங்களும் தனக்கு வசப்படாமல் மனம் மட்டும் நேரிய முறையில் இருக்கும் ஒரு ஸமயம் உண்டு. அதுதான் மரண காலம். அந்தச் சூழ்நிலையில் எல்லாப் பொறுப்பையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பித்தலாகிய பரந்யாஸத்தைச் செய்யலாம். இது மனத்தால் மட்டும் செய்யும் ப்ரபத்தியாகும்.

(iii) **பக்திக்கு உரியவனும் மோக்ஷம் பெறத் துடித்தால் ப்ரபத்திக்கு உரியன்:** ஒரு கேள்வி - ஒருவனுக்குப் பக்தி யோகம் செய்யச் சக்தி உள்ளது. அவன் பலன் பெறுதற்குக் காலத்தாழ்வைப் பொறுக்காது ப்ரபத்தியைச் செய்கின்றான். பக்தியோகமாகிய . கைம்முதல் உள்ள அவன் ப்ரபத்தியைச் செய்வது எப்படிப் பொருந்தும்? கைம் முதல் இல்லாமையன்றோ ப்ரபத்திக்குத் தகுதி! அவன் செய்வது முறையான ப்ரபத்தியாகுமா? என்று. விடை அவன் மோக்ஷத்தை விரைவில் பெற வேண்டுமென்று ஆசை கொண்டுதானே ப்ரபத்தி செய்கின்றான் பக்தி யோகம் நெடுங்காலம் கழித்துப் பலன் தருவதாயிற்றே! ஆகவே விரைவில் பலன் தரவல்ல உபாயமாகிய வேறு கைம்முதல் எதுவும் அவனிடம் இல்லையே ஆதலின்ப்ரபத்திக்குத் தகுதி இருக்கிறது . அவன் செய்யும் ப்ரபத்தி சாஸ்த்ர முறையைத் தழுவியதேயாகும்.

(iv) **எம்பெருமானது இயற்கைக் கருணை ப்ரபத்தியின்றியே மோக்ஷம் தருமா? - விடை:** கேள்வி எம்பெருமான் ஸ்வதந்த்ரன். அவனைத் தடுப்பவர் இல்லை . நமக்கு நாதனாயிருப்பவன். நம்மைக் காப்பதற்குக் கடமைப்பட்டவன். அவனுக்குக் காரணம்

ஏதுமின்றி இயற்கையாகவே கருணை நிரம்பியுள்ளது. அந்தக் கருணையாலேயே நம்மை ரக்ஷித்துவிட மாட்டானா? இப்படி இருக்க ப்ரபத்தி என்று ஒன்றைச் செய்யுமாறு 'வ்ரஜ' என்று விதிக்க வேண்டுமோ?' என்று. **விடை -** காரணமில்லாத இயற்கைக் கருணையென்றால் அது ஒன்றையும் எதிர்பார்க்காமல் ரக்ஷிக்கச் செய்துவிடும் என்று கூடப் பொருள்படாது. ஆகவே அவனுடைய இயற்கைக் கருணை சேதநன் செய்யும் ப்ரபத்தி என்னும் ஒரு சிறு செயலைக் கொண்டே அவனை ரக்ஷிக்கும் என்ற உட்கருத்தைச் சாஸ்த்ரங்களெல்லாம் ஒரு முகமாய் நிர்ணயித்துள்ளனவென்று உணர்க.

(v) **அவன் குணமும் ஸம்பந்தமும் ப்ரபத்தியின்றிக் காக்க முடியாது - விளக்கம்:** கேள்வி இன்னும் சிலர் - எம்பெருமானிடம் கருணை அன்பு முதலிய பல விசேஷ குணங்கள் உள்ளன. ஸம்பந்தமும் உள்ளது. அவன் உயிர் சேதநன் உடல். அவன் சேஷி. சேதநன் சேஷன். இப்படி பல ஸம்பந்தங்கள். இவையெல்லாம் சேர்ந்து சேதநனை ஈச்வரன் ரக்ஷிக்கும்படி செய்துவிடும். ப்ரபத்தி என்று ஒன்றைச் செய்ய வேண்டியதில்லை என்கின்றனர். **விடை -** அவர்களின் உட்கருத்து வேறாயிருக்கும். அதாவது - சேதநனை ரக்ஷிப்பதற்குக் கீழ் கூறிய குணங்களும் ஸம்பந்தங்களும் முக்கிய காரணங்களாகும். அதனால் ப்ரபத்தி செய்ய வேண்டாமென்று கருத்தன்று. ப்ரபத்தியைச் சேதநன் உருவாக்குவதற்கும் அதன் பலனைப் பெறுவதற்கும் எம்பெருமான் ஸங்கல்பம் வேண்டும். ப்ரபத்தி ஒரு க்ஷணத்தில் செய்யக்கூடிய எளிய உபாயமாகும். இது சேதநனிடம் எம்பெருமானுக்கு உள்ள சீற்றத்தைத் தணிப்பதுடன் நிற்பதால் முக்கியமல்லாது நிற்கும். ஆனால் இது இல்லா விடில் பலன் பெற முடியாது. குணங்களும் ஸம்பந்தங்களும் பலன் தருவதற்கு முக்கியமாய் நின்ற போதிலும் ப்ரபத்தி இல்லாமல் பலனைக் கொடுத்துவிட முடியாது. அவை முக்கியம் என்ற கருத்தைக் கொண்டு அவையே ரக்ஷிக்க முக்கிய காரணமென்று சொன்னார்கள். இவ்வாறு கொள்ளாமல் அவனுடைய குணமும் ஸம்பந்தமுமே போதுமென்றும் ப்ரபத்தி வேண்டுவதில்லை என்றும் கொள்வதாயின் உலகத்தில் நடக்கும் முறைகளுக்கு முரண்பாடு வரும். அதாவது - மோக்ஷத்தை விரும்புமவர்கள் பலன் பெறுதற்குச் சில அம்சங்கள் முக்கியமானவை. முதலில் தற்செயலாக ஏதாவது புண்ணியம் நேர்ந்திருக்க வேண்டும்.

Scanned with CamScanner

த்வயத்தை உபதேசிக்கப் பெற்று அதன் அர்த்தத்தால் ஆத்ம ஸ்வரூபத்தைப் பற்றிய தெளிவான அறிவு பெற்றிருக்க வேண்டும். இவற்றுக்காக ஆசார்யர்கள் சேதநர்களைச் சிஷ்யர்களாக ஏற்றுப் பல உபதேசங்களைச் செய்து ப்ரபத்தியைச் செய்யுமாறு செய்கின்றார்கள். ப்ரபத்தியைச் செய்யவேண்டியதில்லை என்ற கொள்கையில் மற்ற உபதேசங்களெல்லாம் எதற்கு? உலகில் நடக்கும் இச்செயல்கள் வேண்டாதனவாகி விடும். ஆகையால் தற்செயலாய் நேரும் புண்ணியம் த்வயத்தின் உபதேசம் - ஆசார்யனால் திருந்துகை - ப்ரபத்தி இந்த வரிசை முழுதுக்கும் பொதுவாக எதற்குமே ஸ்வதந்த்ரனாய்ச் சேஷியான எம்பெருமானுடைய இயற்கைக் கருணையே முக்கிய காரணம் என்று மட்டுமே உணர வேண்டியது. இப்படியன்றி எம்பெருமான் தன்னுடைய குணங்களாலும் ஸம்பந்தத்தாலுமே ரக்ஷித்து விடுவானென்றால் யாரை ரக்ஷிப்பது. யாரைக் கை விடுவது என்ற வரையறையே இல்லாது போம். எல்லாருக்குமே மோக்ஷம் கொடுக்க நேரும்.

(vi) **அவனது சுதந்திரமே வரையறையை வகுத்துக் கொள்வதில் இடர் :** அந்த வரையறையை எம்பெருமானது சுதந்திரமே செய்து கொடுக்கும். அவன் தன் சுதந்திரத்தைக் கொண்டு யாரைக் காக்க வேண்டும், யாரைக் கைவிட வேண்டும் என்பதை முடிவு செய்து கொள்வான்' என்று கூறிவால் ஒருவனை ரக்ஷிப்பதால் அவனிடம் எம்பெருமானுக்குப் பக்ஷபாதமும் மற்றவனை ரக்ஷிக்காது துன்பப்படுத்துவதால் அவனிடம் கருணை யின்மையும் கூற நேரும். இப்படி ப்ரபத்தியாகிய உபாயமின்றியே ரக்ஷிப்பதாய் ஏற்பட்டுவிட்டால் அதைச் செய்யுமாறு விதிக்கும் எல்லாச் சாஸ்த்ரங்களும் கலங்கிப்போம். சாஸ்த்ரங்களுக்கே குழப்பம் ஏற்பட்டால் அவற்றைக் கொண்டே அறியவேண்டிய அத்ருஷ்டம் - -ஈச்வரன் எல்லாமே இல்லையாகும்.

(vi) **ஆழ்வார் ஸூக்தியைக் கொண்டு ஆக்ஷேபம் ஸமாதாநம்:** இங்கு ஒரு கேள்வி - 'நம்மாழ்வார் 'ஓர் எண் தானுமின்றியே வந்தியலுமாறு' என்று அருளிச் செய்துள்ளார். இதன் கருத்து - காரியங்கள் பலிக்குமிடத்தில் நம் எண்ணம் ஏதும் இல்லாமல் தாமே வருகின்றன - என்பது தானே! ஆகவே உபாயமின்றியே பலன் வருவதாயின் ப்ரபத்தியின்றித் தானே மோக்ஷம் வருவதாகக் கூறலாமே!' என்று. ஸமாதாநம் ஆழ்வார் ஸூக்தியின் பொருள் - நாம் இப்பொழுது பலன் வரும் என்ற நினைவின்றி இருக்க, அவன் ஸங்கல்பத்தாலே தானே பலன் வரும் என்பதுவே. இதற்கு முன்பு விசேஷ காரணம் ஏதும் இல்லை என்று கூடப் பொருள் தராது அந்த ஸூக்தி. ஆதலின் நாம் முதலில் செய்த உபாயத்தை நினைத்துப் பலனைப் பற்றி நினைவின்றி இருக்க அவன் ஸங்கல்பத்தால் பலன் தானே வருமென்றதுவே கருத்து.

(vii) **மற்றொரு கேள்வி -** 'நம்மாழ்வார்' வெறிதே அருள் செய்வர்' என்று அருளியுள்ளாரே: இதற்கு எம்பெருமான் நம்மிடம் எதையும் எதிர்பாராது வெறுமனேயே பலனைத் தருவான் என்று தானே பொருள் தேறுகின்றது. இங்ஙனம் இருக்க ப்ரபத்தி என்று ஒன்றைச் செய்தாக வேண்டுமா?' என்று. ஸமாதாநம் - அடுத்த சொல்லைக் கவனிக்க வேண்டும். 'வெறிதேயருள் செய்வர் செய்வார்கட்கு' என்று உள்ளது. செய்வார்கள் என்று சிலரைக் குறிப்பிட்டு அவர்களுக்கு அருள் செய்வதாகக் கூறியதால் காக்கப்பட வேண்டியவனிடம் சாஸ்திரத்தால் அறியப்படும் சிறிய ஓர் உபாயம் இருக்க வேண்டுமென்று ஏற்படவில்லையா? ஆதலின் வெறிதே என்பதற்குத் தன்னிடம் ஓர் உபாயத்தைச் செய்தவர்களுக்கு வேறொன்றையும் எதிர்பாராமல் பயனை அருள்வான் என்றே பொருள் கொள்ள வேண்டுமென்று உணர்க.

(ix) **அறியாமல் நேரும் புண்ணியமே உபாயம் - விடை:** பின்னும் ஒரு கேள்வி - சேதநனுக்குத் தான் அறியாமலே ஏதாவது புண்ணியம் நேரிடக் கூடுமன்றோ ; அதையே சிறு உபாயமாகக் கொண்டு விடலாமே; ப்ரபத்தியே உபாயமென்று சொல்ல வேண்டாமே! என்று, விடை. அப்படி ஒரு புண்ணியம் இருக்கலாமென்பதைச் சாஸ்த்ரத்தைக் கொண்டுதானே அறிய வேண்டும்! புண்யத்தைக் கண்ணால் பார்க்கவா முடியும்? ஆதலின் சாஸ்த்ரம் சொல்லும் இந்தப் புண்ணியத்தை நம்புவது போல் அந்தச் சாஸ்த்ரமே சொல்லும் ஆசார்ய ஸம்பந்தம் - ஞானம் பெறுதல் - ப்ரபத்தி முதலிய வரிசைகளையும் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.

அறியாத புண்ணியமும் முந்திய வினையின் விளைவே - விளக்கம்: மேலும் ஒருவனுக்கு அறியாமல் நேருகிற புண்ணியத்தைப் பற்றி ஆராய்ந்தால் அத்தகைய புண்ணியமும்

Scanned with CamScanner

ஒருவனுக்கு எப்பொழுதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் ஸம்பவிக்கும். அது வருவதற்கும் அவனுடைய கர்மம்தான் காரணமாகும். கர்மம் அநாதியாய்த் தொடர்ந்து ஓடும் வெள்ளமாய்ப் பலவகைப்பட்டதாய் வருகின்றது. இந்தக் கர்மத்துக்கு ஏற்றவாறுதான் ஒருவனுக்கு அறியாமல் வரும் புண்ணியமும் நேர வேண்டும். ஆதலின் இந்தப் புண்ணியத்தை உபாயமாகக் கொண்டு மோக்ஷம் முதலிய பலனைத் தருவதாகக் கூற முடியாது. சேதநன் கர்மத்தை முக்கியமாகக் கொண்டு அதற்குத் தக்கவாறு தான் எம்பெருமானும் பலன் தர முடியும். இல்லையேல் ஒருவனைச் சிறந்த நிலையில் வைத்ததில் அவனிடம் ஈச்வரனுக்குப் பக்ஷபாதமும் மற்றொருவனைத் துன்புறச் செய்வதில் ஈச்வரனுக்கு அவன் விஷயத்தில் கருணையின்மையும் சொல்ல இடமாகும். ஆதலின் அவனவன் கர்மத்துக்கு ஏற்றவாறுதான் அவனும் பலனைத் தர முடியும் என்று ப்ரஹ்மஸூத்ரம் முதலியவை முடிவு செய்தன.

(x) **ஜீவனுக்கு அறிதல்-ஆசை-செயலாற்றல் மூன்றும் உண்டு:** ஒரு காரியத்தைச் செய்யும் திறமையுடையவன் சுதந்திரனாயிருக்க வேண்டுமென்று இலக்கண நூல் கூறுகின்றது. சேதநனோ சுதந்திரமின்றி எம்பெருமானுக்கு முழுதும் வசப்பட்டவனென்று தீர்ந்துள்ளது. இந்த நிலையில் உள்ள சேதநனைக்குறித்து ஒன்றைச் செய்யுமாறு சாஸ்த்ரம் விதிப்பது பொருந்துமா? என்று ஒரு கேள்வி. **விடை** - சேதநனுக்கு முதலில் ஒரு செயலில் முயற்சி கொள்ளும் அளவுக்குச் சிறு சுதந்திரம் உண்டு. ஆனால் இந்தச் சுதந்திரமும் தானாக வந்ததன்று. எம்பெருமான் அளித்ததேயாகும். அவன் அருளிய சிறு சுதந்தரத்தைச் சுமந்து நிற்பதையும் எம்பெருமானுக்கு வசப்பட்டிருத்தலின் உச்ச நிலையாகக் கொள்ள வேண்டும். ஸ்ரீபாஷ்யத்தில் 'சேதநனுக்குச் செயலாற்றும் தன்மையாகிய கர்த்ருத்வம் உண்டு. இல்லையேல் சேதநனைச் செயல் புரியுமாறு விதிக்கும் சாஸ்த்ரங்கள் பயனற்றுப் போம். ஆனால் அந்தக் கர்த்ருத்வமும் எம்பெருமான் அளித்ததேயாகும். இதையே வேதமும் ஓதுகின்றது என்று முடிவு கூறப்பட்டுள்ளது. இப்படி எம்பெருமானுக்கு அடங்கியவனாகவே இருந்து செயல் புரியும் தன்மை ஜீவனுக்கு எப்பொழுதும் உள்ளது. மோக்ஷம் பெற்ற பின்பும் இந்த நிலையே ஜீவனுக்கு உள்ளது. ஆதலின்

ஜீவனுக்கு அவசியம் இருப்பதாகத் தீர்ந்த கர்த்ருத்வத்தை இல்லையாக்க முடியாது. அதை இல்லையென்று சொல்ல முற்பட்டால் ஸாங்க்யர் முதலிய மதத்தினரின் கொள்கையைத் தழுவியதாகிவிடும். ஜீவனுக்குச் செயல் புரியும் தன்மையை இசைந்து அதைத் தானாகவே வந்ததாகக் கூறுவதாயின் எல்லா ஆத்மாக்களையும் நியமிக்கும் ஒருவன் இல்லையென்று கூறி ஈச்வரனை இல்லையாக்கும் கொள்கையைப் பின்பற்றுவதாகும். இதற்கு மேல் ஜீவனுக்கு அறியும் தன்மை மட்டுமே ஈச்வரனால் வருவதென்றும் செயல் புரியும் தன்மையோ, பயனை அநுபவிக்கும் தன்மையோ கிடையாதென்றும் சொல்வதும் பொருந்தாது. அப்பொழுது பயனைப் பெற ஆசையும் அதற்காக ஓர் உபாயத்தைச் செய்ய முயற்சியும் இல்லாமற்போம். பயனை அநுபவிப்பது உண்டானால்தானே அதில் ஆசையும் அதற்காக முயற்சியும் வேண்டும்! இதற்கு மேல் 'ஜீவனுக்கு அறிவும் ஆசையும் மட்டுமே உண்டு. செயல் புரியும் தன்மை இல்லை' என்று வழக்காடினால் உலகில் எந்தப் பயனுக்கும் சாதனமாக எந்தச் செயலையும் செய்ய அவசியம் இல்லாது போம். ஆக ஒன்றை அறிதல்- பின் அதன் விளைவாக அதைச் செய்ய ஆசைப்படுதல் - பின் அப்பயனுக்காகச் செயல் புரிதல் ஆகிய மூன்றும் ஜீவனுக்கு உண்டு. அறிவின் மற்ற நிலைகள் தாமே ஆசையும் செயல் புரிதலும்.

(xi) **செயலாற்றல் கைங்கர்யத்தில் மட்டுமே, அதன் உபாயத்தில் இல்லை எனும் கொள்கை மறுப்பு:** சிலரின் வாதம் - 'ஜீவனுக்குச் செயல் புரிதலாகிய கர்த்ருத்வம் எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்ய விஷயத்தில் மட்டுமே உண்டு. அந்தப் பலனுக்கு வேண்டிய உபாயத்தில் ஜீவனது செயல் இல்லை' என்பது, இது பொருந்தாது. சேதநன் செய்யும் கைங்கர்யமே ஓர் உபாயமாகவன்றோ உள்ளது! பரம புருஷனுடைய உகப்பிற்கு உபாயமாகத்தானே இவன் கைங்கர்யம் செய்கிறான். ஆகவே, உபாயத்தைச் செய்வதில் இவனுக்குத் தொடர்பு இல்லை என்று கூற முடியாது.

இப்படி செயல் புரிபவனான சேதநனுக்குக் கர்த்ருத்வம் இல்லை என்று மறுக்க முடியாது. ஆனால் அந்தச் செயலில் ஸம்ஸார பந்தத்தைத் தரும் அம்சம் மட்டும் வராமல் பார்த்துக்

Scanned with CamScanner

கொள்ளவேண்டும். அதாவது ஈச்வரன் கொடுத்த சரீரம் இந்த்ரியம் முதலியவற்றைக் கொண்டு அவனால் ஏவப்பட்டு அவன் துணை செய்ய அதனால் தான் செயல் புரிவதாகக் கருத வேண்டும். இவ்வாறின்றித் தானே ஸ்வதந்த்ரமாய்ச் செயல் புரிவதான விபரீத புத்தியைக் கொண்டால் இதனால் பின்னும் ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டு நிற்க வேண்டி வரும். மோக்ஷத்தையன்றி வேறுபயனை விரும்பி அதற்காகப் பக்தி ப்ரபத்திகளை உபாயமாகச் செய்தாலும் கூட அவை ஸம்ஸார பந்தத்தையே தரும்.

ஸம்ஸாரத்திலும் முக்தியிலும் ஜீவனது செயலாற்றலில் வேறுபாடுகள்: மோக்ஷம் பெற்றபின் சேதநனுக்கு உள்ள செயல் புரியும் தன்மைக்கும் இங்கு ஸம்ஸார மண்டலத்தில் உள்ள அத்தன்மைக்கும் மிக்க வேற்றுமை உண்டு. மோக்ஷத்தில் சேதநன் பல கைங்கர்யங்களைச் செய்கின்றானே! அந்தத் தன்மை அவனுக்கு எப்படி வருகின்றது? அங்கே ஸத்துவம் - ரஜஸ் - தமஸ் எனும் முக்குணங்களைப் பற்றிப் பேசவே இடமில்லை. அக்குணங்கள் கலவாது சுத்தஸத்துவம் ஒன்று மட்டுமே நிற்குமிடம் அது. முக்தி பெற்றவன் தன் ஸங்கல்பத்தால் செயல் புரிகின்றான். அந்த ஸங்கல்பமும் எம்பெருமானது . ஸங்கல்பத்துக்குச் சிறிதும் மாறுபடாததாகும். இங்கு ஸம்ஸார மண்டலத்தில் ஜீவனுக்கு உள்ள செயல் புரியும் தன்மை முற்றிலும் வேறுபட்டது. இங்குச் சேதநனுடைய முந்திய கர்மத்துக்கு ஏற்றவாறு எம்பெருமான் ஸங்கல்பித்து இவனுக்கு ஸத்துவம் - ரஜஸ் - தமஸ் ஆகிய குணங்களை மாறுபடச் செய்து அதற்கு ஏற்றவாறு செயல் புரியச் செய்கின்றான். ஆகவே முக்தனுடையவும் பத்தனுடையவும் செயலாற்றும் தன்மைகள் வேறுபட்டனவாகும். சேதநன் ரஜோ குணமும் தமோ குணமும் தலையெடுத்து அதற்கு ஏற்ற செயலையோ, அற்பமான பயன்களில் பற்றை உண்டாக்கும் ஸத்துவகுணம் ஓங்கி அதற்கு ஏற்ற செயலையோ புரிவானாகில் பின்னும் ஸம்ஸார பந்தத்திலேயே அகப்பட வேண்டும். ஸத்துவ குணமே எம்பெருமானை அடைவதில் விருப்பத்தை உண்டாக்குமதாய்த் தலையெடுத்து நின்றால் அவன் புரியும் செயல் மோக்ஷம் வரையில் கொண்டு சேர்த்து விடும்.

செயல் புரிதல் எம்பெருமானால் வரினும் அதன் பயன் ஜீவனையே சார்தல் : இப்படிச் சேதநனுக்கு உள்ள செயல் புரியும் தன்மை எம்பெருமானாலேயே வருவதாயின் இவன் செய்யும் கர்மங்களுக்குப் பலன் இவனை அணுகக் கூடாதே என்று கேள்வி எழலாம். ஸமாதாநம் - இவனது (கர்த்ருத்வம்) செயல்புரியும் . தன்மை எம்பெருமானாலே வந்ததாயிருப்பினும் இவன் முதலில் தொடங்கிச் செய்யும் செயலுக்குக் குறிப்பிட்ட ஓர் அளவுக்குச் சிறு சுதந்திரமும் உண்டாதலின் இவன் செய்யும் கர்மத்தின் பயனை இவன் அநுபவித்தேயாக வேண்டும். இந்த அம்சத்தை எல்லா மதத்தினரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். ஜீவன் செய்யும் கர்மத்துக்குப் பலன் ஜீவனைச் சேராதென்று யாரேனும் சொல்ல முடியுமா? ஜீவன் ஒரு செயலைச் செய்யும்போது சரீரம். இந்திரியம் - செயல்புரிய ஏற்ற இடம் - ஏற்ற காலம் - இவனது முந்திய கர்மம் முதலிய எல்லாம் இவனுக்கு உதவுகின்றன என்பது எல்லாருக்கும் இஷ்டமானது தானே! இவ்வாறே சேதநன் அங்கங்களுடன் பரந்யாஸத்தைச் செய்யும்போதும் இவனுக்குக் கர்த்ருத்வம் (செயல் புரியும் தன்மை) உண்டென்பதையும் ஆனால் அதுவும் எம்பெருமான் அளித்ததென்பதையும் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

26. சரம சுலோகத்தின் பிற்பகுதியின் பொருள் விளக்கம்

26.1 கடமையில் தவறாத கண்ணன் – அதற்குச் சரிதைச் சான்று

இப்படி சரம சுலோகத்தின் முற்பாதியில் சேதநன் உஜ்ஜீவிப்பதற்காக எம்பெருமான் பரம க்ருபையாலே சரணாகதியென்னும் விசேஷ உபாயத்தைக் காட்டிக் கொடுத்து அதற்கு ஏற்ற தகுதி உடைய சேதநன் அதைச் செய்யவேண்டிய கடமையாக உபதேசித்து விதித்தான். பிற்பாதியில் சேதநன் செய்த ப்ரபத்தியால் அவன் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கண்ணபிரான் அவனை எல்லாப் பாபங்களினின்றும் விடுவித்தலாகிய தன் கடமையை அருளிச் செய்கின்றான். கண்ணன் தன் கடமையைச் செய்வதில் எத்தகைய ஊக்கமுடையவன் என்பதைத் திருநாராயணாஸ்த்ர வரலாற்றைக் கொண்டு அறியலாம். அதாவது - பகதத்தனோடு அருச்சுனன் போர்புரிந்தான். பகதத்தன் திரு நாராயணாஸ்த்ரத்தை அருச்சுனன் மீது எறிந்தான். அதன் வீரியத்தைத் தாங்கவோ எதிர்க்கவோ அருச்சுனனால் முடியவில்லை. கண்ணன் தன்னைச்

Scanned with CamScanner

சரணமடைந்த அருச்சுனனைக் காக்க விரும்பிப் பிராட்டி உறைகின்ற தன் மார்பில் அந்த அஸ்த்ரத்தை ஏற்றுக்கொண்டு அருச்சுனனுக்குத் தீங்கு வாராதவாறு காத்தருளினான். இதனின்று எம்பெருமான் தன்னைச் சரணம் அடைந்தவர்களுக்கு வரும் துன்பத்தைத் தானே தாங்கியாவது காத்தருள்வான் என்று தேறுகின்றது.

26.2 'அஹம்' சப்தத்தின் பொருள் விளக்கம்

அஹம் - நான். எம்பெருமான் இந்த நான் என்னும் சொல்லால் சேதநனை ஸர்வ பாபங்களினின்றும் விடுவிப்பதற்கு ஏற்ற பெருமைகள் எல்லாம் தன்னிடம் இருப்பதைக் காட்டிக் கொள்கின்றான். இதன் விளக்கம் - பிரமன் சிவன் முதலிய தேவர்களையும் ரக்ஷகர்களாகச் சிலர் நினைக்கின்றார்களே அது தவறு. அவர்களே தங்களுக்கு எது நன்மை - எது தீமை என்பதை அறியவல்லரல்லர். எனக்கு அடங்கிக் கிடப்பவர்கள் அவர்கள். தங்களைக் காத்துக் கொள்ளக் கூட அவர்களுக்குச் சக்தி கிடையாது. அவர்கள் பெயரளவுக்கே ரக்ஷகர்களெனப்படுகின்றனர். நான் அவர்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டவன். நான் அறியாதது ஒன்றும் இல்லையென்னும்படி ஸர்வஜ்ஞன். ஆதலின் என்னை அண்டியவர்களுக்கு எது நன்மை எது தீமை என்பதை நானே காணமுடியும். என்னிடம் ப்ரபத்தி செய்தவர்களின் பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டு அவர்களை நினைத்தபோதே பரமபதத்தில் நித்யஸூரிகளின் கோஷ்டியில் சேர்த்து வைக்கும்படி சுதந்திரமுடையவன் நான். நானே எல்லோருக்கும் நாயகன். எல்லோரும் என் குழந்தைகள். ஆதலின் என்னைச் சரணமடைந்தவர்களின் கருமங்களைப் போக்கித் தூயராக்கி அழுக்கு அகற்றப்பெற்ற ஆபரணம் போலே என்றைக்கு அவர்களை ஏற்றுக் கொள்வேன்? என்ற ஆவலுடையனாயுள்ளேன் என்ற கருத்தைக் கொண்டு நான் என்று தன்னைச் சுட்டிக் காட்டுகின்றான்.

26.2.1 நேராக மோக்ஷம் தரவல்லவன் எம்பெருமான் ஒருவனே

உலகில் வேறொருவன் மற்றொருவனை மோக்ஷம் பெறச் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் திருமகள் நாயகனான எம்பெருமானை முன்னிட்டே மோக்ஷம் பெறச் செய்யலாமே அன்றி நேராகக் கொடுக்கச் சக்தியுடையனல்லன். ஆசார்யர்கள் நடுவே நின்று சிஷ்யர்களுக்கு எம்பெருமானை முன்னிட்டு மோக்ஷம் வாங்கித் தருவதில்லையா? அப்படியேநான் மற்றவனும்.

26.2.2 அவன் ஸங்கல்பத்தால் வரும் செயலை யாரும் தடை செய்ய முடியாது

மேலும் எம்பெருமான் எதையும் செய்யச் சக்தியுடையன். சேதநன் செய்த கருமத்தின் பயனாக அவனை எம்பெருமான் ஸம்ஸார பந்தத்தில் விலங்கிட்டு வைத்துள்ளான். பின் அவன் செய்த ப்ரபத்தி என்னும் உபாயத்தால் மகிழ்ந்து அவனுக்கு மோக்ஷம் தர எம்பெருமான் விரைகின்றான். அந்த நிலையில் தேவர்களுக்கு அச்சம் ஏற்படும். தேவர்கள் இந்த ஸம்ஸார லோகத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்துபவர்களாதலின் எம்பெருமான் ஒவ்வொருவனாக மோக்ஷம் கொடுத்துக் கொண்டே வந்தால் ஸம்ஸார லோகமே குறுகிவிடுமே என்பதுவே அவர்களின் அச்சம். இந்த அச்சத்தால் எல்லாத் தேவரும் ஒன்று கூடி எம்பெருமானிடம் சென்று தடை செய்தாலும் அவன் இடம் தரமாட்டான். அவர்களால் அவனைத் தடை செய்யவும் முடியாது. இப்படி சேதநனுடைய கர்மங்களையெல்லாம் ஒழிப்பதற்கு வேண்டிய விசேஷ அம்சங்களெல்லாம் தன்னிடம் நிறைந்துள்ளன என்ற கருத்தை நான் என்பதால் காட்டுகின்றான். இங்கு விடுவிக்கப் போகின்றேன் என்ற தன்மையொருமை வினை முற்றினாலேயே 'நான்' என்பது தேறிவிடும் போது மிகுதியாக நான் என்ற சொல்லையும் கூட்டியது இத்துணைப் பெருமைகளை யெல்லாம் இந்தச் சொல்லில் தெளிந்து கொள்வதற்காக என்று அறிக.

26.3 'த்வா' சப்தத்தின் பொருள் விளக்கம்

த்வா - உன்னை, பக்தி யோகம் முதலிய மற்ற, உபாயங்கள் செய்வதற்குக் கடினமானவை என்பதை உணர்ந்து அவற்றை நீ கைவிட்டாய். இனி என் கதி என்ன என்ற கவலையுடன் எல்லையற்ற துயரம் உன்னைச் சூழ்ந்து கொண்டது. உனக்கு நல்ல காலம் வந்துவிட்டது. என் பெருமையை உணர்ந்து கொண்டாய். என்னைப்பற்றி இயற்கையில் எல்லோருக்கும் சேஷியென்றும், பிறர் உதவியை எதிர்பாராது முழுமையான சுதந்திரத்துடன்

Scanned with CamScanner

இருப்பவனென்றும், எல்லோரையும் காப்பதையே விரதமாகக் கொண்டவனென்றும் தெளிவு பெற்று முழுப் பொறுப்பையும் என்னிடம் வைத்து ப்ரபத்தியைச் செய்து விட்டாய். நீ விரும்பும் பயனுக்காக இனி வேறு எந்தச் செயலும் செய்ய வேண்டியதில்லை என்று துணிந்து தொடர்பற்றுக் கைவிட்டாய். சாதகப் பறவை மழையையே எதிர்பார்த்து நிற்பது போல் நீ பயன்பெறும் காலத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றாய். இத்தகைய உன்னை என்று தேறிய பொருள்.

26.4 உபநிடதம் கூறும் பல தர்மங்களிலும் ப்ரபத்தியே சிறந்தது

உபநிடதம் பல தர்மங்களை ஓதப் புகுந்து அவற்றை 'ஸத்யம்' 'தபஸ்' 'தமம்' 'சமம்' 'தாநம்' 'தர்மம்' 'ப்ரஜநநம்' 'அக்நிகள்' 'அக்நிஹோத்ரம்' 'யஜ்ஞம் மாநஸம்' என்றெல்லாம் பெயரிட்டு அடுக்கிக் கொண்டே போய்க் கடைசியில் இந்தத் தபஸ்ஸுக்கள் எல்லாம் தாழ்ந்தவை என்று முடிவு கூறி ந்யாஸமென்று பெயர் கொண்ட ஆத்ம ஸமர்ப்பணம் என்னும் ப்ரபத்தியே இந்தத் தர்மங்கள் எல்லாவற்றினும் மேம்பட்டதென்று முந்திய அநுவாகத்தில் கூறியது. அடுத்த அநுவாகத்தில் இந்த ப்ரபத்தி என்னும் வேள்வி வேறு எந்தத் தர்மத்தையும் எதிர்பாராத தென்று இதன் பெருமையை விளக்கியது. இவற்றைக் கருத்தில் கொண்டு ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்ரம், மற்றும் உள்ள தர்மங்களைச் செய்யும் அதிகாரிகள் ப்ரபத்தி செய்பவனுடைய பெருமையில் கோடியில் ஒரு பங்கு பெறக்கூடத் தகுதியுடையரல்லர் என்று முடிவு கூறிய துடன் ப்ரபத்தி செய்தவனைச் சிறந்த வேள்வி செய்தவனென்றும் நூறு யாகங்களைச் செய்தவனென்றும் செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடித்தவனென்றும் புகழ்ந்து பேசி உபநிடதத்தின் கருத்தைத் தெளிவுபடுத்தியது.

26.5 'ஸர்வபாபேப்ய:' பொருள் விளக்கம்

ஸர்வபாபேப்ய: - எல்லாப் பாபங்களினின்றும். ப்ரபத்தி செய்பவனிடம் எல்லையற்ற விரோதிகளின் வகுப்புக்கள் உள்ளன. விரோதிகள் யாவை? முன் செய்த பாபங்களே. அவற்றை எம்பெருமான்தான் ஒழிக்கவேண்டும். அந்தப் பாபங்களைக் குறிக்கின்றது இந்தச் சொல். பாபம் என்றால் என்ன? இதைக் கண்ணால் காணமுடியுமா? முடியாது. சாஸ்திரத்தைக் கொண்டே

அறிய வேண்டியதாய்பின் தீங்கை விளைவிப்பதாயுள்ள ஒன்றே பாபமெனப்படுகின்றது. பாபங்கள் என்று பன்மையில் கூறியது பாபம் அநாதிகாலமாய்ச் செய்யப்பட்டுக் குவிந்து நிற்பதையும் அந்தப் பாபம் பலவகையில் செய்யப்பட்டுப் பெருவெள்ளமாய் நிற்பதையும் காட்டுகின்றது. இங்கு எல்லாப் பாபங்கள் என்று எல்லாவற்றையும் கூட்டியதற்குக் கருத்து என்னவென்று பார்ப்போம். பாபம் எதனால் வருகின்றது? அஞ்ஞானத்தால் வருகின்றது. அந்தப் பாபமே பின்னும் அஞ்ஞானத்தைத் தருகின்றது. இப்படி பாபத்துக்குக் காரணமாயும் பாபத்தால் வருவதுமான அஞ்ஞானத்தையும் இங்கு எல்லாம் என்ற சொல்லால் கூட்டிக் கொள்ள வேண்டும். மேலும் சேதநனுக்கு விபரீதமான சில பழக்கங்கள் ஏற்பட்ட பின்னும் அவற்றிலேயே ஆசையும் வருகின்றது. அவற்றையும் எல்லாம் என்ற சொல்லுக்குப் பொருளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் ப்ரக்ருதியின் தொடர்பால் பெற்றிருக்கும் ஸ்தூலமான இந்தச் சரீரத்தின் ஸம்பந்தத்தையும் சரீரத்தை விடும்போது ஸூக்ஷ்ம வடிவில் தொடரும் சரீரத்தின் ஸம்பந்தத்தையும் கழிக்க வேண்டிய. பாப வகுப்பில் சேர்ப்பதற்காகவும் எல்லாப் பாபங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இந்த அனைத்தினின்றும் விடுவிப்பதாகக் கண்ணன் கூறுகின்றான்.

நரகம் முதலிய கஷ்டங்களைக் கொடுக்கக்கூடிய கர்மங்களைப் பாபமென்கிறோம். ஸ்வர்க்கம் முதலிய ஸுகங்களைக் கொடுக்கவல்ல செயல்களைப் புண்ணியமென்கிறோம். ஆனால் மோக்ஷத்தை விரும்புமவனுக்கு இந்தப் புண்ணியத்தையும் பாப வரிசையில் தான் சேர்க்கவேண்டும். பரமபதத்தையும் ஸ்வர்க்கத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது ஸ்வர்க்கத்தை நரகமென்றே கூறும்படி அவ்வளவு தாழ்ந்ததாகவன்றோ உள்ளது! மோக்ஷத்தை விரும்புமவனுக்கு அந்தப் புண்ணியங்களும் ஸம்ஸார பந்தத்தைத் தருவதாலே பாபங்களாகத் தாமே ஆகின்றன. ஆகவே இந்தப் புண்ணியங்களும் கழிக்க வேண்டிய பாபங்களில் தாமே சேருகின்றன!

26.5.1 மூவகை ஸுகம் – அவற்றின் சாதனம்

சேதநன் அநுபவிக்கும் ஸுகமென்பது மூன்று வகைப்படும்.

Scanned with CamScanner

(1) அசேதநப் பொருள்களின் அநுபவம். இவ்வுலகில் இந்தச் சரீரத்துடன் அநுபவிக்கும் ஸுகங்களெல்லாம் அசேதநப் பொருள்களை அநுபவிப்பது தானே (2) ஆத்மாவை அநுபவித்தல். சரீரத்தின் தொடர்பின்றித் தனித்து நிற்கும் ஆத்மாவை அநுபவித்தலே இந்த அநுபவம். இதுவே கைவல்யம் எனப்படும். (3) எம்பெருமானைப் பரமபதத்தில் அநுபவித்தல் என்பன. இவற்றுள் முதலாவதை அநுகூலம் என்று சொல்லலாம். உணவுப் பண்டங்கள் முதலிய அசேதநப் பொருள்களைப் பயன்படுத்தும் போது அந்த அநுபவம் இனியதாகத்தானே உள்ளது. இரண்டாவதை அதற்கு மேம்பட்ட அநுகூலம் என்னலாம். சரீர ஸம்பந்தமற்ற தனித்த ஆத்மாவை அநுபவிக்கும் போது உலக ஸுகங்களைக் காட்டிலும் சிறந்தாய்த் தோன்றுமே! மூன்றாவதை எல்லாவற்றினும் மேம்பட்ட பெரிய ஸுகம் எனலாம். பரமபதத்தில் எம்பெருமானை அநுபவித்தலை ஒத்ததோ அதற்கு மேம்பட்டதோ ஒரு ஸுகம் கிடையாதே!

இந்த மூன்று ஸுகங்களின் தரத்துக்கு ஏற்றவாறு இதற்குச் சாதனமான செயல்களையும் மூவகையாய்ப் பிரிக்கலாம். ஸுகத்தைத் தருவது, அதிக ஸுகத்தைத் தருவது, அளவற்ற ஸுகத்தைத் தருவது என்று. இம்முறையைக் கொண்டு ஆராயும் போது மிக உயர்ந்த பலனாகிய மோக்ஷத்தை விரும்புமவனுக்கு நடுத்தரத்தில் உள்ள பலனாகிய கைவல்யத்துக்குச் சாதனங்களான புண்ணியங்களும் இழிவான உலகப் பயன்களுக்குச் சாதனமான புண்ணியங்களும் கூடப் பாபச் செயல்களாகத் தாமே ஆகும்! ஒரு செயல் தர்மமாவதும் அதர்மமாவதும் அந்த அந்த அதிகாரியைப் பொறுத்தது தானே! ஆத்மாவை அநுபவித்தலாகிய கைவல்யத்தை விரும்புமவனுக்கு அதன் சாதனம் தர்மமாகும். 'எம்பெருமான் திருவடியில் ஈடுபட்ட உள்ளமுடையவன் வேறு எதையும் விரும்பமாட்டான்' என்று ஆளவந்தார் அருளிச் செய்தபடி மோக்ஷத்தை விரும்புமவன் ஸ்வர்க்கம் கைவல்யம் முதலியவற்றை உள்ளத்தால் நினைக்கவும் மாட்டானே!

26.5.2 கைவல்யமே மோக்ஷம் என்ற வாத கண்டநம்

ஒரு கேள்வி: ஸம்ஸார பந்தம் அற்றுத் தனித்து நிற்கும் ஆத்மாவை மட்டும் அநுபவிக்கும் இன்பத்தையே மோக்ஷம் என்று சில இடத்தில் கூறியிருப்பது உண்டே! அதற்குக் கைவல்யம் என்று

பெயரிட்டு அதனிலும் மோக்ஷத்தை வேறுபடுத்திப் பேசுவது எவ்வாறு பொருந்தும்!

விடை : அந்த ஆத்மாவின் அநுபவம் கைவல்யமாக மட்டும் ஆகுமேயன்றி மோக்ஷமாகாது. மோக்ஷத்தில் ஜீவனுக்குக் கர்மஸம்பந்தம் சிறிதும் இருக்காதே! ஆத்மாவை அநுபவிப்பவனுக்கு மோக்ஷத்தில் பரிபூர்ணமாய் எம்பெருமானை அநுபவிக்கும் பாக்யத்தை இழக்கச் செய்யும் கர்மம் ஒட்டிக் கொண்டிருக்கின்றதே! இப்படி இருக்க, கைவல்யத்தையே மோக்ஷமென்று சிலர் சொல்வதற்குக் காரணம் கைவல்யத்தோடு மோக்ஷம் மிக நெருக்கம் உடையது என்பதாயிருக்கலாம். அதாவது - கைவல்யத்தை அநுபவிப்பவனுக்குப் பின் அதனிலும் மேம்பட்ட மோக்ஷத்தில் ஆசை உண்டாகி அதற்கு உரிய உபாஸநத்தைச் செய்தால் ஆத்மாநுபவம் முடிந்தவுடன் மோக்ஷத்தைப் பெறுகின்றான். இப்படி இவை இரண்டும் மிக நெருங்கியவை தாமே! மேலும் கைவல்யத்தினும் மேம்பட்டது மோக்ஷம் ஒன்று தானே! முதற்படிக்கு அடுத்த படியில் உள்ளதை முதற்படியிலே வைத்துப் புகழ்வது உலகத்திலும் உண்டே! இவற்றையெல்லாம் உள்ளத்துக் கொண்டு கைவல்யத்தையே மோக்ஷமெனக் கூறியிருக்கலாம்.

26.5.3 பின்னும் சில பாபங்களும் விடுவிப்பனவற்றில் அடங்குதல்

எல்லாப் பாபங்கள் என்று சொல்லியவற்றில் இன்னும் சில பாபங்களையும் அடக்கலாம். வேறு வழியின்றித் தவிர்க்க முடியாமல் சில பாபங்களைச் செய்தே தீர வேண்டிய சூழ்நிலை வரலாம். அல்லது ஒரு காரியத்தைச் செய்யத் தனக்குத் தகுதி, இல்லாமலிருக்க, தகுதி இருப்பதாய் பிரமித்துக் கொண்டும் சில காரியங்களைச் செய்திருக்கலாம். அவையும் மோக்ஷத்தை விரும்புமவனுக்குத் தடையாய் நிற்பவை தாமே! ப்ரபத்தி செய்தவனுக்கு விடுவிக்க வேண்டிய எல்லாப் பாபங்களில் இவைகளும் சேர்ந்துவிடுகின்றன என்று அறிக.

26.5.4 ப்ரபந்நனிடம் பாபங்கள் ஒட்டுவதில்லை - உண்மைக் கருத்து

ப்ரபத்தி செய்தவன் ப்ரபத்திக்குப் பிறகு செய்யும் பாபங்கள் அவனிடம் ஒட்டமாட்டா என்று ப்ரமாணம் கூறுகின்றது. இதற்கு

Scanned with CamScanner

ப்ரபந்நன் அறியாமல் செய்ய நேரும் பாபங்கள் அவனிடம் சேருவதில்லை என்றே கருத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறன்றி வேண்டும் என்றே தெரிந்து செய்யும் பாபங்களும் அவனைச் சேருவதில்லை என்று பொருள் கொண்டால் ஸம்ஹிதைகளில் உள்ள வசநங்களுக்கு முரண்பாடு வரும். ஸம்ஹிதைகள் ப்ரபந்நனைப் பற்றிக் கூறும்போது வேதம் கூறும் ஆசார அநுஷ்டாநங்களை மீறுதற்கு மனத்தால் கூட நினைக்கக் கூடாதென்றும் பாபம் நேர்ந்தால் உடனே பிராயச்சித்தம் செய்து தீர வேண்டுமென்றும் கூறுகின்றனவே! பாபங்கள் ப்ரபந்நனிடம் ஒட்டமாட்டாவென்றால் இவையெல்லாம் எதற்கு? பக்தி யோகம் செய்பவனுக்கும் இந்த வரையறை உண்டே! பாபச் செய்கையைக் கைவிடாதவனுக்குப் பக்தி யோகம் நிறைவேறாதென்றன்றோ உபநிடதம் கூறுகின்றது. ஆகவே ப்ரபந்நனுக்கு அறியாமல் நேரும் பாபங்கள் அவனைச் சாரா என்பதுவே ப்ரமாணங்களுக்கு முரண்படாத முடிவு என்று அறிக.

26.5.5 ப்ரபத்திக்குப் பின் சீர்குலைந்தவனது கதி

ஒரு முக்கியமான விஷயம்: ப்ரபந்நன் ஒருவனுக்குத் தகாத விஷயங்களில் ஆசை - அதைத் தடை செய்பவர்களிடம் பகைமை - சாஸ்த்ரங்கள் மறுத்த போகங்களில் ஆசை முதலிய குற்றங்கள் ஏற்பட்டு அவற்றால் அவன் கெட்டு விடுகின்றான். ஆனால் இத்தனை குற்றங்களின் நடுவிலும் அவன் எம்பெருமானையன்றி வேறு தெய்வத்தை நாடாதவனாயுள்ளான். அவனது நிலை என்ன? என்று ஒரு கேள்வி. ஸமாதாநம் - அவன் எம்பெருமானுக்குத் தொண்டு புரியவும் ஆசார்யனுக்குப் பணிவிடை முதலியன செய்யவும் தகுதியற்றவனாகிவிடுகின்றான். ஓர் உவமானத்தைக் கொண்டு பார்ப்போம் - ஒரு பெண் கணவனிடம் மிக்க பக்தியுடன் நடந்து கொள்ளும் பதிவ்ரதைதான். ஆனால் ஆசாரம் முதலியவற்றில் தவறியதால் அசுத்தையாகிவிடுகின்றாள். அவள் கதி என்ன? அவள் நாயகனுக்கு மனைவி என்ற உரிமையை இழக்கவில்லையானாலும் தன் கணவனுக்குப் பணிவிடை செய்வதற்கும் மாமனார் மாமியார் முதலிய பெரியோர்களை உபசரிப்பதற்கும் உள்ள தகுதியை இழந்துவிடுகின்றாள். அவள் திருந்திக் கணவனது மன்னிப்பைப் பெற்றால் தூய்மை

பெற்றுவிடுகின்றாள். அவ்வாறே கெட்டிருந்த ப்ரபந்நனும் தன் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டு திருந்தினால் இழந்த உரிமைகளைப் பெற்று விடுகின்றானென்று அறிக.

26.5.6 ப்ரபந்நனுக்கு நேரும் பாபம் - அதன் பரிஹாரம்

எம்பெருமானுக்கும் ஒரு வறுமை உண்டு. அதாவது தனக்கு ஒத்தவரையும் மேம்பட்டவரையும் இருக்கப் பெறாததே அந்த வறுமை. அவ்வாறே ஆசார்ய பக்தி இல்லாதவனுக்கும் ஒரு வறுமை உண்டு. அவனுக்கு ஜ்ஞாநம் இல்லாததே அந்த வறுமை. நல்ல விவேகம் பெற்றுச் சாதுரியத்துடன் ப்ரபத்தி செய்தவனுக்கும் ஒரு வறுமையுண்டு. அதாவது - எவ்வகைக் குற்றமும் அவனிடம் இல்லாதிருப்பதுவே அந்த வறுமை. இத்தகைய ப்ரபந்நன். தெரிந்து பாபம் செய்ய மாட்டான். ஆனால் பூர்ணமான ஞானம் பெறாமல் ஸாதாரண மனிதராய் இருந்து ப்ரபத்தி செய்தவர் களுக்குச் சில பாபங்களைத் தெரிந்தே செய்ய வேண்டி வரலாம். அப்படி நேரும்போது அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு மறுபடி பிராயச்சித்த வடிவில் ஒரு ப்ரபத்தி செய்துவிட்டால் அந்தப் பாடங்கள் கழியும். இந்தப் பிராயச்சித்தத்தைச் செய்து கொள்ளாத முரடர்களாய் இருந்தால் அவர்களுக்கும், நன்மையே புரிய விரும்பும் எம்பெருமான் அவர்களுக்கு ஏற்ற தண்டனைகளைக் கொடுத்துத் தூயராக்கி விடுவான்.

26.5.7 புத்திபூர்வ பாபங்களும் தாமே கழியும் என்ற வாதம் - ஸமாதாநம்

சிலர் கூறும் வாதம் - சேதநர்கள் ப்ரபத்தியைச் செய்த பின்பு புத்தி பூர்வமாய்ப் பாபங்கள் செய்தாலும் அவற்றையும் எம்பெருமான் கழித்து விடுவான். ஏனெனில் - ஸகல பாபங்களி லின்றும் விடுவிப்பதாக அன்றோ சரமசுலோகத்தில் கண்ணன் கூறியுள்ளான் என்று. அவர்கள் வாதத்தையும் ப்ரபத்தி சாஸ்த்ரத்துக்கு முரண்படாமல் ஸமரஸமாக்கிவிட முடியும். அதாவது - ப்ரபத்திக்குப் பின் தெரிந்து செய்யும் பாபங்களைக் கீழே கூறியபடி ஏற்ற பிராயச்சித்தம் செய்யும்படி செய்து பகவான் அவற்றைக் கழித்து விடுவான். அதைச் செய்யாத முரடர்களுக்குச் சிறிய தண்டனையைக் கொடுத்து அநுபவிக்கச் செய்து

Scanned with CamScanner

அப்பாபங்களைப் போக்கி விடுவான் என்ற கருத்தைக் கொள்ள வேண்டும். இப்பொழுது அவர்கள் வாதமும் பொருந்தி விடவில்லையா? இது தான் ஈச்வரன் ப்ரபந்நனை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கும் முறையென்று உணர்க.

26.5.8 ப்ரபந்நன் இச் சரீர முடிவில் மோக்ஷம் பெறுதல்

ஸம்ஸார மண்டலத்தில் உள்ள சேதநன் அளவற்ற பெரும் பயனான மோக்ஷாநந்தத்தைப் பெறாது இழந்து நிற்கின்றான். இவ்வுலகில் எல்லையற்ற ஸம்ஸார துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். அந்தத் துக்கங்களை அவனால் தாங்க முடியவில்லை. அதனால் சோகம் மிகுத்து நிற்கின்றான். மோக்ஷம் பெற்றால்தான் இக்கஷ்டங்கள் நீங்கும். மோக்ஷம் பெறுவதற்காகப் பக்தி யோகத்தைச் செய்யலாமா? தகுதி இருந்தால் செய்யலாம். ஆனால் விரைவில் மோக்ஷம் பெற முடியாதே! பக்தி யோகம் - எப்பொழுது பூர்த்தியாகுமோ? எப்பொழுது மோக்ஷம் பெற முடியுமோ? அதனால் ப்ரபத்தியைச் செய்கின்றான். அதனால் முன்பு குவிந்திருந்த எல்லாப் பாபங்களும் தொலைந்து விடுகின்றன. இந்தச் சரீரம் இருக்கும் வரை வேண்டிய கர்மத்தின் பகுதி தவிர, பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மங்களில் பெரும் பகுதிக்குக்கூட இவன் செய்த ப்ரபத்தி ப்ராயச்சித்தமாக ஆகி அதுவும் தொலைந்து விடுகின்றது. இதைக்கொண்டுதான் சரம சுலோகத்தில் நீ சோகிக்க வேண்டாமென்று கூறினான் கண்ணபிரான். எல்லாப் பாபங்களையும் கழிப்பேன் என்னும் போது பலன் கொடுக்கத் தொடங்கிய பாபத்தையும் சேர்த்துத் தானே கழிப்பதாய்க் கூற வேண்டும் அப்பொழுது தானே எல்லாப் பாபங்கள் என்ற சொல்லின் பொருத்தம் புலனாகும்! மேலும் பக்தியோகத்துக்குப் பலன் கொடுக்கத் தொடங்கிய பாபத்தைக் கழிக்கச் சக்தி இல்லையென்றும் ப்ரபத்தி அதையும் கழிப்பதால் பக்தியினும் ப்ரபத்தி சிறந்ததென்றும் ப்ரமாணம் குறிப்பிட்டுக் கூறுகின்றது. இப்படி பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மத்தையும் ப்ரபத்தி ஒழித்து விடுவதால் அடுத்த பிறவிக்கு வேண்டிய கர்மம் இல்லையாதலின் ப்ரபந்நனுக்கு இவ்வுலகில் மறுபிறவி இல்லாமல் போகிறது. ஆழ்வாரும் தன் திருவடிகளில் ப்ரபத்தி செய்தவனுக்கு அவன் இறந்தவுடன் எம்பெருமான் வைகுந்தம்

கொடுப்பதாய் அருளியபடியால் இந்தச் சரீரத்துக்குப் பின் மறு சரீரம் - இல்லையென்று நன்றாய்ப் புலப்படுகின்றதே!

ப்ரபந்நர் த்ருப்தர் - ஆர்த்தர் என இருவகைப்படுவர். இவ்வுலகில் மறுபிறவியை விரும்பாது இச்சரீரமுடிவில் மோக்ஷம் பெறவிரும்பி ப்ரபத்தி செய்பவர் த்ருப்தர் எனப்படுவர். இனி க்ஷணகாலமும் இவ்வுலகில் வாழ விரும்பாது மோக்ஷத்தை உடனே பெற விரும்பி ப்ரபத்தி செய்பவர் ஆர்த்தர் எனப்படுவர். இருவகையினருக்கும் இச்சரீரம் கழிந்தவுடன் மோக்ஷம் பெறுவது என்பது ஸமமே. த்ருப்த ப்ரபந்நர்கள் பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மத்தில் இச்சரீரம் உள்ளவரை உள்ள கர்மங்களின் பகுதியை அதன் பலனை அனுபவித்துக் கழிக்கின்றனர். ஆர்த்தப்ரபந்நர்கள் ஆர்த்த ப்ரபத்தியின் பெருமையால் அந்த க்ஷணமே கர்மங்கள் அனைத்தும் ஒழியப்பெற்று மோக்ஷம் பெறுகின்றனர். இருதிறத்தாருக்கும் பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மங்கள் கழிந்தவுடன் மோக்ஷம் என்பதில் வேறுபாடு இல்லை.

26.6 'மோக்ஷயிஷ்யாமி' – பொருள் விளக்கம்

இப்படி கீழே சேதநனுக்கு எம்பெருமானை அடையத் தடை செய்து வந்த கர்மங்களைக் காட்டிப் பின் அவற்றைத் தான் கழிக்கும் வகையைக் கண்ணன் அருளிச் செய்கின்றான்.

மோக்ஷயிஷ்யாமி - விடுவிக்கக்கடவேன். விடுவிப்பது என்றால் என்ன? பாபம் செய்தவர்களைப் பின்னும் இந்த ஸம்ஸாரக் கடலுள் அழுந்திக் கிடக்கும்படி செய்வேன் என்று முன்பு செய்த ஸங்கல்பங்களையெல்லாம் இப்பொழுது விட்டு விடுவேன் என்பதே கருத்து. இந்த ஸங்கல்பங்களை எல்லாம் நீ செய்த ப்ரபத்தியால் சீற்றம் தணியப் பெற்ற நான் விட்டுவிட முடியும். ஆனால் என்னால் விட முடியாத ஸங்கல்பம் ஒன்று உண்டு. அதாவது - என்னைச் சரணமடைந்தவனுக்கு அபயம் அளிப்பதையே விரதமாகக் கொண்டுள்ளேனென்று முன்பு இராமாவதாரத்தில் கூறினேனே! அந்த ஸங்கல்பத்தை மட்டும் என்னால் ஒரு நாளும் விட முடியாது என்ற கருத்தையும் இங்கு வெளியிடுகின்றான்.

Scanned with CamScanner

26.6.1 பாபங்களினின்று விடுவிக்கும் முறை

ப்ரபந்நன் விரும்பும்போது மோக்ஷம்: எல்லாப் பாபங்களினின்றும் உன்னை விடுவிக்கின்றேன் என்று கண்ணன் கூறியது அருச்சுனனுக்குக் கண்ணன் உபதேசிக்கும் சூழ்நிலையில், பாபங்களினின்று விடுவிப்பதென்பது சேதநனுக்கு அளிக்கும் ஒரு பயன். இந்தப் பயன் அதற்கு உபாயத்தைச் செய்தால்தான் வரும். ஆதலின் நீ ப்ரபத்தியை என்னிடம் செய்து விட்டால் அதற்கு அடுத்த க்ஷணம் முதலாக எந்த ஸமயத்தில் நீ விரும்புகின்றாயோ, அந்த ஸமயத்திலேயே உனக்கு விரோதியாக நின்ற பாபங்களினின்றும் சிறிதும் மீதி வைக்காமல் விடுவிக்கக் கடவேன் என்று முடிவு கூறியதாயிற்று.

ப்ரபத்தி செய்தவனை எம்பெருமான் பாபங்களினின்று விடுவிக்கும் முறை வருமாறு: கர்மங்கள், ஸஞ்சிதம் - ப்ராரப்தம் என இரு வகைப்படும். பின் ஒரு காலத்தில் பலன் கொடுப்பதற்காகத் தனியாய்க் குவிந்து சுமையாகக் கிடப்பது **ஸஞ்சிதம்** எனப்படும்; பயன் கொடுக்கத் தொடங்கிவிட்ட கர்மம் ப்ராரப்தம் எனப்படும். ப்ரபத்தியைச் செய்ய ஆரம்பித்தவுடனேயே முன் செய்த பாபகர்மங்களில் பலன் கொடுக்கத் தொடங்காமல் குவிந்து நிற்கும் ஸஞ்சிதங்களெல்லாம் கழிந்துவிடும். பலன் கொடுக்கத் தொடங்கிய ப்ராரப்த கர்மத்திலும் இங்கு இந்தச் சரீரம் இருப்பதற்கு இசைந்த காலத்துக்கு வேண்டிய அம்சம் தவிர அவன் ஏற்றுக் கொள்ளாத - அடுத்த பிறவியைத் தரவல்ல கர்மத்தின் பகுதியெல்லாம் தொலையும். ப்ரபத்திக்குப் பின் சேதநன் தன் நினைவின்றிச் செய்த பாபங்களும் அவனிடம் ஒட்டாமல் கழிந்துபோம். இந்த முறையில்தான் அவனைப் பாபங்களினின்று விடுவிப்பேன் என்று ஸங்கல்பிக்கிறான் எம்பெருமான். ப்ரபந்நன் வேண்டுமென்றே தெரிந்து செய்யும் பாபங்களையும் ஏற்ற பிராயச்சித்தங்களைச் செய்ய வைத்தோ அதற்கு இணங்காத முரடனுக்குத் தண்டனைகள் கொடுத்தோ ஒழித்து விடுகின்றான்.

ப்ரபந்நன் கர்மங்களினின்று விடுபடும் ஸமயம் எது? - விளக்கம்: ப்ரபந்நன் ப்ரபத்திக்கு முன்பு செய்த பாபங்கள் ஒழிந்து விடுவதாகவும் ப்ரபத்திக்குப் பின் அறியாமல் செய்த பாபங்கள் அவனிடம் ஒட்டமாட்டா என்றும் சாஸ்த்ரம் கூறுகின்றதே! அந்தப் பாபங்கள் அவனுக்குப் பலனைக் கொடுக்காதிருந்தாலும் அவனோடு அவை தொடர்பற்றுப் போவது எப்பொழுது? என்று ஒரு கேள்வி. இதற்கு விடை - ப்ரபந்நனான ஜீவன் இந்தச் சரீரத்தை விட்டுப் புறப்படும்போது அந்தப் பாபங்களை அடியோடு எம்பெருமான் ஒழிக்கின்றான். பாபங்களைப்போல் இம்மைப் பயன்களைத் தரவல்ல புண்யங்களும் சேதநன் மோக்ஷம் பெறத் தடை செய்வனவாதலின் பாபங்களைப்போல் அத்தகைய புண்யங்களையும் சரீரம் விடும் போது சேதனோடு தொடர்பறுக்கின்றான் ஈச்வரன்.

புண்ய பாபங்களின் பங்கீட்டு முறை: ப்ரபந்நன் சரீரத்தை விடும் போது அவனோடு துவக்கறுக்கும் புண்யங்கள் அவனுக்கு நண்பர்களிடமும் பாபங்கள் அவனுக்கு எதிரிகளிடமும் போய்ச் சேருவதாகச் சாஸ்த்ரம் கூறுகின்றது. இதன் கருத்து என்ன? ப்ரபந்நனுடைய புண்ய பாபங்களை அவனுடைய மரண காலத்தில் அவனுக்கு நண்பர்களும் எதிரிகளும் முறையே பங்கிட்டுக் கொள்கின்றனர். ப்ரபந்நனுக்கு எப்பொழுதோ பலன் தருவதற்காக ப்ரபத்திக்கு முன் குவிந்து கிடக்கும் ஸஞ்சிதம் எனப்படும் புண்யங்களும் பாபங்களும் உண்டே! அவையெல்லாம் ப்ரபத்தியால் கழிந்துவிட்டதாய்க் கூறினோமே! கழிதல் என்றால் பலன் கொடுக்காமல் கிடப்பது என்று தானே பொருள் அவை அனைத்திலும் அவன் மரிக்கும் போது புண்யப் பகுதியை அவன் நண்பர்களும், பாபப் பகுதியை எதிரிகளும் பங்கிட்டுக் கொள்கின்றனர். அங்ஙனமே ப்ரபந்நன் ப்ரபத்திக்குப் பின் அறியாமல் செய்த பாபங்கள் ஒட்டாதனவென்று சொன்னோமே! அவற்றிலும் புண்யங்கள் நண்பர்களிடமும் பாபங்கள் எதிரிகளிடமும் போய்ச் சேருகின்றன. இப்படி புண்யங்களையும் பாபங்களையும் இருதிறத்தாரும் பங்கிட்டுக் கொள்ளும்படி நேருவது ப்ரபந்நனுக்கு நண்பராகவும் எதிரியாகவும் இருப்பதன் விளைவே என்று அறிக.

புண்ய பாபங்களின் பங்கீடு என்பது என்ன? - விளக்கம் : ஒருவன் செய்த புண்ய பாபங்களை மற்றொருவன் பங்கிட்டுக் கொள்வதென்றால் என்ன? ஸமாதாநம் - புண்யமென்பது நல்ல

Scanned with CamScanner

காரியத்தைச் செய்பவன் விஷயத்தில் எம்பெருமானுக்கு ஏற்படும் அநுக்ரஹ ஸங்கல்பமேயாகும். பாபமென்பது தீய செயலைச் செய்பவன் விஷயத்தில் எம்பெருமானுக்கு ஏற்படும் நிக்ரஹ ஸங்கல்பமேயாகும். இப்படி புண்யத்தினால் ப்ரபந்நன் விஷயத்தில் எம்பெருமான் கொண்டுள்ள அநுக்ரஹ ஸங்கல்பம் போன்ற ஸங்கல்பத்தை அவன் நண்பர்கள் விஷயத்தில் செய்கின்றான். பாபத்தால் ப்ரபந்நன் விஷயத்தில் எம்பெருமான் கொண்டுள்ள நிக்ரஹஸங்கல்பம் போன்ற ஸங்கல்பத்தை ப்ரபந்நனுக்கு எதிரிகள் விஷயத்தில் கொள்ளுகின்றான். இதுதான் ப்ரபந்நனுடைய புண்ய பாபங்களை அவனுடைய நண்பர்களும் எதிரிகளும் பங்கிட்டுக் கொள்ளும் முறையாகும்.

ஒரு ரஹஸ்யம் - ப்ரபத்திக்கு முன் ஒருவன் ஸ்வர்க்கம் முதலிய பலனுக்காக ஏதாவது புண்ணியம் செய்திருந்தால் அந்தப் புண்யம் மோக்ஷத்தையே விரும்பி ப்ரபத்தி செய்தவனான நன்பனிடம் சேராது. அவனுக்கும் அந்தப் புண்யம் மோக்ஷத்துக்குத் தடையாய் இருப்பது தானே!

ஸ்த்தூல - ஸூக்ஷ்ம சரீரங்கள் கழியும் வகை: ப்ரபந்நன் மரிக்கும்போது ஸ்தூலமான சரீரத்தை இங்கேயே விட்டுவிடச் செய்கின்றான் எம்பெருமான். ஸ்தூலமான சரீரத்தினின்று ஜீவன் புறப்படும்போது பூதங்களின் ஸூக்ஷ்ம அம்சங்களுடன் அதாவது ஸூக்ஷ்ம சரீரத்துடன் மட்டும் செல்கின்றான். நடுவில் அக்நி முதலிய தேவர்கள் செய்யும் உபசாரங்களைப் பெற்றுச் செல்ல வேண்டுமே! அதற்காகத் தான் ஸூக்ஷ்ம சரீரம் வேண்டி இருக்கின்றது. இந்த ஸூக்ஷ்ம சரீரம் விரஜா நதிக்குப் போய்ச் சேரும் வரை நிற்கும். இப்படி ஸகலமான தடைகளையும் போக்கி எல்லாத் திரைகளையும் நீக்கி விடுகின்றான். இவ்விஷயங்கள் எல்லாம் ஸ்ரீ பாஷ்யத்தில் 4வது அத்யாயம் 2வது 3வது பாதங்களில் விளக்கமாய்க் கூறப்பட்டுள்ளன.

கர்மங்களெல்லாம் கழிந்த பின் பரிபூர்ண பகவதநுபவம் தானே வருதல் : இப்படி எம்பெருமானை மோக்ஷத்தில் அடைந்து அநுபவிக்கத் தடையாயிருந்த கர்மங்களெல்லாம் தொலைந்த பின்பு ப்ரபந்நனது ஸ்வருபத்துக்கு அவசியம் வரவேண்டிய

பரிபூர்ணமான பகவதநுபவம் தானே வந்து விடுகின்றது. இத்தகைய அநுபவத்தை இவனுக்குக் கொடுக்கும் விஷயத்தில் எம்பெருமான் திருவுள்ளப் போக்கை எல்லாம் வராஹப் பிரானாயிருந்து பூமிப் பிராட்டிக்கு உபதேசித்த இரண்டு ச்லோகங்களிலும் காணலாம். (பின் வரும் ரஹஸ்ய சிகாமணி யென்னும் ரஹஸ்யத்தில் ஸ்ரீதேசிகன் தாமே அந்த இரண்டு ச்லோகங்களின் கருத்தையும் விளக்கியருளியுள்ளார்) இந்த விஷயங்களையெல்லாம் நன்கு அறிந்த ப்ரபந்நன் தன் இஷ்டப்படி மோக்ஷம் பெறுவதில் சிறிதும் ஐயமின்றி நிச்சயத்துடன் வாழ்வான்.

26.7 'மாசுச:' பொருள் விளக்கம்

மேற் கூறியபடி ப்ரபந்நனுக்கு எல்லாப் பாபங்களும் கழிந்து விடுவதால் இனி நீ மகிழ்ச்சியுடன் வாழவேண்டியிருக்க, நீ சோகிப்பதற்கு இடம் இல்லை என்று தேற்றுகின்றான் கண்ணபிரான்.

மா சுச: = வருந்தாதே. இனித் துயரமடைய இடம் இல்லை என்பதற்குக் காரணம் கூறி விளக்குகின்றான் -

(i) ப்ரபந்நன் பாபங்களின் பலனுக்கு அஞ்சி வருந்த வேண்டாம் என்று சுருதியே ஓதுகின்றது.

(ii) ப்ரபத்தியைச் செய்து முடித்த நீ கடினமான பக்தி யோகம் முதலியவற்றைச் செய்து சிரமப்பட வேண்டாம்.

(iii) செய்வதற்கு மிக எளிதாய் வேறு உபாயங்களை எதிர் பாராததாய் விரும்பிய பலனையெல்லாம் தரவல்ல அதிவிலக்ஷணமான உபாயமாகிய ப்ரபத்தி உனக்குச் ஸித்தித்து விட்டது.

(iv) உன் பொறுப்பை ஸமர்ப்பித்து ப்ரபத்தி செய்த நீ இனிச் செய்ய வேண்டிய எஞ்சிய பகுதி எதுவும் இல்லை.

(v) விவேகம் பெற்று ப்ரபத்தி செய்த நீ இனித் தெரிந்து பாபம் செய்ய மாட்டாய்.

Scanned with CamScanner

(vi) தெரிந்தே சில பாபங்கள் செய்ய நேர்ந்துவிட்டாலும் அவற்றுக்கு ஏற்றவாறு சில பிராயச்சித்தங்களைச் செய்து விரைவில் அவற்றை ஒழித்து விடலாம்..

(vii) ப்ரபத்தி செய்த உன்னை நான் காவாது கைவிட்டால் பெரியோர்கள் என்னைப் பழிப்பார்கள். லோகாபவாதமும் எனக்கு வரும். என் நற்குணங்களுக்கு அழிவு வரும். நான் காக்கும் விஷயத்தில் கொண்டுள்ள விரதத்துக்கு முறிவு வரும்.

(viii) உன் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் உலகில் மனிதர் தங்கள் செல்வம் வீடு முதலியவற்றைத் தம் நலத்துக் காகக் காத்துக் கொள்வது போல் என் பயனுக்காகவே உன்னைக்க காக்க முற்பட்டு நிற்கின்றேன்.

இத்துணைக் காரணங்களை நினைத்து நீ மகிழ வேண்டியிருக்க, சிறிதும் நீ சோகம் கொள்ள இடமில்லையென்று தேற்றுகின்றான் கண்ணபிரான்.

26.7.1 ப்ரபத்திக்கு முன்பு சோகம், பின்பு சோகியாமை - அவச்யம்

நீ பரந்யாஸம் செய்வதற்கு முன்பு அநாதி காலமாய் உன் நிலையை நினைத்துச் சோகித்திருக்க வேண்டும். அவ்வாறு சோகியாதிருந்தா யாகில் அது தவறாகும். பரந்யாஸம் செய்து விட்டதாய் நிச்சயித்துக் கொண்டபின் நீ துயரமடையக் கூடாது. அப்படி இப்போது நீ வருந்துவதாயின் ப்ரபத்திக்கு முன்பு சோகியாதிருந்தது போல் இதுவும் ஒரு தவறாகும். இதற்குக் காரணம் சொல்லுகின்றேன். கேள் - ப்ரபத்திக்கு முன்பு நீ செய்துள்ள பாபங்களையெல்லாம் நினைத்து என்ன கதி வருமோ என்று சோகித்திருக்க வேண்டும். அந்தச் சோகம் ப்ரபத்தியைச் செய்வதற்கு ஒரு தகுதியாகும். அப்படி சோகிக்கவில்லையானால் ப்ரபத்தி செய்ய நீ உரியனாகாய். ப்ரபத்தியைச் செய்து ஸகல பாபங்களையும் கழிக்க வல்ல என் அநுக்ரஹத்தைப் பெற்றபின் நீ சோகித்தாயானால் இந்த ப்ரபத்தியின் பெருமையையும் அதில் உனக்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கை முதலியவற்றையும் உன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட என் குணங்களையும் அழித்தவ

னாவாய்' என்கிறான் கண்ணபிரான். இந்த 'மாசுச:' என்ற வாக்யத்தின் பொருள் விளக்கத்தை ஸ்ரீ சரணாகதி கத்யத்தின் முடிவிலே காணலாம்.

26.8 சரம சுலோகத்தின் திரண்ட பொருள்

சரம சுலோகத்தின் திரண்ட பொருள் வருமாறு - 'சேதனே! உன் ஞானம் அற்பமானது. சக்தியும் அத்தகையதே. நீ உயிர் வாழ்வது சிறிது காலமே. மோக்ஷம் பெறுதற்கு விளம்பத்தை நீ பொறுக்காது இருக்கிறாய். மற்ற உபாயங்கள் உன்னால் அறிந்து அநுஷ்டிக்க முடியாதவை. மேலும் அவை வெகுகாலம் கழித்துப் பலன் தருவன. ஆதலின் நீ அவற்றைச் செய்து கொண்டு கஷ்டப்பட வேண்டாம். நான் எல்லோருக்கும் எளியன். ஸகல லோகங்களுக்கும் அடைக்கலமாய் இருப்பவன். அனைத்தையும் காப்பதற்கு வேண்டிய ஸகல குணங்களையும் உடையன். சரணமடைந்தவனிடம் உள்ள குற்றங்களையும் பொருட்படுத்தாத அன்புடையன். நீ என்னை ஒருவனையே உபாயமாகக் கொள். என்னிடம் ஐந்து அங்கங்களுடன் கூடிய பரந்யாஸத்தைச் செய். இதைச் செய்தவுடன் நீ செய்ய வேண்டிய கடமையைச் செய்தவனாகிவிடுவாய். என்னால் காக்கப்பட வேண்டியவனாகி விடுவாய். எனக்கு மிகவும் பிரியனாகி விடுவாய். உன் பொறுப்பு முழுதையும் என்னிடம் ஸமர்ப்பித்துவிட்டாய். எனக்கு உன்னிடம் உள்ள கருணை அளவிடற்பாலதன்று. உன் மீது அருள் பொழிய முற்பட்டுவிட்டேன். எதையும் செய்ய எனக்குச் சக்தி உண்டு. என் சுதந்திரத்துக்குத் தடையே கிடையாது. என் செயலுக்குப் பலனை முக்கியமாய் அடைபவனும் நானேயாவேன். நான் செய்யும் கார்யத்துக்கு என் ஸங்கல்பம் ஒன்றே துணையாகும். உனக்கு உள்ள விரோதி குழு பல்வகைப்பட்டது, அளவற்றது, உன்னால் ஒழிக்க முடியாதது. அதை முழுதும் வேரறுத்து விடுவேன். இனி அது உன்னைத் தொடராது. அந்தத் தடைகள் நீங்கியதும் என்னையும் என்னுடையவற்றையும் உனக்கு அநுபவிக்கத் தந்து உன்னை எனக்குச் சமமான போகமுடையவனாக்குவேன். இவ்வாறு நீ என்னைப் பரிபூர்ணமாய் அநுபவித்தால் அதற்குப் போக்குவீடாக எங்கும் எப்போதும் எந்நிலையிலும் செய்யத்தக்க எல்லா வகைக் கைங்கர்யங்களையும் உனக்குக் கொடுத்து மகிழ்வேன். அதனால்

Scanned with CamScanner

உன்னையும் முழுப்பலனையும் பெற்றவனாக்குவேன். இனி நீ ஒன்றுக்கும் சோதிக்கவேண்டாம் - என்றவாறு.

26.9 ப்ரபத்தி விஷயத்தில் கீதாபாஷ்யம் - கத்யம் - இவற்றில் முரண்பாடு இன்மை

இங்கு ஒரு கேள்வி : இந்தச் சரமசுலோகம் கீதையில் உள்ளது: இதற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்த பாஷ்யத்தில் பக்தி யோகத்துக்கு அங்கமான ப்ரபத்தியை இச்சரம சுலோகம் குறிப்பிடுவதாகத்தானே அருளிச் செய்துள்ளார்! இப்பொழுது அதன் அர்த்தத்தை இங்கு விளக்கும் போது ப்ரபத்தி மோக்ஷத்துக்கு நேர்ச்சாதனமாகச் சொல்லப்பட்டதே! ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளம் இதில் வேறுபடுவதாய்த் தெரிகின்றதே! என்று.

ஸமாதாநம்: இச்சரம சுலோகத்தில் விதித்த உபாயம் ப்ரபத்தி. இந்த ப்ரபத்தி ஸகலமான விரோதிகளையும் போக்க வல்லது. மோக்ஷத்துக்கு உபாயம் இரண்டு உண்டு. பக்தி யோகம், ப்ரபத்தி . அங்கங்களுடன் பக்தி யோகத்தைச் செய்வது மிகக் கடினம். எந்த எந்த இடங்களில் பக்தியோகத்தின் அங்கங்களை நேராகச் செய்ய முடியவில்யை , அந்த அந்த இடங்களில் அந்த அந்த ஸ்தாநத்தில் ப்ரபத்தியைச் செய்துவிட்டால் அது அந்த அங்கங்களைப் பூர்த்தியாக்கிப் பக்தியோகத்தையும் நேர்மை செய்யும். இப்படிச் செய்கிற ப்ரபத்தி அங்க ப்ரபத்தி எனப்படும். மோக்ஷத்துக்கு நேர் சாதனமாக ப்ரபத்தி செய்தால் மோக்ஷத்துக்குத் தடையாயிருந்த கர்மங்கள் முதலியன ஒழிந்து மோக்ஷத்தைப் பெறலாம். இந்த ப்ரபத்தியே ஸ்வதந்த்ர ப்ரபத்தியெனப்படும். ஆகவே பக்தி யோகமாகிய உபாயம் நிறைவேறத் தடையாயிருப்பதை நீக்கும் அங்க ப்ரபத்தியை ஸ்ரீமத் கீதா பாஷ்யத்திலும் மோக்ஷத்துக்குத் தடையான கர்மங்களை ஒழித்து மோக்ஷம் பெறச் செய்யும் ஸ்வதந்த்ரப்ரபத்தியைச் சரணாகதி கத்யத்திலும் ஸ்ரீ பாஷ்யகாரர் விளக்கியருளினார். ஆதலால் இதில் முரண்பாடு எதுவும் இல்லையென்று அறிக.

26.10 அருச்சுனன் கேள்விக்கு மேலும் உபதேசம் - கருணையின் விளைவு

பக்தி யோகம் செய்யச் சக்தியற்றுப் பகவானைச் சரணம் அடைந்தவர்களும் ஸம்ஸார பந்தம் நீங்கப்பெற்று ஸ்ரீவைகுண்டம் சேருவார்கள் என்று ப்ரமாணம் பொதுவாகக் கூறுகின்றது. பாண்டவர்களின் வநவாஸத்தில் எல்லாவுலகுக்கும் தந்தையும் தாயுமாய் விளங்கும் கண்ணனைச் சரணமடையும்படி குறிப்பிட்டே மார்க்கண்டேயர் பாண்டவர்களுக்கு உபதேசிக்கின்றார். இந்த இரண்டு ஆதாரங்களையும் கொண்டு அருச்சுனன் சக்தியும் கருணையும் உடையனான சிறந்த புருஷனிடம் சரணாகதி செய்தால் அது பலனைக் கொடுத்தே தீருமென நிச்சயம் கொண்டான். உடனே போர்க்களத்தில் கண்ணனிடம் சரணம் அடைந்தான். சிஷ்யனாய் ப்ரபத்தி செய்த தனக்கு நன்மையை உபதேசிக்கும்படி பிரார்த்தித்தான். கலங்கி நின்ற அருச்சுனன் ஞானத்தைப் பெறுவதற்கே கண்ணனிடம் ப்ரபத்தி செய்தான். கண்ணபிரானுக்கு அவனிடம் விசேஷமான கருணை பெருகியது. அவன் ஞானம் பெறுதற்காகச் செய்த ப்ரபத்தியே பக்தியோகத்தை நடத்துவிக்கும் அங்கமென்று முதலில் சொல்லிப் பின் அந்த ப்ரபத்தியே மோக்ஷத்துக்கும் ஸ்வதந்த்ரமான ஸாதநமாகும் என்றும் உபதேசித்தருளினான். அருச்சுனன் தனக்கு நன்மையை உபதேசிக்க வேண்டுமென்று பொதுவாகத்தான் கேட்டான். அந்தக் கேள்வியைக் கண்ணன் தன் அளவற்ற கருணையாலே எல்லாரும் செய்யக் கூடியதாய் ஒரு முறையே செய்ய வேண்டியதாய் மிகச் சிறந்ததான ப்ரபத்தி என்னும் உபாயத்தை உபதேசிக்கும் அளவுக்குக் கொண்டுவிட்டுத் தலைக்கட்டியருளினான்.

26.11 ரஹஸ்யங்கள் மூன்றிலும் தெளிவு அவசியம்

இப்படி திருமந்திரம் - த்வயம் - சரமசுலோகம் என்னும் மூன்று ரஹஸ்யங்களின் விசேஷ அர்த்தங்களையெல்லாம் ஆசார்யனிடம் கேட்டுத் தெளியவேண்டும். இவ்வாறு தெளிவு பெற்ற பின்பும் அவற்றுடன் தொடர்புள்ள பல விஷயங்களையும் கற்று உணர வேண்டும். இதுவும் எம்பெருமானுக்குச் செய்யும்

Scanned with CamScanner

கைங்கர்ய வகுப்பிலேயே சேரும். ஆசார்யனிடம் கேட்டுத் தெளிவு பெறாதவன் பின் கற்பதெல்லாம் தெளிவு பெறச் சாதனமாகும். இந்த ரஹஸ்யங்களின் அர்த்தத்துக்குத் தொடர்பற்ற பல விஷயங்களைக் கற்பதெல்லாம் தனது நல்வாழ்வுக்குச் சாதனமாகாதாதலின் தனது அறிவைக் காட்டிக் கொள்வதற்கு மட்டும் பயன்படும் செயலாகும்.

சரமச்லோகாதிகாரம் முற்றும்.

ஸாரஸாரம் முற்றும்



'ஓதி நாமம் குளித்துச்சி தன்னால், ஒளிமாமலர்ப் பாதம் நாளும் பணிவோம் நமக்கே நலமாதலின்' என்று கலியனருளிய தர்ப்பசயன ராமன் திருப்புல்லாணியில்

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

अभयप्रदान सारः

அபயப்ரதாந ஸாரம்

जयत्याश्रितसंत्रासध्वान्तविध्वंसनोदयः ।
प्रभावान् सीतया देव्या परमव्योमभास्करः ।।

प्रायः प्रपदने पुंसां पौनः पुन्यं निवारयन् ।
हस्तः क्षीरङ्गभर्तुर्मामव्यादभयमुद्रितः ।।

नमस्तस्मै कस्मैचन भवतु निष्किञ्चनजन-
स्वयंरक्षादीक्षासमधिकसमिन्धानयशसे ।
सुराधीशस्वैरक्षणकुपितशापायुधवधू-
दषत्तादुर्जातप्रशमनपदाम्भोजरजसे ।।

---

1. आश्रित - *அடியார்களின்;* संत्रास - *அச்சமென்னும்;* ध्वान्त - இருளை; विध्वंसन - *ஒழிப்பதற்காக;* उदयः - தோன்றியவனாய்; सीतया देव्या - *ஸீதா தேவியால்;* प्रभावान् - *ஒளிமிகுந்தவனாய்;* परम - व्योम - *பரமாகாச மெனப்படும்* ஸ்ரீவைகுண்டத்திற்கு; भास्करः - *ஸூர்யனாய்* விளங்குமவனான இராமபிரான்; जयति - மேம்பட்டு விளங்குகின்றான்.

2. पुंसां - சேதநர்களுக்கு; प्रपदने - *ப்ரபத்தியில்;* पौनः-पुन्यं - *பலகால் செய்தலை;* प्रायः निवारयन् - மறுக்கின்றது போன்றதாய்; अभयमुद्रितः- *அபய முத்ரையுடையதாயுள்ள;* श्रीरङ्गभर्तुः - திருவரங்க நகரப்பனது; हस्तः - (வலத்) திருக்கை; मां - *அடியேனை;* अव्यात् - *காத்தருளவேண்டும்.*

3. निष्किञ्चन-जन - வேறொரு புகல் இல்லாதவர்களை; स्वयं - *தானே முன்னின்று;* रक्षा-दीक्षा - *காப்பதாகிற விரதத்தினால்;* समधिक-समिन्धान- மேன் மேலும் வளருகிற; यशसे - *புகழையுடையவனும்;* सुराधीश - இந்திரனுடைய; स्वैर-क्षणकुपित - *மனம் போனபடி செய்த காரியத்தால்*

Scanned with CamScanner

சோகந்தவிர்க்கும் சுருதிப்பொருளொன்று சொல்லுகின்றோம்
நாகந் தனக்குமிராக்கதர்க்கும். நமக்கும் *சரணாம்*
ஆகண்டலன் மகனாகிய ஆவலிப்பேறிய தோர்
காகம் பிழைத்திடக் கண்ணழிவே செய்த காகுத்தனே (15)

ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும்
உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும்
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்
அஞ்சே லென்று அருள் கொடுப்பன், இதுதான் ஓதும்
இருக்காலு மெழில் முனிவர் நினைவினாலும்
இவையறிவார் செயலுடன் என்னிசைவினாலும்
நெருக்காத நீள்விரத மெனக்கொன்றென்னும்
நெறியுரைத்தார் நிலையுணர்ந்து நிலைபெற்றோமே (16)

ப்ரபந்த - அவதாரம்

(ஸ்ரீமத் ராமாயணம் அவதரித்தலை விளக்கும் அதிகாரம்)

1 ஸ்ரீமத் ராமாயணம் : அவதாரம், வேதார்த்தங்களின் விளக்கமாதல், குசலவர்களுக்கு வால்மீகி உபதேசித்தல்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे।।[1] (1)

என்கிறபடியே ஸர்வேச்வரன் ஒரு த்ரேதாயுகத்திலே சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்த காலத்திலே, ஸ்ரீவால்மீகி பகவான் ப்ரஹ்ம - புத்ரனான ஸ்ரீ நாரத பகவான் பக்கலிலே இவ்வவதார–वृत्तान्तத்தைसंक्षेपेण[a] ஶ்ரவணம் பண்ணி[b] 'मच्छन्दादेव ते ब्रह्मन्

கோபத்தை அடைந்தவரும்; शापायुध –சாபத்தையே ஆயுதமாகவுடைய (கௌதம முனிவரின்); वधू - மனைவியான அஹல்யையினுடைய; दृषत्ता - கல்லாயிருக்கும்; दुर्जात – கெட்ட தசையை; प्रशमन – போக்கடிக்கும்; पदांभोज – திருவடித் தாமரைகளின்; रजसे – தூள்களையுடைய; कस्मैचन – சிறந்த; तस्मै – அந்த ராமபிரானை; नमः - வணங்குகிறேன்.

உலகில் கடினமான பக்தியோகத்தைச் செய்ய முடியாதவர்கள் தாங்கள் உய்வதற்காகப் ப்ர.பத்தியைச் செய்கின்றனர். அவர்களைத் தானே

முன்வந்து காப்பதாக விரதம் பூண்டுள்ளான் இராமபிரான். அதனால் அவன் புகழ் மிக மிக வளர்ந்து கொண்டே போகின்றது. அவன் பெருமை எல்லையற்றது. கௌதம முனிவரின் மனைவி அகல்யையிடம் தேவேந்திரன் தவறுதலாக நடந்து அவளைக் கெடுத்தான். முனிவருக்குச் சினம் பொங்கியது. அவருக்குச் சாபமே ஆயுதம். இருவரையும் சபித்தார். அகல்யை கல்லாய்க் கிடந்தாள். இராமனது திருவடித் தாமரையின் துகள் பட்டு இழிவான கல்லுருவம் நீங்கிச் சுய உருவைப் பெற்றாள். இப்படி ஒப்பற்ற இராமபிரானை வணங்குகின்றேன். □

a- சுருக்கமாக; b- கேட்டு.

(15) **சோகம் தவிர்க்கும்** - ஸகல துக்கங்களையும் ஒழிக்கக் கூடிய; **சுருதிப் பொருள் ஒன்று** - வேதத்தின் ஸாரார்த்தம் ஒன்றை ; **சொல்லுகின்றோம்**- வெளியிடுகின்றோம். (அதாவது-) **ஆகண்டலன் மகன் ஆகிய** - இந்த்ரனுடைய புத்திரனாகிய; **ஆவலிப்பு ஏறிய** - கர்வம் கொண்ட ; **ஓர் காகம் பிழைத்திட** - ஒரு காகம் குற்றம் செய்ய; (அவன்) உயிர்வாழுமாறு; **கண் அழிவே செய்த காகுத்தனே** - ஒரு கண்ணை மாத்திரம் அழித்த இராமபிரான் ஒருவனே; **நாகம் தனக்கும்** - ஸ்வர்க்கலோகத்திலுள்ள தேவர்களுக்கும் ; **இராக்கதர்க்கும்** - ராக்ஷஸர்களுக்கும்; **நமக்கும்** - (முக்தியை விரும்பும்) நமக்கும்; **சரண் ஆம்** - உபாயமாக ஆவான். (நாகம் - இடவாகுபெயர்.)

(16) **ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும்** - ஒருமுறையே (என்னைச்) சரணமாக அடைந்தவனுக்கும்; **உனக்கு அடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும்** - உனக்குத் தாஸனாக இருக்கின்றேன் என்று அநுஸந்தித்தவனுக்கும்; **அருக்காதே** - சிறிதும் குறைவின்றி ; **அனைவர்க்கும் அனைவராலும்** - ஸகலப்பிராணிகளுக்கும் ஸகலப்ராணிகளாலும்; **அஞ்சேல் என்று அருள் கொடுப்பன்** - பயமடையாமலிருக்கும்படி அபயப்ரதாநம் செய்வேன்; **இது தான்** - இவ்வாறு செய்வது தான்; **ஓதும் இருக்காலும்** - அத்யயநம் செய்யப்படும் வேதத்தாலும்; **எழில் முனிவர் நினைவினாலும்** - பெருமை பொருந்திய முனிவர்களால் செய்யப்பட்ட ஸ்ம்ருதியினாலும், **இவை அறிவார் செயலுடன்** - வேதத்தையும் ஸ்ம்ருதியையும் அறிந்த பெரியோர்களின் அநுஷ்டாநத்தாலும், **என் இசைவினாலும்** - என் உடன்பாட்டாலும்; **எனக்கு நெருக்காத** - எனக்கு நீக்கமுடியாத **ஒன்று நீள் விரதம்** - ஒரு பெரிய வ்ரதம் (ஆகும்). **என்னும் நெறி உரைத்தார்** - என்று சரணாகதி மார்க்கத்தை உபதேசித்த ஸ்ரீராமபிரானுடைய; **நிலை உணர்ந்து** - உறுதியை நினைந்து; **நிலை பெற்றோம்** - (நாம்) அமைதி பெற்றோம்.

(1) **கீதை (4-8) :** நல்லோர்களான அடியாரைக் காப்பதற்கும் பாபிகளை அழிப்பதற்கும் வைதிக தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் இன்னயுக மென்ற வரையறையின்றி அவ்வப்போது அவதரிக்கின்றேன்.

Scanned with CamScanner

प्रवृत्तेयं सरस्वती'[1] என்கிறபடியே ஸரஸ்வதீ -வல்லபனான[a] ப்ரஹ்மாவினுடைய प्रसादத்தாலே[b] प्रवृत्तமான[c] दिव्य - ஸாரஸ்வதத்தை யுடையனுமாய்[d].

रहस्यं च प्रकाशं च यद्वृत्तं तस्य धीमतः ।
रामस्य सहसौमित्रे राक्षसानां च सर्वशः ॥

वैदेह्याश्चापि यद्वृत्तं प्रकाशं यदि वा रहः।
यच्चाप्यविदितं सर्वं विदितं ते भविष्यति ॥

न ते वागनृता काव्ये काचिदत्र भविष्यति।'[2]

என்று ப்ரஹ்மாவாலே दत्तவரனுமாய்[e],

हसितं भाषितं चैव गतिर्या यच्च चेष्टितम् ।[3]
तत् सर्वं धर्मवीर्येण यथावत् संप्रपश्यति ॥

என்கிறபடியே धर्म-वीर्य-प्रसूतமான[f] - दिव्य-चक्षुஸ்ஸாலே[g] இவ் அவதார வ்ருத்தாந்தத்தை 'पाणावामलकं यथा'[4] என்னும்படி நிரவசேஷமாக[h] ஸாக்ஷாத்கரித்து;

'दशेन्द्रियाननं घोरं यो मनोरजनीचरम् ।
विवेकशरजालेन शमं नयति योगिनाम् ॥[5]

என்கிறபடியே முமுக்ஷுவுக்குப்[i] பரமோபகாரகமான இவ்வவதார ரஹஸ்யத்தை வெளியிட்டு லோகத்தை உஜ்ஜீவிப்பிக்கைக்காகத் தன் கருணையினால் प्रवृत्तனாய்[j],

इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ।
बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रतरिष्यति ॥[6]

என்கிற சாஸ்த்ரார்த்தத்தை अनुसंधिத்துக்கொண்டு वेद-उपबृंहण-ஸாபேக்ஷரான[k] अल्प-श्रुतர்[l] பக்கல் இரக்கத்தாலும் அவர்களைப் பற்றி வேதங்களுக்கு உண்டான प्रतारण-भयத்தை[m] शमिப்பிக்கைக்காகவும்[n] 'पुण्यं वेदैश्च संमितम्'[7] என்கிறபடியே நாலு வேதங்களும் ஒரு தட்டிலும் தான் ஒரு தட்டிலுமாக நிற்கிற ஸ்ரீமத் ராமாயணமாகிற ப்ரபந்தத்தை அருளிச் செய்து,

a- நாயகன்; b- அநுக்ரஹம்; c- வெளிவந்த; d- தெய்விக வாக்கையுடையவன்; e- வரமளிக்கப் பெற்றவன்; f- தவத்தின் வலிமையால் ஏற்பட்ட; g- ஞானக் கண் ; h- மீதி இல்லாமல்; i- மோக்ஷத்தை விரும்புமவன்; j- முற்பட்டவன்; k- வேதத்தின் பொருளை விளக்கும் நூலை எதிர் பார்ப்பவர்; l- அரைகுறையாகக் கற்றவர்; m- வஞ்சிப்பார்களென்ற அச்சம் - n- ஒழிப்பதற்காக.

1. श्लोक एव त्वया बद्धो नात्र कार्या विचारणा।
मच्छन्दादेव ते ब्रह्मन् प्रवृत्तेयं सरस्वती ॥

ராமா(1-2-31) : வால்மீகி மஹர்ஷியே! என் இஷ்டப்படியே இந்த வாக்கு உம்மிடமிருந்து தோன்றியது. இராமனுடைய சரிதை முழுவதையும் நீர் இயற்றுவீராக. (ப்ரஹ்மாவின் வார்த்தை)

2. ராமா. (1-2-33-35) : மஹர்ஷியே! இராமன் - லக்ஷ்மணன் - சீதை - அரக்கர்கள் இவர்கள் அனைவருடைய செய்திகளும் உலகத்துக்குத் தெரிந்தனவும் தெரியாது ரஹஸ்யமானவையும் அனைத்தும் உமக்குத் தெரியப் போகின்றன. நீர் செய்யும் காவ்யத்தில் ஒரு சொல் கூடப் பொய் இல்லாமல் விளங்கும்.

3. ராமா (1-3-4): ராமன் - லக்ஷ்மணன் - ஸீதை - தசரதர் - அவர் மனைவியர் - நாட்டு மக்கள் எல்லோருடைய வேடிக்கைப் பேச்சு - செய்திகள் - போக்கு எல்லாவற்றையும் உள்ளவாறே வால்மீகி முனிவன் ஞானக் கண்ணால் கண்டறிந்தான்.

4. ततः पश्यति धर्मात्मा तत् सर्वं योगमास्थितः।
पुरा यत् तत्र निर्वृतं पाणावामलकं यथा ॥

ராமா (1- 3-6) : முன் நடந்த அனைத்தையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் கண்டறிந்தான்.

5. ஈச்வரஸம் (24-343) : பத்து இந்திரியங்களாகிய பத்து முகங்களையுடைய பயங்கரமான மனமென்னும் அரக்கனை விவேகமாகிய அம்புக் கற்றைகளால் அடக்க வேண்டும்.

6. பார (ஆதி - 1 - 293) : இதிஹாஸம் புராணம் இவற்றின் உதவியைக் கொண்டு வேதத்தின் உண்மைப் பொருளை உணரவேண்டும். வேதத்தை அரை குறையாகக் கற்றவன் விபரீதார்த்தம் சொல்லித் தன்னை வஞ்சித்து விடுவானென்று வேதம் அஞ்சுகின்றது.

7. इदं पवित्रं पापघ्नं पुण्यं वेदैश्च संमितम् ।
यः पठेद्रामचरितं सर्वपापैः प्रमुच्यते ॥

ராமா (1-1-98) : புண்யத்தைத் தருவதும் வேதங்களை ஒத்ததுமான ஸ்ரீமத் ராமாயணம்.

Scanned with CamScanner

'चिन्तयामास को न्वेतत् प्रयुञ्जीयादिति प्रभुः'[1] என்கிறபடியே ''யாரைக் கொண்டு இப்பிரபந்தத்தை ப்ரவர்த்திப்பிக்கக் கடவோம்'' என்று சிந்தித்த ஸமயத்திலே குசலவர்கள் வந்து पाद-उपसंग्रहणம் பண்ண[a].

स तु मेधाविनौ दृष्ट्वा वेदेषु परिनिष्ठितौ।
वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः ।।[2]

என்கிறபடியே उचित-अधिकारि-मुखத்தாலே[b] उपबृंहण- ரூபமான இப் ப்ரபந்தத்தை ப்ரவர்த்திப்பித்தான்.

ப்ரபந்த அவதாரம் முற்றும்

அதிகாரம் 2: பரதத்த்வ நிர்ணயம்

(பரதேவதை யார் என்பதை நிச்சயம் செய்து தரும் அதிகாரம்)

2 ஸ்ரீமத் ராமாயணம் நிர்ணயிக்கும் இரண்டு அம்சங்கள்

இப்படி இப் प्रबन्धத்தில் பண்ணுகிற बहुविधங்களான वेद-उपवृंहणங்களில்[d] प्रधानமான उपवृंहणம் श्वेताश्वतरादिகளில் சொல்லுகிற ஸர்வ - சரண்ய - பரதத்த்வ-விஷயமாயும்[c] सर्व-अधिकारமான शरणागति-रूप-परम-हित-விஷயமாயும்[f] இரண்டு வகையாய் இருக்கும்.

3 சிவன் பிரமன் இவர்களைக் காட்டிலும் மேம்பட்டவன் இராமபிரான்

அதில் ஸர்வ சரண்யமான பரதத்த்வத்தை நிஷ்கர்ஷிக்கும் இடத்தில்[g] ஸர்வேச்வரனைப் பற்ற 'ஸமர்' என்றும், 'एकர்' என்றும், 'अधिकர்' என்றும் शङ्कितராயிருப்பார்[h] இருவருண்டு. அவர்கள் யாரென்னில் - ஸர்வேச்வரனுடைய மகனும் பேரனும். அவர்களில் பேரனான ருத்ரனிற்காட்டில் ஸர்வேச்வரன் अधिकன் என்னுமிடத்தை

जृम्भितं तद्धनुर्दृष्ट्वा शैवं विष्णुपराक्रमैः ।
अधिकं मेनिरे विष्णुं देवा: सर्षिगणास्तथा ।।[3]

என்று ஸ்ரீபரசுராம வாக்யத்தாலே வெளியிட்டான். ராவண वध- अनन्तरம் தேவர்கள் பெருமாளைஸ்தோத்ரம் பண்ணுகிற போது ब्रह्मादि-ஸர்வ - தேவர்களுடைய

'कर्ता सर्वस्य लोकस्य श्रेष्ठो ज्ञानवतां वरः।
उपेक्षसे कथं सीतां पतन्ती हव्यवाहने ।।

कथं देवगणश्रेष्ठमात्मानं नावबुध्यसे।
उपेक्षसे च वैदेही मानुषः प्राकृतो यथा।।'[4]

என்கிற வாக்யத்தாலே பெருமாளுடைய सर्वस्मात्[j] परत्वத்தை स्थापित्தான்.

---

a- திருவடிகளைப் பிடித்துப் பணிவிடை செய்தல் ; b- ஏற்ற தகுதி உடையவர் வாயிலாக; c- வேதத்தின் பொருளை விளக்கும் நூல் d- வேதத்தின் பொருளை விளக்கும் நூல்கள் ; e- எல்லோருக்கும் ரக்ஷகனான மேம்பட்ட தத்துவம் ; f - பரம ஹிதம் = மேம்பட்ட உபாயம்; g- நிச்சயம் செய்யுமிடத்தில்; h- ஸந்தேஹத்துக்கு இலக்கு; i - வதத்துக்குப் பின்பு; j - எல்லோரிலும் மேம்பட்டமை.

1 कृत्वाऽपि तन्महाप्राज्ञः संभविष्यं सहोत्तरम्।
चिन्तयामास को न्वेतत् प्रयुञ्जीयादिति प्रभुः।।

ராமா-(1 - 4 - 3) : வால்மீகி இராமாயணத்தை இயற்றி இதைக் கற்று உலகுக்கு வெளிப்படுத்துமவர் யார்?' என்று சிந்தை கொண்டான்.

2 ராமா (1-4-6) : வால்மீகி வந்தடைந்த குசலவர்கள் நல்ல மேதாவிகளாய் வேதங்களை நன்கு பயின்று தேர்ந்தவர்களாயிருப்பதைப் பார்த்து வேதங்களின் பொருள்களை விளக்கவல்ல ஸ்ரீமத் ராமாயணத்தை அவர்களுக்கு உபதேசித்தார்.

3 ராமா (1-75-19) : விஷ்ணுவின் வீர்யத்தால் சிவனது வில் அடக்கப் பட்டதைக் கண்டு அங்குக் கூடியிருந்த தேவர்களும் முனிவர்களும் விஷ்ணுவையே எல்லோரினும் மேம்பட்டவனாகக் கண்டறிந்தார்கள்.

4 ராமா. (6-120-6-6-10) : இராமபிரானே நீ எல்லாவுலகுக்கும் காரணமாய் அறிஞர்களுள் மிகச் சிறந்தவனாய் எங்கும் பரந்து நிற்பவனாயுள்ளாய். அக்னியில் விழுகின்ற சீதையை எப்படி புறக்கணிக்கத் துணிந்தாய்? தேவர் கூட்டங்களுள் நீயே மிகச் சிறந்தவன் என்பதை நீ உணர வில்லையா? பட்டிக்காட்டு மனிதனைப் போல் சீதையை எப்படித்தான் அலக்ஷயம் செய்கிறாயோ?

4. இராமபிரானே பரப்ரஹ்மம் என பிரமனே கூறுதல்

(i) अनन्तरம் தேவர்கள் தவிர ப்ரஹ்மா தனித்து ஸ்தோத்ரம் பண்ணுகிறவிடத்திலும் எதிரி கையாலே விடுதீட்டான கணக்கிலே 'अक्षरं ब्रह्म सत्यं च'[1] என்று ஸர்வ - விலக்ஷணமான[b] பரப்ரஹ்மம் பெருமாள் என்னுமிடத்தையும், 'त्वं त्रयाणां हि लोकानामादिकर्ता स्वयं प्रभुः'[2] என்று ப்ரஹ்ம - லக்ஷணமான जगत्कारणत्वத்தையும்[c], 'जगत् सर्वं शरीरं ते'[3] என்று ஸர்வ - சரீரத்வத்தையும்[d], 'अहं ते हृदयं राम जिह्वा देवी सरस्वती'[4] इत्यादिகளாலே श्रौत-प्रयोगத்தில்[e] पुत्रपरமான[f] 'हृदय' शब्दத்தாலே ப்ரஹ்மாவினுடைய कार्यत्वத்தையும்[g] மற்றுமுள்ள தேவதைகளெல்லாம் विभूति-एकदेशமான[h] படியையும், 'शरण्यं शरणं च त्वामाहुर्दिव्या महर्षयः'[5] என்று ஸர்வ शरण्यத்வத்தையும்[i] பேசினான்.

(ii) 'யாவனொருவன் ப்ரஹ்மாவை முற்பட்ட ஸ்ருஷ்டிக்கிறான்' என்று श्वेताश्वतर-उपनिषத்திலே[6] अधीतமான[j] அர்த்தத்தை உத்தர ஸ்ரீ ராமாயணத்திலே ப்ரஹ்மா தன்னுடைய வாக்யத்தாலே பேசினான். எங்ஙனே என்னில்.

'समयस्ते कृतः सौम्य स्वान् लोकान् परिरक्षितुम् ।
संक्षिप्य च पुरा लोकान् मायया स्वयमेव हि।
महार्णवे शयानोऽप्सु मां त्वं पूर्वमजीजनः।'[7]

என்று தொடங்கி,

'पद्मे दिव्येऽर्कसंकाशे नाभ्यामुत्पाद्य मामपि।
प्राजापत्यं त्वया कर्म सर्वं मयि निवेशितम्।।

सोऽहं संन्यस्तभारो हि त्वामुपासे जगत्पतिम्।
रक्षां विधत्स्व भूतेषु मम तेजस्करो भवान्।।

ततस्त्वमपि दुर्धर्षात् तस्माद्भावात् सनातनात् ।
रक्षार्थं सर्वभूतानां विष्णुत्वमुपजग्मिवान्।।

अदित्या वीर्यवान् पुत्रो भ्रातॄणां हर्षवर्धनः ।
समुत्पन्नेषु कृत्येषु लोकस्यार्थाय कल्पसे।।

स त्वं वित्रास्यमानासु प्रजासु जगतोऽधुना।
रावणस्य वधाकाङ्क्षी मानुषेषु मनोऽदधाः ।।'[8]

---

a-விடுதலைச் சீட்டுப் பெறுதல்; b - எல்லோரினும் வேறான பெருமையுடைய c- உலகுக்கு முதற்காரணமாயுள்ளமை; d- எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டமை; e - வேதத்தின் சொல்முறை; f- புத்திரன் என்ற பொருள் கொண்ட; g - அவனால் தோன்றினமை ; h - ஆளப்படும் பொருள்களின் ஒரு சிறு பகுதி ; i- ரக்ஷிக்கும் தன்மை ; j - ஓதப்பட்ட.

1. एक शृङ्गो वराहस्त्वं भूतभव्यसपत्नजित्।
अक्षरं ब्रह्म सत्यं च मध्ये चान्ते च राघव ।।

ராமா(6-120-14): பிரமன் சொல் - இராமா! நீ மாறுபாட்டையடையாத பரப்ரஹ்மம். எந்நாளும் அழியாதவன்.

2. त्वं त्रयाणां हि लोकानामादिकर्ता स्वयं प्रभुः ।
सिद्धानामपि साध्यानामाश्रयश्चासि पूर्वजः।।

ராமா(6-120 -19) : இராமா! நீ இந்த மூன்று லோகங்களையும் படைத்த முதற்காரணமாய் எல்லோரினும் மேம்பட்டு விளங்குகின்றாய்.

3. जगत् सर्वं शरीरं ते स्थैर्यं ते वसुधातलम् ।
अग्निः कोपः प्रसादस्ते सोमः श्रीवत्सलक्षण ।।

ராமா (6-120-26) : இந்த உலகம் முழுதும் உனக்குச் சரீரமாயுள்ளது.

4. अहं ते हृदयं राम जिह्वा देवी सरस्वती ।
देवा गात्रेषु रोमाणि निर्मिता ब्रह्मणा प्रभो ।।

ராமா(6-120-24) : இராமா! பிரமனாகிய நான் உனக்குப் புத்திரன். ஸரஸ்வதி தேவி உனக்கு நாக்கு. தேவர்கள் உன் திருமேனியின் ரோமங்களின் ஸ்தாநத்தில் உள்ளவர்கள்.

5. इन्द्रकर्मा महेन्द्रस्त्वं पद्मनाभोरणान्तकृत्।
शरण्यं शरणं च त्वामाहुर्दिव्या महर्षयः ।।

6. *சுவேதாச்வதரம் (6-18)* यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै।

7. *ராமா(7 - 104 - 3, 4) : இராமபிரானே இங்குக் காரியங்கள் முடிந்தபின் வைகுண்ட லோகம் சேருவதாக முன்பு நீ குறிப்பிட்ட காலம் வந்துவிட்டது. முன்பு உன் ஸங்கல்பத்தால் உலகத்தை ஸம்ஹாரம் செய்து ப்ரளய ஸமுத்ரத்தில் ஆலிலையில் பள்ளிகொண்டிருந்தபொழுது பிரமனாகிய என்னைப் படைத்தாய்.*

8 *ராமா. (7-104-7- 11): பின் படைக்கும் போது திருவுந்தித் தாமரையில் என்னைப் படைத்து உலகைப் படைக்கும் தொழிலை எனக்குக்*

என்று ஸர்வேச்வரன் பரம காரணமான படியையும் தான் அவனுக்குக் கார்யபூதனுமாய்[a] பரதந்த்ரனுமாய்[b] तदधीन-पद-லாபனுமாய்[c] இருந்தபடியையும், தங்கள் நடுவும் ராஜ வம்சத்தில் நடுவும் ஸர்வேச்வரன் मत्स्यादिகளுடைய மத்யத்திலே போலே ஸ்வேச்சையாலே[d] அவதரிக்கிறான் என்னுமிடத்தையும் ப்ரஹ்மா விண்ணப்பம் செய்தான்.

(iii) தன்னுடைச் சோதிக்கு[e] எழுந்தருளுகிறபோதும்

'आगच्छ विष्णो भद्रं ते दिष्ट्या प्राप्तोऽसि राघव ।
भ्रातृभिः सह देवाभैः प्रविशस्व स्वकां तनुम् ॥...

वैष्णवीं तां महातेजस्तद्वाऽकाशं सनातनम्'।
त्वं हि लोकपतिर्देव न त्वां केचन जानते।
ऋते मायां विशालाक्षीं तव पूर्वपरिग्रहाम् ।..
यामिच्छसि महातेजस्तां तनुं प्रविश स्वयम् ॥'

என்று விண்ணப்பம் செய்தான்.

இப்படிகளால் ப்ரஹ்மாதிகளுக்கும்கூட ஶரண்யமாய்ப்[f] பரம காரணமான परतत्त्வத்தை[g] प्रतिपादिக்கிற[h] वेदभागங்களுக்கு उपबृंहणம்[i] பண்ணினான்.

பரதத்த்வ நிர்ணயம் முற்றும்

அதிகாரம் 3: சரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்சம்

(சரணாகதியின் உட்கருத்தை விளக்கும் அதிகாரம்)

5 இராமாயணம் முழுதும் சரணாகதியையே விளக்குதல்

இப்படி ஸர்வ சரண்யமான பரதத்த்வத்தினுடைய वशीकरण-समर्थமாய்[j] सर्वाधिकारமாய்ப் பரம-ஹிதமாயிருக்கிற[k] சரணாகதி-धर्मத்திற்கு विधायकங்களான[l] वेदभागங்களை இப் प्रपन्धத்தில் उपक्रमादिகளாலே[m] उपबृंहिத்தான்[n] எங்ஙனே என்னில்-

5.1 பாலகாண்டத்தில் சரணாகதி

5.1.1 தேவர்களின் சரணாகதி

அவதார ஆரம்பத்திலே முற்பட சக்கரவர்த்தியினுடைய யஜ்ஞத்திலே हविर्भाग-ग्रहणार्थமாகத்[o] திரண்ட தேவர்கள் ரக்ஷக - ஆகாங்க்ஷிகளாய்[p] ஆவாரார் துணை[2] என்று நிற்கிற அளவிலே,

एतस्मिन्नन्तरे विष्णुरुपयातो महाद्युतिः।
शङ्खचक्रगदापाणि: पीतवासा जगत्पतिः ॥[3]

கொடுத்தாய். அந்தப் பொறுப்பை ஏற்ற நான் அதில் நேரும் இடையூறுகளிலிருந்து என்னைக் காத்து அதற்கு வேண்டிய ஞானம் சக்தி முதலியவற்றை அளிக்கும்படி உன்னை வேண்டினேன். நீ ஒன்றாலும் கலக்க முடியாத அந்தப் பரவாஸுதேவ வடிவினின்று உலகத்தைக் காப்பதற்காக விஷ்ணுவாய் அவதரித்தாய். அதிதியின் வயிற்றில் பிறந்து இந்திரன் முதலியவர்களுக்கு உதவி புரிந்து மகிழ்வித்தாய். அவ்வப்பொழுது அவர்களுக்கு நேரும் கஷ்டங்களைப் போக்கி உதவி செய்தாய். பின் இராவணனால் உலகில் உள்ள எல்லாப் பிராணிகளும் கஷ்டப்படும் போது இராவணனைக் கொல்வதற்காக மனிதனாய்ப் பிறந்தாய். (இது பிரமன் யமன் வாயிலாக இராமனுக்கு அனுப்பிய செய்தி). □

a - படைக்கப் பெற்றவன்; b- பகவானுக்கு வசப்பட்டவன்; c - அவனால் பதவி பெற வேண்டியவன்; d- தன் ஸங்கல்பம் ; e - ஸ்ரீ வைகுண்டம்; f - ரக்ஷகன்; g- மேம்பட்ட தத்துவத்தை; h - தெளிவாய் விளக்குகின்ற; i - பொருள் விளக்கம். j- வசப்படுத்த வல்லது; k- மிகச் சிறந்த உபாயம்; l- விதிப்பன; m- தொடக்கம்; n- பொருள் விளக்கம் செய்தான்; o- ஹவிஸ்ஸின் பகுதிகளை வாங்கிக்கொள்வதற்காக; p - ரக்ஷிப்பவனை விரும்பியவர்கள்.

1 ராமா (7-110-8-12) : விஷ்ணுவே! உனக்கு மங்களம் . நீ வருக வருக. எங்கள் பாக்கியத்தால் எங்கள் இடத்துக்கு வருகின்றாய். உன் ஸஹோதரர்களுடன் உனக்கு இஷ்டமான உருவத்தை எடுத்துக்கொள். விஷ்ணுவாகவோ, வேறு உருவமோ எடுத்துக்கொள்ளலாம். உலகம் முழுதுக்கும் நீயே கதி. சிலருக்கு இவ்வுண்மை தெரியாது. உன்னை விட்டு எந்நாளும் பிரியாத லஷ்மியைத் தவிர வேறு ஒருவருக்கும் உன் பெருமை தெரியாது. உனக்கு இஷ்டமான உருவத்தை எடுத்துக்கொள்.

ஆவாரார்துணை? என்று அலைநீர்க்கடலுளழுந்தும்
நாவாய்போல் பிறவிக்கடலுள் நின்று நான் துளங்க,
தேவார்கோலத்தொடும் திருச்சக்கரம் சங்கினொடும்,
ஆவா! என்று அருள் செய்து அடியேனொடும் ஆனானே.

2 திருவாய். (5-1-8) : இப்பொழுது யார் ரக்ஷகர் உளர்?

3 ராமா. (1-15-16) : இந்த சமயத்தில் திருவாழி திருச்சங்கு கதை இவற்றை ஏந்திக்கொண்டு பீதாம்பரத்தை அணிந்து ஸர்வேச்வரனான எம்பெருமான் சோதி வெள்ளமிட அங்கே எழுந்தருளினான்.

Scanned with CamScanner

என்கிறபடியே ஸர்வ - சேஷியான ஸர்வேச்வரன் அவகாசம் பார்த்து, ரக்ஷண ஸந்நாஹத்தால்[a] உண்டான புகர்[b] தோன்றும் படி ரக்ஷண - உபகரணங்களோடே கூடக் கட்டி உடுத்து வந்து தோன்ற, 'सिद्धगन्धर्वयक्षाश्च ततस्त्वां शरणं गताः'[1] என்று தேவ ஜாதியில் உள்ளோரெல்லாரும் இருந்ததே குடியாக சரணாகதரானபடி சொன்னான்.

5.1.2 த்ரிசங்கு, சுநச்சேபன் வ்ருத்தாந்தங்கள் காட்டுவது

த்ரிசங்கு - சுநச்சேபாதி வ்ருத்தாந்தங்களிலும் (A-1,2) விச்வாமித்ராதி - வ்யாபார - விசேஷங்களைச் சொல்லி - शरणागतரக்ஷணம் பரம தர்மம் என்றும், समर्थ - காருணிக - விஷய - சரணாகதி[c] फल–अविनाभूतै[d] என்றும் காட்டினான்.

5.2 அயோத்யா காண்டத்தில் சரணாகதி.

5.2.1 லக்ஷ்மணன் சரணாகதி

இளைய பெருமாள்,

> स भ्रातुश्चरणौ गाढं निपीड्य रघुनन्दनः ।
> सीतामुवाचातियशाः राघवं च महाव्रतम् ।।[2]

என்று उपाय–परिग्रहத்தைப்[e] பண்ணி, இதற்கு फलமாக

> 'कुरुष्व मामनुचरं वैधर्यं नेह विद्यते।
> कृतार्थोऽहं भविष्यामि तव चार्थः प्रकल्पते।।'

> 'भवांस्तु सह वेदेह्या गिरिसानुषु रंस्यते।
> अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते।।'[3]

என்று பெருமாளும் பிராட்டியும் சேர்ந்த சேர்த்தியிலே தாம் அடிமை செய்ய அபேக்ஷித்தார் என்று சொல்லுகையாலே உபாய - உபேய - பர- வாக்ய - द्वय[f] - ரூபமான சரணாகதி மந்த்ர விசேஷத்தை उपबृंहित்தான்[g].

5.2.2 பரதன் சரணாகதியில் ஆக்ஷேபம் – ஸமாதாநம்

முற்பாடரான தேவர்கள் பண்ணின ப்ரபத்திக்காக ராவண வதத்துக்கு எழுந்தருளுகையும், பிற்பாடரான ஸ்ரீபரதாழ்வான் பண்ணின ப்ரபத்திக்காக மீண்டு

திருவபிஷேகம் பண்ணி ராஜ்யம் பண்ணுகையும் விருத்தமான படியாலே ஸ்ரீபரதாழ்வானுக்கு ப்ரபத்தி பண்ணின போதே பரம-फलம் சடக்கெனத் தலை கட்டிற்றில்லையேயாகிலும், அவருக்குக் கைகேயி வரத்தாலே प्रसक्तமான[h] अवद्यம்[i] தீரும்படி, 'மரவடியைத் தம்பிக்கு வான் பணயம் வைத்துப் போய் வானோர் வாழ'[4] என்கிறபடியே அப்போது ஸாக்ஷாத் फलமான திருவடி களுக்குப் प्रतिनिधियान ஸ்ரீசடகோபனாலே सफलत्वம் சொல்லி, பின்பு पूर्व–प्रतिज्ञातமான[j] தேவகார்யம் தலைக்கட்டினவாறே ஸ்ரீ புஷ்பக விமாநத்தாலே ஸாக்ஷாத் फलமான திருவடிகள் स्वयं आगतங்களாய்[k] अयत्न–लब्धங்களான படி[l] சொன்னான்.

---

a - ஊக்கத்தோடு முற்படல்; b - மிடுக்கு; c - சக்தியும் கருணையும் உடையவனிடம் செய்யும் சரணாகதி; d- பலன் கொடுத்தே தீருவது; e- சரணாகதி செய்தல்; f- உபாயத்தையும் பலனையும் பற்றிய வாக்யம் இரண்டு; g - பொருள் விளக்கினான்; h- ஏற்பட்ட; i- பழிச்சொல்; j - முன்பு வாக்களித்த; k- தாமே வந்தன; l- முயற்சியின்றிக் கிடைத்தன.

1 सिद्धगन्धर्वयक्षाश्च ततस्त्वां शरणं गताः।
त्वं गतिः परमा देव सर्वेषां नः परन्तप ।।

ராமா (1-15-24): ஸித்தர்கள்-கந்தர்வர்கள் யக்ஷர்கள் எல்லோரும் உன்னைச் சரணமடைந்தார்கள். எங்கள் எல்லோருக்கும் நீ தானே சிறந்தகதி.

2 *ராமா (2-31-2)* : புகழ்மிக்க லக்ஷ்மணன் தன் தமையனான ராமனுடைய திருவடிகளை இறுகப் பிடித்து வணங்கி ராமனையும் பிராட்டியையும் குறித்துச் சொன்னான்.

3 *ராமா (2-31-27)* : தேவரீர் ஸீதையுடன் மலைத் தாழ்வரைகளில் விளையாடப் போகிறீர். தேவரீர் விழித்திருந்த போதும் உறங்கும் போதும் எல்லாக் கைங்கர்யங்களையும் அடியேன் செய்யப் போகிறேன். *(லக்ஷ்மணன் பேச்சு)*

4 மரவடியைத் தம்பிக்குவான் பணையம் வைத்துப் போய்வானோர் வாழ
செருவுடைய திசைக்கருமம் திருத்தி வந்து உலகாண்ட திருமால் கோயில்,
திருவடிதன் திருவுருவும் திருமங்கைமலர்க்கண்ணும் காட்டி நின்று
உருவுடையமலர்நீலம் காற்றாட்ட ஒலிக்கும் ஒளியரங்கமே.

பெரியாழ் - திரு - (4-9-1) : இராமபிரான் சித்திர கூடத்துக்கு வந்து ப்ரபத்தி செய்த பரதாழ்வானுக்குத் தன் பாதுகைகளைச் சிறந்த அடகுப் பொருளாக அளித்துவிட்டுச் சித்திர கூடத்தைவிட்டுத் தென்திசைக்குச் சென்று போருக்கு உரிய செயல்களைச் செய்து முடித்து வென்று பிராட்டியுடன் அயோத்திக்கு எழுந்தருளி அரசாண்டவன்.

Scanned with CamScanner

5.3 ஆரண்யகாண்டத்தில் சரணாகதி

5.3.1 முனிவர் சரணாகதி

அப்படியே

'त्वामामनन्ति कवयः करुणामृताब्धे
ज्ञानक्रियाभजनलभ्यमलभ्यमन्यैः।
एतेषु केन वरदोत्तरकोसलस्थाः
पूर्वं सदूर्वमभजन्त हि जन्तवस्त्वाम् ॥'

என்றும்,

புற்பா முதலாப் புல்லெறும் பாதி யொன்றின்றியே
நற்பா லயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.[2]

என்றும் பேசுகிறபடியே जङ्गम–स्थावर–विभागமற[a] உபாய-அதிகார-ப்ரஸங்க-ரஹிதமான[b] ஜந்துக்களையெல்லாம் விஷய வாஸமே[c] பற்றாசாகப்[d] பின்பு ரக்ஷிக்கும் ப்ரகாரத்திற்குப் புறஞ்செயலான[e]

'ते वयं भवता रक्ष्या भवद्विषयवासिनः।
नगरस्थो वनस्थो वा त्वं नो राजा जनेश्वरः ॥[3]

என்கிற ருஷிகள் வாக்யத்தின்படியே அவர்களுக்கு விரோதிகளான ராக்ஷஸரை நிராகரித்து[f] ருஷிகளை ரக்ஷித்தபடி சொல்லுகையாலும், ரக்ஷாபேக்ஷை - பண்ணும்போது[g] வேறோர் உபாயம் பண்ண வேண்டா, अभिमान–गोचरமான[h] விஷயத்தில் துவக்காலே அநந்ய -சரணதையை[i] வெளியிட்டுக் கிடக்க அமையும்' என்ற திருக்கண்ணமங்கையாண்டான் படியிலே கடைத் தலையிருந்து வாழும் சோம்பரையுகத்தி[4] என்னும் அர்த்தத்தை வெளியிட்டான்.

5.3.2 காக சரணாகதி

आर्द्र–अपराधனாய்[j] உதிரக்கையனான[k] காகம் ब्रह्मास्त्र–अभिमन्त्रित மான[l] துரும்பாலே துரப்புண்டு, ப்ரஹ்மா முதலான ஒன்றேறி ஒன்றுயர்த்தார்[m] வாசல்களெல்லாம் நுழைந்து நுழைந்து 'என்னைக்

காத்துக்கொள்ள வல்லாருண்டோ ?' என்று கதறிய இடத்தில் இக் காக்கைக்கு ஒருவரும் இல்லையாயிற்று. அவ்வளவில்

---

a- ஜங்கமம் தாவரம் என்ற பாகுபாடின்றி; b- எந்த உபாயத்தையும் செய்யத் தகுதியென்ற பேச்சுக்கே இடமற்ற; c- நாட்டில் வாழ்ந்ததே; d- பிடிப்பு ; e- முந்திய செயல், பூர்வாங்கம் ; f - ஒழித்து; g- காக்குமாறு வேண்டுகை ; h- அன்புக்கு உரிய; i- வேறு கதியற்றமை ; j- அப்பொழுதே குற்றம் செய்தவன்; k- அலகில் கொத்திய இரத்தமுடையவன்; l- ப்ரஹ்மாஸ்த்ர மாக மந்திரித்து விடப்பட்ட; m- அன்னத்தில் ஏறி அதையே கொடியாக உயர்த்தவன் பிரமன், காளையின் மீது ஏறி அதையே கொடியாகக் கொண்டவன் சிவன்.

1 வரதராஜஸ்தவம் *(69)* : அருளெனும் அமுதக்கடலான பேரருளாளனே! பராசரர் வ்யாஸர் முதலிய மஹர்ஷிகள் உன்னைக் கர்ம யோகம் - ஞான யோகம் - பக்தியோகம் இவற்றால் தான் அடைய முடியுமென்றும் வேறொன்றாலும் அடைய முடியாதென்றும் எழுதி வைத்துள்ளார்களே முன்பு இராமாவதாரத்தில் நீ திருநாட்டுக்கு எழுந்தருளும்போது கோஸல நாட்டில் புல் துரும்பு உள்பட ஸகல ப்ராணிகளும் உன்னைத் தொடர்ந்து சிறந்த ஸ்தாநத்தை அடைந்தனவே! இந்த மூன்று உபாயங்களில் அவை எதைச் செய்து உன்னை அடைந்தன?

2 கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?,
புற்பாமுதலாப் புல்லெறும் பாதி ஒன்றின்றியே,
நற்பால யோத்தியில் வாழும் சராசரம்முற்றவும்,
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.

திருவாய். (7-5-1) : பிரமன் படைத்த இந்த ஸம்ஸார மண்டலத்தில் அயோத்தியில் வாழ்ந்த புல் எறும்பு முதலிய தாவர ஜங்கமங்களில் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் தன்னை விட்டுப் பிரியில் தரிக்கமாட்டாத சிறந்த தன்மையனவாகச் செய்து உயர் கதியை அளித்த இராம பிரானையன்றி வேறு அவதாரத்தைச் சிந்திப்பார்களோ!

3 *ராமா (3-1-20)* : இராமா! உன் நாட்டில் வாழும் எங்களைக் காப்பது உன் கடமை. நகரத்திலோ காட்டிலோ எங்கு இருந்தாலும் நீ தான் எங்களுக்கு அரசன். (மஹர்ஷிகளின் வார்த்தை)

4 மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து,
ஆம்பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கி,
காம்பறத்தலைசிரைத்து உன்கடைத்தலையிருந்து, வாழும்
சோம்பரைஉகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே

திருமாலை (38) : அரங்கனே! உன் புறவாசலில் இருந்து வாழ்கின்ற சோம்பேறிகளிடம் மகிழ்ச்சி கொள்கின்றாய். கர்ம - ஜ்ஞாந - பக்தி யோகங்களில் முயற்சி கொள்ளாமல் தங்கள் சக்திக்கு ஏற்ற ப்ரபத்தியையே உபாயமாகக் கொண்டு வாழும் ப்ரபந்நர்களகிய சோம்பேறிகளிடம் மற்றவர்களிடத்தில் காட்டிலும் திருவுள்ளம் மிக உகக்கின்றாய்.

Scanned with CamScanner

'स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः' (95[1]) என்கிறபடியே प्रिय-हित-காரிகளான[a] தாயும் தகப்பனும் அவர்கள் நாட்டிலே குடியிருக்கிற தேவஜாதிகளும் சரணாগத ரக்ஷண -धர்மத்துக்கு உபதேஷ்டாக்களான மஹர்ஷிகளும் தாங்கள் ஏறிட்டுக் கொண்டால்,

'ब्रह्मा स्वयंभूश्चतुराननो वा रुद्रस्त्रिनेत्रस्त्रिपुरान्तको वा।
इन्द्रो महेन्द्रः सुरनायको वा त्रातुं न शक्ता युधि रामवध्यम्।' *(1)*

என்கிறபடியே 'இக்காகத்திற்கு ரக்ஷை பிறவாது' என்று இதனுடைய ஹிதத்தை[b] நிரூபித்துப்[c] பெருமாள் கைக் கொள்ளுகைக்கு ஈடாக இக்காகம், 'எங்கும் போய்க் கரை காணாதெறிகடல்வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை'[2] என்கிறபடியே அநந்யகதியாய் விழவேண்டும் என்று பார்த்து, எல்லோரும் துரத்திக் கதவை அடைத்தார்கள். அப்போது வேறொரு திக்கை நோக்கினால் ப்ரஹ்மாஸ்த்ரம் தொடருகிறபடியையும், பெருமாள் எழுந்தருளி யிருக்கிற திக்கை நோக்கின போது கொல்ல நினைவன்றிக்கே செருக் கடக்கநினைத்திருக்கிற ஸர்வலோக சரண்யன் திருவுள்ளத்தை அறிந்த ப்ரஹ்மாஸ்த்ரம் கால் தாழ்கிறபடியையும்[d] கண்ட காகம், தப்பிப்போக நினைவு உண்டாயிருக்கச் செய்தேயும், 'त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः' (95[1]) என்கிறபடியே போக்கற்று வந்து விழுந்தது. இப்படி விழுந்த இடத்திலே

'स तं निपतितं भूमौ शरण्यः शरणागतम्।
वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत्।'[3]

என்கிறபடியே வधாर्हன்[e] போக்கற்றுத் தாம் இருந்த இடத்திலே வந்து விழுந்த மாத்திரமே சரணாகதியாகக் கொண்டு பெருமாள் ப்ராணா ர்थியான[f] இவனுக்கு ப்ராண प्रदानம்[g] பண்ணி ரக்ஷித்தார் என்கையாலே, 'எத்தனையேனும் தீரக்கழிய'[h] அபராதம் பண்ணினாரையும் போக்கற்று விழுந்தால், ஸ்ரீமத் சப்தத்திலும் நாராயண சப்தத்திலும் சொல்லுகிறபடியே नित्य-अनपायिनियான[i] பிராட்டி ஸந்நிதி உண்டாகையாலும், परम-कारुणिकत्वादिகளாலும்[j] பெருமாள் ஏறிட்டுக் கொண்டு ரக்ஷிப்பார்' என்னும் பரம ரஹஸ்யத்தை

வெளியிட்டான். प्राण-अर्थியான இக்காகத்திற்கு प्राणप्रदानம் பண்ணுகையாலே ப்ரபத்தி ফலம் ஸித்தம். துஷ்ப்ரக்ருதியான[k] இக்காகத்திற்கு ஶிக்ஷையாக ஒரு கண்ணழிவாலே அஸ்த்ரத்தை விலக்கினார்.

5.3.3 அபராதிகளை எம்பெருமான் தண்டிப்பதும் அவர்களின் நன்மைக்கே: உதாஹரணங்கள்

(i) ஸ்ரீபரசுராமனளவில் தொடுத்த அம்பை அவன் தெளிந்து द्वन्द-युद्ध-अपेக்ஷை[l] தவிர்ந்தவளவில் அவனுக்கு मनीषित-विरुद्धங்களான[m] ஸுக்ருதங்களிலே ஏவினார்.

(ii) ஸமுத்ரத்தைக் குறித்துத் தொடுத்த அம்பை ஸமுத்ர - அभिமாநி - புருஷன் सानुतापனாய்ச்[n] சரணாகதனா

---

a - பிரியத்தையும் நன்மையையும் செய்பவர்; b - நன்மை ; c- சிந்தித்துப் பார்த்து; d- ஒய்ந்து நிற்பது; e- கொல்லப்பட உரியன்; f - உயிரை விரும்பிய; g - உயிர்ப்பிச்சையளித்தல்; h- எத்தனை மிகுதியாக ; i - எப்பொழுதும் பிரியாதவள்; j- எல்லையற்ற கருணையுடைமை; k- கெட்ட தன்மையன்; l- மற்போரில் விருப்பம்; m - இஷ்டமல்லாத; n- பச்சாத்தாபமுடையன்.

1. *ராமா(5-51 - 45)* : யுத்தத்தில் இராமனால் கொல்ல உத்தேசிக்கப் பட்டவனைத் தானே உண்டானவனாய் நான்முகனான பிரமனாலும் காக்க முடியாது. முக்கண்ணனாய் த்ரிபுராஸுரனைக் கொன்ற சிவனாலும் ரக்ஷிக்க முடியாது. மஹேந்த்ரனாய்த் தேவர் தலைவனான இந்த்ரனாலும் காக்க முடியாது.

2. வெங்கண்திண்களிறடர்த்தாய் வித்துவக்கோட்டம் மானே
எங்குப்போயுய்கேன்? உன்னிணையடியே அடையலல்லால்,
எங்கும் போய்க்கரைகாணாது எறிகடல்வாய் மீண்டேயும்,
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவைபோன்றேனே.

பெருமாள் திரு (5 - 5) : எம்பெருமானே கடலின் நடுவே செல்லும் ஒரு மரக்கலத்தின் (கப்பல்) உச்சியில் உள்ள பாய்மரத்தில் இருந்த பறவை அதனை விட்டு வேறொரு போக்கிடம் தேடிச்சென்று நான்கு பக்கத்திலும் பார்த்தும் கரை காணாததால் நொந்து மறுபடியும் அந்தப் பாய் மரத்தையே சேர்வது போல் அடியேனும் வேறு புகலில்லாமல் உன் திருவடியையே அடைவதன்றி வேறு எங்குப்போய் உஜ்ஜீவிப்பேன்?

3. *ராமா(5-38-34)* : அனைவருக்கும் அடைக்கலமான இராமபிரான் தரையில் விழுந்து சரணமடைந்த காகனை, கொல்லப்பட வேண்டியவனாயிருந்தும் தன் கருணையால் உயிர்பிச்சையளித்துக் காத்தருளினான். (அனுமானிடம் பிராட்டி கூறுவது).

Scanned with CamScanner

கையாலே, த்விஷத்துக்கள்[a] பக்கலிலே ஆச்ரிதருடைய பாபக்ருத்யத்தை ஏறிடும் கணக்கிலே, ஸமுத்ர விரோதிகளான பாபிஷ்டர் பக்கலிலே ஏவினார்.

(iii) காகத்தைப் பற்ற அஸ்த்ரத்தைப் பிரயோகித்த வளவில் போக்கறுதி[b] ஒழிய உள்ளொரு பசையில்லாத காகம் சரணாகதமானபோது, இக் காகத்துக்கு அபராதம் பண்ணுகையில் அபிஸந்தி- விராமம்[c] இல்லாதபடியினாலே, 'மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டுவா'[1] என்கிறபடியே 'இனி ஓர் அபராதத்தோடே மற்றைக் கண்ணும் போம்' என்று அஞ்சி துரபிஸந்தியை[d] விட்டுத் திரிகைக்காக ஒரு கண்ணை அஸ்த்ரத் துக்கு இலக்காக்கினார்.

ஆகையால் இம் மூன்று வ்ருத்தாந்தங்களிலும் அஸ்த்ரத் திற்கு லக்ஷியம்[e] கொடுத்தபடியெல்லாம் ஆச்ரித–ஹிதமாக[f] என்று நிர்ணீதம்.

5.4 கிஷ்கிந்தா காண்டத்தில் சரணாகதி

5.4.1 சுக்ரீவன் சரணாகதி

கார்யத்தில் அபிஸந்தி[g] உண்டாயிருக்க, போக–ப்ரஸங்கத்தாலே[h] அந்ய பரராய்[i], கடுகப் பெருமாள் எழுந்தருளியிருந்த இடத்திலே வாராதவளவிலே ஸமய - அதிலங்கநம்[j] பண்ணினா ராகப் பழி சுமந்த மஹாராஜர் விஷயத்திலே, இளைய பெருமாளுடைய சீற்றத்தைக்கண்ட ஸந்மந்த்ரியான திருவடி.

'कृतापराधस्य हि ते नान्यत् पश्याम्यहं क्षमम्।
अन्तरेणाञ्जलिं बद्ध्वा लक्ष्मणस्य प्रसादनात्।।[2]

என்று அவ்வவஸரத்திலே அபராதமே பற்றாசாக[k] சரணா கதராய் ப்ரஸாதிப்பிக்கப்[l] ப்ராப்தம் என்று மஹாராஜருக்கு தர்ம–உபதேசம் சொல்லும் க்ரமத்திலே ஹிதம் சொல்ல, மஹாராஜரும் தெளிந்து

यदि किञ्चिदतिक्रान्तं विश्वासात् प्रणयेन वा।
प्रेष्यस्य क्षमितव्यं मे न कश्चिन्नापराध्यति ।।[3]

என்று க்ஷமை - கொண்ட[m] ப்ரகாரத்தைச் சொல்லுகையாலே, 'பகவத் விஷயத்திலே ஸாபராதரானாலும்[n] பாகவதரை க்ஷமை

கொள்ள, அம்முகத்தாலே பெருமாள் க்ஷமித்தருளுகையாலே இவனும் நிரபராதனாய்க்[o] கைங்கர்ய யோக்யனாம்' என்னும் இடத்தை வெளியிட்டருளினான். அவ்வளவில்

यच्च शोकाभिभूतस्य श्रुत्वा रामस्य भाषितम् ।
मया त्वं परुषाण्युक्तः तच्च त्वं क्षन्तुमर्हसि ।।[4]

என்று இளைய பெருமாள் தம்முடைய பாருஷ்ய–வாக்யங்களுக்கு[p] அதி சோகபரவசரான[q] பெருமாளுடைய சீற்றத்தளவில் பிறந்த பாசுரங்கள் என்று தம்முடைய அபராதத்தை ஸோபாதிகமாக்கி[r]

---

a - சத்ருக்கள்; b - குற்றம் நீங்கினமை, வேறு புகலற்றமை; c- எண்ணம் நீங்கினமை; d- கெட்ட எண்ணம்; e- குறி இலக்கு; f- அண்டியவனுக்கு நன்மை; g- எண்ணம்; h - சிற்றின்பம் நுகருவதில் ஈடுபாடு; i - வேறு விஷயத்தில் மனம் செலுத்தியவர்; j - முன் செய்த ஸங்கேத (ஒப்பந்த)த்தை மீறுதல்; k - பற்றுக் கோடு; l - உள்ளம் குளிரச் செய்ய; m - மன்னிப்புப் பெற்ற; n - குற்றம் செய்தவர்; o - குற்றமற்றவனாய்; p - கடுஞ் சொற்கள்; q - பிரிவுத் துயருக்கு வசப்பட்ட; r - ஒரு காரணத்தால் வந்தது (இயற்கையானதன்று).

1 பொன்திகழ் சித்திரகூடப் பொருப்பினில்,
நம் உற்றவடிவில் ஒரு கண்ணும் கொண்ட, அக்
கற்றைக்குழலன் கடியன்விரைந்து, உன்னை
மற்றைக்கண் கொள்ளாமே கோல் கொண்டுவா
மணிவண்ணநம்பிக்கோர் கோல்கொண்டுவா.

பெரியாழ் திரு *(2-6-7)* : *(யசோதை கண்ணனுக்காகக் காக்கையை அழைப்பது)* முன்பு சித்திர கூடத்தில் பிராட்டியின் திருமேனியில் பதிந்த உன் இரண்டு கண்ணில் ஒன்றைப் பறித்து விடவில்லையா? இப்பொழுது மற்றொரு கண்ணையும் பறித்துக் கொள்ள விடாமல் ஓடிப்போய் என் கண்ணன் மாடு மேய்க்க ஒரு கோல் விரைவில் கொண்டுவா.

2. *ராமா(4-32-17) :* அபராதம் செய்த நீ கைகளைக் கூப்பிக் கொண்டு லஷ்மணனைப் பொறுக்கும்படி கேட்பதைத் தவிர வேறு ஒரு பரிஹாரத்தை நான் காண்கிலேன். (சுக்கிரீவனுக்கு அனுமான் உபதேசம்).

3. *ராமா (4-36-11) :* நம்பிக்கையாலோ, ப்ரீதியாலோ ஏதாவது நான் தவறாக நடந்திருந்தால் ஏவலனான என் குற்றத்தைப் பொறுக்க வேண்டும். உலகில் குற்றம் பண்ணாதவன் ஒருவனும் இல்லை. *(லஷ்மணனுக்குச் சுக்கிரீவன் வார்த்தை)*

4. *ராமா(4-36 - 20):* மனைவியைப் பிரிந்த துக்கத்தால் வருந்தும் இராமன் வார்த்தையைக் கேட்டு நானும் கூறிய கடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

Scanned with CamScanner

'न च संकुचितः पन्थाः येन वाली हतो गतः'[1] என்றாற்போலே மேலெழுச்சியான பெருமாளுடைய பாசுரங்களுக்குக் காரணம் காமன் செய்தான், மந்யு செய்தான்[2] என்கிற கணக்கிலே சோகமேயாயிற்று. 'समये तिष्ठ सुग्रीव'[3] என்கையாலே பெருமாள் அருளிச் செய்த பாசுரங்களுக்கும் இப்படி தாத்பர்யம் என்று காட்டி, அப்படியே सोपाधिकமான தங்கள் அபராதங்களுக்கு மஹாராஜரை க்ஷமை கொண்டார் என்கையாலே , सापराध ரான[a] ஸ்ரீவைஷ்ணவர்கள் புரிந்து[b] அநுதாபத்தால்[c] कृत-प्रायश्चित ரானால்[d], இவர்கள் விஷயத்தில் अपराध-दசையில் பண்ணின अनादरादिகளுக்குத்[e] தாங்கள் எதிரே க்ஷமை கொள்ள வேண்டும்' என்னும் சாஸ்த்ரார்த்தத்தைக் காட்டினான்.

5.4.2 இராமன் ஸமுத்ரராஜனிடம் செய்த சரணாகதி ஏன் வீணாயிற்று? - விளக்கம்

இப்படி விபீஷண வ்ருத்தாந்தத்திற்கு முன்பு शरणागतिधर्मத்தில் இப்பிரபந்தம் நின்ற நிலை சொன்னோம். இவ்விபீஷண வ்ருந்தாந்தத்திற்குப் பின்பு 'समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति'[4] என்று தனக்குச் சரணாகதி பலிக்கக்கண்ட பரம தார்மிகனுடைய - வாக்யத்தாலே 'அசக்தனுக்கு अभिमत-सिद्धिக்கு[f] शக்தனை ஆச்ர யிக்கப் ப்ராப்தம்' என்னுமிடம் சொன்னான். அவ்விடத்தில்

चापमानय सौमित्रे शरांचाशीविषोपमान् ।
सागरं शोषयिष्यामि पद्भ्यां यान्तु प्लवङ्गमाः ।।[5]

என்று அருளிச் செய்யக்கடவ பெருமாள் கையம்பு மாண்டவர் அல்லாமையாலும்[g], சரணமாக வரிக்கப்பட்ட जलाशय[h] அல்பமதியுமாய்[i] அல்பசக்தியுமாகையாலும் சரணாகதி பலியாது ஒழிந்தத்தனை.

5.5 இராவணனுக்கு உபதேசித்தால் வெளியாகும் இராமன் பண்புகள்

பின்பு ராவணன் தன்னைக் குறித்து रिपूणामपि वत्सलரான[j] பெருமாள்.

अराक्षसमिमं लोकं कर्तास्मि निशितैः शरैः ।
न चेच्छरणमभ्येषि मामुपादाय मैथिलीम् ।।[6]

என்று அருளிச் செய்த பாசுரத்தாலே பெருமாளுடைய சரண் யதைக்கு உறுப்பான ஸர்வ சக்தித்வத்தையும் பரமகாருணிகத்வத்தையும் ஹிதப்ரவர்த்தகத்வத்தையும் ப்ரகாசிப்பித்தான்.

5.6 உலக நன்மையில் பெருமாளும் பிராட்டியும் ஒரே கருத்தினர்

'इयं सीता मम सुता सहधर्मचरी तव'[6] என்கிறபடியே சரணாகத -

---

a - குற்றம் செய்தவர்; b - மனம் திருந்தி; c- பச்சாத்தாபம்; d- பரிஹாரம் செய்தவர்; e- அலக்ஷியம் செய்தல்; f- இஷ்டம் நிறைவேறுதல்; g- எடுத்த அம்பு வீணாகப் பெற்றவர் அல்லாமையாலும்; h- கடல்; i- புத்திக் குறைவுடையவன்; j- பகைவர்களிடமும் அன்பு மிக்கவன்.

1. न च संकुचितः पन्थाः येन वाली हतो गतः ।
समये तिष्ठ सुग्रीव मा वालिपथमन्वगाः ।।

ராமா - (4-30-81) : வாலி கொல்லப்பட்டுப்போன வழி குறுகிப் போகவில்லை. ஆதலால் சுக்கிரீவனே நீ ஒப்பந்தத்தின்படி நடந்துகொள். வாலி போன வழி போகாதே.

2. 'कामोऽकार्षीत् मन्युरकार्षीत्'

3. *ராமா (4-30-81) :* சுக்கிரீவா ஒப்பந்தத்தின் படி நடந்துகொள்.

4. समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति ।
खानितः सगरेणायमप्रमेयो महोदधिः ।।

ராமா(6-19-31) : முன்னோர்களான ஸகர புத்திரர்களால் தோண்டப்பட்ட இந்தப் பெருங்கடலின் அரசனை இராமபிரான் சரணமடைவது நல்லது. (விபீஷணன் வார்த்தை)

5. *ராமா(6-21-22) :* லஷ்மணா! வில்லையும் கொடிய அம்புகளையும் எடுத்து வா. இந்தக் கடலை வற்றச் செய்து தரையாக்கி விடுகிறேன். வானரங்கள் தரையிலேயே நடந்து செல்லட்டும்.

6. *ராமா (6-41-68) :* சீதையை அழைத்து வந்து நீ என்னைச் சரணமடையவில்லையாயின் என் கூரிய அம்புகளால் இவ்வுலகிலேயே ராக்ஷஸப் பூண்டு இல்லாமல் செய்து விடுவேன். (அங்கதன் வாயிலாக இராமன் இராவணனுக்கு விடுத்த செய்தி)

7. इयं सीता मम सुता सह धर्मचरी तव ।
प्रतीच्छ चैनां भद्रं ते पाणिं गृह्णीष्व पाणिना।।

ராமா. (1-73-27) : இந்த ஸீதை என் பெண். உன்னுடன் சேர்ந்து தர்மத்தை

Scanned with CamScanner

ரக்ஷணதர்மத்திலும் ஸஹதர்மசாரிணியான பிராட்டியும்

'मित्रमौपयिकं कर्तुं रामः स्थानं परीप्सता।
वधं चानिच्छता घोरं त्वयाऽसौ पुरुषर्षभः।।

विदितः स हि धर्मज्ञः शरणागतवत्सलः।
तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि ।।

प्रसादयस्व त्वं चैनं शरणागतवत्सलम्।
मां चास्मै प्रयतो भूत्वा निर्यातयितुमर्हसि ।।[1]

என்று ராவணன் ப்ரதிகூலனாயிருக்கச் செய்தேயும், मातृत्व-प्रयुक्तமான[a] வாத்ஸல்ய - அதிசயத்தாலே 'अस्तु ते' (54[1]) என்னும் ப்ரகாரத்திலே அருளிச் செய்த வாக்யத்தாலே இத் दम्पतिகள் லோகஹிதத்திலே ஸமாந-अभिप्रायர்[b] என்னுமிடத்தைக் காட்டினான். இப்படி 'तेन मैत्री भवतु ते', என்றதுவும் ராவணனுக்குச் சிசுபாலனான ஜந்மாந்தரத்திலே அந்திம - க்ஷணத்திலேயாகிலும்[c] கார்யகரமாயிற்று[d].

5.7 ஸுந்தரகாண்டத்தில் சரணாகதி

5.7.1 அரக்கியருக்கு த்ரிஜடையின் உபதேசம்

शरण्य-सहधर्म-चारिणियான்[e] பிராட்டி விஷயத்திலே तर्जन-भर्त्सनादि[f] प्रवृत्तைகளான ராக்ஷஸிகளைக் குறித்து

'तदलं क्रूरवाक्यैर्वः सान्त्वमेवाभिधीयताम् ।
अभियाचाम वैदेहीमेतद्धि मम रोचते।।

भर्त्तितामपि याचध्वं राक्षस्यः किं विवक्षया ।
राघवाद्धि भयं घोरं राक्षसानामुपस्थितम्।।

प्रणिपातप्रसन्ना हि मैथिली जनकात्मजा।
अलमेषा परित्रातुं राक्षसीर्महतो भयात्।।'[2]

என்று த்ரிஜடையும் ஸ்வமதம் சொன்னபடியைப் பேசினான்.

5.7.2 அரக்கியருக்கும் பிராட்டியின் அபயப்ரதாநம்

பிராட்டியும் அவர்கள் இசைவின்றிக்கேயிருக்க ஸத்த்வ ப்ரக்ருதியான த்ரிஜடையோடு அவர்களுக்கு உண்டான துவக்காலே वात्सल्य-परवशैயாய்[g] அருளிச்செய்த வார்த்தையை

ஸ்ரீவானர வீரர்களுக்கு अनुभाषिத்துக்[h] காட்டுகிற திருவடி 'अलमेषा परित्रातुं राघवाद्राक्षसीगणम्'[3] என்று த்ரிஜடையின் வாக்யத்தை முடித்து,

'ततः सा ह्रीमती बाला भर्तुर्विजयहर्षिता ।
अवोचद्यदि तत् तथ्यं भवेयं शरणं हि वः।।'[4]

(சரணாகத ரக்ஷண தர்மத்தை) நடத்துமவள். இவளைக் கைப்பிடித்து மணந்து கொள். உனக்கு மங்களம். (ஜநகன் சொல்) □

a - தாய்மையால் ஏற்பட்ட; b - ஒத்த கருத்துடையவர். c - மரண காலம்; d - பலன் தருவது; e - ரக்ஷகனான பகவானுக்கு உடன் இருந்து தர்மம் செய்பவள்; f - அதட்டல் மிரட்டல். g- அன்புக்கு வசப்பட்டவள்; h - மறுபடி கூறி.

1. *ராமா(5-21-19,20,21) : (இராவணனுக்குப் பிராட்டியின் நல்லுரை.)* நீ உலகில் இருக்க இடம் வேண்டுமானால் இராமனுடன் தோழமை கொள். வீணாக அவர் கையால் கொலை செய்யப்பட விரும்பாதே. அவர் தர்மங்களை நன்கு அறிந்தவர். சரணமடைந்தவரிடம் உள்ள குற்றத்தைப் புறக்கணித்து அன்பு கொள்பவர். நீ உயிர் வாழ விரும்பினால் அவருடன் நட்புக் கொள். தூய மனம் கொண்டு என்னை அவருடன் சேர்த்து அவரை மகிழச்செய்.

2. *ராமா(5-27-42, 44, 45) : (த்ரிஜடை அரக்கிகளுக்குக் கூறுவது)* இனி பிராட்டியிடம் கடுஞ் சொற்களைக் கூறாதீர்கள். சாந்தமான முறையில் பேசி அவளை ஸமாதாநம் செய்யுங்கள். இராமனுடைய கோபத்தினின்று எங்களைக் காக்கவேண்டுமென்று அவளை நாம் பிரார்த்திப்பதே எனக்கு உகந்த விஷயம். இது வரை அவளைப் பயமுறுத்தியிருந்த போதிலும் இப்பொழுது வேண்டுவோம். சென்றதைச் சிந்திப்பதில் பயனில்லை. அரக்கர் குலத்துக்கே இராமனால் பெரிய ஆபத்து விளையவிருக்கிறது. நாம் சரணமடைந்தால் நிச்சயமாய் மகிழ்ந்து அரக்கிகளை ஆபத்தினின்று இவளால் காக்க முடியும்.

3. अलमेषा परित्रातुं राघवाद्राक्षसीगणम्।
अभियाचाम वैदेहीमेतद्धि मम रोचते।।

ராமா (5-58-87) : இராமனால் ஆபத்து வராமல் அரக்கியர் கூட்டத்தைக் காப்பாற்றப் பிராட்டி சக்தியுடையவள்.

4. *ராமா(5-58-90) :* த்ரிஜடையின் வார்த்தையைக் கேட்ட பிராட்டிதன். நாயகனுக்கு வரப்போகும் வெற்றியை நினைந்து மகிழ்ந்து வெட்கமுமடைந்து அரக்கியரிடம் 'இது உண்மையாயின் உங்களுக்கு நான் அடைக்கலமாயிருந்து காப்பேன்' என்றாள்.

Scanned with CamScanner

என்று பிராட்டி அருளிச்செய்த रक्षा-भर - ஸ்வீகாரவாக்யத்தை அநுவதித்துக் காட்டினான்.

5.7.3 அரக்கியரிடம் அனுமான் சீற்றத்தைப் பிராட்டி தணித்து காத்தல்

பின்பு सापराधैகளான[a] ராக்ஷஸிகளைப் பற்ற ராமதூதன் சீறினவிடத்து,

'पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम।
कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति।।'[1]

इत्यादिகளாலே அவன் சீற்றத்தையாற்றிப் பிராட்டி ராக்ஷஸிகளைத் தான் எறிட்டுக்கொண்டு ரக்ஷித்தபடி சொன்னான்.

5.7.4 பெருமாள் பொறுமையிலும் பிராட்டியின் பொறுமை விஞ்சியது - ஸ்ரீபட்டர் விளக்கம்

இவ் वृत्तान्तத்தை அநுसंधिத்த भट्टர் 'ராமகோஷ்ட்டிக்குமாகாத நமக்குப் பிராட்டியுடைய க்ஷமையொழியத் தஞ்சமில்லை' என்னுமிடத்தை

'मातर्मैथिलि राक्षसीस्त्वयि तदैवार्द्रापराधास्त्वया
रक्षन्त्या पवनात्मजात् लघुतरा रामस्य गोष्ठी कृता।
काकं तं च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षतः
सा नः सान्द्रमहागसः सुखयतु क्षान्तिस्तवाकस्मिकी।।'[2]

என்று அருளிச் செய்தார். ஆக இப்படி ஆறு காண்டத்திலும் சரணாகதி - धर्मமே அஞ்சுருவாணியாகக்[b] கோக்கப்பட்டது.

5.8 உத்தரகாண்டத்தில் சரணாகதி

5.8.1 புறங்காட்டி ஓடுபவரைத் துரத்திக் கொல்வது நீதியா? மால்யவானுக்கு இராமனது விடை

உத்தர ஸ்ரீ ராமாயணத்திலும் ராவணன் பாட்டன்மார் காலத்திலே விஷ்ணு - அவதாரஸ்தனான ஸர்வேச்வரன் சரணாகதரான தேவர்களை ரக்ஷிப்பதாகத் திருவுள்ளம் பற்றி ராக்ஷஸரோடே பொருதவளவிலே பூசலிலே[c] கெட்டுப் பராங்முகராய்[d] லங்கையைக் குறித்துப் பலாயநம்

பண்ணுகிற ராக்ஷஸரைப் பின் தொடர்ந்து சார்ங்கமுதைத்த சரமழைகளாலே கொன்று சூரையாடக் கண்ட மால்யவான் புரிந்து[f].

'नारायण न जानीषे क्षात्रं धर्मं सनातनम् ।
अयुद्धमनसो भग्नान् अस्मान् हंसि यथेतरः ।।'

என்று 'ஓடிப்போகிற எங்களைக் கொல்லுகை क्षत्र-धर्म- विरुद्धமன்றோ[g] தர்மம் அறியாதார் செய்யுமதை धर्मज्ञனான[h] நீ செய்யாநிற்கிறதென்?' என்று ஆற்றாமையாலே முறையிட, ஸர்வேச்வரன் 'நாம் க்ஷத்திரியராகிலன்றோ க்ஷத்திரிய தர்மம் அநுஷ்டிப்பது? நம்மை நாராயணன் என்று நீ சொன்னபடியே நாம் नियन्तृत्वादिகளாலே[i] ஸர்வவிலக்ஷணராகையால்[j] நாராயண தர்மமான சராணகதரக்ஷணம் அநுஷ்டிக்கிறோம்' என்று அபிப்பிராயம் கொண்டு

---

a- குற்றம் நிறைந்தவர்கள்; b- அச்சாணி; c- சண்டை; d- முதுகு காட்டியவர்; e- ஓடுதல்; f- நல்லறிவு பெற்று; g- க்ஷத்திரியர்களின் தர்மத்துக்கு முரண்பட்டது; h- தர்மங்களை அறிந்த; i- அடக்கியாளுதல்; j- எல்லோரினும் வேறுபட்டவர்.

1. *ராமா(6-116-44) :* (பிராட்டி அனுமானுக்குக் கூறுவது) அனுமானே இந்த அரக்கியர் உன் எண்ணப்படி கெட்டவர்களாயினும் என் எண்ணப்படி நல்லவர்களாயினும் கொல்லப்பட்ட உரியரானாலும் நீ இவர்களிடம் கருணை கொள்ளவேண்டும். உலகில் குற்றம் செய்யாதவன் எவன் உளன்?

2. *ஸ்ரீகுணரத்ந (50) :* தாயே! பிராட்டியே! குற்றம் செய்து கொண்டேயிருக்கிற ராக்ஷஸிகளை அனுமானிடமிருந்து ரக்ஷித்த உன்னால் ராமகோஷ்டி மிகத் தாழ்ந்ததாகச் செய்யப்பட்டது. இராமன் காகத்தையும் விபீஷணனையும் அவர்கள் தன்னிடம் சரணாகதி செய்த பிறகே ரக்ஷித்தான். நீயோ அரக்கியர் கேட்காத போதிலும் உன்னிடம் அபராதம் செய்து கொண்டிருக்கையிலேயே அனுமானிடமிருந்து அவர்களைக் காத்தருளினாய்: உன் செயலே இராமனதினும் சிறந்ததாயிற்று. உன்னுடைய இயற்கையான பொறுமை குற்றவாளரான எங்களையும் காக்க வேண்டும்.

3. *ராமா(7-8-3):* நாராயணனே! போரில் எண்ணமொழிந்து தோல்வி கண்டு ஓடுகிற எங்களை நீ ஒரு நாடோடி போல் கொல்ல வருகின்றாயே! நெடுங்காலமாக உள்ள க்ஷத்திரிய தர்மத்தை நீ அறியவில்லையோ!

Scanned with CamScanner

'युष्मत्तो भयभीतानां देवानां वै मयाऽभयम् ।
राक्षसोत्सादनं दत्तं तदेतदनुपाल्यते ॥

प्राणैरपि प्रियं कार्यं देवानां हि सदा मया ।
सोऽहं वो निहनिष्यामि रसातलगतानपि ॥'[1]

என்று 'நாம் தேவர்களுக்குப் பண்ணின அபயப்ரதாநத்தாலே பசுக்களுக்காகப் புலிகளைத் தொடர்ந்து கொல்லும் கணக்கிலே உங்களைக் கொல்லுகிறோம்' என்று அருளிச் செய்த பாசுரத்தாலே, மற்றுமுள்ள क्षत्त्रिय-धर्मादिகளிலுங் காட்டில் சரணாகத ரக்ஷண -தர்மமே பெருமாளுக்கு अनुपालनीयம்[a] என்னுமிடத்தை ஸ்தாபித்தான்.

5.8.2 இராமன் வாலியைக் கொன்றது நீதியா? - இராமன் விடை

வாலியுடைய चोद्यத்திற்கும்[b] இவ்வுத்தரத்தையே திருவுள்ளம் பற்றி 'सूक्ष्मः परमदुर्जेयः सतां धर्मः प्लवङ्गम।'[2] என்று गम्भीरமாகப் பெருமாள் அருளிச் செய்தார். 'முன்பு सापराधரான்[c] மஹாராஜர் अनुतप्तராய்[d] शரணாகதராக, அவரை நீ நலிந்தாயாகையால் நீ दण्ड्यனாகையாலும், சரணாகதரான மஹாராஜரை ரக்ஷிக்கை நமக்கு भरமாகையாலும்[e] உன்னை நிராகரித்தோம்' என்று தாத்பர்யம்.

5.8.3 நாட்டில் உள்ள தாவரங்களுக்கும் இராமன் நற்கதி அளித்தல்

இப்ப்रबन्धம் தலைக்காட்டுகிற இடத்திலும் उपाय-अनधिकारिகளான[f] ஸ்த்தாவரங்களையும் கூட

'विषये ते महाराज रामव्यसनकर्शिताः।
अपि वृक्षाः परिम्लानाः सपुष्पाकुंरकोरकाः।।'[3]

என்னும்படியுண்டான விஷய - வாஸத்தையும்[g] அவஸ்த்தா விசேஷத்தையும்[h] பற்றாசாக[i] ரக்ஷித்தபடி பரக்கப் பேசப் பட்டது.

5.8.4 ஸ்ரீமத் ராமாயணம் சரணாகதி வேதமாதல்

இப்படி இப்பிரபந்தம்

'उपक्रमोपसंहारौ अभ्यासोऽपूर्वता फलम् ।
अर्थवादोपपत्ती च लिङ्गं तात्पर्यनिर्णये।।'[4]

என்கிற தாத்பர்ய - லிங்கங்களையெல்லாம்[j] பரிபூர்ணமாக உடையதாய் ஸ்ரீவால்மீகி பகவானாலே த்ருஷ்டமாய் இருப்பதொரு சரணாகதி வேதம். இதில் இவ்வभय - ப்ரதாந - ப்ரகரணம் ஸர்வ ரஹஸ்ய ஸாரங்களையும் திரள் வெளியிட்ட உபநிஷத் - भागம்.

சரணாகதி தாத்பர்யப்ரபஞ்சம் முற்றும்

அதிகாரம் 4: ப்ரகரண தாத்பர்ய நிர்ணயம்

(பகுதியின் உட்கருத்தை, நிர்ணயித்தல்)

6. ப்ரபத்தியே சிறந்த தர்மம்

இப்படி शरणागति-वेद-उपनिषத்தான இவ் अभय-प्रदान-प्रकरणத்திலே

---

a- நடத்தித் தீரவேண்டியது; b- ஆக்ஷேபம்; c- குற்றவாளர்; d- பச்சாத்தாப முடையர்; e- பொறுப்பு; f- உபாயம் செய்யத் தகுதியற்ற; g- தேசத்தில் வாஸம்; h- விசேஷ நிலைமை; i- காரணம்; j- கருத்தைக் குறிக்கும் சின்னங்கள்.

1. *ராமா (7-8-7, 8):* உங்களிடம் மிக அஞ்சிய தேவர்களுக்கு அரக்கர்களை ஒழிப்பதாக என்னால் வாக்குக் கொடுக்கப்பட்டது. அதை இப்பொழுது செயல்படுத்துகின்றேன். தேவர்களுக்கு எப்பொழுதும் என் உயிரைக் கொடுத்தாவது நன்மையைச் செய்வது என் கடமை. ஆதலால் நீங்கள் பாதாளம் சென்றாலும் துரத்தி வந்து கொல்வேன்.

2. सूक्ष्मः परमदुर्जेयः सतां धर्मः प्लवङ्गम ।
हृदिस्थः सर्वभूतानामात्मा वेदशुभाशुभम् ।।

ராமா. (4-18-15): வாலியே ஸாதுக்களின் தர்மம் மிகவும் ஸூக்ஷ்மமானது. எளிதில் அறியவே முடியாதது. எல்லாப் பிராணிகளுக்கும் உள்ளே அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவே நன்மை தீமைகளை அறிவான்.

3. *ராமா. (2-59-4) :* தசரத மஹாராஜரே! உம்முடைய நாட்டில் பூ, முளை, மொட்டு இவற்றுடன் மரங்கள் எல்லாமே இராமனைப் பிரிந்து மெலிந்து வாடிவிட்டன.

4. *(?) :* ஆரம்பமும் முடிவும் ஒன்றைப் பற்றியே இருத்தல் - பலமுறை ஒன்றையே கூறுதல் - புதிதாக ஒன்றைக் கூறுதல் - பலன் கூறுதல் - புகழ்ந்து பேசுதல் - யுக்திகளைக் காட்டுதல் ஆகிய இந்த ஆறும் நூலின் கருத்து இன்னதென்று நிச்சயித்துத் தரும் சின்னங்களாகும்.

Scanned with CamScanner

'परमापद्गतस्यापि धर्मे मम मतिर्भवेत'[1] என்று ப்ரஹ்மாவின் பக்கலிலே வரம் வேண்டிக்கொண்டு 'धर्मिष्ठस्त्वं यथा वत्स तथाचैतद्भविष्यति'[2] என்று வரம் பெற்ற ஸ்ரீ விபீஷணாழ்வான் சரணாகதி தர்மத்தைப் परिग्रहित्து[a]. அநுஷ்டிக்கையாலும் பின்பு பெருமாளையும் கூட அநுஷ்டிப்பிக்கையாலும் சரணாகதி பரமதர்மம்[b] என்னும் இடம் शिष्ट-आचारத்தாலே[c] स्थापितம்.

7. ப்ரபந்நர்களுக்கு வரும் தடைகளைப் பெருமாள் நீக்குதல்

இப்ப்ரகரணத்தில் முன்பே பல सर्गங்களாலே 'ரஜஸ் தம: ப்ரக்ருதிகளாய் இருப்பார்க்கு ஸத்த்வப்ரக்ருதிகளாயிருப்பார் ஹிதம் சொன்னாலும் பகவத் விஷயத்தில் आभिमुख्यம்[d] கூடாது' என்னுமிடம் சொல்லிற்று. सत्त्व-उत्तरனான[e] ஸ்ரீ விபீஷணாழ்வான் சரணாகதனாய் வருகிறபோது அவன் விஷயத்திலே देवता-अवतारரான ஸ்ரீ வானர வீரர்களாலே विघ्नம்[f] प्रसक्तமானபடி[g] சொல்லுகையாலே.

'श्रूयते किल गोविन्दे भक्तिमुद्वहतां नृणाम् ।
संसारन्यूनताभीताः त्रिदशाः परिपन्थिनः ।।'[3]

என்கிறபடியே भगवत्-விஷயத்திலே अभिमुखராவாரைத்[h] தங்கள் குடிமக்கள் தப்பிப் போகிறார்கள் என்று நினைத்துத் தேவர்கள் விலக்குவார்கள் என்னுமிடமும், இப்படி विघ्नங்கள் வந்தாலும் शुद्ध-भावராய்[i] அநந்யராய் வந்து அடைந்தவர்களை

'संकल्पादेव भगवान् तत्त्वतो भावितात्मनाम्।
व्रतान्तमखिलं कालं सेचयत्यमृतेन तु ।।'[4] என்றும்

'प्रपत्तिकालादारभ्य त्वात्मलाभावसानिकम्।
यत्रावकाशो विघ्नानां विद्यते न कदाचन ।।'[5] என்றும்

सात्वत-पौष्करादिகளிலே சொல்லுகிறபடியே பெருமாள் தாமே எல்லா विघ्नங்களையும்[j] சமிப்பித்து[k] அடிமை கொள்ளுவார் என்னுமிடமும் வெளியிடப்பட்டது.

8. விபீஷணன் சரணாகதியில் ஐந்து அங்கங்களும் நிறைந்திருத்தல்

सर्वज्ञ-संहितादिகளில் சொன்ன ஆநுகூல்ய-ஸங்கல்பாதிகளும் அடங்க இப்ப்ரகரணத்திலே காணலாம். எங்ஙனே என்னில்-

அடியிலே ராவணாதிகளுக்கும்கூட ஹிதோபதேசம் பண்ணுகையாலும், தூதனாய்ச் சென்ற திருவடியை दुष्प्रकृतियான[l] ராவணன் अशक्यம்[m] என்று அறியாதே நலிய நினைக்க அத்தை விலக்குகையாலும், பிறவி உறவையும் பெரிய ஐச்வர்யத்தையும் புத்ர दारादिகளையும்[n] अनादरித்துப்[o] प्रातिकूल्य-वर्जनம் பண்ணுகையாலும் ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்ய வர்ஜநமும்[p] ஸூசிதமாயிற்று.

பெருமாள் ஸர்வலோக சரண்யன் என்கிற வ்யவஸாயத்தாலும்

---

a- கைக்கொண்டு; b- மிக உயர்ந்த தர்மம்; c- பெரியோர்களின் செயல்முறை; d- ஈடுபட்டிருத்தல்; e- ஸத்துவ குணம் மிகுத்த; f- இடையூறு; g- நேர்ந்த செய்தி; h- ஈடுபட்டவர்; i- தூய மனத்தர்; j- இடையூறுகள்; k- போக்கி; l-கெட்ட தன்மையன்; m- செய்ய முடியாதது; n- மனைவி முதலியவர்; o- புறக்கணித்து; p- ப்ரதிகூலமானதை விட்டு விடுதல்; q- உறுதியான எண்ணம்.

1. परमापद्गतस्यापि धर्मे मम मतिर्भवेत् ।
अशिक्षितं च ब्रह्मास्त्रं भगवन् प्रतिभातु मे ।।

ராமா(7-10-31) : எத்தகைய பெரிய ஆபத்து வந்த போதிலும் என் மனம் தர்மத்திலேயே நிலைத்திருக்க வேண்டும். (பிரமனிடம் விபீஷணன் கேட்ட வரம்).

2. पुन: प्रजापति: प्रीतो विभीषणमुवाच ह ।
धर्मिष्ठस्त्वं यथा वत्स तथा चैतत् भविष्यति ।।

ராமா(7-10-34) : குழந்தாய் விபீஷண! தருமத்திலேயே கருத்தூன்றிய நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன். (பிரமன் கூறியது)

3. விஷ்ணுதர்(2-25): எம்பெருமானிடம் பக்தி கொண்ட மனிதர்களைக் கண்ட தேவர்கள், எல்லோரும் மோக்ஷத்தை அடைந்து விட்டால் தாங்கள் ஆட்சிபுரியும் ஸம்ஸார மண்டலத்தின் ஜனத்தொகை குறைந்து விடுமே என்று அஞ்சி அவர்களுக்கு இடையூறு விளைவிப்பார்கள்.

4. ஸாத்வதஸம் (7-124) : எம்பெருமான் தன்னை வழிபடுமவர்களுக்கு அவர்கள் இவ்வுலகில் இருக்க வேண்டிப் பெற்ற காலம் முழுதும் அமுதமயமான அநுபவங்களைக் கொடுத்து அவர்களைக் குளிர்விக்கின்றான்.

5. பௌஷ்கரஸம்(?) : ப்ரபத்தி செய்தபின் மோக்ஷம் பெறும் வரை அதற்கு ஒரு தடையும் எப்பொழுதும் ஏற்படாது.

Scanned with CamScanner

'आजगाम मुहूर्तेन यत्र रामः सलक्ष्मणः ।'[1] என்கிறபடியே அஞ்ச வேண்டும் பிரதேசத்திலே अशङ्कितமாகத்[a] தன் நிலமாக நினைத்து வருகையாலும் रक्षिष्यतीति விச்வாஸம்[b] காட்டப் பட்டது.

'राघवंशरणं गतः'[2] என்கிற उपाय-वरण-वाक्य-सामर्थ्यத்தாலே[c] गोप्तृत्व-वरणம் சொல்லிற்று.

9. 'இராமனைச் சரணமடைந்ததேன்' என்பதிலேயே அங்கியும் குறிப்பால் கூறப்படல்

उपायान्तर-स्थान-निवेश-परமான[d] शரண சப்தத்தாலே व्यञ्जितமாய்[e] रक्षा-भर-समर्पण-प्रधानமான[f] आत्म-निक्षेपமும்[g]

'सर्वलोकशरण्याय राघवाय महात्मने।
निवेदयत मां क्षिप्रं विभीषणमुपस्थितम्।।' [3]

என்று அந்தரங்கராயிருப்பாரை முன்னிலையாகக் கொண்டு विशदமாகச்[h] சொல்லப்பட்டது.

10. விபீஷணன் தன் வரவை அறிவிக்கக் கேட்டல் மட்டும் ப்ரபத்தியாகுமா? - விடை

இவ்விடத்தில் பெருமாளும் இளைய பெருமாளும் முதலிகளும்[i] கேட்கும்படி கிட்டவந்து 'प्रणादश्च महानेषः'[4] என்கிறபடியே கூப்பிடுகிறவனாகையாலே, 'பெருமாளுக்கு அறிவியுங்கள்' என்கை விவஸிதமன்று. 'सख्यमात्मनिवेदनम्'[5] 'किंकरोऽस्मीति चात्मानं देवायैवं निवेदयेत्'[6].

इत्यादिகளிற்படியே "निवेदयत मां" என்றது என்னை ஸமர்ப்பியுங்கள் என்றபடி.

'रावणो नाम दुर्वृत्तः'[7] என்று தொடங்கி 'सोऽहं परुषितस्तेन

---

a- ஸந்தேகம் இன்றி; b- காப்பான் என்ற நம்பிக்கை (மஹாவிச்வாஸம்); c- உபாயமாகக் கொண்டதைக் கூறும் வாக்கியத்தின் சக்தி; d- வேறு உபயத்தின் ஸ்தாநத்தில் நிறுத்துவதைக் கூறுகின்ற; e- குறிப்பால் உணர்த்தப்பட்டது; f- தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பிப்பதை முக்கியமாகக் கொண்ட; g- ஆத்மாவை ஸமர்ப்பித்தல்; h- தெளிவாக; i- வானரர்கள்.

1. इत्युक्त: परुषं वाक्यं रावणं रावणानुज:।
आजगाम मुहूर्तेन यत्र राम: सलक्ष्मण:।।

ராமா(6-17-1) : விபிஷணன் இராவணனுக்கு இவ்வாறு கடுஞ் சொற்களைக் கூறிவிட்டு லக்ஷ்மணனுடன் இராமன் இருந்த இடத்துக்கு. முஹூர்த்த காலத்திலேயே வந்து சேர்ந்தான்.

2. सोऽहं परुषितस्तेन दासवच्चावमानितः।
त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः ।।

ராமா - (6-17-16) : இராவணனால் கொடுஞ்சொற்கள் சொல்லப்பட்டு அடிமையைப் போல் அவமதிக்கப்பட்டுப் புத்திரர்களையும் மனைவியையும் விட்டு இராமபிரானைச் சரணமடைந்தேன் (விபீஷணன் சொல்)

3. *ராமா(6-17-17)* : எல்லா உலகங்களுக்கும் அடைக்கலமாய் எல்லையற்ற பெருமையுடையனான இராமபிரானிடம் விபீஷணனாகிய நான் வந்து சரணமடைந்ததைச் சொல்லி என்னை விரைவில் அவனிடம் ஸமர்ப்பியுங்கள்.

4. अव्यग्राश्च प्रहृष्टाश्च न भविष्यन्ति संगता:।
प्रणादश्च महानेष ततोऽस्य भयमागतम्।।

ராமா (6-18-14) : பங்காளிகள் உலகில் களங்கமில்லாமல் ஸுமுகமாய்ப் பழகுவதில்லை. இந்த விபீஷணனுக்கு இராவணனால் ஆபத்து வருமென்ற அச்சம் வந்து அதனால் இங்கு வந்துள்ளானென்று அவனுடைய பெரிய குரலாலேயே தெரிகின்றது.

5. श्रवणं कीर्तनं विष्णो: स्मरणं पादसेवनम्।
अर्चनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम् ।।

பாகவ(7-5-23) : விஷ்ணுவின் திருநாமத்தைக் கேட்பது - சொல்வது - நினைப்பது - திருவடியைத் தொழுவது - அர்ச்சிப்பது - வணங்குவது - அடிமை செய்தல் - நட்புக் கொள்வது - ஆத்மாவை ஸமர்ப்பித்தல் என்று ஒன்பது வகைப்படும் பக்தி. (பிரகலாதன் இரணியனுக்குக் கூறுவது).

6. इत्येवमनया स्तुत्या स्तुत्वा देवं दिने दिने।
किंकरोऽस्मीति चात्मानं देवायैवं निवेदयेत् ।।

ஜிதந்தே (1-14) : அடியேன் கைங்கர்யம் செய்வேனென்று அநுஸந்தித்து எம்பெருமானிடம் ஆத்மாவை ஸமர்ப்பிக்க வேண்டும்.

7. रावणो नाम दुर्वृत्तो राक्षसो राक्षसेश्वरः।
तस्याहमनुजो भ्राता विभीषण इति श्रुतः ।।

ராமா(6-17-12) : ராவணன் என்ற ராக்ஷஸன் கெட்ட ஒழுக்கமுடையவன். அரக்கர்களின் தலைவன்.

Scanned with CamScanner

दासवच्चवमानित:'[1] என்றது இறுதியாக दुष्प्रकृतियान[a] ராவணனுக்குத் தான் हितोपदेशம்[b] பண்ணிப் பாழுக்கு நீரிறைத்துப் परिभूतனான[c] படி சொல்லுகையாலும், 'स्वरेण महता महान्'[2] என்கிற ஆர்த்தஸ்வரத்தாலும்[d] 'निवेदयत मां क्षिप्रं'[3] என்கிற त्वरातिशयத்தாலும்[e], 'प्रणादश्च महानेष: ततोऽस्य भयमागतम्'[4] என்கிற सर्वज्ञனான शरण्यனுடைய வாக்யத்தாலும் கார்ப்பண்யம் சொல்லப் பட்டது.

11. விபீஷணன் செய்தது பரிபூர்ண சரணாகதியே

ஆக இப்படி आनुकूल्यसङ्कल्पादियुक्तैயாய் परिपूर्णயாய் द्वयத்தில் पूर्व-खण्डகத்திலே சொல்லப்படுகிற स्व-रक्षा-भर-समर्पणात्मिकையான[f] ப்ரபத்தியை सर्वावस्थैயிலும்[g] धर्मஸாரத்திலே[h] நிலை குலையாத ஸ்ரீவிபீஷணாழ்வான் அநுஷ்டித்தான்.

11.1 விபீஷணன் விரும்பிய பலன் இராமகைங்கர்யமே

அதற்கு அவன் ஃபலமாகக் கோரிற்று என்னென்னில், आपात-ரஸிகராயிருப்பார்[i] லங்கைச்வர்யம் என்றிருப்பார்கள். ஸ்ரீவிபீஷணாழ்வான் கருத்தை அடியொற்றினால் சரண்யனான[j] பெருமாள் திருவடிகளில் கைங்கர்யமே ஃபலமாயிருக்கும். அது எங்ஙனே என்னில் சரணாகதி காலந்தன்னிலே 'त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गत:[1]।' (273[2]) என்று இதர விஷயங்களிலே நைராச்யத்தைத்[k] தானே कण्ठोक्ति[l] பண்ணுகையாலும், பின்பு பெருமாளுக்கு விண்ணப்பம் செய்கிற போதும்

'परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च।
भवद्गतं मे राज्यं च जीवितं च सुखानि च ।।'[5]

என்று லங்கைச்வர்யாதிகளை அடைய[m] விட்டு எல்லாப் पुरुषार्थமுமான[n] தேவரீர் திருவடிகளைப் பற்றினேன் என்று விண்ணப்பம் செய்கையாலும் இவன் அநந்ய -ப்ரயோஜநனான अधिकारि[o] என்னுமிடம் सुव्यक्तம்[p].

11.2 பெருமாளும் அனுமானும் விபீஷணன் விரும்பியது இம்மைச் செல்வமே என்று கூறியதன் கருத்து

ஆன பின்பு 'राज्यं प्रार्थयमानस्तु बुद्धिपूर्वमिहागत:'[6]

a- கெட்ட தன்மையன்; b- நன்மையை உபதேசித்தல்; c- அவமதிக்கப் பட்டவன்; d- வருத்தம் மிகுத்து வரும் குரல்; e- மிக விரைதல்; f-தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தல்; g-எல்லா நிலைகளிலும்; h- தர்மத்தின் முக்கிய அம்சம்; i- மேலெழுந்த வாரியாகக் கவனிப்பதில் ருசியுடையர்; j- ரக்ஷகன்; k- ஆசையற்றமை; l- வாயிட்டுச் சொல்லுதல்; m- முழுதும்; n- பெரும் பயன்; o- வேறு பயனை நாடாதவன்; p- மிகத் தெளிவானது.

1. *ராமா(6-17-16) :* ராவணனால் கொடுஞ் சொற்கள் சொல்லப்பட்டு அடிமை போல் அவமதிக்கப்பட்டு நான் புத்திரர்களையும் மனைவியையும் விட்டுவிட்டு இராமனைச் சரணமடைந்தேன். (சுலோகம். 273)

2. उवाच च महाप्राज्ञः स्वरेण महता महान्।
सुग्रीवं तांश्च संप्रेक्ष्य सर्वान् वानरयूथपान् ।।

ராமா(17-11) : நல்ல அறிவு படைத்த விபீஷணன் பெருங்குரலால் வானரர்களைப் பார்த்துக் கூறினான்.

3. सर्वलोकशरण्याय राघवाय महात्मने।
निवेदयत मां क्षिप्रं विभीषणमुपस्थितम् ।।

ராமா(6-17-17) : என்னை விரைவில் இராமனிடம் ஸமர்ப்பியுங்கள்.

4. अव्यग्राश्च प्रहृष्टाश्च न भविष्यन्ति संगताः।
प्रणादश्च महानेष ततोऽस्य भयमागतम्।।

ராமா(6-18-14) : இவன் குரல் மிகப்பெரியது. அதனால் இவனுக்கு ஆபத்து வந்திருப்பது தெரிகின்றது.

5. *ராமா(6-19-5-6) :* இலங்கையை விட்டேன். தோழர்களை விட்டேன். செல்வத்தை விட்டேன். இனி எனக்கு இராச்சியம், வாழ்வு, சுகம் எல்லாம் உன்னிடமே அமைந்துள்ளன.

6. उद्योगं तव संप्रेक्ष्य मिथ्यावृत्तं च रावणम् ।
वालिनं च हतं श्रुत्वा सुग्रीवं चाभिषेचितम् ।
राज्यं प्रार्थयमानस्तु बुद्धिपूर्वमिहागतः।।

ராமா(6-17-67) : உன் முயற்சி பலிப்பதையும் ராவணன் செயல் பலியாதென்பதையும் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு அரசளித்ததையும் அறிந்து இராச்சியத்தை உன் வழியாகப் பெறலாமென்று அறிந்தே விபீஷணன் இங்கு வந்துள்ளான். (அனுமான் சொல்).

என்கிற திருவடிவாக்யமும், 'न वयं तत्कुलीनाश्च राज्यकाङ्क्षी च राक्षसः'[1] என்று பெருமாள் அருளிச்செய்த வார்த்தையும் ராம பக்தியாலே கலங்கின மஹாராஜருடைய கிளர்த்தியை[a] அடக்குகைக்கு ஈடாக நீதி சாஸ்த்ரங்களிலே சொல்லும் ராஜவ்ருத்தாந்தக் கட்டளையைக் காட்டினபடியாமத்தனை. திருவடியும் பெருமாளும் அருளிச் செய்த பாசுரமும் ஸ்ரீ விபீஷணாழ்வான் தன் பாசுரமும் விரோதித்தால் அந்தரங்க-ந்யாயத்தாலே[b] தன் பாசுரமே ப்ரபலமாகக் கடவது[c].

11.3 இராம கைங்கர்யத்தையே விரும்பிய விபீஷணனுக்கு இராமன் இலங்கை ஆட்சியை அளித்தது ஏன்? - விடை

அங்஗னேயாகில்

'अहं हत्वा दशग्रीवं सप्रहस्तं सबान्धवम्।
राजानं त्वां करिष्यामि सत्यमेतत् ब्रवीमि ते ।।'[2]

என்று ராவணனைக் கொன்று உம்மை ராஜ்யத்திலே முடிசூட்டக் கடவோம் என்று பெருமாள் அருளிச் செய்வானேன்? என்னில், அதுவும்

'शरीरारोग्यमर्थांश्च भोगांश्चैवानुषङ्गिकान्।
ददाति ध्यायिनां नित्यमपवर्गप्रदो हरिः ।।'[3]

என்கிற ந்யாயத்தாலே அடங்காத சரண்ய-ப்ரீதிக்குப்[d] போக்கு வீடான आनुषङ्गिक-भोगप्रदानம்[e] என்று கொள்ள ப்ராப்தம். ஆகையாலே யன்றோ 'முடிசூட்டக் கடவோம்' என்று அருளிச் செய்த பெருமாளுக்கு அதற்கு ஒரு மறுமாற்றம்[f] விண்ணப்பம் செய்யாதே,

'राक्षसानां वधे साह्यं लङ्कायाश्च प्रधर्षणे।
करिष्यामि यथाप्राणं प्रवेक्ष्यामि च वाहिनीम् ।।'[4]

என்று ஸர்வ-நிரபேக்ஷரான திருவடியைப் போலே அவஸர-उचितமான[h] அடிமை செய்யக் கடவேன் என்று ஸ்ரீ விபீஷணாழ்வான் விண்ணப்பம் செய்தது. இவன் धार्मिकत्वத்தை[i] வரமாக வேண்டிக் கொள்ள, ப்ரீதனான[j] ப்ரஹ்மா अमरत्वத்தையும்[k] கூடக் கொடுத்தாற்போலே அடிமை

செய்ய வேண்டிக்கொண்ட ஸ்ரீ விபீஷணாழ்வானுக்குப் பெருமாள் அடிமைக்கு உறுப்பாக[l] ஐச்வர்யத்தையும் கொடுத்தார்.

11.4 விபீஷணன் அரசாட்சியை ஏற்றது இராம கைங்கர்யத்திலேயே சேர்தல்

ஆகையாலே திருவடி நிலையை முன்னிட்டு ஸ்ரீபரதாழ்வான் நாட்டிலுள்ளாரை நியமித்திருந்தாற் போலே धर्म-संस्थापनार्थமாக[m] அவதீர்ணரான[n] பெருமாளுடைய नियोगத்தாலே[o] மட்டுப்படாத ராக்ஷஸரை வழிப்படுத்தி நடத்துகைக்காக ஸ்ரீ விபீஷண ஆழ்வான் ராஜ்யத்தை இசைகையால், இதுவும் आज्ञानुपालनமாகையாலே[p] கைங்கர்ய கோடியிலே அந்வயித்தது.

---

a - கொந்தளித்து எழுகை, கலவரம்; b - நேர்த் தொடர்புடையரது சொல்லையே உண்மையாய் எடுத்துக் கொள்ளும் முறை; c- வலிமையுடையது; d- ரக்ஷகனுடைய அன்பு; e- அவர்கள் விரும்பும் பலனைக் கொடுத்ததோடு நில்லாது வேண்டாத பலன்களையும் தானாகக் கொடுத்தல்; f- எதிர்ப் பேச்சு, ஆக்ஷேபம்; g- எந்தப் பலனையும் ஆசைப்படாத; h- அந்தந்த ஸமயத்துக்குரிய; i- தர்மத்திலேயே ஊன்றிய கருத்துடைமை; j- மகிழ்ச்சி அடைந்த; k- சாவற்ற சிரஞ்சீவித் தன்மை; l- அவசியம் வேண்டிய சாதனம்; m- தர்மத்தை நிலை நாட்டுவதற்காக; n- அவதாரம் செய்த; o- கட்டளை; p- கட்டளையை நிறைவேற்றல்.

1. न वयं तत्कुलीनाश्च राज्यकाङ्क्षी च राक्षसः।
पण्डिता हि भविष्यन्ति तस्मात् ग्राह्यो विभीषणः ।।

ராமா. (6-18-13) : நாம் ராவணனுக்குப் பங்காளிகளல்லர். விபீஷணன் ராவணனுக்குப் பங்காளியாதலால் அரசைப் பெற விரும்புகிறான். அரக்கர்கூட்டத்திலும் அறிவாளிகள் இருப்பர். ஆதலால் விபீஷணனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். (இராமன் சொல்).

2. ***ராமா(6-19-19) :*** நான் இராவணனை ப்ரஹஸ்தனோடும் உறவினர்களோடும் கொன்று உன்னை இலங்கையரசனாக்குகின்றேன். என்று ஸத்யமாய்க் கூறுகின்றேன். (இராமன் சொல்).

3. ***விஷ்ணுதர்(74-43) :*** எம்பெருமான் மோக்ஷத்தைக் கொடுப்பவன். ஆனாலும் தன்னைத் தியானிப்பவர்களுக்கு மோக்ஷத்துடன் அவர்கள் வேண்டாமலே நோயற்ற வாழ்வையும் செல்வத்தையும் மற்றும் உள்ள போகங்களையும் எப்பொழுதும் தானாகவே கொடுப்பான்.

4. ***ராமா(6-19-23) :*** அடியேன் உன் சேனையில் புகுந்து உயிருள்ளவரை இலங்கையை முற்றுகையிடுதலிலும் அரக்கர்களைக் கொல்வதிலும் துணை புரிவேன். (விபீஷணன் சொல்).

Scanned with CamScanner

11.5 பெருமாள் விபீஷணனுக்கு ஆணையிட்டு அரசளித்தல்

இவர் தமக்கு இசைவின்றிக்கே இருக்க, பெருமாளுடைய अनतिलचनीयமான[a] शपथ-पूर्वक-शासनத்தாலே[b] ராஜ்யம் பண்ணினார் என்னுமிடம் பெருமாள் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளுகிற போது விடை கொடுத்த பாசுரத்தாலே வெளியிடப் பட்டது.

'यावत् प्रजा धरिष्यन्ति तावत् त्वं वै विभीषण।
राक्षसेन्द्र महावीर्य लङ्कास्थ: त्वं धरिष्यसि ॥

शाशितस्त्वं सखित्वेन कार्यं ते मम शासनम् ।
प्रजा: संरक्ष धर्मेण नोत्तरं वक्तुमर्हसि ॥'[1]

என்று மிறுக்கோடேயிறே[c] பெருமாள் இவரை ராஜ்யத்திலே இருக்க இசைவித்தது. இப்படி இவன் அநந்யப்ரயோஜநனாகையாலேயிறே[d] இவனுக்குத் தம்மிலும் சீரிய கோயில் ஆழ்வாரை எழுந்தருளுவித்துக் கொடுத்தது.

12 ப்ரபத்தி மோக்ஷமளவாக எல்லாப் பயனையும் தருதல்

இப்படியன்றிக்கே आपात-प्रतीति-पक्षத்தாலே[e] இவன் ஐச்வர்யார்த்தியானாலும்[f]ஞூ 'मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन'[2] 'अभयं सर्वभूतेभ्यो ददाम्येतत् व्रतं मम'[3] என்கிற பொதுவான பாசுரங்களாலே शरण्य- அபிப்ராயத்தைப்[g] பார்த்தால் ப்ரபத்தியானது सामान्येन[h] மோக்ஷ - பர்யந்த- ஸகல - புருஷார்த்த - ஸாதநம்[i] என்னுமிடம் தெளியலாம்.

ப்ரகரண தாத்பர்ய நிர்ணயம் முற்றும்

அதிகாரம் 5: சரண்ய சீலப்பரகாசம்

(ரக்ஷகனான பெருமாள் பண்பை வெளியிடுதல்)

13. பரத்வமும் ஸௌலப்யமும் சேர்ந்தால்தான் பயன் உண்டு

இப்படி தன் अभिमत-सिद्धिக்காக[j] शरणागतனான ஸ்ரீ விபீஷணாழ்வான் 'सर्वलोकशरण्याय' (272) என்கிற அர்த்தத்தை ''राघवाय महात्मने' (272) என்று सौलभ्यத்தாலும் परत्वத்தாலும் साधिக்கிறான்.

த்ருணம்[k] ஸுலபமேயாகிலும்[l] ஒன்றுக்கு உறுப்பல்லாமையாலே அநாதரணீயம்[m] ஸுமேரு ஆதரணீயமேயாகிலும்[n] दुर्लभமாகையாலே[o] अनुपयुक्तம்[p]. ஆகையாலே பரத்வமும் ஸௌலப்யமும் அபேக்ஷிதம்[q].

सर्वलोकशरण्याय-உங்களுக்குப் போலே எனக்கும் பெருமாள் பக்கலிலே கூறு உண்டு என்கிறான். அங்ஙனன்றிக்கே யாவனொருவனோடே ஒரு குடல் துவக்காலே நானும் கூட உங்களுக்குக் கல்லும் தடியும் எடுக்க வேண்டும் படியாய் இருக்கிறேன். அப்படி महापराधனான[r] ராவணன் தனக்கும் கூடப் பெருமாள் சரண்யராய்க்கிடி கோள் இருப்பது! இப்படிப் பொதுவான சரண்ய விஷயத்தில் ருசியில்லாமையாலே துராத்மாவான ராவணன் தன் கூறு இழக்கிறானத்தனை.

---

a- மீற முடியாத; b- ஆணையிட்டுக் கூறிய ஆஜ்ஞை; c- சிரமம்; d- வேறு பயனை நாடாதவன்; e- மேலெழுந்த வாரியாக நோக்கும் முறை; f- செல்வத்தை விரும்புமவன்; g-ரக்ஷகனுடைய உள்ளக் கருத்து; h- பொதுவாக; i- மோக்ஷம் வரை உள்ள எல்லாப் பயன்களையும் தரவல்லது; j- விரும்பியதைப் பெறுதல் ; k- புல்; l- எளிதில் அகப்படுவது; m- புறக்கணிக்க உரியது; n- ஆதரிக்க ஏற்றது; o - கிடைக்க அரிது; p- பயன் படாதது; q- அவசியம் வேண்டியது; r- பெருங்குற்றவாளன்.

1 **ராமா(7-108- 27-29) :** அரக்கர் தலைவனாய் மிக்க வீர்யமுடையனான விபீஷண! குடிமக்கள் உயிர் வாழும் வரை நீ இலங்கையில் இருந்து அவர்களைக் காக்கக் கடவாய் ...... நீ எனக்குத் தோழனாதலின் என் கட்டளைப்படி நடக்க வேண்டுமென்று ஆணையிட்டுக் கூறுகின்றேன். தர்மம் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்று. இதற்கு மறுப்புக் கூறக்கூடாது. (இராமன் சொல்).

2 **ராமா(6-18-3) :** தோழன் என்று பாவனை செய்தவனாயினும் என்னிடம் வந்து சரணம் அடைந்தவனை என்ன ஆபத்து எனக்கு வருவதாயினும் கைவிடமாட்டேன். அவனிடம் குற்றம் இருப்பினும் இருக்கட்டும். அவனைக் கைவிடாது காத்தால் பெரியோர்கள் கொண்டாடுவர். (இராமன் சொல்) சுலோகம் : *(286)*

3. **ராமா(6-18-34) :** ஒரே தடவை ப்ரபத்தி செய்தவனுக்கும் உனக்கு அடிமையாகின்றேன் என்பவனுக்கும் எல்லாப் பிராணிகளிடமிருந்தும் பயமில்லாமையை எல்லோருக்குமே அளிக்கின்றேன். இதுவே என்னுடைய விரதம். (இராமன் சொல்) சுலோகம் : *(317)*

Scanned with CamScanner

14. பரரூபத்தைக் காட்டிலும் அவதார நிலையிலேயே பெருமாள் பெருமை மிக வெளியாதல் - விளக்கம்

'राघवाय' 'महात्मने' என்று पद-द्वय-समभिव्याहारத்தாலே[a] 'நிலை வரம்பில் பல பிறப்பாய் ஒளிவரு முழுநலம்'[1] என்கிறபடியே அவதார தசையிலே[b] பரதசையிலும் காட்டில்[c] अतिशयितமான[d] மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறான்.

राघवाय- பெருமாளுக்குச் சரணாகத ரக்ஷணம் रघु முதலாகப் போருகிற குலதர்மமன்றோ ?

महात्मने- கடலைக் கையிட்டு இறைத்து முடிய வொண்ணாதாப் போலே விசேஷித்துச் சொல்லி முடிய வொண்ணாது இம் மாஹாத்ம்யம். பெருமாள் आश्रित-ரக்ஷணத்தில்[e] ஒருப்பட்டால், ஆதித்யன் புறப்பட்டால் இருட்டுப் பின் காணவொண்ணாதாப் போலே வரத்தாலே பூண்கட்டி வைக்கிற बहुमुख- ராக்ஷஸரையும்[f] முன் காண வொண்ணாதபடி இருக்கும் இம் மாஹாத்ம்யம்.

14.1 அகம்பநன் புகழ்ந்த இராமன் பெருமைகள்

இவ்வவதார दशैயில் உண்டான निरतिशय- மஹாத்ம்யத்தைப்[g] परदार-दर्शन-पराङ्मुखரான[h] பெருமாள் திருமுன்பே நின்று 'कथञ्चिदहमागतः'[2] என்கிறபடியே 'பெண்ணுடையுடுத்து உரு மாற்றி நானொருவனும் தப்பிப் போந்தேன்' என்று ராவணனுக்கு जनस्थान-வ்ருத்தாந்தத்தைச் சொன்ன அகம்பநன் வாக்யத்தாலே மஹர்ஷி வெளியிட்டான்.

'असाध्यः कुपितो रामो विक्रमेण महायशाः।
आपगायाः सुपूर्णाया वेगं परिहरेत् शरैः ॥

सताराग्रहनक्षत्रं नभश्चाप्यवसादयेत्।
असौ रामस्तु मज्जन्तीं श्रीमानभ्युद्धरेत् महीम् ॥

भित्त्वा वेलां समुद्रस्य लोकानाप्लावयेदिमान्।
वेगं वाऽपि समुद्रस्य वायुं वा विधमेत् शरैः ॥

संहृत्य वा पुनर्लोकान् विक्रमेण महायशाः।
शक्तः स पुरुषव्याघ्रः स्रष्टुं पुनरिमाः प्रजाः ॥

न हि रामो दशग्रीव शक्यो जेतुं त्वया युधि।
रक्षसां वाऽपि लोकेन स्वर्गः पापजनैरिव ॥'[3]

என்கிறபடியே ராவண கோஷ்டியிலே அவனுக்கு ஆப்தனானவன் ப்ரஸித்தமாக்கின மாஹாத்ம்யம் இது.

14.2 இராவணனும் போற்றும் இராமன் பெருமைகள்

பெருமாளுடனே பொருது இளைத்துக் கலங்கிய ராவணன் தெளிந்து தன் தேரை மீட்டுக் கொண்டு போன ஸாரதியை

---

a- இரு சொற்களும் கூடுதல்; b- இப் பூமியில் அவதரிக்கும் நிலை; c- பரம பதநாதனாயுள்ள நிலை; d- மேம்பட்ட , அதிகமான; e- அடியார்களைக் காப்பது; f- பல்வகை அரக்கர்; g- எல்லையற்ற பெருமை; h-பிறர் மனைவியைப் பார்ப்பதையும் வெறுப்பவர்.

1. எளிவரும் இயல்வினன்; நிலைவரம்பிலபலபிறப்பாய்,
ஒளிவருமுழுநலம் முதலில கேடில வீடாம்,
தெளிதருநிலமையது ஒழிவிலன் முழுவதும் இறையோன்,
அளிவரும் அருளினொடு அகத்தனன்புறத்தனன் அமைந்தே.

திருவாய். (1-3-2): எம்பெருமான் மிக எளிமையான ஸ்வபாவ முடையன். பிறவிகளிலோ செயல்களிலோ உயர்வு தாழ்வு பாராது எந்தப் பிறவியையும் எந்தச் செயலையும் செய்பவன். சாச்வதமாய் தன் பூர்ண மான ஆநந்தம் முதலிய கல்யாண குணங்களுடன் தன்னை அனுபவித்த லாகிய மோக்ஷத்தைத் தருபவன். இவன் குளிர்ந்த கருணையோடு அடியார்க்கு எளியனாய் மற்றவர்களுக்கு அரியனாய் விளங்குபவன்.

2. *ராமா* **(3- 31 - 2) :** ஜநஸ்தாநத்தில் இருந்த பல அரக்கர்கள் கொல்லப் பட்டனர். போரில் கரனும் கொல்லப்பட்டான். நான் மிகக் கஷ்டப்பட்டு ஒரு வழியாய்ப் பெண்ணுடையுடுத்து வந்து விட்டேன்.

जनस्थानस्थिता राजन् राक्षसा बहवो हताः।
खरश्च निहतः संख्ये कथंचिदहमागतः॥

3. *ராமா* **(3-31-23-27) :** இராமன் கோபம் கொண்டால் ஒருவராலும் அவனை எதிர்க்க முடியாது. வீரியத்தால் மிக்க் புகழ் பெற்றவன். நதியின் பெரிய முழு வெள்ளத்தையும் அம்புகளால் தடுப்பான். நவக்கிரஹங்க ளையும் நக்ஷத்ரங்களையும் ஆகாயத்தையுமே சிதறவடிப்பான் கடலில் மூழ்கிய பூமியைக் கூடக் கிளப்பிக் கொண்டு வந்துவிடுவான். கடலின் கரையை உடைத்து உலகங்களை அதில் மூழ்கச் செய்வான். அம்புகளால் கடலின் வேகத்தையும் வாயுவையும் அடக்குவான். உலகங்களை அழித்து மறுபடி படைக்கவும் ஆற்றல் உள்ளவன். உனக்குப் பத்துத் தலைகள் இருந்தாலும் போரில் அவனை உன்னால் வெல்லமுடியாது. அரக்கர்கள் எல்லாரும் ஒன்றுகூடினாலும் அவனை வெல்ல முடியாது. பாபிகள் பலர் கூடிவிட்டதால் மட்டும் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட முடியுமா?

Scanned with CamScanner

வெறுத்துச் சொல்லும் போதும் 'शत्रोः प्रख्यातवीर्यस्य रञ्जनीयस्य विक्रमैः'[1] என்று மேலே இவ்வவதார மாஹாத்ம்யத்தைச் சொல்லக் கடவனிறே.

14.3 வாநரர்கள் புகழ்ந்த இராமன் பெருமைகள் - விளக்கம்

இப்படி ஸ்ரீவிபிஷணாழ்வான் 'महात्मने' என்றும் 'राघवाय' என்றும் சுருங்கச் சொன்ன பரத்வமும் ஸௌலப்யமும் மேலே முதலிகள் பாசுரத்தாலும் வெளியிடப்பட்டது. எங்ஙனே என்னில்

'अज्ञातं नास्ति ते किञ्चित् त्रिषु लोकेषु राघव ।
आत्मानं पूजयन् राम पृच्छस्यस्मान् सुहृत्तया।'[2]

என்றார்கள். இவ்வர்த்தந்தன்னையே

'त्वं हि सत्यव्रतः शूरो धार्मिको दृढविक्रमः।
परीक्ष्यकारी स्मृतिमान् निसृष्टात्मा सुहृत्सु च ।।'[3]

என்று விவரித்தார்கள்.

त्वं हि- என்கிற இத்தாலே மேல் சொல்லப்படுகிற குணங்களுக்கு எல்லாம் அதிசயாவஹமான[a] ஸ்வரூபவைலக்ஷண்யம்[b] சொல்லுகிறது. பொற்றாமரைப் பூவின் பரிமளத்திற்கு அல்லாத தாமரைப்பூவின் பரிமளத்தைக் காட்டில் ஆச்ரய - வைலக்ஷண்யத்தாலும்[c] अतिशयம்[d] உண்டாயிருக்குமிறே. இவ்வர்த்தத்தை

'गुणायत्तं लोके गुणिषु हि मतं मङ्गळपदं विपर्यस्तं हस्तिक्षितिधरपते तत् त्वयि पुनः।
गुणाः सत्यज्ञानप्रभृतय उत त्वद्गततया शुभीभूयं याता इति हि निरणैष्म श्रुतिवशात्।।'[4]

என்கிற ச்லோகத்திலே उपपादिத்தார்கள்[e].

'सत्यव्रतः' - ஸர்வலோக சரண்யரான தேவரீருடைய சரணாகத-ரக்ஷண-வ்ரதத்தை ராவண-பர்யந்தமாக[f] எவ்விஷயத்திலே விலக்கலாம்?

'शूरः' - இவ் வ்ரதத்திற்கு விரோதிகளையथार्हமாகத்[g] தேவரீர் அமோघங்களான[h] அம்புகளாலேயாதல் உத்தரங்களாலேயாதல்[i] வெல்லும் சேவகம் வேறொருவருக்கு உண்டோ?

'धार्मिकः' - சரணாகத ரக்ஷண தர்மத்திலே நிலையுடையீர் தேவரீரேயல்லரோ?

'दृढविक्रमः' -ஆச்ரிதார்த்தமான தேவரீருடைய பராக்ரமத்தை விரோதிகளாலேயாதல் ஆச்ரிதர்பக்கல் குற்றம் காட்டும் பரிவராலேயாதல் விலக்கப்போமோ?

'परीक्ष्यकारी' - ஸர்வஜ்ஞராய்[j] அஷ்டாங்கையான புத்தியாலே[5]

---

a - பெருமையைத் தரவல்ல; b- ஆத்மஸ்வரூபத்தின் சிறப்பு; c- இருப்பிடத்தின் சிறப்பு; d- பெருமை; e- விளக்கிக் காட்டினார்கள்; f- ¬ வரையிலு மாக; g- அவரவருக்குத் தக்கவாறு; h- வீண் போகாத; i- ஸமாதாநங்கள்; j- எல்லாம் அறிந்தவர்.

1. शत्रोः प्रख्यातवीर्यस्य रञ्जनीयस्य विक्रमैः।
पश्यतो युद्धलुब्धोऽहं कृतः कापुरुषस्त्वया।।

ராமா(6-106-6) : (ஸாரதிக்கு இராவணன் பேச்சு) என் பகைவனான ராமன் மஹா வீரனென்று புகழ் படைத்தவன். என் வீரச் செயல்களால் அவனை ஸந்தோஷப்படுத்த நினைத்தேன். நான் போரில் ஆசையுடையவன். என் பகைவனின் கண்முன் என்னைக் கோழையாய்ப் பேடியாக்கிவிட்டாய்.

2. **ராமா(6-17-35):** (வானரர்களின் சொல்) ஸ்வாமி ஸகல லோகங்களிலும் உனக்குத் தெரியாத விஷயம் எதுவும் இல்லை. இராமன் வானரர்களுக்குத் தோழன் என்ற புகழை உலகுக்குத் தெரிவிப்பதற்காக எங்கள் அபிப்பிராயத்தைக் கேட்கின்றாய்.

3. **ராமா(6-17-36) :** நீ சொன்ன சொல் தவறாதவன், சூரன், தர்மத்தைக் கைவிடாதவன், உறுதியான வீர்யமுடையவன், ஆராய்ந்து செயல் புரிபவன், நன்றியறிவுடையன், நண்பர்களுக்குக் கட்டுப்பட்டவன்.

4. **வரத ஸ்த(11) :** பேரருளாளப் பெருமானே! உலகில் நற் குணமுள்ளவர்களைக் குறித்து நல்லவர்கள் என்று சொல்வது அவர்களிடம் உள்ள குணங்களைப் பொறுத்ததாகும். இந்த முறை உன் விஷயத்தில் மாறிவிட்டது. ஸத்யம் ஞானம் முதலிய குணங்கள் உன்னிடம் சேர்ந்ததால் நற்குணங்களெனப் போற்றப் படுகின்றன என்று சுருதியும் முடிவு செய்துள்ளது. ஆகவே உன்னால் குணங்களுக்குப் பெருமையேயன்றிக் குணங்களால் உனக்குப் பெருமை வருவதில்லை என்று முடிவு கண்டோம்.

5. **புத்திக்கு எட்டு அங்கங்கள் -** (i) விஷயத்தை மனத்தில் வாங்குதல், (ii) மனத்தில் தரித்தல் (iii) மறுபடி நினைத்தல், (iv) பிறருக்கு எடுத்துக்கூறுதல், (v) பிறர் கூறாத விஷயங்களையும் அறிதல், (vi) பிறர் கூறியவற்றில் வேண்டாத சிலவற்றைத் தள்ளுதல், (vii) விஷயங்களைத் தெளிவாய் அறிதல், (viii) உண்மையான அர்த்தத்தை அறிதல்.

Scanned with CamScanner

ஆராய்ந்து செய்தருளும் கார்யங்களுக்கு அடியோங்களைக் கேட்க வேண்டுவதுண்டோ?

'स्मृतिमान्' - தேவரீர் வஸிஷ்ட்டாதிகளான ஜ்ஞாந-வ்ருத்தர்களுக்கும்[a] 'ராம குருக்கள்' என்று ஒரு தரம் கொடுக்கைக்கா அவர்கள் பக்கலிலே கேட்டருளின் அர்த்தங்களில் அவஸரங்களில்[b] உதவாதது உண்டோ ?

'स्मृतिमान्'

'न स्मरत्यपकाराणां शतमप्यात्मवत्तया।
कथंचिदुपकारेण कृतेनैकेन तुष्यति।।'[1]

என்னும் படியன்றோ தேவரீருடைய க்ருதஜ்ஞதை இருக்கும்படி .

'निसृष्टात्मा सुहृत्सु च' – 'वरद सकलमेतत् संश्रितार्थं चकर्थ'[2] என்னும்படி தேவரீருடைய ஆத்ம ஆத்மீயங்களையெல்லாம் ஆச்ரிதரான அடியோங்கள் இட்ட வழக்காக்கியன்றோ தேவரீர் வைப்பது ஆகையால் दाक्षिण्य - பரதந்த்ரரான[d] தேவரீர் திருவுள்ளத்தாலே கோரின காரியத்தைக் காபேயரான[e] எங்களையும் இசைவித்துக் கொண்டு செய்தருளுவதாக வன்றோ எங்களைக் கேட்டருளுகிறது!

15 விபீஷணனைக் கைக்கொள்ள வானரர்களின் ஆக்ஷேபம் - அனுமான் மட்டும் இசைதல்

இப்படிப் பெருமாளைக் கொண்டாடி, பரிவாலே கலங்கின அங்கத-சரப-ஜாம்பவத்-प्रभृतिகளான முதலிகள் சில हेत्वाभासங்களை[f] ஹேதுக்களாகக் கொண்டு विभीषण–परिग्रहத்தைத்[g] கடுக இசையாதொழிய, தத்த்வவித்தாய்[h] ஸந்மந்த்ரியான திருவடி அவர்கள் சொன்ன हेत्वाभासங்களை எல்லாம் प्रतिक्षेपित्து[i] सुपरीक्षितங்களான[j] निर्दोष- குணங்களாலே[k] ஸ்ரீ விபீஷணாழ்வான் परिग्राह्यன்[l] என்று விண்ணப்பம் செய்தான்.

16 இராமன் தனது உறுதியான கொள்கையைச் சுருங்கக் கூறல்

அவ்வளவில் பெருமாள் சரணாகதனை நலியச் சொல்லுகிற திரளிலே 'இவன் परिग्राह्यன்! என்று சொல்லுவாரையும் பெற்றோம் என்று திருவுள்ளம் உகந்து,

'अथ रामः प्रसन्नात्मा श्रुत्वा वायुसुतस्य ह।
प्रत्यभाषत दुर्धर्षः श्रुतवानात्मनि स्थितम्।।' (1)

என்கிறபடியே अकम्पनीयமான[m] स्वमतத்தை அருளிச்செய்யத் தொடங்கினார். விபீஷணன் 'सदोषன், ஆகையாலே शङ्कनीयன்[n] என்ற अङ्गदादि-मतங்களுக்கும் 'இவன் निर्दोषன், ஆகையால் परिग्राह्यன்' என்கிற திருவடி மதத்திற்கும் अविरुद्धமாக[o] 'सदोषனேயாகிலும் சரணகதன் என்று பேரிட்டு வந்தவன் परिग्राह्यன்[p] என்று தாம் அருளிச் செய்யப் புகுகிறमतம் அவ்வோலக்கத்தில்[q] सर्व-विरुद्धமாகையாலே[r] இத்தை எல்லாரும் கூட अनादरிப்பார்கள்[s] என்று பார்த்தருளி

a- அறிவினால் முதிர்ந்தவர்கள்; b- உரிய ஸமயங்கள்; c- நன்றியறிவு; d- தாக்ஷிண்யத்துக்கு வசப்பட்ட; e- குரங்குக் கூட்டத்தினர்; f- போலிக் காரணங்கள்; g- விபீஷணனை ஏற்றுக் கொள்ளுதல்; h- உண்மை நிலையை அறிந்தவன்; i- மறுப்புக் கூறி; j- நன்கு சோதனை செய்யப்பட்ட; k- குற்றம் கலவாத; l- கைக்கொள்ள உரியன்; m- ஒருவராலும் அசைக்க முடியாத; n- ஸந்தேகிப்பதற்கு உரியன்; o- முரண்படாதவாறு; p- கைக்கொள்ள உரியன்; q- அந்தக் கோஷ்டியில்; r- எல்லோருக்கும் விரோதமானது; s- புறக்கணிப்பார்கள்.

1. **ராமா (2-1-11) :** இராமபிரான் மிக்க பெருந்தன்மையுடையனாதலின் ஒருவன் நூற்றுக்கணக்கான குற்றங்களைச் செய்தாலும் அவற்றை நினைப்பதேயில்லை. ஏதாவது வகையில் ஒருவன் ஓர் உதவி செய்தாலும் அதனால் மகிழ்கின்றான்.

2. परिजनपरिबर्हाभूषणान्यायुधानि प्रवरगुणगणाश्च ज्ञानशक्त्यादयस्ते ।
परमपदमथाण्डान्यात्मदेहस्तथाऽऽत्मा वरद सकलमेतत् संश्रितार्थं चकर्थ ।।

வரத ஸ்த. (63) : பேரருளாளப் பெருமானே அனந்தன் கருடன் முதலிய பரிவாரங்களையும், குடை சாமரம் முதலிய எடுப்புக்களையும், கிரீடம் குண்டலம் முதலிய திருவாபரணங்களையும், திருவாழி திருச்சங்கு முதலிய திருவாயுதங்களையும், ஞானம் சக்தி முதலிய உயர் குணங்களையும், பரமபதத்தையும், அண்டங்களையும், திருமேனியையும், திவ்ய ஆத்ம ஸ்வரூபத்தையும், அனைத்தையும் அடியார்களின் பயனுக்காகவே ஆக்கிவிட்டாய்.

3. **ராமா(6-18-1) :** பெரியோர்களிடம் நன்கு கேட்டறிந்த இராமபிரான் வானரர்களின் ஆக்ஷேபங்களால் மனம் கலங்காமல் அனுமானுடைய வார்த்தைகளால் மனம் தெளிந்து தன் கருத்தை வெளியிட்டு விடை கூறினான்.

Scanned with CamScanner

'ममापि तु विवक्षाऽस्ति काचित् प्रति विभीषणम्।
श्रोतुमिच्छामि तत् सर्वं भवद्भिः श्रेयसि स्थितैः ॥'[1]

என்று 'நம்முடைய மதத்தை நாமும் சொல்ல நினையா நின்றோம்; அதனுடைய அநுஷ்டாநம் பின்பு பார்த்துக் கொள்கிறோம். நமக்குப் பரிவரான நீங்கள் நாம் சொல்லுகிற வாக்யத்தை விபீஷணனுடைய சரணாகதி வாக்யம் பட்டது படுத்தி அநாதரியாதே கேட்டுத் தரவேண்டும்' என்று இரந்தருளினார்.

இப்படி முதலிகள் செவிதாழ்க்கும்படி இரந்து தம்முடைய ஸ்வபாவம் சொல்லுவாரைப் போலே ஸ்வஸித்தாந்தத்தை ஸமீசிநமான[a] ஹேதுவோடே சுருங்க அருளிச்செய்கிறார்.

मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन।
दोषो यद्यपि तस्य स्यात् सतामेतदगर्हितम्॥ ராமா (6-18-3)

17. 'मित्रभावेन संप्राप्त' *சுலோக விவரணம்*

பெருமாள் தம்முடைய சீர்மையாலே ஆச்ரிதனைத் தம்மோடு ஒக்கப்பார்த்தருளி 'சரணாகதன்' என்று புல்லிதாகச்[b] சொல்லமாட்டாமல் 'मित्रभावेन' என்று அருளிச்செய்கிறார். பெருமாளோடு तुल्यशीलैயான[c] பிராட்டியும்.

'विदितः स हि धर्मज्ञः शरणागतवत्सलः ।
तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि ।' (264[1])

என்று சரணாகதி சப்த விஷயத்திலே மைத்ரீ என்று அருளிச் செய்தாளிறே.

'मित्रभावेन'-मित्रत्वेन; இத்தால் இங்கு ஆநுகூல்ய ஸங்கல்பாதி பூர்வமாகப் பண்ணின ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணம் ஸூசித மாகிறது. அங்ஙனன்றிக்கே मित्र-भावनै யால்[d] என்னவுமாம். உள்ளில்லையேயாகிலும் 'சரணாகதன்' என்று பேரிட்டு வந்தாரை நாம் விடமாட்டோம் என்கிறார். இப்படி வ்யாஜ மாத்ரஸாபேக்ஷமான[e] பெருமாள் திருவுள்ளத்தை அடியொற்றி

पापीयसोऽपि शरणागतिशब्दभाजो नोपेक्षणं मम तवोचितमीश्वरस्य।
त्वद्ज्ञानशक्तिकरुणासु सतीषु नैव पापं पराक्रमितुमर्हति मामकीनम्॥[2]

என்று பூர்வர்கள் விண்ணப்பம் செய்தார்களிறே.

'संप्राप्तं' - இவன் ராவண - ग्राह-गृहीतனாய்க்[f] கடலுக்கு அக்கரையிலே நின்று 'राघवं शरणं गतः' (273[2]) என்றானாகில் நாம் அதித்வரையோடே[g] வைநதேய-கதியாலே[h] அக்கரைக்கே செல்லவேண்டியிருக்க, நாம் இருந்த இடத்திலே पङ्गोपरि गङ्गा-निपतन ந்யாத்தாலே[i] வந்த இவனை நாம் விடும்படி என்?

संप्राप्तं = सम्यक् प्राप्तं. இங்கு ஸம்யக்த்வமாவது - 'त्यक्त्वा पुत्रांश्च दारांश्च' (273[2])

'परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च ।
भवद्गतं मे राज्यं च जीवितं च सुखानि च ॥' (275[5])

என்கிறபடியே हेय-उपादेय-विभागம்[j] பண்ணி, கழிக்கவேண்டுவது கழித்து, கைக்கொள்ள வேண்டுவது கைக்கொண்டு, 'சரணாகதன்' என்கிற உக்தி மாத்ரமே[k] பற்றாசாகப் பற்றி, अतिशङ्कै தீர்ந்து[l], அந்தரங்கரைப் புருஷகாரமாக[m] முன்னிட்டுக் கொண்டு வருகை.

---

a- சிறந்த; b- தாழ்வாக; c- ஒத்த தன்மையுடையவன்; d- தோழன் என்ற பாவனையுடன்; e- சிறு செயலை மட்டும் எதிர் பார்க்கின்ற; f- ராவணனாகிய முதலையால் பிடிக்கப்பட்டவன்; g- மிக்க விரைவு; h- கருடன் பறப்பது போன்ற நடை; i - நொண்டியின் தலை மீது கங்கை வந்து விழுதல் என்ற நீதி; j- விலக்க உரியது - கைக் கொள்ள உரியது என்ற பாகுபாடு; k- சொல் மட்டும்; l- பெருத்த ஐயம்; m- பரிந்து பேசுபவர்.

1. **ராமா(6-18-2) :** விபீஷணனைப் பற்றி நானும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என் நன்மையை விரும்புகிற நீங்கள் அவற்றை முழுதும் கேட்க வேண்டும். (இராமன் சொல்).

2. **அதிமாநுஷ(61) :** எம்பெருமானே! மஹாபாபியாயிருந்தாலும் சரணாகதிச் சொல்லச் சொல்லிய என்னைப் புறக்கணிப்பது ஈச்வரனான உனக்கு ஏற்றதன்று. உன்னிடம் ஞானம் - சக்தி - கருணை இவை இருக்கும் போது என் பாபம் அவற்றை எதிர்த்து நிற்கவல்லதாகாது.

Scanned with CamScanner

'न त्यजेयं' - இவன் परित्याज्यனோ[a] परिग्राह्यனோ[b] என்கிற மீமாம்ஸை[c] எதற்கு உறுப்பாகிறது? 'சரணாகதன்' என்கிற शब्दத்தை நம் செவிப்படுத்தினவனை நாம் விடவல்லோமோ?

'कथञ्चन' - சரணாகதனுக்கு குணங்களில்லையேயாகிலும், दोषங்கள் प्रचुरங்களேயாகிலும்[d], இவனைக் கைக்கொள்ளுகை பரிவரானார்க்கு अभिमतமன்றேயாகிலும்[e], இவனைக் கைக் கொண்டால் மேல் दृष्ट-अदृष्ट-प्रत्यवाय-सहस्रம்[f] உண்டேயாகிலும், ஒரு படிக்கும் நாம் இவனை விடமாட்டோம்.

இச்சுலோகத்தில் पूर्वार्धத்தாலே[g] 'सन्धां[1] इत्यादियान श्रुतिवाक्यம் उपबृंहितமாயிற்று[h]. 'உன்னுடையவன் நான், உனக்கே भरம்' என்று ஒருகால் உறவு பண்ணுவதடியாக ஒரு காலத்திலும் இவனை ஸர்வேச்வரன் விடான் என்றிறே இச்श्रुतियின் பொருள்!

இப்படி ஒருபடியாலும் சரணாகதனைத் தாம் விட மாட்டாத ஸ்வபாவத்தை அருளிச் செய்து முதலிகள் விண்ணப்பம் செய்த परित्याज्यता-हेतुக்களான[i] दोषங்களுக்கு साध्यத்தோடு[j] வ்யாப்தி[k] இல்லாமையாலே அவை[l] உண்டே யாகிலும் अकिञ्चित्करம்[m] என்கிற திருவுள்ளத்தாலே அவர்கள் சங்கித்த[n] தோஷங்களுடைய स्वरूप-सद्भावத்தை[o] இசைகிறார்.

'दोषो यद्यपि तस्य स्यात्' - இவ்விடத்தில் अभ्यनुज्ञை[p] தோற்றுகைக்காகவாதல், संभावनैயைப்[q] பற்றவாதல், दुष्टனையும் சரணாகத - சப்தமாத்ரத்தாலே[r] परिग्रहित्தார்[s] என்கிற महागुण-सिद्ध्यर्थமாக[t] दोष-प्रार्थनैயைப்[u] பற்றவாதல் 'स्यात्' என்கிறார். 'दोषः' என்கிற ஸாமாந்ய - निर्देशத்திற்கு[v] நீங்கள் சொன்ன தோஷங்களாகவுமாம், நீங்கள் சொல்லாத साक्षात् रावणादि-गत-दोषान्तरங்களாகவுமாம்[w] என்று கருத்து. இத்दोषங்களெல்லாம் परित्याज्यता-हेतुக்களாவது[y] சரணாகத-வ்யதிரிக்த[z] விஷயத்திலோ என்று 'तस्य स्यात्' என்கிற ஸர்வலோக சரண்யரான பெருமாளுக்குத் திருவுள்ளம். ஆகையாலேயிறே 'यदि वा रावणः स्वयम्'[2] என்றும், ராவணன் தன்னைக் குறித்தும் 'न चेत् शरणमभ्येषि' (263[5]) என்றும் அருளிச்செய்கிறது.

'தேவரீர்आर्द्र-स्वभावராகையாலே[A] - दुष्ट-परिग्रहம்[B] பண்ணி னால் நாட்டிலே சிஷ்ட-கர்ஹை[C] பிறவாதோ?' என்று முதலி

களுக்குக் கருத்தாக அதற்கும் உத்தரம்[D] அருளிச் செய்கிறார்-
सतां एतत् अगर्हितम्.

'अगर्हितं'-गर्हितात् अन्यत् पूजितं[E] என்றபடி. ''நாம் சரணாகதனை दोषம் பாராதே परिग्रहित्தால்[F] वध्यனேயாகிலும்[G] சரணாகதனை அழியக் கொடுக்கலாகாது' என்கிற श्रुत्यर्थத்தை[3] அறிந்து அநுஷ்டித்துப் போருகிற வஸிஷ்ட்ட பகவான் - விச்வாமித்ர பகவான் உள்ளிட்ட ஸத்துக்கள் 'நாம் பண்ணின धर्मோப தேசம் फलித்தது' என்று கொண்டாடும்படியாம். நீங்கள் சொல்லுகிறபடியே கேட்டு நாம் கைவிட்டால் அவர்கள் நம்மை गर्हிக்கும்படியாம்[H]. ஆகையால் நமக்குக் கார்யம் தப்பாமைக்கு நீதி சொல்லப் பரிவும் நிரப்பமுமுடைய[I] நீங்கள்

---

a - கை விடத் தக்கவனோ; b- கைக் கொள்ள உரியனோ; c- ஆராய்ச்சி; d- மிகுதியானவை; e- இஷ்டமானது; f- இம்மையிலும் மறுமையிலும் பலன் விளைவிக்கும் ஆயிரக்கணக்கான பாபங்கள்; g - முற் பாதி; h- பொருள் விளக்கப் பட்டதாயிற்று; i- கை விடுதற்குக் காரணம்; j- ஸாதிக்க வேண்டியது (கைவிட வேண்டியமை); k- பொருத்தமான சேர்க்கை (விவரணத்தில் தெளிக); l- தோஷங்கள்; m- பயன்தர இயலாதன; n- ஸந்தேஹித்த; o - குற்றம் இருப்பது; p- இருக்கட்டும் என்ற அனுமதி; q- ஒருகால் இருக்கலாமென்ற ஊகம்; r- சரணம் அடைந்ததாகச் சொல்லால் மட்டும் ; s- கைக் கொண்டார்; t- சிறந்த குணம் பெறுதல்; u- குற்றம் இருப்பதை வேண்டுதல்; v- பொதுவாகக் குறிப்பிட்டமை; w- நேராக; இராவணன் முதலியவர்களிடம் உள்ள குற்றங்கள்; y- கைவிடக் காரணமாவது; z- சரணமடைந்தவனைத் தவிர மற்றவர்கள் விஷயத்தில்; A - குளிர்ந்த தன்மையர்; B- துஷ்டனைக் கைக்கொள்ளல்; C- பெரியோர்களின் பழிப்பு; D- ஸமாதாநம்; E- இழிவல்லாதது, கொண்டாட உரியது; F- கைக் கொண்டால்; G- கொல்லப்பட உரியன்; H- பழிக்கும்படி; I- குணபூர்த்தி.

1. *தைத்-ஆர(3-14-43) :* संधां च यां संदधे ब्रह्मणैषः।

2. आनयैनं हरिश्रेष्ठ दत्तमस्याभयं मया ।
विभीषणो वा सुग्रीव यदि वा रावणः स्वयम् ॥

ராமா (6-18-35) : விபீஷணனுக்கு முன்பே அபயமளித்தாயிற்று. சுக்கிரீவ நீ போய் விபீஷணனாயிருந்தாலும் இராவணனே நேரில் வந்திருந்தாலும் அழைத்து வா.

3. *சுருதி (6-5-30) :* तस्मादपि वध्यं प्रपन्नं न प्रतिप्रयच्छन्ति ।

Scanned with CamScanner

வஸிஷ்ட்ட-விச்வாமித்ர-ப்ருஹஸ்பதி-ரகு-சிபி-प्रभृतिகளான ஸத்துக்களும் நெஞ்சாறல் படாமே நம் ஸ்வபாவத்தையும் குலையாதே நம்மைப் பெறப் பாருங்கள்'' என்று திருவுள்ளம்.

சரண்ய சீலப்ரகாசம் முற்றும்

அதிகாரம் 6: சரண்ய வைபவ ப்ரகாசம்

(ரக்ஷகனான பெருமாள் மேம்பாட்டை வெளியிடுவது)

18. சுக்கிரீவனுடைய ஆக்ஷேபத்திற்கு இராமன் விடை

இப்படிப் பெருமாள் அருளிச்செய்த வார்த்தையைக் கேட்டு மஹாராஜர் गूढ- हृदयனான[a] ராக்ஷஸனுடைய अनु-प्रवेशத்தாலே[b] என் விளையப்புகுகிறதோ? என்று பெருமாள் பக்கல் பரிவாலே கலங்கிப் பின்பு

'को नाम स भवेत् तस्य यमेष न परित्यजेत् ।
ईदृशं व्यसनं प्राप्तं भ्रातरं य: परित्यजेत् ॥'[1]

என்று विभीषण–दौर्जन्यादिகளைக்[c] காட்டிப் பெருமாளைவிலக்கப் பார்க்க, பெருமாள் ராஜநீதி[d] மர்யாதையாலே, உத்தரம்[e] அருளிச்செய்தார்.

19. இராமபிரான் தன் சக்தியை விளக்கிச் சுக்ரீவனது அச்சத்தைத் தீர்த்தல்

பின்னையும் மஹாராஜர் 'பெருமாளுடைய प्रपन्न-पारतन्त्र्य-काष्ठैயாலேயிறே[f] நாம் விண்ணப்பம் செய்த வார்த்தை திருவுள்ளத்தில் படாதே இருக்கிறது' என்று बुद्धि பண்ணி, 'ஒரு ப்ரபத்திக்கு இரண்டு ப்ரபத்தியாகப் பண்ணுவோம்' என்று இளைய பெருமாளையும் கூட்டிக் கொண்டு திருவடிகளிலே விழுந்து பெருமாள் திருவுள்ளத்திலே தரிக்க வேண்டும் என்று பார்த்து, 'உம்மளவிலன்றிக்கே உமக்குத் தோழனான என் விஷயத்திலும் बहिश्चर–प्राण–भूतரான்[g] இளைய பெருமாள் விஷயத்திலும் இவன் प्रच्छन्नனாய்[h] நின்று நலியும் கிடீர். ஆகையால் இவன் वध्यன்[i] என்று விண்ணப்பம் செய்ய, இத்தைக் கேட்ட பின் பெருமாள்

'सुग्रीवस्य तु तद्वाक्यं राम: श्रुत्वा विमृश्य च।
तत: शुभतरं वाक्यमुवाच हरिपुङ्गवम् ॥'[2]

என்கிறபடியே கலக்கமடியாக மஹாராஜர் இளைய பெருமாளையும் கூட்டிக் கொண்டு பண்ணின சரணாகதியிற் காட்டிலும் தெளிவடியாக வந்த விபீஷணன் சரணாகதியொன்றுமே प्रवलம்[j] என்று அறுதியிட்டு, மஹாராஜருடைய அச்சம் தீர வேண்டுமென்று பார்த்தருளி, 'தோழனாரே! விபீஷணன் दुष्टன் என்றும் अदुष्टன்[k] என்றும் பண்ணுகிற विचार[l]ம் எதற்காக? நம்மளவில் ராக்ஷஸனென்கிறது என்னென்பது? நம்மளவிலாதல் உம்மளவிலாதல் தம்பியளவிலாதல் இவன் ஒரு बाधकம்[m] செய்கைக்குப் ப்ரஸங்கமென்[n]? நம்முடைய பூந்தோட்டத்தில் ஜாதி மாத்ரவாநரங்களுக்கும்[o] இவன் ஒரு குற்றம் செய்ய வல்லனோ? நாம் நினைத்த போது பிசாசங்கள் -அஸுரர்கள்-யக்ஷர்கள்-ப்ருதிவியில்[p] உள்ள ராக்ஷஸர்கள் எல்லோரும் திரண்டு வந்தாலும் ஒரு अङ्गुल्यग्रத்திற்குப்[q] பற்றுமோ? அஞ்ஜலியாகிற அஸ்த்ரம் எடாதார்க்கு நம்மை வெல்ல விரகு[r] உண்டோ?' என்று தம்முடைய ஸர்வ-சக்தித்வத்தை[s] வெளியிட்டு மஹாராஜருடைய அச்சத்தைக் கழிக்கிறார்.

---

a- வஞ்சக எண்ணமுடையன்; b- புகுதல்; c- விபீஷணனுடைய துஷ்டத் தன்மை ; d- அரசர்களுக்கு உரிய நீதிமுறை; e- ஸமாதாநம்; f - சரணம் அடைந்தவனுக்கு வசப்பட்ட தன்மையின் உச்ச நிலை; g- வெளியே உலாவும் உயிர்; h- மறைந்து நிற்பவன்; i- கொல்லப்பட உரியன்; j - மிக வலிமை உடையது; k- நல்லவன்; l- ஆராய்ச்சி; m- தீங்கு; n- இடம்; o- குரங்காய்ப் பிறந்தது தவிர வேறு சக்தியற்ற குரங்கு; p- பூமி; q- விரல் நுனி; r- வழி, உபாயம்; s- எதையும் செய்யச் சக்தியுடைமை.

1. ராமா (6-18-5, 6) : இப்பொழுது சங்கடமான நிலையில் உள்ள உடன் பிறந்த ராவணனைக் கைவிட்டு வந்த விபீஷணன் எவனைத் தான் கைவிடமாட்டான்? நம்மையும் விட்டுப் போய் விடுவான். (சுக்ரீவன் பேச்சு).

2. ராமா(6-18-21) : இராமபிரான் சுக்கிரீவனுடைய வார்த்தையைக் கேட்டு ஆராய்ந்து அதைக்காட்டிலும் சிறந்த சொல்லைச் சுக்கிரீவனுக்குச் சொன்னான்.

Scanned with CamScanner

'सुदुष्टो वाऽप्यदुष्टो वा किमेष रजनीचरः।
सूक्ष्ममप्यहितं कर्तुं ममाशक्तः कथञ्चन ॥

पिशाचान् दानवान् यक्षान् पृथिव्यां ये च राक्षसाः।
अङ्गुल्यग्रेण तान् हन्यामिच्छन् हरिगणेश्वर ॥[1] ராமா (6-18-22-23)

பண்டு நாம் உமக்குக் காட்டின ப்ரभावத்தை[a] வாநர ராஜ்யத்தில் புக்கவாறே மறந்தீரோ? 'महात्मने' என்று விபீஷணன் நினைப்பித்ததும் நெஞ்சில் பட்டதில்லையோ? எதிரிகள் விரல் கவ்வும்படி காணும் நம்முடைய ஒரு अङ्गुल्यग्रव्यापारம்[b]! நகங்களிறே பெருமாளுக்கு நரஸிம்ஹ தசையில் ஸ்ரீ பஞ்சாயுதங்கள்!

19.1 காப்பதற்குப் பயன்படும் மூன்று குணங்களும் தன்னிடம் இருப்பதைக் கூறி சுக்ரீவன் முதலியோரின் அச்சம் தீர்த்தல்

शरण्यत्व-उपयुक्तமாக[c] भगवच्छास्त्रங்களிலும்[d] अभियुक्तர்[e] வாக்யங்களிலும் 'सर्वज्ञोऽपि हि विश्वेशः सदा कारुणिकोऽपि सन्।[2]' என்றும், 'त्वद्ज्ञानशक्तिकरुणासु सतीषु' (287[2]) என்றும் संगृहीतமான शरण्य-गुण-त्रयமும்[g] இப்ப்ரகரணத்திலே விவக்ஷிதம்[h] எங்ஙனே என்னில்-

(i) அடியிலே 'अज्ञातं नास्ति ते किञ्चित्'(282[2]) என்று ஸர்வஜ்ஞத்வம் சொல்லிற்று.

(ii) मध्ये 'मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथञ्चन ।' (278[2]) என்று பரம காருணிகத்வம்[i] சொல்லிற்று.

(iii) இவ்விடத்தில் 'अङ्गुल्यग्रेण तान् हन्यामिच्छन्' என்று ஸர்வ சக்தித்வம் சொல்லிற்று.

இப்படி मानुष-भावத்திலே[j] நின்று ராமசப்தம் ஈரரசுபடாத படி[k] பண்ணின மஹாவீரன் என்னும் செருக்காலே மதியாமே பேசுகிறாப்போலே தம்முடைய ईश्वरत्व - रक्षकत्व - ज्ञापक - सर्वशक्तित्वத்தாலே[l] शरण्यत्व-उपयुक्त-सर्वगुण-संपूर्तिயை[m] அருளிச் செய்து மஹாராஜ-प्रभृतिகளுடைய அச்சம் தீரும்படி பண்ணி அருளினார்.

சரண்ய வைபவப்ரகாசம் முற்றும்

அதிகாரம் 7: பரமதர்ம நிர்ணயம்

(மிகச் சிறந்த தர்மத்தை நிர்ணயித்தல்)

20. சரணாகதனைக் காத்தல் மிகச்சிறந்த தர்மம் என்பதை வ்ருத்தாந்தங்கள் மூலம் விளக்குதல்

இப்படித் தம்முடைய ஸ்வபாவத்தையும் ப்ரபாவத்தையும் வெளியிட்டு, மேல் 'இவன் துஷ்டனேயாகிலும் நாம் அசக்தரே யாகிலும் ப்ராண - பர்யந்தமாக[n] ஶரணாகத - ரக்ஷணம் பண்ண வேண்டும். இதுவே பரம - தர்மம்[o] என்னுமிடத்தைக் कपोत-उपाख्यान-सहकृत[p]-कण्डु-महर्षि-गाथा-विधि-முகத்தாலே[q] அருளிச் செய்கிறார்-

---

a- பெருமை; b- விரல் நுனியின் செயல்; c- ரக்ஷகனாயிருப்பதற்குப் பயன்பட; d- ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரங்கள்; e- பெரியோர்; f- முக்கியமாய் எடுத்துக் கொள்ளப்பட்ட; g- ரக்ஷகனான எம்பெருமானுடைய ஜ்ஞாநம் - சக்தி - கருணை என்ற மூன்று குணங்களும்; h - கூறியதாகக் கொள்ள வேண்டும்; i- கருணை மிகுத்த தன்மை; j- மானிட நோக்கு; k- வேறு ஒருவனும் இந்தச் சொல்லுக்கு இலக்காகாதபடி; l- ஈச்வரத் தன்மையையும் ரக்ஷிக்கும் தன்மையையும் அறிவிக்கும் அனைத்தையும் செய்யும் சக்தியுடைமை; m- காப்பதற்கு வேண்டிய எல்லாக் குணங்களும் நிரம்பியிருக்கும் தன்மை; n- உயிரைக் கொடுத்தல் வரை; o- மிகச்சிறந்த தர்மம்; p- புறா வேடனைக் காத்த வரலாற்றுடன் கூடிய; q- கண்டு முனிவன் சுலோகங்களில் விதித்ததின் வாயிலாக.

1. **ராமா(6-18-22, 23) :** ஸுக்ரீவ! இந்த விபீஷணன் துஷ்டனாகவோ, நல்லவனாகவோ எப்படியிருந்தால்தான் என்ன? எனக்கு இவனால் எந்த வகையிலும் சிறு தீங்கும் செய்ய முடியாது. பிசாசுகள், அசுரர்கள், யக்ஷர்கள் பூமியிலுள்ள அரக்கர்கள் ஆகிய அனைவரையுமே நான் நினைத்தால் என்விரல் நுனியாலேயே கொன்று விடுவேன்.

2. सर्वज्ञोऽपि हि विश्वेशः सदा कारुणिकोऽपि सन्।
संसारतन्त्रवाहित्वात् रक्षापेक्षां प्रतीक्षते ॥

லக்ஷ்மீதந்(17-78): எல்லாவற்றையும் நியமிக்கும் எம்பெருமான் அனைத்தையும் அறிந்தவனாயும் கருணை நிறைந்தவனாயும் இருப்பினும் ஸம்ஸார நெறியை நடத்துபவனாதலால் தன்னை ரக்ஷிக்க வேண்டுமென்று சேதநன் செய்யும் பிரார்த்தனையை எதிர்பார்க்கிறான்.

Scanned with CamScanner

20.1 மிகப்பெரிய தர்மத்தை அனுஷ்டித்த புறாவின் சரிதை

श्रूयते हि कपोतेन शत्रुः शरणमागतः ।
अर्चितश्च यथान्यायं स्वैश्च मांसैनिमन्त्रितः ॥ ராமா (6-18-24)

20.1.1 புறாவின் சரிதை மிகப் புனிதமானது - விளக்கம்

'श्रूयते हि' - என்கிற இத்தாலே

'शृणु राजन् कथामेतां सर्वपापप्रणाशिनीम् ।

नृपतेर्मुचुकुन्दस्य कथिता भार्गवेण या ॥' என்றும்[1]

'य इदं शृणुयान्नित्यं कपोताख्यानमुत्तमम् ।
विमुक्तः सर्वपापेभ्यः विष्णुलोकं स गच्छति ॥' என்றும்[2]

சொல்லுகிறபடியே पावन–तमत्वத்தாலே[a] ஸர்வரும் ஆதரித்துக் கேட்கும்படி ஸூசிதமாகிறது.

'श्रूयते'– विप्रकीर्णங்களாய்[b] அநந்தங்களான ச்ருதிகளை ஸாக்ஷாத்கரிக்க வல்லார்க்கு இதுவும் ஒரு மூலையிலே காணலாய்க் காணும் இருப்பது.

'श्रूयते' –भार्गवादिகள் சொல்ல मुचुकुन्दादिகள் கேட்கலாமத்தனை போக்கி எத்தனையேனும் காருணிகராயிருப்பாராலும் இப்படி அநுஷ்டிக்கை अशक्यம்[c] காணும்.

'हि--अतिप्रसिद्ध மாகையாலும் अन्य–वृत्तान्तமாகையாலும்[d] இவ் வ்ருத்தாந்தம் எங்களுக்கு முன்னே நீங்களும் கேட்டுப் போருமதன்றோ? நம்பக்கல் பரிவாலே வந்த கலக்கத்தை விட்டு நீரே प्रतिसंधानம்[e] பண்ணிப்பாரீர்.

20.1.2 ஆண் புறாவுக்கு அதன் பேடை செய்த அற்புத உபதேசம்

'कपोतेन' - ஒரு த்ரைவர்ணிகனுமன்று[f] வர்ணமாத்ரத்தில்[g] பிறந்தானொருவனுமன்று. ஸாமாந்ய - தர்ம யோக்யம்[h] - மநுஷ்ய -ஜாதியனுமன்று. ஒரு திர்யக்[i] செய்தபடி இது. இப்படி இத் தர்மம் திர்யக்குக்களுக்கும் கூட ரக்ஷணீயமாயிருக்க धर्म-प्रवर्तकரான[j] நாம் இருந்து சரணாகதனை वध्यன்[k] என்பதும் த்யாஜ்யன்[l] என்பதுமாக நின்றோம்.

'कपोतेन' - ஒற்றைக் கபோதமாகையாலே விலக்குகைக் கூடான பரிவர் இல்லாமையாலும், अर्धம்[m] என்று ச்ருதியில்[3] ஓதுகிறபடியே सहाधिकारத்தாலே[n] धर्मिயிலே[o] சொருகி

शृणु चावहितः कान्त यत् ते वक्ष्याम्यहं हितम् ।
प्राणैरपि त्वया नित्यं संरक्ष्यः शरणागतः ॥[4] (13)

என்று धर्मத்திலேப்ரேரிப்பிக்கிற[p] सहधर्म–चारिणी–संनिधि[q]யாலும்[m] அக்கபோதம் சடக்கென ஶரணாகத ரக்ஷண தர்மம் அனுஷ்டிக்கப் பெற்றதிறே.

20.1.3 நேரிடையாகத் தன்னைச் சரணம் புகாவிடினும் அபராதியான வேடனை ஆண் புறா உபசரித்தல்

'शत्रुः' - கபோதத்திற்கு வேடன் தானே भार्या - அபஹரணம்[r] பண்ணின சத்ருவாயிருக்கும். நமக்கு விபீஷணன் அப்படிப் பட்ட சத்ரு இருந்த ஊரினின்றும் வந்தானத்தனையன்றோ?

'शरणं आगतः' - கபோதமிருந்த மரத்தடியிலே வேடன் यादृच्छिकமாய்[s] வந்தானத்தனை.

---

a - மிக்க தூய்மை; b- சிதறிக் கிடப்பன; c- செய்ய இயலாதது; d- நம்மையன்றிப் பிறரும் செய்த வரலாறு; e - நன்கு சிந்தித்துப் பார்த்தல்; f- அந்தணன் - அரசன் - வைசியன் என்ற மூன்று வருணத்துள் ஒன்றில் பிறந்தவனுமில்லை ; g- ஏதாவது ஒரு ஜாதி; h- பொதுவான தர்மத்தைச் செய்தற்கு உரிய; i- விலங்கு; j- தர்மத்தை நடத்துபவர்; k- கொல்லப்பட உரியன்; l- கைவிடத் தகுந்தவன்; m- கணவனது உடலின் பாதி; n- கணவனுடன் சேர்ந்து செயலாற்ற உரிமை; o- தலைவனான கணவன்; p- தூண்டுகிற; q- உடன் இருந்து தர்மம் செய்யும் மனைவி அருகே இருப்பது; r- மனைவியைக் கவர்தல்; s- தற்செயலாக.

1. **இதிஹாஸஸ (8-5) :** அரசனே! முன்பு பார்க்கவரால் முசுகுந்த அரசனுக்குச் சொல்லப்பட்டதாய் எல்லாப் பாபங்களையும் ஒழிக்கவல்லதான இந்தக் கதையைக் கேள்.

2. **இதிஹாஸஸ (8-128) :** எப்பொழுதும் புறாவின் இந்தச் சிறந்த வரலாற்றைக் கேட்பவன் எல்லாப் பாபங்களும் ஒழிந்து விஷ்ணு லோகத்தை அடைவான்.

3. ***காண்டம் (6-1-8) :*** *379 37 :* अर्धो वा एष आत्मनः, यत् पत्नी மனைவி கணவனது அரைப் பகுதியாவாள்.

4. **இதிஹாஸஸ (8-40):** நாத! உனக்கு நான் கூறும் நன்மையைக் கவனமாய்க்கேள். உனது இடத்துக்கு வந்தவனை எப்பொழுதும் உயிரைக் கொடுத்தாவது காக்க வேண்டும்.

Scanned with CamScanner

'सोऽञ्जलिं शिरसा कृत्वा वाक्यमाह वनस्पतिम् ।
शरणं हि गतोऽस्म्यद्य देवातां त्विह वासिनीम् ॥'[1]

என்று வநஸ்பதி[a] தேவதையைக் குறித்து शरण-சப்தம் प्रयोगித்தானாகிலும் இக்கபோதத்தைக் குறித்து शरणசப்தம் प्रयोगித்திலன். விபீஷணன் புத்ரदारादिகள் எல்லாரையும் விட்டு 'राघवं शरणं गत'(273[2]) என்று நமக்குக்கூடஸ்த்தனான रघुவானவன் ராக்ஷஸ-ஸம்வादத்திலே[b] शरणாகத ரக்ஷணம் பண்ணின படியை நினைப்பித்துக் கொண்டு நம்மை यथाक्रमம்[c] शरणागतன் ஆனான்.

'अर्चितश्च'-வேடனாகையாலே பக்ஷிஜாதிக்கு प्रकृत्या[d] சத்ருவாய் விசேஷித்துத்[e] தன் भार्या-अपहर्ताவுமான[f] இவன்பட்டது படுகிறான் என்று இருத்தல் அவஸரத்திலே[g] நலிய விரகு தேடுதல் செய்யப் प्राप्तமாயிருக்க[h] अतिथि[i]யை देवனாக விதிக்கிற ச்ருதியின்படியே[2] தேவர்களை ஆராதிக்கும் திறத்திலே अग्निमुखமாகவன்றோ[j] அக்கபோதம் அர்ச்சித்தபடி நாமும் சரணாகதனை 'वध्यतामेष तीव्रेण दण्डेन सचिवैः सह'[3] என்று अनुबन्धि-पर्यन्तமாக[k] நன்றாக அர்ச்சியாநின்றோம்.

20.1.4 தன் உடலையும் வேடனுக்கு உணவாக அளித்து மகரிஷிகளும் செய்தற்கரிய விருந்தோம்பலைப் புறா செய்தல்

'यथान्यायं' - शीत[l]த்தாலும்[c] க்ஷுத்தாலும்[m] ஆர்த்தனான[n] வேட னுக்கு அபேக்ஷிதங்களான அக்நி-ஆநயநாதிகளைப்[o] பண்ணி நல்விருந்து வந்தால் ஆதரிக்கும்படி தப்பாதே अन्तः विषाद-गन्धமில்லாதே[p] அக்கபோதம் ஆதரித்தபடி.

'यथान्यायं'- இன்சொல் முதலாகப்ராண பர்யந்தமாக शरणா கத விஷயத்தில் शक्ति-वञ्चन[q]ம் பண்ணாதே செய்த பரிவு எல்லாம் அளவாயிருக்குமத்தனை போக்கி மிகுதியுண்டோ?

'स्वैश्च मांसैः निमन्त्रितः' புறம்பே[r] சில ஆஹாரங்களை எடுத்துக்கொண்டு வந்து இட்டதன்று. தன்னுடையனவான द्रव्यान्तरங்களிலே[s] சிலவற்றை இட்டு உபசரித்ததுமன்று. விவேகமில்லாதார் தானாக[t] अभिमानித்திருக்கக்[u] கடவதாய் விவேகிகளும் आद्य[v]மான धर्मसाधनம்[w] என்று பேணக்கடவ

தான[x] சரீரத்தின் மாம்ஸங்களாலேயன்றோ அவனை உபசார பூர்வமாக நல் விருந்தூட்டப் प्रवर्तித்தது!

'मांसैः' - ஏகதேசங்களைப்[y] பிரித்து இட்டதன்று. கடுகப்[z] பசி தீர்க்க வேண்டுமென்று வேடனுக்குத் தனக்கு உள்ள அவயங்களுள் ஒன்றும் சேஷியாதபடி[A] शरभङ्गादि- தாபஸரைப்[B] போல இதொரு மஹாதபஸ்ஸாக நினைத்து நெருப்பிலே காணும் விழுந்தது!

20.2 இராமபிரான் தான் சரணாகத ரக்ஷணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை விளக்குதல்

இப்படி இச்ச்லோகசிகத்தில் சொன்ன அர்த்தந்தன்னைத் தம்முடைய அநுஷ்டாநத்திற்கு ஹேதுவாக அநுவதித்துக் கொண்டு[C] இப்படியானால் நமக்கு शरणாகத ரக்ஷணம் कैमुतिक-न्याय-सिद्धமன்றோ[D]! என்று அருளிச் செய்கிறார் -

---

a- மரத்தில் உள்ள தேவதை; b- ராக்ஷஸனோடு நடந்த ஸம்பாஷணை; c- முறைப்படி; d- இயற்கையாக; e- குறிப்பிட்டு; f- மனைவியைக் கவர்ந்தவன்; g- வாய்க்கும் பொழுது; h- கடமையாய்; i-விருந்தாளி; j-அக்நியைக் கொண்டு; k- உறவினர் உள்பட; l- குளிர்; m- பசி; n- துன் புற்றவன்; o-அக்நியைக் கொண்டு வருதல்; p- மனத்துக்குள் சிறிது வருத்தமும் இல்லாது; q- தன் சக்தியை மறைத்தல்; r- வெளியே உள்ள; s- வேறு பொருள்கள்; t- ஆத்மாவாக; u- தவறாகக் கருதப் பட்டது; v- முதன்மையான; w - தர்மம் செய்தற்கு உரிய கருவி; x- அன்போடு ஆதரிக்கப்படுவதான; y- சில சிறு பகுதிகள்; z- விரைவில்; A- மீதியிராத படி; B- இராமனுக்கு எதிரில் அக்நியில் தன் சரீரத்தை இட்ட சரபங்க முனிவர் முதலியோர்; C- மறுமுறை சொல்லிக் கொண்டு; D- புறாவே இத்தகைய அருஞ்செயலைச் செய்திருக்க நாம் செய்ய வேண்டு மென்பதைக் கூறவும் வேண்டுமோ? என்கிற நீதி.

1 **இதிஹாஸஸ(8-24):** அந்த வேடன் தலைக்கு மேல் கை கூப்பி மரத்தை நோக்கிக் கூறினான் - இங்கு உள்ள தேவதையை இப்பொழுது சரணடைந்துள்ளேன்.

2 **தைத்தி - உப - சிக்ஷா (11-15) :** अतिथि-देवो भव । விருந்தாளியைத் தெய்வமாக நினைத்துப் பூசிப்பாயாக.

3. वध्यतामेष तीव्रण दण्डेन सचिवैः सह ।
रावणस्य नशंसस्य भ्राता ह्येष विभीषणः ॥

ராமா(6-17- 29) : விபீஷணன் உடன் வந்த மந்திரிகளுடன் கொடிய தண்டனை கொடுத்துக் கொல்லப்பட வேண்டியவன். கொடிய ராவணனுக்கு உடன் பிறந்தவனல்லனோ இவன்! (சுக்கிரீவன் சொல்).

Scanned with CamScanner

स हि तं प्रतिजग्राह भार्याहारमागतम् ।
कपोतो वानरश्रेष्ठ किं पुनर्मद्विधो जनः ॥ (ராமா-6-18-25)

20.2.1 மிகப் பெரிய தர்மத்தைச் செய்தது சாதாரணப் புறாவே - விளக்கம்

'सः हि' - அக்கபோதம் நம்மைப் போலே தர்ம - அநுஷ்ட்டாநம் பண்ணக் கடவ ஜாதிகளில் ஒன்றிலேயாதல், சரண்ய-வம்சத்திலேயாதல்[a] பிறந்ததன்று என்னுமிடம் ப்ரஸித்தமாய் அன்றோ இருப்பது!

'तं' - தன் ஜாதியாலும் விசேஷித்துத்தன் கொடுமையாலும் 'कश्चित् क्षुद्रसमाचारः पक्षिणां कालसंमितः'[1] என்று பக்ஷி ஜாதிக்காக विरुद्धனாய்க்[b] கபோதம் இருந்த இடத்திலே யாదृच्छिकமாக[c] வந்து விழுந்ததற்கு மேலே கபோதத்தைக் குறித்து ஓர் उपाय–प्रयोग–रहितனாய்[d] விபரீத - அநுஷ்ட்டாநத்திலும்[e] நிலை குலையாதவனாய்[f] அநுதாப - லேசமாதல் अनुकूल–वाद–प्रसङ्ग மாதலின்றிக்கே கிடீர் அவ்வேடன் இருப்பது!

'सः हि तं प्रतिजग्राह' - தன்னை யழிய மாறியன்றோ அவ்வேடனைக் கைக்கொண்டு ரக்ஷித்தது!

முன்பு சத்ருவென்று பொதுவிலே அருளிச்செய்ததை அவன் वृत्तिயைக்[h] காட்டி விசேஷிக்கிறார்[i].

'भार्या–हर्तारं' இப்படியே ராவணன் வந்தாலும் நமக்குக் கைக்கொள்ள வேண்டியன்றோ இருப்பது என்று திருவுள்ளம்.

'आगतं' - இவன், தன்னைக் கைக் கொள்ளுகைக்குச் செய்த உபாயாநுஷ்ட்டாநம்[j] கபோதமிருந்த மரத்தடியிலே வந்தவளவே அல்லது வநஸ்பதி - தேவதையைக்[k] குறித்து शரணம் என்று சொன்ன சப்தமும் கபோதம் கேட்டதில்லை.

'कपोतः' - முன்பே கபோதம் என்று சொல்லியிருக்க இரண்டாலுமிட்டுக் 'கபோதம்' என்றது சிபியினுடைய சரணாகத ரக்ஷண தர்மம் சொல்லுகிற ச்யேந - கபோத - வ்ருத்தாந்தத்தில்[l] போலே கபோத வேஷம் கொண்டானொரு தேவனோ ருஷியோ என்று சங்கியாமைக்காக. இது பூர்வ - கர்ம - விசேஷத்தாலா[m] கஜேந்த்ராதிகளைப் போலே திர்யக்காய்

இருக்க[n] இப்படி தர்ம-அநுஷ்ட்டாநயோக்யமாய்ப் பிறந்தது.

20.2.2 ஒரு வானரம் எதிரியைக் காத்த வரலாற்றைக் கூறி சுக்ரீவனது கலக்கத்தைப் போக்குதல்

'वानरश्रेष्ठ' - வேறேயும் ஒரு திர்யக் சத்ருவான வேடனை ரக்ஷித்தபடி கேளீர். வாநரஜாதிகளுக்கு முடிசூடின நீர் வ்யாக்ர - வாநர - ஸம்வாதம்[o] கேட்டறியீரோ? ஒரு புலி வந்து தொடர, தான் இருந்த மரத்தடியிலே வந்து ஏறின வேடனை அந்த व्याघ्रம்[p] விடச் சொல்ல இவனைச் சரணாகதன் என்று வாநரம் ரக்ஷித்தது. அப்போது மரத்தடியை விடாதே கிடக்கிற புலி, இவ்வாநரம் உறங்கினவளவிலே வேடனைப் பார்த்து 'உன்னை விடுகிறேன். வாநரத்தைத் தள்ள வல்லையோ?' என்ன, பாப-புத்தியான வேடன் தன்னை ரக்ஷித்த வாநரத்தைத் தள்ளினவளவிலே வாநரத்தைப் பிடித்து 'உன்னை விடுகிறேன். தனக்கு உபகாரகனான[q] உன்னைத் தள்ளின வேடனைத் தள்ளித் தரவல்லையோ?' என்று மநுஷ்ய-மாம்ஸ-लुब्धமான[r] புலி சொல்ல धर्म-வித்தான[s] வானரம் प्राण–अत्यय–दशै[t] யாகையாலே அஹ்ருதயமாக[u] இசைந்து புலி விட்டவாறே மரத்தில் ஏறி, சத்ருவான வேடனைப் பின்பும் போக்கற்றுத் தான் இருந்த மரத்தில் இருந்ததேயடியாशரணா

a- ரக்ஷகர்களின் குலத்திலே; b- எதிரி; c- தற்செயலாக; d- உபாயம் செய்யாதவன்; e- புறாவுக்குத் தீங்கு செய்வது; f- சிறிதாவது பச்சாத்தாபம்; g- அநுகூலமான பேச்சுக்கு இடம் ; h- தொழில்; i- குறிப்பிட்டுக் கூறுகிறார்; j- உபாயத்தைச் செய்தல்; k- மரத்தில் உள்ள தேவதை; l- கழுகுக்கும் புறாவுக்கும் நடந்த வரலாறு; m- முன் செய்த நல்வினை; n- விலங்கு ; o- புலிக்கும் குரங்குக்கும் நடந்த ஸம்பாஷணை; p- புலி; q- உதவி புரிந்தவன்; r- மனித மாம்ஸத்தில் ஆசை கொண்ட; s-தர்மத்தை அறிந்த; t- உயிர் போகும் நிலைமை ; u- மனமின்றி.

1. कश्चित् क्षुद्रसमाचार : प्राणिनां कालसंमित :।
विचचार महारण्ये घोर : शकुनिलुब्धक :॥

இதிஹாஸஸ (8-6): அற்பனான வேடன் பறவை பிடிக்கும் வெறியுடன் ப்ராணிகளுக்குயமனைப் போல் வனத்தில் திரிந்தான்.

Scanned with CamScanner

கதன் என்று ரக்ஷித்தது. நீர் வானரங்களுக்கு முடிந்து யிருந்தாலும் உங்களுக்கு ஜாதி - தர்மம் என்று பார்த்தாகிலும் கைக்கொள்ள வேண்டாவோ?

'वानरश्रेष्ठ' - முதலிகள் கலங்கினால் தெளிவிக்க இருக்கிற நீர் கலங்கலாமோ?

'वानरश्रेष्ठ - வாலி பதத்தில் இருந்தவாறே உமக்குச் சரணாகத பீடை ருசித்ததோ?

'वानरश्रेष्ठ' - வாநரமாத்ரமல்லீரே? ஆதித்யனுடைய[a] புத்ரனுமாய் - धर्म-अधर्मங்களை அறிந்துமிருக்கிற நீர் அல்லாத வாநரங்களைப்[b] போலே காபேயம்-பண்ணப்[c] பெறுவதோ?

20.2.4 இராமன் தன் பெருமைகளைக் கூறித் தன் கடமையை விளக்குதல்

'किं पुनः मद्विधो जनः'-கபோதம் செய்தபடி கண்டால் நம் போலிகட்குக் கேட்க வேண்டுமோ? நாம் சரணாகத ரக்ஷணத்திற்குக் கொடியெடுத்த ரகுவம்சத்தில்

'षष्टिवर्षसहस्राणि लोकस्य चरता हितम्।
पाण्डरस्यातपत्रस्य छायायां जरितं मया ॥'[1]

என்று அறுபதினாயிரம் ஆண்டு வெண் கொற்றைக் குடைதன் நிழலொழிய வேறொரு நிழலில் ஒதுங்காதே லோக ரக்ஷணார்த்தமாகப் பத்துத் திக்கிலும் தேர்வு நடத்திப் ப்ரஸித்தனான தசரதன் மகனாய், வஸிஷ்ட்ட - விச்வாமித்ர-சிஷ்யனாய், மஹாயோகியாக प्रख्यातனான்[d] ஜநகனோடே ஸம்பந்தம் பண்ணின நாம் 'रामो विग्रहवान् धर्मः' (69[3]) என்று உடம்பில் शिष्टतया ப்ரஸித்தியை[e] ஏறிட்டுக் கொண்டு 'मर्यादानां च लोकस्य कर्ता कारयिता च सः।'[2] என்கிறபடியே இத்தனை காலமும் நம்முடைய கை பார்த்து நாட்டார் அநுஷ்டிக்கும்படி நடந்து போந்து இன்று शरणागत-घातம்[f] பண்ணினால் நாடு என்படக் கடவது?

'मद्विधः' - நம்முடைய வ்ரதம் பின்பு சொல்லக் கடவோம். 'सामान्योऽयं धर्मसेतुर्नराणां' என்கிறபடியே நம் போலிகள் எல்லார்க்கும் இதுவே பொதுவாய்க் காணும் இருப்பது!

'मद्विधः' - நம் போலிகள் சரணாகதனை விடுவார்களோ? हिंसा-अभिरुचिகளாகையாலே[g] अवध्यரை[h] वधिக்கவல்ல[i] ராவணாதிகளுக்கல்லவோ இப்படிக்கொத்த கார்யங்கள் ருசிப்பது!

'जनः' - சரணாகதனைப் परित्यजिத்தவன்[j] என்ன பிறப்புப் பிறந்தானாகக் கடவன்? நம் போலிகளுக்கு ஜந்ம ப்ரயோஜநம்[k] சரணாகத ரக்ஷணமன்றோ ?

20.3 கண்டு முனிவரின் சுலோகங்களைக் கூறி சரணாகத ரக்ஷண விஷயமாகப் பெரியோர்களின் அநுஷ்ட்டானத்தை விளக்குதல்

சிஷ்ட-அநுஷ்டாநம்[l] ப்ரமாணமேயாகிலும் ஒரு கபோதம் அநுஷ்டித்தது என்று ஒரு ப்ரமாணம் உண்டோ ? இதற்கு विधायकமாயிருப்பதொரு[m] வாக்யம் வேண்டாவோ? என்கிற சங்கையிலே கண்டு என்பானொரு மகர்ஷி கண்டதொரு गाथैயைக்[n] கேளீர் என்கிறார்.

20.3.1 கண்டு முனிவரின் பெருமைகளும் அவரது உபதேசத்தின் சிறப்பும்

ऋषेः कण्वस्य पुत्रेण कण्डुना परमर्षिणा ।
शृणु गाथां पुरा गीतां धर्मिष्ठां सत्यवादिना ॥ ராமா (6-18-26)

---

a - சூரியன்; b-மற்ற சாதாரணக் குரங்குகள்; c - குரங்குச் செயல்; d- மிக்க புகழடைந்த; e- மிகப் பெரியவன் என்று; f- சரணமடைந்தவர்களைக் கொல்லுதல்; g- துன்பம் செய்வதில் சுவையுடையவர்; h- கொல்லத் தகாதவர்; i- கொல்லவல்ல; j- கைவிட்டவன்; k- பிறந்ததன் பயன்; l-பெரியோர்களின் செயல் முறை; m-விதிக்கவல்ல; n-பாசுரம், சுலோகம்.

1. **ராமா (2-2-7) :** அறுபதினாயிரம் ஆண்டுகள் உலகுக்கு நன்மை புரிந்து கொண்டு ஒற்றை வெண்குடை நிழலில் ஆண்டு வயது முதிர்ந்துள்ளேன். (தசரதன் பேச்சு).

2. रामो भामिनि लोकेऽस्मिन् चातुर्वर्ण्यस्य रक्षिता ।
मर्यादानां च लोकस्य कर्ता कारयिता च सः ॥

ராமா(5-35-11): இராமன் இவ்வுலகில் நான்கு வர்ணத்தினரின் தர்மங்களைக் காத்து உலகில் உரிய கட்டுப்பாட்டுக்களைத் தானும் நடத்திப் பிறரையும் நடத்தச் செய்பவன் (பிராட்டியிடம் அனுமான் சொல்)

Scanned with CamScanner

கண்டு என்கிற மஹர்ஷியினுடைய जन्म-प्रकर्षத்தை முற்படக் கேளீர்.

'ऋषेः कण्वस्य पुत्रेण' - தான் தோன்றியன்றிக்கே 'यस्य स्यात् श्रोत्रियः पिता'[1] என்கிறபடியே அவனுடைய பிதாவும் चतुर्वेद-अध्यायियாய்[a] अतीन्द्रिय-द्रष्टाவாய்க்[b] காணும் இருப்பது! ஆனால் பறப்பதின் குட்டி தவழாதிறே.

'कण्वस्य पुत्नेण'-महातपாவான கண்வ மஹர்ஷிக்கு ஸம்ஸார-நிஸ்தாரகனாய்க்[c] காணும் இவன் பிறந்தது!

'कण्वस्य पुत्रेण कण्डुना'- பிதாவின் பெயராலும் தன் பெயராலும் ப்ரஸித்தனாய்க் காணும் இருப்பது!

'कण्डुना' - அவன்தன் பெருமையைப் பார்த்தால் 'स चापि भगवान् कण्डुः'[2] என்று மஹர்ஷிகள் கொண்டாடும்படியான பெயருடையான் ஒருவன் காணும்!

'ऋषेः पुत्रेण परमर्षिणा' - விளக்கில் கொளுத்தின பந்தம் என்னும் படி காணும் ப்ரகாச - பஹுளனான்[d] பிதாவிலும் காட்டில் இவனுடைய ஜ்ஞாந விகாஸம் இருக்கும்படி!

'शृणु' - இத்தனை நாளும் இக்गाथै[e] உம்முடைய செவியில் படாமையாலிறே நீர் இப்படிக் கலங்குகிறது! இத்தை अवहितராய்க்[f] கேளீர்.

'गाथां' - இது பெரிய பொருள்களையெல்லாம் பொதிந்து கொண்டு எளிதாகக் கேட்கலாம்படி சுருங்கின பாசுரமாய்க் காணும் இருப்பது!

'पुरा गीतां' - இன்று முதலாகக் கட்டினதொன்றன்று காணும் இது வேதம் போலே பழையதாயிருப்பதொன்று.

'गीता' - கண்டுவான மஹர்ஷியும் இத்தை ஸ்ருஷ்டித்தான் என்று இராதே கிடீர். ருக்கை ஸாமமாகப் பாடுமாபோலே பண்டே உள்ள தொன்றை அவன் பாடினானத்தனை.

'गीता' - அவன் செய்தானாகிலும் அந்த ஸாமத்வநிபோலே ஸமஸ்த பாபங்களையும் போக்கவற்றாய்க் காணுமிருப்பது!

'धर्मिष्ठां' -போலியான தர்மங்களைப் போலன்றிக்கே ப்ரத்யக்ஷ - ச்ருதி-ஸித்தமான[g] பரம - தர்மத்தை[h] விஷயமாக வுடைத்தாய்க் காணும் இக்गाथै இருப்பது!

'सत्यवादिना'-सत्यवाद- சீலனான[i] கண்டு என்கிற மஹர்ஷி வாய் வெருவிச் சொன்னாலும் பழுதாயிருப்பதொரு 'च'வ்வும் 'तु'வ்வும் கூட்டுகையுமின்றிக்கே வஞ்சனையுமின்றிக் கேகாணுமிருப்பது!

இதில் 'परमर्षिणा' என்று यथार्थ-दर्शित्वं[j] சொல்லிற்று. 'सत्यवादिना' என்று यथा-दृष्टार्थ-वादित्वம்[k] சொல்லிற்று. 'धर्मिष्ठां' என்று உபதேசத்தினுடைய பரம - ப்ரயோஜநத்வம்[l] சொல்லிற்று. இத்தால் भ्रम विप्रलम्भங்களற்று[m] ஸர்வ லோகஹிதம் சொல்லுவான் ஒருவன்' என்று आप्ति-अतिशयம்[n] சொல்லிற்றாயிற்று.

20.3.2 கண்டுவின் முதல் சுலோகம் சரணாகதியின் சிறு பகுதியை அநுஷ்டித்தவனையும் எத்தகையவனாயினும் காத்தே தீர வேண்டியமையைக் காரணத்துடன் விளக்குதல்

மேல் 'कण्डु-गाथै' என்று எடுக்கிற நாலரை श्लोकத்தில் प्रथम சுலோகத்தாலே பூர்ண - சரணாகதி இல்லையேயாகிலும்

---

a- நான்கு வேதங்களையும் ஓதியவன்; b- இந்திரியங்களுக்குப் புலப்படாதவற்றையும் காண்பவன்; c- ஸம்ஸாரக் கடலினின்று கரையேற்றுபவன்; d- அறிவுமிக்கவன்; e- பாசுரம் (சுலோகம்); f- கவனம் உடையர்; g- வெளிப்படையான வேதத்தில் தேறிய; h- மிகச் சிறந்த தர்மம்; i- உண்மையே பேசும் தன்மையன்; j- உண்மைப் பொருளைக் கண்டமை; k- தாம் கண்டதையே கூறுதல்; l- பெரும்பயனாயுள்ளமை; m- விபரீத ஞானம்-பிறரை வஞ்சித்தல்; n- நன்மையையே மிகவும் நாடும் தன்மை.

1. ज्यायांसमनयोर्विद्यात् यस्य स्यात् श्रोत्रियः पिता ।
मन्त्रसंपूजनार्थं तु सत्कारमितरोऽर्हति ॥

மநுஸ்(3-137) : வித்வானான தந்தைக்குப் பிறந்தவன் வித்வானல்லாத போதிலும் அவனை மதிக்க வேண்டும். வித்வானல்லாத தந்தைக்குப் பிறந்த வித்வானான புதல்வனை மிகமிக மரியாதை செய்ய வேண்டும்.

2. स चापि भगवान् कण्डुः क्षीणे तपसि संस्थितः ।
पुरुषोत्तममाख्यातं विष्णोरायतनं ययौ ॥

விஷ்ணுபு(15 - 52): மிக்க பெருமையுடையரான கண்டு முனிவர் தம் தவம் குறைந்து விட்டதை நினைத்து, புருஷோத்தமம் என்ற மலையில் உள்ள எம்பெருமான் கோயிலுக்குச் சென்றார்.

Scanned with CamScanner

போக்கற்ற தசையில் ஆத்ம - நிக்ஷேப - அபிப்ராய -வ்யஞ்ஜகங் களாய்க் கொண்டு[a] சரணாகதியினுடைய शकल[b] துல்யங்களான அஞ்ஜலி-बन्धादि–मात्रங்களை நேர்ந்தவனையும் அழியக் கொடுக்கலாகாது என்கிறார்–

(1) बद्धाञ्जलिपुटं दीनं याचन्तं शरणागतम् ।
न हन्यादानृशंस्यार्थं अपि शत्रु परंतप ॥ ராமா (6-18-27)

'बद्धाञ्जलिपुटं' -அநுகூல-புத்தியும் ப்ரதிகூல-வ்யாவ்ருத்தியும்[c] இல்லையேயாகிலும் கையில் அஞ்ஜலி மாத்ரமே அமையும். 'अञ्जलिः परमा मुद्रा क्षिप्रं देवप्रसादिनी'[1] என்கிறபடியே அத்யந்த - ஸ்வதந்த்ரனையும்[d] கடுக இரங்கப்பண்ணும் முத்ரையன்றோ இது?

'दीनं' -அஞ்ஜலியும் வாங்மாத்ரமும்[e] நேராதே கார்ப்பண்யம் தோற்ற நிற்கும் நிலையே அமையும்.

'याचन्तं' - கை கூப்பிற்றிலனேயாகிலும் கார்ப்பண்யமும்[f] தோற்றற்றில்லையேயாகிலும் அஹ்ருதயமாக[g] இரக்கவும் அமையும்.

'शरणागतं' -அஞ்ஜலி-बन्धादिகள் மூன்றும் இல்லையேயாகிலும் ரக்ஷகன் கிடைக்குமோ என்று இருந்தவிடத்திலே வந்து புக அமையும். முதல் स्वरक्षाभर–निक्षेप–रूपயான [h] சரணாகதியின் शकल–स्थानीयங்களைச்[i] சொல்லிற்றாய், இங்கே 'शरणागतं' என்று பூர்ண-சரணாகதியைச் சொல்லுகிறதாகவுமாம்.

'न हन्यात्' - தான் அழியச் செய்தல், ரக்ஷிக்க शक्तவான தன் உபேக்ஷாதிகளாலே[j] அழியக் கொடுத்தல் செய்யப்பெறான்.

இந்த शास्त्रம் ஐஹிக-अभ्युदयार्थமோ' பரலோகார்த்தமோ[k] ப்ரத்யவாய - பரிஹாரார்த்தமோ[l] என்ன; அவை நிற்க முற்பட प्रयोजनान्तरம்[m] சொல்லுகிறது -

'आनृशंस्यार्थ' -ஆந்ருசம்ஸ்ய மாகிற[n] மஹாகுணத்தை ரக்ஷிக்கைக்காகவுமாம்; ந்ருசம்ஸன்[o] என்று நாட்டார் சீ சீ என்னாமைக்காகவுமாம்.

'अपि शत्रु' -நேரே சத்ருதான் வந்து சரணாகதனானாலும் அழியவிடவொண்ணாதபடியானால், இதற்கு முன்பு ஒரு

குற்றம் காணாதிருக்க, சத்ரு இருந்த ஊரில் நின்றும் வந்தான் என்கிற இவ்வளவைக் கொண்டு சரணாகதனானவனை அழியக் கொடுக்கலாமோ? என்று தாத்பர்யம்.

'परंतप' - சரணாகதனோடேயோ நம் சேவகம்[p] காட்டுவது? நேரே பொருமவனோடேயன்றோ[q]?

20.3.3 கண்டுவின் இரண்டாம் சுலோகம் சரணாகதனைத் தன் உயிரைக் கொடுத்தும் காக்கவேண்டும் என்பதைக் காட்டுதல்

'न हन्यात्' என்று தான் கொல்லாதொழியுமளவன்றோ? என்ன, அங்ஙனன்று. சரணாகதனை வேறொருவர் நலியும் போது ஆர்த்தன்[r], த்ருப்தன்[s] என்கிற சரணாகத-அவஸ்த்தா- விசேஷங்களைப்[t] பாராதே தன்ப்ராணன்களை அழிய மாறியும் அவனை ரக்ஷிக்க வேண்டும் என்கிறார்-

(2) आर्तो वा यदि वा दृप्तः परेषां शरणागतः ।
अरिःप्राणान् परित्यज्य रक्षितव्यः कृतात्मना । ராமா (6-18-28)

'आर्तो वा यदि वा दृप्तः' 'இப்போதே அபிமதஸித்தி உண்டாக வேண்டும்' என்று விளம்ப-க்ஷமனன்றிக்கே[u] இருக்கவுமாம். விளம்பித்துப் பெறலாவதொரு ஃபலத்தைக் கோரி என்றேனுமாக अभिमतம்[v] सिद्धமன்றோ என்று தேறியிருக்க

---

a- ஆத்மாவை ஸமர்ப்பிக்கும் கருத்தைக் குறிப்பன; b- சிறு பகுதி போன்ற; c- எதிரான எண்ணம் இல்லாமை; d- முழுதும் சுதந்திரன்; e- வாய்ப்பேச்சு மட்டும் கூட; f- கைம் முதலற்ற உணர்ச்சியால் செருக்கொழிந்து பணிந்து நிற்றல்; g- மனமாறவன்றி, விருப்பமின்றி; h- தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தலின் உருக் கொண்ட; i- சிறு பகுதி போன்றவை; j- புறக்கணித்தல்; k- இம்மைப் பயன்களைப் பெறுதற்கு; l- பாபங்களை வராது தடுப்பதற்கு; m- வேறு பயன்; n- கொடுமையற்ற தன்மை (கருணை); o- கொடியவன்; p- வீரம்; q- எதிர்ப்பவன்; r- காலத்தாழ்வைப் பொறாதவன்; s- காலத்தாழ்வைப் பொறுப்பவன்; t- சரணம் அடைந்தவனுடைய விசேஷச்சூழ்நிலைகள்; u- காலத்தாழ்வைப் பொறுப்பவன்; v - விரும்பிய பலன்.

1 एषा मुद्रा समाख्याता दिव्या च शिरसो नृप ।
अञ्जलिः परमा मद्रा क्षिप्रं देवप्रसादिनी ॥

விஷ்ணுதர்மோ (3-33-115) : கைகூப்பும் உயர்ந்த சின்னம் விரைவில் எம்பெருமானுடைய அருளைப் பெறுவிப்பது.

Scanned with CamScanner

வுமாம். இவனுக்கும் अभिमतத்தைப்பற்ற அகிஞ்சநதையாலே ஆர்த்தி[b] உண்டு. அங்ஙனன்றிக்கே "प्रश्रय-भयादि-युक्तனான யிருக்கவுமாம்[c], இவை இன்றிக்கே இருக்கவுமாம்" என்றும் आर्त-दृप्त-विभाग[d]ம் சொல்லுவார்கள்.

'परेषां शरणागतः' - இதற்கு முன் முகமறியாதார் இருந்த விடத்தே வரவமையும்.

'अरिः' - அவன் शत्रुत्वம் அடியறாதே உள்ளே கிடக்கச் செய்தே மித்ர-பாவனையைப் பண்ணி[e] வந்தாலுமாம்.

'प्राणान् परित्यज्य रक्षितव्यः' - அஸ்த்திரங்களான[f] ப்ராணன்களை விட்டு ஸ்த்திரமான சரணாகத ரக்ஷண தர்மத்தைப் பற்றவன்றோ ப்ராப்தம்! இவ்வர்த்தத்தை

'आत्मप्राणैः परप्राणान् यो नरः परिरक्षति ।

स याति परमं स्थानं यस्मान्नावर्तते पुनः ॥'[1] என்றும்

'प्राणैरपि त्वया राजन् रक्षितः कृपणो जनः'[2] என்றும்

ச்யேந-கபோத - உபாக்யாநத்திலே சிபியைக் குறித்து இந்த்ரன் சொன்னான்.

'कृतात्मना'- இப்படிச் செய்யாதபோது இவன் கற்ற கல்வியெல்லாம் என் செய்ததாகக் கடவது ? विदुषोऽतिक्रमे दण्ड-भूयस्त्वं'[3] என்னும்படியாமித்தனையிறே. தன்னை ரக்ஷித்த வாநரத்தைத் தள்ளின வேடனைப்போலே ரக்ஷிதனான சரணாகதன் பின்பு कृतघ्नனாய்[g] ப்ரதிகூலனான போது தான் அவனுடைய சிக்ஷாதிகளில் अधिकृत[h]னாகில் அம்முகத்தாலே ரக்ஷிக்கவும், அவற்றில் अधिकृतனல்லாதபோது பின்பு அவன் அநுதப்தனாய்[i] சரணாகதனானானாகில் க்ஷமிக்கவும், அங்ஙனல்லாதபோது उपेक्षिக்கலான[j] ப்ராதிகூல்யத்தை उपेक्षिக்கவும் தன்னுடைய वधादि पर्यन्तமாக ப்ரவர்த்திக்குமாகில் சாஸ்த்ரவிரோதமில்லாத மர்யாதையாலே[k] यथाशक्ति[l] விலக்கிக் கொள்ளவும் प्राप्तம்.

20.3.4 கண்டுவின் மூன்றாவது சுலோகம் சரணம் அடைந்தவனைக் கைவிட்டவனுக்கு இம்மையில் ஏற்படும் தீமைகளைக் கூறல் - இதற்கும் பூர்வர்களின் வாக்குகள் வாயிலாக விளக்கம்

மேலிரண்டு ச்லோகத்தாலே शरणागत-परित्याग[m]த்தில் வரும் दृष्ट अदृष्ट- ப்ரத்யவாயங்களை[n] அருளிச் செய்கிறார்.

(3)स चेद्भयाद्वा मोहाद्वा कामाद्वाऽपि न रक्षितः ।
स्वया शक्त्या यथा सत्यं तत्पापं लोकगर्हितम् ॥ ராமா(6-18-29)

'भयाद्वा' -शरणागतனைக் கைக்கொண்டால் प्रबलரான விரோதிகள் நம்மையும் நலியில் செய்வதென் என்னும் அச்சத்தாலே யாதல் என்றபடி. ஸேந்த்ர-தக்ஷக - ந்யாயம்[o] இங்கே கண்டு கொள்வது.

'मोहाद्वा'–'ईदृशं व्यसनं प्राप्तं भ्रातरं यः परित्यजेत्' (290[1]) என்றாற் போலே சில யுக்தி-ஆபாஸங்களாலே[p] வந்த கலக்கத்தாலே யாதல் என்றபடி.

---

a- கைம்முதலற்ற தன்மை; b- இரங்கும் நிலை; c- பணிவு, அச்சம் முதலியவற்றுடன் கூடியவன்; d- ஆர்த்தன், த்ருப்தன் என்ற பாகுபாடு; e- தோழன் என்ற பாவனை; f- நிலை அற்றவை; g - நன்றி கெட்டவன்; h- தகுதி உடையவன்; i- பச்சாத்தாபமுடையவன்; j - புறக்கணிப்பதற்கு ஏற்ற; k- வரையரை, கட்டுப்பாடு; l- இயன்ற வரையில்; m- சரணம் அடைந்தவனைக் கைவிடுதல்; n- இம்மையிலும் மறுமையிலும் உள்ள பாபங்கள்; o- பார் (ஆதி - அத் -46): ஜனமேஜயன் ஸர்ப்பயாகம் செய்தான். தக்ஷகன் அஞ்சி இந்திரனைச் சரணமடைந்தான். இதை அறிந்து இந்திரனோடு தக்ஷகன் வந்து விழ வேண்டுமென்று ஹோமம் செய்தார்கள். இந்திரனையும் தக்ஷகனோடு சேர்ந்து இழுக்கும் நிலை வந்தது; p- போலி யுக்திகள்.

1. **இதிஹாஸஸ (4-74) :** தன் உயிரைக் கொடுத்துப் பிறன் உயிரைக் காப்பவன் மறுபிறவியில்லாத சிறந்த லோகத்தை அடைகின்றான்.

2. प्राणैरपि त्वया राजन् रक्षितः कृपणो जनः।
स्वमांसान्यपि दत्तानि द्रव्येष्वन्येषु का कथा॥

இதிஹாஸஸ (4-75) : அரசே! கஷ்டத்தை அடைந்த பிராணி உன் உயிரைக் கொடுத்துக் காக்கப்பட்டது. உன் மாம்ஸங்களையும் அறுத்துக் கொடுத்தாய். மற்றவற்றைப் பற்றிக் கூற வேண்டுமோ?

3. **கௌதமதர்-ஸூ (2-3-14) :** கற்றறிந்தவன் தவறு செய்தால் தண்டனை அதிகம்.

'कामाद्वा' - शास्त्र–अतिलङ्घन- ஹேதுவான[a] स्वच्छन्द-स्वभावत्தாலேயாதல்[b] என்றபடி ; அங்ஙனன்றிக்கே ஹிம்ஸா-ருசிகளான ராக்ஷஸரைப்[c] போலே இவன் படுவது கண்டால் ஆகாதோ என்கிற விபரீத - ருசியாலேயாதல் என்றுமாம்; அப்படியே சரணாகதனுடைய சத்ருவின் பக்கலிலே கைக்கூலியை ஆசைப்பட்டு என்னவுமாம்.

'अपि' - பூர்வ - அபகாரங்களை[d] நினைத்து வரும்[2] ஔதாஸீந்யம்[e] முதலான வேறு ஏதேனுமொரு ஹேதுவாலேயாகவுமாம்.

'सः न रक्षितः चेत्' - கிணற்றின் கரையில் பிள்ளையை வாங்காதாற்போலே ரஷியாத மட்டும் கிடீர் நாம் சொல்லப் புகுகிற பாபம். இப்படியானால் தானே நலியுமளவிலே என்ன விளையக் கடவது?

'स्वया शक्त्या' - தன் சக்தி - வஞ்சநம்[f] பண்ணாதே ரக்ஷிக்க வேண்டும். அங்ஙனன்றிக்கே கைக்கொள்ளவுமாம், கைவிடவுமாம் தான் வல்லதொரு விரகால் என்று தாத்பர்யம். रघु–प्रभृतिகள் ப்ராஹ்மணாதிகளைத் தாங்கள் கைக்கொண்டு रक्षित्தார்கள்; தேவர்களும் ருஷிகளும் காகத்தைப் போக்கற்றது என்று பெருமாள் கைக் கொள்ளுகைக்காகத் தாங்கள் கைவிட்டு रक्षित्தார்கள்.

'यथा सत्यं' - லோகத்திற்குக் கண்காணிகளாகப்[g] படைத்த आदित्यादिகளான[h] பதினாலு ஸாக்ஷிகளும்[i] இவர்களுக்கு மேல் கண்காணியாய் सर्व–साक्षिயான[j] ஸர்வேச்வரனும் கண்டு கொண்டிருக்க, தான் சக்தனாயிருக்கச் செய்தே சில छलங்களாலே[k] தனக்குச் சக்தி இல்லாமையைக் காட்டி 'शोचन्निव रुदन्निव'[l] என்கிற கணக்கிலே கண்ணழிக்கப் பெறான்.

20.3.4.1 நஹுஷ - ப்ருஹஸ்பதி ஸம்வாதம் காட்டுவது

'तत् पापं' - அந்தப் பாபத்தின் கொடுமையைக் கேளீர். இது நஹுஷ - ப்ருஹஸ்பதி[m] - ஸம்வாதாதிகளிலே[n] அதிப்ரஸித்தமாய்க் காணுமிருப்பது! இதன் கொடுமையை

'शरणागतां न त्यजेयमिन्द्राणीं च यशस्विनीम् ।
धर्मज्ञां धर्मशीलां च न त्यजेयमनिन्दिताम् ॥

नाकार्यं कर्तुमिच्छामि ब्राह्मणः सन् विशेषतः ।
श्रुतधर्मः सत्यशीलो जानन् धर्मानुशासनम् ॥

नाहमेतत् करिष्यामि गच्छध्वं वै सुरोत्तमाः।
अस्मिंश्चार्थे पुराऽधीतं ब्रह्मणा श्रूयतामिदम् ॥

न चास्य वीजं रोहति रोहकाले न चास्य वर्षं वर्षति वर्षकाले ।
भीतं प्रपन्नं प्रददाति शत्रवे न सोऽन्तरं लभते त्राणमिच्छन् ॥

मोघमन्नं विन्दति चाप्रचेताः स्वर्गाल्लोकात् भ्रश्यति भ्रष्टचेताः ।
भीतं प्रपन्नं प्रददाति शत्रवे सेन्द्रा देवाः प्रहरन्त्यस्य वज्रम् ॥'[1]

என்று இந்த்ரபதம் பெற்ற மதிகெட்ட நஹுஷனாலே ப்ரேரிதரான[o] தேவர்களைக் குறித்து[1] देव-புரோஹிதன் சொன்னான்[p] (A-8).

---

a- சாஸ்த்ரத்தை மீறி நடப்பதற்குக் காரணம்; b- தான் தோன்றித் தன்மை, தன் இஷ்டப்படியே நடக்கும் தன்மை; c- துன்புறுத்துவதிலேயே சுவை கண்ட; d- முன்பு செய்த தீங்குகள்; e- புறக்கணித்தல்; f- சக்தியை மறைத்தல்; g- ஸாக்ஷிகள்; h- ஸூர்யன்; i- ஸூரியன் - சந்திரன் - வாயு - அக்நி - ஆகாயம் - பூமி -ஜலம் - மனம் - யமன் - பகல் - இரவு - மாலை - தர்மம் ஆகிய பதினான்கு ஸாக்ஷிகள்; j- எல்லாவற்றையும் நேரில் காணும் ஸாக்ஷி; k- கபடச் செயல்; l- துன்பமுடையவன் போலும் அழுபவன் போலும் பாவனை; m- கைவிடக் கூடாது; n- நஹுஷனுக்கும் ப்ருஹஸ்பதிக்கும் நடந்த ஸம்பாஷணை; o- ஏவப்பட்ட; p- தேவர்களின் குரு, ப்ருஹஸ்பதி;

1. **பார (உத்யோ -12-16-20) :** (ப்ருஹஸ்பதி தேவர்களுக்குக் கூறுவது) இந்த இந்திராணி என்னைச் சரணமடைந்து விட்டாள். இவள் புகழ் பெற்றவள். தர்மங்களை அறிந்தவள். தர்மத்திலேயே நோக்குடையவள். பழிப்பற்றவள். இவளைக் கைவிடமாட்டேன். நான் தர்மங்களைக் கேட்டு ஸத்யவானாய் தர்மங்களின் விதியை அறிந்தவனாய் அதிலும் பிராமணனாயிருந்து கொண்டு இந்தத்தகாத செயலை(கைவிடுதலை)ச் செய்ய மாட்டேன். நீங்கள் செல்லலாம். இந்த விஷயத்தைப் பற்றி முன் பிரமன் கூறியதைக் கேளுங்கள். அஞ்சி வந்து சரணமடைந்தவனைக் கைவிட்டுப் பகைவனிடம் காட்டிக் கொடுப்பவன் இருக்கும் நாட்டில் போட்ட விதை முளைக்காது. உரிய காலத்தில் மழை பெய்யாது. அவனுக்குக் கஷ்டம் வரும்போது ஒருவனும் காக்கமாட்டான். அறிவற்ற அவன் கொள்ளும் உணவு வீணாகும். அவன் ஸ்வர்க்க லோகத்திலிருந்தாலும் கீழே தள்ளப்படுவான். இந்திரன் உள்பட எல்லாத் தேவர்களும் அவனை வஜ்ராயுதத்தால் அடிப்பார்கள்.

20.3.4.2 2 ரகு-ராக்ஷஷ ஸம்வாதம் காட்டுவது

அப்படியே

'प्रायश्चित्तेन शुध्यन्ति महापातकिनोऽपि हि ।
शरणागतहन्तॄणां शुद्धिः कापि न सिध्यति ॥

पूयन्ते हयमेधेन महापातकिनोऽपि हि ।
शरणागतहन्तारो न त्वेव रजनीचर ॥'[1]

(A-16) என்று ரகு - ராக்ஷஸ - ஸம்வாதத்திலும்[a] இவ்வர்த்தம் ப்ரஸித்தம்.

20.3.4.3 கழுகு வடிவு கொண்ட இந்திரன் - சிபிசக்ரவர்த்தி ஸம்வாதம் காட்டுவது

இத்தை 'लोभात् द्वेषात् भयाद्वाऽपि यस्त्यजेच्छरणागतम् ।
ब्रह्महत्यासमं तस्य पापमाहुर्मनीषिणः ॥

शास्त्रेषु निष्कृतिर्दृष्टा महापातकिनामपि ।
शरणागतहन्तुस्तु न दृष्टा निष्कृतिः कचित् ॥'[2]

'प्राणिनं वध्यमानं तु यः शक्तः समुपेक्षते ।
स याति नरकं घोरमिति प्राहुर्मनीषिणः ॥'[3]

என்று ச்யேந ரூபனான[b] இந்த்ரனைக் குறித்துச் சிபி சக்ரவர்த்தி சொன்னான் (A-9).

'प्राणार्थिनमिमं भीतं द्विजं मां शरणागतम् ।
त्यजेयं यदि को मत्तः स्यान्नरः पापकृत् भुवि ॥

शक्तोऽपि रक्षणे लोभात् भयाद्वा शरणागतम्।
यस्त्यजेत् पुरुषो लोके ब्रह्महत्यां स विन्दति ॥'[4]

என்று இதிஹாஸ-உத்தமத்திலும்[c] சொல்லப்பட்டது.[3]

20.3.4.4 பெண் புறா ஆண்புறாவிடம் கூறியது

'यो हि कश्चित् द्विजं हन्यात् गांच लोकस्य मातरम् ।
शरणागतं च यो हन्यात् तुल्यमेषां च पातकम्॥'[5]

என்றுகபோதி தன்னைக் கட்டியிருக்கிற வேடனை ரக்ஷிக்கைக்காகத் தன் பர்த்தாவான கபோதத்தைக் குறித்துச் சொல்லிற்று.

20.3.4.5 மநுஸ்ம்ருதி கூறுவது

'तत् पापं' -
'शरणागतं परित्यज्य वेदं विप्लाव्य च द्विजः ।
संवत्सरं यवाहारः तत् पापमवसेधति ॥'[6]

என்று மந்வாதிகள் சொல்லுகிறபடியே ப்ராயச்சித்தம் பண்ண அரிதாய்க் காணும் இப்பாபம் இருப்பது!

'लोकगर्हितं'- 'तदेवमागतस्यास्य कपोतस्याभयार्थिनः ।
कथमस्मद्विधस्त्यागं कुर्यात् सद्भिर्गर्हितम् ॥'[7]

---

a - ரகுவுக்கும் அரக்கனுக்கும் நடந்த ஸம்பாஷணை; b - கழுகு வடிவு கொண்ட; c- இப்பெயருடைய ஒரு கிரந்தம்.

1. *(?)* : மகாபாபிகளும் பிராயச்சித்தம் செய்தால் தூயராகிவிடுவர். சரணமடைந்தவனைக் கைவிட்டவர்க்கு எதனாலும் தூய்மை வராது. மஹாபாபிகளும் அச்வமேத வேள்வியால் தூயராவர். சரணம் அடைந்தவனைக் கைவிட்டவர்கள் எதனாலும் தூய்மை பெறமாட்டார்.

2. **இதிஹாஸஸ (4-18,19):** பேராசையாலோ பகைமையாலோ, அச்சத்தாலோ சரணமடைந்தவனைக் கைவிடும் பாபம் ப்ரஹ்மஹத்திக்கு ஒப்பானது. மஹாபாதகம் செய்தவர்க்கும் சாஸ்திரங்களில் பிராயச்சித்தம் உள்ளது. சரணமடைந்தவனைக் கொல்ல விட்டவனுக்குப் பிராயச்சித்தம் எங்கும் கூறப்படவில்லை.

3. **இதிஹாஸஸ (4-52) :** ஒரு பிராணி கொல்லப்படும்போது சக்தியுள்ளவன் காக்காது புறக்கணித்து விட்டால் பயங்கரமான நரகத்தை அடைவான் என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

4. *(?)* : மிக அச்சத்துடன் உயிரை விரும்பி வந்து என்னைச் சரணமடைந்த இந்த அந்தணனைக் காக்க எனக்குச் சக்தியிருக்கும் போது ஆசையாலோ எதிரியிடம் அச்சத்தாலோ நான் கைவிட்டால் என்னிலும் பாபி உலகில் இருக்கமாட்டான். கைவிடுபவன் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை அடைவான்.

5. **பார். (சாந்தி-144-25) :** அந்தணனைக் கொல்லுதல், உலகுக்குத் தாயான பசுவைக் கொல்லுதல், சரணமடைந்தவனைக் கொல்லுதல் இந்தப் பாபங்களெல்லாம் ஸமமானவை.

6. **மநுஸ்-(11-198) :** சரணமடைந்தவனைக் கைவிடுபவனும் தகாதவனுக்கு வேதத்தை ஓதுவிக்கும் அந்தணனும் ஓர் ஆண்டு யவதானியத்தையே உணவாகக் கொண்டு அந்தப் பாபத்தைக் கழிக்கிறான்.

7. **இதிஹாஸஸ் (4-17) :** அபயத்தை விரும்பி என்னிடம் வந்த இப்புறாவை என்னைப் போன்றவன் எவ்வாறு கைவிடமுடியும்? ஸாதுக்கள் பழிப்பார்களே!

என்று சிபி சொன்ன சிஷ்ட- கர்ஹையளவேயன்று[a]. இது கேட்கிலும் ப்ராயச்சித்தம் பண்ணவேண்டுகையாலே நாட்டார் எல்லாரும் இவனைச் சீசீ என்று ஒருகாலும் கூட்டிக் கொள்ளார்கள். ஆகையாலேயிறே

'बालघ्नांश्च कृतघ्नांश्च विशुद्धानपि धर्मतः ।
शरणागतहन्तॄंश्च स्त्रीहन्तॄंश्च न संवसेत् ॥'[1]

'शरणागतबालस्त्रीहिंसकान् संवसेन्न तु ।
चीर्णव्रतानपि सतः कृतघ्नसहितानिमान् ॥'[2]

என்று शरणागत-घातகனையும்[b] बाल-घातகனையும்[c] ஸ்த்ரீயைக் கொன்றவனையும் कृतघ्नனையும்[d] ப்ராயச்சித்தம் பண்ணித் தங்களுக்கு शुद्धரானாலும் ஒருகாலும் கூட்டிக்கொள்ளலாகாது என்று மந்வாதி - தர்மசாஸ்த்ரங்களிலே சொல்லு கிறது. ஆனபின்பு நாம் சரணாகதனை விட்டால் நம்மை நாடும், விச்வாமித்ராதிகளான गुरुக்களும் ஒருகாலும் கூட்டிக் கொள்ளார்கள் காணும்!

20.3.5 கண்டுவின் நான்காவது சுலோகம் சரணம் அடைந்தவனைக் கைவிட்டவனுக்கு மறுமையில் வரும் அதோகதியைக் கூறுதல்

இப்படி - ப்ரத்யவாயம் சொல்லிற்று[e]. அநந்தரம்[f] अदृष्ट-ப்ரத்யவாயம்[g] சொல்லுகிறது-

(4) विनष्टः पश्यतस्तस्यारक्षिणः शरणागतः ।
आदाय सुकृतं तस्य सर्वं गच्छेदरक्षितः ॥ ராமா (6-18-30)

रक्षिக்க வல்லவனாயிருக்க रक्षिயாமையாலே அவன் காணச் செய்தே நஷ்டனான சரணாகதனுக்கு வேறொரு க்ருஷி பண்ண வேண்டா;[h] அவன் அநாதி - காலம் பண்ணின ஸுக்ருதத்தையெல்லாம் ஸவாஸநமாக[i] வாங்கிக்கொண்டு அவன் ஆகக்கடவ புண்ய லோகங்களையெல்லாம் தான் கைக் கொள்ளும். சரணாகத - பரித்யாகியானவன்[j] பக்கல் ப்ராயச் சித்தம் பண்ணுகைக்கும் கைம்முதலான ஸுக்ருத லேசமும்[k] இல்லாமையாலே पाप-भरத்தாலே[l] முழுக்க நரகங்களிலே விழுமத்தனை.

20.3.6 கண்டுவின் நான்காவது சுலோகத்தின் பிற்பகுதியின் கருத்து

उत्तरार्த்தாலே[m] दृष्ट-अदृष्ट-ப்ரத்வாயங்களை[n] ஸமுச்சயித்துச்[o] சொல்லுகிறது:

(4½) अस्वर्ग्यं चायशस्यं च बलवीर्यविनाशनम् । ராமா(6-18-31)

சரணாகதனுக்குச் சரீரம் ஒன்று அழியுமளவேயுள்ளது. அவனை அழியக்கொடுத்தவனுக்குப் பரலோகமும், இங்குள்ள புகழும், बलவீர்யங்களும், மற்றும் சொல்லிச் சொல்லாத गुणविभूतिகளுமெல்லாம்[p] அழியும்படியாய் இருக்கும்.

சரணாகதனுக்கு ரக்ஷை பிறந்ததால் இங்கே நினைத்தது ஆம். ரக்ஷை பிறந்ததில்லையாகில் விட்டவனுடைய ஸுக்ருதத்தை எல்லாம் கைக் கொண்டு தன் நினைவின்றிக்கே வந்த பரலோகஸுகம் பெறலாம். ஒருபடியாலும் சரணா கதனுக்குக் காரியம் தப்புவதில்லை.

20.3.7 கண்டு முனிவர் கூறியதை அனுஷ்டிப்பதில் தமக்குள்ள சீரிய விருப்பத்தை இராமன் அறிவித்தல்

இப்படி சரணாகதனை रक्षिயாத போது வரும் दृष्ट-अदृष्ट-दोषம்[q] சொல்லிற்று. மேல் ச்லோகத்தாலே சரணாகத ரக்ஷணத்தில் வரும் दृष्ट-अदृष्ट- புருஷார்த்த-ஸித்தியை[r] அருளிச்செய்து கொண்டு, கண்டு மஹர்ஷி சொன்ன அர்த்தத்திலே தமக்கு அநுஷ்டித்தல்லது நிற்கவொண்ணாதபடி பிறந்த ருசியை அருளிச் செய்கிறார் -

---

a- பெரியோர்களின் பழிச்சொல்; b- சரணமடைந்தவனைக் கொல்பவன்; c- சிறுவனைக் கொன்றவன்; d- நன்றி கெட்டவன்; e- இம்மையில் வரும் தண்டனை; f- பிறகு; g- மறுமையில் வரும் தண்டனை; h- முயற்சி; i- வேரோடு; j- சரணமடைந்தவனைக் கைவிட்டவன்; k- புண்யத்தின் சிறு துளி; l- பாபச்சுமை; m- பிற்பாதி; n- இம்மை மறுமைத் தீங்குகள்; o- ஒன்று சேர்த்து; p- குணங்கள், ஆளுகைக்குட்பட்ட பொருள்கள்; q- இம்மை மறுமைகளில் வரும் தீங்கு; r- இம்மை மறுமைகளில் வரும் நற்பயன்.

மநுஸ் **(11-190)** : சிறுவர்களையும் சரணமடைந்தவர்களையும் பெண்களையும் கொன்றவர்களையும், நன்றி கெட்டவர்களையும் அவர்கள் பிராயச்சித்தம் செய்து கொண்ட போதிலும் அணுகிப் பழகக் கூடாது.

2 **யாஜ்ஞவல்க்ய ஸ் (3-298)** : அதே பொருள் (குறிப்பு1).

Scanned with CamScanner

करिष्यामि यथार्थं तु कण्डोर्वचनमुत्तमम् ।।
धर्मिष्ठं च यशस्यं च स्वयं स्यात् तु फलोदये ।। ராமா (6-18-32)

'करिष्यामि' - நாம் சரணாகத - ரக்ஷணம் பண்ணக் கடவோம்:

'धर्मः श्रुतो वा दृष्टो वा'[1]

इत्यादिகளை அறிந்து धर्मिष्ठரான நீங்கள் இதற்கு விலக்காமை என்றொரு -बन्धु–कृत्यம்[a] செய்து தரவேண்டும்.

'करिष्यामि' - அநுஷ்டிக்கைக்காகவன்றோ நாம் இக் गाथैயைக் கற்றது!

'न गाथा गाथिनं शास्ति'[2] என்கிறபடியே குலிங்க-சகுநியைப் போலே[b] வேறொன்றைச் சொல்லி - வேறொன்றைச் செய்கைக்கன்றே!

'यथार्थं' – बाधकமில்லாமையாலும்[c] ப்ரத்யக்ஷ - ச்ருதி ஸம்வாதத்தாலும்[d] பழுதற்ற பாசுரம். दृष्ट–अदृष्ट[e]- விருத்தமான உங்கள் வார்த்தையைக் காட்டில் அவன் வார்த்தைக்குள்ள விசேஷம் இருந்தபடி கண்டீரோ?

'कण्डोः वचनं' – 'धर्मस्य तत्त्वं निहितं गुहायां' [3]

என்னும்படி இருந்தால்,

'महाजनो येन गतः स पन्थाः'[3]

என்கிறபடியே பெரியனான கண்டுவின் வழியைப் பின் செல்லுகைகாணும் நமக்குக் கார்யம்!

'उत्तम - உத்தம - தர்ம விஷயம்[f] அங்ஙனன்றிக்கே இப்பாசுரத்திற்கு மேல் உம்மாலேயாதல், முதலிகளாலேயாதல், நம்மாலேயாதல் ஒரு கண்ணழிவு[g] சொல்லவொண்ணாதபடி எல்லாவற்றுக்கும் மேலான பாசுரம் காணும் இது!

இதற்கு

''भीताभयप्रदानेन सर्वान् कामानवाप्नुयात् ।
दीर्घमायुश्च लभते सुखी चैव सदा भवेत् ।।'[4]

'एकतः क्रतवः सर्वे समग्रवरदक्षिणाः ।
एकतो भयभीतस्य प्राणिनः प्राणरक्षणम् ।।'[5]

என்று संवर्तादिகள் சொன்ன तात्कालिक–फलமும் विपाक- காலத்தில்[i]

---

a- உறவினர் செய்யும் செயல்; b- குலிங்கமென்னும் பறவை. இப்பறவை 'துணிவான செயலைச் செய்யாதே' என்று பிறருக்குச் சொல்லிக் கொண்டேயிருந்து தான் சிங்கத்தின் வாயில் உள்ள உணவைப் பறிக்கப் பார்க்கும். 'சொல்வதொன்று நடப்பதொன்று' என்பதற்கு இந்தப்பறவை உதாஹரணம்; c- மறுக்க வல்லது; d-வெளிப்படையான சுருதியைத் தழுவுதல்; e- இம்மை மறுமைப் பலன்களுக்குத் தடையான; f- உத்தமான தர்மத்தைப் போதிப்பது; g- குறைவு; h- அப்பொழுது பெறும் பலன்; i- பின் பலன் தரும் பொழுது.

1 धर्म : श्रुतो वा दृष्टो वा स्मृतो वा कथितोऽपि वा।
अनुमोदितो वा राजेन्द्र पुनाति पुरुषं सदा ।।

பார் **(ஆச்வ-96-31) :** தர்மத்தைக் கேட்டாலும் பார்த்தாலும் நினைத்தாலும் கூறினாலும் பிறர் சொல்வதை ஆமோதித்தாலும் அத்தருமம் மனிதனை எப்பொழுதும் தூயவனாக்குகிறது.

2 न गाथा गाथिनं शास्ति बहु चेदपि गायति।
प्रकृतिं यान्ति भूतानि कुलिङ्गशकुनिर्यथा ।।

பார **(ஸ்பா.42-21) :** ஒரு சாஸ்திரம் அதைப் பலமுறை படித்தவனையும் திருத்த முடிவதில்லை. ப்ராணிகள் தங்கள் பழைய வாஸனையைத் தழுவியே குலிங்கமென்னும் பறவையைப் போலே நடக்கின்றன.

3 तर्कोऽप्रतिष्ठ : श्रुतयो विभिन्ना : नैको मुनिर्यस्य मतं प्रमाणम्।
धर्मस्य तत्वं निहितं गुहायां महाजनो येन गत : स पन्था : ।।

பார**(ஆரண்-268-121) :** யுக்திக்கு ஒரு முடிவில்லை. வேதங்கள் பல்வகைப்பட்டன. நாம் ப்ரமாணமாகக் கொள்ளுதற்குத்தம் கருத்தைக் கூறும் முனிவரும் ஒருவரில்லை. பலர்உளர். தர்மத்தின் உண்மை மிக மறைவாயுள்ளது. இந்த நிலையில் பெரியோர்கள் செல்லும் வழியே நமக்கும் நல்வழியாகும்.

4 **ஸம்வர்த்தஸ் (53) :** அஞ்சியவனுக்கு அபயமளிப்பவன் தான் விரும்பிய எல்லாம் பெறுவான். நீண்ட வாழ்நாளையும் எப்பொழுதும் ஸுகத்தையும் பெறுவான்.

5 **இதிஹாஸஸ (4-3) :** மிகுதியான தக்ஷிணைகளுடன் எல்லா வேள்விகளையும் செய்தலும் அஞ்சியவனுக்கு அபயமளித்து உயிரைக் காத்தலும் ஸமமான தர்மமாகும்.

Scanned with CamScanner

வரும் फलமும் கேளீர். 'धर्मिष्ठं च यशस्यं च'[a] என்று தற்காலத்திலே ஸித்தித்து நிற்கும் फलம். 'स्वयं स्यात्तु फलोदये'[b] என்று ப்ரதிபந்தகம்[c] கழிந்தால் विपाक[d] காலத்தில் வரும் फलம்.

'नातो भूयस्ततो धर्मः कश्चिदन्योऽस्ति खेचर ।
प्राणिनां भयभीतानामभयं यत्प्रदीयते ।।'

'महान् धर्मोऽक्षयफलः शरणागतपालने।
धर्मनिश्चयतत्त्वज्ञा एवमाहुर्मनीषिणः।।'2

என்று शिबि–प्रभृतिகள் அறுதியிட்டபடியே சரணாகத ரக்ஷணமே धर्मங்கள் எல்லாவற்றுக்கும் முடிசூடின धர்மம்.

20.3.8 இந்த அதிகாரத்தின் திரண்ட பொருள்

இது அறிந்து காருணிகருமாய்[e] ரக்ஷண[f] ஸமர்த்தருமாய் இருக்குமவர்கள் பக்கல் சரணாகதிக்குப் फलसिद्धियில் ஸம்சய[g]மில்லை என்று திருவுள்ளம்.

दीनो दृप्यतु वाऽपराध्यतु परं व्यावर्ततां वा ततः
त्रातव्यः शरणागतः शकनतः सद्भिस्तथा स्थाप्यते
विश्वामित्रकपोतवानररघुव्योमाध्वगप्रेयसी–
नाळीजङ्घबृहस्पतिप्रभृतिभिर्नन्वेष घण्टापथः।।

பரம தர்ம நிர்ணயம் முற்றும்

அதிகாரம் 8: சரண்ய வ்ரத விசேஷ ப்ரகாசம்

(ரக்ஷகன் கொண்டுள்ள உயர் விரதத்தை விளக்குவது)

21 எல்லோருக்கும் அபயமளிக்க இராமன் ஸங்கல்பத்தைக் கூறும் ராமசரம சுலோகத்திற்கு விளக்கம்

'श्रुतिः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
सम्यक्सङ्कल्पजः कामो धर्ममूलमिदं स्मृतम् ।।'4

என்று மஹர்ஷிகள் சொன்ன தர்ம-ப்ரமாணங்கள்[h] ஐந்திலே நாலை அருளிச்செய்து காட்டி, பஞ்சம் -தர்ம-ப்ரமாணத்தை[i] அருளிச் செய்கிறார்-

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम।। ராமா-(6-18-33)

'सकृत्'- மற்ற உபாயத்திலே[j] ஆவ்ருத்தி[k] शास्त्रार्थ[l] மானாற்போலே காணும் ப்ரபத்தியில் அநாவ்ருத்தி[m] சாஸ்த்ரார்த்தமாய் இருக்கும்படி!

---

a- தர்மத்தையும் புகழையும் அளிப்பது; b- பிந்திய பலனாக ஸ்வர்க்கத்தையும் அளிப்பது; c- தடை; d- புண்யம் பக்குவமாகும் காலம்; e- கருணை சுரந்த; f - காக்க வல்லவர்; g- ஐயம்; h- தர்மங்களைக் காட்டும் ஆதாரங்கள்; i- தர்மத்தை அறிவதற்கு ஐந்தாவதான ப்ரமாணம்; j- பக்தி யோகம்; k- தொடர்ந்து செய்கை; l-சாஸ்த்ர விதி; m - மறுமுறை செய்யாமை.

1. **இதி. ஸமு. (4-41) :** பணியே! அஞ்சி வந்த பிராணிகளுக்கு அபயமளிப்பதினும் சிறந்த தர்மம் எதுவும் இல்லை .

2. **இதி. ஸமு. (8-2) :** சரணமடைந்தவனைக் காப்பது எந்நாளும் பலனை குறைவின்றித் தரும் சிறந்த தர்மமென்று தர்மத்தின் உண்மையை உறுதியாய் அறிந்த பெரியோர்கள் கூறுகின்றனர்.

3 दीनो वा - வருந்தி வந்தவனாகினும்; दृप्यतु वा - கர்வத்தோடு வந்தவனாகினும்; अपराध्यतु वा- குற்றம் செய்பவனாக இருப்பினும், ततः व्यावर्ततां वा - குற்றத்திலிருந்து விலகியவனாய் இருப்பினும்; शरणागतः - சரணமடைந்தவன்; शकनतः - முடிந்தவரையில்; त्रातव्यः- காக்கப்பட வேண்டும்; विश्वामित्र–कपोत–वानर–रघु–व्योमाध्वगप्रेयसी–नाळीजङ्घ–बृहस्पति–प्रभृतिभिः- விச்வாமித்ரர், புறா, குரங்கு, ரகுமஹாராஜா, கந்தர்வப்பெண், நாளீஜங்கன் என்கிற கொக்கு, ப்ருஹஸ்பதி முதலிய; सद्भिः- நல்லோர்களால்; एष घण्टापथः- இந்த ராஜமார்க்கமானது; तथा- அவ்வாறே; स्थाप्यते ननु - வலியுறுத்தப்படுகிறது அல்லவா? (A-1 to 6,8,16).

ஒருவன் வருந்தி வந்து சரணமடைந்து விட்டால் அவன் செருக்குடையனாகவோ, குற்றம் செய்பவனாகவோ, குற்றம் செய்யாதவனாகவோ இருப்பினும் நம்மால் இயன்றவளவு அவனைக் காக்க வேண்டும் என்று பெரியோர்கள் வலியுறுத்திக் கூறினர். விசுவாமித்திரர் - புறா குரங்கு - ரகுமஹாராஜன் தேவஸ்த்ரீ - நாளீஜங்கன் - ப்ரஹஸ்பதி முதலியவர்களால் சரணமடைந்தவரைக் காத்தல் என்னும் தர்மம் தவறாத கடமையாகக் கொள்ளப்பட்டது.

4. **யாஜ்ஞவல்க்யஸ் (1-7):** வேதம் - ஸ்ம்ருதி - பெரியோர்களின் அநுஷ்டாநம் தன் மனதுக்கு உகப்பு - இக்கருமத்தால் இப்பலன் வருமென்ற உணர்ச்சியால் எழும் ஆசை - இந்த ஐந்தும் தர்மத்தை அறியப் பிரமாணமாகக் கூறப்பட்டன.

Scanned with CamScanner

'एव' காரத்தாலே நைரபேக்ஷ்யம்[a] சொன்னபடி.

'प्रपन्नाय, तवास्मीति च याचते' என்கிற இரண்டாலுமாக கோப்த்ருத்வ-வரணமும்[b] ஆத்ம நிக்ஷேபமும்[c] சொன்னபடி.

'प्रपन्नाय' என்று மாநஸமாய்[d] 'याचते' என்று वाचिक[e]மாகவுமாம்.

த்வயத்தில் போலே அடைவே[f] உபாயத்தையும் फलத்தையும் சொல்லுகிறதாகவுமாம்.

'प्रपन्नाय' என்று गोबलीवर्द-न्याय (24°) प्रयोजनान्तर-परனைச்[g] சொல்லி 'तवास्मीति च याचते' என்று அநந்ய ப்ரயோஜனனைச்[h] சொல்லுகிறதாகவுமாம்.

'शरणं च प्रपन्नानां तवास्मीति च याचताम् ।
प्रसादं पितृहन्तॄणामपि कुर्वन्ति साधवः ॥'[1]

என்கிற ஶ்லோகத்திலும் இப்படியே यथोचित- விவக்ஷையைக்[j] கண்டுகொள்வது.

'चतुर्विधा भजन्ते मां'[2] என்கிற உபாஸநம் போலே 'तावदार्तिस्तथा वाञ्छा'(80[2]) इत्यादि- ப்ரமாணங்களாலே ப்ரபத்தியும் सकल-फल-साधनமாயிருக்கும்.

'अभयं' என்று सङ्कोचाभावத்தாலே[k] सर्व-भय-अभावத்தையும்[l] சொல்லுகிறது.

'सर्वभूतेभ्यः' என்கிற இத்தை पञ्चमी[m] என்று சிலர் व्याख्यानம் பண்ணினார்கள். ஸோமயாஜியாண்டான் உள்ளிட்டார்கள் चतुर्थी[n] என்று நிர்வஹித்தார்கள்[o]. இரண்டு பக்ஷத்திலும் உள்ள गुण-दोष-तत्समाधानங்களை[p] तत्तत्-ग्रन्थங்களிலே[q] கண்டு கொள்வது.

அதில் पञ्चमी - பக்ஷத்தில் 'प्रपंन्नाय' என்கிற இதற்கு संकोचம்[r] இல்லாமையாலே ப்ரபத்தியினுடைய सर्वाधिकारत्वம்[s] सिद्धिக்கும். चतुर्थी-पक्षத்தில் सर्वाधिकारत्वம் कण्ठोक्तமாம்[t].

पञ्चमीயானால் केवल-रावणादिमात्रத்தைப் பற்றவன்று, ब्रह्मरुद्रादिகளையும் நம்மையும்பற்ற भयம் இல்லாதபடி

பண்ணுவோம்' என்று அருளிச்செய்தபடியாம். चतुर्थीயானால் விபீஷணன் என்று நினைக்க வேண்டா: ராவணன் தானாகிலும் நாம் அவனுக்கு அபயப்ரதாநம் பண்ணுவோம் என்றதாம்.

இப்பொருள் கீழில் ப்ரகரணத்திற்கும் மேலில் ப்ரகரணங்களில் சுலோகங்களுக்கும் சேரும். இந்த யோஜனையில்[u] ஸர்வரையும் பற்ற भय-अभावம்[v]- अर्थ-सिद्धம்[w]

निदानं सर्वभूतानां एकः कर्मफलप्रदः ।
इति पश्यन् कशातुल्यात् कुतश्चिन्न विभेति हि ॥ *(1)*

---

a- வேறொன்றையும் வேண்டாமை; b- ரக்ஷிக்க வேண்டு மென்று பிரார்த்தித்தல்; c- ஆத்மாவை ஸமர்ப்பித்தல்; d- மனத்தால் செய்வது; e- வாயால் சொல்லுதல்; f- முறையே; g- வேறு பயனில் ஈடுபட்டவன்; h- உனக்கே தொண்டு செய்பவனாய் உள்ளேன் என்று ப்ரார்த்திப்பவன்; i- வேறு பயனை விரும்பாதவன்; j - ஏற்ற கருத்து; k- இத்தகைய அச்சமில்லாமை என்று வரையறுக்காமை; l- யாரிடமும் எத்தகைய அச்சமும் இல்லாமை; m- ஐந்தாம் வேற்றுமை; n- நான்காம் வேற்றுமை; o- முடிவு கட்டினர்; p- சிறப்பு - குற்றம் - அதற்கு விடைகள்; q- அந்தந்த நூல்கள்; r- சுருக்கம்; s- எல்லோரும் செய்ய உரிமை; t- வெளிப்படையாகக் கூறப்பட்டது; u- பொருள் கொண்ட முறை; v- பயம் இல்லாமை; w- கருத்தால் தேறியது.

1 **விஷ்ணுதர்(?)** : சரணமடைந்தவர்களையும் உனக்குத் தொண்டு செய்வேனென்று வேண்டுமவரையும். அவர்கள் - தகப்பனைக் கொன்றவராயினும் ஸாதுக்கள் ஆதரிப்பர்.

2 चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥

கீதை (7-16) : அர்ஜுநா!-புண்ய சீலர்களான நால்வகையினர்கள் என்னை உபாஸிக்கின்றனர். இழந்த ஐசுவர்யத்தைப் பெற விரும்புமவன், புதிதாய் ஐச்வர்யத்தை விரும்புமவன், சரீர ஸம்பந்தமற்ற ஆத்மாவை. அநுபவித்தலாகிய கைவல்யத்தை விரும்புமவன். என்னை அநுபவித்தலாகிய மோக்ஷத்தை விரும்புமவன்.

3 **தேசிகன் காரிகைகள்:** (1) सर्वभूतानां - எல்லா பிராணிகளுக்கும்; निदानं - காரணமான; एकः- (எம்பெருமான்) ஒருவனே; कर्म-फलप्रदः- அவர்களுடைய கருமத்திற்குத் தக்கபடி பலத்தைக் கொடுக்கிறான்; इति पश्यन् - என்பதை அறிந்து; कशा-तुल्यात्- சாட்டை போன்ற (துன்பத்தைத் தருகின்ற); कुतश्चित्- எதனிடத்திலிருந்தும்; न बिभेति- பயப்படுகிற தில்லை.

सर्वापराधनिष्कृत्या प्रपत्त्या करुणानिधिम् ।
प्रसादयन् न हि पुनस्ततोऽपि भयमृच्छति ॥ (2)

अपायसंप्लवे भूयो यथार्थमनुशिष्यते ।
प्रायश्चित्तिरियं साऽत्र यत् पुनः शरणं व्रजेत् ॥ (3)

'एतत व्रतं' - இது ஸர்வ - ப்ரமாண - அநுமதமாய்[a] தவறில் ப்ரத்யவாயம்[b] வரும்படியான धर्म्यமான[c] ஸங்கல்பம் காணும்!

'मम' - நமக்கு ஸங்கல்பம் நடத்துகைக்கு விலக்கான அஜ்ஞாந அசக்திகள் ஒருகாலும் வாரா காணும். ஆகையால் விலக்கவொண்ணாத இவ் வ்ரதத்தைப் பரிவரான நீங்களும் இசைந்து ரக்ஷியுங்கள் என்று திருவுள்ளம்.

22 'विभीषणो वा सुग्रीव' என்ற சுலோகத்திற்கு விளக்கம்

இச் சுலோகத்தில் அருளிச் செய்த ப்ரபத்தியினுடைய सर्वाधिकारत्वத்தை[d] ப்ரக்ருதமான[e] ராவண-விபீஷண-உதாஹரணத்திலே காட்டி 'இவன் விபீஷணனாகிலும் ராவணனேயாகிலும் நாம் இவனுக்கு அபயப்ரதாநம் பண்ணினோம். உம்மையும் முதலிகளையும் புருஷகாரமாகக்[f] கொண்டு நம்மைச் சரணாகதனானவனை அமாநவ - ந்யாயஸ்த்தரான[g] நீரே நம்மோடே சேர்த்து நமக்கு இப் புருஷார்த்தைத் தாரீர்' என்று ஸுஹ்ருத் - பாரதந்த்ர்யம் தோற்ற[h] அருளிச் செய்கிறார்.

विभीषणो वा सुग्रीव यदि वा रावणः स्वयम् ।
आनयैनं हरिश्रेष्ठ दत्तमस्याभयं मया ॥ ராமா(6-18-34)

22.1 பரிவாரத்துடன் விபீஷணனுக்கு அபயமளிக்க இராமன் துடிப்பு

நீங்கள் சொல்லுகிறாப் போலே விபீஷணனாகவுமாம். கபோதத்தின் பேறு நாமும் பெறவேண்டுமென்று இருக்கிற நம்முடைய மனோரதத்தின்படியே ஸாக்ஷாத் ராவணனேயாகவுமாம்.

'अस्य'-राघवं शरणं गतः[i] என்கிற அருந்துத-உக்தியை[j] நேர்ந்த இவனுக்கு என்றபடி.

'अस्य'-என்கிற இதிலே இவனுடைய அநுபந்திகளும்[k] அநுப்ரவிஷ்டர்[l] அநுபந்திகளுடைய பயம் சமித்தலாயிற்று[m] இவனுக்கு அபயப்ரதாநம் பண்ணிற்றாவது.

22.2 விபீஷணனை பரீக்ஷித்த பின்பே ஏற்கச் சுக்ரீவன் கருத்து - இராமன் மறுத்தல்

விபீஷண - அங்கீகாரத்தை இசைந்து, முதலிகள் பக்கல் தாக்ஷிண்யம் குலையாமைக்காக இவனைச் சிறிது பரீக்ஷித்ததாகப் பண்ணிக் கொண்டாலோ என்று மஹாராஜருக்குக் கருத்தாகத் திருவுள்ளம்பற்றி உத்தரம் அருளிச் செய்கிறார்.

'दत्तमस्य–अभयं–मया[n]-ஸத்ய ஸங்கல்பரான நாம் பண்டே சரணாகத - பரித்ராணத்தை[o] நமக்கு வ்ரதமாக ஸங்கல்பித்து

---

a- ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ஸம்மதம்; b- பாபம்; c- தர்மத்தைத் தழுவிய; d- அனைவரும் செய்யத் தகுதி; e- இங்கு பேசப்படுகிற; f- பரிந்து பேசுபவர்; g- அமாதவன் - ப்ரபத்தி செய்தவன் மரணமடைந்தபின் அவனை மோக்ஷம் வரையில் அழைத்துச் செல்பவன். அந்த ஸ்தாநத்தில் இருப்பவர்; h- தோழனுக்கு வசப் பட்டுள்ளமை; i- இராமனைச் சரணம் அடைந்தேன்; j- மனத்தைப் புண்ணாக்கும் சொல்; k- சேர்ந்தவர்கள், சுற்றத்தார்; l- அடங்கியவர்கள்; m- தணித்தாயிற்று; n- இவனுக்கு அபயம் முன்பே என்னால் கொடுக்கப்பட்டது; o- சரணம் அடைந்தவனைக் காத்தல்.

(2) सर्व–अपराध–निष्कृत्या - எல்லா அபராதங்களுக்கும் பிராயச்சித்தமாயிருக்கிற; प्रपत्त्या - ப்ரபத்தியினாலே; करुणानिधि-கருணைக் கடலான எம்பெருமானை; प्रसादयन् – மகிழச் செய்தால்; पुनः - மறுபடியும்; ततो अपि – அவனிடத்திலிருந்தும்; भयं– பயத்தை; न ऋच्छति हि– அடைவதில்லை.

(3) अपायसंप्लवे– பாபங்கள் நேர்ந்தால்; यथार्ह – அவனவனுக்குத் தக்கவாறு; प्रायश्चित्तिः– ப்ராயச்சித்தமானது; अनुशिष्यते– விதிக்கப்படுகிறது; अत्र– ப்ரபந்நன் விஷயத்தில்; पुनः शरणं व्रजेत् (इति) यत्– மறுபடி சரணடைவது என்பது; प्रायश्चित्तिः – ப்ராயச்சித்தமாகிறது.

வைத்தோம். விபீஷணனும் அவ்வுபாயம் அநுஷ்டித்தான். ஆனபின்பு நாம் இவனுக்கு அபயப்ரதாநம் பண்ணினோ மாயிற்று. இனி இவனுக்கு நம்மைப்பற்றப் பரீக்ஷை என்று ஒரு भय-स्थानத்தை[a] உண்டாக்கி நமக்கு வ்ரத-भङ्गம்[b] பிறப்பிக்கை அழகிதோ? தாங்களே தெளியப் புகுகிற முதலிகள் பக்கல் दाक्षिण्य-भङ्गம்[c] அழகிதோ என்று हरि-श्रेष्ठனாய்[d] வாநர ராஜ்யத்திற்கு முடிசூடி மஹாமநாவாயிருக்கிற[e] நீர் இத்தை நெஞ்சிலே உரைத்துப் பாரீர்.

'आनयैनं' என்றது கார்யத்தில் தீர்வு[f] இருந்தபடி.

சரண்ய வ்ரத விசேஷ ப்ரகாசம் முற்றும்

அதிகாரம் 9: சரண்ய சரணாகத ஸங்கம லாபம்

(ரக்ஷகனும் சரணமடைந்தவனும் சேர்தலால் வரும் பயனை விளக்குவது)

23 இராமாயணத்தில் அபயப்ரதானப்ரகரண விஷயச் சுருக்கம்

இப்படி அருளிச் செய்தவாறே முன்பு 'கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்'[1] என்று நின்ற மஹாராஜர் தெளிந்து, தாம் பண்ணின அபராதத்தற்குப் பெருமாளைக்ஷமை[g] கொண்டு, தாமே புருஷகாரமாய் வந்து மண்ணும் மணமும் கொண்மின்[2] (322[1]), 'எமதிடம் புகுதுக'[3] इत्यादिகளில் प्रक्रियैயாலே 'நாங்களும் ஸ்ரீவிபீஷணாழ்வானும் ஒரு வாசியற அடிமை செய்யப் பெறவேண்டும்; நாங்களும் இவனுக்கு 'सखा दासोऽस्मि'[4] என்னும்படி அடியோமாக வேண்டும்' என்று விண்ணப்பம் செய்ய, இப்படி प्रतिबन्धகம்[h] கழிந்து अनन्तरம்[i] பெருமாளுக்கு शरणागतलाभமாகிற புருஷார்த்தம் பிறந்த படியையும், 'दत्तमस्याभयं मया' (320) என்கையாலே அபயம் பெற்ற சரணாகதனுக்கும் இப்படி விசேஷித்துப் பெருமாள் பாசுரமின்றிக்கே தங்களுக்கு வேறோர் உபாயமுமின்றிக்கே சரணாகதனுடைய அ[j] अभिमानத்திலே[k] அடங்கிக் கூடவந்த நாலு ராக்ஷஸர்களுக்கும் பெருமாள் திருவடிகளைப் பெறுகையாகிற परम-पुरुषार्थம்[l] பிறந்த படியையும், पर्यङ्क-विद्यादिகளிற்படியே[m] परस्पर- संश्लेषத்[n]

தாலே பிறந்த प्रीति-परीवाहமான[o] संवाद- விசேஷங்களையும் எல்லாம்[p] இந்த सर्गத்தின் சேஷத்தாலும்[q], மேலில் सर्गத்தின் முகப்பாலுமாகச்[r] சொல்லி, शरणागति-वेदமான प्रबन्धத்திலே उपनिषद्भागமான[s] अभयप्रदान-प्रकरणத்தைத் தலைக்கட்டுகிறான் ஸ்ரீ வால்மீகி பகவான்.

23.1 சுக்ரீவன் மனம் தெளிந்து விபீஷணனுடன் சேர விழைந்து இராமனின் குணங்களைக் கூறிப் போற்றுதல்

அவ்விடத்தில் தாம் முற்பட்ட நினைத்த தொன்றை விலக்க வல்லார் இல்லாதபடியான निरङ्कुश-स्वातन्त्र्यத்தையுடைய[t]

---

a- அச்சத்துக்கு இடம்; b- விரதத்திற்கு முறிவு; c- தாக்ஷிண்யத்துக்கு முறிவு; d- வாநரர்களுக்குள் சிறந்தவன்; e- விசாலமனம் படைத்தவன்; f- உறுதியான முடிவு ; g- மன்னிப்புப் பெற்று; h- இடையூறு; i- பின்பு; j- சரணம் அடைந்தவன் கிடைத்தல்; k- தன்னுடையவர் என்ற அன்பில்; l- மிகப் பெரும் பயன்; m - பரமபதத்தில் எம்பெருமானுடைய கட்டிலைப்ரபந்நன் அடையும் முறையைக் கூறும் உபநிஷக் பகுதி; n- ஒருவர்க் கொருவர் அணைத்தல்; o- மகிழ்ச்சிக்குப் போக்குவீடு; p- விசேஷமான ஸம்பாஷணைகள்; q- எஞ்சிய பகுதி; r- தொடக்கம்; s- உபநிஷத்தின் பகுதி; t- தடையற்ற சுதந்திரம்.

1. வாழாட்பட்டு நின்றிருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்,
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்,
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர்வாழ் இலங்கை,
பாழாளாகப்படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே !

பெரியாழ் திரு. (1-1-3) : வயிற்றுணவுக்காகப் பிறரிடம் அடிமைப் பட்டு நிற்பவர்களை எங்கள் குழுவில் சேர்த்துக் கொள்ள மட்டோம்.

2. எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்ய முற்படுவர் இருந்தால் வந்து அவன் உத்ஸவத்துக்கு மண் சுமந்து சிரத்தையோடு செய்யுங்கள்.

3. **திருவாய். (10-9-9):** ஸ்ரீவைகுண்டம் போகும் போது வழியில் தேவர்கள் 'எம்பெருமானுக்கு அடியார்களே! எங்கள் இடத்துக்கு எழுந்தருள வேண்டும்' என்கின்றார்கள்.

4. लोकनाथस्य रामस्य सखा दासोऽस्मि राक्षस ।
न मया मोक्ष्यसेऽद्य त्वं पार्थिवेन्द्रस्य तेजसा ॥

ராமா (6-40-10) : ராவண! நான் லோகநாதனான இராமனுக்குத் தோழன் உண்மையில் அவனுக்குத் தாஸன். அவனுடைய ப்ரபாவத்தால் உன்னை இப்பொழுது நான் விடப் போவதில்லை (சுக்கிரீவன் இராவணனுக்குக் கூறுவது)

Scanned with CamScanner

பெருமாள் आश्रित-परतन्त्रராய்[a] மஹாராஜரையும் முதலிகளையும் தெளிவித்து, ‘आनयैनं हरिश्रेष्ठ’ என்று அருளிச்செய்த உறவுடைமையிலும் நீர்மையிலும்[b] ஈடுபட்ட மஹாராஜர் விண்ணப்பம் செய்தபடி சொல்லுகிறான்-

> रामस्य तु वचः श्रुत्वा सुग्रीवः प्लवगेश्वरः ।
> प्रत्यभाषत काकुत्स्थं सौहार्देनाभिचोदितः ॥ ராமா(6-18-35)

சரணாகதனாய், இவர் கைவிடில் எங்கேனும் புகிலும் அழியும்படி நிற்கிற விபீஷணாழ்வானையும் இவனை அழிக்க நினைத்த பரிவரையும் ரமிப்பித்தபடியைப்[c] பற்ற இங்கு रामस्य என்கிறது.

‘तु’ என்ற இத்தாலே மஹாராஜருக்குக் கலக்கமும் சீற்றமுமான முன்னில் அவஸ்த்தையைக் காட்டில் தெளிவும் ப்ரீதியுமான இதோர் अवस्था-भेदம் இருந்தபடியைச் சொல்லுகிறது.

‘सुग्रीव: प्लवगेश्वरः’ - சரணாகதன் பக்கல் अपचार-रुचि[d] தவிர்ந்த பின்பன்றோ இவருக்குப் பேரும் பெருமையும் நின்றது!

‘काकुत्स्थं’-पर-अवस्थै[e]யில் தேட்டமாய்ப் பிறந்து படைத்த நீர்மை இருந்தபடி[f].

‘सौहार्देन अभिचोदित:’ - இப்படி நிருத்தரரான மஹாராஜர் பெருமாளுடையவாதல் தம்முடையவாதல் सौहार्दம் பேசிவைக்கப் பேசுகிறார்-

> किमत्र चित्रं धर्मज्ञ लोकनाथ मुखावह ।
> यत् त्वमार्य प्रभाषेथाः सत्त्ववान् सत्पथे स्थितः ॥ ராமா (6-18-36)

‘किमत्र चित्रं’ - எங்களைப் போலிகள் இப்பாசுரத்தைச் சொல்லிலன்றோ ஆச்சர்யமாவது! தேவரீர் இப்படி அருளிச் செய்தவிடத்தில் ஆச்சர்யம் உண்டோ? ஸ்வபாவம் என்றிருக்கும் அத்தனை அன்றோ!

‘धर्मज्ञ’ - பணையோடு பணை[h] தத்தித் திரிந்த எங்களாலே தேவரீர் திருவுள்ளம் பற்றியிருக்கும் தர்மங்களெல்லாம் அறியப் போமோ ? ‘सूक्ष्मः परमदुर्ज्ञेयः सतां धर्मः प्लवङ्गम’ (268^2) என்று அருளி செய்த தேவரீருக்கேயன்றோ தர்மத்தின் உண்மை தெரிவது

‘लोकनाथ’ - உடைமை அழியாதபடி ரக்ஷிக்கை உடையவனுக்கு ஏற்றமல்லாமையாலே சரணாகதனை அச்சம் தவிர்த்து ரக்ஷித்தீர். எங்களை அபசாரம் தவிர்த்து ரக்ஷித்தீர்.

‘सुखावह’ - ஸ்ரீ விபீஷணாழ்வான் தேவரீருக்கு அடிமை செய்யப்பெற, நாங்கள் அவனுக்கு அடிமை செய்யப்பெற, இரண்டு வர்கத்தையும்[i] ‘कृतार्थராக்கினீர்[j].

‘सत्त्ववान्’ - இதற்கு முன் கண்டறியாத சரணாகதன் பக்கல் ஒருதலையாகப் பரிவர் சொன்ன உபபத்திகளுக்கும்[k] निर्बन्धங்களுக்கும் இளையாத வ்யவஸாயத்தில்[l] திண்மை இருந்தபடி என்!

‘सत्पथे स्थितः’ -बृहस्पति-शिबि-रघु-वानर-कपोत-वसिष्ठ-विश्वामित्रादिकளான ஸத்துக்கள் நடந்த நல்வழியான शरणागत - परित्राण - धर्मத்திலே தேவரீர் நின்ற நிலை ஒரு கோடி சரணாகதராலும் கலக்க வொண்ணாதபடியாயிருந்தது (A-8,9,16,4,3,14,1,2).

‘यत् त्वमार्य प्रभाषेथाः’ - தேவரீர் அருளிச் செய்த பாசுரத்தின் நிழலிலே ஒதுங்கிப் புலியும் புல்வாயும்[m] ஒரு துறையிலே நீருண்ணும்படியாயிருந்தது.

---

a- அடியார்களுக்கு வசப்பட்டவர்; b- எளிமை; c- மகிழ்வித்த நிலை; d- அபசாரப்படுவதில் ஆசை; e- பரமபத நாத நிலையில்; f- ஜரித்துக் கொள்ள முடியாதபடி பெருமை மிகுதியாய்; g- விடை சொல்ல முடியாதவர்; h- நல்லெண்ணம், நட்பு; h- கிளைக்குக் கிளை; i- வகுப்பினர்; j- பயன் பெற்றவர்; k- பொருத்தமான யுக்திகள்; l- உறுதி; m- கலைமான்.

1 சுக்கிரீவ! இந்த விபீஷணனை நீயே அழைத்து வா. (சுலோகம் : 320)

23.2 சுக்ரீவன் விபீஷணனைப் பற்றிய தெளிவின் உறுதியை விளக்குதல்

எனக்கு மறுக்கமாட்டாமையாலே கொண்டாடுகிறீரோ? நீர் மாநஸ - அபசாரமும்[a] தவிரும்படி தெளிந்தீரோ? என்ன -

मम चाप्यन्तरात्माऽयं शुद्धं वेत्ति विभीषणम् ।
अनुमानाच्च भावाच्च सर्वतः सुपरीक्षितः ॥ ராமா (6-18-37)

'मम चापि अन्तरात्माऽयं शुद्धं वेत्ति विभीषणम्' - ஒருத்தராலும் தெளிவிக்கவொண்ணாதபடி கலங்கின என் நெஞ்சும் தேவரீர் பாசுரங்களாலே தெளிந்து சரணகதனான விபீஷணன் शुद्धன் என்று அறியப்பெற்றது.

'अनुमानाच्च' - 'प्रणादश्च महानेष': (274[4]) इत्यादिகளிற்படியே स्वर-प्रसादादिகளாலும்[b].

'भावाच्च'–अभिप्राय–व्यञ्जक[c]ங்களான மற்றுமுள்ள आकारங்களாலும் என்ற படி, 'सतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्त: करणप्रवृत्तयः'[1] என்கிற படியே நம்முடைய अन्त:करणம் இசைந்த படியாலும் என்னவுமாம்.

'सर्वतः' - உள்ளும் புறமும் ஒக்க என்றபடி. அங்ஙனன்றிக்கே 'ராவணனுமல்லன், ராவண -प्रेषित[d]னுமல்லன்[e], ராவண - अनुरक्तனு மல்லன்' என்று ஸர்வ-प्रकारத்தாலும் தெளிய அறிந்தோம் என்றுமாம்.

'सुपरीक्षितः' - இனி सर्वशक्तिकரான[f] உம்மாலும் எங்களைக் கலக்கவொண்ணாது என்று தாத்பர்யம்.

23.3 விபீஷணனையும் தங்களுக்குச் சமமாய்க் கொண்டு அவனுக்கு விசேஷ அநுக்ரஹம் செய்யுமாறு சுக்ரீவன் இராமனை வேண்டுதல்

'நாம் இனி விபீஷணனுக்குச் செய்யவேண்டுவது என்ன? உங்களுக்குச் செய்ய வேண்டுவது என்ன? இரண்டும் நீர் நியமித் தல்லது நாம் செய்யவொண்ணாது' என்று பெருமாளுக்குத் திருவுள்ளத்தில் கருத்தாகக் கொண்டு விண்ணப்பம் செய்கிறார்-

तस्मात् क्षिप्रं सहास्माभिस्तुल्यो भवतु राघव ।
विभीषणो महाप्राज्ञः सखित्वं चाभ्युपैतु नः ॥ ராமா(6-18-38)

'तस्मात्' - நிர்தோஷனானவளவன்றிக்கே எங்களிலும் பரிவன்[g] என்னுமிடம் தெளிகையாலும்,

'ययोः चित्तेन वा चित्तं नैभृतं नैभृतेन वा ।
समेति प्रज्ञया प्रज्ञा तयोर्मैत्री न जीर्यते ॥'[2]

என்னும்படி எங்களுக்கும் இவனுக்கும் मनोरथादिகள்[h] ஒத்திருந்தபடியாலும்.

'क्षिप्रं' -இனி இவனையொழிய ஒரு க்ஷணமும் எங்களுக்குக் கைங்கர்யம் பண்ண இயலாது, இவன் தானும் இனி ஒரு க்ஷணமும் விश्लेषம்[i] பொறுக்கமாட்டான்.

'सह अस्माभि: तुल्यो भवतु' - இவன் எங்களோடு பிரிக்கப் படாதே நாங்கள் பெற்ற பேறும் பெற்று ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யத் திருவுள்ளமாய் அருள வேண்டும். இவன் இழந்த காலத்திற்கும் படி எடுத்ததுமாய்[j] இப்போது கலத்திலே சோற்றையிட்டு கையைப் பிடித்தாற்போலே தகையுண்டு நிற்கிற க்லேசமும் தீர இவன் ஒருவனுமே ஒருதலையும் நாங்கள் எல்லாரும் ஒருதலையுமாக விஷயீகரித்து அருளவேண்டுமென்று एकवचनத்திற்கும்[k] बहुवचनத்திற்கும்[l] தாத்பர்யம்.

---

a- மனத்தால் வரும் அபசாரம்; b- குரலின் தெளிவு; c- உட்கருத்தைக் குறிப்பன; d- ராவணனால் அனுப்பப்பட்டவன்; e- ராவணனிடம் அன்புடையவன்; f- எதையும் செய்யச் சக்தியுடையர்; g- அன்புடையன்; h- மனத்தில் உள்ள ஆசைகள்; i- பிரிவு; j- சேர்த்துப் பலன் பெறுதல்; k- ஒருமைச் சொல்; l- பன்மைச் சொல்.

1. असंशयं क्षत्रपरिग्रहक्षमा यदार्यमस्यामभिलाषि मे मनः ।
मतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्तःकरणप्रवृत्तयः ॥

சாகுந்தலம் (1-9) : ஸாதுக்களின் ஸந்தேஹத்துக்கு இடமான விஷயங்களில் அவர்களின் மனம் துணிந்து செய்தலே உரிய ஆதாரமாய்விடும்.

1. **பார (உத்யா 39-48) :** இருவரின் உள்ளம், இரகசியம் காத்தல், அறிவு எல்லாம் ஒத்திருந்தால் அவர்களின் நட்பு அழியாததாகும்.

23.4 விபீஷணனுக்கு உள்ள பெருஞ்சிறப்புகள்-சுக்ரீவன் விளக்கம்

'विभीषणः'- தேவரீர் அவனுக்கு अभय-प्रदानம் பண்ணினபடியாலே ராவணாதிகளெல்லாம் இவனுக்கு அஞ்சும்படி यथार्थ-नामा ஆனான். 'विभीषणस्तु धर्मात्मा न तु राक्षसचेष्टितः'[1] என்கிற धार्मिकत्व-प्रसिद्धियும்[b] தோற்றுகிறது.

'महाप्राज्ञः'–धर्मத்தில் நிலை குலையாதபடி வரம் வேண்டிக் கொண்ட தெளிவுடையவன்.

'सीतां च रामाय निवेद्य देवीं वसेम राजन् इह वीतशोकाः'[2] என்று ராவணனுக்கும் கூடப் परमहितம்[c] சொல்லும்படிக்கு ஈடான प्रकृष्टज्ञान[d] முடையவன். கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தம்[e] பெறுகைக்கு सकृत् कर्तव्य மான[f] साध्य–उपाय த்தாலே[g] वशीकृतராய்[h] 'रामो विग्रहवान् धर्मः' (69[3]) என்னும்படியிருக்கும் பெருமாள் सिद्ध-उपायம்[i] என்றும், இவர் தாமே விலக்குவாரைத் தெளிவித்து एक–रसராக்கி[j] இருவகைப்படாதபடி பொருந்தவிடுவார் என்றும் துணிய வல்ல மஹாவிச்வாஸ ரூபமான ஜ்ஞாநத்தை உடையவன்.

'महाप्राज्ञः' 'सुग्रीवः शङ्कितश्चसीत् नित्यं वीर्येण राघवे'[3] என்று எனக்குப் பிறந்த பழி இல்லாதவன். இன்னும் கலங்குகிற எங்களைப் போலே இவனும் अतिशङ्क[k] பண்ணினானாகில் ராவணன் எடுத்த கைலாஸத்தை வாலி எறிந்த दुन्दुभि-कङ्कालकूटம்[l] பட்டது படுத்திக் காட்டவேண்டுமிறே தேவரீருக்கு.

23.5 விபீஷணனைப் பெருமாளிடம் சேர்ப்பதில் சுக்ரீவனது ஊக்கம்

'सखित्वं च अभ्युपैतु नः' - காசிராஜா முதலான தரமுடைய ராஜ குமார்கள் பெறக்கடவ பேற்றைக் காட்டுக்கு எழுந்தருளப் பண்ணின परम–कारुणिक[m]ருடைய प्रसादத்தாலே[n] ஸ்ரீ குஹப் பெருமாளும் நாமும் பெற்றாற்போலே இவனும் தேவரீருக்குத் 'தோழன்' என்கிற தரம் பெற்று ராக்ஷஸ ஜாதியில் குடல் துவக்காலுள்ள வழு அறும்படி பண்ணியருள வேண்டும். நாங்கள் அடியோம் என்றால், உண்மையாகிலும் தன் நீர்மையாலே இவன் இசையான். எங்களுக்குத் தோழன்

என்றாகிலும் தேவரீரைப்போலே இவனும் இசையும்படி பண்ணியருளவேண்டும் என்றதாகவுமாம். सखा दासोऽस्मि' (322[4]) என்னுமவராகையாலே நாங்கள் அடியோமாக வேண்டும் என்று இவருக்குத் தாத்பர்யம்.

'अभ्युपैतु' -வைச்ரவணன் தம்பியான மேன்மையையிட்டு. அநாதரியாதே வாநரங்களை அடிமைகொள்ள இவரை நினைப்பிடும்படி பண்ணியருள வேண்டும் என்று கருத்து. இத்தால் देहात्म–भ्रमம்[o] முதலான அல்வழக்குக்களெல்லாம்[p] கழிந்து भागवत–शेषत्व–पर्यन्तமான[q] भगवत्–शेषत्वத்திலே[r] நிலை நின்றவராகையாலே மஹாராஜர் பெருமாள் திருவடிகளிலே விபீஷணாழ்வானைச் சேர்த்துத் தாம் அவனுக்கு அடிமை செய்ய மநோரதிக்கிறார்.

---

a- உண்மைப் பொருளுடைய பெயருடையன் (விபீஷணன்-பயங்கரனாயுள்ளவன்); b- பெரிய தர்மவான் என்ற புகழ்; c- மிகச் சிறந்த நன்மை; d- உயர்ந்த ஞானமுடையன்; e- பெரும் பயன்; f - ஒருமுறை செய்ய வேண்டிய; g- மனிதன் செய்ய உரிய ப்ரபத்தி; h- வசப்படுத்தப் பட்டவர்; i- முன்பே உள்ள உபாயமான எம்பெருமான்; j-ஒரே கருத்துடையர்; k- மிகுதியான ஸந்தேகம்; l- துந்துபியின் எலும்புக் கூட்டின் குவியல்; m - கருணை மிகுத்தவர்; n - அநுக்ரஹம்; o- சரீரத்தையே ஆத்மாவாகக் கருதுதல்; p- தகாத கொள்கைகள்; q- பாகவதர்களுக்கும் அடிமை செய்தல் வரையுள்ள; r - எம்பெருமானுக்கு அடிமை.

1. प्रवृद्धनिद्रश्च सदा कुम्भकर्णो महाबलः।
   विभीषणस्तु धर्मात्मा न तु राक्षसचेष्टितः ॥

ராமா (3-17-24) : விபீஷணன் தர்மமே வடிவெடுத்தவன், ராக்ஷஸர் செயல் சிறிதும் இல்லாதவன் (சூர்ப்பநகை இராமனுக்குக் கூறியது).

2 धनानि रत्नानि विभूषणानि वासांसि दिव्यानि मणींश्च चित्रान्।
  सीतां च रामाय निवेद्य देवीं वसेम राजन्निह वीतशोकाः ॥

ராமா (6-15-14) : செல்வங்கள் இரத்தினங்கள் ஆபரணங்கள் சிறந்த ஆடைகள் இவற்றுடன் ஸீதையை இராமனிடம் ஸமர்ப்பித்துவிட்டு இங்கு ஸுகமாக வாழ்வோம். (ராவணனுக்கு விபீஷணனின் உபதேசம்).

3. वालिनश्च बलं तत्र कथयामास वानरः।
   सुग्रीवः शङ्कितश्चासीत् नित्यं वीर्येण राघवे ॥

ராமா (1-1-63): ஸுக்ரீவன் வாலியின் வலிமையை ராமனுக்குக் கூறினான். இராமனின் வலிமையில் ஸுக்ரீவனுக்கு ஸந்தேஹமிருந்தது.

Scanned with CamScanner

இப்படி சரணாகதனான விபீஷணாழ்வானுக்கு அபேக்ஷித[a]த்தையும் 'निवेदयत मां क्षिप्रं' (274[3]) என்று அவன் இரந்தபடியே[b] கடகரான[c] தங்களுக்கு அபேக்ஷிதத்தையும்[d] மஹாராஜர் விண்ணப்பம் செய்ய அதடியாகப் பிறந்த शरण्य-मनोरथ-सिद्धि[e] சொல்லப்படுகிறது -

ततस्तु सुग्रीववचो निशम्य तत् हरीश्वरेणाभिहितं नरेश्वरः ।
विभीषणेनाशु जगाम सङ्गमं पतत्त्रिराजेन यथा पुरन्दरः ॥ ராமா (6-18-39)

'ततस्तु सुग्रीव-वचः निशम्य तत्'-கடகருடையவும் சரணாகதனுடையவும் सिद्धियிற்காட்டில்[f] மஹாராஜர் தெளிந்து விண்ணப்பம் செய்த பெரிய வார்த்தையைக் கேட்டருளின பின்பு இவர்கள் காட்டித்தர நாம் இப்பேறு பெற்றோம்' என்று பெருமாளுக்குப் பிறந்த सिद्धि-विशेषத்தினுடைய[g] ஏற்றம் இருந்தபடி.

'ततः' - சாஸ்த்ரமும் தம்முடைய வ்ரத விசேஷமும் நிற்க இப்போது தோழன்மார் வாக்யமே शरणागत-परिग्रहத்திற்குக் காரணம் என்று கைக்கொண்டருளினார் என்று தாத்பர்யம்.

'नरेश्वरः' - சரணாகத ரக்ஷணத்திற்கு முடிசூடின ரகுவம்சத்திலே பிறந்த பிறவி இப்போது நிலை நின்றது என்று இருந்தார்.

23.6 விபீஷணனோடு சேர்ந்ததில் அவனிலும் தனக்கே சிறந்த பாக்யம் - இராமன் கருத்து

'हरीश्वरेण अभिहितं विभीषणेन सङ्गमं जगाम' - என்று அந்வயம்.[i] 'तस्मात्-क्षिप्रं' என்கிற ச்லோகத்திலே மஹாராஜர் விண்ணப்பம் செய்த விபீஷணாதிகளுடைய मनोरथ-सिद्धि[j] आनुषङ्गिक-फलமாக[k], ஸ்ரீவிபீஷணாழ்வானோடே தமக்கு உண்டான சேர்த்தியைத் தம் பேறாகப் பெற்றார்.

'आशु'-प्रतिबन्धकங்களெல்லாம்[l] கழிந்தால் स्वरूप-प्राप्तத்திற்கும்[m] விளம்பம்[n] இல்லையிறே! இது பெருமாளுடைய த்வரா - அதிசயம்[o] சொன்னபடியாகவுமாம்.

'पतत्त्रिराजेन यथा पुरन्दरः' - தன்னில் ஸர்வ ப்ரகாரத்தாலும் பெரியனான பெரிய திருவடியோடே இந்திரன் உறவு பண்ணினபோது இந்திரனுக்குப் பேறு ஆனாற்போலே

பெருமாள் शरणागत-लाभத்தைத்[p] தமக்கு निर्यत्न-सिद्धமான[q] अलभ्य लाभ[r]மாகத் திருவுள்ளம் பற்றினார் என்று தாத்பர்யம்.

சரண்ய சரணாகத ஸங்கம லாபம் முற்றும்

அதிகாரம் 10: ப்ராப்தி ப்ரகாரப்ரபஞ்சம்

(பெருமாளை விபீஷணன் கூடிய முறையை விளக்குதல்)

24 விபீஷணன் பெருமாளை அடைந்த முறை - விளக்கம்

24.1 விபீஷணன் நால்வருடன் இராமன் திருவடிகளையே நிலையான புகலாகக் கருதி அவற்றில் வீழ்தல்

இப்படி ஒன்றாலும் प्रतिबन्धिக்கவொண்ணாத[s] ஓர் உக்தி விசேஷத்தாலே[t] यथा-प्रमाणம்[u] சரணாகதன் கோரினபலம் ஸித்தித்தபடியைப் பொதுவிலே சொல்லி மேல் प्राप्तिप्रकारத்தை[v] விவரிக்கிறான் -

राघवेणाभये दत्ते सन्नतो रावणानुजः ।
विभीषणो महाप्राज्ञो भूमिं समवलोकयन् ॥ ராமா (6-19-1)

'राघवेण' - மேன்மை கொண்டு அபய - ப்ரதாநம் பண்ண வேண்டியிருக்க அணுகவொண்ணாது என்கிற பயம் தீரும்படி परिग्रहித்த[w] अवतारदशै யில் நீர்மை விஞ்சியிருந்தது.

'अभये दत्ते' - 'दत्तमस्याभयं मया' (320) என்று தாம் அருளிச்செய்தது போதாமே 'आनयैनं हरिश्रेष्ठ' என்று மஹாராஜரையும் முன்னிலை

---

a- விரும்பிய பலன்; b- யாசித்தபடியே; c- பரிந்து பேசிக் கூட்டி வைப்பவர்: d- இஷ்டமான பலன்; e- எம்பெருமானது இஷ்டம் சிறப்பாய் நிறைவேறுதல்; f- காரியம் நிறை வேறுதல்; g- விசேஷமான முறையில் கார்யம் நிறை வேறுதல்; h- சரணம் அடைந்தவனை ஏற்றுக் கொள்ளல்; i- சொற்களைப் பொருத்துதல்; j- விருப்பம் தலைக்கட்டல்; k- நடுவே வந்த பலன்; l- தடைகள்; m- தானாக நிச்சயமாய் வர வேண்டியது; n- காலத் தாழ்வு; o- மிக விரைதல்; p- சரணமடைந்தவனைப் பெறுதல்; q- முயற்சியின்றிக் கிடைத்த; r- பெற முடியாததைப் பெற்றமை ; s- தடை செய்ய முடியாத; t- விசேஷமான சொல்; u- பிரமாணங்களைத் தழுவி; v- அடைந்த முறை; w- கைக் கொண்ட.

Scanned with CamScanner

யாக்க, அவரும் अस्माभिस्तुल्यो भवतु'[1] என்று விண்ணப்பம் செய்ய, இப்படி முதலிகளும் இசைய, பெரிய திருவோலக் கத்திலே[a] எழுந்திருந்து ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு அருளப் பாடு என்ற பின்பு பெருமாள் பண்ணின அபய - ப்ரதாநம் நிலை நின்றாதாயிற்று என்று தோற்றுகைக்காக இங்கே अभय दत्ते என்று अनुवदिக்கிறது[b].

'संनतः' –सम्यक् नतः- சரண்யனுடைய நிலையுடைமை யிலும் நீர்மையிலும் மிகவும் ஈடுபட்டு, ''தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து அவன் தாளிணைக் கீழ் வாழ்ச்சி பெற்றான்''. அருளப் பாட்டுக்கும் தூரத்திலே உசித - உபசாரம் பண்ணினான் என்னவுமாம்.

'रावणानुजः' – 'न नमेयं'[2] என்று இருக்கக் கடவ வணங் கலிலரக்கன் கிடந்த வயிற்றில் கிடந்தவனுக்கு வர ப்ரபா வத்தாலே வந்த வகுத்த விஷயத்தில் வணக்கமிது.

'विभीषणः' - ஒரு வயிற்றிலே கிடக்கச்செய்தே

'विभीषणस्तु धर्मात्मा न तु राक्षसचेष्टितः' (328[1]) என்று கும்பகர்ணாதி களிற் காட்டில் வேறொரு ஜாதியாகப் பேர் பெற்றவன்.

'महाप्राज्ञः'- இனி, தான் க்ஷணம் விளம்பிக்கில் பெருமாள் தரிக்க மாட்டார் என்று தூரத்திலே இங்கிதம்[c] கொண்டு அறிய வல்ல பேரறிவாளன்.

'भूमिं समवलोकयन्' - பெருமாளுடைய சரணாகத வாத் ஸல்யத்தையும்[d] முற்பட்ட வாநர முதலிகள் பெற்ற பேற்றையும் கண்டு தான் துஷ்ப்ரக்ருதிகளான[e] ராவணாதி களையும் திருத்தலாமோ என்று हितोपदेशार्थம்[f] ஆந்ருசம்ஸ்யத்தா லேயும் வாத்ஸல்யத்தாலேயும்[g] இத்தனை காலம் கால் தாழ்ந்ததற்கு[h] லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டான்.

'भूमिं समवलोकयन्' - முன்பு கல்லும் தடியுமாய் நின்ற ஓலக்கத்தை[i] பார்க்க அஞ்சி நின்றான்; இப்போது முதலிகள் எல்லாம் முக்த விஷயத்தில் ஆதிவாஹிகரைப்போலே[j] 'போற்றி' 'பல்லாண்டு' என்று நின்ற நிலையைக் கண்டு

சரண்யன் இருந்த திவ்யதேசத்தினுடைய ப்ரபாவம் இருந்தபடி என்! என்று பார்த்தான் என்னவுமாம்.

'भूमिं समवलोकयन्' - கல்லும் தடியும் போட்டுக் கையும் அஞ்ஜலியுமாய் எதிர்கொள்ள நிற்கிற ஓலக்கத்திலே தண்டனிட இடம் பார்த்தான் என்னவுமாம்.

இச்சுலோகத்திற்கு 'संनतः' என்று வாக்யார்த்தம்[k] தலைக் கட்டுகிறது.

'खात् पपात' என்று மேலே அந்வயிக்கவுமாம்[l] खात् पपातावनिं हृष्टो भक्तैरनुचरैः सह।

தனக்கு शेषभूतருமாய்ப் பரதந்த்ரருமாய் இருக்கையாலே தன் கைகளும் கால்களும் போலே தன்னிலே சொருகித் தனித்து ஓர் उपायफलங்கள் இல்லாத நாலு ராக்ஷஸரோடே கூட உத்தேச்யமான[m] திருவடிகளாளவும் செல்லவொண்ணாதபடி ஹர்ஷபாரவச்யம்[n] தள்ள, திருவடிகளோடே பிறவித்து வக்குடைத்தான பூமியிலே விழுந்தான்.

பண்டு ராவண स्थानத்திலே விழுந்து ஏறிட்டுக்கொண்ட

---

a- கோஷ்டி; b- மறுமுறை கூறுகின்றது; c- உட்கருத்து; d- குற்றத்தைப் புறக்கணிக்கும் அன்பு ; e- கெட்ட தன்மையர்; f- நன்மையைப் போதிப்பது; g- கருணை; h- தாமதித்தல்; i- கோஷ்டி; j- ப்ரபந்நர்கள் மரிந்தபின் ஸ்ரீவைகுண்டத்திற்க வழி நடத்துமவர்; k- வாக்யத்தின் பொருள்; l- பொருள் கூட்டல்; m- அடைவதற்கு இலக்கு; n- மகிழ்ச்சிக்கு வசப்படல்;

1. ***ராமா. (8 -18-38) :*** விபீஷணன் எங்களால் யுக்திகளாலும் அவன் கருத்தாலும் நன்கு பரீக்ஷை செய்யப்பட்டான். ஆதலின் விரைவிலேயே எங்களுக்குச் சமமாக அவனையும் தாங்கள் சேர்த்துக் கொண்டருள வேண்டும் *(சுக்ரீவன் பேச்சு) (சுலோகம் : 326)*

2. द्विधा भज्येयमप्येवं न नमेयं कथञ्चन।
एष मे सहजो दोषः स्वभावो दुरतिक्रमः ॥

ராமா(6-36-11) : என்னை இரண்டாகப் பிளந்தாலும் எவனுக்கும் பணிய மாட்டேன். இது எனக்கு உள்ள இயற்கையான குற்றம். இயற்கையை மாற்ற முடியாது. *(ராவணன் சொல்).*

Scanned with CamScanner

ரஜஸ்ஸெல்லாம்[a] போம்படி अमानव–करस्पर्शம்[b] போலே अत्यन्त-शोधकமான[c] - திருமுன்பில் பூமியிலே விழுந்து திருவடிகளை स्पர்சிக்கைக்கு योग्यனாய்[d], பின் எழுந்திருந்து வந்து திருவடிகளிலே தலைசாய்க்க விழுந்தபடி சொல்லுகிறான் -

सतु रामस्य धर्मात्मा निपपात विभीषणः ।
पादयोः शरणान्वेषी चतुर्भिः सह राक्षसैः ॥ ராமா (6-19-2)

'सः तु' - லீலாவிபூதியிலேயுள்ள சிலர் 'यूयं यूयं वयं वयं'[1] என்கிறபடியே வந்தேறிகளான बन्धुக்களோடே துவக்கற்று ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடந்து विष्णुपदத்தைக்[e] கிட்டினால் பிறக்கும் வேறுபாடு போலே இருந்தது.

'रामस्य' -விபீஷணாழ்வானுக்கு बहुमुख–परिभव[f]த்தாலே பிறந்த परितापமெல்லாம்[g] கழியும்படி ரமணீயமாயிருந்தது. 'தயரதன் பெற்ற மரகத மணித்தட' மிறே!

'धर्मात्मा' - பழைய போலிகளான धर्मங்கள் போலன்றிக்கே இருக்கிற சரணாகதி தர்மம் ஒரு வடிவுகொண்டாற்போலே இருந்தான்.

'पादयोः शरणान्वेषी' 'தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்கொள்ளுமப்பன்' (38^3) திருவடிகளிலே தனக்கு நிலைநின்ற புகலிடத்தை ஆசைப்பட்டான்.

'पादयोः निपपात' என்று அந்வயிக்கவுமாம்[h]. இது ஸ்ரீ வைகுண்டநாதன் திருவடிகளை முக்தன் பெறும்படிக்கு மூதலிப்பு[i].

'चतुर्भिः सह राक्षसैः' -இப்படி ஒருவன் சரணாகதனாய்த் திருவடிகளைப் பெறும்போது அவனைப் பற்றினார்க்கும் அவனுடைய 'आत्म–आत्मीय' –भरसमर्पण[j]த்திலே துவக்குண்டான படியாலே தனித்துச் சரணாகதி பண்ணவேண்டாதே தனித்துப் பரீக்ஷிப்பாருமின்றிக்கே ராஜஸேவகருடைய स्तनन्धय[k]ருக்குப் போலே புருஷார்த்த லாபம் துல்யமாம் என்று

'पशुर्मनुष्यः पक्षी वा ये च वैष्णवसंश्रयाः ।
तेनैव ते प्रयास्यन्ति तद्विष्णोः परमं पदम् ॥'

इत्यादिகளில் சொல்லுகிற சாஸ்த்ரார்த்தத்தை வெளியிட்டான்.

24.2 விபீஷணன் இராமனை அணுகி முக்கரணங்களையும் பயன்படுத்திய வகை

இப்படி सपरिकरனான[l] ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள் திருவடிகளைப் பெற்ற படி சொல்லி முக்தனுக்கும் ஸ்ரீவைகுண்ட நாதனுக்கும் போலே ஸ்ரீவிபீஷண ஆழ்வானுக்கும் பெருமாளுக்கும் பிறந்த संवाद–मुखத்தாலே[m] ப்ராப்தி - ரஸ - பரீவாஹத்தை[n] उदाहरிக்கிறான்[o]-

अब्रवीच्च तदा वाक्यं रामं तत्र विभीषणः ।
धर्मयुक्तं च युक्तं च सांप्रतं संप्रहर्षणम् ॥ ராமா (6-19-3)

'अब्रवीत् च'-திருவடிகளிலே आत्मात्मीय–भर–समर्पण[p] பண்ணுகை

---

a- புழுதி (இழிவான அம்சம்); b- ஸ்ரீவைகுண்டம் வரை ஜீவனை அழைத்துச் செல்லும் அமாநவனுடைய கைப் பரிசம்; c- மிக்க தூய்மையைத் தரவல்ல; d- தகுதியுடையன்; e- ஸ்ரீவைகுண்டம்; f- பல் வகையில் பட்ட அவமானம்; g- துயரம்; h- கூட்டிப் பொருள் கொள்ளல்; i- ஆதாரத்தோடு நிருபித்தல்; j- தன்னுடையவும் தன்னைச் சேர்ந்த வற்றினுடையவும் பொறுப்பை ஸமர்ப்பித்தல்; k- பால் பருகும் குழந்தை ; l- பரிவாரங்களுடன் கூடிய; m- ஸம்பாஷணையின் வாயிலாக; n- கூடி விட்ட இன்பத்தின் விளைவு; o- எடுத்துப் பேசுகிறான்; p- தன்னதும் தன்னைச் சேர்ந்தவர்களதுமான பொறுப்பை ஸமர்ப்பித்தல்

1 अद्य प्रभृति हे लोका यूयं यूयं वयं वयम्।
अर्थकामपरा यूयं नारायणपरा वयम्।

(?) : உலகினரே! இன்று முதல் நீங்கள் வேறு, நாங்கள் வேறு நீங்கள் செல்வத்திலும் இன்பத்திலும் ஈடுபட்டவர்கள். நாங்கள் நாராயணனிடமே ஈடுபட்டவர்கள். உங்களுக்கும் எங்களுக்கும் எத்தகைய ஸம்பந்தமும் இல்லை. நாங்கள் பகவானுக்குத் தொண்டு புரிபவர்கள். நீங்கள் இந்திரியங்களுக்கு அடிமைப்பட்டவர்கள்.

2 **சாண்டில்ய (1-15) :** வைஷ்ணவர்களை அண்டி அவர்களால் ப்ரபத்தி செய்யப் பெற்ற பசு, மனிதர், பறவை ஆகியவையும் அந்த ப்ரபத்தியின் வலிமையினாலேயே பரம பதத்தை அடைகின்றன.

Scanned with CamScanner

யாலே ‘तच्चित्तं यत्तदर्पणं’[1] என்கிறபடியே மனஸ்ஸபடைத்த ப்ரயோஜநம் பெற்றான். திருவடிகளிலே விழுகையாலே சரீரம் படைத்த சுகம் பெற்றான். இப்போது वागिन्द्रियமும் कृतार्थமாம்படி[a] பெருமாளுக்கு ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்யப் பெற்றான்.

‘तत्र’-ஸந்துஷ்டனான ஸ்வாமிக்கு அடையாளமாக ‘दिशत्यासनमभ्याशे’[b] என்று நீதிசாஸ்த்ரத்தில் சொல்லுகிறபடியே பெருமாள் காட்ட இளைய பெருமாளுக்கும் மஹாராஜருக்கும் அணுகத் துணுக்கிடும்படியான[c] திருவடி பக்கத்திலே.

‘तदा’ - பெருமாளுக்குக் குசல-ப்ரச்நம்[d] பண்ண இடம் கொடுத்திலன்.

‘रामं’-முன்பு ‘निवेदयत’ என்று முதலிகளை முன்னிலையாக்கி விண்ணப்பம் செய்தான்; இப்போது ‘अस्माभिस्तुल्यो भवतु’ (326) என்று மஹாராஜர் கொடுத்த தரம் பெற்றவனாகையாலே பெருமாள் தம்முடனே வார்த்தை சொல்லப் பெற்றான்.

‘विभीषणः’ - பெருமாளுடனே இவன் ஏகாந்தத்திலே வார்த்தை சொல்லுகிறபோது ராவணன் வழியில் ஒதுங்கின ராக்ஷஸர்க்கெல்லாம் குடல் கரிக்கும் படியாயிற்று. பெருமாள் இவனுக்கு அபயப்ரதாநம் பண்ணின பின்பு இவன் भय மெல்லாம் இவன் விரோதிகள் நெஞ்சிலே குடிபுக்கன.

‘धर्मयुक्तं च’ - இவனுடைய தர்ம - விசேஷம் இருந்தபடி ஃபலத்தைக் கொடுத்து நசியாதே இவன் பேர் சொன்னாரையெல்லாம் ரக்ஷிக்கும்படி ‘न जातु हीयते’[2] என்கிற நிலையிலே நின்றது.

‘धर्मयुक्तं च’– कृतज्ञतैயாகிற[e] நிலைநின்ற धर्मத்தோடே கூடியிருந்தது என்னவுமாம்.

‘युक्तं च’ - தன் க்ருதஜ்ஞதைக்கும் பரிஷத்தினுடைய[f] மதிப்புக்கும் ஈடாகப் பெருமாள் திருமுன்பே விண்ணப்பம்

செய்தால் கேட்டு ஆராதபடி செவிக்கினிய செஞ்சொல்லான ‘वाक्यं’ - வார்த்தையை; ‘सांप्रतं संप्रहर्षणं’ - இதற்குமேல் ஒரு ஃபலம் கணிசிக்க வேண்டாதே ‘मनः प्रीतिरनायासात’[3] என்கிறபடியே இப்போதே அநுபவ-ஸாரஸ்யமே[g] अतिवेलமாயிருக்கை[h].

24.3 விபீஷண சரணாகதியில் த்வயார்த்தம் - விளக்கம்

24.3.1 अनुजो रावणस्य என்ற முதல் சுலோகம் த்வயத்தின் பூர்வகண்ட விவரணமாதல் - விளக்கம்

மேலிரண்டு ச்லோகங்களும் द्वयத்தில் पूर्व–उत्तर–खण्डங்களை[i] விவரிக்கின்றன.

अनुजो रावणस्याहं तेन चास्म्यवमानितः ।
भवन्तं सर्वभूतानां शरण्यं शरणं गतः ॥ ராமா (6-19-4)

‘अनुजो रावणस्य अहं’ -த்ரைலோக்யமும் கூடிக் கேட்கவொண்ணாதபடி அந்யாய-காரியாய்[j] கதறுவித்த ராவணனுக்குப்பின் பிறந்தவனாகையாலே அவன் வாஸத்தாலே दूषितமான[k] குடலிலே பிறந்தேன்.

---

a- பயன் பெற்றது; b- நீதி சாஸ்த்ரம்:- ஸமீபத்தில் அமரும்படி ஆஸநம் தரவேண்டும்; c- அஞ்சும்படி; d- க்ஷேமம் விசாரித்தல்; e- நன்றியறிதல்; f- கோஷ்டி; g- அநுபவித்தலில் உள்ள இன்பம்; h- கரைபுரண்டோடுதல்; i- முற்பகுதி பிற்பகுதி; j- அடாத செயல் புரிபவன்; k- நலம் கெட்டுப் போன.

1 सा जिह्वा या हरिं स्तौति ताच्चितं यत् तदर्पणम् ।
तावेव च करौ श्लाघ्यौ यौ तत्पूजाकरौ करौ॥

விஷ்ணுதர் (1-13): அவன் விஷயத்தில் மனத்தை ஈடுபடுத்துவதே மனம் படைத்ததன் பயன்.

2 **ஸ்தோத்ரர.(28):** உன் திருவடிகளைக் குறித்து எப்பொழுதாவது எவனாவது ஒருவன் எதாவது ஒரு வகையில் ஒருமுறை அஞ்சலி செய்துவிட்டால் அப்பொழுதே ஸகல பாபங்களையும் போக்கி மோக்ஷம் வரை உள்ள பலன்களைக் கொடுத்து எந்நாளும் மீளாதவாறு செய்யும்.

3. मनः प्रीतिरनायासात् अपुण्यस्य च संक्षयः।
प्राप्यते पुरुषैर्ब्रह्मन् शृण्वद्भिर्भगवत्कथाः॥

விஷ்ணுதர்.(68-3) : கஷ்டங்கள் தீர்ந்து பலன் கிட்டியவுடன் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

Scanned with CamScanner

'तेन च अस्मि अवमानित:' - என் தோஷங்களை நேராகக் கண்டு ஸாத்த்விகர் அவமாநம் பண்ணப் பெற்றேனாகில் அதுவும் ஒரு தரமாகலாயிற்று. அங்ஙனன்றிக்கே நான் பாத்ர-அபாத்ர விவேகம்[a] பண்ணாதே ஹிதம் சொல்லப்போனதற்குப் பாப கர்மங்களுக்கு முடிசூடின ராவணன் ஆளிட்டுப் परिभविக்க[b] அவன் गोष्ठिக்கும் ஆகாதே போந்தேன்.

'भवन्तं सर्वभूतानां शरण्यं शरणं गतः' -தேவரீர் अनालोचितविशेष-अशेषलोक-शरण्यரானபடியினாலே[c] ராவணனிலும் தண்ணியனான்[d] எனக்கும் புகலிடமாவீர் என்று पितामहवर-प्रसादத்தினாலே[e] ஒரு வெளிச்சிறப்பு[f] முன் காட்ட சரண்ய-குண-பூர்த்தியுடைய[g] தேவரீரைச் சரணமாக அடைந்தேன்.

24.3.2 விபீஷணன் கூறியது மறுமுறை சரணாகதியன்று, நன்றியைத் தெரிவித்தல் மட்டுமே

'सकृदेव प्रपन्नाय' *(76)*[5] इत्यादिகளிற்படியே முன்பே சரணாகதி பண்ணி 'दत्तमस्याभयं मया' (320) என்கிறபடியே फलமும் பெற்றவன் இப்போது திரும்பியும் ப்ரபத்தி பண்ணுகிறானல்லன். இது தன் निष्ठैயை[h] அநுஸந்தித்துத் தனக்கும்கூடப் பெருமாள் புகலிடமானபடிக்கு कृतज्ञனாய்க்[i] கொண்டாடினபடி.

24.3.3 'परित्यक्ता मया' என்ற சுலோகம் த்வயத்தின் உத்தரகண்ட விளக்கமாதல் - விளக்கம்

முன்பே 'राज्यकाङ्क्षी च राक्षस:' (276[1]) என்று தனக்குப் பிறந்த பழி தீரும்படி उत्तर-खण्डத்தின்படியே தன்னுடைய அநந்ய-ப்ரயோஜநத்வத்தை[j] வெளியிடுகிறான்-

(2) परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च ।
भवद्गतं मे राज्यं च जीवितं च सुखानि च ॥ ராமா(6-19-5)

'परित्यक्ता माया लङ्का' - எங்களுக்குக் कुलक्रम-आगतமான[k] படைவீடாயிருக்க[l] இத்தை हरि-बाह्यராயிருக்கும்[m] बाहीकादिகளுடைய[n] தேசங்களைसत्त्वस्थரானவர்கள்[o] விடுமா போலே ஸவாஸநமாக[p] விட்டேன்.

'परित्यक्ता' -परितः त्यक्ता- அவ்வூரில் துவக்குடையவை எல்லாவற்றையும் அருவருத்தேன்.

'मया परित्यक्ता' - நான் துவக்கற விட்டேன். தேவரீர் லங்கை என்று பேரிட்டு ஒரு விலங்கைப் பூட்டுகிறீரோ என்று நடுங்கா நின்றேன்.

'मित्राणि च' - 'मित्रद्रोहे च पातकम्'[1] என்னும்படி இருக்கச் செய்தே, தேவரீரோடே விரோதித்த மித்ரர்களைச் சத்ருக்கள் என்று கைவிட்டேன்.

'धनानि च' - 'आपदर्थं धनं रक्षेत्'[2] என்னும்படியிருக்கிற தனங்களையும் அவற்றோடே துவக்கைத் தானே ஆபத்துக்களுக்குக் காரணமாக கண்டபடியினாலே விட்டேன்.

---

a- தகுதி உடையன் தகுதி அற்றவன் என்ற அறிவு; b- அவமாநம் செய்ய; c- அவரவர்களுடைய குணங்களைச் சிந்திக்காது ஸகலலோகங்களையும் ரக்ஷிப்பவர்; d தாழ்ந்தவன்; e- பிரமன் அளித்த வரத்தின் பெருமை; f - ஞானத் தெளிவு; g- ரக்ஷகனுக்கு வேண்டிய குணங்களின் நிறைவு; h- சிறந்த நிலை; i- நன்றியுடையன்; j- வேறு பயனை நாடாமை; k- வம்ச பரம்பரையாய் வந்த; l- தலைநகர்; m - எம்பெருமானைச் சேராத வெளியார்கள்; n- பாஹ்லிக நாட்டார்; o- ஸாத்த்விகத் தன்மையர்; p- அடியோடு.

1. यद्यप्येते न पश्यन्ति लोभोपहतचेतसः।
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम्।
कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम् ॥

கீதை *(1-38)* : இந்தக் கௌரவர்கள் பேராசையால் மனம் கெட்டு வம்சம் அழிவதால் வரும் கேட்டையும் நண்பருக்குத்ரோஹம் செய்வதால் வரும் பாபத்தையும் அறியாவிடினும் அவற்றை அறிந்த நம்மால் எவ்வாறு அந்தப் பாபத்தைச் செய்ய முடியும்?

2. आपदर्थं धनं रक्षेत् दारान् रक्षेद्धनैरपि ।
आत्मानं सततं रक्षेत् दारैरपि धनैरपि ॥

மநுஸ் *(7-213)*: ஆபத்து வருவதைத் தடுப்பதற்காகச் செல்வத்தைக் காக்க வேண்டும். செல்வத்தை விட்டாவது மனைவியைக் காப்பாற்ற வேண்டும். மனைவியாலும் செல்வத்தாலும் தன்னை ரக்ஷித்துக் கொள்ள வேண்டும்.

Scanned with CamScanner

'च' காரத்தாலே 'पितरं मातरं'[1] इत्यादिகளிற்படியே தேவரீர் திருவடிகளிலே ஸேவைக்கு விருத்[a]ங்கள் எல்லாவற்றையும் விட்டேன் என்கிறான்.

நாட்டார் புருஷார்த்தம்[b] என்றிருக்குமவற்றையெல்லாம் விட்டீராகிலும் அவற்றினுடைய இழவு நெஞ்சிலே கிடவாதோ என்னில், திருப்பாற்கடலிலே வாய் வைத்தவனுக்கு நாய்ப்பால் குடியாத இழவுண்டோ என்கிறான் -

'भवद्गतं मे राज्यं च जीवितं च सुखानि च'-भोग உபகரணங்களும்[c] भोक्ताவான்[d] என்னுடைய ஸத்தையும்[e] भोगங்களுமெல்லாம் தேவரீரை அநுபவிக்கையாகிற மஹாஸமுத்ரத்தில் திவலைகளிலே ஒதுங்கிக் கிடக்கும். இது ஸமுத்ரத்திலே குளப்படியும் உண்டு என்னுமாபோலே இருப்பதொரு பாசுரம்.

24.3.3.1 பற்றற்ற விபீஷணனுக்கு இலங்கையாட்சி வந்த காரணம்

இப்படி अनन्य-प्रयोजनனான்[f] விபீஷணாழ்வானுக்கு மேல் லங்கா ராஜ்யம் வந்தபடி என் என்னில், அது ராம - நியோக - அநுபாலந - ரஸிகனான[g] இவனுக்கு 'நின்னையேதான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் செல்வம்'[2] என்கிறபடியே வந்ததத்தனை.

இப்படி சரணாகதன் பாசுரத்திலே ஈடுபட்ட பெருமாளுக்குப் பிறந்த இரக்கத்தையும் அதடியாக அருளிச் செய்த ப்ரகாரத்தையும் சொல்லுகிறான் -

तस्य तद्वचनं श्रुत्वा रामो वचनमब्रवीत् ।
वचसा सान्त्वयित्वैनं लोचनाभ्यां पिबन्निव ।।

आख्याहि मम तत्त्वेन राक्षसानां बलाबलम् । ராமா (6-19-6, 7)

तस्य - அநந்ய - சரணனாய்[h] அநந்ய - ப்ரயோஜனானவனுடைய[i].

तत् वचनं श्रुत्वा- आकिञ्चन्यं अनन्यगतित्व[k] पुरस्कारமாக[l] द्वयार्थ-पर மான[m] வசநத்தைக் கேட்டருளி .

रामो वचनं अब्रवीत्-

'द्विः शरं नाभिसन्धत्ते द्विः स्थापयति नाश्रितान्।
द्विर्ददाति न चार्थिभ्यो रामो द्विर्नाभिभाषते ।।'[3]

---

a- தடை செய்வன; b- விரும்பும் பலன்; c- போகங்களின் கருவிகள்; d- அநுபவிப்பவன்; e- ஸ்வரூபம்; f- வேறு பயனை நாடாத; g- இராமனுடைய நியமனத்தைச் செய்வதில் ருசியுடையன்; h-வேறு உபாயமற்றவன்; i- வேறொன்றையும் பயனாகக் கொள்ளாதவன்; j- கைம்முதல் அற்ற தன்மை; k- வேறு புகலற்றமை; l- முன்னிட்டுக் கொண்டு; m - த்வயத்தின் அர்த்தத்தை விளக்குகின்ற.

1. पितरं मातरं दारान् पुत्रान् बन्धून् सखीन् गुरून्।
रत्नानि धनधान्यानि क्षेत्राणि च गृहाणि च ।।

விஹகேச்வர ஸம்ஹிதை - ஜிதந்தே(?) : எம்பெருமானே! பெற்றோர்கள் - மனைவி - புத்திரர் - உறவினர் - தோழர் - குருக்கள் - இரத்தினங்கள் - தநதான்யங்கள் - நிலங்கள் - வீடுகள் - மற்ற எல்லாத் தர்மங்கள் - கைவல்யம் உள்பட எல்லாப் போகங்கள் அனைத்தையும் விலக்கித் தள்ளிவிட்டு உலகை அளந்த உன் திருவடிகளைச் சரணமடைந்தேன்.

2 நின்னையேதான் வேண்டி நீர் செல்வம் வேண்டாதான்
தன்னையே, தான் வேண்டும் செல்வம் போல் மாயத்தால்,
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட்டம்மா,
நின்னையேதான் வேண்டி நிற்பன்அடியேனே.

பெருமாள் திரு (5.9) : உன்னையே விரும்பிப்பெருஞ் செல்வத்தை விரும்பாதவனைத் தானாக விரும்பிச் செல்லும் செல்வதைப் போல், வித்துவக்கோட்டு எம்பெருமானே! நீ என்னைப் புறக்கணித்துத் தள்ளினாலும் உன்னையே பெற விரும்பி அடியேன் நிற்பேன்.

3 **ஹனுமந் நாடகம் (1-48):** இராமன் இருமுறை அம்பு தொடுப்பதில்லை . அண்டியவர்களை இருமுறை நிலைபெறச் செய்வதில்லை. யாசிப்பவருக்கு இருமுறை கொடுப்பதில்லை. இருமுறை பேசுவதில்லை. முதல் முறையிலேயே எல்லாம் பூர்த்தியாகி இரண்டாம் முறைக்கு அவசியமே இருப்பதில்லை.

Scanned with CamScanner

என்று கவிபாடினால் இது பரமார்த்தமாயிருக்கும்படி[a] குணாதிசயமுடைய[b] பெருமாள் ஸ்ரீவிபீஷணாழ்வான் கார்யத்தைப் பற்ற இனி ஒரு வக்தவ்யமில்லாமையாலே[c] தம்முடைய அவதார ப்ரயோஜநமான दुष्कृत्[d]- விநாசத்திற்கு உபயுக்தமாக[e] 'आख्याहि मम तत्त्वेन राक्षसानां बलाबलम्' என்று ராக்ஷஸ வ்ருத்தாந்தத்தைக்[f] கேட்டருளினார்.

वचसा सान्त्वयित्वा एनं - 'நீர் இதற்கு முன்பு பட்ட சிறுமை எல்லாம் நமக்காகவன்றோ? இதெல்லாம் ஏற்கெனவே கோரப்பெறாதே ஸாபராதரான[g] நாமன்றோ பட்டோம்![1] என்னுமாபோலே இன்சொல்லாலே இவனை உருகப் பண்ணி அருளிச்செய்தார்.

அருளிச் செய்கிறபோது लोचनाभ्यां पिबन्निव- பெருவிடாய்ப் பட்டவன் தண்ணீரைக் கண்டால் ஒருகாலும் விடமாட்டாதாற் போலே, 'பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்'[2]. इत्यादिகளிற்படியே அநுபவியாநின்று கொண்டு अनवधिक-दया-सौहार्द-अनुराग-गर्भங்களான[h] திருக்கண்களாலே ஸ்ரீவைகுண்டநாதன் முக்தனைப் பார்த்தருளுமாபோலே குளிரப் பார்த்தருளி ஆலங்கட்டியை விட்டெறிந்தாற்போலே அவனை 'शीतीभूतो निरामयः'[3] என்னும்படி பண்ணிக்கொண்டு வார்த்தை அருளிச் செய்தார்.

இதற்கு மேல் உள்ளதெல்லாம் ஸ்ரீவிபீஷணாழ்வான் மநோரதித்த[i] கைங்கர்யத்திற்கு உறுப்பான பாரிப்பாகக் கண்டு கொள்வது.

राकान्ते रुद्धलङ्कश्च्युतफणिकदनो धूम्रदृग्वज्रदंष्ट्रौ
भङ्क्त्वाऽकम्पं प्रहस्तं दशमुखमकुटं कुम्भकर्णातिकायौ ।
ब्रह्मास्त्रच्छिन्नकुम्भादिकमथ मकराक्षं च हत्वेन्द्रशत्रुं
जित्वा घस्रैस्त्रिभिस्तं सहबलमवधीद्रावणं रामभद्रः ॥

अपदिश्य वेङ्कटेशं स्वहस्तसंसक्ततूलिकातुल्यम् ।
अभयप्रदानसारं गुरुप्रसादः स्वयं व्यलिखत् ॥

a- உண்மைப் பொருளுடையது; b- குணச்சிறப்பு; c- கூறவேண்டுவது; d- பாபிகளை அழிப்பது; e- பயன்படும்படி; f-சூழ்நிலை; g- குற்றவாளர்; h- எல்லையற்ற கருணை நட்பு அன்பு இவற்றைக் கொண்ட; i- ஆசைப் பட்ட

1. **(ரா6.19.7) :** அரக்கர்களின் வலிமை - வலிமை குறைவு இவற்றின் உண்மை நிலையை எனக்குக் கூறு (சுலோகம் : 340).

2. வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று,
ஆர்வுற்ற என்னை யொழிய என்னின் முன்னம்
பாரித்து, தான் என்னை முற்றப்பருகினான்,
காரொக்கும் காட்கரையப்பன் கடியனே.

திருவாய். (9.6.10) : எம்பெருமானைக் கண்டால் அப்படியே வாரிக்கொண்டு விழுங்கி விடுவேன் என்று துடித்துக் கொண்டிருந்த எனக்கு முன்பே அவன் பரபரப்புடன் என் மேல் விழுந்து என்னை நீராக்கிப் பருகிவிட்டான். எம்பெருமான் மிகப் பொல்லாதவன்.

3. आत्मबुद्धिं समास्थाय शीतीभूतो निरामयः।
अमृतं विरजाः शुद्धमात्मानं प्रतिपद्यते ॥

பார. (சாந்தி194-28) : ஜீவன் பரமாத்மாவைப் பற்றிய உபாஸனத்தைச் செய்து உள்ளம் குளிர்ந்து கர்ம பந்தம் அற்றவனாய் இழிகுணம் நீங்கினவனாய், பரிசுத்தனான அழியாத பரமாத்மாவை அடைகிறான்.

(4) राकान्ते- பௌர்ணமியின் முடிவில்; रुद्ध-लङ्कः- இலங்கையை முற்றுகை யிட்டு; च्युत-फणिकदनः- நாகபாசமாகிற துன்பத்திலிருந்து விடுபட்டு; धूम्रदृक्-वज्रदंष्ट्रौ- தும்ராக்ஷன், வஜ்ரதம்ஷ்ட்ரன்; अकम्पं प्रहस्तं- அகம்பநன் ப்ரஹஸ்தன் என்ற இவர்களையும்; भङ्क्त्वा- கொல்வித்து; दशमुख-मकुटं- ராவணனுடைய கிரீடங்களை; भङ्क्त्वा-தள்ளி; कुम्भकर्ण-अतिकायौ- கும்பகர்ணன் அதிகாயன் முதலியவர்களையும்; ब्रह्मास्त्र-छिन्न-कुम्भादिकं- ப்ரஹ்மாஸ்த்ரம் முதலி ய பாணங்களால் நாசம் செய்து; अथ- பிறகு; मकराक्षं- மகராக்ஷனையும்; जित्वा-வென்று; इन्द्रशत्रुं- இந்த்ரஜித்தையும்; हत्वा- கொன்று; त्रिभिः घस्रैः- மூன்று பகல்களில்; रावणं- ராவணனை; सह=बलं- சேனைகளோடு கூட; रामभद्रः- ராமபிரான்; अवधीत्- கொன்றார்.

(5) गुरुप्रसादः-ஆசார்யர்களின் அருள்; स्वहस्त-संसक्त-तूलिका-तुल्यं-தன் கையில் பிடித்த எழுதுகோல் போன்ற; वेङ्कटेशं-வேங்கடேசனை; अपदिश्य-வியாஜமாகக் கொண்டு; अभयप्रदानसारं-அபயப்ரதான ஸாரம் என்கிற நூலை; स्वयं-தானே; व्यलिखत् - எழுதி முடித்தது.

Scanned with CamScanner

பொன்னை யிகழ்ந்து விருகங்கள் புல்லிய புல்லுகந்தால்
மன்னரெடுப்பதப் பொன்னலதே மன்னுலகனைத்தும்
தன்னையடைந்திடத் தானருள் செய்யும் தனிச்சிலையோன்
பொன்னடி நாமடைந்தோம் புறமாரென்கொல் செய்திடினே (17)

வேதத்திரளின் விதியுணர்ந்தோர்கள் விரித்துரைத்த
காதற்கதியையும் ஞானத்தையும் கருமங்களையும்
சாதிக்கவல்ல சரணாகதி தனி நின்றநிலை
ஓதத் தொடங்கு மெழுத்தின் திறத்திலுணர்மின்களே (18)

மூவுலகும் தன் பிழையைத் தானே சாற்ற
முனிவர்களும் தேவர்களு முனிந்த வந்நாள்
தாவரிதா யெங்கும் போய்த் தளர்ந்து வீழ்ந்த
தனிக்காகந் தானிரந்த உயிர்வழங்கிக்
காவலினி எமக்கெங்கும் கடனென்றெண்ணிக்
காண நிலை யிலச்சினையன்றிட்டவள்ளல்
ஏவல் பயன் இரக்கமிதற்கு ஆறென்றோதும்
எழிலுடையார் இணையடிக்கீழிருப்போம் நாமே (19)

ப்ராப்த்தி ப்ரகார ப்ரபஞ்சம் முற்றும்

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य
श्रीमद्वेङ्कटनाथस्य वेदान्ताचार्यस्य कृतिषु अभयप्रदानसारः संपूर्णः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

---

17. ***விருகங்கள்*** - *மிருகங்கள்:* ***பொன்னை இகழ்ந்து*** - பொன்னை (அதன் பெருமையறியாது) வெறுத்துவிட்டு ; ***புல்லிய புல்உகந்தால்*** - அற்பமான புல்லையே ப்ரியமாகக் கொண்டாலும்; ***மன்னர் எடுப்பது*** - அரசர்கள் (விரும்பி) எடுத்துக்கொள்வது; ***அப் பொன் அலதே?*** - அப் பொன்னைத் தவிர வேறு உண்டோ ? (அது போல்), ***மன் உலகு அனைத்தும்*** - நிலைபெற்ற உலகம் முழுதும்; ***தன்னை அடைந்திட*** - தன்னைச் சரணமாக அடைய; ***தான் அருள் செய்யும்*** - தான் க்ருபை செய்பவனும்; ***தனிச் சிலையோன்*** - நிகரற்ற வில்லையுடையவனுமான ஸ்ரீராமபிரானுடைய ; ***பொன் அடி நாம் அடைந்தோம்*** - அழகிய திருவடிகளை நாம் சரணமாகப் பற்றினோம். ***ஆர் புறம் செய்திடின் என்கொல்?*** - (இதற்கு மாறாக) யார் வேறு எந்தக் கார்யத்தைச் செய்தாலும் (நமக்கு) என்ன (நஷ்டம்) ?

18. ***வேதத்திரளின்***-வேதங்களுடைய கூட்டத்தின் (வேதவேதாந்தங்களின்); ***விதி உணர்தோர்கள்*** - கட்டளையை அறிந்த பூர்வாசாரியார்கள்; ***விரித்து உரைத்த*** - தெளிவாக வெளியிட்ட; ***காதல் கதியையும்*** - பக்தியாகிய உபாயத்தையும்; ***ஞானத்தையும்*** - ஜ்ஞாநயோகத்தையும்; ***கருமங்களையும்*** - கர்மயோகத்தையும்; ***சாதிக்க வல்ல*** - முடித்துக் கொடுக்கச் சக்தியுள்ள ; ***சரணாகதி*** - ப்ரபத்தியானது; ***தனிநின்ற நிலை*** - (தானே ஸகலபலத்தையும் கொடுப்பதாய்த்) தனித்த உபாயமாகவும் நின்ற பெருமையை; ***ஓதத் தொடங்கும்*** வேதத்தை அத்யயநம் செய்யும்போது முதலில் அநுஸந்திகப்படுகின்ற; ***எழுத்தின் திறத்தில்*** - (முதல்) எழுத்தாகிய ப்ரணவத்தினுடைய ஸ்வபாவத்தால்; ***உணர்மின்கள்*** - அறிவீர்களாக.

19. ***மூ உலகும்*** - மூன்று உலகங்களிலும் (அலைந்து); ***தன் பிழையை*** - (பிராட்டியிடம்) தான் செய்த அபராதத்தை; ***தானே சாற்ற*** - தானே வெளியிட்டுப் பேசித் தன்னைக் காக்கும்படி வேண்ட); ***முனிவர்களும் தேவர்களும்*** - ருஷிகளும் தேவதைகளும்; ***முனிந்த அந்நாள்*** - (அவன்மீதே) கோபித்துத் துரத்திய அக்காலத்தில்; ***தாவு அரிதாய்*** - வேறு புகலிடம் கிடைக்காமல்; ***எங்கும் போய்*** - நாடெங்கும் சுற்றி; ***தளர்ந்து வீழ்ந்த*** - சோர்ந்து (இராமனுடைய திருவடியிலேயே வந்து) விழுந்த; ***தனிக் காகம் இரந்த*** - உதவியற்ற காகன் யாசித்த; ***உயிர்வழங்கி*** - உயிர்ப்பிச்சையளித்து; ***இனி எங்கும் காவல் எமக்குக் கடன்*** - இனிமேல் எவ்விடத்திலும் (யாரையும்) ரக்ஷித்தலே எம்முடைய கடமை; ***என்று எண்ணி*** - என்று திருவுள்ளங்கொண்டு; ***காண நிலை இலச்சினை*** - ஒற்றைக்கண் குருடாகும் சாசுவதமான அடையாளத்தை; ***அன்று இட்ட வள்ளல்*** - அப்பொழுது (காகனுக்குச்) செய்த பெருங்கொடையாளனாகிய இராமபிரானுடைய ; ***ஏவல் பயன்*** - கைங்கர்யமே (நமக்குச் சிறந்த) புருஷார்த்தமாகும். ***இதற்கு ஆறு*** - இந்தப் பலனைப் பெறுவதற்கு உபாயம்; ***இரக்கம் என்று ஓதும்*** - (நாம் செய்யும் ப்ரபத்தியால் அவனுக்கு நம்மிடம் உண்டாகும்) தயைதான் என்று உபதேசித்த; ***எழில் உடையார்*** - தேஜஸ் பொருந்தியவர்களான ஆசார்யார்களின்; ***இணை அடி கீழ்*** - இரண்டு திருவடிகளின் கீழும்; ***நாம் இருப்போம்*** - நாம் நிலை பெறுவோம்.

அபயப்ரதாந ஸாரம் முற்றும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அபயப்ரதாநஸாரம்: ரஹஸ்யார்த்த விவரணம்

(ஆசிரியர் : ஸ்ரீ உ. வே. வித்வான் ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி)

அதிகாரம் 1 : ப்ரபந்த அவதாரம்

(நூலின் தோற்றத்தை விளக்கும் அதிகாரம்)

1 ஸ்ரீமத் ராமாயணம் : அவதாரம், வேதார்த்தங்களின் விளக்கமாதல், குசலவர்களுக்கு வால்மீகி உபதேசித்தல்

கண்ணன் கீதையில் 'ஸாதுக்களைக் காப்பதற்காகவும் பாபிகளை அழிப்பதற்காகவும் தர்மத்தை நிலை நாட்டுவதற் காகவும் அவ்வப்போது அவதாரம் செய்கின்றேன்' என்றான். அவ்வாறே. ஸர்வேசுவரன் ஒரு திரேதாயுகத்திலே தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரனாய் அவதரித்தான். பிரமனின் புதல்வனான ஸ்ரீ நாரத பகவான் இந்த இராமபிரானது அவதார சரிதையை ஸ்ரீ வால்மிகி பகவானுக்குச் சுருக்கமாய் உபதேசித்தான். கலைமகள் எனப்படும் ஸரஸ்வதிக்கு நாயகனாகிய பிரமன் வால்மீகிக்குச் சிறந்த தெய்விக வாக்குப் பெருக வேண்டுமென்று அநுக்ரஹம் செய்தான். அதனால் முனிவனுக்குத் தெய்விகக் கவியமுதம் இராமாயண மென்னும் பத்தி வெள்ளமாய்ப் பரவுகின்றது. மேலும் பிரமன் வால்மீகிக்கு ஒரு வரமும் அளித்தான். இராமபிரான், பிராட்டி, இளைய பெருமாள், அரக்கர் முதலிய அனைவருக்குள்ளும் ரஹஸ்ய மாகவோ வெளிப்படை யாகவோ நடந்த செயல்கள் எல்லாம் முனிவனுக்கு விளங்குமென்பதும் அவன் வாக்கினின்று வரும் கவிகளில் ஒரு சிறு பொய் கூடக் கலவாது என்பதுமே

பிரமனுடைய வர ப்ரஸாதம். மேலும் தவத்தின் விளைவான புண்ய விசேஷத்தால் தெய்விகமான ஞானக் கண்ணைப் பெற்றுவிட்டான் வால்மீகி. அதனால் இராமபிரானது அவதார வரலாற்றுச் செய்திகளையெல்லாம் ஒன்று விடாமல் உள்ளங்கை நெல்லிக்கனி போல் முழுதும் கண்கூடாகக் கண்டான். இந்த இராமபிரானுடைய அவதார ரஹஸ்யங்களெல்லாம் மோக்ஷத்தை விரும்புமவனுக்கு மிக உதவி புரிவன. இவற்றை உலகுக்கு வெளியிட்டு மக்களை நல்வாழ்வு பெறச் செய்ய வேண்டுமென்று வால்மீகியின் உள்ளத்தில் கருணை பொங்கி வழிந்தது. அக்கருணை தான் வால்மீகியைச் செயல் புரியத் தூண்டியது. ஸ்ரீமத் ராமாயணம் என்னும் அற்புதக் காவியம் அவதரித்தது.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக வேதங்களின் தாத்பர்யத்தை அறிய வேண்டும். நேரிடையாக அதை அறிவது மிகக் கடினம். இதிஹாஸங்களும் புராணங்களும் வேதங்களின் பொருளை விளக்கிக் காட்ட வல்லன. இவற்றைத் துணை கொள்ளாவிட்டால் சிற்றறிவினர்கள் வேதார்த்தங்களை விபரீத மாக அறிந்து அல்லல்படுவர். இதைச் சாஸ்த்ரமே கூறுகின்றது. இதை நெஞ்சில் கொண்டான் வால்மீகி பகவான். 'கல்வி கேள்விகளில் குறையுடையருக்கு வேதங்களின் பொருள்களை அறிய விளக்கமான நூல்கள் வேண்டும். அவற்றால் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும்' என்று அவர்களிடம் கருணை சுரக்கின்றது முனிவனுக்கு. இங்ஙனம் உதவி புரியாவிடில் சிற்றறிவினர் வேதங்களுக்கு விபரீதமான பொருள்களைக் கல்பித்து வஞ்சிக்க முற்படுவர் என்ற அச்சம் வேதங்களுக்கு உண்டு. அவ்வச்சத்தைப் போக்குவதைத் தன் கடமையாக நினைத்தான் வால்மீகி முனிவன். அதற்காக ஸ்ரீமத் ராமாயணமென்ற ஒரு திவ்ய ஸூக்தியைத் தன் திருவாக்கினின்று தோற்றுவித்தருளினான். இந்த ஸ்ரீமத் ராமாயணத்தை ஒரு தட்டிலும் நான்கு வேதங்களை ஒரு தட்டிலும் வைத்து எடை போட்டால் சமமாயிருக்கும்.

இத்தகைய ஸூக்தியைப் படைத்தருளிய வால்மீகி பகவானை ஒரு கவலை சூழ்ந்து கொண்டது. உலகை உய்விக்க இந்நூலை இயற்றியாயிற்று. இதை உலகில் பிரசாரம் செய்ய வேண்டுமே! அதற்கு யாரைப் பிடிப்பது? என்பதுவே அக்கவலை. இச் சூழ்நிலையில் மேதாவிகளாய் வேதங்களில் தேர்ச்சி பெற்ற குசலவர்கள் இருவரும் வந்து முனிவனின் திருவடிகளைப் பற்றிக் கொண்டார்கள். முனிவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. அவசியம்

Scanned with CamScanner

வேண்டிய தகுதியுடையரான குசலவர்களுக்கு வேதார்த்தங்களை விளக்க வந்த ஸ்ரீமத் ராமாயணத்தை உபதேசித்துத் தகுதி நிரம்பியவர்களான அவர்களைக் கொண்டு இந்த லௌகீக உலகில் பரவச் செய்தான் ஸ்ரீ வால்மீகி பகவான்.

அதிகாரம் 2: பரதத்துவ நிர்ணயம்

(பர தேவதை யார் என்பதை நிச்சயம் செய்து தரும் அதிகாரம்)

2 ஸ்ரீமத் ராமாயணம் நிர்ணயிக்கும் இரண்டு அம்சங்கள்

இந்த ஸ்ரீமத் ராமாயணம் வேதங்களின் அர்த்தங்களைப் பல் வகையில் விளக்கம் செய்கின்றது. இப்படி இது விளக்கும் அம்சங்களில் மிக முக்கியமான அம்சங்கள் இரண்டு: ஒன்று பரதேவதை, மற்றொன்று சிறந்த உபாயம். சுவேதாச்வதரம் முதலிய உபநிடதங்கள் ஸ்ரீமந் நாராயணனே எல்லோருக்கும் ரக்ஷகனான பரதேவதையென்றும் அவன் திருவடிகளில் செய்யும் சரணாகதியே எல்லாச் சாதியாரும் செய்தற்கு உரிய சிறந்த உபாயமென்றும் இந்த இரண்டு அம்சங்களை ஓதின. இந்த ஸ்ரீமத் ராமாயணமும் இந்த இரண்டு அம்சங்களையும் நன்கு விளக்குகின்றது.

3. சிவன் பிரமன் இவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர் இராமபிரான்

முதலில் எல்லோரையும் ரக்ஷிப்பவனான பரதேவதை யார் என்று நிர்ணயம் செய்யத் தொடங்கும்போது ஸர்வேச்வரனான ஸ்ரீமந் நாராயணனோடு வைத்துப் பேசுவதற்கு இருவர் தவிர மற்றவர்கள் உரியரல்லர். நாராயணனுக்கு ஒத்தவர் என்றும் அவனோடு சேர்த்து மூவரும் ஒருவரே என்றும் அவனிலும் மேம்பட்டவரென்றும் வைத்துப் பேசிப் பின் விலக்குதற்கு உரியர் இருவர் உண்டு. அவர்கள் அயலாரல்லர். ஸர்வேச்வரனுடைய மகனான பிரமனும் இவன் மகனான சிவனுமேயாவர்.

முதலில் பேரனான சிவன் விஷயத்தைப் பார்ப்போம். இராமபிரான் பிராட்டியைத் திருமணம் புரிந்துகொண்டு அயோத்திக்குத் திரும்பும்போது பரசுராமன் இராமபிரானிடம் சேஷ்டை செய்தான். அப்பொழுது பரசுராமன் முன்பு சிவனது வில்

விஷ்ணுவின் சக்தியால் வலியிழந்து போனதைப் பார்த்த தேவர்களும் முனிவர்களும் விஷ்ணுவையே சிவனிலும் மேம்பட்டவனாக முடிவு செய்த வரலாற்றைக் கூறியதனின்று பேரனான சிவனைக் காட்டிலும் எம்பெருமான் உயர்ந்தவனென்று தீர்ந்தது.

பிறகு புத்திரனான பிரமனைப் பற்றிப் பேசுவோம். இராவணன் வதம் ஆகிவிட்டது. அதனால் மகிழ்ந்த தேவர்கள் அனைவரும் அங்கேயே பெருமாளைத் துதிக்கின்றனர். அவர்களுள் பிரமனும் சேர்ந்து ஒருமுகமாய்த் துதிக்கும் போது இராமபிரானே எல்லோரினும் மேம்பட்ட தெய்வமென்பதை நிலை நாட்டினார்கள்.

4. இராமபிரானே பரப்ரஹ்மம் எனப் பிரமனே கூறுதல்

பின்பு தேவர்களைப் பிரிந்து பிரமன் தனித்த முறையிலும் துதிக்கின்றான். மற்றவர்களின் வாயினின்று வருவதிற்காட்டிலும் பெருமாளோடு வைத்துச் சிலரால் பேசப்படும் பிரமனது வாயினாலேயே பெருமாளின் பெருமை வருவது சிறக்குமன்றோ! உலகில் எதிரி தன் கையாலேயே அளிக்கும் விடுதலைச் சீட்டைச் சிறந்த ஆதாரமாகக் காண்கின்றோமே! அப்பொழுது பிரமன் இராமபிரானே ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் விலக்ஷணமான பரப்ரஹ்மமென்று கூறுகின்றான். ப்ரஹ்மத்துக்கு இலக்கணம் என்ன? உலகுக்குக் காரணமாயிருந்தால். இராமனையே உலகுக்குக் காரணமான ப்ரஹ்மம் என்கிறான். உலகம் முழுதும் இராமனுக்குச் சரீரமாய் நிற்பதென்கிறான். வேதத்தில் ஹ்ருதயம் என்ற சொல் புத்திரனைக் கூறும். தன்னை ஹ்ருதயம் என்ற சொல்லால் இராமனுக்குப் புத்திரனாகவும் இராமனால் பிறந்த காரியப் பொருளாகவும் கூறிக்கொள்கின்றான். தான் மட்டுமன்றி மற்றைத் தேவர்கள் அனைவருமே அவனது நியமநத்துக்கு உட்பட்ட ப்ரபஞ்சத்தின் சிறு பகுதியென்கிறான். இராம பிரானையே எல்லோருக்கும் ரக்ஷகன் என்கிறான் பிரமன்.

மேலும் சுவேதாச்வதர உபநிடதம் எம்பெருமான் முதலில் பிரமனைப் படைப்பதாக ஓதுகின்றது. அந்த அர்த்தத்தையே ஸ்ரீமத் ராமாயணத்தில் உத்தரகாண்டத்தில் தன் வாயினாலேயே பிரமன் பேசியுள்ளான். அதில் ஸர்வேசுவரனே உலகுக்கு முதல் காரணம் என்றும், தான் அவனிடமிருந்து பிறந்தவன் என்றும், அவனுக்கு அடங்கிக் கிடப்பவனென்றும், தனக்குப் பிரமப்பதவியே

Scanned with CamScanner

அவனால் வந்ததென்றும், மத்ஸ்யம் கூர்மம் முதலியவற்றின் நடுவில் எம்பெருமான் அவதாரம் செய்வது போல் தேவர்களான தங்கள் நடுவேயும் க்ஷத்திரியர்களின் நடுவிலும் வந்து தன் ஸங்கல்பத்தாலே அவதரிப்பதாகவும் பிரமன் எம்பெருமானிடம் நேரில் விண்ணப்பம் செய்தான். இராமபிரான் அவதார காரியம் எல்லாம் முடித்துத் தன்னுடைச் சோதிக்கு (பரமபதத்துக்கு) எழுந்தருளும் போதும் அவனுக்கு உரிய இடமாகிய ஸ்ரீவைகுண்டத்துக்கு எழுந்தருளுமாறு பிரார்த்திக்கின்றான். பிரமன் உள்பட அனைவரையும் காப்பவனாய் ப்ரபஞ்சத்துக்கு முதற்காரணமான பரதேவதையைப் பற்றி விளக்கும் வேதப்பகுதி களுக்கு இங்ஙனம் தன் ஸுக்திகளால் ஸ்ரீவால்மீகி பகவான் விளக்கம் தந்தருளினான்.

அதிகாரம் 3: சரணாகதி தாத்பர்யப்ரபஞ்சம்

(சரணாகதியின் உட்கருத்தை விளக்கும் அதிகாரம்)

5. இராமாயணம் முழுதும் சரணாகதியையே விளக்குதல்

சரணாகதியென்பது விரும்பிய பலனைப் பெறுதற்கு மிகச் சிறந்த உபாயமாகும். எல்லோருக்கும் ரக்ஷகனாய்ப் பரதேவதையாய் விளங்கும் எம்பெருமானை வசப்படுத்தும் வல்லமை இச்சரணா கதிக்கு உண்டு. இது எல்லாச் சாதியாரும் செய்ய உரியது. இந்தச் சரணாகதி என்னும் தர்மத்தைச் செய்யுமாறு வேதங்களின் பகுதிகள் விதிக்கின்றன. ஸ்ரீமத் ராமாயணத்தில் தொடக்கம் முதல் முடிவுவரை சரணாகதியே முக்கியமான குறிக்கோள் என்பதைக் காட்டி வேதங்களின் கருத்தை விளக்கியருள்கின்றான் ஸ்ரீவால்மீகி பகவான். காண்டந்தோறும் சரணாகதி முக்கியமாகப் புலனாவது இந்த அதிகாரத்தில் விளக்கப்படுகின்றது.

5.1 பாலகாண்டத்தில் சரணாகதி

5.1.1 தேவர்களின் சரணாகதி

எம்பெருமான் இராமனாக அவதரிக்க முற்பட்டபோது நடந்த செய்தியைப் பார்ப்போம். தசரத சக்கரவர்த்தி யாகம் செய்தான். அதில் ஹவிஸ்ஸின் தத்தம் பாகங்களைப் பெற்றுக் கொள்வதற்காக எல்லாத் தேவர்களும் திரண்டு வந்தார்கள்.

அப்பொழுது தேவர்களுக்குப் பெரியதொரு கவலை. அரக்கர்களின் உபத்ரவத்தால் அல்லல்படும் அவர்கள் தங்களுக்கு ஒரு ரக்ஷகன் வேண்டுமே என்று எதிர்பார்த்தார்கள். யாரை ரக்ஷகனாக நாடலாம்? என்று சிந்தித்தனர். வேறு எவனால் அவர்களைக் காக்க முடியும்? எல்லோருக்கும் சேஷியாய் ஸர்வேசுவரனான எம்பெருமான் அதுவே உரிய ஸமயமென்று நினைத்தான். அவர்களைக் காக்கத் தான் முயற்சி கொண்ட மிடுக்குத் தோன்றக் காப்பதற்குப் பயன்படும் கருவிகளோடு அங்கு வந்து தோன்றினான். திருக்கைகளில் திருவாழி, திருச்சங்குகள், கதையும் கூட. அரையில் பீதாம்பரம். தேஜோராசியாய் எம்பெருமான் அங்கு வந்து நின்றான். அப்பொழுது ஸித்தர் கந்தர்வர் யக்ஷர் ஆகிய தங்கள் இனத்தார் உள்படத் தேவர்கள் ஒருவர் விடாமல் அனைவரும் சரணமடைந்த வரலாற்றைச் சொன்னான் முனிவன்.

5.1.2 திரிசங்கு சுநச்சேபன் வ்ருத்தாந்தங்கள் காட்டுவது

திரிசங்குவும் சுநச்சேபனும் தங்கள் ஆபத்தைப் போக்க விசுவாமித்திர முனிவனைச் சரணம் அடைந்த வரலாறுகளைக் காட்டிச் சரணம் அடைந்தவனைக் காப்பதுவே மிகச் சிறந்த தர்மம் என்றும் சக்தியும் கருணையும் உடையவனிடம் சரணாகதி செய்தால் அது பலன் தராமல் போகாது என்றும் உலகுக்குக் காட்டி அருளினான் வால்மீகி முனிவன். இப்படி பாலகாண்டத்தில் சரணாகதிதர்மம் புலனாகின்றது.

5.2 அயோத்யா காண்டத்தில் சரணாகதி

5.2.1 லஷ்ம ணன் சரணாகதி

பெருமாளும் பிராட்டியும் வனத்துக்குப் புறப்படவிருக்கும் போது இளையபெருமாள் இராமபிரான் திருவடிகளை இறுகப்பற்றிச் சரணாகதி செய்கின்றான். இது தான் விரும்பும் பலனுக்காகச் செய்த உபாயமாயிற்று. அந்தப் பயன் யாது? தன்னையும் வனத்துக்கு அழைத்துச் செல்லும்படியும் பெருமாளும் பிராட்டியும் மலைத் தாழ்வரைகளில் உல்லாஸமாயிருக்கும் சேர்த்தியில் அவர்கள் விழித்திருக்கும் நிலையிலும் உறங்கும் நிலையிலும் ஸகல கைங்கர்யங்களையும் செய்வதாயும் விண்ணப்பம் செய்கின்றான்.

Scanned with CamScanner

இதுதான் அவன் செய்த ப்ரபத்திக்கு விரும்பிய பலன். சரணாகதிக்கு உரிய மந்த்ரமாகிய த்வயத்தில் முதல் வாக்யம் ப்ரபத்தியையும் இரண்டாம் வாக்யம் பலனையும் கூறுகின்றதே! அந்தக் கருத்தை இளைய பெருமாள் செய்த செயலைக் கொண்டு தெளிவு படுத்தினான் ஸ்ரீ வால்மீகி பகவான்.

5.2.2 பரதன் சரணாகதியில் ஆக்ஷேபம் - ஸமாதாநம்

இங்கு ஒரு கேள்வி : சித்திர கூடத்தில் பெருமாளும் பிராட்டியும் எழுந்தருளியிருந்த போது பரதாழ்வான் தன் தமையனை நாட்டுக்கு மீண்டு முடி சூடுமாறு வலியுறுத்துகின்றான். அதற்கு இராமன் இசையவில்லை. பரதன் நிர்ப்பந்தம் செய்து பார்த்துக் கடைசியில் அவன் திருவடிகள் அயோத்தியில் பட வேண்டுமென்று பிரார்த்தித்து அதற்காக அவன் திருவடிகளில் சரணமடைகின்றான். அதற்காக இராமன் அயோத்திக்குத் திரும்பவில்லை. ஆதலின் பரதன் செய்த ப்ரபத்தி வீணாயிற்றே - என்று.

இதற்கு ஸமாதாநம் வருமாறு : பரதன் செய்த ப்ரபத்திக்கு முன் செய்த ஒரு ப்ரபத்தி பயனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. தசரதன் செய்த வேள்விக்கு வந்த தேவர்கள் எல்லோரும் அரக்கர்களால் வரும் துன்பங்களைத் தீர்ப்பதற்குப் பெருமாளைச் சரணம் அடைந்தார்களே! அதற்குப் பயன் கொடுப்பதானால் ராவணனை வதம் செய்ய எழுந்தருளியாக வேண்டும். பரதன் ப்ரபத்திக்குப் பயன் தருவதானால் அயோத்திக்குத் திரும்பி முடிசூடி அரசாள வேண்டும். இந்த இரண்டு பயன்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. இந்த இரண்டு ப்ரபத்திகளுக்கும் எப்படியும் பலன் கொடுத்தாக வேண்டும். எப்படி? தேவர்களின் காரியத்தை முன்பே வாக்களித்து விட்டதால் முதலில் அதைச் செய்து முடித்த பின்பே மற்றொன்றைக் கவனிக்க வேண்டும். அதற்காகப் பரதனை வெறுங்கையனாகப் போகச் செய்யவும் பெருமாளுக்குத் திருவுள்ளம் இல்லை . கைகேயி தசரதனிடம் இராமனுக்கு வனவாஸத்தையும் பரதனுக்கு அரசாட்சியையும் வரம் கேட்டுப் பெற்றதால் பரதனுக்கு ஒரு பழி வந்ததே! அதனையும் தீர்க்க நினைத்தான் இராமபிரான். பரதன் கேட்ட நேர்ப் பயனான திருவடிகளுக்குப் பிரதிநிதியாகத் தன் பாதுகைகளைக் கொடுத்தான். அந்தத் திருவடி நிலைதானே 'ஸ்ரீ சடகோபன்' என்று வழங்குகின்றது! இதனால் பரதன் செய்த

ப்ரபத்திக்கு ஓர் அளவுக்குப் பலன் கொடுத்தாயிற்று. அந்தப் பாதுகைகளுக்கே முடிசூட்டிப் பரதன் தான் ஓர் அடிமையாயிருந்து தொண்டு செய்ததால் அவனுக்கு வந்த பழியும் நீங்கியது. முதலில் தேவர்களுக்கு வாக்களித்திருந்தபடி அவர்கள் காரியமாகிய ராவணவதம் செய்து முடித்தபின் பரதன் கேட்ட நேர்ப்பயனான திருவடிகள் ஸ்ரீ புஷ்பக விமாதத்தில் தாமாகவே பரதனது முயற்சியின்றி எழுந்தருளியதால் பரதாழ்வான் தான் விரும்பிய முக்கிய பலனையும் பெற்றான் என்று ஸ்ரீ வால்மீகி வெளியிட்டான். இப்படி அயோத்யா காண்டம் இளைய பெருமாள் பரதாழ்வான் இருவர் செய்த சரணாகதியையும் விளக்கியது.

5.3 ஆரண்ய காண்டத்தில் சரணாகதி

5.3.1 முனிவர் சரணாகதி

வனத்தில் அரக்கர்களின் நலிவு பொறுக்க மாட்டாத முனிவர் இராமபிரான் வனத்துக்கு எழுந்தருளியபோது அரக்கர்களால் புண்பட்ட தங்கள் சரீரத்தைக் காட்டித் தாங்கள் அவன் நாட்டில் வாழும் குடி மக்களாய் இருப்பதால் தங்களைக் காக்க வேண்டிய கடமை பெருமாளுக்கு இருப்பதை நினைவூட்டி அவனை வேண்டினர். இராமபிரானும் அவர்களுக்கு எதிரிகளான கரன் முதலிய அரக்கர்களைக் கொன்று முனிவர்களைக் காத்தருளினான். இராமபிரான் அவர்களைக் காத்ததற்கு அவன் நாட்டில் அவர்கள் வஸிப்பதே போதுமான உபாயமாய் இருந்தது.

அவதார பூர்த்தியில் இராமன் தாவர ஜங்கமங்களுக்கும் நற்கதி அளித்தல்: இச்செயல் இராமபிரான் அவதார கார்யம் முடிந்து பரமபதத்துக்குத் திரும்பும் போது செய்யப்போகும் செயலுக்குப் பூர்வாங்கமான செயலாய் இருந்தது என்று கூறலாம். அப்பொழுது தன் நாட்டில் வாழ்வது ஒன்றையே காரணமாக வைத்துப் பெருமாள் எல்லா ஜந்துக்களையும் ஸ்தாவரம் - ஜங்கமம் என்ற வேற்றுமையின்றி நல்ல உலகம் செல்லுமாறு செய்தான். அந்த ஜந்துக்களுக்கு எந்த உபாயத்தையும் செய்யத் தகுதியிருப்பதாகப் பேசுதற்கே இடமில்லையே! பின்பு அவ்வாறு செய்யப் போவதற்கு அறிகுறியாக இப்பொழுது தன் நாட்டில் வாழ்ந்ததைக் கொண்டே முனிவர்களைக் காத்தானென்று கூறலாம். இந்தக் காரணத்தைக் கூறியே முனிவர்களும் தங்களைக் காக்குமாறு வேண்டினர்.

Scanned with CamScanner

எம்பெருமான் உகந்த இடத்தில் வாழ்தலே நற்கதி பெறப்போதுமானது: திருக்கண்ண மங்கையாண்டான் என்னும் மஹான் கூறியதை இங்குக் குறிப்பிட வேண்டும். 'என்னைக்காக்க வேண்டும்' என்று எம்பெருமானிடம் வேண்டும் போது தனித்து வேறோர் உபாயம் செய்ய வேண்டாம். அவனுக்கு உகப்பான இடத்தில் வாழ்ந்து 'தனக்கு வேறு கதி இல்லை' என்ற அம்சத்தை வெளியிட்டாலே போதும்.' என்று வெளியிட்டார். இந்த அம்சத்தைத் தொண்டரடிப் பொடியாழ்வாரும் 'எம்பெருமானே! உன் தொடர்புள்ள ஓர் இடத்தில் இருந்து கொண்டு வேறு உபாயம் செய்யச் சக்தியற்ற சோம்பேறியிடமும் உன் திருவுள்ளம் உகக்கும் போலும்!' என்று அருளிச் செய்தார்.

5.3.2 காக சரணாகதி

காகன் பிராட்டியிடம் பெரியதோர் அபசாரம் செய்தானே! அவன் செய்த குற்றம் இன்னும் உலராமல் ஈரமாகவே உள்ள ஸமயம். பிராட்டியின் திருமேனியில் குத்தியதால் வந்த இரத்தம் இன்னும் மூக்கில் உள்ளது. இராமபிரான் சீற்றம் கொண்டு ஒரு துரும்பை எடுத்து அதை ப்ரஹ்மாஸ்த்ரமாக மந்திரித்து எய்கின்றான். அந்த அஸ்த்ரம் காகனைத் துரத்துகிறது. பிரமன் அன்னத்தை ஏறும் வாகனமாகவும் கொடியாகவும் கொண்டவன். சிவனுக்குக் காளை வாகனம். அதுவே கொடி. இத்தகைய பெரிய தேவர்களின் வாசல் எல்லாம் நுழைந்து நுழைந்து பார்க்கிறான் காகன். இந்தப் பெரிய ஆபத்தினின்று என்னைக் காக்க வல்லவர் யாராவது உளரா?' என்று கதறுகின்றான். இராமபிரானிடம் அச்சத்தால் ஒருவரும் காக்க முன் வரவில்லை. மகனுக்குப் பிரியம் செய்யும் தாயான இந்திராணியும் நன்மை புரியும் தந்தையான இந்திரனும் கூட அப்பொழுது காக்க முன்வரவில்லை. அவர்கள் தேவலோகத்துக்குத் தலைவர்கள் அல்லரோ? அவர்களின் லோகத்திலே குடியிருப்பவர்களான மற்ற தேவர்களாவது காக்க முற்படலாமே! அவர்களும் காகனுக்கு இடம் கொடுக்கவில்லை. சரணமடைந்தவர்களைக் காப்பதென்ற தர்மத்தைப் பிறருக்கு உபதேசிப்பவர்கள் மஹர்ஷிகள். அவர்களும் காகனைக் கைவிட்டார்கள். ஏன்? இராமன் ஒருவனைக் கொல்ல நினைத்து விட்டால் அவனைக் காப்பதற்கு நான்முகனாலும் முக்கண்ணனாலும் தேவேந்திரனாலும் முடியாதென்பதை அவர்கள் நன்கு அறிந்தவர்கள். ஆகவே தாங்களும் காகனைக் காக்க முடியாது என்று கண்டனர். ஆனால் காகனுக்கு நன்மை

வரவேண்டுமென்று நல்லெண்ணம் கொண்டனர். பெருமாளே காகனை ஏற்றுக் கொள்வதற்கு வழி செய்தனர்.

காகனை அனைவரும் கைவிடுதல் அவனது நன்மைக்கேயாதல்: இப்படி எல்லோரும் கைவிட்டால்தான் காகன் நாடு முழுதும் திரிந்து காப்பவர் கிடைக்காமல் வேறு புகலற்றுப் பெருமாள் திருவடியில் போய் விழுவான் என்று நினைத்தனர். அதற்காகவே எல்லோரும் காகனைத் துரத்திப் பின்னும் அவன் வராதவாறு தங்கள் கதவையும் அடைத்துக் கொண்டார்கள். ப்ரஹ்மாஸ்த்ரம் துரத்துகின்றது. காகன் அதற்கு அஞ்சி ஓடுகின்றான். காகன் வேறு திசையை நோக்கி ஓடும்போது ப்ரஹ்மாஸ்த்ரம் தொடர்ந்து துரத்துகின்றது. காகன் பின்புறம் திரும்பிப் பெருமாள் எழுந்தருளியுள்ள திசையை நோக்கினால் அந்த அஸ்த்ரம் துரத்தாமல் ஒய்ந்து நிற்கின்றது. காரணம் என்ன? ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இராமபிரான் திருவுள்ளம் தெரியும். ஸர்வ லோகங்களுக்கும் ரக்ஷகனான இராமபிரானுக்குக் காகத்தைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் இல்லை. ஆனால் அவன் கொழுப்பை மட்டும் அடக்கிவிட வேண்டுமென்று திருவுள்ளம். காகன் பின்புறம் நோக்கும்போது ஒருகால் இராமனிடம் அடைக்கலம் புகக் கருதுகின்றானோ என்ற எண்ணத்தால் அந்த அஸ்த்ரம் ஓய்ந்து விடுகின்றது. முன்னே காகன் ஓடும்போது வேறு ரக்ஷகனை நாடுவதைப் பொறுக்காது அஸ்த்ரம் துரத்துகின்றது. இத்தனையும் கண்ட காகம் தப்பி ஓடிவிட எண்ணமிருந்தாலும் வேறு வழியின்றி இராமனிடம் வந்து விழுந்தது. கொல்லப்பட உரியனான காகன் வேறு கதியற்றுத்தான் இருந்த இடத்திலே வந்து விழுந்தையே சரணாகதியாகக் கொண்டு இராமபிரான் உயிரை விரும்பி வந்து விழுந்த காகனுக்கு உயிர் அளித்துக் காத்தருளினான்.

5.3.3 அபராதிகளைப் பெருமாள் தண்டிப்பதும் அவர்களின் நன்மைக்கே: உதாரணங்கள்

இங்கு ஒரு முக்கியமான விஷயம் - இராமபிரான் மூவர்மீது அம்போ அஸ்த்ரமோ தொடுத்து அவர்கள் சக்தியை வாங்கி விட்டான். அம்மூன்று வரலாறுகளிலும் அவன் செய்த செயல் அவர்களுக்குத் தீமை புரிந்ததாகத் தோன்றிடினும் ஆராய்ந்து பார்த்தால் அவர்களுக்கு நன்மை செய்ததாகவே புலப்படும். விளக்கம் வருமாறு:

Scanned with CamScanner

(1) ஸ்ரீ பரசுராமன் பெற்ற நன்மை: பெருமாள் பிராட்டியை மணந்து கொண்டு மிதிலையினின்று அயோத்திக்குத் திரும்புகின்றான். அப்பொழுது ஸ்ரீ பரசுராமன் இராமனுடன் போர் செய்ய விரும்பி முதலில் அவனது வலிமையைப் பரீக்ஷிக்க எண்ணுகின்றான். தன் கையில் இருந்த வில்லைக் கொடுத்து அதில் அம்பைத் தொடுக்குமாறு கூறினான். இராமபிரான் எளிதில் அதைக் கையில் வாங்கி அம்பு தொடுத்து அதை எய்வதற்குக் குறி காட்டுமாறு கோபத்துடன் கேட்டான். இராமனை எதிர்க்கும் ஆசை ஒழிந்தது. முனிவன் சிறந்த லோகங்களைத் தர வல்லனவாய்த் தான் சேர்த்து வைத்திருந்த புண்ணியங்களின் மீது அம்பு எய்யுமாறு பணித்தான். இராமனும் அவ்வாறே செய்து அருளினான். அந்த உலகங்களுக்குச் செல்லப் பரசுராமனுக்கு விருப்பமின்மையால் அவனுக்கு வேண்டாத புண்யங்களை அம்பினால் அழித்தது அவனுக்கு நன்மையாகவே முடிந்தது.

(2) ஸமுத்ர ராஜன் பெற்ற நன்மை : ஸமுத்ரராஜன் இராமனது வேண்டுகோளுக்கு இடம் கொடாது முரடனாய் நின்றபோது சினம் கொண்ட இராமபிரான் கடல் நீரின் மீது அம்பு எய்தான். அப்பொழுது நிலைகுலைந்து நடுங்கிய கடலரசன் தன் செயலுக்கு வருந்தி இராமனைச் சரணமடைந்தான். கோபம் நீங்கிய பெருமாள் தான் விடுத்த அம்பு வீணாகாது பயன்பட அதற்கு இலக்கைக் காட்டுமாறு கேட்டான். ஸமுத்ரராஜன் தனக்கு விரோதிகளான பாபிகள் மீது எய்யுமாறு வேண்டினான். இராமபிரான் அங்ஙனமே செய்தருளினான். சரணம் அடைந்தவர்களின் பாவங்களை அவர்களின் எதிரிகள் மீது செல்லவிடுவது உண்டென்று உபநிடதமும் ஓதுகின்றது. இப்படி இங்கும் பெருமாள் தன் அம்புக்கு இலக்குப் பார்த்து எய்தது கடலரசனின் விரோதிகள் கெடுதற்கு உடலாய் அவனுக்கு நன்மையாகவே முடிந்தது.

(3) காகன் பெற்ற நன்மை: காகத்தின் மீது ப்ரஹ்மாஸ்த்ரத்தை எய்தான் இராமபிரான். காகனுக்கு வேறு போக்கு இல்லாத அவல நிலை மட்டும் உண்டே அன்றி, அவன் மனத்தில் ஈரம் சிறிதும் இல்லை; ஆயினும், தன் உயிரைக் காத்துக் கொள்ள இராமபிரானைச் சரணம் அடைந்தான். இராமன் அவனுக்கு உயிர்ப் பிச்சை அளித்துக் காத்தான். ஆனால், அவனது ஒரு கண்ணைப் பறித்து விட்டான். இந்தத் தண்டனையும் காகனுக்கு

நன்மையாகவே முடிந்தது. எப்படி? காகன் இயற்கையில் துஷ்டன், மறுபடியும் இத்தகைய தீய செயலைச் செய்யும் எண்ணத்தை விட மாட்டான். இப்பொழுது ஒரு கண்ணைப் பறித்து விட்டால் அச்சம் ஏற்படும். மறுபடி, தான் பிழை செய்தால் மற்றொரு கண்ணும் போய் விடும் என்று அஞ்சிக் கெட்ட எண்ணத்தை விட்டு நடப்பான். இதைத் திருவுள்ளத்தில் கொண்டே அவனது ஒரு கண்ணைப் பறித்தது அவனுக்கு நன்மையாய் முடிந்தது.

ஆகவே இந்த மூன்று வரலாறுகளிலும் தன் அஸ்த்ரத்துக்கு இலக்குக் கொடுத்தது எல்லாம் தன்னைச் சேர்ந்தவர்களாகி விட்டவர்களின் நலத்துக்கே உடலாயிற்று என்று முடிவு காணப்பட்டது.

5.4 கிஷ்கிந்தா காண்டத்தில் சரணாகதி

5.4.1 சுக்கிரீவன் சரணாகதி

வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்குப் பெருமாள் முடிசூட்டியபின் மாரிக்காலம் வந்தது. அப்பொழுது சீதையைத் தேடும் முயற்சி நான்கு மாதங்களுக்குத் தள்ளிவைக்கப்பட்டது. விசாலமான திருவுள்ளம் கொண்ட இராமபிரான் சுக்கிரீவனை மனைவியருடன் இன்பமாய் வாழ்ந்து மழைப்பருவம் கடந்தபின் சீதையைத் தேடத் தொடங்குமாறு நியமித்து மால்யவான் என்னும் மலைத்தாழ் வரையில் இளைய பெருமாளுடன் வாழ்ந்து வந்தான். மழைக் காலம் கடந்து விட்டது. சுக்கிரீவனுக்கும் இராம காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் குறையில்லை. குறித்த நான்கு மாதம் கடந்ததும் பெருமாள் எழுந்தருளியிருந்த இடத்துக்கு அவன் விரைவில் ஓடிவர வேண்டியதுதானே நியாயம்! அதில் தவறி விட்டான் சுக்கிரீவன். மனைவியருடன் போகத்திலே மூழ்கி வேறொன்றிலும் மனத்தைச் செல்ல விடாதிருந்தான். முன்பு செய்து கொண்ட கட்டுப்பாட்டை மீறிவிட்ட பழியைச் சுமந்தான் வானர ராஜன். பிராட்டியின் பிரிவாற்றாது பெருமாள் படும் துன்பத்தைக் கண்ட இளைய பெருமாளுக்குச் சுக்கிரீவன்மீது சீற்றம் பொங்குகின்றது. கிஷ்கிந்தையில் வந்து நிற்கின்றான் லக்ஷ்மணன். அவன் சீற்றத்தைக் கண்டான் அனுமான். சுக்கிரீவனுக்கு நன்மையைக் கூற அவனிலும் சிறந்த மந்திரி

Scanned with CamScanner

உண்டோ ? அந்தச் சமயத்தில் ஒரு மந்திரி அரசனுக்குத் தர்மத்தை உபதேசம் செய்வதென்ற முறையில் சுக்கிரீவ மஹாராஜனுக்கு அப்பொழுது நன்மை சொல்ல அனுமான் முற்பட்டான். அவன் பெருமாளிடம் பட்ட அபராதத்தை எடுத்துக்காட்டி அந்தக் குற்றத்தையே பிடியாகக் கொண்டு இளைய பெருமாளிடம் கைகூப்பிச் சரணம் அடைந்து அவனை உகக்கச் செய்வதே ஏற்ற செயலென்றும் அதுவன்றிப் பிழைக்க வேறு வழியில்லை என்றும் உபதேசித்தான். இதைக் கேட்ட சுக்கிரீவனுக்கு மனத் தெளிவு பிறந்தது. இளைய பெருமாளிடம் சுக்கிரீவன் 'இராமபிரான் தீங்கு செய்ய மாட்டான்' என்ற நம்பிக்கையாலும் அவனிடம் உள்ள அன்பின் மிகுதியாலும் தான் தவறு செய்து விட்டதாயும் அடியனான தன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்றும் உலகில் குற்றம் செய்யாதவன் இலனென்றும் விண்ணப்பித்து அவனிடம் மன்னிப்புப் பெற்றான்.

இந்த வரலாற்றால் வால்மீகி பகவான் இரண்டு தத்துவப் பொருளை உலகுக்கு வெளியிடுகின்றான்:

(1) சுக்கிரீவன் அபராதம் செய்தது யாரிடத்தில்? இராமபிரானிடத்தில். மன்னிப்பைப் பெற்றது யாரிடத்தில்? லஷ்மணனிடத்தில். இதனால் தெரிவது யாது? எம்பெருமானிடம் ஒருவன் நேராக அபசாரம் செய்திருந்தாலும் அவனுக்கு அடியார்களிடம் அதற்கு மன்னிப்பைப் பெற்றுவிட்டால் அவ் வழியால் எம்பெருமான் தானே பொறுத்துக்கொண்டு விடுகின்றான். குற்றவாளன் குற்றம் நீங்கப்பெற்றுக் கைங்கர்யம் செய்யத் தகுதி பெற்று விடுகின்றான். இக்கருத்தை இவ்வரலாறு காட்டவில்லையா?

(2) பின்பு இளைய பெருமாளும் சுக்கிரீவனிடம் தன் பிழையைப் பொறுக்கும்படி வேண்டுகின்றான். முதலில் லஷ்மணன் சுக்கிரீவனிடம் சில கடுமையான சொற்களைச் சொல்லி விட்டான். ஆனால் அந்தச் சொற்களைத் தானாகச் சொல்லவில்லை என்றும், பெருமாளுடைய சீற்றத்தால் அவன் வாயினின்று வந்த சொற்களைக் கொண்டே தான் சொல்லியதாயும், அவன் கோபத்துக்கும் காரணம் பிராட்டியின் பிரிவுத் துயருக்கு அவன் வசப்பட்டமையே என்றும் சொல்லுகின்றான். இப்படி கொடிய சொல்லைக் கூறிய தன் அபசாரத்துக்குக்

காரணமான இராமபிரானுடைய கோபத்தைக் குறிப்பிடுகின்றான் இளையபெருமாள். இராமபிரான் லஷ்மணனிடம் சுக்கிரீவனுக்கு விடுத்த செய்தியாவது - 'சுக்கிரீவனே வாலி கொல்லப்பட்டுச் சென்ற வழி குறுகிப்போய்விடவில்லை, வீணாக அந்த வழியே நீயும் செல்ல முற்படாதே. செய்து கொண்ட கட்டுப்பாட்டின் படி நடந்து கொள்' என்பது. இவ்வளவு கொடிய சொற்களை இராமன் மேலெழுந்த வாரியாகச் சொல்லி வைத்தானேயன்றி மனப் பூர்வமாய்ச் சொல்லியதாகச் சொல்ல முடியாது. இதைக் கூறுவதற்குக் கூடக் காரணம் பிராட்டியைப் பிரிந்த துயரமே ஆகும். தீய செயல்களை 'ஆசை செய்தது, கோபம் செய்தது என்றெல்லாம் சாஸ்த்ரம் சொல்லவில்லையா? அவ்வாறே இங்கும். ஆகவே பெருமாள் சொல்லியனுப்பிய சொற்களும் சுக்கிரீவனை நல்ல நிலைக்குத் திருத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தால் பிறந்தவை தாம். ஒப்பந்தப்படியே நடந்து கொள் என்பதில் இருந்தே இது தெரியவில்லையா?

லஷ்மணன் கேட்ட மன்னிப்பால் வெளியாகும் சாஸ்த்ர ரஹஸ்யம்: இப்படி ஒரு காரணத்தாலே லஷ்மணன் சுக்கிரீவனிடம் பட்ட அபசாரத்துக்காக அவனிடம் மன்னிப்புப் பெற்றுக் கொண்டதை வால்மீகி பகவான் கூறியதால் தேறிய உண்மைக் கருத்தைப் பார்ப்போம். ஸ்ரீவைஷ்ணவர்களுள் ஒருவர் மற்றவரிடம் அபராதம் செய்ய நேர்ந்துவிட்டால் அதற்காகப் பச்சாத்தாபமடைந்து பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும். அதாவது அவர்களைப் பணிந்து தம் பிழையைப் பொறுத்துக் கொள்ளும்படி பிரார்த்தித்து அவர்களின் மன்னிப்பைப் பெற வேண்டும். அப்படி நடந்த பின் இவர்கள் குற்றம் செய்தபோது இவர்கள் விஷயத்தில் அவர்கள் செய்த அவமதிப்பு முதலியவற்றை மனத்தில் கொள்ளாமல் அவர்களை மன்னிக்க வேண்டும் என்னும் சாஸ்த்ரவுண்மையை உலகுக்குக் காட்டி அருளினான் மஹர்ஷி.

இதுவரை விபீஷணன் வந்து இராமபிரானிடம் சரண மடையும் வரலாற்றுக்கு முன்பு சரணாகதியென்னும் தர்மத்தைச் சிலர் செய்ததன் மூலம் ஸ்ரீமத் ராமாயணம் விளக்கிய முறையைக் கூறினோம். விபீஷணன் சரணமடைந்த வரலாற்றையே முழுதும்

Scanned with CamScanner

இந்த ரஹஸ்யம் விளக்கப் போகின்றது. விபீஷணசரணாகதிக்குப் பின் உள்ள சரணாகதிகளைப் பார்ப்போம்.

5.4.2 இராமன் ஸமுத்ரராஜனிடம் செய்த சரணாகதி ஏன் வீணாயிற்று? - விளக்கம்

இராமபிரான் வானரப் படைகளுடன் கடற்கரையில் அமர்ந்திருக்கின்றான். கடலைக் கடக்கும் வழி ஆராயப் படுகின்றது. அணைகட்டியே செல்ல வேண்டுமென முடிவு. அதற்கு ஸமுத்ரராஜன் இடம் தரவேண்டும். விபீஷணன் தனக்கு எத்தகைய ஆபத்து வரினும் தன் மனம் தர்மத்திலேயே ஒன்றியிருக்க வேண்டும் என்று பிரமனிடம் வரம் கேட்டுப் பெற்றுப் பரம தார்மிகனெனப் பெயர் பெற்றவன். இராமபிரானிடம் தான் செய்த சரணாகதி சிறந்த பயன் அளித்ததைக் கண்டு யாருக்கும் அந்த வழியையே உபதேசிக்கத் துணிபவன். தனக்குப் பயனை அளித்த இராமனுக்கே அந்த வழியைக் கூறுகின்றான். கடலரசனைச் சரணமடையும்படி வேண்டுகின்றான். இவனுடைய சொல்லைக் கொண்டு சக்தியற்றவன் தன் இஷ்டம் பெறுதற்குச் சக்தியுடையவனை நாடவேண்டுமென்ற கடமையை வால்மீகி முனிவன் உலகுக்கு வெளியிட்டான். இராமன் விபீஷணன் வார்த்தையை ஏற்றுஸமுத்ர ராஜனிடம் மதிப்புக் கொண்டு மூன்று நாள் நியமங்களுடன் தரையில் கிடந்து சரணமடைந்தான். ஆனால் அந்தச் சரணாகதி பலித்ததா? இல்லையே! ஏன் வீணாயிற்று? சரணமடைபவன் தாழ்ந்தவனாகவும் சரணமாகுமவன் ஞானம் சக்தி நிறைந்தவனாகவும் இருக்க வேண்டும். இந்தச் சரணாகதியில் இரண்டு அம்சமும் இல்லை. இராமன் சக்தியில் குறைந்தவனா? இராமன் சரணமடைந்ததற்குக் கடல் முகம் காட்டாதிருந்ததைக் கண்ட பெருமாள் லஷ்மணனை நோக்கி உடனே வில்லையும் பாம்புபோல் சீறும் அம்புகளையும் கொண்டு வருமாறும் கடலை வற்றச் செய்து வானரங்களைக் காலால் நடந்தே செல்லுமாறு செய்வதாயும் கூறிய இராமபிரானைச் சக்தியற்றவன் என்று கூற முடியுமா? அவன் கையம்பு வீணாவதுண்டா? இத்தகைய வல்லமையுடையவன் பிறரைச் சரணமடைதற்கு ஏற்றவனா? சரணமாக வரிக்கப்பட்ட கடலரசனோ அற்பபுத்தியும் குறைந்த சக்தியுமுடையன். ஆக உயர்ந்தவன் தாழ்ந்தவனிடம் செய்த சரணாகதி வீணாவதில் வியப்பென்ன?

5.5 இராவணனுக்கு உபதேசத்தால் வெளியாகும் இராமன் பண்புகள்

பின்பு இராவணனைக் குறித்து இராமபிரான் பேசிய வார்த்தையால் பெருமாள் குணங்கள் வெளியாகின்றன. பகைவனிடம் கூட அன்பு காட்டும் தன்மையன் இராமபிரான். இராவணனை நோக்கி இராமபிரான் 'ஸீதையை அழைத்து வந்து என்னிடம் சேர்த்துவிட்டு நீ சரணமடையவில்லையேயாகில் என் கூரிய அம்புகளால் இவ்வுலகில் அரக்கப்பூண்டே இல்லாமல் செய்து விடுவேன்!' என்று அருளிச் செய்தான். இதனால் தேறுவது என்ன? இராமபிரான் எல்லோரும் சரணமடைதற்கு ஏற்றவன். அதற்கு வேண்டிய அம்சங்களான 'எதையும் செய்ய வல்லமை 'எல்லையற்ற கருணையுடைமை 'நன்மையை உபதேசித்தல்' ஆகிய இவை இராமனிடம் வெளியாகின்றன.

5.6 உலக நன்மையில் பெருமாளும் பிராட்டியும் ஒரே கருத்தினர்

சரணம் அடைந்தவர்களைக் காத்தல் என்னும் தர்மத்தைப் பிராட்டியும் இராமனுடன் சேர்ந்தே நடத்துபவள். உலக முழுதுக்கும் அவள் தாயாய் நிற்பவள். ஆதலின் சேதநர்களின் குற்றங்களைப் பொருட்படுத்தாது அவர்களிடம் அளவற்ற அன்பு சுரப்பவள். இராவணன் அவளிடம் மிகுத்த அபசாரங்கள் செய்து ப்ரதிகூலனாயிருக்கும் போதும் பிராட்டிக்கு அவனிடமும் உள்ள மிகுதியான தாய்ப்பாசம் அவனுக்கு நல்லுரை கூறும்படி தூண்டுகின்றது. இராவணனுக்கு அவள் கூறுவது - 'உனக்கு இந்த இலங்கையில் சுகமாய் வாழ வேண்டுமென்ற எண்ணம் இருந்தால், இராமன் கையால் வரும் பயங்கரக் கொலைக்கு ஆளாகாதிருக்க விரும்பினால் இராமனிடம் நீ நட்புக் கொள்வது நலம். சரணமடைந்தவர்களின் குற்றத்தைப் புறக்கணித்து அன்பைச் சொரிபவன் இராமபிரான். ஸகல தர்மங்களையும் அறிந்தவன். நீ உயிர் பிழைக்க விரும்பினால் அவனுடன் நட்புக் கொண்டாலும் போதும். அவனிடம் என்னைக் கொண்டு சேர்த்து அவனை உகப்பித்து நல்வாழ்வு பெறப் பார்.' என்று அருளிச்செய்தாள்.

இப்படி பெருமாளும் பிராட்டியும் இராவணனுக்குச் செய்த உபதேசத்தால் தெரிவது என்ன? இந்தத் திவ்ய தம்பதிகள் இருவருமே உலகுக்கு நன்மை புரிவதில் ஒரே கருத்துடையர்

Scanned with CamScanner

என்பது புலப்படவில்லையா? ஆனால் பிராட்டி செய்த உபதேசம் இராவணனுக்குச் சிறிதும் பலிக்கவில்லை . ஆயினும் அவனே சிசுபாலனாய்ப் பிறந்த அடுத்த ஜந்மத்தில் கண்ணனால் கொல்லப்பட்ட கடைசி க்ஷணத்திலாவது பயன்பட்டது.

5.7 ஸுந்தரகாண்டத்தில் சரணாகதி

5.7.1 அரக்கியருக்கு த்ரிஜடையின் உபதேசம்

இப்படி ரக்ஷகனான பெருமாளோடு கூடி நின்று தர்மத்தை நடத்துமவளான பிராட்டியிடம் அசோக வனத்தில் ராக்ஷஸிகள் எவ்வளவு கொடுமையாய் நடந்துகொண்டனர். பிராட்டியை அதட்டியும் மிரட்டியும் பல்வகையில் கொடுமை புரிந்து கொண்டிருந்த அரக்கியரை நோக்கி த்ரிஜடை தன் உள்ளக் கருத்தைக் கூறி நற்செயலை உபதேசிக்கின்றாள். இதை அவள் பேச்சின் வாயிலாகக் கூறுகின்றான் வால்மீகி முனிவன். த்ரிஜடை கூறியதாவது - 'அரக்கியர்களே! பிராட்டியிடம் கடுஞ்சொற்களை இனிச் சொல்லாதீர்கள். குளிர்ந்த வார்த்தைகளையே பேசுங்கள். இராமனால் அரக்கர்களுக்குப் பயங்கரமான ஆபத்து வரவிருக் கின்றது. அதைத் தடுப்பதற்காகப் பிராட்டியை வணங்கிப் பிரார்த்திப்போம். இதுதான் உசிதமாய் எனக்குத் தோன்றுகின்றது. அவளை அதட்டி விட்டோமே என்று சிந்திக்க வேண்டாம். சரணமடைந்து வேண்டினால் அவள் மனம் குளிர்ந்து உங்களுக்கு வரவிருக்கும் பெரிய ஆபத்தினின்று காப்பதற்குச் சக்தியுடையள்.' என்று நல்லுரை கூறினாள் த்ரிஜடை.

5.7.2 அரக்கியருக்கும் பிராட்டியின் அபயப்ரதாநம்

த்ரிஜடையின் வார்த்தையை மதித்தார்களா அரக்கியர்! அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தால் என்ன? ஸத்துவ குணமே உருவெடுத்த த்ரிஜடையின் வகுப்பைச் சேர்ந்தவர்களல்லரோ அரக்கியர்! இதுவே போதுமே பிராட்டிக்கு! அரக்கியர் செய்த கொடுமைகளைப் பொருட்படுத்தாத அன்பு பிராட்டியைச் சூழ்ந்து கொண்டு பரவசமாக்கியது. இதைக் கண்ட த்ரிஜடை 'இந்தப் பிராட்டி இராமனால் ஆபத்து வராமல் அரக்கியரைக் காத்துவிடவல்லவள்!' என்று கூறுகின்றாள். இராமபிரானுக்கு வெற்றி ஏற்பட்டதாகத் தான் கண்ட சொப்பனத்தைச் சொல்லுகின்றாள் த்ரிஜடை. இந்தச் சூழ்நிலையில் தன் நாயகனது

வெற்றிச் செய்தியைச் சொப்பனத்திலாவது த்ரிஜடை கண்டதாகக் கேட்டதில் பிராட்டிக்கு மகிழ்ச்சி. வெட்கமும் கூட வருகின்றது. அப்பொழுது பிராட்டி அரக்கியரை நோக்கி 'இராமபிரானுக்கு வெற்றிச் செய்தி உண்மையாயின் உங்களுக்கு அடைக்கலம் தந்து காப்பேன்.' என்று அரக்கியரைக் காக்கும் பொறுப்பைப் பிராட்டி ஏற்றுக்கொண்டு சொல்லிய வார்த்தையையும் த்ரிஜடை சொல்லியதையும் அனுமான் இலங்கையில் பிராட்டியைக் கண்டு திரும்பி வந்தவுடன் வானர வீரர்களுக்கு விளக்கிக் கூறுகின்றான்.

5.7.3 அரக்கியரிடம் அனுமான் சீற்றத்தைப் பிராட்டி தணித்துக் காத்தல்

இராவணவதம் ஆகிவிட்டது. இராமபிரானது வெற்றியை அசோக வனத்துக்குப் போய்ப் பிராட்டியிடம் விண்ணப்பிக்கின்றான் அனுமான். அப்பொழுதும் இராவணன் மாண்டதை அறியாத அரக்கியர் பிராட்டியைத் துன்புறுத்திக் கொண்டே இருக்கின்றனர். அதைக் கண்ட திருவடி அரக்கியரிடம் சீற்றம் கொண்டு அவர்களைக் கொன்று பழிவாங்கப் பிராட்டியிடம் அனுமதி கேட் கின்றான். அப்பொழுது பிராட்டி அரக்கியர் குற்றவாளராகவோ அல்லாதவராகவோ கொல்லப்பட உரியராகவோ இருந்தாலும் அவர்கள் பால் கருணை கொள்ள வேண்டுமென்றும் உலகில் குற்றம் செய்யாதவன் இலனென்றும் சொல்லி அவன் சீற்றத்தைத் தணிக்கின்றாள். பின் பிராட்டி தானே முன் வந்து அரக்கியரைக் காத்துவிடுகின்றாள். இவ்விஷயத்தை ஸ்ரீவால்மீகி பகவான் நன்கு விளக்கியுள்ளான்.

5.7.4 பெருமாள் பொறுமையிலும் பிராட்டியின் பொறுமை விஞ்சியது - ஸ்ரீபட்டர் விளக்கம்

இப்படி பிராட்டி தனக்குத் துன்பமே செய்து வந்த அரக்கியரை அனுமான் கையில் அகப்படாமல் காத்த பெருமையை ஸ்ரீபட்டர் சிந்திக்கின்றார். உள்ளம் உருகுகின்றார். பிராட்டியின் பொறுமைக்கு முன் இராமபிரானது பொறுமை மிகச் சிறிய அணுவாய்த் தோற்றுகின்றது. பிராட்டியை நோக்கிப் புகழ்கின்றார் - 'தாயே! உன் நாயகனான இராமபிரான் சரணமடைந்தவர்களைக் காப்பவன் என்பதில் ஐயமில்லை . காகம் நாடு முழுதும் திரிந்து வேறு போக்கற்று அவன் திருவடியில் வந்து விழுந்தது. அதற்கு இராமபிரான் உயிர்ப்பிச்சையளித்தான். விபீஷணன் நாட்டை விட்டு, வீட்டை விட்டு, உறவினரை விட்டு, செல்வத்தை விட்டு

Scanned with CamScanner

எல்லாம் இராமபிரானே என்று சரணமடைந்தான். அவனையும் காத்தருளினான் உன் நாயகன். அவ்விருவரும் நேரிய வழியில் சரணமடைந்தவர்கள். அவர்களை உன் நாயகன் காத்ததில் விசேஷமான பெருமை எதுவும் புலப்படவில்லை . ஆனால் உன்னை அசோகவனத்தில் அரக்கியர் துன்புறுத்திக் கொண்டு குற்றம் செய்த கை ஈரமாயிருக்கும் போதே அரக்கியரை அனுமான் கையில் பிழிவுபடாதவாறு நீ காத்ததன்றோ ஒப்பற்ற பெருமை தரும் செயலாகும்! ஆகவே காத்தருளும் செயலில் உன்னையும் உன் நாயகனையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது உன் பொறுமைக்கு முன் அவனது பொறுமை மிகத் தாழ்ந்து விடுகின்றது. அபராதம். செய்தே பொழுதுபோக்கும் எங்களை உனது இயற்கையான பொறுமையே காத்தருள வேண்டும்!' என்று அருளிச் செய்தார்.

ஆகவே இப்படி ஆறு காண்டங்களிலும் சரணாகதி என்ற தர்மமே அச்சாணியாகக் கோக்கப்பட்டுள்ளது.

5.8 உத்தரகாண்டத்தில் சரணாகதி

5.8.1 புறங்காட்டி ஓடுபவரைத் துரத்திக் கொல்வது நீதியா? மால்யவானுக்கு இராமனது விடை

ஸ்ரீமத் ராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் சரணாகதியின் நிலையைப் பார்ப்போம்: இராவணனுக்குப் பாட்டன்மார் வாழ்ந்திருந்த காலம். அப்பொழுதும் அரக்கரால் தேவர்களுக்கு நேரும் துன்பத்துக்குக் குறைவில்லை. தேவர்கள் எம்பெருமானைச் சரணம் அடைந்தனர். அவர்களைக் காக்கத் திருவுள்ளம் கொண்டான் ஸர்வேசுவரன். அப்பொழுது விஷ்ணு என்ற அவதாரம் செய்திருந்தான். அரக்கருடன் போர் செய்து அவர்களை முறியடித்தான். அரக்கர்கள் போரில் அடிபட்டுத் தோற்றுப் போர்க்களத்தை விட்டு முதுகு காட்டி இலங்கைக்கு ஓடுகின்றனர். அப்பொழுது எம்பெருமான் அவர்களைத் துரத்திக் கொண்டு சென்று தன் வில்லினின்று அம்புமாரி பொழிந்து சூறையாடினான். அதைக் கண்டு மால்யவான் நல்ல அறிவுடன் திரும்பி எம்பெருமானைக் கேட்கின்றான் - 'நாராயண! போரில் தோற்றுப் புறங்காட்டி ஓடுகின்ற எங்களை ஏன் கொல்லுகின்றாய்? நெடுங்காலமாக உள்ள க்ஷத்திரிய தர்மம் உனக்குத் தெரியாதா? தோற்று ஓடுபவர்களைக் கொல்லக் கூடாதென்பதன்றோ அந்தத்

தருமம்! நீ புரியும் செயல் அதற்கு முரண்பட்டதாயன்றோ உள்ளது! தர்மம் அறியாதவன் செய்யும் செயலைத் தருமத்தை நடத்தும் நீ செய்வது நீதியா? என்று தன் ஆற்றாமையைக் காட்டி முறையிட்டான். ஸர்வேசுவரன் மால்யவானுக்கு விடை கூறுகின்றான் - 'நாம் உண்மையான க்ஷத்திரியராயிருந்தாலன்றோ அந்தத் தர்மத்தைச் செய்யவேண்டும்! நீயே எமது உண்மையான ஸ்வரூபத்தைக் குறிப்பிட்டு நாராயண என்றே அழைத்து விட்டாயே : நாராயணன் என்ற சொல்லுக்கு எல்லோரையும் நியமிப்பவன் என்பது முதலான பல அர்த்தங்கள் உண்டே ! நாம் எல்லோரையும் காட்டிலும் விலக்ஷணமான பெருமை உடையராகையால் நாராயணனது கடமையான - 'சரணம் - அடைந்தவரைக் காத்தல் என்னும் தர்மத்தை அநுஷ்டிக் கின்றோம்.' என்ற திருவுள்ளத்தை வெளிப்படுத்திப் பின்னும் கூறுகின்றான்- 'எப்பொழுதும் பிறரைத் துன்புறுத்தும் தன்மையரான அரக்கர் வகுப்பைச் சேர்ந்த உங்களிடம் அஞ்சி எம்மைச் சரணமடைந்த தேவர்களுக்கு நாம் அரக்கரைக் கொல்வதாய் வாக்களித்து அபயம் கொடுத்துவிட்டோம். தேவர்களுக்கு எமது உயிரைக் கொடுத்தாவது எப்பொழுதும் பிரியமானதைச் செய்வது எமது கடமையாகும். ஆதலின் நீங்கள் தோற்றுப் பாதாளலோகம் சென்றாலும் துரத்திக் கொல்வோம். பசுக்களைக் காப்பதற்காகப் புலிகளை இருக்குமிடம் தேடிக் கொல்வதில்லையா? அவ்வாறே நமது இந்தச் செயலும்' என்று அருளிச் செய்தான். இவ்வம்சத்தை விளக்கிய வால்மீகி பகவான் மற்றும் உள்ள க்ஷத்திரிய தர்மங்களைக் காட்டிலும் சரணம் அடைந்தவனைக் காத்தலே பெருமாள் கைக் கொண்ட முக்கியமான கடமையாகும் என்ற விஷயத்தை ஸ்தாபித்தான்.

5.8.2 இராமன் வாலியைக் கொன்றது நீதியா? - இராமன் விடை

வாலி இராமனால் அடிபட்டு உயிர் பிரியும் நிலையில் நேராக எம்பெருமானிடம் எதிரியல்லாத தன்னைக் கொன்றது நியாயமா? என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்கின்றான். மால்யவானுக்குக் கீழே கூறிய விடையையே பெருமாள் திருவுள்ளத்துக் கொண்டு கம்பீரமாக விடை கூறுகின்றான் வாலிக்கு. 'நீ குரங்கு ஜாதியில் பிறந்தவன். பெரியோர்கள் செய்யும் தருமச் செயல் மிகவும் நுணுக்கமானது. அதை அறிவது மிகக் கடினம். உன் தம்பியான சுக்கிரீவ மஹாராஜர் குற்றம் செய்தது உண்மையே.

Scanned with CamScanner

ஆனால் பின்பு தம் செயலுக்கு வருந்தி உன்னைச் சரணமடைய வில்லையா? அப்பொழுதும் அவரைத் துன்புறுத்தினாயே! சரணமடைந்தவனைத் துன்புறுத்துமவனைத் தண்டிப்பது முறையேயாகும். ஆதலின் நீ தண்டனைக்கு ஏற்றவன். உன் தம்பி மஹாராஜர் என்னைச் சரணம் அடைந்தார். அவரைக் காப்பது எம்முடைய பொறுப்பு. ஆதலின் உன்னைத் தண்டித்தோம்!' என்று. இக்கருத்தை மிக அழகாக வெளியிட்டான் இராமபிரான்.

5.8.3 நாட்டில் உள்ள தாவரங்களுக்கும் இராமன் நற்கதி அளித்தல்

ஸ்ரீமத் ராமாயணம் கடைசிக் காண்டமாகிய உத்தரகாண்டத்துடன் பூர்த்தியடைகின்றது. இந்தக் கிரந்தம் முடியுமிடத்தில் வெளியாகும் இராமபிரானது செயலைப் பார்ப்போம். இராமபிரான் அவதார காரியம் முடிந்து தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளும் ஸமயம். நாட்டில் உள்ள மரம் முதலிய தாவரங்கள் தாங்கள் நற்கதி பெறுதற்கு உரிய உபாயம் செய்யத் தகுதி உடையனவா? அல்லவே! ஆயினும் இராமன் முன் வனம் புகுந்த போது அவன் பிரிவைத் தாங்க முடியாமல் மரங்கள் கூட மலர்களுடனும் அரும்புகளுடனும் முளைகளுடனும் வாடி விட்டன என்றால் அவற்றுக்குக் கூட இராமனிடம் உள்ள பற்றை என்ன சொல்வது? அவை தன் நாட்டில் வாழ்ந்ததையும் தன் பிரிவில் அவை பட்ட பாட்டையுமே துணைகொண்டு அவற்றுக்கு நற்கதியளித்த பெருமை விரிவாய்ப் பேசப்பட்டுள்ளது.

5.8.4 ஸ்ரீமத் ராமாயணம் சரணாகதி வேதமாதல் - விளக்கம்

உலகில் ஒரு நூலின் முக்கியக் கருத்து எது என்று அறிய வேண்டுமானால் அதற்கு ஆறு அடையாளங்கள் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டன. அவையாவன - (1) நூலின் தொடக்கத்திலும் முடிவிலும் ஒரு விஷயம் வலியுறுத்திக் கூறப்பட்டிருத்தல். (2) அதே விஷயத்தைப் பன்முறை கூறியிருத்தல் (3) அவ்விஷயம் அபூர்வமாயிருத்தல் (4) அதற்குப் பலனை முக்கியமாய் வைத்துக் கூறியிருத்தல் (5) அதே அம்சத்தை மிகப் புகழ்ந்திருத்தல் (6) சில பொருத்தங்களைச் சொல்லி அதைக் குறிப்பிட்டிருத்தல். இந்த ஸ்ரீமத் ராமாயணத்தின் கருத்தை நிர்ணயிப்பதற்கு வேண்டிய இந்த ஆறு அம்சங்களும் இந்நூலில் சரணாகதியைப் பற்றியனவாகவே பரிபூர்ணமாய் உள்ளன. ஸ்ரீ வால்மீகி பகவான் கண்டு உலகுக்கு

அருளிய ஒரு சரணாகதி வேதமென்றே ஸ்ரீமத் ராமாயணத்தைக் கூறவேண்டும். அதிலும் இந்த அபயப்ரதாநப் பகுதியை அந்த வேதத்தின் ஸகலரஹஸ்யங்களின் ஸாரங்களையும் வெளியிடும் உபநிடதப் பகுதியாகக் கொள்வது மிகவும் பொருத்தமாகும்.

அதிகாரம் 4: ப்ரகரண தாத்பர்ய நிர்ணயம்

(பகுதியின் உட்கருத்தை நிர்ணயித்தல்)

6 ப்ரபத்தியே சிறந்த தர்மம்

கீழ்க் கூறியபடி ஸ்ரீமத் ராமாயணம் சரணாகதி வேதமாகும் போது அதில் அபயப்ரதாநம் செய்யும் பகுதி அதன் உபநிடதமாகுமென்று தீர்ந்தது. சரணாகதி என்பது எல்லாத் தருமங்களினும் மேம்பட்ட தர்மமாகும். பெரியோர்களின் அநுஷ்டாநத்தைக் கொண்டும் இவ்வம்சம் நிலை நாட்டப்பட்டது. ஸ்ரீ விபீஷணாழ்வான் பிரமனிடம் ஓர் அற்புதமான வரத்தைக் கேட்டான். எத்தகைய ஆபத்தில் நான் அகப்பட்டிருக்கும் நிலையிலும் என் மனம் தர்மத்திலேயே ஊன்றியிருக்க வேண்டும் என்பதுவே அந்த வரம். பிரமனும் நீ கேட்டபடி சிறந்த தர்மவானாய் விளங்குவாய்.' என்று வரம் கொடுத்தான். இந்தச் சரணாகதி தர்மத்தை ஸ்ரீ விபீஷண ஆழ்வான் தான் கைக்கொண்டு இராமபிரானிடமே அதைச் செய்தான். பின் ஸமுத்ரத்துக்கு அணை கட்ட வேண்டிய சூழ்நிலையில் அதற்கு இடம் கொடுக்குமாறு ஸமுத்ரராஜனை வேண்டிச் சரணமடையும்படி பெருமாளுக்கும் எடுத்துக் கூறி அங்ஙனமே செய்யுமாறு செய்தான். ஆகவே இந்த வரலாற்றினின்று சரணாகதி சிறந்த தர்மமென்று ஸ்தாபிக்கப் படவில்லையா?

7 ப்ரபந்நர்களுக்கு வரும் தடைகளைப் பெருமாள் நீக்குதல்

ஸ்ரீமத் ராமாயணத்தில் விபீஷண சரணாகதியை விளக்கும் இந்தப் பகுதியில் முதலில் பல ஸர்க்கங்களில் ஸத்துவ குணம் மிக்க பெரியவர்கள் ரஜோ குணமும் தமோகுணமும் நிறைந்துள்ளார்க்கு நன்மையை உபதேசித்தாலும் அவர்களுக்கு எம்பெருமான் விஷயத்தில் ஈடுபாடு வராது என்னுமிடம் சொல்லப்பட்டது. விபீஷணனது நல்லுரை இராவணன் செவியில் ஏறியதா? ஸத்துவ

குணம் தலையெடுக்கப் பெற்றவன் ஸ்ரீ விபீஷணாழ்வான். அவன் வந்து சரணமடைந்தபோது அவனைப் பெருமாள் ஏற்றுக் கொள்ளத் தடை செய்தனர் ஸ்ரீ வாநர வீரர்கள். அவர்கள் தேவர்களின் அவதாரம் தானே! எம்பெருமான் விஷயத்தில் ஈடுபடும் மானிடரைத் தேவர்கள் விலக்குவது நெடுங்காலமாக வந்த முறை. அதன் காரணம் என்ன? தேவர்களுக்கு ஓர் அச்சம். தங்களுக்கு அடங்கிய குடிமக்களாயுள்ள மானிடர் பக்தி கொண்டு எம்பெருமானுடன் சேர்ந்துவிட்டால் தங்கள் கைக்குத் தப்பி விடுவார்களே என்பதுவே அந்த அச்சம். இவ்வாறு தேவர்களால் எந்தத் தடை வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தூய உள்ளத்துடன் வேறு தெய்வத்தை நாடாத உறுதியுடன் வந்து அடைந்தவர்களுக்குப் பெருமான் தானே எல்லாத் தடைகளையும் போக்கி அடிமை கொள்வானென்னுமிடம் கூறப்பட்டது.

8 விபீஷணன் சரணாகதியில் ஐந்து அங்கங்களும் நிறைந்திருத்தல்

ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் பல ஸம்ஹிதைகள் உண்டு. ஸர்வஜ்ஞஸம்ஹிதையென்பது அவற்றுள் ஒன்று. இன்னும் பல ஸம்ஹிதைகள் உண்டு. அவற்றில் ப்ரபத்திக்கு ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜநம், மஹாவிச்வாஸம், கோப்த்ருத்வ வரணம், கார்ப்பண்யம் என்ற ஐந்து அங்கங்கள் விளக்கப்பட்டுள்ளன. விபீஷணன் செய்த சரணாகதியை ஸ்ரீமத் ராமாயணம் விளக்கும் பகுதியில் இந்த ஐந்து அங்கங்களையும் காணலாம்.

(1) ஆநுகூல்ய ஸங்கல்பம் : விபீஷணன் இராவணனுக்கும் அவனைச் சார்ந்த அரக்கருக்கும் பிராட்டியைப் பெருமாளிடம் ஸமர்ப்பித்துத் துன்பமற்று வாழும்படி முதலிலேயே உபதேசம் செய்தான். எம்பெருமானுக்கு அநுகூலமான செயலைச் செய்யும்படி உபதேசித்ததால் ஆநுகூல்ய ஸங்கல்பம் கூறியதாயிற்று.

(2) ப்ராதிகூல்ய வர்ஜநம் : அனுமன் இராமனுக்குத் தூதனாய் இலங்கைக்கு வந்தான். கெட்ட தன்மையனான இராவணன் அனுமானைக் கொல்ல நினைத்தான். பெரிய வீரனான அனுமானை எதிர்க்க முடியாதென்பதை அறியாத இராவணன் அவனுக்குத் தீங்கு இழைக்க முற்பட்டான். அப்பொழுது

விபீஷணன் அங்ஙனம் செய்யாது விலக்கினான். இது பெருமாளுக்குப் பிரதிகூலமான செயலைத் தடுத்ததாகவில்லையா? மேலும் விபீஷணன் தனக்கு இராவணனோடு உள்ள பிறவி உறவையும், தனக்கு உரிமையுள்ள பெருஞ் செல்வத்தையும், புத்திரர் மனைவி முதலிய உறவினரையும் வெறுத்துத் தள்ளிவிட்டு இராமபிரானிடம் வந்து விட்டபடியால் இராமனுக்குத் தொண்டு புரியத் தடையான ப்ரதி கூல அம்சங்களைக் கைவிட்டதாக வில்லையா? இந்த இரண்டு அம்சங்களாலும் ப்ராதிகூல்யவர்ஜநம் என்னும் அங்கம் கூறப்பட்டதாகின்றது.

(3) மஹாவிச்வாஸம்: 'பெருமாள் ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷகன்' என்ற உறுதி விபீஷணனுக்கு இருந்தது. மேலும் தன் தமையன் அபசாரப்பட்ட இடமாகிய இராமனிடத்தில் வருவதற்கு அவன் தம்பியான விபீஷணன் அஞ்ச வேண்டியிருக்கச் சிறிதும் அஞ்சாமல் தன் சொந்த இடமாக நினைத்துத் துணிந்து வந்தான். ஆதலின் தன்னை இராமபிரான் அவசியம் காப்பான் என்ற மஹா விசுவாஸம் காட்டப்பட்டதாகின்றது.

(4) கோப்த்ருத்வ வரணம்: இராமபிரானைச் சரணம் அடைந்தேன் என்கிறான் விபீஷணன். இராமனையே உபாயமாக வரித்து விட்டதாகத்தானே பொருள் தேறும்! உபாயமாக வரித்தல் என்றால் என்ன? எம்பெருமான் தானே பக்தி யோகத்தின் ஸ்தாநத்தில் நின்று பலன் தர வேண்டும் என்று அவனைப் பிரார்த்தித்ததில், அவன் உபாயமாவதென்றால் சேதனனை பக்தி முதலிய வேறு உபாயத்தை வேண்டாது ரக்ஷித்தல் என்று பொருள் படும். ஆதலின் உபாயமாக வரித்தலைக் காட்டும் 'சரணம் அடைந்தேன்' என்ற தொடரில் 'ரக்ஷகனாக நீ இருக்க வேண்டும்' என்று பிரார்த்தித்தல் மட்டுமாகிய கோப்த்ருத்வாவரணம் என்னும் அங்கம் அடங்கியதென்று முடிந்தது.

(5) கார்ப்பண்யம்: இராபிரானைச் சரணமடைதற்கு விபீஷணன் வரும்போது முதலில் இராவணன் பிராட்டியைக் கவர்ந்து சென்று சிறைவைத்த அதிக்கிரமச் செயலை விண்ணப்பிக் கின்றான். பின் கெட்ட தன்மையனான இராவணனுக்குத் தான் நன்மையை உபதேசித்ததற்கு இராவணன் கொடிய சொற்களைக் கூறிப் பழித்துத் தன்னை அடிமையைப் போல நினைத்து அவமதித்ததாயும் ஆகவே அவனுக்குச் செய்த உபதேசம் பாழ்

Scanned with CamScanner

நிலத்துக்கு நீர் இறைத்தது போல் வீணாகி அவமானப் பட்டதாயும் விண்ணப்பிக்கின்றான். விபீஷணன் பேசிய குரலோ மிகப் பெரியதாய்த் தன் அவல நிலையைக் காட்டுவதாய் உள்ளது. அங்குள்ள வானர வீரர்களிடம் தன் ஆத்மாவை உடனே பெருமாளிடம் ஸமர்ப்பிக்கும்படி துரிதப்படுத்துகின்றான். ஸர்வஜ்ஞனாய் ரக்ஷகனான இராமபிரானும் வானர வீரர்களிடம் அவனது பெரிய குரலைக் கேட்கும்போது அவனுக்குப் பெரியதோர் அச்சம் வந்திருப்பதாய்த் தெரிகின்றது என்கின்றான். ஆதலின் இப்படி விபீஷணன் தன் தாழ்வை நினைத்துச் செருக்கு ஒழிந்து இராமபிரான் மனமிரங்கும்படி தாழ்ச்சியைக் காட்டிக் பேசுவதால் கார்ப்பண்யம் குறிப்பிடப்பட்டதாகின்றது. (தம்மிடம் கைம் முதலில்லாமையை நினைத்துக் கொள்ளல் - அதனால் செருக்கு ஒழியப் பெறுதல் - மனம் இரங்கும்படி தாழ்ந்து நிற்றல் - இவையே கார்ப்பண்யம் என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் விளக்கம்)

9 'இராமனைச் சரணமடைந்தேன்' என்பதிலேயே அங்கியும் குறிப்பால் கூறப்படல்

இங்கு 'இராமனைச் சரணம் அடைந்தேன்' என்னுமிடத்திலேயே ஆத்மாவை ஸமர்ப்பித்தல் என்னும் அங்கியும் குறிப்பால் உணர்த்தப்பட்டதாய்க் கொள்ள வேண்டும். எவ்வாறெனில், சரணமடைதல் என்பது பக்தி யோகத்தின் ஸ்தானத்தில் எம்பெருமானை நிறுத்துவதே ஆகும். அப்பொழுது தன் ஆத்மாவையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பித்துக் கொண்டே சரணமடைகின்றான். இந்த ஆத்மாவை ஸமர்ப்பித்தலே அங்கியாகும். அங்கியின் மற்றொரு பகுதியான 'தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தல்' அதிற்காட்டிலும் மிக முக்கியமாகும். இப்படி காக்கும் பொறுப்புடன் ஆத்மாவையும் ஸமர்ப்பித்தல் குறிப்பினால் உணர்த்தப்பட்டது. விபீஷணன் இராமபிரானுக்கு அந்தரங்கர்களான வானர வீரர்களை அழைத்து முன்னிலையாக்கித் தனக்குப் பரிந்து பேசுபவராய் நின்று ஸர்வலோக ரக்ஷகனான இராமபிரானிடம் தன்னை ஸமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றான். ஆகவே முதலில் குறிப்பினால் உணர்த்திய ஆத்மாவை ஸமர்ப்பித்தலாகிய அங்கி இங்குத் தெளிவாய்க் கூறப்பட்டதாகவே ஆகின்றது.

10 விபீஷணன் தன் வரவை அறிவிக்கக் கேட்டல் மட்டும் ப்ரபத்தியாகி விடுமா? - விடை

இங்கு ஒரு கேள்வி : விபீஷணன் வானர வீரர்களைக் குறித்துத் தான் வந்திருப்பதாய் இராமபிரானிடம் அறிவிக்கும் படிதானே வேண்டினான். தன் ஆத்மாவை ஸமர்ப்பிக்கும்படி வேண்டிக் கொண்டதாக எவ்வாறு கூறமுடியும்?

விடை : விபீஷணன் பெருமாளும் இளைய பெருமாளும் வானர வீரர்களும் கூடியிருக்கும் கோஷ்டிக்கு அருகே வந்து மிகவும் உரத்த குரலில் எல்லார் செவியிலும் விழும்படியே வானரர்களைப் பிரார்த்தித்தான். பெருமாள் திருச்செவியிலும் அவன் சொல் விழுந்தேயிருக்குமாதலின் தன் வரவைத் தெரிவிக்கும்படி பிரார்த்தித்ததாய்க் கூறுவது பொருந்தாது. 'நிவேதயத' என்ற சொல்லைச் சொன்னான் விபீஷணன். இதற்கு 'அறிவியுங்கள்' என்னும் பொருள் உள்ளது போல் 'ஸமர்ப்பியுங்கள்' என்ற பொருளும் உண்டு. பாகவதத்திலும் ஜிதந்தையிலும் எம்பெருமானார் அருளிய கத்யத்திலும் நிவேதநம் என்பது ஸமர்ப்பித்தல் என்ற பொருளைக் கூறுவதாய்த் தேறியுள்ளது. ஆதலின் இங்கும் தன் ஆத்மாவைப் பெருமாளிடம் ஸமர்ப்பிக்கும்படி வானரர்களை வேண்டியதாய்க் கூறுவது மிகப் பொருத்தமே.

11 விபீஷணன் செய்தது பரிபூர்ண சரணாகதியே

இப்படி ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலிய கீழ்க்கூறிய ஐந்து அங்கங்களுடன் பரிபூர்ணமான ப்ரபத்தியைச் செய்தான் விபீஷணன். த்வயத்தில் முற்பகுதியில் ப்ரபத்தி விளக்கப் படுகின்றது. தன் ஸ்வரூபத்தையும் அதற்கு வரும் பலனையும் ஸமர்ப்பித்தலாகிய பரிபூர்ணப்ரபத்தியாகும் விபீஷணன் செய்தது. அவன் எந்த நிலையிலும் அறநெறியிலிருந்து சிறிதும் வழுவாமல் நடப்பவன். இத்தகையனான ஸ்ரீ விபீஷணாழ்வான் இராமபிரான் திருவடிகளில் பரிபூர்ணமான சரணாகதியைச் செய்தான்.

Scanned with CamScanner

11.1 விபீஷணன் விரும்பிய பலன் இராம கைங்கர்யமே

இப்படி ஸ்ரீ விபீஷணாழ்வான் செய்த சரணாகதிக்குப் பலனாக அவன் விரும்பியது யாது? என்பதை ஆராய்வோம். உட்கருத்தைக் கவனிக்காமல் மேலெழுந்தவாரியாய் விஷயங்களை முடிவு செய்வதிலேயே சுவை கண்டவர்கள் இலங்கையின் அரசாட்சியை அவன் பலனாக விரும்பியதாகக் கூறுவர். ஸ்ரீ விபீஷணாழ்வானது திருவுள்ளத்தை உற்று நோக்கினால் ரக்ஷகனான பெருமாள் திருவடிகளில் கைங்கர்யம் செய்வதையே பலனாகக் கருதிச் சரணமடைந்தானென்பது நன்கு புலப்படும். அதை விளக்குவோம்- விபீஷணன் இலங்கையை விட்டு வந்து இராமனிடம் சரணமடையும்போது புத்திரர் மனைவி முதலிய மற்ற விஷயங்களில் ஆசையை ஒதுக்கித் தள்ளிவிட்டு வந்ததாய்த் தன் வாயினாலேயே வெளியிடுகின்றான். பின்பு விபீஷணன் பெருமாளை அணுகி அவன் திருவடிகளில் விழும்போதும் இலங்கை- தோழர்கள்- பொருள் முதலிய பல்வகைச் செல்வங்களையும் முழுதும் தள்ளிவிட்டுத் தன் வாழ்வு- அரசுரிமை- போகங்கள் முதலிய எல்லாப் பலன்களும் பெருமாள் திருவடிகளே என்ற உறுதியுடன் அவற்றைப்பற்றி விட்டதாய் விண்ணப்பம் செய்கின்றான். இவற்றினின்று இவன் மற்ற பலன்களை வேண்டாதவன் என்று மிகவும் தெளிவாய்த் தெரியவில்லையா?

11.2 பெருமாளும் அனுமானும் விபீஷணன் விரும்பியது இம்மைச் செல்வமே என்று கூறியதன் கருத்து

இங்கு ஒரு **கேள்வி :** விபீஷணனை ஏற்றுக் கொள்வதற்குச் சாதகமாய் அனுமான் இராமபிரானிடம் சிலவற்றை விண்ணப்பம் செய்யும்போது விபீஷணன் இராச்சியத்தைப் பெறுவதற்காகப் பெருமாளை அண்டினால் பயன் பெறலாமென்ற உறுதியுடன் அங்கு வந்துள்ளதாகக் கூறுகின்றானே! பெருமாளும் சுக்கிரீவன் முதலிய வானர வீரர்களிடம் 'நாம்' விபீஷணன் வகுப்பைச் சேர்ந்தவர்களல்லர். அயலாரான நம்மிடம் விபீஷணன் வந்திருப்பது இராச்சியத்தைப் பெற விருப்பத்தாலேயே' என்று கூறுகின்றான். ஆகவே திருவடி பெருமாள் இருவர் சொல்லாலும் விபீஷணன் இராச்சியத்தை விரும்பியே வந்திருப்பதாய்ப் புலப்படுகின்றதே! என்று.

இதற்கு **ஸமாதாநம்:** சுக்கிரீவனுக்கு இராமனிடம் உள்ள பக்திக்கு அளவில்லை. அதனால் எதிரியின் பக்கத்தினின்று வந்த விபீஷணனால் பெருமாளுக்கு எதாவது தீங்கு விளையுமோ என்று மனம் கலங்கியது சுக்கிரீவனுக்கு. அவன் உள்ளக் கிளர்ச்சியை அடக்கி விபீஷணனிடம் அவனுக்கு நல்லெண்ணம் உண்டாக்குவதற்காகச் சுக்கிரீவனை அவன் போக்கிலேயே செல்லவிட்டுத்தான் அவனைத் திருப்ப வேண்டும். அதற்காகப் பெருமாளும் அவன் கருத்தையே கொண்ட திருவடியும் விபீஷணனை இம்மைச் செல்வத்துக்காக வந்து சரணம் அடைந்தவனாகக் காட்டித்தம் வழியில் திருப்புகின்றனர். அரசர்களின் நீதியை விளக்கும் நீதி சாஸ்திரத்தில் மேன்மேலும் அரசை வளர்த்து ஆட்சி புரிய வேண்டுமென்பதுவும் உள்ள நிலையைக் கொண்டே திருப்தியடைந்துவிடக்கூடாதென்பதுவும் அரசருக்கு முறையாகக் கூறப்பட்டுள்ளது. இங்கும் அந்த முறையேயாகும்.

இரு சாரார் சொல்லில் முரண்பாடு - அது தீரும் வழி: இங்கும் ஒரு **கேள்வி :** திருவடியும் பெருமாளும் விபீஷணாழ்வான் இராச்சியத்தை விரும்பியே வந்து சரணமடைந்ததாகக் கூறி உள்ளனரே! விபீஷணனோ அவன் திருவடிகளில் கைங்கர்யத்தையே விரும்பிச் சரணம் அடைந்ததாகக் கூறுகின்றானே! இருசாரார் சொல்லும் முரண்படுகின்றனவே! என்று. ஸமாதாநம் - இரண்டும் முரண்படும் போது நெருங்கிய தொடர்புடையன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பதுதானே முறை! நேராகச் சரணம் அடைந்தவன் விபீஷணன்தானே! அவன் வாயாலேயே தான் கைங்கர்யத்தை விரும்பி வந்ததாகச் சொல்வதையே ப்ரபலமாக ஏற்றுக் கொள்வதுவே நியாயம்.

11.3 இராம கைங்கர்யத்தையே விரும்பிய விபீஷணனுக்கு இராமன் இலங்கையாட்சியை ஏன் அளித்தான்? - விடை

பின்னும் ஒரு **கேள்வி:** இராமபிரான் சரணமடைந்த விபீஷணனை ஏற்றுக் கொண்ட பின்பு அவனிடம் 'இராவணனைச் சுற்றத்தாருடன் கொன்று உன்னை இராச்சியத்தில் முடி சூட்டக் கடவேன். நான் கூறுவது ஸத்யம்' என்று கூறியுள்ளானே! விபீஷணன் வேறு பயனை நாடாது கைங்கர்யத்தை விரும்பியே வந்தவனாயின் இராமபிரான் அவனுக்கு முடிசூட்டுவதாகக் கூறுவானேன்?

Scanned with CamScanner

இதற்கு ஸமாதாநம்: எம்பெருமானுக்கு ஒரு வழக்கம் உண்டு. மோக்ஷத்துக்கு உபாயத்தைச் செய்த ஒருவனுக்கு எம்பெருமான் மோக்ஷத்தை அவனுக்குக் கொடுப்பதோடு நிற்பதில்லை. அதற்கு முன் சரீர ஆரோக்யம்- செல்வம்- பல போகங்கள் ஆகியவற்றையும் சேதநன் வேண்டாத போதிலும் தன் மகிழ்ச்சியால் எம்பெருமான் தானே கொடுப்பது அவன் ஸ்வபாவம். விபீஷணனிடம் இராமபிரானுக்கு அடக்கமுடியாத அன்பு சுரக்கின்றது. அதற்குப் போக்குவீடாக இலங்கை அரசாட்சியைத் தானே அளித்தான் என்பதுவே உண்மை. இதனால்தான் பெருமான் முடிசூட்டப் போவதாகச் சொல்லிய போது அதை விபீஷணன் இசைந்தோ மறுத்தோ விடை கூறவில்லை. இராம கைங்கர்யத்தை அன்றி வேறு எதையும் விரும்பாத அனுமானைப் போன்ற மனநிலையையே உடையவன் விபீஷணனும். அவனும் இராமபிரானிடம் தானே வானர சேனையில் புகுந்து அரக்கர்களைக் கொல்வதிலும் இலங்கையைத் தகர்ப்பதிலும் உயிர் உள்ளவரை உதவி செய்வதாய்க் கூறி ஸந்தர்ப்பத்துக்கு ஏற்ற அடிமை செய்வதாய் விண்ணப்பம் செய்தான்.

11.4 விபீஷணன் அரசாட்சியை ஏற்றது இராம கைங்கர்யத்திலேயே சேர்தல்

முன்பு விபீஷணன் பிரமனிடம் ஒரு வரம் கேட்டான். அதாவது 'எத்தகைய பெரிய ஆபத்தில் நான் அகப்பட்டிருந்தாலும் தர்மத்தை விட்டு என் மனம் அகலக் கூடாது.' என்பதுவே அந்த வரம். இந்த அற்புத வரத்தைக் கேட்டதில் பிரமனுக்குப் பெரு மகிழ்ச்சி. அவன் கேட்டபடியே தர்மத்தில் ஈடுபட்ட மனவுறுதியைக் கொடுத்துவிட்டுத் தன் மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகச் சாகாத சிரஞ்சீவித் தன்மையையும் அவனுக்குக் கொடுத்தான். அங்ஙனமே பெருமாளுக்குக் கைங்கர்யம் செய்யும் அடிமைப் பேற்றையே வேண்டிக் கேட்ட விபீஷணனிடம் அன்பு மிகுதியால் கைங்கர்யத்துக்கு அவசியமான ஐச்வர்யத்தையும் கொடுத்து அருளினான் இராமபிரான். ஸ்ரீ விபீஷணாழ்வானும் உலகில் தர்மத்தை நிலைநாட்டுவதற்கே அவதரித்த பெருமாள் நியமநத்தை ஏற்று அதன்படி நடத்துவதும் கைங்கர்ய வகுப்பில் சேருவதாதலின் இராச்சியத்தை மறுக்காது ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ஸ்ரீ பரதாழ்வான் பெருமாள் பாதுகையை அரசாக்கி அதன் கட்டளையை முன்னிட்டு நாட்டிலுள்ளாரை ஆளவில்லையா? அவ்வாறே விபீஷணனும் பெருமாள் நியமத்தின்படி அரசுரிமையை ஏற்றான். அதுவும் எதற்காக? அடங்காத துஷ்டர்களாய்த் தீய வழியில் நடந்த அரக்கர்களை நல்வழிப்படுத்தி நடத்துவதற்காகவே.

11.5 பெருமாள் விபீஷணனுக்கு ஆணையிட்டு அரசளித்தல்

உண்மையை ஆராய்ந்தால் விபீஷணன் தன் சொந்தப் பயனுக்காக இராச்சியத்தை ஏற்கவில்லையென்பது புலனாகும். பெருமாள் கட்டளையை மீற முடியுமா? பெருமாளே ஆணையிட்டுக் கட்டளை இட்டான். ஆகவே அரசு புரிவது விபீஷணனுக்கு மறுக்க முடியாததாயிற்று. இவ்வுண்மையை இராமபிரான் தனது அவதார காரியத்தைத் தலைக்கட்டிய பின் தன்னுடைச் சோதிக்கு (பரமபதத்துக்கு) எழுந்தருளும்போது விபீஷணனுக்கு விடை கொடுத்துப் பேசிய திருவாக்கைக் கொண்டு அறியலாம். அந்தத் திருவாக்கு வருமாறு - 'விபீஷண! இப்பொழுது நீ அரக்கர் தலைவனாகிவிட்டாய். உன் வீர்யமும் மிகப் பெரிது. உன் குடிமக்கள் இவ்வுலகில் வாழும் வரையில் நீ இலங்கையின் அரசாட்சியில் இருந்து கொண்டு அவர்களை நீதியுடன் பரிபாலிக்க வேண்டும். நீ எனக்கு உற்ற தோழன். ஆதலின் என் கட்டளையை நீ செய்தாக வேண்டும் என்று ஆணையிட்டுக் கூறுகின்றேன். இதை மறுத்து நீ எதுவும் சொல்லக்கூடாது' என்று மிக்க பிரயாஸத்தோடு அன்றோ விபீஷணனை அரசை ஏற்கும்படி இராமபிரான் செய்தருளினான்! இப்படி விபீஷணன் வேறு எந்தப் பயனையும் நாடாது ராமகைங்கர்யத்திலேயே ஊன்றியவனாதலாலேயே இவனிடம் பெருமகிழ்ச்சி கொண்டு இராமபிரான் தானும் தொழும்படி தன்னிலும் மிகச்சிறந்த ஸ்ரீரங்க விமாநத்தை விபீஷணனிடம் எழுந்தருளச்செய்து கொடுத்தருளினான்.

12 ப்ரபத்தி மோக்ஷமளவாக எல்லாப் பயனையும் தருதல்

இத்துணை ஆராய்ச்சியில் இறங்காமல் மேலெழுந்த வாரியாகவே சிலர் பார்ப்பர். அப்பொழுது விபீஷணன் செல்வத்தை விரும்பியே வந்தவன் என்று முடிவு கட்டுவர். அப்படியே இருந்தாலும் இருக்கட்டும். அதிலும் பாதமில்லை. 'தோழமை கொண்டு வந்தவனை எவ்வாற்றாலும் கைவிடேன். எல்லோருக்கும் அபயம்

Scanned with CamScanner

கொடுத்தே தீருவேன்' என்று பொதுவாகப் பெருமாள் கூறிய திருவாக்கைக் கொண்டு அவன் திருவுள்ளத்தை ஆராய்ந்தால் ப்ரபத்தியென்பது பொதுவாய் மோக்ஷம் வரையில் உள்ள ஸகல பலன்களையும் அளிக்கவல்லது என்பதைத் தெளிவாய் அறிந்து கொள்ளலாம்.

அதிகாரம் 5: சரண்ய சீல ப்ரகாசம்

(ரக்ஷகனான பெருமாள் பண்பை வெளியிடுதல்)

13 பரத்வமும் ஸௌலப்யமும் சேர்ந்தால்தான் பயன் உண்டு

இவ்வாறு தான் விரும்பிய ராமகைங்கர்யமாகிய பலனுக்காகச் சரணமடைந்த ஸ்ரீ விபீஷணாழ்வான் இராமபிரான் எல்லா உலகுக்கும் ரக்ஷகன் என்ற அம்சத்தை அவனுக்கு உள்ள எளிமையைக் (ஸௌலப்யம்) கொண்டும் அவனுடைய மேம்பாட்டைக் கொண்டும் ஸ்தாபிக்கின்றான். பரத்வம்- எல்லோரினும் மேம்பட்ட தன்மை. ஸௌலப்யம்- எல்லோருக்கும் எளியனாயிருத்தல். இவ்விரண்டு தன்மையும் ஓர் இடத்தில் சேர்ந்திருந்தால் தான் உலகுக்குப் பயன்படும். புல் துரும்பு முதலியன மிக எளிதில் கிடைப்பன. அவற்றால் பயன் இல்லாமையால் புறக்கணிக்க உரியன. மேருமலை மிகவும் மேம்பட்டதே. அதை ஆசைப்படுவது இயற்கையே. ஆனால் அது நமக்குக் கிடைக்குமா? அது இருப்பதால் நமக்குப் பயன் ஏதும் இல்லையே! ஆதலின் மேம்பாடு- எளிமை இரண்டும் ஓர் இடத்தில் இருந்தால்தான் நமக்குப் பயன்படும். இப்படி மேம்பாடும் எளிமையும் கூடி நிற்கும் இடமாகிய இராமபிரானிடம் தன்னை ஸமர்ப்பிக்கும்படி அங்குக் கூடியிருந்த வானரர்களிடம் பிரார்த்திக்கின்றான் விபீஷணன்.

வானர வீரர்களே! உங்களுக்குப் பெருமாளிடம் உள்ள உரிமையைப் போல எனக்கும் அவ்வுரிமை உண்டு. அதை மறந்து நீங்கள் என்னைக் கண்டதும் கல்லும் தடியும் எடுத்து அடிக்கும்படியான நிலையில் உள்ளேன். இதற்குக் காரணம் என்ன! ராவணனுக்கு உடன் பிறந்த குற்றம் தானே! பெருங்குற்றம் புரிந்த ராவணனையும் கூடக் காத்துவிட முன்வந்து நிற்பவன்

இராமபிரான் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையே! இவ்வாறு பொதுவாக எல்லோரையும் காக்கும் பெருமாளிடம் ருசி பிறக்காமையால் தீய தன்மையனான ராவணன் தான் பெறவேண்டிய நல்ல பங்கை இழந்து கிடக்கின்றான்.'

14 பரரூபத்தைக் காட்டிலும் அவதார நிலையிலேயே பெருமாள் பெருமை மிக வெளியாதல் - விளக்கம்

'ஸ்ரீ வைகுண்டத்தில் பரவாஸுதேவனாய் விளங்கும் நிலைமையைக் காட்டிலும் இந்த ராமாவதார நிலையில் அவனது பெருமை மிக அதிகமாகப் புலனாகின்றது. சரணம் அடைந்தவனைக் காத்தலென்பது இராமபிரானுக்குப் புதிதாகவா வந்துள்ளது! அவன் அவதரித்த குலத்தில் முன்னோனான ரகுமஹாராஜன் தொடங்கிப் பரம்பரையாய் வரும் குல தர்மமாக அன்றோ உள்ளது! இவனது பெருமையைக் குறிப்பிட்டு இவ்வளவு என்று அளவு காட்டி முடிவு கட்ட முடியுமா? கடலை ஒருவன் தன் கையால் இறைத்து முடித்துவிட நினைப்பது போலன்றோ ஆகும்! எம்பெருமான் தன்னை அண்டியவர்களைக் காப்பதற்காகப் பல்வகை அரக்கரை நலிய முற்பட்டுவிட்டால் அரக்கர்களை உயிருடன் எதிரில் காணமுடியுமா? அவர்கள் வரம் பெற்றுப் பூண் கட்டியிருப்பதாக நினைத்திருந்து என்ன பயன்? ஸூர்யன் உதித்து விட்டால் பின் இருளைக் காணமுடியாதது போலன்றோ ஆகும்!' இவ்வாறு பேசுகின்றான் விபீஷணன்.

14.1 அகம்பநன் புகழ்ந்த இராமன் பெருமைகள்

இந்த அவதார நிலையிலும் எல்லையற்ற பெருமையுடன் இராமன் விளங்குவதை அகம்பன் என்ற அரக்கன் கண்டான். ஜநஸ்தாநத்தில் கரன் முதலிய பெரிய அரக்கர்களெல்லாம் இராமனோடு போர் புரிந்து மடிந்தார்கள். இதில் தப்பிப் பிழைத்தவன் அகம்பநன் என்ற ஓர் அரக்கன். அவன் இராவணனிடம் ஓடிப்போய் ஜநஸ்தாநத்தில் அரக்கர்கள் இராமனால் மடிந்த செய்தியைக் கூறுகின்றான். தான் ஒருவனே பிழைத்து வந்த காரணத்தையும் தெரிவிக்கின்றான். அகம்பநன் பெருமாள் திருமுன்பே நின்று அவனுடைய வீரத்தையும் ஈச்வரத் தன்மையையும் கண்டான். இராமபிரான் பிறர் மனைவியரைக் கண்ணெடுத்தும் பாராதவன். அவனிடமிருந்து தப்பி வருவதற்காகப் பெண்ணுடை உடுத்துத் தன் உருமாறி நின்று

Scanned with CamScanner

சிரமப்பட்டுப் பிழைத்து வந்ததாய் இராவணனிடம் கூறுகின்றான். இப்படி இராமபிரான் பெருமையை அகம்பநன் வாயினால் ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி வெளியிட்டான்

அந்த அகம்பநனே இராவணனிடம் பின்னும் இராமனது பெருமையை வாயாரப் புகழ்கின்றான் - 'அரசே! பெரும் புகழ் படைத்த இராமன் கோபம் கொண்டால் அவனை எதிர்க்க யாராலும் முடியாது. பூர்ணமாய்ப் பெருகி வரும் நதியின் வேகத்தைத் தன் அம்புகளால் தடுத்து விடுவான் இராமன். நட்சத்திரங்கள் கிரகங்கள் நிறைந்த ஆகாயத்தையே கலக்கி விடுவான். கடலில் மூழ்கும் பூமியை உயரத் தூக்கிவிடுவான். கடலின் கரையை உடைத்து உலக முழுதையும் நீரில் மூழ்கச் செய்வான். கடலின் வேகத்தையும் வீசும் காற்றையும் அம்புகளாலேயே தடுத்து விடுவான். இவ்வுலகங்களையெல்லாம் அழித்து உடனேயே மக்களுடன் படைப்பதற்கும் அவனுக்கு ஆற்றல் உண்டு. நீ அவனைப் போரில் வெல்வதற்கு எப்பொழுதும் முடியாது. பாபிகள் ஸ்வர்க்க லோகத்தை அணுகமுடியாதது போல் அரக்கர் அனைவரும் கூடினாலும் அவனை எதிர்க்க முடியாது.' என்று. இங்ஙனம் இராவணனது கோஷ்டியில் அவனுக்கு அந்தரங்கனாய் உள்ள அகம்பனே இராமனது பெருமையை நாடறியப் பறை சாற்றி உள்ளான்.

14.2 இராவணனும் போற்றும் இராமபிரானின் பெருமைகள்

இராவணனைச் சார்ந்தவர்கள் இராமனைப் புகழ்வது இருக்கட்டும். நேர் எதிரியான இராவணன் தானே அவதார நிலையிலும் உள்ள இராமனது பெருமையைத் தன்னையும் மறந்து வாய் வெருவிப் புகழ்ந்துள்ளானே! போரில் இராமனுடைய அம்புகளால் இராவணன் அடிபட்டுச் சளைத்துக் களைத்துக் கலங்கி மயங்கிக் கிடந்த ஸமயம். அந்த ஆபத்தான சூழ்நிலையில் பாகன் தேரைப் போர்க்களத்தினின்று அகற்றி ஓட்டி வெளியே கொண்டு நிறுத்தினான். மயக்கம் தெளிகின்றது இராவணனுக்கு. பாகன் செய்த செயலால் வீரனான தன் பெருமை குலைந்ததாகக் கருதுகின்றான் இராவணன், தன் புகழும் வீரியமும் தொலைந்து விட்டதாக எண்ணிப் பாகனை வெறுத்துப் பேசும் ஸமயம். நாடு முழுதும் புகழப் பெற்ற வீர்யமுடையனாய் எதிரியின் வீரச் செயலை கண்டு மகிழும் தன்மையனான இராமனது கண்முன் தன்னைக் கீழான மனிதனாகச் செய்துவிட்டாதாய்ப் பாகனைப் பழிக்கின்றான். இப்படி இராவணனும் போற்றும் பெருமை உடையன் இராமபிரான்.

14.3 வானரர்கள் புகழ்ந்த இராமபிரானின் பெருமைகள்

கீழே கூறியபடி ஸ்ரீ விபீஷணாழ்வான் பெருமாளுடைய மேம்பாட்டையும் எளிமையையும் சுருக்கமாய் வெளியிட்டதையே மற்ற வானர வீரர்களும் வெளியிட்டுள்ளனர். விபீஷணன் வானரர்களை முன்னிட்டுக் கொண்டு பெருமாளிடம் சரணமடைவதாக விண்ணப்பித்து ஆகாயத்திலேயே நிற்கின்றான். அவனை ஏற்றுக் கொள்வதைப் பற்றித் தங்கள் கருத்துக்களை வெளியிடுமாறு இராமபிரான் வானரர்களைக் கேட்கின்றான். அப்பொழுது வானர வீரர்கள் விண்ணப்பிக்கின்றனர்- 'ரகுகுலத்தில் அவதரித்த பெருமானே! மூவுலகிலும் நீ அறியாத விஷயம் சிறிதும் இல்லை. ஆயினும் எங்களிடம் உள்ள நட்பின் மிகுதியால் எங்கள் கருத்தையும் கேட்கின்றாய். இதனால் உன் பெருமை மேலும் பெருகுகின்றது' என்று அவனது மேன்மையையும் எளிமையையும் சேர்த்துப் புகழ்ந்தனர்.

இவ்விஷயத்தையே வானரர்கள் பின்னும் விரிவாய்க் கூறுகின்றனர் - 'எம்பெருமானே! உன் குணங்களில் சிலவற்றை மேலே விண்ணப்பிக்கப் போகின்றோம். அக்குணங்கள் உன் ஸ்வரூபத்தைச் சார்ந்திருப்பதால் அக்குணங்களுக்கு ஒரு தனிச் சிறப்பு வருகின்றது. இப்படி விலக்ஷணமானது உன் ஸ்வரூபம். பொன்னாலேயே ஆகியது ஒரு தாமரைப்பூ. அதற்கு மணமும் சேர்ந்துவிடுமாயின் பூவுக்கு எத்தகைய பெருமை! ஸாதாரண மலருக்குள்ள வாஸனையைக் காட்டிலும் பொற்றாமரையின் வாஸனைக்கு இருப்பிடத்தின் பெருமையாலும் சிறப்பு உண்டன்றோ அவ்வாறே திருக்குணங்கள் உன் ஸ்வரூபத்தை அண்டியிருப்பதால் தாம் பெருமையடைகின்றன.

இக்கருத்தையே ஸ்ரீகூரத்தாழ்வான் தமது வரதராஜஸ்தவத்தில் 11வது சுலோகத்தால் வெளியிட்டுள்ளார் - 'பேரருளாளனே! உலகில் ஒரு வஸ்துவில் நற்குணங்கள் இருந்தால் அந்த வஸ்து சிறப்படையுமென்பது வழக்கு. உன்னிடம் இது மாறுபட்டுள்ளது. ஸத்யம் ஜ்ஞாநம் முதலிய குணங்கள் உன்னிடம் சேர்ந்திருப்பதால்

Scanned with CamScanner

தாங்கள் பெருமையடைகின்றன என்று சுருதிகளே நிர்ணயம் செய்தன. ' என்று.

வானரர்கள் இராமன் குணங்களை வாயாரப் புகழ்தல்: வானரர்கள் புகழ்கின்றனர் - 'இராமபிரானே! நீ எல்லாவுலகுக்கும் ரக்ஷகன். சரணம் அடைந்தவனைக் காப்பதென்ற விரதம் கொண்டுள்ளாய். அந்த விரதத்தை இராவணன் வரையில் கூட நீ செல்லவிட முற்பட்டிருக்கும் போது நீ கைவிடுவதற்கு யார் உளர்? இந்த உன் விரதத்துக்கு யாராவது தடை செய்ய முற்பட்டால் அவர்கள் நேரான எதிரிகளாயின் ஒருகாலும் பழுதாகாத அம்புகளைக் கொண்டு அவர்களை வென்று விடுகின்றாய். தடை செய்பவர் உனக்கு அநுகூலர்களாயின் அவர்கள் வாதத்துக்கு ஏற்ற ஸமாதாநம் சொல்லி அவர்களின் வாயை அடைத்துவிடுகின்றாய். இப்படி அவரவர்க்கு ஏற்ற முறையில் நடந்து வெற்றி கொள்ளும் வீரம் உலகில் வேறு ஒருவருக்கு உண்டோ ? இப்படி அடைக்கலம் புகுந்தவரைக் காக்கும் தர்மத்தில் நிலையுடையனாய் நீ ஒருவனே உள்ளாய். அண்டியவர்களுக்காக நீ செய்யும் வீரச் செயலை உன் எதிரிகளால் தடுக்க முடியுமோ? அல்லது உன்பால் உள்ள அன்பின் மிகுதியால் உனக்கு அநுகூலராயிருப்பவரே புதியாய் வந்து அண்டியவர்களிடம் ஏதாவது குற்றம் கூறி நீ காப்பதைத் தடுக்க முடியுமோ? நீயோ அனைத்தையும் அறிந்தவன். புத்திக்கு எட்டு அங்கங்கள் கூறுவார்களே! அவையாவன:- (1) விஷயத்தை மனத்தில் வாங்குகை. (2) மனத்தில் தரிக்கை (3) மறுபடி நினைக்கை . (4) பிறருக்கு எடுத்துக் கூறுகை. (5) பிறர் கூறாத விஷயங்களையும் அறிகை. (6) பிறர் கூறுவதில் வேண்டாத சிலவற்றைத் தள்ளுகை. (7) விஷயங்களைத் தெளிவாய் அறிகை. (8) உண்மையான அர்த்தங்களை அறிகை : என்பன. இவை அனைத்ததையும் உடையது உன் அறிவு. அதைக் கொண்டு நீ நன்கு ஆராய்ந்து செய்தருளும் காரியங்களுக்கு எங்கள் கருத்தையும் கேட்பது அவசியம்தானா? முன்பே அறிவால் மிகப் பெரியரான வஸிஷ்டர் முதலியவர்கள் பக்கல் நீ கேட்டருளிய அர்த்தங்களில். உரிய காலத்துக்கு உனக்குப் பயன்படாதது எதாவது உண்டா ? அவர்களிடமும் நீ உபதேசம் பெற்றது எதற்காக? உனக்குத் தெரியாததை அவர்கள் கூறிவிட்டார்களோ? 'ராமனுக்கும் ஆசார்யர்கள்' என்று அவர்களுக்கு நாட்டார் பெருமை கொடுக்க வேண்டும் என்ற திருவுள்ளத்தால் தானே அவர்களுக்குச்

சிஷ்யனாய்ப் பாவனை செய்து அவர்களிடம் கேட்டருளினாய்! அண்டியவன் ஒரு சிறு செயல் புரிந்து விட்டால் அதை மிகப் பெரிதாகக் கொண்டு மகிழ்பவனல்லனோ நீ அவன் நூற்றுக் கணக்கான அபசாரங்களைச் செய்தாலும் நீ அதைத் திருவுள்ளத்தில் கொள்வதேயில்லையே! எத்தகைய உதாரமான மனப்பாங்கு உனக்கு! எத்தகைய நன்றியறிவு! எம்பெருமானே! உன்னையும் உன்னைச் சேர்ந்த அனைத்தையும் உன்னை அண்டியவர்களான நாங்கள் இட்ட வழக்காகவல்லவோ வைத்திருக்கின்றாய்! உனக்கு விபீஷணனிடத்திலும் தாட்சிண்யம். எதிர்வாதம் செய்யும் எங்களிடமும் தாட்சிண்யம். அதற்கு வசப்பட்டே நிற்கின்றாய். உன் திருவுள்ளத்தாலே அவனை ஏற்றுக் கொள்வதாக முடிவு செய்துவிட்டாய். ஆயினும் சஞ்சல மனத்துக்குப் பெயர் பெற்ற வானரர்களான எங்கள் அங்கீகாரத்தையும் பெற்றுச் செய்தருள்வதாகக் காட்டவே எங்கள் கருத்தையும் கேட்டருள்கின்றாய்.

15 விபீஷணனைக் கைக்கொள்ள வானரர்களின் ஆக்ஷேபம்- அனுமான் மட்டும் இசைதல்

இவ்வாறு வானரவீரர்கள் பெருமாளைக் கொண்டாடினார்கள். ஆயினும் அங்கதன் சரபன் ஜாம்பவான் முதலிய தலைவர்களுக்குக் கலக்கம் தெளியவில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்கு இராமபிரானிடம் உள்ள அன்பு தானே! அவர்கள் விபீஷணனை ஏற்றுக்கொள்வதை விரைவில் இசையவில்லை. அதற்குச் சில போலிக் காரணங்களை உண்மையான காரணங்களாகக் காட்டிப் பேசி விபீஷணனை ஏற்கலாகாதென்று மறுத்தனர். அந்தக் கோஷ்டியில் உண்மைப் பொருளை அறிந்தவனாய்ச் சிறந்த மந்திரியாயுள்ளவன் அனுமான் ஒருவனே. அவன் மற்றவர்கள் கூறிய போலிக் காரணங்களையெல்லாம் எடுத்து அலசி அவற்றில் உள்ள தீமைகளைக் கூறி விபீஷணனிடம் குற்றம் சிறிதும் இன்றி நற்குணங்களே நிறைந்திருப்பதை நன்கு ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதாய்க் கூறி அவன் ஏற்றுக் கொள்ள மிகவும் உரியனென்று விண்ணப்பம் செய்தான்.

அனுமானுடைய வார்த்தையைக் கேட்ட பெருமாளுக்குத் திருவுள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குகின்றது. சரணம் அடைந்த விபீஷணனை ஹிம்ஸிக்கவும் வேண்டுமென்று வாதாடிய

Scanned with CamScanner

கூட்டத்தில் அவனை ஏற்றுக் கொள்ளச் சொல்லும் ஒருவனைப் பெற்றதனால் உண்டானது பெருமானின் அந்த மகிழ்ச்சி. பின் எம்பெருமான் தன் திருவுள்ளத்தில் யாராலும் அசைக்க முடியாமல் இருந்த தன் கொள்கையை அக்கூட்டத்துக்கு அருளிச் செய்யத் தொடங்குகின்றான்.

இப்பொழுது பெருமாள் அருளிச் செய்யப்போகின்ற தன் கொள்கை அந்தக் கோஷ்டியில் உள்ள எல்லோருக்கும் இஷ்டமானதாய் அன்றி மறுக்கக் கூடியதே. அங்கதன் முதலியவர்களின் கொள்கை 'விபீஷணன் குற்றமுடையவ். ஆதலின் அவனைப் பற்றி ஸந்தேஹம் கொள்ளவேண்டியதே' என்பது. அனுமானது கருத்தோ 'விபீஷணன் குற்றமற்றவன். ஆதலின் பெருமாள் ஏற்றுக்கொள்ள உரியன்' என்பது. இந்த இருசாரார் கொள்கைக்கும் ஓர் அம்சத்தில் முரண்பட்டும் ஓர் அம்சத்தில் தழுவியும் ஓர் அபூர்வமான முடிவைப் பெருமாள் வெளியிடப் போகின்றான். அதாவது விபீஷணன் குற்றம் உடையனேயாகிலும் சரணமடைந்தவனென்று பெயரிட்டுக் கொண்டு வந்தவனாதலின் ஏற்றுக்கொள்ள உரியனே. என்பது. இப்படி இராமபிரான் இருசாராரின் கொள்கைகளையும் பாதியளவுக்கு ஏற்று ஸமரஸம் செய்தாலும் அவ்விருசாராரும் அப்படியே ஏற்கமாட்டார்கள்.

வானரர்களை வேண்டல் : எம்பெருமான் அருளிச் செய்யப் போகும் இந்த முடிவு கீழே கூறியபடி அனுமானுள்பட வானர வீரர்கள் அனைவருடைய கருத்துக்கும் முரண்பட்டதாகும். குற்றம் உடையவன் என்ற சொல்லை அனுமான் பொறுக்கமாட்டான். ஏற்றுக்கொள்ள உரியன் என்ற முடிவை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆதலின் தனது இந்த முடிவை அனைவரும் புறக்கணித்தே தீருவார்கள் என்று திருவுள்ளம் கொண்டு இராமபிரான் முதலில் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தருள்கின்றான்- 'தோழர்களே! விபீஷணனைப் பற்றி நானும் என் கருத்தைக் கூற விரும்புகின்றேன். அதைச் செயல் படுத்துவதைப் பற்றிப் பின்பு ஆலோசித்துக் கொள்வோம். நீங்கள் என் நன்மையில் சிரத்தை கொண்டவர்கள். என்னிடம் உங்களுக்கு உள்ள அன்பின் மிகுதியாலே நான் சொல்லும் வார்த்தையை அநாதரித்துவிடாமல் முதலில் நீங்கள் பொறுமையுடன் செவி சாய்க்க வேண்டும். விபீஷணன் சரணமடைந்ததாகக் கூறிய

வார்த்தையைப் படாதபாடு படுத்தியது போல் என் சொல்லையும் ஆக்கக் கூடாது' என்று வானரர்களிடம் யாசித்து அருள்கின்றான் இராமபிரான்.

16 இராமன் தனது உறுதியான கொள்கையைச் சுருங்கக் கூறல்

இப்படி வானரர் முதலிய நல்லோர்கள் தான் சொல்வதைச் செவியில் கொள்ளும்படி இராமபிரான் அவர்களை வேண்டிக் கொண்டு உலகில் ஜநங்கள் தம் ஸ்வபாவத்தைச் சொல்லிக் கொள்வது போல் தன் உறுதியான கொள்கையையே சிறந்த காரணங்களைக் காட்டிச் சுருங்க அருளிச்செய்கின்றான் - 'ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலிய அங்கங்களுடன் தன்னைக் காக்கும் பொறுப்பை என்னிடம் ஸமர்ப்பித்தலாகிய பரந்யாஸத்தைச் செய்தவனை எப்படியும் கைவிடமாட்டேன். மேலும் என்னிடம் உண்மையில் நல்லெண்ணம் கொள்ளாமல் எனக்கு நண்பனாக நடித்து வந்தாலும் சரணமடைந்தவன் என்ற பெயரில் வந்தாலும் போதும். அவனை எவ்வகையிலும் நான் கைவிட மாட்டேன்' என்கின்றான்.

17 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்' சுலோக விவரணம்

விபீஷணன் தன் இருப்பிடம் தேடி வந்ததில் இராமனது மகிழ்ச்சி: பின்னும் பெருமாள் வானரர்களுக்குக் கூறுகின்றான் - 'இந்த விபீஷணன் இராவணனென்னும் முதலையின் வாயில் அகப்பட்டு இங்கு வரமுடியாமல் கடலுக்கு அக்கரையிலேயே நின்று என்னைச் சரணமடைந்துவிட்டதாய்க் கூறியிருந்தானாகில் என் கதி என்ன? நான் மிக்க விரைவுடனே கருடனது வேகத்தில் அக்கரைக்கே ஓடியிருக்கவேண்டுமே! அந்தச் சிரமத்தை எனக்கு வைக்காமல் ஒரு நொண்டி இருந்த இடத்தில் அவன் தலையில் கங்காநதி தானாக வந்து விழுவது போல நான் இருக்குமிடத்திற்கே அவன் வந்து சேர்ந்திருக்கின்றானே! இவனை நான் எவ்வாறு கைவிடமுடியும்?'

விபீஷணன் மிக நேரிய முறையில் வந்தமை - விளக்கம் :

'மேலும் இந்த விபீஷணன் மிகச் சிறந்த முறையோடன்றோ வந்துள்ளான் முதலில் விலக்கவேண்டியவை எவை கைக் கொள்ள வேண்டியன எவை என்பதை ஆராய்ந்து முடிவுசெய்து கொண்டுள்ளான். புத்திரர், மனைவியர், இலங்கை, நண்பர்கள்,

Scanned with CamScanner

செல்வம் இவையெல்லாம் கழிக்கவேண்டுவன வென்று கண்டு உதறித் தள்ளினான். தனக்கு அரசு, உயிர்வாழ்வு, ஸுகம் எல்லாம் எனக்குத் தொண்டு புரிவதே என்ற உறுதியே கைக்கொள்ள உரியதென்று அதை ஏற்றுக் கொண்டான். என்னைச் சரணம் அடைந்ததாக வாயினால் சொல்வதே போதும் என்று அச் சொல்லைப் பற்றிக் கொண்டான். நான் ஏற்றுக்கொள்வேனா என்ற ஐயமும் நீங்கி வந்துள்ளான். அதிலும் என்னிடம் நேராக வராமல் முறையோடு எனக்கு அந்தரங்கரான உங்களைப் புருஷகாரமாக (சிபாரிசு செய்பவராக) முன்னிட்டுக் கொண்டன்றோ வந்துள்ளான்!'

விபீஷணனை ஏற்பதில் இராமனது பயங்கரமான உறுதி - சுருதியும் துணை: 'இந்நிலையில் இவனைக் கைவிடுதா-கைக் கொள்வதா என்ற ஆராய்ச்சி எதற்குப் பயன்படும்? சரணம் அடைந்தேன் என்ற சொல்லை என் செவியில் போட்ட அவனைக் கைவிடுதற்கு எனக்குச் சக்தி ஏது? ஆகவே என் முடிவைக் கூறுகின்றேன். கேளுங்கள். என்னைச் சரணமடைந்த இவனிடம் நற்குணங்களே இல்லையாயினும், இவனிடம் குற்றங்களே மிகுத்திருந்த போதிலும், இவ்னைக் கைக்கொள்வதில் என்னிடம் அன்பு மிக்க உங்களுக்குச் சம்மதியில்லையாயினும், இவனைக் கைக் கொண்டால் பின்பு இம்மையிலும் மறுமையிலும் துன்பம் தரவல்ல ஆயிரக்கணக்கான பாபங்கள் எனக்கு வருவதாயினும் எவ்வகையிலும் நான் இவனைக் கைவிடமாட்டேன். இதுவே என் முடிவான கருத்து' என்று அருளிச் செய்துள்ளான். இதைச்சுருதியும் விளக்குகின்றது-'உனக்கு அடியன் நான். உன் பொறுப்பாகி விட்டேன்.' என்று ஒருகால் சொல்லி ஸம்பந்தத்தை உண்டாக்கிக் கொண்டுவிட்டால் ஒரு காலத்திலும் இவனை ஸர்வேச்வரன் கைவிட மாட்டான் என்று அந்தச் சுருதியின் பொருள்.

குற்றவாளனும் சரணம் அடைந்தால் அவனைக் கைவிட முடியாமை: இப்படி இராமபிரான் ஒரு வகையாலும் சரணமடைந்தவனைக் கைவிட முடியாத தன் ஸ்வபாவத்தை வானர வீரர்களுக்கு விளக்கிக் கூறினான். பெருமாள் தான் விபீஷணனை ஏற்றுக் கொள்வதற்கு அவர்களின் கருத்தைக் கேட்டபோது அவர்கள் அவனை ஏற்காது கைவிடுவதே நியாயம் என்பதற்குக் காரணமாக அவனிடம் சில குற்றங்களை விண்ணப்பம் செய்தனர். பெருமாள் குற்றமுள்ளவனைக் கைவிடுதற்கும் ஒரு வரையறை உண்டென்று விளக்குகின்றான். அதாவது-ஒருவன் குற்றவாளனாயிருந்தாலும் சரணம் அடையாதவனாய் இருந்தால்தான் அவனைக் கைவிடலாம் என்ற வரையறையைக் காட்டுகின்றான் இராமபிரான். விபீஷணனிடம் குற்றங்கள் இருப்பினும் சரணமடைந்தவனாதலின் அவை அவனை ஏற்பதைத் தடை செய்யமாட்டா என்ற கருத்தைத் திருவுள்ளத்துக் கொண்டு வானரர்களின் திருப்திக்காக விபீஷணனிடம் அவர்கள் எழுப்பிய குற்றங்கள் இருப்பனவாக வைத்துப் பேசுகின்றான். 'வானர வீரர்களே! விபீஷணனிடம் நீங்கள் கூறிய குற்றம் இருப்பதாகவே வைத்துக் கொள்கின்றேன். அல்லது ஒருகால் அவனிடம் உண்மையிலேயே அக்குற்றம் இருந்தாலும் இருக்கலாம். அல்லது அவனிடம் குற்றம் இருக்கவேண்டுமென்றே விரும்புகின்றேன். ஏனெனில் அதனால் எனக்கு உள்ள ஒரு தனிப்பெருமை வெளியாகும். அதாவது - சரணமடைந்ததாகச் சொல்லியதை மட்டும் கொண்டு குற்றம் உடையனையும் நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன் என்று இந்தச் சிறந்த என் குணத்தைச் சொல்லி உலகினர்கள் புகழ்வார்களே! மேலும் குற்றம் என்று பொதுவாகத் தான் கூறினேன். ஆகவே நீங்கள் வெளியிட்ட குற்றங்கள் விபீஷணனிடம் இருப்பினும் நீங்கள் குறிப்பிடாத பல்வேறு குற்றங்களும் அவனிடம் இருப்பினும் அவனைக் கைவிடமுடியாது. இராவணன் முதலியவர்களிடத்தில் உள்ள பல்வேறு குற்றங்களே விபீஷணனிடம் இருப்பினும் இவனைக் கைவிட முடியாது! என்கிறான் இராமபிரான் வானரர்களிடம்.

இராவணனும் சரணமடைந்தால் அவனை ஏற்றுக் கொள்ள இராமனது உறுதி : வானரர்கள் வெளியிட்ட குற்றங்களைக் கொண்டு ஒருவனைக் கைவிடுவதென்பது சரணம் அடைந்தவனைத் தவிர மற்றவர்கள் விஷயத்தில்தான் பொருந்தும் என்பது ஸர்வலோக ரக்ஷகனான பெருமாள் திருவுள்ளம். இந்த அம்சத்தை நேரிடையாக அபராதம் செய்த இராவணன் தானே வந்து சரணமடைந்தாலும் அபயமளிப்பதாகப் பெருமாள் கூறியதிலிருந்து உணரலாம். மேலும் இராமபிரான் இராவணனிடமே நேரில் 'பிராட்டியை என்னிடம் சேர்த்து நீ என்னைச் சரணமடையாவிடில் என் கூரிய அம்புகளால் இவ்வுலகத்திலே அரக்கர் பூண்டே இல்லாமல் அழித்து விடுவேன்.' என்றான்.

Scanned with CamScanner

இதனின்று எத்தனையேனும் குற்றவாளனாகிலும் சரணமடைந்து விட்டால் காக்கப் படுவது உறுதியென்பது விளங்கவில்லையா?

சரணம் அடைந்தவனிடம் பெருமாள் பிராட்டி இருவரின் **மனப்பாங்கு: இங்கு ஒரு கேள்வி :** பெருமாள் எனக்கு நண்பன் என்ற முறையில் வந்தவனைக் கைவிட மாட்டேனென்று கூறுகின்றானே! சரணமடைய வந்தவனைக் கைவிட மாட்டேன் என்றன்றோ கூற வேண்டும்!' என்று. விடை: இது பெருமாளுக்கு உள்ள பெருஞ்சிறப்பு. தன்னை அண்டியவனைத் தனக்குச் சமமாய்க் கருதியருளும் பெருந்தன்மையுடையன் இராமபிரான். தன்னை அடைபவனைச் சொல்லும்போது சரணமடையும்படி அவனுக்குத் தாழ்வைக் காட்டிக் கூறமுடியாதவனாய்த் தனக்குச் சமமான நிலையில் அவனை வைத்துத் தனக்கு நண்பனாக வந்தாலே போதும் என்ற உயர்ந்த திருவுள்ளப் பாங்கினால் அவ்வாறு கூறியருளினான். உண்மையில் இராமபிரான் கருத்து அங்கங்களுடன் சரணாகதி செய்தலை விரும்பியதேயாகும். பிராட்டியும் பெருமாளைப் போலவே விசாலமான மனம் படைத்தவள். அவளும் இராவணனைப் பார்த்து நல்லுரை கூறும்போது உபதேசிப்பதாவது - இராமபிரான் தர்மங்களை நன்கு அறிந்தவன், சரணமடைந்தவனின் குற்றங்களைப் புறக்கணித்து அன்பு கொள்ளுமவன் என்று கூறிப் பின் நீ உயிர் வாழ விரும்பினால் இராமபிரானுடன் நட்புக் கொண்டால் போதும். என்று சரணமடையும்படி சொல்ல வேண்டிய இடத்தில் நட்புக் கொண்டாலே போதும் என்கிறாள். பிராட்டிக்கும் உட்கருத்து அவன் சரணமடைதலைக் கூறுதலேயாகும். இதனின்று பெருமாள் பிராட்டி இருவருக்கும் உள்ள விசாலமான மனப்பாங்கு புலப்படவில்லையா? இராமனது திருவுள்ளம் ஒரு சிறு செயலைச் செய்தாலே அவனைக் காப்பதற்கு அதுவே போதுமென்பது. இதை அடியொற்றியே ஆழ்வான் தாம் அருளிச் செய்த அதிமாநுஷஸ்தவத்தின் இறுதியில் எம்பெருமானிடம் விண்ணப்பிக்கின்றார் - 'அடியேன் மிக்க பாபங்களைச் செய்தவன் என்பது உண்மையே. ஆனால் சரணமடைந்ததாகச் சொல்லி விட்டேன். ஸர்வேசுவரனான நீ இனியும் என்னைக் காக்காது புறக்கணிப்பது உனக்கு ஏற்றதன்று. உன்னிடம் ஞானம் சக்தி கருணை ஆகிய குணங்கள் என் விஷயத்தில் பயன்படுவனவாய் நிற்க என் பாபம் தலையெடுக்க முடியுமா?' என்று.

விபீஷணனை ஏற்றால் பெரியோர் பழி வருமே! - வானரர்களின் ஐயம் - இராமனது விடை: இப்படி கீழே கூறியவாறு பல காரணங்களைக் காட்டி விபீஷணனைக் கைக்கொண்டே தீருவதாக இராமபிரான் கூறியபின் வானர வீரர்களுக்கு ஒரு சங்கை எழுகின்றது - 'இராமபிரான் மிகவும் குளிர்ந்த தன்மை உடையன். ஆதலின் துஷ்டனையும் கைக் கொள்ளுகின்றான். இதைக் கண்டு நாட்டில் உள்ள பெரியோர்கள் பழிக்கமாட்டார்களா?' என்று. இதற்கும் விடை அருளிச் செய்கின்றான் இராமபிரான் - 'வானர வீரர்களே! நான் இப்பொழுது சரணம் அடைந்த விபீஷணனை அவனிடம் உள்ள குற்றங்களைப் பொருட்படுத்தாமல் ஏற்றுக் கொண்டால் என் செயலைப் பெரியோர்கள் பழிக்க மாட்டார்கள் என்பது மட்டுமன்று. என் செயலைக் கண்டு என்னைக் கொண்டாடியும் தீருவார்கள். 'கொல்லப்பட உரியனானாலும் சரணமடைந்து விட்டானாகில் அவனைக் கொல்ல இடம் கொடுக்கலாகாது' என்று சுருதியும் ஓதுகின்றது. இந்தச் சுருதியின் கருத்தை நன்கு உணர்ந்து அதன்படியே செய்து வருபவர்கள் வஸிஷ்ட பகவான் - விசுவாமித்ர பகவான் முதலிய மஹான்கள். அவர்கள் எத்தனையோ தர்மங்களை எடுத்து எனக்கு உபதேசிப்பவர்கள். அவர்கள் விபீஷணனை நான் ஏற்றுக்கொண்ட செயலைக் கேட்டு மகிழ்ந்து 'நாம் இராமனுக்குச் செய்த தர்மங்களின் உபதேசம் நன்றாய்ப் பலித்துள்ளது' என்று நிச்சமாய்க் கொண்டாடுவார்கள். இப்படி இருக்க உங்கள் வார்த்தையைக் கேட்டு விபீஷணனை நான் கைவிட்டால்தான் அப்பெரியோர்கள் என்னைப் பழிப்பார்கள். நீங்கள் இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்குக் காரியம் எதுவும் விபரீதமாய் நடந்து விடாமைக்கு நீங்கள் எனக்கு நீதி சொல்ல முன் வந்துள்ளீர்கள். என்னிடம் பரிவும் பெருந்தன்மையும் உங்களுக்கு நிரம்பியிருக் கின்றன. இத்தகைய நீங்கள் வஸிஷ்டர்-விச்வாமித்ரர் - ப்ருஹஸ்பதி - ரகு - சிபி முதலிய பெரியோர்களின் நெஞ்சம் நோவு படாமலிருக்கவும், எனக்கு உள்ள நல்ல தன்மை குலைந்து - போகாமலிருக்கவும் என் செயலை நீங்கள் ஏற்று என்னை உளனாக்கிப் பெறப் பாருங்கள்' என்ற திருவுள்ளத்தை வானரர்களுக்கு வெளியிட்டருளினான் இராமபிரான்.

Scanned with CamScanner

அதிகாரம் 6: சரண்ய வைபவப்ரகாசம்

(ரக்ஷகனான பெருமாள் மேம்பாட்டை வெளியிடுவது)

18 சுக்கிரீவனுடைய ஆக்ஷேபத்திற்கு இராமன் விடை

இவ்வாறு பெருமாள் மிக்க உறுதியுடன் அருளிச் செய்த வார்த்தையை வாநரர்களின் மஹாராஜனான ஸுக்ரீவன் கேட்டான். அவன் மனம் இராமபிரான் சொல்லாலும் தெளியவில்லை. விபீஷணன் ஆழமான உட்கருத்துடன் வஞ்சனையாக வந்திருப்பதாய் எண்ணுகின்றான். அவன் இந்தக் கோஷ்டியில் வந்து புகுந்துவிட்டால் என்ன அனர்த்தம் வருமோவென்று அஞ்சுகின்றான். இந்தக் கலக்கம் சுக்கிரீவனுக்கு வருவதற்குக் காரணம், இராமபிரானிடம் அவன் வைத்திருக்கும் அன்பின் மிகுதியேயாகும். விபீஷணனிடம் உள்ளதாகத் தான் கருதும் கெட்ட தன்மையை எடுத்துக் காட்டுகின்றான் இராமனுக்கு. அதாவது - 'இத்தனை காலமாய்த் தன் ஸஹோதரனான இராவணன் போஷணையில் வளர்ந்துவிட்டு இப்பொழுது இராவணனுக்கு நம்மோடு எதிர்த்துப் போர் செய்ய வேண்டிய ஆபத்தான சூழ்நிலை வந்திருக்கும்போது அவனை உதறிவிட்டு விபீஷணன் இங்கு வந்துவிட்டானே! இத்தகைய துணிவுடன் அவனைவிட்டு வந்த இவன் யாரைத் தான் விட்டு விலகமாட்டான்? இப்பொழுது நம்மிடம் கூடிவிட்டுப் பின் நம்மை விட்டு விலகி வேறு இடமும் சென்றுவிடக்கூடும்' என்ற காரணத்தை விளக்கிக் கூறிப் பெருமாள் அவனைக் கைக்கொள்ளாது விலக்கப்பார்க்கின்றான் சுக்கிரீவன்.

அதற்கு இராமபிரான் அரச நீதியைத் தழுவிச் சுக்கிரீவனுக்கு ஸமாதாநம் அருளிச் செய்கின்றான். அதாவது - 'மஹாராஜரே! இந்த விஷயத்தில் ஒரு ஸூக்ஷ்மமான அம்சத்தைக் கவனிக்க வேண்டும். ஓர் அரசனுக்கு அவன் பங்காளிகளும் அருகில் உள்ள அரசர்களும் பகைவர்களென்று சொல்லப்படுகின்றனர். அவர்கள் அவனுக்குக் கஷ்டம் வரும் ஸமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்து தீங்கு செய்கின்றனர். ஆதலின் இராவணனால் வரப்போகும் தீங்கை நினைத்து விபீஷணன் அண்ணனைப் பகைத்துக் கொண்டு இங்கு வந்துள்ளான். பகைவன் பக்கமிருந்து வந்த இவனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னீர். நீதி சாஸ்த்ர முறைப்படி இதை ஆராய்ந்து பார்ப்போம். நாம் விபீஷணனுக்குப் பங்காளிகளல்லோம். ஆதலால் விபீஷணன் நம்மிடத்தில் கெட்ட எண்ணம் உள்ளவனல்லன். அவனுக்கு இராவணனிடமிருந்து இராச்சியத்தைப் பறிக்க ஆசை இருக்கிறது. அதற்காக என் உதவியை நாடி வந்துள்ளான். தன் காரியம் நடக்க வேண்டி இருப்பதை நினைத்தாவது எனக்குத் தீங்கு செய்ய மாட்டான். அரக்கர்களிலும் இவ்வளவு ஆலோசனையுடையர் இருப்பார்கள். ஆதலின் துணிந்து இவனைச் சேர்த்துக் கொள்ளலாம். பங்காளிகள் ஒருவருக்கொருவர் களங்கமில்லாமல் சுமுகமாய்க் கூடிப் பழகுவதில்லை. அவர்களுக்குள் கலகம் நேருவது இயற்கை. இவன் இராவணனால் தனக்கு ஆபத்து வருமென்று அறிந்து அஞ்சித் தன்னைக் காத்துக்கொள்ள இங்கு வந்துள்ளான் என்பது இவன் குரலாலேயே தெரிகின்றது. ஆதலால் இவனை ஏற்றுக் கொள்வதே சிறக்கும். உலகில் உடன் பிறந்தவர்கள் எல்லாரும் பரதனைப் போல் ஆவார்களா? என்னைப் போல் தந்தைக்குப் புதல்வன் கடமையைச் செய்பவர் தாம் உண்டோ! உம்மைப் போன்ற தோழர்கள் தாம் கிடைப்பரோ! ஆதலின் உலகில் சகோதரர்களுக்குள் பிணக்கு வருவது இயல்பே! என்று.

இதைக் கேட்டும் சுக்கிரீவன் மனம் தெளியவில்லை. 'பெருமாள் தன்னைச் சரணம் அடைந்தவனுக்கு வசப்பட்டு நடப்பதன் உச்ச நிலையில் உள்ளவன். அதனாலேதான் இவ்வளவு விண்ணப்பம் செய்தும் தன் வார்த்தை பெருமாள் திருவுள்ளத்தில் படவில்லை' என்று நினைக்கின்றான். 'விபீஷணன் செய்த சரணாகதி படுத்தும் பாடு தானே இது' என்று கருதுகின்றான். அப்பொழுது தான் ஒருவன் சரணாகதி செய்தால் போதாதென்று இரண்டு சரணாகதிகளைச் செய்யப் பாரிக்கின்றான். அதற்காக இளைய பெருமாளையும் தன்னோடு கூட்டிக் கொள்கின்றான். இருவரும் பெருமாள் திருவடிகளில் விழுந்து இரண்டு சரணாகதிகளைச் செய்கின்றனர். பின் எம்பெருமான் திருவுள்ளத்தில் தான் கூறுவது நன்றாய் உறைக்க வேண்டுமென்று நினைத்து விண்ணப்பம் செய்கின்றான் - 'அப்பனே! விபீஷணன் நேராக நிற்காமல் மறைவில் இருந்து உனக்குத் தீங்கு செய்வதோடு

மட்டும் நிற்க மாட்டான். உனக்குத் தோழனான எனக்கும் தீங்கு செய்வான். அத்துடனும் நில்லாது உனக்கு வெளியே உலவும் உயிரான இளையபெருமாளையும் ஹிம்ஸை செய்வான். ஆகையால் இந்த விபீஷணன் கொல்லப்பட உரியன்.' என்று.

இந்த வார்த்தையைக் கேட்டான் இராமபிரான். விபீஷணன் - சுக்கிரீவன் இருவரும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட பயனுக்காகச் சரணாகதி செய்துள்ளனர். இவற்றைச் சீர்தூக்கி இராமன் பார்க்கவேண்டியதாயிற்று. சுக்கிரீவன் லக்ஷ்மணனையும் கூட்டிக் கொண்டு செய்த சரணாகதி இராமனாகிய தனக்கு விபீஷணனால் எதாவது தீங்கு வரும் என்ற கலக்கத்தால் வந்ததாகும். விபீஷணன் செய்த சரணாகதியோ இராமபிரான் தன்னை ஆபத்தினின்று காப்பான் என்ற மனத்தெளிவோடு செய்ததாகும். ஆகவே கலக்கத்தோடு சுக்கிரீவன் செய்த சரணாகதியினும் தெளிவோடு விபீஷணன் செய்த சரணாகதி ஒன்றேமிக்க வலிமையுடையதென்று திருவுள்ளம் கொண்டான் இராமபிரான். சுக்கிரீவனுடைய அச்சத்தைப் போக்க விரும்பினான்.

19 இராமபிரான் தன் சக்தியை விளக்கிச் சுக்கிரீவனது அச்சத்தைத் தீர்த்தல்

சுக்கிரீவனைத் தெளிவிக்கின்றான் இராமபிரான் - 'தோழரே! விபீஷணன் நல்லவனா கெட்டவனா என்ற ஆராய்ச்சியில் எதற்காக இறங்க வேண்டும்? அவன் வலிய அரக்கன் என்பது நம்மளவில் ஒரு பொருளாகுமா? எனக்கோ உமக்கோ தம்பியான லக்ஷ்மணனுக்கோ விபீஷணன் சிறிதளவாவது தீங்கு செய்ய இடம் ஏது? அதற்கு அவனுக்குச் சக்திதான் ஏது? நம்முடைய பூந்தோட்டத்தில் திரிவனவாய் வானர சாதியில் பிறந்தது மட்டுமேயன்றிச் சக்தி அற்றவனாயுள்ள சில வானரங்களுக்குக் கூட இந்த விபீஷணன் சிறிதளவும் கேடு செய்ய வல்லனா? இவன் விஷயம் இருக்கட்டும். இன்னும் பிசாசங்கள் - அஸுரர்கள் - யக்ஷர்கள் - பூமியில் உள்ள அரக்கர்கள் எல்லோரும் திரண்டு என்னை எதிர்த்து வந்தாலும் நான் நினைத்துவிட்டால் என் விரல் நுனிக்கு எதிரில் நிற்க முடியுமோ! கைகூப்புதல் ஒன்றுதான் என்னை அடக்கவல்ல ஆயுதமாகும். இதைச் செய்யாதவர் என்னை வெல்ல முடியுமோ?' என்று கூறித் தான் எதையும் செய்யச்

சக்தியுடையவனென்பதை வெளியிட்டுச் சுக்கிரீவனுடைய அச்சத்தைப் போக்கியருள்கின்றான் இராமபிரான்.

பின்னும் கூறுகின்றான் - 'முன்பு வாலியுடன் போர் செய்யும் போது காட்டிய என் பெருமையை வானர அரசாட்சியில் முடிசூட்டிக் கொண்டவுடன் மறந்துவிட்டீரோ? விபீஷணன் கூடச் சரணமடையும்போது 'மஹாத்மா' என்று சொல்லி என் பெருமையை நினைவூட்டினானே அதுவும் உம்முடைய நெஞ்சில் இடம் பெறவில்லை போலிருக்கிறது! என் ஒரு நகத்தின் நுனியால் செயல் புரியத் தொடங்கினாலே எதிரிகள் விரலைக் கவ்வ வேண்டாமா? முன் நரசிங்கனாய் அவதரித்த போது நகங்கள் தாமே திருவாழி - திருச்சங்கு - தண்டு - வாள் - வில் ஆகிய பஞ்சாயுதங்கள் புரியும் செயலைச் செய்து விட்டன' என்று பெருமாள் பெருமிதத்துடன் கூறியருளினான்.

19.1 காப்பதற்குப் பயன்படும் மூன்று குணங்களும் தன்னிடம் இருப்பதைக் கூறி சுக்ரீவன் முதலியோரின் அச்சம் தீர்த்தல்

எம்பெருமான் உலகத்தைக் காத்தருள்வதற்கு மூன்று குணங்கள் முக்கியமாய்ப் பயன்படுவன என்று ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளும் கூரத்தாழ்வான் முதலிய பெரியோர்களின் ஸூக்திகளும் வெளியிடுகின்றன. அக்குணங்களாவன - ஞானம், சக்தி, கருணை என்பன. ஸம்ஹிதைகளும் இக்குணங்களைப் பற்றிச் சுருக்கிக் கூறியிருப்பினும் இவை ரக்ஷகனுக்கு இருப்பனவாதலின் இந்த விபீஷண சரணாகதி கட்டத்திலே வெளியிடப் பட்டனவாகக் கொள்ள வேண்டும். எங்ஙனே யென்னில் - முதலில் வானரர் கருத்தையும் பெருமாள் கேட்கும் போது அவர்கள் 'உனக்குத் தெரியாத ஒன்று மூவுலகிலும் இல்லை' என்று கூறியதால் ஸர்வஜ்ஞனாந்தன்மை புலனாகின்றது. நடுவில் 'எனக்குத் தோழனென்று நடித்து வந்தாலும் கைவிடேன்' என்று பெருமாள் கூறியதால் எல்லையற்ற கருணையுடைமை வெளியாகின்றது. நான் நினைத்தால் விரல் நுனியாலேயே எதிரிகள் அனைவரையும் ஒழித்துவிடுவேன்.' என்று கூறியதால் எதையும் செய்யச் சக்தியுடைமை தோற்றுகின்றது.

இப்படி பெருமாள் தன்னை ஒரு மனிதனாகவே காட்டிக் கொண்டு ராமன் என்ற சொல் வேறு ஒருவனையும் குறிக்காதவாறு

Scanned with CamScanner

செய்து கொண்ட மஹாவீரன் என்று பேர் பெற்ற செருக்கையும் கொள்கின்றான். அதனால் எவனையும் மதியாது பேசுகின்றான். அவ்வாறே அவனிடம் எதையும் செய்யச் சக்தி இருக்கின்றது. அந்தச் சக்தியே அவனை ஈச்வரனென்றும் காப்பவனென்றும் காட்டுகின்றது. இதைக் கொண்டு, தான் ரக்ஷகனாவதற்கு வேண்டிய ஸகல குணங்களும் தன்னிடம் இருப்பதை விளக்கிக்கொண்டு சுக்கிரீவ மஹாராஜன் முதலியோருக்கு வந்த அச்சத்தைப் போக்கியருளினான் இராமபிரான்.

அதிகாரம் 7: பரமதர்ம நிர்ணயம்

(மிகச் சிறந்த தர்மத்தை நிர்ணயித்தல்)

20 சரணாகதனைக் காத்தல் மிகச்சிறந்த தருமம் என்பதை வ்ருத்தாந்தங்கள் மூலம் விளக்குதல்

கீழே பெருமாள் தன் ஸ்வபாவத்தையும் பெருமையையும் வெளியிட்டருளினான். மேல் இராமபிரான் 'இந்த விபீஷணன் துஷ்டனாகவே இருப்பினும் அவனை எதிர்க்கச் சக்தி நம்மிடம் இல்லையேயாயினும் அவன் சரணமடைந்து விட்டவனாதலின் உயிரைக் கொடுத்தாயினும் அவனைக் காப்பாற்றியேயாக வேண்டும். ஸகல தர்மங்களிலும் மேம்பட்ட தர்மம் இதுவே யாகும்' என்ற தன் திருவுள்ளத்தை ஒரு புறாவின் வரலாற்றைக் கொண்டும் கண்டு முனிவர் நாலரை சுலோகங்களில் விதித்திருப்பதைக் காட்டியும் விளக்கி அருள்கின்றான்.

20.1 மிகப் பெரிய தர்மத்தை அனுஷ்டித்த புறாவின் சரிதை-விளக்கம்

20.1.1 புறாவின் சரிதை மிகப் புனிதமானது

'வானரர்களே! ஒரு புறா செய்த அருஞ்செயலைக் கூறுகின்றேன். எல்லோரும் கேளுங்கள். இந்தப் புறாவின் சரிதையைப் பார்க்கவ முனிவர் சொல்ல முசுகுந்தன் கேட்டான். இதைக் கேட்டால் ஸகல பாபங்களும் தொலையும். பன்முறை கேட்டால் விஷ்ணு லோகத்தை அடையலாம். மிகவும் தூய்மையான சரிதையாதலால் எல்லோருமே மிக்க ஆர்வத்துடன் கேட்க உரியதாகும். பற்பல சாகைகளாய்ச் சிதறிக் கிடந்துள்ள எல்லையற்ற வேதங்களை

நேரில் காணவல்ல மஹர்ஷிகளுக்கு இந்தப் புறாவின் வரலாறும் வேதத்தின் ஒரு மூலையில் காணும்படியன்றோ உள்ளது! பார்க்கவர் முதலிய மஹர்ஷிகள் சொல்ல முசுகுந்தன் போன்றவர்கள் இந்தப் புறாவின் வரலாற்றைக் காதினால் கேட்டுக்கொள்ள மட்டும் முடியுமேயன்றி அவர்கள் எத்தனை கருணையுடையராயிருந்தாலும் புறாவைப்போல் இந்தச் செயலைச் செய்ய முடியாது. இந்தப் புறாவின் சரிதை உலகில் மிகப் புகழ் பெற்றது. மேலும் எனக்கு முன்பே ஒரு புறா தன்னை அடைந்தவனைக்காத்த வரலாறாதலாலும் முன்பே நீங்களும் இந்த வரலாற்றைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள். என்னிடம் அன்பின் மிகுதியால் எனக்கு எதாவது தீங்கு வருமோ என்று மனம் கலங்கி - இவ்வாறு பேசுகின்றீர்கள். அந்தக் கலக்கத்தை விட்டு நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தப் புறா தன்னிடம் வந்தடைந்த எதிரியான வேடனைக் காத்ததே! அது அந்தணன் க்ஷத்திரியன் வைசியன் என்ற எதாவது ஒரு ஜாதியில் பிறந்ததா? அன்றே! அல்லது நான்காம் வருணத்திலாவது பிறந்ததா? அல்லது பொதுவான தர்மத்தைச் செய்ய உரிய மனிதப் பிறவியிலாவது பிறந்ததா? ஒரு பறவையினத்தைச் சேர்ந்த புறா எத்தகைய தர்மத்தை நடத்திவிட்டது! இப்படி தன்னை அடைந்தவன். எதிரியாயினும் அவனைக் காப்பதென்பது பறவையினம் கூடக் காத்துவரும் தருமமாயிருக்கின்றது. நாமோ உலகில் தர்மத்தை நடத்துபவர் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கின்றோம். நாம் செய்யும் தர்மம் எப்படி இருக்கின்றது! சரணமடைந்த விபீஷணனைக் கொல்ல வேண்டுமென்றும் அல்லது கைவிட வேண்டுமென்றும் சொல்லுகின்றோம். ஆனால் ஒரு விஷயம் கவனிக்க வேண்டும். புறாவிடம் பரிவு கொண்டு வேடனைக் காப்பாற்றாமல் தடுப்பவர் புறாவின் அருகில் உங்களைப்போல் ஒருவரும் இல்லை. புறா மட்டும் தனியாக இருந்தது. இங்கு என்னிடம் பரிவு கொண்டு விபீஷணனைக் கைவிடச் சொல்ல நீங்கள் இருக்கிறீர்கள். இது தான் வேற்றுமை.

20.1.2 ஆண் புறாவுக்கு அதன் பேடை செய்த அற்புத உபதேசம்

பின்னும் ஒரு விஷயம்: ஆண்புறாவின் பேடையான பெண்புறா - வேடன் வலையில் பிடிபட்டு அருகில் இருந்தது. மனைவி

Scanned with CamScanner

என்பவள் கணவனுடன் இருந்து தர்மத்தை நடத்து பவளல்லளோ! வேதமே மனைவியைக் கணவனது பாதிப் பகுதியாக ஓதுகின்றதே! கணவன் தர்மங்களைச் செய்யும் போது மனைவிக்கும் உடன் செய்யக் கடமை உண்டே! கணவனுடன் ஒன்றிவிடுமவளல்லளோ மனைவி. தர்மம் செய்யும்படி கணவனைத் தூண்டுபவள் மனைவிதானே! அத்தகைய சிறப்புடைய பெண்புறா ஆண்புறாவுக்கு எத்தகைய உபதேசத்தைச் செய்தது! 'நாத! உனக்கு நன்மை தருவதொன்றைக் கூறுகின்றேன். கவனத்துடன் கேட்கவேண்டும். நீ இருக்கும் இடத்துக்கு வந்து அண்டியவனை உன் உயிரைக் கொடுத்தும் எப்பொழுதும் காக்கவேண்டும்' என்று கூறியதே! வேடனைக் காத்தலென்னும் தர்மத்தைச் செய்யுமாறு தூண்டியதே பெண் புறா! ஆகவே தடுப்பவர் இல்லாமையாலும் தர்மத்தைச் செய்ய ஏவும் மனைவி அருகில் இருந்ததாலுமன்றோ ஆண்புறா வேடனைக்காக்கும் தர்மத்தை உடனே செய்ய முடிந்தது. எனக்கோ விலக்குவதற்கு நீங்கள் உள்ளீர்கள். தர்மம் செய்யத் தூண்டும் மனைவி அருகில் இல்லை.

20.1.3 நேரிடையாகத் தன்னைச் சரணம் புகாவிடினும் அபராதியான வேடனை ஆண் புறா காத்தல்

மற்றொரு விஷயம் - மேலும் வேடன் பெண் புறாவைப் பறித்து வைத்துக் கொண்டு ஆண் புறாவுக்கு நேரிடையான எதிரியாய் இருந்தான். நமக்கு விபீஷணன் நேரிடையான எதிரியல்லன். பகைவனான இராவணன் இருக்கும் ஊரினின்று வந்தது மட்டுமே உள்ளது. மற்றோர் அம்சமும் கவனியுங்கள் - வேடன் ஆண்புறா இருந்த மரத்தின் அடிக்குத் தற்செயலாக வந்தானேயன்றிப் புறாவிடம் செல்ல வேண்டுமென்று வரவில்லை. மேலும் வேடன் தலைமேல் கைகளைக் கூப்பிக்கொண்டு அந்த மரத்தில் வாழும் தேவதையைக் குறித்துத்தான் சரணமடைந்ததாகக் கூறினானே யன்றிப் புறாவைச் சரணமடைந்ததாகக் கூறவில்லை. விபீஷணனோ புத்திரனை விட்டான். மனைவியைக் கை விட்டான். மற்றும் எல்லாவற்றையும் உதறித் தள்ளினான். என்னையே சரணமடைந்துள்ளான். அதிலும் ரகுவின் வம்சத்தில் நான் பிறந்துள்ளதைக் காட்டும் ராகவன் என்ற பெயராலேயே என்னை அழைத்தான். எங்கள் குலத்துக்குக் கூடஸ்த்தனான ரகுவுக்கும் ராக்ஷஸனுக்கும் நடந்த சம்பாஷணையில்

ரகுமஹாராஜன் தன்னைச் சரணமடைந்தவனைக் காத்த செயலை நமக்கு நினைவூட்டிக் கொண்டன்றோ முறைப்படி என்னைச் சரணமடைந்துள்ளான்!

மேலும் வேடன் பறவையினத்துக்கு இயற்கையிலேயே பகைவன். அதுமட்டுமன்றித் தன் பேடையான பெண் புறாவைப் பறித்து வைத்திருப்பவன். இத்தகைய எதிரி விஷயத்தில் என்ன செய்வது முறை? இவன் படுகிற கஷ்டத்தைப் படட்டுமே என்று பொருள்படுத்தாது இருந்து விடலாம். அல்லது 'நல்ல ஸமயம் வாய்த்தது. அகப்பட்டுக்கொண்டான்?' என்று அவனை ஹிம்ஸிக்க வழி செய்யலாம். இதுதானே உலகியல் முறை! ஆனால் அந்த ஆண்புறா செய்ததென்ன? 'விருந்தினனைத் தெய்வமாகக் கருதி உபசரிக்க வேண்டு' மென்று உபநிடதம் ஓதுகின்றதே, அதை உணர்ந்தன்றோ தேவர்களை அக்நியில் ஹவிஸ்ஸை இட்டு ஹோமம் செய்து ஆராதிப்பது போல் ஆண்புறா தீயை மூட்டி அதில் தன் சரீரத்தையே ஹோமம் செய்து ஆராதித்தது! நாம் சரணமடைந்த விபீஷணனை உபசரிக்கும் முறை மிக அழகு. அவனோடு வந்த அவனைச் சேர்ந்த மந்திரிகளோடு சேர்த்துக் கொடிய முறையில் கொல்ல வேண்டுமென்று கூறி அழகாய்ப் பூஜிக்கின்றோம்.

20.1.4 தன் உடலையும் வேடனுக்கு உணவாக அளித்து மகரிஷிகளும் செய்தற்கரிய விருந்தோம்பலைப் புறா செய்தல்

மேலும் அந்த ஆண்புறா வேடனை உபசரித்த வகையைக் கேளுங்கள். வேடன் அப்பொழுது குளிராலும் பசியாலும் மிக வருந்தினான். அப்பொழுது அவனுக்கு அவசியமாய் வேண்டியது என்ன? உடனே எங்கிருந்தோ தீயைக் கொண்டு வந்து செத்தைகளைப் போட்டு எரியச் செய்து குளிர் நீங்கச் செய்தது. நல்ல விருந்தாளி வீட்டுக்கு வந்தால் உபசரிக்க வேண்டிய முறையில் சிறிதும் வழுவாதன்றோ உபசரித்தது! அவன் தனக்குச் செய்த தீங்கை நினைத்து உள்ளத்தில் சிறிதளவாவது வருத்தத்தைக் காட்டியதா? அந்த வருத்தத்தின் வாடையே இல்லையே! சாஸ்த்ரம் . கூறுவது என்ன? சரணமடைந்தவனுக்கு இனிய சொல் கூறுதல் தொடங்கித் தன் உயிரைக் கொடுத்தல் வரை தன் சக்தியை மறைக்காமல் அன்போடு செய்த உபசாரமெல்லாம் ஓரளவுக்குச் செய்தனவாகுமேயன்றி அதிகமாகச் செய்துவிட்டதாக ஆகாது என்பது தானே! மேலும் அந்தப் புறா வேடனது பசியைத்

Scanned with CamScanner

தீர்ப்பதற்கு வெளியிலிருந்து எதோ சில ஆஹாரங்களைக் கொண்டு வந்து கொடுத்ததா? இல்லை. அல்லது தன்னிடம் உள்ள வேறு சில உணவுப் பண்டங்களைக் கொடுத்து உபசரித்ததா? அதுவும் இல்லை. தன் சரீரத்தின் மாம்ஸங்களைக் கொடுத்தல்லவோ அவனை உபசரித்து நல்ல விருந்தூட்டத் தொடங்கியது! இப்படி சரீரத்தையே கொடுப்பதென்பது உலகில் எங்காகிலும் நடக்கக் கூடிய செயலா? எல்லோருக்கும் தம் சரீரத்தில் எத்தகைய பாசம்! விவேகமற்றவர் சரீரத்தையே ஆத்மாவாகத் தவறான எண்ணங் கொண்டு போஷிக்கின்றனர். நல்ல விவேகிகளோ தர்மங்களைச் செய்யச் சரீரம் தானே முக்கியமான ஸாதநம் என்று சொல்லிக் கொண்டு சரீரத்தை வளர்க்கின்றனர். இப்படி பண்டித பாமரவுலகு முழுதும் அன்போடு ஆதரிக்கும் சரீரத்தையே புறா வேடனுக்கு அளித்ததே! இந்த அற்புதம் எங்கேனும் உண்டா?

இன்னும் பாருங்கள் - அந்தப் புறா தன் சரீரத்தில் சில பகுதிகள் மட்டும் பிரித்து எடுத்துக் கொடுத்து வேடனை உபசரிக்கவில்லை. புறாவுக்கு அவன் முழுப்பசியையும் விரைவில் தீர்க்கவேண்டுமென்று எத்தகைய துடிப்பு! அதற்காகத் தன் சரீரத்தின் அவயவங்களில் எதையும் மீதி வைக்காதபடி தான் புரியும் செயலைப் பெரிய தவமாக நினைத்தன்றோ மூட்டிய நெருப்பில் விழுந்தது! இது சாதாரணச் செயலா? சரபங்கர் முதலிய மஹர்ஷிகள்தாம் அக்நியில் தம் சரீரத்தை இரையாக்கியதாக அறிகின்றோம். அந்த மஹர்ஷிகளின் கோஷ்டியிலன்றோ இந்தப் புறா சேர்ந்துவிட்டது!' என்கின்றான் இராமபிரான்.

20.2 இராமபிரான் தான் சரணாகத ரக்ஷணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை விளக்குதல்

இப்படி புறாவின் வரலாற்றைக் கூறி, தான் விபீஷணனைக் காப்பதற்கு ஆதாரமாகக் காட்டப் பின்னும் ஒருமுறை அந்த வரலாற்றையே சொல்லி, புறாவின் தர்மம் இப்படியானால் தான் சரணமடைந்தவனைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? என்ற முறையில் பின்னும் அருளிச் செய்கின்றான் இராமபிரான் - பின்னும் கேளுங்கள். நாம் தர்மத்தைச் செய்வதற்கு ஏற்ற ஜாதிகளில் பிறந்துள்ளோம். புறா அத்தகைய ஒரு ஜாதியில் பிறந்ததன்று. நாம் பரம்பரையாக

மக்களைக் காப்பாற்றுதலைத் தர்மமாகக் கொண்ட வம்சத்தில் பிறந்துள்ளோம். புறா அவ்வாறு பிறந்ததன்று. இவ்வம்சம் எல்லோரும் அறிந்ததே.

அதனால் உபசரிக்கப்பட்ட வேடனோ பறவையினத்துக்கே எதிரியாயுள்ளவன். வேடஜாதியே பறவையினத்துக்கு இயற்கைப் பகைதானே! மேலும் அவன் செய்யும் கொடுஞ் செயலாலும் பறவையினத்துக்குப் பகைவனே. அவன் ஆண்புறா இருந்த இடத்திலே தற்செயலாக வந்து விழுந்தது மட்டுமேயன்றிப் புறாவைக் குறித்து அந்த ஆபத்தில் தன்னைக் காக்குமாறு கேட்டு எதாவதொரு சிறு செயலைச் செய்தானா? செய்யாவிடில் போகட்டும். அந்தப் பறவைக்குத் தீங்கு புரியாமலாவது இருந்தானா? அப்பொழுதும் அதன் விஷயத்தில் விபரீதம் செய்வதில் மனநிலை மாறாமலன்றோ இருந்தான்! தான் பெண் புறாவைக் கவர்ந்த தீச் செயலுக்குச் சிறிதளவு பச்சாத்தாபமாவது கொண்டானா! அநுகூலமான ஒரு பேச்சையாவது அவன் பேச இடமுண்டா ? இப்படி எவ்வகையிலும் உதவி பெறத் தகுதியற்ற பகைவனான வேடனைப் புறா தன்னையும் அழித்துக் கொண்டன்றோ கைக்கொண்டு காத்தது!

முன் பொதுவாய்ப் பறவையினத்துக்கு வேடன் பகைவன் என்று கூறினேனே! அந்த வேடன் குறிப்பிட்டுச் செய்த செயலைப் பாருங்கள். அந்த ஆண்புறாவின் பேடையையே அபஹரித்தானே! இப்படி என் மனைவியைக் கவர்ந்த இராவணனே நேரில் வந்தாலும் நாம் கைக்கொண்டன்றோ ஆக வேண்டிய சூழ்நிலை புறாவின் செயலால் உருவாகியுள்ளது. ஆனால் புறா இருந்த மரத்தடியிலே வந்ததே அவனை உபசரிக்க அவன் செய்த உபாயமெனக் கொள்ளலாமே என்பீர்கள். உண்மை தான். ஆனால் அவன் அந்த மரத்தில் வாழும் அதன் தேவதையைக் குறித்தன்றோ தான் சரணமடைந்ததாகக் கூறினான்! புறா அந்த வார்த்தையைக் கூடக் கேட்கவில்லையே!

20.2.1 மிகப் பெரிய தர்மத்தைச் செய்தது சாதாரணப் புறாவே - விளக்கம்

அப்படியும் அவனைக் காத்த புறா ஒரு தேவனோ முனிவனோ அந்த வேஷம் பூண்டு வந்தானென்று நினைப்பதற்கும் இடம் இல்லை. என் குலத்தில் முன்னோரான சிபி மஹாராஜன் கழுகுக்கு அஞ்சிச் சரணமடைந்த புறாவைக் காத்த வரலாற்றில் ஒரு தேவனே

Scanned with CamScanner

புறா வேடம் பூண்டதாக அறிகின்றோமே! அப்படியன்று இந்தப் புறா. இது விலங்கினமாயிருப்பினும் முற்பிறவியில் செய்த மஹாபுண்ய விசேஷத்தாலே தர்மத்தை அநுஷ்டிக்கத்தக்க புறாவாய்ப் பிறந்தது. முன் கஜேந்திரன் முதலியவர்கள் விலங்கி னத்திலே பிறந்து அவ்வாறு தர்மத்தைச் செய்யவில்லையா?

20.2.2 ஒரு வானரம் எதிரியைக் காத்த வரலாற்றைக் கூறி சுக்ரீவனது கலக்கத்தைப் போக்குதல்

'மஹாராஜரே! பின்னும் ஒரு விலங்கு தன் பகைவனான வேடனைக் காத்த வரலாற்றைக் கூறுகின்றேன். கேளும், அந்த விலங்கும் உம்முடைய இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான். வானர ஜாதிக்கே சக்கரவர்த்தியாய் முடிசூட்டி மஹாராஜரென்று பேர் பெற்ற நீர் ஒரு புலிக்கும் ஒரு வானரத்துக்கும் முன் நடந்த சம்பாஷணையைப் பற்றிக் கேள்விப் பட்டதில்லையா? இப்பொழுது அதைக் கூறுகின்றேன். ஒரு மரத்தில் பெரியதொரு குரங்கு அமர்ந்திருந்தது. அப்பொழுது ஒரு வேடனை ஒரு புலி துரத்திக்கொண்டு வந்தது. புலிக்கு மரம் ஏறத் தெரியாதென்பதை அறிந்த அந்த வேடன் வானரம் இருந்த மரத்திலே வந்து ஏறி விட்டான். உயரப் பார்த்தால் பயங்கரமான வானரம். அப்பொழுது புலி வானரத்தை நோக்கி வேடனைக் கீழே தள்ளும்படி கேட்டது. வானரம் வேடனைச் சரணமடைந்தவனாகக் கொண்டு தள்ளிவிட இசையாமல் அவனைக் காத்துவிட்டது. மரத்தின் அடியை விட்டு விலகாமல் புலி அங்கேயே கிடந்தது. வானரம் பின் உறக்கத்தில் ஆழ்ந்தது. அப்பொழுது புலி வேடனைப் பார்த்து 'நீ வானரத்தைக் கீழே தள்ளி விடுகின்றாயா? உன்னை ஒன்றும் செய்யாது விடுகிறேன்' என்றது. தீய எண்ணமே கொண்ட வேடன் தன்னைக் காத்த வானரத்தைக் கீழே தள்ளிவிட்டான். புலி வானரத்தைப் பிடித்துக் கொண்டது. ஆனால் புலிக்குத் திருப்தி இல்லை. அதற்கு மனித மாம்ஸத்தை உண்பதில் அதிக ஆசை. புலி வானரத்தைக் கேட்கின்றது - 'நன்றியறிவற்ற வேடன் ஆபத்தில் காத்து உதவி செய்த உன்னையே கீழே தள்ளிவிட்டானே! அவனை நீ இப்பொழுது என்னிடம் தள்ளிவிட்டால் உன்னை விட்டு விடுகின்றேன்' என்று. வானரமோ தர்மங்களை நன்றாய் அறிந்தது. உயிருக்கு அபாயம் வரும்போது பொய் கூறுவதில் குற்றமில்லை என்று வானரத்துக்குத் தெரியும். தனக்கு உண்மையில் மனம்

இல்லாவிடினும் அப்படியே செய்வதாக மேலுக்கு ஏற்றுக் கொண்டுவிட்டது. அப்பொழுது வேடனது மனநிலை எப்படி இருந்திருக்கும்? ஆனால் வானரம் செய்ததென்ன? வேடன் அதற்குச் சத்துருவாய் நடந்தது உண்மையே. புலிக்கு அஞ்சி வேறு புகலற்றுத்தானே வானரம் இருந்த மரத்தின் அடிக்கு வந்தான்! அதையே சரணாகதியாக வைத்துக்கொண்டு அவனைக் காத்து விட்டது அந்த வானரம். நீர் வானரர்களுக்குத் தலைவராய் முடிசூடியிருப்பதால் எதையும் செய்யவோ செய்யாதிருக்கவோ சுதந்திரம் உண்டு. ஆயினும் நீர் பிறவியில் வானரம் தாமே! சரணமடைந்தவனைக் காத்தல் உங்கள் ஜாதிக்குத் தர்மமாய் விட்டதைக் கருதியாவது இவனைக் கைக்கொள்ள வேண்டாமா?

மேலும் இந்த விஷயத்தில் மற்ற வானரர்கள் கலங்கினாலும் அவர்களுக்குத் தலைவராயுள்ள நீர் தர்மத்தை எடுத்துக் கூறி அவர்களைத் தெளிவிக்க வேண்டியவராயிருக்க நீரே கலங்கினால் என்ன ஆவது? ஒருகால் நீர் இப்பொழுது வாலியின் ஸ்தானத்தில் முடிசூடியிருப்பதால் அவனைப் போல உமக்கும் சரணமடைந் தவனைத் துன்புறுத்தலில் ருசி வந்து விட்டதோ? நீர் ஒரு சாதாரண வானரமாக மட்டும் இருக்கவில்லையே! சூரியனுக்குப் புத்திரராயன்றோ பிறந்துள்ளீர்! தர்மம் அதர்மம் எல்லாவற்றையும் அறிந்தவராயும் உள்ளீர். இத்தகைய நீரும் மற்ற வானரர்களைப் போல் குரங்குச் சேஷ்டை செய்யப் புகுவது நியாயமா?

20.2.3 இராமன் தன் பெருமைகளைக் கூறித் தன் கடமையை விளக்குதல்

மேலும் ஒரு புறா செய்த அருமையான தர்மத்தைப் பார்க்கும் போது என்னைப் போன்றவர்களுக்கு அது கடமை என்பதைக் கேட்கவும் வேண்டுமோ? சரணமடைந்தவனைக் காப்பதற் கென்றே கொடி பிடித்து நின்ற ரகு மஹாராஜனது வம்சத்திலன்றோ பிறந்துள்ளேன். என் தந்தை எத்தகையரென்று தெரியுமா? அறுபதினாயிரம் ஆண்டு உலகத்துக்கு நன்மையையே செய்து கொண்டு தம்முடைய ஒற்றை வெண்குடை நிழல் தவிர வேறு நிழலில் ஒதுங்காத சக்கரவர்த்தியாய் அரசாண்டவர். உலகத்தைக் காப்பதற்காகப் பத்துத் திசைகளிலும் தமது தேரைச் செலுத்தி அதனால் தசரதர் என்றே பெயரும் புகழும் பெற்றவர். அவருக்குப் புதல்வனாய்ப் பிறந்துள்ளேன். நான் யாருக்குச் சீடன் தெரியுமா? உலகப்புகழ் படைத்த வஸிஷ்ட முனிவருக்கும் விச்வாமித்ர

Scanned with CamScanner

முனிவருக்கும் சீடனாயுள்ளவன். மஹாயோகியாகப் புகழப் பெற்ற ஜநக மஹாராஜர் புதல்வியை மணந்து அவரோடு ஸம்பந்தம் செய்து கொண்டவன். மேலும் 'இராமன் தர்மமே வடிவெடுத்தவன்.' என்று உலகத்தார் போற்றும்படி பெரிய தர்மிஷ்டனாய் நடப்பதாய்ப் புகழை ஏறிட்டுக் கொண்டுள்ளேன். இத்தனை காலமும் என் கை பார்த்து நாட்டார் நடந்து கொள்ளும்படி நடந்து வந்தேன். அதனால் உலகில் தர்மவரையறையைத் தானும் நடத்திக் காட்டிப் பிறரும் நடக்கும்படி செய்பவன் என்று பிறர் பேசுமாறு இருந்தேன். இத்துணைப் பெருமைகளையும் சுமந்து நிற்கும் நான் இன்று சரணமடைந்தவனைக் கைவிடுவதுடன் அவனைக் கொல்லவும் முயன்றால் நாடு என்ன பாடுபடும் என்பதைச் சிந்தித்துப் பாரும். என்னை அண்டியவன் விஷயத்தில் நான் தனிப்பட்ட முறையில் கொண்டுள்ள விரதத்தைப் பின்பு கூறுகின்றேன். பொதுவாய்ப் பார்த்தாலும் சரணமடைந்தவனைக் காத்தல் நம் போன்ற எல்லார்க்கும் கைக்கொள்ள வேண்டிய பொதுத் தர்மமாயன்றோ உள்ளது. நம்மைப் போன்றவர்கள் சரணமடைந்தவனைக் கைவிடலாமா? இராவணன் முதலியவர்கள் எப்பொழுதும் பிறரைத் துன்புறுத்துவதிலேயே ருசி காண்பவர்கள். அவர்கள் அல்லரோ கொல்லத் தகாதவரையும் கொல்லத் துணிவார்கள்! அவர்களுக்கே இத்தகைய அநீதிச் செயல் ருசிக்கும். சரணமடைந்தவனைக் கைவிடுபவன் ஒரு பிறவியில் பிறந்தவனாவானா? நம்மைப் போன்றவர்கள் பிறந்ததற்குப் பயன் யாது? சரணமடைந்தவனைக் காப்பதன்றோ பயன் ஆகும்.

20.3 கண்டு முனிவரின் சுலோகங்களைக் கூறி சரணாகத ரக்ஷண விஷயமாக பெரியோர்களின் அநுஷ்டானத்தை விளக்குதல்

இங்கு ஓர் ஐயம் எழுகின்றது - 'உலகில் பெரியோர்களான முன்னோர்களின் செயல் பின்னோர்கள் நடந்து கொள்ள வேண்டியதற்கு ஆதாரமாகும். என்பது உண்மையே. ஆனால் பறவையினத்தைச் சார்ந்த ஒரு புறா செய்த செயல் ஒரு பெரிய ஆதாரமாகுமா? 'சரணமடைந்தவனைக் காத்தேயாக வேண்டும்.' என்று விதிக்கக் கூடிய வாக்யம் எதாவது வேண்டாமா? என்று. இந்த ஸந்தேஹம் வானரர்களுக்கு எழக்கூடுமென்று கருதி இராமபிரான் கண்டு என்னும் ஒரு மஹர்ஷி தான் கண்டு வெளியிட்ட சாஸ்த்ரவசநத்தைக் கேட்கும்படி கூறுகின்றான்.

20.3.1 கண்டு முனிவரின் பெருமைகளும் அவரது உபதேசத்தின் சிறப்பும்

'மஹாராஜரே கண்டு என்னும் மஹர்ஷியின் பிறவியில் உள்ள ஏற்றத்தை முதலில் கேளீர். அவன் எவனோ ஒரு நாடோடிக்குப் பிறந்தவனல்லன். அவன் தந்தை நான்கு வேதங்களையும் அத்யயநம் செய்தவன். வெளி இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவற்றையும் கண்கூடாகக் காண்பவனாக உள்ளவன். அவனுக்குப் பிறந்தவன் எப்படி இருப்பான்? சொல்லவேண்டுமா? பறக்கும் தன்மையதான பறவையின் குஞ்சு தவழ்வது உண்டா உலகில்! கண்வ மஹர்ஷிதான் எத்தகைய பெருந்தவம் புரிந்தவன்! அவனுக்குப் புத்திரனாய்ப் பிறந்து அவனை ஸம்ஸாரத்தினின்று கரையேற்றுமவனாயல்லனோ பிறந்துள்ளான் கண்டு முனிவன்! தந்தையின் பெயரே மிகப் புகழ் பெற்றது. புதல்வனான கண்டுவின் பெருமையைப் பார்த்தால் மஹர்ஷிகளும் கொண்டாடும் படியாயுள்ளான். விளக்கைக் கொண்டுதான் பெரிய பந்தத்தை உண்டாக்குகின்றோம். விளக்கினும் பந்தத்தின் ஒளி எவ்வளவு அதிகமாயுள்ளது! அவ்வாறே கண்வனை முனிவன் என்று அழைத்தால் கண்டுவை மஹாமுனி என்று அழைக்கும்படி சிறந்த அறிஞனான தந்தையினும் புதல்வனுக்கு அறிவு மிக விரிந்ததாயன்றோ உள்ளது! இந்தக் கண்டு முனிவன் வெளியிட்ட பழமையான சுலோகம் இத்தனை நாளும் உம்முடைய செவியில் விழவில்லையா? விழாததால்தான் இத்தகைய கலக்கம் உமது நெஞ்சில் ஏற்பட்டுள்ளது. இப்பொழுதாவது அந்தச் சுலோகத்தைக் கவனத்துடன் கேட்பீராக.

இந்தச் சுலோகத்தின் உருவம் சிறியதே. ஆனால் எத்தகைய பெரிய அர்த்தங்களையெல்லாம் பொதிந்து கொண்டு கேட்பதற்கு மிக எளியதாய்ச் சுருக்கமான சுலோகமாயிருப்பதைப் பாரும். இந்தச் சுலோகம் இப்பொழுதுதான் புதியதாய் இயற்றியதென்று நினையாதீர். வேதம் போலே பழமையாயிருக்கும் சுலோகம் இது. ஒருகால் கண்டு மஹர்ஷியே இந்தச் சுலோகத்தை இயற்றியிருக்கலாம் என்று நினையாதீர். ருக்கை ஸாமமாகப் பாடுவது போல் முன்பே உள்ள சுலோகத்தைக் கண்டு முனிவன் எடுத்துப் பாடியது மட்டுமே. கண்டு முனிவன் இயற்றியதாகத் தான் நினைத்துக் கொள்ளுமே! அதனால் என்ன? இந்தச் சுலோகம் ஸாமத்தின் ஒலிபோல் கேட்பவர்களின் ஸகல பாபங்களையும்

Scanned with CamScanner

போக்கவல்லதாயன்றோ உள்ளது! உலகில் போலியான பல தர்மங்கள் தர்மம் என்ற பெயரை மட்டும் சுமந்து கொண்டிருக்கின்றனவே! இந்தக் கண்டு முனிவனது சுலோகம் அந்தத் தர்மங்களைப் பேசாமல் வேதம் கண்கூடாகக் காட்டும் 'சரணமடைந்தவனைக் காத்தல்' என்ற ஒப்பற்ற தர்மத்தைக் காட்டுவதாயன்றோ உள்ளது! உண்மையையே பேசும் தன்மையனான கண்டு என்ற மஹா முனிவன் இந்தச் சுலோகத்தை வாய் பிதற்றிச் சொன்னால் கூட ஒரு குறை இருக்காதே! சுலோகத்தை நிரப்புவதற்காக வீணான 'ச' 'து' என்ற சொற்களைப் போடுவதுண்டே! அப்படி இங்கு ஒன்று கூடக் கூட்டவில்லையே! வஞ்சகக் கருத்தும் சிறிது கூட இல்லாமலன்றோ பேசுகின்றது இந்தச் சுலோகம்!

இதை உலகுக்கு வெளியிட்ட கண்டு முனிவனோ உள்ளவாறே விஷயங்களை உணரும் தன்மையன்; தான் உணர்ந்தவாறே பிறருக்குச் சொல்லுமவன். அவன் செய்த உபதேசத்தின் பலனோ உண்மையான தர்மத்தை அறியச் செய்வதேயாகும். இப்படி விபரீத ஞானம் வஞ்சகக் கருத்து ஒன்றுமின்றி எல்லாவுலகுக்கும் நன்மையையே உபதேசிப்பவனான கண்டு தான் உணர்ந்தபடியே பேசும் தன்மையை முழுதும் பெற்றவனென்று தீர்ந்தது.

20.3.2 கண்டுவின் முதல் சுலோகம் சரணாகதியின் சிறு பகுதியை அநுஷ்டித்தவனையும் எத்தகையனாயினும் காத்தே தீர வேண்டியமையைக் காரணத்துடன் விளக்குதல்

மேலே கண்டுவின் பேச்சான நாலரை சுலோகங்களில் முதல் சுலோகத்தில் பரிபூர்ண சரணாகதி செய்யாவிடினும் வேறு புகலற்று நிற்கும் நிலையில் சரணாகதியின் ஒரு சிறு பகுதியென்னலாம்படியுள்ள கைகூப்புதலை மட்டும் செய்தாலும் போதும். அதுவே, அவன் ஆத்மாவை ஸமர்ப்பிக்கும் நோக்கமுள்ளவன் என்பதைக் காட்டுமே! அப்படி கை கூப்புமவனைக் கூட அழியவிடாமல் காக்கவேண்டுமென்பதை முனிவன் கூறுகின்றான்.

ஒருவன் மற்றொருவனிடம் உண்மையில் அநுகூலமான எண்ணம் கொள்ளாதிருக்கின்றான். அவனுக்குத் தீங்கு விளைவிக்கும் செயலைக் கைவிடாமலும் இருக்கின்றான். ஆயினும் அவன் மற்றொருவனைக் குறித்துக் கைகூப்பி

விட்டாலும் போதுமே! கைகூப்புதல்தான் அஞ்சலி. அது பூர்ணமான சுதந்திரமுடையனான எம்பெருமானையும் செய்பவனிடம் உடனே இரக்கம் கொள்ளச் செய்யும் சின்னமாகவன்றோ விளங்குகின்றது! இந்தக் கைகூப்புதலைக் கூடச் செய்யாமலும் வாயினால் கூட ஒரு வேண்டுகோட்சொல் சொல்லாமலும் இருந்தாலும் தான் புகலற்று நிற்கும் நிலை தோற்றும்படி அவல நிலையில் ஒருவன் நின்றாலும் போதுமே! அதுகூட வேண்டாமே! கையும் கூப்பாமல் அவல நிலையும் தோற்றாமல் மனமாரவன்றி மேலுக்கு வாயினால் ஒரு சொல் சொல்லி யாசித்தாலே போதுமே! இந்த மூன்று அம்சங்களுமே இல்லாமல் 'நம்மைக் காப்பவன் அகப்படுவானா?' என்று கவலைகொண்டு ஒருவன் இருக்குமிடத்தில் வந்து புகுந்தாலும் போதுமே ஒருவனை ரக்ஷிப்பதற்கு இப்படி தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தலாகிய சரணாகதியின் சிறு பகுதிகளாகிய கீழ்க்கூறிய அஞ்சலி - அவலநிலை - யாசித்தல் ஆகியவற்றுள் ஒன்றைச் செய்தாலும் அல்லது அம்மூன்றுடன் பரிபூர்ணமான சரணாகதியைச் செய்தாலும் அவ்வாறு செய்தவனைத்தான் கொல்லக் கூடாதென்பதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. அவனைப் பிறன் ஒருவன் கொல்ல முற்படும்போது அவனைக் காக்கச் சக்தியுடையனான தான் அதைப் பொருட்படுத்தாதிருந்து அவனை அழிய விடவும் கூடாது என்று சாஸ்த்ரம் கூறுகின்றது.

ஆனால் ஒரு **கேள்வி** கேட்கலாம் : 'இப்பொழுது கூறிய சாஸ்த்ரம் சொல்லிய தர்மம் இந்த லோகத்திலேயே நலங்களைப் பெறுவதற்காகவா? பரலோகத்தில் நன்மை பெறுவதற்காகவா? பாபம் வராமல் தடுப்பதற்காகவா?' என்று.

ஸமாதாநம் : அந்த மூன்றுக்காகவுமே என்று கூறலாம். அவை மூன்றும் நிற்க அவற்றுக்கு முன்பு வேறு ஒரு பயன் கூறுகின்றேன். அதுதான் கருணையென்ற உயர் குணத்தைக் காப்பது. மற்றொன்றும் உண்டு. 'இவன்கருணை அற்றவன் என்று நாட்டில் உள்ளவர் 'சீச்சீ என்று பழிக்காதிருப்பதுவும் ஒரு பயனாகும். இப்படி நேர்ப்பகைவனே வந்து சரணமடைந்தாலும் அவனை அழிந்து போகவிடக் கூடாதென்று சாஸ்த்ரம் சொல்லும்போது இந்த விபீஷணனைக் கைவிடலாமா? இவனிடம் இதற்கு முன்பு ஒரு குற்றமும் நாம் கண்டதில்லை. பகைவனான இராவணன் இருந்த ஊரினின்று வந்தவன் என்ற இவ்வளவையே கொண்டு

Scanned with CamScanner

நாம் சரணமடைந்த இந்த விபீஷணன் அழிந்து போக விடலாமா? நம்மோடு நேரில் போர் புரியுமவனிடமன்றோ நம் வீரத்தைக் காட்ட வேண்டும்! சரணமடைந்த விபீஷணனிடமாகாட்டுவது!'

20.3.3 கண்டுவின் இரண்டாம் சுலோகம் சரணாகதனை உயிரைக் கொடுத்தும் காக்க வேண்டும் என்பதைக் காட்டுதல்

பின்னும் கண்டுவின் அடுத்த சுலோகத்தைக் கூறி விளக்குகின்றான் இராமபிரான் - 'சரணம் அடைந்தவனைத் தான் கொல்லக் கூடாதென்பதுடன் நின்று விடக்கூடாது. அவனை வேறு ஒருவன் ஹிம்ஸித்தால் தன் பிராணனை இழக்க நேரிட்டாலும் அவனைக் காக்கவேண்டும். சரணமடைந்தவனுடைய நிலைமைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சரணம் அடைபவன் காலவிளம்பத்தைப் பொறுக்காமல் அப்பொழுதே பலன் பெறவேண்டுமென்ற ஆர்வத்துடனும் இருக்கலாம். இவன் ஆர்த்த ப்ரபந்நன் எனப்படுவான். பின்பு காலம் கழித்து வரக்கூடிய பலனுக்கு ஆசைப்பட்டு என்றைக்காவது ஒரு நாள் பலன் வந்தே தீரும் என்ற நிச்சயத்துடனும் இப்போது சரணம் அடைந்திருக்கலாம். இவன் த்ருப்த ப்ரபந்நன் எனப்படுவான். இவனுக்குக் கடுகப் பயன் பெற வேண்டுமென்று ஆர்த்தி யில்லையே? இவன் சரணாகதனாவானோ?' என்று கூடக் கேட்கலாம் - விடை - இவனுக்குக் கூடத் தான் விரும்பும் பலனைப் பற்றிப் பக்தியோகமாகிய வேறு கைம்முதல் இல்லாமையால் ஓர் அவலநிலை உண்டாதலின் இவனையும் ஆர்த்தியுடையனென்று கூறலாம். இப்படியன்றி வணக்கம் பயம் முதலியவற்றோடும் கூடி வந்திருக்கலாம். அப்படி வணக்கம் பயம் இவை இல்லாமலும் சரணமடைந்திருக்கலாம். இவ்விரு வகுப்பினரையும் ஆர்த்தர் - த்ருப்தர் என்று சிலர் வழங்குவார்கள். இதற்கு முன் முகம் பார்த்து அறியாதவரிடம் கூட அவர் இருந்த இடத்திலே போய்ச் சரணமடையலாம். சரணமடைந்தவன் காப்பவனுக்கு நேர்ப்பகைவனாயிருக்கலாம். அந்தப் பகைமை சிறிதும் நீங்காமல் உள்ளே புகைந்து கொண்டிருக்கும் போதே அநுகூலனாகப் பாவனை செய்து வந்து சரணமடைந்தாலும் அவனைக் காப்பதுவே கடமையாகும். ஏன்? என்றைக்காவது சரீரத்தை விட்டுப் பிரியப்போகும் நிலையற்ற ப்ராணங்களைக் கொடுத்தாவது சரணம் அடைந்தவனைக் காத்தலாகிய உறுதியான தர்மத்தைக் காப்பதன்றோ கடமை!

ஆபத்தில் காத்த சிபியை இந்திரன் தர்மம் கூறிப் புகழ்தல்: கழுகும் புறாவும் கூடிச் சிபிசக்கரவர்த்தியிடம் சென்ற வரலாற்றில் சிபியைக் குறித்து இந்திரன் தர்மம் கூறும்போது 'தன் உயிரைக் கொடுத்தாவது பிறர் உயிரைக் காக்குமவன் மறுபிறவியில்லாத உயர்ந்த லோகத்தை அடைகிறான்' என்று உபதேசிக்க வில்லையா? இவ்வாறு காக்காவிடில் இவன் கற்ற கல்வியெல்லாம் பயனற்றதாகிவிடுமே! நல்ல அறிவு பெற்றவன் தவறு செய்தால் கல்லாதவனைக் காட்டிலும் அவனுக்குத் தண்டனை அதிகம் என்று தர்ம சாஸ்த்ரமும் கூறுகின்றதே!

சரணம் அடைந்தவனைக் காப்பதில் உள்ள வரையறைகள்: இந்த விஷயத்தில் கைக்கொள்ளவேண்டிய முறைகளைக் கூறுகின்றேன். தன்னைக் காக்குமாறு ஒருவன் மற்றொருவனைச் சரணமடைகின்றான். அவனை இவன் காத்து விடுகின்றான். பின்பு அவன் தன்னைக் காத்தவனிடம் நன்றி கெட்டு எதிரியாகி விடுகின்றான். தன்னைக் காத்த வானரத்தை நன்றி கெட்டவேடன் புலியின் சொல்லைக் கேட்டுக் கீழே தள்ளிவிடவில்லையா? அவ்வாறு நன்றி மறந்தவனிடம் காத்தவன் செய்யவேண்டியது என்ன? அவனுக்கு எதாவது தண்டனை கொடுக்கத் தனக்கு அதிகாரம் இருந்தால் அதைக் கொடுத்து அதன் வாயிலாக அவனைத் தூயனாக்கி ரஷித்துவிடலாம். அவனுக்குத் தண்டனை கொடுக்க இவனுக்குத் தகுதியில்லையாயின் இவன் செய்ய வேண்டியது யாது? சரணமடைந்தவன் பின் தன் நன்றி மறந்த செயலுக்கு வருந்திப் பின்னும் சரணமடைந்தானாகில் அவனை மன்னித்து விட வேண்டும். அவன் பச்சாத்தாபம் கொள்ளாமல் எதிரியாகவே இருந்தானாகில் எப்படியாவது இருந்து தொலையட்டும் என்று நினைத்துக்கொண்டு அவனது பகைமையைப் பொருட்படுத்தாது புறக்கணித்துவிட வேண்டும். அவன் அத்துடன் நில்லாது தன்னைக் கொல்லுமளவுக்குத் துணிந்து முன் வந்தானாகில் இயன்றவரை அந்த ஆபத்திற்கு அகப்படாமல் தன்னை விலக்கிக் கொள்ளவேண்டும். ஆனால் அதைத் தடுப்பதும் சாஸ்த்ரத்துக்கு முரண்படாத வகையில் இருக்க வேண்டும்.

மேல் இரண்டு சுலோகங்களால் சரணமடைந்தவனைக் கை விட்டால் இம்மையிலும் மறுமையிலும் வரும் அநர்த்தங்களை விளக்குகின்றார்.

Scanned with CamScanner

20.3.4 கண்டுவின் மூன்றாவது சுலோகம் சரணம் அடைந்தவனைக் கைவிட்டவனுக்கு இம்மையில் ஏற்படும் தீமைகளைக் கூறல் - இதற்கும் பூர்வர்களின் வாக்குகள் வாயிலாக விளக்கம்

ஒருவனை மற்றொருவன் வந்து சரணமடைந்த போது அவனைக் காக்காமல் கைவிடுவதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். அவையாவன - (1) சரணமடைந்தவனைக் கைக்கொண்டு காத்து விட்டால் அவனிலும் வலியரான அவனுடைய எதிரிகள் நம்மையும் வந்து துன்புறுத்தினால் என்ன செய்வது என்று அஞ்சியும் கைவிடக் கூடும். தக்ஷகனைக் காக்க வந்த இந்திரன் கஷ்டப்படவில்லையா? விளக்கம் - ஜநமேஜயர் உலகிலுள்ள ஸர்ப்பங்களெல்லாம் ஹோம அக்நியில் வந்து விழும்படி ஒரு யாகம் செய்தார். தக்ஷகன் என்னும் ஸர்ப்பம் இந்திரனைச் சரணம் அடைந்தது. இந்திரன் அபயமளித்துவிட்டான். இந்திரனுடைய பாதுகாப்பில் இருந்தான் தக்ஷகன். இதை அறிந்து ஹோமம் செய்பவர் இந்திரனோடு சேர்ந்து தக்ஷகன் வந்து விழும்படி மந்திரத்தில் சேர்த்துச் சொல்லுகிறார். ஸ்வர்க்கத்தினின்று இந்திரனோடு சேர்ந்து தக்ஷகன் நழுவி ஹோம குண்டத்தில் விழும் . ஸமயம். ஆஸ்திக முனிவர் கட்டளையால் யாகம் அத்துடன் நின்றது. சரணமடைந்த தக்ஷகனைக் காக்க முன் வந்ததால்தானே இந்திரனுக்கும் ஆபத்து! (2) சில ஆபாஸயுக்திகளை நினைத்து அதனால் வரும் கலக்கத்தாலும் சரணமடைந்தவனைக் கைவிடலாம். உதாஹரணமாய் - சற்று முன்பு நீர் இந்த ஆபத்துக் காலத்தில் உடன் பிறந்த அண்ணனை விட்டுவந்த விபீஷணன் எவனைத் தான் விட்டுச் செல்லமாட்டான்? என்று யுக்தி சொல்லிக் கலக்கமடையவில்லையா? (3) சிலர் தன்னைக் கேட்பவர்கள் இல்லை என்று கருதும் சுதந்திரத் தன்மையாலும் சரணம் அடைந்தவனைக் கைவிடுதல் உண்டு. இந்தத் தன்மைதானே சாஸ்த்ரத்தை மீறி நடக்கக் காரணமாகின்றது! (4) மேலும் சிலர் சரணமடைந்தவனை அவன் கஷ்டப்படுவதைக் காண்பதில் ஆசையாலும் தாம் கைவிடக்கூடும். பிறர் துன்பம் காண்பதிலேயே அரக்கர்கள் ஆசை கொள்வது உண்டே! அவர்களைப்போலே இவர்களும் அவன் கஷ்டத்தைப் பார்ப்பதில் விபரீதமான ஆசை. கொள்ளக் கூடுமே! (5) மேலும் சரணமடைந்தவனுக்குப் பகைவனிடம் ஏதாவது கூலி வாங்கிக் கொண்டும் அவனைக் காக்காது கைவிட்டு விடுவதுண்டு. (6) மேலும் இப்பொழுது

சரணமடைந்தவன் காப்பவனுக்கு முன்பு ஏதாவது தீங்கு செய்திருக்கலாம். அதை நினைத்துப் பார்த்து இவன் எப்படியானால் என்ன? என்று அவனைப் புறக்கணிக்கும் மனப்பான்மை ஏற்பட்டும் கைவிடலாம். இத்தகைய வேறு காரணம் ஏதாவது இருந்தும் கைவிடலாம். இப்படி சரணம் அடைந்தவனை ஏதாவது காரணத்தால் கைவிட்டால் அது எத்தகைய பாபம் தெரியுமா? கிணற்றில் தவறி விழுந்த குழந்தையைக் கரையில் உள்ளவன் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பது போன்றதாகும். பிறரிடமிருந்து அவனைக் காக்காது கைவிட்டாலே இந்தப் பாபமானால் சரணம் அடைந்தவனை நாமே ஹிம்ஸிக்க முற்பட்டால் எத்தகைய பாபம் வருமென்பதைச் சிந்தியுங்கள். ஆதலால் சரணம் அடைந்தவனைத் தன் சக்திக்கு வஞ்சகம் செய்யாது காக்கவேண்டும். தனக்கு இயன்ற வகையில் அவனைக் காப்பதுவே உரிய கடமை.

சரணமடைந்தவனைக் காக்கும் முறையிலும் இருவகைகள் உண்டு. சிலரைக் கைக்கொண்டு காப்பதும் உண்டு. சிலரைக் கைவிட்டுக் காப்பதும் உண்டு. அவனவனுக்கு நலம் தரும் வகையில் தமக்கு இயன்ற வகையால் காக்கவேண்டும். உதாஹரணமாய் - (1) ரகுமஹாராஜனை அந்தணர்கள் வந்து அடைந்தபோது அவர்களை ஏற்றுக்கொண்டு காத்தான் ரகு. மற்றும் சிலர் அடைந்தவரைக் கைக்கொண்டு காத்திருக்கின்றனர். (2) இராமனது ப்ரஹ்மாஸ்த்ரம் துரத்த, காகம் சரண் தேடித் - தேவர்களிடமும் முனிவர்களிடமும் வந்தடைந்தபோது அவர்கள் காகத்தைக் கைவிட்டுக் காத்தார்கள். எப்படி? அவர்கள் காகத்தை ரக்ஷிக்க முற்பட்டாலும் செய்ய முடியாது தான். பெருமாள் அவனைப் போக்கற்றவன் என்று கருணை சுரந்து அவனைக் காக்க இடம் தருதற்காக அவனைக் கைவிட்டுக் காத்தார்கள். அவ்வாறு கைவிட்டதும் காப்பதில் தானே முடிந்தது!

. உண்மையில் தனக்குச் சக்தி இருக்கும் போது அதை மறைத்துக் கொண்டு சக்தியில்லாதவன் போல் வேஷம் போட்டு அவனுக்காக வருந்துவதாகவும் புலம்புவதாகவும் பாவனை செய்து கைவிடக் கூடாது. இப்படி பொய் சொல்லி ஏமாற்ற முடியுமா? உலகில் நடக்கும் எல்லாச் செயல்களையும் கண் காணிப்பதற்காகப் பதினான்கு ஸாக்ஷிகளை எம்பெருமான் படைத்துள்ளானே அவர்களாவார் - சூரியன் - சந்திரன் - வாயு -

Scanned with CamScanner

அக்நி - ஆகாயம் - பூமி - ஜலம் - மனம் - யமன் - பகல் - இராத்திரி - காலைப்பொழுது - அந்திப் பொழுது - தர்ம தேவதை ஆகியவர்கள். இந்தப் பதினான்கு ஸாக்ஷிகளுக்கு எதையும் மறைக்க முடியாதே! இவர்களுக்கும் மேலே கண்காணிப்பவனாய் ஸகலத்தையும் கண்கூடாகக் காண்பவனான ஸர்வேச்வரன் உள்ளானே! இத்தனை பேர்களின் கண்முன் தம் செயலை மறைக்க முடியுமா? இவனுக்கு உள்ள சக்தியைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்களே! ரக்ஷிக்கச் சக்தியிருக்க ஒருவனைக் கைவிடுவதென்பது எத்தகைய கொடிய பாபம் என்பதைக் கேளும். பாரதத்தில் நஹுஷனுக்கும் ப்ருஹஸ்பதிக்கும் நடந்த ஸம்பாஷணையில் மிகவும் விரிவாய்க் கூறப்பட்டுள்ளதே!

20.3.4.1 நஹுஷ - ப்ருஹஸ்பதி ஸம்வாதம் காட்டுவது

மேலும் தேவர்களுக்கும் அவர்களுக்குப் புரோஹிதனான ப்ருஹஸ்பதிக்கும் நடந்த சம்பாஷணையைக் கேளுங்கள். வ்ருத்ரனென்னும் அசுரனைக் கொன்ற இந்திரனுக்கு ப்ரஹ்மஹத்தி தோஷம் வந்துவிட்டது. இந்திரன் தலை காட்ட முடியாமல் ஓரிடத்தில் போய் ஒளிந்து கொண்டான். அவன் இல்லாமல் தேவலோகத்துக்கு அராஜக நிலை வந்துவிட்டது. மஹாபுண்யவானான நஹுஷ மஹாராஜனை இந்திரனாக்கினர். இந்திரப்பதம் கிடைத்ததும் அவன் புத்தி கெட்டுப் போயிற்று. இந்திராணியை அடைய ஆசைப்பட்டான். அவள் தற்கால இந்திரனான அவனிடம் வர விரும்பவில்லை. அவளை வரும்படி நிர்ப்பந்திக்க நஹுஷன் முயல்கின்றான். அவள் கதியற்றுத் தேவகுருவான பிருஹஸ்பதியைச் சரணமடைந்தாள். அவன் அவளுக்கு அபயமளித்துத் தன் பாதுகாப்பில் வைத்துக் கொண்டான். நஹுஷன் தேவர்களைத் தனக்கு அவ்விஷயத்தில் உதவி செய்யும்படி வேண்டினான். அதைக் கேட்ட தேவர்கள் பிருஹஸ்பதியிடம் சென்று நஹுஷனுக்காகப் பரிந்து பேசி இந்திராணியை நஹுஷனிடம் அனுப்புமாறு கேட்டனர். அப்பொழுது பிருஹஸ்பதி அவர்களுக்குக் கூறியதாவது' தேவர்களே இந்திராணி தர்மத்தை அறிந்து நடப்பவள். ஒருவர் பழிப்புக்கும் இடமில்லாதவள். அவள் என்னைச் சரணம் அடைந்து விட்டாள். அவளைக் கைவிடமாட்டேன். இதுவே என் உறுதி. தர்மங்களை உணர்ந்து ஸத்ய சீலனாய் தர்மவிதிகளை அறிந்து அந்தணனாயும் உள்ள நான் தகாத செயலைச் செய்ய உடன்படமாட்டேன். தேவர்களே! நீங்கள் செல்லலாம். இவ்விஷயத்தில் முன்பே பிரமன் கூறியதைக் கேளுங்கள் - 'பயந்து வந்து சரணடைந்தவனைக் கைவிட்டுப் பகைவனிடம் காட்டிக் கொடுத்தவன் வாழும் ஊரில் விதை விதைத்தால் முளைக்காது. உரிய காலத்தில் பருவ மழை பெய்யாது. கைவிட்டவனுக்கு ஆபத்து வந்தால் அவனைக் காக்க ஒருவனும் முன் வரமாட்டான். ஸ்வர்க்கலோகம் சென்றாலும் அவனைக் கீழே தள்ளிவிடுவார்கள். தேவராஜனான இந்திரனே தேவர்களுடன் சேர்ந்து கொண்டு வச்சிராயுதத்தால் அடிப்பான்' என்று. எத்தகைய பாபம்! அதன் விளைவு எத்தகையது பாருங்கள்' என்பது பிருஹஸ்பதியின் வாக்கு.

20.3.4.2 ரகு ராக்ஷஸ ஸம்வாதம் காட்டுவது

மேலும் ரகுவும் ராக்ஷஸனும் பேசிக்கொள்ளும் போது கூறிய முடிவாவது: 'பஞ்ச மஹாபாதகங்கள் செய்தவர்கள் கூட அசுவமேதம் முதலிய பிராயச்சித்தத்தைச் செய்து தூய்மை பெறலாம். சரணமடைந்தவனைக் கைவிட்டுப் பிறர் கொல்ல இடம் கொடுப்பவர்களுக்குத் தூய்மை எதனாலும் வராது' என்று ரகுமஹாராஜன் ராக்ஷஸனுக்குக் கூறினான்.

20.3.4.3 கழுகு வடிவு கொண்ட இந்திரன்-சிபிச் சக்ரவர்த்தி ஸம்வாதம் காட்டுவது

சிபி மஹாராஜனுடைய தர்மத்தைப் பரீக்ஷிப்பதற்காக இந்திரன் கழுகு வடிவும் அக்நி புறா வடிவும் கொண்டு கழுகு புறாவைத் துரத்த, புறா சிபியிடம் வந்து சரணமடைந்தது. அப்பொழுது கழுகு தர்மம் சொல்லித் தன் உணவான புறாவை விடும்படி சிபியை வேண்டியது. அப்பொழுது சிபி கூறுகின்றான் - 'உலோபித் தன்மையாலோ, பகைமையாலோ, அச்சத்தாலோ ஒருவன் சரணமடைந்தவனைக் கைவிட்டால் பிரஹ்மத்திக்குச் சமமான பாபம் வரும் என்று பெரியோர் சொல்கின்றனர். ஐம்பெரும் பாதகர்களுக்குக் கூடச் சாஸ்த்ரங்கள் பிராயச்சித்தம் விதிக்கின்றன. சரணமடைந்தவனைக் கொல்ல விட்டவனுக்குப் பிராயச்சித்தம் எந்தச் சாஸ்த்ரத்திலும் இல்லை. காப்பதற்குச் சக்தியுடைய ஒருவன் பிறரால் கொல்லப்படுமவனைப் புறக்கணித்துக் காக்காது கைவிட்டால் பயங்கரமான நரகத்தை அவன் அடைவான் என்று அறிஞர் கூறுகின்றனர். இதுவே சிபி கழுகுக்குக் கூறிய தர்மம். இதிஹாஸோத்தமம் என்ற நூலிலும் அச்சத்தோடு உயிர் பிழைக்க

Scanned with CamScanner

விரும்பி என்னைச் சரணமடைந்த அந்தணனை (புறாவை)க் காக்க எனக்குச் சக்தி இருக்கும் போது உலோபித் தன்மையாலோ அச்சத்தாலோ கைவிட்டேனேயாகில் உலகில் என்னிலும் மிக்க பாபி ஏது? ப்ரஹ்மஹத்தி தோஷமும் சேரும் என்று கூறப் பட்டுள்ளது.

20.3.4.4 பெண் புறா ஆண் புறாவிடம் கூறியது

கீழ் நான் கூறிய வேடன்- புறா- வரலாற்றிலும் பெண்புறா தன்னைக் கட்டி வைத்துள்ள வேடனைக் காப்பதற்காக ஆண் புறாவிடம் கூறியதைக் கேளுங்கள்: 'அந்தணனைக் கொல்லுதல் - உலகத்துக்குத் தாயான பசுவைக் கொல்லுதல்-சரணம் அடைந்தவனை அழிய விடுதல் எல்லாம் ஸமமான பாபம் என்று எடுத்துக் கூறியுள்ளது.

20.3.4.5 மநு ஸ்ம்ருதி கூறுவது

சரணமடைந்தவனைக் கைவிடுதல் தகுதியற்றவனுக்கு வேதத்தைக் கற்பித்தல் இவற்றைச் செய்பவன் ஒரு வருஷம் சோளத்தையே உணவாகக் கொண்டு விரதமிருந்து தூயனாக வேண்டும் என்று மநுஸ்ம்ருதியில் சொல்லியபடி எளிதில் கழிக்க முடியாத பாபமாகவன்றோ கூறப்பட்டுள்ளது! சிபி மஹாராஜன் அபயம் கேட்டு வந்த புறாவைத் தன் போன்றவன் கைவிட்டால் பெரியோர்களின் பழிப்புக்கு ஆளாக வேண்டி வரும் என்று கூறினானே! இப்பொழுது நாம் விபீஷணனைக் கைவிட்டால் பெரியோர்களின் பழிப்பு வருவதுடன் மட்டும் நில்லாது. இந்த அநியாயத்தைச் செவியால் கேட்டாலுமே பிராயச்சித்தம் பண்ணிக் கொள்ள வேண்டியிருப்பதால் நாட்டில் உள்ள சாதாரண மக்கள் கூட இவ்வாறு செய்தவனைச் 'சீச்சீ' என்று வெறுத்துத் தங்கள் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். இதன் கொடுமையை நினைத்தே மநுஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்கள் சரணமடைந்தவனைக் கைவிடுதல் - குழந்தைகளைக் கொல்லுதல் - பெண்வதை செய்தல் - நன்றி கொல்லுதல் ஆகிய குற்றம் புரிந்தவர்கள் எதாவது பிராயச்சித்தம் செய்து கொண்டாலும் அவர்களைப் பெரியோர்கள் தங்களோடு கூட்டிக் கொள்ளக்கூடாது என்று கூறுகின்றன. ஆதலின் நாம் சரணமடைந்த விபீஷணனைக் கைவிட்டால் நம்மைச் சார்ந்த விச்வாமித்ரர் முதலிய ஆசார்யர்கள் கூட ஒருகாலும் நம்மைச் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்.

20.3.5 கண்டுவின் நான்காவது சுலோகம்

சரணம் அடைந்தவனைக் கைவிட்டவனுக்கு மறுமையில் வரும் அதோகதியைக் கூறுதல்: இதுவரை இவ்வுலகில் வரும் தோஷங்களைக் கூறியாயிற்று. இனி மறுமையில் வரும் குற்றம் கூறுவதைக் கேளுங்கள். ரக்ஷிப்பதற்குச் சக்தியுடையவன் ஒருவன். அவனிடம் மற்றொருவன் வந்து சரணமடைகின்றான். முன்னவன் இவனை ரக்ஷிக்காது கைவிட்டு விட்டான். ஆதலின் கண் முன்னேயே இவன் அழிந்து போகின்றான். அழிந்த இவன் தான் நற்கதி பெறுவதற்காகப் புண்ணியத்தைப் பெற ஒரு முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. ஏன்? தன்னைக் கைவிட்டவன் அநாதி காலமாகப் பண்ணியிருந்த புண்யங்களையெல்லாம் சிறிது கூட மீதி வைக்காமல் பறித்துக் கொள்ளுகின்றான். தன்னைக் கைவிட்டவன் போக வேண்டிய புண்ய லோகங்களை எல்லாம் இவன் அடைந்து அநுபவிப்பான். சரணமடைந்தவனைக் கை விட்டவன் கதியோ தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்யவும் முடியாது. அதற்குக் கைம்முதலாகச் சிறிது புண்யமாவது இருக்கவேண்டுமே! எல்லாவற்றையும் இவன் பறித்துக்கொண்டு விட்டானே! ஆதலின் முழுக்காலமும் தன் பாபச் சுமையாலே நரகத்திலே விழுந்து கிடக்கவேண்டிய அதோகதிதான் அவனுக்கு.

20.3.6 கண்டுவின் நான்காவது சுலோகத்தின் பிற்பகுதியின் கருத்து

இப்படி இம்மையிலும் மறுமையிலும் வரும் கஷ்டங்களைப் பிரித்துச் சொல்லி மேலே இரண்டையும் சேர்த்துச் சொல்வதையும் கேளுங்கள் - சரணமடைந்தவன் கைவிடப்பட்டு ஆபத்து வந்தால் அவனுக்குச் சரீரம் ஒன்று மட்டுமே அழியும். அப்படி இவனை அழிய இடம் தந்து கைவிட்டவனுக்கு மறுமையில் நல்ல லோகம் கிடையாது. இங்கு உள்ள புகழ் ஒழியும், பலம் - வீர்யம் மற்றும் சொல்ல முடியாத நற்குணம் செல்வம் எல்லாமே அழிந்து போகும். சரணமடைந்தவனுக்கோ எவ்வகையிலும் கஷ்டம் இல்லை. இங்குக் காக்கப்பட்டுவிட்டால் இங்கேயே இஷ்டஸித்தி ஏற்பட்டு விடுகின்றது. காப்புப் பெறாமல் கைவிடப்பட்டால் கைவிட்டவனுடைய புண்யத்தையெல்லாம் கைக்கொண்டு தான் நினைக்காமலே தானாக வந்த பரலோக ஸுகத்தையெல்லாம் பெறலாம். ஒரு படியாலும் சரணமடைந்தவனுக்கு நன்மை பெறுதற்குத் தடையே இல்லை.

Scanned with CamScanner

20.3.7 கண்டு முனிவர் கூறியதை அனுஷ்டிப்பதில் தமக்குள்ள சீரிய விருப்பத்தை இராமன் அறிவித்தல்

மஹாராஜரே! இப்படி சரணமடைந்தவனைக் கைவிட்டால் இம்மையிலும் மறுமையிலும் வரும் கஷ்டங்களைக் கண்டு முனிவனின் சொற்படி கூறினோம். இனி, சரணமடைந்தவனைக் காப்பதில் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பலன் பெறுவதைக் கூறுகின்றோம். கேளும், கண்டுமஹர்ஷி கூறிய விஷயத்தை நான் நேராகச் செய்தாலல்லது உயிர் தரிக்க முடியாத படி அவன் சொல்லில் அவ்வளவு ருசியுடையேன். மஹாராஜரே! நாம் இப்பொழுது சரணமடைந்த விபீஷணனைக் காக்கப் போகின்றோம். ஒரு தர்ம காரியத்தைப் பற்றிச் செவியால் கேட்டாலும் கண்ணால் பார்த்தாலும் உள்ளத்தால் நினைத்தாலும் வாயினால் கூறினாலும் மனம் முதலியவற்றால் மகிழ்ந்தாலும் புனிதனாகலாமென்று சாஸ்த்ரம் கூறுவது தெரியுமே உமக்கு! நீரும் தருமத்தில் மிகவும் கருத்து ஊன்றியவர். உம்மை எனக்குப் பந்துவாகக் கொண்டுள்ளேன். நீர் எனக்கு ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டும். நான் செய்யும் தருமத்தை விலக்காமல் இருப்பதுவே அந்தக் காரியம். கண்டு முனிவனுடைய உபதேசத்தை நாம் கற்றதற்குப் பயன் யாது? அவ்வாறு நடப்பது தானே பயன்! வாயினால் ஒன்றைச் சொல்லி அதற்கு விபரீதமாய் நடப்பதற்கா முனிவரது உரையைக் கற்றது. அப்பொழுது குலிங்கமென்னும் பறவையின் செயல் போலன்றோ ஆகும்! குலிங்கமென்னும் பறவை 'உன்னால் முடியாத காரியத்தைச் செய்யாதே' என்று பிறருக்குச் சொல்லிக் கொண்டுதான் சிங்கத்தின் வாயினுள் புகுந்த மாமிசத்தை எடுக்க முயலுமாம். அவ்வாறன்றோ முடியும் நம் செயலும்! கண்டு முனிவன் சொல்லை மறுத்துப் பேசும் ஆதாரம் எதுவும் கிடையாது. சுருதியும் நேரிடையாகக் கண்டு முனிவன் கூறியதையே கூறுகின்றது. ஆகவே கண்டுவின் நல்லுரை எவ்வகைக் குற்றமுமற்றதாயுள்ளது. நீங்கள் கூறுவது இம்மைப் பயனுக்கும் மறுமைப் பயனுக்கும் தடையாகவன்றோ உள்ளது. உங்கள் வார்த்தையைக் காட்டிலும் கண்டு முனிவன் வார்த்தைக்கு உள்ள சிறப்பைக் கண்டீர்களா? அவன் வார்த்தையில் தர்மத்தின் ஸூக்ஷ்மம் பொதிந்து கிடக்கும் போது பெரியனான

அம்முனிவன் சென்ற வழியைப் பின்பற்றுவதே நமது கடமை. நீதியும் இதைத்தானே கூறுகின்றது! முனிவன் சொல் சரணம் அடைந்தவனைக் காத்தல் என்ற மிக உயர்ந்த தர்மத்தைப் பற்றியதாகவன்றோ உள்ளது! முனிவனது அந்தச் சொல்லுக்கு உம்மாலோ மற்றும் உள்ள வானரர்களாலோ எம்மாலோ ஒரு குற்றம் சொல்ல முடியாதபடி எல்லா வாக்கியங்களுக்கும் மேம்பட்டதாகவன்றோ உள்ளது அவன் சொல். மற்றும் ஸம்வர்த்தர் முதலிய பெரியோர்களெல்லாம் அஞ்சி வந்தடைந்த வனுக்கு அபயமளிப்பவன் தான் விரும்பிய போகங்களையும் தீர்க்காயுஸ்ஸையும் எப்பொழுதும் ஸுகத்தையும் பெறுவான் என்றும், அஞ்சிய பிராணிக்கு அபயமளித்தல் நிறைந்த தக்ஷிணைகளுடன் செய்யப்படும் எல்லா யாகங்களுக்கும் ஸமமாகும் என்றும் கூறியுள்ளார்களே! அபயமளிப்பவனுக்கு அப்பொழுதே பலனும் பின்பு முதிர்ந்த நிலையில் வரும் பலனும் உண்டு. உடனே கிடைக்கும் பலன் புகழ் முதலியவற்றைப் பெறுதல். பாபம் கழிந்த பின் ஸ்வர்க்கம் பெறுவது பின் வரும் பலன். சிபி முதலியவர்கள் அஞ்சிய பிராணிக்கு அபயமளித்தற்கு மேம்பட்ட தருமம் இல்லையென்றும் குறைவற்ற பலனைத் தரும் சிறந்த தர்மம் அது என்றும் கூறியுள்ளார்கள். ஆகவே சரணம் அடைந்தவனைக் காத்தலே எல்லாத் தருமங்களுக்கும் முடிசூடி நிற்கும் தர்மமாகும். இவ்வுண்மையை அறிந்து கருணையும் சக்தியுமுடையர் பக்கல் செய்யும் சரணாகதிக்குப் பலன் வருவதில் சிறிதும் ஐயமில்லை. இதுவே எமது முடிவான கருத்து.

20.3.8 இந்த அதிகாரத்தின் திரண்ட பொருள்

அவல நிலையில் இருந்தாலும், செருக்குடையனாய் இருப்பினும், குற்றம் செய்தாலும், செய்யாவிடினும் ஒருவன் சரணம் அடைந்துவிட்டால் அவனைக் காத்தே தீரவேண்டும் என்னும் கருத்தைப் பெரியோர் ஸ்தாபித்தனர். சரணமடைந்தவனைக் காப்பது விச்வாமித்ரர் - புறா - வானரம் - ரகு - தேவஸ்த்ரீ - நாடீஜங்கள் - பிருஹஸ்பதி முதலியோர் கைக்கொண்டு நடத்திக் காட்டிய ராஜ மார்க்கமாகும்.

அதிகாரம் 8: சரண்ய வ்ரத விசேஷப்ரகாசம்

(ரக்ஷகன் கொண்டுள்ள உயர் விரதத்தை வெளியிடுவது)

21 எல்லோருக்கும் அபயம் அளிக்க இராமன் ஸங்கல்பத்தைக் கூறும் ராமசரம சுலோகத்திற்கு விளக்கம்

மஹர்ஷிகள் தர்மம் இன்னது என்று அறிவதற்கு ஐந்து ஆதாரங்கள் கூறியுள்ளனர். அவையாவன : (1) வேதம் (2) ஸ்ம்ருதிகள் (3) பெரியோர்கள் நடத்திக் காட்டிய முறை (4) தன் மனத்துக்கு ருசித்தல் (5) இந்தச் செயலால் இந்தப் பலனைப் பெறுகிறேன் என்ற எண்ணத்தால் செயலைப்பற்றி உண்டாகும் ஆசை என்பன. இவற்றுள் முந்திய நான்கைக் கொண்டு, சரணம் அடைந்தவனைக் காப்பதன் அவசியத்தை விளக்கியாயிற்று. இப்பொழுது ஐந்தாவதான தன் எண்ணத்தைக் கொண்டு விளக்குகின்றான் இராமபிரான்.

மஹாராஜரே! பக்தி யோகம் சரணாகதி என்று இரண்டு உபாயங்கள் உண்டே! அவற்றுள் பக்தி யோகத்தைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்று சாஸ்த்ரம் விதிக்கின்றது. அது போலன்றிச் சரணாகதியை ஒரு பலனுக்காக ஒரு முறையே செய்ய வேண்டுமென்றும் மறுமுறை செய்யக் கூடாதென்றும் விதித்துள்ளது. சரணாகதி மறுமுறை செய்வதை எதிர்பார்க்காது. என்னைக் காக்க வேண்டுமென்று பிரார்த்தித்துத் தன் ஆத்மாவை நம்மிடம் ஸமர்ப்பிக்கின்றான் ஒருவன். அல்லது மனத்தாலே பூர்ண சரணாகதியின்றிக்கே வாயினாலும் அந்தச் சொல்லைச் சொல்லுகின்றான். அல்லது என்னையே உபாயமாகவும் பலனாகவும் பற்றுகின்றான். த்வயத்தின் முற்பாதியில் நான் உபாயமாய் நிற்கும் தன்மையும் பிற்பாதியில் நான் பலனாயுள்ள தன்மையும்தாமே கூறப்படுகின்றன! அல்லது வேறு உலகப் பயன்களை விரும்புமவனாகவோ என்னையே பயனாகக் கொண்டவனாகவோ இருக்கலாம். பக்தியோகம் ஐச்வர்யம் - கைவல்யம் - மோக்ஷம் ஆகிய எல்லாப் பலன்களையும் அளிப்பது போல் ப்ரபத்தியும் ஸகல பலன்களையும் அளிக்க வல்லதாயிற்றே!

ஆதலால் இவ்வாறு என்னிடம் ப்ரபத்தி செய்தவனுக்கு நான் அபயம் அளிப்பேன். அவன் எவனுக்கும் சிறிதும் அஞ்ச வேண்டியதில்லை. இத்தகைய ப்ரபத்தியை இன்னார் தான் செய்யலாமென்ற வரையறை இல்லை.

இப்பொழுது விபீஷணனுக்கு நாம் அபயம் அளித்ததில் இராவணனிடம் அஞ்ச வேண்டாமென்பது மட்டும் அன்று. பிரமன் முதலிய தேவர்களிடமோ நம்மிடமே கூடச் சிறிதும் அஞ்ச வேண்டாமென்பதுவே நாம் கொடுத்த அபயத்தின் கருத்து. விபீஷணனுக்கு மட்டுமே இத்தகைய அபயத்தைக் கொடுக்கிறோம் என்பதன்று. ராவணனே நேரில் வந்து நம்மை அடைந்தாலும் அவனுக்கும் அபயம் அளித்தே தீருவோம். ஆகவே நம்மைச் சரணமடைந்தவன் எவரிடமும் அஞ்ச வேண்டியது இல்லை. இப்படி அபயம் அளிப்பதுவே நாம் கொண்ட ஸங்கல்பம். ஸகல சாஸ்த்ரங்களும் இதையே கூறுகின்றன. இதைச் செய்யத் தவறினால் மஹாபாபம் வரும்படியாய்ச் சிறந்த தர்மத்தைத் தழுவியதான ஸங்கல்பமன்றோ இது! நாம் இதைச் செயல்படுத்துவதற்கு எப்பொழுதும் எதனாலும் தடை வராது. அஜ்ஞாநமோ அசக்தியோ இருந்தாலன்றோ இதைச் செய்ய முடியாது போம்! ஆதலின் இப்படி ஒன்றாலும் தடுக்கமுடியாத என் விரதத்தை என்னிடம் அன்பு கொண்டுள்ள நீங்களும் ஏற்றுக்கொண்டு எனக்குத் துணை செய்து நடத்திவைத்து என்னையும் காப்பாற்றுங்கள்.'

22 'விபீஷணோ வா சுக்ரீவ' என்ற சுலோகத்தின் கருத்து

கீழ் சரணம் அடைந்தவன் எவனாயினும் அபயமளிப்பதாகக் கூறிய படியால் எல்லாரும் சரணமடையத் தகுதியுடையர் என்பது நிலைத்தது. இந்த அம்சத்தை ராவணன் விபீஷணன் இருவர் விஷயத்திலும் உதாஹரணமாகக் காட்ட நினைக்கின்றான் இராமபிரான். வந்தவன் விபீஷணனாகிலும் அல்லது ராவணனாகவே யிருந்தாலும் தான் முன்பே அபயமளித்து விட்டதாகவே கூற முற்படுகின்றான். ஸுக்ரீவனை நோக்கி 'உம்மையும் மற்றுமுள்ள வானரர்களையும் பரிந்து பேசுபவராக வைத்து உங்களை முன்விட்டுக்கொண்டு நம்மைச் சரணம் அடைந்துள்ளான் விபீஷணன். மோக்ஷத்துக்குச் செல்லும் ஜீவனுக்கு அக்நி தேவன் பகலுக்குத் தேவதை முதலியவர்கள் எதிர்

சென்று வரவேற்று உபசரித்து அனுப்பும் போது மின்னல் தேவதையாகிய அமானவன் மட்டும் அந்த ஜீவனைப் பரமபத நாதன் அருகில் அழைத்துச் செல்வதாக உபநிடதம் கூறுகின்றது. மஹாராஜரே! நீரே விபீஷணனுக்கு அந்த அமானவன் ஸ்தானத்தில் இருந்து அவனை அழைத்து வந்து நம்மிடம் கொண்டுவந்து சேர்த்து வைத்து அவனைக் காத்தலாகிய பெரும் பாக்கியத்தை நீ எமக்கு அளிக்க வேண்டும்!' என்கிறான். இதனால் தான் தோழர்களுக்கு வசப்பட்டிருக்கும் தன்மையைக் காட்டிக் கொண்டு பெருமாள் பேசுகின்றான் -

22.1 பரிவாரத்துடன் விபீஷணனுக்கு அபயம் அளிக்க இராமன் துடிப்பு

'மஹாராஜரே! நீங்கள் இப்பொழுது வந்துள்ள விபீஷணனை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று தடை செய்கிறீர்கள். என் மனமோ நேராக இராவணனையே எதிர்பார்க்கின்றது. ஒரு புறா தன் எதிரியைக் காத்துப் பெருமை பெற்றதை நினைத்து நாமும் நமக்கு நேர் எதிரியாகிய ராவணனுக்கு அபயமளித்துப் புறா பெற்ற பாக்கியத்தை அடைய வேண்டுமென்று ஆசை எழுகின்றது. ஆதலால் நீர் கூறுகிறபடி விபீஷணனாயிருந்தால் என்ன? நேராக இராவணனே வந்தால் தான் என்ன? என்னைச் சரணமடைந்ததாகச் சொல்லிவிட்டானே! இந்தச் சொல் நம் உயிர் நிலையையன்றோ தொட்டு வருத்துகின்றது! இவனுக்கு மட்டும் அபயம் கொடுப்பது போதாதே! இவன் செய்த சரணாகதியிலே இவனுடன் வந்த இவனைச் சேர்ந்த அரக்கர்களும் அடங்கிவிட்டார்களே! அவர்களுக்கும் அபயம் அளித்து அவர்களின் அச்சமும் நீங்கிய பின்பன்றோ விபீஷணனுக்குக் கொடுத்த அபயத்துக்கு மதிப்பு உண்டு என்கிறான் இராமபிரான்.

22.2 விபீஷணனைப் பரீக்ஷித்த பின் ஏற்கச் சுக்கிரீவன் கருத்து இராமன் மறுத்தல்

ஸுக்ரீவ மஹாராஜர் உள்ளத்தில் ஓர் எண்ணம் உதிக்கின்றது. 'பெருமாள் விபீஷணனை ஏற்றுக்கொண்டு விட்டாரே! நாமும் மற்ற வானர வீரர்களும் ஆக்ஷேபித்தும் பயன் இல்லையே! எங்களிடம் தாக்ஷிண்யத்தைக் குறைத்துக் கொள்ளவில்லையென்று

காட்டுவதற்காகவாவது விபீஷணனைக் கொஞ்சம் பரீக்ஷை செய்ததாய்ப் பேர் பண்ணிப் பிறகு ஏற்றுக் கொள்ளக் கூடாதா?' என்று. இதைத் திருவுள்ளத்துக் கொண்டு ஸமாதானம் அருளிச் செய்கின்றார் - 'மஹாராஜரே! நாம் ஸங்கல்பித்த விஷயத்தை மாற்ற மாட்டோம். சரணமடைந்தவனைக் காப்பதை நமக்கு ஒரு விரதமாக முன்பேயே ஸங்கல்பித்துவிட்டோம். விபீஷணனோ சரணமடைந்துவிட்டான். ஆதலின் இவனுக்கு அபயம் அப்பொழுதே அளித்து விட்டதாய்த் தானே ஆகின்றது! இனியும் இவனை நாம் பரீக்ஷை செய்வது முறையாகுமா? இதனால் இவனுக்கு அச்சமன்றோ ஏற்படும்! அந்த அச்சத்துக்கு இடத்தை நாம் ஏற்படுத்துவது பொருந்துமா? நாம் முன்பே கொண்ட விரதத்துக்குக் கேடு ஏற்படுத்திக் கொள்வது அழகா? உங்களிடம் என் தாக்ஷிண்யத்தைக் குலைத்துக் கொள்வதும் அழகன்றுதான். ஆனால் நீங்கள் தாம் விரைவில் விபீஷணன் தன்மைகளை அறிந்து நான் அபயமளித்ததே சிறந்ததென்று உணர்ந்து தெளிவடையப் போகின்றீர்களே! நீர் வானரர்களுக்குள் உயர்ந்தவராய் வானர அரசாட்சிக்கே முடிசூடி நிற்கின்றீர். விசால மனம் படைத்தவராய் உள்ளீர். இந்த விஷயங்களையெல்லாம் உம்முடைய நெஞ்சில் நன்றாய் உறைத்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது செய்ய வேண்டிய தாய்த் தீர்ந்த முடிவு நீரே விபீஷணனை இங்கு அழைத்து வருவதே!' என்று அருளிச் செய்தான் இராமபிரான்.

அதிகாரம் 9: சரண்ய சரணாகத ஸங்கம லாபம்

(ரக்ஷகனும் சரணம் அடைந்தவனும் சேர்தலால் வரும் பயனை விளக்குவது)

23 இராமாயணத்தில் அபயப்ரதாந ப்ரகரண விஷயச் சுருக்கம்

இராமபிரான் விபீஷணனை அழைத்து வரும்படி ஸுக்ரீவருக்கு அருளிச் செய்தான். இதுவரையில் ஸுக்ரீவர் விபீஷணனைத் தங்கள் கோஷ்டியில் சேர விடமாட்டோமென்றிருந்தார். இராமன் சொல்லைக் கேட்டதும் மஹாராஜர் மனம் நன்றாய்த் தெளிந்து விட்டது. தாம் செய்தது அபராதமென்று உணர்ந்தார். அதைப் பொறுத்தருளுமாறு பெருமாளைப் பிரார்த்திக்கின்றார். இப்பொழுது தாமே விபீஷணனுக்குப் பரிந்து பேசுபவராகிறார்.

Scanned with CamScanner

விபீஷணனைத் தங்கள் கோஷ்டியுடன் வந்து சேர்ந்து தொண்டு புரியுமாறு அழைக்கின்றார். தாங்களும் ஸ்ரீ விபீஷணாழ்வாரும் சிறிதும் வேற்றுமையின்றிப் பெருமாளுக்குக் கைங்கர்யம் செய்ய அநுமதிக்குமாறு விண்ணப்பிக்கின்றார். மேலும் தாங்கள் விபீஷணனுக்குத் தோழராகவும் அடியராகவும் நின்று தொண்டு புரியவேண்டும்.' என்றும் வேண்டுகின்றார்.

இப்படி பெருமாள் விபீஷணனை ஏற்றுக் கொள்ளுதற்கு இருந்த தடையெல்லாம் நீங்கிவிட்டனவல்லவா? பெருமாளும் விபீஷணனை ஏற்றுக் கொண்டுவிட்டபடியால் பெரும் பயனைப் பெற்றுவிட்டான். அபயம் பெற்ற விபீஷணனுக்கும் அவன் திருவடிகளில் கைங்கர்யம் செய்தலாகிய மிகச்சிறந்த பலன் ஸித்தித்து விட்டது. இந்தப் பெரிய லாபம் விபீஷணனோடு நிற்கவில்லையே! அவனுடன் கூட வந்த நான்கு ராக்ஷஸர்களுக்கு மன்றோ வந்துவிட்டது! அவர்களுக்கும் அபயமளித்ததாய்க் குறிப்பிட்டு இராமபிரான் கூறினானா? அவர்கள் பெருமாளைத் தாங்களும் சரணமடைந்ததாகக் கூறினார்களா? சரணமடைந்த விபீஷணன் அவர்களைத் தன்னைச் சேர்ந்தவர்களென்று அபிமாநித்ததும் அதில் அவர்களும் அடங்கியதும் மட்டுமே உண்டு. இதுதான் சரணாகதிக்கு உள்ள விசேஷப் பெருமை! ஸ்ரீ வைகுண்டத்துச் சென்றவன் எம்பெருமானுடன் கூடியதும் இருவருக்கும் ஏற்பட்ட ஸந்தோஷத்துக்குப் போக்கு வீடாக இருவரும் விசேஷமாய்ப் பேசிக் கொள்வதுண்டே! அவ்வாறே இங்கும் இவர்கள் பேசிக்கொள்கின்றனர். இவற்றையெல்லாம் ஸ்ரீவால்மீகி பகவான் எடுத்துக் கூறிச் சரணாகதி வேதமென்றே புகழப்படும் ஸ்ரீமத் ராமாயணத்துக்கு உபநிடதப் பகுதியாக வழங்கும் அபயப்ரதாநப் பகுதியைத் தலைக்கட்டி அருள்கின்றான்.

23.1 ஸுக்ரீவன் மனம் தெளிந்து விபீஷணனுடன் சேர விழைந்து இராமனின் குணங்களைக் கூறிப் போற்றுதல்

இராமபிரானுடைய சுதந்திரத்துக்குத் தடை ஏதும் இல்லை. ஆதலின் முதலில் ஒன்றை அவன் ஸங்கல்பித்து விட்டால் அதை விலக்குவதற்கு ஒருவருக்கும் சக்தி கிடையாது. இவ்வளவு சுதந்திரமுடையனாயிருந்தும் தன்னை அண்டியவர்களுக்கு அடங்கியே நடப்பவன். அதனால் விபீஷணனை ஏற்பதற்குத் தடை செய்து கொண்டிருந்த ஸுக்ரீவரையும் மற்றவர்களையும் தெளிவித்து மெல்லத் தன் வழிக்குக் கொண்டுவர வேண்டி இருந்தது. அவர்கள் மனம் தெளிந்ததும் இராமபிரான் ஸுக்ரீவரைப் பார்த்து அவரையே விபீஷணனை அழைத்து வருமாறு கேட்டுக் கொண்டான். இப்படியும் ஒரு தோழமையா? இப்படியும் ஒரு எளிமையா?' என்று ஆச்சர்யமடைந்து ஈடுபடுகின்றார் மஹாராஜர்.

விபீஷணன் சரணம் அடைந்தான். அவனைப் பெருமாள் கைவிட்டால் வேறு எங்கே சென்றாலும் அவனுக்கு அழிவு தான் வரும். அத்தகைய நிலையில் நின்ற விபீஷணனைக் காத்து மகிழ்வித்தான் இராமபிரான். முதலில் அவனைக் கொல்லவும் நினைத்தனர் மஹாராஜர் முதலியவர்கள். அதற்குக் காரணம் பெருமாளிடம் அவர்களுக்கு உள்ள அன்பு மிகுதியே. அவர்களையும் தெளிவித்து மகிழச் செய்தான். இப்படி இரு சாராரையும் உகப்பித்து உள்ளம் குளிரச் செய்த பெருமை அவன் திருமேனிக்கு அப்போது உள்ள தோற்றத்தினாலேயே தெரிகின்றது. மஹாராஜரான ஸுக்ரீவர் முன் மனம் கலங்கி விபீஷணனிடம் சீற்றம் கொண்டிருந்த நிலைமை மாறி இப்பொழுது உள்ளத்தில் தெளிவும் விபீஷணனிடம் அன்பும் கொண்டுள்ள புதிய நிலை தோன்ற நிற்கின்றார். அப்பொழுதுதான் அவருக்கு ஸுக்ரீவர் என்ற பெயரும் மஹாராஜர் என்ற பெருமையும் நிலைக்கின்றன. சரணமடைந்த விபீஷணனிடம் அபசாரப் படுவதில் ஆசைகழிந்த பின்புதானே அவருக்குப் பேரும் பெருமையும் நிலைத்தன!

சுக்கிரீவன் இராமனுடைய எளிமையில் மயங்கிப் பேச முடியாது நிற்றல் : சுக்கிரீவர் இராமபிரானைப் பார்க்கின்றார். இராமபிரான் இங்கு இஷ்வாகு வம்சத்தில் அவதரித்த பின்பு அவனிடம் கண் கூடாகக் காணும் ஸௌலப்யத்தை ஸ்ரீ வைகுண்டத்தில் பரவாஸுதேவனாயுள்ள நிலையில் காண முடியுமா? அங்கு இந்த எளிமையைக் காண ஆசைப்படும் படியன்றோ இருக்கும்! அங்கு இது கிட்டுமா? இந்த ஸௌலப்யத்தைக் கண்டு மயங்கிய மஹாராஜர் ஒன்றும் பேச முடியாதபடி நிற்கின்றார். ஆனால் பெருமாளுக்கு அவரிடமும் அவருக்குப் பெருமாளிடமும் உள்ள குளிர்ந்த எண்ணம் மஹாராஜரின் மௌன நிலையைக் கலைத்துப் பேசவைக்கின்றது. பேசுகின்றார் மஹாராஜர்.

சுக்கிரீவர் இராமனிடம் தங்களது தாழ்வை விண்ணப்பித்தல்: 'ஸ்வாமி! தேவரீர் அருளிச் செய்ததில் வியப்பு என்ன இருக்கின்றது? கிளைக்குக் கிளை தாவித் திரிவதே தன்மையுள்ள எங்களுக்குத் தேவரீர் திருவுள்ளத்தில் உள்ள தர்மங்களெல்லாம் அறிய முடியுமா? என் அண்ணனான வாலியிடம் முன் தேவரீர் 'ஸாதுக்களின் தர்மம் மிகவும் ஸூக்ஷ்மமானதால் வானரனாய்ப் பிறந்த உனக்குச் சிறிதும் அறிய முடியாதது' என்று கூறினீர். தேவரீருக்கன்றோ தர்மத்தின் உண்மை தெரியும்! தேவரீர் தர்மத்தை விளக்கி அருளிச் செய்தால் அது தேவரீருக்கு இயற்கையாய் அமைந்ததென்று சொல்லுவதே அன்றி ஆச்சர்யம் அடைய இடம் உண்டோ? எங்களைப் போன்றவர்கள் இந்தத் தர்மத்தை எடுத்துச் சொன்னால் ஆச்சர்யமென்னலாம். உலகில் உடைமைக்கு உரியவன் உடைமையைக் காப்பது அவனது கடமைதானே! அதில் ஏதாவது விசேஷம் உண்டோ! இந்த உலகம் முழுதும் தேவரீருக்கு உடைமையாகும். சரணமடைந்த விபீஷணனது அச்சத்தை ஒழித்து அவனைக் காத்தருளினீர். எங்கள் மனத்தைத் தெளிவித்து நாங்கள் விபீஷணனிடம் பட்ட அபசாரத்தையும் போக்கி எங்களையும் காத்தருளினீர். இருசாராரும் உமக்கு உடைமை தாமே!

இப்பொழுது ஸ்ரீ விபீஷணாழ்வான் தேவரீருக்குக் கைங்கர்யம் செய்யப் போகின்றான். அடியோங்கள் பரம பாகவதனான விபீஷணனுக்குக் கைங்கர்யம் செய்யப் பெறுகின்றோம். இப்படி எங்கள் இரு வகுப்பினரையும் உயர்ந்த பயனைப் பெற்றவ ராக்கியருளினீர். தேவரீருடைய மனப் போக்குத்தான் எத்தகைய திடமானது! சரணமடைந்த விபீஷணனை இதற்கு முன் நாங்களோ தேவரீரோ கண்டறிந்ததில்லை. தேவரீரிடம் உள்ள பரிவின் மிகுதியால் நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு தலையாய் அவனைப் பற்றிச் சில யுக்திகளைக் கூறி அவனை ஏற்கக் கூடாமைக்குப் பல நிர்ப்பந்தங்களைச் செய்தும் ஒன்றுக்கும் சலியாத மனவுறுதியன்றோ தேவரீரிடம் இருந்தது!

ப்ருஹஸ்பதி - சிபி - ரகு - வானரம் - புறா - வஸிஷ்டர் - விச்வா மித்ரர் முதலிய பெரியோர்கள் எல்லாருமே சரணமடைந்தவனைக் காத்தலைப் பெரிய தர்மமாய்க் கொண்டிருந்தனர். அவர்கள் நடந்த உயர்ந்த வழியிலே நின்று சரணமடைந்தவனைக் காப்பதென்ற தருமத்தில் தேவரீர் கொண்டுள்ள மனவுறுதியைப் பின்பு ஒரு கோடி மனிதர் சரணமடைந்து கலக்கப் பார்த்தாலும் கலக்க முடியாததாகவன்றோ உள்ளது அந்த உறுதி! சரணாகதனைப்பற்றித் தேவரீருடைய உறுதியால் தேவரீர் திருவாயினின்று வரும் அபயச் சொற்களைக் கேட்கும்போது இயற்கைப் பகையுள்ள புலியும், கலைமானும் பகைமையை மறந்து ஒரு துறையில் நீர் பருகும் படியன்றோ உள்ளது! நாங்களும் விபீஷணனும் பகைமையை மறந்து தேவரீர் திருவடி நிழலில் வாழ்வதில் வியப்பென்ன?' என்று விண்ணப்பம் செய்தார் மஹாராஜர்.

23.2 சுக்கிரீவர் விபீஷணனைப் பற்றிய தெளிவின் உறுதியை விளக்குதல்

இராமபிரான் அவரைக் கேட்கிறான் - 'மஹாராஜரே! என் வார்த்தையை மறுத்துப் பேசமுடியாத தாக்ஷிண்யத்தால் விபீஷணனைக் கொண்டாடுகிறீரோ? முதலில் நீர் மனத்தால் அவனிடம் பட்ட அபசாரம் உண்மையில் நீங்கும்படி உம்முடைய மனம் தெளிவு பெற்றதா?' என்று. மஹாராஜர் கூறுகின்றார் - 'ஸ்வாமி! ஒருவராலும் தெளிவிக்கமுடியாத அளவுக்கு என் மனம் கலங்கியிருந்தது உண்மையே. ஆனால் தேவரீர் அருளிச்செய்த நல்லுரைகளைக் கேட்டு என் மனம் தெளிந்துவிட்டது. சரணமடைந்த விபீஷணன் தூயவன் என்ற உறுதியைப் பெற்று விட்டது. இவனை நன்றாய்ப் பரீக்ஷை செய்து பார்த்தாயிற்று. இவன் உரத்த குரலில் தெளிவாகப் பேசிக்கொண்டு வந்ததே. இவனைத் தூயனாகக் காட்டியது. அவனுடைய உட்கருத்தைக் குறிப்பினால் காட்டக்கூடிய இங்கிதங்களைக் கொண்டும் இவனைப் பரிசுத்தனாக அறிய முடிகின்றது. நம்முடைய உள்ளத்தில் இவனைப்பற்றி ஸந்தேஹம் உண்டான போதிலும் கூட உள்ளம் துணிந்து இவனை ஏற்றுக் கொள்ள இசைந்து விட்ட படியாலும் இவன் நிச்சயமாய்த் தூயனாகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிகின்றது. உள்ளும் புறமும் ஒக்க இவன் பரிசுத்தன் என்று கண்டறிந்தோம். இவன் ராவணனுமல்லன், அவனால் அனுப்பப் பட்டு வந்தவனுமல்லன். ராவணனிடம் அன்பு கொண்டவனு மல்லன். இவ் விஷயத்தை எல்லா வகையாலும் தெளிவாய் அறிந்து கொண்டோம். தேவரீர் எதையும் செய்யச் சக்தியுடையர் தாம். ஆயினும் இனி விபீஷணனைப்பற்றி நாங்கள் கொண்டுள்ள உறுதியைக் கலைக்கத் தேவரீராலும் முடியாது' என்கிறார் மஹாராஜர்.

Scanned with CamScanner

23.3 விபீஷணனையும் தங்களுக்குச் சமமாய்க் கொண்டு அவனுக்கு விசேஷ அநுக்ரஹம் செய்யுமாறு சுக்கிரீவன் இராமனை வேண்டல்

'மஹாராஜரே! இப்படி உங்கள் அனைவராலும் ஒருமுகமாய் ஏற்றுக் கொள்ளப்பட்ட விபீஷணனுக்கு இனி நான் செய்ய வேண்டியது என்ன? உங்களுக்கும் நான் செய்யவேண்டியது ஏதாவது உண்டோ ? இந்த இரண்டு அம்சங்களையும் நீர் எனக்கு நியமித்தாலன்றி நாம் செய்யமாட்டோம்' என்று இந்த எண்ணம் இராமபிரான் திருவுள்ளத்தில் இருப்பதாக மஹாராஜருக்குத் தோன்றுகின்றது. அதற்கு ஸமாதாநம் விண்ணப்பம் செய்கின்றார்-

'சரணமடைந்தவனைக் காக்கக் கொடியெடுத்த ரகுகுலத்தில் அவதரித்த பெருமானே! இப்பொழுது விபீஷணன் எவ்வகைக் குற்றம் அற்றவன் என்பது மட்டுமன்றித் தேவரீரிடம் எங்களைக் காட்டிலும் மிக்க பரிவுள்ளவன் என்று கூறுமளவுக்கும் நாங்கள் தெளிவு பெற்றோம். மேலும் எங்களுக்கும் இவனுக்கும் ' தேவரீருக்குக் கைங்கர்யம் செய்யவேண்டுமென்ற எண்ணம், அதில் ஆவல் பக்தி எல்லாம் ஒத்திருக்கின்றன. இனி இவன் இல்லாமல் ஒரு க்ஷணம்கூடத் தேவரீருக்கு நாங்கள் கைங்கர்யம் செய்ய இயலாது. இனி இவனும் ஒரு க்ஷணம்கூட எங்கள் பிரிவைப் பொறுக்க மாட்டான். இவனும் எங்களை விட்டுப் பிரிக்கப்படாமல் இருந்து நாங்கள் பெற்ற பாக்யத்தைப் பெற வேண்டும். இவனும் எப்போதும் எங்களைப்போல் பழுதற்ற எல்லாக் கைங்கர்யங்களையும் செய்வதற்குத் தேவரீர் திருவுள்ளம் கொண்டருளவேண்டும்.

மேலும் இந்த விபீஷணன் இத்தனை காலமாய்த் தேவரீர் கைங்கர்யத்தை இழந்திருக்கின்றான். இந்த நஷ்டத்துக்கும் இப்பொழுது ஈடு செய்து கொடுத்தாக வேண்டும். இப்பொழுது இவன் நிலை என்ன? இப்பொழுது இங்கு வந்து சேரத் துடித்த இவனை வராமல் தடுத்து வைத்திருக்கின்றோம். பசித்த ஒருவனுக்கு இலையிலே அன்னத்தைப் போட்டுவிட்டு அவன் உண்ணப்புகும் போது கையைப் பிடித்தாற்போலன்றோ உள்ளது இவன் நிலை! இதனால் இவனுக்கு உள்ள துயரமெல்லாம் நீங்க வேண்டும். இதற்கெல்லாம் ஒரு வழியே உள்ளது. அதாவது இவன் ஒருவனே ஒரு பக்கமும் நாங்கள் அனைவரும் சேர்ந்து நின்று ஒரு பக்கமுமாகத் தேவரீருக்குக் கைங்கர்யம் செய்யும்படி கருணை

புரியவேண்டும். இதுவே இவன் இதுவரை எங்களால் பட்ட கஷ்டத்துக்குப் பரிஹாரமாகும்.

23.4 விபீஷணனுக்கு உள்ள பெருஞ் சிறப்புக்கள்: சுக்கிரீவன் விளக்கம்

மேலும் தேவரீர் இவனுக்கு அபயமளித்துவிட்டபடியால் இவனுக்கு வந்த வலிமையைக் கண்டு இவனுக்கு அண்ணனான ராவணன் முதலியவர்கள்கூட அஞ்ச வேண்டிய நிலை வந்து விட்டது. ஆதலின் பிறருக்குப் பயங்கரமானவன் என்ற பொருள் கொண்ட விபீஷணன் என்ற இவன் பெயரும் உண்மையைத் தெரிவிக்கும் பெயராகின்றது. அரக்கரின் தீச்செயல் சிறிதும் இன்றித் தருமத்திலேயே ஊன்றிய கருத்துடையன் என்ற புகழும் நிலைத்தது. இராவணன் கும்பகர்ணன் இவர்கள் தங்களுக்கு ருசித்த இழிவான வரங்களை வேண்டிப்பெற, இவன் மட்டும் எத்தகைய ஆபத்திலும் தன் மனம் தருமத்தை விட்டு விலகக் கூடாதென்ற அற்புத வரத்தைக் கேட்டுப் பெற்றானே! இவனுடைய மனத்தெளிவு தான் எத்தகையது! இராவணனை அணுகிப் பிராட்டியைப் பெருமாளிடம் ஸமர்ப்பித்துவிட்டுச் சுகமாய் இலங்கையில் வாழ்வோமென்று அவனுக்குக்கூடப் பெரிய நன்மையை உபதேசித்தானே இந்த விபீஷணன் எத்தகைய சிறந்த அறிவைப் படைத்தவன் இவன் !

இவனுக்குத்தான் தேவரீரிடம் எத்தகைய பெரிய நம்பிக்கை! தர்மமே வடிவுகொண்ட தேவரீரே முன்பே உள்ள ஸித்தோபாயம். தேவரீர் திருவடிகளில் கைங்கர்யம் செய்வதே மிகச் சிறந்த பயனாகும். அதைப் பெறுதற்குச் சேதநன் செய்ய வேண்டிய உபாயம் ஒன்று உண்டு. அதுதான் சரணாகதி . அதை ஒரு முறை செய்தால் போதும். அதனால் தேவரீரை வசப்படுத்திவிடலாம். தேவரீர் தாமே சரணமடைந்த விபீஷணனைக் கைக்கொள்ளத் தடை செய்கின்ற எங்களுக்கு மனத்தெளிவை உண்டாக்கி எங்களையும் இவனையும் கருத்தில் ஒற்றுமையுடையராக்கி எங்களுள் பிளவு வராது சேர்த்து விடுவீர் என்ற மனவுறுதியு டனன்றோ வந்துள்ளான்! இது தானே ப்ரபத்திக்கு அங்கமான மஹாவிச்வாஸமென்பது!

அடியேனுக்காவது முன்பு தேவரீருடைய வீர்யத்தில் ஐயம் எழுந்தது. எனக்குப் பகைவனாயுள்ள வாலியின் வலிமையை நினைத்தபோது தேவரீரால் அவனை எதிர்த்து எனக்கு உதவி செய்ய முடியுமா? என்று ஐயம் கொண்டேன். அப்பொழுது வாலி எறிந்த துந்துபியின் சரீரத்தை வெகுதூரம் எறிந்து அடியேனுடைய ஸந்தேஹத்தைப் போக்க நேரிட்டதே தேவரீருக்கு! அடியேனுக்கு ஏற்பட்ட ஸந்தேஹமென்னும் குற்றமும் இல்லாதபடியன்றோ வந்துள்ளான் இந்த விபீஷணன்! இன்னும் கலங்கிக் கொண்டிருக்கும் எங்களைப்போல இவனும் தேவரீரது வீர்யத்தில் ஐயம் கொண்டானாகில் அவனுக்கு நம்பிக்கை யூட்டுவதற்காக ராவணன் எடுத்த கைலாஸ மலையை வீசியன்றோ ஆக வேண்டியிருக்கும்! அவ்வாறின்றி முழு நம்பிக்கையோடு வந்துள்ளானே! இப்பொழுது தேவரீருக்குத் தோழன் என்ற சிறப்பை அடியோங்களைப்போலே இவனும் பெறவேண்டும்.

23.5 விபீஷணனைப் பெருமானிடம் சேர்ப்பதில் ஸுக்ரீவனது ஊக்கம்

தேவரீரது தோழமை சாதாரணமாய்க் கிடைக்கக்கூடியதா? காசிராஜன் முதலிய பெரிய ராஜகுமாரர்களுக்கன்றோ தேவரீருடைய நட்புக் கிடைக்கும்! காசிராஜன் தேவரீர் தகப்பனாரான தசரதருக்கு உற்ற தோழன். அவன் குமாரர்களுக்குத் தேவரீருடைய நட்புக் கிட்டுவது உசிதம்தானே! அத்தகைய பாக்யத்தை ஸ்ரீகுஹப் பெருமாளும், அடியோங்களும் பெற்றுத் தேவரீருக்குத் தோழரானோம். இதற்கு மூலகாரணம் எது? அளவற்ற கருணையுடையரான தேவரீர் தகப்பனார் தசரத மஹாராஜருடைய திருவருளேயாகும். அவர் கைகேயியின் விருப்பத்தின்படி தேவரீரைக் காட்டுக்கு எழுந்தருளச் செய்ததால் அன்றோ குஹனுக்கும் அடியோங்களுக்கும் தேவரீருடைய நட்புக் கிடைத்தது! அவ்வாறே இந்த விபீஷணனும் தேவரீருக்குத் தோழன் என்ற பெருமை பெற வேண்டும். அரக்கர் குலத்தில் பிறவியாலும் அவர்களின் குடல் துவக்காலும் இவனுக்கு வந்துள்ள பழிச்சொல் நீங்கும்படி தேவரீரே செய்தருள வேண்டும். இப்பொழுது பரமபாகவதனான இவனுக்கு நாங்கள் அனைவரும் அடியார்களாவோம். இதுவே உண்மை நிலை. ஆனால் இவன் பெருந்தன்மையால் எங்களைத் தனக்குத் தாஸர்களென்பதை ஏற்றுக் கொள்ள மாட்டான். தேவரீர் எங்களைத் தோழரென்றாவது

இசைந்தது போல் இவனும் தன்னை எங்களுக்குத் தோழன் என்பதையாவது ஏற்றுக் கொள்ளும்படி செய்தருள வேண்டும். உண்மையில் இவனுக்கு நாங்கள் அடியார்களாக இருப்பதுவே எங்கள் விருப்பம். இவன் குபேரனுக்குத் தம்பியாதலின் ஒருகால் தனது அந்த மேன்மையை நினைத்துக்கொண்டு வானரர்களான எங்களை ஆதரிக்காமலிருக்கக்கூடும். அவ்வாறு செய்யாமல் நாங்கள் செய்யும் கைங்கர்யத்தை இவன் ஏற்றுக் கொள்ளும்படி செய்தருளவேண்டும்'.

மஹாராஜரான ஸுக்ரீவர் மிக விவேகி. 'சரீரமே ஆத்மா' 'ஆத்மா சுதந்திரன்' என்ற விபரீத எண்ணமெல்லாம் கழியப் பெற்றவர். தாம் பகவானுக்குச் சேஷர் என்ற எண்ணத்தில் உறுதியாய் நிற்பவர்: அதிலும் பாகவதர்களுக்கும் அடியராய் இருக்குமளவுக்கு ஊன்றிய கருத்துடையர். ஆதலின் விபீஷணாழ் வானைப் பெருமாள் திருவடிகளில் சேர்த்து அவனுக்கும் தாம் கைங்கர்யம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகின்றார். இது பொருத்தம் தானே!

சரணம் அடைந்த விபீஷணன் விரும்பியது இராமபிரான் திருவடிகளில் கைங்கர்யம். அதற்காகத் தன்னைப் பெருமாளிடம் சேர்க்கும்படி விபீஷணன் மஹாராஜர் முதலியவர்களை வேண்டிக் கொண்டான். அவன் திருவடிகளில் விபீஷணன் சேர்ந்து தங்களுடன் கூடிக் கலப்பதே மஹாராஜர் விரும்பியது. இவ்வாறு விபீஷணன் விருப்பத்தையும் தங்கள் விருப்பத்தையும் மஹாராஜர் பெருமாளிடம் விண்ணப்பம் செய்தார். அதனால் பெருமாள் திருவுள்ளத்தில் விபீஷணனைச் சேர்த்துக் கொள்ள ஆசை உண்டாயிற்று, அந்த ஆசை நிறைவேற்றியது கூறப்படுகின்றது.

விபீஷணனைக் கொண்டு வந்து சேர்த்த மஹாராஜருடைய விருப்பம் நிறைவேறியது. சரணமடைந்த விபீஷணன் பெருமாள் திருவடியில் சேர்ந்ததால் அவன் இஷ்டமும் சித்தித்துவிட்டது. இப்படி இவர்களுக்குப் பலன் சித்தித்ததைக் காட்டிலும் பெருமாளுக்கு விபீஷணனோடு கூடிய பாக்யமே மிகச் சிறந்ததாயிற்று. முதலில் கலக்கமடைந்திருந்த மஹாராஜர் பின்பு மனம் தெளிந்து விபீஷணனுக்குப் பரிந்து விண்ணப்பம் செய்த பெரிய வார்த்தையைப் பெருமாள் கேட்டருளினான். அதன்பின் இவர்கள் காட்டிக் கொடுத்ததால் தான் விபீஷணனை அடைதலாகிய பெரிய பாக்யத்தைப் பெற்றோம் என்று

Scanned with CamScanner

திருவுள்ளம் மிக உகந்தருளினான். ஆதலின் பெருமாள் பெற்ற பேறு மற்றவர்களினும் பெரியதாயிற்று. சரணமடைந்தவனைக் காக்க வேண்டுமென்று சாஸ்த்ரம் கூறுவதும், தான் அதையே விரதமாகக் கொண்டதும் கூட இப்பொழுது விபீஷணனைக் கைக்கொள்ள முக்கிய காரணமாக மாட்டா. இப்பொழுது தோழன்மாரான மஹாராஜர் முதலியவர்கள் சொல்லிய சொல்லையே முக்கிய காரணமாக கொண்டு விபீஷணனை ஏற்றுக் கொண்டருளினான் இராமபிரான். இவ்வாறு செய்த பின்பே சரணமடைந்தவனைக் காப்பதற்கு முடிசூடி நிற்கும் ரகு குலத்தில் தான் பெற்ற பிறவி நிலை பெற்றதென்று பெருமாள் கருதுகின்றான்.

23.6 விபீஷணனோடு சேர்ந்ததில் அவனிலும் தனக்கே பெரிய பாக்கியம் - இராமன் கருத்து

மேலும் மஹாராஜர் விபீஷணனை விரைவில் கூட்டிக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்து அதன்படி விபீஷணனுக்குக் கிடைத்த பலன்கூட நடுவில் ஏதோ வந்த பலன் தானென்றும் அது அவ்வளவு முக்கியமானது என்றும் விபீஷணாழ்வானுடன் தனக்குக் கிடைத்த சேர்த்தியே பெறுதற்கு அரிய முக்கிய பலனாகும் என்றும் கருதுகின்றான் இராமபிரான். அதற்கு இருந்த தடைகளெல்லாம் நீங்கிய பின் தனக்குக் கிடைக்கவேண்டிய பலனைப் பெறக் காலத் தாழ்வு ஏது? பெருமாளுக்கும் விபீஷணனோடு உடனே சேர வேண்டுமென்று மிகுத்த துடிப்பு இருந்தது. முன் கருடனோடு இந்திரன் உறவு கொண்டான். பெரிய திருவடி எல்லா வகையிலும் இந்திரனைக் காட்டிலும் மிகப் பெரியன். அவனுடைய உறவு கிடைத்தது இந்திரனுக்கு மஹாபாக்யமாயிற்று. இப்பொழுது பெருமாள் விபீஷணனோடு கூடப்பெற்றதைத் தனது முயற்சியின்றி வந்த பெறுதற்கு அரிய பேற்றைப் பெற்றதாய்த் திருவுள்ளம் கொண்டான்.

அதிகாரம் 10: ப்ராப்தி ப்ரகார ப்ரபஞ்சம்

(பெருமாளை விபீஷணன் கூடிய முறையை விளக்குதல்)

24 விபீஷணன் பெருமாளை அடைந்த முறை

24.1 விபீஷணன் நால்வருடன் இராமன் திருவடிகளையே நிலையான புகலாகக் கருதி அவற்றில் வீழ்தல்

சாஸ்த்ரங்களில் கூறிய முறைப்படி சரணாகதி வாக்யத்தைச் சொல்லிச் சரணம் அடைந்து விட்டான் விபீஷணன். அந்தச் சிறந்த வாக்யத்தில் குறை கூறி யாராலும் பயன் பெறாமல் தடுக்க முடியாது. அப்படி ப்ரபத்தியைச் செய்த விபீஷணனுக்கு அவன் விரும்பிய பலன் கிடைத்துவிட்டதைப் பொதுப்படக் கூறினான் வால்மீகி பகவான். இராமபிரான் திருவடிகளில் சேருவது தானே விபீஷணன் விரும்பிய பலன்! பின்பு பெருமாளை விபீஷணன் அடைந்த வகையை விளக்கமாகப் பேசுகின்றான் வால்மீகி மஹர்ஷி.

பெருமாள் திருவடிகளில் சரணமடைந்தால் அதன் விளைவு யாது? பெருமாள் தன் மேன்மையைக் கொண்டு அபயமளித்து நிற்க வேண்டியது தானே! அப்படியா நின்றான் சக்கரவர்த்திக்குத் திருமகனாக அவதரித்துள்ள நிலைமையில் ஸௌலப்யமன்றோ விஞ்சியிருக்கின்றது! பெருமாளை அணுகுவது இயலாது என்று அஞ்சிய விபீஷணனது அச்சம் தீருமாறு அவனை ஏற்றுக் கொண்டது ஸௌலப்யத்தின் மிகுதியால் தானே? இவனுக்கு அபயத்தை முன்பே அளித்து விட்டேன் என்று தான் அருளிச் செய்ததுடன் நிற்கவில்லையே இராமபிரான்! அது போதாமல் 'நீரே விபீஷணனை அழைத்து வாரும்' என்று மஹாராஜரையேயன்றோ நேராகக் கேட்டுக் கொண்டான் பெருமாள்! மஹாராஜரும் தேவரீருக்கு நாங்கள் புரியும் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தில் எங்களைப் போல் விபீஷணனும் பங்கு கொள்ள வேண்டும் என்றன்றோ விண்ணப்பம் செய்தார்! இதையே மற்ற வானர வீரர்களும் இசைந்தார்களே! அந்தப் பெரிய கோஷ்டியிலே

பெருமாள் எழுந்திருந்து 'ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு அருளப்பாடு என்று அருளிச்செய்து அவனை வரவேற்றான். இதற்குப் பின்பே பெருமாள் முன்பு அவனுக்குச் செய்த அபயப்ரதாநம் நிலைபெற்றது.

பெருமாளிட்ட அருளிப்பாட்டை விபீஷணன் தூரத்திலேயே வணங்குதல்: அப்பொழுது ஸ்ரீ விபீஷணாழ்வான் ரக்ஷகனான பெருமாளுடைய திருவுள்ளத்தின் உறுதியிலும் ஸௌலப் யத்திலும் மிகவும் ஈடுபட்டான். பெருமாளையன்றி மற்ற விஷயத்தில் மனத்தைச் செல்லவிடாது அவன் திருவடிகளில் கைங்கர்யத்திலேயே ஈடுபாட்டைப் பெற்றான். பெருமாள் இட்ட அருளிப்பாட்டுக்கும் தூரத்தில் நின்றே வணங்கி உரிய மரியாதையைச் செய்தான். ஒருவரையும் வணங்காத அரக்கனான இராவணன் கிடந்த வயிற்றிலேயே கிடந்து பிறந்த விபீஷணனுக்கு மட்டும் இத்தகைய பணிவு வந்தது எதனால்? பிரமனிடம் பெற்றவரத்தின் பெருமையாலன்றோ உரிய விஷயத்தில் இத்தகைய பணிவு வந்தது! கும்பகர்ணனும் இவனும் ஒரு வயிற்றிலே கிடந்து பிறந்தவர்களாயினும் கும்பகர்ணன் முதலிய அரக்கர் வகுப்பில் சேராத தனி வகுப்பில் பிறந்தவனாகவன்றோ பெயர் பெற்றுள்ளான்! இத்தகைய தன்னோடு கூடுவதற்குக் கணப்பொழுது தாமதித்தாலும் பெருமாள் உயிர் தரிக்கமாட்டான் என்பதைத் தூரத்திலிருந்தே பெருமாளின் இங்கிதத்தைக் கொண்டு தன் கூரிய மதியால் அறிந்து கொள்கின்றான் விபீஷணன்.

அப்பொழுது விபீஷணன் பூமியை நோக்குகின்றான். எதற்காக? வெட்கத்தால் தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை. என்ன வெட்கம்? பெருமாள் சரணமடைந்தவனது குற்றத்தைப் புறக்கணித்து அவனிடம் அன்பு கொள்ளும் பண்பைக் காண்கின்றான். தனக்கு முன்பே வானரவீரர்கள் பெருமாளுடன் கலந்து பழகும் பாக்கியத்தைப் பெற்றதையும் காண்கின்றான். தீய தன்மையே நிறைந்துள்ள ராவணன் முதலியவர்களையும் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வரலாமோ என்று நினைத்து அவர்களிடம் கருணையாலும் அவர்களின் குற்றத்தை ஒதுக்கிவிடும் தன் அன்பினாலும் நன்மையை உபதேசிப்பதற்காக வீணாக இத்தனை காலம் தாமதித்ததை நினைத்துக் கொள்கின்றான். உள்ளத்தில் வெட்கம் தோன்றுகின்றது. அதனால்தான் தலை குனிந்து தரையை நோக்குகின்றான்.

மேலும் முன் தான் சரணமடையும்போது தன்னைக் கொல்லக்கையும் தடியுமாய் நின்ற வானரக் கூட்டத்தைப் பார்க்க அஞ்சி நின்றான் விபீஷணன். இப்பொழுதோ அந்த வானர வீரர்கள் எல்லாரும் 'மோக்ஷம் செல்லுமவனை உபசரித்து வழி நடத்தும் தேவர்களைப் போல் தனக்குப் போற்றி பல்லாண்டு என்றெல்லாம் சொல்லி மங்களாசாஸநம் செய்யும் நிலையையும் காண்கின்றான். இந்தப் பெருமை தனக்கு வந்ததற்குக் காரணம் பெருமாள் எழுந்தருளியுள்ள இந்தச் சிறந்த இடத்தின் பெருமை தானே என்றுதான் தரையை நோக்குகின்றானோ! அந்த இடம் ஒரு திவ்ய தேசமாகவன்றோ காட்சி தருகின்றது. மேலும் வானர வீரர்கள் கல்லையும் தடியையும் கீழே போட்டுக் கூப்பிய கையராய்க் கோஷ்டியாய் நின்று எதிர்கொண்டு அழைக்கின்ற இந்தச் சூழ்நிலையில் தானும் தண்டன் ஸமர்ப்பிக்கக் கீழே தகுந்த இடத்தைத் தலைகுனிந்து பார்க்கின்றானோ!

இந்நிலையில் நின்ற விபீஷணனுடன் நான்கு அரக்கர்கள் நிற்கின்றனர். அவர்கள் விபீஷணனுக்கு அடியார்கள். அவனுக்கே வசப்பட்டிருப்பவர்கள். அவர்கள் தங்களுக்கென்று தனியாக ஓர் உபாயத்தைச் செய்யவோ, பலனைப் பெறவோ இடமின்றி விபீஷணனுக்குக் கைகளும் கால்களும் போலே அவனோடேயே ஒன்றிருப்பவர்கள். விபீஷணன் அந்த நால்வருடனும் சேர்ந்து ஆகாயத்தினின்று தரையில் வந்து விழுந்தான். அவனுக்கு முக்கிய நோக்கு பெருமாள் திருவடிகளில் பொங்கும் மகிழ்ச்சிக்கு வசப்பட்டு விட்டான். திருவடிகள் வரை செல்லக்கூட அவனுக்கு முடியவில்லை. மகிழ்ச்சி வெள்ளமோ அவனை இராமன் திருவடிக்குத் தள்ளுகின்றது. திருவடிகளோடு பிறவித் தொடர்பு உடைய பூமியிலேயே விழுந்துவிட்டான். முன்பெல்லாம் ராவணனுடைய இடத்திலே விழுந்து விழுந்து தன் உடம்பில் ஏற்றிக் கொண்ட புழுதி எல்லாம் போகும்படி பெருமாள் திருமுன்பே பூமியில் விழுந்தான். முக்தி பெறுமவனை அமாநவன் என்பவன் தன் கையால் தொட்டு அழைத்துப் போவான். அவன் கைபட்டதும் முக்தி பெறுமவனுக்குத் தூய்மை வருகின்றது. அவ்வாறே பெருமாள் திரு முன்பே தரையில் விழுந்ததும் விபீஷணன் மிகப் பரிசுத்தனானான். அதன் பிறகே திருவடிகளை நேராகப் தரிசிக்கத் தகுதி உண்டாயிற்று. பின் பூமியினின்று எழுந்து வந்து பெருமாள் திருவடிகளிலே தன் தலை சாயும்படி விழுகின்றான் விபீஷணன்.

Scanned with CamScanner

முன் இருந்த நிலையைக் காட்டிலும் விபீஷணனுக்கு இப்பொழுது வந்த வேறுபாட்டை என்னவென்று கூறுவது? இந்தக் கர்மபூமியிலே உள்ள சிலர் கர்மத்தால் புதிய உறவுடையரான சுற்றத்தாரிடம் பற்றை விட்டு ப்ரபத்தியைச் செய்து ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடந்து பரமபதத்துக்குச் செல்லும்போது அவர்களின் நிலை எவ்வளவு வேறுபட்டிருக்கும்? அந்த நிலையைத்தான் விபீஷணனுக்கு வந்த புதிய நிலைக்கு உதாஹரணமாக்கலாம். இதற்கு முன்பு ராவணனுக்கு உபதேசிக்கப் போன விபீஷணாழ்வானுக்குத்தான் அவனால் எத்தனை வகையான அவமாநங்கள்! அவற்றால் விபீஷணனுக்கு வந்த வருத்தமனைத்தும் தீரும்படி சக்கரவர்த்தித் திருமகனது மரகத மணித்தடம் போன்ற திருமேனி குளிர்ந்து அழகிய காட்சியளித்தது. சரணாகதியென்னும் தர்மமே வடிவு கொண்டதோ என்னும்படி தோற்றமளிக்கின்றான் விபீஷணன். சரணாகதி தர்மம் தவிர மற்ற தர்மங்களையெல்லாம் போலித் தர்மங்களென்றே சொல்லலாம். தன் ஞானத்தை மலரச் செய்து திருவடிக் கீழ் கைங்கர்யம் செய்யுமாறு ஏற்றுக் கொள்ளும் பெருமான் திருவடிகளிலே தவக்கு நிலையான புகலிடம் வேண்டுமென்று ஆசைப்பட்டான் விபீஷணன். அப்படியே அந்தத் திருவடிகளிலே விழுந்தான். ஸ்ரீவைகுண்டநாதன் திருவடிகளிலே முக்தன் போய் விழுவதற்கு உவமை காட்டுவது போலிருந்தது விபீஷணன் செயல். அவன் மட்டுமா விழுந்தான். தன்னுடன் வந்த நான்கு ராக்ஷஸர்களோடு மன்றோ விழுந்தான்!

இதனின்று சாஸ்திரத்தின் ஓர் உட்கருத்து வெளியாகின்றது. அதாவது - ஒருவன் சரணமடைந்து திருவடிகளைப் பற்றுகின்றான். அப்பொழுது தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பிக்கின்றான். அதனால் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் அதில் ஸம்பந்தம் ஏற்படுகின்றது. அவர்கள் தங்களுக்காகத் தனித்து ஒரு சரணாகதியைப் பண்ண வேண்டியதில்லை. இவர்களைத் தனியாகப் பரீக்ஷித்துப் பார்க்க வேண்டிய அவசியமுமில்லை. முதலில் சரணமடைந்தவனுடைய பண்புகளைப் பரீக்ஷித்துப் பார்ப்பதே போதுமானது. முதலில் பற்றுமவன் அடையும் பலனையே அவனைச் சேர்ந்தவர்களும் அடைவர். அரசனுடைய பணியாளர்களின் குழந்தைகள் ஒரு முயற்சியுமின்றித் தம் தந்தைமார்கள் பெறும் நலங்களைத் தாங்களும் பெறுவதை உலகில் காணவில்லையா? இக்கருத்தே இங்குப் புலப் படுகின்றது. பசுவோ, மனிதனோ, பறவையோ ஸ்ரீ பாகவதர்களை அண்டினால் அவர்களின் முயற்சியாலேயே ஸ்ரீ வைகுண்டத்தை அடைகின்றனவென்று சாண்டில்ய ஸ்ம்ருதியும் கூறுகின்றதே!

24.2 விபீஷணன் இராமனை அணுகி முக்கரணங்களையும் பயன்படுத்திய வகை

இப்படி கீழே ஸ்ரீவிபீஷணாழ்வான் தன் பரிவாரமான நால்வருடன் பெருமாள் திருவடிகளைப் பெற்றதைக் கூறியாயிற்று. பரமபதம் சென்றவனுக்கும் ஸ்ரீ வைகுண்டநாதனுக்கும் ஸம்பாஷணம் நடப்பது போல் இங்கு ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கும் பெருமாளுக்கும் நடந்த ஸம்பாஷணையைப் பேசி அதன் வாயிலாக எம்பெருமானைப் பெற்ற இன்பச் சுவையின் விளைவுகளை வால்மீகி விளக்குகின்றான்.

பெருமாள் திருவடிகளிலே விபீஷணன் தன்னுடையவும் தன்னைச் சேர்ந்தவர்களுடையவும் பொறுப்பைத் தன் உள்ளத்தால் ஸமர்ப்பித்துவிட்டபடியால் மனம் படைத்த பயனைப் பெற்றான். பெருமாள் திருவடிகளில் விழுந்தபடியாலே சரீரம் படைத்த பலனைப் பெற்றான். இப்பொழுது வாக்கு என்னும் கருவியும் நற்பயனைப் பெறும்படி பெருமாளுக்கு ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்கின்றான் விபீஷணன். இப்படி அவன் முக்கருவிகளையும் பெருமாள் விஷயத்திலே பயன்படுத்தினான். ஒரு தலைவனை அவனுக்கு அடங்கிய ஒருவன் மகிழச் செய்தால் தலைவன் அதற்கு அடையாளமாக அவனுக்குத் தன் அருகே இடம் கொடுத்து அமரச் செய்யவேண்டுமென்று நீதி சாஸ்த்ரம் கூறுகின்றது. அவ்வாறே பெருமாள் மகிழ்ந்து விபீஷணனுக்குத் தன் திருவடிப்பக்கத்தில் இடமளித்தான். அந்த இடம் ஸாதாரணமானதா? இளைய பெருமாளும் மஹாராஜரும் கூட அந்த இடத்தை அணுக நடுங்குவார்களே அத்தகைய திருவடிகளின் அருகே அமரும்படி பெருமாள் நியமித்தான்.

விபீஷணன் இராமனோடு நேரில் பேசத் தொடங்குதல்: அப்பொழுது விபீஷணன் தன்னைப் பெருமாள் க்ஷேமம் விசாரிக்கக் கூட இடம் தராது பேசத் தொடங்குகின்றான். முன்பு வானர முதலிகளைக் கூப்பிட்டு அவர்களைக் கொண்டு

Scanned with CamScanner

இராமனிடம் விண்ணப்பம் செய்தான். இப்பொழுதோ 'எங்களோடு ஸமமாக இவனையும் கொள்ள வேண்டு' மென்று அவர்களே கூறும்படி பெருமை பெற்றுவிட்டவனாதலின் பெருமாளுடன் நேரிலேயே வார்த்தை சொல்லப் பெற்றான். பின் அவன் பெருமாளிடம் ஏகாந்தத்திலேயே பேசத் தொடங்கினான். அப்பொழுது ராவணன் வழியிலேயே ஒதுங்கி நிற்கும் அரக்கர்களின் குடல் எல்லாம் வெந்து கரியாகும்படி செய்தது அந்தச் சூழ்நிலை. பெருமாள் இவனுக்கு முன்பு அபயம் அளித்தவுடனேயே இவன் நெஞ்சில் இருந்த அச்சமெல்லாம் இவனுக்கு எதிரிகளான அரக்கர் நெஞ்சிலே போய்ப் புகுந்து கொண்டது. இவன் பேச்சில் தான் எத்தகைய தர்மம் அடங்கியுள்ளது. மற்ற தர்மமெல்லாம் அதன் பலனைக் கொடுத்து அழிந்து விடும். இவன் கூறும் சரணாகதி தர்மமோ இவன் பேர் சொன்னவர்களையெல்லாம் ரக்ஷிக்கும்படி எந்நாளும் குறைவு படாத தர்மமாயன்றோ உள்ளது! மேலும் நன்றியறிதல் என்ற சாச்வதமான ஒரு தர்மத்தையன்றோ இவன் பேச்சுப் பொதிந்து கொண்டுள்ளது!

24.3 விபீஷண சரணாகதியில் த்வயார்த்தம் - விளக்கம்

24.3.1 'அநுஜோ ராவணஸ்ய' என்ற சுலோகம் த்வயத்தின் பூர்வகண்ட விவரணமாதல் - விளக்கம்

பெருமாள் செய்த உபகாரத்தைத் தான் நினைத்துக் கொண்டிருப்பதற்கும் வானர கோஷ்டி தன்னிடம் கொண்டுள்ள மதிப்புக்கும் பொருத்தமாகப் பெருமாள் திருமுன்பே விபீஷணன் சில வார்த்தைகளை விண்ணப்பிக்கின்றான். அவன் சொல்லைப் பெருமாள் கேட்டுப் போதுமென்று நினையாது மேலும் மேலும் கேட்க வேண்டுமென்ற ஆவலை வளர்ப்பதாய்ப் பெருமாள் செவிக்கும் இனிய செஞ்சொல்லாகவன்றோ உள்ளது இவன் பேச்சு! இதைக் கேட்டபின் இதற்கு மேல் ஒரு பயனும் வேண்டுமென்று நினைக்க வேண்டாதபடி கேட்கும்போதே அநுபவரஸம் எல்லையைக் கடந்து நிற்கும்படி அவ்வளவு இனியதாகவன்றோ உள்ளது விபீஷணன் சொல்!

மேலே இரண்டு சுலோகங்கள் விபீஷணன் சொல்லாக அவதரிக்கின்றன. அவை இரண்டும் த்வயத்தின் இரண்டு பகுதிகளின் கருத்தை விளக்குவதாய் அமைந்துள்ளன.

விபீஷணன் விண்ணப்பம் செய்கின்றான் - 'அடியேன் ராவணனுக்குத் தம்பி. ராவணன் உலகுக்குச் செய்த அநியாயமோ எல்லையைக் கடந்தது. மூவுலகில் உள்ளோரும் கூடினாலும் அவனிடம் சென்று அவன் செய்த அநியாயத்தைப் பற்றி ஒரு வார்த்தை கேட்க முடியுமா? உலக முழுதும் அவன் தீங்கைப் பொறுக்க முடியாமல் கதறும்படி செய்தானே! அவன் வஸித்ததால் அசுத்தமடைந்த வயிற்றில் அவனுக்குப் பின் பிறந்தவன் அடியேன். என்னிடம் உள்ள குற்றங்களை நேரில் கண்டு ஸாத்துவிகப் பெரியோர் என்னை அவமதித்தார்களாகில் அதுவும் எனக்கு ஒரு பெருமையே ஆகும் (குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் பெறுவது சிறக்குமென்பார்களே!) அப்படி இல்லையே என் கதி ! நான் நல்லுரை கூறித் திருத்துவதற்கு இவன் தகுதியுடையனா? அல்லனா? என்று ஆராயாமல் ராவணனுக்கு நல்லுரை கூறப் போனேன். அவனோ பாபச் செயல்களைப் புரிவதில் முடி சூடி நிற்பவன் என்னைத் தான் அவமதித்தது மட்டுமன்றித் தன் 'ஆளையிட்டும் அவமதிக்கச் செய்தான். ஆதலின் அவன் கோஷ்டிக்கும் ஆகாதவனாய்ப் போனேன். தேவரீர் உலகில் மக்களிடம் உள்ள அம்சங்களைக் கவனியாமல் ஸகல லோகத்துக்கும் புகலிடமாயுள்ளவராகையாலே ராவணனிலும் தாழ்ந்த எனக்கும் புகலிடமாவீர் என்று ஒரு ஞானத்தெளிவு என் புத்தியில் முன் வந்து நின்றது. இதுவும் பிரமனது வரப்ரஸாதத்தால் ஏற்பட்ட நல்லறிவாகும். ரக்ஷிப்பதற்கு உரிய குணங்களெல்லாம் நிறையப் பெற்ற தேவரீரைச் சரணமடைந்தேன். '

24.3.2 விபீஷணன் கூறியது மறுமுறை - சரணாகதி அன்று - நன்றியைத் தெரிவித்தல் மட்டுமே

விபீஷணன் முன்பே வானர முதலிகளை முன்னிட்டுக் கொண்டு ப்ரபத்தியைச் செய்தாயிற்று. அதற்குப் பலனாக அபயமளிக்கப் பெற்றுவிட்டான். இப்பொழுது இங்கு மறுபடியும் சரணாகதி செய்ததாகாது. தன் தாழ்வைச் சொல்லிக் கொண்டு தனக்கும் பெருமாள் அபயமளித்துப் புகலிடமாகி விட்டதற்காகத் தன் நன்றியறிவை வெளிப்படுத்திக் கொண்டாடுகின்றான் விபீஷணன். (இதனால் த்வயத்தில் முற்பகுதி கூறும் சரணாகதியை வெளியிட்டதாயிற்று.)

Scanned with CamScanner

24.3.3 'பரித்யக்தா மயா லங்கா' என்ற சுலோகம் த்வயத்தின் உத்தரகண்ட விளக்கமாதல்

முதலில் கலங்கிய மஹாராஜர் முதலியோர்களின் கலக்கத்தைத் தீர்க்கப் பெருமாள் அருளிச் செய்த வார்த்தைகளில் விபீஷணன் இராச்சியத்தைப் பெற விரும்பி வந்திருப்பதாகக் கூறியதும் ஒன்று. அதனால் தனக்கு ஒரு பழி வந்து விட்டதாய்க் கருதுகின்றான் விபீஷணன். அந்தப் பழியைத் தீர்த்துக் கொள்வதற்காகத்தான் ராம கைங்கர்யத்தைத் தவிர வேறொன்றையும் நாடாதவன் என்பதைத் தன் வாயினால் வெளியிட்டுக் கொள்ளுகின்றான் - 'ஸ்வாமி! இலங்கை நகர் எங்களுக்குப் பரம்பரையாய்த் தலைநகராயிருந்து வந்திருக்கின்றது. அந்த நகரைச் சிறிதும் தொடர்பின்றி விட்டு விட்டேன். விஷ்ணுவின் மதத்துக்கு வெளிப்பட்டவர்களான யவன வகுப்பினர்களின் நாடுகளை ஸாத்துவிகர்களான பெரியோர்கள் விலக்குவது போல் இலங்கையைச் சிறிதும் பற்றின்றி விட்டொழித்தேன். அவ்வூரில் என் தொடர்புள்ள ஸகல வஸ்துக்களையும் அருவருத்தேன். அப்படி அடியோடு ஒழித்த பின்பும் தேவரீர் இலங்கையை மறுபடி எனக்கு அளித்தால் கூட இலங்கையென்ற பெயரில் எனக்கு ஒரு விலங்கு பூட்டுவதாகவே நினைத்து நடுங்குவேன். 'நண்பனுக்குத் துரோகம் செய்தால் பாபம் உண்டு' என்கிறது சாஸ்த்ரம். ஆயினும் இலங்கையில் உள்ள என் நண்பர்கள் தேவரீருக்கு எதிரிகளாகையால் எனக்கும் எதிரிகளாகவே நினைத்து அவர்களையும் கைவிட்டேன். ஆபத்துக் காலத்தில் உதவிக்காகச் செல்வத்தைக் காக்க வேண்டும் என்று சொல்லப்பட்ட செல்வங்களையும் விட்டொழித்தேன். செல்வத்தின் தொடர்புதான் ஆபத்துக்குக் காரணமாகும் என்று கண்டறிந்தேனே! எதற்கு அந்தச் செல்வங்கள் உறவினர்களின் தொடர்பு தேவரீர் திருவடியிலே கைங்கர்யம் செய்யத் தடையாகுமென்று அவர்களையும் விட்டொழித்தேன்.

இப்படி நாட்டார் நல்ல பயனாகக் கருதுமவற்றையெல்லாம் அடியேன் விட்டொழித்த போதிலும் அவற்றை இழந்து விட்டேனே என்று மனக்குறை அடியேன் நெஞ்சிலே இருக்குமோ என்று நினைக்க வேண்டாம். திருப்பாற்கடலில் வாய் வைத்துப் பருகிச் சுவை கண்டவன் நாய்ப்பாலைக் குடிக்க வாய்ப்பு இல்லாமைக்குக் குறைப்படுவது உண்டோ ! அநுபவத்துக்கு வேண்டிய கருவிகளும் அநுபவிப்பவனான என்னுடைய

இருப்பும் போகங்களும் எல்லாமே தேவரீரை அநுபவித்தலென்னும் மிகப் பெருங்கடலின் பல நிவலைகளில் ஒன்றாக ஒதுங்கிக் கிடக்குமே! பெருங்கடல் நீரில் பசுவின் குளம்படிச் சுவட்டில் தேங்கிய நீரும் அடங்கியிருப்பதாகக் கூறுவது போலன்றோ உள்ளது!' என்று விண்ணப்பித்தான். இது த்வயத்தில் பிற்பகுதியில் கூறிய பயனை விளக்கியதாகும்.

24.3.3.1 பற்றற்ற விபீஷணனுக்கு இலங்கை ஆட்சி வந்த காரணம்

இப்படி வேறு ஒரு பயனையும் நாடாமல் பெருமாள் திருவடித் தொண்டையே விரும்பிய விபீஷணாழ்வானுக்குப் பின்பு இலங்கையரசாட்சி வந்தது எப்படி? என்று கேட்கலாம். பெருமாளுடைய நியமநத்தைத் தலைக்கட்டுவதிலேயே சுவை காண்பவன் விபீஷணன். கைங்கர்யத்தையே விரும்பி வேறொன்றையும் நாடாத பக்தனுக்குச் செல்வங்கள் தாமாகவே விரும்பி வந்து சேரும் என்கிற முறையில் விபீஷணன் வேண்டாமலே பெருமாள் அவனுக்குத் தானாகக் கொடுத்தது இலங்கையரசாட்சி என்று உணர்க.

இவ்வாறு சரணமடைந்த விபீஷணன் பேசிய பேச்சிலே மிக மிக ஈடுபட்ட பெருமாளுக்கு அவன்பால் கருணை சுரந்தது. அதனால் பெருமாள் அருளிச்செய்த முறையை வால்மீகி பகவான் விளக்குகின்றான். விபீஷணன் எம்பெருமானையன்றி வேறு புகலற்றவன். அவனையன்றி வேறு பயனையும் நாடாதவன். அவன் பெருமாளிடம் பேசிய விண்ணப்பச் சொல்லோ தன்னிடம் வேறு ஒரு கைம்முதலில்லாமையையும் வேறு புகலற்ற தன்மையையும் வெளியிட்டுக்கொண்டு த்வயத்தின் பொருளான சரணாகதியையும் அதன் பலனையும் வெளியிடுவதாகவுள்ளது. அதைக் கேட்டருளினான் பெருமாள். தன் சொல்லாலே விபீஷணனைத் தேற்றியருள்கின்றான் பெருமாள். 'விபீஷணரே! இப்பொழுது நாம் உம்மை ஏற்பதற்கு முன் நீர் பட்ட சிறுமையெல்லாம் எம்மாலல்லவோ ஏற்பட்டன. இதை நினைக்கும் போது எம் மனம் மிகவும் கஷ்டமடைகின்றது. நீர் சரணமடைந்தவுடனேயே எம்மிடம் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள நேர்ந்திருந்தால் எமக்குச் சிறுமையே இருந்திராது. அது நேராமையால் நாமே சிறுமையடைந்து குற்றவாளராய்க் கெட்டோம்' என்ற முறையில் பல இனிய சொற்களாலே விபீஷணனை உருகச்செய்து பேசியருளினான்.

Scanned with CamScanner

பேசும்போது விபீஷணனைப் பார்த்துக் கொண்டே அனுபவிக்கின்றான் பெருமாள். பெருவிடாயுற்றவன் தண்ணீரைக் கண்டால் எப்பொழுதாவது விடுவானா? அவ்வாறே எல்லையற்ற ஆசையுடன் விபீஷணனைப் பெருமாள் அநுபவிக்கின்றான். தன் திருக் கண்களாலே அவனைக்குளிரக் கடாக்ஷிக்கின்றான். அந்தத் திருக்கண்கள் விபீஷணன் விஷயத்தில் விலையற்ற கருணை நல்லெண்ணம் அன்பு எல்லாவற்றையும் பொதிந்து கொண்டுள்ளன. அவன் கடாக்ஷிப்பது ஸ்ரீவைகுண்டநாதன் தன்பால் வரும் முக்தனைக் கடாக்ஷித்தருள்வது போலிருந்தது. அந்தக் கடாக்ஷம் விபீஷணன்மேல் படும்போது ஆலங்கட்டியை வீசியெறிந்தாற்போலே அவனுடைய ஸகல தாபங்களையும் போக்கிக் குளிரச் செய்கின்றது. இவ்வாறு செய்துகொண்டு சில சொற்களைப் பேசியருளினான் பெருமாள்.

இராமன் செயல்கள் ஒரே முறையில் பயன் தரும் சிறப்பு. வால்மீகி பகவான் இராமனைப் பற்றிக் கூறுகின்றான். இராமபிரான் இருமுறை அம்பு தொடுப்பதில்லை. ஒரு முறை தொடுத்தாலே பகைவர் மாண்டுவிடுவாரே! தன்னை அண்டியவர்களை இருமுறை நிலைநாட்டுவதில்லை. ஒருமுறை ஸ்தாபித்துவிட்டபின் அதற்குக் கேடு ஏது? யாசிப்பவர்களுக்கு இருமுறை கொடுப்பதில்லை. முதன்முறை கொடுப்பதுவே ஏழு தலைமுறைக்குப் போதுமே! இரு சொல் சொல்வதில்லை. ஸத்யமே உருவெடுத்தவனல்லனோ இராமபிரான்! இந்த அம்சங்களெல்லாம் முழுதும் உண்மையென்னும்படி அத்தகைய குணச் சிறப்புடைய பெருமாள் ஸ்ரீ விபீஷணாழ்வானது கார்யத்தைப் பற்றி மறுபடி சொல்லவேண்டியது எதுவுமே இல்லை. ஆனால் தான் அவதரித்தது எதற்காக? பாபிகளை அழிப்பதற்குத் தானே! அதற்கு வேண்டிய அளவுக்கு அரக்கர்களின் வலிமை அதன் குறைவு முதலியவற்றைக் கூறும்படி விபீஷணனைக் கேட்டருளினான். இதற்கு மேல் நடப்பதெல்லாம் ஸ்ரீவிபீஷணாழ்வான் ஆசைப்பட்ட கைங்கர்யத்துக்குச் சாதனமான பாரிப்ப எனக் கண்டு கொள்க.

அபயப்ரதாநஸாரம் முற்றும்

இடவெந்தை எந்தை பிரான்

श्रीः

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

रहस्यशिखामणिः

ரஹஸ்ய சிகாமணி

स्थिरचरजगन्मातुः क्षोण्याः क्वचिच्चतुर्णवी-
विपदि सपदि क्रोडक्रीडां विभावयतः प्रभोः ।

श्रुतिपरिपणश्लोकद्वन्द्वात्मना परिपक्त्रिमो ।
रमयतु मनः सत्वस्थानां रहस्यशिखामणिः ॥ (1)

क्वापि कल्पान्तवेशन्ते खुरदघ्ने समुद्धृताम् ।
वहते मेदिनीमुस्तां महते पोत्रिणे नमः ॥ (2)

---

(1) स्थिरचर-जगन्मातुः - ஸ்தாவரம்-ஜங்கமம் என்ற பிரிவுகளைக் கொண்ட உலகத்துக்குத் தாயாய் விளங்கும்; क्षोण्याः - பூமிப் பிராட்டிக்கு; क्वचित - ஒரு சமயத்தில்; चतुर्णवी विपदि - நான்கு கடல்களில் மூழ்கும் அபாயம் ஏற்பட்ட போது; सपदि - உடனே; क्रोडक्रीडां - ஸ்ரீவராஹ அவதார லீலையை; विभावयतः - செய்கின்ற; प्रभोः - எம்பெருமானுடைய; श्रुति-परिपण - வேதஸாரமான; श्लोकद्वयात्मना - இரண்டு ச்லோகங்களாக; परिपक्त्रिम - விரிவாக அவதரித்த; रहस्य-शिखामणिः - ரஹஸ்ய சிகாமணி என்ற இந்த நூல்; सत्वस्थानां - ஸத்துவ குணம் நிரம்பிய மஹான்களின்; मनः - மனதை; रमयतु - மகிழ்ச்செய்யட்டும்.

(2) खुरदघ्ने - குளம்பளவே ஆழமுள்ள; क्वापि कल्पान्त-वेशन्ते - ஒரு ப்ரளயக் கடலிலிருந்து; समुद्धृतां - மீட்கப்பட்ட; मेदिनी-मुस्तां - பூமியாகிற கோரைக்கிழங்கை; वहते - தாங்குகிற; पोत्रिणे - பெரிய திருமேனியுடன் கூடிய வராஹனுக்கு; नमः - வணக்கம்.

திருத்தம் பெரியவர் சேரும் துறையில் செறிவிலர்க்கு
வருத்தம் கழிந்த வழியருளென்ற நம் மண்மகளார்
கருத்தொன்ற ஆதிவராக முரைத்த கதியறிவார்
பொருத்தம் தெளிந்துரைக்கப் பொய்யிலாமதி பெற்றனமே 20

1 வேதங்களின் உண்மைப் பொருளை அறிய ஸாத்துவிக புராணங்களே கைக்கொள்ள உரியன

इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ।
बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रतरिष्यति ॥[1]

என்கிறபடியே वेद–उपबृंहणार्थமாக[a] प्रवृत्तங்களான[b] புராணங்களில் ஸங்கீர்ண[c]-ராஜஸ-தாமஸ-புராணங்களுக்குக் காரணதோஷமும் பாधக-प्रत्ययமும்[d] உண்டானபடியாலே இவற்றை தரிக்கும்வர்கள் 'இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும் வலிந்து வாது செய்வீர்களும்'[2] என்று वेद-बाह्य[e]-கோடியிலே கோப்புண்டார்கள். ஸாத்விக புராணங்களுக்குக் காரண दोஷமும் बाधक–प्रत्ययமும்[f] இல்லாதபடியாலும் वैदिक–परिग्रह–प्राचुर्यத்தாலும் இவையே उपबृंहणங்களில்[g] உபாदेயதமங்கள்[h].

2 ஸ்ரீவராஹ புராணத்தின் ஒப்பற்ற சிறப்பு

இவை தம்மில் ஸ்ரீ வராஹ புராணம்

பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்கு, பண்டொருநாள்
மாசுடம்பில் நீர் வாரா மானமிலாப் பன்றியாம்,
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்,
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.

என்கிறபடியே ஒன்றாலும் சலிப்பிக்கவொண்ணாதபடி[i] तत्त्व-हित–पुरुषार्थங்களில்[j] सुप्रतिष्ठितமாயிருக்கும்[k].

2.1 ஸ்ரீ வராஹ புராணத்தை உபதேசித்தவரின் சிறப்பு

இதற்கு வக்த்ரு-வைலக்ஷண்யத்தாலும்[l] श्रोतृ- வைலக்ஷண்

a-வேதங்களின் பொருளைத் தெளிவாய் அறிவதற்காக; b-முற்பட்ட; c - சிதறிக் கிடக்கின்ற; d - விபரீதக் கருத்து; e- வேதத்துக்குப் புறம்பான நாஸ்திகர் கோஷ்டி; f வைதிகர்கள் மிகுதியாக ஏற்றுக் கொள்ளல்;

g- வேதங்களின் பொருளை விளக்கும் நூல்கள் ; h- மிகவும் ஏற்றுக் கொள்ள உரியன ; i- அசைக்க; j- தத்துவம் - உபாயம் - பலன் ; k- பொருள் விளக்குவதில் உறுதியாய் நிற்பன ; l- சொல்லுபவரின் சிறப்பு.

20 **திருத்தம் பெரியவர்** - திருந்திய ஜ்ஞாநம் அநுஷ்டாநம் இவற்றால் பெரிய மஹர்ஷிகளால்; **சேரும் துறையில்** - அநுஷ்டிக்கப்படும் (பக்தியோகம் முதலிய) உபாயத்தில்; செறிவு இலர்க்கு - முயல்வதற்கு வேண்டிய அதிகாரம் இல்லாதவர்க்கு; வருத்தம் கழிந்த - சிரமமில்லாமல் எளிதில் அனுஷ்டிக்கக்கூடிய; வழி அருள் என்ற - உபாயத்தைத் தேவரீர் அருள்புரிய வேண்டுமென்று ப்ரார்த்திக்க; நம் மண்மகளார் - நம் பூமிதேவியினுடைய; கருத்து ஒன்ற - எண்ணத்திற்கு ஏற்ப; ஆதிவராகம் உரைத்த-ஆதிவராஹப்பிரானாய் அவதரித்த எம்பெருமான் வெளியிட்ட; கதி அறிவார்-(ப்ரபத்தியென்னும் உபாயத்தின் ஸ்வரூபத்தை அறிந்த நம் ஆசார்யர்கள்; பொருத்தம் தெளிந்து உரைக்க - நம் தகுதியைக் கண்டு (அவ்வுபாயத்தையே) உபதேசிக்க; பொய் இலாமதி பெற்றனம் - அழிவு இல்லாத ஜ்ஞாநத்தைப் பெற்றோம்.

1 பார. (ஆதி -1 - 290) : இதிஹாஸம் - புராணம் இவற்றின் உதவி கொண்டு வேதத்தின் பொருளை விளக்கமாய் அறிய வேண்டும். அரைகுறைப் படிப்புள்ளவனிடம் அவன் தவறான பொருள் கூறித் தன்னை மோசம் செய்து விடுவானென்று வேதம் அஞ்சுகின்றது.

2 இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்,
வலிந்துவாது செய்வீர்களும் மற்றுநுந் தெய்வமுமாகி நின்றான்.
மலிந்து செந்நெல்கவரி வீசும் திருக்குருகூரதனுள்,
பொலிந்து நின்ற பிரான்கண்டீர் ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே

திருவாய். (4-10-5) : லிங்க புராணத்தை ஆதாரமாகக் கொண்ட சைவர்களும் ஜைநமதத்தினரும் பௌத்த மதத்தினரும் பயனற்ற யுக்திகளைக் கொண்டு பிடிவாதமாக வாதம் செய்யும் நீங்களும் மற்றும் உங்கள் தெய்வமும் எல்லாமாக நிற்பவன் நாராயணனே.

3 பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்கு, பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாராமானமிலாப்பன்றியாம்,
தேசுடைய தேவர் திருவரங்கச்செல்வனார்,
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.

நாச்சியார் திரு. (11-8) : முன்னொருகால் பூமிப்பிராட்டி கடலுள் மூழ்கிப்பாசி படர்ந்து கிடந்த பொழுது எம்பெருமான் வராஹ வடிவு கொண்டான். அழுக்கு நிறைந்த அவ்வுடம்பில் நீர் ஒழுகிக் கொண்டேயிருக்கும்படி இழிவான மிகப் பெரிய பன்றியுருவைக் கொண்டான். அப்படியும் தேஜஸ் குறையாமல் பிரகாசித்த திருவரங்கன் அந்தப்பன்றியுருவுடன் சொல்லிய பேச்சுக்கள் நம் உள்ளத்திலிவ்று அகற்ற முயன்றாலும் அகற்ற முடியாதன.

யத்தாலும்[a] அதிசயம் உண்டு. வக்த்ரு - வைலக்ஷண்யம் ஏதென்னில், இதற்கு वक्तावान்[b] ஞானப்பிரான்[c] भ्रमविप्रलम्भ-प्रमाद-अशक्ति-संभावனையையுடைய[d] க்ஷேத்ரஜ்ஞரைப்[e] போலன்றிக்கே स्वतः ஸர்வஜ்ஞனாகையாலே[f] இவனுக்கு भ्रमமும்[g] प्रमादமும்[h] கூடாது. प्रत्युपकारादि-நிர பேக்ஷ-பரம-காருணிகனாகையாலே[i] आश्रितர்[j] திறத்தில் இவனுக்கு विप्रलम्भकत्वமும்[k] घटியாது[l].

'सर्वज्ञः सर्वदृक् सर्वशक्तिज्ञानबलर्द्धिमान्'[1]

इत्यादிகளிற்படியே ஸர்வ-சக்தியாகையாலே இவனுக்கு அசக்தி - ப்ரஸங்கமும்[m] இல்லை.

2.1.1 வராஹப்பிரானுக்கு மற்ற அவதாரங்களினும் சிறப்பு

இவ்வவதாரத்திற்கு இவன் தன்னுடைய अवस्थान्तरங்[n]களிலுங்காட்டில் ஏற்றமுண்டு. எங்ஙனே என்னில்,

இவ்வவதாரம் ஒரு வழியாலே கரையேறினவர்களைக் கூட்டிக்கொண்டிருக்கிறவளவேயான பரரூபம் போலன்றிக்கே அழுந்தினவர்களைக் கரையாதபடி[o] எடுத்துக்கரையேற விடும் படியாயிருக்கும்.

வ்யூஹங்களைப்போலே भक्तரானவர்கள் ஆச்ரயிக்க மேலான நிலத்தில் இருக்கையன்றிக்கே 'பார்வண்ண மட மங்கை பத்தர்'[2] என்கிறபடியே आश्रितர் பக்கல் தன் भக்தி[p] தோன்ற கேழலாய்க் கீழ்புக்கிடந்திடும்[3] என்கிறபடியே அவர்களிருந்த கீழ்நிலத்திலும் சென்று தடம் பெருந்தோளாரத் தழுவும்[4] என்னும்படியாயிருக்கும்.

मत्स्यावतारம் போலே தான் பெற்ற ப்ரஜைகள் உலாவித் திரியும் அளவிலே ஈக்ஷண - மாத்ரத்தாலே[q] ரக்ஷிக்குமள வன்றிக்கே இங்கே ப்ரஜைகள் நினைக்கவும் மாட்டாதே काष्ठ-पाषाणसन्निभராய்[r] விழுந்து கிடக்கின்றவளவிலே அவர்களுக்கு அடைத்த[s] நினைவைத் தான் அநுஷ்டித்து ரக்ஷிக்கிறான் என்னும்படிக்குத் தன் பாசுரமே உண்டு.

கூர்மாவதாரம் போலே ஒரு भूधरம்[t] भ्रமிக்கைக்கு[u] अधिष्ठान[v]மாய் நிற்கையன்றிக்கே, இதுதான் भूधरமுமாய்[w] भूमियும்

a- கேட்பவரின் சிறப்பு; b- சொல்லுபவன்; c- வராஹப் பெருமான்; d- ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல் - பிறரை வஞ்சித்தல் - கவனக் குறைவு - சக்தியற்றமை இவை இருக்கலாமோ என்ற எண்ணம்; e- ஜீவர்; f- இயற்கையாக அனைத்தையும் அறிந்தவன்; g- ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல்; h- கவனக்குறைவு; i- பிரதியுபகாரம் முதலியவற்றை எதிர்பாராத - எல்லையற்ற கருணையுடையன்; j- அண்டியவர்; k- பிறரை வஞ்சித்தல்; l- ஏற்படாது; m- சக்தியில்லையென்ற நிலை; n- மற்ற நிலைகள் (அவதாரங்கள்); o- குலைந்து போகாதபடி; p- அன்பு (பங்கு); q- கண்ணால் பார்ப்பது மட்டும்; r- கட்டை, கல் போன்றவர்; s- விதிக்கப் பட்ட; t- மலை; u- சுழலுகை; v- ஆதாரமான இடம்; w- பூமியைத் தரிப்பது.

1 व्यक्ताव्यक्तस्वरूपस्त्वं समष्टिव्यष्टिरूपवान् ।
सर्वज्ञ : सर्वदृक् सर्वशक्तिज्ञानबलर्द्धिमान् ॥

வி.பு. (5-1-47): (பிரமன்துதி) நீ எல்லாவற்றையும் வடிவாக உடையவன், ஞானவடிவன், எல்லாவற்றையும் கண்முன் காண்பவன், எல்லாம் செய்தற்கு ஏற்ற சக்தி, ஞானம், பலம், செல்வம் மிக்கவன்.

2 கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமலவண்ணம்,
பார்வண்ணமடமங்கைபத்தர்பித்தர்
பனிமலர்மேல்பாவைக்குப் பாவம் செய்தேன்,
ஏர்வண்ணவென்பேதை என்சொல் கேளாள்
எம்பெருமான் திருவரங்கம் எங்கே? என்னும்,
நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேனென்னும்
இதுவன்றோ நிறைவழிந்தார் நிற்குமாறே!

திருநெடுந் (18): அழகும் மடமையும் நிறைந்த பூமிப்பிராட்டியிடம் ஈடுபட்டவன் எம்பெருமான்

3 கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க்கீழ்புக்கு
இடந்திடும், தன்னுள் கரக்கும் உமிழும்,
தடம் பெருந்தோளாரத்தழுவும் பாரென்னும்
மடந்தையை, மால்செய்கின்றமால் ஆர்காண்பாரே?

திருவாய். (2-8-7): நீருக்கும் சோற்றுக்கும் சளைக்காத வராஹவுருக் கொண்டு ப்ரளய ஸமுத்ரத்துக்குள் முழுகி அங்கே அண்டத்தின் சுவரில் ஒட்டிக்கிடந்த பூமியைப் பிரித்து எடுப்பவன் எம்பெருமான்.

4 **திருவாய். (2-8-7):** வராஹவுருக்கொண்ட பெருமான் தன் அகன்ற பெரிய தோள்களாலே பூமிப்பிராட்டியைப் பரிபூர்ணமாகத் தழுவிக் கொள்வான். பாசுரம் : குறிப்பு 3.

பூதரங்களும் கலங்காதே, 'நான்றில ஏழ்மண்ணும் தானத்தவே பின்னும் நான்றில ஏழ்மலைத்தானத்தவே..... அப்பன் ஊன்றி இடந்து எயிற்றில் கொண்ட நாளே'[1] என்னும்படி நிலைநிற்கப் பண்ணு மதாயிருந்தது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ- அவதாரம் போலே தட்டுப்பட்ட தொன்றையும் பிளக்குமதன்றிக்கே இது பூமி எல்லாம் தட்டுப்படாதபடி अदृंहत्[2] என்கிறபடியே இறுகப் பண்ணுமதாயிருந்தது.

ஸ்ரீ வாமநாவதாரம் போலே 'பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று'த்[3] தன்னுடைய பூமியைப் பிறர் கொடுக்கக் கொள்ளுகையன்றிக்கே இது மஹாபலியான[a] அஸுரனை நிராகரித்துத்[b] தன் பூமியைத் தானே கைக்கொண்ட அவதாரமாயிருக்கும்.

விரோதி- நிராகரணத்திற்கு[c] மழு ஏந்த வேண்டும் பரசுராமாவதாரத்திற் போலன்றிக்கே இவ்வவதாரத்தில் விரோதி- நிராகரணத்திற்கு பூமிதானே ஸாக்ஷியாம்படியிருந்தது.

சக்கரவர்த்தித் திருமகனார் அவதாரம் போலே பூமியி லுள்ள चर-अचरங்களைத்[d] தன் पदத்திலே[e] ஏற்றுமளவன்றிக்கே இது பூமி தன்னைத் தோளிலே ஏற்றும் அவதாரமாயிருந்தது.

बलभद्र-अवतारம்[f] போலே பூமிக்கு க்ஷதியைப்[g] பண்ணுவ தொரு வந்தேறியான[h] உபகரணத்தைக்[i] கையிலே கொண் டிருக்கையன்றிக்கே இது பூமிக்கு க்ஷதி வராதபடி எடுக்கும் सहजமான[j] मुख्य-उपकरणத்தை[k] உடைத்தாயிருக்கும்.

'शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्' (91[2]) என்றவனுக்கு உபதேசிக்கத் தொடங்கிக் कर्मयोगादिகளிலே अधिकरित्துக்[l] கடையாயிருப்ப தொரு ஶ்லோகத்திலே परम-हित[m]த்தைக் காட்டின க்ருஷ்ணாவ தாரம் போலன்றிக்கே இது 'अहं शिष्या च दासी च भक्ता च त्वयि माधव'[4] என்றார்க்கு ஆரம்பத்திலே முழுகி மண்கொண்டு உப தேசிக்கும்படியாயிருந்தது. 'கற்கியாமின்னம்'[5] என்னும்படி

a- மிக்க வலிமை உடையவனாய் மஹாபலி என்று பெயர் கொண்ட; b- வலிமை யிழக்கச் செய்து ; c- எதிரிகளை ஒழித்தல் ; d-ஜங்கம தாவரங்கள்; e- தன் ஸ்தாநமாகிய மேலுலகம்; f- பலராம அவதாரம் ; g- பிளவு, குத்துதல், கேடு ; h - புதிதாய் வந்தது; i - கருவி (கலப்பை); j- இயற்கையாக அமைந்த (உடம்போடு தோன்றிய); k - முகத்தில் அமைந்த கருவி (கோரைப்பல்); l- செய்ய வழி கூறி; m- மிகச்சிறந்த உபாயம் (ப்ரபத்தி);

1 நான்றில ஏழ்மண்ணும் தானத்தவே, பின்னும்
நான்றில ஏழ்மலைதானத்தவே, பின்னும்
நான்றில ஏழ்கடல் தானத்தாவே, அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில் கொண்ட நாளே.

இறவாய். 7-4-3): பிரளயக் கடலுள் அண்ட பித்தியில் ஒட்டிக் கிடந்த பூமியைத் தன் கோரைப்பல்லாலே வராஹப்பிரான் குத்தியெடுத்த போது ஏழு தீவுகளும் ஏழு மலைகளும் தத்தம் இடங்களை விட்டு அகலாமல் இருந்தன.

2 **தைத்தி-ப்ராஹ் (1-1-3):** வராஹ பகவான் பூமியை இறுகச் செய்தான்.

3 பொல்லாக்குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று,
எல்லாவுலகும் அளந்து கொண்ட எம்பெருமான்,
நல்லார்கள் வாழும் நளிரரங்கநாகணையான்,
இல்லாதோம் கைப்பொருளும் எய்துவானொத்துளனே.

நாச்சியார் திரு. (11-5): வஞ்சநெஞ்சுடன் வாமன வடிவு கொண்டு தன் அதிய கையில் மஹாபலியிடம் தான நீரைப் பெற்று எல்லா உலகையும் அளந்து கொண்டவன் எம்பெருமான்.

4 अहं शिष्या च दासी च भक्ता च त्वयि माधव ।
रहस्यं धर्मसंयुक्तं तन्ममाचक्ष्व तत्त्वतः ॥

வராஹபு (114-64): நாதா! நான் உனக்குச் சிஷ்யை , அடியாள், உன்னிடம் பக்தி கொண்டவள். என் விருப்பத்தை மதித்து எல்லாப் பிராணிகளும் நற்கதி பெற எளிய உபாயத்தைக் கூற வேண்டுகின்றேன்.

5 ஆனானாளுடையானென்று அஃதே கொண்டு உகந்துவந்து
தானே இன்னருள் செய்து என்னைமுற்றவும் தானானான்,
மீனாய் ஆமையுமாய் நரசிங்கமுமாய்க்குறளாய்,
கானாரேனமுமாய்க் கற்கியாம் இன்னம் கார்வண்ணனே.

திருவாய் (5-1-10) : மழை பெய்ய முற்படும் மேகம் போன்ற நிறமுடைய எம்பெருமான் என்னோடு கூடிய ஆநந்தத்தை நான் அனுஸந்தித்ததையே பெரியதாகக் கொண்டு மிக மகிழ்ந்து வந்து மத்ஸ்ய கூர்ம வராஹ - நரஸிம்ஹ - வாமன அவதாரத் திருமேனிகளையெல்லாம் காட்டி இன்னும் கற்கியவதாரத்தையும் காட்ட முற்பட்டுள்ளான்.

भावि-उपकारकமான கல்கியவதாரம் போலன்றிக்கே இது भूत उपकारமுண்டான[a] அவதாரமாயிருந்தது.

ஆகையால் இப் पुराण प्रवर्तक[b] மான இவ்வவதாரத்திற்கு மானமில்லாதாற்போலே[c] உபமாநமும்[d] இல்லை. இவ்வவதாரத்தை मन्वादि-परमाप्त-परिगणनै யிலே[e] धर्मशास्त्र-प्रवर्तकர்கள்[f] தாங்களே சேர்த்தார்கள். இப்படி वक्तृ- வைலக்ஷண்யத்தாலே[g] இப்புராணம் உத்க்ருஷ்டம்[h]

2.2 ஸ்ரீ வராஹ புராணத்தைக் கேட்டவர் சிறப்பு

श्रोतृ வைலக்ஷண்யத்தாலும்[i] இது सर्व-उत्कृष्टம்[j]. எங்ஙனே என்னில், ஸ்ரீ பூமிப் பிராட்டியை ஜகத்திற்கு 'ईशाना'[1] என்று श्रुति சொல்லுகையாலே चेतन-अचेतन-रूपமான ஜகத்திற்காட்டில் இவளுடைய उत्कर्षம்[k] प्रसिद्धம்.

कृतागसः क्षाम्यति केशवः श्रितान्
अकिञ्चनांस्तान् कमला कटाक्षयेत् ।
न च प्रसज्य प्रतिषेधसीति यत्
क्षमा त्वमेवोर्वि सहस्व मामपि ।।[2]

என்கிறபடி ஸர்வம் - ஸஹையான[l] இவளுக்கு ஸர்வேச்வரனைக் காட்டிலும் பெரிய பிராட்டியாரைக் காட்டிலும் क्षमादि-गुण-भूयस्तै[m] உண்டாகியிருந்தது. இப்படியானால் இவளுக்குத் தங்களைக் காட்டில் ஏற்றத்தை ஸூரிகள் தாங்களே அறிவார்கள். ஆகையால் कर्म-वश्य[n] ரானவர்கள் स्वकार्यार्थமாகக்[o] கேட்க, உறவில்லாத क्षेत्रज्ञர்[p] உபதேசிக்க, प्रवृत्तங்[q] களான पुराणान्तर[r]ங்கள் போலன்றிக்கே ஸர்வ லோக - ஜநநியான[s] இவள் जगत् - हितार्थ[t]மாகக் கேட்க, 'पिताऽसि लोकस्य चराचरस्य'[3] என்கிறபடியே सर्व-लोक-पिता[u]வானவன் அருளிச்செய்ய प्रवृत्तமான[v] புராணமாகையாலே இது எல்லாவற்றிலும் அதிகம். 'सर्वेषामेव धर्माणामुत्तमो वैष्णवो विधि:'[4] என்று महाभारतத்தில் சொன்ன विशेष-धर्म-प्राचुर्यத்தாலும்[w] இது सर्व-उत्कृष्टம்[x].

3 மோக்ஷம் பெற நேர் உபாயமும் பரம்பரை உபாயங்களும்

இதில் முமுக்ஷுக்களுக்கு[y] साक्षाद्वा[z] परंपरया[A] वा मोक्ष-उपायமாக विहितங்களான[B] संमार्जन-[C] उपलेपन[D]- चूर्णचित्र[E]- मालाकरण[F]- दीपारोण[G] हविर्निवेदन[H]- नन्दन-वन-करण[I] – विमान – निर्माण[J] – प्रदक्षिण[K] – प्रणाम[L]-

---

a- முன்பே உதவி புரிந்த; b- இயற்றி வெளியிடுகின்ற; c- அளவு; d- உவமைப் பொருள் ; e- மநு முதலியவர்களான மிக்க உதவி செய்கிறவர்களை எண்ணும் நிலையில்; f- தர்ம சாஸ்த்ரங்களை நாட்டுக்கு வெளியிட்டவர்; g- சொல்லுபவரின் சிறப்பு; h- சிறந்தது; i- கேட்பவர்களின் சிறப்பு ; j- எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது; k- சிறப்பு; l- எல்லா வற்றையும் பொறுப்பவள்; m- பொறுமை முதலிய குணம் மிகுத்திருத்தல்; n- கர்மத்துக்கு வசப்பட்டவர்; o - தங்கள் பயனுக்காக; p-ஜீவர்; q- ஏற்பட்ட; r - மற்ற புராணங்கள்; s- எல்லாவுலகுக்கும் தாய்; t- உலகுக்கு நன்மை செய்வதற்காக; u - எல்லா உலகுக்கும் தந்தை; v- ஏற்பட்ட ; w- சிறந்த தர்மங்கள் அதிகமாயிருப்பது; x- எல்லாவற்றிலும் மேம்பட்டது; y - மோக்ஷத்தையே விரும்புமவர்; z- நேரிடையாகவோ ; A - படிப்படியாகவோ; B - விதிக்கப் பட்ட ; C - துடைப்பத்தால் பெருக்குதல்; D - மெழுகுதல்; E- கோலமிடுதல்; F- மாலை கட்டல்; G- தீபம் ஸமர்ப்பித்தல் ; H - தளிகை ஸமர்ப்பித்தல் ; I- பூந்தோட்டம் அமைத்தல்; J - விமாநம் நிருமித்தல்; K- வலம் வருதல்; L- வணங்குதல்.

1 अस्येशाना जगतो विष्णुपत्नी. *(பூஸூக்)* *பூமிதேவி இந்த உலகுக்கு ஈச்வரியாவாள்.*

2 ***(?) :*** *பூமிதேவியே! எம்பெருமான் அடியார்கள் பாபம் செய்தாலும் அவர்களை மன்னித்து விடுகிறான். அவல நிலையில் உள்ள அடியார்களைப் பெரிய பிராட்டியும் கருணையோடு கடாக்ஷிக்கிறாள். நீயோ அடியார்களிடம் குற்றம் கண்டு அதை மன்னிப்பது என்பது இன்றி நீயே பொறுமையுருக் கொண்டுள்ளாய். ஆதலின் என் குற்றத்தையும் பொறுத்துக்கொள்.*

3 पिताऽसि लोकस्य चराचरस्य त्वमस्य पूज्यश्च गुरुर्गरीयान् ।
न त्वत्समोऽस्त्यभ्यधिक : कुतोऽन्यो लोकत्रयेऽप्यप्रतिमप्रभाव ।।

கீதை (11-43) : *ஒப்பற்ற பெருமையுடையவனே! நீ தாவர - ஜங்கமமான இவ்வுலகம் முழுதுக்கும் தந்தையாயுள்ளாய். இவ்வுலகங்களுக்குப் பூஜிக்கத் தகுந்த குருவாகவும் உள்ளாய்.*

4 सर्वेषामेव धर्माणामुत्तमो वैष्णवो विधिः ।
रक्षते भगवान् विष्णुः भक्तानात्मशरीरवत् ।।

பார. (36-24) : *தர்மங்கள் அனைத்திலும் பகவதாராதமே மிகச் சிறந்தது. அதைச் செய்யும் பக்தனை எம்பெருமான் தன் சரீரத்தைப் போலே காக்கின்றான்.*

कथाश्रवण[a] - स्तुति[b] - संकीर्तन[c] - गुणकथन[d] - गीत[e] - नृत्त[f] - धारणा[g] - ध्यानादि[h] विशेष-धर्मங்கள் தம்மில்[i] सर्व-अधिकारமுமாய்[j] सुकरமு மாய்[k] स्वादुतमமுமான[l] उपाय-विशेषத்தைப்[m] प्रतिपादिக்கிற[n] இப் प्रकरणம்[o] उपजीव्यतमம்[p]

4 வராஹ சரம சுலோகம் கூறும் ப்ரபத்தி

இவ்வுபாய விசேஷம் 'सा हि सर्वत्र सर्वेषां सर्वकामफलप्रदा' *(95^{3})*, 'तावदार्तिः तथा वाञ्छा' *(80^{2})* इत्यादिகளிற்படியே यथाधिकारं[q] मोक्ष-तदुपायादिகளை साधिக்கவற்றாயிருக்கும்.[r]

5 வராஹ சரம சுலோகங்கள் : அவதார க்ரமம்

இத்தை ஸ்ரீभूमिப்பிராட்டி स्वभाविक[s] सार्वज्ञதைலே[t] அறிந்திருக்கச் செய்தேயும்- प्रजा-हितार्थமாக[u] माता கேட்க सर्व-भूत-सुहृत्தான[v] पिताஅருளிச் செய்த வார்த்தை என்று प्रसिद्धமாக[w] வேண்டுமென்று திருவுள்ளம் பற்றி அஜ்ஞருமாய்[x] அசக்தருமான[y] अधिकारिகளுக்கு गुरु-[z] உபாயத்தை विधिத்தால், அது குருவியின் கழுத்திலே கட்டின பனங்காய் போலேயாம்; இவர்களுக்கு विहितமான[A] अन्तिम-प्रत्ययமும்[B] மரண அவஸ் தையில் மநஸ்ஸு प्राप्त-விஷயத்தில்[C] प्रतिष्ठित[D] மாகமாட்டாதபடியாலே स्वयत्नத்தால்[E] साधिக்கப் போகாது. ஆனபின்பு ஸ்வரூப - परिकराதிகளால்[F] சுமையற்றதொரு लघु- உபாயத்தை[G] அருளிச் செய்யவேண்டும் என்று விண்ணப்பம் செய்ய सिद्ध-उपायभूतராய்[H] ஸர்வஜ்ஞரு மான[I] ஸ்ரீவராஹநயினார் தம்முடைய वशीकरणार्थமாக[J] साध्यமான[K] ஜ்ஞாநயஜ்ஞ-ஸாரத்தையும்[L] இவ்வளவாலே प्रसन्नராய்[M] 'சன்ம சன்மாந்தரங்காத்து அடியார்களைக் கொண்டு போய்த் தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ் கொள்ளும் படியையும்[1] 'स्थिते मनसि' என்று தொடங்கி இரண்டு ஶ்லோகத்தாலே அருளிச் செய்கிறார்.

இவ்வடைவே[N] द्वयத்தில் पूर्व-उत्तर-खण्ड[O]ங்களையும், चरम-ஶ்லோகத்தில் पूर्व-उत्तरार्धங்களையும்[P], 'स भ्रातुश्चरणौ गाढं'(254^{2}) 'भवांस्तु सह वैदेह्या'(254^{3}) என்கிற இரண்டு ஶ்லோகங்களையும் 'அகலகில்லேன்'(50^{5}) முதலான இரண்டு பாட்டுக்களையும் அந்யோந்ய-उपकारक[Q]ங்களாக अनुसन्धिப்பது.

6 வராஹ சரம சுலோகங்களின் கருத்து

6.1 முதல் சுலோகத்தின் கருத்து

இவை இரண்டில் पूर्वஶ்லோகம்[R] 'मत्कृते सर्वभूतानां लघूपायं वद प्रभो'[2] என்று கேட்ட உபாய-விசேஷத்தைக்[S] काल-अधिकार-प्रकार[T] விஷய - விசேஷங்களோடே கூடக் காட்டுகிறது.

---

a- சரிதை கேட்டல்; b- துதித்தல்; c- திருநாமங்களைச் சொல்லுதல்; d- குணங்களைக் கூறுதல்; e- இசை பாடுதல்; f- ஆநந்தக் கூத்தாடல்; g- பகவானுடைய திருமேனியை மனத்தில் கொள்ளுதல்; h- அவனை இடைவிடாது தியானித்தல்; i- உயர்ந்த தர்மங்கள்; j- எல்லோரும் செய்ய உரியது; k- செய்ய எளிது; l- செய்தற்கு மிக இனியது; m - சிறந்த உபாயம் (ப்ரபத்தி); n - விளக்குகின்ற; o - இந்தப்பகுதி ; p- நல்வாழ்வுக்கு ஏற்க மிகச் சிறந்தது ; q- தன் தகுதிக்கு ஏற்றவாறு ; r- முடித்துத் தர வல்லது; s- இயற்கையான; t - அனைத்தையும் அறியும் தன்மை ; u - மக்களின் நன்மை ; v- எல்லாப் பிராணிகளுக்கும் உற்ற தோழன்; w - எங்கும் பரவுவது; x - அறிவற்றவர்; y - செய்ய இயலாதவர்; z- கடின உபாயம்; A- அவசியம் என்று விதிக்கப்பட்ட ; B - மரணகாலத்தில் பகவானைப் பற்றிய நினைவு; C- கடமையான விஷயத்தில் ; D - நிலைபெற்றது; E- தன் முயற்சி ; F - உருவம், அங்கங்கள் முதலியன ; G - சிறிய (எளிய) உபாயம்; H- முன்பே உள்ள உபாயம் ஆனவர்; I- அனைத்தையும் உணர்ந்தவர்; J - வசப்படுத்தற்காக; K- செய்ய வேண்டிய; L- ஞானமாகிய வேள்வியின் ஸாரம் (ப்ரபத்தி); M- கோபம் நீங்கி மகிழ்ந்தவர்; N- இந்த வரிசைப்படி ; O - முற்பகுதி பிற்பகுதிகள் ; P- முற்பாதி பிற்பாதிகள்; Q - ஒன்றுக்கொன்று துணை செய்வன; R- முந்தின சுலோகம் ; S- சிறந்த உபாயம் (ப்ரபத்தி); T- செய்ய வேண்டிய காலம் - அதற்குத் தகுதி செய்யும் முறை - உபாயத்துக்கு விஷயம் முதலிய சிறப்புக்கள்.

1 **திருவாய் (3-7-7) :** பிறவிதோறும் எம்பெருமானும் இவ்வுலகில் வந்து பிறந்து அடியார்களைக் காத்துப் பின் அவர்களை ஸ்ரீவைகுண்டத்திற்குக் கொண்டு போய் அவர்களுக்கு இயற்கையாயுள்ள ஸ்வரூபத்தை வெளிப்படுத்தித் தன் திருவடிகளின் கீழ் வைத்துக்கொள்ளும் முறை

2 ***(?) :*** நாதா! எல்லாப் பிராணிகளுக்கும் செய்ய எளிய உபாயத்தை எனக்காகக் கூறியருள வேண்டும்.

6.2 இரண்டாவது சுலோகத்தின் கருத்து

उत्तरश्लोकம்[a] உபாஸநத்திற்குப்[b] போலே अन्तिम-प्रत्ययமும்[c] उपाय-कोटियிலே[d] சொருகி स्वयत्न-साध्यமாக[e] வேண்டாதபடி ஸர்வ -भर- ஸ்வீகாரம்[f] பண்ணின சரண்யனுடைய வ்யாபார விசேஷத்தாலே[g] देशकालादि-परिच्छेद-रहित कैंकर्य-पर्यन्त-परम-पुरुषार्थ-लाभ[h]த்தைக் காட்டுகிறது.

7 ஸ்ரீ வராஹ சரம சுலோகம் (1) : வ்யாக்யானம்

स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः ।
धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजम् ॥ (1)

7.1 स्थिते मनसि- விளக்கம்

இங்கே स्थिते मनसिஎன்ன வேண்டுமோ? सर्व-स्मृति[i]களுக்கும் மநஸ்ஸினுடைய स्थिति[j] வேண்டியன்றோ இருப்பது! என்னில், चञ्चलं हि मनः कृष्ण'[1] என்றும், 'असंशयं महाबाहो मनो दुर्निग्रहंचलम्'[2] என்றும் சொல்லுகிறபடியே வாநரம் போலே கட்டிவைத்தாலும் कापेयம்[k] விடாத மநஸ்ஸு ஒரு सुकृत-विशेषமடியாக[l] உண்டான सत्त्व-उन्मेष-वशத்தாலே[m] सदाचार्य -उपदिष्टமான[n] परतत्त्व[o]- परमहित[p]- परमपुरुषार्थங்களில்[q] தெளிவும் துணிவும் த்வரையும்[r] பிறக்கும்படி प्रतिष्ठितமான அளவொழிய இங்கு சொல்லுகிற ஸ்மரண விசேஷத்திற்குக் कर्मान्तरங்களிற்போலே[s] ஒரு देश-கால-விசேஷ-நியமமில்லை,[u] पुण्य-अपुण्य-देश-கால- விசேஷங்களால்[v] வருவதொரு फल-उत्कर्ष-अपकर्षமும்[w] இல்லை என்கைக்காக இங்கு மநஸ்ஸு स्थितமாயுள்ள[x] விடத்தில் என்றது.

7.2 सुस्वस्थे शरीरे- விளக்கம்

ஆனால் शरीर-स्वास्थ्य[y] மில்லாதபோது மநஸ்ஸினுடைய स्थिति[z] கூடுமோ? அப்போது இவன் प्रमाद-निद्रादि[A] களாலே4 अपेक्षिति[B]-ஸ்மரணத்தைப் பண்ண மாட்டாதொழியானோ? ஆகையால் सुस्वस्थे शरीरे[C] என்ன வேண்டுமோ? என்னில், சில கர்மங்களுக்கு शरीर-अवस्था-रूपமான[D] வயோ-விசேஷமும்[E] शुद्धि-आदिகளும்[F] प्राङ्मुखत्व[G]-आसीनत्वादि[H]களும் அபேக்ஷிதங்களாயிருக்கும்.[I]

இதற்கு அப்படியன்று. शास्त्रार्थ-प्रतिसन्धानத்திற்கு[J] अनुगुणமாக[K] ஶரீரத்தினுடைய सुस्वस्थ-दशैயே[L] வேண்டுவது; மற்றும் योग-

---

a- பிந்திய சுலோகம் ; b- பக்தியோகம் ; c- மரண காலத்தில் பகவானைப் பற்றிய நினைவு; d- உபாயத்தின் வகுப்பு ; e - தன் முயற்சியால் பெற வேண்டியது; f- எல்லாப் பொறுப்பையும் ஏற்றல்; g- விசேஷச் செயல்; h- இடம் காலம் முதலியவற்றின் வரையறையில்லாத கைங்கர்யம் வரை உள்ள பெரிய பலனைப் பெற்றமை ; i- எல்லா நினைவுகள்; j- நேரிய நிலை; k- குரங்குச் செயல்; l- விசேஷமான புண்ணியம்; m - ஸத்துவ குணம் தலையெடுத்த நிலை; n- சிறந்த ஆசார்யன் உபதேசித்த; o- மேம்பட்ட தத்துவம் (எம்பெருமான்); p- சிறந்த உபாயம் (ப்ரபத்தி); q- மிக உயர்ந்த பயன் (மோக்ஷம்); r- விரைதல்; s- நிலை நிறுத்தப்பட்ட; t- மற்ற புண்ணியச் செயல் ; u- இடம் காலம் இவற்றைப் பற்றிய தனிப்பட்ட வரையறை; v- புண்ணியமான இடம் காலம் - இழிவான இடம் காலம் இவற்றில் செய்தல்; w- பலனில் சிறப்பும் இழிவும்; x- நிலையாயிருப்பது; y- சரீரம் திடமாயிருத்தல்; z- நேரிய நிலை; A- கவனக்குறைவு, உறக்கம்; B- அவசியம் வேண்டிய நினைவு; C- சரீரம் மிகவும் நல்ல நிலையில் உள்ளபோது ; D - சரீரத்தைப் பற்றிய நிலையாக உள்ள ; E- குறிப்பிட்ட வயது; F- தூய்மை ; G - கிழக்கு முகமாயிருத்தல்; H - உட்கார்ந்து செய்ய வேண்டுதல்; I- அவசியம் வேண்டியன; J- சாஸ்த்ரங்கள் கூறும் விஷயங்களைச் சிந்தித்தல்; K- தக்கவாறு; L- நல்ல திடநிலை.

1 चञ्चलं हि मन : कृष्ण प्रमाथि बलवत् दृढम् ।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥

கீதை (6-34): கண்ணா! மனம் இயற்கையில் மிகவும் சஞ்சலமானது. மனிதனால் அதனை ஓரிடத்தில் நிறுத்த முடியாது. மனிதனை வலிமையாகக் கலக்கித் தான் விபரீதமாய்ச் செல்வதிலேயே ஈடுபடும் தன்மையது. அதை ஆன்ம விஷயத்தில் செல்ல விடுதற்குப் பாங்காக அதனை அடக்குவது எதிர்த்து வீசும் பெருங்காற்றை விசிறியால் அடக்குவது போலாகும். இதற்கு நீதான் வழி கூற வேண்டும்.

2 असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥

கீதை (6-35): அர்ஜுந! மனம் எப்பொழுதும் சஞ்சலத் தன்மையுடைய தாதலின் அதை எளிதில் அடக்க முடியாதென்பதில் ஐயமில்லை. ஆனால் ஆத்மாவின் உயர்ந்த குணங்களைச் சிந்தித்துச் சிந்தித்துப் பழகி அதில் ஈடுபடுவதாலும் மற்ற பொருள்களில் உள்ள குற்றங்களை நினைத்து அவற்றில் வெறுப்புக் கொள்வதாலும் கஷ்டப்பட்டுத்தான் மனத்தை அடக்க முடியும்.

उपयुक्त[a] मनो-नियमनத்திற்குச்[b] சொன்ன अभ्यासादिகளும் வேண்டும் என்கைக்காக शरीरம்[c] ஸுஸ்வஸ்த மானவளவிலே[d] என்கிறது.

இங்கு 'स्वस्थ'[e] மாகையாவது अपेक्षित-विस्मरण-उन्माद-निद्रादि-हेतुவான[f] दशै[g] கழிகை, सुस्वस्थமாகையாவது[h] सत्त्व-उन्मेष-विशेषத்தாலே परम-पुरुषार्थ-रुचि பிறக்கைக்கு अनुगुणமாகை[i].

7.3 धातु साम्ये-விளக்கம்

இந்த शरीर-स्वास्थ्यம்[j] தான் आयुर्वेद-उक्तமான[m] धातु-ஸாம்யத்தை[n] யொழிய வருமோ? ஆனால் 'धातु-साम्ये स्थिते' என்றது என்னென்னில், இவ்விடத்தில் ஸர்வருக்கும் संभावितமான[o] धातु-ஸாம்யத்தாலே வரும் शरीर-स्वस्थதையொழிய समाधिपरருக்குப் போலே ஆஸந[q]-ப்ராணாயாமாதிகளாலே ஓர் அபூர்வ-சரீர-स्वास्थ्यம்[r] தேட வேண்டாம் என்றபடி. இங்கு ப்ரபத்திக்கு வேண்டுமளவு मन:-स्थित्यादिகளைச்[s] சொல்லுகிறதாகையாலே आधि-व्याधिமான்களுக்குத்[t] ப்ரபத்தி சொல்லுமது विरुद्धமன்று.

இப்படிகளாலே 'प्रपत्तेः क्वचिदप्येवं परापेक्षा न विद्यते' (95[3]) என்று சொன்ன नैरपेक्ष्यம்[u] प्रकाशितமாயிற்று.

सति என்பதன் விளக்கம்

'நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன்'[1]

महता पुण्यपण्येन क्रीतेयं कायनौस्त्वया ।
प्राप्तुं दुःखोदधेः पारं त्वर यावन्न भिद्यते ॥[2]

'கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்'[3] என்னும் அர்த்தம் தோற்ற सति என்கிறது. இது மூன்றிலும் அந்வயிக்கிறது.

7.4 यो नरः - விளக்கம்

'सा हि सर्वत्र सर्वेषां' (95[3]) என்கிறபடியே ப்ரபத்தியினுடைய सर्व-अधिकारत्वம்[v] தோற்ற यो नरः என்கிறது. இதற்கு वर्ण-आश्रमादि-अधिकार-நியமமில்லை[w]. सत्यवचनादिகளைப்போலே[x] सामान्य-धर्मமாகையாலே[y] शरण्य-शरणागति-तत्फल-ज्ञानமுடையார்[z] எல்லார்க்கும் ருசி பிறந்தபோது 'सर्वयोग्यमनायासं'[z] (48[1]) 'सर्वलोक

शरण्याय' (272[3]) என்கிற விஷயத்தைப் பற்றக் குறையில்லை என்று தாத்பர்யம்.

7.4.1 ப்ரபத்திக்கு மானிடரை மட்டும் குறிப்பிட்டு உரியராகக் கூறியதன் காரணம்

ஆனாலும் यः என்கிறவளவே அமையாதோ? 'नरः' என்றது மிகுதியன்றோ? இதுதான் 'सिद्धगन्धर्वयक्षाश्च ततस्त्वां शरणं गताः' (255[1]),

---

a- பக்தி யோகத்துக்குப் பயன்படக் கூடிய; b- மனத்தை அடக்குதல்; c- இடை விடாது பழகுதல்; d- மிகவும் நல்ல நிலைமையில் இருத்தல்; e- நல்ல நிலையில் இருத்தல்; f அவசியமானதை மறத்தல், மதிமயக்கம், உறக்கம்; g-நிலை ; h- மிகவும் நல்ல நிலைமையில் இருத்தல்; i- ஸத்துவகுணம் மிகுதியாகத் தலையெடுத்தல்; j- மோக்ஷத்தில் ஆசை; k- தகுதியாதல்; l- சரீரத்தின் திடநிலைமை; m- ஆயுர்வேத சாஸ்திரத்தில் கூறப்பட்ட; n- சரீரத்தில் தாதுக்கள் சமமாயிருத்தல் ; o - ஸாதாரணமாய் வரக்கூடிய; p- பக்தி யோகத்தைக் கைக் கொண்டவர்; q- பத்மாஸநம் பத்ராஸநம் முதலியன ; r - புதிதாய் ஒரு சரீரத்தின் திடநிலை; s- மனத்தின் இருப்பு நிலை ; t- மனத்தைப் பற்றியும் சரீரத்தைப் பற்றியும் வரும் நோய்கள்; u- வேறொன்றை எதிர்பாராத தன்மை; v- எல்லோரும் செய்யத் தகுதி ; w- அந்தணர் முதலிய சாதி, பிரமச்சாரி முதலிய ஆச்ரமம் இந்தத் தகுதிகளில் வரையறை; x- உண்மை பேசுதல்; y- பொதுவான தர்மம்; z- ரக்ஷகனான எம்பெருமான்-ப்ரபத்தி அதன் பலன் இவற்றைப்பற்றிய அறிவு.

1 வென்றியேவேண்டி வீழ் பொருட்கிரங்கி வேற்கணார் கலவியேகருதி,
நின்றவா நில்லாநெஞ்சினையுடையேன் என்செய்கேன்? நெடுவிசும்பணவும்,
பன்றியாய் அன்றுபாரகங்கீண்ட பாழியானாழி யானருளே,
நன்று நானுய்ய நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்

பெரிய திரு.(1-1-4): ஓரிடத்திலும் நிலையாய் நிற்காத மனத்தையுடையேன்.

2 **வராஹபு :** பெரும் புண்ணியமாகிய விலையைக் கொடுத்து வாங்கிய இச்சரீரமாகிய ஓடம் உடைந்து போவதற்குள் துக்கமயமான ஸம்ஸாரக் கடலைக் கடக்க விரைவாயாக.

3 கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்,
வளரொளிமாயோன் மருவிய கோயில்,
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை,
தளர்விலராகில் சார்வது சதிரே.

திருவாய். (2-10-1) : எந்தச் செயலையும் புரிதற்கு ஏற்ற இளம்பருவம் கழிவதன் முன் திருமாலிருஞ்சோலை மலையைச் சேர்ந்து அநுபவிப்பது சாதுரியமான செயல்.

'तदुपर्यपि वादरायणः संभवात्'[1] என்று தேவாதிகளுக்கும் பரம- புருஷ - ஸமாச்ரயண -अधिकारம்[a] சொன்ன இடங்களோடே விரோதி யாதோ என்னில், 'दुर्लभो मानुषो देहः'[2] 'मानुष्यं प्राप्य लोकेऽस्मिन्'[3] इत्यादि களிற்படியே स्थावरादि-दशै கழிந்த[b] महालाभத்தையும்[c], 'विचित्रा देहसंपत्तिः ईश्वराय निवेदितुं'[4] इत्यादि களில் சொன்ன வழி தப்பினால் உள்ள अनर्थத்தையும் நினைப்பிக்கையாலே 'नर' शब्दம் सप्रयोजनம் இது தேவாதிகளுக்கு व्यवच्छेदकமன்று[d] कर्म-भूमि-गतரான[e] उचित-अधिकारिகளை[f] முன்னிட்டு தேவாதிகளையும் उपलक्षिக்கிறது[g]. இங்கு 'नर' शब्दம் योगத்தாலே[h] आत्म-वाचियाய்[i] विधि-स्वभावத்தாலே[j] शास्त्र-वश्यரெல்லாரையும்[k] காட்டுகிறதாகவுமாம்.

'யாவனொரு நரன்' என்கிற இத்தால் எல்லார்க்கும் நினைவுகூடாது, இவ் अधिकारि दुर्लभன்[l] என்கிற अर्थமும் தோற்றுகிறது.

7.5 स्मर्ता- விளக்கம்

இப்படி காலத்தையும் अधिकारத்தையும் शोधित्து[m] अकिञ्चन-तमனான[n] இவ்வதிகாரியினுடைய कृत्य-விசேஷத்தை[o] அருளிச் செய்கிறார்.

स्मर्ता - उपासनம் போலே[p] प्रपदनமும்[q] शास्त्र-जन्य-ज्ञानத்தள வன்றிக்கே 'मामेकं शरणं व्रज'[5] என்கிறபடியே विधेय[s]மாயிருப்பதொரு ஸ்ம்ருதி - விசேஷமாகையாலே[t] இங்கே अविधेय-ज्ञानवादि[u]களுக்கு अवकाश[v] மில்லை.

7.5.1 ப்ரபத்தி ஒரே முறை செய்ய உரியது

இந்த स्मृतिயில்[w] आवृत्तिக்கு[x] ज्ञापकம்[y] இல்லாமையாலும், प्रकरणान्तरங்களிலே[z] सकृत्-शब्दादिகளால்[A] अनावृत्ति[B] காண்கை யாலும், இங்கே ஸர்வ காலத்திலும் ஸர்வருக்குமாம் என்கை யாலும், प्रारब्ध[C] -சரீர-அவஸாதத்தில் மோக்ஷம் என்று தோற்று கிற स्वारस्यத்திற்கு[D] बाधकம் இல்லாமையாலும், स्वयत्न-साध्य-[E] अन्तिम-प्रत्यय-निरपेक्षதை[F] சொல்லுகையாலும், 'ततः' என்கிற शब्दம் आवृत्तिக்கு விலக்காகத் தோற்றுகையாலும் இது उपासनादि-

a- பகவானை உபாஸிக்கத் தகுதி; b- தாவரம் பூச்சி புழு முதலிய நிலை; c- பெரிய லாபம்; d- விலக்க வல்லது; e- ஸம்ஸார லோகத்தில் உள்ள ; f- ஏற்ற தகுதியுடையர்; g- சொல்லாதவர்களையும் சேர்த்துக் கொள்ளு கிறது; h- காரணப் பெயர்; i- ஆன்மாவைக் கூறுவது; j- விதிக்கும் வாக்கியத்தின் இயற்கை ; k - சாஸ்த்ரத்துக்குக் கட்டுப்பட்டவர்; l- பெறு தற்கு அரியன்; m- துருவிப்பார்த்து; n- அடியோடு கைம்முதலற்ற; o-விசேஷமான கடமை; p- பக்தியோகம் ; q- ப்ரபத்தி ; r- சாஸ்திரத்தால் வரும் ஞானம் ; s- விதிக்க வேண்டியது ; t-விசேஷமான மன எண்ணம் ; u- விதிக்க வேண்டாத ஞானத்தால் மோக்ஷம் கூறுபவர்; v- இடம்; w- ப்ரபத்தியாகிய மனநினைவு; x- பன்முறை செய்தல்; y- அறிவிக்கும் ஆதாரம்; z- மற்ற இடங்களில்; A- ஒரே முறை எனக் கூறும் சொல்; B - இரண்டாம் முறை செய்ய வேண்டாமை ; C- பலன் தரத் தொடங்கிய கர்மத்தால் வந்த சரீர முடிவில் ; D- பொருள் பொருத்தம் ; E- தன் முயற்சியால் ஆகவேண்டிய F- மரண காலத்தில் வரவேண்டிய எண்ணத்தை எதிர்பாராமை;

1 **ப்ரஹ்மஸூ (1-3-25) :** மோக்ஷத்தில் ஆசை. செய்யும் சக்தி இவை இருப்பதால் பக்தி யோகம் செய்தல் மனிதர்களுக்கு மேம்பட்ட தேவர்களுக்கும் பொருந்துகின்றது.

2 दुर्लभो मानुषो देहो देहिनां क्षणभङ्गुरः।
तत्रापि दुर्लभं मन्ये वैकुण्ठप्रियदर्शनम्।।

(?): விரைவில் அழியும் தன்மையுடைய மானிடப்பிறவியும் கிடைத்தற்கு அரிது. அப்படிக் கிடைத்தாலும் எம்பெருமானிடம் பக்தி கொண்டு வழிபடுவது மிகவும் அரிது.

3 मानुष्यं प्राप्य लोकेऽस्मिन् मूको वा बधिरोऽपि वा ।
नापक्रामति संसारात् स खलु ब्रह्महा भवेत् ।।?

(?): இந்த உலகில் மனிதப் பிறவியை அடைந்துவிட்டவன் ஊமையோ செவிடோ ஸம்ஸார பந்தத்தை விட முயலாவிட்டால் எம்பெருமானைப் பகைத்தவனாவான்.

4 विचित्रा देहसंपत्तिरीश्वराय निवेदितुम् ।
पूर्वमेव कृता ब्रह्मन् हस्तपादादिसंयुता ।।

(?): பிரமனே கைகால் முதலிய அவயவங்களுடன் சரீரத்தை ஆச்சரியமாய் முன்பே அமைந்திருப்பது எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பதற்காகவே

5 सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।।

கீதை (18- 66) : அர்ஜுநா! உன்னால் செய்யமுடியாத மற்ற உபாயங்கள் அனைத்தையும் விட்டு என்னிடமே ப்ரபத்தி செய், உனக்கு எதிரியாயுள்ள ஸகல பாபங்களினின்றும் உன்னை விடுவித்து மோக்ஷத்தைத் தருவேன். நீ ஒன்றுக்கும் கலங்காதே.

Scanned with CamScanner

शास्त्र ங்களில்[a] சொல்லுகிற ஸ்ம்ருதியன்று. இங்கும் 'सकृदेव प्रपन्नाय' (77[5]) என்கிற अर्थம் தோற்றுகிறது.

7.5.2 ப்ரபத்திக்கு அங்கமல்லவாயினும் உரிய கர்மங்களைச் செய்தேயாக வேண்டியமை

இது प्रार्थना-पूर्वक-भरन्यासம்[b] என்னுமிடமும் இதற்கு महा-विश्वासादि[c]கள் அங்கங்கள் என்னுமிடமும் वर्ण-आश्रमादि-धर्मங்கள் இதற்கு அங்கங்கள் அன்றிக்கே स्वतन्त्र-आज्ञैயாலே[d] வருகின்றன என்னுமிடமும் प्रकरणान्तरங்களிலே[e] கண்டு கொள்வது.

7.6 विश्वरूपं, मां, अजं இவற்றின் பொருள்

இது पूर्व-प्रकरणத்தாலும்[f] उत्तर-श्लोकத்தாலும்[g] मोक्षार्थप्रपत्तिயாகையாலே[h] தன்னையொழித்தார் முமுக்ஷுக்களுக்கு[i] आश्रयणीयரல்லர்[j] என்கைக்காகவும் தன்னை आश्रयித்தே மோக்ஷம் பெற வேண்டும் என்கைக்காகவும் இப் प्रपत्तिக்கு இலக்கான தன் படிகளைப் परत्व-सौलभ्य-प्रतिष्ठापक மான[k] पदत्रयத்தாலே[l] அருளிச் செய்கிறான்.

7.6.1 विश्वरूपं என்பதன் பொருள்

இதில் विश्वरूपं என்கிற पदம் नारங்களை[m] अयनமாக[n] உடையவன் என்கிறாப்போலே विश्वத்தையும்[o] தனக்குச் சரீரமாக உடையவன் என்கிறது. இத்தால் ஸர்வத்துக்கும் आधारமுமாய்[p] नियन्ताவுமாய்[q] சேஷியுமாய்[r] இவை தம்மாலே இவற்றினுடைய सत्ता-स्थिति-प्रवृत्तिகள்[s] தானிட்ட வழக்காய் कैङ्कर्य-उद्देश्यனுமாய்[t] स्वार्थமாக[u] साधु-परित्राणादिகளிலும்[v] प्रवर्तिக்கிறான் என்றும் आश्रयणीयன்[w] सर्व-व्याप्तனாகையாலே[x] ஆச்ரயிப்பார்க்கு नित्य-सन्निहितன்[y] என்றும் தோற்றுகிறது.

7.6.2 मां என்பதன் விளக்கம்

स्वरूप-सन्निधि[z] ஸூரிகளுக்கும் முக்தருக்கும் யோகிகளுக்கும் காணலாமத்தனையன்றோ ? विग्रह-विशिष्ट[A]னாலும் पर-व्यूहங்கள் இங்குள்ளார்க்கு இலக்காகவற்றோவென்னில், இந்த विभूतिயிலே[B] எல்லார்க்கும் आश्रयிக்கலாம்படி विभवरूपத்தால்[C] வந்து நிற்கிற நிலையும், இதற்கு மூலமாய் आश्रयणीयதைக்கு[D] உறுப்பான कृपादिகளும் தோற்றमां என்கிறான்.

'समुत्थितो नील इवाचलो महान्'[1], 'நீலவரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்த தொப்பக் கோல வராகமொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்[2] என்கிறபடியே போக்கற்று விழுந்தாரை எடுக்கைக்கு அநுगுணமான[E] शुभाश्रय-विग्रह-विशेषத்தோடே[F] தோற்றின் என்னை நினைக்குமவனுக்கு 'आयासः

---

a- பக்தி யோகத்தை விளக்கும் சாஸ்த்ரம்; b - ப்ரார்த்தனையை முன்னிட்டுத் தன் பொறுப்பை ஸமர்ப்பித்தலெனும் ப்ரபத்தி; c- மிகுதியான நம்பிக்கையாகிய அங்கம்; d- ஸ்வதந்த்ரனான எம்பெருமான் கட்டளை; e- வேறு இடங்கள்; f- இதைப் பேசும் முந்திய இடம்; g- பிந்திய சுலோகம்; h- மோக்ஷத்துக்காகவே செய்யும் ப்ரபத்தி; i- மோக்ஷத்தையே விரும்புமவர்; j- வழி படத் தகுந்தவரல்லர்; k- மேம்பாட்டையும் எளிமையையும் ஸ்தாபித்துத் தருவது; l- மூன்று பதங்கள்; m- சேதந அசேதநங்கள்; n- இருப்பிடம்; o- ப்ரபஞ்சம்; p- தாங்கி நிற்பவன்; q- உள்ளே புகுந்து நியமிப்பவன்; r- தலைவன்; s- உருவம் - நீடித்து நிற்றல் - செயல்; t- கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்ளுபவன்; u- தன் பயனுக்காகவே; v- நல்லோர்களைக் காப்பது முதலியன; w- வழிபட உரியன்; x- எங்கும் வியாபித்திருப்பவன்; y- எப்பொழுதும் அருகில் இருப்பவன்; z- ஸ்வரூபம் அருகிருத்தல்; A- திருமேனியுடையன்; B- ஸம்ஸார மண்டலம்; C- ராமன் க்ருஷ்ணன் முதலிய அவதாரத் திருமேனி; D- வழிபடுதற்கு; E- ஏற்றதான; F- பாபங்களைப் போக்கிச் சிந்திப்பதற்கு ஏற்ற சிறந்த திருமேனி.

1 ततः समुत्क्षिप्यं धरां स्वदंष्ट्रया महावराहः स्फुटपद्मलोचनः ।
रसतलादुत्पलपत्रसन्निभः समुत्थितो नील इवाचलो महान् ॥

வி.பு.(1-4-26): பின்பு மலர்ந்த தாமரை போன்ற திருக் கண்களையுடையவனாய்க் கருநெய்தல் மலர் போன்ற திருநிறமுடையனாய்ப் பெரிய வராஹவுருக்கொண்ட எம்பெருமான் தன் கோரைப் பல்லால் பூமியை ஏந்திக் கொண்டு பாதாளத்தினின்று பெரிய கரிய ஒரு மலைபோல் எழுந்தான்.

2 கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ!,
நீலவரை இரண்டு பிறைகவ்வி நிமிர்ந்த தொப்ப,
கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக் கொண்ட எந்தாய்!,
நீலக்கடல்கடைந்தாய் உன்னைப் பெற்று இனிப்போக்குவனோ?

திருவாய்.(10-10-7): நீலரத்தினமலை ஒன்று இரண்டு பிறைச் சந்திரர்களைக் கல்விக்கொண்டு எழுந்தது போல் ஒப்பற்ற அழகு படைத்த பெரிய வராஹவுருக்கொண்டு கடலினின்று பூமியை முழுகியெடுத்துத் தன் கோரைப் பற்களினிடையில் வைத்துக் கொண்டு எழுந்தருளிய எம்பெருமானே :

स्मरणे कोऽस्य'[1] என்கிறபடியே அருமையில்லை என்று தாத்பர்யம். 'विश्वरूपं च मां' என்கிற பதங்களாலே जगत्-हित-अवतारत्व[a]- शरण्यत्व-प्राप्यत्व[b] - उपयुक्त - सर्व-कल्याण-गुण-आकरत्व[c]மும் सिद्धिக்கிறது. இது अनुक्त-समुच्चायकமான[d] 'च' காரத்தாலேயாகவுமாம்.

7.6.3 अजं என்பதன் விளக்கம்

ஆனாலும், 'विश्वरूपं' என்கிற பதத்தில் சொன்ன सर्वशरीरत्वத்தாலும்[e] இது தன்னாலே ஃபலிதங்களான सर्व-उपादानत्व[f]- निमित्तत्वங்[g]களாலும் चेतन-अचेतन-दोषங்களெல்லாம் शङ्किக்கலாம்படியன்றோ இருப்பது! பிறக்கின்றவன் தனக்கும் மற்றும் பிறப்பாருடைய प्रकारங்கள்[h] உண்டாகாவோ? அவதாரங்களிலே शोक-मोहादिகள்[i] சொல்லவும் காண்கிலோமோ? இப்படியானால் 'स्वरक्षणेपि अशक्तस्य को हेतुः पररक्षणे'[2] என்கிற चोद्यம்[j] வாராதோ? என்ன, अजं என்று पुरुषान्तरसजातीय-जन्म-निषेधத்தாலே[k] தன்னுடைய हेय-प्रतिभटत्व[l]த்தைக் காட்டுகிறான்.

7.6.3.1 அவனது விசித்திரத் தோற்றம்-தோஷங்கள் சேராமை விளக்கம்

இங்கு ஜநநத்தை निषेधित्तது[m] மற்றுமுள்ள भावविकारங்கள்[n] षडूर्मिகள்[o] என்றாற்போலே சொன்ன चेतन-अचेतन-दोषங்கள் எல்லாவற்றையும் निषेधिக்குமதுக்கு உபலக்ஷணமாகையாலே[p] அசக்தி ரூபமான दोषம் கழிந்து हेय-प्रतिभटत्वமும் सिद्धिக்கிறது.

அவதாரங்களில் शोकादिகள் சொன்னவிடத்திற்கு அபிநயத்தாலே[q] தாத்பர்யம். இவ் அர்த்தத்தை வெளியிடுகிற 'मनुष्यदेहिनां चेष्टां'[3], 'ईशन्नपि महायोगी'[4], 'तेन वञ्चयते लोकान्'[5] நிலைவரம்பில

a- உலகின் நன்மைக்காகவே அவதரிக்கும் தன்மை; b- ரக்ஷித்தலுக்கும் அனுபவிக்கப்படும் பலனாயிருப்பதற்கும் பயன்படக்கூடிய; c- எல்லாக் கல்யாண குணங்களுக்கும் உறைவிடமாதல்; d- கூறாதவற்றையும் சேர்த்துக் கொள்ளுதலைக் காட்டவல்ல; e- எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டமை; f- மண் குடமாக ஆவது போல் எல்லாவஸ்துக்களாகவும் தான் ஆதல் என்ற உபாதாந காரணமாந்தன்மை; g- குடத்துக்குச் சக்கரம் குயவன் முதலியவர்கள் போல் எல்லாவஸ்துக்களையும் படைக்கும் ஸங்கல்பத்தை உடையனாய் நிமித்த காரணம் ஆதல்; h- முறைகள்; i- துக்கம், மதி மயக்கம்; j- ஆக்ஷேபம்; k- மற்ற மனிதரைப்போன்ற பிறவி தனக்கு இல்லையென்று மறுத்தல்; l- இழிவான குணங்களுக்கு

எதிர்த்தட்டாயிருத்தல்; m- மறுத்துக் கூறியது; n- வஸ்துக்களின் மாறுபாடுகள்; o- ஊர்மிகள் 6: பசி-தாகம்-துன்பம்-மதிமயக்கம்-முதுமை-மரணம் ஆவன; p- கூறாதவற்றையும் சேர்த்துக் கொள்ளல்; q- பாவனை செய்தல்.

1 आयास : स्मरणे कोऽस्य स्मृतो यच्छति शोभनम् ।
पापक्षयश्च भवति स्मरतां तमहर्निशम् ।।

வி.பு.(1-17-78) : எம்பெருமானை எப்பொழுதும் சிந்திப்பவர்க்குப் பாபங்கள் கழிந்து நலமும் வருகின்றது. இத்தகையனைத் தியானிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

2 स्वयं मृत्पिण्डभूतस्य परतन्त्रस्य देहिनः ।
स्वरक्षणेऽप्यशक्तस्य को हेतुः पररक्षणे ।।

இதி. ஸமு. (17 - 63) : (எம்பெருமானது ஏவுதல் இல்லாவிடில்) மண்கட்டி போல் சுதந்திரமற்றும் பிறருக்கு அடங்கியும் கிடக்கும் மனிதன் தன்னைக் காத்துக் கொள்ளக் கூட வல்லமையுடையனல்லன். அவன் மற்றவர்களைக் காப்பதற்கு இடம் ஏது?

3 मनुष्यदेहिनां चेष्टामित्येवमनुवर्तते ।
लीला जगत्पतेस्तस्य छन्दतः संप्रवर्तते ।।

வி.பு . (5-22-18) : இங்ஙனம் மானிடர்களின் செய்கைகளைத் தானும் செய்வதாய் அபிநயிக்கிறான். ஜகந்நாதனான அவனுடைய இத்தகைய லீலைகள் அவன் ஸங்கல்பத்தாலேயே உண்டாகின்றன.

4 ईशन्नपि महायोगी सर्वस्य जगतः प्रभुः ।
कर्माण्यारभते कर्तुं कीनाश इव दुर्बलः ।।

பார. (உத்யோ-62-24): ப்ரபுவாய் ஆச்சர்யமான ஞானசக்திகளையுடையனாய் எல்லாவுலங்களையும் நியமிப்பவனாயிருந்தும் எம்பெருமான் துர்ப்பலனான குடியானவன் போல் (தூது போதல், வண்டியோட்டுதல் முதலிய) தகாத செயல்களைச் செய்ய முற்படுகின்றான்.

5 तेन वञ्चयते लोकान् मायायोगेन केशवः ।
ये तमेव प्रपद्यन्ते न ते मुह्यन्ति मानवाः ।।

பாரதம் (உத்யோ-62-25) : தன் செயல்களால் உலகங்களை மோஹிக்கச் செய்கின்றான். அவனைச் சரணமாக அடைபவர்கள் மோஹத்தை அடைவதில்லை.

பலபிறப்பாய் ஒளிவரு முழுநலம்'[1] इत्यादिகளை இங்கே அनुसन्धिப்பது.

8 வராஹ சரம சுலோகம் (2) - வியாக்யானம்

8.1 இரண்டாவது சுலோகம் - எம்பெருமான் செயலைக் கூறல்

இப்படி இச்श्लोकத்தால் सिद्ध–उपाय–भूत[a] னான शरண்யனையும்[b] இவனுடைய वशीकरणार्थமாக[c] साध्यமான[d] अधिकारि-कृत्य-விசேஷத்தையும்[e] श्रुति–स्मृतिகளில் प्रसिद्धि தோற்ற अनुवादरूपமான[f] வாக்யத்தாலே காட்டி 'भரஸ்வீகாரம் பண்ணின தன்னுடைய कृत्यமாகச்[g] 'சன்ம சன்மாந்தரங்காத்து'[1] (65[2]) इत्यादिகளில் சொல்லுகிற सर्व–अनिष्ट–निवर्तनத்தையும்[h] परम–पुरुषार्थ–प्रापण[i]த்தையும் ப்ரபந்நன் திறத்தில் வாசிதோற்ற उत्तरश्लोकத்தாலே[j] அருளிச் செய்கிறான்.

ततस्तं म्रियमाणं तु काष्ठपाषाणसन्निभम् ।
अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिम् ।। (2)

8.2 ततः என்பதன் விளக்கம்

ततः என்கிற पदத்தில் 'ஸ்மரணம்[k] हेतुவாக' என்று பொருளானால் இதற்கு ஒரு ப்ரயோஜநமில்லை. तं என்கிறவளவாலும் இது தோற்றும். இப்படியே 'ஸ்மரணத்திற்குப் பின்பு' என்று தாத்பர்யம் கொண்டாலும் மிகுதியாம். ஆகில் என்? என்னில் 'आर्ति–விசேஷாदि[l]களாலே ப்ரபத்திக்கு अनन्तर– க்ஷணத்திலே[m] शरीर–पातம்[n] प्रस्तुतமானாலும்[o] இந்த ஸ்மரணத்தளவே व्याजமாக[p] शरीरान्तरத்தில்[q] ப்ரவேசியாதபடி அப்போதே ரக்ஷிப்பன். இவனுக்கு भரந்யாஸம் பண்ணின விஷயத்தில் कर्तव्य-शेषமில்லை[r] என்று தோற்றுகைக்காக ततः என்கிறது.

8.3 तं, मद्भक्तं- இவற்றின் விளக்கம்

तं என்றது कृत–कृत्यனாய்ச்[s] चातक–वृत्तिயான[t] தனக்கு வரும் மரணத்தை प्रिय–अतिथि[u]யைப் போலே பார்த்திருக்குமவனை என்றபடி.

मद्भक्तं என்றது நம்மையே निरतिशय–भोग्यமாக உகந்து பற்றினவனை என்கிறது.

'तं' 'मद्भक्तं' என்கிற இரண்டு पदத்தாலுமாக अनन्योपायனுமாய்[w] अनन्य-प्रयोजनனுமானவனை[x] என்கிறான். இத்தாலே ऐश्वर्य-कैवल्यार्थ–प्रपन्नரையும்[y] मोक्षार्थ–उपासकரையும்[z] व्यवच्छेदिக்கிறது[A] காருணிகனான ஈச்வரன் எல்லோருக்கும் மோக்ஷம் கொடுக்கப் प्राप्तனேயாகிலும்[B] அநாதி–கர்ம-ப்ரவாஹ-விஷமிதரான[C] अधिकारिகளுக்கு நிர்வ்யாஜமாக[D] மோக்ஷம் கொடுத்தால் கர்ம - அநுரூப -फल–प्रदायित्व-நியமம்[E] குலையும்; அது குலையாமைக்காக இப் पद–द्वयத்தில்[F] சொன்ன आकार[G]முடை யார்க்கு மோக்ஷம் என்கிறது.

காருண்யம் ஒன்றையும் प्रधानமாக்கி शास्त्र–सिद्ध–स्वतन्त्र–व्यवस्थैயைக்[H] குலைக்கப் பார்த்தால், सत्य–संकल्पதை இல்லாமையாலே இஸ்स्वातन्त्र्यமும் அழிந்து निरीश्वर[I] –वादமும் ப்ரஸங்கிக்கும்.

---

a- முன்பேயுள்ள உபாயம்; b- ரக்ஷகன்; c- வசப்படுத்துவதற்காக; d- செய்ய வேண்டிய; e-தகுதியுடையனின் சிறந்த செயல்; f- முன் சொல்லியதையே மறுமுறை சொல்வது; g- கடமைச்செயல்; h- எல்லாத் தீங்குகளும் ஒழிதல்; i- பெரும் பயனான மோக்ஷத்தைப் பெறுவித்தல்; j-மேல் சுலோகம்; k- நினைவு; l- உடனே மோக்ஷம் பெற மிக்க ஆர்வம்; m- அடுத்த க்ஷணம்; n- சரீரம் கழிதல், மரணம்; o- ஏற்பட்டது; p- சிறுகாரணம்; q- வேறு சரீரம்; r- செய்ய வேண்டிய மீதிச் செயல்; s- கடமையை (ப்ரபத்தியைச் செய்து முடித்தவன்; t- சாதகப் பறவை மழையை எதிர்பார்ப்பது போல் மோக்ஷத்தை எதிர்பார்ப்பவன்; u- பிரியனான விருந்தாளி; v- எல்லையற்ற இனிமையுடையவன்; w- வேறு உபாயத்தை நாடாதவன்; x- வேறு பயனைக் கொள்ளாதவன்; y- செல்வத்தையும் ஆத்மாநுபவமாகிய கைவல்யத்தையும் பெற ப்ரபத்தி செய்தவர்; z- மோக்ஷத்துக்காகப் பக்தி யோகத்தைச் செய்பவர்; A- விலக்கிக் காட்டுகிறது; B- கடமைப்பட்டவன்; C- அநாதியான கர்ம வெள்ளத்தால் விபரீத ராக்கப்பட்டவர்; D- ஓர் உபாயமும் இன்றி; E- கர்மத்துக்கு ஏற்பப்பலன் தருவதாகிய வரையறை. F- त मद्भक्त என்ற இரண்டு சொற்கள்; G- தன்மை, சிறப்பு; H- சாஸ்த்ரங்களில் ஏற்பட்ட ஸ்வதந்த்ரனான அவன் கொண்ட வரையறை; I- ஈச்வரன் இல்லையென்னும் நாஸ்திகவாதம்.

1 **திருவாய் (1-3-2) :** எம்பெருமான் கொள்ளும் பிறவியில் உயர்ந்தது. தாழ்ந்தது என்ற வேற்றுமையின்றி எந்தப் பிறவியும் கொள்வான். செயல்களிலும் உயர்வு தாழ்வின்றி எச்செயலையும் செய்பவன். பிறக்கப் பிறக்க, செய்யச் செய்ய அவன் திருக்கல்யாண குணங்கள் ஒளிவிட்டுப் பிரகாசிப்பன. பாசுரம் பக்கம் 281[1].

இப்படியே ஸர்வரும் ஈச்வர - க்ருபையாலே नित्यमुक्त[a]ராகத் தட்டென்ன? என்கிற चोद्यமும்[b] परिहतம்[c]. जगत्-कारणत्व-मोक्ष-प्रदत्वादिகள்[d] இல்லாதபோது ஒருவனை விசேஷித்து ஈச்வரன் என்கைக்கு ப்ரமாணம் இல்லையிறே.

இங்கு 'मद्भक्त' என்கிற पदம் भक्ति–योग–निष्ठனைச்[e] சொல்லுகை लघु–उपाय–उपदेश–प्रकरणத்திற்கும்[f] तदनुगुणங்களான[g] பூர்வ ஶ்லோகத்தில் पदங்களுக்கும் இச் ஶ்லோககத்தில் अन्तिम–दशैயில்[h] 'काष्ठपाषाणसन्निभं'[i] என்கிறதற்கும் अनुगुणं மாகாது. पश्चात्भाविயாய்[j] गत्यन्तरமுண்டான[k] ஒரு பதத்தைக் கொண்டு पूर्व–भाविயான[l] प्रकरणத்தையும்[m] स्ववाक्यத்தில் अनेक–पद[n] ஸ்வாரஸ்யத்தையும் बाधिக்கை[o] ந்யாய - விருத்தம்[p].

8.4 म्रियमाणं என்பதன் விளக்கம்

'இவனுக்கு இனி जन्मान्तरादिகள்[q] இல்லை . 'மரணமானால்'[2] என்கிறபடியே प्रारब्ध-शरीरம்[r] விடுமளவே प्राप्तिக்கு[s] வேண்டுவது' என்று தோற்றுகைக்காக म्रियमाणं என்கிறான்.

'மரித்தவனை' என்னாதே म्रियमाणனை நயிப்பேன்[t] என்கிற இத்தாலே தான் விண்ணுலகம் தர விரைகின்றபடியைத் தோற்றுவிக்கிறான்.

8.4.1 तु என்பதன் விளக்கம்

तु என்கிற இது அல்லாதார் மரணம் போலே இங்குள்ளார்க்கும் लोकान्तरத்திலுள்ளார்க்கும்[u] இவன் शोच्यனாம்[v] படியன்றிக்கே श्रीवैकुण्ठनाथனும் ஸூரிகளும் முக்தரும் 'நல்விருந்து வருகிறது' என்று வீடு திருத்தும்படியாய்,[w] இங்கும் कृतकृत्यரான[x] ஸ்ரீ வைஷ்ணவரெல்லாரும் 'நாமும் இது பெற்றிலோம்' என்று நாக்கு நீளும்படியான நல்லதோர் अवभृथனம்[y] இது என்று இம்மரணத்தினுடைய महोत्सवத்தையும் இதற்கு प्रशस्त–देश–काल–निमित्तங்கள்[z] நிரூபிக்கவேண்டா . आयुरवसानத்தளவிலே[A] இவனுக்கு फल–सिद्धि[B] என்னுமிடத்தையும் தோற்றுவிக்கிறது.

8.5 काष्ठपाषाण सन्निभं என்பதன் விளக்கம்

8.5.1 அசேதநம் போல் மரண காலத்தில் கிடப்பது ப்ரபந்நனுக்கு இழுக்கன்றோ? - விடை

'काष्ठपाषाण सन्निभं' என்கிறது முன்புற்ற कार्पण्यம்[C] போலே உபாயத்திற்கு உறுப்பாகிறதன்று, பின்புற்ற अर्चिरादि–गतिபோலே फल–कोटि–घटितமாய்[D] வருகிறதுமன்று. இவனுக்கு द्वय–अनुसन्धानादिகளைப்போலே இங்குற்ற पुरुषार्थ-[E]சேஷமாய் இருப்பதும் ஒன்றன்று. இப்படியிருக்க இவனுடைய अचित्–कल्पतैயைச்[F] சொல்லுகிற இது पूर्व–उत्तरங்களுக்கு[G] अनुपयुक्तமாய்[H] இவ்வளவன்றிக்கே ப்ரபந்நனுக்கு நிந்தையுமாகாதோ? என்னில்,

---

a- எப்பொழுதும் முக்தி பெற்றவராவதற்கு; b- ஆக்ஷேபம்; c- மறுக்கப் பட்டது; d- உலகுக்குக் காரணமாதல் மோக்ஷத்தை அளித்தல்; e- பக்தி யோகம் செய்பவன்; f- சிறிய உபாயத்தை உபதேசிக்கும் ஸந்தர்ப்பம்; g- அதற்கு ஏற்ற; h- மரண காலம்; i- பொருந்தியது. (சுலோகம் : பக்கம் 245); j - பின்னால் வரப்போவது; k- வேறு பொருள் சொல்லுதலாகிய வேறு வழி; l- முன்பே இருப்பது; m- ஸந்தர்ப்பம்; n- பல சொற்களின் பொருட் பொருத்தம்; o- குலைத்தல்; p- நீதிக்கு முரண்பட்டது; q- மறுபிறவி; r- கர்மத்தால் வந்த இச்சரீரம்; s- மோக்ஷம் பெறுதல்; t- மோக்ஷம் பெறச் செய்வேன்; u- வேறு உலகம்; v- இரங்கி வருந்தற்கு உரியன்; w- வரவேற்கத் தமது இடத்தை அழகுபடுத்தும்; x- ப்ரபத்தி செய்து கடமையை முடித்தவர்; y- உத்ஸவ பூர்த்தி நாள்; z- நல்ல இடம் காலம் சூழ்நிலை இவை; A- ஆயுள் முடிந்ததும் ; B- பலன் பெறுகை; C- கைம் முதலின்மையை நினைந்து செருக்கொழிந்து அருள் சுரக்கு மாறு பணிந்து நிற்றல் என்னும் அங்கம்; D- பலன் வகுப்பில் சேர்ந்தது; E- விசேஷமான பலன்; F- ஜடப் பொருள் போன்ற இருப்பு; G- முன் பின் நிலைகள்; H- பயன் படாதது;

1 **வராஹ சரம :** மரண காலத்தில் கட்டையையும் கல்லையும் போலச் செயலற்றுக் கிடக்கின்ற என் பக்தருக்கு மோக்ஷத்தை அளிப்பேன்.

2 **திருவாய் (9-10-5):** தன் திருவடிகளில் சரணமடைந்தவர்க்கு அவர்கள் சரீரம் கழிந்தவுடனேயே பரமபதம் கொடுப்பவன் (பக்கம் : 115)

(i) இது 'அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்'[1] என்கிறபடியே உபாயத்தினுடைய स्वयत्न-साध्य-अन्तिम-प्रत्यय[a]-नैरपेक्ष्यத்தையும்,

(ii) 'सन्धां'[2] इत्यादिகளிற்படியே जुगुप्सा-विषय दशै[b]யிலே சரண்ய னுடைய वात्सल्य[c] - விசேஷத்தையும்,

(iii) ஒரு ப்ரகாசமற்றுக் கிடக்கிற இவனை 'प्रदीपवदावेशः'[3] என்கிறபடியே ஒருகாலே ஸர்வஜ்ஞனாக்குகிற आश्चर्य-शक्ति-योगத்தையும்,[d]

(iv) ப்ரபந்நன் இப்படி दीर्घनिद्रै[e] பண்ணும் போது सर्व-विध-बन्धुவான[f] அந்தர்யாமியை ஒழிய மற்றொருத்தரும் தட்டி எழுப்ப மாட்டார்கள் என்னும் अर्थத்தையும் விஸ்தரித்துக் 'காலும் கையும் விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்க மதாவதன் முன்னம்... வேலைவண்ணனை'[4] மேவ வேண்டும் என்று முமுக்ஷக்களுக்கு[g] शरण्य-வசீகரணத்தில்[h] விரைதல் பிறப்பிக்கைக்காகவும் இப்பदம் प्रयुक्त[i]மாகிறதாகையாலே இது उपयुक्तமாய்[j] उपायादिகளுடைய स्तुतिயுமாகிறது.

8.5.2 மரணப்படுக்கையில் கட்டை-கல் இரண்டு உவமைகளைக் கூறியதன் கருத்து

ஆனாலும் ஒரு த்ருஷ்டாந்தமே அமையாதோ என்னில், साधर्म्यத்தில்[k] अतिशयம்[l] தோற்றுகைக்காகப் பல த்ருஷ்டாந்தம் சொல்லக் கடவது என்று आलङ्कारिकர் சொன்னார்கள். இவன் चैतन्य-आश्रयமான[m] अहमर्थமாயிருந்தானேயாகிலும்[n] அப் போதைய அஜ்ஞாநத்தை நிரூபித்துப்[o] பார்த்தால் काष्ठ-पाषाणங் களினுடைய[p] அந்யோந்ய-வைஷம்யத்தளவும்[q] போகு மித்தனை அவற்றுக்கும் இவனுக்கும் உள்ள வைஷம்யம் என்று கருத்தாகவுமாம்.

a- மரணகாலத்தில் பெற வேண்டிய நல்ல நினைவை எதிர்பாராத தன்மை; b பிறர் வெறுக்கும்படி உள்ள ஆபாஸ நிலை; c- குற்றத்தைப் புறக்கணிக்கும் விசேஷ அன்பு; d- அற்புதமான சக்தியுடைமை; e- நீண்ட

உறக்கம், மரணம் ; f- எல்லாவகை உறவினன்; g- மோக்ஷத்தையே விரும்புமவர்; h- ரக்ஷகனான பகவானை வசப்படுத்தல்; i- எடுத்து ஆளப் பட்டது; j- பயன் படக்கூடியது; k- ஒற்றுமை; l- மிகுதி; m- அறிவுக்கு இடம்; n- நான் என்ற சொல்லின் பொருள் (ஜீவன்); o- ஊன்றி உட்புகுந்து; p- கட்டை, கல்; q- ஒன்றுக்கொன்று உள்ள வேற்றுமை.

1 துப்புடையாரை அடைவதெல்லாம்
சோர்விடத்துத் துணையாவரென்றே,
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும் போது
அங்கு ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்,
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத்தரவணைப்பள்ளியானே.

பெரியாழ்-திரு (4-10-1): என் இறுதிக்காலத்தில் உன் நினைவு வருவதற்கு அப்பொழுது உள்ள சூழ்நிலையில் எனக்கு வாய்ப்பு இராது. அதற்காகத் திருவரங்கனே! இப்பொழுதே உன்னைப் பற்றிச் சொல்லிவிட்டேன்.

2 यस्तद्वेद यत आबभूव । सन्धां च यां संदधे ब्रह्मणैषः ।
रमते तस्मिन्नुत जीर्णे शयाने । नैनं जहात्यहस्सु पूर्व्येपु ॥

தைத்தி - ஆரண் (3-14-12) : தன்னை எம்பெருமானது உடைமையாகவும் அவன் பொறுப்பில் உள்ளவனாகவும் உள்ள தொடர்பை உணர்ந்தால் அவனை எம்பெருமான் எந்நாளும் கைவிடமாட்டான்.

3 प्रदीपवदावेशस्तथा हि दर्शयति ।

ப்ரஹ்மஸ் (4-4-15) : ஒரு தீபம் ஒரே இடத்தில் இருப்பினும் தன் ஒளிவாயிலாக வேறு இடத்திலும் பரவுவது போல் முக்தி பெற்ற ஆத்மா சரீரத்தினுள் அணுவாய் ஒரே இடத்தில் இருந்த போதிலும் தன் தர்மபூதஜ்ஞாநத்தின் வாயிலாகப் பரவுவது பொருத்தமே. இவ்வம்சத்தைச் சுருதியும் காட்டுகின்றது.

4 மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினை உள்ளெழவாங்கி
காலும் கையும் விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்கமதாவதன் முன்னம்,
மூலமாகிய ஒற்றையெழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழவாங்கி,
வேலை வண்ணனை மேவுதிராகில் விண்ணகத்தினில் மேவலுமாமே.

பெரியாழ் - திரு. (4-5-4): கால்களும் கைகளும் பதைபதைக்க, கண்ணை மூடுவதன் (மரணம்) முன்பு கடல் போன்ற நிறமுடைய எம்பெருமானை ஆச்ரயிக்க வேண்டும்.

Scanned with CamScanner

8.5.3 மரண காலத்தில் நல்ல நினைவு இல்லையாயினும் ப்ரபந்நன் மோக்ஷம் பெறுவது உறுதி

இப்படியானால் 'तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते'[1] என்றும், 'यं यं वाऽपि स्मरन् भावं'[2] என்றும் சொல்லுகிற ப்ரமாணங்கள் சேரும்படி என்னெனில், அவை ஸாமாந்ய விஷயம்[a]; இது விசேஷ விஷயம்[b].

'नष्टस्मृतिरपि परित्यजन् देहम्'[3], 'எய்ப்பென்னை வந்து நலியும் போது அங்கு எதும் நானுன்னை நினைக்க மாட்டேன்'(463[1]), इत्यादिகளுக்கும் இதுவே நிர்வாஹம்[c].

8.5.4 கத்யத்துக்கும் இச்சரமசுலோகத்துக்கும் முரண்பாடு-பரிஹாரம்

'शरीरपातसमये तु केवलं मदीययैव दयया अतिप्रबुद्धः[4] என்றது ப்ரபந்நர் தங்களிலே சிலரைப் பற்ற என்று சிலர் நிர்வஹிப்பர்கள். அங்ஙனன்றிக்கே 'काष्ठपाषाणसन्निभम्', 'नष्टस्मृतिरपि परित्यजन्' (251-3) इत्यादिகளுக்கு स्वयत्न–साध्य–अन्तिम–प्रत्यय–निवृत्ति[d]யிலே தாத்பர்யம்.

'मदीययैव दयया अतिप्रबुद्धः' (463[1]) इत्यादि–वाक्यம் ஸ்வயத்ந[e]மின்றிக்கேயிருக்க பகவத்-க்ருபா-மாத்ரத்தாலே अन्तिम–प्रत्यय–वेशेषம் ப்ரபந்நர் எல்லார்க்கும் வருகிறபடியைக் காட்டுகிறது என்று சிலர் நிர்வஹிப்பர்கள்.

8.6 अहं स्मरामि என்பதன் விளக்கம்

'यो वेत्ति युगपत् सर्वं प्रत्यक्षेण सदा स्वतः'[5] என்னும்படியாயிருக்கிற ஈச்வரன் க்ஷேத்ரஜ்ஞரைப்போலே[g] மறப்பது ஒரு காலமும் நினைப்பது ஒரு காலமும் இன்றிக்கே இருக்க, இப்போது अहं स्मरामि என்பானேனென்னில் , ப்ரபந்நனுக்கு அப்போது स्वयत्नத்தால் ஸ்மரணம் இல்லையேயானாலும் இந்த ஸ்மரணம் முதலாயாதல், இதற்கு மேலாயாதலுள்ள फलமெல்லாம் भरஸ்வீகாரம் பண்ணி स्वीकृत - நிர்வஹண - க்ஷமனுமான[i] தன்னாலே सिद्धिக்கும் என்று தோற்றுகைக்காகத் தன்னுடைய सानुग्रह–बुद्धि–विशेषத்தை[j] ஸ்மரணशब्दத்தாலே उपचरिக்கிறான்[k].

a- பொதுப்படையாயுள்ள விஷயம் ; b- தனிப்பட்ட விஷயம்; c- நேர் செய்தல்; d- தன் முயற்சி கொண்டு கடைசிக்காலத்து நல்ல நினைவு தேட வேண்டாமை; e- தன் முயற்சி; f- மரண காலத்தில் வரும் சிறந்த நினைவு; g- ஜீவர்கள்; h- தன் முயற்சி; i- தான் ஏற்றுக் கொண்டதைச் செய்து முடிக்க வல்லவன்; j- அநுக்ரஹத்துடன் கூடிய விசேஷஸங்கல்பம்; k- ஒன்றின் தன்மையை மற்றொன்றின் மேல் ஏற்றிக் கூறுகின்றான்.

1 रजसि प्रळयं गत्वा कर्मसङ्गिषु जायते ।
तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ॥

கீதை (14-15) : தமோகுணம் மிகுத்து அதற்கேற்ற செயல் புரிந்தவன் இறந்தால் நாய் பன்றி முதலிய பிறவிகளை அடைந்து எந்த நற்பயனுக்கும் உரிமையற்றவனகின்றான்.

2 यं यं वाऽपि स्मरन् भावं त्यजत्यन्ते कलेवरम् ।
तं तमेवेति कौन्तेय सदा तद्भावभावितः ॥

கீதை (98-6): மரணகாலத்தில் எந்த எந்த விஷயத்தை நினைத்துக் கொண்டு சரீரத்தை விடுகின்றானோ, மரணத்துக்குப் பின் அந்த அந்த வடிவத்தையே அடைகிறான்.

3 ज्ञानसमकालमुक्त्वा कैवल्यं याति गतशोकः ।
तीर्थे श्वपचगृहे वा नष्टस्मृतिरपि परित्यजन् देहम् ॥

(?) : நல்ல அறிவு உள்ள ஸமயத்தில் திருமந்திரத்தை அநுஸந்திக்கும் ப்ரபந்நன் புண்ய தீர்த்தத்திலோ நாய் - மாம்ஸம் தின்பவன் வீட்டிலோ நினைவிழந்து மரணமடைந்தாலும் மோக்ஷத்தை அடைவான்.

4 சரணாகதிகத்யம் : சரீரம் சரியும் காலத்தில் உன் முந்திய பழக்கத்தையோ தற்காலத்திய முயற்சியையோ எதிர்பார்க்காமல் எனக்கு இயற்கையாய் அமைந்த கருணையாலேயே முந்திய நிலையிற் போல் பரிபூர்ண ஞானமுடையவனாய்த் தினந்தோறும் சிந்திக்கப்பட்ட திவ்யமங்கள விக்ரஹத்துடன் கூடிய என்னையே நீ தெளிவாய் அநுஸந்தித்துக் கொண்டு 'பகவானே உயர்ந்த பலனாவான்' என்று முன்பு சாஸ்த்ர ஜ்ஞாநத்தால் ஏற்பட்ட அநுபவ வாஸனையையும் அதன் மூலமாய் வந்த என் அநுபவத்தில் பேரவாவையும் இழவாதவனாய் ப்ரக்ருதி மண்டலத்தை விட்டுப் பரமபதத்தை அடைந்து எனக்கு நித்ய கைங்கர்யம் செய்யப் போகின்றாய்.

5 यो वेत्ति युगपत् सर्वं प्रत्यक्षेण सदा स्वतः ।
तं प्रणम्य हरिं शास्त्रं न्यायतत्त्वं प्रचक्ष्महे ॥

ந்யாயதத்துவம் (1) : ஒரே காலத்தில் எல்லாவற்றையும் கண்கூடாகவே எப்பொழுதும் அறிபவனான எம்பெருமானை வணங்கி ந்யாயதத்துவ மென்னும் சாஸ்த்ரத்தைத் தொடங்குகின்றோம்.

Scanned with CamScanner

இங்குற்ற वर्तमान–व्यपदेशத்தாலே[a] இவ்வநுக்ரஹத்திற்குப் பின்பு ஒரு निग्रहம்[b] வாராது என்னுமிடம் தோற்றுகிறது.

8.6.1 अहं என்பதன் விளக்கம்

இதில் உத்தமனே[c] அமைந்திருக்க चरमश्लोकத்திற்போலே மிகுதியான 'अहं' என்கிற पदத்தாலே स्वातन्त्र्यம் அடியாக ஸர்வ-க்ஷேத்ரஜ்ஞர்[d] திறத்திலும் विपरीत–कर्म–अनुरूपமான[e] निग्रहத்தில்[f] प्रवृत्तனாய்[g] லீலாரஸத்தை அநுபவித்துப் போந்த தான் காருண்யமடியாக வ்யாஜ-விசேஷ - –अनुगुण–अनुग्रह–प्रवृत्तனாய்[h] आश्रित-ரக்ஷண-ரஸத்தை[i] அநுபவிக்க நினைத்த போதே மோக்ஷம் கொடுக்க வல்லபடியையும் அப்போது விலக்க வல்லார் இல்லாத படியையும் தான் கட்டின காலாதிகள் ஒழியத் தனக்கு வேறொரு ஸஹகாரி வேண்டாதபடியையும் தோற்றுவிக்கிறான்.

8.6.2 மோக்ஷம் தரும் வரை எம்பெருமான் நினைவு இருத்தல்

'काष्ठपाषाणसन्निभम्' 'अहं स्मरामि' என்கிற இரண்டாலும் 'मां ध्याति पुरुषव्याघ्रः ततो मे तद्गतं मनः'[1] என்கிற ப்ரகாரத்தைக்[j] கழிக்கிறான்.

'मद्भक्तं अहंस्मरामि' என்கிற இத்தால் नित्य–अनुभवம் பெறுகைக்கு ஒரு நினைவு பண்ணினவனைப் பற்ற நாமும் नित्य-अनुभवம் கொடுக்கைக்கு ஒரு நினைவைப் பண்ணுவோம் என்றதாயிற்று.

இப்படி 'தாய் நினைந்த கன்றேயொக்க என்னையும் தன்னையே நினைக்கச்செய்து தானெனக்காய் நினைத்தருள் செய்யுமப்பன்'[2] என்னும்படியான தன் நினைவு பரம புருஷார்थ–पर्यन्त[k] மாகிறபடியைப் பற்ற 'नयामि परमां गतिम्' என்கிறான்.

8.7 नयामि परमां गतिं என்பதன் விளக்கம்

नयामि என்கிறதற்குச் சேற்றிலே விழுந்த சிறு பையல்களை எடுக்க விழுந்த பிதாவைப் போலே இவனுடைய देஹத்திற்குள்ளே हार्दனாய்[l] நிற்கிற நான் தானே अप्राकृत–पर्यङ्क-आरोहणपर्यन्तமாக[m] நடத்துவன். நடுவு வரும் அர்ச்சிராதிகளும்

இவனை எதிர்கொண்டு ஸத்கரித்துத்[n] தரம் பெறுகைக்கு நாம் அடைத்த நிலைபேறு[o] என்று தாத்பர்யம்.

8.7.1 ப்ரபந்நனுக்கு நேரிடையாகவே மோக்ஷம் தருதல்

கீழ்ச் சொன்ன ப்ரபத்தி ஸகல -फलसाधनமாக வற்றாயிருந்ததே யாகிலும் 'அநந்ய-ப்ரயோஜனான[p] இவனுக்குப் प्रयोजनान्तरங்[q] களைக் கொடுத்தல் मधुविद्यादिகளிற்[r] போலே ऐश्वर्य–आत्मानुभव–रूप-क्षुद्र–फल–व्यवहित மாக[s] மோக்ஷம் கொடுத்தல் செய்யேன்.

---

a - நிகழ் காலமாகக் குறித்தல்; b- சீற்றம், கோபம்; c- தன்மை நிலை; d- எல்லா ஜீவர்கள்; e- விபரீதமான கர்மத்துக்கு ஏற்ற; f- தண்டனை; g- முற்பட்டவன்; h- செய்த சிறந்த சிறு செயலுக்கேற்ற திருவருள் புரிய முற்பட்டவன்; i- தன்னைச் சரணமடைந்தவர்களைக் காப்பதில் உள்ள இன்பம்; j- முறை; k- பெரும் பயனாகிய மோக்ஷம் தருதல் வரை உள்ளது; l- அந்தர்யாமியாய்; m- ப்ரக்ருதி மண்டலத்துக்கு அப்பால் உள்ள பரம பதத்தில் உள்ள என் கட்டிலில் ஏறி அமரும்வரை; n- உபசரித்து; o- சாச்வத மான பாக்கியம்; p- வேறு பயனை நாடாத; q- வேறு பயன்கள்; r- மோக்ஷத்துக்கு மற்றோர் உபாயமான பக்தி யோகத்தின் 32 வகைகளுள் ஒன்று; s- இம்மையில் அநுபவங்கள் - ஆத்மாவை அனுபவித்தலெனும் கைவல்யம்-ஆகிய அற்ப பலங்களை நடுவில் கொடுத்து இடையிடச் செய்தல்.

1 शरतल्पगतो भीष्मः शाम्यन्निव हुताशनः ।
मां ध्याति पुरुषव्याघ्रस्ततो मे तद्गतं मनः ॥

பார. (சாந்தி -45-11) : அணையும் ஸமயத்தில் உள்ள அக்நிபோல் உத்தம புருஷரான பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்தபடியே என்னைத் தியானிக்கின்றார். ஆதலின் என் உள்ளமும் அவரிடம் சென்றுவிட்டது. (தரும் புத்திரனுக்குக் கண்ணன் கூறுவது)

2. தாய் நினைந்தகன்றேயொக்க என்னையும்
 தன்னையே நினைக்கச் செய்து, தான் எனக்காய்
நினைந்தருள் செய்யும் அப்பனை
 அன்று இவ்வையகமுண்டுமிழ்ந்திட்ட
வாயனை, மகரக்குழைக்காதனை
 மைந்தனை மதிள்கோவலிடைகழி
யாயனை, அமரர்க்கரியேற்றை என்
 அன்பனையன்றி ஆதரியேனே

பெரிய திரு. (7-3-2) : தாயையே நினைந்துருகும் கன்றைப்போல் அடியேனையும் எம்பெருமானாகிய தன்னையே நினைக்கச் செய்து தான் எனக்கு அருள் புரிதற்குச் சிந்தை கொண்டிருக்கும் திருநறையூர் நம்பியையன்றி வேறு யாரையும் ஆதரிக்கமாட்டேன்.

Scanned with CamScanner

अव्यवहितமாகப்[a] परम-पुरुषार्थத்தை[b] அடைவிப்பேன்' என்கிற விசேஷம் தோற்றப் 'परमां गति'[c] என்கிறான்.

இங்கு 'गति' என்கிறது प्राप्यத்தை என்றபடி. परमां गतिं என்கிறது मुक्तानां परमा गतिः'[1] என்கிறபடியே परम-प्राप्यனான தன்னையாதல் தன் விஷயத்தில் பரிபூர்ண - அநுபவத்தையாதல் அவ்வநுபவ பரீவாஹமான[d] கைங்கர்ய - விசேஷத்தையாதல் சொல்லு கிறது. இவற்றில் ஒன்றைச் சொன்னாலும் மற்றுள்ள வற்றையும் சொல்லிற்றாய்விடும்.

இதில் 'नयामि' என்கிற இத்தாலே தன்னுடைய प्रापकत्व[e]மும், 'परमां गतिं' என்கிற இத்தாலே தன்னுடைய प्राप्यत्वமும்[f] சொல்லிற்றாகை उचित-तमம்[g].

परमैயான गति என்று அர்ச்சிராதிகதியையாதல் பரம பதத்தையாதல் சொல்லுவார்க்கு முடிவில் அவனுடைய ப்ராப்தியிலே தாத்பர்யம்.

இப்படி இரண்டு ஶ்லோகத்தாலும் இச்சேதநன் முமுக்ஷு வாயும் முக்தனாயும் இரண்டு விபூதியிலும்[h] பெரும் பேறு சொல்லிற்றாயிற்று.

8.7.2 எம்பெருமான் செயல் அடியார்களின் பயனுக்கேயாதல்

'नयामि' என்கிற இதில் परस्मैपदத்தாலே[i] स्वतः सर्वशेषि[j]யான தன் னுடைய आश्रित-प्रयोजन-प्राधान्य-अभिसन्धि[k]யைத் தோற்றுவிக்கிறான்.

अचित्தினுடையவும்[l] अचित्-प्रायருடையவும்[m] வ்யாபாரம் स्व-प्रयोजन-पर-प्रयोजनங்கள்[n] இரண்டையும் உத்தேசியாதே परप्रयोजनार्थமாய் இருக்கும்[o].

ஜ்ஞாதாவான अवस्थैயில் प्रयोजनान्तर-परன்[p] परप्रयोजनार्थமாக[q] ப்ரவர்த்திக்கும்போது स्वप्रयोजनத்தையும்[r] उद्देश्यமாகக்[s] கொண்டு நடக்கும்.

अनन्य-प्रयोजनனான[t] ஜ்ஞாதா स्वप्रयोजनத்திலும் परप्रयोजन-उद्देशेन[u] ப்ரவர்த்திக்கும்.

निरुपाधिक-सर्व-शेषिயான[v] ஸர்வேச்வரன் 'स्वमुद्दिश्य' என்கிற படியே परप्रयोजनத்திலும் स्वप्रयोजनार्थமாக ப்ரவர்த்தித்தாலும் இவனுடைய आश्रिन-पारतन्त्र्य-प्रकारத்தைச்[w] சொல்லப்பார்த்தால்

'वरद सकलमेतत् संश्रितार्थं चकर्थ' (285[2]) என்கிறபடியே स्वप्रयोजनத்திலும் परप्रयोजनार्थமாக ப்ரவர்த்திக்கும் என்னலாம்.

இவ்வர்த்தங்களை 'काष्ठपाषाणसन्निभम्' 'स्मर्ता' 'मद्भक्तं' 'अहं स्मरामि' 'नयामि' इत्यादिகளிலே अनुसन्धिப்பது.

இடம் பெற்றாரெல்லாமென்னுடலாய் நிற்ப
இடர் பிறப் பென்றிவை யில்லாவென்னையன்பால்
அடம் பற்றாமவனென்று நினைந்தான் யாவன்
அவனாவி சரியும் போதறிவு மாறி

---

a- இடையீடின்றி நேராக; b- மோக்ஷமெனும் பெரும் பயன்; c- அடைந்து அநுபவிக்கப்படும் உயர்பயனாயுள்ளவன்; d- போக்குவீடு; e- அடை விக்கும் உபாயமாகும் தன்மை; f- அநுபவிக்கப்படும் பயனாந்தன்மை; g- மிகப் பொருத்தம்; h- லீலா விபூதி (ஸம்ஸார மண்டலம்) நித்யவிபூதி (பரமபதம்); i- வட மொழியில் பயனைப் பிறர்க்கெனக் காட்டும் வினைமுற்றின் நிலை; j- அனைவருடைய பயனையும் தன்னுடைய தாகக் கொள்பவன்; k- அடியார்களின் பயனைக் முக்கியமாகக் கொண்ட கருத்து; l- ஜடப்பொருள்; m- ஜடப்பொருள் போல் அறிவற்றவர்; n- தனக்கு வரும் பயன்-பிறருக்கு வரும் பயன்; o- பிறரின் பலனுக்காவே; p- வேறு பயனை நாடுமவன்; q- பிறருடைய பயனுக்காக; r- தன் பயன்; s- குறிக்கோள்; t- வேறு பயனை நாடாதவன்; u- பிறரின் பயனையே குறிக்கோளாக; v- இயற்கையாக எல்லோருக்கும் தலைவன்; w- அடியார் களுக்கு வசப்பட்டுக் கிடக்கும் நிலை.

1 पूतात्मा परमात्मा च मुक्तानां परमा गति : ।
अव्ययः पुरुषः साक्षी क्षेत्रज्ञोऽक्षर एव च ॥

விஷ்ணு ஸஹஸ்ரநாமம் *(12)*: மோக்ஷத்தை அடைந்தவர்களுக்கு முக்கியமாய் அநுபவிக்கப்படும் சிறந்த பெரும்பயனாயுள்ளவன்.

(21) **இடம் பெற்றார் எல்லாம்** - (உலகில்) இடம் பெற்றுள்ள யாவரும் (ஸகலவஸ்துக்களும்); **என் உடலாய் நிற்ப**-எனக்குச் சரீரமாய் நிற்க: **இடர் பிறப்பு என்று**- நாசமும் பிறவியும் ஆகிய; **இவை இல்லா என்னை**- இந்தத் தோஷங்கள் இல்லாத (ஸர்வேசுவரனான) என்னை: **அன்பால்** - ப்ரீதியுடன் : **"அவன் அடம் பற்று ஆம்"** - "அவன் (ஒரு நாளும் கைவிடாத) திடமான கதியாக ஆவான்"; **என்று யாவன் நினைந்தான்** - என்று எவன் நினைந்தவனாய்ச் சரணமடைகின்றானோ; **அவன் ஆவி சரியும் போது** - அவனுடைய உயிர் நீங்குங்காலத்தில்; **அறிவு மாறி** - தன் நினைவை இழந்து; **தாரு உபலம் போல் உடம்பில் கிடக்க** - கட்டை போலும் கல்போலும் (தன்) சரீரத்தில் கிடக்கும் போது ; **உய்யும் வகை**

உடம்பில் தாருபலம் போல் கிடக்க நானே
  உய்யும்வகை நினைந்துயர்ந்த கதியாலென்றன்
இடம்பெற்றென்னுடன் வாழ எடுப்பனென்ற
  எம்பெருமானருள் பெற்று மருள் செற்றோமே. (21)

இரண்டுரை யாத நம் ஏன முரைத்த உரை இரண்டின்
திரண்ட பொருள்கள் தெளிந்து அடி சூடினம் திண்ணருளால்
சுருண்ட நஞ்ஞானச் சுடரொளி சுற்றும் பரப்பதன் முன்
புரண்டது நம்வினை போமிடம் பார்த்து இனிப் போமளவே. (22)

மலையும் குலையுமென்றெண்ணியும் வன்பெரும் புண்டிரங்கி
தலையும் வெளுத்தபின் தானே அழிய இசைகின்றிலீர்
அலையும் கடல் கொண்ட வையம் அளித்தவன் மெய்யருளே
நிலையென்று நாடி நிலைநின்ற பொய்ம்மதி நீக்குமினே. (23)

स्वस्थं चित्तं सुखमपि वपुर्धातुसाम्यं च कृत्वा
  स्वात्मानं च स्मृतिपदमजं विश्वरूपं वितन्वन्।
काले प्राप्ते करणविलयात् काष्ठपाषाणकल्पान्
  नाथः पोत्री नयतु कृपया नाथितः स्वं पदं नः ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य श्रीमद्वेङ्कटनाथस्य
वेदान्ताचार्यस्य कृतिषु रहस्यशिखामणिः संपूर्णः ॥
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

நானே நினைந்து - (அந்தச் சேதநன்) உஜ்ஜீவிக்க வேண்டிய ப்ரகாரத்தை, நானே செய்ய நினைந்து; **உயர்ந்த கதியால்** - சிறந்த அர்ச்சிராதிகதியால்; **என்றன் இடம் பெற்று** - என்னுடைய ஸ்தாநமாகிய பரமபதத்தைப் பெற்று; **என்னுடன் வாழ** - என்னோடு இருந்து (ஸகலகைங் கர்யங்களையும் செய்து) வாழும்படி; **எடுப்பான் என்ற** - உயர்த்தி வைப்பேன் என்று அருளிச்செய்த; **எம்பெருமான் அருள் பெற்று** - ஸ்ரீ வராஹப்பிரானுடைய க்ருபையைப் பெற்று; **மருள் செற்றோம்** - அஜ்ஞாநம் ஒழியப்பெற்றோம்.

(22) **இரண்டு உரையாத** - இரண்டு வார்த்தை சொல்லாத (சொன்ன சொல் தவறாத); **நம் ஏனம் உரைத்த** - நம்முடைய வராஹப்பிரான் அருளிச்செய்த; **உரை இரண்டின்** - சரமசுலோகம் இரண்டின்; **திரண்ட பொருள்கள் தெளிந்து** - ஸாரமான அர்த்தங்களை (நாம்) அறிந்து; **தின் அருளால்** - (அவனுடைய) வலிய க்ருபையினால்; **அடிசூடினம்** - (அவன்) திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் கொண்டோம். **சுருண்ட நம் ஞானச் சுடர் ஒளி** - (கர்மஸம்பந்தத்தால் எல்லா விஷயத்தையும் அறியமுடியாது) சுருங்கியுள்ள நம் ஜ்ஞாநமாகிய தேஜஸ்ஸின் ப்ரகாசம்; **சுற்றும் பரப்பதன் முன்** - எல்லா விடத்திலும் பரவுவதற்கு முன் (எல்லாவற்றையும் அறியும் சக்தியைப் பெறுவதற்கு முன்); **நம் வினை புரண்டது** - நம்முடைய கர்மம் அகன்றுவிட்டது. **இனி போம் இடம் பார்த்து** - இனித் தாம் போகத்தக்க இடத்தைப் பார்த்து; **போம் அளவே** - (அவை) போகவேண்டிய அளவேயுள்ளது. (தர்மபூதஜ்ஞாநம் கர்மபூமியில் கர்மத்தால் எல்லாவற்றையும் அறிய முடியாது சுருங்கிக் கிடக்கின்றது. முக்தி பெற்றதும் அந்த ஜ்ஞாநம் மலர்ந்து எல்லாவற்றையும் அறிகின்றது. சேதநன் முக்தி பெறும்போது எல்லாக் கர்மங்களும் ஒழிய வேண்டியவையாதலின் அவனுடைய புண்யகர்மம் அவனுடைய நண்பர்களிடமும், பாபகர்மம் விரோதிகளிடமும் போய்ச் சேருமென உபநிஷத்துக் கூறுகின்றது).

(23) **மலையும்** - (ஸ்திரமென்று நாம் நினைக்கும்) மலையும்; **குலையும்**- (ஒரு காலத்தில்) சிதறிப்போம்; **என்று எண்ணியும்**- என்று அறிந்திருந்தும்; **வன் பெரும் புண் திரங்கி** - வலிய பெரிய புண்ணாயுள்ள சரீரம் மடிப்பு விழுந்து; **தலையும் வெளுத்த பின்** - தலையும் நரைத்துப் போன பின்பும்; **அழிய இசைகின்றிலீர்!** - மரணமடைய மனமில்லா திருக்கும் சேதநர்களே!, **அலையும் கடல் கொண்ட** - அலை நிறைந்த ப்ரளய ஸமுத்ரத்தால் கொள்ளப்பட்ட; **வையம் அளித்தவன்** - உலகத்தை (அக்கடலிலிருந்து எடுத்து) ரக்ஷித்த ஸ்ரீ வராஹப்பிரானுடைய; **மெய் அருளே**- ஸத்யமான க்ருபையால் அவதரித்த ப்ரபத்தியே; **நிலை என்று நாடி** - ஸ்திரமான உபாயமென்று அறிந்து; **நிலை நின்ற** - (உங்களிடம் வெகு காலமாக) வேரூன்றி நிற்கின்ற; **பொய்மதி நீக்குமின்** - அஜ்ஞாநத்தை ஒழித்துக் கொள்வீர்களாக. தான் - அசை.

चित्तं-மனதை; स्वस्थं - நல்ல நிலையில் இருப்பதாகவும்; वपुः - உடலை ; सुखमपि - சுகமுள்ளதாகவும்; धातु-साम्यं - சரீரத்திலுள்ள தாதுக்களை ஸமமான நிலையில் உள்ளனவாகவும்; कृत्वा - செய்து; अजं - பிறப்பற்றவனும்; विश्वरूपं - உலகத்தையே சரீரமாகக் கொண்டவனுமான; स्वात्मानं - தன்னை; स्मृतिपदं वितन्वन् - நினைக்கச் செய்து (சரணமடையச் செய்து); काले प्राप्ते - இறக்கும் வேளையில்; करण-विलयात् - இந்திரியங்கள் நிலைகுலைந்ததால்; काष्ठ-पाषाण-कल्पान् - கட்டை போன்றும் கல் போன்றும் உள்ள, नः - நம்மை; नाथः - சர்வேச் வரனாயிருக்கும்; पोत्री - வராஹப் பெருமான்; नाथितः - நம்மால் பிரார்த்திக்கப் பட்டவனாய்; कृपया - தன் திருவருளாலே; स्वं पदं - தன் இடமான பரமபதத் திற்கு; नयतु - அழைத்துச் செல்லட்டும்.

ரஹஸ்யசிகாமணி முற்றும்

Scanned with CamScanner

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ரஹஸ்ய சிகாமணி: ரஹஸ்யார்த்த விவரணம்

(ஆசிரியர் : ஸ்ரீ உ. வே. வித்வான் ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கிபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி)

அதிகாரம் 1 : ப்ரபந்த அவதாரம்

(நூலின் தோற்றத்தை விளக்கும் அதிகாரம்)

1. வேதங்களின் உண்மைப் பொருளை அறிய ஸாத்துவிக புராணங்களே கைக் கொள்ள உரியன

பாரதம் முதலிய இதிஹாஸங்களும் ஸ்ரீ விஷ்ணு புராணம் முதலிய புராணங்களும் எதற்காகத் தோன்றின? வேதங்களின் உண்மை யான அர்த்தங்களை ஜீவராசிகள் அறிந்து தங்கள் நல்வாழ்வுக்கு வழி தேடிக்கொள்ள வேண்டுமே! வேதங்களின் கடினமான அர்த்தங்களை உள்ளவாறு விளக்கிக் காட்டும் வாயிலாக இதிஹாஸங்களும் புராணங்களும் பயன்படுகின்றன. அவ்வா றின்றி அரைகுறையாய்க் கற்றுணர்ந்த மனிதன் தனக்குத் தோன்றிய படி வேதங்களுக்கு அர்த்தம் கொண்டால் விபரீதத்திலே தான் முடியும். வேதமே அத்தகையனைக் கண்டு தன்னைக் குலைத்து விடுவானென்று அஞ்சுவதாய்ப் பாரதம் கூறுகின்றதே!

புராணங்கள் இப்படி வேதங்களின் உண்மைக் கருத்தைப் புலப்படுத்தத் தோன்றியுள்ள போதிலும் பல புராணங்கள் ரஜோகுணம் தமோகுணம் இவற்றின் கலப்பினால் தோன்றியன வாகவும் சில ரஜோகுணத்தாலும் சில தமோகுணத்தாலும் பிறந்தனவாகவும் உள்ளன. அந்தப் புராணங்களுக்கு ப்ரவர்த்தகரா யுள்ளவர்கள் குற்றமுள்ளவர். அவற்றில் கூறும் அர்த்தங்களை மறுத்துக் கூறும் அம்சங்கள் பல ப்ரமாணங்களால் வெளியாகின்றன. ஆதலால் அவற்றையெல்லாம் ஆதரிப்பவர் வேதத்துக்குப் புறம்பான சைவம், பௌத்தம், ஸாங்க்யம் முதலிய மதத்தைச் சார்ந்தவர்களாவர்.

ஸத்துவகுணமே தலையெடுத்த மஹர்ஷிகளால் இயற்றப் பட்டு ஸத்துவகுணத்தின் சிறப்பையே போதிக்கும். ஸாத்துவிக புராணங்களை இயற்றியவர்களிடம் எவ்வகைக் குற்றமோ அவை கூறும் கருத்துக்களுக்கு ப்ரமாணங்களைத் தழுவிய மறுப்பு உணர்ச்சிகளோ இல்லை. வைதிகர்களான பெரியோர்கள் முற்றிலும் அவற்றையே ப்ரமாணமாகக் கொண்டுள்ளனர். ஆதலின் ஸாத்துவிக புராணங்களே வேதங்களின் கருத்தை விளக்கும் மற்ற அனைத்திலும் சிறப்பாக எடுத்துக்கொள்ள ஏற்றனவாகும்.

2. ஸ்ரீ வராஹ புராணத்தின் ஒப்பற்ற சிறப்பு

இத்தகைய ஸாத்துவிக புராணங்களுள் ஸ்ரீ வராஹ புராணம், தத்துவம் - உபாயம் - பலன் இவற்றைப் பற்றிய உண்மையை வேறொன்றாலும் அசைக்கமுடியாத அளவுக்கு உறுதியான விளக்கம் தருவதாயிருக்கும். ஸ்ரீ வராஹப்பிரான் அருளிய இப்புராணத்தில் கூறிய அம்சங்கள் பெயர்க்கமுடியாதன வென்று ஆண்டாளும் புகழ்ந்துள்ளாள்.

2.1 ஸ்ரீ வராஹ புராணத்தை உபதேசித்தவரின் சிறப்பு

ஒரு நூலுக்குப் பெருமை வருவதானால் அதை இயற்றியவர் மிகப் பெரியராயிருக்கவேண்டும். அவர் உபதேசிக்க, கேட்பவரும் சிறந்தவராயிருக்கவேண்டும். இந்த வராஹ புராணத்தில் இவ்விரண்டு அம்சங்களும் செவ்வனே பொருந்தியுள்ளன. ஆதலின் இப்புராணம் பெருமை மிகுத்து விளங்கும். உலகில் ஸாதாரணமாய்ச் சேதநர் பேசும் விஷயத்தில் பல குற்றங்கள் ஸம்பவிப்பதுண்டு. அதாவது பேசுபவர் ஒன்றை வேறொன்றாகக் கருதும் விபரீத ஞானமுடையவராயிருக்கக் கூடும். கேட்பவரை வஞ்சிக்கும் நோக்கமுடையவராகவும் இருக்கலாம். மேலும் சொல்பவரின் கவனக் குறையாலும் தவறு நேரலாம். அல்லது அவர் பேசுவது அவர் அறிவு சக்தியைப் பெறாமையால் ஏற்பட்டு மிருக்கலாம். இந்த நால்வகைக் குற்றமும் இந்த வராஹ புராணத்தில் நேருவதற்கு இடமேயில்லை. இப்புராணத்தை அருளிச் செய்தவன் ஞானப் பிரானென்றே வழங்கும் வராஹப் பெருமான். இவன் இயற்கையாகவே அனைத்தையும் கண் கூடாகக் காணவல்ல ஸர்வஜ்ஞனாதலின் ஒன்றை மற்றொன்றாக

Scanned with CamScanner

நினைக்கும் விபரீத ஞானமும் கவனக் குறையும் ஏற்படுதற்கு இடமேயில்லை. இவனுக்கு அடியார்களிடத்தில் கைம்மாறு கருதாத எல்லையற்ற கருணை இருப்பதால் அவர்களை வஞ்சிப்பது என்பதைக் கருத்தவே முடியாது. அவ்வாறே இவன் எதையும் காணவும் செய்யவும் பரிபூர்ண சக்தியுடையனாதலின் இவன் சக்திக்கு மீறிய செயலென்பதே கிடையாது. ஆகவே ஸாதாரண மனிதர்களின் பேச்சில் உள்ள நால்வகைக் குற்றத்துக்கும் இங்கு இடமே இல்லை.

2.1.1 வராஹப்பிரானுக்கு மற்ற அவதாரங்களினும் சிறப்பு

இந்த வராஹாவதாரத்துக்கு எம்பெருமானுடைய மற்ற நிலைகளினும் மற்ற அவதாரங்களினும் தனிப்பட்ட ஏற்றம் உண்டு,

பரவாஸுதேவருபம்: பரமபதத்தில் நிலையாயிருந்து கொண்டு பக்தியோப்ரபத்தியோ செய்து ஸம்ஸார மண்டலத்தினின்று கரையேறித் தன்னிடம் வந்தவர்களைக் கூட்டிக் கொண்டு வாழும். வராஹ ரூபமோ ஸம்ஸாரக் கடலினுள் அழுந்திக் கிடப்பவர்களை அப்படியே கரைந்து போகாதபடி எடுத்துக் கரையேற்றி விடும்.

வ்யூஹருபங்களோ ஸங்கர்ஷணன் ப்ரத்யும்நன் அநிருத்தன் என்ற திருநாமங்களுடன் மேலிடத்தில் இருந்து கொண்டு அடியார்கள் அங்கே வந்து ஆச்ரயிக்கத்தாம் பாங்காயிருக்கின்றன. வராஹ ரூபமோ அடியார்களிடம் தனக்கு உள்ள அன்பு புலனாம்படி அவர்கள் இருந்த கீழ்நிலத்திலும் தானே போய்ப் புகுந்து எடுத்து அணைத்துக் கொள்ளும். இவ்வம்சத்தைக் கடலினுள் அழுந்திய பூமியை மீட்டு வந்த வரலாற்றினால் அறியலாம்.

விபவாவதாரங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

மத்ஸ்யாவதாரம் : மீன் தன் குஞ்சுகள் உலாவித் திரியும் போது தன் கண் பார்வையாலேயே வளர்த்துக் காப்பது மீனினத்தின் முறை. மத்ஸ்ய பகவானும் ஸம்ஸார மண்டலத்தில் உலாவித் திரியும் சேதநர்களைத் தன் கடாக்ஷத்தாலேயே போஷித்தருள்கின்றான். வராஹப்பிரானோ சேதநர்கள் மரண காலத்தில் அவனை நினைக்கவும் மாட்டாமல் நினைவிழந்து கட்டை போலும் கல்லுப்போலும் செயலற்றுக் கிடக்கும் நிலையில் அவர்கள் அவனை நினைக்க வேண்டியதாய்ச் சாஸ்த்ரம் சொல்லும் நினைவு வராத பொழுது தானே அவனுக்குத் தன் அனுபவத்தைக் கொடுக்க நினைத்து அவ்வாறே செய்து காப்பதாகத் தானே கூறியுள்ளான்.

கூர்மாவதாரம் : பூமியை இழுத்துப் பிடித்துத் தாங்கி நிற்பது மலை. முன் தேவர்களும் அசுரர்களும் மந்தர மலையை மத்தாகக் கொண்டு கடலைக் கடைந்தனர். அம்மலை கடலினுள் அழுந்திவிடாமல் நிலையாய் நின்று கடைவதற்குப் பாங்காக எம்பெருமான் ஆமை வடிவு கொண்டு அம்மலையைத் தாங்கி நின்று சுழலும்படி செய்தருளினான். வராஹப்பிரானோகடலினுள் மூழ்கியிருந்த பூமியை மீட்பதற்காகத் தானே தன் கோரைப்பல்லாலே பூமியைத் தாங்கினான். மீட்டு வந்து அந்தப் பூமியும் அதைத் தாங்கும் மலைகளும் கலங்காமல் அவற்றை உரிய இடத்தில் நிலை நிற்கச் செய்தருளினான்.

நரஸிம்ஹாவதாரம்: தூணிலிருந்து நரசிங்கனாய்த் தோன்றினான். எதிரில் ஹிரண்யகசிபு தட்டுப்பட்டான். அவனைப் பிளந்தொழித்தான். வராஹப்பிரானோ பூமி முழுதும் தட்டுப்பட்டுக் குலைந்து போகாதபடி இறுக நின்று உரிய இடத்தில் நிலைத்து நிற்கும்படி செய்தான்

வாமனாவதாரம்: வாமன வடிவு கொண்டு மஹாபலியிடம் மூன்றடி பூமியைத் தானம் வாங்கினான். எதற்காக? இந்திரனுடைய அரசை மஹாபலி பறித்துக் கொண்டதால் அவனிடம் தானம் வாங்கிய பூமியை இந்திரனுக்குக் கொடுப்பதற்காக. வராஹப்பிரானோ மஹாபலியான (மிக்க வலிமையுடையனான) ஹிரண்யாக்ஷனென்னும் அசுரனை ஒழித்துத் தனக்கே உரிய பூமியைத்தானே மீட்டுக் கொண்ட அவதாரமாகும்.

பரசுராமாவதாரம் : பரசுராமன் தன் எதிரிகளான அரசர் குலத்தை ஒழிக்க மழுவை ஏந்தி நிற்க வேண்டியிருந்தது. வராஹனோ எதிரியான ஹிரண்யாக்ஷனை ஒழிக்கத் தனித்தொரு கருவி வேண்டாதபடி தன் திருமேனியின் பகுதியான கோட்டிவாலேயே அவனை அந்தப் பூமியின் கண்முன்னே குத்திக்கொன்று அந்தப் பூமியையும் அந்தக் கோட்டினாலேயே மீட்டு வந்தான்.

Scanned with CamScanner

இராமாவதாரம்: சக்கரவர்த்தித் திருமகனான இராமபிரான்தன் அவதார காரியம் முடிந்து தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளும் போது பூமியில் உள்ள தாவர ஜங்கமங்களையெல்லாம் தன் லோகத்துக்குக் கிழே உள்ள தனது இடத்துக்கு ஏற்றியருளினான். வராஹாவதாரமோ பூமியையே தன் தோளில் உயர்ந்த இடத்துக்கு ஏற்றி மீட்டு வரும்படியிருந்தது.

பலராமாவதாரம் : பலராமன் கையில் கலப்பை . அதனால் புரியும் செயல் பூமியை உழுது அந்த இடத்தைக் கிளறிக் குலைத்தல். வராஹப்பிரானோ பூமிக்கு ஒரு தீங்கும் வராதபடி எடுத்துக் காப்பதற்கு உடலின் பகுதியான முகத்தில் அமைந்த கோரைப்பல்லையே கருவியாகக் கொண்டான். பலராமன் கலப்பையோ வேண்டும் போது எடுத்துக் கொள்ளும் கருவியாகும்.

கிருஷ்ணாவதாரம் : அருச்சுனன் கண்ணனைச் சரணமடைந்து 'நான் உனக்குச் சிஷ்யன். சரணமடைந்த அடியேனுக்கு நல் வாழ்வின் வழியை உபதேசம் செய்து காத்தருள வேண்டும்.' என்று பிரார்த்தித்தான். கண்ணன் உபதேசிக்கத் தொடங்கினான். கர்ம யோகம் - ஞான யோகம் - பக்தி யோகம் எல்லாவற்றையும் உபதேசித்துக் கடைசியில் வருகிற ஒரு சுலோகத்தில் மிகச் சிறந்த உபாயமான சரணாகதியை உபதேசித்தருளினான். வராஹப் பிரானோ தான் கடலுள் மூழ்கிப் பூமிப்பிராட்டியை எடுத்ததும் அவள் தன்னைச் சிஷ்யையாகவும் அடிமையாகவும் பக்தை யாகவும் கூறிக் கொண்டு அருச்சுனனைப் போல் தன் நலத்தைக் கேட்காமல் உலகுக்கு நன்மையை உபதேசிக்குமாறு பிரார்த்தித்த வுடனே கண்ணனைப்போல் விளம்பம் செய்யாது தொடக்கத் திலேயே ப்ரபத்தியை உபதேசித்தருளினான்.

கல்கியவதாரம் : இனி நெடுங்காலம் கழித்து வந்து, இனி வரப்போகும் பிராணிகளுக்கு உதவி செய்யப்போகின்றது. வராஹாவதாரமோ முன்பே உள்ள பிராணிகளுக்கு உபகாரத்தைச் செய்து முடித்துவிட்டது.

இப்படி மிகச் சிறந்த அவதாரமான வராஹப் பெருமான் வராஹ புராணத்தைத் தோற்றுவித்து மஹோபகாரம் செய்தருளி னான். இந்த அவதாரத்துக்கு மாநம் (அளவு) இல்லாதது போல் உபமாதமும் (இதைப்போன்ற வேறோர் அவதாரமும்) இல்லை.

தர்ம சாஸ்த்ரத்தை உலகில் நடையாடச்செய்த பெரியோர்கள் உலகுக்கு மிக நலம் புரிந்த மனு முதலிய மஹான்களைக் கணக்கிடும்போது வராஹ புராணத்தை இயற்றியருளிய வராஹப் பிரானையும் அந்தக் கோஷ்டியில் சேர்த்துப் போற்றினார்கள்.

2. 2 ஸ்ரீ வராஹ புராணத்தைக் கேட்டவர் சிறப்பு

ஜ்ஞேய புராணத்தை உபதேசித்தவன் பெருமையைக் கொண்டு வராஹ புராணத்தின் சிறப்பு விளக்கப்பட்டது. இப்புராணத்தைக் கேட்டவரின் சிறப்பினாலும் இப்புராணம் எல்லாவற்றினும் மேம்பட்டதென்பதை விளக்குகின்றோம் - ஸ்ரீ பூமிப் பிராட்டியை வேதம் உலகங்களுக்கெல்லாம் ஈச்வரியென்று ஓதுகின்றது. இதனால் சேதந அசேதங்கள் எல்லாவற்றினும் இவள் மிகவும் உயர்ந்தவள் என்பது தேறுகின்றது. உலகில் குற்றம் செய்தவர்கள் வேறு புகலின்றி எம்பெருமானை அண்டுகின்றனர். அப்பொழுது பெரிய பிராட்டி அவர்களைத் தன் திருக்கண்களால் குளிரக் கடாக்ஷிக்கின்றாள். அதைக் கண்டு எம்பெருமானும் அவர்களிடம் உள்ள குற்றங்களைப் பொறுத்து அவர்களை மன்னித்து விடுகின்றான். ஆகவே பெருமாளும் பிராட்டியும் அண்டியவர் களிடம் உள்ள குற்றங்களைக் கண்டு அவர்களை மன்னித்து விடுகின்றனர். பூமிப்பிராட்டியின் விஷயம் வேறு. சேதநர்களிடம் உள்ள குற்றம் இவள் கண்ணுக்குப் புலப்படுவதேயில்லை. இவள் பொறுமையே வடிவு கொண்டவள். இப்படி ஸகலத்தையும் பொறுக்கும் தன்மையளான பூமி ஸர்வேசுவரனைக் காட்டிலும் பெரிய பிராட்டியையும் காட்டிலும் பொறுமை முதலிய குணங்கள் மிகுத்திருக்கப் பெற்றவளென்பது தெற்றென விளங்குகின்றது. ஆதலின் நித்யஸூரிகள் தங்களைக் காட்டிலும் பூமிக்கு உள்ள ஏற்றத்தை நன்கு அறிவார்கள்.

உலகில் பல புராணங்கள் தோன்றியுள்ளனவே! அவை எவ்வாறு பிறந்தனவென்று பார்ப்போம். கர்மத்துக்கு வசப்பட்ட சில சேதநர்கள் தங்கள் க்ஷேமத்துக்காகப் பிறரிடம் போய்ச் சில விஷயங்களைக் கேட்கின்றனர். கர்மத்துக்கு வசப்பட்ட பிறர் இவர்களுக்கு உபதேசிக்கின்றனர். கேட்பவர்க்கும் சொல்ப வர்க்கும் உறவுமுறை எதுவும் இல்லை . அவர்களின் உபதேசங்கள் பின்பு ஒவ்வொரு பெயரால் புராணங்களாக வடிவு கொள்கின்றன.

Scanned with CamScanner

இந்த வராஹ புராணம் அந்த முறையில் அவதரித்ததன்று. இங்குக் கேட்டவள் ஸகல லோகங்களுக்கும் தாயான பூமிப் பிராட்டி. இவளும் தன் நலத்துக்காகக் கேட்கவில்லை . உலகம் நல்வாழ்வு பெறுதற்கு வழியையே கேட்டாள். உபதேசித்தவன் யார்? எல்லாவுலகுக்கும் தந்தையான ஸர்வேச்வரன். அவன் அருளிச் செய்த புராணமாகையாலே இது மற்ற எல்லாப் புராணங்களிலும் விஞ்சிய பெருமையுடைத்தாம் . மஹாபாரதம் தர்மங்கள் அனைத்திலும் எம்பெருமானைப் பற்றிச் செய்யும் தர்மமே உயர்ந்ததென்று கூறுகின்றது. அப்படி அவனைப் பற்றிய விசேஷ தர்மங்களை இது மிகுதியாக விளக்குவதாலும் இந்தப் புராணம் மற்ற புராணங்களினும் மேம்பட்டு நிற்கின்றது.

3 மோக்ஷம் பெற நேர் உபாயமும் பரம்பரை உபாயங்களும்

இந்த வராஹ புராணம் மோக்ஷத்தை விரும்புமவர்களுக்கு அதைப் பெற உபாயங்களை விளக்குகின்றது. அவற்றில் சில மோக்ஷத்துக்கு நேரிடை உபாயமாய் உள்ளன. சில படிப்படியாக மோக்ஷத்தைத் தரும் உபாயமாகவுள்ளன. நேர் உபாயம் பக்தி யோகமும் ப்ரபத்தியும். படிப்படியாக மோக்ஷம் தரும் உபாயங்களாவன - எம்பெருமான் ஸந்நிதியை அலகிடுதல் - மெழுகுதல் - வண்ணப் பொடிகளால் கோலமிடுதல் - திருமாலை கட்டி ஸமர்ப்பித்தல் - திருவிளக்கு ஏற்றுதல் - தளிகை ஸமர்ப்பித்தல் - திருநந்தவனம் அமைத்தல் - விமானத் திருப்பணி செய்தல் - ப்ரதக்ஷிணம் செய்தல் - கீழே விழுந்து வணங்குதல் - அவன் சரிதங்களைக் கேட்டல் - அவனைத் துதி செய்தல் - அவன் திருநாமங்களை அநுஸந்தித்தல் - அவன் திருக்குணங்களைப் புகழ்தல் - அவன் ஸந்நிதியில் ஸ்தோத்ரங்களை இனிதாக இசைத்தல் - ஆனந்த பரவசமாய் அவன் திருமுன்பே ஆடுதல் - அவன் திருமேனியை உள்ளத்துக் கொள்ளல் - அவனையே தியானம் செய்தல் - இன்னும் அவனைப் பற்றிச் செய்யும் தர்மங்களுக்கெல்லாம் விசேஷ தர்மங்களாய் நின்று மோக்ஷத்துக்கு நேர் உபாயத்தைச் செய்ய வழி செய்வதால் இவை வரிசையாக மோக்ஷத்தைப் பெறுவிக்கும் உபாயங்களாகும்.

4 வராஹ சரம சுலோகம் கூறும் ப்ரபத்தி

வராஹ புராணத்தில் வராஹப்பிரான் திருவாயினின்று அவதரித்த இரண்டு சுலோகங்களும் வராஹ சரம சுலோகமெனப்படும்.

அந்தப் புராணத்தில் இந்த இடம் எல்லோரும் செய்ய உரியதாய் எளிதில் செய்யக் கூடியதாய் மிகவும் போக்யமாயும் உள்ள சரணாகதியென்ற விசேஷமான நேர் மோக்ஷோபாயத்தை வெளியிடுவதால் சேதநர் உஜ்ஜீவிப்பதற்கு மிகவும் ஏற்றதாகும். இங்குச் சொல்லுகிற ப்ரபத்தியென்னும் சிறந்த உபாயம் அவரவர் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு எல்லாப் பலனையும் தரும். நேரிடையாக மோக்ஷத்தையும் தரும். பக்தியோகத்தின் அங்கங்களைச் செய்ய முடியாத இடத்தில் ப்ரபத்தியைச் செய்தால் இது அங்கப்ரபத்தியாய் நின்று பக்தியோகத்தைத் தலைக்கட்டிக் கொடுக்கும். மேலும் ஐச்வர்யத்தையும் ஆத்மாவை அநுபவித்த லாகிய கைவல்யத்தையும் தரும்.

5 வராஹ சரம சுலோகங்கள் :

அவதாரக்ரமம் ஸ்ரீ பூமிப்பிராட்டி எம்பெருமானைப் போல் இயற்கையாகவே அனைத்தையும் அறிந்தவள். ஆயினும் அறியாதவளைப் போல் எம்பெருமானைக் கேட்கின்றாள். எதற்காக? தன் குழந்தைகளுக்கு நன்மைக்காகத் தாயான பூமிப்பிராட்டி கேட்டதாகவும் எல்லாப் பிராணிகளிடமும் நல்லெண்ணமுடைய தந்தையான எம்பெருமான் அருளிச்செய்த வார்த்தையாகவும் உலகில் எல்லாரிடமும் பரவ வேண்டுமென்று பிராட்டி திருவுள்ளம் பற்றி அவனைக் கேட்கின்றாள் - நாத! சேதநராகிய நம் குழந்தைகள் உஜ்ஜீவிப்பதற்காக அவர்கள் செய்யும்படி மிகக் கடினமான பக்தியோக மென்னும் உபாயம் விதிக்கப்பட்டுள்ளதே! நம் குழந்தைகளில் பலர் பூர்ணமான ஞானமற்றவர்கள். கடினமான உபாயத்தைச் செய்யச் சக்தியுமற்றவர். இவர்கள் நல்வாழ்வு பெறக் கடினமான பக்தியோகத்தை உபாயமாகக் காட்டினால் அது குருவியின் கழுத்தில் பெரிய பனங்காயைக் கட்டியது போலன்றோ ஆகும்! மேலும் சேநர்களுக்கு மரண காலத்தில் கடைசி நினைவு உங்களைப் பற்றியதாக வந்தே தீர வேண்டுமென்றும் அதுவும் பக்தியோகத்துக்கு இன்றியமையாத அங்கமென்றும் விதிக்கப் பட்டுள்ளதே ! இது இவர்களுக்குச் சாத்தியமாகுமா? மரணப் படுக்கையில் மனம் நல்ல விஷயத்தில் நிலையாய் நிற்குமென்று சொல்லவும் முடியாதே ஆகவே தம் முயற்சி கொண்டு மனத்தை ஒருமைப் படுத்திக் கடைசிக் காலத்தில் நல்ல விஷயத்தில்

Scanned with CamScanner

செலுத்துவதும் முடியாதே! ஆதலின் இவர்களின் நன்மைக்காக எளிதான சிறிய ஓர் உபாயத்தை அருளிச் செய்யவேண்டும். அது உருவத்திலும் சிறியதாயிருக்க வேண்டும். அதன் அங்கங்களும் பக்தியோகத்திற்போல் சுமையாயிருக்கக் கூடாது. என்று வராஹப் பிரானிடம் பிராட்டி விண்ணப்பம் செய்தாள்.

எம்பெருமான் நம் முயற்சிக்கு ஆளாகாதபடி முன்பே உள்ள உபாயமாய் நிற்பதால் ஸித்தோபாயமெனப்படுகின்றான். அவன் ஸகலத்தையும் அறிந்தவன். அவன் பூமிப்பிராட்டியின் வேண்டு கோளைக் கேட்டு அதற்கு விடையாக இரண்டு சுலோகங்களைக் கூறுகின்றான். அதில் அருளிச்செய்துள்ள விஷயமாவது - தன்னை வசப்படுத்துவதற்காகச் சேதநன் செய்ய வேண்டிய சிறிய உபாயம் ஒன்று உள்ளது. அதுவே ப்ரபத்தி. அது அறிவு வடிவமாகச் செய்யும் ஒரு ஸாரமான வேள்வியாகும். இந்த உபாயத்தைச் செய்தால் ஸர்வேசுவரனான தான் மனம் தெளிந்து மகிழ்ந்துவிடுவான். இப்படி பிறவிதோறும் எம்பெருமான் தானும் வந்து அவதரித்து மக்களைக் காக்கின்றான். பின் அப்படி ப்ரபத்தியைச் செய்த சேதநர்களைத் தன் ஸ்தாநமான பரமபதத்துக்குக் கொண்டுபோய் அவர்களின் ஞானத்தை மலரச் செய்து தன் திருவடிக் கீழ் ஸகல கைங்கர்யங்களையும் செய்யும்படி அருள் புரிவான். இந்த அம்சங்களையே இரண்டு சுலோகங்களால் பூமிப்பிராட்டியின் கேள்விக்கு விடையாக அருளிச் செய்கின்றான் வராஹப்பிரான்.

6 வராஹசரம சுலோகங்களின் கருத்து

இந்த இரண்டு சுலோகங்களுக்கும் பொதுவாய்ச் சுருக்கமான பொருள் வருமாறு; மனம் நேரிய நிலையில் இருக்கும் போது சரீரமும் நல்ல நிலையில் இருக்கும் வேளையில் சரீரத்தில் தாதுக்கள் சமமாயிருக்கும்போது உலகைச் சரீரமாகக் கொண்டவனாய், பிறவி முதலிய இழிவான தன்மைகள் அற்றவனான என்னைக் குறித்துப் பிரபத்தி செய்பவன் மரணமடையும் காலத்தில் கல்லையும் கட்டையையும் போலக் கிடக்கும்பொழுது அந்நிலையில் என் பக்தனான அவனுக்கு ஒருகால் என்னைப் பற்றிய நினைவு அவனது முயற்சியால் வராவிடினும் அவனுக்கு அருள் புரியும் நினைவை நானே கொண்டு என் ஸ்தாநமாகிய பரமபதத்துக்கு அழைத்துச் செல்வேன்' என்று.

6.1 முதல் சுலோகத்தின் கருத்து

இந்த இரண்டு சுலோகங்களில் முதல் சுலோகம் பூமிப்பிராட்டி வராஹப் பெருமானிடம் 'எல்லாப் பிராணிகளும் நற்கதி பெறச் சிறியதான உபாயத்தை எனக்காகச் சொல்லியருள வேண்டும்' என்று பிரார்த்திக்க, ப்ரபத்தியென்னும் லகுவான உபாயத்தைச் செய்ய வேண்டிய காலம் - தகுதி - செய்யவேண்டிய முறை - யாரைக் குறித்துச் செய்வது என்ற விசேஷாம்சங்களுடன் காட்டுகின்றது.

6.2 இரண்டாம் சுலோகத்தின் கருத்து

இரண்டாவது சுலோகம் விளக்கும் பொருள் : பக்தி யோகம் செய்பவனுக்கு மரண காலத்தில் எம்பெருமானைப் பற்றிய நினைவு வந்தேயாக வேண்டும். அது பக்தியோகம் பூர்த்தியாவதற்கு அவசியம் வேண்டிய ஓர் அங்கமாகும். அந்த நினைவைத்தன் முயற்சியாலே அவசியம் பெற்றேயாக வேண்டும். இந்த நிர்ப்பந்தமெல்லாம் ப்ரபத்தி செய்பவனுக்குக் கிடையாது. இவனுடைய எல்லாப் பொறுப்புக்களையும் ரக்ஷகனான எம்பெருமான் தானே ஏற்றுக்கொண்டுவிட்டான். பின் அவனது செயல் யாது? இடம் காலம் முதலிய வரையறை இல்லாது அவன் திருவடிகளில் கைங்கர்யம் செய்தல் வரை உள்ள மிகச் சிறந்த பயனை அளிப்பதுவேயாகும். இந்தப் பலனைப் பெறுவதைக் காட்டுகின்றது இரண்டாவது சுலோகம்.

7 ஸ்ரீ வராஹ சரம சுலோகம் 1: வியாக்யானம்

7.1 'ஸ்திதே மநஸி'யின் விளக்கம்

இந்த ப்ரபத்தியை எப்பொழுது செய்வேண்டுமென்பதைக் கூறுகின்றேன். மனம் நல்ல நிலையில் இருக்க வேண்டும். எந்த விஷயத்தை நினைப்பதானாலும் மனத்துக்கு நல்ல நிலை வேண்டியது உண்மையே. ஆனால் ப்ரபத்தியைச் செய்வதற்கு வேண்டிய மனநிலை வேறு. பொதுவாய் மனம் ஒரு குரங்கு போன்றது. வானரத்தைக் கட்டி வைத்தாலும் அது வெளியிலே ஓடுவதிலேயே நோக்கமுடையது. அவ்வாறே மனத்தை எப்படி அடக்கி வைத்தாலும் வெளி விஷயங்களில் ஓடும் தன்மை யுடைத்து. இதைத்தான் குரங்குச் சேஷ்டையென்பர். இத்தகைய மனத்தை உடையவனுக்கு ஒரு பெரிய விசேஷமான ஸூக்ருதம்

இருந்து அதனால் ஸத்துவ குணம் தலையெடுக்கின்றது. பின் உயர்ந்த ஆசார்யனை ஆச்ரயிக்கின்றான். அவன் உயர்ந்த தத்துவமாகிய ஸ்ரீமந் நாராயணன் - உயர்ந்த உபாயமான சரணாகதி - உயர்ந்த பலனாகிய மோக்ஷம் இவற்றைப் பற்றி உபதேசிக்கின்றான். அந்த உபதேசத்தாலே தத்துவத்தைப் பற்றிய தெளிவும் உபாயத்தில் நம்பிக்கையும் பலனைப் பெறுதலில் துடிப்பும் பிறக்கின்றன. இந்த அளவுக்கு மனம் நிலைநின்றால் போதும். இத்தகைய மனமே ப்ரபத்திக்கு வேண்டுவது. ப்ரபத்தியென்பதும் உள்ளத்தில் பிறக்கின்ற ஒரு விசேஷ நினைவுதானே! சில கர்மங்களைப் புண்ணியமான காலத்திலும் புண்ணியமான. இடத்திலும் செய்ய வேண்டுமென்ற வரையறை உண்டு. இந்தப் பிரபத்திக்கு இடம் காலம் இவற்றைப் பற்றிய வரையறை இல்லை. மற்ற கர்மங்களுக்குப் புண்ய காலத்திலும் புண்யமான இடத்திலும் செய்தால் விசேஷ பலன் வருவதும் அதற்கு மாறான காலத்திலும் இடத்திலும் செய்தால் பலனில் குறைவு வருவதும் உண்டே! அந்த அம்சம் ஒன்றுமே இந்த ப்ரபத்தி விஷயத்தில் கிடையாது. மனம் உறுதியுடன் இருப்பது ஒன்றே ப்ரபத்திக்கு அவசியம் வேண்டியதாகும்.

7.2 'ஸஸ்வஸ்தே சரீரே'யின் விளக்கம்

ப்ரபத்தி செய்யும்போது சரீரமும் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். இங்கு ஒரு கேள்வி எழலாம் - மனம் நல்ல நிலையில் இருக்க வேண்டுமென்று முதலில் சொல்லியதே போதாதா? சரீரம் நல்ல நிலையில் இல்லாவிடில் மனத்துக்கு நேரிய நிலையே வராதே! சரீரத்தில் உரிய நிலை மாறினால் கவனக் குறைவு - உறக்கம் முதலியன வந்து வேண்டிய அம்சத்தை நினைக்க முடியாமல் போய்விடுமன்றோ ! ஆதலின் மனத்தின் நல்ல நிலையைச் சொன்னாலே சரீரம் திடமான நிலையில் இருப்பதும் தேறிவிடுமே! அதைத் தனித்துச் சொல்ல வேண்டுமோ? என்று.

இதற்கு ஸமாதாநம் - வேறு சில கர்மங்களைச் செய்யும்போது அவற்றுக்கு ஏற்றவாறு சரீரத்தின் நிலைக்குச் சில வரையறைகள் உண்டு. அவையாவன - அந்த அந்தக் கர்மத்தைச் செய்யப் பாங்காக வாலிப வயது வேண்டும். சரீரத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும். கிழக்கு முகமாய் ஆஸநத்தில் அமர்ந்து செய்ய

வேண்டும். இன்னும் இத்தகைய பல விதிகள் கைக்கொள்ள வேண்டியனவாயுள்ளன. இந்த ப்ரபத்திக்கோ அந்த நியமங்கள் எல்லாம் அவசியமானவையல்ல. சாஸ்த்ரங்கள் சொல்லும் விஷயத்தைச் சிந்தித்து உணருவதற்கு அவசியமான அளவுக்குச் சரீரம் பாங்காக இருந்தால் போதும். பக்தியோகத்தைச் செய்வதற்கு ஏற்றவாறு மனத்தைக் கட்டுப்படுத்தற்கு அவசியமாகச் சொல்லிய பழக்கங்களெல்லாம் இந்த ப்ரபத்திக்கு அவசியமல்லவென்று இதனால் ஏற்படுகின்றது. ஆகவே ப்ரபத்திக்கு வேண்டிய அம்சங்களை மறத்தல் - மதிமயக்கம் - உறக்கம் - முதலியவற்றைத் தரும் நிலை கழிந்து ஸத்துவகுணம் நன்கு தலையெடுக்கப் பெற்று அதனால் சிறந்த பலனாகிய மோக்ஷத்தில் விருப்பம் ஏற்படுதற்கு ஏற்ற அளவுக்குச் சரீரம் இடம் கொடுத்தால் போதுமென்று உணர்க.

7.3 'தாது ஸாம்யே' யின் விளக்கம்

மேலும் ப்ரபத்தி செய்யும்போது கபம், வாதம், பித்தம் ஆகிய தாதுக்கள் ஒத்திருக்க வேண்டும். ஆயுர்வேதத்தில் இந்தத் தாதுக்கள் ஒத்திருந்தால்தான் சரீரம் நல்ல நிலையில் இருக்குமென்று கூறப்படுகின்றது. ஆகவே இந்தத் தாதுக்களின் ஒற்றுமையைக் குறிப்பிட்டுக் கூறவேண்டுமோ? என்று கேட்கலாம். இதற்கு விடை-பக்தியோகம் செய்பவர் அதற்கு அங்கமாக ஆஸநம் - ப்ராணாயாமம் முதலியவற்றை நன்றாய்ச் செய்து அதனால் சரீரத்தை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அத்தகைய விசேஷமான முறையில் சரீரம் ஸ்வஸ்தமாயிருக்கும் நிலையை இந்தப் பிரபத்திக்காகத் தேட வேண்டாம். பொதுவாக எல்லோருக்கும் கப வாத பித்தங்கள் ஒத்தனவாயிருப்பதால் வரும் சாதாரணமான நல்ல நிலையில் சரீரம் இருந்தால் போதுமென்று காட்டுவதற்காகத் தாதுக்கள் ஒத்திருக்க வேண்டுமென்று கூறினேன். இங்கு ப்ரபத்திக்கு வேண்டிய ஓர் அளவுக்குத்தான் மனநிலையும் சரீரநிலையும் தாதுக்களின் ஒற்றுமையும் கூறப்பட்டனவென்று கொள்ள வேண்டும். இல்லாவிடில் மனநோய் உடல் நோய் உள்ளவர்களுக்கும் ப்ரபத்தியை விதித்திருப்பது பொருந்தாமற்போம். ஆகவே ப்ரபத்தி குறிப்பிட்ட ஐந்து அங்கங்களைத் தவிர வேறொன்றையும் எதிர்பார்க்க மாட்டாதென்று தேறியது. மனத்தை வெளியில் பட்டி புகாதபடி அடக்கிச் சரீரம் கெட்டழிவதற்கு முன் தாதுக்கள் ஒத்திருக்கும் போது ப்ரபத்தியைச் செய்து விட வேண்டுமென்று தீர்ந்தது. இந்த

Scanned with CamScanner

ப்ரபத்தி எல்லார்க்கும் கிட்டாது. நல்ல விவேகம் பெற்று இதைச் செய்யத் தகுதியுடையன் கிடைப்பதற்கு அரியன்.

7.4 'யோ நர:' என்பதின் விளக்கம்

வராஹப் பிரான் கூறுவது: இத்தகைய என்னிடம் ப்ரபத்தியைச் செய்பவனுக்கு நான் செய்யும் அநுகூலத்தை இனிக் கூறப் போகின்றேன். இந்த ப்ரபத்தியை எந்த மனிதனும் செய்யலாம். 'இன்ன ஜாதியில் பிறந்தவன் தான் செய்யலாம். இன்ன ஆச்ரமத்தைக் கொண்டவன் தான் செய்யலாம் என்பது முதலான வரையறை எதுவும் கிடையாது. ஸத்யமே பேசும்படி வேதம் விதிக்கின்றதே! இதற்குச் சாதி முதலிய வரையறை உண்டா? இது எல்லாருக்கும் பொதுத் தர்மமா யன்றோ உள்ளது. அங்ஙனமே சரணாகதியும் எல்லாருக்கும் பொதுவான தர்மமாகும். ஆனால் ரக்ஷகனான என்னைப் பற்றியும் சரணாகதியைப் பற்றியும் அதனால் வரும் பலனைப் பற்றியும் அறிவு மட்டும் அவசியம். இந்த அறிவுடையார் அனைவரும் ப்ரபத்தியைச் செய்ய விருப்பம் ஏற்படும் போது எல்லாப் பலனையும் அளிக்கவல்ல ப்ரபத்தியைச் செய்யலாமென்பதுவே உண்மை நிலையாகும்.

எந்த மனிதனும் ப்ரபத்தியைச் செய்யலாமென்று இப்பொழுது நான் சொல்லியதைக் கொண்டு மனிதனாய்ப் பிறந்தவன் மட்டுமே செய்ய உரியது என்றும் தேவர் முதலிய பிறவியை விலக்கிக் கூறியது என்றும் கருத வேண்டாம். இந்தக் கர்ம பூமியில் பிறந்து ப்ரபத்திக்குத் தகுதியுடைய மனிதர்களோடு தேவர் முதலியோரையும் கூட்டிக் கொள்ள வேண்டும். ஆகவே மானிடர் - தேவர் - கந்தர்வர் - யக்ஷர் முதலிய எல்லோருக்கும் பரம புருஷனான என்னைக் குறித்துப் பக்தி யோகம் செய்யவோ ப்ரபத்தி செய்யவோ தகுதியுண்டு.

7.4.1 ப்ரபத்திக்கு மானிடரை மட்டும் குறிப்பிட்டு உரியராகக் கூறியதன் காரணம் - விளக்கம்

நான் மனித வகுப்பைக் குறிப்பிட்டுக் கூறியதற்கும் ஒரு காரணம் உண்டு. அதாவது - முற்பிறப்புகளில் தாவரமாகவோ விலங்காக வோ எல்லாம் பிறந்த நிலை கழிந்து இப்பொழுது மனிதப் பிறவியைப் பெற்றது பெரிய லாபமன்றோ! மேலும் இந்தச் சரீரம் பெற்றது எதற்காக? நல்ல விவேகம் பெற்றுச் சாஸ்த்ர வழியில் நடந்து எனக்கு அடிமை செய்வதற்குத் தானே இப்படி இந்தச் சரீரத்தைப் பெற்றும் வழிதப்பி நடந்தால் பெரிய அநர்த்தம் வருமென்பதை நினைவூட்டுவதற்காகவும் மனிதப் பிறவியைக் குறிப்பிட்டுக் கூறினேன். மேலும் மனிதன் என்று கூறியதால் தேவர் முதலியவர்களை விலக்குவதாகக் கொள்ளக் கூடாது. இந்தக் கர்ம பூமியில் தோன்றியவர்களைக் கூறுவதன் மூலம் தேவர் முதலியவர்களைக் குறிப்பால் உணர்த்துவதாகவும் கொள்ளலாம். மற்றொரு வழியும் உண்டு. நான் மனிதனை நரன் என்ற சொல்லால் தானே குறிப்பிட்டேன். நரன் என்ற சொல் அழிவற்றவன் என்ற பொருளில் ஜீவனைச் சொல்லவல்லது. ஒரு செயலைச் செய்யுமாறு விதித்தால் அது சாஸ்த்ரத்துக்கு வசப்பட்டவர் எல்லோரையும் கட்டுப்படுத்தும். ஆகவே நரசப்தம் மனிதனை மட்டும் கூறாமல் சாஸ்த்ரத்துக்கு வசப்பட்ட எல்லாச் சேதநரையுமே கூறவல்ல தென்று உணர்க.

7.5 ஸ்மர்த்தா என்பதின் விளக்கம்

இப்படி ப்ரபத்திக்கு உரிய காலத்தையும் தகுதியையும் தெளிவாய்க் கூறி விட்டேன். பக்தியோகமென்னும் கைம்முதல் சிறிதும் இல்லாமல் நிற்கும் மனிதன் சிறப்பித்துச் செய்ய வேண்டியதைச் சொல்லுகின்றேன். என்னை உபாயமாக நினைத்து ப்ரபத்தி செய்ய வேண்டும். சாஸ்த்ரங்களைக் கற்றதால் ஏற்பட்ட ஞானம் மட்டும் போதாது. ப்ரபத்தியென்பதைச் செய்தேயாக வேண்டும். பக்தி யோகம் போலே இந்த ப்ரபத்தியும் சாஸ்த்ரங்களாலே விதிக்கப் படுகின்ற ஒரு விசேஷமான நினைவு வடிவு கொண்டதாகும். அந்த நினைவு யாது? என்னையே பக்தியோகத்தின் ஸ்தானத்தில் வைத்துத் தன் ஆத்மாவை எனக்கே அடிமையாக ஸமர்ப்பித்துக் காக்கும் பொறுப்பையும் என்னுடையதாகவே அநுஸந்தித்து அதனால் வரும் பலனும் என்னைச் சேர்ந்ததே என்று நினைவு கொள்ளுதலேயாகும். சாஸ்த்ரம் விதிக்காத ஞானத்தையே மோக்ஷத்துக்கு உபாயமாகச் சொல்லும் கொள்கையினருக்கு இங்கு இடமேயில்லை,

7.5.1 ப்ரபத்தி ஒரே முறை செய்ய உரியது

இந்த ப்ரபத்தியென்னும் நினைவு வேறு. பக்தியோகம் செய்பவன் இடைவிடாது எம்பெருமானைச் சிந்திக்க வேண்டுமென்று சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட நினைவு வேறு. இந்த ப்ரபத்தி என்னும் நினைவைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று ஒரு

Scanned with CamScanner

சாஸ்த்ரமும் கூறவில்லை. பொதுவாகச் சாஸ்த்ரங்களில் ஒரு பலனுக்காக விதிக்கும் கர்மம் ஒரே முறை செய்ய வேண்டியதாய்த் தான் தீர்ந்துள்ளது. வேறு இடங்களிலும் ஒருமுறை ப்ரபத்தி செய்ய வேண்டியதாய் ப்ரமாணங்கள் கூறுவதால் ப்ரபத்தியை மறு முறையோ தொடர்ந்தோ செய்ய வேண்டாமென்று தெரிகின்றது. இந்த ப்ரபத்தியை எந்தக் காலத்திலும் எந்தச் சேதநனும் செய்யலாம் என்றும் சாஸ்த்ரம் கூறுகின்றது. சாஸ்த்ரங்களி லிருந்து ப்ரபந்தனுக்கு இந்தச் சரீரத்தின் முடிவிலேயே மோக்ஷம் வருவதாகத் தெளிவாய்த் தெரிவதோடு அதற்கு மறுத்துக் கூறும் ப்ரமாணமும் இல்லை. மேலும் ப்ரபந்நன் தன் முயற்சி கொண்டு கடைசிக் காலத்தில் எம்பெருமானைப் பற்றிய நல்ல நினைவைப் பெறவேண்டுமென்ற அவசியமுமில்லையென்று ப்ரமாணங்கள் கூறுகின்றன. சரீரம் முடிந்தவுடனேயே மோக்ஷம் தருவதாக நான் சொல்வதாலேயே இந்த ப்ரபத்தியை மறுபடி செய்ய வேண்டாமென்பது விளங்குமே! ஆதலின் பக்தியோகத்தில் தொடர்ந்து செய்ய வேண்டிய நினைவுக்கும் ப்ரபத்தியென்னும் நினைவுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்க.

7.5.2 ப்ரபத்திக்கு அங்கமல்லவாயினும் உரிய கர்மங்களைச் செய்தேயாக வேண்டியமை

இந்த ப்ரபத்தி என்னைப் பிரார்த்தித்து என்னிடம் தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பிப்பதே என்பதையும் இதற்கு மஹாவிச்வாஸம் - ஆநுகூல்ய ஸங்கல்பம் - ப்ராதிகூல்யவர்ஜநம் - கோப்த்ருத்வ வரணம் - கார்ப்பண்யம் ஆகிய ஐந்து மட்டுமே அங்கங்களென்பதையும் வேறு இடங்களில் காண்க. இவ்வாறே அந்தணர் முதலிய ஜாதிகளுக்கும் ப்ரஹ்மசாரி முதலிய ஆச்ரமங்களுக்கும் உரிய கர்மங்களும் ப்ரபத்திக்கு அங்கங்களல்ல வாயினும் ஸ்வதந்த்ரனான என் கட்டளையால் விதிக்கப்பட்டன வாதலின் அவற்றைச் செய்தே தீர வேண்டுமென்பதையும் வேறு இடங்களில் காண்க.

7.6 'விச்வரூபம்' 'மாம்' அஜம்' என்பதின் விளக்கம்

இப்படி கீழே உள்ள ஸந்தர்ப்பத்தையும் இரண்டாவது சுலோகத்தையும் ஆராய்ந்து பார்த்தால் இங்குக் கூறிய ப்ரபத்தி மோக்ஷத்துக்காகவே ஏற்பட்டதென்பதை உணரலாம். மோ க்ஷத்தை விரும்புமவர் என்னையன்றிப் பிற தெய்வங்களை

நாடக்கூடாதென்பதையும், என்னை ஆச்ரயித்தே மோக்ஷம் பெற வேண்டுமென்பதையும், இந்த ப்ரபத்திக்கு இலக்கான என்னிடம் மேம்பாடும் எளிமையும் நிலையாக உள்ளனவென்பதையும் இந்தச் சுலோகத்தில் நான் வெளியிட்டதாகவும் உணர்க.

7.7 வராஹப்பிரான் தன் பெருமையைக் கூறல்

7.7.1 'விச்வரூபம்' என்பதின் விளக்கம்

வராஹ சரம சுலோகங்களின் விளக்கம் வருமாறு: நாராயண சப்தத்தால் சேதநர்களை இருப்பிடமாகவுடையன் என்று சொல்ல வில்லையா அவ்வாறே ஸகலலோகங்களையும் சரீரமாக வுடையன் நான். சேதந அசேதங்களுடைய ஸ்வரூபம் - நீடித்து நிற்றல் எல்லாம் என் ஸ்வரூபத்தால் ஏற்படுவன. அவற்றின் ஸ்வரூபம் - நீடித்து நிற்றல் - செயல் எல்லாம் என் ஸங்கல்பத் தாலேயே நடைபெறுவன. சேதந அசேதங்களுக்கு வரும் பலனை எல்லாம் ப்ரதாநனாய் நின்று அநுபவிப்பவன் நானே. ஆதலின் அனைத்தையும் தாங்கி நிற்பவனும் நியமிப்பவனும் சேஷியும் யானே. ஸகல வஸ்துக்களின் உருவம் - நீடித்து நிற்றல் - செயல் எல்லாம் நான் இட்ட வழக்காய் நடப்பன. சேதநர்கள் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்பவன் யானே. ஸாதுக்களைக் காத்தல் முதலிய நற்செயல்களை யெல்லாம் செய்து அதனால் யானே பயன் பெறுவதாகக் கருதுகின்றேன். ஆச்ரயிப்பதற்கு ஏற்ற யான் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்து நிற்பவனாதலின் ஆச்ரயிப்பவர்கள் என்னைத் தேட வேண்டாதபடி எப்பொழுதும் அவர்களுக்கு அருகில் இருப்பவனாகவுள்ளேன்.

7.7.2 'மாம்' என்பதின் விளக்கம்

இங்கு உனக்கு என் விஷயத்தில் ஓர் ஐயம் எழலாம் - அதாவது என் ஸ்வரூபத்தின் இருப்பை நித்யஸூரிகளும் முக்தர்களும் யோகிகளும் தாமே காணமுடியும்! ஆனால் திருமேனியும் இருப்பதால் மற்றுள்ளாரும் நேரில் காணலாமாயினும் என் பரவாஸுதேவ ரூபத்தையும் வியூஹத் திருமேனியையும் இவ்வுலகிலுள்ளார் காணமுடியாதே? என்று. இந்த ஐயம் வேண்டாம் உனக்கு. இந்த லீலாவிபூதியென்னும் ஸம்ஸார மண்டலத்தில் எல்லாரும் வந்து என்னை ஆச்ரயிப்பதற்கு ஏற்றவாறு வராஹமென்னும் விபவத் திருமேனியை எடுத்துக் கொண்டு வந்து நிற்கின்றேனே! இதற்குக் காரணம் என்

Scanned with CamScanner

கருணையன்றோ! இந்த நிலையில் என்னைப் பார்க்கும்போது சேதநர்கள் வந்து அடைவதற்குக் கைகொடுக்கும் கருணை முதலிய குணங்கள் புலப்படவில்லையா? ஒரு நீலமலை சந்திரனுடைய இரண்டு பிறைகளைக் கவ்விக்கொண்டு நிமிர்ந்து நிற்பது போல் இரண்டு கோரைப் பற்களைக் கொண்ட வராஹ வடிவுடன் நிற்கின்றேன். ப்ரளய ஸமுத்ரத்தில் மூழ்கியிருந்த பூமிதேவியாகிய உன்னை என் கோரைப்பல்லால் எடுத்து மீட்டு வந்தது போல் இப்பொழுது ஸம்ஸாரக் கடலுள் மூழ்கிப் புகலற்று நிற்கும் சேதநர்களைக் கரையேற்றுதற்கு ஏற்ற திருமேனியுடனன்றோ நிற்கின்றேன்! என் வடிவத்தைப் பார்த்தால் பாபங்கள் போகுமே! மனத்தாலும் நினைக்க எளிதானதன்றோ என் உருவம்! ஆகவே உலகுக்கு நன்மை புரிவதற்கே நான் அவதரிப்பவனென்பதுவும், ஆச்ரயிப்பதற்கும் பலனாய் அநுபவிப்பதற்கும் ஏற்ற கல்யாண குணங்கள் அனைத்தையும் உடையவன் நான் என்பதுவுமான அம்சங்கள் நன்கு புலப்படும்.

7.7.3 'அஜம்' என்பதின் விளக்கம்

இப்படி இருந்தாலும் சிலர் என்னைப் பற்றிச் சில கேள்விகள் கேட்கக்கூடும். அவையாவன - 'நீ எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டு அவற்றுக்கு ஆத்மாவாய் நிற்கின்றாயே! இதிலிருந்து பானைக்கு மண்போல் எல்லாவற்றுக்கும் நீயே உபாதாந காரணமென்றும் பானைக்குச் சுற்றும் கொம்பு முதலியன போல் நீயே எல்லாவற்றுக்கும் நிமித்த காரணமென்றும் தேறுகின்றதே! அப்படி இருவகைக் காரண வஸ்துக்களிலும் நீ தானே உட்புகுந்து நியமித்துச் செயல் புரியச் செய்கின்றாய்! அந்த முறையில் சேதந அசேதங்களுடன் கலந்தும் உள்புகுந்தும் நிற்பதால் அவற்றில் உள்ள தோஷங்களெல்லாம் உன்னிடமும் வருமோ? என்று ஸந்தேஹிக்கும்படியாகவன்றோ உள்ளது உன் நிலைமை! உலகில் நீ பல்வகை அவதாரங்களைச் செய்கின்றாய். உலகில் பிறக்கின்ற மற்ற மனிதர்களிடம் காணப்படும் அம்சங்களெல்லாம் உன்னிடமும் வரமாட்டாவா? ராமாவதாரத்திலும் கிருஷ்ணாவதாரத்திலும் பல துன்பங்கள் மதிமயக்கம் முதலிய இழிவான அம்சங்கள் உன்னையும் பற்றியதாகப் புராணங்களில் காண்கின்றோமே! இப்படி நீயும் மற்றவர்களைப் போலவே உள்ளவனாயின் தன்னையே நேரிய முறையில் காத்துக் கொள்ளச் சக்தியற்ற உனக்குப் பிறரைக் காத்தல் எவ்வாறு இயலும்?' என்று.

7.7.3.1 அவனது விசித்திரத் தோற்றம் தோஷங்கள் சேராமை - விளக்கம்

அவற்றுக்கு நான் விடை கூறுகின்றேன். நான் பிறப்பது உலகில் மற்றவர் பிறப்பது போலன்று. என் ஸங்கல்பத்தால் சுத்த ஸத்துவ மயமான திருமேனியுடன் நான் பிறப்பது கர்மபலனை அநுபவிப்பதற்காகப் பஞ்ச பூதங்களாலான சரீரத்துடன் மற்றவர்கள் பிறப்பது போன்றதாகுமா? அத்தகைய பிறப்பு எனக்கு இல்லையென்று சொல்வதே சேதந அசேதனங்களுக்கு வரும் ஆறு அலைகள் மாறுபாடுகளாகிய குற்றங்கள் எல்லாம் என்னிடம் வருவதில்லையென்பதையும் காட்டுமே! சேதநர்களுக்கு வரும் ஆறு அலைகளாவன - பசி - தாகம் - துன்பம் - மயக்கம் - முதுமை - மரணம் என்பன. அசேதங்களுக்கு வரும் குற்றங்களாவன - உண்டாதல் - இருத்தல் - மாறுபடுதல் - வளர்தல் - குறைதல் - அழிதல் ஆகியவை. இப்படி அத்தகைய குற்றங்கள் எதுவும் இல்லாமல் விளங்கும் எனக்குச் செய்ய இயலாதது எதுவும் இல்லை. இதனால் இழிகுணம் எதுவும் என்னிடம் அணுகமாட்டாதென்று தீர்ந்தது. சில அவதாரங்களில் நான் துக்கம், மயக்கம் முதலியன கொண்டு கஷ்டப்படுவதாகக் கூறியதற்கு நான் அவ்வாறு பாவனைதான் செய்தேனேயன்றி உண்மையில் எனக்கு ஒரு குற்றமும் இல்லையென்பதுவே கருத்தாகும். அவை அடியார்கள் என்னிடம் ஈடுபடுவதற்கும் எதிரிகள் என்னை அவமதித்து அழிந்து போவதற்கும் நான் செய்யும் அபிநயச் செயல்களேயாகும்.

8 வராஹ சரம சுலோகம் 2: வியாக்யானம்

8.1 இரண்டாவது சுலோகம் - எம்பெருமான் செயலைக் கூறுதல்

இப்படி புதிதாய்ச் செய்ய வேண்டாதபடி முன்பே உள்ளவனாதலின் ஸித்தோபாயமாய் ரக்ஷகனான என்னையும் என்னை வசப்படுத்துவதற்காக அதிகாரி செய்யவேண்டிய காரியமாகிய ப்ரபத்தியையும் பற்றிச் சுருதியும் ஸ்ம்ருதிகளும் விளக்கியுள்ள பெருமையைத் தழுவி நானும் என் வாக்யத்தால் விளக்கினேன். இனி அவனது பொறுப்பை ஏற்றுக்கொண்ட என் செயலை இரண்டாவது சுலோகத்தால் சொல்லுகின்றேன். அதாவது ப்ரபந்நனுடைய கர்மம் அஜ்ஞாநம் முதலிய எல்லா விரோதிகளையும்

Scanned with CamScanner

ஒழித்துச் சிறந்த பலனாகிய மோக்ஷத்தை அடைவித்தலைக் கூறுகின்றேன். கேள். இதனால் மற்றவரைக் காட்டிலும் ப்ரபந்நனுக்கு உள்ள விசேஷம் புலப்படும்.

8.2 'ததா' என்பதன் விளக்கம்

ப்ரபத்தி செய்யாதவனாயின் இறந்தவுடன் நரகம் வருமே என்று அஞ்ச வேண்டும். ப்ரபந்நனுக்கு நரகப் பேச்சு ஏது? ஆதலால் மரணத்தை ஆவலுடன் வரவேற்பான். இந்தச் சரீரம் கழியுமளவும் கூடப் பொறுக்காமல் ப்ரபத்தி முடிந்தவுடனேயே மோக்ஷம் வேண்டுமென்று விரும்பி ஆர்த்த ப்ரபத்தியைச் செய்தாலும் அவனுக்கும் வேறு சரீரத்தில் புக வேண்டாதபடி அப்பொழுதே மோக்ஷத்தைக் கொடுத்துக் காப்பேன். இந்தச் சரீரம் தானாகக் கழியுமளவும் பொறுத்திருந்து சரீரம் கழிந்தவுடன் மோக்ஷத்தை விரும்பி த்ருப்த ப்ரபத்தியைச் செய்தால் மறுபடி ஒரு சரீரத்தில் புகாதபடி இறந்ததும் மோக்ஷத்தைப் பெறலாம்.

8.3 'தம்' 'மத்பக்தம்' இவற்றின் விளக்கம்

என்னிடம் தன்னைக் காக்கும் பொறுப்பை ஸமர்ப்பித்தலாகிய பரந்யாஸத்தை மோக்ஷம் பெறுதற்காக ஒருவன் செய்து விடுகின்றான். பிறகு அவன் மோக்ஷத்துக்காகச் செய்ய வேண்டியது எதுவும் இல்லை. செய்ய வேண்டிய ப்ரபத்தியைத் தான் செய்து முடித்துவிட்டானே! அவன், சாதகப்பறவை மழையை எதிர் பார்த்திருப்பது போல் மரணத்தைப் பிரியமான விருந்தாளியாக நினைத்து ஆவலோடு எதிர்பார்த்திருப்பான்.

8.4 'ம்ரியமாணம்' 'து' இவற்றின் விளக்கம்

இப்படி என்னையன்றி வேறு உபாயத்தையோ பலனையோ நாடாது என்னையே பரம போக்யமாய்ப் பற்றி ப்ரபத்தியைச் செய்தவனுக்கு என்னை அடைவதற்கு இந்தச் சரீரம் கழிவதே எல்லையாகும். அவனது சரீரம் கழியத் தொடங்கும்போதே அவனுக்கு மோக்ஷம் தர விரைந்து நிற்பேன். இந்தப் பெருமை ஐச்வரியம் பெறவோ ஆத்மாவை அநுபவித்தலாகிய கைவல்யம் பெறவோ ப்ரபத்தி செய்பவர்க்கும் மோக்ஷத்துக்காகவே பக்தியோகம் செய்பவர்க்கும் கிட்டாது.

8.5 'காஷ்டபாஷாண ஸந்நிபம்' என்பதன் விளக்கம்

8.5.1 அசேதநம் போல் மரண காலத்தில் கிடப்பது ப்ரபந்தனுக்கு இழுக்கன்றோ ? - விடை

இங்கு ஒரு கேள்வி - மரணகாலத்தில் இந்தச் சீவன் கட்டை போலும் கல்லுப் போலும் கிடப்பான் என்று வராஹப்பிரான் கூறுகின்றானே! இப்படி அசேதநம்போல் கிடப்பதும் ப்ரபத்திக்கு அங்க வகுப்பில் சேருமோ? சேராது. இந்த அவலநிலை ப்ரபத்திக்கு முன்பு இருந்தாலும் கார்ப்பண்யம் என்ற அங்கத்தில் சேர்க்கலாம். காப்பண்யம் என்பது என்ன? தன்னிடம் கருணை கொள்ளும்படி தாழ்ந்த நிலையில் இருப்பது தானே! ப்ரபத்திக்குப் பின் மரண காலத்தில் கிடக்கும் இந்த அவல நிலையை ப்ரபத்திக்கு அங்கமாக எப்படிக் கூறமுடியும்? மரணம் ஏற்பட்டதும் அர்ச்சிராதிகதியால் மோக்ஷம் செல்லுகின்றானே! அந்த யாத்திரையைப் பலன் வகுப்பில் தானே சாஸ்த்ரம் கூறுகின்றது! அவ்வாறு அசேதநம் போல் கிடக்கும் இந்த நிலையைப் பலன் வகுப்பிலும் சேர்க்க முடியாதே? இது ஒரு பலனாகுமா? ஆகாதே! அல்லது ப்ரபந்நன் இவ்வுலகில் வாழும் வரை த்வயத்தை அநுஸந்தித்துக் கொண்டிருப்பதை இங்கேயே பெறும் நற் பயனாகக் கூறுகின்றார்களே! இவன் அசேதநம் போல் கிடக்கும் அவல நிலையை இவ்வாறு இங்கே பெறும் நற்பயனாகவும் கூறமுடியாதே! ஆகவே இப்படி மரணகாலத்தில் அசேதநம்போல் கிடப்பது ப்ரபத்திக்கு முந்திய நிலைக்கும் பிந்திய நிலைக்கும் பயன் படாததாகவன்றோ உள்ளது! இப்படி ஒரு நிலையைக் கூறுவது ப்ரபந்நனுக்கு இழுக்காகவன்றோ உள்ளது என்று கேட்கலாம்.

இதற்கு விடை-வராஹப்பிரான் திருவாயினால் அசேதநம் போல் கிடப்பதைச் சொல்லியதன் கருத்து வேறு. இதனால் நான்கு அம்சங்கள் வெளியாகின்றன. (i) ப்ரபந்நன் தன் கடைசிக் காலத்தில் எம்பெருமானைப் பற்றிய நல்ல நினைவைத் தன் முயற்சியால் ஸம்பாதிக்க வேண்டிய அவசியமில்லையென்பதும் ப்ரபத்தி அத்தகைய நினைவை எதிர்பாராதென்பதும் வெளியாகின்றது. (ii) உலகத்தார் அருவறுக்கக் கூடிய மரணகாலத்தில் அவனுக்கு நற்கதி அளிக்க முன் வந்துள்ள எம்பெருமானுக்கு அவனிடம் உள்ள அன்பு மிகுதியையும் காட்டுகின்றது. (iii) மேலும் சிறிதும் அறிவின்றிக் கிடக்கின்ற அவனுக்கு அறிவு மலர்ச்சியை அளித்து

அவனை ஸர்வஜ்ஞனாக ஆக்கப்போகும் ஆச்சர்யமான சக்தி எம்பெருமானிடம் இருப்பதையும் காட்டு கின்றது. (iv) மேலும் இப்படி ப்ரபந்நன் மீளாத உறக்கத்தில் கிடக்கும்போது எல்லா வகையிலும் உறவினனாய் அந்தர்யாமியாய் நிற்கும் எம்பெருமானையன்றி வேறு ஒருவனும் அவனைத் தட்டி யெழுப்பிப் பரமாநந்தத்தைக் கொடுக்க முடியாதென்பதையும் காட்டுகின்றது. எப்படிக் கிடந்தவனுக்கு எத்தகைய உயர்நிலை வருகின்றதென்றன்றோ வியக்கின்றோம்! இப்படி இந்நிலையில் கிடப்பதைச் சொல்லி அவனைக் கைதூக்கி விடுவதைப் பெருமாள் தானே விளக்கியதற்கு மற்றொரு பலனும் உண்டு. மோக்ஷத்தை விரும்பி நிற்கும் மற்றைச் சேதநர்களுக்குத் தாமும் எம்பெருமானை வசப்படுத்தும் உபாயமாகிய ப்ரபத்தியைச் செய்ய ஆர்வம் ஏற்படும். இத்தகைய சிறப்பைத் தரும் ப்ரபத்தி-அதைச் செய்பவன் - அதை ஏற்பவன் இவர்களைப் புகழ்ந்ததாகவும் ஆகின்றது.

8.5.2 மரணப் படுக்கையில் கட்டை-கல் இரண்டு உவமைகளைக் கூறியதன் கருத்து

மரண காலத்தில் கிடக்கும் நிலைக்குக் கட்டை - கல் என்று இரண்டு உவமானம் எதற்கு? ஒன்றே போதாதோ? என்று கேட்கலாம். அலங்கார சாஸ்த்ர வல்லுநர் ஒற்றுமையில் விசேஷமான மிகுதியைக் காட்டுவதற்காகப் பல உவமானங்கள் கொடுப்பது உண்டு என்கின்றார்கள். இங்கும் அந்த நீதியைக் கொள்ளலாம். மேலும் ஜீவன் எப்போதும் அறிவுடையனே. நான் என்ற உணர்ச்சி அவனுக்கு எப்போதும் உண்டு. ஆயினும் மரண காலத்தில் அவன் அறிவிழந்து கிடக்கும் நிலையை ஊன்றிப் பார்த்தால் அறிவற்ற தன்மையில் கட்டைக்கும் கல்லுக்கும் ஒன்றுக்கொன்று எத்தகைய வேற்றுமையோ அந்த அளவுக்குத் தான் அவ்விரண்டுக்கும் இவனுக்கும் வேற்றுமை உள்ளது என்ற கருத்தாகவும் கூறலாம்.

8.5.3 மரண காலத்தில் நல்ல நினைவு இல்லையாயினும் ப்ரபந்நன் மோக்ஷம் பெறுவது உறுதி

இப்படி மரணகாலத்தில் எம்பெருமானைப் பற்றிய நினைவின்றி அறிவிழந்து கிடப்பவனுக்கும் மோக்ஷம் உண்டு என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? தமோகுணம் தலையெடுப்பதால் தானே அறிவிழந்து கிடக்கின்றான் தமோகுணம் வளர்ந்த நிலையில்

மரணமடைபவன் நாய் பன்றி முதலிய பிறவிகளைப் பெற்று எந்த நற்காரியத்தையும் செய்யத் தகுதியற்றவனாவதாகக் கீதை கூறுகின்றதே! எந்த வஸ்துவை நினைத்துக் கொண்டு உயிரை விடுகின்றானோ, அந்தப் பிறவியையே அவன் பின்பு அடைவான் என்றெல்லாம் கீதையே கூறுகின்றதே? என்று கேட்கலாம். அதற்கு ஸமாதாநம் - அங்குச் சொன்னது பொதுவான மனிதர்களைப் பற்றியது. இங்கு எப்படியும் மோக்ஷம் உண்டு என்று சொல்லியது ப்ரபத்தி செய்தவனை மட்டும் குறிப்பிட்டுக் கூறியதாகும் என்று உணர்க. கடைசிக் காலத்தில் நல்ல நினைவு இல்லையானாலும் மோக்ஷம் உண்டு என்று சொல்லும் ப்ரமாணங்களெல்லாம் ப்ரபந்நனையே குறிப்பனவாகும்.

8.5.4 கத்யத்துக்கும் இச்சரம சுலோகத்துக்கும் முரண்பாடு-பரிஹாரம்

பின்னும் ஒரு கேள்வி - சரீரம் கழியும் ஸமயத்தில் என் அருளாலேயே முன்போல் நல்ல ஜ்ஞாநமுடையனாய்ப் பழய அநுபவங்களையும் எண்ணங்களையும் மறக்காமல் என்னையே மனத்தில் நினைத்துக் கொண்டிருப்பாய் என்று சரணாகதி கத்யத்தில் ப்ரபந்நனைக் குறித்து எம்பெருமான் வாக்காகக் கூறப் பட்டுள்ளதே! இங்கு அறிவிழந்து அசேதனம் போல் கிடப்பதாகக் கூறியுள்ளதே! என்று.

விடை: சில பெரியோர்கள் எம்பெருமான் திருவாக்கின்படி வரும் அந்த விசேஷ நிலை ப்ரபந்நர்களில் மஹாபாக்யவான்களான சிலருக்கு மட்டுமே கிடைக்கும் என்று கூறுகின்றனர். சிலர் சிலருக்கு மட்டுமே அந்நிலை வருமென்று வரையறுப்பது உசிதமன்று என்று கொண்டு எம்பெருமான் திருவாக்குக் கருத்தை வேறு வகையில் கூறுகின்றனர். அதாவது - கட்டையும் கல்லும் போலக் கிடக்கின்றான் என்பதற்கும் நல்ல நினைவின்றிக் கிடந்தாலும் மோக்ஷம் பெற்று விடுகின்றான் என்பதற்கும் உட்கருத்து ப்ரபந்நன் மரணகாலத்தில் தன் முயற்சியால் நல்ல நினைவை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதே. மரண காலத்தில் தன் அருளாலேயே சிறந்த ஞானம் உடையவனாய் இருப்பானென்று எம்பெருமான் திருவாக்கின் உட்கருத்து. ப்ரபந்நனுக்கு மரணகாலத்தில் அவனது முயற்சி சிறிதும் இல்லாமலே எம்பெருமான் திருவருள் ஒன்றாலேயே இறுதி நினைவு நல்லதாக வருமென்பதுவும் இந்த விசேஷ நிலை

ப்ரபந்நர் எல்லோருக்குமே வருமென்பதுவுமேயாகும் என்று சிலருடைய முடிவு.

8.6 'அஹம் ஸ்மராமி' என்பதின் விளக்கம்

பின்னும் ஒரு கேள்வி - மரண காலத்தில் அப்படி அறிவிழந்து கிடக்கும் ப்ரபந்நனைப் பற்றி வராஹப் பெருமான் நான் நினைப்பேன் என்கின்றான். அவன் நினைப்பது என்றால் என்ன? மறப்பது இருந்தாலன்றோ நினைப்பு வரவேண்டும்! ஒரே காலத்தில் ஸகலத்தையும் கண்கூடாக இயற்கையாக எப்பொழுதும் கண்டு கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு மறப்பு என்பது ஏது? மற்ற ஜீவர்களைப் போல் மறப்பது ஒரு ஸமயத்திலும் நினைப்பது ஒரு ஸமயத்திலும் என்பது பகவானுக்கும் உண்டா? ஆகவே ப்ரபந்நனை மரணகாலத்தில் தான் நினைப்பதாகக் கூறியது எவ்வாறு பொருந்தும்? என்று. **ஸமாதாநம்** - அவன் நினைப்பது என்பது வேறு. அதாவது - ப்ரபந்நனுக்கு மரண காலத்தில் தன் முயற்சிகொண்டு எம்பெருமானைப் பற்றிய நினைவைப் பெற முடியாதிருக்கலாம். ஆனால் அவன் செய்த ப்ரபத்தியால் அவனது பொறுப்பை எம்பெருமான் ஏற்றுக் கொண்டுவிட்டான். ஏற்றுக்கொண்ட காரியத்தைச் செவ்வனே செய்து முடிப்பதில் எம்பெருமான் சக்தியுடையன். அத்தகைய எம்பெருமான் அவனுக்கு மரண காலத்தில் நல்ல நினைவாகிய பலனையோ அதற்கு மேல் மோக்ஷம் பெறும் வரை உள்ள பலனையோ எல்லாவற்றையும் அளிக்கின்றான். இந்தக் கருத்துப் புலப்படுவதற்காகத்தான் ப்ரபந்நனிடம் மிக்க அருளோடு தனக்கு ஏற்படும் எண்ணத்தையே நினைவு என்று உபசார வழக்கிலே சொல்லிவைத்தான்.

'நான் நினைத்துக் கொண்டேயிருக்கின்றேன்' என்று நிகழ்காலத்திலே சொல்லியதன் கருத்து இந்த அநுக்ரஹத்தை அவன் விஷயத்தில் செய்த பின் ஒரு நாளும் அவன் விஷயத்தில் சீற்றம் ஏற்படாதென்று காட்டுவதேயாகும்.

8.6.1 'அஹம்' என்பதின் விளக்கம்

'நினைக்கிறேன்' என்று தன்மைச் சொல்லாலேயே நான் என்பது தோற்றுமே! நான் என்பதையும் சேர்த்து 'நான் நினைக்கின்றேன்' என்று சொல்லவேண்டுமோ? என்று

கேட்கலாம். **விடை-** நான் என்ற சொல்லையும் சொல்லி அவனுக்கே உரிய சில சக்திகளைக் காட்டுகின்றான். அதாவது அவனுக்குக் கோபமும் ஏற்படுவதுண்டு. அவன் திருவுள்ளத்துக்கு விபரீதமாய்ச் சாஸ்த்ரத்துக்கு முரண்பட்ட காரியத்தைச் செய்யும் எல்லாச் சீவர்களிடத்தும் சீற்றம் கொண்டு அவனுக்கு உள்ள சுதந்திரத்தால் குற்றத்துக்கு ஏற்றவாறு தண்டிக்க முற்படுவான். அவ்வாறு செய்து லீலாரஸத்தை அநுபவிப்பான். ஆனால் அவனை வசப்படுத்தும் உபாயமாகிய ப்ரபத்தியைச் செய்துவிட்டால் அவர்களிடம் சீற்றம் நீங்கிக் கருணை சுரக்கும். அவர்களுக்கு அருள் புரிய முற்படுவான். அப்பொழுது தன்னை அண்டியவர்களைக் காத்து அந்த இன்பத்தை அநுபவிக்கத் திருவுள்ளம் ஏற்படும். நினைத்த போதே மோக்ஷம் கொடுக்கச் சக்தி அவனுக்கு உண்டு. அப்பொழுது அவனைத் தடுக்க வல்லார் ஒருவரும் இலர். தனக்குத் துணையாக அவனே ஏற்படுத்திக் கொண்ட காலம் முதலியன வன்றி வேறு துணை எதுவும் வேண்டியதில்லை. இந்தப் பெருமைகளையெல்லாம் விளக்குவதற்காக 'நான்' என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்கின்றான் எம்பெருமான். சரம சுலோகத்தில் 'நான்' என்பதற்கும் இந்தக் கருத்தே கூறப் பட்டுள்ளது.

8.6.2 மோக்ஷம் தரும் வரை எம்பெருமான் நினைவு இருத்தல்

சேதநன் என்னை நினைத்தால் நானும் அவனை நினைப்பேன் என்கிற முறை கூட இங்கு வேண்டியதில்லை. அவன் மரண காலத்தில் அறிவிழந்தே கிடக்கட்டும். அவன் ஸ்ரீவைகுண்டத்தில் நித்யமாய் என்னை அநுபவிக்க வேண்டுமென்று நினைவு கொண்டு முதலில் ப்ரபத்தியைச் செய்துவிட்டானே! நானும் அவனுக்குச் சாச்வதமாக என் அனுபவத்தைக் கொடுப்பதற்கு ஒரு ஸங்கல்பத்தைப் பண்ணிவிடுகிறேன். அவனுக்கு மிக உயர்ந்த பலனாகிய மோக்ஷாநந்தத்தைக் கொடுக்கும் வரை என் நினைவு இருந்து கொண்டேயிருக்கும்.

8.7 'நயாமி பரமாம் கதிம்' - விளக்கம்

சேற்றிலே தன் பிள்ளை விழுந்து விட்டால் தகப்பன் அவனை எடுக்கத் தானும் வீழ்வதுண்டே! அங்ஙனமே சேதநனுடைய சரீரத்துக்குள்ளே அந்தர்யாமியாய் நிற்கும் நான் அந்தச் சேதநனைச் சரீரத்தினின்று எடுத்து இந்த ப்ரக்ருதியின் ஸம்பந்தமற்ற பரம

பதத்தில் திருமாமணி மண்டபத்தில் என்னுடைய திவ்ய பர்யங்கத்தில் ஏற்றும் வரை பொறுப்பை ஏற்று நடத்துவேன். ஜீவன் சரீரத்தினின்று கிளம்பிப் போகும் போது அக்நி தேவன் வாயு தேவன் முதலியவர்கள் இவனை வரவேற்று உபசாரங்கள் செய்து வழியனுப்பித் தாங்களும் பெருமை பெறுவார்கள். இது நான் அவர்களுக்குச் சாச்வதமாய் ஏற்படுத்திய பெரிய பாக்கியமாகும்.

8.7.1 ப்ரபந்நனுக்கு நேரிடையாகவே மோக்ஷம் தருதல்

மேலும் இந்தச் சேதநனுக்கு நான் கொடுக்கும் பலனோ மிகவும் விசேஷமானது. ப்ரபத்தி எல்லாப் பலனையும் தரவல்லது. ஆனால் இந்தச் சேதநன் மோக்ஷத்தையன்றி வேறு பயனுக்காக ப்ரபத்தி செய்யவில்லை. ஆதலின் இவனுக்கு வேறு பலனைக் கொடுக்க மாட்டேன். பக்தியோக வகைகளில் அடங்கிய மதுவித்யை முதலியன சில உண்டு. அவற்றைச் செய்பவர்களுக்கு அவர்கள் விரும்பிய ஐச்வர்யம் - ஆத்மாவை அநுபவித்தலாகிய கைவல்யம் இத்தகைய அற்ப பலனை முதலில் கொடுத்துக் கடைசியில் மோக்ஷம் தருவதே முறையாயுள்ளது. ஆனால் மோக்ஷத்துக்காவே ப்ரபத்தியைச் செய்தவனுக்கோ அத்தகைய அற்ப பலன்களைக் கொடுக்காமல் நேரிடையாகவே சிறந்த பலனாகிய மோக்ஷத்தைக் கொடுப்பேன். அதாவது - மிக உயர்ந்த பலனான என்னையே அவனுக்கு அநுபவிக்கக் கொடுப்பேன். என்னைப் பற்றிய பரிபூர்ணமான அநுபவத்தைக் கொடுப்பேன். அப்படி அநுபவித்து அது உள்ளடங்காமல் அதற்குப் போக்குவிடாக விசேஷமான கைங்கர்யங்களைக் கொடுப்பேன். இந்த மூன்றில் ஒன்றைச் சொன்னாலே மற்றவையும் கூறியனவாகிவிடும். ஆகவே 'மோக்ஷத்தைக் கொடுக்கும் உபாயமாக நிற்பவனும் நானே. அங்கு அநுபவிக்கப்படும் பலனாக நிற்பவனும் நானே' என்று தேறியதாகக் கூறுவது மிகப் பொருந்தும். அர்ச்சிராதி கதியையோ பரமபதத்தையோ தருவதாகக் கூறினாலும் கடைசியில் என்னை அநுபவிப்பதில் தானே போய் முடியும்!

இப்படி கீழ்க்கூறிய இரண்டு வராஹ சரம சுலோகங்களாலும் ப்ரபத்தி செய்தவன் மோக்ஷம் பெறுவதற்கு முன் ஸம்ஸார மண்டலமாகிய இந்த லீலாவிபூதியிலும் மோக்ஷம் பெற்றபின் பரமபதமென்னும் நித்ய விபூதியிலும் பெறும் பாக்ய விசேஷத்தைக் கூறியதாயிற்று.

8.7.2 எம்பெருமான் செயல் அடியார்களின் பயனுக்கேயாதல்

இயற்கையாகவே எல்லாருக்கும் சேஷியான எம்பெருமான் தன்னை அண்டிய ப்ரபந்நர்களின் பயனையே தனக்கு முக்கிய பயனாகக் கருதுகின்றான். உலகில் அசேதநப் பொருள்களுக்கும் செயல் உண்டு. ஆனால் அவற்றுக்கு அறிவில்லையாதலின் தமக்கு ஒரு பயன் வேண்டுமென்ற எண்ணமற்றவை. பிறருக்குப் பயன் பட வேண்டுமென்ற எண்ணமும் அறிவற்ற அவற்றுக்கு இல்லை. ஆனால் அவற்றால் உண்மையில் பிறருக்குப் பயன் உண்டு. உதாஹரணமாய் - அறிவற்ற தூண்கள் மேல் பாகத்தைத் தாங்கு கின்றன. ஆகவே அவை உணர்ச்சியின்றியே பிறருக்குப் பயன்படு கின்றன. அசேதநம் போன்ற சேதனங்களும் உண்டு. அவை பசு முதலியன. அவற்றுக்குப் பகுத்தறிவு இல்லை. அவையும் தமக்கோ பிறருக்கோ பயனைப் பற்றிய உணர்வேயின்றித் தம் பிறவிக்கேற்ற செயல்களைப் புரிகின்றன. அச்செயல்களால் பிறர் பயன் பெறுகின்றனர். சற்று விவேகம் பெற்ற சேதநன் தனக் கென்று ஒரு பயனை விரும்பும் தன்மையுடையனாய்ப் பிறருக்குப் பயன் வருவதற்கென்று ஒரு செயலைப் புரிந்தாலும் அவனது முக்கியமான குறிக்கோள் தன் பயனாகவே இருக்கும். வேறு பயனை நாடாத மஹா விவேகியான ஒருவன் தன் பயனுக்காக என்று ஒரு காரியத்தைச் செய்தால் கூட அவனுடைய முக்கிய குறிக்கோள் பிறனது பயனாகவே இருக்கும். உதாஹரணமாய் - விவேகியான ப்ரபந்நன் தன் சரீர வாழ்க்கைக்கு உரிய நற்செயல் களைச் செய்தால் கூட அவை எம்பெருமான் திருவுள்ளம் உகக்கும் படிச் செய்ய வேண்டிய கைங்கர்யங்களைக் குறிக்கோளாகக் கொண்டே செய்வனவாயிருக்கும். இயற்கையாகவே எல்லோருக்கும் சேஷியான ஸர்வேச்வரன் பிறர் பயனுக்காக என்று புரியும் செயல் இறுதியில் தன் பயனிலே தான் முடிவு பெறும். ஆனாலும் அவன் அடியார்களுக்குக் கட்டுப் பட்டுக் கிடக்கும் நிலையைப் பார்க்கும்போது அவன் தன் பயனுக்காகச் செய்யும் செயல் கூடத் தன் அடியார்களின் பயனையே முக்கியமான குறிக்கோளாகக் கொண்டது என்று கூடச் சொல்லும் படியிருக்கும். இக் கருத்துக்களை இரண்டு சுலோகங்களிலும் உள்ள சொற்களினின்று உணரலாம்.

ப்ரபந்நனது மரணத்தில் உள்ள தனிச் சிறப்பு: ப்ரபந்நனுக்கு வரும் மரணம் மற்றவர்களின் மரணம் போன்றதன்று. இதில் விசேஷம் உண்டு. ஸாதாரண மனிதன் ஒருவன் இறந்தால் இங்கு

உள்ளவர்கள் 'ஐயோ! இவ்வுலகை விட்டுச் செல்ல மனமின்றிச் செல்லுகின்றானே! அங்குப் போய் நரகம் முதலிய இடங்களில் எத்தகைய கஷ்டங்களை அநுபவிக்கப் போகின்றானோ?' என்று அவனைப் பற்றி வருத்தமடைவர். மேலுலகத்தில் உள்ளோரும் 'இந்த மனிதன் தன் கருமத்துக்கு ஏற்றவாறு நரகத்திலும் சொர்க்கத்திலும் துன்பத்தையும் இன்பத்தையும் மாறி மாறி அநுபவிக்கின்றானே! பின்னும் உலகில் பிறந்து என்ன கஷ்டங்களை அனுபவிக்கப் போகின்றானோ!' என்று இவனைப் பற்றிக் கவலை கொள்வர். ப்ரபந்நன் மரணம் அடையும் போதோ பரமபதநாதனும் நித்யஸூரிகளும் முன்பே மோக்ஷம் பெற்றவர்களும் தமக்கு நல்ல விருந்தினனர் வருவதாகக் கருதி மகிழ்ந்து இவனைச் சிறந்த முறையில் வரவேற்பதற்காக ஸ்ரீவைகுண்டத்தை அலங்கரித்து வைப்பர். இவ்வுலகில் ப்ரபத்தியைச் செய்து முடித்த ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோரும் 'நாம் இன்னும் இந்தப் பாக்கியத்தைப் பெறவில்லையே?' என்று மனக்குறையுடன் இந்தப் பாக்கியத்துக்கு ஆசைப்பட்டு நாக்கை நீட்டிக் கொண்டிருப்பர். யாகத்தின் முடிவில் அவப்ருதம் கொண்டாடுவது போல் இந்த மரணம் ஸம்ஸார மண்டல வாழ்க்கையின் முடிவில் வரும் பெரியதோர் உத்ஸவமன்றோ ? என்று கொண்டாடுவர். ப்ரபந்நனுடைய மரணத்துக்குச் சிறந்த தேசம் - சிறந்த காலம் - உயர்ந்த நிமித்தம் ஒன்றும் வேண்டியதில்லை. ஆயுள் முடிந்து சரீரம் கழிந்துவிட்டால் உடனே மோக்ஷமெனும் பலன் கிடைத்துவிடுகின்றது. இந்த அம்சங்களையெல்லாம் கூட வராஹப்பிரான் தன் சுலோகங்களால் உணர்த்துகின்றான்.

உபாயமின்றி மோக்ஷம் தர முடியாமை-விளக்கம் : ஒரு கேள்வி - 'எம்பெருமான் கருணைக் கடல். அக்கருணையால் எல்லாருக்குமே மோக்ஷம் கொடுத்துவிடக் கடமைப் பட்டவன். அவ்வாறு கொடுக்க வில்லையே ஏன்?' என்று. **ஸமாதாநம் -** அநாதியாகப் பல்வகையான கர்மங்களைச் செய்து அக்கர்ம வெள்ளத்தில் சேதநர்கள் வெவ்வேறு வகையில் அகப்பட்டடுள்ளார்கள். அவர்களிடம் ஓர் உபாயத்தை எதிர்பாராமல் மோக்ஷத்தைக் கொடுத்துவிட்டால் அவரவர் கருமத்துக்கு ஏற்றவாறு அவன் பலன் அளிப்பதென்ற வரையறை குலைந்து போம், அது குலையாமைக்குத்தான் ப்ரபத்தி செய்தவனுக்கு மோக்ஷம் என்கிறது வராஹ சரம சுலோகம்.

உபாயமின்றிக் கருணையாலேயே பயன்பெற முடியாமை
அவன் கருணை ஒன்றையே முக்கியமாய் வைத்துச் சாஸ்த்ரங்களில் ஏற்பட்டதாய் ஸ்வதந்த்ரனான எம்பெருமான் கொண்டுள்ளதான வரையறையைக் குலைக்கக்கூடாது. அப்படி குலைப்பதானால் முன் ஸங்கல்பித்தபடியே செய்பவன் என்ற தன்மை அழிந்து போம். அவனுக்கு உள்ள சுதந்திரத் தன்மையும் இல்லையாகி ஈச்வரனே இல்லையென்கிற நாஸ்திக வாதம் தலையெடுத்து விடும். மேலும் எம்பெருமானது கருணை எல்லாருக்கும் நித்யமாகவே மோக்ஷத்தைக் கொடுத்து எல்லாரும் நித்ய முக்தராகவே ஆகிவிடலாமே என்ற கேள்வியும் எழும். மேலும் மற்ற சேதநர்களைக் காட்டிலும் வேறுபடுத்தி ஈச்வரன் என்பவனைக் குறிப்பிட்டுச் சொல்லுகைக்கு என்ன ஆதாரம்? அவன் உலகுக்குக் காரணமாயிருத்தல் - மோக்ஷம் தருதல் முதலிய அவனுக்கே உரிய தன்மைகளைக் கொண்டுதானே ஈச்வரனை ஏற்கின்றோம்! எல்லாரும் நித்ய முக்தராகவே ஆகிவிட்டால் உலகைப் படைப்பதோ மோக்ஷம் தருதலோ வேண்டாதனவாகி ஈச்வரன் உண்டு என்பதற்கே ப்ரமாணம் இல்லாமற் போம்.

சரமசுலோகம் பக்தியோகம் செய்பவனுக்குப் பொருந்தாமை: இங்கு இரண்டாம் சுலோகத்தில் 'என் - பக்தனை' என்ற சொல்லைக் கொண்டு சிலர் என்னிடம் பக்தியோகம் செய்பவனை என்று அர்த்தத்தைக் கொள்ளுகிறார்கள். அது பொருந்தாது. பிராட்டி சேதநர்கள் உஜ்ஜீவிப்பதற்காக லகுவான உபாயத்தைக் கேட்டதற்கு எம்பெருமான் கடினமான பக்தி யோகத்தைக் காட்டுவதாகக் கூறல் ஸந்தர்ப்பத்துக்குப் பொருந்தாது. மேலும் முதல் சுலோகத்தில் உள்ள பதங்கள் ப்ரபத்திக்கு வேண்டிய அம்சங்களைச் சொல்வனவாகவே அமைந்துள்ளன. மேலும் கட்டையும் கல்லும் போலக் கிடப்பவன் என்று சொல்லிக் கடைசிக்காலத்திய நல்ல நினைவு கூடத் தன் முயற்சியாலே ஸம்பாதிக்க வேண்டாதபடி கிடக்கிறான் என்று கூறியிருப்பதும் பக்தி யோகத்தின் விஷயத்தில் பொருந்தாது. பக்தி யோகம் செய்பவனுக்குத் தான் மரணகாலத்தில் நல்ல நினைவு அவசியம் வந்தாகவேண்டுமே! ஆதலால் இரண்டாவது சுலோகத்தில் பிறகு வருகிற ஒரு பதத்துக்கு வேறு வழியில் பொருத்தமான அர்த்தம்

இருக்கும்போது அந்தப் பதத்துக்கு மேலெழுந்தவாரியான பொருளைக் கொண்டு முன்னால் வந்த ஸந்நர்ப்பத்தையும் ப்ரபத்தி விஷயத்தில் எளிதாய்ச் சொல்லுகிற பதங்களின் ஸ்வாரஸ்யத்தையும் குலைத்துப் பக்தியோகம் செய்பவன் விஷயத்தில் பொருத்துவது சாஸ்த்ர ரீதிக்கு முரண்பட்டதாகும்.

ரஹஸ்யசிகாமணி முற்றும்

ஸ்ரீ ராமசரம ச்லோகம்

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम ।।

ஸ்ரீ வராஹ சரம ச்லோகம்

स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः ।
धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजम् ।। (1)

ततस्तं म्रियमाणं तु काष्ठपाषाणसन्निभम् ।
अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिम् ।। (2)

ஆளவந்தார்

ஸ்ரீமந்நாதமுநிகள்

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ।

अञ्जलिवैभवम्

அஞ்ஜலி வைபவம்

(அஞ்ஜலியின் பெருமையை விளக்கும் ரஹஸ்யம்)

தனியன்

हिताय सर्वजगतां व्यक्तंयोऽञ्जलि वैभवम्।
प्राचीकशत्तं वन्देऽहं वेदान्तयुगदेशिकम्॥

★ ★ ★ ★ ★

1 முன்னுரை

பெரிய முதலியார்[a] 'तवामृतस्यन्दिनि पादपङ्कज'(113[1]) என்கிற ச்லோகத்திலே भगवत्-चरण-अरविन्दத்தின்[b] भोग्यता-अतिशयத்தை[c] அத்யவஸித்தவனுக்கு[d] அதனுடைய दुस्त्यजதையாலே[e] 'கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும் ஐங்கருவி கண்டவின்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்' (82[1]) என்னுமதில்

a- ஆளவந்தார்; b- எம்பெருமான் திருவடித் தாமரை; c- இனிமையின் மிகுதி; d- உறுதியாக உணர்ந்தவன்; e- விடமுடியாமை.

★ கைகளைக் கூப்புவதற்கு அஞ்ஜலி என்று பெயர். இச் செய்கை (அம் - ஜலயதி) எம்பெருமானை நீர்ப்பண்டமாக உருகச் செய்தலால் இதற்கு இப்பெயர் வந்தது. இது ஓர் அடையாளமாகும். இதைக் கண்டு எம்பெருமானுக்கு உண்டாகும் மகிழ்ச்சி கூறற்பாலதன்று. எம்பெருமானிடம் பரந்யாஸம் செய்தவன் தன்னைக் காத்துக்கொள்ள மறுபடியும் ஒரு கார்யமும் செய்ய வேண்டாதபடி நிற்கும் நிலையையும் காட்டுகின்றது அஞ்ஜலி.

सर्वजगतां-எல்லா லோகங்களினுடையவும்; हिताय-நன்மையின் பொருட்டு; यः- எவர்; अञ्जलि-वैभवं-கூப்பிய கையின் பெருமையை; व्यक्तं- தெளிவாக; प्राचीकशत्- வெளியிட்டாரோ; तं-அந்த; वेदान्तयुग-देशिकं - உபய வேதாந்தாசார்யரான ஸ்வாமி தேசிகனை; अहं-நான்; वन्दे- வணங்குகிறேன்.

Scanned with CamScanner

சொல்லுகிற ஐச்வர்ய-கைவல்ய-ரூபங்களான प्राप्यान्तरங்களிலே[a] இளைப்பாறுகை[b] கூடாதென்று அருளிச்செய்தார். अनन्तरம்[c] 'त्वदङ्घ्रिमुद्दिश्य' (502[1]) என்கிற श्लोकத்தாலே அப்படிப்பட்ட अधिकारिகளுக்குத் திருவடிகளை உद्देசித்து உண்டான அல்ப-அநுகூலங்களான வ்யாபாரத்தாலே ஸர்வ-अपेक्षित-सिद्धि உண்டாம்படியான[d] ஆச்ரயண - ஸௌகர்யத்தாலும்[e] திருவடிகளுடைய दुस्त्यजதையை[f] அருளிச்செய்கிறார்.

2 त्वदङ्घ्रिमुद्दिश्य-சுலோகத்திற்கு ஸ்வாமி தேசிகனின் விளக்கம்

त्वदङ्घ्रिमुद्दिश्य कदाऽपि केनचित् यथा तथा वाऽपि सकृत् कृतोऽञ्जलिः ।
तदैव मुष्णात्यशुभान्यशेषतः शुभानि पुष्णाति न जातु हीयते ।।

2.1 'त्वदङ्घ्रिमुद्दिश्य' - பிற தெய்வங்களின் நிலையை விளக்குதல்

त्वदङ्घ्रिमुद्दिश्य - இங்கு ஸர்வ லோக - சரண்யமாய்[g] - सर्व-भोग्य-अतिशायिகளான[h] தேவரீருடைய चரண - அரவிந்தங்களை உபாயமாகவும் प्राप्यமாகவும்[i] अभिसन्धि பண்ணி என்கிறபடி. இத்தால்

ब्रह्माणं शितिकण्ठं च याश्चान्या देवताः स्मृताः ।
प्रतिबुद्धा न सेवन्ते यस्मात् परिमितं फलम् ।।[3]
एतौ द्वौ विबुधश्रेष्ठौ प्रसादक्रोधजौ स्मृतौ ।
तदादर्शितपन्थानौ सृष्टिसंहारकारकौ ।।[4]

इत्यादिகளில் परतन्त्र-चेतनராகச்[j] சொல்லுகையாலே साक्षात्-मोक्ष-प्रदानத்திற்கு[k] ஸமர்थரல்லாத 'எருத்துக் கொடியுடையானும் பிரமனும் இந்திரனும்' (109[1]) முதலான திருவில்லாத் தேவரைக்[l] கைவிட்டபடியும் अल्प-अस्थिरत्वादि -धोष-दूषित-ங்களான[m] प्रजोजनान्तरங்களில் பற்றற்றபடியும் சொல்லிற்றாயிற்று.

2.2 'कदाऽपि' -அஞ்ஜலி செய்தற்குக் காலவரையின்மையைக் கூறல்

कदाऽपि-'बहुद्वारस्य धर्मस्य' என்கிறபடியே நாநாவிधங்களான धர்மங்களெல்லாம் காலவிசேஷங்களைப்பற்றியிருக்கும் எங்ஙனே என்னில் - 'अन्ये कृतयुगे धर्माः'[2] इत्यादिகளிற்படியே युग-भेदம், அயந-भेदம், மாஸ-भेदம், பக்ஷभेदம், तिथि-வார- நக்ஷத்ர-भेदம், रात्रि-दिवसादि[o] -भेदம், याम-भेदம், ராசி-भेदம், முஹூர்த்த - भेदம் என்று இப்படிப்பட்ட காலभेदங்களிலே व्यवस्थितங்களாயிறே[p] கர்ம - விசேஷங்களிருப்பது. இவ் अञ्जलि-बन्ध-ரூபமான[q] ஸத்கர்மத்திற்கு[r] रुचि[s] பிறந்தபோதே காலம். மற்றொரு கால விசேஷம் பார்த்திருக்க வேண்டாம் என்னுமிடத்தை அருளிச்செய்கிறார்.

2.3 केनचित् - அஞ்சலி பொது தர்மம் என்பதையும் செய்தலில் எளிமையையும் கூறல்

केनचित्-வர்ண-धर्मம், आश्रम-धर्मம், गुण-धर्मம், நிமித்தधर्मம் என்றாற்போலே சொல்லும் धர்மங்களெல்லாம் சில अधिकारि-விசேஷங்களைப் பற்றியிருக்கும். இவ் அஞ்ஜலி -बन्धம் सत्य-वचनादिகளைப்[t] போலே ஸாமாந்ய-[u] धர்மமாகையாலே ப்ரஹ்மா முதலாக श्वपाकனளவாக[v] ஸர்வருக்கும் शास्त्रीयமுமாய்[w]

a- வேறு பலன்கள்; b- இன்பம் கண்டு ஈடுபடுதல்; c- பிறகு; d- விரும்புகிற எல்லாம் பெறுகை; e- சரணமடைதற்கு எளிமை; f- விட முடியாமை; g- எல்லாவுலகையும் காக்க வல்லன; h- இனிய பொருள்கள் அனைத்தினும் மேலான இனிமையுடையன; i- அடையப்படும் பலன்; j- பகவானுக்கு அடங்கிய ஜீவர்; k- தாமே நேராக மோக்ஷம் கொடுக்க; l- பிராட்டியின் நாயகனான இராமனையன்றிப் பிற தெய்வங்கள்; m- அற்ப மாயுள்ளமை நிலையற்றமை முதலிய குற்றங்கள் நிறைந்த; n- பிற பயன்கள்; o- பகல்; p- வரையறுக்கப்பட்டன; q- கை கூப்புதல் வடிவமான; r- சிறந்த செயல்; s- ஆசை; t- உண்மை பேசுதல்; u- பொதுவான தர்மம்; v- நாயைத் தின்னும் சண்டாளன்; w- சாஸ்த்ரத்தைத் தழுவியது.

1 **ஆள.ஸ்தோ.(28):** எம்பெருமானே! உன் திருவடியையே உபாயமாகவும் பலனாகவும் எண்ணி ஏதாவது ஒரு பொழுதில் எவனாவது ஒருவன் எதாவது ஒரு வகையில் ஒரு முறை கைகூப்பினால் மிக விரைவில் அவனுக்குத் தீங்கு தரும் கர்மங்களெல்லாம் ஒழிந்து ஸ்ரீ வைகுண்டத்தில் பரிபூர்ணமான பகவதநுபவம் வரை உள்ள நலங்களையெல்லாம் அந்த அஞ்ஜலி பெறச்செய்யும். எந்நாளும் வீணாகாது.

2 **மநுஸ்ம். (1-85) : பக்கம் 505**

3 **பார. (சாந்தி 350-36):** பிரமனையும் சிவனையும் மற்றைத் தேவதைகளையும் ஞானிகள் வழிபடுவதில்லை. அத்தெய்வங்கள் கொடுக்கும் பலன் அற்பமானதாதலின் அதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

4 **பார. (சாந்தி-350-19):** பிரமனும் சிவனும் உயர்ந்த தேவர்கள். எம்பெருமானுடைய ஸந்தோஷத்தாலும் கோபத்தாலும் முறையே தோன்றியவர்கள். அவன் காட்டிய வழியின்படியே படைத்தலையும் அழித்தலையும் செய்பவர்கள்.

Scanned with CamScanner

सुकरமுமாய்[a] இருக்குமென்னுமிடத்தை அருளிச் செய்கிறார்.

2.4 यथा तथा वाऽपि - அஞ்சலியின் எளிமையைக் கூறல்

यथा तथा वाऽपि-அல்லாத[b] धர்மங்களுக்கெல்லாம் நாநாவிधங்களான ப்ரகார - விசேஷ - நியமங்கள்[c] உண்டாயிருக்கும். இவ் வஞ்ஜலிக்குப் பர-அவர-தத்த்வ - ஹித - புருஷார்थங்களில்[d] தெளிவு உண்டாகவுமாம், இல்லையாகவுமாம். मस्तिष्क[e] संपुटादिகளில்[f] வேண்டினபடியாகவுமாம். வशம் செய்யும் கை இல்லாதபோது வாக்காலும் மனஸ்ஸாலு மாகவுமாம். எல்லாப் படிக்கும் இது सफलமாம் என்னுமிடத்தை அருளிச் செய்கிறார்.

2.5 सकृत् कृतः - ஒரு முறை அஞ்ஜலி செய்தல் போதும் என்பதைக் கூறல்

सकृत् कृतः-'सकृत् कृतः शास्त्रार्थः' (77[6]) என்கிற ஸாமாந்யத்திற்கு[g] अपवादம்[h] இல்லாமையாலே आवृत्ति–अपेக்ஷை[i] இல்லை என்னுமிடத்தை அருளிச் செய்கிறார்.

2.6 अञ्जलिः - அஞ்ஜலி மற்ற தருமங்களினும் சிறந்தது என்பதைக் கூறல்

सर्वेषामेव धर्माणां उत्तमो वैष्णवो विधिः ।
रक्षते भगवान् विष्णुः भक्तानात्मशरीरवत् ॥ (445[4])

इत्यादिகளாலே धर्मान्तरங்களிற்காட்டில்[j] अधिक–प्रभावங்களாக[k] प्रसिद्धங்களான[l] संमार्जन–[m] उपलेपन–[n] मालाकरण[o]–दीपारोपण–प्रदक्षिण–प्रणाम–स्तुति[q] संकीर्तन–जपादिகளிற்காட்டிலும் अधिकतम[r] மாக 'अञ्जलिः परमा मुद्रा' (305[1]) என்று சொல்லப்பட்ட இதன் ஸ்வரூபம் கைகூப்பு மளவே என்று தோற்றுவது என்கிறார்.

2.7 तदा एव - விளக்கம்

तदा–एव–कालान्तरத்திலே[s] फலிக்கும் கர்மங்களைப் போலன்றிக்கே இங்கு क्षिप्रं देवप्रसादिनी(305[1]) என்ற प्रभाபாவத்தை அருளிச் செய்கிறார்.

2.8 मुष्णाति अशुभानि - அஞ்சலி கர்மங்களை ஒழித்தலைக் கூறல்

मुष्णाति अशुभानि - 'अशुभங்களை நசிப்பிக்கும்' என்கிற अर्थத்தை

मुष्णाति என்று அருளிச் செய்ய வேண்டிற்றென்னென்னில், अश्रितனானவன் அநாदि- வாஸனைகள்[t] மேலிட்டு ஸாம்ஸாரிக[u] - புண்ய - பாப - ரூபங்களான விலங்குகளை விடுவிக்க இசையாதொழியிலும், 'தமர்கள் கூட்டவல் வினையை நாசம் செய்யும் சதிர்மூர்த்தி'[1] என்கிறபடியே बालனை उपच्छन्दनம்[v] பண்ணி अपथ्यத்தைப்[w] பரிஹரிக்குமா போலே ஒரு விரகாலே[x] இவனுக்கு அனுகூலங்களாய்த் தோற்றும் बन्धकங்களைக்[y] கழிக்கும் என்றபடி. இங்குச் சொல்லுகிற अशुभங்களாவன-प्राप्ति–विरोधि[z]களான கர்மங்களாதல் उपायादिகளை விரோधிக்கும் கர்மங்களாதல் என்று यथाधिकार[A] கண்டுகொள்வது.

---

a- செய்தற்கு எளிது; b- மற்ற; c- செய்யும் முறையில் விசேஷ வரையறை; d- மேம்பட்ட தத்துவமான பகவான் - கீழ்ப்பட்ட தத்துவமான ஜீவன்-உபாயம்-பலன்; e- தலைமேல் கைகூப்புதல்; f- மார்புக்கு நேராகக் கைகூப்புதல்; g- பொது நீதி; h- விதிவிலக்கு; i- மறுபடி செய்ய அவசியம்; j- மற்ற தர்மங்கள்; k- மிகுந்த பெருமையுடையன; l- புகழ் பெற்ற; m- துடைப்பத்தால் கூட்டுதல்; n- மெழுகுதல்; o- மாலைகட்டல்; p- தீபம் ஸமர்ப்பித்தல்; q- திரு நாமங்களைச் சொல்லுதல்; r- மிக அதிகமாக; s- வேறு பிற்காலம்; t- நெடுங்காலத்திய பழக்கங்கள்; u- ஸம்ஸார மண்டலத்தில் நேர்ந்த; v- ஏமாற்றுதல்; w- உடலின் நோய்நிலை; x- யுக்தி, உபாயம்; y- ஸம்ஸார பந்தத்தை அளிப்பன; z- மோக்ஷம் பெறுதற்குத் தடையாயுள்ளவை; A- அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு.

1 अन्ये कृतयुगे धर्माः त्रेतायां द्वापरेऽपरे ।
अन्ये कलियुगे नृणां युगह्रासानुरूपतः ॥

மநுஸ்ம் (1-85) : கிருதயுகம் முதலிய நான்கு யுகங்களிலும் அவற்றின் உயர்வு இழிவுக்கு ஏற்றவாறு தருமங்கள் வேறுபட்டவை.

1 தமர்கள் கூட்டவல்வினையை நாசம் செய்யும் சதிர்மூர்த்தி,
அமர்கொளாழிசங்குவாள் வில்தண்டாதி பல்படையன்,
குமரன் கோலஐங்கணைவேள்தாதை கோதிலடியார்தம்,
தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்க தமியேற்கே

திருவாய் (4-10-9): அடியார்களின் கூட்டத்தின் வலியகர்மங்களை அழிக்கும் சாதுர்யமுடையவனாய் பஞ்சாயுதங்களை ஏந்தி நிற்பவனான எம்பெருமானுடைய அடியார்களுக்கு அடியார் குழுவில் சேர்தலாகிய சாதுரியமே புகலற்ற எனக்கு வாய்க்க வேண்டும்.

2.9 अशेषतः - அஞ்ஜலி எல்லா விரோதிகளையும் போக்கவல்லது என்பதைக் கூறல்

अशेषतः – कृच्छ्र – चान्द्रायणादि - கர்மங்கள் சில அசுபங்களையே கழிக்கவற்றாயிருக்கும். இது அப்படியன்று. ஸர்வ அநிஷ்டங்களையும் கழிக்கவற்று என்னுமிடத்தை அருளிச் செய்கிறார்.

2.10 शुभानि पुष्णाति-அஞ்ஜலி விளைவிக்கும் நலன்களைக் கூறல்

शुभानि पुष्णाति - அநிஷ்டங்களைக் கழிக்குமளவேயன்று. அது முதலாகத் தோன்றித் 'தொன்மா வல்வினைத் தொடர்களை முதலரிந்து நின் மாதாள் சேர்ந்து[1] इत्यादिகளிற்படியே इष्ट–प्राप्ति–पर्यन्तமாகும்[a] என்னுமிடத்தை அருளிச்செய்கிறார். இங்கு शुभங்களாவன-परिपूर्ण-भगवत्-अनुभवமும், அதன் उपायமும், அதன் परिकरமும்[b], அதன் अधिकारமும், कृतोपायனுடைய[c] ஸ்வயம் - ப்ரயோஜந - கைங்கர்யமும். இவற்றைப் புஷ்ட மாக்கு கையாவது[d] விலக்கறுத்துத்[e] தலைக்கட்டுகை.

2.11 1 न जातु हीयते அஞ்ஜலி எந்நாளும் அழியாத பலனைத் தருவதைக்-கூறல்

न जातु हीयते - (i) இவ் அஞ்ஜலிதான் தன்னுடைய कर्ता[f] ஒருவனுக்குமே फलம் கொடுத்து அவ்வளவிலே பர்யவஸிக்கிறதன்று[g]; 'தொழுதெழு என்மனனே'[2] என்று தொடங்கி நம்மாழ்வார் 'எமரேழெழு பிறப்பும் மாசதிரிது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா'[3] என்று அருளிச் செய்தபடியே அஞ்ஜலி பண்ணினவனுடைய अनुबन्धि[h] களுக்கும் அப்படியே உபகாரகமாம்[i] என்னுமிடத்தை அருளிச்செய்கிறார். (ii) स्वर्गादि–फलங்களைப்போலே இதன் फलமான மீளாவடிமைப்பணி[j] ஒருகாலும் அழியாது என்று கருத்தாகவுமாம். (iii) அங்ஙனன்றிக்கே ஒருகால் தொடங்கின अञ्जलि 'बद्धाञ्जलिपुटा हृष्टा नम इत्येव वादिनः' (23[1]) என்கிறபடியே परमपदத்திலும் फलरूपமான அஞ்ஜலியாய்ப் பரிணமித்து ஒருகாலும் அழியாது என்னவுமாம்.

---

a- விரும்பிய பலனைப் பெறும் வரை; b- அங்கம்; c- உபாயத்தைச் செய்தவன்; d- செழிப்புறச் செய்தல்; e- தடைகளை விலக்கிப் பூர்த்தி செய்தல்; f- செய்பவன் ; g- முடிந்து விடுவதன்று; h- தொடர்புடையார்; i- உதவி புரிவது; j- இடைவிடாத கைங்கர்யம்.

1 வன்மாவையமளந்த எம் வாமனா, நின்
பன்மாமாயப் பல்பிறவியில் படிகின்றயான்,
தொன்மா வல்வினைத் தொடர்களைமுதலரிந்து,
நின்மாதாள்சேர்ந்து நிற்பது எஞ்ஞான்றுகொலோ?

திருவாய். (3-2-2): முதலில் வாமனனாயிருந்து த்ரிவிக்கிரமனாகி உலகை அளந்த பெருமானே! ஸம்ஸாரக்கடலுள் ஆழ்ந்து பல்வேறு பிறவிகளை. அடைந்து தவிக்கும் அடியேன் அநாதியாய் வலிமையான பாபங்களின் வரிசைகள் வேருடன் அறுக்கப்பெற்று மிக இனிய தேவரீரது திருவடிகளைச் சேர்ந்து பின்பிரியாது நிற்பது என்றைக்கோ?

2. உயர்வறவுயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறுமரர்கள் அதிபதியவனவன்
துயரறு சுடரடி தொழுதெழுஎன்மனனே.

திருவாய். (1-1-1): என் மனமே! அண்டியவர்களின் ஸகல துக்கங்களையும் போக்கவல்ல திருவடிகளிலே எங்கும் எப்பொழுதும் எல்லா நிலைகளிலும் ஏற்ற ஸகல கைங்கர்யங்களையும் செய்து நல்வாழ்வு பெறுவாயாக.

3 கேசவன்தமர் கீழ்மேலெமரேழெழு பிறப்பும்,
மாசதிரிது பெற்று நம்முடைவாழ்வு வாய்க்கின்றவா!,
ஈசன்என்கருமாணிக்கம் என் செங்கோலக்கண்ணன்விண்ணோர்
நாயகன், எம்பிரான் எம்மான் நாராயணனாலே,

திருவாய். (2-7-1): எம்முடைய முன்னும் பின்னும் ஏழேழு தலை முறையில் உள்ள நம் ஸம்பந்தம் பெற்றவர்கள் எம்பெருமானுடைய ஸம்பந்தம் பெற்று அவனை அநுபவிக்க முற்படுமவர்கள். 'அதனாலே அவனை அநுபவிப்பதென்ற வைணவச் செல்வம் நமக்கு நன்றாய் விளைகின்றது.

4 நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலும் இனி உன்னை விட்டொன்றும்
ஆற்றகிற்கின்றிலேன் அரவினணையம்மானே,
சேற்றுத்தாமரைசெந்நெலூடுமலர் சிரீவரமங்கல நகர்,
வீற்றிருந்த சாந்தாய் உனக்குமிகையல்லேனங்கே.

Scanned with CamScanner

2.12 அஞ்ஜலி பற்றி மேலும் சில விளக்கங்கள்

2.12.1 மோக்ஷம் தருவது அஞ்ஜலியா? ப்ரபத்தியா?

இவ்வஞ்ஜலி 'நோற்ற நோன்பிலேன்'[1], 'புகலொன்றில்லா வடியேன்' (17[7]) इत्यादिகளிற்படியே आकिञ्चन्य[a] - अनन्यगतित्वादि[b] योगத்தாலே[2] प्रपत्ति–अधिकारियாய் भரந்யாஸம் பண்ணுகிறவனுடைய ஸ்வரக்ஷணார்த - ஸர்வவ்யாபாரத்தில்[c] கைம் முடங்குகிறபடியை[d] காட்டுகிற முத்ரையாய் நின்றபோது.

तावदार्तिस्तथा वाञ्छा तावन्मोहस्तथाऽसुखम् ।
यावन याति शरणं त्वामशेषाघनाशनम् ।। (80[2])

इत्यादिகளிற்படியே இவ்வஞ்ஜலிக்கு உள்ளீடாய்க்கொண்டு[e] सकल–फल–साधनமாய் நிற்கிற ப்ரபத்தியின் प्रभावத்தைச் சொல்லுகையிலே தாத்பர்யமாகையாலே இங்கு ஒரு प्रमाण–विरोधமும்வாராது.

2.12.2 சேதநன் சின்னம் அஞ்ஜலி-பெருமாள் சின்னம் அபயஹஸ்தம்

இப்படிப் ப்ரபந்நன் வாங்கின கைக்குப்[f] பெருமாள் வைத்தகை உத்தரமாம்[g]. எங்ஙனே என்னில் -प्रार्थना–पूर्वक–भரந்யாஸம்[h] பண்ணின அகிஞ்சந்னுடைய[i] स्वरक्षणार्थ–स्वव्यापार–निवृत्ति–रूप[j] फल–विशेष–व्यञ्जक–मुद्रै[k] அஞ்ஜலி. भரஸ்வீகாரம்[l] பண்ணினஸ்வதந்த்ர-காருணிகனுடைய[m] நிரபேக்ஷ - ரக்ஷண अभिप्राय–व्यंजक–मुद्रै[n] अभय[o]-ஹஸ்தம்.

2.12.3 அஞ்ஜலி-ப்ரபத்தி இவை இரண்டும் எம்பெருமானை உகப்பிக்கின்றன என்பதன் கருத்து

இவ் விடத்தில் अञ्जलिः परमा मुद्रा क्षिप्रं देवप्रसादिनी' (305[1]) என்றும் 'अन्तरेणाञ्जलिं बध्वा लक्ष्मणस्य प्रसादनात्' (260[2]) என்றும் சொல்லுகிறபடியே प्रसादनமான[p] அஞ்ஜலிக்கு ப்ரபத்தி[q]गर्भत्वம் சொன்னால் 'प्रसादयस्व त्वं चैनं शरणागतवत्सलम्' (264[1]), 'प्रसादये त्वामहमीशमीड्यम्'[2], 'शरणमुपगम्य तत्प्रसादोपबृंहितमनोवृत्तिः'[3] इत्यादिகளிற்படியே ப்ரபத்திக்கும் प्रसादनत्वம்[r] உண்டாகையாலும் ப்ரபத்தியால்

निग्रह–निवृत्ति[s] ரூபமான प्रसादनம்[t] பிறவாதாகில் இது निष्फलமாகப்[u] प्रसङ्गिக்கையாலும்[v] प्रसादनமாகச் சொன்ன அஞ்ஜலிக்கு भरन्यास–व्यञ्जक–मुद्रा–रूपत्वம்[w] சொன்னது विरुद्धமன்று.

---

a- கைம்முதலற்றமை; b- வேறு கதியற்றமை; c- தன்னைக் காப்பதற்குத் தானே செய்யும் செயல்; d- இயலாத தன்மை; e- உட்பொருள், ரஹஸ்யமான பொருள்; f- இயலாமையால் நீங்கிய கை; g- ஸமாதாநம்; h- ப்ரார்த்தனையை முன்னிட்டுத் தன் பொறுப்பை ஸமர்ப்பித்தல்; i- கைம்முதலற்றவன்; j- தன்னைக் காப்பதற்குத் தானே புரியும் செயலைக் கை விடுதல் வடிவமான; k- விசேஷ பலனைக் காட்டும் முத்திரை; l- பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல்; m- ஸ்வதந்த்ரனாய்க் கருணை மிக்கவன்; n- வேறொன்றை எதிர்பாராமல் ரக்ஷிக்கும் கருத்தைக் குறிக்கும் சின்னம்; o- அபய முத்ரையுடன் கூடிய திருக்கை; p- திருவுள்ளம் குளிரச் செய்வது; q- ப்ரபத்தியை உள்ளே அடக்கிக் கொண்டிருத்தல்; r- அவன் திருவுள்ளத்தை உகப்பிக்கும் தன்மை; s- அவன் சீற்றம் நீங்குதல் வடிவமான; t- திருவுள்ளத்தின் உகப்பு; u- பயனற்றதாக; v- நேர்ந்து விடல்; w- பொறுப்பை ஸமர்பித்தலைக் குறிக்கும் சின்னமாதல்.

1 ***திருவாய். (5-7-1):*** எம்பெருமானே உன்னை அடைவதற்கு உபாயமாகக் கர்ம யோகம் - ஞான யோகம் எதையும் அடியேன் செய்யாதவன். ஆயினும் தெவிட்டாத அமுதமான உன்னை விட்டுப் பிரிந்து தரிக் மாட்டாதவனா யுள்ளேன். இதைக் கொண்டே நீ என்னைக் கடாக்ஷித்தருள வேண்டும். பாசுரம்: பக்கம் (பக்கம் 507; குறிப்பு 4).

2 तस्मात् प्रणम्य प्रणिधाय कायं प्रसादये त्वामहमीशमीड्यम् ।
पितेव पुत्रस्य सखेव सख्युः प्रियः प्रियायार्हसि देव सोढुम् ।।

கீதை *(11-44):* கண்ணா ! நீயே உலகுக்குத் தந்தையாய்ப் பூஜிக்கப்படும் ஆசார்யனாய்க் கல்யாண குணங்களால் எல்லோரினும் மேம்பட்டவனாயிருப்பதால் என் மனம் - மொழி - உடல் ஆகிய முக்கருவிகளையும் ஈடுபடுத்தி உன் திருவுள்ளம் உகப்பதற்காக உன்னைச் சரணமடைகின்றேன். (அர்ஜுநன் சொல்).

3 एवं शरणमुपगम्य तत्प्रसादोपबृंहितमनोवृत्तिः तमेव भगवन्तं सर्वेश्वरेश्वरं आत्मनः स्वामित्वेन अनुसंधाय अत्यर्थप्रियाविरतविशदतम प्रत्यक्षरूपानुध्यानेन ध्यायन् आसीत।

ஸ்ரீ பாஷ்யகாரர் நித்யம் : பரமை காந்தியான சேதநன் திருவாராதநத் தொடக்கத்தில் எம்பெருமானைச் சரணமடைந்து அவன் திருவருளால் மனதின் ஒருமைப்பாட்டை வளர்க்கப் பெற்றவனாய் அவனையே தனக்கு நாயகனாக அநுஸந்தித்து அவனைத் தியானம் செய்ய வேண்டும்.

Scanned with CamScanner

3 பக்தியோ ப்ரபத்தியோ எம்பெருமான் சீற்றத்தை தணித்தல்

ஸஹஜ-க்ருபா-விசிஷ்டனான[a] भगवான் यथाधिकारம் भक्तिயாலேயாதல் ப்ரபத்தியாலேயாதல் प्रसादनीयனாய்[b] அவற்றாலே ப்ரஸந்நனான[c] भगவான் निग्रह–फल–प्रकृति–संबन्धादि–विरोधि–निवर्तन–संकल्प-[d] விசிஷ்டனாய்க் கொண்டு भक्ति–निष्ठனுக்கும் ப்ரபத்தி निष्ठனுக்கும்[e] மோக்ஷप्रदனாம்.

3.1 ப்ரபத்தியின் தனிச்சிறப்பு

இப்ப்ரபத்தியால் ப்ரஸந்நனாமளவில் அல்ப - வ்யாபாரத்தாலே[f] अविलम्बितமாக[g] आरब्ध- கார்யங்களும்[h] अनारब्ध[i]-கார்யங்களுமான ஸாம்ஸாரிக[j]-புண்ய-பாபங்கள் இரண்டும் கழியும்படி இதில் उचित – अतिशयित – प्रसादம்[k] பிறக்கும்.

3.2 ப்ரபந்நனிடம் எம்பெருமானுக்கு விசேஷ கருணை

இதற்கு மூலகாரணம் स्वार्थ–निरपेक्ष[l]–परदुःख–निराकरण–इच्छा–ரூபையான[m] ஸஹஜக்ருபையாகையாலே[n] 'நின்னருளே புரிந்திருந்தேன்'[1] इत्यादिகளிற்படியே இக்க்ருபையிலே ஊன்றினது தோன்றி யிருக்கைக்காக ப்ரபந்நனுக்குக் कृपा–विशिष्टன்[o] மோக்ஷ-प्रदன்[p] என்றும் भक्ति–निष्ठனுக்குப் प्रसाद–विशिष्टன்[q] மோக்ஷ-प्रदன் என்றும் இதொரு பிரிவுபோலே பேசுகிறார்களித்தனையல்லது இவர்கள் பக்கல் कृपा–प्रसादங்கள்[r] प्रतिनियतங்களல்ல[s]. ப்ரபந்நனளவில் प्रसाद–अतिशयமே[t] உள்ளது.

4 அஞ்ஜலி நேராகவும் படிப்படியாகவும் மோக்ஷம் தருதல்

அங்ஙனன்றிக்கே माला–करण–आदिகளான அல்லாத[u] भगवत्-கர்மங்கள் போலே இவ்வஞ்ஜலியும் ஒரு ஸத்-கர்ம - விசேஷமாய்[v] நின்றால், 'नेहाभिक्रमनाशोऽस्ति' 'सकृदुच्चरितं येन हरिरित्यक्षरद्वयम्। बद्धः परिकरस्तेन मोक्षाय गमनं प्रति।। (79[7]) इत्यादिளிற்படியே இட்ட படை கற்படையாய் பாப - க்ஷயம்,[w] ஸத்த்வ - உந்மேஷம்,[x] ஸம்யக்-ஜ்ஞாநம்,[y] भक्ति–प्रपत्तिகள் என்று இப்பரம்பரையாலே மோக்ஷ - साधनत्वம்[z] உண்டாகை யாலே கீழ்ச் சொன்ன ஸர்வ-அநிஷ்ட-நிவ்ருத்திக்கும்[A] ஸர்வ அபிஷ்ட - ஸித்திக்கும்[B] விரோதமில்லை.

5 அஞ்ஜலி விஷயத்தில் பிறர் வாதம் - ஸமாதாநம்

இப்படி வழி உண்டாயிருக்க இது 'अतिवादம் என்கை[C]

---

a- இயற்கையான கருணையுடையவன்; b- திருவுள்ளம் உகப்பிக்க வேண்டியவன்; c- திருவுள்ளம் உகந்தவன்; d- தன் சீற்றத்துக்குப் பயனாக நேர்ந்த சரீரஸம்பந்தம் முதலிய தடைகளைப் போக்குவதற்கு ஏற்ற ஸங்கல்பத்தையுடையவன்; e- கைக் கொண்டவன்; f- சிறு செயல் (ப்ரபத்தி); g- காலத்தாழ்வின்றி; h- பலன் கொடுக்கத் தொடங்கியவை; i- பலன் கொடுக்கத் தொடங்காதவை; j- ஸம்ஸார பந்தத்தால் ஏற்பட்ட; k- பொருத்தமான - மிகுதியான அநுக்ரஹம்; l- தன் பயனை எதிர்பாராத; m- பிறர் துன்பம் துடைக்க ஆசை வடிவமான; n- இயற்கைக் கருணை; o- கருணையுடையவன்; p- மோக்ஷம் தருமவன்; q-அநுக்ரஹமுடையன்; r- கருணையும் அநுக்ரஹமும்; s- அவனவனுக்கே உரியனவல்ல; t- அநுக்ரஹத்தின் மிகுதியே; u- மற்ற; v- நல்ல சிறப்பான கர்மம்; w- பாபங்கள் கழிதல்; x- ஸத்த்வகுணம் தலையெடுத்தல்; y- தெளிவான அறிவு; z- மோக்ஷத்துக்குச் சாதனமாதல்; A- எல்லாத் தீங்குகளும் கழிதல்; B-விரும்பும் பயன் அனைத்தும் கிடைத்தல்; C- மிகைப்படுத்திக் கூறுதல்.

1 சென்னியோங்கு தண்திருவேங்கட முடையாய், உலகு
தன்னை வாழநின்றநம்பி தாமோதராசதிரா,
என்னையுமென்னுடைமையையுமுன் சக்கரப்பொறியொற்றிக்கொண்டு,
நின்னருளே புரிந்திருந்தேனினியுன் திருக்குறிப்பே.

பெரியாழ்-திரு. (5-4-1): எம்பெருமானே! உலகத்தாரை வாழ்விப்பதற்காக எழுந்தருளியிருப்பவனே! என் சரீரத்திலும் என்னைச் சேர்ந்தனவாகக் கருதப்படும் மற்ற வஸ்துக்களிலும் உன் திருவாழி திருச்சங்கு சின்னத்தைப் பொறித்துக் கொண்டு உன் அருளையே விரும்பி உன் திருவடிகளில் ப்ரபத்தி செய்கிறேன். இதற்கு மேற்பட்ட பயன் வேறு என்ன?

2 नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ।

கீதை (2-40): இக்கர்ம யோகத்தைத் தொடங்கி முடிக்காமல் நடுவில் விட்டுவிட்டாலும் செய்த அளவுக்கு வீண்போகாது : நடுவில் நிறுத்தி விட்டதால் பாபமும் வராது. சிறிதளவே கர்மயோகத்தைச் செய்துவிட்டுக் காலம் தேசம் முதலிய சூழ்நிலை நேராக இல்லாமையாலோ அறிவிழந்து தகாத செயல்களைச் செய்வது முதலியவற்றாலோ நடுவில் நிறுத்தி விட்டாலும் மறுபடியும் உரிய காலத்தில் தொடர்ந்து செய்ய வழி கொடுத்து ஸம்ஸார பந்தத்தினின்று இறுதியில் காப்பாற்றிவிடும். மற்ற உலகியற் செயல்களோ வைதிக கர்மங்களோ நடுவில் நிறுத்திவிட்டால் பலனைத் தராததுடன் தீங்குகளையும் விளைவிக்கும். இக்கர்ம யோகம் அத்தகையதன்று.

उचितமன்று. ஓர் अधिकारि- விசேஷத்திலே இவ்வஞ் ஜலிரூப क्रिया-मात्रம்தானே ஸாக்ஷாத் - மோக்ஷ - ஸாதநம் என்றால் ப்ரதக்ஷிண-ப்ரணாமாதி-क्रियामात्रங்களும்[a] இப்படியே अव्यवहित-मोक्ष-साधनங்களாய்[b] प्रसङ्गिக்கும்[c]. அப்போது 'भक्त्या परमया वाऽपि' (93[1]) इत्यादि ப்ரமாணங்களோடு विरोधமுண்டாம்.

6 அஞ்ஜலி எல்லாப் பயனையும் தரும் வகை

ப்ரயோஜநாந்தர-பரனுக்கு[d] இவ்வஞ்ஜலி அவ்வோ ப்ரயோஜநாந்தரங்களைக்[e] கொடுக்கும். அநந்ய - ப்ரயோஜனாய்[f] மற்றொரு தெய்வம் தொழாதவனுக்கு उक्त-प्रकारத்தாலே[g] அவாவற்று[h] வீடு பெறும் அவஸ்தையோடே தலைக்கட்டும், இப்படி இவ்வஞ்ஜலியின் प्रभावத்தை நினைத்து

> 'हस्तीश दुःखविषदिग्धफलानुबन्धि-
> न्याब्रह्मकीटमपराहतसंप्रयोगे ।
> दुष्कर्मसञ्चयवशात् दुरतिक्रमे नः
> प्रत्यस्त्रमञ्जलिरसौ तव निग्रहास्त्रे ।।'[1]

என்று சொன்னோம்.

7 त्वदङ्घ्रिमुद्दिश्यசுலோகத்தின் கருத்து

இப்படி 'त्वदङ्घ्रिमुद्दिश्य' என்கிற ஶ்லோகத்திலே முமுக்ஷுவான[i] अधिकारिயினுடைய அநந்ய-देवताकत्वம்[j] அநந்ய ப்ரயோஜனத்வம்[k] இவற்றையும், இவன் ஸர்வ-ஸ்வாமி திருவடிகளை उद्देशिத்துப்[l] பண்ணுகிற அஞ்ஜலிக்குக் காலநியமம், இத்தால் உப லக்ஷிதமான[m] देशநியமம்[n], वर्ण-आश्रम-अधिकार-நியமம்[o], प्रकार-நியமம்[p], आवृत्ति- நியமம்[q] என்றவிவை இல்லாதபடியையும், இதனுடைய आशु-कारित्वம்[r], अशेष-दोष-निवर्तकत्वம்[s], अशेष-कल्याण-कारणत्वம்[t], अनुबन्धि-रक्षकत्वம்[u], अक्षय-फल-प्रदत्वம்[v] फल-रूप-सजातीयपरिणतिमत्त्वம்[w] என்கிற प्रभावங்களையும், இது அநந்ய - ப்ரயோஜனான[x] प्रपत्तिनिष्ठனுக்கும்[y] प्रयोजनान्तर-परனுக்கும்[z] நிற்கிற நிலைகளையும் अनुसन्धिத்தால் கைகளைக் கூட்டின இவ்வஞ்ஜலி ஒருவருக்கும் கைவிடவொண்ணாதபடி நிற்கும்.

8 ப்ரபந்தனுக்கு இருக்க வேண்டிய தன்மைகளை உணர்தற்குரிய அடையாளங்கள்

(i) இங்குச் சொன்ன அதிகாரியினுடைய भगवत्-अनन्याई शेषत्व-अध्यवसायம்[A] भागवतரல்லாத माता-पितृप्रभृतिகளையிட்டுத் தன்னை ஒருத்தன் व्यपदेशिக்குமளவில்[B]

---

a- செயல் மட்டுமே; b- நேரிடையாக மோக்ஷம் தருவனவாக; c- ஏற்றுக் கொள்ள நேரும்; d- மோக்ஷத்தை அன்றி வேறு பயனை நாடுமவன்; e- வேறு பயன்கள்; f - வேறு பயனை நாடாதவன்; g- கீழே கூறிய வகை; h- பலனைப் பெறும் ஆசை கழிந்து; i- மோக்ஷத்தை விரும்புமவன்; j- வேறொரு தெய்வத்தைக் கொள்ளாமை; k- வேறு பயனை நாடாமை; l- இலக்காக்கி; m- குறிப்பினால் ஏற்படுகின்ற; n- இடத்தின் வரையறை; o- ஜாதி - ஆச்சிரமம் இவற்றைப்பற்றிய தகுதியில் வரையறை; p- செய்யும் முறையின் வரையறை; q- பலகால் செய்வதில் வரையறை; r- விரைவில் பலன் தருதல்; s- எல்லாப்பாபங்களையும் கழித்தல்; t- எல்லா நலங்களையும் அளிக்கும் தன்மை; u- தன் தொடர்புள்ளவரையும் காத்தல்; v- அழியாத பலனைத் தருதல்; w- தன்னைப் போன்ற பலனாகவிளைவைப் பெறுதல்; x- வேறு பயனை நாடாத; y- ப்ரபத்தியைக் கைக் கொண்டவன்; z- வேறு பயனை நாடுமவன்; A- எம் பெருமானைத் தவிர வேறு ஒருவனுக்கும் அடிமையல்லாமையில் உறுதி; B- குறிப்பிடும் போது.

1 **வரதராஜபஞ்சாஸத் (30):** *அத்திகிரிப் பெருமானே! உலகில் அரசர்கள் தங்கள் எதிரிகள் விரைவில் அழிந்து போவதற்காக அம்பின் முனையில் நஞ்சைப் பூசிப்பகைவர் மீது எய்வது வழக்கம். அவ்வாறே நீ எல்லையற்ற பாபங்களைச் செய்த எங்களைப் பகைவர்களாகக் கருதுகின்றாய்.*

எங்களை நரகத்தில் வீழ்த்துவதற்காக நிக்ரஹ ஸங்கல்பமாகிய அம்பை எங்கள் மீது வீசப் பார்க்கின்றாய். அதற்காக முதலில் துன்பம் கலந்த சில பயன்களைத் தருகின்றது உன் அந்த ஸங்கல்பம். இது அம்புக்கு நஞ்சு தடவுவது போன்றதாகும். இந்த உனது நிக்ரஹ ஸங்கல்பத்தை யாராவது தடுக்க முடியுமோ? பிரமன் முதல் புழு ஈறாக உள்ள ஜீவராசிகள் அனைத்தினிடமும் இது செல்லக்கூடியது. யாராலும் இதைத் தடுக்க முடியாது. இப்படி இருக்க, பாபங்களைக் கணக்கின்றிச் செய்து குவித்த எங்களால் உன் ஸங்கல்பத்தைத் தவிர்க்க முடியுமோ? ஆனால் இப்படி ஒப்பற்ற வலிமை பெற்ற உன் நிக்ரஹ ஸங்கல்பமாகிய அம்பையும் கீழே தள்ளிச் சக்தியற்றதாகச் செய்யவல்ல ஓர் எதிரம்பு எங்களிடத்து உள்ளது. அது எங்களின் கைகூப்புதலெனும் அஞ்ஜலியே யாகும். பக்தியுடன் இதைச் செய்தால் உன் நிக்ரஹஸங்கல்பம் ஒழிந்து படிப்படியாய் வழிகண்டு மோக்ஷம் வரை உள்ள பலனைப் பெற வாய்ப்பு வரும்.

Scanned with CamScanner

'एकान्ती व्यपदेष्टव्यो नैव ग्रामकुलादिभिः ।
विष्णुना व्यपदेष्टव्यः तस्य सर्वं स एव हि ।'

என்று தெளிந்து 'கண்ணபுரமொன்றுடையானுக்கடியேன் ஒருவற்கு உரியேனோ' (5[1]) என்று சொல்லும் மறு மாற்றத்தாலே[a] அறியலாம்.

(ii) भगवत-एकान्तियான[b] இவனுடைய அநந்ய - देवताकत्वம்[c] அருகிருந்தார் अभिप्रायம் சொல்லவேண்டும்படி தான் अत्यन्त-अवसन्नனான[d] दशैயிலும் தனக்காகத் தன் உற்றாரும் மற்றொரு தெய்வம் தொழ இசையாத प्रकारத்தாலே காணலாம்.

(iii) அநந்ய-ப்ரயோஜனான[e] இவன் அளவாகும்[f] சிற்றின்பம் ஒழிந்தமை வைஷயிக - सुखार्थ - வ்யாபார-अत्यन्त-निवृत्तिயாலே[g] அறியலாம். 'शारीरं केवलं कर्म कुर्वन् नाप्नोति किल्बिषम्'[2] என்கிறபடியே दुःख-निवृत्ति-मात्रार्थமாய்[h] शास्त्र-अनुमतமான[i] अशनादि-दृष्ट-व्यापारம்[j] இவனுக்கு दोषமாகாது.

(iv) அநந்ய-உபாயனான[k] இவனுடைய निर्भरत्व-अध्यवसायம்[l] भரந்யாஸம் பண்ணின விஷயத்தில் स्वव्यापार-आत्यन्तिक-निवृत्ति[m]யாலே அறியலாம்.

இந்நாலு आकारம்[n] உடையவருக்கு निदर्शनம்[o] நாதமுனிகள் முதலான ஆசார்யர்கள்.

கண்ணன் கழல் தொழக் கூப்பிய கையின் பெருமைதனை
எண்ணம் கடக்க யமுனைத் துறைவரியம்புதலால்
திண்ணமிது வென்று தேறித் தெளிந்த பின் சின்மதியோர்
பண்ணும் பணிதிகள் பாற்றிப் பழந் தொழில் பற்றினமே.

श्रीमद्वेङ्कटनाथः श्रीधरपदपद्मसक्तचित्तानाम् ।
अञ्जलिवैभवमकथयत् अनुस्मृतं यामुनाचार्यैः ॥

इति कवितार्किकसिंहस्य सर्वतन्त्रस्वतन्त्रस्य श्रीमद्वेङ्कटनाथस्य
वेदान्ताचार्यस्य कृतिषु **अञ्जलिवैभवं** संपूर्णम् ।

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

a- மறுப்புச் சொல், ஸமாதாநம் ; b - எம்பெருமானையே தெய்வமாகக் கொண்டவன்; c- வேறு தெய்வத்தை நாடாத தன்மை; d- மரணத்தை மிக நெருங்கும் ஸமயத்தில்; e- வேறு பயனை நாடாத; f- மட்டில் உள்ள; g- உலக இன்பங்களுக்காகச் செய்யும் செயலினின்று அடியோடு விலகுதல்; h- துன்பம் நீங்குவதற்காக மட்டுமே; i- சாஸ்த்ரம் அநுமதித்த; j- உண்பது முதலிய இங்குப் புரியும் செயல்; k- ப்ரபத்தியையன்றி வேறு உபாயமற்ற; l- பொறுப்பு நீங்கிய உணர்ச்சி; m- அடியோடு தன் செயலை ஒழித்தல்; n- தன்மை; o- உவமானம்.

1 **விஷ்வக்ஸேநஸம்(?) :** வேறு தெய்வத்தைப் பற்றாத பாகவதனைக் குறிப்பிடும் போது அவனுடைய ஊர் குலம் முதலியவற்றைக் கொண்டு சொல்லக் கூடாது. எம்பெருமானது ஸம்பந்தத்தை முன்னிட்டே சொல்லவேண்டும். அவனுக்கு எல்லாம் எம்பெருமானல்லனோ!

2 निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्वन् नाप्नोति किल्बिषम् ॥

கீதை (4-21) : பலனில் பற்று இன்றி, மனத்தை விஷயத்தைச் சிந்திக்கவிடாது அடக்கி, எல்லாப் பொருள்களிலும் தன்னுடையவை என்ற எண்ணத்தைவிட்டு உயிருள்ளவரை சரீரம் தரிப்பதற்காக மட்டுமே செயலைச் செய்பவன் ஸம்ஸார பந்தத்தை அடையமாட்டான்.

(24) கண்ணன் கழல் தொழ - எம்பெருமானுடைய திருவடிகளை வணங்குவதற்காக; **கூப்பிய கையின்** - கூப்பப்பட்ட கைகளின் (அஞ்ஜலியின்): **பெருமைதனை** - ப்ரபாவத்தை; **யமுனைத்துறைவர்** ஆளவந்தார் (யாமுநமுனிவர்): **எண்ணம் கடக்க** - நம் நினைவின் எல்லையை மீறியதாக; **இயம்புதலால்** - (ஒரு சுலோகத்தால்) அருளிச் செய்தபடியால்; **இது திண்ணம் என்று** - இதுவே திடமான ஸித்தாந்தம் என்று; **தேறித் தெளிந்த பின்** - (நாம்) நிச்சயித்துத் தெளிந்த பிறகு; **சின்மதியோர் பண்ணும்** - அற்பபுத்தியையுடைவர்கள் செய்கின்ற; **பணிதிகள் பாற்றி** - வாதங்களை ஒழித்து; **பழந்தொழில் பற்றினம்** - பழமையாய் வந்த செய்கையாகிய ப்ரபத்தியை (உபாயமாக)க் கொண்டோம்.

श्रीधर-पदपद्म-सक्त-चित्तानां-திவ்ய தம்பதிகளின் திருவடித் தாமரைகளில் ஈடுபட்ட மனதை உடையவர்களுக்காக; यामुनाचार्यैः अनुस्मृतं-ஆளவந்தாரால் வெளியிடப்பட்ட; अञ्जलि-वैभवं - கூப்பிய கையின் பெருமையை; श्रीमद्वेङ्कटनाथः - வேங்கடநாதன் என்னும் திருநாமம் கொண்ட ஸ்வாமி தேசிகன்; अकथयत् - கூறினார்.

அஞ்ஜலி வைபவம் முற்றும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அஞ்சலி வைபவம்: ரஹஸ்யார்த்த விவரணம்

(அஞ்ஜலி என்பது எம்பெருமானைக் குறித்துக் கைகளைக் கூப்பும் ஒரு சின்னம். இந்த அஞ்ஜலியின் பெருமையை விளக்கும் ரஹஸ்யமாதலால் இப்பெயர் வந்தது)

(ஆசிரியர் : ஸ்ரீ உ. வே. வித்வான் ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி)

1 முன்னுரை

இந்த ரஹஸ்யம் பெரிய முதலியார் என வழங்கும் ஆளவந்தார் தம் ஸ்தோத்ரரத்தத்தில் அஞ்ஜலியின் பெருமையைப் பற்றி அருளிச் செய்த 28வது சுலோகத்துக்கு விளக்கவுரையாய் அவதரித்துள்ளது. அந்தச் சுலோகம் வருமாறு :

த்வதங்க்ரி முத்திச்ய கதாபி கேநசித்
யதா ததா வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:!
ததைவ முஷ்ணாத் யசுபாந்யசேஷத :
சுபாநி புஷ்ணாதி நஜாது ஹீயதே!!

ஸ்ரீஸ்தோத்ரரத்தத்துக்கு வடமொழியில் பாஷ்யம் இட்டருளிய ஸ்ரீ தேசிகன் இந்தச் சுலோகத்துக்கும் உரையிட்டருளியுள்ளார். இங்கு அதைக் தழுவியே மணிப்ரவாள நடையில் வியாக்கியான மாக அருளிச் செய்கின்றார். அதுவே இந்த ரஹஸ்ய வடிவு கொண்டு அஞ்ஜலி வைபவமெனப் பெயரும் கொண்டது.

ஸ்தோத்ர ரத்தத்தில் 'தவாம்ருத ஸ்யந்திநி' என்கிற 27-வது சுலோகத்தில் எம்பெருமான் திருவடித் தாமரையின் எல்லையற்ற இனிமையின் மிகுதியை உறுதியாகக் கண்டவனுக்கு அந்த இனிமையின் அனுபவம் விடமுடியாததாதலின் அதில் ஈடுபட்ட நிலையில் இந்திரியங்களைக் கொண்டு அனுபவிக்கப் பெறும்

உலக இன்பங்கள் - ஆத்மாவை அனுபவித்தலாகிய கைவல்யம் ஆகிய மற்ற பலன்களில் இன்பம் கண்டு ஈடுபடுவதில் சுவை ஏற்படாது என்று அருளிச் செய்தார் ஆளவந்தார்.

அத்தகைய அதிகாரிகளுக்கு அந்தத் திருவடிகளைக் குறித்து அநுகூலமான ஒரு சிறு செயல் செய்தாலும் விரும்பும் பலன் அனைத்தையும் பெறலாம். அந்தத் திருவடிகளை எளிதில் பற்றுவதில் உள்ள ஸௌகர்யத்தைப் பார்த்தாலும் அந்தத் திருவடிகள் விட முடியாதனவாகும். இந்தக் கருத்தை இச்சுலோகத்தில் அருளிச் செய்கிறார்.

2 'த்வதங்க்ரிமுத்திசய சுலோகத்தின் வியாக்யானம்

2.1 'த்வதங்க்ரிமுத்திச்ய'-பிற தெய்வங்களின் நிலையை விளக்குதல்

இதன் விளக்கவுரை - எம்பெருமானே! உன் திருவடித் தாமரைகள் எல்லாவுலகங்களையும் காக்குமவை. எல்லா இனிய வஸ்துக்களினும் மிக மேம்பட்ட இனிமையுடையவை. அவற்றையே விவேகிகள் உபாயமாகவும் பலனாகவும் கருதும் உறுதியுடையர். உலகில் பிரமனும் சிவனும் அற்பமான பலனையே அளிக்க வல்லவர்கள். ஆதலின் விவேகிகள் அவர்களை வழி படுவதில்லை . நீ மகிழ்ந்திருக்கும் ஸமயத்தில் உன்னிடமிருந்து தோன்றியவன் பிரமன். நீ கோபம் கொண்டிருந்த ஸமயத்தில் பிறந்தவன் சிவன். நீ காட்டும் வழியைப் பின்பற்றி அவ்விருவரும் முறையே படைப்பையும் அழிவையும் செய்கிறார்கள். இப்படி அவர்கள் உனக்கு வசப்பட்ட ஜீவர்களாதலின் நேரிடையாக மோக்ஷம் கொடுப்பதற்கு அவர்களுக்குச் சக்தி ஏது? இந்திரன் கூட அவ்வகுப்பில் சேர்ந்தவனே. பிராட்டியுடன் வாழும் பேறு பெற்ற உன் பெருமை அவர்களுக்கு ஏது? ஆதலின் அவர்களைத் தெய்வமாகவே கொள்ளாது விவேகிகள் கைவிடுவர். உன் திருவடியன்றி மற்ற பலன்கள் அற்பமானவை. நிலையற்றவை. இன்னும் குற்றங்கள் நிறைந்த அப்பலன்களில் விவேகிகள் பற்றுக் கொள்வதில்லை.

2.2 'கதாபி'-அஞ்ஜலி செய்தற்குக் கால வரையறையின்மையைக் கூறல்

உலகில் தர்மங்கள் பல்வகைப்பட்டன. அவற்றுக்கெல்லாம் காலத்தைப் பற்றிய வரையறை உண்டு. இன்னயுகத்தில் - இந்த

அயநத்தில் - இந்த மாதத்தில் - இந்தப் பக்ஷத்தில் - இந்தத் திதியில்- இந்தக் கிழமையில் - இந்த நக்ஷத்ரத்தில் - இராத்திரியில் - பகலில்- இந்த யாமத்தில் - இந்த ராசியில் இந்த முகூர்த்தத்தில் தான் செய்ய வேண்டுமென்று காலத்தைப் பற்றிய வரையறையின்படியே அந்த அந்தக் கர்மங்களைச் செய்ய வேண்டுமென்ற நியதி உண்டு. கைகளைக் கூப்புதலாகிய சிறந்த தருமத்துக்கு ஒரு காலத்தையும் எதிர் பார்த்திருக்க வேண்டாம். இதைச் செய்ய உள்ளத்தில் ஆசை எப்பொழுது ஏற்படுகின்றதோ அதுவே இதற்கு உரிய காலம்.

2.3 'கேன சித்'-அஞ்ஜலி பொதுத் தருமம் என்பதையும் செய்தலில் எளிமையையும் கூறல்

மேலும் பல தர்மங்களுக்கு அவற்றைச் செய்யும் அதிகாரிகளைப் பற்றிய சில வரையறை உண்டு. அதாவது - இன்ன தர்மத்தை இந்த ஜாதியிற் பிறந்தவன் - பிரமசாரி முதலியவற்றுள் இன்ன ஆச்சிரமத் தில் உள்ளவன் - இந்தக் குணமுடையன் - இன்ன நிமித்தத்தைப் பற்றியவன் தான் செய்ய வேண்டுமென்ற வரையறை உண்டு. இந்த அஞ்ஜலியோ உண்மை பேசுதல் போலே பொதுத் தர்மமாய் இருப்பதால் அந்தணருள் முதல்வனாகிய பிரமன் தொடங்கி நாய் உண்ணும் கீழ்ச்சாதியான் வரை எவனும் செய்யலாமென்று சாஸ்த்ரம் கூறிய எளிதான செயலாகும்.

2.4 'யதாததா வாபி' - அஞ்சலியின் எளிமையைக் கூறல்

மற்ற தர்மங்களையெல்லாம் செய்ய வேண்டிய முறையிலும் பல வரையறை உண்டு. இந்த அஞ்ஜலிக்கு முறை எதுவும் அவசியம் அன்று. மேம்பட்ட தத்துவமாகிய எம்பெருமான் - தாழ்ந்த தத்துவமாகிய சேதந அசேதநங்கள் - உபாயமான ப்ரபத்தி - மோக்ஷமாகிய பலன் இவற்றில் தெளிவான அறிவு இருந்தாலும் இல்லாவிடினும் அஞ்ஜலி செய்யலாம். தலைக்கு மேல் கைகளைக் கூப்புவதோ, மார்பில் கைகளை வைத்துக் கூப்புவதோ வேறு எப்படியோ இந்த அஞ்ஜலியைச் செய்யலாம். கூப்புதற்குக் கை வசப்படாத நிலையில் வாக்கினாலும் மனத்தாலும் கூட அஞ்ஜலி செய்யலாம். எந்த முறையில் அஞ்ஜலியைச் செய்தாலும் அது பலனை அளிக்கும்.

2.5 'ஸ்க்ருத் க்ருத:' - ஒரு முறை அஞ்சலி செய்தால் போதும் என்பதைக் கூறல்

இந்த அஞ்ஜலியை ஒரு முறை செய்தாலே போதும். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட எந்தக் கர்மமும் ஒரு முறையே செய்ய வேண்டியது என்பது பொதுவான விதியாகும். ஆனால் அந்தப் பொது விதிக்கு விலக்கு இருந்தால் பன்முறை செய்ய வேண்டும். அவ்வாறு அந்த விதிக்கு இங்கு விலக்கு இல்லாதபடியால் பொதுவிதியின்படி ஒரு முறை அஞ்ஜலி செய்தால் போதும். மறுமுறை செய்யவேண்டிய அவசியமில்லை.

2.6 'அஞ்சலி:' - அஞ்ஜலி மற்ற தருமங்களினும் சிறந்தது என்பதைக் கூறல்

மற்ற எல்லாத் தர்மங்களையும் காட்டிலும் எம்பெருமானைப் பற்றிச் செய்யும் தர்மங்கள் மிகச் சிறந்தனவாய் மஹாபாரதத்தில் புகழப் பெற்றன. அவையாவன - கோயிலைப் பெருக்குதல் - மெழுகுதல் - திருமாலை கட்டுதல் - தீபம் ஸமர்ப்பித்தல் - ப்ரதக்ஷிணம் செய்தல் - கீழே விழுந்து ஸேவித்தல் - துதித்தல் - திருநாமத்தைக் கூறுதல் மந்திரத்தை ஜபித்தல் முதலியன. இந்தத் தர்மங்களைக் காட்டிலும் மிக உயர்ந்ததாகக் கூறப்பட்டது இந்த அஞ்ஜலி. இதன் உருவம் கை கூப்புமளவேயுள்ளது.

2.7 'ததா ஏவ' - விளக்கம்

மற்ற சில கர்மங்கள் பின்பு எப்பொழுதோ பலனைத் தருவன. இந்த அஞ்ஜலியோ செய்தவுடனேயே எம்பெருமானுக்கு மகிழ்ச்சியைத் தந்து அவனது அருளைப் பெறுவிக்க வல்லது.

2.8 'முஷ்ணாதி'-அஞ்ஜலி கர்மங்களை ஒழித்தலைக் கூறல்

பின்னும் இந்த அஞ்ஜலி எத்தகைய தீங்குகளை ஒழிக்க வல்லது என்று பார்ப்போம் - எம்பெருமானை ஆச்ரயித்தவனாயினும் அவனுக்கு அநாதியாய் வருகிற பழய பழக்கங்களின் வாஸனை விடாமல் மேலிட்டு நிற்கும். அதனால் இந்த ஸம்ஸாரத்தையே மேன்மேலும் வளர்க்கவல்ல புண்ணியங்களும் பாபங்களும் இரும்பு விலங்குகளைப் போல் அவனைச் சூழ்ந்து கொண்டே நிற்கும். அந்த விலங்குகளைக் கழற்றி விரைவில் மோக்ஷம் பெற அவனுக்கு எளிதில் ஆசை உண்டாகாது. அவையெல்லாம் அவனுக்கு அநுகூலங்களாய்த் தோன்றிக் கொண்டேயிருந்து மேன்

Scanned with CamScanner

மேலும் ஸம்ஸார பந்தத்தை தந்து கொண்டேயிருக்கும். இந்த அஞ்ஜலி அந்தக் கர்மங்களை யெல்லாம் கூட அவன் செல்லும் வழியிலேயே செல்லவிட்டுப் பின் திருந்தச் செய்து கழித்துவிடும். எப்படி? உலகில் நோயுற்ற குழந்தைகள் மருந்து உண்ண மறுத்துப் பிடிவாதம் செய்யும். அதற்காக வெல்லத்தில் மருந்தை வைத்து மறைத்துக் கொடுத்துத் தந்திரத்தால் ஏமாற்றி நோய் தீர்ப்பது உண்டே! அவ்வாறே இந்த அஞ்ஜலி அவனுக்குச் சில இன்ப துன்பங்களைக் காட்டி எதாவது ஒரு வழியில் அவனுடைய புண்ய பாபங்களைக் கழித்துவிடும். அதாவது - ப்ரபத்தி செய்தவனுக்கு எம்பெருமானைப் பரமபதத்தில் அநுபவிக்கத் தடையாயிருந்த கர்மங்களை நீக்கிவிடும். ப்ரபத்தி செய்யாதவர்களுக்கு அதைச் செய்யத் தடையாயிருந்த கர்மங்களைப் போக்கி ப்ரபத்தியைச் செய்யுமாறு தூண்டிவிடும். இப்படி அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு தடைகளை நீக்கிவிடும்.

2.9 'அசேஷத:'-அஞ்சலி எல்லா விரோதிகளையும் போக்கவல்லது என்பதைக் கூறல்

க்ருச்சரம் - சாந்த்ராயணம் முதலிய பல கடினமான விரதங்களைச் சாஸ்த்ரங்கள் கூறுகின்றனவே! அவையெல்லாம் சிற்சில தீங்குகளைத் தாம் போக்க முடியும். இந்த அஞ்ஜலியோ ஸகல விரோதிகளையும் போக்க வல்லது.

2.10 'சுபாநி புஷ்ணாதி'-அஞ்ஜலி விளைவிக்கும் நலங்களைக் கூறல்

இப்படி அஞ்ஜலி நாம் வேண்டாதவற்றைக் கழிப்பதுடன் நிற்குமோ? அது தொடங்கி நாம் வேண்டுமவற்றைக் கொடுக்கும் வரையன்றோ உதவி புரிகின்றது! அவையாவன - இந்த அஞ்ஜலி பரமபதத்தில் பரிபூர்ணமான பகவதநுபவத்தைப் பெற வழி செய்கின்றது. அதற்கு உபாயமான ப்ரபத்தியைத் தலைக்கட்டித் தருகின்றது. ப்ரபத்தியின் அங்கங்களையும் செவ்வனே நடத்தித் தர வல்லது. ப்ரபத்தியைச் செய்வதற்கு வேண்டிய தகுதியையும் உண்டாக்கித் தருகின்றது. ப்ரபத்தியைச் செய்தவன் இங்கு உள்ள நாள் வரை பகவத் கைங்கர்யத்தையே பலனாக நினைத்து அக்கைங்கர்யத்தைச் செய்ய வழி செய்கின்றது. அவற்றில் வரும் தடைகளையெல்லாம் போக்கி அந்த அந்தப் பலனை நன்றாய்த் தலைக் கட்டித் தரும் இந்த அஞ்ஜலி.

2.11 'ந ஜாது ஹீயதே' - அஞ்சலி எந்நாளும் அழியாத பயனை தருவதைக் கூறல்

அஞ்சலி தன்னைச் செய்தவனுக்கு மட்டுமே இத்தகைய பலன்களைக் கொடுத்து விட்டு அத்துடன் ஓய்ந்துவிடுவதன்று. இந்த அஞ்ஜலி செய்தவனைச் சேர்ந்த ஏழேழு தலைமுறையில் உள்ளவர்களுக்கும் அத்தகைய பலன்களைக் கொடுத்து உதவி செய்ய வல்லது. மேலும் ஸ்வர்க்கம் முதலிய பலன்கள் அதற்குக் காரணமான புண்யம் கழிந்தவுடன் அவையும் அழிந்து விடும். அஞ்ஜலியின் வழியாகப் பரமபதத்தில் கிடைக்கும் கைங்கர்யமோ எந்நாளும் அழியாமல் நித்யமாயிருக்கும். மேலும் இவ்வுலகில் செய்த அஞ்ஜலி ப்ரபத்தியளவும் கொண்டு விட்டுப் பரமபதம் சென்ற பின்பும் உபாயமாயன்றிக் கைங்கர்யமாகிய பலன் வகுப்பிலும் சேர்ந்து எந்நாளும் மாறாமல் நடக்கக் கூடியதாகும்.

2.12 அஞ்சலி பற்றி மேலும் சில விளக்கங்கள்

2.12.1 மோக்ஷம் தருவது அஞ்ஜலியா? ப்ரபத்தியா? - விடை

இங்கு ஒரு கேள்வி - அஞ்ஜலியென்பது கைகூப்புதல் தானே! அதற்கு மோக்ஷம் வரையில் உள்ள ஸகல பலன்களையும் தர வல்லமை இருப்பதாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும்? ப்ரபத்தி அன்றோ மோக்ஷம் தரவல்லது! என்று ப்ரமாணங்கள் கூறுகின்றனவே! அதற்கு முரண்படுகின்றதே? என்று.

விடை : இங்குக் கூறும் அஞ்ஜலியை ஸாதாரணமான கைகூப்புதலாகக் கொள்ளக் கூடாது. ப்ரபத்தி செய்பவன் செய்யும் அஞ்ஜலியையே கூறுவதாகக் கொள்ள வேண்டும். ப்ரபத்தி செய்பவனுக்கு வேண்டிய தகுதிகளாவன - பக்தியோகமாகிய கைம் முதலில்லாமை, வேறொரு ரக்ஷகனையும் வேறு பலனையும் நாடாமை. இந்தத் தகுதியுடையனாய் ப்ரபத்தியாகிய பரந்யாஸத்தைச் செய்யும் போது கைகளைக் கூப்புகின்றான். அப்பொழுது அந்த அஞ்ஜலி அவனுடைய ஒரு விசேஷத் தன்மையைக் காட்டும் சின்னமாகின்றது. அதாவது - அப்பொழுது அவன் செய்யும் அஞ்ஜலி ப்ரபத்தி வடிவில் சேர்ந்து இனி அவன் தன்னைக் காத்துக் கொள்வதற்காக மறுபடிதான் செய்ய வேண்டிய எந்தச் செயலும் அற்றவனாயுள்ள தன்மையைக் காட்டுகின்றது. ஆகவே அந்த அஞ்ஜலி ஸாதாரணமான கைகூப்புதலாகுமா? தனக்கு உள்ளே பரந்யாஸத்தை ஸாரமாக அடக்கிக் கொண்டிருக்கும்

Scanned with CamScanner

முத்ரையாகவன்றோ ஆகின்றது அந்த அஞ்ஜலி! அந்த பரந்யாஸம் மோக்ஷம் வரை உள்ள ஸகல பலன்களையும் தர வல்லதாய் நிற்பதில் ஸந்தேஹம் என்ன? அத்தகைய ப்ரபத்தியின் பெருமையை அஞ்ஜலி காட்டுகின்றது. இப்படி அந்த அஞ்ஜலியே ப்ரபத்தி வடிவு கொண்டதாதலின் ஒரு ப்ரமாணத்துக்கும் முரண்பாடு இல்லை.

2.12.2 சேதநன் சின்னம் அஞ்ஜலி-பெருமாள் சின்னம் அபயஹஸ்தம்

இப்படி எம்பெருமானைப் பிரார்த்தித்து ப்ரபத்தி செய்யும் சேதநன் பக்தியோகமாகிய கைம்முதலற்று நிற்கும் தன்னைக் காப்பதற்கு இனி ஒரு செயலும் செய்ய வேண்டாத நிலையைப் பெற்றதையே ஒரு சிறந்த பயன் பெற்றதாகக் கருதிக் கைகளைக் கூப்புகின்றான். அவன் இந்தப் பயன் பெற்றதைக் காட்டும் ஒரு முத்திரையாகும் அந்த அஞ்ஜலி. அதற்கு விடையாக எம்பெருமான் அபய முத்திரையத் தன் வலத்திருக்கையால் காட்டுகின்றான். இவனைக் காக்கும் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொண்டு விட்டபடியால் தன் சுதந்திரத்தாலும் கருணையாலும் இந்தச் சேதநனிடம் வேறு ஒன்றையும் எதிர்பாராமல் இவனைக் காத்து விடுவதாகக் கொண்ட திருவுள்ளத்தைக் காட்டுகின்றது அவனுடைய அபய முத்திரை. ஆகவே ப்ரபந்நன் இழுத்துக் கொண்ட கைக்கு எம்பெருமான் நீட்டிய கை விடையாகும்.

2.12.3 அஞ்சலி ப்ரபத்தி இவை இரண்டும் எம்பெருமானை உகப்பிக்கின்றன என்பதன் கருத்து என்ன?

இங்கு ஒரு **கேள்வி :** அஞ்ஜலி செய்வதால் எம்பெருமானுக்குச் சேதநன் விஷயத்தில் அநுக்ரஹம் பிறப்பதாக ஆதாரங்கள் கூறு கின்றன. சில ப்ரமாணங்கள் ப்ரபத்தியும் எம்பெருமானுக்குச் சேதநன்பால் அநுக்ரஹத்தைப் பிறப்பிப்பதாகக் கூறுகின்றன. இப்பொழுது அஞ்ஜலி - ப்ரபத்தி இரண்டுமே அவன் திருவரு ளாகிய ஒரே பலனை விளைவிப்பதாகத் தோற்றுகின்றதே? இதன் கருத்து என்ன?

விடை: அநுக்ரஹம்திருவருள் என்பதெல்லாம் என்ன? அவன் திருவுள்ளத்தில் பிறந்த சீற்றம் நீங்கி மகிழ்ச்சி பிறப்பது தானே! ப்ரபத்தியால் அவன் சீற்றம் தணியாதாகில் ப்ரபத்தி செய்வதே வீணாய் முடியும். ஆதலின் ப்ரபத்தியே முக்கியமாய் அவன் சீற்றத்தைத் தணிக்க வல்லதாகும். அஞ்ஜலிக்கும் அந்தப்

பெருமையைச் சொன்னதன் கருத்து வேறு. அதாவது, அஞ்ஜலி ப்ரபத்தியை உள்ளடக்கிக் கொண்டுள்ளது என்று கீழே கூறினோ மன்றோ! அப்படி உள்ளடங்கிய பரந்யாஸத்தைக் காட்டும் சின்ன மாக அஞ்ஜலி இருப்பதைக் கொண்டு அஞ்ஜலியே அநுக்ர ஹத்தைப் பெறுவிப்பதாகக் கூறப்பட்டதாதலின் முரண்பாடு ஏதுமில்லையென்று உணர்க.

3 பக்தியோ-ப்ரபத்தியோ எம்பெருமான் சீற்றத்தைத் தணித்தல்

எம்பெருமானுக்குக் கருணை இயற்கையாயுள்ளது. இக் கருணையுடன் கூடிய எம்பெருமான்தான் மோக்ஷம் அளிப்பவன். அதைத் தருதற்குச் சேதநர்பால் அவனுக்கு உள்ள சீற்றம் நீங்கி அநுக்ரஹம் ஏற்படவேண்டும். அதற்காக அவரவர் தகுதிக்கு ஏற்ப பக்தி யோகத்தையோ ப்ரபத்தியையோ செய்ய வேண்டும். அவற்றுள் ஒன்றைச் செய்துவிட்டால் எம்பெருமான் திருவுள்ளம் குளிர்ந்துவிடும். இதுவரை சேதநர்களிடம் அவர்கள் செய்த பாபத்தால் ஏற்பட்ட சீற்றத்தாலேயே அதன் பலனாக இந்த ஸம்ஸார பந்தம் முதலிய விரோதிகள் ஏற்பட்டுள்ளன. பக்தி யாலோ , ப்ரபத்தியாலோ மகிழ்ந்த எம்பெருமான் அவர்களுக்கு ஸம்ஸார பந்தத்தை நீக்க ஸங்கல்பித்து மோக்ஷத்தைத் தரு கின்றான்.

3.1 ப்ரபத்தியின் தனிச்சிறப்பு

ப்ரபத்தியைச் செய்பவனுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. ப்ரபத்தி என்பது சிறிய எளிய செயல். அதனாலே மகிழ்ந்த எம்பெருமான் பலன் கொடுக்கத் தொடங்கியனவும் தொடங்காமல் மூட்டை யாய்க் குவிந்துள்ளனவாய் மேன்மேலும் ஸம்ஸார பந்தத்தைத் தருவனவுமாயுள்ள புண்ய பாபங்களாகிய கருமங்கள் விரைவில் கழியும்படி அதற்கு ஏற்ற விசேஷமான அநுக்ரஹத்தைச் செய் கின்றான். இதற்கும் மூல காரணம் யாது? எம்பெருமானிடம் இயற்கையாய் உள்ள கருணையே. கருணை என்பது யாது? தனக்கென்று ஒரு பயனை எதிர்பாராது பிறர் துன்பம் துடைக்க வேண்டும் என்ற விருப்பமேயாகும்.

3.2 ப்ரபந்நனிடம் எம்பெருமானுக்கு விசேஷ கருணை

இங்கு ஒரு கேள்வி! - எம்பெருமானார் தர்சநத்தைச் சேர்ந்த சிலர் ப்ரபத்தி செய்தவனுக்கு எம்பெருமான் கருணையால் மோக்ஷம்

தருவதாகவும் பக்தியோகம் செய்பவனுக்கு அவன் அநுக்ரஹத்தால் மோக்ஷம் தருவதாகவும் ஏதோ வேற்றுமை இருப்பது போலச் சொல்லுகின்றார்கள். இதனின்று அவன் கருணை ப்ரபந்நனிடம் மட்டுமே உண்டு என்றும் அநுக்ரஹம் பக்தியோகம் செய்பவனிடம் மட்டுமே உண்டு என்றும் ஏற்படுகின்றதே! இந்தப் பாகுபாடு உண்மையில் உண்டா? என்று.

விடை: எம்பெருமானுக்கு இருவர் பாலும் இரண்டும் உண்டு. மேலும் ப்ரபந்நனிடம் அவனுக்கு விசேஷமான அநுக்ரஹமும் உண்டு. ஆனால் அவர்கள் அப்படி பிரித்துக் கூறியதற்கு ஒரு கருத்து உண்டு. ப்ரபந்நனுக்கு மட்டும் விரைவில் மோக்ஷம் தருதற்குக் காரணமாக அவனிடம் விசேஷமான கருணை உண்டு என்பதை மறுக்க முடியாது. மேலும் பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மங்களைக் கூடக் கழிக்கும் சக்தி ப்ரபத்திக்குத் தான் உண்டு. இத்தகைய பெருமை பொருந்திய ப்ரபத்தியைச் செய்தவனிடம் எம்பெருமானுக்கு உள்ள விசேஷ கருணையைச் சிந்தித்து அந்தக் குணத்திலேயே ஈடுபட்டுக் கிடக்க வேண்டியவன் ப்ரபந்நன் என்பதை வெளியிடவே அவ்வாறு கூறினார்கள்.

4. அஞ்ஜலி நேராகவும் படிப்படியாகவும் மோக்ஷம் தருதல்

கீழ் கூறியபடி அஞ்ஜலிக்கு இரண்டு வடிவு உள்ளன. அதற்கே ப்ரபத்தி வடிவம் கொடுத்து அங்கங்களுடன் செய்தால் நேராக அதுவே மோக்ஷத்தைத் தர வல்லது. அவ்வாறன்றி எம்பெருமானுக்குத் திருமாலை ஸமர்பித்தல் - தீபம் ஸமர்ப்பித்தல் முதலிய நற்செயல்கள் போல் இந்த அஞ்ஜலியும் விசேஷமான ஒரு நல்ல செயலாக மட்டுமே நிற்பதானால். இது நேரிடையாக மோக்ஷம் தர வல்லதாகாது. ஒரு புண்ணியச் செயலாகவே முடியும். ஆனால் எந்த நற்செயலுமே கல்லாலான கட்டிடம் போலே வீணாகாது நிலையாய் நின்று பலன் தரும். இந்த அஞ்ஜலியும் முதலில் பாபத்தைப் போக்கி, ஸத்துவகுணம் தலையெடுக்கச் செய்து, நல்ல அறிவை ஊட்டி, பக்தியோகத்தையோ ப்ரபத்தியையோ செய்யுமாறு செய்து வரிசையாய் மோக்ஷம் பெறும் வரை கொண்டு விட்டு விடும். ப்ரபத்தி வடிவு கொள்ளாது ஸாதாரண நற்செயலாக மட்டும் உள்ள அஞ்ஜலிக்கு எல்லாக் கர்மங்களும் தொலைந்து எல்லாப் பலனையும் பெறுவதைப் பலனாகச் சொல்லியதற்கு இவ்வாறு படிப்படியாய் மோக்ஷத்தைத் தருவதைக் கருத்தாகக் கொள்க.

5 அஞ்ஜலி விஷயத்தில் பிறர் வாதம் - ஸமாதானம்

அஞ்ஜலி மட்டுமே மோக்ஷத்தைத் தரும் என்பதற்குப் படிப் படியாய் மோக்ஷம் தருமென்று வழி விட இடம் இருக்கும்போது அந்தச் சொல்லை இல்லாததை ஏற்றி மிகைப்படுத்திச் சொல்லும் சொல்லாகக் கூறுவது முறையன்று. மேலும் ஒரு குறிப்பிட்ட சிறந்த அதிகாரிக்கு ஸாதாரணமாய் அவன் செய்யும் அஞ்ஜலி மட்டுமே நேராக மோக்ஷத்தைத் தரவல்லதென்று சிலர் கூறுவதும் உசிதமன்று. அப்படியாகில் இதைப் போலவே ப்ரதக்ஷிணம் ஸேவித்தல் முதலிய செயல்கள் மட்டுமே நேராக மோக்ஷத்தைத் தருவனவாகக் கூற இடமாகும். அப்படியே இருக்கட்டுமே என்று கூறவும் முடியாது. அப்படி இசைந்தால் பக்தியோ ப்ரபத்தியோ செய்தாலன்றி வேறு ஒன்றால் மோக்ஷம் பெற முடியாதென்று வலியுறுத்திக் கூறும் ப்ரமாணங்களோடு முரண்படும்.

6 அஞ்ஜலி எல்லாப் பயனையும் தரும் வகை

உண்மையை ஆராய்ந்தால் - இந்த அஞ்ஜலியை வேறு பயன்களைக் கருதிச் செய்தால் அந்த அந்தப் பலனைத் தரும். வேறு பயனை நாடாமலும் வேறு தெய்வத்தைத் தொழாமலும் அஞ்ஜலி செய்பவனுக்கு கீழ்க் கூறிய படியே பாபம் கழிதல் - ஸத்துவம் தலையெடுத்தல் என்ற முறையில் படிப்படியாய் ப்ரபத்தியையும் செய்வித்து மோக்ஷம் வரை கொண்டு சேர்த்துத் தலைக்கட்டும். இந்த அஞ்ஜலியின் பெருமையை நாம் இயற்றிய வரதராஜ பஞ்சாசத் என்னும் ஸ்தோத்ரத்திலும் முப்பதாவது சுலோகத்தில் விளக்கி உள்ளோம்.

7 'த்வதங்க்ரி முத்திச்ய' சுலோகத்தின் கருத்து

அஞ்ஜலியைப் பற்றி ஆளவந்தார் அருளிய சுலோகத்தால் அஞ்ஜலிக்கு உள்ள பின்வரும் பெருமைகளை அநுஸந்திக்கலாம். மோக்ஷத்தை விரும்பும் சேதநன் வேறு தெய்வத்தை நாட மாட்டான். மோக்ஷமன்றி வேறு பயனையும் விரும்ப மாட்டான். இவன் எல்லோருக்கும் ஸ்வாமியான எம்பெருமான் திருவடிகளைக் குறித்துப் பண்ணுகிற அஞ்ஜலிக்குக் கால வரையறை இல்லை. இதைக் கொண்டு ஒருகால் இன்ன இடத்தில் தான் செய்வது என்கிற இட வரையறை உண்டோ என்று கருத வேண்டாம். இந்த ஜாதியான் - இந்த ஆச்ரமத்தில் உள்ளவன் - இன்ன தகுதியுடையவன் தான் செய்யலாமென்கிற வரையறையும்

Scanned with CamScanner

மில்லை. இந்த முறையில் தான் செய்ய வேண்டுமென்று செய் முறையிலும் நிர்ப்பந்தமில்லை. அடிக்கடி செய்ய வேண்டும் மென்பதும் இல்லை . இது விரைவில் பலன் தர வல்லது எல்லாப் பாபங்களையும் போக்க வல்லது. எல்லா மங்களங்களையும் அளிக்க வல்லது. கை கூப்புமவர்களின் சுற்றத்தாரையும் காக்க வல்லது. அழியாத மோக்ஷத்தையும் தர வல்லது. மோக்ஷத்திலும் இந்த அஞ்ஜலி உபாயமாகவன்றிப் பலனாக மாறி நடந்து கொண்டே இருக்கும். இத்துணைப் பெருமைகளையுடைய அஞ்ஜலி வேறு பயனை நாடாது மோக்ஷத்தையே விரும்பு மவனுக்கு மோக்ஷத்தையும் வேறு பயனை விரும்புமவனுக்கு அப்பலனையும் கொடுக்கும் நிலையையும் கீழ்க் கூறிய தன்மைகளையும் அநுஸந்தித்தால் கைகளைக் கூட்டிச் செய்யும் அஞ்ஜலி ஒருவருக்கும் பிரிக்கவொண்ணாதபடி நிற்கும்.

8 ப்ரபந்நனுக்கு இருக்க வேண்டிய தன்மைகளை உணர்தற்குரிய அடையாளங்கள்

இந்த ரஹஸ்யத்தில் சொல்லிய அதிகாரிகளுக்கு அவசியம் இருக்க வேண்டிய அம்சங்கள் நான்கு. அவையாவன: (i) எம்பெருமானை அன்றி வேறொருவருக்கு அடியராகாது அவன் ஒருவனுக்கே அடியனாயுள்ள உறுதி, (ii) வேறொரு தெய்வத்தை நாடாமை, (iii) வேறு பயனை விரும்பாமை, (iv) பொறுப்பை எம்பெருமானிடம் ஸமர்ப்பித்துவிட்டதால் தனக்குப் பொறுப்பு இல்லையென்ற உறுதி.

இந்த அதிகாரிகளிடம் இந்த நான்கு தன்மைகளும் இருப்பதை உணர்வதற்குச் சில சின்னங்கள் உண்டு. அவையாவன:

(i) எம்பெருமானுக்கே அடியனென்ற உறுதியுடைமைக்கு அடையாளம் - ப்ரபத்தி செய்த ஒருவனுக்குப் பெற்றோர்களும் மற்ற உறவினரும் தீவினையின் பயனாய் எம்பெருமானிடம் பக்தி அற்றவர்களாயுள்ளனர். அவனை மற்றொருவன் குறிப்பிட்டுச் சொல்லும் போது பாகவதரல்லாத பெற்றோர்களின் பெயரைச் சொல்லி அவர்கள் புதல்வன் என்று சொல்ல வந்தானாகில் அதை இவன் பொறுக்கமாட்டான். ஏனென்றால் பரமைகாந்தியான ஒருவனை அவனது ஊர் - குலம் - பெற்றோர் முதலியவர்களைக் கொண்டு குறிப்பிடக் கூடாதென்றும் அவனுக்கு எல்லாம் எம்பெருமானேயாதலின் அவனைக் கொண்டே அவனுக்கு அடியன் என்று குறிப்பிட வேண்டுமென்றும் சாஸ்த்ரம் கூறுவதை இவன் தெளிவாய் அறிந்தவனாதலின் தன்னை அவ்வாறு குறிப்பிடக் கூடாதென்றும் எம்பெருமானையன்றித் தான் வேறு ஒருவருக்கும் உரியனல்லனென்றும் கூறி மறுப்பான். இதைக் கொண்டு இவனை எம்பெருமானுக்கே சேஷனென்ற உறுதியுடையனென்று அறியலாம்.

(ii) வேறு தெய்வத்தை நாடாதவனென்பதற்கு அடையாளம் - ஒருவனுக்கு அந்திம காலம் நெருங்கி விட்டது. இந்திரியங்கள் ஒடுங்கிவிட்டன. தன் கருத்தைத் தான் எடுத்துச் சொல்லும் சக்தி கூட ஒழிந்து விட்டது. பக்கத்தில் உள்ளவரே எடுத்துச் சொல்ல வேண்டிய நிலை. அந்தச் சமயத்தில் தன் உறவினர் இவனது நன்மைக்காக வேறு தெய்வத்தைத் தொழமுற்பட்டால் அதற்கு இவன் இஷ்டப்படாமல் மறுக்கத் துணிவான். இதைக் கொண்டு எம்பெருமானையே பற்றிய அவனிடம் வேறு தெய்வம் நாடாத உறுதியை அறிந்து கொள்ளலாம்.

(iii) வேறு பயனை நாடாதவனென்பதற்கு அடையாளம் - சிற்றின்பத்தைப் பெரிதாகக் கொண்டு அதற்கு வேண்டிய எந்தச் செயலையும் செய்யாமலிருந்தானாகில் இவன் வரையில் சிற்றின்பம் ஒழிந்து வேறு பயனை நாடாத தன்மையை உணரலாம். ஆனால் இங்குத் தனக்கு நேர்ந்த கஷ்டங்கள் நீங்குவதற்காகவும் சரீரத்தைத் தரிப்பதற்காகவும் சாஸ்த்ரம் அநுமதித்த அளவுக்குச் செய்யும் செயல்களாகிய - உண்பது உடுத்தல் முதலியவற்றை இவன் செய்வது வேறு பயனை நாடும் குற்றமாகாது.

(iv) வேறு உபாயத்தை நாடாத இவன் தன் பொறுப்பு நீங்கிய உணர்ச்சி பெற்றதற்கு அடையாளம் - தான் எம்பெருமானிடம் பொறுப்பை ஸமர்ப்பித்து ப்ரபத்தி செய்தபின் மறுபடி அதற்காக ஒரு செயலைச் செய்யாது அடியோடு விட்டதைக் கொண்டு இவன் பொறுப்பு நீங்கிய தன்மையை உணரலாம்.

இந்த நான்கு அம்சங்களையும் உடையவர்களுக்கு உவமானமாய் இருப்பவர் ஸ்ரீமந் நாதமுனிகள் முதலிய ஆசார்யர் களேயாவர்.

அஞ்ஜலிவைபவம் முற்றும்

Scanned with CamScanner

ஸ்ரீ:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பிற்சேர்க்கை - A

இரண்டாம் பாகத்தில் குறிப்பிட்ட வரலாறுகள்

(ஆசிரியர் : ஸ்ரீ உ. வே. வித்வான் ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி)

1 த்ரிசங்கு விருத்தாந்தம்

ராமா (பால-ஸர்க்கம் 57-60) : இஷ்வாகு வம்சத்தில் தோன்றியவனும் தர்மவானுமான த்ரிசங்கு மஹாராஜன் இந்தச் சரீரத்தோடேயே ஸ்வர்க்க லோகம் செல்ல விரும்பிக் குல குருவான வஸிஷ்டரையும் அவர் புத்திரர்களையும் வேண்டினான். அவர்கள் மறுத்து விடவே விசுவாமித்திரரைச் சரணமடைந்தான். அதற்காக யாகம் செய்வித்து அவனை இந்தச் சரீரத்துடனேயே ஸ்வர்க்கத்துக்கு அனுப்பினார் விசுவாமித்திரர். அங்கே தேவர்களும் இந்திரனும் இதைப் பொறுக்காது தலைகீழாகக் கீழே தள்ளி விட்டனர். த்ரிசங்கு விசுவாமித்ரரைக் கூப்பிட்டுக் கதறினான். அவர் கீழே விழ இருந்த அவனைப் பாதி வழியிலேயே தன் தவ வலிமையால் நிறுத்தி விட்டார். பின் அந்த இடத்திலேயே நிலையாக நின்று ஸ்வர்க்க ஸுகங்களை நெடுங்காலம் பெறுமாறு செய்தார். முனிவர் கோபத்துக்கு அஞ்சிய தேவர்களும் இதற்கு உடன்பட வேண்டியிருந்தது. இங்ஙனம் சரணமடைந்தவனைக் காத்தார் விசுவாமித்திரர்.

2 சுநச்சேபன் வ்ருத்தாந்தம்

ராமா (பால-ஸர்க்கம் 61-62) : அயோத்திக்கு அரசனான அம்பரீஷன் வேள்வி செய்கையில் இந்திரன் யாகப் பசுவைத் திருடிச் சென்று

விட்டான். வேள்வியை முடித்துத் தன் பதவிக்கு வந்து விடுவானோ என்ற அச்சம் இந்திரனுக்கு. புரோஹிதரிடம் அரசன் கூறினான். அவர் அந்தப் பசுவையே கண்டு பிடித்துக் கொண்டுவர முடியா விட்டால் நரபலியாவது கொடுத்தால்தான் யாகம் நிறைவேறுமென்று கூறிவிட்டார். பசு அகப்பட வழியில்லை. பின் ருசீகரென்னும் முனிவரிடம் சென்று அவர் புத்திரர்கள் மூவருள் ஒருவனை வேள்விக்குப் பலியிடக் கொடுக்குமாறு கேட்டான் அரசன். மூத்த மகனைத் தர முடியாதென்று முனிவரும் இளைய புதல்வனைக் கொடுக்க முடியாதென்று அவர் மனைவியும் கூறி விட்டனர். நடுமகனான சுநச்சேபன் தான் பெற்றோர்களால் கைவிடப்பட்டமையை உணர்ந்து தானே வந்து தான் அளிக்கப் பட்ட கருத்தை வெளியிட்டான். லக்ஷம் பசுக்களை முனிவருக்குக் கொடுத்து அவனை அரசன் அழைத்துச் சென்றான். சுநச்சேபன் தன் மாமனாகிய விசுவாமித்ரரிடம் தன் நிலையை முறையிட்டுச் சரணமடைந்தான். முனிவர் அவனிடம் இரக்கங் கொண்டு இரண்டு மந்திரங்களை உபதேசித்து அவன் வேள்வியில் பசுவாக நிறுத்தப்படும் நிலையில் இந்த இரண்டு மந்திரங்களையும் உச்சரிக்கும்படி சொன்னார். அவனும் அம்பரீஷனிடம் சென்று யாகப் பசுவாக முழுமனத்துடன் இருப்பதாகக் கூறினான். பின் வேள்வியில் பசுவுக்கு உள்ள கோலங்களை யெல்லாம் இவனுக்குச் செய்து யூபஸ்தம்பத்தில் கட்டினார்கள். அப்பொழுது இரண்டு மந்திரங்களையும் ஓதினான். இதைக் கேட்டு மகிழ்ந்த இந்திரனும் உபேந்திரனும் வேள்வியையும் நிறைவேற்றி இவனையும் உயிர் வாழும்படி செய்துவிட்டனர்.

3 புறா சரணமடைந்தவனைக் காத்தல்

இதி. ஸமு. (8) : பட்சிகளின் உடலைக் கொண்டே வாழ்க்கை நடத்தும் ஒரு வேடன் பறவை வேட்டைக்காக வனத்தில் திரிந்தான். உணவுப் பொருள் எதுவும் கிட்டவில்லை. பெருங் காற்று வீசியது. மழை பெரிதாக வந்து நீர் வெள்ளமாக ஓடுகின்றது. குளிர் தாங்க முடியவில்லை. பறவைகள் ஒளிந்தன. வேடனுக்குப் பசி ஒரு பக்கம். அச்சம் ஒரு பக்கம். அப்பொழுது ஒரு பெண் புறா இருக்க இடம் இல்லாமல் கீழே விழுந்து உயிருடன் கிடந்தது. அதை ஆவலுடன் எடுத்துத் தன் கூட்டில் அடைந்தான். மழை நின்று வானம் வெளுத்தது. இரவுப்

Scanned with CamScanner

பொழுதில் அருகில் எந்த ஊரும் புலப்படவில்லை. ஒரு மரத்தடியிலே இரவைக் கழிக்க விரும்பினான். மரத்தடிக்கு வந்தான். தலைக்கு மேல் கைகூப்பி அந்த மரத்தின் தேவதையைச் சரணம் அடைந்ததாகக் கூறினான். அந்த மரத்தில்தான் வேடன் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் பெண்புறாவின் துணையான ஆண் புறா பெண்புறாவின் பிரிவைத் தாங்காது புலம்பிக் கொண்டிருக்கிறது. அதைக் கேட்ட பெண் புறா தன் கணவனுக்குப் பறவை மொழியில் அது இருக்குமிடம் வந்து சரணமடைந்த வேடனை உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுமாறு உபதேசிக்கின்றது. நன்கு விருந்தூட்டும்படி சொல்லுகிறது. பறவை பெண் புறாவின் சொல்லைக் கேட்டு மகிழ்கின்றது. வேடன் குளிரால் தவிப்பதைப் பார்த்துக் காய்ந்த சருகுகளைத் தேடிக்கொண்டு வந்து குவித்துத் தணலையும் கொண்டுவந்து தீ மூட்டி நன்றாய் எரிய விடுகின்றது. அவன் குளிர் நீங்கியது. பசியைத் தாங்க முடியவில்லை. வேறு உணவு எதுவும் அளிக்க முடியவில்லை. தானே அக்நியை மும்முறை வலம் வந்து அவனுக்கு உணவுக்காகத் தீயில் விழுந்தது. பாபியான வேடனும் இதைக் கண்டு வியப்பும் வேதனையும் அடைந்தான். இவ்வாறு புறா எதிரியான வேடனைக் காத்தது.

4 வாநரம் சரணமடைந்தவனைக் காத்தல்

ஒரு பெரிய மரத்தில் ஒரு குரங்கு அமர்ந்திருந்தது. புலியொன்று ஒரு வேடனைத் துரத்தி வந்தது. வேடன் புலிக்கு மரத்தில் ஏறவியலாதென்ற எண்ணத்தால் இந்தக் குரங்கு இருந்த மரத்துக்கே வந்து ஏறினான். ஏறிப் பார்க்கும் போது பெரிய குரங்கு இருத்தலைக் கண்டு நடுங்கினான். குரங்கு அஞ்சாதே என்று அபயம் அளித்தது. புலி குரங்கை நோக்கி அந்த வேடனைக் கீழே தள்ளும்படிக் கேட்டது. தான் இருந்த இடத்துக்கு வந்ததாலேயே அவனைச் சரணமடைந்தவனாக நினைத்துப் புலியின் சொல்லை ஏற்காது குரங்கு வேடனைக் காப்பாற்றி விட்டது. புலியோ மரத்தடியை விட்டு அகலாமல் கிடக்கின்றது. பொறுத்திருந்தால் இருவரையுமோ, ஒருவரையோ உணவாகப் பெறும் வாய்ப்புக் கிட்டும் என்று ஆசை புலிக்கு பின் வானரம் சற்றே உறங்கியது. அப்பொழுது புலி வேடனை நோக்கி 'உன்னை விட்டு விடுகின்றேன், வானரத்தைத் தள்ளி விடுகின்றாயா?' என்று

கேட்டது. பாபத்திலேயே கருத்தூன்றிய வேடன் தன்னைப் புலியிடமிருந்து காத்த குரங்கைத் தள்ளி விட்டான். புலி வானரத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. ஆயினும் இந்த விலங்கின் மாம்ஸத்தைக் காட்டிலும் மானிடனுடைய மாம்ஸத்தை உண்பதில் சுவை கண்டது புலி. அப்பொழுது புலி வானரத்திடம் 'என்னிடமிருந்து தன்னைக் காத்த உன்னிடம் நன்றியின்றி உன்னைத் தள்ளி விட்ட வேடனைத் தள்ளுவதாயின் உன்னை விட்டு விடுகின்றேன்' என்றது. உயிர் போகும் ஆபத்தான நிலையில் பொய் சொல்வது குற்றமாகாது என்னும் தர்மத்தை அறிந்த வானரம் தன் மனமின்றியே அவ்வாறே செய்வதாகக் கூறிப் புலியிடம் விடுதலை பெற்றது. உடனே மரத்தில் ஏறிவிட்டது. அப்பொழுது வேடன் மனநிலை எப்படி இருக்கும்? அவனோ நேர்ப் பகைவனாகி விட்டான். அவனுக்கு வேறு கதியில்லாமல் தான் இருந்த மரத்துக்கு வந்ததே போதுமே அவனைச் சரணாகதனாக ஏற்றுக்கொள்ள இப்படி எண்ணிப் பின்பும் அவனுக்குத் தீங்கு வராமல் வானரம் காத்துவிட்டது.

5 ரகு சரணமடைந்தவனைக் காத்தல்

ரகு மஹாராஜன் ஓர் அரக்கனிடம் அகப்பட்டு ஆபத்தில் இருந்த ஓர் அந்தணனைக் காத்த வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரலாறு இதிஹாஸோத்தமம் என்னும் கிரந்தத்தில் இருப்பதாய்த் தெரிகின்றது. அந்நூலைத் தேடிக்கொண்டிருக்கின்றேன்.

6 தேவஸ்த்ரீகள் சரணமடைந்தவனைக் காத்தல்

தைத்திரீ. ஸம். *(6-5-29,30)* : தேவர்கள் த்வஷ்டாவைக் கொல்ல விரும்பினர். இதையறிந்த த்வஷ்டா தேவர்களின் மனைவியரைச் சரணமடைந்தான். அப்பெண்கள் அவனைக் கொல்லவிடாமல் காத்துவிட்டனர். ஆதலின் கொல்லப்பட வேண்டியவனேயாகிலும் சரணமடைந்து விட்டவனைப் பிறர் கொல்லும்படி விடக்கூடாது.

7 நாடீஜங்கன் அந்தணனைக் காத்தல்

பார. *(சாந்தி-அத். 167-172)* : வடநாட்டில் ஏழ்மையால் வாடிய கௌதமன் என்னும் அந்தணன் இழிகுலப் பெண்ணை மணந்து அடாத செயல் புரிந்து வந்தான். அவன் பொருள் ஈட்டுதற்காகப் பல இடங்கள் சென்று ஒரு வனத்தில் ஓர் ஆலமரத்தடியில் தங்கினான்.

Scanned with CamScanner

அங்கு நாடீஜங்கன் என்ற ஒரு கொக்கு தெய்வீகப் பிறவியில் தோன்றி மிகுதியான பொன்னணிகளை அணிந்து வாழ்ந்தது. கொக்கு கௌதமனைக் கண்டு அவனுக்கு உணவளித்து உபசரித்தது. அவன் வந்த காரணத்தைக் கேட்டு வறுமையை உணர்ந்து அவனை மநுவ்ரஜம் என்ற ஊரில் மஹாதர்மிஷ்டனாய்த் தனக்குத் தோழனாயுள்ள விருபாக்ஷனென்னும் அரக்கனிடம் செல்லும்படி கூறியது. கௌதமனும் அங்கே சென்றான். விருபாக்ஷனும் தன் நண்பனான கொக்கினால் அனுப்பப்பட்டதை உணர்ந்து பெரும் பொற்குவியலை அளித்தான். கௌதமன் அதைச் சுமந்து கொண்டு நாடீஜங்கனிடமே வந்து சேர்ந்தான். கொக்கும் மகிழ்வுடன் வரவேற்று நன்கு உபசரித்தது. பாவியான கௌதமன் நள்ளிரவில் சிந்திக்கின்றான். 'பொற்குவியலுடன் நெடுந்தூரம் செல்ல வேண்டுமே! நடுவழியில் உணவு கிடைப்பது அரிதன்றோ! மாம்சம் நிறைந்து கொழுத்த இந்தக் கொக்கைக் கொன்று கையில் எடுத்தச் சென்றால் உணவுக்குப் பஞ்சம் இல்லாது போகுமே!' என்று. மஹாபாபியான கௌதமன் அருகில் படுத்திருந்த கொக்கை எரியும் கொள்ளிக்கட்டையால் சுட்டுக்கொன்று சிறகையும் உரோமங்களையும் கழித்து மாம்சச் சுமையையும் பொற் குவியலையும் சுமந்து புறப்பட்டான். இரண்டு நாள் நண்பனாகிய கொக்கைக் காணாத விருபாக்ஷன் தன் ஆட்களை அனுப்பி விசாரித்ததில் அவர்கள் வாயிலாக கொக்கின் கதியை உணர்ந்து கொண்டான். அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த கௌதமனைக் கொக்கின் உடற்பகுதியுடன் அவன் முன் கொண்டு வந்து நிறுத்தினர். அரக்கனும் அவன் குடும்பத்தினரும் மிகப் புலம்பினர். கௌதமனைக் கொல்லுமாறு கட்டளையிட்டான் . விருபாக்ஷன். அவனைக் கொன்றாலும் மனித மாம்ஸம் உண்ணப் பழகிய அரக்க வகுப்பினரான ஆட்கள் நன்றி கெட்ட மஹா பாபியான அவன் மாம்ஸத்தை உண்ண மறுத்துவிட்டனர். அவனைக் கொன்று உடலை எரித்தனர். இந்திரன் இதனை அறிந்து கொக்கின் உடலின் மீது அமுதத்தைப் பொழிந்தான். உடனே கொக்கு உயிர் பிழைத்தெழுந்தது. உடனே நண்பன் கௌதமனைப் பற்றிக் கேட்டது. அவன் கொல்லப்பட்டதைக் கேட்டுக் கொக்கு மிக வருந்தியது. இதைக் கண்டு கௌதமனையும் இந்திரன் பிழைக்கச் செய்தான். தன் இடத்துக்கு வந்தடைந்ததையே கொண்டு நாடீஜங்கன் என்னும் கொக்கு தன்னைக் கொன்ற கௌதமனையும் காத்தது.

8 *ப்ருஹஸ்பதி சரணமடைந்தவனைக் காத்தல்*

பார (உத்யோக-அத் 11-17) : விருத்ரனைக் கொன்றதால் இந்திரன் பிரமஹத்தி வந்து தன் பதவியை இழந்து ஒளிந்தான். தேவர்கள் நஹுஷராஜனை இந்திரனாக்கினர். இந்திராணி இந்திரன் பிரிவால் மனம் ஒடிந்து நின்றாள். இந்திரபதவிக்கு வந்த நஹுஷன் இந்திராணியை மனைவியாக அடைய முற்பட்டான். அவள் தேவ குருவான பிருஹஸ்பதியைச் சரணமடைந்தாள். அவளை அழைத்து வருமாறு நஹுஷன் தேவர்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் பிருஹஸ்பதியிடம் சென்று இந்திராணியை நஹுஷனிடம் அனுப்புமாறு கேட்டனர். இந்திராணி அவனிடம் செல்ல மறுத்தாள். பிருஹஸ்பதி ஒளிந்த இந்திரனை அழைத்து அசுவமேதயாகம் செய்யும்படி செய்து பிரமஹத்தி நீங்கச் செய்து இந்திரப்பதவி பெறுவித்து இந்திராணியுடன் கூடி வாழச் செய்தார். இவ்வாறு பிருஹஸ்பதி தம்மைச் சரணமடைந்த இந்திராணியைக் காத்தார்.

9 *சிபி சக்கரவர்த்தி புறாவைக் காத்தல்*

பார (ஆரண்ய - அத். 41, 42) : தர்மிஷ்டனான சிபி சக்கரவர்த்தியின் பண்பைப் பரீக்ஷிக்க விரும்பி இந்திரன் கழுகு வடிவும் அக்நி புறா வடிவும் கொண்டனர். கழுகு புறாவைத் தன் உணவுக்காகத் துரத்தி வரும் சூழ்நிலையில் புறா சிபியிடம் வந்து சரணம் அடைந்தது. கழுகு தன் உணவுக்காகப் புறாவைத் தன்னிடம் அளிக்கும்படி சிபியை வேண்டியது. சரணமடைந்த புறாவ்வக் காக்க உறுதி கொண்ட சிபி வேறு உணவு அளிப்பதாய்க் கூறினான். கழுகு துணிந்து புறாவின் எடைக்கு அவன் உடலின் பகுதியைக் கேட்டது. சிபி மகிழ்ச்சியுடன் தன் சரீரத்தின் மாம்ஸங்களை அறுத்துப் புறாவுடன் எடை போட்டான். எவ்வளவு வைத்தாலும் புறாவின் எடையே மிகுத்ததால் தானே ஏறியமர்ந்தான். இந்த அற்புத அருஞ்செயலைக் கண்டு தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இந்திரனும் அக்நியும் சுயவுருக்கொண்டு வேறு யாரும் செய்ய முடியாத சிபியின் செயலைப் போற்றி வாழ்த்திச் சென்றனர். இவ்வாறு சரணம் அடைந்த புறாவைக் காத்த சிபியை உலகம் புகழ்ந்தது.

Scanned with CamScanner

10 கண்ணன் சரணமடைந்த துரௌபதியைக் காத்தல்

பார (ஸபா - அத் 61) : கௌரவர்கள் சகுனியின் வாயிலாகப் பொய்ச் சூதில் பாண்டவர்களை வெற்றி கொண்டு அவர்களையும் அவர்களின் உடைமைகளையும் தங்களுடையனவாக்கிக் கொண்டு சபையில் துரௌபதியைக் கொண்டுவந்து துச்சாஸநன் அவள் ஆடையை இழுக்கும் போது துரௌபதி கண்ணனைக் கூவி அழைத்தாள். முன் வஸிஷ்டர் பெரிய ஆபத்து வரும் போது எம்பெருமானைத் தியானித்தால் கஷ்டம் நீங்குமென்று உபதேசித்ததை நினைத்துக் கண்ணனைச் சரணமடைந்தாள். கண்ணனை ஸர்வேசுவரனாக வைத்தே 'திருவாழி திருச்சங்குகளை ஏந்தி நிற்கும் தாமரைக்கண்ணா உன் திருவடிகளில் சரணமடைந்த என்னைக் காத்தருள வேண்டும். இந்த ஆபத்தான நிலையில் அகப்பட்ட என்னைப் புறக்கணிக்கலாமா?' என்று கூறிச் சரணம் அடைந்தபோது துச்சாஸனன் அவள் உடையை இழுக்க இழுக்க மேன்மேலும் புதிய புதிய ஆடைகள் சுரந்து கொண்டேயிருந்தன. துரௌபதி விஷயத்தில் கௌரவர்கள் செய்த குற்றம் அவர்கள் - அடியோடு அழியுமாறு வழி வகுத்தது. இங்ஙனம் சரணம் அடைந்துள்ள துரௌபதியைக் காத்தருளினான் கண்ணபிரான்.

11 எம்பெருமான் ஸுமுகனைத் காத்தல்

பார (உத்யோக-அத். 104-105) : இந்திரனுக்குத் தேர்ப்பாகன் மாதலி. தன் புதல்வி குணகேசிக்கு ஏற்ற வரனைத் தேடினான். நாரதரின் உதவியோடு பாதாளம் சென்று ஆர்யகன் பேரனான ஸுமுகன் என்னும் நாககுமாரனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்க விரும்பினான். அவன் தந்தையைக் கருடன் கொன்றுவிட்டான். ஸுமுகனையும் ஒரு மாதத்தில் கொல்வதாய்க் கருடன் கூறியுள்ளான். இவ்வுண்மையை ஆர்யகன் மாதலிக்குத் தெரிவித்தான். மாதலி ஸுமுகனையும் அழைத்துக் கொண்டு இந்திரனிடம் சென்று ஸுமுகனுக்குத் தீங்கு வராது செய்யும்படி வேண்டினான். அங்கு இருந்த உபேந்திரனான விஷ்ணு ஸுமுகனுக்கு அமுதத்தைத் தருமாறு கூறியும் இந்திரன் கருடனுக்கு அஞ்சி அமுதம் கொடுக்காமல் நீண்ட ஆயுளை மட்டும் அளித்தான். இதனால் கோபம் கொண்ட கருடன் ஸுமுகனுக்கு நலிவு செய்யப் புக, ஸுமுகன் பாம்பு வடிவங்கொண்டு எம்பெருமான் பள்ளியில் சென்று சரணம் புகுந்தான். அவனிடம் சினம் கொண்ட கருடனது.

தோளில் ஸுமுகனை எம்பெருமான் எடுத்துப் போட்டு அவனைக் காக்குமாறு கட்டளை இட்டான். அது முதல் கருடனும் ஸுமுகனும் நட்புடன் வாழ்ந்தார்கள். சரணமடைந்ததன் பயனாக ஸுமுகன் நல்வாழ்வு பெற்றான்.

12 எம்பெருமான் கஜேந்திரனைக் காத்தல்

பாகவதம் (ஸ்கந்தம் 8- அத். 2-4): இந்த்ரத்யும்நன் என்ற அரசன் எம்பெருமானிடம் எல்லையற்ற பக்தி கொண்டவன். அவன் பகவானைப் பூஜித்துக் கொண்டிருக்கையில் அங்கு வந்த அகஸ்திய முனிவரைக் கவனித்து உபசரிக்காததால் கோபம் கொண்ட முனிவர் யானையாக வடிவு கொள்ளும்படி சபித்து விட்டார். அவன் யானையுருவைப் பெற்றுவிட்டான். அந்த யானை பகவத் பக்தி குன்றாமல் தினந்தோறும் ஆயிரம் மலர்களால் பகவானைப் பூஜித்து வந்தது. ஒரு நாள் ஒரு பொய்கையில் இறங்கி மலர்களைப் பறிக்கும் போது முதலை வந்து கவ்விக் கொண்டது. பறித்த மலர்களை அவனுக்கு ஸமர்ப்பிக்க முடியாமல் வருந்திய யானை 'ஆதி மூலமே' என்று எம்பெருமானை அழைத்துச் சரணமடைந்தது. அக்குரலைக் கேட்டு எம்பெருமான் கருடன் மீது அமர்ந்து அவனையும் இழுத்துக் கொண்டு விரைவில் ஒடி மடுக்கரைக்கு வந்து தன் திருவாழியால் முதலையைத் துணித்து யானையைக் காத்தருளினான். இவ்வாறு சரணமடைந்த கஜேந்தரனைக் காத்தான் எம்பெருமான்.

13 சரணமடைந்த க்ஷத்ரபந்துவை முனிவர்காத்தல்

விஷ்ணு தர்மம்: க்ஷத்திரிய குலத்தில் பிறந்து பாபச்செயல்களையே புரிந்து கொண்டு க்ஷத்திரபந்து என்பவன் வனத்தில் திரிந்து ஜீவ ஹிம்ஸையையே செய்து வந்தான். ஒருநாள் கொடிய வெயிலில் தவித்து வழிதவறி ஒரு முனிவர் அங்கு வந்தார். அவரைக் கண்டு க்ஷத்திரபந்து மனமிரங்கி அவர் வழிதப்பி வந்ததைக் கூறி அவருக்கு உதவி புரிய முன்வந்தான். அவர் மிகுத்த தாஹத்தால் கஷ்டமடைந்து நீர் பருக ஒரு பொய்கையில் இறங்கும் போது அதில் விழுந்து விட்டார். அருகிருந்த க்ஷத்திரபந்து அவரைக் கரையேற்றி அவர் பசி தீரத் தாமரைக் கிழங்குகளை அளித்து அவர் பாதங்களைப் பிடித்து உபசாரம் செய்து பசியையும் களைப்பையும் தீர்த்தான். அதுவே அவன் வாழ்நாளில் செய்த நல்ல செயல். அவர்

Scanned with CamScanner

க்ஷத்திரபந்துவின் வரலாற்றை விசாரித்ததில் தன் இழி செயல்களை எல்லாம் விரித்துரைத்துத் தன் தாழ்வை விளக்கினான். அவனுக்கு முனிவர் நல்லுரை கூறித் திருத்த முயன்றும் அவன் தீய வழியிலேயே பழகி விட்டதைக் கூறி அதினின்று திருந்த மனம் இடம் தராதேயென்று சொல்லி அவர் பாதத்தில் விழுந்தான். அவர் அவனுக்குக் கோவிந்தன் என்ற திருநாமத்தையாவது சொல்லிக் கொண்டிருக்கும்படி கூறியதற்கு உடன்பட்டு அங்ஙனமே செய்தான். அதனால் அவன் திருந்தி மோக்ஷத்துக்கு உபாயத்தைச் செய்து எம்பெருமான் திருவடிகளை அடைந்து நல்வாழ்வு பெற்றான். முனிவரைச் சரணமடைந்ததன் விளைவு அவனுக்கு நல்வாழ்வு.

14 வஸிஷ்டர் தேவர்களையும் இந்திரனையும் காத்தல்

பார. (ஆநுசா - அத். 238) : ஒருகால் தேவர்கள் கங்கைக் கரைக்குச் சென்று வேள்வி செய்ய முற்பட்டனர். அசுரர்கள் தேவர்களுக்குப் பெருந்தீங்கு விளைவித்து வேள்விக்கு இடையூறு செய்தனர். தேவர்கள் தம் தலைவனான இந்திரனைச் சரணமடைந்தனர். இந்திரன் வஸிஷ்ட முனிவரைச் சரணமடைந்தான். வஸிஷ்டர் தம் தவ வலிமையால் அரக்கர்களை எரித்து வேள்வியைக் காத்தார். இவ்வாறு முனிவர் சரணமடைந்த தேவர்களையும் இந்திரனையும் காப்பாற்றினார்.

15 கண்ணன் முசுகுந்தனைக் காத்தல்

ஸ்ரீ விஷ்ணுபு. (5-23, 24) : முசுகுந்தன் என்னும் ஓர் அரசன் கண்ணன் பெருமையை அறிந்து அவனிடம் அளவற்ற பக்தி கொண்டான். அவன் ஒருகால் தேவாஸுரயுத்தத்தில் தேவர்களுக்குப் பேருதவி புரிந்தான். அதனால் களைப்படைந்த அவன் சில காலம் உறக்கம் கொண்டு ஓய்வு எடுக்க விரும்பினான். தேவர்கள் ஒரு குகையைக் காட்டி அங்கே உறங்கும்போது அவனை எழுப்புமவன் உடனே இறப்பானென்று கூறினார்கள். அந்தக் குகையில் அவன் படுத்து உறங்கும்போது கண்ணனைத் துரத்தி வந்த காலயவனன் என்ற துஷ்டன் உறங்கும் முசுகுந்தனையே கண்ணனாக நினைத்துத் தன் காலால் உதைத்தான். விழித்த முசுகுந்தன் கண்ணில் பட்டுக் காலயவனன் இறந்தான். பின் அங்கு எழுந்தருளிய கண்ணனைக் கண்ட முசுகுந்தன் அவனை ஸர்வேசுவரன் என்று உணர்ந்து

பரமபக்தியுடன் தன் இழி நிலையை விண்ணப்பித்துத் தனக்கு மோக்ஷம் தரும்படி வேண்டி அவன் திருவடிகளில் சரணம் அடைந்தான். கண்ணன் மகிழ்ந்து முதலில் அவன் முன் செய்த புண்ணியத்தின் பலனாகச் சிறந்த லோகங்களில் உயர் போகங் களை அநுபவித்துப் பின் மோக்ஷத்தைப் பெறும்படி நியமித்தான். இப்படி முசுகுந்தன் சரணாகதியால் பலன் பெற்றான்.

16 ரகுமஹாராஜன் அரக்கனிடமிருந்து அந்தணனைக் காத்தல் இதிஹாஸோத்தமம் (அத். 12) :

ரகு தவம் புரிந்து கொண்டிருந்தான். ஓர் அந்தணன் தன்னைத் துரத்தி வரும் அரக்கனுக்கு அஞ்சி வந்து ரகுவைச் சரணம் அடைந்தான். ரகு அவனுக்கு அபயம் அளித்தான். பயங்கரனான அவ்வரக்கன் ரகுவிடம் வந்து பசியால் வருந்திய தனக்குத் தெய்வம் கொடுத்த உணவான அந்தணனைத் தன்னிடம் அளிக்கும்படி கேட்டான். ரகு அரக்கனிடம் தன்னிடம் சரணம் அடைந்த அந்தணனைக் கைவிட்டால் பிரமஹத்தி தோஷம் வருமென்றும் தன்னால் அபயமளிக்கப் பெற்ற அவனைக் கொடுப்பதால் தனக்கு ரௌரவாதி நரகம் வருமென்றும் வேறு உணவளிப்பதாயம் கூறி அந்தணனைக் கொடுக்க மறுக்கின்றான். அதற்கு அரக்கன் ரகுவிடம் அந்தணனைக் கைவிடுவதில் உள்ள பாபத்தை மட்டும் பொருட்படுத்தித் தன்னைப் பட்டினி கிடக்கச் செய்து உயிரைப் போக்குவதால் வரும் பாபத்தைப் புறக்கணிப்பது நீதியன்றென்றும், ஒருவனுக்குத் தீங்கு செய்து மற்றவனைக் காப்பது தருமமன்றென்றும், மனிதனுக்கு அன்னமும் பசுக்களுக்குப் புல்லும் தேவருக்கு ஹவிஸ்ஸும், அரக்கருக்கு மாம்ஸமும் உணவுப் பொருளாகப் படைத்தவன் விதித்த வரையறையைக் குலைத்தல் நல்லதன்றென்றும் வழக்குக் கூறி வாதாடுகின்றான். ரகுவோ அகஸ்திய முனிவர் வாதாபியை விழுங்கியது. கடல் நீரை முற்றும் பருகியது. விந்திய மலையை அடக்கியது முதலிய பெருமைகளைக் கூறும் வாயிலாக அந்தண வகுப்புக்கு உள்ள பெருமையைக் கூறித் தன் கண்முன் அந்தணனைக் காட்டிக் கொடுப்பது தனக்கு மஹாபாபமென்றும், அவனை உண்ணும் போது அரக்கன் நெஞ்சில் தீயாகச் சுடும் என்றும் கூறித் தருமத்தை விளக்குகின்றான். அரக்கனோ தான்

Scanned with CamScanner

எத்தனையோ அந்தணர்களை விழுங்கியிருப்பதாகவும், தன்னை உணவாக விழுங்குபவன் ஒருவனும் இல்லையென்றும், உணவுக்காகப் பிராணிகளைக் கொல்வதில் குற்றமில்லையென்ற கொள்கையில்தானே உலகில் பிராணிவதம் நடக்கிறதென்றும், பாபம் தனக்கு வருவதற்கு அவன் கவலைப்பட வேண்டியதில்லை என்றும், அவன் மறுத்தால் அவன் கண்முன்னே தான் உயிரை விடுவதாகவும் கூறுகின்றான்.

ரகுவுக்குப் பெரிய சங்கடம். இருவருள் யாரை மடிய வைப்பது? ஆபத்து வரும்போது எம்பெருமானைத் தியானிக்குமாறு முன் வஸிஷ்டர் கூறியது நினைவுக்கு வந்து அவனைத் தியானிக்கின்றான். உடனே அரக்கன் அந்த வடிவை விட்டு அரசவுருக்கொண்டு ரகுவின் எதிரில் நின்று பேசுகின்றான் 'அரசே! சதத்யும்நன் என்னும் அரசனான யான் முன் வஸிஷ்ட சாபத்தால் அரக்கவுருக் கொண்டு தடுமாறினேன். உன்னோடு ஸம்பாஷிக்க நேரும்போது பகவந்நாமத்தை உன் வாயினால் கேட்டுச் சுயவுருப் பெறுவேனென்று சாபம் தீர வழிகாட்டினார் வஸிஷ்டர். அதனால் இப்பேறு பெற்றேன்' என்று கூறி நன்றியறிவுடன் தன் நாடு திரும்பினான். அந்தணனும் அச்சம் நீங்கி ரகுவைப் புகழ்ந்து தனது இடம் சென்றான். ரகு தன் தவத்தைத் தொடங்கினான். பின் ரகுவின் எதிரே பிரமன் வந்து அந்தணனுக்கு அபயமளித்ததைப் புகழ்ந்து ரகுவையும் தன்னுடன் பிரமலோகத்துக்கு அழைத்துச் சென்றான்.

17 திருநாராயணாஸ்த்ர வரலாறு

அருச்சுனன் பகதத்தனோடு போர்புரிந்தான். பகதத்தன் அருச்சுனன் மீது நாராயணாஸ்த்ரத்தை எய்ய முற்பட்டான். அருச்சுனனால் அதை எதிர்க்க முடியாமையை உணர்ந்தான் கண்ணபிரான். முதலிலேயே தன்னைச் சரணமடைந்த அருச்சுனனைக் காக்க விரும்பிக் கண்ணன் அந்த அஸ்த்ரத்தைத் தன் மார்பிலே ஏற்று அவனது ஆபத்தைத் தீர்த்தான். அடியார்களின் கஷ்டத்தைப் போக்க எம்பெருமான் தன்னையே கொடுத்துக் காத்தருள்வான்.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

இந்த ரஹஸ்யங்களில் எடுத்துள்ள ஸம்ஸ்க்ருத ப்ரமாணங்களின் அகராதி

अकारार्थायैव	18,42	अविभागेन	38	आपदर्थं	339
अकारार्थो	20	असाध्यः कु	280	आपो वै नर	32
अकिञ्चनो	74	असंशयं महा	448	आयासः स्मर	455
अक्षरं ब्रह्म	250	अस्तु ते	54, 264	आर्तो वा यदि	305
अग्रतः प्रययौ	20	अस्माभिस्तु	332,336	आविस्स्युर्मम	38
अङ्गुल्यग्रेण	292	अस्या मम	16, 82	इतिहास	246, 438
अज्ञातं नास्ति	282,292	अस्वयं चा	313	इयं सीता	263
अञ्जलिः	304, 504, 508	अहमस्म्यप	74	ईदृशं व्यस	307
अथ मह्यं न	24	अहं ते हृद	250	ईशन्नपि महा	456
अथ रामः	285	अहं त्वा सर्व	107	ईशाना	444
अदृंहत्	442	अहं शिष्या	442	ईषत् त्वत्क	56
अधिष्ठानं	106	अहं हत्वा	276	उपक्रमोप	268
अनन्यसाध्ये	102	अहं स्मरामि	466	उपायं वृणु	98
अनालोचित	338	अज्ञातं	282	उभयाधिष्ठा	82
अनित्यमसुखं	94	आकारिणस्तु	58	ऋषेः कण्वस्य	301
अनुजो राव	337	आख्याहिमम	340,342	एकतः क्रत	315
अनेनैव तु	74	आगच्छ विष्णो	252	एकान्ती व्यप	514
अन्ये कृत	502	आजगाम मुहू	272	एकोऽष्टाक्षर	6
अन्तरेणा	508	आत्मदास्यं	18	एतदुचारण	78
अपायसंप्लवे	112, 320	आत्मप्राणैः	306	एतद्व्रतं मम	114
अब्रवीच्च तदा	335	आत्मात्मीय	74	एतस्मिन्नन्त	253
अभयं सर्व	278	आत्माऽपि चा	24	एते वै निर	111
अमृतं साध	60	आत्मा स तु	18	अलमेषा	265
अराक्षसमिमं	263	आनयैनं	324	एष नारायण	90

ऐश्वर्यमक्ष 56
ऐहलौकिक 6
कथञ्चिदह 280
कथंचिदुप 78
कमलनयन 66
करिष्यामि 314
कर्तव्यं सकृ 70
कर्ता शास्त्रा 105
कर्ता सर्वस्य 249
कश्चित् क्षुद्र 298
काष्ठपाषाण 460,466,469
किंकरोऽस्मीति 272
किं तत्र भहुभि 6
किं नु तस्य च 48
किमत्र चित्रं 324
कुयोनिष्वपि 48
कुरुष्व माम 85, 254
कृतागस: 444
कृतापराध 260
कृष्णं धर्म 69
को नाम स भवेत् 290
क्षिप्रं देव 504
खात् पपात 333
गच्छध्वमेनं 28, 118
गतिरालम्बनं 34
गुणायत्तं 282
आद्यं तु त्र्य 10
चतुर्विधा भज 318
चापमानय 262
चिन्तयामास 248
चेतनाचेतनं 6
जगत् सर्वं 250
जह्नुर्नाराय 32
जृम्भितं तद्ध 248
ज्ञानी त्वात्मै 26
तच्चितं यत्त 336
ततस्तु सुग्रीव 330
ततस्तं प्रिय 458
ततः सा ही 265
ततो ह्यस्य 108
तत्रोत्तरायण 10
तथा प्रलीन 464
तदलं क्रूर 264
तदुपर्यपि 452
तदेकोपायता 70
तदेवमागत 311
तया सहासी 82
तव भरोऽह 70
तवामृतस्य 112, 501
तस्मात् क्षि 326
तस्य तद्वच 340
तावदार्ति 80,318,446,508
तुल्यशीलवयो 56
तेन मैत्री भ 264
एतौ द्वौ वि 502
ते वयं भवते 256
तेषां सतत 32
त्यक्त्वा पुत्रांश्च 274,287
त्रयाणां क्षत्ति 46
त्रयो वेदा: ष 5
त्रीन् लोकान् 94,258
त्वत्पादकमला 66
त्वदङ्घ्रिमुद्दिश्य 502
त्वद्ज्ञानशक्ति 292
त्वमेवोपाय 70
त्वं मे 14
त्वं त्रयाणां हि 250
त्वं हि सत्यव्रत: 282
त्वामामनन्ति 256
दत्तमस्याभयं 322,331,338
दशेन्द्रियान 246
दास इति प्रपन्न 28
दासत्वाद्वा 20
दासभूत: शर 16
दासभूताः स्वत: 18
दासोऽहं वासु 20
दिशत्यासन 336
दीनो दृप्यतु 316
दुर्लभो मानु 452
दैवी संपद्वि 90
द्विः शरं नाभि 341
धर्म: श्रुतो वा 314
चञ्चलं हि 448
धर्मिष्ठस्त्वं यथा 270
धर्मिष्ठं च यश 316
न गाथा गाथि 314
न च संकुचित: 262

न चेत् शरण 288
न जातु हीयते 336
न नमेयं 332
ननु प्रपन्न: 78
नम इत्येव यो 22
नम इत्येव वा 22
न मन्त्रोऽष्टा 6
नमश्चक्रुः ज 28
नमश्शब्दः प्र 28
नमो नारायणे 10
नयत्यखिल 32
नरसंबन्धि 32
नरस्य बुद्धि 92
नरात् जातानि 32
न वयं तत्कु 276
नष्टस्मृतिरपि 464
न साध्यं साध 102
न स्मरत्यप 284
न स्वरः प्रण 6
नातो भूयस्त 316
नानयोर्विद्य 82
नारस्त्विति सर्व 34
नारायण न जा 267
तेन वञ्चयते 456
नित्यकिङ्करो 86
नित्यानपायि 58
निदानं सर्व 319
निवहा नराणां 34
निवेदयत मां 274,330
नेहाभिक्रम 510
न्यास: पञ्चाङ्ग 74
पद्मे दिव्येऽर्क 250
परमापद्गत 270
परात्तु तत् श्रुतेः 105
परित्यक्ता मया 274,287,338
परित्राणाय 244
पशुर्मनुष्य: 335
पाणावामलकं 246
पापानां वा शुभा 266
पापीयसोऽपि शर 287
पारमार्थिकी 80
पितरं मातरं 340
पिताऽसि लोक 444
पितेव त्वत्प्रेयान् 56
पिशाचान् दान 292
पुण्यं वेदैश्च 246
पूयन्ते हय 310
प्रज्ञाप्रासाद 45
प्रणादश्च महा272,274,326
प्रदीपवदावे 462
प्रपत्तिकाला 270
धर्मस्य तत्त्वं 314
प्रपत्तिवाचैव 78
प्रपत्ति तां प्र 74
प्रपत्तेः क्वचि 94, 450
प्रभवो भगव 26
प्रसादयस्व त्वं 264, 508
प्रसादये त्वा 508
प्रहर्षयिष्यामि 40
प्राणार्थिनमिमं 310
प्राणिनं वध्य 310
प्राणैरपि त्वया 306
प्रायश्चित्तेन शु 310
बद्धाञ्जलिपुटं 304
बद्धाञ्जलिपुटा 506
बहिश्चरश्च 290
बहुद्वारस्य 502
ब्रह्माणं शिति 502
बालघ्नांश्च 312
ब्रह्मा स्वयंभू 258
भक्त्या परम 92,512
भगवतीं श्रियं 52
भव शरणमि 78
भवांस्तु सह 82,254,446
भीताभयप्र 314
मकारं जीवभू 18
मच्छन्दादेव 244
मत्कृते सर्व 447
मदीयमूर्धनि 84
मदीययैव 464
नारो नराणां 34
मन:प्रीति 337
मनीषी वैदि 112
मनुष्यदेहिनां 456
मन्त्राणां पर 8
मम चाप्यन्त 326
मम नाथ य 20

Scanned with CamScanner

ममापि तु विव	286
मर्यादानां च	300
महता पुण्य	450
महाजनो येन	314
महान् धर्मो	316
मातर्मैथिलि	266
मानुष्यं प्राप्य	452
मामेकमेव	98
मामेकं शरणं	452
मामेव ये प्रप	118
मामेवैष्यसि	116
मां ध्याति पुरु	466
मा शुचः संपदं	90
मित्रद्रोहे च	339
मित्रभावेन	278,286,292
मित्रमौपयिकं	264
मुक्तानां परमा	468
मोक्षयिष्यामि	64
य इदं शृणु	294
यच्च शोकाभि	261
यच्छ्रेयः स्या	90,118
प्रपत्तिर्विश्वासः	72
यथेष्टविनि	26
यदि किञ्चिद	260
यदि वा रावणः	288
यद्येन काम	80,100
ययोश्चित्ते	327
यस्य स्यात्	302
यं यं वाऽपि	464
यः सकृत्	76
यामालम्ब्य	54
यावत्प्रजा	278
युष्मत्तो भय	268
यूयं यूयं व	334
येन केनापि	78
यो वेत्ति युग	464
यो हि कश्चित्	310
रक्षतु त्वां	42
रहस्यं च प्रकार	246
राक्षसानां वधे	276
राघवाय महा	278
राघवेणाभये	331
राघवं शरणं	272,287,296
राज्यकाङ्क्षी च	338
राज्यं प्रार्थय	274
रामस्य तु वचः	324
रामानुजं लक्ष्मण	30
रामो विग्रहवान्	69,300,328
रावणो नाम	272
रिपूणामपि	262
मन्यना भव	90
लोभात् द्वेषात्	310
वध्यतामेष	296
वरद सकल	284,469
वाचः परं	54
विचित्रा देह	452
विदितः स हि	286
विदुषोऽतिक्रमे	306
विनष्टः पश्य	312
विभीषणस्तु	328,332
विभीषणो वा सु	320
विश्वासपूर्वकं-प्रा	72
विश्वासपू-भग	72
विश्वासो द्वयार्थः	72
विषये ते महा	268
विष्णोः श्रीरन	58
वैदिकं तान्त्रिकं	6
शत्रोः प्रख्यात	282
शरणमुपग	508
शरणं च प्रप	318
शरणं त्वां प्र	48,92,118
शरणं प्रति	28
शरणागतं	311
शरणागतबाल	312
शरणागतां	309
शरण्यं शरणं	250
शरीरपातस	464
शरीरात्म	44
शरीरारोग्य	276
शान्तानन्त	58
शारीरं केवलं	514
शास्त्रेषु निष्कृ	310
शिष्यस्तेऽहं	118,442
शीतीभूतो निरा	342

शोचन्निव रुदन्निव	308
शृणाति निखि	52
शृणु चावहितः	295
शृणु राजन् कथा	294
श्रयन्ती श्रीयमा	52
श्रीणाति च गुणै	54
श्रीणाति पाके	54
श्रीरसि यतः	52
श्रीरित्येव च	52
श्रीवत्सवक्षा	56
श्रुतिः स्मृतिः स	316
श्रूयते किल गो	270
श्रूयते हि कपो	294
षष्टिवर्षस	300
स एष धर्मः	112
सकृज्जप्तेन	78
संकृत् कृतः	76,504
सकृत् प्रार्थना	78
सकृदष्टाक्षरं	6
सकृदुच्चरितं	78,510
सकृदेव प्रपन्नस्य	74
लक्ष्म्या सह	16,54
सकृ-प्रपन्नाय	76,317,338,454
सकृदेव हि शा	76
सखा दासो	322,329
सख्यमात्म	272
सचापि भगवान्	302
स चेत् भयाद्वा	307
स तं निपतितं	258
सतां हि संदे	326
स तु मेधाविनौ	248
स तु रामस्य	334
सन्धाम्	288,462
स पित्रा च परि	258
समयस्ते कृतः	250
समये तिष्ठ सु	262
समस्त शब्द	12
समुत्थितो नील	455
समुद्रं राघवो	262
सर्वकामप्रदां	54
सर्वज्ञः सर्व	440
सर्वज्ञोऽपि हि	292
सर्वत्राष्टाक्षरो	6
सर्वयोग्यमना	48,450
सर्वलोकश	48,272,278,450
सर्वापराध	320
सर्वेषामेव धर्मा	444,504
स हि तं प्रति	298
शरीरारोग्य	276
संकल्पादेव	270
संप्रदानप्रद	36
साध्यभक्तिस्तु	114
सामान्योऽयं	300
सा हि सर्व	446, 450
सिद्धगन्धर्व	254,451
सीतां च रामाय	328
सुग्रीवः शङ्कि	328
सुग्रीवस्य तु तद्वा	291
सुदुष्करेण	100
सुदुष्टो वाऽप्य	292
सूक्ष्मः परम	268,325
साऽञ्जलिं शिर	296
सोऽहं परुषितः	272
स्त्रियो वृद्धा	42
स्थिते मनसि	448
स्वतन्त्रः कर्ता	104
स्वत्वमात्मनि	18
स्वमुद्दिश्य श्री	60,468
स्वयं वस्तू कुर्वन्	76
स्वरक्षणेऽप्य	108,456
स्वरेण महता	274
स्वर्ग्यं स्यात्तु	316
स्ववैश्वरूप्येण	58
स्वस्ति श्रीदिशता	56
हसितं भाषि	246
हस्तीश दुःख	512

❀ ❀ ❀

Scanned with CamScanner

இந்த ரஹஸ்யங்களில் எடுத்துள்ள அருளிச்செயல் பாசுரங்களின் அகராதி

அகலகில்லேன் 50, 97, 446
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே 68
அடியார்க்கென் 26
அதுவுமவன 76, 102
அப்போதை 462
அமலனாதி 66
அம்மானாழிப் 62
அலர்மேல் 66
அல்வழக்கு 329
அளவாகும் 514
ஆவாரார் 253
ஆறாவன்பில் 16
ஆறெனக்கு 76
இசைவித்தென் 102
இலிங்கத்திட்ட 438
உன்னடியார்க் 26
உன் சரணல்லால் 66
எங்கும்போய் 258
எட்டெழு - ஒ 8
எட்டெழு - வா 18
எண்பெருக் 30
எமதிடம் 322
எமரேழெழு 506
எம்மாபாவி 60
எய்ப்பென்னை 464
எருத்து 108, 502
எல்லாமறிவீர் 62
எனக்கேதன் 64
என்னான் 24,108
ஏரார்ந்தகண்ணி 62
ஏழையேதலன் 50
ஒண்டொடியாள் 82
ஒழிவில்காலம் 38
ஒன்றும் தேவும் 12
ஒரெண்டாறு 104
கடைத்தலை 256
கண்டுகேட்டு 82, 501
கண்ண புர 4, 514
களைவாய்துன் 108
கறந்த பா 36
கற்கியாமி 442
காலும் கையும் 462
கிளரொளி 450
குலங்களாய 48
குலதொல்லடி 16
கூட்டரிய 64
கூழாட்பட்டு 322
கேழலாய் 440
கோலத்திருமா 82
சரணமாகும் 114
சன்மசன்மா 64, 458
சூழ்ந்திருந் 40
செல்வநாரண 64
சேனுயர்வான 60
தடம்பெருந் 440
தமர்கள் கூட்ட 505
தனக்கேயாக 40, 86
தன்தாளிணைக் 84
தன்மை பெறுத்தி38,84,334
தன்னடியார் 60
தாயே தந்தை 50
தாய் நினைந்த 466
திருநாரணன் 50
திருமாலிருஞ் 62
தொன்மாவல்வினை 506
தொழுதெழென் 506
நல்வகையால் 8
நாகணைமிசை 66
நாடு நகரமும் 8
நாமம் சொல் 10
நானுன்னைய 30
நானே நானாவித 101
நான்றிலவேழ் 442
நாரணன் முழு 30
நின்தாளிணைக் 86
நின் திருவருளும் 54
நின் திருவெட் 8, 28
நிலைவரம்பில் 280, 456
நின்றவாறில் 450
நின்னருளே 510
நின்னிலங்கு 66
நின்னையேதான் 340
நீசனேன் நிறை 62
நீலவரையிரண்டு 455
நெறியெல்லாம் 98
நோற்றநோன் 508
படியாய்க் 40
பல்லாண்டு 332
பாசிதூர்த்து 438
பாரித்துத்தா 342
பார்வண்ண 440
பிறந்தபின் 8
புகலொன்றில்லா 16, 508
புற்பாமுதலா 256
பொதுநின்ற 66
பொல்லாக்குற 442
போயபிழையும் 114
மரணமானால் 114
மரவடியை 255
மற்றுமோர் 16
மற்றைக்கண் 260
மற்றொரு 512, 514
மன்னுறில் 38
மாதவனென்ற 62
மீளாவடிமை 506
முகில்வண்ண 50
மூலமாகிய 10
மூன்றெழுத்த 10
யானே நீ 44
யானேயென்ற 24
வணக்கலில் 332
வந்தடைந்தேன் 102
வந்துமண்ணும் 322
வள்ளல் 98
வானுயரின்பம் 85
வாய்வெருவி 303
விண்ணுலகம் 108, 460
வீடு திருத்தும் 460
வீடுபெற்ற 116
வெறிதேயருள் 104
வேரிமாறாத 52

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: